
திருவாசகம்



விளக்கியவர் :-
சுவாமி சித்பவானந்தர்

திருவாசகம்

ஒப்புள்ள

உபநிஷத் மந்த்ரங்கள்

இணைக்கப் பெற்றுள்ளன

விளக்குபவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

प्रज्ञानं ब्रह्म

ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை - 639 115
திருச்சி மாவட்டம்

தபோவனத் தொடர் 83

முதல் ஆறு பதிப்புகள் 50,000
ஏழாம் பதிப்பு 5,000

திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம்
கார்யதரிசியால் பிரசுரிக்கப்பட்டது

பிரசார விலை ரூ. 60-00

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

பொருளடக்கம்

திருவாசகம்

முகவுரை

1. வாதவூரர் வரலாறு

மாணிக்கவாசகர் மதுரைக்குப் பக்கத்தில் உள்ள திருவாதவூரில் பிறந்தார். ஆதலால் அவருக்குத் திருவாதவூரர் என்னும் பெயர் அமைந்தது. அவருடைய கல்வி, கேள்வி, ஒழுக்கம், அறிவு, ஆற்றல் ஆகிய சிறப்புக்களைப் பற்றிக் கேள்வியுற்ற பாண்டி மன்னன் அவரைத் தன்னிடம் வரவழைத்து அவரைத் தனது மந்திரிமார்களில் ஒருவராக நியமித்துக்கொண்டான். மேலும் அவருடைய ஆட்சித் திறமையைக் கண்டுகொண்ட கோமகன் அவருக்குத் 'தென்னவன் பிரமராயன்' என்ற பட்டத்தையும் வழங்கினான். திருவாதவூரர் அரசாங்கத்தை நன்கு நடாத்திவந்ததற்கிடையில் சிவபக்தியில் ஆழ்ந்து மூழ்குவாராயினர். பக்தி ஓங்குதற்கு ஏற்ப உலக வியவகாரங்களினின்று அவரது மனது படிப்படியாக விலகுவதாயிற்று.

சோழ நாட்டுக் கடற்கரையில் நல்ல அராபிக்குதிரைகள் விற்பனைக்காகக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருப்பதைக் கேள்வியால் அறிந்த பாண்டியன் அவைகளை வாங்கி வரும்படி அமைச்சர் திருவாதவூரரை அனுப்பி வைத்தான். அவர் பரிவாரங்களுடன் போகும் வழியில் திருப்பெருந்துறையில் திருவருளே வடிவெடுத்திருந்த ஞானாசாரியர் ஒருவரால் ஆட்கொள்ளப் பெற்றார். பரம

சிவனே அத்திருக்கோலத்தில் தோன்றித் திருவாத வூரரைத் தமக்குரியவர் ஆக்கிக்கொண்டார் என்பது ஐதிகம். குதிரை வாங்குதற்குத் தாம் எடுத்துச் சென்ற செல்வத்தையெல்லாம் அவர் சிவ சேவையிலேயே செல வழித்துவிட்டார். அரசன் இட்டிருந்த பணியைப் புறக் கணித்தது மல்லாது அதை அறவே மறந்துவிட்டுச் சிவ னடியார் இணக்கத்திலும் சிவஞான குருசேவையிலும் அவர் ஆனந்த பரவசமடைந்திருந்தார். இப்படி நிகழ்ந்து வந்தவையெல்லாம் பாண்டியன் காதுக்கும் எட்டின. அவன் சீற்றங்கொண்டு தென்னவன் பிரமராயனைக் கைப்பிடியாகக் கொண்டுவந்து சேர்க்க ஆணை பிறப்பித் தான். அந்த நடவடிக்கை தம்மை வந்து எதிர்க்கும் வரையில் திருவாதவூரர் உலக நடைமுறையை மறந்த வராயிருந்தார். நெருக்கடி நேரில் வந்து தாக்கிய பொழுது தாம் செய்த பிழையை எண்ணிப் பரமாசாரி யரிடம் அவர் பரிந்து பணிந்து, இனித் தாம் செய்வது யாது என்று விண்ணப்பித்தார். ஆவணிமாதம் மூல நாளன்று குதிரைகள் வந்து சேருமென்று அரசனுக்குச் சமாதானம் சொல்லி அமைதியுற்றிருப்பாயாக என்று பரமனும் அனுக்கிரகம் செய்து தமது பக்தனை அனுப்பி வைத்தார்.

ஆவணி மூலத்தன்று குதிரைகள் வந்துசேருமென்று வாதவூரர் நேரில் சொன்னதைக்கேட்டுப் பாண்டியன் தனது ஐயத்தை அகற்றினன். ஆனல் திருப்பெருந்துறை யில் குதிரையொன்றும் காணப் பெறவில்லை யென்று ஒற்றர் வாயிலாக அறியவந்த அரசன் சீற்றங் கொண் டான். குறித்த நாளன்று குதிரைச் சேவகன் ஒருவன் அவைகளைக் கொண்டுவந்து சேர்க்கவே அவன் மீண்டும் மகிழ்வெய்தினன். பின்பு குதிரைகளெல்லாம் தெய்வா தீனமாக நரிகளாக மாறி மறைய அரசனுக்கு அளவில் லாத ஆத்திரம் உண்டாயிற்று. இப்படி மாறி மாறி

யமைந்துவந்த பாண்டியனது மனப்பாங்கை யொட்டித் திருவாதவூரருக்குப் போற்றுதலும் தண்டனையும் மாறி மாறி வருவனவாயின. பக்தியில் ஆழ்ந்து ஈடுபடுகிற ஒருவருக்கு உலக வாழ்வில் உண்டாகும் இன்ப துன்பங்கள் அவரது பக்தியைக் கலைத்து விடுவதில்லை. உலகத்தவருடைய போற்றுதலை அவர் பொருள்படுத்துவதில்லை. அவர்கள் விளைவிக்கும் துன்பம் பக்தனது பக்தியை வளர்க்கிறது. தீயிலிட்டு உருக்குமளவு பொன் ஒளி வீசுவது போன்று இன்னல்கள் அதிகரிக்குமளவு பக்தியானது தீவிர பக்தியாக மாறுகிறது. இவ்வுண்மையைத் திருவாதவூரர் மூலம் உலகத்தவருக்கு எடுத்துப் புகட்டுதற் பொருட்டே ஈசன் இங்ஙனம் திருவிளையாடல் பூண்டார் போலும்.

அரசாங்கக் காரியத்துக்காகக் கொடுத்த திரவியத்தை வேறு காரியத்துக்கு நெறிவழுவித் திருப்பியது முதல் குற்றம். குதிரை கொண்டுவருவது போன்று ஜாலவித்தை காட்டி நரிகளை நகருக்குள் ஏவியது இரண்டாவது குற்றம். இவைகளை முன்னிட்டுப் பாண்டியன் திருவாதவூரர்மீது தீவிர நடவடிக்கையெடுத்துக்கொண்டான்; அவரைச் சிறையிலிட்டுப் பல துன்பங்களுக்கு ஆளாக்கினன். ஆனல், அக்கஷ்டங்களுக்கிடையில் திருவாதவூரருடைய மனப்பான்மையோ முற்றிலும் மாறியமைவதாயிற்று. தாம் செய்ததெல்லாம் சிவசேவை. சிவசேவைக்கென்றே மானுடப் பிறவி வாய்த்துள்ளது. தமக்குற்ற துன்பங்களெல்லாம் சிவன் செயல். ஆதலால் அவைகளைத் தாம் துன்பமாகக் கருதலாகாது. தேவர்க்கெல்லாம் தேவனது திருவிளையாடலாகவே அவை யாவையும் தாம் பொருள்படுத்த வேண்டும். அதற்கேற்ற தீவிர பக்தி தம்மிடத்துப் பெருகவேண்டும். பின்பு அந்த பக்தியும் தெய்வத்திடமிருந்தே வருகிறது. ஆதலால் மாருத பக்தியைத் தமக்குத் தந்தருள வேண்டு

மென்று இறைவனிடம் அவர் இடையருது இறைஞ்சி நின்ருர்.

திருவாதவூரரது சாதாரண பக்தியானது துன்பக் கனலில் பராபக்தியாகப் பரிணமித்து வந்ததற்கிடையில் இறைவனது திருவருளால் இன்னுமொரு நிகழ்ச்சி நேர்வதாயிற்று. வைகையாற்றில் நீர்ப்பெருக்கெடுத்துக் கரையோரமிருக்கும் வீடுகளை யெல்லாம் அரித்துக் கொண்டுபோம் அறிகுறிகள் தென்பட்டன. பாண்டி மன்னன் அதை நேரில் பார்வையிட்டு உத்தரவு ஒன்று பிறப்பித்தான். அதன்படி வீட்டுக்கு ஓர் ஆள் கூடையுடனும் மண்வெட்டியுடனும் வேலைக்கு வந்து அணை கட்ட வேண்டியதாயிற்று. சிவ பக்தி மிகப் பூண்டிருந்த வந்தி என்னும் பிட்டு வாணிச்சி ஒருத்திக்கு ஆள் கிடையாமற் போகவே அவள் இறைவன் சொக்கநாதரிடம் தன் குறையை முறையிட்டாள். பின்பு கூலியாளும் ஒருவன் தோன்றி வந்து முன் கூலியாகப் பிட்டு ஏற்று உண்டுவிட்டு வேலைக்குப் போனான். அப்படிப் போனவன் மண்ணை வெட்டிப்போடுதலில் தன் பகுதியைச் செய்து முடிக்காது விளையாடி வீண்பொழுது போக்கிக்கொண்டிருந்தான். அதைக் காணலுற்ற கண்காணிப்பாளன் அக்கூலியாளின் கூத்தாட்டத்தைப் பார்த்துப் பாண்டியனிடம் தெரிவித்தான். மன்னனும் பிரம்பால் அவன் முதுகில் ஓங்கி யடித்தான். அவ்வடியானது பிரபஞ்சமெங்குமுள்ள உயிர்கள் அனைத்தின்மீதும் விழுந்தது! அடிகொடுத்த மதுரை வேந்தனும் தன் பிரம்பு அடியைத் தானே உண்டு வருந்தினன். கூலியாளோ மாயமாய் மறைந்து போய்விட்டான்!

மனிதன் தெய்வத்தோடு வைக்கிற இணக்கம் எத்தகையதாயினும் அது நலத்தையே நல்குகிறது. பாண்டியன் செயல் அதற்கு அறிகுறியாகும். அடியுண்ட அரசனுக்குத் திடீரென்று நல்லறிவு பிறந்தது. தான் கெளி

வடைந்ததைக் குறித்து அவன் திருவாதவூரரிடம் போய்க் கூறுவானாயினன்: "என் சொத்து என்று நான் எதைக் கருதினேனே அது உண்மையில் சிவன் சொத்து. தாம் அதைச் சிவசேவையில் செலவழித்தது முறையே. ஈசன் எல்லாம் வல்லவன். அவன் நரியைப் பரியாக்குவான்; பரியை நரியாக்குவான். குதிரையின்மீது மிகைப்பட்ட பற்றுதல் வைக்க வேண்டாமென்று அவன் எனக்குப் பாடம் புகட்டியுள்ளான். தம் பொருட்டுச் சிவன்குதிரைச் சேவகனாய் வந்து எனக்குக் காட்சி கொடுத்தான். தம் பொருட்டும், பிட்டு வாணிச்சியின் பொருட்டும் அவன் கூலியாளாய் வந்து மண் சுமந்து இந்தப் பாபியேனிடம் பிரம்பால் அடியுண்டான். அவன் பக்தவத்ஸலன், அடியார்க்கு எளியவன். உமது நல்லிணக்கத்தால் நான் இப்பொழுது சிவபக்தன் ஆனேன். நான் தமக்குச் செய்யக்கிடப்பது யாதோ?" இப்படி அரசன் விண்ணப்பிப்பதைக் கேட்ட திருவாதவூரர் தாம் துறவறம் பூண்டு வெளியேக விரும்பியதாகத் தெரிவித்தார். அரசனும் அன்போடு அதற்கு ஆதரவுகொடுத்து அவரைச் சிவனடியாராகும்படி அனுப்பி வைத்தான்.

துறவறம் பூண்டு சிவநெறியிலே தீவிரமாகச் செல்லுதற்கான வாய்ப்பை வழங்கிய திருவருள் விலாசத்தைத் திருவாதவூரர் பெரிதும் வியந்தார். இனம் பிரிந்த மான் தன் இனத்தை நாடி ஓடுவது போன்று அவர் திருப்பெருந்துறையைச் சென்றடைந்தார். அங்குக் குருந்த மரத்தடியில் குருநாதரும் சிவனடியார் திருக்கூட்டமும் பழையபடி வீற்றிருந்தது அடிகளுக்கு அளவில்லாத ஆனந்தத்தை ஊட்டியது. ஆத்மசாதகன் ஒருவனுக்கு வாய்க்கிற வாய்ப்புகளுள் தலைசிறந்தவை இரண்டு. தனது அருள் குருவின் சந்நிதி சார்ந்து, அவரோடு சிறிது காலம் இணங்கி வாழ்ந்திருப்பது முதலாயது; நல்லார் இணக்கம் அல்லது ஸத்ஸங்கம் அதற்கு அடுத்தபடியா

னது. பெறுதற்கு அரிய அவ்விரண்டு அருள் பேறுகளும் வாதவூரருக்கு வேண்டியவாறு வாய்த்தன. அதனால் அவரது ஆத்மசாதன முயற்சியானது மாறுது முற்றுப்பெறுவதாயிற்று.

சிஷ்யன் முற்றிலும் பரிபக்குவம் அடைந்தான பிறகு குரு அவனைவிட்டுப் பிரிவது முறை. அக்கோட்பாட்டுக்கு ஒப்ப அந்தணனுய் வந்து அடிகளை ஆட்கொண்ட பெம்மான் மறைந்தருளினுர். சில காலத்துக்குப் பிறகு சிவனடியார்களும் தங்களது யதாஸ்தானமாகிய திருக்கயிலைக்குத் திரும்புவாராயினர். குருநாதர் ஆணைப்படி திருவாதவூரர் உலகத்தவருக்கு பக்தி-ஞான கயிங்கரியம் செய்யக் கடமைப்பட்டிருந்தார். அதன் பொருட்டு சிவஸ்தலங்கள் பலவற்றிற்கு அவர் விஜயம் செய்தார். தமது இறுதிக் காலத்தை அவர் சிதம்பரத்தில் கழித்து, சிவசொரூபத்தில் இரண்டறக் கலந்தார். அவருடைய திருப்பாடல்களுக்குத் திருவாசகம் என்னும் பெயரும் அவருக்கு மாணிக்கவாசகர் என்ற திருநாமமும் அமைந்தது முற்றிலும் பொருத்தமாம்.

மனிதன் ஒருவன் ஏதேனும் ஒரு துறையில் நிபுணன் ஆனல் அவன் அத்துறைக்கு ராஜன் ஆகிருன். மாணிக்கவாசகர் எத்தகைய ராஜன் என்பதை நாம் அறிந்திருப்பது அவசியம். பாண்டியனுக்கு அமைச்சராய் அமர்ந்து அரியமுறையில் அரசாட்சி புரிந்ததினுல் அவர் புவிராஜனுய் விளங்கியது வெளிப்படை. பரம்பொருளேபோன்று என்றும் பொன்ருத திருவாசகம் என்னும் பாரமார்த்திகக் கவிதையைப் பாரில் உள்ளோர்க்கு வழங்கியிருப்பதால் அவர் கவிராஜன் ஆகிருர். இனி அவர் வாழ்ந்த பாரமார்த்திகப் பெருவாழ்வு அவரைத் தவராஜன் ஆக்கியிருக்கிறது. பெறுதற்கு அரிய பராபக்தியைப் பெற்றதினுல் அவர் பக்தராஜனுக இலங்குகிருர். இத்தனைச் சிறப்புக்களையும் ஒருங்கே உடைத்திருக்கும் மாணிக்கவாசகர் நடராஜனுக்கு உரியவர் ஆனுர்.

2. நூல் அமைப்பு

திருவாசகம் ஐம்பத்தொரு திருப்பதிகங்களுடன் திகழ்கிறது. அவைகளில் அடங்கியுள்ள பாடல்களின் தொகை அறுநூற்று ஐம்பத்தாறு. நூலில் அடங்கியுள்ள ஐம்பத்தொரு பதிகங்களுள் பலவற்றை நாம் இடம் மாற்றியமைத்தால் இழுக்கு ஒன்றும் வாராது. ஏனென்றால் ஏதேனும் ஒரு தனி விஷயத்தை ஆராய்ச்சி செய்யவோ, படிப்படியாக அதை விளக்கிக்கொண்டு போவதற்காகவோ இந்நூல் முழுதும் முறைவைத்து அமைக்கப்படவில்லை. ஆயினும் அப்பதிகங்கள் அறவே தாறுமாருகக் கலங்கிக் கிடக்கின்றனவென்று இயம்புதற்கும் இடமில்லை. சிவபுராணம் முதன்மை பெறுவது முறையே. தத்துவ விளக்கத்தில் அது தலைசிறந்து நிற்கிறது. அதைத் தொடர்ந்து வரும் மூன்று அகவல்களும் முறையாக இடம் பெற்றிருக்கின்றன. சாதனங்களின் சீரிய பகுதிகள் திருச்சதகத்தில் அடங்கியிருக்கின்றன. அவைகள் தத்துவ விளக்கத்தைத் தொடர்ந்து வருவது தகும். நீத்தல் விண்ணப்பம் அதன் பின் வருவதிலும் பொருள் புதைந்திருக்கிறது. ஏனைய பதிகங்களெல்லாம் எப்படி வேண்டுமானாலும் இடம் வகிக்கலாம்.

திருவாசகத்தின் அமைப்பை ஓர் உயர்ந்த மலைத் தொடரின் முடிமீது நடந்து போவதோடு ஒப்பிடலாம். நீண்ட மலைத்தொடரின் முடி ஒரே ஒப்பமாயிருப்பதில்லை. செங்குத்தான சிகரங்களும் தாழ்வுற்ற மலைப் பகுதிகளும் மாறிமாறி வந்துகொண்டிருக்கின்றன. மலையின் முதுகில் மேடும் பள்ளமும் பின்னிப் பின்னிப் பொலிவது இயற்கையின் கூறு எனலாம். திருவாசகத்தில் சிவபுராணம் மகாமேரு போன்று ஒரே செங்குத்தாயிருக்கிறது. அதைப் பூலோகக் கயிலாயம் எனலாம். கிட்டத்தட்ட அதே உயரத்தில் இருக்கின்றன மற்ற மூன்று அகவல்களும். பின்பு மலைத் தொடர்பு படிப்படியாகக் கீழே

வருகிறது. அதில் மேலே ஏறுவதும் கீழே இறங்குவதும் மாறி மாறி நிகழ்கின்றன. மனிதனுடைய ஆத்ம சாதனமும் அங்ஙனம் நிகழ்கிறது. திருவாசகத்தின் இறுதிப் பகுதி திரும்பவும் மேல் நோக்கிப் போகிறது. சீவ உபாதி ஒழிதல் என்னும் திருப்படை ஆட்சிப் பதிகம் துவக்கத்தில் இருக்கிற சிவபுராணத்துக்கு நிகராக உயர்நிலையெய்துகிறது. அதை அத்வைத சித்தி என்று இயம்புவது முறை. முடிவில் ஆனந்தமாலையும் அச்சோப்பதிகமும் கீழிறங்கி வருவனவாகின்றன.

ஜீவாத்மாக்கள் அனைத்தும் பரமனை நாடிப் பயணம் போய்க்கொண்டிருக்கின்றன. ஜன்மங்கள் பலவற்றில் அவைகள் படிப்படியாய்ப் பக்குவம் ஆய்க்கொண்டிருக்கின்றன. பின்பு முடிந்த நிலையைப் பெறுதலில் படித்தரங்கள் பல இருக்கின்றன. தூங்குபவன் கனவினின்று எழுந்திருப்பது போன்று பரஞானம் திடீரென்று வாய்க்கப்பெற்று அதிலேயே நிலைத்திருப்பவன் தலைத்தரமான பக்குவி. திருஞானசம்பந்தர் அதற்கு நல்ல சான்று ஆகிறார். ஏணியில் முறையாக மேலே போகிறவன் போன்று பரமனிடம் போகிறவர்கள் இருக்கிறார்கள். சுந்தரர் அதற்குத் தக்க எடுத்துக்காட்டு ஆவார். கயிலைமலைக்குப் போகின்றவர்கள் மேலே ஏறவும் கீழே இறங்கவும் செய்து, சிறிது சிறிதாக மேல்நிலைக்கு வருகின்றனர். நாவுக்கரசரும் மாணிக்கவாசகரும் இம்முறையில் மேலே வந்தவர்கள் ஆவார்கள். மாணிக்கவாசகரது முன்னேற்றத்துக்கு அவரது நூலே அகச்சான்று ஆகிறது. கீழ்மையில் இறங்கவும் மேன்மையில் ஏறவும் செய்து இறுதியில் பரமனோடு அவர் ஒன்றுபடுகிறார். பலதரப்பட்ட அவருடைய கூற்றுக்களை அந்தந்த நிலையில் இருக்கும் ஆத்மசாதகர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

மாணிக்கவாசகரைப் பற்றிய மற்றொரு கோட்பாட்டைச் சாதகர்கள் சிந்தனையில் வைப்பது அவசியம்.

மகாபாதகங்கள் பல பண்ணிவிட்டதாகச் சில இடங்களில் அவர் சித்திரிக்கிருர். ஆனல் வாதவூரரது வாழ்க்கை அத்தகைய கீழ்நிலைக்குப் போனதற்கு ஆதாரம் எங்குமே இல்லை. பிறந்தது முதற்கொண்டு அவர் தூய வாழ்வில் திளைத்திருந்தார் என்று உறுதி கூறலாம். பின்பு உலகில் ஜீவர்களிடத்திருக்கிற கீழ்நிலைகள் தம்மிடத்துமிருந்ததாக வைத்துக்கொண்டு அவர் விமோசனம் தேடினுர். முயலுகின்ற கடைப்பட்ட மாந்தரும் உய்வு அடையலாம் என்பது திருவாசகத்தினின்று தெளிவாகிறது. காலில் தீண்டத் தகுதியற்ற சாக்கடை நீரும் கங்கையில் சேர்ந்தபின் தானே கங்கையாகிறது. அங்ஙனம் கங்காதரனைச் சேர்ந்த கயவர்களும் கடவுள் மயமாகின்றனர். அன்னவர்களுக்குத் திருவாசகம் ஞான விளக்காக ஒளிர்கிறது.

பகர்ந்துள்ள ஒரு கூற்றைத் திரும்பத் திரும்பப் பகர்வது நூல் அமைப்புக்கு ஒவ்வாது. மற்று, மாணிக்க வாசகரோ இப்பிழைக்குப் பலதடவை இலக்கு ஆகிருர். ஏன் அவர் அப்படிச் செய்தார் என்னும் கேள்வி எழ இடமில்லை. நூல் அமைப்புக்காக அவர் எடுத்துக் கொண்ட விஷயங்களைப் பாகுபடுத்தி அவர் பாடவில்லை. தமது உள்ளத்தை அவர் ஓவாது உருக்கினுர். உருக்கிய ஒவ்வொரு தடவையும் சொல் ஓவியம் உரு எடுத்தது. தம் உள்ளங்களை உருக்க முயலுகின்ற ஆத்ம சாதகர்கள் ஆயிரந்தடவை அதே கருத்துக்களைத் தங்களிடத்துக் கிளப்பினுலும் புதிய புதிய சுவை காண்பர். சுடச் சுட ஆவின் பால் சுவை அதிகரிப்பது போன்று, அருள் துறையில் ஒரே கருத்தைச் சொல்லிச் சொல்லிச் சிந்தை உருகுமளவு அதனிடத்துத் தெய்விகம் திகழும்.

சொல் அழகு, பொருள் அழகு ஆகிய இரண்டு அழகும் சேர்ந்து அமைவது நல்ல கவிதை. இவ்விரட்டை அழகு திருவாசகத்தில் உச்சஸ்தானம் பெறுகிறது.

மேலான கருத்துக்களையும் தத்துவங்களையும் சிறந்த சொல் ஓவியத்தில் பொறிக்குமிடத்து அது வேதம் எனப் படுகிறது. பழங்காலத்தில் தோன்றிய ரிஷிகள் வேதங் களைச் சம்ஸ்கிருதத்தில் தோற்றுவித்தனர். அதனுல் வேதங்கள் அம்மொழியிலேயே இருக்கவேண்டும் என் னும் நியதியில்லை. பரத்தை அடையப்பெற்ற பெருமக் கள் தாங்கள் அனுபூதியில் கண்டறிந்த உண்மைகளை எம்மொழியில் வெளியிட்டாலும் அது வேதமாகிறது. கணிதத்தை எம்மொழியில் எழுதிவைத்தாலும் அது கணிதமே. இன் இசையை எம்மொழியில் வெளிப்படுத்தி ணுலும் அது இன் இசையே. அங்ஙனம் பரதத்துவம் எம்மொழியில் பகரப்பெறினும் அது வேதமே. திருவா சகத்தைத் தமிழ் மொழியில் அமைந்த வேதம் எனலாம்.

இதுகாறும் திருவாசகத்துக்கு விளக்கம் வழங்கிய வர்களில் பெரும்பான்மையோர் சொல் அழகிலேயே கருத்தைச் செலுத்தியிருக்கிருர்கள். அவர்கள் முயற்சி பாராட்டத்தக்கது. அதற்கேற்ற பயனும் உண்டு. ஆனல் ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிறவர்கள் சொல் அழகி லேயே திருப்தியடைந்திருக்க மாட்டார்கள். நா வறண்டு போய் தாகத்தால் தவித்துக்கொண்டிருப்பவர்கள் தண் ணீரைப்பற்றிய அழகான வர்ணனையில் திருப்தியடைய மாட்டார்கள். பருகுதற்குச் சேற்றுத் தண்ணீராவது சிறிது கிடைத்தால் போதுமென்று அவர்கள் இங்குமங் கும் தேடித்திரிவார்கள். அதே விதத்தில் அருள் நாட் டம் கொண்டிருப்பவர்களுக்கு அருள் தாகத்தை வளர்க் கும் தன்மையதாய்த் திருவாசகம் அமைந்திருக்கிறது. அருள்நாட்டத்தின் கூறுகளைத் தெளிவுபடுத்துவது இந்த நூலின் நோக்கமாகும். அருள்தாகம் பிடித்தவர்கள் பாக்கியவான்கள். அருள்தாகம் பிடித்தவர்களுள் திரு வாசகத்தோடு முறையாக இணக்கம் வைக்கிறவர்கள் மேலும் பாக்கியவான்கள் ஆகிருர்கள். சுடர் விளக்குக்

கும் தூண்டுகோல் ஒன்று தேவையாயிருப்பது போன்று அருள் பித்தம் பிடித்தவர்களுடைய பித்தத்தைப் பலக்க வைக்க வல்லது வாதவூரரது வாசகம்.

ஒவ்வொரு துறையிலும் சீர் உண்டு; சீர்கேடும் உண்டு. எது சீர், எது சீர்கேடு என்பனவற்றை அத் துறையில் தேர்ச்சிபெற்ற நிபுணன் அறிகிறான். நோயின் கொடுமையை நோயாளி அறிகிறான். நன்கு அனுபவப் பட்ட மருத்துவன் அறிகிறான்; மற்றவர்களுக்கெல்லாம் அது வெறும் கேள்வி மாத்திரமாம். ஆத்ம சாதனத்துக் கும் பரம்பொருளின் அனுபூதிக்கும் இக்கோட்பாடு முற்றி லும் பொருந்தும். ஆத்ம சாதனம் வேறு. அதைப்பற்றி நூல்களில் படிப்பது வேறு. ஓர் ஊருக்குப் புதிதாகப் போயிருப்பதற்கு ஒப்பு ஆத்ம சாதனம்; மற்று அதைப் பற்றிப் புஸ்தகத்தில் படிப்பது நூல் அறிவு. சாதன வகைகளின் முறைமைகளையெல்லாம் திருவாசகம் தன் னகத்து அடக்கிவைத்திருக்கிறது. சாதனத்தில் நுழை தற்கு ஏற்பச் சாதகனுக்கு அவை யாவும் விளங்கும். ஸத் சங்கம் பண்ணுவதற்கு நிகர் திருவாசகத்தில் திளைத் திருப்பது. நல்லார் இணக்கம் சாதனத்தை ஓர்மைப் படுத்துவது போன்று இந்த நூலும் செய்ய வல்லது. பின்பு அனுபூதிமான்களுக்கே பரம்பொருள் விளக்கம் உள்ளபடி விளங்குகிறது. திருவாசகத்தில் திகழ்கிற பரம்பொருள் விளக்கம் அனுபூதிமான்களுக்குப் பர வசத்தை யுண்டுபண்ணுகிற அருள் விருந்தாம். கீதை கிருஷ்ணபரமாத்மாவுக்கு நிகராயிருப்பது போன்று திருவாசகம் மாணிக்கவாசகருக்கு நிகர் என்பது தேற் றம். ஜன்மாந்தரங்களில் மனிதனுடைய உள்ளத்தில் புகுந்துள்ள சிற்றியல்புகள், அந்தச் சிற்றியல்புகளைக் களையும் முறைகள், பரத்தை நாடுகிறவர்கள் பெறவேண் டிய பேரியல்புகள், அப்பேரியல்புகளை வளர்க்கும் முறை கள், அருள்தாகம் கொள்ளுதல், அருளைப் பெறுதல்,

அருளில் ஆழ்ந்து தோய்தல், பரமனைக் காணுதல், பரமனோடு தொடர்வு கொள்ளுதல், பரமனிடமிருந்து பெற வேண்டியதைப் பெறுதல், பக்தியைப் பெருக்குதல், பக்தி பராபக்தியாக வடிவெடுத்தல், பரதத்துவ தர்சனம் பெறுதல், பரத்தினில் இரண்டறக் கலத்தல்— இத்தனைவித தெய்விகப் படித்தரங்களும் அடங்கப்பெற்றது திருவாசகம். அதில் எப்பகுதியை ஆராய்ந்துபார்த்தாலும் அது ஜீவனை சிவசொரூபமாக்க வல்லதாம். அது ஆத்ம சாதகர்களுக்கு வாய்ப்பதற்கு அரியதொரு அருள் விருந்தாம்.

3. தத்துவ விளக்கம்

தத்துவம் என்பது மெய்ப்பொருள். சாங்க்ய தர்சனப் பிரகாரம் இருபத்தைந்து தத்துவங்கள் இருக்கின்றன. அவைகளுள் பஞ்ச பூதங்கள் போன்ற இருபத்து நான்கு தத்துவங்கள் பிரகிருதியின் கூறுபாடுகள் ஆகின்றன. இருபத்தைந்தாவது தத்துவம் ஜீவாத்மன். சாங்க்ய தர்சனம் பரமாத்மனைப்பற்றி ஒன்றும் பகர்வதில்லை.

வேதாந்த தர்சனம் பரமாத்மாவையே தத்துவம் என்கிறது. சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற பிரபஞ்சம் வேறு, அதை சிருஷ்டித்துள்ள கர்த்தா வேறு என்று எண்ணுகிறோம். இந்த எண்ணத்துக்கு ஏற்றவாறு சிருஷ்டியினிடத்து ஒருவித மனப்பான்மையும் சிருஷ்டி கர்த்தாவிடத்து இன்னொருவித மனப்பான்மையும் நமக்கு உண்டாகின்றன. படைப்பவனுக்குத் தருகிற மதிப்பை அவனால் படைக்கப்பட்டிருக்கிற பொருள்களுக்கு நாம் தருவதில்லை. ஜாலவித்தைக்காரன் ஒரு நொடிப்பொழுதில் ஒரு மாங்கொட்டையினின்று மாஞ்செடியை உண்டு பண்ணுகிறான். அதினின்று மாம்பழத்தைத் தோற்றுவிக்கிறான். பிறகு அவையாவும் மாயமாய் மறைந்து போம்படி அவன் செய்கிறான். அவனது திறமையைக்

கண்டு நாம் திகைக்கிறோம்; ஆயினும் அவனால் தோற்றுவிக்கப்பட்ட பழத்தை நாம் ஆராய்வதில்லை. இனி நாம் அழகியதொரு மாளிகையைச் சென்று பார்க்கிறோம். அம்மாளிகையும் அதனுள் உள்ள ஒவ்வொரு வஸ்துவும் நமக்கு வியப்பூட்டுகின்றன. காண்பதற்கரிய அவையாவையும் கண்டுகளித்துத் திரும்புகிறோம். அம்மாளிகைக்குச் சொந்தக்காரனைக் காணவோ, அவனைப்பற்றி அதிகம் அறிந்துகொள்ளவோ, அவனோடு உறவாடவோ நாம் விரும்புவதில்லை. ஒரு ஜாலவித்தைக்காரனைக் குறித்து நாம் வியப்பதும், ஒரு கட்டடத்தைக் குறித்து நாம் வியப்பதும் அரைகுறை ஞானமாம்.

இயற்கையின் நடைமுறையை உள்ளபடி அறிந்துகொள்ள முயலுகிற ஒருவன் நல்லதொரு விதையைப் பண்படுத்திய நிலத்தில் தக்க பருவத்தில் விதைக்கிறான். அது முளைத்துச் செடியாகிப் பூவிட்டுக் காய் காய்த்துப் பழமாகி அவனுக்கு நல்லுணவு ஆனதுமன்றிப் பழைய படி நல்ல விதையாகவும் வடிவெடுத்துத் தனது அரிய செயலை மீண்டும் செய்ய அது ஆயத்தமாயிருக்கிறது. அந்தச் செடியானது தீ எரிப்பதற்குச் சுள்ளியாக மாறினதும், அதன் பூவினின்று தேனீக்குத் தேனைக் கொடுத்ததும், பழத்தின் தோல் பூமிக்கு உரமாக மாறியதும் ஆகிய செயல்கள் யாவும் அதற்குரியவைகளேயாம். அந்த ஒரு சிறுவிதை செய்கிற செயல் ஈசன் செயலுக்கு எடுத்துக்காட்டு ஆகிறது. அகிலாண்டமெங்கும் ஈசன் செயல் இங்ஙனம் நடைபெற்று வருகிறது. அண்டத்திலும் பிண்டத்திலுமாக எங்கும் நிகழ்வது ஈசன் செயலே. அணுவிலும் அண்டத்திலுமாக எங்கும் நிகழ்வது ஈசன் செயலே. ஓர் அணுவிலோ அல்லது ஒரு பிண்டத்திலோ அவன் செயல் முழுதையும் தெரிந்துகொண்டால், தெரிய வேண்டிய அனைத்தையும் நாம் தெரிந்தவர் ஆகிறோம்.

பிண்டமாகிய ஒரு ஜீவனிடத்து அடங்கியுள்ள தெய்வப்பெற்றி யாவையும் திருவாசகம் விளக்குகிறது;

அறியவேண்டிய எந்தப் பகுதியையும் அது புறக்கணித்து விடவில்லை. தத்துவ ஆராய்ச்சிக்கு அது சிறந்ததொரு நூலாக வாய்த்திருக்கிறது. பலம் படைத்திப்பது வாழ்க்கைக்கு இன்றியமையாத பேறு ஆகும். பலமோ பலதரப்பட்டது. அவைகளுள் ஞான பலமே சாலச் சிறந்தது. அறிவு படைத்திருப்பவன் வாழ்வது போன்று அறிவிலி வாழ்வதில்லை. அறிவுத்திறன் ஓங்குமளவு வாழ்வு மேலானதாகிறது. அறிவுக்கோர் எல்லையில்லை. இவ்வுலகைப்பற்றிய அறிவு ஓங்குமளவு இவ்வுலக வாழ்க்கை திருந்தியமைகிறது. பிறகு இவ்வுலக வாழ்வு என்பது ஜீவாத்மாவினது நீண்ட பயணத்தின் ஒரு பகுதியாம். பயணம் போய்க்கொண்டிருப்பவன் வழியில் தங்கியிருக்குமிடத்தைத் தனது சாசுவதமான இருப்பிடம் என்று கருதலாகாது. வழியில் ஆங்காங்குத் தன்னேடு தொடர்வு கொள்ளுகிறவர்கள் தனது நிரந்தரமான உற்ருர் உறவினர் ஆகார் என்பதையும் அவன் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வுண்மைகளை யெல்லாம் உள்ளபடி அறிந்திருப்பது அறிவுத்திறன் ஆகிறது. தத்துவ விளக்கத்தில் அது இடம்பெற்றுள்ளது. கிருத்தியங்கள் பலதரப்பட்டிருக்கின்றன. ஈசனுடைய கிருத்தியம், இயற்கையின் கிருத்தியம், ஜீவனுடைய கிருத்தியம் இப்படியெல்லாம் நாம் பாகுபடுத்துகிருேம். ஆனல் இவைகளுக்கிடையில் உள்ள தொடர்வைத் திருவாசகம் தெளிவுபடுத்துகிறது. அப்படித் தெளிவுபடுத்துவதும் தத்துவ விளக்கமாகும்.

தத்துவ விளக்கத்துக்கு முடிவான பிரமாணமாய் அமைந்திருப்பவைகள் உபநிஷதங்கள். அவைகளுக்கு மறைமுடியென்றும், வேதத்தின் அந்தம் அல்லது வேதாந்தம் என்றும் பெயர்கள் வாய்த்துள்ளன. தத்துவம் அல்லது மெய்ப்பொருளை ரிஷிகள் நேரே தரிசித்தவர்கள் ஆகின்றனர். அன்னவர்களது ஆப்த வாக்கியங்களே

உபநிஷதங்கள் என்னும் பெயர் பெற்றுள்ளன. பரம் பொருளுக்கு யார் எத்தகைய விளக்கம் கொடுத்தாலும் அது உபநிஷதங்களின் விளக்கத்துக்கு மாறுபட்டதாக இருக்கலாகாது. எது முரண்படுகிறதோ அது அவைதிகம் அல்லது வேதத்துக்குப் புறம்பானது என்று விலக்கப்படுகிறது. தத்துவத்தை நேரே தரிசித்தவர்கள் பழங்காலத்தில் தோன்றியது போன்று இடைக்காலத்திலும் தோன்றினர்; எதிர்காலத்திலும் தோன்றுவார்கள். பரமனும் அவனுடைய பிரபஞ்சமும் இருக்கும் வரையில் பரஞானம் அடையப் பெற்றவர்களும் இருப்பார்கள். பரஞானத்தில் கருத்து வேறுபாடு இல்லை. கணக்கு ஒன்றை ஒருவன் தமிழை வாகனமாக வைத்துக்கொண்டு போடலாம், மற்ெருருவன் தெலுங்கை வாகனமாக வைத்துக்கொண்டு போடலாம். சரியாகக் கணக்குப் போடுபவர்களுக்கு விடை ஒன்றே. பரஞானம் அங்ஙனம் ஒற்றுமையில் கொண்டு சேர்க்கிறது.

இடைக்காலத்தில் தோன்றிய ரிஷிகளில் ஒருவர் மாணிக்கவாசகர். தமது சாதன வகைகளையும் அனுபூதியின் படித்தரங்களையும் அவர் நன்கு விளக்கியிருக்கிறார். அவருடைய கூற்றுக்களை உபநிஷதங்களின் கூற்றுக்களோடு ஒப்பிட்டு ஆராய்வது சிறந்ததொரு ஆராய்ச்சியாகும். அதன் மூலம் தத்துவ விளக்கம் மேலும் மேலும் நமக்குத் தெளிவை யுண்டு பண்ணும். உண்மையை மனிதன் மாற்றவோ திரிவுபடுத்தவோ முடியாது. உண்மை யாரால் பகரப்பெறுகிறது என்பது முக்கியமானதன்று. பகர்பவர் யாராயிருப்பினும் பகரப் பெறுவது உண்மையா அல்லவா என்பதில் ஆத்ம சாதகன் கருத்தைச் செலுத்தவேண்டும். மெய்ப்பொருள் நாட்டத்தில் கண்ணுங் கருத்துமாயிருப்பவன் பிரதிபந்தம் எதிலும் கட்டுண்டு போய்விடலாகாது. ஐதிகம் என்னும் சிறையினுள் அவன் அகப்பட்டுக் கிடக்கலா

காது. சமயம் என்னும் சழக்கினுள் அவன் சிக்கிக் கொள்ளலாகாது. கால தேச வர்த்தமானங்களையும் தாண்டியவனாக அவன் இருக்கவேண்டும். மாணிக்க வாசகர் அத்தகைய தெள்ளிய மனப்பான்மை படைத்த வராய் இருந்தார். அதற்கெல்லாம் மேலாக உண்மையை அறிதற்கு அவர் யாண்டும் இறைவனுடைய அருளை நாடிய வராக இருந்தார். அவர் படைத்திருந்த மேலான இயல்பை நாடுகிறவர்கள் நல்ல ஆத்மசாதகர்கள் ஆவார்கள்.

4. மாயா தத்துவம்

மாயை என்றால் என்ன என்பதை ஆத்ம சாதகர் கள் அறிந்துகொள்வது அவசியமாகிறது. இந்தச் சொல்லை மாணிக்கவாசகர் பத்தொன்பது தடவை தம் திருவாசகத்தில் கையாண்டிருக்கிறார். வேதாந்த தர்ச னத்தில் மாயா தத்துவம் முக்கியமான இடம் பெற்றிருக் கிறது. சமய சாஸ்திரம் எதுவும் இக்கோட்பாட்டைப் புறக்கணிக்க முடியாது. இச்சொல்லைக் கையாண்டவர் கள் கையாளாதவர்கள் ஆகிய எல்லாருமே இதன் உட் பொருளை ஏற்றிருக்கின்றனர். உலகில் உள்ள எல்லா மதங்களிலும் இது இடம் பெற்றிருக்கிறது. இக்கோட் பாட்டை ஏதேனும் ஒரு விதத்தில் விளக்காத சமயம் மெய்ச் சமயம் ஆகாது.'

மாயா என்னும் சம்ஸ்கிருதப் பதத்திலேயே அதன் அர்த்தம் அடங்கியிருக்கிறது. யா = யாதொன்று, மா= ஒரு க்ஷணத்துக்கு முன்பு இருந்தது போன்று பின்பு இல்லையோ, ஸா = அது, மாயா = மாயை. ஓயாது மாறி யமையும் தன்மை எதனிடத்திருக்கிறதோ அது மாயை. ஆக, மாயையென்பது பிரபஞ்சம். அது ஓயாது தன் வடிவத்தை மாற்றியமைத்துக்கொண்டிருக்கிறது. நிலை பேறு ஒன்றையும் அதனிடத்துக் காணமுடியாது. இவ் வுலகம் மாயை. இதில் நாம் வசித்திருப்பது மாயை.

நாம் பிறப்பது, வளர்வது, வாழ்ந்திருப்பது, தேய்வது, மாய்வது ஆகிய எல்லாம் மாயை. நாம் முன்னேற்றம் அடைவது அல்லது க்ஷீணதசை யடைவது ஆகியவை களும் மாயை. உலகம் தோன்றி வந்து நிலைபெற்றிருக் கிறது. அது மாயை. நாளைக்கு உலகம் தேய்ந்து மறைந்து போகிறது. அது மாயை. அண்டகோடிகள் அனைத்துமாயிருப்பது மாயை. ஜீவகோடிகள் அனைத்து மாயிருப்பது மாயை. சிற்றுயிர்கள் பேருயிராய்ப் பரிண மித்து வருவது மாயை. உயிர்கள் பந்த பாசத்தில் திருப்தியடைந்து உழல்வது மாயை. அவைகள் முக் திக்கு முயல்வது மாயை. பின்பு அவைகள் முக்தியடை வதும் மாயை அல்லது இயற்கையின் செயல்.

காலமாகத் திகழ்வது மாயை. ஏனென்றால் காலச் சக்கரம் ஓயாது சுழன்று ஓடிக்கொண்டிருக்கிறது. அது ஒரே பாங்கில் இருப்பதில்லை. சொரூபத்தில் தன்னை மாற்றி மாற்றிக் காண்பித்து வருகிறது காலம். அது ஒரு மூர்த்தியாக வடிவெடுத்திருந்து அனைத்தையும் விழுங்கி வருகிறது, கடைசியில் தானும் நாசமடைகிறது. தேசம் அல்லது இடமாக இலங்குவது மாயை. அளப் பரிய அண்டங்கள் இடத்தில் இடம்பெற்றிருக்கின்றன. பிறகு இடத்தில் அவைகள் ஒடுங்கி, அந்த இடமும் இல்லாது பிரளயத்தில் ஒடுங்குகிறது. வர்த்தமானம் அல்லது காரண காரியமாகிய செயல்களாக வடிவெடுத் திருப்பது மாயை. கடக்கமுடியாத கர்மமாய் இருப்பது மாயை. ஆக, கால-தேச-வர்த்தமானம் என்னும் மூன்று வித ஜாலவித்தையாக விளங்கிக் கொண்டிருப்பது மாயை.

மனிதனிடத்து மனதாய் மிளிர்வது மாயை. இந்த மனதை ஒரு தலைத்தரமான ஜாலவித்தைக்காரன் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் மனது தோற்றத்துக்கு வரும்போது மனிதன் பிரபஞ்சத்தைக் காண்கிறான்.

அயர்ந்த உறக்கத்தில் மனது ஒடுங்கும்போது மனிதனுக்கு உலகமும் இல்லாது மறைகிறது. அவனுக்கு உலகம் இருப்பது முற்றிலும் மனதைப் பொறுத்ததாம். மற்றுமொரு மாயவித்தையை மனது பண்ணுகிறது. கனவில் தனக்குள்ளேயே அது ஒரு உலகை உண்டு பண்ணுகிறது. அது அமைத்துக்கொண்ட உலகுக்கு ஒப்பப் புறத்தில் ஒன்றுமில்லை. இல்லாததை இருப்பது போன்று மனது காட்டிக்கொடுக்கிறது. இதை முன்னிட்டே உலகம் ஓர் இந்திர ஜாலம் என்று அறிஞர் இயம்புகின்றனர்.

மாயையின் தோற்றங்கள் அனைத்துக்கும் இகம் என்று பெயர். இதற்கு அப்பால் இருக்கும் பெருநிலைக்குப் பரம் என்று பெயர். இகம் பரம் ஆகிய இரண்டும் பரவஸ்துவில் இடம் பெற்றிருக்கின்றன. திரையில் படம் தென்படுவது போன்றும், கண்ணாடியில் பிம்பம் தென்படுவது போன்றும் பரவஸ்துவில் பிரபஞ்சம் என்னும் மாயை தென்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த மாயையில் கட்டுண்டு கிடப்பது வாழ்க்கையின் குறிக்கோள் அன்று. பரமனைச் சார்ந்திருந்து மாயையைக் கடந்து அப்பால் போவது குறிக்கோள் என்று சமயங்கள் வெவ்வேறு விதங்களில் விளக்கியிருக்கின்றன. விளக்கங்களில் உள்ள வேறுபாடுகள் முக்கியமானவைகளல்ல. மாயைக்கு அதீதத்தில் இருக்கும் பரமனை அடைவதே முக்கியமானது.

பிரபஞ்சம் மாயை என்னும் கோட்பாடு எல்லா மதங்களுக்கும் ஒப்ப முடிந்தது. இனி, மாயைக்கு அப்பால் என்ன இருக்கிறது என்னும் கேள்வி எழுகிறது. அதைப்பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்கிறது புத்தமதம். தெரியாமையினால் தனக்கு இழுக்கு ஒன்றுமில்லை. தான் கையாளுகிற சமய சாதனங்களுக்கு

இடைஞ்சல் ஒன்றுமில்லை என்கிறது புத்தமதம். ஆதலால் அதன் கொள்கை அக்ஞேய வாதம் எனப்படுகிறது. மாயைக்கு அப்பால் ஒன்றுமில்லை, வெறும் சூனியம் என்கின்றன லோகாயத மதமும் சார்வாகிய மதமும். ஆதலால் இந்த மூன்று மதங்களும் மாயா வாதத்தை அடிப்படையாகக் கொண்டவைகள். மாயைக்கு அப்பால் பரம்பொருள் ஒன்று உண்டு என்று நம்புகிற மதங்களெல்லாம் பிரம்ம வாதத்தை அடிப்படையாகக்கொண்டவைகள். வைதிக மதங்கள் ஆறும் பிரம்ம வாதத்துக்கு உரியவைகள். புத்தமதமும், நாஸ்திக மதமும் மாயாவாதத்தோடு நின்றுவிடுகின்றன.

பின்பு பரம்பொருளை யூகித்து அறிய முடியுமா, என்னும் கேள்வி எழுகிறது. முடியும் என்று வேதாந்த தர்சனம் உறுதி கூறுகிறது. நனவு, கனவு, கனவற்ற உறக்கம் ஆகிய மூன்றுக்கும் முறையே ஜாக்ரதம், சொப்பனம், ஸுஷுப்தி என்று பெயர். இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் போக்கு வரவு உண்டு. ஆகையால் இவை யாவும் மாயாகாரியங்கள். இம்மூன்றுக்கும் ஆதாரமாயிருக்கும் பிரக்ஞானமே பிரம்மம். அது துரியம் என்றும் அழைக்கப்படுகிறது. அதற்குப் போக்கு வரவு இல்லை. சமயவாதிகள் அதைத் துரியம் என்றும் துரியாதீதம் என்றும் இரண்டு நிலைகளில் வைத்து மொழிகின்றனர். சுத்த மனதைக்கொண்டு தரிசிக்கும்போது அதைத் துரியம் என்றும், மனதற்ற பரிசுத்த நிலையில் அதைத் துரியாதீதம் என்றும் அவர்கள் பாகுபடுத்தியிருக்கின்றனர். ஆனால் சுத்த மனதும் மாயாகாரியமே. மாயைக்கு அப்பால் இருப்பது இரண்டு பொருள்கள் அல்ல. துரியம் மனதுக்கு அப்பாற்பட்டது. ஆக, அது ஏகவஸ்து. பேச்சளவில் அது துரியம் என்றும், துரியாதீதம் என்றும் இரண்டு நிலைகளில் வைத்துச் சொல்லப்படுகிறது.

5. மும் மலம்

இகம், பரம் என பொருளின் காட்சியானது இரு தரப்படுகிறது. ஐம்பொறிகளைக்கொண்டும், அந்தக்கரணங்களைக்கொண்டும் நுகர்வது இகம். பின்பு ஞானக் கண்கொண்டு நுகர்வது பரம். இனி இகத்தையும் பரத்தையும் ஏககாலத்தில் தரிசிக்கமுடியாது.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே.

— திருமந்திரம்

மலம் என்னும் இயல்பு இகத்தில் இடம்பெறுகிறது. பரத்திலோ அது பரசொரூபமாக மேன்மையுறுகிறது. உலகை அழிக்க வந்த ஹாலால விஷம் சிவனிடத்து ஸ்ரீகண்டமாகத் திகழ்கிறது. ஒரு சான்றின் மூலம் அதை இன்னும் தெளிவுபடுத்தலாம். பாம்பின் பல்லில் உள்ள விஷம் அதற்கு அலங்காரம். ஆனால் அதே விஷம் மற்ற உயிர்களுக்கு மரணத்தை விளைவிக்க வல்லது. ஓயாது மாறி மாறி அமைந்து வருகிற பிரபஞ்சம் அமிர்த சொரூபமாகவும் மல சொரூபமாகவும் மாறி மாறி அமைகிறது. நாம் உணவு உண்கிறோம். இந்த உணவு அமிர்தம். இது உடல் வளர்ச்சிக்குப் பயன்படுகிற பகுதியாகவும், பயன்படாத பகுதியாகவும் பிரிவுபடுகிறது. பயன்படாத பகுதி மலம் எனப்படுகிறது. அது உடலினின்று பிரிந்து போகாவிட்டால் உடல் வாழ்க்கைக்கு ஆபத்து. அமிர்தமாக இருக்கும்பொழுது அது அருந்தப்படுகிறது. பின்பு மலமாகும் பகுதி கழியப்படுகிறது. அதே விதத்தில் நாம் பருகும் நீர் அமிர்த சொரூபம். உடலுக்குப் பயன்பட்டான பிறகு அது மூத்திரமாகிறது. மூத்திரமும் மலமே. நாம் உட்கொள்ளும் காற்று அமிர்தசொரூபம். உடல் வாழ்க்கைக்குப் பயன்பட்டான பிறகு அதே காற்று

கரியமிலவாயுவாக மாறுகிறது. கரியமிலவாயு மலமாகப் புறக்கணிக்கப்படுகிறது. இங்ஙனம் பிரபஞ்சம் முழுதிலும் உள்ள வஸ்துக்கள் அமிர்தமாகவும் மலமாகவும் மாறி மாறி அமைந்து வருவது வெளிப்படை. உயிர் வாழ்க்கைக்கு உறுதுணையாவது அமிர்தம். வாழ்க்கையை அழிக்க வல்லது மலம். அமிர்தத்தை ஏற்று மலத்தை விலக்குவதின் வாயிலாக உயிர் வாழ்க்கை நிலைபெற்று வருகிறது. ஆயினும் இறுதியில் மலம் முன்னணியில் நின்று உடல் வாழ்வை முடிவுக்குக் கொண்டு வருகிறது. இங்ஙனம் அமிர்தமும் மலமும் இணைபிரியாதிருப்பது இயற்கையின் அமைப்பு என்பதை அறிபவர் மலம் என்னும் தத்துவத்தை அறிபவர் ஆகின்றனர்.

சைவ சமயக் கோட்பாட்டின்படி மலங்கள் மூன்று உள. வேதாந்தத்தின் கோட்பாடும் அதுவே. மாயை, கர்மம், ஆணவம் ஆகிய மூன்றும் மும்மலமாம்.

மாயை என்பது பிரபஞ்சத்திற்கு அமைந்துள்ள மற்றொரு பெயர். எது ஒரு கணப்பொழுதுக்கு முன்பு இருந்ததுபோன்று பின்பு இருப்பதில்லையோ அது மாயை. ஆக இப்பிரபஞ்சம் மாயை என்பது வெளிப்படை. ஜீவாத்மாவானது பலகோடி பிறவிகளில் பரிணமித்துப் பக்குவமாய்க்கொண்டு வரும்பொழுது மாயா சக்தியானது தாயின் நிலையிலிருந்து அந்த ஜீவாத்மனைப் பேணி வருகிறது. அப்படி ஜீவாத்மனைப் பக்குவப்படுத்தும் நிலையில் இருக்கும்பொழுது மாயையை மலம் எனலாகாது. இதற்குத் தக்கதோர் உபமானம் எடுத்துக் கொள்வோம். தாயின் கர்ப்பத்தில் சிசுவானது உருவெடுக்கிறது. அப்படி உருவெடுத்து வரும்பொழுது தாயின் கர்ப்பம் போற்றுதற்குரிய துணையாகிறது. கர்ப்பத்தில் சிசு முற்றிலும் வளர்ச்சியடைந்தான பிறகு அது அந்த கர்ப்பத்தினின்று விலகி வெளியே வர வேண்டும். அவ்வேளையில் வளர்த்த கர்ப்பமானது அந்தச் சிசுவுக்கு

மலமாக மாறுகிறது. அந்த மலத்தினின்று வெளியேறு விட்டால் சிசு அழிந்துபட்டுப் போகிறது. இதே விதத்தில் மாயை என்னும் பிரகிருதித்தாய் ஜீவாத்மனை வளர்த்துப் பக்குவப்படுத்திப் பரமாத்மனிடம் ஒப்படைக்கிறது. ஜீவாத்மா பரமாத்மாவோடு சேரும் தறுவாயில் மாயையானது மலம் என்னும் பெயர் பெறுகிறது.

பிரபஞ்சம் முழுவதும் கர்மசொரூபம். ஜீவாத்மனுடைய முன்னேற்றத்துக்குத் தவிர்க்கமுடியாத துணையாய் இருப்பது கர்மம். உயிர்களனைத்தும் கர்மத்தின் வாயிலாகத் தங்களைத் திருத்தி யமைத்து வருகின்றன. மனம் வாக்கு காயம் ஆகிய திரிகரணங்களால் நிகழ்வன வெல்லாம் கர்மம். பக்தி பண்ணுவதும் ஞான விசாரம் செய்வதும் கர்மத்தின் பண்பட்ட கூறுகளாம். ஜீவாத்மாவானது பரமாத்மாவில் லயமாகிறபொழுது கர்மம் முடிவுறுகிறது. அத்தருணத்தில் அதற்கு மலம் என்னும் பெயர் வருகிறது. மற்று ஜீவாத்மனைப் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கிற பொழுது கர்மம் மலமாகாது. ஆணவம் என்னும் மலம் மும்மலங்களுள் கடையாயது. அணு என்னும் அடிச் சொல்லிலிருந்து ஆணவம் வந்துள்ளது. தன்னை ஒரு நுண்ணிய உயிராக எண்ணிக்கொள்வது ஆணவம். ஜீவாத்மன் உண்மையில் அணு அல்லது மிக நுண்ணிய உயிராக உருவெடுக்கிறது. அது காலக்கிரமத்தில் ஸ்தாவரம், ஜங்கமம் ஆகிய பலகோடி பிறவிகளை எடுத்துப் பரிணமித்துப் பெருநிலை யெய்துகிறது. பறவையாக, விலங்காக, மனிதனாக, தேவனாகத் தான் வடிவெடுத்து வருவதில் ஜீவாத்மன் அபிமானம் கொண்டிருப்பது முற்றிலும் அவசியம். இறுதியில் பரமாத்மனோடு ஒன்றுபடும்பொழுது ஆணவம் அல்லது ஜீவவியக்தி அழிந்துபோகிறது. கடலை நோக்கிக் கீழே விழுந்துகொண்டிருக்கும் ஒரு மழைத்துளிக்கு வடிவம்

இருக்கிறது. கடலில் விழுந்தானபிறகு மழைத்துளி என்னும் ஆணவம் அல்லது நாமரூபம் அதற்கில்லை. அதே பாங்கில் பரமாத்மாவில் ஒன்றுபடுகிற ஜீவாத்மனுக்கு ஜீவ வியக்தி அல்லது ஆணவம் அழிந்துபட்டுப் போகிறது. ஆக ஆணவம் என்னும் மலத்தைத் துடைத்து விட்டுப் பரத்தில் லயமாவது ஜீவாத்மனது குறிக்கோள்.

பரத்தினை அடையும் தறுவாயில் இருக்கும் ஜீவாத்மனுக்குப் பிரகிருதி மும்மலமாக வடிவெடுக்கிறது. வேறு சில மும்மைகள் வாயிலாகவும் பிரகிருதியானது விளக்கப் பெறுகிறது. கால-தேச-வர்த்தமானம் என்பது ஒன்று. சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்கள் மற்றொன்று. திரிபுடி அல்லது காண்போன், காணப்படு பொருள், காணுதல் என்னும் நிலையும் பிரகிருதிக்கு உரியதாம். இந்நிலைகளை முப்பாழ் என்று மொழிவது மரபு.

இனி, இனப்பற்று, சமயப்பற்று, மொழிப்பற்று என்பன நூலோர் இதுகாறும் வகுத்துவைக்காத மும் மலங்களாம். உண்மையில் ஆத்ம சைதன்யத்துக்கு ஜாதி கிடையாது. ஆனல் சில பெரியோர் அந்த உபாதியை நெடுநாளைக்கு விடாது பற்றிப் பிடிக்கின்றனர். ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்திருந்து சமயாதீதம் போவது குறிக்கோள். மற்றுச் சான்ஞேர் சிலர் சமய வெறிக்கு ஒப்பான சமயப் பற்றைக் கடைசிவரையில் வைத்திருப்பது அன்னவர்க்குப் பொருந்தாது. பண்டம் மாற்றுதற்கு எந்த நாட்டுப் பணமும் உதவும். அங்ஙனம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுதற்குப் பண்பட்ட மொழிகள் எல்லாம் உதவும். இவ்வுண்மையை மறந்து விட்டுத் தென்மொழி வேதம், வடமொழி வேதம் என்னும் வேற்றுமையை வளர்ப்பவர்களை நல்லார்க்கிடையிலும் காணலாம். இங்ஙனம் ஜாதிப்பற்று, சமயப்பற்று, மொழிப்பற்று என்னும் மும்மலங்களில் அகப்படாதவர்களே பாக்கியவான்கள்.

6. சமயங்களின் தோற்றம்

அண்டத்தின் அமைப்பு அற்புதமானது. எத்துறையில் புகுந்து எப்பொருளை ஆராய்ந்து பார்த்தாலும் அதனிடத்து உள்ள அருமையொன்று வெளியாகிறது. ஒரு பொருளை முற்றிலும் ஒத்திருக்கிற மற்றொரு பொருளைக் காணமுடியாது. உயிர்வாழ்வன, உயிர் அற்றவை ஆகிய அனைத்துக்கும் இதுவே உண்மை. பேதத்தைப் புலப்படுத்துவது சிருஷ்டி. படைத்தவன் படைத்திருக்கிற திறமைக்குப் பிரபஞ்சமெங்குமுள்ள வேறுபாடே முடிந்த விளக்கமாகிறது.

உலகில் எத்தனை மனிதரோ அத்தனைவித மனப்பாங்குகள் உள. உடல் வேற்றுமையைவிட உள்ளத்தின் வேற்றுமையே மனிதனைத் தரம் பிரிப்பதற்கு நன்கு உதவுகிறது. கீழோர் எனப்படுபவரும், மேலோர் எனப்படுபவரும் அவரவர் மனபரிபாகத்துக்கு ஏற்றவாறு பாகுபடுத்தப்படுகின்றனர். மேலோர்க்கிடையிலும் பாகுபாடுகள் பலப்பல உள. பாகுபாட்டை அடிப்படையாகக்கொண்டே சமயங்கள் பல உலகில் உருவெடுத்திருக்கின்றன. உடல் கூறுக்கு ஏற்றவாறு உணவு வகை மாறியமைவது போன்று உள்ளத்தின் இயல்புக்கு ஏற்றவாறு சமயங்களும் பலதரப்படுகின்றன. உடலை உறுதிப்படுத்துபவைகளையெல்லாம் நல்லுணவு என்கிறோம். அதே விதத்தில் மனதைப் பண்படுத்துபவைகளையெல்லாம் மேலான சமயங்கள் என்கிறோம். இனி சமயங்களைச் சீர்தூக்கித் தரம் பார்ப்பது எளிதன்று. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். விக்கிரக ஆராதனை பண்ணுவது தேவ நிந்தனை, அது மகா பாபம் என்கிறது ஒரு சமயம். விக்கிரகத்தின் துணைகொண்டு தேவாராதனை பண்ணுவது சிறந்ததொரு சாதனம் என்கிறது மற்றொரு சமயம். மாறுபடுகிற இந்த இரண்டு கோட்பாடுகளும் மனிதனது முன்னேற்றத்துக்குப் பயன்

பட்டு வருகின்றன. இதினின்று உண்மையொன்று வெளியாகிறது. ஓர் உடலுக்கு அமிர்தம் போன்று உணவாவது மற்றோர் உடலுக்கு விஷம் போன்று கேட்டை விளைவிக்கலாம். ஒரு சாரார்க்குச் சமய அனுஷ்டானமாவது மற்றொரு சாரார்க்குத் துன்மார்க்கமாகலாம். மற்று அவரவர் நெறியில் நிலைநின்று முன்னேற்றமடைய மாந்தர் கடமைப்பட்டிருக்கின்றனர். ஏதேனுமொரு முறையில் முன்னேற்றமடைவது குறிக்கோள். அதற்கு வேறுபடும் சமயங்கள் பல இருக்கின்றன. அவைகளுள் ஒரு சமயம் மற்றொரு சமயத்துக்கு அளவையாகாது. சமயங்கள் பல அமைந்திருப்பது இறைவனுடைய சிருஷ்டி. தன் குழந்தையின் உடல் நிலைக்கு ஏற்றவாறு தாய் உணவு வகையை ஆயத்தப்படுத்துவது போன்று மாந்தரது மனநிலைக்கு ஏற்றவாறு இறைவன் சமய நெறிகளை வகுத்து வைத்திருக்கிறான். சமயாசாரியர்கள் பலதரப்பட்டவர்களாக அமைந்திருப்பதும் ஈசனது பெருந்திட்டமாம்.

ஒரு மரத்தின் தரம் அதினின்று உண்டாகும் கனியைக்கொண்டு அறியப்படுகிறது. அங்ஙனம் ஒரு சமயத்தின் தரம் அதினின்று உருவெடுக்கும் சான்றோர்களைக் கொண்டு வெளியாகின்றது. ஏனென்றால் மேன்மக்களையும் தெய்விக மூர்த்திகளையும் உருவாக்குவதே சமயங்களின் நோக்கமாகும். இறைவனது பேரருளுக்குப் பாத்திரமானவர்களது பாங்கு இரண்டு விதங்களில் வையகத்தில் நிலைபெற்றிருக்கின்றன. அன்னவர்கள் வாழ்ந்த பெருவாழ்வில் யாண்டும் தெய்விகம் திகழ்கிறது. அத்தெய்விகம் எந்த மதத்திலும் கட்டுப்படாததாக, மக்கள் அனைவர்க்கும் பரபோதத்தை ஊட்டக்கூடியதாகிறது. நல்ல கனியொன்று எந்த நாட்டில் எந்த மரத்தில் உற்பத்தியானதாயிருப்பினும், அதைப் புசிப்பவர்க்கு அது சுவை நிறைந்த நல்லுணவாகிறது. ஆனால் ஒருவர்

உண்பதோடு கனிக்கு முடிவு வருகிறது. பெரியார்களது பெருவாழ்வோ காலத்திலோ இடத்திலோ கட்டுப்படாது யாண்டும் யாவர்க்கும் அருள் நாட்டத்தை ஊட்டக்கூடிய தாயிருக்கிறது. மாணிக்கவாசகரது பெருவாழ்வை எண்ணிப்பார்க்குமிடத்து அது எந்த சமயத்திலும், எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் கட்டுப்படாததாயிருக்கிறது. ஆத்ம சாதகர்களுக்கு அது என்றென்றும் நல்ல அருள் விருந்தாகிறது. உலகில் தோன்றியுள்ள தெய்விகப் புருஷர்கள் எல்லாருடைய ஜீவிதத்திலும் இதே மகிமையைக் காணலாம்.

ஐரோப்பாவில் அஸிஸி என்னும் ஊரில் பிறந்தவர் பிரான்ஸிஸ் என்னும் கிறிஸ்தவப் பெரியார். அராபியாவில், இஸ்லாமிய மதத்தில் ஸூபி சம்பிரதாயத்தைச் சார்ந்தவள் பக்திமதி ரபேயா என்னும் பெண்பால் ஒருத்தி. வங்காளத்தில் வைஷ்ணவ மதத் திலகராகத் திகழ்ந்தவர் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர். இவருக்குக் கௌராங்கர் என்பது மற்றொரு பெயர். தமிழ்நாட்டில் சிவ பக்த சிரோமணியாகத் திகழ்ந்தவர் மாணிக்கவாசகர். இந்த நான்கு பெருமக்களும் நான்கு நாடுகளுக்கு உரியவர்கள். அவர்கள் வேறுபடும் நான்கு சமயங்களை அனுஷ்டித்தவர்கள்; ஒன்றோடு ஒன்று ஒவ்வாத நான்கு மொழிகளை அவர்கள் பேசினார்கள். ஆயினும் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பழகும் வாய்ப்பு இந்த நால்வருக்கிடையில் கிட்டியிருக்குமாகில் அவர்கள் தங்களைப் பரஸ்பரம் நன்கு அறிந்திருப்பார்கள். மொழியும், சமயமும், ஜாதியும், தேசமும் இடைஞ்சல்களாகக் குறுக்கிட்டிருக்கமாட்டா. ஏனென்றால் அருள் நாட்டம் என்னும் சீரிய மனநிலை மானுடர் அனைவர்க்கும் பொதுவானது. அருள் பித்தம் பிடித்துள்ள ஓர் ஆத்ம சாதகன், அதே பித்தம் பிடித்துள்ள மற்றொரு சாதகனை இயல்பாக அறிந்துகொள்கிறான். ஓதாது உணர்ந்த ஆத்மபோதம்

அல்லது அருள்நிலை என்பது இதுவே. இதை வளர்ப்பது சமயங்களின் பொது நோக்கமாகும்.

இரண்டாவதாக சான்றோர்களில் யாரோ சிலர் தங்களது பேரனுபவங்களை நூல்களாக அமைக்கின்றனர். மெய்ப்பொருளுக்கு அவர்கள் எப்பெயரிட்டு அழைக்கின்றனர் என்பது முக்கியமானதன்று; அவர்கள் எந்த மொழியில் பேசுகின்றனர் என்பதும் முக்கியமானதன்று. மெய்ப்பொருளை அவர்கள் எப்படி விளக்கியிருக்கின்றனர், எத்தகைய ஆர்வத்துடன் விளக்கியிருக்கின்றனர், ஆத்மசாதகர் உள்ளத்தில் அவர்கள் எப்படி ஞானவிளக்கேற்றி வைக்கின்றனர்—இவை போன்ற கேள்விகள்தாம் மிக முக்கியமானவைகள். ஆன்றோர்கள் அமைத்து வைத்திருக்கிற பாரமார்த்திக போதம் என்னும் பொக்கிஷம் ஒப்பற்றது. அது என்றைக்குமே அழிந்துபட்டுப் போகாத அருள் செல்வம். மாயைக்கு உட்படாது பிறவிப் பெருங்கடலைக் கடக்க விரும்புபவர்களுக்கு அந்நூல்கள் கலங்கரை விளக்குகள் போன்று பயன்படுகின்றன. அந்நூல்களோடு தொடர்வு வைக்கத் தெரிந்துகொண்டவர்கள் பாக்கியவான்கள். பெறுதற்கு அரிய அருட்பேறு பெறுதற்கு அவைகள் அருந்துணை புரிகின்றன.

அத்தகைய அரிய பொக்கிஷங்களுள் திருவாசகம் ஒன்று. அதனோடு தொடர்வு வைக்கின்ற ஆத்மசாதகன் அருட்செல்வனாகின்றான். சாதனத்தில் அவன் எந்தப் படித்தரத்தில் இருந்தாலும் அதினின்று மேல்நோக்கிப் போவதற்கு அவன் உபாயம் காண்பான். உயிர் வகைகள் அனைத்தும் கல் நிலையினின்று பரிணமித்து சிவபோதம் பெறும் வரையில் ஓய்வின்றிப் பயணம் போய்க்கொண்டிருக்கின்றன. ஆத்ம சாதனத்தில் பிரவேசிக்கின்றவர்களுக்கிடையிலும் இத்தனைவிதப் படித்தரங்கள் இருக்கின்றன. நல்ல சாதகன் ஒருவன் திருவாச

கத்தோடு தொடர்வு வைக்கின்றபொழுது தான் எந்தப் படித்தரத்தில் இருக்கிருன் என்பதைக் கண்டுகொள்வான். கண்ணுடி ஒவ்வொருவனுடைய முகத்தையும் உள்ளபடி விளக்குவது போன்று திருவாசகம் சாதகனது பக்குவத்தை அவனுக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. அடுத்தபடியாக அவன் எந்த மேல்நிலையடைய வேண்டுமோ அதில் அவனுக்கு ஆர்வத்தை ஊட்டுகிறது. நீரினின்று நிலத்தில் எடுத்துப் போடப்பட்ட மீன் ஆனது தரை தன்னுடைய சொந்த இடமன்று என்று துள்ளிக் குதிக்கிறது. சதுப்பு நிலத்தை எட்டிவிட்டால் அது சிறிது ஆறுதல் பெறுகிறது. அங்குக் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொண்டு அம்மீன் மேலும் முயலுகிறது. அது சேற்றுக்குள் வந்து வீழ்ந்தால் இன்னும் கொஞ்சம் நிம்மதி பெறுகிறது. அடுத்த எத்தனத்தில் அது ஆழமற்ற நீர் நிலையை எட்டுகிறது. அதன் விளைவாக இன்னும் கொஞ்சம் உயிர் அதற்கு வருகிறது. சிற்ருேடை ஒன்றை எட்டியதும் தனக்கு உய்வு கிட்டிவிட்டதாக அது உணர்கிறது. பெரிய ஆற்றில் புகுந்ததும் அதற்கு பயமில்லை. பிறகு ஆழ்கடலைச் சென்று சேர்ந்துவிட்டால் அம்மீன் தனக்கேற்ற வீடுபேறு பெற்றதாகிறது. கடவுளிடத்திருந்து பிரிந்து பிரபஞ்ச வாழ்வுக்கு வந்துள்ள மனிதன் அந்த மீனின் நிலையில் இருக்கிருன். தெய்விகத்தைப் பெறுதற்கு ஏற்ப அவன் அல்லலினின்று விடுபடுகிருன். “மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்” என்பது அவன் அடைகிற முடிந்த நிலை. ஆதியோடந்தம் எல்லா நிலைகளிலும் ஆத்ம சாதகனுக்கு நல்ல துணையாவது திருவாசகம். தன் பக்குவத்திற்கு ஏற்றவாறு அவன் அதில் பொருளையும் தான் போகவேண்டிய பாதையையும் காண்கிருன். இறைவனுடைய பேரருளால் மனிதனுக்கு இந்த வாய்ப்புக் கிடைக்கிறது.

திருவாசகம் சிவபக்தனுக்கு அருந்துணையாவது போன்று அம்பிகை உபாஸகனுக்கும், ஹரி பக்தனுக்கும், பார்வதி புத்திரர்களைப் போற்றுபவர்க்கும் ஏற்ற நூல்கள் அமைந்திருக்கின்றன. புற மதங்கள் எனப்படுபவைகளிலும் அனுபூதிக்கு ஏற்ற அரிய சாஸ்திரங்கள் அமைந்திருக்கின்றன. ஏனென்றால் அனுபூதிமான்கள் எல்லா மதங்களிலும் தோன்றியிருக்கிறார்கள்; அவர்கள் இனியும் தோன்றுவார்கள். சமயங்களின் உள்விவு அவைகள் தோற்றுவிக்கும் பெருமக்களின் வாயிலாக வெளியாகிறது.

7. சமயங்களின் சமரசம்

உணவுக்கு உதவுகிற தானியங்களுள் எதனிடத்து என்ன குணம் இருக்கிறது, அது யாருக்கு எப்படிப் பொருந்துகிறது என்பதை அறிஞர் ஆராய்கின்றனர். ஆடைகளுள் பருத்திநூல், பட்டு, நார்ப்பட்டு, உரோமம் ஆகியவைகளால் ஆகிய ஆடைகளின் பாங்குகளை மக்கள் அறிந்திருப்பது அவசியம். அதேவிதத்தில் சமயங்களின் பாகுபாடுகளை தீர்க்கதரிசிகள் ஆராய்ந்திருக்கின்றனர். வெவ்வேறு நோய்க்கு வெவ்வேறு மருந்து இருப்பது போன்று மனிதனது மனப்பான்மைக்கு ஏற்ப மத வேறுபாடு உண்டு. எந்த மதத்தை மனிதன் அனுஷ்டித்தாலும் அதன் மூலம் அவன் முன்னேற்றம் அடையவேண்டும். இந்தப் பிரபஞ்ச வாழ்க்கை மனிதனுக்கு நித்தியமானதன்று. இதைக் கடந்து அவன் அப்பால் போக வேண்டும் என்னும் கோட்பாடு எல்லா மதங்களுக்கும் பொதுவானதே. செத்த பிறகு சீரும் சிறப்பும் அடைவதைப்பற்றிய நம்பிக்கை ஒவ்வொரு மதவாதியிடத்திலும் இருக்கிறது. மற்று இங்கு இவ்வுலகில் இருக்கும் போதே மனிதன் எப்படியெல்லாம் முன்னேற்றமடையலாம் என்பதையும் ஒவ்வொரு மதமும் தன் போக்கில் சொல்லி வைத்திருக்கிறது.

ஆத்மசாதகன் ஒருவன் தேன் ஈ போன்று இருக்க வேண்டும். பலப்பல செடிகளுக்கு அந்த ஈ போகிறது. செடிகளில் உள்ள தோஷங்களைக் காண அதற்கு அவகாசமில்லை. பூவில் உள்ள தேனைமட்டும் அது சேகரிக்கிறது. அங்ஙனம் ஆத்ம சாதகன் தனது மார்க்கத்தை உறுதியாய்ப் பிடிப்பதற்கு இடையில் பிறரிடமுள்ள நலன்களையும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருக்க வேண்டும். தனக்கு ஒவ்வாத அனுஷ்டான முறை பிறரிடமிருப்பதை முன்னிட்டு அவர்களை வெறுக்கவோ விலக்கிவைக்கவோ முற்படலாகாது. ஒரே தோட்டத்தில் விதவிதமான பழங்களையும் பூக்களையும் தருகின்ற மரங்கள் இருக்கின்றன. தோட்டக்காரன் அவைகளை வளர்ப்பது போன்று கடவுள் எல்லாப் பாங்குடையவர்களையும் வளர்க்கிறார். இதை அறிந்து நடந்துகொள்வது சமரசமாகும்.

இனி, சரித்திரபூர்வமாக ஆராய்ந்து பார்ப்போம். ஒரு மதத்தை அனுஷ்டிக்கின்றவன் அதை ஒதுக்கி வைத்துவிட்டு மற்றொரு மதத்தை அனுஷ்டிக்கப் புகுவது இந்தியாவுக்குப் புதியதன்று. சைவம், வைஷ்ணவம், சாக்தம், பௌத்தம், ஜைனம் ஆகிய மதங்களில் வெவ்வேறு காலங்களில் மக்கள் பெருமிதமாக மாறியமைந்திருக்கின்றனர். நம்நாட்டு மக்களில் பெரும்பாலர் இன்றைக்கு இஸ்லாமிய மதத்துக்கும் கிறிஸ்தவ மதத்துக்கும் போயிருக்கின்றனர். நாளடைவில் அவர்கள் ஹிந்து மதத்துக்குத் திரும்பி வருவது சாத்தியம். சூழ்நிலையினால் தூண்டப்பெற்று அவர்கள் புற மதங்களுக்குப் போனார்கள். இனி, சுதந்தரத்தில் இருந்துகொண்டு தத்துவமுணர்ந்த விவேகிகளாக அவர்கள் ஹிந்து மதத்துக்குத் திரும்பி வருவதும் இயல்பே. தன் உடலுக்கு ஒத்துக்கொள்கிற உணவை ஒரு மனிதன் அருந்துவது போன்று தன் இயல்புக்கு ஒத்துக்கொள்

கிற சமயத்தை அனுஷ்டிப்பதற்கான சுயேச்சை மனிதனுக்கு வேண்டும். அவனுடைய முன்னேற்றத்துக்கு அது முற்றிலும் அவசியமானது.

ஆனால் நடுநிலை வகித்து மதங்களைத் தங்களுக்குத் தாங்களே ஆராய்ச்சி பண்ணும் அறிவுத்திறன் பலர்க்கு இல்லை. ஐதிகமாகத் தங்களுக்கு வாய்த்துள்ள மதத்தையே பொதுமக்கள் அனுஷ்டிக்கின்றனர். தங்களுள் சிறந்தவர்கள் செல்லும் செந்நெறியிலேயே தாங்களும் போகின்றனர். அன்னவர்கள் ஒழுகுகிற மார்க்கத்தில் மாறுதலோ சீர்திருத்தமோ தேவையாகும்பொழுது, ஹிந்து மதாசாரியர்கள் ஒரு சீரிய முறையைக் கையாளுகின்றனர். சமுதாயத்தில் முதன்மை வகிக்கும் மக்களை அவர்கள் நேர்வழியில் திருத்தியமைக்கின்றனர். பின்பு அவர்களைப் பின்பற்றுகிற பாமரர்களும் தாங்களே திருந்திய சமயத்தை ஏற்றுக்கொள்கின்றனர். உதாரணமாக ஒரு கொற்றவனைத் திருத்தினால் அவனது குடிமக்களும் தாங்களே திருந்துகின்றனர். ஒரு மத குருவைத் திருத்தினால் அவரது சிஷ்யர்களும் தாங்களே திருந்தியமைகின்றனர். தலைவனைத் திருத்துதல் வாயிலாக, அவனைச் சார்ந்தவர்களையெல்லாம் ஏகோபித்துத் திருத்துவது சான்றோரது சீரிய செயலாகும்.

உணவுவகைகள் பலப்பல இருக்கின்றன. இயற்கையின் அமைப்பு அத்தகையது. அத்தனை வகை உணவுகளில் அவரவர்க்குப் பொருந்தியதை மக்கள் பிரித்தெடுத்துக்கொள்கின்றனர். அப்படிச் செய்வதில் இழுக்கோ இழிவோ இல்லை. ஒத்துக்கொள்ளும் உணவை ஏற்பதே முறை. உடலுக்கு ஏற்ற உணவு இருப்பது போன்று இயல்புக்கு ஏற்ற சமயமும் உண்டு. இறைவனுடைய திட்டம் அத்தகையது. அகச்சமயம் புறச்சமயம் என்பனவெல்லாம் மனிதனுடைய கற்பனை. எல்லாம் ஈசனுடைய உடைமை யென்றும் எல்லாம் ஈசனுடைய

செயல் என்றும் அங்கீகரிக்கிறவர்கள் சமயத்துறையி லும் அக்கோட்பாட்டைக் காணக் கடமைப்பட்டிருக் கின்றனர்.

வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா.

மனிதனுடைய முன்னேற்றத்துக்கு இடைஞ்சலா யிருப்பவைகளுள் மதவெறியொன்று. அந்நோய்க்குத் தன் உள்ளத்தில் இடங்கொடுப்பவன் பாரமார்த்திகத் தில் பரந்த பெருநிலை யெய்தான். இந்தப் பொல்லாத நோய் பழையது என ஒதுக்கப்படவேண்டும். இக்காலத் தவர்களும் இனி வருபவர்களும் இந்நோய்க்கு இடந் தரலாகாது. பௌதிக விஞ்ஞானிகள் இயற்கைத் தத் துவங்களை நடுநிலை வகித்து ஆராய்வதுபோன்று, பார மார்த்திகத்தில் ஈடுபடுகிறவர்கள் பரதத்துவங்களை நடு நிலை வகித்து ஆராய்தல் வேண்டும். அப்பொழுது மக்க ளது இணக்கத்தில் இனிமையும் மனதின் பரிபாகத்தில் தெளிவும் ஒருங்கே திகழும்.

8. வடமொழியும் தென்மொழியும்

தமிழைத் தென்மொழியென்றும் ஸம்ஸ்கிருதத்தை வடமொழியென்றும் பகர்வது வழக்கம். தென்னாட்டி லிருக்கும் திராவிட பாஷைகளுக்கெல்லாம் அடிப்படை யானது தமிழ். ஆதலால் அதற்கு அப்பெயர் வழங்கு கிறது. வடநாட்டிலிருக்கும் பாஷைகளுக்கெல்லாம் மூல மொழியாயிருப்பது ஸம்ஸ்கிருதம். அதை முன் னிட்டு அது வடமொழியெனப்படுகிறது. ஆயினும் திராவிட மொழிகளிலும் அது வேண்டியவாறு இடம் பெற்றிருக்கிறது. மிகக் குறைந்த அளவில் ஸம்ஸ்கிரு தப் பதங்களைப் பிரயோகிப்பது தமிழ் ஒன்றே. அதை ஒதுக்கிவைக்கும் மனப்பான்மை நூலோர்களிடத்து ஒரு

பொழுதும் இருந்ததில்லை; ஒதுக்கிவைக்கவும் முடியாது. வடமொழிச் சொற்களை எப்படி எடுத்துக் கையாளுதல் வேண்டும் என்பதற்குத் திருவள்ளுவர், கம்பர், திருவாதவூரர் போன்றவர்கள் சிறந்த முன்மாதிரியாகின்றனர்.

இந்தியாவில் உள்ள எல்லா பாஷைகளுக்கும் எழுத்து அமைப்பு ஸம்ஸ்கிருத அக்ஷர அமைப்பை அனுசரித்து ஒரே பாங்கில் ஏற்பட்டிருக்கின்றது. தமிழ் எழுத்துக் கிரமம் இதற்கு விலக்கு அன்று. ஆனால் மற்ற மொழிகளைப் போன்று ஸம்ஸ்கிருத அக்ஷரங்கள் எல்லாவற்றையும் தமிழ் இன்னும் தன்னகத்து ஏற்றுக்கொள்ளவில்லை. ஷ, க்ஷ, ஸ, ஜ, ஹ போன்ற எழுத்துக்களை மட்டும் எடுத்துள்ளது. க ச ட த ப வர்க்கங்கள் யாவற்றையும் தன்மயம் ஆக்குவது இன்னும் பாக்கியிருக்கிறது. உயிர் எழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் சேர்ந்து தமிழில் முப்பது எழுத்துக்கள் இருக்கின்றன. ஸம்ஸ்கிருதத்திலோ ஐம்பத்தோர் எழுத்துக்கள் இருக்கின்றன. ஆதலால் உலகத்தில் உள்ள பாஷைகள் அனைத்தின் ஓசைகளை உள்ளபடி உச்சரிக்க ஸம்ஸ்கிருதம் கற்றவனுக்கு இயலுகிறது. ஸம்ஸ்கிருத அக்ஷரங்கள் ஐம்பத்தொன்றுக்கு ஒப்ப மாணிக்க வாசகர் திருவாசகத்தில் ஐம்பத்தொரு திருப்பதிகங்கள் அமைத்திருப்பது பாராட்டுக்குரியதாம்.

வடமொழி என்னும் பெயர் பெற்றிருக்கிறது எனினும், ஸம்ஸ்கிருதத்தின் சரியான உச்சரிப்பைத் தென்னிந்தியாவில்தான் கேட்க முடியும். அம்மொழியின் வல்லுநர்களை இப்பக்கங்களில் காண்பதுபோன்று வடக்கே காண முடியாது. பின்பு வேற்றுமொழி கற்கும் திறமை திராவிடரிடத்தே மேன்மையுற்று மிளிர்கிறது. தமிழையும் ஸம்ஸ்கிருதத்தையும் கற்றிருக்கிற ஒருவன் அகில பாரத பாஷைகளை மிக விரைவில் கற்

றுக்கொள்வான். இனி தமிழ்மொழி பேச்சு வார்த்தையில் இருக்கிறது; ஸம்ஸ்கிருதமாகிய மற்றது நூல் அறிவோடு நின்றுவிடுகிறது. ஆனால் பழகினால் ஸம்ஸ்கிருதத்திலும் பேசலாம். மற்றொரு பேருண்மையை ஈண்டு ஞாபகத்தில் வைப்பது அவசியம். கற்பதற்கு வடமொழி எவ்வளவு கடினமானதோ அவ்வளவு கடினமானது தென்மொழியாகிய தமிழும். இவ் இருமொழிகளையும் புதிதாய்க் கற்பவர்க்கே இப்புதுமை புலனாகும்.

கற்றவர்களுக்கு உதவுவது போன்று மற்றவர்களுக்கு ஸம்ஸ்கிருதம் உதவாது. கசடறக் கற்றவர்கள் யாண்டும் மிகச் சிலரே. காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில் அகில பாரதத்துக்கும் பல்லாயிரம் ஆண்டுகளாக ஸம்ஸ்கிருதம் பொதுமொழியாக இருந்து வந்தது. இன்று அது பின்னணியில் புதைந்து கிடக்கிறது எனினும் அது முன்னணிக்கு வரும்பொழுதே உண்மையான மறுமலர்ச்சி நாடெங்கும் நிலவும். மாகாணங்களுக்கிடையில் இப்பொழுது உள்ள மொழிப் பிணக்கு ஓயுங்கால் இவ்வுண்மை விளங்கும். பின்பு ஸம்ஸ்கிருதமும் தழைத்தோங்கும்.

இத்தொல்லுலகம் அறிந்துள்ள நூல்களில் மிகப் பழையது ரிக்வேதம். அதன் காலத்தை இன்னும் யாரும் சரியாக நிர்ணயிக்கவில்லை. அத்தகைய புராதன கலைக் களஞ்சியம் ஸம்ஸ்கிருத பாஷையில் உருவாகியிருக்கிறது. ஆதலால் அந்த பாஷை ரிக்வேதத்துக்கும் முந்தையது என்பது தேற்றம். மாணிக்கவாசகர் அதில் தேர்ச்சிபெற்றிருந்தது திருப்பள்ளி எழுச்சி நான்காவது பாடலில் தெளிவுறுத்தப்படுகிறது. ஸம்ஸ்கிருதம் என்னும் சொல்லானது தெளிவுறத் திருத்தியமைக்கப்பெற்றது என்று பொருள்படுகிறது. ஆதியில் அது பிராகிருதமாயிருந்தது; பின்பு அது ஸம்ஸ்கிருதமானது. பழந் தமிழ் செந்தமிழ் ஆனதுக்கு நிகர் அது. அம்மொழியிலே

காம்பீரியமும், மகிமையும், இனிமையும் சேர்ந்து பொலி கின்றன. ஸாம வேதம் ஓதுவதைக் கேட்கும்போதே மனது மகோன்னத நிலைக்குப் போகிறது. அதற்குமேல் "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லு வார் செல்வர் சிவபுரத்தில்"—என்பது இரு மொழி களுக்கும் பொதுவானதே.

பழைய சாஸ்திரங்கள் பல ஸம்ஸ்கிருதத்தில் புதைந்து கிடக்கின்றன. ஆறு சமயங்களுக்கும் உரிய சாஸ்திரங்கள் அதில் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஆகமங்கள் ஆனதும் அதே மொழியிலாம். ஒரே பரம் பொருள் ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு பெயர் பெறுகிறுர். பின்பு ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஆயி ரம் திருநாமங்கள் அமைந்திருக்கின்றன. சிவஸஹஸ்ர நாமம், லலிதா ஸஹஸ்ர நாமம், விஷ்ணு ஸஹஸ்ரநாமம்— இப்படி வழிபடு தெய்வங்களுக்கெல்லாம் ஆயிரக்கணக் கில் பெயர்கள் பொருள்படப் பொறிக்கப் பெற்றிருக் கின்றன. "ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்றும் இலாற்கு, ஆயிரம் திருநாமம்பாடி நாம் தெள்ளேணம் கொட் டாமோ," என்னும் கோட்பாடும், "பேர் ஆயிரம்உடைப் பெம்மான் போற்றி" என்னும் கோட்பாடும் சிவஸஹஸ்ர நாமத்தைக் குறிப்பனவாம். இந்தப் பெயர்கள் யாவும் ஸம்ஸ்கிருதத்தில் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு பெயரும் பொருள் புதைந்தது. தத்துவங்களே பரமனது பெயர்களாக வடிவெடுத்து வந்திருக்கின்றன. அவை களை ஆராய்ந்து அறியுமளவு பரஞானமும் பக்தியும் நம் உள்ளத்தில் உருவெடுக்கின்றன. திருவாசகத்தில் திகழும் பரமனது மகிமைகளுக்குப் பொருத்தமான ஸம்ஸ்கிருதப் பதங்களும் ஆங்காங்கு இணைக்கப்பெற்றி ருக்கின்றன. ஆர்வத்துடன் அவைகளைக் கற்பது உசி தம்.

9. மஹாபாவ: महाभाव: *Mahābhāvah*

பிரேமை பக்தியைவிடப் பன்மடங்கு மேலானது மஹாபாவம். உணர்வு வகைகளுக்கு பாவம் என்று பெயர். பின்பு உணர்வின் உச்சநிலை மஹாபாவம் எனப்படுகிறது. அது தெய்வத்துக்கே உரியதாக்கப்படுகிறது. மெய்ப்பாடு, உளப்பாடு, உயிர்ப்பாடு என்று மனிதனுடைய அமைப்பில் மூன்று பகுதிகள் இருக்கின்றன. மஹாபாவத்தின் வேகமானது இந்த மூன்று பகுதிகளையும் பற்றிப் பிடிக்கிறது. கடுந்தவத்திலும் மேலானது மஹாபாவம். ஏனென்றால் தவம் புரிகின்றவன் தான் நாடும் லட்சியத்தை இன்னும் அடையப் பெறாதிருக்கிறான். அதை அடைவதைப்பற்றிய ஐயப்பாடு இடையிடையே அவனுக்கு வருகிறது. சோர்வுக்கும் ஏமாற்றத்துக்கும் ஆங்கு இடமுண்டு. மஹாபாவமோ அன்புக்கு இலக்காயிருக்கும் பரம புருஷனை அடையப் பெற்றபின் அவனோடு கொண்டுள்ள இணக்கத்தை மேலும் மேலும் ஆழ்ந்ததாக வளர்ப்பதாம். அப்பெரு முயற்சிக்கு அன்பனுடைய உடல்பாடு, உளப்பாடு, உயிர்ப்பாடாகிய மூன்று பகுதிகளும் சேவை புரிகின்றன. போகத்துக்கு அவைகள் சேவை செய்யும்பொழுது அவைகள் தேய்ந்து அழிகின்றன. பக்தியோகத்துக்குப் பயன்படும்பொழுது அவைகள் புனித மடைந்து பெருநிலை யெய்துகின்றன.

பரமனைச் சார்ந்திருந்து உய்வு அடைவதற்குத் தூய பக்தி போதுமானது. இனி பக்தர்களுள் யாரோ சிலர்க்குப் பிரேமைபக்தி என்னும் உயர்ந்த நிலை வாய்க்கிறது. அன்னவர்கள் பாக்கியவான்கள். மற்று அரிதினும் அரிதாக யாரோ சிலர்க்கு மஹாபாவம் உருவெடுக்கிறது. அது ஒப்பு உயர்வு அற்றது. பக்தியின் மகிமையை விளக்குதற்கென்றே பிருந்தாவனத்தில் பாலகிருஷ்ணன் அவதரித்தான். ரிஷிகள் அவனிடம் தூயபக்தி பூண்

டிருந்தனர். அவர்கள் பரமனை அடைய அது போதுமானது. பின்பு கோபிமார்கள் அவனிடம் பிரேமை பக்தி பூண்டது அதினும் மேலானது. மற்று மஹாபாவம் பூண்டிருந்தது ஸ்ரீமதி ராதையின் தனிச் சிறப்பாம். அத்தகைய அருள்நிலை யொன்று உண்டு என்று நாம் கேள்வியால் தெரிந்துகொண்டால் போதுமானது. சாதகர்கள் எல்லோரும் அதை அடைவது அவசியமன்று. சுமார் நானூறு வருஷங்களுக்கு முன்பு வங்காளத்தில் கௌராங்க தேவர் என்னும் பெரியார் அவதரித்தார். அவரை மகா பிரபு என்றும், ஸ்ரீ கிருஷ்ணசைதன்யர் என்றும் அழைப்பதுண்டு. அப்பெருமகனுக்கு மஹாபாவம் வாய்த்திருந்தது. அவரிடத்திருந்த மஹாபாவ மகிமைகளை இருபது வகைப்பட்டவைகளாகப் பிரித்து வடநாட்டு வைஷ்ணவம் இங்ஙனம் விளக்குகிறது:—

अथ भावा: அத பாவா: ***(Bhāvāh)*** இப்பொழுது பாவங்கள் விளக்கப்பெறுகின்றன:—

1. **चापल्यम्** சாபல்யம் ***(Chāpalyam)*** சபலப்படும் தன்மை அல்லது பதைபதைப்பு என இது பொருள்படுகிறது. தன்னை அணுகிக்கொண்டிருக்கும் அன்னையைக் கண்ணுற்றதும் அவளை விரைவில் அடைய, குழந்தையானது பதைபதைக்கிறது. தெய்வத்தின் திருக்காட்சியடையப்பெற்ற பக்தன் அங்ஙனம் தன் தெய்வத்தோடு இணங்கியிருக்கத் தவிக்கிறான். இது மெய்ப்பாடுகளுள் ஒன்று.

2. **औसुक्यम्** ஔஸுக்யம் ***(Ousukyam)*** தன்னைவிட்டுப் பிரிந்திருக்கும் ஆருயிர்த் தோழனை நெடுநாளைக்குப் பிறகுதான் காணமுடியும் என்னும் சூழ்நிலை ஏற்படுகிறது. மனதும் அதற்கு ஒருவாறு உட்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்பாராதபடி தோழன் திடீரென்று தென்படுகிறான். அப்பொழுது உடலில் உண்டாகும் ஆனந்தத்தின் அறிகுறிகள் ஔஸுக்யம் எனப்படுகின்றன.

3. उद्भास्वरा: உத்பாஸ்வரா: *(Udbhāsvarāh)* லோடு கூடிப் பிரகாசித்தல். பக்தனுடைய ஞானக் காட்சிக்கு வழிபடு தெய்வம் தென்படுவதும் பின்பு மறைவதும் மாறி மாறி நிகழ்வதுண்டு. மறைப்பை முன்னிட்டு மங்கியிருக்கிற முகத்தில் திடீரென்று எழில் நிறைந்த பிரகாசம் பொலிகிறது. மீண்டும் தென்படுகிற தெய்வதர்சனத்தின் விளைவு இது. ஸ்ரீ ராமனிடமிருந்து பிரித்தெடுத்து இலங்கையில் சிறையில் வைக்கப்பட்ட சீதை முகம்வாடி யிருக்கிருள். ஹனுமான் கொண்டு வந்து காட்டிய கணவனது கணையாழியைப் பார்த்ததும் அவளது முகத்தில் உத்பாஸ்வரை அல்லது அலர்ந்த பிரகாசம் உண்டாகிறது. இது மெய்ப்பாடுகளுள் ஒன்ருகும்.

4. दीप्ता: தீப்தா: *(Deeptāh)* சுடர் வீசுகிற கனல். இது பக்தனுடைய உளப்பாடு எனினும் ஸ்தூல காட்சியிலுள்ள தீயோடு ஒப்பிட்டு ஆராய்ந்தால்தான் இது நன்கு விளங்குவதாகும். தீயில் இட்ட இரும்பு சுடர் பெற்று ஒளிர்கிறது. பக்தியால் மனது விதிர்விதிர்த்து வெதும்புகிறது. ஜுரம் அல்லது வெப்பநோய் வரும் போது உடல் கொதிக்கிறது. இந்த பக்திக் கனலோ உடலில் எரிச்சல் ஊட்டுகிறது எனினும் அதில் இயல்பாயுள்ள கதகதப்பை அதிகப்படுத்துவதில்லை. வியாதியால் வரும் எரிச்சல் உடல் உணர்வை வளர்க்கிறது. பக்தியால் வரும் எரிச்சல் பகவத் சிந்தனையை வளர்க்கிறது. முந்தையதின் விளைவு ரோகம்; பிந்தியதின் விளைவு யோகம்.

5. उद्दीप्त: உத்தீப்த: *(Uddeeptah)* கண் கூசும்படியான மிகைப்பட்ட கனல். பழுக்கக் காய்ச்சிய இரும்பை மேலும் காய்ச்சினுல் அதன் பொன்நிறம் போய் வெள்ளை வெளேரென்று பிரகாசிக்கிறது. சுற்றிலும் அது வெளிச்சத்தை வீசுகிறது. அதுபோன்று பக்தியின் வேகத்தால் விளைகிற மனக்கொதிப்பு ஊன் உடலை உருக்குவது

போன்று பக்தன் உணர்கிருன். ஆயினும் உடலில் வெப்ப நோயாக அது தோன்றுவதில்லை. இந்த வேதனை யானது ஊனினை உருக்கி உள் ஒளியைப் பெருக்குகிறது. இது ஜீவபோதத்தைத் தேய்த்து, பரபோதத்தை வளர்க் கிறது.

6. सूद्दीप्त: ஸூத்தீப்த: (*Sūddeeptah*) மங்களகரமாக மஹோன்னத நிலைக்கு வந்துள்ள கனல். வெண்ணிற மாகக் காய்ந்த இரும்பை மேலும் உருக்கினுல் அது குழம்பு ஆகிறது. தன் வடிவத்தை அப்பொழுது அது இழக்கிறது. அளவு கடந்த வெப்பத்தை அதன்பால் செலுத்தினுல் குழம்பின் நிலையைக் கடந்து அது காற்றின் நிலையை யெய்துகிறது. சூரியன் முற்றிலும் அக்னிக் காற்றே யொழிய அது அக்னிக் குழம்பு அன்று. பக்தி யின் வேகம் அணைகடந்தது ஆகும்பொழுது பக்தனது உடல் உணர்வு அணுவணுவாய் வெந்து மாய்கிறது. பெயர் அளவுக்கு மற்றவர் கண்ணுக்கு உடல் ஒன்று தென்படுகிறது. ஆனுல் ஜீவபோதம் முற்றிலும் பர போதமாய் உயர்நிலை யெய்துகிறது. வேதனைப்படுவது போன்ற புறக்காட்சியானது பரமனது பரமானந்தமாக அகத்தில் ஒளிர்கிறது. பரம் ஒன்றே அந்நிலையில் எஞ்சி யிருக்கிறது.

7. अथ सात्त्विकः அத சாத்விக: இனி உடல்பாடு வருகிறது. இது எட்டு விதங்களில் வெளியாகிறது. அவையாவன:

(1) स्तम्भः ஸ்தம்ப: உணர்ச்சியின் வேகத்தால் ஸ்தம் பித்துக் கட்டைபோன்று அசையாது கிடப்பது.

(2) स्वेदः ஸ்வேத: - வியர்வை

(3) रोमाञ्च ரோமாஞ்ச रोमहर्षः ரோமஹர்ஷ: - மயிர்க் கூச்சல்

(4) स्वरभेदः ஸ்வரபேத: - தழதழத்துப் பேசுதல்

(5) वेपथुः வேபது: - நடுநடுக்கம்

(6) **वैवर्ण:** வைவர்ண: - நிறம் மாறுதல்

(7) **अश्रु** அச்ரு - கண்ணீர் மல்குதல்

(8) **प्रलय:** ப்ரலய: - ஒடுங்குதல். உடல் இருந்தும் இல்லாததுபோல் செயலற்றுக் கிடப்பது. இவையாவும் உடல்பாடுகள். இவைகளை மெய்ப்பாடுகள் என்று சொல்வதும் உண்டு.

8. **धूमायिता:** தூமாயிதா: முன்பு யதார்த்த நிலையில் நன்ருயிருந்து இப்பொழுது வடிவம் குலைந்து புகையாய்ப் போய்விட்டது போன்று தென்படுதல்.

9. **ज्वलिता:** ஜ்வலிதா: புகைந்துகொண்டிருந்த பொருள் திடீரென்று தீப்பற்றிப் பிரகாசிப்பது போன்று பக்தனிடத்து மாறுதல் உண்டாகிறது. மங்கி மழுங்கிப் புகை போன்று காட்சிகொடுத்தவனிடத்துத் திடீரென்று பக்திப் பிரகாசம் சுடர்விட்டு ஒளிர்கின்றது.

10. **अथा यत्नजा:** அதா யத்னஜா: முயற்சியினின்று வருகிற அறிகுறிகள் விளக்கப்படுகின்றன.

(1) **शौभ:** சௌப: - சோபை. முயற்சியினின்று மிளிர்கிற தெய்விக அழகு.

(2) **कान्ति:** காந்தி: இனிமை நிறைந்த அழகு.

(3) **दीप्ति:** தீப்தி: *(deeptih)*—சூரிய கிரணம் போன்று பிரகாசித்து அழகை வெளிப்படுத்துவது.

(4) **माधुर्य्यम्** மாதுர்ய்யம் *(madhuryyam)*—எல்லா விதத்திலும் இனிமை வாய்ந்தது.

(5) **प्रगल्भता** ப்ரகல்பதா - *(pragalbhatā)* பகவானிடத்துப் பயப்படுதற்குப் பதிலாகக் கர்வமும் தற்பெருமையும் பிடித்து நடந்துகொள்ளுதல்.

(6) **औदार्य्यम्** ஔதார்ய்யம்–தன்னைச் சகல சௌபாக்கியமும் வாய்க்கப் பெற்றவனுய் வைத்துக்கொண்டு, தன்னிடத்தில் இருப்பவைகளையெல்லாம் தாராளமாகத் தன் தெய்வத்துக்கு எடுத்து வழங்கவேண்டும் என்னும்

வள்ளல் தன்மை படைத்திருத்தல். மேலும் பகவானிடத்தில் இருக்கும் மகிமைகளெல்லாம் தனக்குச் சொந்தம் என்று உணரும் தன்மை இது.

(7) धैर्य्यम् தைர்ய்யம் (*dhairyyam*) தைரியம். அனைத்தையும் ஒன்றாகக் கருதி, மனதில் உறுதியும் அமைதியும் குடிகொண்டிருக்கும் நிலை இது. ஸ்ரீ கிருஷ்ணசைதன்யர் வனத்துக்குள் ஹரிபஜனை பண்ணிக்கொண்டு போனபொழுது ஒரு புலி வந்து அவரோடு ஆனந்தக் கூத்தாடியது. அவருக்குப் புலியும் தானும் கிருஷ்ண சொருபம் என்ற உறுதியான மனநிலையிருந்தது. அது தைரியம் எனப்படுகிறது.

11. अथ स्वभावजा: அத் ஸ்வபாவஜா: இயல்பாகவே அமைந்துள்ள குணங்களாவன :—

(1) तत्र लीला தத்ர லீலா - பொருந்திய செயல், பொருந்தாத செயல் என்று எண்ணிப்பார்க்காது பகவானோடு தனக்குத் தோன்றியவாறெல்லாம் விளையாடுவது லீலையாகும். பகவானுக்கும் அச்செயல் முற்றிலும் சம்மதமாகிறது. இடையர்கள் ஸ்ரீ கிருஷ்ணன் தோளின்மீது ஏறி விளையாடியது இதற்குச் சான்றாகும்.

(2) विलास: விலாஸ: (*vilāsah*) உள்ளக் கவர்ச்சியினின்று வடிவெடுக்கிற பரஸ்பர நட்பு.

(3) विच्छित्ति விச்சித்தி (*vichchhitti*) அகத்தில் ஆத்மஜோதி ஒளிர்தற்கிடையில் புறத்தில் பிரக்ஞை போய், உடலானது ஜடம் போன்று கிடத்தல்; எடுத்த காரியத்தை நிறைவேற்றாது சிறுவர் செய்வதுபோன்று புதியதொரு காரியத்தில் புகுதல்; செய்வது இன்னதென்று தெரியாது திகைத்தல்.

(4) विभ्रम: விப்ரம: (*vibhramah*) பைத்தியம் பிடித்தவன் போன்று திரிதல்.

12. अथ किलकिञ्चितम् அத கிலகிஞ்சிதம் - பகவானோடு இணக்கம் கொள்வதால் உண்டாகிற சிரிப்பு, சினம், அழுகை, உவகை முதலிய மாறுபடும் உணர்ச்சிகள்.

13. मोद्दायितम् மோத்தாயிதம் *(moddāyitam)* மௌனமாக அன்பைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளுதல். மனதுக்குள்ளேயே களிப்படைதல்.

14. कुट्टमितम् குட்டமிதம் *(kuṭṭamitam)* ஈசனுடைய கிருபையைப் புறக்கணிப்பது போன்று பாசாங்கு பண்ணுவது.

15. बिब्बोक பிப்போக *(bibboka)* கர்வமும் தற்பெருமையும் பிடித்த பக்தன் பகவானிடத்துப் பராமுகமாக நடந்துகொள்ளுதல்.

16. ललितम् லலிதம் கபடமின்றிப் பச்சைக் குழந்தை போன்று இருப்பது. குழந்தை தாயைச் சார்ந்து இருப்பது போன்று பக்தன் பகவானைச் சார்ந்திருக்கிறான்.

17. विकृतम् விக்ருதம் உரிமையினால் முகத்தைச் சுளித்துக்கொண்டு பக்தன் பகவானிடத்திருந்து தான் விரும்பியதைக் கேட்பது.

18. भाव: பாவः *(bhāvah)* உள்ளத்தினுள்ளே எழுகின்ற விதவிதமான பேருணர்ச்சிகள்.

19. हाव: ஹாவः *(hāvah)* அன்பினால் தூண்டப்பெற்றுத் தூக்கிவைத்துப் பேசுதல்.

20. हेला ஹேலா *(helā)* அன்பினால் தூண்டப்பெற்று இகழ்ந்து பேசுதல், ஊடல் கொள்ளுதல், சண்டையிட்டுக் கொள்ளுதல்.

பராபக்தி அல்லது பிரேமைபக்திக்கும் உயர்ந்தது மஹாபாவம். அரிதினும் அரிதாக யாரோ சிலர்க்கே அப்பெருநிலை வாய்க்கிறது. தமிழ்நாட்டிலே சைவ சமயத் திலகமாகிய மாணிக்கவாசகரிடத்திலும், வைஷ்ணவ சமயச் சூடாமணியாகிய ஆண்டாளிடத்திலும் மஹா

பாவத்தின் பேரறிகுறிகள் தெற்றெனத் திகழ்கின்றன. ஸ்ரீமதி ஆண்டாளிடத்து அவைகள் உருவெடுத்திருப்பது பிறவிக்கூறு. ஆனால் சிவபெருமானால் ஆட்கொள்ளப் பட்ட பிறகே மாணிக்கவாசகருக்கு அவைகள் வந்தமைகின்றன.

10. நாரத பக்தி சூத்ரங்கள்

ஆத்மசாதகன் அடைகிற தெய்விகப் பண்பாடுகளை முறையே ஆற்றல், அறிவு, அன்பு எனலாம். அம்மூன்றையும் முறையே சத், சித், ஆனந்தம் என்று சொன்னாலும் பொருந்தும். இம்மூன்று பேரியல்புகளை மனிதனுக்குப் புகட்டுதற்கு மூன்றுவித சூத்ரங்கள் உள. ஆற்றலைப் புகட்டுபவை பதஞ்சலி முனிவர் இயற்றிய யோக சூத்ரங்கள். அவைகளுள் முதல் சூத்ரம் மிக முக்கியமானது. அது திருவாசக விளக்கத்தில் இடம்பெற்றிருக்கிறது. அறிவை அல்லது பரஞானத்தை வளர்ப்பவை வியாசர் இயற்றியுள்ள பிரம்ம சூத்ரங்கள் அல்லது வேதாந்த சூத்ரங்கள். அந்த சூத்ரங்களுக்கே ஆதிமூலமாயுள்ள உபநிஷத மந்த்ரங்கள் திருவாசக விளக்கத்தில் வேண்டியவாறு இடம்பெற்றிருக்கின்றன. பின்பு அன்பை வளர்ப்பதற்கு அமைந்தவைகள் நாரதர் இயற்றிய பக்தி சூத்ரங்கள். அவைகளின் எண்ணிக்கை வெறும் எண்பத்து நான்கே யாம். அவைகளுள் முக்கியமானவைகள் மட்டும் மூல எண்ணிக்கையுடன் ஈண்டு விளக்கப்பெறுகின்றன:—

2. सा त्वस्मिन् परमप्रेमरूपा ॥
ஸா த்வஸ்மின் பரமப்ரேமரூபா

அந்த பக்தியானது பகவான்பால் செலுத்தப்பட்ட பேரன்பு வடிவுடையதாம்.

பிரேமை பக்தி பூண்டிருப்பவனுடைய உள்ளத்தில் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் முதலிய தீமைகள் இடம் பெறுவதில்லை. இம்மை

மறுமையைப்பற்றிய ஆசையும் ஆங்கு உதிப்பதில்லை. அச்சம் அறவே அகன்று ஒழிகிறது. முக்தியிலுங்கூட நாட்டம் வருவதில்லை. கடவுளிடத்து இடையறு அன்பு ஒன்றே நிலைத்திருக்கிறது.

3. अमृतस्वरूपा च ||

அம்ருதஸ்வரூபா ச

பக்தியானது மேலும் அமிர்த ஸ்வரூபமானது.

அமிர்தம் என்னும் சொல் இனிமை என்றும், தெவிட்டாத ஆனந்தம் என்றும், மரணமிலாப் பெருவாழ்வு என்றும், முக்தி என்றும் பொருள்படுகிறது.

4. यल्लब्ध्वा पुमान् सिद्धो भवति, अमृतो भवति, तृप्तो भवति ||

யல்லப்த்வா புமான் ஸித்தோ பவதி, அம்ருதோ பவதி, த்ருப்தோ பவதி.

பக்தியைப் பெறுபவன் சித்தனாகிறான். இனியவன் ஆகிறான், திருப்தனாகிறான்.

அஷ்ட சித்திகளைப் பெற்றவன் சித்தன் அல்லன். பரிபூரணத்தை அடையப்பெற்ற நிறைமனிதன் சித்தன் எனப்படுகிறான். அமிர்தம் அனைவர்க்கும் இனியது. குழந்தை ஒன்று அனைவர்க்கும் இனியது. அங்ஙனம் பக்தன் அனைவர்க்கும் இனியவன் ஆகிறான். பெறுகிற பேறுகளுள் பெரியது பரம்பொருள். அவனை அடையப் பெற்ற பக்தன் மீண்டும் பெறுதற்கு ஒன்றுமில்லை. ஆதலால்தான் பக்தன் யாண்டும் பரம திருப்தியடைந்திருக்கிறான்.

6. यज्ज्ञात्वा मत्तो भवति स्तब्धो भवति आत्मारामो भवति ||

யஜ்ஞாத்வா மத்தோ பவதி, ஸ்தப்தோ பவதி, ஆத்மாராமோ பவதி.

பக்தியைப் பெறுபவன் பித்தன் ஆகிறான், பரவசன் ஆகிறான், ஆத்மானந்தன் ஆகிறான்.

விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தை ஒன்று தன் தாயைப் பார்த்ததும் அன்பின் மேலீட்டால் செயலற்று நிற்கிறது. அங்ஙனம் தெய்வத்தின் திருக்காட்சி பக்தனைப் பரவசப்படுத்தி அவனைச் செயலற்றவனாக இருக்கும்படிச் செய்கிறது. பித்துப்பிடித்தவன் போன்று அவன் நடந்துகொள்கிறான். அவன் அடையும் ஆனந்தத்துக்கு அளவில்லை.

41. तस्मिंस्तज्जने भेदाभावात् ॥
தஸ்மின்ஸ்தஜ்ஜனே பேதாபாவாத்

ஈசனும் ஈசனுடைய பக்தர்களும் எதிலும் வேற்றுமை காண்பதில்லை.

ஈசனே உலகனைத்தும் ஆயிருக்கிறான் என்னும் அன்புக்காட்சி உதயமாயிருக்கும்போது உயர்ந்தவர் தாழ்ந்தவர், கற்றவர் மற்றவர், மேலோர் கீழோர், சேதனம் ஜடம் என்ற பேதங்கள் எல்லாம் பறந்தோடிவிடுகின்றன.

54. गुणरहितं कामनारहितं प्रतिक्षणवर्धमानमविच्छिन्नं सूक्ष्मतरमनुभवरूपम् ॥
குணரஹிதம் காமனாரஹிதம் ப்ரதிக்ஷணவர்தமானம் அவிச்சின்னம் ஸூக்ஷ்மதரம் அனுபவரூபம்.

பக்தியானது குணங்குறியற்றது; அது பிரதிபலனை எதிர்பார்ப்பதில்லை; க்ஷணந்தோறும் மேலும் மேலும் பெரியதாக வளர்கிறது; அதில் இடையீடு இல்லை; அது நுண்ணியதினும் நுண்ணியது; அது அனுபவத்துக்கு உரியது.

ஒரு மனிதனிடத்து உள்ள பண்பைப் பார்த்து நாம் அவனை நேசிக்கிறோம். ஆனால் அப்பண்பு அவனைவிட்டு அகலுங்கால் நமது நேசமும் மறைந்து போகிறது. பக்தியோ ஏதேனும் பண்பைப் பார்த்துப் பெருகுவதன்று. குணத்தினையோ குணக்கேடதனையோ அது பொருள்படுத்துவதில்லை. காரணமும் காரியமும் அதில் இடம் பெறுவதில்லை. அது அஹேது பிரேமையாகப்

பொலிகிறது. ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணத்தையும் தாண்டியது அது. ஆதலால் அதைச் சொல்லால் விளக்கமுடியாது.

பிரதிபலனை எதிர்பார்ப்பது பக்தியின் பாங்கு அன்று. தன்னிடத்து இருப்பதையெல்லாம் பக்தன் தெய்வத்துக்கும் உயிர்வகைகளுக்கும் கரவாது வழங்குகின்றான். முக்தி உட்பட எதையும் அவன் தெய்வத்திடமிருந்து கேட்பதில்லை. தன்னிடத்திருப்பதை ஓயாது கொடுத்துக்கொண்டிருப்பது அவன் போக்கு. ஆதலால் பகவானே அவனுக்குக் கடமைப்பட்டவர் ஆகின்றார்.

பக்திக்கு உச்சநிலை என்பது ஒன்றுமில்லை. அது ஓயாது வளர்கிறது; அதற்குத் தேய்வு கிடையாது. எவ்வளவு மேலேபோனாலும் இன்னும் மேலே போக அது முயலுகிறது. அகண்டாகாரமாவது அதன் இயல்பு.

உலகப் பற்றுதலிலும் உலக அன்பிலும் தோற்றமும் மறைவும் மாறி மாறி வருகின்றன. ஆனால் பக்தியோ இடையீடின்றி வெட்டவெளி போன்று எங்கும் வியாபகமாகப் பரவுகிறது.

ஆத்ம சொரூபத்துக்குப் பக்தி விளக்கமாதலால் ஆத்மாவைப் போன்று அது அதி சூக்ஷ்மமானது. ஆனால் எல்லாருடைய அனுபவத்துக்கு அது எட்டக்கூடியது. பக்திவலையில் பகவான் மட்டும் படுபவர் அல்லர்; உயிர்கள் அனைத்தும் பக்திக்கு உடன்படுகின்றன.

55. तत्प्राप्य तदेवावलोकयति तदेव शृणोति तदेव भाषयति तदेव चिन्तयति ॥

தத்ப்ராப்ய ததேவாவ்லோகயதி ததேவ ச்ருணோதி ததேவ பா்ஷயதி ததேவ சிந்தயதி.

பக்தியைப் பெறுகிறவன் பக்தியையே காண்கிறான், அதையே கேட்கிறான், அதையே பேசுகிறான், அதையே சிந்திக்கிறான்.

பக்தன் எதைப் பார்த்தாலும் அது பகவானுடைய சொரூபமாகக் காட்சி கொடுக்கிறது. உலகில் உண்டாகிற ஓசைகளெல்லாம் பகவானுடைய மகிமைக்கு விளக்கங்களாகின்றன. பக்தனுடைய வாயிலிருந்து வெளியாகிற வார்த்தைகளெல்லாம் பகவத் விஷயங்களாகின்றன. அவன் எண்ணத்தில் இறைவனே இலங்குகிறான்.

60. शान्तिरूपात् परमानन्दरूपाच्च ॥

சாந்திரூபாத் பரமானந்த ரூபாச்ச.

பக்தி சாந்தி வடிவுடையது, பரமானந்த வடிவுடையது.

பக்தியும் பகவானும் ஒன்று. ஆகையால் அதில் சாந்தி சொட்டுகிறது; பரமானந்தம் திகழ்கிறது.

67. भक्ता एकान्तिनो मुख्याः ॥

பக்தா ஏகாந்திநோ முக்யா:

பகவத் பக்தியைத் தவிர வேறு எதையும் அறியாதவர்களே தலையானவர்களாகின்றனர்.

கற்கண்டில் எந்தப் பகுதியை ஆராய்ந்து பார்த்தாலும் அது கற்கண்டே. அங்ஙனம் பக்தர்களது சொருபம் முழுதும் பக்தி மயமே. வேறு எதையும் அங்குக் காண முடியாது.

70. तन्मयाः

தன்மயா:

பக்தர்கள் முற்றிலும் பகவான் மயம்.

பக்தர்களை அறிந்துகொள்வதும் பகவானை அறிந்து கொள்வதும் ஒன்று. பக்தர்களுக்கு மேலான மூர்த்தியோ, ஸ்தலமோ, தீர்த்தமோ இல்லை.

72. नास्ति तेषु जातिविद्यारूपकुलधनक्रियादिभेदः ॥

நாஸ்தி தேஷு ஜாதிவித்யாரூபகுல தன க்ரியாதிபேத:

பக்தர்களுக்கிடையில் ஜாதி, கல்வி, உடல் அமைப்பு, குலம், செல்வம், தொழில் முதலியவைகளை முன்னிட்டுப் பேதமில்லை.

நம்மாழ்வார், நந்தனர் முதலியவர்கள் ஜாதியில் கீழோர். துருவன், கோபிமார் முதலியவர்கள் கல்வி கற்றவர்கள் அல்லர். கண்ணப்பனுக்குக் கல்வியுமில்லை. தொழிலிலும் கீழோன். ஆஞ்சனேயர், சபரி முதலியவர்கள் அழகிய மேனிபடைத்தவர்கள் அல்லர். நிஷாதர், சதனர் முதலியவர்களுக்குக் குலம் இல்லை. விதுரர், சுதாமர் முதலியவர்களுக்குச் செல்வம் இல்லை. ஆயினும் இவர்கள் போன்றவர்கள் பரம பக்தர்களாகக் கருதப்படுகின்றனர்.

73. यतस्तदीयाः ॥

யதஸ்ததீயா:

பக்தர்கள் ஜீவராசிகள் அனைத்தையும் பகவானுக்கு உரியவைகளாகக் கருதுகிறார்கள்.

உயிர் வகைகளுள் ஒன்றை உயர்ந்ததாகவும் மற்றொன்றைத் தாழ்ந்ததாகவும் பக்தர்கள் கருதுவதில்லை.

77. सुखदुःखेच्छालाभादित्यक्ते काले प्रतीक्ष्यमाणे क्षणार्द्धमपि व्यर्थं न नेयम् ॥

ஸுகது:கேச்சாலாபாதித்யக்தே காலே ப்ரதீக்ஷ்யமாணே க்ஷணார்த்தமபி வ்யர்த்தம் ந நேயம்.

உலக சம்பந்தமான சுகம், துக்கம், இச்சை, லாபம் முதலியன ஒழிந்துபோம் காலமொன்று வருமென்று எதிர்பார்த்துக்கொண்டு அரை விநாடியையுங்கூட வீண் போக்காது பக்தி பண்ணவேண்டும்.

ஏனைய நஷ்டங்களுக்கெல்லாம் ஈடு கிடைக்கும். ஆனால் கால நஷ்டத்துக்கு ஈடு இல்லை. ஆதலால் பக்தன் ஒரு நொடிப்பொழுதையும் வீண்போக்காது பக்தி சாதனத்தில் ஈடுபடவேண்டும்.

82. गुणमाहात्म्यासक्ति-रूपासक्ति-पूजासक्ति-स्मरणासक्ति-दास्यासक्ति-सख्यासक्ति—वात्सल्यासक्ति—कान्तासक्ति-आत्मनिवेदनासक्ति—तन्मयतासक्ति-परमविरहासक्ति-रूपा एकधा अपि एकादशधा भवति ॥

குணமாஹாத்ம்யாஸக்தி-ரூபாஸக்தி-பூஜாஸக்தி—ஸ்மரணாஸக்தி—தாஸ்யாஸக்தி-ஸக்யாஸக்தி—வாத்ஸல்யாஸக்தி—காந்தாஸக்தி - ஆத்மநிவேதனாஸக்தி-தன்மயதாஸக்தி—பரமவிரஹாஸக்தி-ரூபா ஏகதா அபி ஏகாதசதா பவதி.

பக்தி ஒன்று எனினும் அது பதினொரு விதங்களில் விளங்குகிறது. அவையாவன:-(1) பகவானுடைய குண மகிமைகளில் பக்தி; (2) அவருடைய சுந்தரரூபத்தில் பக்தி; (3) பூஜையில் பக்தி; (4) அவரை நினைப்பதில் பக்தி; (5) பகவத் ஸேவையில் பக்தி; (6) அவரைத் தோழனாகக் கருதுவதில் பக்தி; (7) அவரைத் தன் சொந்த செல்வனாகக் கருதுவதில் பக்தி; (8) தலைவி தன் தலைவனை நேசிப்பது போன்று பகவானை நேசித்து பக்திபண்ணுதல்; (9) ஜீவாத்மனைப் பரமாத்மனில் படைத்தல் என்னும் பாங்கில் பக்தி பண்ணுதல்; (10) பரமாத்மனை லோகம் பாவனை பண்ணுதல் என்னும் பக்தி; (11) பகவானை விட்டுப்பிரிதலில் வருகிற வேதனையைக் குறித்து பக்தி பண்ணுதல்.

இந்தப் பதினொருவித பக்தி சாதனங்களில் பக்தி பூர்த்தியாய்விட்டது எனலாகாது. முறையாக ஆராய்ந்து பார்க்குமிடத்து எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனைவித பக்தி சாதனங்கள் இருக்கின்றன. இவைகளுள் உயர்வு தாழ்வு கருதுவதும் தகாது. சில பக்தர்களிடத்துப் பலதரப்பட்ட பக்தி பாவனைகளிருக்கின்றன. வேறு சிலரிடத்து ஒன்று அல்லது இரண்டு முறைகள் மட்டும் அமைந்துள்ளன.

தெய்வத்திடத்துப் பகைகொள்வதும் ஒருவித பக்தி மார்க்கமாகிறது. ஹிரண்யகசிபு, ராவணன், கம்சன் முதலாயினோர் பகவானைப் பகைத்து பகவத் சிந்தனையில் மூழ்கியிருந்தனர். ஆனால் இந்த மார்க்கத்தைப் பின்பற்றும்படி மேலோர் மொழிவதில்லை. நாரதரும் இதை விலக்கிவைத்துள்ளார்.

சைவசமய ஆசாரியர் நால்வருள் அப்பர் அனுஷ்டித்தது ஆண்டான் அடிமை முறை அல்லது தாஸ்ய

பாவனை. ஞானசம்பந்தர் வாத்சல்ய பாவனையில் மகவு தந்தையிடம் வைக்கும் இணக்கத்தை எடுத்துக்கொண்டார். ஸகாபாவனை அல்லது தோழமை முறையைச் சுந்தரர் பூண்டிருந்தார். காந்தாபாவனை அல்லது நாயகன் நாயகி யிணக்கம் மாணிக்கவாசகரிடம் தென்படுவதாயிற்று. இதன் விளைவாக வந்தது திருக்கோவையார்.

உலகப்பற்று வேறு, பக்தி வேறு. உலகப்பற்றின்கண் இல்லாத மூன்று மேன்மைகள் பக்தியின்கண் உள. முதலாவதாக உலகப்பற்று வியாபாரம் செய்யும் தன்மையது. தெய்வப்பற்றோ தியாகம் செய்யும் தன்மையது. தான் காட்டுகிற அன்புக்குக் கைம்மாருகப் பிரதியன்பையோ, சுகத்தையோ, செல்வத்தையோ எதிர்பார்ப்பது உலகப்பற்று. அந்த அளவில் அது வர்த்தகம். பின்பு பக்தியோ தன்னிடத்து இருப்பதையெல்லாம் கொடுக்கிறது; தனக்கு ஏதேனும் பிரதியுபகாரம் வேண்டுமென்று கேட்பதுமில்லை, ஏற்பதுமில்லை. கரவாது கொடுப்பது பக்தியின் முதன் மகிமை. உலகப் பற்று பயம் நிறைந்தது. முயற்சியைப் பற்றிய பயம், தோல்வியைப்பற்றிய பயம், நஷ்டத்தைப்பற்றிய பயம், எதிரியைப் பற்றிய பயம், மரணத்தைப்பற்றிய பயம்— இத்தனைவித பயம் உலகப்பற்றில் உண்டு. அபயம் அல்லது எதற்கும் அஞ்சாமையே பக்தியின் பாங்கு. இது இரண்டாவது மகிமை. உலகப்பற்றில் போட்டிக்கும் பொருமைக்கும் இடமுண்டு. தனக்கென்றே தேடும் தன்மையது அது. காதலர் இருவர்க்கிடையில் உள்ள காமம் என்னும் அன்பு அதற்கு எடுத்துக்காட்டு ஆகும். பிறர் அதில் பங்குகொள்ள வரலாகாது.பின்பு பக்தியோ, சேரவாரும் ஜகத்தீரே என்று அனைவரையும் அழைத்து அதில் சேர்த்துக்கொள்கிறது. இது பக்தியின் மூன்ருவது மகிமை.

11. வேள்வி

யக்ஞம், யாகம், வேள்வி, ஹோமம் ஆகிய இச் சொற்கள் எல்லாம் ஒரே செயலைக் குறிக்கின்றன. மானுட வாழ்க்கையோடு வேள்வி எப்படி இணைக்கப்பெற்றிருக் கிறது என்பதை அறிந்துகொள்வது அவசியம். இயற் கையின் பாங்கை வகையறிந்து கையாண்டால் அதிக மாகப் பயன்பெறலாம். இதுவே யக்ஞத்தின் கோட் பாடு ஆகும். வேதத்தில் கர்மகாண்டத்தில் விதவித வேள்விகள் விளக்கப் பெற்றிருக்கின்றன. அவைகளை ஆற்றுதற்கு மனிதன் முதலில் மனோ சக்தியைப் பெற வேண்டும். பின்பு நிகழ்த்துகிற யாகத்துக்கு ஏற்றவாறு நலனை வளர்க்கலாம், கேட்டைத் தவிர்க்கலாம் அல்லது எதிரிக்கும் வேண்டாதார்க்கும் கேடு சூழலாம். அத் தகைய வைதிகக் கர்மம் இன்று மறைந்துபட்டுப் போயிற்று. அதைச் செய்வதற்கான வேதியனும் இன்று இல்லை.

பௌதிக விக்ஞானத்தின் விளைவாக இன்று வேள்வியானது புதியதொரு வடிவெடுத்திருக்கிறது. இயற்கையில் உள்ள மூலப்பொருள்களை மக்களுக்குப் பயன்படும்படியான பண்பட்ட பொருள்களாகத் திருத் தியமைப்பதற்கு நவீனமுறையில் நிறுவப்பெற்ற தொழில் சாலைகள் தோன்றியுள்ளன. இத்தொழில்சாலைகளே இக்காலத்திய யாகசாலைகளாகும். அன்று மந்த்ர சக்தி யால் சில செயல்கள் நிகழ்ந்தன. இன்று யந்த்ர சக்தி யால் பல செயல்கள் நிகழ்கின்றன. மற்று அன்று நிகழ்ந்த யாகத்திலும் இன்று நிகழ்கிற யாகத்திலும் நல னும் கேடும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. காமிய கர்மத்தில் இக்குறைபாடு யாண்டும் உளது.

இனி யக்ஞத்தை நிஷ்காமிய கர்மமாகச் செய்யும் முறையொன்று உளது. இது முற்றிலும் நலமுடையது; இதில் கேடு ஒன்றுமில்லை. பக்தியையும் ஞானத்தையும்

வளர்க்கின்றவர்களுக்கு இது முற்றிலும் சாத்தியம். அதிகாரி பேதம் என்பது ஈண்டு இல்லை.

வென்று வாழ்தல், வகுத்து வாழ்தல், வழங்கி வாழ்தல் என்று மூன்று படித்தரங்கள் உயிர்களின் வாழ்க்கையில் வாய்த்திருக்கின்றன. அவைகளுள் வென்று வாழ்தல் (competition) கடைத்தரமானது. விலங்குகளிடத்தும் விலங்குகள் போன்ற மக்களிடத்தும் அத்தகைய வாழ்க்கை முறையைக் காணலாம். தங்களுக்குத் தருகிற மதிப்பை மற்ற உயிர்களுக்கு அவர்கள் தருவதில்லை. உலகில் உள்ளவைகளையும், உள்ளவர்களையும் ஏதேனும் ஒருவிதத்தில் மடக்கித் தங்கள் நலனுக்காகவும் சுகஜீவனத்துக்காகவும் பயன்படுத்துதல் அவர்களின் குறிக்கோள் ஆகும். அவரவர் வல்லமைக்கு ஏற்றவாறு பிறர்மீது ஆக்கிரமிப்பது அவர்களது இயல்பு. அதனால் துன்பமே அதிகரிக்கிறது. போராட்டம் நிறைந்ததாகிறது பூவுலக வாழ்வு. அதை வனத்தின் வாழ்க்கை முறை எனலாம்.

அதைவிடப் பன்மடங்கு மேலேயிருப்பது வகுத்து வாழுதல் (co-operation) என்னும் வாழ்க்கைமுறை. இதுவே சமுதாய வாழ்வு எனப்படுகிறது. பொது நன்மைக்குத் தனி நன்மை இடம் கொடுத்தாகவேண்டும். அதை மீறி நடப்பவன்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. முறையான கட்டுமானத்தின் மூலம் நலன் நிறுவப்பெறுகிறது. நாகரிகம் நிறைந்த சமுதாயங்களில் ஒழுங்குப்பாடு ஓங்கியுள்ளது. அன்புடனும் ஆதரவுடனும் மக்களின் சமுதாய வாழ்வு இனிது நிறைவேறுகிறது. விதி வகுத்துள்ள வாழ்வின் விளைவு இதுவாம். பூவுலக வாழ்வு ஒருவாறு சுவர்க்க வாழ்வாக இங்ஙனம் வகுக்கப்பட்டிருக்கிறது.

இனி இதனினும் இன்பம் நிறைந்த இனிய வாழ்க்கை முறை ஒன்று உளது. அது வழங்குதலே (self-dedication)

அடிப்படையாகக் கொண்டது. யார் ஒருவன் தனக்காக வென்று பொருளை ஏற்பதைவிட அதிகமாக மற்றவர் களுக்காகவென்று அதை வழங்குகின்றானோ அவன் வேள்வி வேட்கின்றான். மனிதனிடத்து மட்டுமல்லாது மற்ற உயிர்களிடத்தும் இச்சீரிய கோட்பாடு மிளிர்கிறது. ஸ்தாவர உலகில் வாழையும் தென்னையும் தாம் ஏற்பதை விட அதிகமாக உலகுக்குப் பயன்படுகின்றன. ஆகை யால் அவைகளின் வாழ்வு வேள்வி மயமானது. விலங்கு களுள் பசுவானது தான் ஏற்பதையெல்லாம் மக்களுக் குப் பயன்படுபவைகளாக மாற்றித் தருகிறது. அதன் வாழ்வு முழுதும் யக்ஞமயம். ஆதலால் அது தெய்விகப் பிண்டமாகவும் கோமாதாவாகவும் பாராட்டப்படுகிறது. மக்களுள் மேலோர் மன்னுயிர் நலனுக்கென்றே வாழ்ந் திருக்கின்றனர். அவர்கள் புரியும் ஆருயிர்ச் சேவையே ஆண்டவன் சேவையாகிறது. நரர்களைப் பேணுதலே நாராயண வழிபாடு ஆகிறது. ஜீவர்களை உய்விப்பதே சிவபூஜையாகிறது. தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவர்களே யக்ஞ மூர்த்திகளாகின்றனர். அவர் களின் எண்ணிக்கை அதிகரிக்குமளவு உலகம் நலன் பெறுகிறது.

வேதத்தில் வேள்வியானது பலப்பல வடிவெடுத் திருக்கிறது. மனிதனது உடல் வாழ்க்கையை உறுதிப் படுத்துதற்கான உபாயத்தை நல்கினால் அது வேள்வி யாகிறது. நேர்மையான வழிகளில் மனிதனை நல்ல உழைப்பாளியாக்கினால் அது வேள்வியாகிறது. ஈட்டிய செல்வத்தை நல்லார் எல்லார்க்கும் பயன்படும்படி செய்தால் அது வேள்வியாகிறது. உணவைப் பக்குவப் படுத்தி, தெய்வத்தின் பெயரால் அதைப் பலரோடு பங் கிட்டுக்கொள்ளும்போது அது வேள்வியாகிறது. கல்வி யையும் நல்லறிவையும் ஞானத்தையும் பொதுவுடைமை யாக்கும்போது அது வேள்வியாகிறது. தெய்வ வழிபாட்

டில் மக்களை ஈடுபடுத்துவது வேள்வியாகிறது. ஹோமாக்கினி அல்லது வேள்வித்தீ ஒரு வெறும் சின்னமாம். அதில் சொரியும் பொருள் உருமாறிப் பயன்படுகிறது. அதேபோன்று வாழ்வாங்கு வாழ்தல் வாயிலாக மனிதன் தன்னைத் தெய்வத்துக்கு ஒப்படைப்பானாகில், அவன் வேட்கும் வேள்வி இனிது முற்றுப்பெறுகிறது.

> அன்றே என்தன் ஆவியும்
> உடலும் உடைமை எல்லாமும்
> குன்றே அனையாய் என்னைஆட்
> கொண்ட போதே கொண்டிலையோ
> இன்றுஓர் இடையூறு எனக்குஉண்டோ
> எண்தோள் முக்கண் எம்மானே
> நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
> நானோ இதற்கு நாயகமே.

இங்ஙனம் மாணிக்கவாசகர் மொழிகின்றார். தெய்வம் என்னும் வேள்வித்தீயில் அவர் தம்மை ஆகுதியாகக் கொடுத்துவிட்டார். விறகு தன்னைத் தீக்குக் கொடுத்து விடுவதால் அது தானே தீ ஆகிறது. அங்ஙனம் வேள்வி வாயிலாக மனிதன் தன்னையே தெய்வத்துக்குக் கொடுக்குங்கால் அவன் தானே தெய்வத்தில் லயமாகிறான். எங்கு வேள்வி நிகழ்கிறதோ அங்குத் தெய்வ சான்னித்தியமிருக்கிறது.

12. தவம்

தபஸ் என்னும் ஸம்ஸ்கிருத பதம் தவம் எனத் தமிழில் வழங்கி வருகிறது. 'தப:' என்னும் அடிச்சொல்லைக் கொண்டது இது. உருக்கு அல்லது உருகு என்பது இதன் பொருள். இரும்பு, வெள்ளி போன்ற உலோஹங்களின் தாதுக்களை உலையில் இட்டு உருக்குவதால் அவை சுத்தியடைகின்றன. உருக்குதலில் அமைகிற சீர்மைக்கு ஏற்ப இரும்பு, வெள்ளி, தங்கம் ஆகியவைகள் உயர்நிலையெய்துகின்றன. துருப்பிடித்தோ, பாழ்

பட்டோ, உடைந்தோ ஒதுக்கப்படுகிற இரும்பையெல்லாம் மீண்டும் உலேயில் இட்டு உருக்கி, அதற்குப் புதிய பண்பும் வடிவமும் பயனும் நல்கலாம். ஜடப்பொருள்களாகிய உலோஹங்களுக்கு உரிய இக்கோட்பாடு, சேதனம் படைத்த மனிதனுக்கும் பொருந்துகிறது. தவத்தின் வாயிலாக மனிதன் தன்னை வேண்டியவாறு திருத்தியமைத்துக்கொள்ளலாம். இதற்குக் காலவரையறை கிடையாது. சிறுவயதில் துவங்கிச் சாகும் வரையில் எப்பொழுது வேண்டுமானுலும் தவத்தில் ஈடுபடலாம். தவங்களுள் காமியதபஸ் ஒன்று. தான் கொண்டுள்ள ஆசையை நிறைவேற்றுவதற்கு இது செய்யப்படுகிறது. துருவன் புரிந்தது காமிய தபஸ். பதவியையோ சித்தியையோ நாடுவது இதன் நோக்கம். தவசிகளில் பலர் காமிய தவத்துக்கே உரியவர் ஆகின்றனர். ஆன்றோர்களால் இது ஆதரிக்கப்படுகிறது எனினும் இத்தகைய தபஸ் தலேயாயதன்று.

அஸுரத் தபஸ் என்பது மற்றொன்று. இராவணன், ஹிரண்யகசிபு போன்றவர்கள் புரிந்தது இது. காமியத்தில் இது கீழ்த்தரமான காமியத்தைக் கொண்டது. கையாளும் முறையோ கொடூரமானது. பட்டினி போட்டு உடலேச் சிறிது சிறிதாகக் குலேப்பது, அதைக் கடும் வெயிலிலும் தீயிலும் வாட்டுவது, தண்ணீரில் நனேப்பது ஆகிய செயல்கள் வாயிலாக ஆக்கையைச் சித்திரவதை செய்வது தவம் எனக் கருதப்படுகிறது. இம்முறையில் சித்திபெறுகிறவர்கள் உளர். ஆனுல் இப்படி வாழ்வைப் பாழ்படுத்துவது சான்றோர் செயலன்று.

இனி மார்க்கண்டேயன் புரிந்தது தெய்விகத் தபசு. பரத்தை அடைதற்கென்றே அது புரியப்பட்டது. கடையாய வேடன் ஒருவன் தனது கீழ்நிலேயினின்று வால்மீகி மகரிஷி என்ற உயர்நிலேயை எய்தியது நேர்மையான தவத்தின் வாயிலாகவேயாம். விசுவாமித்திரர்

பலதடவை தவநெறி பிறழ்ந்து விடாமுயற்சியால் இறுதியில் வெற்றி பெற்ருர். ஒரு வீணையைக் கையாளுவது போன்று வாழ்வைக் கையாளுவது தெய்விகத் தபசு ஆகும். வீணையின் கம்பிகளை மிகைபட முறுக்கினல் அவை தெறித்துப்போம். மற்று அவைகளை அதிகம் தளர்த்தினல் ஓசை வாராது, வைக்கவேண்டிய நடுநிலையில் அவைகளை வைத்தால் இனிய கானத்தை அவைகளினின்று பெறலாம். தவத்தின் வாயிலாக மானுட சொரூபத்தை அங்ஙனம் செப்பனிடவேண்டும்.

உடல், உரை, உள்ளம் அல்லது மெய், மொழி, மனம் ஆகிய முக்கரணங்களை உடையவனுக மனிதன் இருக்கிருன். இம்மூன்றையும் மாண்புடையவைகளாகத் திருத்தி யமைப்பது தவத்தின் நோக்கமாகும். சாதாரண மனிதரிடத்து அவைகள் இன்னும் நிஸ்றநிலை எய்தவில்லை. குறைபாடு உடையவைகளாகவே இருக்கின்றன. குறைநிலையை நிறைநிலையென்று நினைப்பது மயக்கத்தில் இருப்பவர் செயல். மற்று குறைநிலையை உள்ளவாறு உணர்பவர் தவம் இழைக்க முந்துவர். ஆதலால் திரிகரணங்களில் உற்ற நோய் நோன்றல் தவம் என வள்ளுவர் விளக்கம் கொடுத்தார். மாணுக்கன் ஒருவன் தன்னை மாணுக்கனுக சதா உணர்வதில் காரியம் உண்டு. தன்னைத் திருத்தியமைப்பதற்கு ஒவ்வொரு படித்தரத்திலும் அவ்வுணர்ச்சி உதவுகிறது. அதே பாங்கில் தவமும் தவமுடையார்க்கே என்பதாம். தன்னை ஒரு தவசியாக உணர ஆத்ம சாதகன் கடமைப்பட்டிருக்கிருன்.

உடலைத் தவத்தில் செலுத்துதற்கு உற்ற உபாயங்களாவன: உடலைக் கடவுளின் ஆலயமாகக் கருதி அதை நாள்தோறும் அதிகாலையில் நீராட்டித் தூயதாய் வைத்திருத்தல்; காயத்தால் கடவுளையும், சான்ருேரையும், குருவையும் வீழ்ந்து வணங்குதல்; காயத்தால் செய்யும் கிருத்தியங்கள் எல்லாம் நேர்மையாயிருத்தல்; பிரம்ம

சரிய விரதத்தைத் தீவிரமாகக் கடைப்பிடித்தல்; பிற உயிர்களுக்குத் தீங்கு இழையாதிருத்தல்—ஆகிய கோட்பாடுகள் காயத்துக்கு உரிய தவம் எனப்படுகின்றன.

பிறரைத் துன்புறுத்துமாறு எதையும் மொழியலாகாது; வாய்மையே வடிவெடுத்தவனாகத் தவசி ஒருவன் இருக்கவேண்டும்; மொழிவது மெய்ம்மையாய் மட்டும் இருப்பது போதாது; அதில் இனிமையும் நலனும் கூடியிருத்தல் வேண்டும்; ஆன்றோர்கள் இயற்றியுள்ள பாரமார்த்திக நூல்களைப் பக்தி விசுவாசத்தோடு நாள்தோறும் கசடற ஓதுதல் வேண்டும் — இக்கோட்பாடுகள் நிறைவேறுங்கால் அவைகளின் தொகை வாக்கு மயமான தவம் எனப்படுகிறது.

குழப்பமோ சோர்வோ மனதில் இடம் பெறலாகாது. அமைதிக்கு அது இருப்பிடமாகவேண்டும்; உயிர்கள் அனைத்திடத்தும் அன்பு பூண்டிருத்தல் வேண்டும்; தேவைக்கு மேல் பேசாது மௌனமுற்றிருத்தல் வேண்டும்; சிந்தனையில் தன்னடக்கம் பயிலுதல்; உள்ளத்தில் உண்டாகிற உணர்ச்சிகளெல்லாம் தூயவைகளாக இருத்தல்—இக்கோட்பாடுகளின் தொகை மானஸ தபஸ் எனப்படுகிறது. (பகவத்கீதை அத். 17 – சுலோ. 14, 15, 16)

13. அதிசயச் செயல்கள்

யோகிகளுள் சிலர்க்கு அஷ்ட சித்திகள் தற்செயலாய் வாய்ப்பதுண்டு. வேறு சிலர் முயன்று அவைகளைப் பெறுகின்றனர். அஷ்டசித்திகளைப் பெற்றுக் கெட்டுப்போகாதவர்கள் மிகச் சிலர்; கெட்டுப்போனவர்களோ பலபேர். அவர்களுடைய அசாதாரணமான செயல்களைச் சித்தி விளையாடுதல் என்று சொல்லுவதுண்டு. இயற்கையின் நடைமுறைக்கு மாறுபடுகிற சித்திகள் கேடு விளைவிக்கும். அவைகளைப் பார்த்து

மக்கள் வியப்படைவது ஒன்றே கைகண்ட பலன். மறை முகமாக அவைகள் செய்யும் தீங்கோ மிகக் கொடியது.

இனி பக்தர்களுடைய வாழ்க்கையில் சில வேளை களில் அதிசயச் செயல்கள் சில நிகழ்வதுண்டு. அச் செயல்களும் யோக சித்திகளே என்று பாகுபடுத்துகிற வர்கள் இருக்கின்றனர். ஆனால் யோக சித்திக்கும் அதி சயச் செயலுக்கும் இடையில் சில வேற்றுமைகள் உண்டு. சித்தியை நான் செய்கிறேன் என்ற அகங்காரம் யோகிக்கு இருக்கிறது. அதிசயச் செயலை ஈசன் செய் கிறான் என்ற பணிவும் பக்தியும் பக்தனுக்கு இருக் கிறது. யோக சித்தி தத்துவத்தோடு முரண்பட்டு உல குக்குக் கேடு விளைவிப்பதுண்டு. அதிசயச் செயலோ தத்துவத்துக்கு ஒத்திருந்து உலகுக்கு நலன் செய்கிறது.

மாணிக்கவாசகர் வாழ்க்கையில் சிவனார் குதிரைச் சேவகனாக வந்தது ஓர் அதிசயச் செயல். நல்ல விலை யுயர்ந்த பரிகளெல்லாம் பிறகு நரிகளாக மாறியது மற் றோர் அதிசயச் செயல். இவையாவும் மாணிக்கவாசகர் சங்கற்பித்து நிகழ்ந்தவைகளல்ல. தீவிரமான சிவபக்தி யில் அரசாங்கக் கடமைகளை அவர் மறந்துவிட்டார். அரசனுக்குரிய செல்வத்தைப் பரவச நிலையிலிருந்து சிவ சேவையில் அவர் செலவழித்தார். ஜீவ போதத்தில் இருந்துகொண்டு வேண்டுமென்று அவர் அச்செயலைச் செய்திருந்தால் அது குற்றமாகும். அவர் படைத்திருந்த பக்தி நிலையில் அது இழுக்கு ஆகாது.

பாண்டி மன்னன் ஒரு சிவபக்தன். நிகழ்ந்த அதி சயச் செயல் வாயிலாக இறைவன் பாண்டியனுக்கு நல் லறிவு புகட்டினார். இறைவனுக்கு மாயாவி என்பது மற்றொரு பெயர். ஜாலவித்தைக்காரன் என்பது அதன் பொருள். அண்டகோடிகளைக் கல்பாந்தரத்தில் உண்டு பண்ணுகிற அவன் அவைகளை ஒரு நொடிப்பொழுதில் உண்டுபண்ணலாம். நரியும் பரியும் பரமனுக்கு ஒன்றே.

பாண்டியனுக்கோ அவை வெவ்வேருனவை. அவனுக்கு நரியில் வெறுப்பு; பரியில் விருப்பு. அந்த விருப்பு வெறுப்பை முன்னிட்டுச் சிவபக்தனுக்குச் செய்த அபராதம் மன்னிக்க வொண்ணுதது. இத்திருவிளேயாடல் வாயிலாகச் சிவனுர் பாண்டி வேந்தனுக்கு விவேகத்தை வழங்கினுர். பின்பு வாதவூரர் மேலும் ஆற்றுதற்கு இருந்த அருட்பணிக்கு இறைவன் வழிவகுத்து வைத்தார்.

பௌத்தர்களே வாதவூரர் வாதில் வென்ருர் என்ற கதை யொன்று திருச்சாழலோடு இணேக்கப் பெற்றிருக்கிறது. ஆதியோடந்தம் அக்கதை அசம்பாவிதம். சைவ சமயத்துக்குச் சேவை செய்வதற்கு மாருக அக்கதை இழுக்கை உண்டுபண்ணுகிறது. தத்துவ ஆராய்ச்சியாளர் அதை ஏற்க மறுப்பர். சிறுமி ஒருத்தி சிவனுர் மகிமையை வெளிப்படுத்தத் தூண்டுதல் கேள்வி (leading question) போடுகிருள். மற்ரெருத்தி அதற்கேற்ற விடையளிக்கிருள். இந்த முறையில்தான் திருச்சாழல் அமைந்திருக்கிறது. புத்தமதக் கொள்கைகளுக்கும் திருச்சாழல் கருத்துக்களுக்கும் எந்தவிதமான தொடர்வோ பிணக்கோ ஏற்படுதற்கு அவகாசமில்லே.

கடைமாணுக்கன் ஒருவனுக்குக் கல்லூரிப் படிப்பு ஏற மாட்டேனென்கிறது. பரீக்ஷையில் அக்கடைமாணுக்கன் சரியாக வினுக்களுக்கு விடைகள் எழுதும்படி மந்த்ரவாதி ஒருவன் அபிசார முறையில் ஏவுகிருன் என்று வைத்துக்கொள்வோம். அதனுல் அந்த மாணுக்கன் நன்மையடைந்தவன் அல்லன்; மந்திரவாதி அவனுக்கு உதவி புரிந்தவனுமல்லன். இதைவிட முழு மோசமான முறையில் மாணிக்கவாசகர் ஊமைப்பெண் ஒன்றைப் பேசவைத்திருக்கிருர் என்று சோடித்திருக்கிறது. இது இயற்கைத் திட்டத்துக்கு ஒவ்வாதது. இதில் சித்தியுமில்லே; அதிசயச் செயலுமில்லே, இறை

வனுடைய அருளும் இல்லை. தத்துவத்துக்கு முரண்படுகிற ஆபாசக் கதையிது. இது விஷயத்தில் எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு என்னும் கோட்பாட்டை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்த இடைச் செருகலைத் தத்துவத்துக்கு ஒவ்வாதது என்று ஒதுக்குதல் அறிஞர் கடமை.

14. வேதங்கள்

உலகம் கண்டறிந்துள்ள நூல்களில் மிகப் பழமையானவை வேதங்கள். கர்ணபரம்பரைக்கோ சரித்திரத் துக்கோ எட்டாத அவ்வளவு பூர்வீகமானவைகள் அவைகள். நேர் ஈசனிடத்திருந்தே தீர்க்கதரிசிகளாகிய ரிஷிகளுக்கு அவைகள் வழங்கியருளப் பெற்றவை என்பது ஐதிகம். பண்டைக் காலத்தில் அவைகள் புஸ்தகங்களாக எழுதிவைக்கப்படவில்லை. குரு சிஷ்ய பரம்பரையில் ஓதியுணர்தல் வாயிலாகப் பல்லாயிரம் ஆண்டுகளாக அவைகள் காப்பாற்றி வைக்கப்பட்டன. ஸ்ருதி என்பது வேதத்துக்கு மற்றொரு பெயர். காது கொடுத்துக் கேட்டறிந்தது என்பது அதன் பொருள். காலச் சக்கரத்தில் அவைகள் கோணலுறாதிருந்தது வியப்புக்குரிய விஷயமாம். ஆயினும் நாளடைவில் அவைகளைக் காப்பாற்றுதற்கான வேதியர்கள் போதாமையினால் அவைகளில் பல பகுதிகள் மறைந்துபோயின. வேதத்துக்கு மறை என்பது மற்றொரு பெயர். பாமரர் அறிவுக்கு எட்டாது மறைந்துள்ள பனுவல் அது. ஓதி உணர்ந்து அறிந்துள்ள இகபர வித்தியா சொரூபமாய் இருப்பது வேதம். இன்றைக்கோ வேதங்கள் மனிதனது அறிவகத்தினின்று வெளியேறி, அச்சகத்தில் புகுந்து புஸ்தக வடிவெடுத்து அலமாரிகளில் புதைந்து கிடக்கின்றன. வேதங்கள் மறைகளாக மாறியது நாட்டின் தௌர்ப்பாக்கியமாம்.

ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வ வேதம் என நான்கு வேதங்கள் இருக்கின்றன. இவைகள் மீண்டும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஸம்ஹிதை, பிராஹ்மணம், ஆரண்யகம் என்பன இம் மூன்று பிரிவுகளின் பெயர்களாம். இந்த மூன்று பகுதிகளையும் முறையே கர்மகாண்டம், உபாஸனை காண்டம், ஞானகாண்டம் எனப் பாகுபடுத்திப் பகர்வதுண்டு. இவைகளில் உள்ள சில பகுதிகள் மந்த்ரம் என்னும் பெயர் பெறுகின்றன. உரைநடையிலும் பல விதமான செய்யுள் சந்தங்களிலும் அவைகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. அவை யாவும் வெவ்வேறு தேவதைகளுக்குரிய பிரார்த்தனைகளாம். யாக கிரியைகள் நிகழும்பொழுது அவைகள் ஓதப் பெறுகின்றன. மகோன்னதமான மனப்பான்மைகளை அவைகளுள் ஆங்காங்குக் காணலாம். பொருள் உணராது அந்த மந்த்ரங்களின் ஓசைகளை உச்சரித்தாலும் அதற்கேற்ற ஆத்ம சாதன பலன் உண்டு என்பது ஐதிகம். வேதங்களில் ஹிந்துக்கள் அளப்பரிய விசுவாசம் வைத்திருக்கின்றனர். மக்களுடைய பண்பாடுகளுக்கெல்லாம் அந்நூல்கள் பிரமாணமாய் அமைந்திருக்கின்றன. வேதத்தை நம்புவதும் பரம்பொருளை நம்புவதும் ஹிந்துக்களுக்கு ஒன்றேயாம். 'மூவா நான்மறை முதல்வா போற்றி' என்கிறார் மாணிக்கவாசகர்.

வேதத்தின் இலட்சியார்த்தத்தை அறிந்துகொள்வது அவசியமாகிறது. வேதம் அழியாதது என்பதும், பரம்பொருளே வேதமாயிருக்கிறது என்பதும் கோட்பாடு. ஈண்டு வேதம் என்பது ஒரு புஸ்தகத்தைக் குறிப்பதன்று. பிரபஞ்சமே வேதம். அது இறைவனிடத்திருந்து வந்துள்ளது. அது தோன்றவும் மறையவும் செய்கிறது. ஆனால் அதற்கு அழிவில்லை. அது அறிவு சொரூபம் என்பது வெளிப்படை. சிவனார்க்கு வேதியன்

என்பது ஒரு பெயர். வேதத்தை அறிந்தவன் என அது பொருள் படுகிறது. பிரபஞ்சம் முழுதையும் பரமன் அறிந்திருக்கிருன். பிரபஞ்சத்தை அறிந்துகொள்ளுதற்கு ஏற்ப மனிதனும் வேதியன் ஆகிருன். முன்னுளைய முனிவர்கள் வேதியராயிருந்தனர். பிரபஞ்சத்தை இயக்குகின்ற சித் சக்தியை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். இக்காலத்திய பௌதிக விக்ஞானிகளையும் வேதியர்கள் எனலாம். ஏனென்ருல் இயற்கையின் ஜடசக்தியை அறியவும் அதைப் பயன் படுத்தவும் இவர்களுக்கு இயலுகிறது. பண்டைக்காலத்து வேதத்தையும் புதியதாய் வந்துள்ள பௌதிக விக்ஞானத்தையும் இணைத்து ஆராய்பவன் நல்ல வேதியன் ஆவான். எதிர்காலத்து இந்தியன் இன வேற்றுமையை மறந்துவிட்டுத் தெளிந்த வேதியனுகவும் விப்பரனுகவும் விரைந்து முன்னேற வேண்டும்.

15. தர்சனங்கள்

தர்சனம் என்னும் ஸம்ஸ்கிருதப் பதமானது பார்த்து அறிதல் என்று பொருள்படுகிறது. குழந்தை பார்க்கிறது; ஆனல் அறிகிறதில்லை. கற்றவனே பார்க்கிருன், பார்த்ததின் உட்பொருளை அறிகிருன். பார்த்ததை அறிகிறவன் பார்ப்பனன். முதலில் பிரபஞ்சத்தையும் பிறகு பரம்பொருளையும் பார்த்து அறிவது வாழ்க்கையின் குறிக்கோள். அவைகளைப் பார்ப்பதற்கு வழிகாட்டித் தரும் நூல்கள் தர்சனங்கள் எனப்படுகின்றன. நான்கு வேதங்களுக்கு அனுசரணையாக ஆறு தர்சனங்கள் இருக்கின்றன. நியாயம், வைசேஷிகம், மீமாம்ஸை, சாங்க்யம், யோகம், வேதாந்தம் என அவைகள் பெயர் பெற்றுள்ளன. இந்த ஆறு தர்சனங்களை ஆறு சாஸ்திரங்கள் என்றும் சொல்லுவதுண்டு. மனிதனைப் படிப்படியாக ஞானத்தின் மேல் நிலைகளுக்கு அவைகள் அழைத்துச் செல்கின்றன. ஏணிப்படிகள் போன்று அவைகள் அமைந்துள்ளன என்று இயம்பலாம்.

நியாயம் வைசேஷிகம் ஆகிய இரண்டு தர்சனங்களும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. ஆதலால் அவைகளை இணைத்து வைத்து ஓர்வது ஒவ்வும். மனதை உடையவன் மனிதன். சிந்தனைசக்தி மனதின் கூறு ஆகும். சிந்திக்க வல்லவனே சரியான மனிதன் ஆகிறான். எப்படிச் சிந்திப்பது என்று எடுத்துப் புகட்டுவது நியாயம். எதைச் சிந்திப்பது என்று வரையறுப்பது வைசேஷிகம். சிந்தித்ததைச் செம்மையாகப் பிறர்க்கு இயம்புதல் வேண்டும். பேசியவன் கருத்தைக் கேட்டவன் சரியாக அறிந்துகொண்டானா? பேசிய பொருள் உண்மைக்கு ஒத்ததா? பேச்சின் விளைவாக மனிதனை மனிதன் அறிந்து கொண்டானா? அறிதல் வாயிலாக இருவர்க்கிடையில் உண்டானது ஒற்றுமையா அல்லது வேற்றுமையா? வேற்றுமையாயின் யாரிடத்து வழு எங்ஙனம் நிகழ்வதாயிற்று? வழுவை நேர்மைப்படுத்துவது எங்ஙனம்? இப்படி மனதையும் மொழியையும் உண்மைக்கு ஒப்பத் திருத்தியமைப்பது இந்த இரண்டு தர்சனங்களின் நோக்கமாகும். இதன் விளைவாகப் பேசப்பெறும் பாஷையும் தானாகவே திருந்தியமைகிறது. மனிதனது பண்பும் அவன் பிரயோகிக்கும் பாஷையின் பண்பும் இணைபிரியாதவைகளாயிருக்கின்றன. எனவே ஒரு மனிதனுடைய சம்பிரதாயம் எதுவாயினும் அதை நேராக விளக்குதற்கு அவன் நியாய சாஸ்திரத்தில் நிபுணனாவது முற்றிலும் அவசியம்.

நியாய சூத்ரங்கள் என்ற நூலை முதலில் இயற்றியவர் கௌதமர் என்ற ரிஷி. உண்மையை ஓர்தற்கு நியாய சாஸ்திரப்படி நான்கு பிரமாணங்கள் இருக்கின்றன. அவைகள் முறையே பிரத்யக்ஷ பிரமாணம், அனுமானப் பிரமாணம், உபமானப் பிரமாணம், சப்தப்பிரமாணம் எனப்படுகின்றன. நான்காவதாயிருப்பதற்கு மற்றொரு பெயர் வேதப்பிரமாணம். ஏனென்றால் வேதத்தில் வகுத்து வைத்ததெல்லாம் உண்மை,

எடுத்துக்கொண்ட விஷயத்தைத் தர்க்கம் பண்ணுவதில் மூன்று முறைகள் இருக்கின்றன. அவைகள் வாதம், விதண்டை, ஜல்ப்பம் என்னும் பெயர் பெற்றுள்ளன. உண்மையை ஓர்தல் பொருட்டு ஊக்கத்தோடும் அடக்க ஒடுக்கத்தோடும் கருத்துக்களைச் சீர்தூக்குவது வாதம் எனப்படுகிறது. அது மிகச் சீரிய நிலையில் இருக்கும்போது ஸம்வாதம் எனப்படுகிறது. பிறர் மனதில் குழப்பத்தை உண்டுபண்ணுதற்கு நெறி பிறழ்ந்து அகங்காரத்தோடு பேசுவது விதண்டாவாதமாகிறது. தன் அதிகாரத்தையோ வல்லமையையோ முன்னிட்டுப் பிறரைப் பயமுறுத்துவதும், ஏளனம் பண்ணுவதும், அவதூறு கூறுவதும் ஜல்ப்பமாகும். இம்மூன்றனுள் முதலில் மொழிந்துள்ள வாதம் சாலச் சிறந்தது. அறிவு வளர்ச்சிக்கும் ஆத்மசாதனத்துக்கும் அது பெருந்துணையாகிறது. யுக்தி அல்லது பகுத்தறிவு, அல்லது தத்துவ ஆராய்ச்சி, அல்லது விசாரம் மனிதனுக்கு வாய்த்துள்ள வரப்பிரசாதமாகும். அதை நன்கு பயன்படுத்துபவன் பாக்கியவான்.

மீமாம்ஸை என்பது மூன்ருவது தர்சனம். இதை இயற்றியவர் ஜைமினி. இந்த சாஸ்திரத்துக்குப் பூர்வ மீமாம்ஸை என்றும் கர்ம மீமாம்ஸை என்றும் வேறு பெயர்கள் இருக்கின்றன. வேதத்துக்கு ஆதியந்தமில்லை; அது நித்தியமானது என்று இந்த தர்சனம் உறுதி கூறுகிறது. சப்தப்பிரமாணம் அல்லது வேதப் பிரமாணமே முடிவானது; அதற்குமேல் வேறு எந்தப் பிரமாணத்தையும் மனிதன் நாடவேண்டியதில்லை என்கிறது இந்த தர்சனம்.

எது தர்மம் எது அதர்மம் என்று வேதம் பாகுபடுத்திச் சொல்லுகிறது. மனிதன் தர்மத்தை ஆழ்ந்து அனுஷ்டிக்க வேண்டும். அதர்மத்தை அவன் ஒரு நாளும் செய்யலாகாது. வேதம் புகட்டுகிற கர்மங்களெல்லாம் வெவ்

வேறு யாகங்கள் என்று இயம்பப்படுகின்றன. அவைகளைச் சரியாகச் செய்வதன் வாயிலாக மனிதன் பூவுலகில் வேண்டியதை யெல்லாம் பெறலாம். பூதவுடலை உகுத்த பிறகு அவனுக்கு சுவர்க்கம் வாய்க்கிறது. அங்குத் துன்பம் கலவாத இன்பத்தை அவன் அனுபவிக்கிறான். பூர்வமீமாம்ஸையின்படி சுவர்க்கப் பிராப்தியே வாழ்க்கையின் முடிவான குறிக்கோள் ஆகிறது.

சாங்க்ய தர்சனம் நான்காவது இடம் பெறுகிறது. இதை இயற்றியவர் கபில முனி. பிரகிருதி, புருஷன் என இரண்டு தனித்தனி வஸ்துக்கள் இருக்கின்றன என்று இந்த சாஸ்த்ரம் இயம்புகிறது. அவ்யக்தம் அல்லது தோன்றாநிலை யென்றும், வியக்தம் அல்லது தோற்றத்துக்கு வந்துள்ள நிலையென்றும் இரண்டு நிலைகள் பிரகிருதிக்கு உண்டு. தோன்றாநிலையில் அது மூல பிரகிருதி எனப்படுகிறது. அப்பொழுது விகாரம் ஒன்றும் அதனிடத்து இல்லை. தோற்றத்துக்கு வரும்பொழுது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள் அதில் வடிவெடுக்கின்றன. குணபேதத்தை முன்னிட்டுப் பிரகிருதியில் பரிணமம் உண்டு. கீழ்நிலையினின்று மேல் நிலைக்கு உயருமிடத்து அது பரிணமம் எனப்படுகிறது. பிரகிருதியானது இருபத்து நான்கு தத்துவங்களாகப் பரிணமிக்கின்றது. பூதங்கள் ஐந்து; அவைகளின் தன் மாத்திரைகள் ஐந்து; ஞானேந்திரியங்கள் ஐந்து; கர்மேந்திரியங்கள் ஐந்து; மனம், சித்தம், புத்தி, அகங்காரம் ஆக அந்தக்கரணங்கள் நான்கு. இங்ஙனம் பிரகிருதியின் தத்துவங்கள் இருபத்து நான்கு ஆகின்றன. இந்த இருபத்து நான்கு தத்துவங்களையே சில சமயங்கள் முப்பத்தாறு தத்துவங்களாகவும், வேறு சில சமயங்கள் தொண்ணூற்றாறு தத்துவங்களாகவும் பிரிக்கின்றன.

சாங்க்ய தர்சனப்படி இருபத்தைந்தாவது தத்துவமாயிருப்பது புருஷன். பிரகிருதி ஜடவஸ்து, புருஷன்

சேதன வஸ்து. அதாவது அறியுந்தன்மை பிரகிருதிக்கு இல்லை, புருஷனுக்கு அது உண்டு. விகாரப்படுந் தன்மை பிரகிருதிக்கு உண்டு, புருஷனுக்கு அத்தன்மையில்லை. மூலபிரகிருதியாயிருக்கும் வஸ்து ஒன்று, புருஷர்கள் பலர். செயல்புரியுந் தன்மை பிரகிருதிக்கு உண்டு; அறியுந்தன்மை புருஷனுக்கு உண்டு. பிரகிருதி—புருஷன் கூட்டுறவால் அறிவோடு கூடிய கிருத்தியம் பிரபஞ்சமெங்கும் நிகழ்ந்து வருகிறது. புருஷனுக்குப் பாடம் புகட்டி, அனுபவத்தை வளர்த்து, முக்தி நல்குவது பிரகிருதியின் செயலாகிறது. தன்னை ஆத்மா என்று அறிந்துகொண்ட பிறகு சரீரத்தோடு இருக்கும் புருஷன் ஜீவன் முக்தன் எனப்படுகிறான். சரீரத்தை உகுத்த பிறகு அவன் கைவல்ய முக்தன் எனப்படுகிறான். பந்தத்தில் இருக்கும் புருஷர்களும் முக்தியடைந்த புருஷர்களும் எண்ணிக்கையில் அடங்காத அனந்தம் என்பது இந்த தர்சனத்தின் கொள்கையாகும்.

யோகம்: தரத்தில் படிப்படியாக மேல்நிலைக்கு உயர்வடைந்து வருகிற ஆறு தர்சனங்களுள் ஐந்தாவது படிக்கு உயர்ந்திருப்பது யோகம். இந்த சாஸ்திரத்துக்குக் கர்த்தாவாயிருப்பவர் பதஞ்சலி முனிவர். உயர்ந்த நெறி அல்லது நெறிகளைப் பயின்று, உயர்ந்த குறியை அடைவது என யோகம் என்னும் பதம் பொருள்படுகிறது. அளப்பரிய மகோன்னத நிலை யெய்துவது மனிதனுக்குச் சாத்தியம் என்று இந்த சாஸ்திரம் சாட்டுகிறது. அதிகாரி பேதம், சமயபேதம் என்னும் பாகுபாடு இன்றி, மக்கள் எல்லாராலும் பழகுதற்கு உரிய மார்க்கம் இதுவாதலால் இது ராஜயோகம் என்னும் பெயர் பெற்றுள்ளது. சைவர்கள் இதற்கு சிவராஜயோகம் என்னும் புனர் பெயர் கொடுத்திருப்பது மிகையாம். ராஜபாதை (public road) அனைவர்க்கும் பொதுவாவது போன்று ராஜயோகமானது மேன்மையுற விரும்புவோர்க்கெல்

லாம் பொதுவுடைமையாம். இப்பெரு நெறியிலே எட்டு அங்கங்கள் அடங்கியிருப்பதால் இது அஷ்டாங்க யோகம் எனவும் அழைக்கப்படுகிறது. **இயமம், நியமம், ஆஸனம், பிராணுயாமம், பிரத்யாஹாரம், தாரணே, தியானம், ஸமாதி** என்பன அந்த எட்டு அங்கங்களின் பெயர்களாம்.

இயமம் என்ருல் அடக்குதல். ஐம்பொறிகளேச் சிறு நெறி செல்லாது தடுத்தல் வேண்டும். சிற்றுயிர்களும் அவைபோன்ற மக்களும் பிற உயிர்களேத் துன்புறுத்தியோ அல்லது துடைத்துத் தள்ளியோ வாழ்ந்து வருகின்றனர். யோகி ஆக விரும்புபவன் இதற்கு மாருக அஹிம்ஸை (கொல்லாமை) என்னும் நெறியில் நிலேத்திருக்கிருன். நிலேயற்ற சுயநலத்தை நாடுபவன் பொய் பேசுகிருன். மனத்தெளிவை நாடுகிற யோகியோ ஸத்தியம் (பொய்யாமை) என்னும் விரதத்தினின்று விலகாதிருக்கிருன். தனது சுகஜீவனத்தின் பொருட்டுப் பிறர் பொருளே முறைதவறிப் பற்றுவது களவு. மற்று யோகிக்கோ அஸ்தேயம் (கள்ளாமை) அணிகலமாகிறது. பிறவிப் பிணிக்கு வித்து காமநோய். பின்பு யோகியோ யாண்டும் பிரம்மசரியம் (பொறி வழிச் செல்லாமை) பூண்டவனுகிருன். இந்திரிய சுகங்களினின்று தன்னேக் 'காப்பது விரதம்' என்னும் சிறப்பு அவன்பால் மிளிர்கிறது. அபரிகிரஹம் (பொருள் படையாமை) மனதைத் தூய நிலேயில் வைத்திருப்பதற்கு உற்ற உபாயமாம். சிவனுர் பொருள் ஒன்றும் படையாதிருந்து யோகிகளுக்கு வழிகாட்டித் தருகிருர். இயமத்தில் இந்த ஐந்து சீலங்களும் அடங்கியிருக்கின்றன.

நியமம் என்ற இரண்டாவது அங்கத்தில் அனுஷ்டிக்கவேண்டிய ஐந்து அறநெறிகள் இருக்கின்றன. சந்தோஷம் அல்லது சாந்தமும் இனிமையும் செறிந்த மனநிலே; ஸௌச்சம் அல்லது திரிகரண சுத்தி; ஸ்வாத்யாயம்

அல்லது பக்தி சிரத்தையோடு சாஸ்திர ஆராய்ச்சி பண்ணுதல்; ஆர்ஜவம் அல்லது நேர்மை; ஆத்ம ஸமர்ப்பணம் அல்லது சுயநலத்தைப் பொதுநலமாக்குதல்—இந்த ஐந்து நியமனங்களும் மனதை மாண்புடையதாக்குகின்றன.

ஆஸனம், பிராணுயாமம் ஆகிய இவையிரண்டும் முறையே மூன்ருவது நான்காவது அங்கங்கள் ஆகின்றன. தேகத்தைத் திட்பமும் துப்புரவும் வாய்க்கப் பெற்றதாகத் திருத்தி யமைப்பதற்கு இந்த இரண்டு சாதனங்களும் நன்கு பயன்படுகின்றன. சரீரத்தைச் சீரிய நிலையில் வைத்திருப்பது யோகாப்பியாஸத்துக்கு முற்றிலும் தேவை.

பிரத்யாஹாரம் என்பது ஐந்தாவது அங்கமாகிறது. ஜன்மாந்தரங்களில் புறவுலகில் போய்க்கொண்டிருந்த இந்திரியங்களை மீட்டெடுத்து அந்தர்முகமாகத் திருப்புவது இதன் நோக்கமாகிறது. 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப் புடைத்து' என்னும் கோட்பாட்டை இப்பயிற்சி நடைமுறைக்குக் கொண்டு வருகிறது.

தாரணை ஆருவது அங்கமாக அமைந்திருக்கிறது. ஐந்து விரல்களும் ஒன்று கூடிப் புறத்தில் உள்ள பொருள் ஒன்றைப் பற்றிப் பிடிப்பது போன்று ஐம்பொறிகளும் தன்னுள் மனதில் லயமாகுங்கால் அது தாரணை எனப்படுகிறது.

தியானம் ஏழாவது அங்கமாகிறது. முற்றிலும் தன்மயமாக்கப்பட்ட மனதைச் சீரிய லட்சியம் ஒன்றில் தைலதாரைபோன்று தன்னுள் செலுத்துவது தியானம்.

ஸமாதி எட்டாவது அங்கம். ஈண்டு ஸாதனமானது ஸாத்தியமாகப் பரிணமிக்கிறது. விறகுக்கட்டை தீயாக வடிவெடுப்பது போன்று தியானிப்பவன் தியானிக்கப்பட்ட பொருள்சொரூபமாக மிளிர்கிருன். யார் எந்தத் தத்துவத்தை தியானிக்கின்ருரோ அந்த தத்துவ சொரூப

மாக அவன் தானே திகழ்கின்றான். சான்று ஒன்று சார்றுங்கால், பரமாத்மாவை தியானிக்கின்ற ஜீவாத்மன் ஸமாதியில் பரமாத்மாவோடு ஒன்றுபடுகிறான்.

ஐதிகமாக வந்துள்ள ஆறு தர்சனங்களுள் முதல் ஐந்தும் பரம்பொருளைப்பற்றிய பேச்சு எடுத்துக்கொள்வதில்லை. அப்படி யிருந்தும் அவைகள் வேதத்துக்கு ஒத்தவைகள் என்று போற்றப்படுகின்றன. ஏனென்றால் மனிதனுடைய ஆத்மீக வளர்ச்சிக்கு அவைகள் இன்றியமையாதவைகள். அவனுடைய சிந்தனை சக்தியையும் சொல் வன்மையையும் செப்பனிட்டு அவைகளை மெய்ப்பொருள் ஆராய்ச்சிக்கு ஏற்றவைகளாக்குகின்றன நியாயமும் வைசேஷிகமும். பிரகிருதி மயமாயுள்ள எவ்வுலகில் எதை வேண்டுமானாலும் மனிதன் தன் கர்மத்தைக் கொண்டு பெறலாம் என்கிறது மீமாம்ஸை. பிரகிருதியின் கூறுபாடுகளையெல்லாம் தெளிவுறுத்துகிறது சாங்க்யம். ஜீவாத்மன் பிரகிருதியை வென்று எத்தகைய பெருநிலை யெய்தலாம் என்கிறது யோக சாஸ்த்ரம்.

வேதாந்தம் ஆறாவது தர்சனமாக மிளிர்கிறது. வேதத்தின் அந்தம் வேதாந்தம். மறைமுடி என்பதும் இதுவே. நான்கு வேதங்களில் ஞான காண்டமாகத் திகழ்பவை உபநிஷதங்கள். இந்த உபநிஷதங்கள் புகட்டுவது வேதாந்தம். அதை அனுஷ்டிக்கும் சாதகன் பிரம்ம ஞானியாகிறான். பிரம்ம ஞானம், பரஞானம், சிவஞானம் என்பனவெல்லாம் மெய்ப்பொருள் அறிவு என்று பொருள்படுகின்றன.

மெய்ப்பொருள் ஒன்று; அதற்குப் பெயர்கள் பல. ஒரு காலத்தில் இருந்து, இன்னொரு காலத்தில் மறைவது மெய்ப்பொருள் ஆகாது. ஓர் இடத்தில் இருந்துகொண்டு மற்றோர் இடத்தில் இல்லாதது மெய்ப்பொருள் ஆகாது. ஒரு காரணத்தால் தோன்றி அக்காரணம் ஒழியும் பொழுது தானும் அழியும் பொருள் மெய்ப்பொருள்

ஆகாது. கால தேச வர்த்தமானத்தில் கட்டுப்படாததே மெய்ப்பொருள். அது ஸத் என்று கூறப்படுகிறது. அப்பொருள் பேரறிவு சொரூபமாயிருப்பதால் அது சித் எனப்படுகிறது. பின்பு இன்பத்துக்கு அது உறைவிடம். ஆனந்தம் பிரம்மம் என்கிறது உபநிஷதம். மெய்ப்பொருளாகிய பிரம்மம் ஸத்-சித்-ஆனந்தம் என அழைக்கப்படுகிறது. அறிவுப் பெருவெளி யென்றும், சித்-ஆகாசம் என்றும் சித்-அம்பரம் என்றும் அதைக் கூறுவதுண்டு.

பிரம்மத்தின்கண் சக்தியொன்று உண்டு. அந்த சக்தியின் வல்லமையால் ஜகத்தும் ஜீவனும் தோற்றத்துக்கு வருகின்றன. அண்டங்கள் யாவும், உலகங்கள் யாவும் ஜகத் எனப்படுகின்றன. பின்பு இவ்வுலகங்களில் உள்ள உயிர்கள் யாவும் ஜீவர்கள் அல்லது ஜீவாத்மாக்கள் என்று இயம்பப்படுகின்றன. ஜகத்தும் ஜீவனும் பிரம்மம் என்னும் அறிவுப் பெருவெளியில் தோன்றவும், இருக்கவும், ஒடுங்கவும் செய்கின்றன. சக்தியின் விளையாட்டில் வந்துள்ள ஜகத்தும் ஜீவனும் மாயா காரியங்கள் எனப்படுகின்றன.

மெய்ப்பொருள் ஆராய்ச்சியில் மாயாவாதம், பிரம்மவாதம் என இரண்டு கூறுகள் இருக்கின்றன. பிரகிருதியாகிய ஜகத்தையும் ஜீவனையும் ஆராய்ச்சி செய்து இவைகள் நித்தியமானவைகளல்லவென்று முடிவுகட்டுவது மாயா வாதம். திருவாசகத்தில் இருபது இடங்களில் மாயா தத்துவம் கூறப்படுகிறது. பின்பு அந்நூல் முழுதும் சிவதத்துவம் அல்லது பரம்பொருள் விளக்கமாக மிளிர்கிறது. பிரம்ம வாதத்துக்கு அது எடுத்துக்காட்டு ஆகிறது. தோற்றத்துக்கு வந்துள்ள மாயையோடு மிளிர்கிற பிரம்மத்துக்கு ஈசுவரன் அல்லது சகுண பிரம்மம் என்று பெயர். மாயையின் தோற்றம் ஏதுமின்றிப் பரவஸ்து முற்றிலும் தன்மயமாயிருக்கும்போது

அது நிர்க்குண பிரம்மம் எனப்படுகிறது. சைவ சமய பரிபாஷையில் நிர்க்குண பிரம்மம் சிதம்பர ரகசியமாகவும், சகுண பிரம்மம் சிவகாமி சமேத நடராஜாவாகவும் இலங்குகின்றன. மாயா சகிதனாய் மிளிர்வதை முன்னிட்டு மூலவஸ்துவில் எந்தவிதமான விகாரமும் உண்டாவதில்லை. அது பூரணப் பொருள்; அகண்ட ஸத்-சித்-ஆனந்த சிவம்.

பரம்பொருளுக்குப் பரமாத்மா என்பது ஒரு பெயர். கடலில் அலைகள் தோன்றுவது போன்றும், சூரியனிடத்துக் கிரணங்கள் தோன்றுவது போன்றும் எண்ணிறந்த ஜீவாத்மாக்கள் பரமாத்மாவில் தோன்றி, இருந்து, ஒடுங்குகின்றன. பரமாத்மாவும் ஜீவாத்மாக்களும் மாயையோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த சம்பந்தத்தில் ஒரு வித்தியாசம் உண்டு. பரமாத்மா மாயைக்கு ஈசுவரன்; ஜீவாத்மா மாயைக்கு அடிமை. சாங்க்ய சாஸ்த்ரத்தைச் சார்ந்து சொல்லுங்கால், பிரகிருதி தத்துவமும் புருஷதத்துவமும் சேர்ந்து ஆனது ஜீவாத்மன். புல் முதல் படைப்புக் கடவுளாகிய பிரம்மதேவன் வரையில் உள்ள உயிர்கள் அனைத்தும் ஜீவாத்மாக்களேயாம். புல் நிலையில் உள்ள ஜீவாத்மா ஒன்று படிப்படியாகப் பரிணமித்து பிரம்மதேவன் நிலைக்கு மேல் நோக்கிப் போகக் கூடும். பலகோடி பிறவிகளின் மூலம் பிரகிருதியாலாகிய தேகத்தைத் திருத்தியமைப்பது பரிணாமமாம். தேகம் திருந்தி யமையுமிடத்து அது மேலான பிறவியாகிறது. நிரந்தரமாக தேகத்தைக் களைந்தெறிவது முக்தி. அப்பொழுது ஜீவாத்மன் மாயையினின்று விடுதலையடைந்து பரமாத்மாவைச் சேர்கிறது.

முக்தியடைய முயலுகிற ஜீவாத்மா வேதாந்த தர்சனத்தை அனுஷ்டிக்கிறான். பரமாத்மாவை நோக்கி அவன் பண்ணுகிற பிரயாணத்தில் மூன்று நிலைகள் இருக்கின்றன. அவைகள் முறையே துவைதம், விசிஷ்

டாத்வைதம், அத்வைதம் எனப்படுகின்றன. துவைதம் என்றால் இரண்டு. ஆனால் துவைத மதம் பன்மையைக் குறிக்கிறது. மேல் நாட்டு அறிஞர் இந்த மதத்தை (pluralism) புளூரலிஸ்ம் என்பர். ஜகத், ஜீவன், பரம் ஆகிய முப்பொருள் உண்மையை நிறுவுகிறது இம்மதம். இதன் கொள்கைப்படி இம்மூன்று பொருள்களும் அநாதி, நித்தியமானவைகள். ஆனால் ஜகத்தும் ஜீவனும் பரம்பொருளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவைகள். ஜகத் என்னும் சொல்லைச் சைவமதம் பாசம் என்று அழைக்கிறது. அதே பாங்கில் ஜீவனைப் பசு என்றும் பரத்தைப் பதி என்றும் இம்மதம் கூறுகிறது. பசு, பதி, பாசம் ஆகிய முப்பொருள் உண்மை இதன் கோட்பாடு. விசிஷ்டாத்வைதம் என்பது ஒரு விசேஷணத்தோடு (சிறப்பியல்போடு) கூடிய அத்வைத நிலை. ஜகத்தும் ஜீவனும் பரமாத்மாவுக்கு சரீரம் ஆகின்றன. சரீரத்தையும் அதை உடைத்திருப்பவனையும் இரண்டாகப் பிரிக்க முடியாது. ஒரே அகண்ட விச்வமூர்த்தி இங்ஙனம் அமைந்திருக்கிறான். ஆதலால் அவன் அத்வைத வஸ்து; இரண்டல்லாத தனிப்பொருள்-qualified non-dualism, qualified monism. ஆயினும் அவனுடைய சரீரத்தையும் அதிலுள்ள அங்கங்களையும் பாகுபடுத்தலாம். இதை பேதாபேதநிலை (பேதம்+அபேதம்=வேறுபாடு+ஒற்றுமை நிலை) என்று கூறுவது முறை. இனி அத்வைதம் என்றால் இரண்டற்றது. ஜகத்தும் ஜீவனும் பரமாத்மாவின் பிரகிருதி ஆகின்றன. பிரகிருதியும் புருஷனும் இரண்டு அல்ல; ஒரே வஸ்து. சக்தியும் சிவனும் இரண்டு அல்ல; ஒரே மூர்த்தி non-dualism, monism. கடலில் அலை தோன்றவும் ஒடுங்கவும் செய்கிறது. அங்ஙனம் பிரகிருதி புருஷனில் தோன்றவும் ஒடுங்கவும் செய்கிறது. தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் என்னும் பிரகிருதியின் விளையாட்டை முன்னிட்டுப் புருஷனில் ஒரு விகாரமும் உண்டாவதில்லை. பரமாத்மா பரிபூரணப் பொருள். பிரம்மம்

ஸத்யம்; ஜகத் மித்தை; ஜீவன் பிரம்மமே, அதற்கு வேருனது அல்ல. இதுவே முடிந்த கோட்பாடு.

துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய இந்த மூன்று நிலைகளை உபநிஷதமானது அவஸ்தாத்ர யம் என்னும் கோட்பாட்டின் வாயிலாக விளக்குகிறது. ஜாக்கிரதம், சொப்பனம், சுஷுப்தி என்பன அவஸ்தாத் ரயமாம். அவைகளை முறையே நனவு, கனவு, கனவற்ற உறக்கம் என்கிருேம். இம்மூன்று அவஸ்தைகளும் நாள் தோறும் நிகழ்பவைகள். ஜீவபோதம் படைத்துள்ள எல்லார்க்கும் இவை பொதுவானவைகள். ஜாக்கிரதா வஸ்தையில் அல்லது விழிப்பு நிலையில் ஜீவனுகிய நான் வேறு, ஜகத் வேறு, பரம்பொருள் வேறு. ஈண்டு முப் பொருளும் உண்மையே. இது துவைத நிலை. சாதனங் கள் புரிதற்கும் முன்னேற்றம் அடைதற்கும் துவைத நிலையே முற்றிலும் பயன்படுகிறது. சொப்பனுவஸ்தை அல்லது கனவு நிலையில் நான் காணும் உலகக் காட்சி களும் தெய்வக் காட்சிகளும் எனது மனே கற்பிதங் களாம். எனது மனே விகாரங்களே புறப்பொருள் களாகப் பொருள்படுத்தப்படுகின்றன. ஒரு பொருளா கிய மனது கனவில் பல பொருள்களாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது. இதுவே பேதாபேதம் அல்லது விசிஷ்டாத்வைத நிலை. கடைசியாகக் கனவற்ற உறக் கம் அல்லது சுஷுப்தியில் நான் இல்லை. என்னால் காணப்படுகிற புறப்பொருள்கள் இல்லை. வெறும் பிரக்ஞை அல்லது பிரக்ஞானம் மட்டும் தன்மயமாயிருக் கிறது. அது இரண்டு அற்றது; அத்வைதநிலை. இந்த மூன்று அவஸ்தைகளிலும் மனிதன் பண்பாடு அடைந்து வருகிருன். மூன்று அவஸ்தைகளுள் ஒன்றை உயர்த் தியும் மற்ருென்றைத் தாழ்த்தியும் பொருள்படுத்துவது ஒண்ணுது. இனி ஆத்ம சாதனங்கள் புரிகின்ற சாதகன் துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய

மூன்று பான்மைகளையும் சாதனத்துக்குப் பயன்படுத்தலாம். மேலும் மனதின் இம்மூன்று பான்மைகளையும் சரியாக அறிந்துகொண்டவனே நல்ல சாதகன் ஆகின்ருன். தமது மனநிலைகளுக்கு ஏற்ப, துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய மூன்று பெருநிலைகளிலும் மாணிக்கவாசகர் திளைத்திருக்கிருர். பாரமார்த்திகத்தில் தீவிரமாகச் சென்ற சான்ருேர் எல்லோருமே அப்படி இருந்திருக்கின்றனர்.

16. ஆறு சமயங்கள்

வேதாந்தம் ஒரு மதம் அன்று; ஒரு சமயம் அன்று. மதங்களுக்கெல்லாம் ஆதாரமாக இருந்து அவைகளுக்கு அங்கீகாரம் தருவது வேதாந்த தர்சனம். ஏதேனும் ஒரு மதம் வேதாந்தக் கோட்பாடுகளோடு முரண்படுமாகில், முரண்பாட்டுக்கு ஏற்றவாறு அம் மதம் தத்துவத்தினின்று பிசகியது என்று புறக்கணிக்கப்படும். மாற்றவோ திருத்தவோ முடியாத பாரமார்த்திகப் பேருண்மைகளின் தொகையே வேதாந்தம் எனப்படுகிறது. வேதாந்த தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள சமயங்கள் ஆறு இந்தியாவில் இருக்கின்றன. ஆகையால் இவைகள் வைதிக மதங்கள் எனப்படுகின்றன. வேத-வேதாந்தத்தைப் பிரமாணமாகக் கொண்டவைகள் இவைகள். சைவம், வைஷ்ணவம், சாக்தம், கணபதியம், கௌமாரம், சௌரம் என இந்த ஆறு சமயங்கள் பெயர்பெறுகின்றன. இவைகளின் தொகையே இக்காலத்தில் ஹிந்து மதம் என வழங்கி வருகின்றது.

பரம்பொருள் அகண்ட வஸ்து; ஆதலால் அது ஒன்றுக்கு மேற்பட்டில்லை. அந்த ஒரு பொருளுக்கு ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு சிறப்புப் பெயர் கொடுத்துள்ளது. சிவம், விஷ்ணு, அம்பிகை, கணபதி, கார்த்திகேயன், சூரியநாராயணன் என ஆறு பெயர்களை அப்பர

வஸ்துவுக்கு ஆறு சமயங்கள் தந்துள்ளன. பெயர்களை முன்னிட்டு வஸ்துக்கள் பல என்னும் மயக்கத்தை மனிதன் கொள்ளலாகாது. ஒவ்வொரு சமயமும் தன் தெய்வத்தைத் தனக்குகந்த முறையில் விளக்குகிறது. சிவம் அடிமுடிகாணாத அகண்ட வஸ்துவாகிறது. விஷ்ணு என்னும் சொல் எங்கும் வியாபகமானது என்று பொருள்படுகிறது. மஹாவிஷ்ணு அனைத்துக்கும் ஆதி மூலம்; அகண்டவஸ்து. இனி அம்பிகையோ தெய்வங்கள் அனைத்தையும் தன்னகத்து அடக்கியுள்ள ஆதி பராசக்தியாகிறாள். அவளும் அகண்டவஸ்து. சிவ சக்தியின் குமாரர்களாகிய கணபதியும் சுப்ரமண்யமும் தத்தம் முறையில் அகண்ட வஸ்துக்களாகிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே

एकं सत् विप्रा बहुधा वदन्ति ।

ஏகம் ஸத் விப்ரா பஹு⁴தா வதந்தி ।

என்று ரிக்வேதம் பகர்ந்திருக்கிறது. மெய்ப்பொருள் ஒன்று; அதற்குச் சான்றோர் பல பெயரிட்டு அழைக்கின்றனர் என்பது அந்த வேத வாக்கியத்தின் கருத்து ஆகும்.

உயிர்கள் அனைத்துக்கும் உடல் அமைப்பு ஒரே பாங்கில் இல்லை. உடல் வேறுபாட்டுக்கு ஏற்ப உணவு வேறுபாடு இருக்கிறது. ஓர் உடலுக்கு நல் உணவாவது மற்றோர் உடலுக்கு நஞ்சு ஆகலாம். மற்று எது உடலுக்குப் பொருந்திய உணவோ அது புஷ்டி தருகிறது. புஷ்டியைப் பெறுவது உணவு அருந்துவதன் நோக்கமாகும். இனி மக்களுக்கிடையில் மன வேறுபாடு உண்டு. ஆதலால் அந்த மனப்பான்மைக்கு உகந்த மதம் இருப்பது அவசியம். நாள் ஏற ஏற, உலகில் மதங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது. எத்தனை மனிதர்களோ அத்தனை மதங்கள் உள என்று மிக அண்மையில் வந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

பகர்ந்துள்ளார். இது ஒரு வேத வாக்கு. ஏனென்றால் மக்களுடைய மனப்பான்மையைப் பற்றிய மறுக்கமுடியாத உண்மையாகும் இது. சான்றோர்களுக்கிடையிலும் அச்சில் வார்த்தது போன்று கருத்து ஒரேவிதமாய் இருப்பதில்லை. உடல் வேற்றுமைக்கிடையில் மனிதன் உடலில் வளர்ச்சியடைகிறான். கருத்து வேற்றுமைக் கிடையில் மனிதன் கருத்தில் மேன்மையுறுகிறான். மத வேற்றுமைக்கிடையில் மனிதன் மத அனுஷ்டானத்தில் மேன்மையுறுகிறான். ஒவ்வொரு மரமும் அதற்குரிய கனியை உண்டுபண்ணுவது போன்று ஒவ்வொரு மதமும் சான்றோர்களை உருவாக்கியிருக்கிறது. தனக்கு ஒத்த ஏதேனும் ஒரு மதத்தின் வாயிலாக மனிதன் சான்றோன் ஆகவேண்டும். பின்பு மதாதீதத்தில் அவன் பரத்தை அடைதல் வேண்டும்.

மரம் ஒன்றினிடத்து உரிமை பாராட்டுகின்றவன் அதில் உள்ள கிளைகளிடத்திலும் சம உரிமை பாராட்டுகிறான். ஒரு கிளையில் நாட்டம் வைத்துக்கொண்டு மற்ற கிளைகளைப் புறக்கணிப்பது அம் மரத்தைப் பேணுதல் ஆகாது. வேதம் என்னும் மரத்தில் ஆறு சமயங்கள் கிளைத்திருக்கின்றன. பறவைகள் எந்தக் கிளையில் வந்து உட்கார்ந்தாலும் அவைகளைத் தாங்குவது அடிமரம். ஆறு சமயங்களுள் எதை ஒழுகினாலும் அது வைதிக சமயம். ஆறு தெய்வங்களுள் எதை வழுத்தினாலும் அது பரமனது வழிபாடு. திருவாசகத்தில் திருவண்டப் பகுதியில் 17, 18, 19 வரிகளில் "அறுவகைச் சமயத்து அறுவகையோர்க்கும் வீடுபேறாய் நின்ற....கிழவோன்" என்று மாணிக்கவாசகர் மொழிகிறார். இக்கூற்றுக்கு விளக்கமாக சிவன்தான் அறு சமயத்தவர்க்கும் முக்தி நல்குகிறான் என்று சொல்லுவது சமயவாதிகளின் குறுகிய பான்மையாகும். ஆறு சமயங்கள்தோறும் வேறு வேறாய் விளங்குபவன் ஒரே பரம்பொருள் எனக் காண்

பவர் மெய் காண்கின்ற தத்துவ தர்சிகளாகின்றனர். ஆறு சமயங்களுக்குரிய ஆறு தெய்வங்களும் உபாஸனு மூர்த்திகளே. படைப்புக் கடவுளாகிய நான்முகப் பிரம்மதேவன் உபாஸனுமூர்த்தியாகான். ஏனென்றுல் பிறவிப் பெருங்கடலில் உழல்வது ஜீவாத்மாவின் குறிக்கோள் அன்று. அதினின்று விலகி முக்தியாம் கரையேறுவது லட்சியம். ஆதலால்தான் பிரம்மதேவனுக்குப் பூவுலகில் கோயில் கட்டுவதில்லை; அவனை உபாஸிக்க வேண்டாமென்றும் ஆன்றோர் மக்களுக்குப் புகட்டி வருகின்றனர். பின்பு அம்பிகையும் அரனும் ஒன்றே என்பதை அர்த்தநாரீசுவர சொரூபம் விளக்குகிறது. ஹரியும் ஹரனும் ஒன்றே என்பதை ஹரிஹர மூர்த்தி விளக்குகிறது. சங்கரனும் நாராயணனும் ஒன்றே என்பதை சங்கரநாராயண வடிவம் விளக்குகிறது. பரபிரம்மத்துக்கு ஒரு மானுட வடிவம் கொடுத்தால் அந்த மூர்த்தியின் இரண்டு கண் போன்றவர்கள் சிவனும் விஷ்ணுவும். பரதகண்டத்தின் தென்பகுதியிலிருந்து வடசிகரம் ஹிமாலயம் வரையில் இக்கோட்பாட்டுக்குச் சான்றுகள் இருக்கின்றன. மதுரையில் சுந்தரேசுவரன், சுந்தரராஜன் என இருவரும் பெயர் பெறுகின்றனர். சிதம்பரத்தில் அவர்களுக்கு நடராஜன், கோவிந்தராஜன் என்னும் நாமங்கள் வந்துள்ளன. காசியிலும் பிருந்தாவனத்திலும் இவர்கள் விசுவநாதன், ஜகந்நாதன் என்று அழைக்கப்படுகின்றனர். ஹிமயமலையின் அடிவாரத்தில் இருக்கும் க்ஷேத்திரமானது ஹரத்வாரம், ஹரித்வாரம் எனப் பெயர் பெறுகிறது. ஹிமயமலையின் மேல் இவ் இரு மூர்த்திகளும் கேதாரநாதன், பதரிநாதன் என ஞானியர் காட்சியில் சம அந்தஸ்து பெறுகின்றனர். இனி சிவனுக்குரிய ஆயிரம் பெயர்களிலும் விஷ்ணுவுக்குரிய ஆயிரம் பெயர்களிலும் தத்துவ ஆராய்ச்சி பண்ணுமிடத்து விஷ்ணு ஸஹஸ்ரநாமங்கள் சிவ ஸஹஸ்ரநாமங்களைவிட மேலோங்கியிருக்கின்றன. ஆத

லால் ஆதிசங்கராசாரியர் விஷ்ணு ஸஹஸ்ரநாமங்களுக்கு முதலில் பாஷியம் எழுத முன்வந்தார். உண்மை இப்படியிருக்க, மாணிக்கவாசகர் மஹாவிஷ்ணுவை பிரம்மதேவனோடு ஒப்பிட்டுப் புறக்கணிப்பது முறையன்று. ஞானியர் உலகம் இச்செயலைச் சரியென்று ஏற்றுக்கொள்ளாது.

17. இரண்டு இதிஹாசங்கள்

வேதாந்த தத்துவங்களை நேராக அறிந்துகொள்ளும் திறமை வாய்க்கப் பெற்றவர் மேலோர். பல பிறவிகளில் பண்பாடு அடைந்தவர்களுக்கே அப்பேராற்றல் வாய்க்கிறது. அன்னவர்களின் எண்ணிக்கையோ மிகக் குறைவு. பின்பு சாமான்யமான பண்பாடு அடைந்துள்ள பொதுமக்களுக்கிடையிலும் வேதாந்த வாழ்க்கைத் தத்துவங்கள் பரவுவது முற்றிலும் அவசியம். ஆதலால் அச்சீரிய செயல் அவதார மூர்த்திகள் வாயிலாக நிகழ்கிறது. அவதார புருஷர்களை அறிந்துகொள்ளுமளவு ஆத்ம தத்துவம் அறிந்துகொள்ளப்படுகிறது. அப்பெருமக்களது செயல்கள் அறிந்துகொள்ளப்படுமளவு அறநெறிகள் அறிந்துகொள்ளப்படுகின்றன. பிறந்தது முதல் சரீரத்தை விட்டுப் பிரியும் வரையில் அவதார புருஷர்கள் புரிகின்ற செயல்களெல்லாம் தர்ம சாஸ்த்ரத்துக்கு விளக்கங்களாகின்றன. ஸ்ரீ ராமனும் ஸ்ரீ கிருஷ்ணனும் சீரிய அவதார மூர்த்திகளாகிறார்கள். முந்தியவனது வாழ்க்கையை நடுநாயகமாகக்கொண்டது இராமாயணம் என்னும் இதிகாசம். பிந்தியவனது வாழ்க்கையை நடுநாயகமாகக் கொண்டது மகாபாரதம் என்னும் இதிகாசம். மேலும் ஒரு அவதார மூர்த்தியின் வாழ்க்கையைச் சரியாக எடுத்து விளக்குதற்கு அதே காலத்தில் ஒரு மகரிஷியும் தெய்வாதீனமாக வந்தமைகிறார். இராமாயணத்தை ஆதிகாவியமாக இயற்றியவர் வால்மீகி மகரிஷி. மகாபாரதத்தை அமைத்தவர் வியாச மகரிஷி.

ஸ்ரீ ராமன் பரமாத்ம தத்துவம்; சீதாபிராட்டி பரமாத்மனுக்குரிய ஜீவாத்ம தத்துவம். இலங்கை வேந்தனாகிய இராவணன் ரஜோகுணம் நிறைந்த மனோதத்துவத்தின் அவதாரம். ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து ஆகிய பத்துத் தலைகளாகக்கொண்டுள்ளது மனது. அந்தப்பொல்லாத மனது என்னும் அரக்கன் ஜீவாத்மன் என்னும் சீதையைச் சிறைபிடித்து வைத்துத் தனக்குரியதாக்க முயலுகிறது. ஜீவாத்மனோ பரமாத்மனிடம் போய்ச்சேரவேண்டுமென்று அருள்தாகம் எடுத்து அழுகிறது. ஆஞ்ஜனேயன் என்னும் அனுமன் குருதத்துவம். ஜீவாத்மனைப் பரமாத்மனோடு சேர்த்து வைக்கிறேன் என்று ஆஞ்ஜனேயன் என்னும் குரு வந்து ஆறுதல் சொல்லுகிறான். பின்பு இராமன் என்னும் ஈசனுடைய அருளுக்கும், இராவணன் என்னும் மனதினுடைய மருளுக்கும் இடையில் போராட்டம் வருகிறது. இராவண சம்மாரம் என்னும் மனோநாசம் நிகழ்கிறது. சீதை என்னும் ஜீவாத்மன் இராமன் என்னும் பரமாத்மனோடு சேருகிறது. ஆத்மசாதகன் ஒவ்வொருவனுடைய வாழ்விலும் இங்ஙனம் இராமாயணம் நிகழ்ந்தாகவேண்டும். மற்ற பாத்ரங்கள் வாழ்வில் உள்ள வெவ்வேறு கூறுபாடுகளை விளக்குகின்றன.

மகாபாரதமும் மனிதனுடைய வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குகிறது. மனிதனது பிரபஞ்ச வாழ்வே ஒரு போராட்டம். மனிதனுடைய உடல் குருக்ஷேத்ர பூமி. மனிதனிடத்து உள்ள நல்லியல்புகள் பாண்டவர் போன்று மிகச் சில; கெட்ட இயல்புகளோ கௌரவர்கள் போன்று பல. இரண்டுவித இயல்புகளும் மனிதனிடத்தே தோன்றியவைகளாதலால் அவைகள் தாயாதிகள். ஸ்ரீ கிருஷ்ணன் என்னும் பரமாத்மா எல்லார் உள்ளத்திலும் ஸாரதியாய் வீற்றிருக்கிறார். அவர் ஆயுதம் எடுத்துப் போர்புரிவதில்லை. ஆனால் அவருடைய அருள்

நல்லார்க்கே உரியதாகிறது. தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையில் உள்ள போராட்டத்தில் தர்மம் இறுதியில் வெல்லுகிறது. மனிதன் தர்மவானுயிருந்து, அதர்மத்தை வென்று பிறகு பரமனை அடையவேண்டும்.

வாழ்க்கையில் சிக்கலான பிரச்னைகளெல்லாம் இவ் இரண்டு இதிஹாசங்களின் வாயிலாக விளக்கம் பெறுகின்றன.

18. பதினெட்டுப் புராணங்கள்

புராணம் என்னும் சொல் பழையது எனப்பொருள் படுகிறது. ஆனல் அந்த நூல்களே பழையவைகளல்ல; அவைகளில் அடங்கியிருக்கும் விஷயங்கள் பழையவைகளாம். ஆயினும் கேட்கக் கேட்க அவைகள் புதியவைகள் போன்று புலப்படும். புராணங்களை வாசிப்பதற்கோ கேட்பதற்கோ அதிகாரி பேதமில்லை. பாலர் முதல் விருத்தர் வரையில் யார் வேண்டுமானலும் புராணம் கேட்கலாம். பண்டிதர், பாமரர் ஆகிய அனைவர்க்கும் அது பொதுவானது. அறிவுத்துறையில் பல படித்தரங்களில் இருக்கிற இந்திய மக்கள் அனைவரும் ஏகதேசம் கடவுளைப்பற்றிய ஞானம், அறநெறியைப்பற்றிய ஞானம், ஜீவாத்மனைப்பற்றிய ஞானம், ஜீவாத்மாவின் பிறவியைப் பற்றிய ஞானம், கர்மகதியைப்பற்றிய ஞானம் ஆகியவைகளை அடையப்பெற்றிருக்கின்றனர். புராணத்தின் போதனுமுறையே இவைகளுக்கெல்லாம் காரணமாகும். தாய்ப் பறவையானது இரைதேடி யருந்தி அதை ஒருவாறு ஜீரணம் செய்த பிறகு தன் குஞ்சின் வாயில் அதைச் செலுத்துகிறது. அதனல் குஞ்சுக்கு அதை ஏற்றுச் செமிக்க சுலபமாயிருக்கிறது. தாய்ப் பறவை தன் வயிற்றில் பக்குவப்படுத்திய உணவுக்கு ஒப்பானவை புராணக் கதைகள். கேட்போரது செவிக்கு வசீகரமான உணவு ஆவது புராணம். அது தெவிட்டுவதில்லை. உடலில் தாய்ப்பால் பற்றுவது

போன்று எளிதாகத் தத்துவ ஞானம் உள்ளத்தில் பதிகிறது. வயது வரவரத் தத்துவ விசாரம் பண்ணும் அறிவுத் திறமை தானாக வருகிறது. புராணத்தின் பிரயோஜனம் இதுவாம். இதை வகுத்தவர்கள் மகா மேதைகள்.

நைமிஸாரண்யத்தில் ஸூதர் சொன்ன கதைகளை வியாசர் புராணங்களாகத் தொகுத்தார் என்பது ஐதிகம். கதை சொல்லுபவன் ஸூதன் எனப்படுகிறான். வியாசரால் தொகுக்கப்பட்ட புராணங்கள் பதினெட்டு இருக்கின்றன. அவைகள் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுக்கு உரியவைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுள் ஸத்வகுண புராணங்கள் விஷ்ணுவை சிலாகிக்கின்றன. அப்புராணங்களாவன:— விஷ்ணு புராணம், பாகவதம், நாரதீய புராணம், கருட புராணம், பத்ம புராணம், வராஹ புராணம். ரஜோ குண புராணங்கள் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்ம தேவனைப் போற்றுகின்றன. அவைகள் வருமாறு:— பிரம்ம புராணம், பிரமாண்ட புராணம், பிரம்ம வைவர்த்த புராணம், பவிஷ்ய புராணம், வாமன புராணம். தமோ குண புராணங்கள் சிவனைப் புகழ்கின்றன. அவையாவன:– சிவபுராணம், லிங்கபுராணம், ஸ்கந்தபுராணம், மார்க்கண்டேய புராணம், அக்னி புராணம், மத்ஸ்ய புராணம், கூர்மபுராணம். சிலர் அக்னி புராணத்துக்குப் பதிலாக வாயு புராணத்தை எடுத்துக்கொள்வதுண்டு. ஒவ்வொரு புராணமும் அதற்குரிய தெய்வத்தை உயர்த்திப் பேசுவதன் உத்தேசத்தை அறிஞர் அறிந்திருப்பது அவசியமாகிறது. குழந்தையொன்று தன் தாய்க்கு நிகரானவர் யாரும் உலகில் இல்லை என்று உணர்வது முறை. பின் வயது வரும்போது அந்த உணர்வு பின்னணிக்குப் போகிறது. அங்ஙனம் ஆத்ம சாதகன் ஒருவன் ஆரம்பதசையில் தான் உபாஸிக்கும் தெய்வமே

எல்லார்க்கும் மேலான தெய்வம் என்று கருதித் தனது பக்தியை வளர்க்கிருன். ஸாதனத்தில் அவன் மேலோங்கும்போது தெய்வம் ஒன்று, அதற்குப் பெயர்கள் பல என்னும் உண்மையை அறிகிருன்.

புராணம் பஞ்ச லக்ஷணம் என்பது கோட்பாடு. அதாவது ஐந்து இலக்ஷணங்கள் ஒரு புராணத்தில் அமைந்திருத்தல் வேண்டும். (1) ஸர்கம் அல்லது பிரபஞ்சத்தின் தோற்றம்; (2) விஸர்கம் அல்லது பிரளயத்தில் பிரபஞ்சத்தின் ஒடுக்கம்; (3) பிரஜாபதிகளின் தோற்றமும் ஒடுக்கமும்; (4) மன்வந்த்ரம் அல்லது வெவ்வேறு மனுக்களின் கால நிர்ணயம்; (5) வம்ஸம் அல்லது வெவ்வேறு வேந்தர்களின் பாரம்பரியம். கதைகளை வேண்டியவாறு பெருக்குதற்கு இவ்வைந்தும் முகாமைகளாகின்றன. ஆனல் புராணத்தின் முக்கிய நோக்கம் பாரமார்த்திக தத்துவங்களை மக்களின் பொதுவுடைமையாக்குதலாம். பூமியில் உள்ள மலைகள், நதிகள், நாடுகள், நகரங்கள், சமுத்திரங்கள் ஆகியவைகளைப் புராணங்கள் வர்ணிப்பது பூகோள சாஸ்திரத்துக்கு ஒத்திருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கலாகாது. மனதில் மேலான எண்ணங்களைக் கற்பனை பண்ணுதற்கே புராணக் கதைகள் அமைக்கப்பட்டுள்ளன. பாற்கடல், பாகுக்கடல், தேன்கடல், அமிர்தக் கடல் போன்றவைகள் இயற்கையில் இல்லை. ஆனல் அவைகள் வாயிலாக வாழ்வு எல்லையற்றது, இன்பசொரூபமானது என்று கற்பிக்கப்படுகிறது. வேந்தர்கள் வரலாற்றில் பராக்கிரமத்துக்குரிய பகுதிகள் வேண்டுமென்றே மிகைபடுத்தப்பட்டிருக்கின்றன. மேலான எண்ணங்களில் மானஸ உல்லாசத்துக்கு அவைகள் வேண்டியவாறு இடந்தருகின்றன. இனி புராணக் கதைகளெல்லாம் ஏதேதோ காலங்களில் சரித்திரபூர்வமாக நிகழ்ந்தவைகளென்று பொருள்படுத்தலாகாது. எக்காலத்திலுமுள்ள தத்து

வங்களுக்கு அக்கதைகள் அருமையான உருவகங்கள் ஆகின்றன. இம்முகவுரையின் இறுதியில் அத்தகைய புராணக் கதைகள் சில தத்துவ விளக்கத்தோடு தரப் பட்டுள்ளன.

19. ஜைன மதம்

ஜைன மதத்தை ஸ்தாபனம் செய்தவர்களுக்கும் அதை முறையாக வளர்த்தவர்களுக்கும் தீர்த்தங்கரர் கள் என்று பெயர். அவர்களின் எண்ணிக்கை இருபத்து நான்கு. அவர்களுள் ரிஷபர், அஜித நாதர், அரிஷ்ட நேமி ஆகிய மூவர் மிகப் பழமை வாய்ந்தவர்கள். அவர் களைப்பற்றி யஜுர்வேதம் மொழிவதே அப்பழமைக்குச் சான்று ஆகும். மஹாவீரர் என்று அழைக்கப்படும் வர்த்தமான தீர்த்தங்கரர் இருபத்து நான்காமவர் ஆகின்றார். ஜைன மதத்தின் கோட்பாடுகளை முறை வகுத்து வைத்தவர் இந்த மஹாவீரர். இவர் 2565 வருஷங்களுக்கு முன்பு அவதரித்தவர். ஆதலால் வய தில் இவர் புத்தருக்குச் சற்று மூத்தவர். ஜைன மதம் யாண்டும் வைதிக மதத்துக்குப் போட்டியாக வந்தது. அதற்கேற்ற காரணமும் உண்டு. கர்மகாண்டத்தை அடிப்படையாகக்கொண்டது வைதிக மதம்; அதை ஒழித்தல் வேண்டும் என்பது ஜைனமதம். யாகத்தில் உயிரைப் பலியிடுவது வைதிக மதம்; அஹிம்ஸையை அடிப்படையாகக்கொண்டது ஜைன மதம். பிராமண் யத்தையும் புரோஹிதக் கோட்பாட்டையும் வளர்ப்பது வைதிக மதம். க்ஷத்திரிய பரம்பரையையும் தர்மத்தை யும் வளர்ப்பது ஜைனமதம். தீர்த்தங்கரர்கள் இருபத்து நான்கு பேரும் க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவர்கள் என்று அம்மதம் பெருமை பாராட்டுகிறது. மக்கள் எல்லோரையும் சமதிருஷ்டியோடு பார்த்து அவர் களிடத்து தர்மத்தை வழங்குபவர்கள் தீர்த்தங்கரர்கள்.

ஆறு தர்சனங்களுள் நியாயம், வைசேஷிகம், சாங்க்யம், யோகம் ஆகிய நான்கு தர்சனங்களை ஜைனமதம் ஏற்றுக்கொள்கிறது. கர்மகாண்ட மயமாயுள்ள பூர்வ மீமாம்ஸத்தையும் ஈசுவரனைப்பற்றிய உத்தர மீமாம்ஸம் அல்லது வேதாந்தத்தையும் அது அங்கீகரிப்பதில்லை. அதாவது வேதத்தை அது முற்றும் நிராகரிக்கிறது. ஜைன மதப்படி பிரம்மம் என்னும் பரவஸ்துவுக்கு அவசியமில்லை. சாங்க்ய சாஸ்திரம் பகர்கிற பிரகிருதி, புருஷன் என்கிற இரண்டு தத்துவங்களே பிரபஞ்சத்துக்குப் போதிய விளக்கங்கள் ஆகின்றன. ஜீவாத்மனுக்குப் பிரகிருதியோடு கூடிய வாழ்க்கை ஹிம்ஸைக்கு ஏதுவாகிறது. அஹிம்ஸையில் ஜீவாத்மன் உறுதியாக நிலைநின்று பிரகிருதியினின்று முக்தியடையவேண்டும். அறம் அல்லது தர்மத்தை உறுதியாகக் கடைப்பிடிப்பது முற்றிலும் அவசியம். இறுதியாகத் தவத்தில் தீவிரமாகப் பிரவேசிக்குமளவு ஜீவாத்மன் முக்திக்கு அர்ஹதையுடையவனாகிறான். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய புருஷார்த்தங்கள் நான்கையும் ஜைன மதம் ஏற்றுக் கொள்கிறது. ஜீவாத்மன் கல், புல் நிலைகளினின்று பரிணமித்து மேல்நிலைக்கு வந்து, மானுடனாகிப் பிறகு முக்தியடைகிறான். இம்முறைகளை மட்டும் திருக்குறள் கையாளுவதால் அதை ஒரு ஜைனமத சாஸ்திரம் என்று சொல்லுவார் உளர்.

ஜைனமத அனுஷ்டானம் மூன்று முக்கியமான கோட்பாடுகளையுடையது. அவைகளுக்கு ரத்தினத்திரயம் அல்லது மும்மணிகள் என்று பெயர். ஸம்யக் தர்சனம், ஸம்யக் ஞானம், ஸம்யக் சரிதம் என அவைகள் அழைக்கப்படுகின்றன. தெளிந்ததும் திண்ணியதுமான மனப்பான்மை, தத்துவத்தை உள்ளபடி அறிதல், தூய வாழ்வு என்று அம்மும்மணிகள் பொருள்படுகின்றன. யோக சாஸ்திரம் புகட்டுகிற இயமத்துள் உள்ள பஞ்ச

சீலங்களை அல்லது ஐந்து ஒழுக்கங்களை ஜைனமதம் ஆழ்ந்து வற்புறுத்துகிறது. அவைகளுள் அஹிம்ஸைக்கு அம்மதம் ஆழ்ந்ததும் பரந்ததுமான விளக்கம் தருகிறது. அஹிம்ஸையில் நிலைபெறுவதற்கு ஏற்றவாறே ஆத்ம சாதகன் சாதனத்தில் மேலேறுகிறான். இல்வாழ்க்கையில் இருப்பவர்கள் விரைவில் துறவறம் புகவேண்டுமென்று ஜைனமதம் வற்புறுத்துகிறது. துறவறத்தில் ஸ்வேதாம்பரர்கள் என்றும் திகம்பரர்கள் என்றும் இரண்டு பிரிவினர்கள் இருக்கிறார்கள். முந்தையவர்கள் வெள்ளை வஸ்திரம் அணிந்தவர்களாகவும் பிந்தியவர்கள் நிர்வாணிகளாகவும் இருப்பார்கள்.

ஜீவாத்மன் சித் சொரூபம் என்பதும் ஆனந்த சொரூபம் என்பதும் ஜைனமதக் கொள்கை. பிரகிருதியாலாகிய தேகத்தில் ஜீவன் பொருந்தியிருப்பதால், ஜீவாத்மன் தனது நிஜசொரூபத்தை முற்றும் உணர்வதில்லை. தவத்தால் உடல் உணர்வை வெல்லுமளவு ஆத்மபோதம் மேலோங்குகிறது. உடலைப் பட்டினி போட்டும் துன்புறுத்தியும் ஆத்ம தியானம் பண்ணுமளவு சாதகன் விரைந்து மேல்நிலைக்குப் போகிறான். உடல் தளையினின்று முற்றும் விடுபடுவது மோக்ஷம். சுயப் பிரயத்தனத்தால் தபஸ்வி முக்த புருஷன் ஆகிறான்.

அறம் அல்லது தர்மம் எல்லா மதங்களுக்கும் பொதுவானதே. அதை ஜைனர்கள் அனுஷ்டிக்கும் முறைக்கு ஜீனதர்மம் என்று பெயர். தர்மம், ரத்தினத்திரயம், தபஸ் ஆகியவைகளைத் தீவிரமாக ஒழுகுதற்கு ஏற்ப மனிதன் கர்மத்தையும் சம்ஸார சொரூபமாயிருக்கிற பிரகிருதியையும் வெல்லுகிறான். அங்ஙனம் மேல்நிலையடைகின்றவர்களுக்கு அர்ஹதர்கள் என்று பெயர். தகுதி வாய்ந்தவர்கள் என்பது அதன் பொருள். பின்பு தகுதியோ ஐந்து படித்தரங்களில் வைத்துப் பகரப்பட்டிருக்கிறது. ஐந்து படித்தரங்களில் உள்ள பெருமக்கள்

ஐந்து வகையினர்க்கும் பஞ்ச பரமேஷ்டிகள் என்று பெயர். அவர்களது நிலைகளின் படித்தரங்கள் வருமாறு :—

ஸாது பரமேஷ்டி : இவர் பிரகிருதி ஸம்ஸாரத்தினின்று முற்றிலும் முக்தியடைந்தவர் அல்லர். ஆயினும் இவர் மக்களால் போற்றுதற்கு உரியவர் ஆகிறார். மதக்கோட்பாடுகளைப் பிறர்க்கெடுத்துப் புகட்டுதற்கு இவர்க்கு அதிகாரம் இல்லை. ஆனால் இவர் வாழ்கின்ற பெருவாழ்வு பிறர்க்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது.

உபாத்யாய பரமேஷ்டி : ஜீன தர்மத்தை இவர் மக்களுக்கிடையில் வேண்டியவாறு எடுத்துப் புகட்டலாம். ஆனால் சங்கங்கள் நிறுவுதற்கோ சமயதீக்ஷை பண்ணிவைப்பதற்கோ இவருக்கு அர்ஹதையில்லை.

ஆசாரிய பரமேஷ்டி : ஆசாரியர் ஒருவர்க்குப் புறப்பொருள் எதிலும் பற்றுதல் இருக்கலாகாது. உயிர்கள் அனைத்திடத்தும் இவர் அன்பும் கருணையும் வைத்திருத்தல் வேண்டும். ரத்தினத்திரயம் இவர்பால் நன்கு திகழ வேண்டும். காமக்குரோதாதிகளிடத்திருந்து இவர் முற்றிலும் விடுபட்டவர். அஹிம்ஸை, ஸத்தியம், அஸ்தேயம், பிரம்மசரியம், அபரிக்கிரஹம் ஆகிய பஞ்ச மகா விரதங்களை இவர் தீவிரமாக அனுஷ்டிப்பவர். தற்பெருமை, கீர்த்தி ஆகியவைகளை இவர் அறவே துறந்தவர். தத்துவ ஞானத்தில் இவர் தேர்ந்தவர். சமய தீக்ஷை செய்துவைக்கும் தகுதி இவருக்குண்டு. மோக்ஷ மார்க்கத்தைக் காட்ட வல்லவர் இவர்.

அர்ஹத் தீர்த்தங்கர பரமேஷ்டி : பரிபூரண மோக்ஷ சாம்ராஜ்யத்தின் வாயிலுக்கு வந்துள்ளவர் இவர். ஆனால் உலக நன்மைக்காகவென்று இவர் வேண்டுமென்றே முக்தியடைவதைச் சற்று நிறுத்தி வைத்திருக்கிறார். தீர்த்தங்கர அர்ஹத ஸ்தானத்தை இவர் வகித்து

வருகிறார். வைதிக வைஷ்ணவ மதம் புகட்டுகிற அவதார புருஷருக்கு இவர் நிகரானவர். ஜைன ஆகமங்களை அந்தந்த யுகங்களுக்கு ஏற்றவாறு இவர் நிறுவுகின்றார். முக்தி மார்க்கத்தை இவர் மக்களுக்குத் தெளிவுபடுத்துகிறார். யோக சாஸ்திரத்துக்கும் தவநெறிக்கும் இந்த மூர்த்தியின் புனித வாழ்வு விளக்கம் தருகிறது. கர்மத்தை முற்றிலும் வென்று நிறைஞான சொரூபமாக இவர் இலங்குகின்றார். உடலை ஒட்டிய தேவைகளும் ஆசைகளும் இவர்பால் காணப்படமாட்டா. தமது தூய ஸ்வரூபத்தில் நிலைபெற்றவர் இவர். நிழல்போன்று இவரைச் சார்ந்திருக்கும் உடலின் குறைபாடு எதுவும் இவரது நிஜசொரூபத்தை அணுகுவதில்லை. அகண்ட ஞானமும், ஆற்றலும், ஆனந்தமும் வாய்க்கப்பெற்றவர் இவர். ஜீவகோடிகளிடத்து இவர் அன்பும் கருணையும் வடிவெடுத்திருந்து தர்மத்தைப் புகட்டுகிறார். ஒன்றையொன்று தாக்குகிற உயிர்கள் தம்மாட்டுள்ள வெறுப்புக்களை இவர் முன்னிலையில் மறந்துவிட்டுப் பரஸ்பர அன்பு பூணுகின்றன. ஸர்வக்ஞன், ஸர்வேசுவரன், ஸர்வஹிதன், மஹாதேவன், மஹாவிஷ்ணு, அர்ஹதேவன் இப்படி ஆயிரத்தெட்டுத் திருநாமங்கள் இவருக்கு அமைந்திருக்கின்றன.

ஸித்த பரமேஷ்டின்: பரிபூரணத்தின் உச்சத்தை எட்டியவர் இவர். மாயப் பிரபஞ்சத்தை இவர் ஒதுக்கித் தள்ளியவர்; கர்மத்துக்கெல்லாம் அதீதத்தில் போனவர். பரமாத்மன் என்றும் ஜீனன் என்றும் இவர் அழைக்கப் பெறுகிறார். இந்த ஆத்மாவை மலினப்படுத்துதற்கு வேறு ஒன்றும் இல்லாததால் இவர் சுத்த ஆத்மா. எல்லை மருவா அறிவு சொரூபி, ஆனந்த சொரூபி. முடிவான பரிபூரண நிலையை அடையப் பெற்றவர் இவர். பிறவிப் பெருங்கடலைத் தாண்ட முயலுபவர்க்கு இவர் எடுத்துக்காட்டு ஆகிறார். இவரைக் குறித்து ஜைன

ஆத்மசாதகன் செய்கிற பிரார்த்தனையாவது:— "முக்தி மார்க்கத்துக்கு வழிகாட்டியா யிருப்பவர் ஸித்த பரமேஷ்டி. மலை மலையாயிருந்த தமது கர்மங்களை ஒழித்தவர் அவர். தத்துவ ஞானியாகிய அவர் அடைந்துள்ள ஜீன நிலையை யடைய நான் அவரை வழுத்துகிறேன்."

20. புத்த மதம்

இன்று புத்த மதம் அல்லது பௌத்த மதம் என வழங்கி வருவது சுமார் 2500 வருஷங்களுக்கு முன்பு கௌதம புத்தரால் துவக்கப் பெற்ற பேரியக்கமாம். அன்று அந்த இயக்கம் தர்ம பதம் என்னும் பெயர் பெற்றிருந்தது. வைதிக மதத்தில் உள்ள கர்ம காண்டத்தை புத்த மதம் அறவே நிராகரிக்கிறது. யாகத்தில் உயிர் பலியிடுவதை விலக்கி வைத்த பெருமை அதனுடையதாம். வேதத்தில் உள்ள ஞானகாண்டத்தைப் பற்றிப் புத்தமதம் உதாசீனமாயிருக்கிறது. ஆனால் அது தன் போக்கில் ஞானமார்க்கத்திலும் பக்தி மார்க்கத்திலும் முன்னேற்ற மடைந்திருக்கிறது. பதஞ்சலி முனிவர் இயற்றிய யோகசாஸ்திரத்தைப் புத்த மதம் ஏற்றுக் கொள்கிறது.

புத்த மதம் ஆஸ்திக மதமுமன்று, நாஸ்திக மதமுமன்று. பரம்பொருள் ஒன்று இருக்கிறது என்றோ, இல்லை யென்றோ அது விவாதிப்பதில்லை. பரத்தைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது; தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமும் இல்லை என்கிறது புத்த மதம். ஆதலால் அது அக்ஞேய மதம் (Agnosticism).

ஜீவ தத்துவத்தையும் ஜகத் தத்துவத்தையும் புத்த மதம் ஆழ்ந்து ஆராய்கிறது. பிரபஞ்ச வாழ்வு துக்க மயம் என்பது அதன் கோட்பாடு. இக்கோட்பாடு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. (1) துக்கம்; (2) துக்கஸமுதயம்; (3) துக்கநிரோதம்; (4) துக்க

நிரோதகாமினீ அல்லது துக்கத்தை நீக்குவதற்கான உபாயம்.

காமம் அல்லது ஆசையே பிரபஞ்ச வாழ்க்கையைப் பலகோடி பிறவிகளாக வளர்ப்பதற்குக் காரணமாகிறது. விறகு போடுமளவு தீ வளர்கிறது. அங்ஙனம் ஆசையை நிறைவேற்றுமளவு அது வளர்கிறது. ஆசையை ஒழிப்பதே பிறவியை ஒழிப்பதற்கு உற்ற உபாயம். ஆசை அறவே அழியுங்கால் ஜீவவியக்தி அழிகிறது. மனிதன் தன்னைத்தானே சிருஷ்டித்துக்கொண்டான். தன்னைத் தானே மனமுவந்து கலைத்துவிடுவது நிர்வாணம் அல்லது முடிந்த முடிவு.

"தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதி வகையும்; யாமார், எமதார், பாசமார், என்ன மாயம்?" என்று யாத்திரைப் பத்தில் மாணிக்கவாசகர் பகர்வது புத்தமதக் கோட்பாடுகளில் ஒன்றாகும்.

"யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்" என்று திருச்சதகம் ஆனந்த பரவசத்தில் பகரப் பெற்றுள்ளது புத்த மதத்தின் அடிப்படைக் கோட்பாடு ஆகும்.

"ஊன்கெட்டு, உயிர்கெட்டு, உணர்வுகெட்டு என் உள்ளமும் போய், நான்கெட்டவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ?" என்னும் திருவாசகக் கூற்று புத்த மதம் புகட்டுகிற முடிந்த முடிவு ஆகிய நிர்வாணத்துக்கு நல்லதொரு விளக்கமாகும்.

உப்புப் பொம்மை கடலில் கரைவது போன்று, நிர்விகற்ப சமாதியில் ஜீவ வியக்தி நிரந்தரமாக அழிகிறது. அகண்ட சச்சிதானந்தம் எஞ்சியிருக்கிறது. இது அத்வைத வேதாந்தம்.

ஆசை அழிந்துபோனவிடத்து ஜீவ வியக்தி அழி கிறது. அது நிர்வாணம். பிறகு என்ன எஞ்சியிருக் கிறது என்று ஆராய்தற்கு ஆள் இல்லை. இது புத்தமதம்.

இந்த இரண்டு கோட்பாடுகளுக்கும் இடையில் உள்ள கருத்து ஒற்றுமை சிந்தனைக்கு உரியதாகும்.

புத்த மதம் நாளடைவில் ஹீனயானம், மஹாயானம் என இரண்டு பிரிவுகளாக வடிவெடுத்தது. ஹீனயானம் என்பது எளிய முறை எனவும், மட்டமானமுறை என வும் பொருள்படுகிறது. பிக்ஷு ஒருவன் உலகத்தைப் பொருள்படுத்தாது, அதினின்று விலகியிருந்து, கடின மான நெறிகளைக் கையாண்டு, ஜீவபோதத்தைக் களைத்து நிர்வாணமடைவது இதன் நோக்கமாகும். பின்பு மஹாயானம் என்பது சிறப்பு முறை என்று பொருள் படுகிறது. பிற உயிர்களின் நலத்தில் ஈடுபட்டுத் 'தான் தனது' என்பனவற்றைத் துடைப்பது இதன் நோக்க மாகும். விரிவான வழிபாட்டு முறைகள், கிரியா விசே ஷங்கள், விழாக்கள், ஆராதனை முறைகள், பலப்பல உபசாரங்களோடு கூடிய பூஜை முறைகள், மந்த்ரம், தந்த்ரம், யந்த்ரம் ஆகியவைகளின் விஸ்தரிப்பு, முத்திரை கள், சின்னங்கள் ஆகியவைகள் ஆராதனையில் இடம் பெறுதல் ஆகிய இத்தனையும் அடங்கப்பெற்றது மஹா யானம். பாமரர்க்கிடையில் புத்தமதம் பரவியதற்கு இந்தச் சிறப்புமுறை முகாமையாகும். நாளடைவில் இத்தகைய புத்த மதம் வழிபாட்டில் மேன்மையுற்று வைதிகமதமாக மாறலாயிற்று.

பொருளற்ற ஜீவ வியக்தியை ஆராய்ந்து பார்த்து அதைத் துடைத்துவிடுவது தீவிர அதிகாரிகளுக்குப் புத்த மதம் புகட்டும் போதனையாகும். மந்த அதிகாரி களுக்கு அது பஞ்சசீலத்தையும் நான்கு நலன்களையும் புகட்டுகிறது. அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரம்ம சரியம், அபரிக்கிரஹம் ஆகியவை பஞ்ச சீலங்களாகின்

றன. நல்ல இயல்பு, நல்ல அறிவு, நல்ல இணக்கம், நல்ல வாழ்வு என்பன நான்கு நலன்களாகின்றன.

21. புராணக் கதைகள்

பரவஸ்து நிர்க்குண பிரம்மமாகவும் சகுண பிரம்மமாகவும் இருக்கிறது. சகுண பிரம்மம் ஈச்வரன் எனவும் அழைக்கப்படுகிறுன். மாயையை ஆளுகிற அவன் பஞ்ச கிருத்தியங்கள் புரிகிருன். அவைகள் முறையே சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம் (மறைத்தல்) அனுக்கிரஹம் (அருளல்) எனப்படுகின்றன. இக்கிருத்தியங்கள் புரிவதை முன்னிட்டு அதே ஈச்வரன் பஞ்ச மூர்த்திகளாகப் பாவிக்கப்படுகிருன். பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், ஈசானன், சதாசிவம் என்று அந்த ஐந்து மூர்த்திகள் அழைக்கப்படுகின்றனர். இவர்களுள் சிருஷ்டிக் கர்த்தாவாகிய பிரம்மாவின் இயல்பு அலாதியானது. ஜீவாத்மா ஒருவன் பெறுகிற சித்திகளுள் பிரகிருதி லயம் என்பது எல்லாவற்றிலும் மேலானது. ஒரு கல்பாந்தரத்தில் பிரகிருதி லயம் பெற்றுள்ள ஜீவன் அடுத்த கல்பத் துவக்கத்தில் பிரம்மாவாக வருகிருன். பின்பு தனது கல்பம் அல்லது அளப்பரிய ஆயுள் முடிவுறும்போது அவனுக்குக் கிரம முக்தி வாய்க்கிறது. இங்ஙனம் பிரம்மாவுக்குப் பிறகு பிரம்மா வருவது ஈசனது சாசுவத சிருஷ்டிக் கிரமம். இக்காரணத்தை முன்னிட்டே பிரம்மதேவனை உபாஸனு மூர்த்தியாக ஆத்ம சாதகர்கள் எடுத்துக்கொள்வதில்லை. பின்பு நாராயணனும் சங்கரனும் ஒன்றே. சமயவாதிகள் அவர்களைப் பிரித்து வைப்பதும் அவர்களுக்கிடையில் உயர்வு தாழ்வு காண முயலுவதும் தத்துவத்துக்கு ஒவ்வா.

1. அடி முடி தேடுதல்

தமது சிருஷ்டியைக் கண்டு களிக்க ஒருதடவை பிரம்மதேவன் திக்விஜயம் செய்தார். அளப்பரிய அண்டங்களின் பலப்பல பகுதிகளுக்குப் புறப்பட்டுப்போனர்.

ஆங்காங்கு இருந்த பிரஜாபதிகளும் பிரஜைகளும் அவரை பக்தி பூர்வமாக வரவேற்றுப் போற்றி வணங்கினர். ஆனால் ஒரே ஒரு மூர்த்திமட்டும் அவரை அர்ச்சிக்காது யோக நித்திரையில் சயனித்திருந்தது அயனுக்கு அதிசயமாகத் தென்பட்டது. படுத்திருந்தவனைத் தட்டியெழுப்பி, நீ யார் என்று கேட்டார். "மகனே, நான் உனக்கு ஆதி மூலம், மகாவிஷ்ணு" என்ற விடை வந்தது. இதில் அபிப்பிராய வித்தியாசம் உண்டாயிற்று. அவ் இருவருள் யார் பெரியவர் என்ற சண்டை மூண்டு அது வலுத்தது. அப்பொழுது இருவருக்குமிடையில் அழல் பிழம்பு ஒன்று தென்பட்டு அது மேலும் கீழும் ஊடுருவி நின்றது. தங்களுக்கு மூன்றாவது வஸ்துவாகிய இது யாது என்ற வினா அவர்களுக்கிடையில் எழலாயிற்று. முடியைக் காண பிரம்மதேவன் அன்னப்பறவை வடிவெடுத்து மேலே பறந்து போனார். அடியைக் காண ஹரியானவர் பன்றி வடிவெடுத்து பூமியைக் குடைந்து கொண்டு கீழே போனார். எவ்வளவுதான் முயன்றும் இருவரால் அந்த அக்கினிப் பிழம்பின் அடி முடி காண இயலவில்லை. அளப்பரிய அந்த வஸ்து யாதோ என்று அவர்கள் அதனிடத்தே விண்ணப்பித்தனர். அப்படிக் காட்சிகொடுத்த சிவனாரும் தமது அகண்டாகார தேஜோமய சொரூபத்தை விளக்கி அயன் மாலின் ஆணவத்தைத் துடைத்தருளினர்.

பரதத்துவம் ஒன்றை விளக்குதற்கு அமைந்தது இக்கதை. அதாவது அலையாக வடிவெடுத்திருக்கிற நீர்ப்பகுதி கடல் முழுதையும் காணமாட்டாது. எல்லைக்கு உட்பட்ட பொருள் ஒன்று எல்லை கடந்ததை அளக்க மாட்டாது. கண்டம் அல்லது துண்டிக்கப்பட்ட வஸ்துவுக்கு அகண்ட வஸ்துவை அளக்க இயலாது. மும்மூர்த்திகள் தங்களது கிருத்தியங்களுக்காக ஜீவபோதம் எடுத்துக்கொண்டவர்கள். அப்படி ஜீவபோதத்தில்

இருப்பவர்கள் மும்மூர்த்திகளேயானாலும் அவர்கள் பரவஸ்துவை முழுதும் அறியவல்லார் அல்லர். இது தத்துவம்.

அகண்டாகாரமாகிய சிவம் மூவர்க்கும் முழுமுதலா யிருக்கிருன் என்றும், மூவரால் அறியப்படாதவன் என்றும் ஏழு தடவை திருவாசகத்தில் சொல்லப்பட்டிருக் கிறது. இக்கூற்று தத்துவத்துக்கு ஒத்தது.

இனி முக்கோணம் ஒன்றுக்கு மூன்று கோணங்களும் இன்றியமையாதவைகள். அங்ஙனம் இயற்கையின் நடை முறை ஒவ்வொன்றிலும் படைத்தல், காத்தல், அழித் தல் ஆகிய மூன்று செயல்களும் சேர்ந்தே அமைந்திருக் கின்றன. ஆதலால் மும்மூர்த்திகளும் ஸம அந்தஸ்துப் பெறுகின்றனர். அது இயற்கையின் நியதி. ஆனல் மாணிக்கவாசகர் அயனையும் அரியையும் செருக்குற்ற சிறு தெய்வங்களாக வகைப்படுத்துகிருர். சூரிக்குரு விக்குக் கடவுள் கிருபைசெய்தார்; அரக்கி மண்டோ தரிக்கு அனுக்கிரகம் செய்தார். ஆனல் தற்பெருமை பூண்டிருந்த திருமாலும் படைப்புத் தெய்வமும் பரம னுடைய அருளுக்குப் பாத்திரமாகாது என்றென்றும் தவித்துக்கொண்டிருக்கின்றனர் என்னும் கருத்தைத் திருவாசகத்தில் அடுத்து அடுத்து அவர் அறுபத்தொன் பது தடவை இயம்பியுள்ளார். தத்துவத்துக்கு ஒவ் வாத இக்கருத்து சமயப் பிணக்கை வளர்க்கும்; சான் ஞேர்க்கு இது ஏற்புடையதாகாது.

2. பால் கடல் கடைதல்

ஈசன் படைப்பில் தேவர் அஸுரர், அதாவது நல் லார் பொல்லார் ஆகிய இருதரத்தாரும் இடம் பெற்றி ருக்கின்றனர். இவர்களுக்கிடையே ஒற்றுமை கிடை யாது. இடையிடையே சண்டை நேர்வதுண்டு. பால் கடலைக் கடைந்து அமிர்தம் பெறுதற்கு இருதரத்தாரும்

ஒன்று கூடினர். மேருமலையை மத்தாகக்கொண்டனர். வாசுகி என்னும் ஸர்ப்பம் கயிருக உதவியது. கடலைக் கடைந்ததின் விளைவாக லக்ஷ்மிதேவி (செல்வம்), சரஸ்வதி (கல்வி), கௌஸ்துபம் (ஆபரணம்), ஐராவதம் என்னும் வெள்ளை யானை (மூட்டை சுமக்கும் வாகனம்), உச்சைஸ்ரவசம் என்னும் குதிரை (விரைந்து செல்லும் வாகனம்), கற்பக விருக்ஷம் (விரும்பியதை யெல்லாம் வழங்கவல்லது), காமதேனு (நாடியதையெல்லாம் நல்க வல்லது) ஆகிய இத்தனைவித சம்பத்துக்கள் வருவன வாயின. கடல் கடைந்தவர்கள் தத்தம் தரத்துக்கு ஏற்ப அவைகளை ஏற்றுப் பயன் படுத்தினர். கடைசியாக ஹாலால விஷம் (மரணம்) வந்தது. தேவர்களும் அசுரர்களும் மூவுலகங்களுக்கு ஓட்டம்பிடித்தனர். விஷமோ அவர்களை விடவில்லை. கடைசியாக அவர்கள் சிவனுரிடம் சென்று சரண்புகுந்தனர். பெம்மானும் பாம்பின் விஷத்தைத் தாமே ஏற்று உண்டு உயிர்களை உய்வித்தார்.

இது அன்று ஒருநால் நிகழ்ந்த நிகழ்ச்சியன்று. அன்றும் இன்றும் என்றும் நிகழ்ந்துவருகிற வாழ்க்கை நிகழ்ச்சியாகும் இது. உயிர்கள் அனைவரும் வாழ்வு என்னும் பால்கடலைக் கடைகிருர்கள். அவர்களுக்குச் செல்வம், கல்வி, வண்டி, வாகனம், ஆடை, ஆபரணம் முதலியன வாய்க்கின்றன. மரணத்தை ஒத்திவைப்பது அமிர்தபானமாகும். உணவின் வாயிலாகச் சாவு தள்ளிவைக்கப்படுகிறது எனினும் அவ்விஷம் உயிர்கள் அனைத்தையும் காலக்கிரமத்தில் எடுத்து விழுங்குகிறது. ஆனல் சிவஞானத்தை அனுபூதியில் பெற்றுச் சிவனை அடைகிறவர்களுக்கோ மரணமில்லை.

சிவனுர் தியாகராஜனுகப் போற்றப் பெறுகிருர். அதற்கு விளக்கம் இச்சம்பவத்தில் கிடைக்கிறது. வாழ்வு என்னும் பால் கடலைக் கடைந்து உலகத்தவர் பலப்பல இன்பங்களைப் பெறுகின்றனர். சிவனுர் அதில்

பங்கு கொள்கிறதில்லை. உலகம் நல்குகிற இன்பத்தை நாடாதிருப்பது அவரது தியாகம். பின்பு தியாகத்தின் உச்சநிலையை அவரது செயற்கரிய செயலில் காண்கிறோம். உலகத்தவரை உய்வித்தல் பொருட்டு அவர்கள் உண்டுபண்ணிய விஷத்தைத் தாம் அருந்தினர். விஷத்தில் வரும் துன்பத்தைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். உலக நன்மைக்காகப் பாடுபடுவதால் வருகிற துன்பத்தை அமைதியாக ஏற்றுக்கொள்பவனே தியாகி. இது துறவுக்கு முடிந்த விளக்கமாகிறது.

இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை வெளியாகிறது. வாழ்க்கையின் விளைவாக உயிர்கள் பஞ்சேந்திரியங்கள் வாயிலாக விஷத்தை விளைவித்துக் கொண்டே இருக்கின்றன. பஞ்சபூதமாயிருக்கின்ற சிவனார் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்கு பூதங்கள் வடிவில் இருந்து அந்த விஷத்தை அமிர்தமாக மாற்றியருளிய வண்ணமாயிருக்கிறார். எனவே உயிர்கள் நலத்துக்காக நஞ்சுண்ணுதல் அவரது ஓய்வு ஒழிவு இல்லாத செயலாகிறது.

3. திரிபுரதகனம்

வித்யுத்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்ற மூன்று அஸுரர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு முறையே பொன்னாலும், வெள்ளியினாலும், இரும்பினாலும் அமைக்கப்பெற்ற மூன்று கோட்டைகள் இருந்தன. அவர்கள் விரும்பிய இடங்களுக்கெல்லாம் பறந்து செல்லும் திறமை அந்த மூன்று கோட்டைகளுக்கு இருந்தது. ஆதலால் அவர்கள் வெவ்வேறு இடங்களில் இருந்த தேவர்களையெல்லாம் சென்று தாக்கித் துன்புறுத்தி வந்தனர். அந்த அரக்கர்களது கொடுமையைச் சகிக்க முடியாத தேவர்கள் மகாதேவனிடம் போய் முறையிட்டனர். அவரும் அந்த மூன்று புரங்களையும் அழித்துத் தள்ளத் திருவுளம் கொண்டார். திரிபுர தகனத்துக்

காகச் சிவனார் ஊர்ந்து செல்லுதற்குத் தேவர்கள் எல்லாம் கூடி ரதம் ஒன்றை நிர்மாணித்தார்கள். இயற்கையில் உள்ள பொருள்களையெல்லாம் அவர்கள் அதில் பொருத்தி வைத்தார்கள். தேவர்கள் எல்லாரும் வெவ்வேறு உறுப்புக்களாக அத்தேரில் அமைந்திருந்தார்கள். பிரம்மதேவன் அதற்குச் சாரதியாக இருந்தார். வேதங்களைக் குதிரைகளாக அதற்குப் பூட்டினர். சங்கரமகாதேவன் அதில் ஊர்ந்து செல்லுகையில் ஒவ்வொரு தேவனும் ரதத்தில் தான் வகித்த ஸ்தானத்தின் சிறப்பைக் குறித்துத் தற்பெருமை கொண்டான். ஆனால் போர் புரிதற்கு அந்த ரதத்தையோ, தாம் கையில் ஏந்தியிருந்த வில்லையும் அம்பையுமோ பயன்படுத்த வேண்டிய அவசியம் சிவபெருமானுக்கு உண்டாகவில்லை. அவர் முப்புரங்களைப் பார்த்தார்; புன்னகை பூண்டார்; முப்புரங்கள் வெந்து மறைந்தன!

மூன்று அஸுரர்கள் என்பார் முக்குணங்கள் ஆகின்றனர். சத்வகுணத்தின் வெண்மையை வெள்ளிக் கோட்டை விளக்குகிறது. ரஜோகுணத்தின் செம்மை நிறத்தைத் தங்கம் தெரிவிக்கிறது. தமோகுணத்தின் கருமைக்கு இரும்பு எடுத்துக்காட்டு ஆகிறது. மானுட சரீரமே ரதம். பிரபஞ்சத்தில் உள்ள பொருள்களெல்லாம் மானுட சரீரத்திலும் உண்டு. இந்திரியங்கள் அனைத்தும் தேவர்கள் எனப்படுகின்றன. அக்ஞானத்தில் உழலும் ஜீவாத்மன் பிரம்மதேவன் ஆகிறான். அவன் பெற்றுள்ள அறிவு வேதங்கள் ஆகின்றன. சிவன் அருளால் சிவஞானம் உதயமாகும்போது முக்குணமயமான இவை யாவும் அழிந்துபட்டுப்போகின்றன. ஜீவாத்மா சிவத்தில் லயமாகிறான். குணாதீதத்தில் இருப்பது சிவம். பல பிறவிகளில் படாதபாடுபட்டு ஜீவாத்மன் தன்னைப் பக்குவப்படுத்துகிறான். முற்றிலும் பக்குவமான பிறகு பரஞானம் அவனுக்கு மிக

எளிதில் வாய்க்கிறது. ஏனென்ருல் யாண்டும் அவனுக்குச் சொந்தமாயுள்ள நிஜசொரூபம் அதுவேயாம். இங்ஙனம் பரஞானம் அடையப்பெறுபவர்கள் எல்லாரும் எக்காலத்திலும் திரிபுரதகனம் செய்து வருகிருர்கள்.

4. தக்ஷனது யாகம்

சிருஷ்டிக் கடவுளாகிய பிரம்மதேவன் படைத்த உயிர்களை ஒழுங்காக ஓம்புதல் பொருட்டுப் பிரஜாபதிகள் பத்துப் பேரைப் படைத்துவைத்தான். அவர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒரு யாகம் நடாத்தினர்கள். மேலோர் அனைவரும் அதில் வந்து கலந்துகொண்டனர். யாகம் நிகழ்ந்துகொண்டிருக்கையில் பிரஜாபதிகளுள் தலைவனுகிய தக்ஷப்பிரஜாபதி யாகசாலைக்குள் பிரபாகரன் போன்று பிரவேசித்தான். அவனுக்கு மரியாதை செலுத்த அனைவரும் எழுந்து நின்றனர். ஆனல் தந்தை பிரம்மாவும், உலகு அனைத்துக்கும் பரமகுருவாகிய சிவனும் எழுந்து நிற்கவில்லை. தன் தந்தையின் முன்னிலையில் தக்ஷன் வணங்கினன். பின்பு தனக்கு மரியாதை காட்டாத சிவனரின்மீது அவனுக்குத் தாளமாட்டாத சினம் மூண்டுவிட்டது.

சபைநடுவே சிவனரை தக்ஷன் இங்ஙனம் தூஷித்தான்: "இந்தக் குரங்குக் கண்ணனுக்கு என் மான் கண்ணியாகிய மகளை மணம் முடித்துக் கொடுத்தேன். இவன் சுடுகாட்டில் வசிப்பவன். உடல் முழுதும் சுடலைப் பொடி பூசுபவன். மண்டை ஓட்டை மாலையாகக் கோத்துக் கழுத்தில் அணிந்திருக்கிருன். மானுட எலும்பை ஆபரணமாகப் போட்டிருக்கிருன். பிரேதங்களோடும் பூதகணங்களோடும் இவன் பித்தன் போன்று திரிகிருன். சிவம் (மங்களம்) என்னும் பெயர் படைத்துள்ள இவன் உண்மையில் அசிவம் (அமங்களம்.)" இங்ஙனம் சிவநிந்தை செய்துவிட்டு அவருக்கு யாகத்தில் ஹவ்யம் படைக்கலாகாது என்று உத்தரவு பிறப்பித்துவிட்டுக்

கோபாவேசத்துடன் தக்ஷன் யாகசாலையை விட்டு வெளியேகினன்.

இந்த அடாத சம்பவத்தைப் பார்த்ததும் பரமசிவனுடன் வந்திருந்த நந்தீசனுக்கு ஆவேசம் கிளம்பிற்று. அவன் சபித்ததாவது: "அறிவிலியாகிய தக்ஷனுக்குப் பரவஸ்து எது, பஞ்சபூதங்களால் ஆகிய ஆக்கை எது, இந்த இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாது. உடல் இன்பத்தை வளர்ப்பதை அவன் யாகம் என்று எண்ணியிருக்கிருன். அவனுக்கும் அவனுடைய யாகத்தில் கலந்துகொள்பவர்க்கும் அனர்த்தம் நிகழ்வது திண்ணம்." இந்த சாபத்துக்குச் சிலர் அஞ்சினர். பலர் இதைப் பொருள்படுத்தவில்லை. சிவனர் சாந்தமூர்த்தியாக வெளியேகிவிட்டார்.

கொஞ்ச காலத்துக்குப் பிறகு முந்தையதைவிடப் பெரிய வேள்வி ஒன்றை தக்ஷப்பிரஜாபதி துவக்கி வைத்தான். அதில் சிவனர்க்கு அழைப்பு இல்லை. அழைப்பு அனுப்பியும் பிரம்மாவும் விஷ்ணுவும் அதில் போய்க் கலந்துகொள்ளவில்லை. மற்ற தேவர்களெல்லாம் அதில் ஆவலோடு பங்குகொண்டனர். கைலாசகிரிக்கு மேலே அவர்கள் வானமார்க்கத்தில் படாடோபமாகப் பறந்து சென்றது பராசக்தி தாக்ஷாயினிக்குப் பேர் ஆர்வத்தை ஊட்டியது. தந்தையின் இல்லத்துக்குத் தானும் போக வேண்டுமென்று தன் தலைவன் பரமசிவனிடம் அவள் விண்ணப்பித்தாள். அப்படி அவள் போவது பொருந்தாது என்ற எச்சரிக்கையுடன் பரமனும் தயக்கத்துடன் அவளை அனுப்பிவைத்தார்.

தானுக வீடு தேடி வந்த தன் புதல்வி தாக்ஷாயினியை தக்ஷன் பிரியமாக வரவேற்கவில்லை; பாராமுகமாக இருந்துவிட்டான். அது அவளுக்கு அவமானத்தையும் கடும் சினத்தையும் ஊட்டியது. தக்ஷன் தனக்குக் கொடுத்திருந்த தகாத தேகத்தை இனி தான் சிவனு

ருக்கு உரியதாக வைத்திருப்பதில்லை என்று தீர்மானித்தாள். யோகநிஷ்டையில் நின்று தனது உடலை அவள் தகித்துவிட்டாள்.

இந்த விபத்தைப் பற்றிய செய்தி சிவனருக்கு எட்டியது. அவர் சினம் கொண்டு தமது நீண்ட ஜடையொன்றை ஓங்கித் தரையில் அடித்தார். அச்செயலினின்று வீரபத்திரன் தோன்றி வந்து தான் செய்யக் கிடக்கும் கடமை யாதென்று கேட்டான். தக்ஷனது யாகத்தைச் சென்று அழிக்கும்படி சிவனர் தமது ருத்ராம்சமாக வந்தவனிடம் பணித்தார். வீரபத்திரனும் விரைந்தோடி அங்ஙனமே யாகத்தைப் பாழ்படுத்தினன். தேவர்களெல்லாரும் நையப்புடைக்கப்பட்டனர். தக்ஷனது தலை தெறித்துத் தீயில் விழுந்து வெந்துபோயிற்று. கை, கால், மூக்கு, பல், கண், காது இவைகளை இழந்த தேவர்கள் பிரம்ம தேவனிடம் சென்று அழுது முறையிட்டனர்.

படைப்புக் கடவுள் பிரம்மா பகர்வாராயினர்: "எங்குச் சங்கரனுக்கோ அல்லது நாராயணனுக்கோ இடமில்லையோ, அங்கு நிகழ்வதெல்லாம் அமங்களச் செயலாகும். அதில் சென்று கலந்துகொள்பவர்கள் அதினின்று விளையும் தீங்கை ஏதேனும் ஒருவிதத்தில் ஏற்றே ஆகவேண்டும். எனினும் நீங்கள் உய்வு அடைவதற்கு உபாயம் ஒன்று உண்டு. சிவனிடமே சென்று நீங்கள் முறையிடுங்கள். கருணாகரனாகிய அவன் உங்களைக் காப்பாற்றுவான்." அதன்படி செய்த தேவர்கள் உய்வு அடைந்தனர். ஆனால் தக்ஷனுக்கு நிகழ்ந்த கேடு முற்றிலும் நிவர்த்தியாகவில்லை. தன் தலையை இழந்த அவனுக்கு ஆட்டுத்தலை வந்து அமைந்தது.

பிரஜைகளின் தொகை பிரஜாபதி யாகிறது. பிரஜைகள் நெறியான வாழ்க்கையைப் புறக்கணிப்பது சிவனரைப் புறக்கணிப்பதாகிறது. காமத்துக்கு வசப்

பட்டு இனத்தை ஏராளமாகப் பெருக்குவது தக்ஷயக்ஞ மாகும். சுகபோகத்தில் வரம்பு கடந்து மூழ்குவது அந்த யாகத்தில் ஹவிஸ் உண்பதாகும். அம்பிகை தாக்ஷா யினியின் மறைவு சக்தியின் புனிதத்தைப் பாழ்படுத்தி யதன் விளைவு. உலகம் இப்படி எப்பொழுதெல்லாம் நிலைகுலைகிறதோ அப்பொழுதெல்லாம் அதற்கு இன்னல் உண்டாகித் திருந்தியமைகிறது. அதுவே வீரபத்திரனது வருகையாம்.

திருவாசகச் சிறப்பு


அருள்வாத வூரர்சொல அம்பலவர் தாமெழுதும்
திருவா சகத்தைத் தெளிந்தால் — கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமரரு ளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்.

கற்பாந்த காலங் கடவாக் கடல்கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே — அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவா சகம்என்னும் தேன்.

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

போதலர்ந்து தேன்சொரியும் பொன்னம் பலத்திலுறை
வாதவூர் எங்கோமான் வாசகத்தை — ஓதிப்
பிறவிப் பிணிநீக்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவுக்குள் செல்வர் சிறந்து.

அம்பலவர் - சிவனர்; ***கருவாம் பவகதி*** - தாய் வயிற்றில் பிறத்தல்; ***கடவாக் கடல்*** - பிறவிக் கடல்; ***அப்பன்*** - மாணிக்க வாசகர்; ***உருவாசகம்***-நிறைமொழி, ஆப்தவாக்கியம்; ***தொல்லை***- பழமை; ***இரும் பிறவி*** - தொடர்ந்து வருகிற பிறவி; ***தளை*** - பந்தம், பிணிப்பு; ***எல்லை மருவா நெறி*** - மோக்ஷம்; ***திருவாசகம் என்னும் தேன்*** -பரவித்தை, மதுவித்யா; ***செறிவு*** - நிறைவு.



ஆடகச்சீர் மணிக்குன்றே
இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத்
தந்தருளெம் உடையானே.

(பக்கம் 272)

இயற்கையின் ஒழுங்குப்பாடான இயக்கம்
இறைவனது ஆனந்தத் தாண்டவம் என
உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

உ

சிவமயம்

திருவாசகம்

திருப்பெருந்துறையில் அருளிய

1. சிவபுராணம்

சிவனது அநாதி முறைமையான பழமை

கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

1. நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க

நமச்சிவாய என்னும் மந்த்ர சொரூபமாய் இருப்பவரைப் போற்றுகிறேன். ஜகத்தில் அனைத்துமாய் அதில் ஊடுருவி யிருந்து அதை ஆளுகிற விச்வநாதனைப் போற்றுகிறேன்.

நமச்சிவாய என்னும் பஞ்சாக்ஷரம் அல்லது இறைவனைப்பற்றிய ஐந்தெழுத்து வேதத்துக்கு ஹிருதயம் ஆகிறது. உயிருடன் இலங்குகிற உடலில் நடுநாயகம் வகிப்பது ஹிருதயம். அது வாழ்வுக்கு இன்றியமையாதது. மூளை வேலை செய்யாவிட்டாலும் வாழ்வு நடந்தேறும்; ஆனால் ஹிருதயம் வேலை செய்யாவிட்டால் மரணம்

உபநிஷத் மந்த்ரம்—1

नमः शिवाय च शिवतराय च
நம: சிவாய ச சிவதராய ச

(ஸ்ரீ ருத்ரம் 8-1)

சிவம் என்னும் சொல் மங்களம் எனப் பொருள் படுகிறது.

சிவதரன் என்பது தன்னையடைந்தவரை சிவமாக்குகிறவன் என்று பொருள்படுகிறது.

நேரும். உடல் வாழ்க்கையில் ஹிருதயம் பெற்றுள்ள பெருநிலையைப் பாரமார்த்திக வாழ்க்கையில் பஞ்சா க்ஷரம் பெற்றுள்ளது.

யஜுர் வேதத்துக்கு நடுநாயகம் வகிப்பது ஸ்ரீருத்தி ரம்; இந்த ஸ்ரீ ருத்திரத்தில் நடுநாயகம் வகிப்பது நம சிவாய என்னும் மந்த்ரம். இதை இடையருது உச்சரிப் பவர் சிவ சொரூபம் ஆகின்றனர். வேதம் ஓதுவதும் ஸ்ரீ ருத்திரம் ஓதுவதும் எல்லார்க்கும் சாத்தியமன்று. அதற்கு அதிகாரிகள் ஆவது மிகக் கஷ்டம்; எல்லாரும் அதிகாரிகள் ஆவதுமில்லை. ஆனால் நமசிவாயவென்று நவிலுவது மிக எளிது. அது யாருக்கும் இயலும். அது எல்லார்க்கும் பொது; எல்லார்க்கும் சொந்தம். தீக்ஷை பெற்றுக்கொண்டும் அதைப் பகரலாம்; தீக்ஷை பெருதும் பகரலாம். தாயைக் கூவியழைக்கச் சேய்க்கு உரிமை யுண்டு. அதற்கு தீக்ஷை தேவையில்லை. அங்ஙனம் இறைவனை அவனுடைய மந்த்ரத்தைக்கொண்டு கூவி யழைக்க உயிர்களுக்கு உரிமையுண்டு.

கடல் யாண்டும் தன்மயமாயிருந்துகொண்டு அதை வந்தடைகிற நீரையெல்லாம் அது தன்மயமாக்குவது போன்று சிவனர் தம்மை வந்தடைபவர்களை யெல்லாம் சிவமாக்குகிருர்.

உபநிஷத் மந்த்ரம் — 2

ईशा वास्यमिदं सर्वं यत्किञ्च जगत्यां जगत् ।
तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्य स्विद् धनम् ॥

ஈசா வாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத் ।
தேன த்யக்தேன புஞ்ஜீதா மா க்ருத: கஸ்ய ஸ்வித் தனம் ॥

(ஈசாவாஸ்யோபநிஷதம் 1)

जगत्यां ஜகத்யாம் ஜகத்தில் यत् किम् च யத் கிம் ச ஏதா வது जगत् ஜகத் மாறுபடுவதாய் (अस्ति அஸ்தி இருக்கு மாகில்) इदम् सर्वम् இதம் ஸர்வம் இதெல்லாம் ईशा ஈசா

பரம்பொருள் நாதாதீதமாய், அதாவது நாதத்துக்கு அப்பாற்பட்டதாய் இருக்கிறது. பின்பு அதே பொருள் நாத வடிவமாய், அதாவது நாத பிரம்மமாய் இருக்கிறது. நாதம் அல்லது ஓசையின் ஸ்தூலதோற்றமே இப்பிரபஞ்சமாகிறது. பிரபஞ்சத்தில் ஜடப்பொருள்களாய் இருப்பவை கீழானவை; சேதனமாய் அல்லது உயிர்களாய் இருப்பவை மேலானவை. அவையாவும் வெவ்வேறு வகைப்பட்ட ஓசையின் தோற்றங்களாம். நாதத்தில் வருண மந்த்ரம் என்பது இருக்கிறது. அதைச் சரியாக உச்சரித்தால் மழை வருகிறது. அக்னி மந்த்ரம் என்பது ஒன்று இருக்கிறது. அதை முறையாக ஒலித்தால் தீப்பற்றிக்கொள்ளும். இப்படி இயற்கையில் உள்ள அனைத்தும் ஓசையின் தோற்றங்களாம். ஓசைகளுள் மனிதனைக் கடவுள்பால் எடுத்துச்செல்ல வல்லவைகள் இருக்கின்றன. அவைகளே சிறப்பாக மந்த்ரங்கள் எனப்படுகின்றன. அவைகளுள் 'நம: சிவாய' என்பது மிக முக்கியமானது. ஆதலால் அது வேதத்தின் உட்பொருள் எனப்படுகிறது. அதை ஓதி உய்வு அடைந்த மாணிக்க வாசகர் எடுத்த எடுப்பில் அதை மூலமந்த்ரமாக வைத்திருப்பது மிகப் பொருத்தமானது.

ஆத்ம சாதனங்களுள் நாம ஜபம் மிகச் சுலபமானது. எப்பொழுது வேண்டுமானாலும் நாமத்தை ஓதிக் கொண்டே இருக்கலாம். வேறுபல அலுவல்களுக்கிடை

ஈசனால் वास्यम् வாஸ்யம் மூடப்படவேண்டும் तेन त्यक्तेन தேன த்யக்தேன அத்தகைய துறவைக்கொண்டு भुञ्जीथाः புஞ்ஜீதா: உன்னைப் போஷித்துக்கொள் कस्य स्वित् கஸ்ய ஸ்வித் யாருடைய धनम् தனம் தனத்தையும் मा गृधः மா க்ருத: அபகரிக்காதே.

ஜகத்தில் மாறிமாறி யமைகிற யாவும் ஈசனால் வியாபிக்கப் பெறவேண்டும். இத்தகைய தியாகத்தின் மூலம் உன்னை ஓம்புக. யாருடைய செல்வத்தையும் விரும்பாதே.

யிலும் அதைச் சொல்லிக்கொண்டே இருக்கலாம். நாமத்தை வாய்விட்டுச் சொல்லுவது ஸ்தூல ஜபம். அதற்கு வலிவு சாமானியமானது. நா அசைவதற்கிடையில் சொல் வெளியில் கேட்பதில்லை. அத்தகையது சூக்ஷ்ம ஜபம். அதற்கு வலிவு இன்னும் அதிகம். நாவும் அசையாமல் மனது மனதுக்குள்ளேயே நாமத்தைச் சொல்லிக்கொண்டிருப்பது ஜபத்தின் காரண நிலை அல்லது உச்ச நிலை. அதற்கு வலிவு மிக உண்டு. பக்தன் அடைகிற பரிபக்குவங்களுள் ஜபஸித்தி என்பது மிக முக்கியமானது. மற்ற மனவிருத்திகளுக்கிடையில் மனதில் ஒரு பகுதி இடையருது இறைவன் நாமத்தை உச்சரித்துக்கொண்டே இருக்குமாகில் அது ஜபஸித்தி எனப்படுகிறது.

விந்து வேறு விருக்ஷம் வேறு அல்ல. விந்துவே விருக்ஷமாகிறது. சூக்ஷ்ம நிலையில் இருப்பது விந்து; ஸ்தூல நிலையில் இருப்பது விருக்ஷம். அங்ஙனம் நமச்சிவாய என்னும் நாதவிந்து அதிசூக்ஷ்மமானது; அது

அசையாத கடல் உருண்டோடுகிற அலையாகவும் காட்சி கொடுக்கிறது. அத்தகைய அலையையும் கடல் எனக் காண்பது முறை. உலகாக இயங்குபவன் ஈசன். ஆதலால் உலகையே ஈசனுக உணர்வது ஆத்ம சாதனம். ஈசனுகக் காண்பதால் அதனிடத்து நாம் வைக்கிற இணக்கத்தை மேலானதாக்குகிறோம். கீழான இணக்கத்தை மேலான இணக்கமாக மாற்றுவது தியாகம். குழந்தையானது தன் தாயோடு இணங்கியிருந்து இன்பம் பெறுதலில் தூய்மையுண்டு. ஜீவன் ஈசனேடு இணங்கியிருந்து இன்பம் பெறுதலில் தூய்மை மிகவுண்டு. ஒவ்வொரு ஜீவனுக்கும் நலம் தருதற்கு ஏற்ற வளவே ஈசன் செல்வத்தை எடுத்து வழங்குகிருர். அதற்குமேல் எதையும் அபகரிக்கும் மனப்பான்மை ஆத்ம சாதகனுக்கு வருவதில்லை. நமச்சிவாயன் என்னும்

காரண நிலை; பிரபஞ்சத்தில் அனைத்துமாய் அதை ஆண்டு வருகிற மூர்த்தியோ காரிய நிலை. அவருடைய ஆளு கைக்கு அனைத்தும் உட்பட்டிருப்பதால் அவர் நாதன் அல்லது தலைவன் எனப்படுகிறார்.

2. இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதா
[ருள்வாழ்க

இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்
தாள் வாழ்க

ஒரு க்ஷணமும் என் மனதினின்று பிரியாதவனது திருவடி வாழ்க.

சொல் அவன் ஓசை வடிவினன் என்பதை விளக்கு கிறது. நாதன் என்னும் சொல் விசுவநாதன் என்னும் சொல்லாக விரிவடைந்து தலைவன் அல்லது ஆளுபவன் எனப் பொருள்படுகிறது. இந்த உபநிஷத மந்த்ரமும் அதே கருத்தை விளக்குகிறது.

உபநிஷத் மந்த்ரம் — 3.

दह्रं विपापं परमेश्मभूतं यत् पुण्डरीकं पुरमध्यसंस्थम् ।
तत्रापि दह्रे गगनं विशोकं तस्मिन् यदन्तस्तदुपासितव्यम् ॥

தஹ்ரம் விபாபம் பரமேஸ்மபூதம்
யத்புண்டரீகம் புரமத்யஸம்ஸ்தம் ।
தத்ராபி தஹ்ரே ககனம் விசோகம்
தஸ்மின் யதந்தஸ்ததுபாஸிதவ்யம் ॥

(மஹாநாராயணோபநிஷதம் 12 — 16)

दह्रं தஹ்ரம் சிறியது विपापम् விபாபம் பாபமற்றது परमेश्म भूतम् பரமேஸ்ம பூதம் பரம்பொருளின் இருப்பிடம் पुरमध्यसंस्थम् புரமத்யஸம்ஸ்தம் உடலின் மத்தியில் நன்கு வீற்றிருப் பது यत् யத் எதுவோ पुण्डरीकम् புண்டரீகம் ஹிருதய கமலம் तत्र अपि தத்ர அபி அதிலும் तस्मिन् दह्रे தஸ்மின் தஹ்ரே அந்த ஹிருதயச் சிறுவெளியின் अन्तः அந்த: உள் विशोकं விசோ கம் சோகமில்லாதது यत् யத் எதுவோ गगनं ககனம்

ஜீவாத்மாவானது எத்தனை கோடி பிறவிகள் எடுத்தாலும், அப்பிறவிகள் கல், புல் முதல் பிரம்மதேவன் பரியந்தம் எத்தகையவைகளாயிருந்தாலும் அவையாவிலும் இறைவன் அந்தர்யாமியாயிருந்து வருகிறார். உயிர்க்கு உயிராய், உணர்வுக்கு உணர்வாய் அவர் யாண்டும் இருப்பதால்தான் ஜீவ வியக்தி காரியப்பட்டு வருகிறது.

வெட்டவெளி (अस्ति அஸ்தி இருக்கிறது) तत् தத் அது उपासितव्यम् உபாஸிதவ்யம் உபாஸிப்பதற்குரியது.

பரம்பொருளுக்கு உறைவிடமாக உடலின் மத்தியில் சிறிய, தூய ஹிருதய கமலம் இருக்கிறது. இந்த தஹராலயத்தில் துயரற்ற வெளியுளது. அது உபாஸிப்பதற்கு உரியது.

பரம்பொருள் எங்கும் நீக்கமற நிறைபொருள் எனினும் அதன் சான்னித்தியத்தை சாதகன் தனது உள்ளத்தினுள் உணர்ந்து அதை உபாஸிக்கவேண்டும். அரசன் ஒருவன் தனது தலைமைப் பட்டணத்தில் மாளிகையில் சிம்மாசனத்தில் வீற்றிருப்பதுபோன்று பிரம்மபுரம் என்னும் இவ்வுடலினுள் தஹராலயம் என்னும் மாளிகையில் ஹிருதயகமலம் என்னும் சிம்மாசனத்தில் பரமன் வீற்றிருக்கிறார். இந்த தஹராலயத்தில் பாபத்துக்கோ சோகத்துக்கோ இடமில்லை. ஆதலால் தன்னை ஒரு பாபியாகவோ துயருறுபவனாகவோ உணர்பவன் வழிபாட்டுக்குத் தகுதியற்றவன் ஆகிறான். தன்னைத் தூயவனாகவும் ஆனந்த சொரூபியாகவும் உணர்பவன் நல்ல சாதகன் ஆகிறான்.

உபநிஷத் மந்த்ரம் — 4.

हृदि ह्येष आत्मा ।

ஹ்ருதி ஹ்யேஷ ஆத்மா ।

(ப்ரஸ்னோபநிஷதம் 3 — 6)

एष ஏஷ இந்த आत्मा ஆத்மா ஆத்மாவானது हृदि ஹ்ருதி ஹ்ருதயத்தில் (वसति வஸதி வஸித்திருக்கிறது.)

இந்த ஆத்மாவானது ஹ்ருதயத்தில் வசித்திருக்கிறது.

இறைவனுடைய சான்னித்தியத்தை நெஞ்சத்தினுள் உணர்கிறவரையில் ஆத்ம சாதனம் துவங்குவதில்லை. பல பிறவிகளில் மனிதன் தெய்வத்தை வெளியுலகில் தேடி யலைந்தான். இறைவனுக்கு உறைவிடமாகிய பரம பதம், கைலாசம், வைகுண்டம் என்றெல்லாம் இயம்பப்பெறும் பெருநிலம் புறவுலகில் இருப்பதாக எண்ணி அவன் ஏங்

சமயங்கள் தம்தம் தெய்வம் என்று கூறுகிற மெய்ப் பொருளை பிரம்மம் என்றும் ஆத்மா என்றும் உபநிஷதங்கள் இயம்புகின்றன.

உபநிஷத் மந்த்ரம் — 5.

यो वेद निहितं गुहायां परमे व्योमन् ।
समश्नुते सर्वान् कामान् सः ॥

யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன் ।
ஸமஸ்னுதே ஸர்வான் காமான் ஸ: ॥

(தைத்திரீயோபநிஷதம் 2 — 1)

गुहायाम् குஹாயாம் ஹிருதய குகையில் परमे व्योमन् பரமே வ்யோமன் பரமபதத்தில் निहितम् நிஹிதம் வீற்றிருக்கும் (ब्रह्म ப்ரஹ்ம பிரம்மனை) य: ய: யார் वेद வேத அறிகிறானோ स: ஸ: அவன் सर्वान् कामान् ஸர்வான் காமான் ஆசைகள் அனைத்தையும் समश्नुते ஸமஸ்னுதே அடையப்பெறுகிறான்.

பரம ஆகாசமாகிய ஹிருதய குகையில் வீற்றிருக்கும் பிரம்மத்தை யார் அறிகிறானோ அவன் ஆசைகள் அனைத்தும் நிறைவேறப் பெறுபவன் ஆகிறான்.

பரவெளி யென்றும், பரம ஆகாசம் என்றும், பரம பதம் என்றும் பகரப்பெறுபவைகளெல்லாம் மனிதனது நெஞ்சில் உள. பேரறிவாய் அதில் பரம்பொருள் வீற்றிருக்கிறது.

புறப்பொருள்களைப் பஞ்சேந்திரியங்கள் வாயிலாகப் பெற முயல்வது ஆசை. உள்ளிருக்கும் பேரறிவாகிய

கிக்கிடந்தான். அல்லல் பல பட்டபிறகு தான் தேடும் பரம்பொருள் தன்னிடத்தே தடையொன்று மின்றித் திகழ்வதை அறிய வருகிறான். அதன் பிறகு அவனுடைய ஆத்ம சாதனம் விரைந்து மேலோங்குகிறது.

3. கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க

4. வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க

திருப்பெருந்துறையில் எழுந்தருளி அடியேனை ஆட்கொண்ட தேசிகத் திலகத்தின் திருவடி வாழ்க.

ஆகமப் பொருளாகி நின்று தித்திப்பவனது திருவடி வாழ்க.

மாணிக்கவாசகர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டது கோகழி எனக் கூறப்படும் திருவாவடுதுறையிலேயாம். அது திருப்பெருந்துறை யென்றும் கூறப்படுகிறது.

தாய் தந்தையர்களிடமிருந்து பிரிந்திருக்கும் தனயனுக்கு அவர்களிடமிருந்து வரும் கடிதம் அல்லது அவர்களைப்பற்றிப் பிறர் எழுதியுள்ள கடிதம் படிக்கப்படிக்கச் சுவை தரும். அங்ஙனம் இறைவனை இன்னும் அடையப் பெறுதவர்களுக்கு அவனைப்பற்றிப் பகருகிற ஆகம சாஸ்திரங்கள் ஆராய்வதற்கு ஏற்ப ஆனந்தமளிக்கும். ஆத்ம சாதகர்கள் பரமனைப்பற்றிப் பகரும் நூல்களைப் பரமனுக்கு நிகராகக் கருதவேண்டும்.

ஈசனை உணர்தற்கு ஏற்பப் புறப்பொருள் விரைவில் அடையப்பெறுகிறது. பிறகு புறத்தில் நாடுகிற இன்பம் அகத்தில் இருப்பதாக உணரப்படுகிறது. இன்பமாய் இறைவன் யாண்டும் உள்ளிருப்பதால் அதை நாடியலைய வேண்டிய அவசியம் இல்லையென இறுதியில் உணரப் படுகிறது. இந்நிலையெய்தியவன் பிரம்மஞானி யாகிறான்.

5. ஏக னநேக னிறைவ னடிவாழ்க

ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

ஒன்ருயிருப்பவனும் பலப்பலவாயிருப்பவனுமாகிய இறைவனது திருவடி வாழ்க.

இறைவன் மூல வஸ்துவாயிருக்கிறபொழுது அவர் ஒன்று. அவருக்கு அன்னியமாக இரண்டாவது வஸ்து இல்லை. ஆனல் இப்பிரபஞ்சமாக அவர் விகாரப்பட்டுத் தோன்றும்பொழுது எண்ணிறந்த பலகோடி பொருள்களாகவும் உயிர்களாகவும் அவர் காட்சியளிக்கிருர். நகைகள் யாவும் தங்கத்தின் விகாரப்பட்ட நாம ரூபங்களாம். அங்ஙனம் உலகனைத்தும் ஈசனது கணக்கற்ற விகாரங்களாம்.

சக்தி மதப்படி இறைவனே இறைவி என்று அழைக்கப்படுகிருன். அன்னை பராசக்தி ஏகாகினீ என்றும் பூமரூபா என்றும் அழைக்கப்படுகிருள். அவள் ஒருத்தி

உபநிஷத் மந்த்ரம்—6.

एको देवः सर्वभूतेषु गूढः सर्वव्यापी सर्वभूतान्तरात्मा ।
कर्माध्यक्षः सर्वभूताधिवासः साक्षी चेता केवलो निर्गुणश्च ॥

ஏகோ தேவ: ஸர்வபூதேஷு கூட: ஸர்வவ்யாபீ
ஸர்வபூதாந்தராத்மா ।
கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ: ஸாக்ஷீ
சேதா கேவலோ நிர்குணஸ்ச ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 6 — 11)

एकः ஏக: ஒருவன் देवः தேவ: தேவன் सर्वभूतेषु ஸர்வபூதேஷு எல்லா உயிர்களிலும் गूढः கூட: ஒளிந்திருப்பவன் सर्वव्यापी ஸர்வவ்யாபீ எங்கும் நிறைந்திருப்பவன் सर्वभूतान्तरात्मा ஸர்வபூதஅந்தராத்மா எல்லா உயிர்களிலும் அந்தர்யாமியாயிருப்பவன் कर्माध्यक्षः கர்மாஅத்யக்ஷ: கர்மங்களைக் கண்காணிப்பவன் सर्वभूताधिवासः ஸர்வபூதா அதிவாஸ: எல்லா உயிர்களுக்கும் வீடு ஆனவன் साक्षी ஸாக்ஷீ

தனிப்பொருளாயிருக்கிருள். பின்பு அவளே அநேக வடிவங்களிலும் இலங்குகின்ருள். பூமருபம் என்பது எண்ணரிய வடிவங்கள் எனப் பொருள்படுகிறது.

6. வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க

மனோ வேகத்தை அகற்றி என்னை ஆட்கொண்ட இறைவனது திருவடிக்கு வெற்றி யுண்டாகுக.

எண்ணங்கள் என்னும் கொதிப்பு ஓயாது உள்ளத்தில் உண்டாய்க்கொண்டிருக்கிறது. அவ்வெண்ணங்களை நிறைவேற்றப் பிறவிகளும் பெருகிக்கொண்டே போகின்றன. எண்ணங்களுக்கு வலிவு கொடுப்பது ஆசை. ஆதலால் ஆசையையே வேகம் என்று இயம்பலாம். ஆசைக்கு இருப்பிடம் அக்ஞானம். இறைவனுடைய அருள் வாய்க்குமிடத்து அக்ஞானம் அகலுகிறது. அதைத் தொடர்ந்து ஆசை அறுபடுகிறது. அதனுல் எண்ணம் என்னும் கொதிப்பு அடங்குகிறது. பின்பு எண்ணத்தின் தொகுதியாயுள்ள மனது நசிக்கிறது. மனதற்ற நிலையில் பரமனது சான்னித்தியம் திகழ்கிறது. மனம் அடங்கப்பெற்றவர்களிடத்து மற்ருெரு மகிமையுண்டு. இறைவனை அடைதல் மட்டுமல்ல; இகலோகத்துக்குரியது எதையேனும் அடையவேண்டு

பார்த்துக்கொண்டிருப்பவன் चेता சேதா பேரறிஞன் केवलः கேவல: தனிப்பொருள் निर्गुणः நிர்குண: குணங்களைக் கடந்தவன் च ச உம்

கடவுள் ஒருவரே. எல்லார் உள்ளத்திலும் அவர் மறைந்திருக்கிருர். அவர் எங்கும் நிறைபொருள். எல்லாசிடத்திலும் ஊடுருவியிருப்பவர். எல்லாச் செயல்களையும் அவர் கண்காணிக்கிருர். உயிர்கள் அனைத்துக்கும் அவரே இருப்பிடம். சாக்ஷியாகவும் சுத்த சைதன்யமாகவும் குணரகிதராகவும் அவர் இருக்கிருர்.

பரமன் ஒருவரே அகிலாண்டங்களில் உள்ள அனைத்துமாக இலங்குகிருர்.

மென்று சங்கற்பித்த மாத்திரத்தில் அவர்கள் அதை எளிதில் அடையப் பெறுகின்றனர்.

योगश्चित्तवृत्ति निरोधः

யோகஸ்சித்தவ்ருத்தி நிரோத:

சித்த விருத்திகளை ஒடுக்குவது யோகம்

சித்தம் அல்லது மனம் ஒரு தடாகம் போன்றது. தடாகத்தில் சேற்று நீர் இருந்தால் அடிமட்டம் தென் படாது. அது அலை வீசிக்கொண்டிருந்தாலும் கீழே உள்ள தரை தென்படாது. அதன் நீர் தூயதாய் இருக்கவேண்டும். அலை வீசாது அது அமைதியுற்றிருக்க வேண்டும். அப்பொழுது தடாகத்தின் தரை காட்சிக்கு எட்டுகிறது. மனதில் ஆசை என்னும் விருத்தி உண்டா கலாகாது. அதில் பந்தபாசம் என்னும் அழுக்கு இருக்க லாகாது. அப்பொழுது மனதுக்கு மூலப்பொருளாகிய ஆத்ம தர்சனம் கிட்டும்.

7. பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் [வெல்க

பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்-தன் பெய்கழல்கள் வெல்க

பிஞ்ஞகன்-பிஞ்ஜகன், கொல்லுபவன், சிவன். **பெய்கழல் கள்**-வீரக்கழலை அணிந்துள்ள திருவடிகள்.

உபநிஷத் மந்த்ரம்—7.

त्र्यम्बकं यजामहे सुगन्धिं पुष्टिवर्धनम् ।
उर्वारुकमिव बन्धनान्मृत्योर्मुक्षीय माऽमृतात् ॥

த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்தனம் ।
உர்வாருகமிவ பந்தனான் ம்ருத்யோர்முக்ஷீய மாம்ருதாத் ॥

(மஹா நாராயண உபநிஷதம் 56 — 1)

सुगन्धिं ஸுகந்திம் நறுமணத்தோடு கூடியவரும் पुष्टि-वर्धनम् புஷ்டிவர்த்தனம் போஷித்து வளர்ப்பவரும் ஆகிய त्र्यंबकम् த்ரயம்பகம் முக்கண்ணராகிய சிவனாரை यजामहे யஜாமஹே நாம் வழுத்துகிறோம் बन्धनात् பந்தனைத் பந்தப்

பிறப்பு இறப்பு ஆகிய சம்சார சாகரத்தை அழிக்கின்றவனும் வீரக்கழல்களை அணிந்திருப்பவனும் ஆகிய சிவனாரது திருவடிகள் வெற்றி பெறுக.

படுத்துகிற கொடிக்காம்பினின்று उर्वारुकम् इव உர்வாருகம் இவ வெள்ளரிப் பழம்போன்று मृत्योः ம்ருத்யோ: மரணத்தினின்று मुक्षीय முக்ஷீய நாம் மோக்ஷமடைவோமாக अमृतात् அம்ருதாத் அமிர்தத்தினின்று मा (मोक्षीय) மா (மோக்ஷீய) விலகாதிருப்போமாக.

நறுமணத்தோடு கூடியவரும், போஷித்து வளர்ப்பவருமாகிய முக்கண்ணனைப் போற்றுவோம். வெள்ளரிப் பழம் தனது கொடிக் காம்பினின்று விலகிக்கொள்வது போன்று நாம் மரணத்தினின்று மோக்ஷமடைவோமாக. அமிர்தசொருபமாகிய சிவனாரிடமிருந்து நாம் விலகலாகாது.

இதற்கு ம்ருத்யுஞ்ஜய மந்த்ரம் என்று பெயர். மரணத்தை வெல்லுதற்கு இது உபாயமாகிறது. மற்று இம்மந்த்ரத்தை கிளிப்பிள்ளை போன்று வெறுமனே உச்சரித்துக்கொண்டிருப்பதால் சாவை வெல்ல முடியாது. இறைவன் நாமத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிற கிளியானது பூனையைக் கண்டதும் கீச் கீச் என்று கத்துவது போன்று ம்ருத்யுஞ்ஜய மந்த்ரத்தை ஓயாது ஓதிக்கொண்டிருப்பவர் நமன் என்னும் பூனை வரும்பொழுது தங்கள் ஜீவ இயல்பை வெளியாக்குவர்.

பின்பு ம்ருத்யுஞ்ஜய மந்த்ரத்தின் உட்கருத்தை அறிந்து அதற்கு ஏற்ப வாழ்பவரே மரணத்தை எளிதில் வெல்லுவர். ஐம்பூதங்களுள் நிலம் மிக ஸ்தூலமானது. அதன் தன்மாத்திரை மணம். சிவனார் நறுமணம் நிறைந்தவராய் இருப்பதன் மூலம் அவர் ஐம்பூதங்களால் ஆகிய பிரபஞ்ச சொருபமாய் இருக்கிறார் என்பது விளங்குகிறது. பிரபஞ்சமாயிருந்து அவர் ஜீவர்களை வளர்த்துப் படிப்படியாக உயர் நிலைகளுக்குக் கொண்டுவந்து தமது நிஜ சொருபத்தில் சேர்த்துவிடுகிறார். அவர் உயிர்களைப் போஷிப்பதன் பொருள்

தோற்றமும் மறைவும் படைத்துள்ள பிரபஞ்சத்தைச் சார்ந்திருப்பவனுக்குப் பிறவிப் பிணியுண்டு. அதை ஒதுக்கிவிட்டு சிவனைச் சார்பவனுக்கு அழிவற்ற சிவ பதவி கிட்டுகிறது.

8. புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள்
[வெல்க

புறத்தார்க்குச் சேயோன்-தன் பூம்கழல்கள் வெல்க

சேயோன்-தொலைவில் இருப்பவன்.

அதுவேயாம். வெள்ளரிக்கொடி தன்னிடத்திருந்து பிஞ்சை உண்டுபண்ணி அதைக் காய் ஆக்கிப் பின் பழமாக்கி அதைப் பிரித்துவிடுவதுபோன்று பிரகிருதியும் தன் செயலைச் செய்கிறது. அந்தப் பிரகிருதியோடு இணைந்திருக்கும் காலமெல்லாம் ஜீவன் மரணத்துக்கு ஆளாகிருன். பிரகிருதியினிடத்திருந்து பிரிந்து சிவத்தைச் சாரும்பொழுது ஜீவன் மரணத்தை வெல்லுகிருன். அப்படியல்லாது, இந்த மந்த்ரத்தை ஓதுவதால் மரணத்தை வெல்ல முடியாது. சர்க்கரை என்று சொன்னல் நாவிற்குத் தித்திப்பு வாராது. சர்க்கரையை வாயில் போடவேண்டும். பிரகிருதியினிடத்திருந்து பிரிந்து ஆத்மன் சிவனைச் சேரும்பொழுது மரணம் வெல்லப்படுகிறது.

இறைவனிடத்திருந்து தோன்றிவந்துள்ள உயிர்கள் பிரபஞ்சத்தில் பல பிறவிகள் எடுத்தல் என்னும் பெரும் பயணத்தை முடித்துக்கொண்டு மீண்டும் இறைவனிடம் போய்ச் சேருகின்றன. இறைவனிடம் திரும்பிப் போய்ச்சேருவது வீடுபேறு அல்லது முக்தி எனப்படுகிறது.

உபநிஷத் மந்த்ரம்—8.

असुर्या नाम ते लोका अन्धेन तमसावृताः ।
तांस्ते प्रेत्याभिगच्छन्ति ये के चात्महनो जनाः ॥

வணங்காது வேற்றாராய் இருப்பவர்களுக்கு வெகுதூரத்தில் இருப்பவனது பொலிவுடைய திருவடிகளுக்கு வெற்றி வாய்ப்பதாகுக.

குழந்தையும் தெய்வமும் கொண்டாடிய இடத்தில் என்பது பழமொழி. இணக்கம் கொள்ளுதற்கு ஏற்ப அவைகள் சொந்தமாகின்றன. உள்ளிருக்கும் தெய்வத்தை வழுத்தாதவர்களுக்கு அது புறத்தில் எங்கேயோ இருக்கும் புறப்பொருளாகிறது.

அஸுர்யா நாம தே லோகா அந்தேன தமஸாவ்ருதா: ।
தாம்ஸ்தே ப்ரேத்யாபிகச்சந்தி யே கே சாத்மஹனோ ஜனா: ॥

(ஈசாவாஸ்யோபநிஷதம்—3)

असुर्या அஸுர்யா அஸுரர்களுக்குரிய ते लोकाः தே லோகா: அப்பிறவிகள் नाम நாம நிச்சயமாக अन्धेन तमसा அந்தேன தமஸா பார்க்க இயலாத இருளில் आवृताः ஆவ்ருதா: மூடப்பட்டுள்ளன ये के च जनाः யே கே ச ஜனா: யாரெல்லாம் आत्महनः ஆத்மஹன: ஆத்மாவை அழிக்கிறார்களோ ते தே அவர்கள் प्रेत्य ப்ரேத்ய மரணத்துக்குப் பிறகு तान् தான் அப்பிறவிகளை अभिगच्छन्ति அபிகச்சந்தி அடைகிறார்கள்.

அஸுரப் பிறவிகள் அக்ஞான இருளில் மூடப்பட்டுள்ளன. யாரெல்லாம் ஆத்மீகத்தைப் புறக்கணிக்கிறார்களோ அவர்கள் இறந்தபின் அவ் அஸுர லோகத்தை அடைகின்றனர்.

ஐம்பொறிகள் வாயிலாக இன்ப நுகர்ச்சியிலேயே சதா உழன்றுகொண்டிருப்பவர்கள் அஸுரர்கள் ஆவார். ஆத்ம ஞானத்துக்குரிய பெருவாழ்வைப் புறக்கணிப்பதால் அன்னவர்கள் அருள் துறைக்குப் புறம்பானவர்கள் ஆகின்றனர். வீணில் பிறந்து இருந்து இறந்தவர் ஆகின்றனர் அவர்கள். மறு பிறவிகளில் அவர்கள் மேலும் கீழ்மையுறுவர்.

புராணங்களில் பகர்ந்துள்ளபடி அஸுரர் என்பார் ஒரு தனி இனத்தினர் அல்லர். மக்களுள் சிறு நெறி

9. கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள்
[வெல்க

10. சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன்
[கழல் வெல்க

கரம் குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

கரம்குவிவார்-கைகூப்பி வணங்குபவர்; ***சிரம்***-தலை, ***சீரோன்***-செம்பொருள், சிவம்.

கைகூப்பி வணங்குபவர்க்கு இன்பமளிக்கும் இறைவன் திருவடிகள் வெற்றிபெறுக. தலை வணங்குபவர்களை ஆன் மீகத்தில் உயரச் செய்பவனது நலம் தரும் தாள்களின் திட்டம் நிறைவேறுக.

மனிதன் எதனோடு தொடர்வு வைக்கின்றானோ அதன் இயல்பு அவனுக்கு உரியதாகிறது. நீராடுவதால் உடல் தூயதாகிறது. நெருப்பை அணுகுவதால் குளிர் அகலுகிறது. இறைவனைச் சார்வதால் இன்பம் ஓங்குகிறது.

செல்பவர் அஸுரர் ஆவர். பிறவிப் பெருங்கடலில் அவர்கள் அலைக்கழிகின்றனர்.

உபநிஷத் மந்த்ரம் — 9.

नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन ।
यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनूम् स्वाम् ॥

நாயமாத்மா ப்ரவசனேன லப்யோ ந மேதயா
ந பஹுனு ஸ்ருதேன ।
யமேவைஷ வ்ருணுதே தேன லப்யஸ்தஸ்யைஷ
ஆத்மா விவ்ருணுதே தனூம் ஸ்வாம் ॥

(கடோபநிஷதம் 2 — 23)

अयम् आत्मा அயம் ஆத்மா இந்த ஆத்மன் प्रवचनेन ப்ரவசனேன வேதம் கற்பதால் न लभ्यः (भवति) ந லப்ய: (பவதி) அடையப்படுவதன்று. न मेधया ந மேதயா புத்தி நுட்பத்தால் அன்று न बहुना श्रुतेन ந பஹுனா ஸ்ருதேன ஏராள

அடியார்களை உய்விப்பது இறைவனது பெருந் திட்டமாகும். ஈசனிடம் தங்களை ஒப்படைப்பதற்கு ஏற்ப பக்தர்கள் அருள் துறையில் உயர்நிலையெய்துகின்றனர்.

மாக சாஸ்திர விளக்கத்தைக் கேட்பதால் அன்று. एष: ஏஷ: இந்த ஆத்மா यम् एव யம் ஏவ யாரைக் குறிப்பாக वृणुते வ்ருணுதே பொறுக்கியெடுக்கிறதோ तेन தேன அவனால் लभ्य: லப்ய: அடையப்படுகிறது. तस्य தஸ்ய அவனுக்கு एष: आत्मा ஏஷ: ஆத்மா இந்த ஆத்மாவானது स्वां तनूम् ஸ்வாம் தனூம் தன் சொரூபத்தை विवृणुते விவ்ருணுதே விளக்குகிறது.

இந்த ஆத்மன், வேதம் கற்று அடையப்படுவதன்று. புத்திக் கூர்மையாலோ, ஏராளமாகப் போதிக்கக் கேட்பதாலோ இது அடையப்படுவதன்று. யாரை இது ஆட்கொள்ளுகிறதோ அவனால் இது அடையப்பெறுகிறது. அவனிடத்தே இந்த ஆத்மன் தனது சொரூபத்தில் மிளிர்கிறது.

ஈசனுடைய அருள் இல்லாது ஈசனை அறிந்து கொள்ள முடியாது என்பது துவைதமதக் கொள்கை. ஆத்ம சொரூபத்தை நாடுபவர்கள் அன்றி மற்றவர்கள் ஆத்ம சொரூபத்தை அறிந்துகொள்ள முடியாது என்பது அத்வைத மதக்கொள்கை. இவ்விரண்டு கொள்கைகளும் சாதனத்துக்குப் பொருந்தியவைகளேயாம்.

கண்ணுடையவனே சூரியனைக் காண வல்லவனாகிறான். இனி கண் அமைப்பிலும் சூரிய அமைப்பிலும் ஒளி தத்துவம் புதைந்திருக்கிறது. ஒளி தத்துவம் இரண்டுக்கும் பொதுவாயிருப்பது அருளுக்கு நிகர். சர்க்கரை சுவை நிறைந்தது. சுவைக்கும் தன்மை நாவிற்கு உண்டு. எனவே சுவை என்னும் அருள்நிலை சர்க்கரைக்கும் நாவிற்கும் பொதுவானது. அப்படி யில்லையேல் சர்க்கரையை நா ஒருபொழுதும் சுவைக்காது. ஈசன் அருள் கூர்ந்து தனது இன்னியல்பையே ஜீவர்களிடத்திலும் வைத்துள்ளான். பூதங்களின் தன்மாத்திரைகளாகிய

11. ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி

ஈசுவரனது திருவடிக்கு வணக்கம்; எமது தந்தையின் திருவடிக்கு வணக்கம்.

அண்டங்கள் யாவையும் அவர் தம்மிடத்திருந்து தோற்றுவித்து அவை யாவையும் அவர் முறையாக இயக்கி வருவதால் அவர் ஈசன் எனப்படுகிறுர். அலைகளுக்கு மூலப்பொருள் கடல்; அங்ஙனம் உயிர்களுக்கு மூலப்பொருள் ஈசன். ஆதலால் அவர் தந்தையெனப் போற்றப்படுகிறுர். (உபநி — 2 பக்கம் 102)

12. தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி

தேசன் - தேஜஸ் அல்லது ஒளி நிறைந்தவன். சிவன் - மங்களமானவன். சேவடி - சிவந்த திருவடி.

ஞானப் பிரகாசமுடையவனது பாதங்களுக்கு நமஸ்காரம்; செந்தாமரை போன்று சிவந்த பாதங்களையுடைய சிவனுக்கு நமஸ்காரம்.

13. நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி

நிமலன் - நிர்மலன், அழுக்கு இல்லாதவன்.

அன்பில் ஊறியுள்ள தூயவனது திருவடிக்கு வணக்கம்.

ஒருவனுக்கு அன்னியமாயிருந்து அவனுல் வேண்டப் படாத பொருளே மலம் அல்லது அழுக்கு எனப்படுகிறது. சிவனுருக்கு அன்னியமான பொருள் ஏதும் இல்லை. ஆதலால் அவர் நிர்மலன் எனப்படுகிறுர்.

சுவை, ஒளி முதலியன உயிர்களிடத்துப் பொறிகளில் அமைந்திருப்பது போன்று ஜீவதத்துவத்தில் சிவதத்துவமும் நிறைந்திருக்கிறது. அது சிவனுர் அருள் ஆகும். அந்த அருளைப் பயன்படுத்துதற்கு ஏற்ப ஜீவன் சிவனைச் சார்ந்து அவனை வழுத்த வல்லவனுகிறுன்.

14. மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி

மாயப்பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி

மாயம்-மாயை, மாறியமையும் தன்மையுடையது.

மாயையின் விளைவு ஆகிய பிறப்பு இறப்பு என்னும் மாறு பாட்டை அகற்றுகிற இறைவனது திருவடிக்கு வணக்கம்.

இயற்கை அல்லது பிரபஞ்சத்துக்கு மாயை என்பது மற்றொரு பெயர். ஒரு கணப்பொழுதில் இருப்பது போன்று அடுத்த கணப்பொழுதில் எது இருப்ப தில்லையோ அது மாயை. எப்பொழுதுமே இல்லாதது எனச் சிலர் மாயையைத் தவறுதலாகப் பொருள்படுத்து கின்றனர்; அது சரியன்று.

(உபநி–7 பக்கம் 111)

15. சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

சீர்ஆர் பெருந்துறை நம்தேவன் அடிபோற்றி

சீரார்-சீர் ஆர்-மேன்மை நிறைந்த.

மேன்மை பொருந்திய திருப்பெருந்துறையில் எழுந்தருளி யிருக்கும் நம் கடவுளின் திருவடிக்கு வணக்கம்.

16. ஆராத வின்ப மருளுமலை போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி

தெவிட்டாத ஆனந்தத்தை ஊட்டியருள்கின்றவனும் மலைக்கு ஒப்பானவனும் ஆகிய சிவனுக்கு வணக்கம்.

17. சிவனவனென் சிந்தையு ணின்ற வதனு
18. லவனரு ளாலே யவன்றாள் வணங்கி

சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி

சிவபெருமான் யாண்டும் என் மனதில் வீற்றிருப்பதால் அவனது திருவருளைத் துணையாகக்கொண்டு அவனது திரு வடியைத் தொழுது.

விளக்கின் வெளிச்சத்தைக்கொண்டு விளக்கு அறி யப்படுகிறது. சூரிய வெளிச்சத்தைக்கொண்டு சூரியனை

அறிகிறோம். அங்ஙனம் இறைவனுடைய அருளைக் கொண்டே இறைவனை அறிகிறோம். அவனை அறியுமளவு நாம் அவனுக்கு ஆட்படுகிறோம். அப்படி ஆட்படுவது வணக்கமாகிறது. (உபநி-9 பக்கம் 115)

19. சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
20. முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்

சிந்தை மகிழச் சிவபுராணம்-தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்

முந்தை வினை-பூர்வ ஜன்மாந்தரங்களில் செய்த பழவினை.

நான் ஆனந்தம் அடைதல் பொருட்டும் எனது பழவினைகள் கெடுதல் பொருட்டும் யாண்டும் நிலைத்துள்ள சிவதத்துவங்களை உணர்ந்து ஓதுவேன்.

தாயைக் காணவில்லை என்று அழுகிற குழந்தைக்கு வேறு வஸ்துக்களைக் காட்டி மகிழ்வூட்ட வேண்டும். அப்பொழுது அதற்கு அழுதல் என்னும் வினை ஓய்கிறது. இதுகாறும் பிரபஞ்சத்தை நாடியிருந்ததினால் என் வினை பெருகிற்று. அது ஆரம்பத்தில் இன்பமாகவும் முடிவில் துன்பமாகவும் பரிணமித்துள்ளது. இனிச் சிவ சொருபத்தில் ஊறியிருப்பதற்கு ஏற்ப எனக்குத் துன்பம் கலவாத பேரின்பம் தழைத்தோங்குகிறது. உடலை உடற்றுகின்ற பழவினையை சிவானந்தத்திலிருக்கும் என் மனது வாங்கிக்கொள்வதில்லை. ஆதலால் பிராரப்த கர்மம் இருந்தும் அது இல்லாததற்கு நிகராகிறது.

புராணம் என்னும் பதம் பழமை எனப்பொருள் படுகிறது.சிவ தத்துவமானது அனைத்துக்கும் முன்னமே இருப்பது. ஆதலால் அது புராணம்.

21. கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட
[வந்தெய்தி

கண்-நுதலான் தன் கருணைக்கண் காட்ட வந்துஎய்தி

நுதல்-நெற்றி. (நெற்றிக்கண்ணன், முக்கண்ணன், திரியம்பகன், விருபாக்ஷன் என்றெல்லாம் சிவனார் அழைக்கப்படுகிறார்.)

நெற்றிக் கண்ணனுகிய சிவனுரது திருவருளாகிய கண்ணனது வழிகாட்ட நான் அவரை வந்தடைந்து,

புருவத்தின் கீழ் இருப்பவை மக்களுக்கு இருப்பவை போன்ற இரண்டு ஊனக் கண்கள். சிவனுக்கு நடு நெற்றியில் இருப்பது ஞானக்கண். யோக சாஸ்திரத்தில் சொல்லியுள்ள ஆருவது ஆதாரமாகிய ஆக்ஞைச் சக்கரத்தையும் இது குறிக்கிறது. ஞானக்கண் பரம் பொருளைக் காட்டுகிறது. ஊனக்கண் உலகைக் காட்டுகிறது. இகம் பரம் ஆகிய இரண்டையும் சிவனுர் ஏக காலத்தில் பார்த்துக்கொண்டிருப்பதால் அவர் முக்கண்ணன் எனப்படுகிருர். சிவனுரது ஞானக்கண் ஜீவர்களுக்கு அருளைச் சொரிந்து அவர்கள் உய்வு அடைதற்கு உறுதுணையாகிறது. (உபநி-7 பக்கம் 111)

22. எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி

எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி

எழில்ஆர்-அழகு நிறைந்த; கழல்-பாதம் அல்லது வீரச் சிலம்பு பூண்ட பாதம். இறைஞ்சுதல்-வணங்குதல்.

கணக்கிட முடியாத மகிமைகளையுடைய அவனது திருவடியை வணங்கி;

அனந்த கல்யாண குணங்களையுடையவர் ஈசுவரன். அவையாவும் அவருடைய மகிமைகள் அல்லது விபூதிகள் எனப்படுகின்றன. அவைகளைக் கணக்கிட ஈசனுர்க்கே இயலாதென்ருல் ஜீவர்கள் அவையனைத்தையும் எப்படி அறிந்துகொள்ளப் போகின்றனர்!

23. விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
[விளங்கொளியா

24. யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின்
[பெருஞ்சீர்

25. பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு
[ஒளியாய்

எண் இறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும்ஆறு ஒன்று அறியேன்

விளங்கு ஒளியாய்-கட்புலனாகின்ற பிரகாசத்தை யுடையவனே; *சீர்*-ஒழுங்கோடு கூடிய இயற்கையின் அமைப்பு; *மிக்காய்*-எஞ்சியிருப்பவனே; புகழும் ஆறு-போற்றுகிற வழி.

வான் உலகு, நிலவுலகு ஆகியவைகளை நிரப்பி, அவைகளுக்கு அப்பாலும் இருக்கிறாய், கட்புலனாகின்ற ஜோதியாய் இருக்கிறாய். அளவுகடந்து எங்கும் நிறைந்திருக்கிறாய்; உன்னுடைய பேரமைப்பைப் பாராட்டுகிற வழியை வினையில் கட்டுண்டுகிடக்கிற நான் சிறிதேனும் அறிந்திலன்.

அண்டபகிரண்டமாய் விரிந்திருப்பது பரம்பொருள்; அவையாவையும் கடந்திருப்பதும் பரம்பொருள். ஆதலால் அதற்குக் கடவுள் என்னும் பெயர் வந்துள்ளது. வானவெளியில் கணக்கற்ற நக்ஷத்திரங்களாய் ஒளிர்பவை யாவும் பரம்பொருளின் ஸ்தூல தோற்றங்களாகும். இத்தனைகோடி அண்டங்களின் ஒழுங்குப்பாடான நடைமுறை வியப்புக்குரிய விஷயமாகும். மேய்தற்கென்று கயிறிட்டுக் கட்டிவைத்துள்ள காளைக்கு மைதானம் முழுதும் சுற்றிப்பார்க்க முடியாது. வினையின்விளைவாக உடலை எடுத்து ஐம்பொறிகளில் கட்டுண்டு கிடக்கிற நான், அகிலப் பிரபஞ்சமாய் விளையாடுகிற உன்னை எங்ஙனம் அறிந்து போற்றமுடியும்!

26. புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
27. பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
28. கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
29. வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
30. செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
31. ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே [னெம்பெருமான்

புல்ஆகி பூடுஆய் புழுஆய் மரம்ஆகி
பல்விருகம்ஆகி பறவைஆய் பாம்புஆகி
கல்ஆய் மனிதர்ஆய் பேய்ஆய் கணங்கள்ஆய்

வல்அசுரர்ஆகி முனிவர்ஆய் தேவர்ஆய்
செல்லாஅ நின்ற இத்தாவர-சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்

பூடாய்-பூடு ஆகி, பூண்டு அல்லது சிறு செடி ஆகி; **விருகம்**-மிருகம், விலங்கு. **கணங்கள்**-பூதகணங்கள், தேவர்க்கும் மக்களுக்கும் இடையில் உள்ள உயிர்வகைகள். **தாவரம்**-ஸ்தாவரம், நிலைத்திணை. **சங்கமம்**-ஜங்கமம், இயங்குதிணை. **பிறந்து இளைத்தேன்**-பிறவியில் சலித்துப் போய்விட்டேன்.

கல் புல் முதலிய பிறவிகளில் வாழ்வைத் துவக்கி அறிவோடு கூடிய மானுடன் ஆகும் பரியந்தம் பல்கோடி பிறவிகளை எடுத்து இறைவா நான் சலிப்படைந்துவிட்டேன்.

இறைவன் தாமே ஜடப்பொருள் ஆகிறார். பின்பு அது சேதனப் பொருளாகப் பரிணமிக்கிறது. சேதனப் பொருள்களிலிருந்து உயிர்வகைகள் தோன்றுகின்றன. உயிர்கள் கல் நிலையிலிருந்து நிறை ஞானநிலை வரையில் படிப்படியாகப் பரிணமித்துக்கொண்டே போகின்றன. பரிணாமத்தில் எல்லா ஜீவர்களும் ஒரே முறையில் மேலே வருவதில்லை. வினைக்கு ஏற்ப வழிகள் பல உள. செய்யுள் அமைப்பின் பொருட்டு ஈண்டுப் பரிணாமம் முறை மாறி இயம்பப் பட்டிருக்கிறது.

32. மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று
[வீடுற்றேன்
மெய்யே உன்பொன் அடிகள் கண்டு இன்று வீடு
[உற்றேன்

மெய்யே-ஐயத்துக்கு இடமில்லாதவனே.

உபநிஷத் மந்த்ரம்—10.

अनाद्यनन्तं कलिलस्य मध्ये विश्वस्य स्रष्टारमनेकरूपम् ।
विश्वस्यैकं परिवेष्टितारं ज्ञात्वा देवं मुच्यते सर्वपाशैः ॥

அநாத்யனந்தம் கலிலஸ்ய மத்யே விச்வஸ்ய
ஸ்ரஷ்டாரம் அநேகரூபம் ।
விச்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம் ஞாத்வா
தேவம் முச்யதே ஸர்வபாசை: ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 5–13)

உனது ஒப்பற்ற திருவடிகளைச் சேவிக்கவே அது எனக்கு வீடுபேறு ஆயிற்று என்பதில் சந்தேகமில்லை.

நிலத்தில் தத்தளிக்கும் மீன் நீரினுள் வந்ததும் தனக்குச் சொந்தமான நிலையைப் பெற்றிருப்பதை அது உணர்வது போன்று பிறவிகளில் தத்தளித்த நான் என் இருப்பிடத்துக்கு வந்துவிட்டேன் என்று உன்னை அடைந்தவுடனே ஐயம் திரிபு அற உணர்கிறேன்.

33. உய்யவென் னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற

உய்ய என் உள்ளத்துள் ஓங்காரம் ஆய் நின்ற

अनाद्यनन्तं அநாத்யனந்தம் ஆதியந்தமில்லாதவரை कलिलस्य मध्ये கலிலஸ்ய மத்யே பிரளயத்தினின்று विश्वस्य स्रष्टारं விச்வஸ்ய ஸ்ரஷ்டாரம் விசுவத்தை சிருஷ்டி பண்ணின வனை अनेकरूपं அநேகரூபம் அநேக உருவங்களை எடுத்த வனை विश्वस्य விச்வஸ்ய விசுவத்தினுடைய एकं परिवेष्टितारं ஏகம் பரிவேஷ்டிதாரம் மூடுகிற ஒருவனை देवं தேவம் தேவனை ज्ञात्वा ஞாத்வா அறிந்து सर्वपाशैः ஸர்வபாசை: எல்லாப்பாசங் களிலிருந்தும் मुच्यते முச்யதே விடுபடுகிறான்.

ஆதியந்தமில்லாதவனை, பிரளயத்தினின்று விசுவத்தை சிருஷ்டி செய்கின்றவனை, எண்ணிறந்த வடிவெடுத்திருப்ப வனை, அனைத்தையும் மூடிக்கொண்டிருப்பவனை அனுபூதியில் அறிகிறவன் பாசங்களிலிருந்து முக்தியடைகிறான்.

இறைவனே ஜடப்பொருள் சேதனப்பொருள் ஆகிய அனைத்தும் ஆயினான். கல், புல் போன்ற அற்ப உயிர்களில் துவக்கி பிரம்மதேவன் வரையில் உள்ள எல்லாவித உயிர்களாக அவனே பரிணமித்தான். அவ் வுயிர்களுக்குத் தங்கள் நிஜ சொரூபம் தெரியவொட் டாது அவனே மறைத்து வைத்தான். இப்படி அவனை யும், அவனது வடிவங்களையும், செயல்களையும் உள்ள படி சுவானுபூதியில் அறிகிறவன் முக்தி யடைகிறான்.

உபநிஷத் மந்த்ரம்—11.

अमात्रश्चतुर्थोऽव्यवहार्यः प्रपञ्चोपशमः शिवोऽद्वैत
एवमोङ्कार आत्मैव संविशत्यात्मना आत्मानं य एवं वेद य एवं वेद ॥

என் உள்ளத்தினுள் ஓங்காரமாக நீ ஒலித்துக்கொண்டிருப்பதை நான் உணரும்பொழுது உய்வு அடைகிறேன்.

அண்டத்தில் இருப்பது பிண்டத்திலும் இருக்கிறது. அண்டம் முழுதிலும் இடையருது ஓங்காரமாக இறைவன் ஒலித்துக்கொண்டிருக்கிருன். பிண்டம் ஆகிய உடல் வாழ்வை ஒழுங்குப்படுத்துவதற்கு ஏற்ப ஓம் என்னும் ஓசையை உள்ளத்தினுள்ளும் கேட்கலாம். வானெலியை ஏற்கும் கருவியைச் சீர்ப்படுத்துதற்கு ஏற்ப ஒலி அதனூடு தெளிவுறுவது போன்றது மனிதன் தன்னைச் சீர்ப்

அமாத்ரச்சதுர்த்தோऽவ்யவஹார்ய:
ப்ரபஞ்சோபசம: சிவோऽத்வைத
ஏவமோங்கார ஆத்மைவ ஸம்விசத்யாத்மஞ
ஆத்மானம் ய ஏவம் வேத ய ஏவம் வேத ||

(மாண்டுக்யோபநிஷதம்—12)

अमात्र: அமாத்ர: ஓசையுண்டாகும்படி உச்சரிக்கப் படாதது अव्यवहार्य: அவ்யவஹார்ய: உலக.வழக்கத்துக்கு அப்பாற்பட்டது प्रपञ्चोपशम: ப்ரபஞ்சோபசம: பிரபஞ்சத்துக்கு எட்டாதது शिव: சிவ: சிவசொரூபமானது अद्वैत: அத்வைத: இரண்டற்றது चतुर्थ: சதுர்த்த: நான்காவது புருஷார்த்தம் एवं ஏவம் இத்தகைய ओङ्कार: ஓங்கார: ஓங்காரமானது आत्मा एव ஆத்மா ஏவ ஆத்மாவே य: ய: யார் एवं वेद ஏவம் வேத இங்ஙனம் அறிகிருனே (स: ஸ: அவன்) आत्मना ஆத்மஞ ஆத்மாவைக்கொண்டு आत्मानं ஆத்மானம் ஆத்மாவை संविशति ஸம்விசதி அடைகிருன்.

அமாத்ரப் பிரணவம் நான்காவது புருஷார்த்தமாகிறது; அது உலக வழக்கத்துக்கு உட்படாதது, பிரபஞ்சத்துக்கு எட்டாதது, சிவசொருபமானது, அத்வைதசொருபமானது. அதுவே பரமாத்மா. அனுபூதியில் அதை இங்ஙனம் அறிபவன் தன்னைக்கொண்டே அப்பரமாத்மனில் சேர்கிருன்.

ஓங்காரத்தைப் பிரணவம் என்று கூறுவதும் முறை. நாவால் அ+உ+ம் ஆக உச்சரிக்கப்படுகிற ஓம்-காரம் மாத்ரப் பிரணவம் எனப்படுகிறது. உச்சரிப்புக்கு

படுத்துவது. உள்ளமும் உடலும் ஒழுங்குப்பாடு அடைதற்கு ஏற்ப ஓங்காரத்தை ஆத்மசாதகன் தன்னுள்ளேயே கேட்கலாம். உய்வு அல்லது முக்தி அடைதற்கான பரிபாகம் வந்துவிட்டது என அந்த ஓங்கார ஓசை ஊர்ஜிதப்படுத்துகிறது.

34. மெய்யா விமலா விடைப்பாகா வேதங்க
35. ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற
[நுண்ணியனே

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

மெய்ப்பொருளே, தூயவனே, ரிஷப வாகனனே, வேதங்களால் ஐயாவென்று அழைக்கப்படுபவனே நீ உயர்ந்தும், தாழ்ந்தும்,விரிந்தும் உள்ள சூக்ஷ்மப் பொருள் ஆகின்றாய்.

கால தேச வர்த்தமானத்தால் பாதிக்கப்படாது இருப்பவன் ஸத்வஸ்து அல்லது மெய்யன். தன்னை மலினப்படுத்துதற்கு அவனுக்குப் புறம்பாக ஒரு பொருளும் இல்லையாதலால் அவன் விமலன். விடைப்பாகன் அல்லது காளையின் மீது ஊர்ந்திருப்பது உயிர்கள் அனைத்திலும் அவன் ஆரோகணம் செய்திருப்பதற்கு அறிகுறியாகிறது. இறைவனைப் பெரிய பொருள் எனப் போற்றுவது வேதங்களின் நோக்கமாகிறது. மேலும், கீழும், நடுப்பக்கமும் ஆகிய எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் பரமன். அவன் கட்புலனாகாதிருப்பதால் அவன் நுண்ணியன் எனப்படுகிறான்.

எட்டாதிருப்பது அமாத்ரப் பிரணவம். சகுண பிரம்மமாக அல்லது சிவசக்தி மயமாக ஒலிக்கிற ஓம் மாத்ரப் பிரணவமாகிறது. நிர்குண பிரம்மமாக அல்லது சுத்த சிவமாக இருக்கிற ஓம் அமாத்ரப் பிரணவமாகிறது. ஓசை, ஒலிக்கு அது அப்பாற்பட்டது. அதை அடையுமுன்பு சாதகன் 'ஓம் நம: சிவாய' என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டிருப்பது முறை.

36. வெய்யாய் தணியா யியமான னும்விமலா
37. பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய் ஆயினஎல்லாம் போய்அகல வந்துஅருளி

வெய்தல்-காய்தல்; தணிதல்-தணுப்பாயிருத்தல்; இயமானன்-உயிராயிருப்பவன், எஜமானனுயிருப்பவன்.

உஷ்ணமாயும், தணுப்பாயும், உயிர்த்தத்துவமாயும் உள்ள பரிசுத்தனே, என்னிடத்து அநித்தியமானவைகளையெல்லாம் அகற்றுதற்கு அருள்புரிந்து,

உயிர்த்தத்துவம் உருவெடுப்பதற்கு வெப்பமும் தணுப்பும் மாறிமாறி யமைந்து துணைபுரிகின்றன. நாடகத்தில் ஏழையாய் நடிப்பவன் உண்மையில் ஏழை யல்லன். சூரியன், சந்திரன், உயிர்வகைகள் ஆகியவைகளாகப் பரிணமிப்பதை முன்னிட்டுப் பரம்பொருள் தனது புனிதத்தை இழந்துவிடுவதில்லை. நிலையற்ற பிரபஞ்ச வாழ்வைப் புறக்கணிப்பதற்கு மாணிக்கவாசகருக்கு அருள்புரிந்த பரமன் ஆத்மசாதகர்கள் அனைவர்க்குமே அதே விதத்தில் அருள்புரிகிறுர்.

38. மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
39. யெஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே

மெய்ஞ்ஞானம்ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே

சுத்த சைதன்யமாய் ஒளிர்கின்ற பரஞ்ஜோதியே, எந்த விதமான அறிவுமில்லாத எனக்கு ஆனந்தத்தை நல்கும் பெரியோய்,

ஞானமும் ஜோதியும் சொரூபத்தில் ஒன்றே. விளக்கானது தன்னை விளக்கிக் காட்டுவதுபோன்று பொருள்களையும் விளக்கிக் காட்டுகிறது. ஆத்ம சைதன்யம் அங்ஙனம் தானே ஞான சொரூபமாயிருந்துகொண்டு புறத்தில் இருப்பவைகளையும் அறிகிறது. புறப்பொருள்களுக்குத் தோற்றமும் மறைவும் உண்டு. ஆனல் பர

மாத்ம சைதன்யமோ யாண்டும் நிறைஞான சொரூப மாய் இருக்கிறது. ஆதலால் அது மெய்ஞ்ஞானம்.

சந்திரனுக்கு சுயப்பிரகாசம் இல்லை. சூரியனிட மிருந்து வாங்கிய வெளிச்சத்தைக்கொண்டு அது மிளிர் கிறது. அங்ஙனம் ஜீவாத்மனுக்குத் தனி சைதன்ய மில்லை. சிவ சைதன்யமே ஜீவ சைதன்யமாக ஒளிர் கிறது. இன்பம் யாண்டும் சைதன்யத்துக்கு உரியது.

40. அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஜீவனாகிய எனது மயக்கத்தை நீக்குகிற சிவஞானமே.

தனக்குத் தனி வியக்தி யிருக்கிறதென்று ஜீவன் எண்ணிக்கொள்வது அஞ்ஞானம். ஜீவன் உலகை உல காகப் பொருள்படுத்துவதும் அஞ்ஞானம். சிவஞானம் அல்லது பிரம்மஞானத்தைப் பெறும்பொழுது ஜீவனும் ஒழிகிறான். அவன் பெற்றுள்ள பிரபஞ்ச ஞானமும் ஒழிகிறது.

41. ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகு
42. மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துஉலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்

தோற்றமும், வண்ணமும், முடிவும் இல்லாத நீ அண்டங் களை உண்டு பண்ணுவாய், நிலைத்திருக்கச்செய்வாய், துடைத் திடுவாய், அதற்கிடையில் ஜீவர்களை உன் மயமாக்குவாய்.

பரமாத்மனிடம் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என் னும் விகாரங்கள் உண்டாவதில்லை. ஆனால் தனது மாயப்பிரபஞ்சத்தின்கண் இந்த மூன்றுவிதத் தோற்றங் களையும் வருவிக்கும் வல்லமை அவனுக்குண்டு. யாண் டும் தன்மயமாயிருக்கிற கானலானது தன்னிடத்து நீர் இருப்பது போன்று காட்டிக்கொள்கிறது. அதே விதத் தில் நிர்விகாரியாகிய பிரம்மம் தன்னிடத்துப் பிரபஞ்சம்

என்னும் விகாரம் இருப்பது போன்று அஞ்ஞானத்தில் இருப்பவர்களுக்குக் காட்சி கொடுக்கிறது. அந்தக் காட்சியில் பிரயோஜனமும் உண்டு ஜீவர்கள் உய்வு அடைவதற்கு அது முகாமையாகிறது. அருள் எனப் படுவது அதுவே.

43. போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின் [றொழும்பின்

போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்

பிறவித் தளையைப் போக்குவிப்பதும் என்னை நினது திருத்தொண்டில் புகும்படிச் செய்வதும் நின் கருணையாகும்.

இது அருள்புரிதற்கு விளக்கமாகிறது.

44. நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
45. மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

நேரியாய்-போன்றவனே, சேயாய்-தூரத்தில் இருப்பவனே, நணியானே-பக்கத்தில் இருப்பவனே, மாற்றம்-மாறுபடுகிற, கழிய-அகன்றுபோமிடத்து, மறையோனே-வேதியனே.

பூவில் மணம் போன்றவனே, நீ வணங்காதார்க்குத் தொலைவிலும், வணங்குபவர்க்குப் பக்கத்திலும் இருக்கிறாய். மாறுபடுகிற மனது அற்றவிடத்து மிளிர்பவன் நீயன்றோ!

பூவுக்குப் பக்கத்தில் வந்தால் அதன் மணம் நுகரப் படுகிறது. எட்ட இருப்பவர்க்கு அது பயன்படுவதில்லை. இறைவனே அறிவுக்கு அறிவாயிருந்தும் அதை அறியாதார்க்கு அவன் தூர இருப்பவன் ஆகிறான். விகாரப்படுகிற அறிவு மனது எனப்படுகிறது. அது நிர்விகாரமாய் இருக்கும்பொழுது ஆத்மா எனப்படுகிறது. மாறுபடும் மனதின்மூலம் பார்க்கப்படும் பொழுது பரமாத்மன் மறைந்திருந்து தன்னைப் பிரபஞ்சமாகக் காட்டிக்கொள்கிறான். மனதற்ற நிலையில் அவன் உள்ளபடி ஒளிர்கிறான். ஓர் உபமானத்தின் மூலம்

இதை உணர்வது எளிது. கண்ணுடி ஒன்றில் மேடுபள்ளம் என்னும் விகாரமிருந்தால் அதன் மூலம் பார்க்கும் பொருளை அது உள்ளபடி விளக்குவதில்லை. தூயதும் ஒப்பமானதும் ஆகிய கண்ணுடியின் மூலம் பொருள் ஒன்று உள்ளபடி ஒளிர்கிறது. மனோநாசம் ஆத்மசாதனத்தின் முடிந்த நிலை என்பது தீவிர அதிகாரிக்கு விளங்குகிறது.

46. கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்
[போலச்
47. சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று

கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தால் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று

கன்னல்-கரும்பின் சாரம்.

அப்பொழுது கறந்த ஆவின் பாலோடு கருப்பஞ்சாற்றையும் நெய்யையும் கலந்து உண்ணும்பொழுது உண்டாகும் இன்பம் போன்றது இறைவனிடத்திருந்து வரும் பேரின்பம். அப்பேரின்பமோ நல்ல அடியவர்களது உள்ளத்தினுள் தேன் போன்று ஊறித் தெவிட்டாது தித்திக்கிறது.

தெரிந்துள்ள இன்பங்களை உபமானமாகக்கொண்டு தெரியாத இன்பத்தை யூகித்தல் முறையாகும். சுவை நிறைந்த நல்லுணவு வகைகள் உயிர்களுக்கு இன்பம் தருகின்றன. இறைவனோடு யோகம் பண்ணுவதில் விளையும் இன்பமோ இவை யாவிலும் மேலானது. உணவு வகைகளுள் இன்பமூட்டுவதிலும் நலனும் திறனும் விளைவிப்பதிலும் தேன் ஒப்பு உயர்வு அற்றது. ஆதலால்தான் பரஞானம் அல்லது பிரம்மவித்தையானது மதுவித்யா எனப்படுகிறது. தேன், மது என்று கூறப்படுகிறது.

48. பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
49. னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க
[ளேத்த

பிறந்தபிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த

நிறம்-இயல்பு, தன்மாத்திரை. விண்ணோர்-தேவர், இந்திரியங்கள், பூதங்கள். ஏத்துதல்-தொடர்புகொள்ளுதல்.

தொடர்ந்து வருகின்ற பிறவிகளை ஒழிக்கின்ற எங்கள் தலைவா, பூதங்களும் இந்திரியங்களும் உன்னைப் போற்றுதற்கு ஐந்து தன்மாத்திரைகளை உடைத்திருக்கிறாய்.

விண்ணோர்கள் என்று புராணம் பகர்வது நரர்களுக்கும் மேலாயுள்ள தேவர்களைக் குறிக்கிறது. இனி இந்திரியங்களையும் பஞ்ச பூதங்களையும் தேவர்கள் என்று பகர்வதும் தத்துவத்துக்குப் பொருந்துகிறது.

சுவை,ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து தன்மாத்திரைகளை முறையே அப்பு, அக்னி, வாயு, ஆகாசம், பிருத்துவிஆகியபூதங்கள்விளக்குகின்றன.இப்படி ஐந்து விதங்களில் அறியப்படுபவர் ஈசனே யாயினும் அவருடையநிஜசொரூபத்தை விளக்க இவைகளுக்கு இயலாது.

50. மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன்
[றன்னை
51. மறைந்திட மூடிய மாய விருளை

மறைந்து இருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்-
[தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை

மாய இருள்-மாயையாகிய அஞ்ஞான இருட்டு.

தேவர்களுக்கும் ஐம்பொறிகளுக்கும் விளங்காது நீ மறைந்திருக்கிறாய். திறமை வாய்ந்துள்ள வினைக்கு அடிமைப்பட்டுள்ள என்னை நான் அறிந்துகொள்ளாதபடி அக்ஞான இருள் என்னை மூடிக்கொண்டிருக்கிறது.

வினை, மாயை, அக்ஞான இருள் ஆகிய இவையாவும் இயற்கை அல்லது பிரகிருதியின் வெவ்வேறு கூறுகள். பிரகிருதியில் கட்டுண்டு கிடப்பவன் ஜீவன் அல்லது பத்தாத்மா. (மாயைக்கு விளக்கம்-16வது பக்கம்)

52. அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
53. புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி

அறம் பாவம் என்னும் அரும்கயிற்றல் கட்டி
புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி

அறம்பாவம்-நல்வினை தீவினை. அருங்கயிறு-வலிமை நிறைந்த பாசக்கயிறு.

நல்வினை தீவினை என்று சொல்லப்படும் கட்டு அறுக்க முடியாத பாசக்கயிறு என்னைக் கட்டிப் பிணித்து வைத்திருக்கிறது. என் உடலின் உள்ளே புழுவுக்கு ஒப்பான தாதுக்களின் தத்துவம் நிறைந்திருக்கிறது. அது ஓயாது அழுக்காக மாறிக்கொண்டிருக்கிறது. அத்தகைய புல்லிய அமைப்பானது புறத்தில் தோலைப் போர்வையாகப் போட்டு மூடி வைக்கப்பட்டிருக்கிறது.

54. மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
55. மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

மலம் சோரும்-மலம் ஒழுகிக்கொண்டிருக்கிற; குடில்-சிறு வீடு; மலங்க-வருந்தும்படி; புலன்-பொறி.

ஓயாது மலம் வெளியே கிளம்பிக்கொண்டிருக்கிற ஒன்பது துவாரங்களையுடைய உடல் என்னும் சிறு வீட்டில் நான் அடைபட்டிருக்கிறேன். அதில் அமைந்துள்ள ஐந்து இந்திரியங்களும் என்னை ஏமாற்றித் துன்புறும்படிச் செய்கின்றன.

உபநிஷத் மந்த்ரம் — 12.

न सांपरायः प्रतिभाति बालं प्रमाद्यन्तं वित्तमोहेनमूढम् ।
अयं लोको नास्ति पर इति मानी पुनः पुनर्वशमापद्यते मे ॥

ந ஸாம்பராய: ப்ரதிபாதி பாலம் ப்ரமாத்யந்தம்
வித்தமோஹேன மூடம் ।
அயம் லோகோ நாஸ்தி பர இதி மானீ புன:
புனர்வசமாபத்யதே மே ॥

(கடோபநிஷதம் 2—6)

वित्तमोहेन मूढम् வித்தமோஹேன மூடம் செல்வத்தில் கொண்டுள்ள மோகத்தால்மூடத்தனத்தை அடைந்துள்ள प्रमाद्यन्तं बालम् ப்ரமாத்யந்தம் பாலம் கவலைப்படாத சிறுவனுக்கு (அறிவிலிக்கு) साम्परायः ஸாம்பராய: பாரமார்த்திகப்

பஞ்சேந்திரியங்கள் வாயிலாக நாம் பெறும் ஞானமும் ஆனந்தமும் அரைகுறையானவைகள் என்பது நமக்கு விளங்குவதில்லை. ஆதலால் நாம் துன்புறுகிறோம். மெய்ப் பொருளைச் சேர்தற்கு ஐம்பொறிகள் உதவமாட்டா என்பதை நாம் அறிந்துகொண்டால் பின்பு அவைகளிடத்து வரம்பு கடந்த பற்றுதல் வைக்கமாட்டோம்.

56. விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
57. கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகு
58. நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
59. நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்புஆகிக் கசிந்து உள்உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன் மேல்வந்துஅருளி நீள்கழல்கள் காஅட்டி

பெருநிலை न प्रतिभाति ந ப்ரதிபாதி விளங்குவதில்லை अयं लोकः (अस्ति) அயம் லோக: (அஸ்தி) இவ்வுலகம் இருக்கிறது. परः न अस्ति பர: ந அஸ்தி இதிலும் மேலானது இல்லை इति मानी இதி மானீ இப்படி நினைப்பவன் पुनः पुनः புன: புன: திரும்பத் திரும்ப वशं मे வசம் மே வசம் என் வசம்(மரணத்தின் வசம்) आपद्यते ஆபத்யதே ஆபத்துக்கு ஆளாகிறான்.

செல்வத்தில் பற்றுவைத்து அறிவை இழந்து கவலையற்றுக் கிடக்கும் பேதைக்குப் பாரமார்த்திகப் பெருநிலை விளங்குவதில்லை. இவ்வுலகம்தான் உளது, இதிலும் உயர்ந்தது ஒன்றுமில்லை என்று எண்ணுபவன் திரும்பத் திரும்ப மரணத்துக்கு ஆளாகிறான்.

இது யமதர்மராஜா நசிகேதனுக்குப் புகட்டியது. இந்திரியங்களின் வசப்பட்டுக் கிடப்பவர்கள் பிறவிப் பெருங்கடலில் உழல்கின்றனர். சிற்றுயிர்கள் இந்திரிய வாழ்வைத் தவிர வேறு எதையும் அறிய மாட்டா. ஆதலால் அவைகள் பிறந்து இறந்து படிப்படியாகப் பெருநிலைக்கு வருகின்றன. ஆனால் மனிதன் மரணத்தை வெல்லுதற்கு முதலில் ஆசையை வெல்ல வேண்டும். பஞ்சேந்திரியங்களில் வைத்துள்ள பற்றுதலை ஒழிக்கவேண்டும்.

விமலன்-தூயோன்; நல்குதல்-கொடுத்தல்; நீள்கழல்கள்-நீண்ட வீரக்கழல்களை அணிந்துள்ள திருவடிகள்.

மிருகத்துக்கு ஒப்பானது என் மனது. உன்னிடத்து உருகி அன்பு பூண்டு அது நல்ல மனமாகும்படி நீ அருள்புரிந்துள்ளாய். மண்ணுலகில் உன் காட்சியைக் காணும்படி நீ அனுக்கிரகித்துள்ளாய்.

மனது தன்னளவில் விலங்கு போன்று கொடியது. ஆனால் அதை தெய்வத்திடத்து அன்பு பூணும்படி செய்து விட்டால் அது நல்ல மனமாகிறது. இனித் தூய மனமுடையவர்க்கு இந்நிலவுலகே நிர்மலனாகிய ஈசனாக மிளிர்கிறது. இறைவன் வேறு, இயற்கை வேறு அல்ல. காண்போனது தகைமைக்கு ஏற்ப அது இறைவனாகவோ, இயற்கையாகவோ காட்சி கொடுக்கிறது. (உபநி — 2 பக்கம் 102)

60. நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
61. தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

நாயின் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயின் சிறந்த தயா ஆன தத்துவனே

தயாவானவன்-கருணாகரன்; தத்துவன்-மெய்ப்பொருள்.

உபநிஷத் மந்த்ரம் — 13.

अन्यच्छ्रेयोऽन्यदुतैव प्रेयस्ते उभे नानार्थे पुरुषं सिनीतः ।
तयोः श्रेय आददानस्य साधुर्भवति हीयतेऽर्थाद्य उ प्रेयो वृणीते ॥

அன்யச்ரேயோऽன்யதுதைவ ப்ரேயஸ்தே
உபே நானார்த்தே புருஷம் ஸினீத: ।
தயோ: ச்ரேய ஆததானஸ்ய ஸாதுர்பவதி
ஹீயதே அர்த்தாத்ய உ ப்ரேயோ வ்ருணீதே ॥

(கடோபநிஷதம் 2 — 1)

श्रेयः ச்ரேய: *சிரேயஸ் அல்லது சிறப்பு அல்லது நலன்* अन्यत् அன்யத் *வேறு* उत உத *பின்பு* प्रेयः ப்ரேய: *பிரீதிகரமானது* अन्यत् एव அன்யத் ஏவ *வேறானதே.* ते उभे தே உபே *அவை யிரண்டும்* नानार्थे நானார்த்தே *வெவ்வேறு குறிகளில்* पुरुषम् புருஷம் *மனிதனை* सिनीतः ஸினீத: *தளைக்*

நாயினுங் கீழோனுகிய என்னிடத்து மெய்ப்பொருளாகிய நீ தாயினும் மேலான தயாளுவாகக் கருணை காட்டியிருக்கிருய்.

சேரிடமறிந்து சேர் என்பது கோட்பாடு. ஈசனைச் சேர்வதால் ஜீவனுக்கு எல்லா நலனும் உண்டாகிறது. பஞ்சேந்திரியங்கள் மூலமாகப் பிரபஞ்சத்தைச் சேர்வதால் கீழ்மை மிக உண்டாகிறது.

62. மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
63. தேசனே தேஞு ரமுதே சிவபுரனே

கின்றன तयो: தயோ: அவ்விரண்டினுள் श्रेय: आददानस्य ச்ரேய: ஆததானஸ்ய சிரேயஸை மேற்கொண்டவன் साधुः भवति ஸாது: பவதி சான்ருேன் ஆகிருன் उ உ இனி यः ய: யார் प्रेय: वृणीते ப்ரேய: வ்ருணீதே பிரியமானதைப் பொறுக்கி யெடுக்கிருனே (स: ஸ: அவன்) अर्थात् அர்த்தாத் குறியினின்று हीयते ஹீயதே வழுவுகிருன்.

நலன் வேறு, இனிது வேறு; வெவ்வேறு தேவைகளுக்குரிய அவ்விரண்டும் மனிதனைப் பிணைக்கின்றன. நலனை நாடுபவன் சான்ருேன் ஆகின்ருன். இனியதை நாடுபவன் குறியினின்று வழுவுகிருன்.

பரபிரம்மத்தை அறிந்து அதை அடைவதற்கு ஏதுவாயிருப்பது எதுவோ அது நலன். பஞ்சேந்திரியங்கள் வாயிலாகப் பெறுகிற இன்பத்துக்கு ஏதுவாயிருப்பது இனிது. ஒருவனுக்கு முக்தி தேவை. அவன் சிரேயஸ் அல்லது நலனில் பிணைக்கப்படுபவன் ஆகிருன். மற்றொருவனுக்கு இன்பம் தேவை. அவன் ஐம்பொறிகள் வாயிலாகப் புலன்களில் பிணைக்கப்படுபவன் ஆகிருன். இந்த இரண்டு விதப் பற்றுதல்களில் முந்தையது மனிதனைப் பிறவிப்பிணியினின்று விடுவிக்கிறது. "பற்றுக பற்றற்ருன் பற்றினை-அப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு."

உபநிஷத் மந்த்ரம் — 14

न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ।
तमेव भान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति ॥

மாசு அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர்அமுதே சிவபுரனே

சோதி-ஜோதி. சுடர்-பிரகாசம். தேசன்-தேஜஸ். அமுது-அமிர்தம். சிவபுரம்-பிரம்மபுரம்.

யாண்டும் நிறைவாயிருந்து பிரகாசிக்கின்ற பழுதற்ற ஜோதியே, தேஜோமயமானவனே, தேனே, அரிய அமிர்தமே, சிவபுரனே.

ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா
வித்யுதோ பாந்தி குதோऽயமக்னி: ।
தமேவ பாந்தமனுபாதி ஸர்வம் தஸ்ய
பாஸா ஸர்வமிதம் விபாதி ॥

(கடோபநிஷதம் 5—15)

तत्र தத்ர ஆங்கு सूर्यः ஸூர்ய: சூரியன் न भाति ந பாதி பிரகாசிப்பதில்லை चन्द्र तारकम् न சந்த்ர தாரகம் ந சந்திரனும் நட்சத்திரங்களும் பிரகாசிப்பதில்லை इमाः विद्युतः இமா: வித்யுத: இந்த மின்னல்கள் न भान्ति ந பாந்தி பிரகாசிப்பதில்லை अयम् अग्निः அயம் அக்னி: இந்த அக்னி कुतः குத: எப்படிப் பிரகாசிக்கப்போகிறது तम् भान्तम् एव தம் பாந்தம் ஏவ அந்த பிரம்மத்தின் பிரகாசத்தாலேயே सर्वम् अनुभाति ஸர்வம் அனுபாதி அனைத்தும் அதைச் சார்ந்து பிரகாசிக்கின்றன तस्य भासा தஸ்ய பாஸா அதன் பிரகாசத்தால் इदम् सर्वम् இதம் ஸர்வம் இதெல்லாம் विभाति விபாதி பிரகாசிக்கின்றது.

சூரியன் ஆங்கு பிரகாசிப்பதில்லை. சந்திரனும் நக்ஷத்திரங்களும் மின்னல்களும் ஆங்கு ஒளிர்வதில்லை. இனி, இந்த நெருப்பு எப்படிப் பிரகாசிக்கும்? பிரம்மத்தைச் சார்ந்து யாவும் பிரகாசிக்கின்றன. அதன் பிரகாசத்திலின்று இவை யாவுக்கும் வெளிச்சம் வருகிறது.

வேதாந்தம் மெய்ப்பொருளை பிரம்மம் என்கிறது. சைவசமயம் அதை சிவம் என்கிறது. இந்த மெய்ப்பொருளே தூண்டா விளக்கு எனவும், அணையா விளக்கு எனவும் இயம்பப்படுகிறது. பிரளய காலத்தில் பிரபஞ்சம் யாவும் ஒடுங்கியிருக்கிறவிடத்தும் பிரம்மஜோதி தன்மயமாயிருக்கிறது. அப்பொழுது சூரியனோ, சந்திரனோ,

இயற்கைப் பொருள்களுள் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், மின்னல், தீ ஆகியவைகள் ஒளிர்கின்றனவெனினும் அழிந்துபட்டுப்போம் தன்மை அவைகளிடத்து உண்டு. மெய்ப்பொருளாகிய சிவப்பிரகாசமோ குற்றமற்றது. அது பூரணமாயிருக்கிறது. தேனை ஒத்திருந்து அது பரமானந்தத்தைத் தருகிறது. அது நிறைந்த அமிர்த சொரூபமாதலால் அதை அடைபவன் அழிந்துபட்டுப் போவதில்லை. பிரம்மபுரம் என்றோ சிவபுரம் என்றோ அப்பொருள் பகரப்பெறுகிறது.

நக்ஷத்திரங்களோ, மின்னலோ, நெருப்போ தோற்றத்தில் இல்லை. அவைகளின் வெளிச்சம் பிரம்மத்தை விளக்கிக் காட்டுவதற்கு வேண்டியதில்லை. பிரம்மத்தை விளக்கிக் காட்டவும் அவைகளுக்கு இயலாது. அது தன்னைத் தானே விளக்குகிறது. அது எப்படியென்றுபார்ப்போம். ஜீவர்களாகிய நாம் பிரம்ம சைதன்யத்தின் விகாரங்களாம். கார் இருள் அறையில் நாம் அமர்ந்திருக்கும் பொழுது நம் உடலே நமக்குத் தென்படுவதில்லை. ஆனால் "நான் இருக்கிறேன்" என்னும் உணர்வு ஆத்ம சைதன்யத்துக்கு இருக்கிறது. சைதன்யமாகிய என்னைக் காட்டித் தருதற்கு சூரியன் தேவையில்லை; சூரியனால் முடியாது. சந்திரன், நக்ஷத்திரங்கள், மின்னல், அக்கினி ஆகியவைகளின் நிலைமையும் அத்தகையதே. பிரம்ம சைதன்யம் தன்னைத்தானே விளக்கிக்கொள்கிறது.

பிரபஞ்சப் பொருள்களுள் சூரியன் ஒருவிதத்தில் பிரம்மத்தை ஒத்திருக்கிறது. ஏனென்றால் அது தன்னையும் விளக்குகிறது. தன் முன்னிலையில் இருக்கிற மற்றவைகளுக்கும் ஒளியூட்டுகிறது. ஆனால் பிரளயத்தில் சூரியப் பிரகாசம் அழிந்துபட்டுப் போகிறது. அது நித்தியமானதன்று. பிரம்மசைதன்யமோ தோன்றாது, மறையாது, நிரந்தரமாயிருக்கிறது. அது தன்னையும் விளக்குகிறது, பிரகிருதியையும் விளக்குகிறது. தன்மயமாதலால் அது மாசற்ற ஜோதி.

64. பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
65. நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெட

பாசம்ஆம்பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட

பாரித்தல்-காப்பாற்றுதல், ஆரியன்-நிறைமனிதன், ஆசாரியன்.

பாசமாகிய கட்டையறுத்து என்னை உய்விக்கும் ஆசாரியன் நீ. ஒன்றுபடுத்துகிற அருளைச் சொரிந்து என் நெஞ்சில் உள்ள குறைபாட்டை நீ அகற்றுகிறாய்.

சிறியதில் பிணைப்புண்டு கிடப்பது பாசம். நிறைநிலைக்குத் தடையாயிருப்பது பாசம் என்பதை நிறைநிலையில் இருக்கும் ஆசிரியன் தன் சொரூபத்தின் மூலம் காட்டிக்கொடுக்கிறான். ஒன்றில் பற்றுவைத்து மற்றொன்றினின்று பிரிந்திருப்பது மனம் பண்ணுகிற கேடு ஆகும். ஆனால் அருளோ அன்பு சொரூபம். அது அனைத்தையும் ஐக்கியப்படுத்துகிறது.

66. பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
67. யாரா வமுதே யளவிலாப் பெம்மானே

பேராது நின்ற பெரும் கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே அளவு இலாப் பெம்மானே

பேராது-பெயர்த்து எடுக்கப்படாது. பேர் ஆறு-பெரிய நதி. ஆரா-தெவிட்டாத.

குற்றம் நிறைந்த என் நெஞ்சினின்றும் பிரிந்து போகாது நிலைத்திருக்கிற கருணை வள்ளல் நீ. கங்கா நதியின் மூலம் உன் கருணையை நீ விளக்குகின்றாய். தெவிட்டாத அமிர்தம் நீ. அனந்த கல்யாண குணங்களையுடைய பரம புருஷன் நீ.

68. ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
69. நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே

ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆர்உயிர்ஆய் நின்றானே

ஆராயாதவர்களது மனதில் மறைந்திருக்கும் ஒளியே, என் மனதை நீராய் உருகப்பண்ணி எனது அரிய உயிராய் நிலைத்திருப்பவன் நீ.

சக்கிமுக்கிக் கல்லினுள் தீ மறைந்திருப்பதுபோன்று சிவபோதத்தை வளர்க்காதவர்கள் உள்ளத்திலும் சிவ சைதன்யம் மறைந்து ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. என் உள்ளம் அன்பில் உருகிப் பக்குவமாயிருப்பதால் அத னுள் நீ பேருயிராய் இலங்குவது அனுபூதியில் அறியப் படுகிறது.

70. இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
71. யன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையும்ஆய் அல்லையும்ஆம்

உபநிஷத் மந்த்ரம்—15.

आसीनो दूरं व्रजति शयानो याति सर्वतः ।
कस्तं मदामदं देवं मदन्यो ज्ञातुमर्हति ॥

ஆஸீனோ தூரம் வ்ரஜதி சயானோ யாதி ஸர்வத: ।
கஸ்தம் மதாமதம் தேவம் மதன்யோ ஞாதுமர்ஹதி ॥

(கடோபநிஷதம் 2—21)

(अयम् आत्मा **அயம் ஆத்மா** *இந்த ஆத்மாவானது*) आसीनः **ஆஸீன:** *அமர்ந்திருந்தபடி* दूरम् व्रजति **தூரம் வ்ரஜதி** *தூரத் தில் போகிறது* शयानः **சயான:** *சயனித்தபடி* सर्वतः **ஸர்வத:** *எங்கும்* याति **யாதி** *போகிறது* मदामदं (मद+अमदम्) **மதாமதம் (மத+அமதம்)** *இன்பமும் துன்பமும் உடையதை* तम् देवम् **தம் தேவம்** *அந்தச் சுடரை* मदन्यः **மதன்ய:** *எனக்கு அன் னியமான* कः **க:** *யார்* ज्ञातुम् **ஞாதும்** *அறிந்துகொள்ள* अर्हति **அர்ஹதி** *தகுதியுடையவன்.*

பரமாத்மன் இருந்தபடி எங்கும் செல்லுகிறார்; சயனித்த படி எங்கும் போகிறார். அந்த ஜோதியனை, இன்பமும் துன்ப மும் உள்ளானை, அதொன்றும் இல்லானை என் போன்றவர் அன்றி வேறு யார் அறிவார்?

நசிகேதன் என்று அழைக்கப்பட்ட ரிஷிபுத்திர னுக்கு இந்த வாக்கியத்தை யமதர்மராஜா பகர்ந்தார். தகுதி வாய்ந்தவர்கள்தான் பரமாத்மனை அறிந்துகொள் கிறார்கள் என்பது இதன் கருத்து.

நீ பரம்பொருள் ஆதலால் உனக்கு இன்பமும் துன்பமும் இல்லை. ஆனால் உயிர்கள் அனைத்துமாய் நீ இலங்குவதால் அவ்வுயிர்கள் அனைத்தின் இன்ப துன்பங்கள் உன்னுடையவை களாம். உன்னை வழுத்துபவர்க்கு நீ முற்றிலும் சொந்தமாகின்றாய். நீ உலகனைத்துமாயிருக்கின்றாய். ஆயினும் அதனால் உன் நிஜசொரூபம் சிறிதேனும் மாறவில்லை.

72. சோதியனே துன்னிருளே தோன்றாப்
[பெருமையனே

73. யாதியனே யந்த நடுவாகி யல்லானே

சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே

ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானே

துன்இருள்-மிகுந்த இருட்டு.

முரண்பாடுகளெல்லாம் உன்னிடம் கூடுகின்றன. நீ ஆத்ம ஜோதி; கட்புலனாகாத இருள். தோன்றியுள்ள பெருமை. தோன்றாப் பெருமையாகிய அனைத்தும் உனக்கே சொந்தம். சகுண பிரம்மம் என்னும் நிலையில் நீ பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கு ஆதிமூலம். இறுதியில் அது உன்னிடத்து ஒடுங்கு

கடலின் கீழ்ப்பகுதி அசைவற்று இருந்தபடி இருக்கிறது. அதன் மேல் பரப்பில் அசைவும் போக்குவரத்தும் உண்டு. பரமாத்மன் செயல் அற்றும் இருக்கிறார்; செயல் உற்றும் இருக்கிறார். இக்கோட்பாடு சிதம்பரம் கோயிலில் எழுந்தருளியுள்ள மூர்த்திகள் இருவர் மூலம் விளக்கப்படுகிறது. அசைவற்று இருந்தபடி தன்னில் திருப்தனாயிருப்பவர் கோவிந்தராஜா. பிரபஞ்சம் என்னும் சபை முழுவதையும் இயக்கி அதற்கு சபாபதியாயிருப்பவர் நடராஜா. அந்த சபாபதி ஈசுவரன் அல்லது சகுணப்பிரம்மம் எனப்படுகிறார். பின்பு அவரே நிர்க்குண பிரம்மமாகவும் இருக்கிறார். தூய அந்தக்கரணத்துக்கும் நிர்க்குணபிரம்மம் எட்டாதது. ஆதலால் அது சிதம்பர ரகசியம் எனப்படுகிறது. பிரபஞ்சமயமாயுள்ள சகுண பிரம்மத்துக்குப் பிரபஞ்சத்திலுள்ள இன்பதுன்பங்கள் யாவும் சொந்தமாகின்றன. நிர்க்குண பிரம்மத்துக்கோ இன்ப துன்பம் ஒன்றுமில்லை.

கிறது. இடை நிலையிலும் அது உன்னிடத்திலேயே இருக்கிறது. நிர்க்குண பிரம்மம் என்னும் நிலையில் இந்த விகாரங்கள் உன்னை வந்து தொடுவதில்லை.

74. ஈர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை
[பெருமானே
75. கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார்
[தங்கருத்தின்

ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்
[கருத்தின்

ஈர்த்து-வலிய இழுத்து. எந்தை-என் தந்தை. கூர்த்த-கூர்மையான.

ஈசா, நீ வலிய வந்து என்னை இழுத்து ஆட்கொண்டுள்ளாய். நீ எனக்குத் தந்தையாகவும் இறைவனாகவும் இருக்கின்றாய். மிகக் கூர்மையான மெய்ஞானம் படைத்திருப்பவர்களே உன்னை உள்ளவாறு உணர்ந்துகொள்வார்கள்.

இறைவன் தம்மைத் தடுத்துஆட்கொண்டார் என்று மாணிக்கவாசகர் மொழிகிறார். உண்மையில் பக்தர்கள் எல்லோருமே இவ்விதம் உணர்கின்றனர். தவத்தின் மூலமாகவும் பிரம்மசரியத்தின் மூலமாகவும் மனிதனது அறிவு கூர்மையான நுண்ணறிவாகத் தெளிவடைகிறது. அத்தகைய அறிவை **புத்தி ஸம்யோகம்** எனவும் **ஸம்யக் ஞானம்** எனவும் வேதாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன. அப்படி அறிவு பரிபாகம் அடைந்தவர்க்கே பரபிரம்மத்தை கிரகிக்கும் அறிவுத் திறன் வருகிறது.

76. நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே

நோக்கு அரியநோக்கே நுணுக்குஅரிய நுண் உணர்வே

ஊனக்கண்கொண்டு காணமுடியாது; ஆனால் தெளிந்த மனக்கண்கொண்டு உன்னைக் காணலாம். அந்தக்கரணம்

உபநிஷத் மந்த்ரம்—16

न संदृशे तिष्ठति रूपमस्य न चक्षुषा पश्यति कश्चनैनम् ।
हृदा हृदिस्थं मनसा य एनमेवं विदुरमृतास्ते भवन्ति ॥

அல்லது மனக்கண் பண்படுதற்கு ஏற்ப நீ நன்கு உணரப்படுகின்றாய்.

இரும்பு முதலிய உலோகங்கள், மரம், கண்ணாடி முதலியன தூய நுண்ணிய நிலையை எட்டுங்கால் அவைகளின் மீது முகத்தின் பிம்பத்தைக் காணலாம். மனதினின்று மாசு நீங்குதற்கு ஏற்ப அதனுள் ஈசனது சான்னித்தியத்தை உணரலாம்.

ந ஸம்த்ருசே திஷ்டதி ரூபமஸ்ய ந சக்ஷுஷா
பச்யதி கஸ்சனைனம் ।
ஹ்ருதா ஹ்ருதிஸ்தம் மனஸா ய ஏனமேவம்
விதுரம்ருதாஸ்தே பவந்தி ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 4—20)

अस्य रूपं அஸ்ய ரூபம் அவனுடைய வடிவம் संदृशे ஸம்த்ருசே காட்சியில் न तिष्ठति ந திஷ்டதி இருப்பதில்லை एनं ஏனம் இந்தப் பரமனை चक्षुषा சக்ஷுஷா கண்கொண்டு कश्चन கஸ்சன யாரும் न पश्यति ந பச்யதி பார்ப்பதில்லை ये யே யார் एनं ஏனம் இந்தப் பரமாத்மனை हृदा मनसा ஹ்ருதா மனஸா ஞானக் கண்ணால் एवं हृदिस्थं ஏவம் ஹ்ருதிஸ்தம் இப்படி நெஞ்சத்தில் இருப்பதை विदुः விதுः அறிகிறார்களோ ते தே அவர்கள் अमृताः भवन्ति அம்ருதாः பவந்தி அமிர்த சொரூபமாகின்றனர்.

பரமனுடைய வடிவம் காட்சிக்கு வருவதில்லை. இப்பரமனை யாரும் கண்கொண்டு பார்த்ததில்லை. உள்ளத்தினுள் பரமனை அனுபூதியில் காண்பவர் மரணமிலாப் பெருநிலையெய்துகின்றனர்.

பரவஸ்துவானது கருவி கரணங்களைக் கடந்து தன்னில் தானாய்ப் பேருணர்வாய் இருப்பதால் அது நோக்கு அரிய நோக்கு எனப்படுகிறது. உள்ளத்தினுள் இருக்கிற உணர்வு எனினும் அது இயற்கையோடு சம்பந்தப் படாத உணர்வாதலால் நுணுக்கு அரிய நுண்ணுணர்வு எனப்படுகிறது.

77. போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே

பூரணனாகிய நீ எங்குமிருப்பதால் உனக்குப் போதல் வருதல் பிறபொருளைச் சேர்தல் என்பன இல்லை. கலப்பதற்கு வேறு பொருள் ஒன்றும் இல்லாததால் நீ யாண்டும் புனிதமாகவே இருக்கிறாய். ஆதலால் நீ புண்ணியன். நீ சுத்த சிவம்.

78. காக்குமெங் காவலனே காண்பரிய
[பேரொளியே

காக்கும் எம் காவலனே காண்பு அரிய பேர் ஒளியே

காவலன்-வேந்தன்.

நீ யாண்டும் சாக்ஷியாயிருந்து என்னைக் காப்பாற்றி வரும் வேந்தன். ஊனக்கண்கொண்டு காணமுடியாத மனசாக்ஷி என்னும் மாறாத ஞானச் சுடர் நீ.

ஜீவாத்மாவாகிய எனக்குப் பிறவி என்னும் பெரும் பயணம் இருக்கிறது. அதில் நான் எடுத்ததேகங்கள்பலப் பல. அவை யாவிலும் என்னை நான் அறியாத நிலையில் இருந்தேன். பின்பு என்னை நான் ஏகதேசம் அறியலானேன். அதன் பிறகு மனசாக்ஷியாகிய உன்னைக்கொஞ்சம்

உபநிஷத் மந்த்ரம்—17.

बृहच्च तद् दिव्यमचिन्त्यरूपं सूक्ष्माच्च तत् सूक्ष्मतरं विभाति ।
दूरात् सुदूरे तदिहान्तिके च पश्यत्स्विहैव निहितं गुहायाम् ॥

ப்ருஹச்ச தத் திவ்யம் அசிந்த்யரூபம்
ஸூக்ஷ்மாத் ச தத் ஸூக்ஷ்மதரம் விபாதி ।
தூராத் ஸுதூரே தத் இஹாந்திகே ச
பச்யத்ஸு இஹ ஏவ நிஹிதம் குஹாயாம் ॥

(முண்டகோபநிஷதம் 3-7)

तत् தத் அது (பிரம்மம்) बृहत् ப்ருஹத் பெரியது दिव्यं திவ்யம் பிரகாசமானது अचिन्त्यरूपम् அசிந்த்ய ரூபம் சிந்தனைக்கு எட்டாதது विभाति च விபாதி ச ஒளிரவும் செய்கிறது तत् தத் அது सूक्ष्मात् ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மத்திலும் सूक्ष्मतरं ஸூக்ஷ்மதரம் அதிஸூக்ஷ்மமானது तत् தத் அது दूरात् தூராத் தூரத்திலெல்லாம் सुदूरे ஸுதூரே மிக தூரத்

அறியவருகிறேன். இத்தனை படித்தரங்களிலும் நீ எனக்குக் காவலனயிருந்து என்னைக் காப்பாற்றிவந்துள்ளாய்.

79. ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற

ஆற்று இன்பவெள்ளமே அத்தா மிக்காய் நின்ற

ஆற்று இன்பம்-ஆறு இன்பம்-நெறியினின்று வருகிற இன்பம்.

நன்னெறியினின்று உதிக்கிற பேரின்பப் பெருக்கே, நீ எனக்குத் தந்தையாயும் அதற்கு மேம்பட்டும் இருக்கிருய்.

இன்பமாகத் துவங்கித் துன்பமாக முடிவுறுவது துன்மார்க்கம். ஆறு அல்லது நெறி சன்மார்க்கத்தைக் குறிக்கிறது. அது யாண்டும் பேரின்பத்தைப் பெருக்குகிறது. ஜீவர்களுக்கும் ஜகத்துக்கும் முதல் காரணமாய் ஈசன் இருப்பதால் அவன் அத்தன் அல்லது அப்பன் என அழைக்கப்படுகிருன். பிறகு சிருஷ்டியில் சிறிதும் சம்பந்தப்படாமல் அவன் இருப்பது அனுபூதியில்விளங்குவதால் அவன் மிக்காய் என்று கூறப்படுகிருன்.

80. தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத
[நுண்ணுணர்வாய்

தோற்றச்சுடர்ஒளிஆய்ச்சொல்லாத நுண்உணர்வுஆய்

தில் (இருக்கிறது) इह இஹ இங்கே अन्तिके அந்திகே உடலின் உள்ளே (இருக்கிறது) इह एव இஹ ஏவ இவ்வாழ்விலேயே पश्यत्सु பச்யத்ஸு பார்ப்பவர்களுடைய गुहायाम् குஹாயாம் உள்ளத்தில் निहितम् च நிஹிதம் ச எழுந்தருளியிருக்கிறது.

பெரிய பொருளாய், சுயஞ்ஜோதியாய் மனதுக்கு எட்டாததாய் ஒளிர்வது பிரம்மம். அது சூக்ஷ்மத்தில் அதிசூக்ஷ்மமானது; தூரத்தில் அதி தூரமானது. இங்கே உடலினுள்ளும் அது இருக்கிறது. அது உள்ளத்தில் நிலைபெற்றிருப்பதை இம்மை வாழ்விலேயே சான்ருேர் அனுபூதியில் அறிகின்றனர்.

பரமன் நீக்கமற எங்கும் நிறைந்திருப்பதால் அவனுக்குப் போக்கும் வரவும் இல்லை. அவனே அனைத்துமாயிருப்பதால் புணர்வுக்கு அவகாசமில்லை. **அஸ்பர்ச யோகம்** அல்லது சென்று அடையாத ஐக்கியம் என்பது இதுவே.

[நின்ற-நிலைத்திருந்து] தோற்றச் சுடர்ஒளியாய்-தன்னைத் தானே விளக்கிக்கொண்டிருக்கிற பரமாத்ம ஜோதியாய்.

சாசுவதமாய் உள்ள சுயஞ்ஜோதிப் பிழம்பே, நீ சொல்லில் அடங்காத பேருணர்வுப் பரம்பொருள்.

சூரியன், நக்ஷத்திரம் முதலியவைகளின் ஒளி பிரளய காலத்தில் அணைந்துபட்டுப் போகின்றது. ஆனால் பரமாத்மாவின் பிரகாசம் யாண்டும் இருந்தபடி இருக்கிறது.சுஷுப்தி அவஸ்தையில் ஜீவாத்மனுக்கு இருக்கிற நுண்ணுணர்வு சொல்லில்தட்டுப்படாததாய் இருக்கிறது. அங்ஙனம் பரமாத்மாவின் நுண்ணுணர்வு (प्रज्ञानघनं பிரக்ஞான கனம்) பிரபஞ்சத்தின் தோற்றத்திலும் ஒடுக்கத்திலும் சொல்லிலும் தட்டுப்படாததாயிருக்கிறது.

81. மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே
[வந்தறிவாம்

மாற்றம்ஆம் வையகத்தின் வெவ்வேறே வந்து
[அறிவு ஆம்

மாற்றம் ஆம்-மாறுபட்டு வருகிற. வையகம்-உலகம்.

இடையறாது மாறுபாடு அடைந்து வருகிற நிலவுலகிலே வெவ்வேறு வடிவங்களினூடு நீ அறிவாக இலங்குகின்றாய்.

இயற்கையில் உள்ள ஸ்தாவர ஜங்கமம், சராசரம் ஆகிய யாவும் அறிவு நிறைந்தவைகளாக இலங்குகின்றன. இத்தனைவித அறிவுகளெல்லாம் ஏகமாய் உள்ள வாலறிவின் பலப்பல தோற்றங்களாம். ஈசனே இத்தனைவித வடிவங்கள் எடுத்து இவைகளுள் இத்தனைவித அறிவுகளாக விளையாடுகிறான்.

82. தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையு
83. ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே

தேற்றனே தேற்றத்தெளிவே என்சிந்தனையுள்

உபநிஷத் மந்த்ரம்—18.

एष देवो विश्वकर्मा महात्मा सदा जनानां हृदये सन्निविष्टः ।
हृदा मनीषा मनसाऽभिक्लृप्तो य एतद् विदुरमृतास्ते भवन्ति ॥

ஊற்று ஆன உண்ஆர்அமுதே உடையானே

தேற்றன் - தெளிவானவன். **தேற்றத் தெளிவு** - நிறைந்த தெளிவு. **ஊற்று ஆன** - சுனையாகிச் சுரக்கின்ற. **உண் ஆர் அமுது** - உண்ணுதற்கான அரிய அமிர்தம். **உடையான்** - பிரபஞ்சம் அனைத்திற்கும் சொந்தக்காரன்.

பிரக்ஞானமே, திரண்ட பிரக்ஞானமே, நீ என் உள்ளத்தினுள் ஊற்றெடுத்துப் பெருகி, உண்பதற்கான அரிய அமிர்தமானாய். என்னை உடைத்திருப்பவன் நீயே.

தூங்குகிறவனுக்கும் தூக்கத்தினின்று தெளிவடைகிறவனுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் வெளிப்படையாகிறது. தெளிந்த நிலை பிரக்ஞானம் எனப்படுகிறது. உறக்கத்தில் தன்னை மறைத்திருக்கும் நிலை ஜட அவஸ்தை எனப்படுகிறது. ஜீவர்கள் தெளிவுறுதலில் பல படித்தரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு படித்தரமும் ஒரு ஞான பூமி எனப்படுகிறது. அப்படி ஏழு ஞானபூமிகள் இருக்கின்றன. ஏழாவது ஞான பூமி சுத்த சைதன்யம் (Pure Consciousness) எனவும், சுத்த சிவம் எனவும், பிரக்ஞானம் எனவும் பகரப்பெறுகிறது.

ஏஷ தேவோ விச்வகர்மா மஹாத்மா ஸதா
ஜனனம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட: ।
ஹ்ருதா மனீஷா மனஸாऽபிக்லுப்தோ ய
ஏதத் விதுரம்ருதாஸ்தே பவந்தி ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 4-17)

एषः देवः ஏஷ: தேவ: இந்த தெய்வம் विश्वकर्मा விச்வ கர்மா உலகைப்படைத்து உடைத்திருப்பவன் महात्मा மஹாத்மா எங்கும் நிறைந்தவன் हृदा ஹ்ருதா உள்ளன்பினால் मनीषा மனீஷா அறிவினால் मनसा மனஸா எண்ணத்தினால் अभिक्लृप्तः அபிக்லுப்த: வரம்புக்கு உட்பட்டவன் जनानां ஜனனம் ஜனங்களினுடைய हृदये ஹ்ருதயே ஹிருதயத்தில் सदा सन्निविष्टः ஸதா ஸந்நிவிஷ்ட: ஸதா வீற்றிருப்பவன் ये யே யார் एतत् ஏதத் இதை विदुः விது: அறிகிறார்களோ ते தே அவர்கள் अमृताः भवन्ति அம்ருதா: பவந்தி அமிர்த சொரூபமாகிறார்கள்.

அது மனதற்ற பரிசுத்த நிலை. மற்று மனதின் மலினத்துக்கு ஏற்ப மனிதனிடத்துப் பிரக்ஞானம் மங்குகிறது. சாதனத்தின் மூலம் மனதில் உள்ள மாசு நீங்கிப் பிறகு மனோநாஸம் உண்டாகும்பொழுதுபிரக்ஞானம் முற்றிலும் தன்மயமாய் ஒளிர்கிறது. தெளிவடைந்துவருகிற ஜீவன் பிரக்ஞானத்தைத் தன் உயிர்க்கு உயிராய் உணர்கின்றான். அதை அமிர்தசொரூபமாய் உணர்கின்றான். ஏனென்றால் அழியும் பொருள்களுக்கிடையில் அழியாதிருப்பது அது ஒன்றே. பிரக்ஞானத்தை ஜீவன் உடைத்திருப்பவன் அல்லன்; ஆனால் பிரக்ஞானம் ஜீவனை உடைத்திருக்கிறது. ஆதலால் உடையான் என அது அழைக்கப்படுகிறது. அனுபூதியில் இது விசிஷ்டாத்வைத நிலை.

84. வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
85. வாற்றேனெம் மையா வரனேயோ வென் [றென்று
86. போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு [மெய்யானார்

வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப

பிரபஞ்சத்தைப் படைத்து எங்கும் நிறைந்திருக்கும் தெய்வம் அன்பினாலும் அறிவினாலும் எண்ணத்தினாலும் வரையறுக்கப்பட்டவனாய் ஜனங்களின் உள்ளத்தில் வீற்றிருக்கிறான். இதை அனுபூதியில் அறிகிறவர்கள் அமிர்த சொரூபமாகிறார்கள்.

அன்பானது தூயதாகுமளவு அது பக்தியாக வடிவெடுக்கிறது. பக்தி நிறைந்த உள்ளத்தில் இறைவனுடைய சான்னித்தியம் தெளிவடைகிறது. அதே விதத்தில் அறிவு அல்லது விவேகம் ஓங்குதற்கு ஏற்பப் பரமனது பிரபை நெஞ்சத்தில் நிலைபெறுகிறது. பின்பு எண்ணம் திண்ணியதாகும்போது சித்தமிசை பரவஸ்துவின் பிரசன்னம் தேற்றமுறுகிறது. இவையாவும் அனுபூதியின் விளைவு. பரமன் அமிர்தசொரூபம்; பரமனை அடைந்தவர்களும் அமிர்தசொரூபம்.

ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்து இருந்துபொய்கெட்டு மெய்ஆனார்

விகாரம்-திரிவுபட்டு அமைதல். கிடத்தல்-தங்கியிருத்தல். விடக்கு உடம்பு-தசை உடம்பு. ஆற்றேன்-பொறுக்கமாட்டேன். அரன்-ஹரன்.

பாலன், யுவன், கிழவன் என்று வெவ்வேறு விகாரங்களை யுடைய தசையுடலினுள்ளே குடியிருக்கச் சகியேன். உனது அடியார்கள் உன்னை ஐயனே என்றும், ஹரனே என்றும் வழுத்தி, உன்னைப் பாராட்டி, உன் மயமாயிருந்து, பொய் உடலைத் தவிர்த்து சிவ சொருபமானார்கள். நானும் அப்படியாகவேண்டும்.

ஜீவன் ஒருவன் எதை பாவிக்கின்றானோ அதுவாக அவன் மாறியமைகிறான். பரிணாமம் இங்ஙனம் நிகழ்ந்து வருகிறது. மானுட உடலைப் பெற்றான பிறகு பரிணாமம் உடலில் நிகழ்வதில்லை. தேகாத்ம புத்தியை, அதாவது உடலைத் தான் என்று கருதும் உணர்வைத் தாண்டி மனிதன் ஆத்ம போதத்தை அல்லது சிவபோதத்தை வளர்க்க வேண்டும். அப்பொழுது அவன் சிவசொருப மாகிறான்.

87. மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
88. கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே

மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டுஅழிக்க வல்லானே

கள்ளம் புலன் குரம்பை-வஞ்சகத்தையுடைய ஐம்பொறிகளுக்கு இடமாகிய உடம்பை.

மெய்ஞ்ஞானத்தைத் திரிவுபடுத்தும் தன்மை பொறிகளுக்கு உண்டு. அப்பொறிகளுக்கு உறைவிடம் இவ்வுடல். என் உள்ளத்தினுள் சிவபோதத்தை வளர்ப்பதற்கு ஏற்ப நீ இந்த உடல் அமைப்பைக் கலைத்துவிடுகிறாய். அதனால் நான் வினைக்கு வசப்பட வேண்டியதில்லை; மீண்டும் இவ்வுலகில் வந்து பிறக்கவும் வேண்டியதில்லை.

89. நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே

நள் இருளில் நட்டம்பயின்று ஆடும் நாதனே

நள் இருள்-நடு இரவு.

உயிர்கள் எல்லாம் அயர்ந்து உறங்குகின்ற வேளையிலும் நீ நித்திய ஜாக்கிரதாவஸ்தனாய் விழித்திருக்கும் தலைவன் ஆகின்றாய்.

உலகம் முழுதையும் ஒழுங்காக இயக்குவிப்பதை முன்னிட்டு இறைவன் நடராஜன் எனப்படுகிறார். ஆனால் ஈண்டு அவரது இடையறாத விழிப்பு நிலையே சிறப்பிக்கப்படுகிறது. நன்கு நடனம் ஆடுகின்றவன் தெளிவுற விழித்திருந்தே ஆகவேண்டும். அகிலாண்டமும் பிரளயத்தில் ஒடுங்கியிருக்கின்ற வேளையிலும் இறைவன் பூரண விழிப்புடன் இருக்கிறார். அவர் படைத்துள்ள அப்பெருநிலை நடனத்துக்கு நிகரானது.

ஆத்மசாதகன் அர்த்த ஜாமத்தில் எழுந்திருந்து தியானம் பழகினால் தனது உள்ளத்தில் ஈசனது சான்னித்தியத்தை நன்கு உணர்வான். இனி அவன் அவ்வேளையில் மயானத்துக்குச் சென்று தியானம் பழகினால் சிவசான்னித்தியம் இன்னும் உறுதியாக உணரப்படும். கோயில் சுடுகாடு என்னும் கூற்று வெறுமனே வந்ததன்று. ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸர் சிறுவனாயிருந்த பொழுதே நள்ளிரவில் தியானத்துக்கு ஸ்மசானத்துக்குப் போய்விடுவார்.

90. தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

தில்லை-சிதம்பரம், சித் ஆகாசம்.

அகிலாண்டங்களையும் ஒழுங்காக இயக்குவித்தல் என்னும் கூத்தை நடாத்துபவனே, நீ சிறப்பாகச் சிதம்பரம் என்னும் க்ஷேத்திரத்திலும் தமிழ்நாட்டிலும் திகழ்கின்றாய்.

உபநிஷத் மந்த்ரம் — 19.

तदेजति तन्नैजति तद् दूरे तद्वन्तिके ।
तदन्तरस्य सर्वस्य तद् उ सर्वस्यास्य बाह्यतः ॥

ததேஜதி தன்னைஜதி தத் தூரே தத்வந்திகே ।
ததந்தரஸ்ய ஸர்வஸ்ய தத் உ ஸர்வஸ்யாஸ்ய பாஹ்யத: ॥

(ஈசாவாஸ்யோபநிஷதம் — 5)

நாம் அறிகிற ஜட ஆகாசம் எங்கும் வியாபகமானது. நீக்கமற அது எங்கும் நிறைந்திருக்கிறது. அத்தகைய ஜட ஆகாசம் சித் ஆகாசத்தில் அடங்கி ஒடுங்குகின்றது. சித் ஆகாசமோ பூரணம். பூரணத்துக்கு அன்னியமானது ஒன்றுமில்லை.

91. அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று

ஓவென்று ஓலமிட்டு அரற்றிப் பூரணனை நாடுபவனது பிறவியையும் அதினின்று விளைகிற துன்பத்தையும் அகற்றுபவன் அவனேயாம்.

கடலை எட்டுகிற நதி தானே கடல் ஆகிறது. அங்ஙனம் பூரணத்தை எட்டுபவனுக்குப் பிறவி யென்னும் புன்மையில்லை.

92. சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்

93. சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து

[சொல்லுவார்

तत् தத் அந்த பிரம்மம் एजति ஏஜதி அசைகிறது तत् தத் அது न एजति ந ஏஜதி அசைகிறதில்லை तत् தத் அது दूरे தூரே தூரத்தில் இருக்கிறது तत् தத் அது उ अन्तिके உ அந்திகே பக்கத்திலும் இருக்கிறது तत् தத் அது अस्य सर्वस्य அஸ்ய ஸர்வஸ்ய இவையனைத்தின் अन्तः அந்த: உள்ளும் तत् தத் அது उ உ இன்னும் अस्य सर्वस्य அஸ்ய ஸர்வஸ்ய இவையனைத்தின் बाह्यतः பாஹ்யத:புறத்திலும் இருக்கிறது.

இந்த பிரம்மம் அசைகிறது; இது அசையாதிருக்கிறது. இது அண்மையில் இருக்கிறது; சேய்மையில் இருக்கிறது. அனைத்தின் உள்ளும் இது இருக்கிறது; அனைத்தின் புறத்திலும் இது இருக்கிறது.

கடலின் கீழ்ப்பகுதி அசைவதில்லை, மேற்பகுதி அசைகிறது. நிர்க்குண பிரம்மம் அசைவதில்லை; சகுண பிரம்மம் அசைகிறது. அறிவிலிகளுக்கு அது தூரத்தில் இருக்கிறது. விவேகிகளுக்கு அது அந்தராத்மாவாக இருக்கிறது. அந்தர்யாமியா யிருப்பதும் பிரம்மம்; அதீதத்தில் இருப்பதும் பிரம்மம்.

94. செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
95. பல்லோரு மேத்தப் பணிந்து.

சொல்லற்கு அரியானைச்சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார். சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

சொல்லற்கு அரியானைச் சொல்லி-சொல்லுக்கு எட்டாதவனைப் பணிந்து புகழ்ந்து சொல்லி. **திருவடிக்கீழ்**-சிவபெருமானது திருவருளை நாடி நின்று. **பொருள் உணர்ந்து**-அர்த்தத்தை அறிந்துகொண்டு.

சொல்லில் அடங்காத சிவனைச் சொற்கொண்டு போற்றவேண்டும். பெரியோர்கள் அவனைக் குறித்துச் சொன்ன சொற்களின் உட்கருத்தை அறிந்து உணர்ந்து அவ் உணர்ச்சியின் மூலம் அவனைப் போற்ற வேண்டும். உணர்ச்சியின் உயர்வே நல்ல ஆராதனையாகிறது. ஆப்த வாக்கியங்களின் உட்கருத்துக்களை உள்ளவாறு உணர்தற்கு இறைவனுடைய அருளை நாடி நிற்கவேண்டும். இறைவனுடைய சொரூபத்தை உள்ளபடி உணர்ந்து போற்றுபவரே அவனுடைய சன்னிதி சார்கின்றனர். அப்படி சன்னிதி சார்பவர்களை ஏற்கனவே சார்ந்த சிவ பக்தர்கள் பணிவோடு வணங்கி வரவேற்கின்றனர்.

திரும்பத் திரும்பப் பகர்வதைக் கிளிப்பிள்ளை காது கொடுத்துக் கேட்கிறது. தான் கேட்ட சொல்லை அது பகர்கிறது. ஆனால் கிளிக்குச் சொல்லின் பொருள் தெரியாது. சொல்லில் அடங்காத சிவனைக் குறித்துச் சான்றோர்கள் சீரிய சொற்களைச் சோராது சொரிந்திருக்கின்றனர். அச்சொற்கள் யாவும் பொருள் சேர்ந்துள்ள புகழ்களாகின்றன. அவைகளில் பொதிந்துள்ள பொருள்களை உணருமளவு பரமனே ஓரளவு உணரப்படுகிறான் பரமனை அனுபூதியில் அடையப் பெற்றவர்கள் பகர்ந்துள்ள பதங்கள் ஆப்த வாக்கியங்கள் எனப்படுகின்றன. அந்த ஆப்த வாக்கியங்களின் உட்கருத்து அறிந்து கொள்ளப்படுமளவு கடவுள் தத்துவமே அறிந்துகொள்

ளப்படுகிறது. ஈசனது சொரூபத்தை அங்ஙனம்உணர்ந்து மனது அதில் ஊறியிருப்பது நல்ல ஆத்மசாதனமாகிறது. ஈசனை அறிந்துகொள்ள இப்படி முயல்வதோடுகூட அவனுடைய அருளையும் நாடி நிற்கவேண்டும். அவனுடைய அருளும் சாதகனுடைய முயற்சியும் ஒன்று கூடுவதேசிவ ராஜயோகம் எனப்படுகிறது. அந்த யோகத்தின் விளைவாக சிவ பாவசமாதி கூடுகிறது. சிவபக்தன்சிவ சன்னிதி சேருகிறான். மற்ற பக்தர்களும் அவனைப்போற்றிப் பாராட்டி அப்பெரு நிலைக்கு அவனை வரவேற்கின்றனர்.

இது துவைதமதம் போற்றுகிற சாலோக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம் என்னும் பதவி முக்தியாம்.

தில்லையில் அருளிய

2. கீர்த்தித் திருவகவல்

சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை

1. தில்லை மூதூ ராடிய திருவடி
2. பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல் உயிர் எல்லாம் பயின்றனன் ஆகி

மூதூர்-பழைய க்ஷேத்திரம். **பயின்றனன்**-பழகினவன்.

பழைய பதியாகிய சிதம்பரத்திலே நிருத்தனம் செய்த நடராஜன் உயிர்கள் அனைத்தின் உள்ளத்திலும் இனிது இடம் பெற்றிருக்கிறான்.

தென்னாற்காடு ஜில்லாவிலிருக்கும் திருத்தில்லையை ஈண்டுக் குறிப்பிடுவது உபசாரத்துக்காக. சிதம்பரம் அல்லது சிதாகாசம்அகிலாண்டங்களுக்கும்ஆதாரமாய் யாண்டும் இருக்கிறது. ஆதலால் அது ஒன்றே மூதூர். தத்துவத்தில் சிதம்பரமும் நடராஜனும் ஒன்றேயாம். குணம் குறியற்ற அந்தப் பரம வஸ்து உயிர்கள் அனைத்தின் உள்ளத்திலும் சர்வகாலமும் இனிது வீற்றிருக்கிறது. ஜீவராசிகளுக்கு அது பொதுவுடைமை.

3. எண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி
4. மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்

எண் இல் பல் குணம் எழில் பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோர் உலகும்

எண் இல்-அளவற்ற. எழில்-அழகு.

மண்ணுலகம், விண்ணுலகம், தேவலோகம் ஆகிய எங்குமே கணக்கிடமுடியாதபடி குணபேதங்களும் அழகு வகைகளும் நிறைந்திருக்கின்றன.

குணபேதங்களில் நற்குணம் தீக்குணம் ஆகிய யாவும் அடங்கியிருக்கின்றன. தீயது அதற்கேற்ற சூழ்நிலையில் நல்லதாயிருப்பது நமக்கு விளங்குகிறதில்லை. அழகில் அழகில்லாததும் சேர்ந்திருக்கிறது. அழகு உடையவைகளை அழகற்றவைகள் என்று சொல்வதெல்லாம் வெவ்வேறு மன நிலைகளைப் பொறுத்திருக்கின்றன.

5. துன்னிய கல்வி தோற்றியு மழித்து
6. மென்னுடை யிருளை யேறத் துரந்தும்

துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்
என்னுடை இருளை ஏறத் துரந்தும்

துன்னிய-பொருந்திய. இருள்-அக்ஞானம். ஏற-முழுதும். துரத்தல்-போக்குதல்.

ஈசனுடைய திருவிளையாடலில் அப்போதைக்கப்போது தேவையாயிருக்கிற கலைஞானங்கள் தோன்றவும் மறையவும் செய்கின்றன. ஆனால் என்போன்ற ஜீவனுடைய அக்ஞானத்தை நாளடைவில் முழுதும் போக்குதல் இறைவனுடைய மாறாத திட்டமாகும்.

கலைஞானங்கள் அறுபத்து நான்கு என்று கூறுவது உலக வழக்கு. ஆனால் அவைகள் அதற்குமேல் எத்தனையோ இருக்கின்றன. இனிக் கால தேச வர்த்தமானத்துக்கு ஏற்றபடி கலைஞானங்கள் மாறி மாறி அமைந்து வருகின்றன. முன்பு ஒருகாலத்தில் இருந்த அஸ்திர ஸஸ்திர வித்தைகள் இன்று மறைந்துபட்டுப் போய்விட்டன. சில்லறை தேவதைகளைக் கொண்டு ஏவல் செய்யும் கலையும் இன்று காணப்படுவதில்லை. ஆனால் இக்காலத்தில்

பௌதிக விக்ஞானத்தை ஒட்டிய கலைகள் பல தோற்றத்துக்கு வந்துள்ளன. இயற்கையின் நடைமுறையில் இவை யாவும் இடம் பெற்றுள்ளன. ஆனால் ஜீவர்கள் அக்ஞானத்தினின்று மீண்டு, ஆத்மஞானத்தைப் பெற்று முக்தியடையும் கிருத்தியம் இறைவன் அருளால் எக்காலத்திலும் ஒரே பாங்கில் நிகழ்ந்து வருகிறது.

7. அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
8. குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்

அடியார் உள்ளத்து அன்பு மீதூரக்
குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்

மீதூர்தல்-அதிகமாதல். கொள்கை-கோட்பாடு. சிறப்பு-சிரேயஸ், மஹிமை, சான்னித்தியம்.

பக்தி பெருக்கெடுத்து ஓடும் பக்தர்களது உள்ளமே இறைவனது பெருங்கோயில் ஆகிறது என்பது கோட்பாடு. இறைவனுடைய சான்னித்தியத்தை அங்கு நன்கு காணலாம்.

ஈசன் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கிறான். எனினும் அவனுடைய சான்னித்தியத்தைத் தெளிவுற பக்தர்களிடத்துக் காணலாம்.

9. மன்னு மாமலை மகேந்திர மதனிற்
10. சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியுங்

மன்னும் மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்

மன்னுதல்-நிலைபெற்றிருத்தல்.

யாண்டும் நிலைத்திருக்கிற பெரிய மலையாகிய மகேந்திரத்தில் நீ ஆகமத்தைப் பகர்ந்தருளி யிருக்கிறாய்.

மகேந்திர மலையில் வைத்து ஆகமத்தை அண்ணல் அம்பிகைக்கு எடுத்து விளக்கினார் என்பதும், அம்பிகையானவள் நிகமத்தைத் தனது தலைவனுக்கு எடுத்து விளக்கினாள் என்பதும் புராணக் கதைகளாகும்.

11. கல்லா டத்துக் கலந்தினி தருளி
12. நல்லா ளோடு நயப்புற வெய்தியும்

கல்லாடத்துக் கலந்து இனிது அருளி
நல்லாளோடு நயப்புறவு எய்தியும்

நயப்புறவு-இன்பம், நல்ல உறவு.

கல்லாடம் என்னும் க்ஷேத்திரத்தில் நீ வீற்றிருக்கிறாய். உமாதேவியாரோடு நீ இன்புற்றிருக்கிறாய்.

அம்பிகைக்கு அமைந்துள்ள ஆயிரம் திருநாமங்களுள் கல்யாணி कल्याणी என்பதொன்று. நல்லாள் அல்லது நலத்தைச் செய்பவள் என்பது அதன் பொருள். நலத்தை நல்குதற்கே பிரபஞ்ச மயமான சக்தியிருக்கிறாள். நலன் அவளிடத்திருந்து வருவதால் உயிர்வகைகள் இயற்கைத் தாயை நேசிக்கின்றன; இறைவனும் அவ்விணக்கத்தில் இன்டம் காண்கிறார்.

13. பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடு
14. மெஞ்சா தீண்டு மின்னருள் விளைத்துங்

பஞ்சப் பள்ளியில் பால்மொழி தன்னொடும்
எஞ்சாது ஈண்டும் இன் அருள் விளைத்தும்

பான் மொழி-அம்பிகை. எஞ்சாது-குறையாமல். ஈண்டும்-மிகுதியாகிய.

பஞ்சப்பள்ளி என்னும் ஸ்தலத்தில் சிவசக்தியாகிய நீ இனிய அருளை ஏராளமாகத் தோற்றுவித்துள்ளாய்.

15. கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
16. விராவு கொங்கை நற்றடம் படிந்துங்

கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நல் தடம் படிந்தும்

கிராத வேடம்-கிராத வேஷம்-வேடனது உருவம். கிஞ்சுக வாயவள்-முருக்கம் பூப்போன்ற உதட்டையுடையவள். விராவு-இணைந்திருக்கிற. நல்தடம்-நல்ல தடாகம்.

வேடனது கோலம் தாங்கி வந்தவன் நீ. முருக்கம் பூப்போன்ற அதரத்தை யுடையவளும், நெருங்கிய ஸ்தன பாரத்தை யுடையவளும் ஆவாள் உமாதேவி. அத்தகைய சக்தி தேவியாகிய நல்ல தடாகத்தில் மூழ்கியிருப்பவன் நீ.

தனது பக்தனாகிய அர்ஜுனனோடு போர்புரிந்து, அவனது திறமையை வெளிப்படுத்தி அவனுக்குப் பாசு

பதாஸ்திரம் வழங்குதற்குச் சிவனுர் வேடனது கோலம் எடுத்து வந்தார். இயற்கைத் தாயின் வனப்பும் செழிப்பும் ஈண்டு உருவகப்படுத்தி இயம்பப்படுகிறது. அத்தகைய சக்தியினூடு சிவம் வியாபகமாயிருக்கிருர்.

17. கேவேட ராகிக் கெளிறது படுத்து
18. மாவேட் டாகிய வாகமம் வாங்கியும்

கேவேடர் ஆகி கெளிறு அது படுத்தும்
மாவேட்டு ஆகிய ஆகமம் வாங்கியும்

மாவேட்டு ஆகிய-ஆத்மாக்களால் விரும்புதற்கு ஏற்ற.

செம்படவர் வேஷம் பூண்டு கெளிற்றுமீனை வலை வீசிப்பிடித்து அதனூடு இருந்த ஆகம நூல்களை நீ மீட்டெடுத்துள்ளாய். அந்த ஆகமங்களை ஆத்மாக்கள் யாண்டும் விரும்புகின்றனர்.

19. மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்
20. துற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியு

மற்று அவை தம்மை மகேந்திரத்து இருந்து
உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும்

அந்த ஆகமங்களை மகேந்திர மலையில் எழுந்தருளியிருந்து உனக்கு வாய்த்துள்ள ஐந்து முகங்களால் உபதேசித்து அருளினை.

21. நந்தம் பாடியி னன்மறை யோனு
22. யந்தமி லாரிய னயமர்ந் தருளியும்

நந்தம்பாடியில் நான்மறையோன் ஆய்
அந்தம் இல் ஆரியன் ஆய் அமர்ந்தருளியும்

அந்தம் இல்-முடிவற்ற. ஆரியன்-ஆசாரியன்.

நந்தம்பாடி என்னும் ஸ்தலத்தில் நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்த வேதியனுய் வந்து அளப்பரிய அறிவு படைத்த ஆசாரியனுய்த் திகழ்ந்தாய்.

23. வேறுவே றுருவும் வேறுவே றியற்கையு
24. நூறுநூ றுயிர மியல்பின தாகி

வேறு வேறு உருவும் வேறு வேறு இயற்கையும்
நூறு நூறு ஆயிரம் இயல்பினது ஆகி

எண்ணிக்கையில் அடங்காத உருவங்களையும், எண்ணிக்கையில் அடங்காத இயல்புகளையும் உடைய இயற்கைப் பொருள்களாக நீ வந்துள்ளாய்.

இந்தப் பிரபஞ்சம் வேறு பரம்பொருள் வேறு அன்று. பஞ்சேந்திரியங்கள் மூலம் நுகரப்படும்பொழுது அது பிரபஞ்சம் எனப்படுகிறது. ஞானதிருஷ்டியில் காணும்பொழுது அது கடவுள் எனப்படுகிறது. உண்மையில் இருப்பது ஒன்றே.

25. ஏறுடை யீசனிப் புவனியை யுய்யக்
26. கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்

ஏறு உடை ஈசன் இப்புவனியை உய்யக்
கூறு உடை மங்கையும் தானும் வந்தருளிக்

ஏறு-காளை, ரிஷபம். கூறு-சொரூபத்தில் ஒரு பகுதி.

காளைவாகனத்தையுடைய இறைவன் இவ்வுலகை உய்வித்தல் பொருட்டு மாது ஒரு பாகனாக எழுந்தருளியுள்ளான்.

பிரபஞ்சம் முழுதும் சிவசக்தி சொரூபம். ஏன் அது அப்படி அமைந்திருக்கிறது என்பது கேள்வி. உயிர்கள் பரிணமித்து மேல் நிலைக்கு வந்து உய்வு அடைவதை முன்னிட்டே அது அப்படி இருக்கிறது.

27. குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
28. சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்

குதிரையைக் கொண்டு குடநாடு அதன்மிசைச்
சதுர்படச் சாத்து ஆய் தான் எழுந்தருளியும்

குடநாடு-மேல் நாடு. சதுர்பட-திறமை பொருந்த. சாத்து ஆய்-குதிரை பழக்குபவனாய்.

மேல்நாட்டினின்று கொண்டுவந்திருந்த குதிரைகளைத் திறமையுடன் பழக்குபவனாக நீ எழுந்தருளினாய்.

29. வேலம் புத்தூர் விட்டே றருளிக்
30. கோலம் பொலிவு காட்டிய கொள்கையுங்

வேலம்புத்தூர் விட்டேறு அருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்

விட்டேறருளி-ஏறுவிட்டருளி-ரிஷபவாகனத்தை விடுத்தருளி.

வேலம்புத்தூரில் காளை வாகனத்தை விடுத்தருளி உன் திருக்கோலப் பொலிவையும் விளக்கியுள்ளாய்.

31. தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
32. விற்பொரு வேடற் கீந்த விளைவும்

தர்ப்பணம் அதனில் சாந்தம் புத்தூர்
வில் பொரு வேடற்கு ஈந்தவிளைவும்

தர்ப்பணம்-முகம் பார்க்கும் கண்ணாடி, விற்பொரு-வில்லைக் கொண்டு பொருகின்ற அல்லது போர்புரிகின்ற.

சாந்தம்புத்தூரில் வில்லைக்கொண்டு போர்புரிகின்ற வேடனுக்குக் கண்ணாடியிலே உனது காட்சிகொடுத்தருளினை.

33. மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
34. சொக்க தாகக் காட்டிய தொன்மையும்

மொக்கணி அருளிய முழுத்தழல் மேனி
சொக்கு அது ஆகக் காட்டிய தொன்மையும்

தழல்-அக்கினி. சொக்கதாக-அழகு. பதாக. தொன்மை-பழமை.

மொக்கணிச்சுரத்தில் அழகு பொருந்திய முழுத்தீவண்ணனாக உன்னை நீ காட்டியருளியது பழைய நிகழ்ச்சியாகும்.

35. அரியொடு பிரமற் களவறி யொண்ணு
36. னரியைக் குதிரை யாக்கிய நன்மையும்

அரியொடு பிரமற்கு அளவு அறி ஒண்ணுன்
நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்

திருமாலும் பிரம்மதேவனும் உன்னை முழுதும் அறிந்து கொள்ளமாட்டார்கள். அத்தகைய நீ நரியைப் பரியாக்கியது உனது மஹிமையாகும்.

37. ஆண்டுகொண் டருள வழகுறு திருவடி
38. பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
39. றீண்டு கனக மிசையப் பெருஅ
40. தாண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
41. தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்

ஆண்டு கொண்டருள அழகுஉறு திருவடி
பாண்டியன் தனக்குபரிமா விற்று
ஈண்டு கனகம் இசையப் பெருஅது
ஆண்டான் எம்கோன் அருள்வழி இருப்பத்

தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்

அழகு உறு திருவடி-அழகுமிக்க திருவடி. பரிமா விற்று-குதிரை கிரயத்துக்குக் கொடுத்து. ஈண்டு கனகம் இசையப் பெருது-மிகுந்த பொன் கிடைத்தும் அதை ஏற்க மறுத்து. ஆண்டான் எம் கோன்-ஆண்டவனுகிய எம் கடவுள். தொன்மை-பழமை.

அழகு நிறைந்த திருவடியையுடைய ஈசன் பாண்டியனை ஆட்கொள்ளும் பொருட்டு அவனுக்குக் குதிரை விற்று வந்த பொன் குவியலை ஏற்கவில்லை. மற்ருேர் அதிசயத்தை அவர் செய்தார். ஆண்டவனுகிய எம் ஈசன் அருள்நெறியில் பாண்டியனை நிலைத்திருக்கச் செய்தல் பொருட்டுத் தமது பழைய திரண்ட ஜோதி சொருபத்தை அவனுக்குக் காட்டியருளினுர்.

42. அந்தண ணுகி யாண்டுகொண் டருளி
43. யிந்திர ஞாலங் காட்டிய வியல்பு

அந்தணன் ஆகி ஆண்டு கொண்டருளி
இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்

இந்திர ஞாலம்-இந்திர ஜாலம், மாயவித்தை.

வேதியனுகி வந்து என்னை ஆட்கொண்டு இப்பிரபஞ்சம் இந்திரஜாலம் போன்றது என்று தெளிவுபடுத்தியது அவருடைய அருள்திறன் ஆகும்.

பரமனுடைய காட்சி கிட்டும்பொழுது பிரபஞ்சத்தின் காட்சி மாயமாக மறைகிறது. கயிறு பாம்புபோன்று தென்படுகிறது. கயிறு என்னும் மெய்க்காட்சியானது வரும்போது பாம்பு என்னும் பொய்க்காட்சி அக்கணமே போய்விடுகிறது. கடவுள் காட்சியே மெய்க்காட்சி.

44. மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
45. குதிரைச் சேவக ணுகிய கொள்கையும்

மதுரைப் பெருநல் மாநகர் இருந்து
குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்

பெரியதும் அழகானதுமாகிய மதுரை நலனுக்கு உறைவிடம். அங்கு நீ குதிரைப் பாகனுய் எழுந்தருளியுள்ளாய்.

46. ஆங்கது தன்னி லடியவட் காகப்
47. பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்

ஆங்கு அது தன்னில் அடியவட்கு ஆகப்
பாங்குஆய் மண் சுமந்தருளிய பரிசும்

அடியவட்கு ஆக-அடியவளுக்காக, பக்தி பூண்டவளாகிய வந்திக்காக. பாங்காய்-ஒழுங்காய். பரிசு-மேலான தன்மை.

அதே மதுரை நகரில் வந்தி என்னும் பிட்டு வாணிச்சிக்காக நீ கூலியாளாக வந்து முறையாகப் பணிவிடை செய்த பெருமை உனக்குண்டு.

இறைவன் அடியவர்களுக்கு எளியவன்;தொண்டர்க்குத் தொண்டன். அவர்கள் பொருட்டு எந்தப் பணிவிடையையும் பண்புடன் புரியப் பரமன் காத்திருக்கிருன்.

48. உத்தர கோச மங்கையு ளிருந்து
49. வித்தக வேடங் காட்டிய வியல்பும்

உத்தரகோசமங்கையுள் இருந்து
வித்தக வேடம் காட்டிய இயல்பும்

திருவுத்தரகோசமங்கையென்னும் க்ஷேத்திரத்தில் ஞானுச்சாரியனுக எழுந்தருளிய பேரியல்பு உன்னுடையதாகும்.

50. பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
51. தூவண மேனி காட்டிய தொன்மையும்

பூவணம் அதனில் பொலிந்து இருந்து அருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்

பொலிதல்-பிரகாசித்தல். தூவணம்-தூவன்னம், தூயநிறம்.

திருப்பூவணம் என்னும் ஸ்தலத்தில் தூய நிறமும் பிரகாசமும் உடைய திருமேனியைக் காட்டியருளியது தொன்று தொட்டு வந்துள்ள உனது பேரன்புக்கு அறிகுறியாகும்.

52. வாத வூரினில் வந்தினி தருளிப்
53. பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்

வாதவூரினில் வந்து இனிது அருளிப்
பாதச் சிலம்பு ஒலி காட்டிய பண்பும்

திருவாதவூரிலே நீ பிரசன்னமானபோது உனது திருவடிகளை அலங்கரித்த சிலம்பின் ஓசையில் இனிமை தவழ்வதாயிற்று.

54. திருவார் பெருந்துறைச் செல்வ ளுகிக்
55. கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்

திருஆர் பெருந்துறைச் செல்வன் ஆகிக்
கருஆர் சோதியில் கரந்த கள்ளமும்

கரு ஆர் சோதி-பெருமை நிறைந்த ஒளி, ஆத்ம ஜோதி. கரந்த கள்ளம்-ஒளித்த வஞ்சகம்.

அழகு நிறைந்த திருப்பெருந்துறையில் ஞானுச்சாரி யளுக வந்த நீ உன் கோலத்தை வஞ்சகமாக மறைத்து, மாருத ஜோதியாகிய உனது மூலநிலை யெய்தினை. பர மாத்ம ஜோதி யாண்டும் இருந்தபடி இருப்பதால் அது கரு ஆர் சோதி எனப்படுகிறது. அடியார்களை ஆட் கொள்ளுதல் பொருட்டு வடிவு இல்லாத பரமன் வடிவு எடுக்கிருர். அக்காரியம் முடிந்ததும் கள்ளன் போன்று அவர் தம் கோலத்தை விரைவில் மறைக்கிருர்.

56. பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
57. பாவ நாச மாக்கிய பரிசுந்

பூவலம் அதனில் பொலிந்து இனிது அருளிப்
பாவம் நாசம் ஆக்கிய பரிசும்

பூவலம் என்னும் ஊரிலே பிரத்தியக்ஷமாகிப் பாபத்தைப் போக்கிய பெருமை உன்னுடையதாம்.

58. தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
59. நன்னீர்ச் சேவக ளுகிய நன்மையும்

தண்ணீர்ப் பந்தர் சயம் பெற வைத்து
நல்நீர்ச் சேவகன் ஆகிய நன்மையும்

போரில் பாண்டியன் வெற்றி பெறுதல் பொருட்டு நீ தண்ணீர்ப்பந்தல் வைத்து அவனுக்கும் அவனுடைய சேனைக் கும் நல்ல நீர் வழங்கும் தொண்டன் ஆனுய். இங்ஙனம் அடிய வர்களுக்கு நீ எப்பொழுதும் நன்மை செய்பவன்.

60. விருந்தின ளுகி வெண்கா டதனிற்
61. குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்

விருந்தினன் ஆகி வெண்காடு அதனில்
குருந்தின்கீழ் அன்று இருந்த கொள்கையும்

விருந்து-தாற்காலிகமாகத் தங்குதற்குத் தாவும் அருந்து தற்கு அன்னபானமும் நாடுகிற வேற்ருன், அதிதி.

திருவெண்காட்டிலே அன்று நீ விருந்தாக வந்து குருந்த மரத்தடியில் தங்கியிருந்தனை. அது பாராட்டுதற்குரியதாம்.

62. பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
63. கட்டமா சித்தி யருளிய வதுவும்

பட்டமங்கையில் பாங்காய் இருந்து அங்கு
அட்டமா சித்தி அருளிய அதுவும்

திருப்பட்டமங்கை யென்னும் ஸ்தலத்தில் நன்கு அமர்ந் திருந்து அஷ்ட மகா சித்திகள் (எட்டு சித்திகளை) விளக்கி யருளிய பெருமை உனக்குண்டு.

யோக சாதனங்களை முறையாகச் செய்து அஷ்ட மகா சித்திகளைப்பெறுவது சாத்தியம். ஈசனுடைய அருளாலும் இந்த சித்திகள் வாய்ப்பது உண்டு. ஈண்டு இயம்பியுள்ள நிகழ்ச்சி அதற்குச் சான்று ஆகிறது.

பதஞ்சலி முனிவர் இயற்றியுள்ள யோக சாஸ்திரம், விபூதி பாதம் 46வது சூத்திரம் இங்ஙனம் இயம்புகிறது.

ततोऽणिमादिप्रादुर्भावः कायसंपत्तद्धर्मानभिघातश्च ॥
ததோ அணிமாதிப்ராதுர்பாவ: காயஸம்பத்
தத்தர்மானபிகாதஸ்ச ॥

பூத ஜயத்திலிருந்து அணிமா முதலிய அஷ்ட சித்திகளும், காய சம்பத்தும், காயகுணங்களின் அழிவின்மையும் உண்டா கின்றன.

अणिमा அணிமா-சிறியவைகளுளெல்லாம் மிகச் சிறிய உயிராகத் தன்னைச் செய்துகொள்ளுதல்.

लघिमा லகிமா-எடை என்பது சிறிதேனும் இல்லாதவ ளுகத் தன்னைச் செய்துகொள்ளுதல்.

प्राप्ति ப்ராப்தி - வேண்டியவை யெல்லாம் வேண்டிய வாறு பெறுதல்.

प्राकाम्य ப்ராகாம்ய - இச்சா சுதந்திரம் மிகப் படைத் திருத்தல்.

महिमा மஹிமா - வண்ணத்தில் தன்னை மலைபோன்று பெரியவனாக்கிக் கொள்ளும் திறமை.

ईशित्वं ஈசித்வம் - ஈசனைப் போன்று அனைத்தையும் ஆளும் திறமை வாய்க்கப்பெறுவது.

वशित्वं வசித்வம் - பிறரைத் தன் வசப்படுத்துதல்.

कामवसायिता காமவஸாயிதா - எதை வேண்டுமானாலும் சென்றடைய வல்லவனாதல்.

64. வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
65. காடது தன்னிற் கரந்த கள்ளமு

வேடுவன் ஆகி வேண்டு உருக்கொண்டு
காடு அது தன்னில் கரந்த கள்ளமும்

வேடுவன்-வேடன். கரத்தல்-மறைத்தல்.

நீ விரும்பியபடி வேடனது உருவத்தை எடுத்துப் பிறகு காட்டிலே மாயமாய் மறைந்து போன பெருமை உன்னுடைய தாகும்.

கள்ளம் திருட்டுத்தனத்தைக் குறிக்கிறது. ஆனால் தன்னை எப்பொழுது எப்படித் தோற்றுவிப்பது; பிறகு எப்படி மறைப்பது என்ற பாங்கு ஈசனது திருவிளை யாடல். ஆதலால் அது அவனுடைய பெருமையாகும்.

66. மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
67. தக்கா னொருவ னாகிய தன்மையும்

மெய்க் காட் டிட்டு வேண்டு உருக்கொண்டு
தக்கான் ஒருவன் ஆகிய தன்மையும்

மெய்க்காட்டிட்டு - உண்மையைக் காட்டி. தக்கான்-தகுதி யுடையவன்.

அடியவர்களைக் காப்பாற்றுதல் என்னும் உண்மையை நிரூபித்தல் பொருட்டுத் தன் திருவுளத்துக்கு ஒப்பத் தகுதி வாய்ந்த ஒரு மனிதனாகத் தோன்றி வந்த பெருமை சிவனாருடையதாகும்.

68. ஓரி யூரி னுகந்தினி தருளிப்
69. பாரிரும் பாலக னாகிய பரிசும்

ஓரி யூரில் உகந்து இனிது அருளிப்
பார்இரும் பாலகன் ஆகிய பரிசும்

உகந்து - மகிழ்ந்து. பார் - நிலம். இரும்பாலகன் - பெருமை பொருந்திய சிறுவன். பரிசு-தன்மை.

திருவோரியூரிலே மகிழ்வுடன் எழுந்தருளி நிலவுலகுக்குரிய அரிய சிறுவன் ஆனது உனது அருள்தன்மையாகும்.

70. பாண்டூர் தன்னி லீண்ட விருந்துந்
71. தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
72. கோவார் கோலங் கொண்ட கொள்கையுந்

பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்
தேவூர்த் தென்பால் திகழ்தரு தீவில்
கோஆர் கோலம் கொண்ட கொள்கையும்

ஈண்டுதல் - மிகுதல். திகழ்தரு தீவு-விளங்குகிற தீவு. கோஆர்-அழகு நிறைந்த.

திருப்பாண்டூர் என்னும் ஸ்தலத்திலே நீ கண்கூடாகப் பிரசன்னமாயிருந்ததும் திருத்தேவூருக்குத் தென்பக்கத்தில் உள்ள தீவிலே பேரழகு பொருந்திய வடிவங்கொண்டு நீ காட்சி கொடுத்ததும் உனது திருவுளப் பாங்காகும்.

73. தேனமர் சோலைத் திருவா ரூரின்
74. ஞானந் தன்னை நல்கிய நன்மையும்

தேன்அமர் சோலைத் திருவா ரூரில்
ஞானம் தன்னை நல்கிய நன்மையும்

தேன் அடைகள் நிறைந்துள்ள சோலைகளையுடைய திருவாரூரிலே பரஞானத்தை வழங்கிய சிறப்பு சிவனாருடையதாகும்.

75. இடைமரு ததனி லீண்ட விருந்து
76. படிமப் பாதம் வைத்தவப் பரிசும்

இடைமருது அதனில் ஈண்ட இருந்தும்
படிமம் பாதம் வைத்த அப் பரிசும்

ஈண்டுதல்-செறிந்து கட்புலனுதல். படிமம்-தூய்மை.

திருவிடைமருதூரிலே பிரத்தியக்ஷமாகித் தனது புனித மான பாதத்தை வைத்த பெருமை பரமனுக்குரியதாம்.

77. ஏகம் பத்தி னியல்பா யிருந்து
78. பாகம் பெண்ணோ டாயின பரிசுந்

ஏகம்பத்தில் இயல்பாய் இருந்து
பாகம் பெண்ணோடு ஆயின பரிசும்

ஏகம்பம்-காஞ்சி:

காஞ்சிபுரத்தில் தனது தன்மைக்கு ஒப்ப சிவ சக்தியாய்ப் பரமன் மிளிர்வது அவனது மகிமையாம்.

பிரபஞ்சம் முழுதும் சிவசக்தி சொரூபம்.ஆனல் இத் தத்துவம் சிறப்பாகக் காஞ்சியில் வைத்துக் கூறப்படு கிறது.

79. திருவாஞ் சியத்திற் சீர்பெற விருந்து
80. மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமுஞ்

திருவாஞ்சியத்தில் சீர்பெற இருந்து
மரு ஆர் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்

சீர்பெற-அழகு நிரம்ப; மரு ஆர்-மணம் நிறைந்த.

திருவாஞ்சியம் என்னும் தலத்தில் பேரழகுடன் பிரசன்ன மாகி மணம் நிறைந்த கூந்தலையுடைய உமாதேவியாரை மகிழ் வித்தது உனது மகிமையாகும்.

81. சேவக னாகித் திண்சிலை யேந்திப்
82. பாவகம் பலபல காட்டிய பரிசுங்

சேவகன் ஆகித் திண்சிலை ஏந்திப்
பாவகம் பல பல காட்டிய பரிசும்

சேவகன்-போர்வீரன். திண்சிலை-வலிய வில். பாவகம்-மனமுவந்து பூண்ட வடிவம்.

போர் வீரனுகத் தோன்றி, வலிய வில் தாங்கி நின்று, விரும்பியவாறெல்லாம் நீ பல வடிவங்களை யெடுத்து உன் திறமைகளைக் காட்டியருளினை.

भावक्-பாவகம் மனவெழுச்சிக்கேற்ற உடல்தோற்றம்.

83. கடம்பூர் தன்னி லிடம்பெற விருந்து
84. மீங்கோய் மலையி லெழிலது காட்டியு
85. மையா றதனிற் சைவ ஞகியுந்

கடம்பூர் தன்னில் இடம் பெற இருந்தும்
ஈங்கோய் மலையில் எழில் அது காட்டியும்
ஐயாறு அதனில் சைவன் ஆகியும்

திருக்கடம்பூர், திருவீங்கோய்மலை, திருவையாறு ஆகிய க்ஷேத்திரங்களில் உனது விபூதிகளுடன் நீஎழுந்தருளியுள்ளாய்.

86. துருத்தி தன்னி லருத்தியோ டிருந்துந்
87. திருப்பனை யூரில் விருப்ப ஞகியுங்

துருத்தி தன்னில் அருத்தியோடு இருந்தும்
திருப்பனையூரில் விருப்பன் ஆகியும்

அருத்தியோடு-விருப்பத்துடன்.

திருத்துருத்தி, திருப்பனையூர் ஆகிய ஸ்தலங்களில் நீ மகிழ்வுடன் எழுந்தருளியிருக்கிருய்.

88. கழுமல மதனிற் காட்சி கொடுத்துங்
89. கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்

கழுமலம் அதனில் காட்சி கொடுத்தும்
கழுக்குன்று அதனில் வழுக்காது இருந்தும்

கழுமலம்-சீகாழி. வழுக்காது-மறவாது, தவருது.

சீகாழி, திருக்கழுக்குன்று ஆகிய ஸ்தலங்களில் நீ கண்கூடாக எழுந்தருளியுள்ளாய்.

90. புறம்பய மதனி லறம்பல வருளியுங்
91. குற்ரு லத்துக் குறியா யிருந்தும்

புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்
குற்ரு லத்துக் குறியாய் இருந்தும்

குறி-அடையாளம்.

திருப்புறம்பயம் என்னும் பதியில் நீ அறநூல்களைச் செய்தருளினை. திருக்குற்ருலத்தில் நீ பிரத்யக்ஷமாய் எழுந்தருளியிருக்கிருய்.

92. அந்தமில் பெருமை யழலுருக் கரந்து
93. சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்
94. டிந்திர ஞாலம் போலவந் தருளி
95. யெவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
96. தானே யாகிய தயாபர னெம்மிறை

அந்தம் இல் பெருமை அழல் உருக் கரந்து
சுந்தர வேடத்து ஒரு முதல் உருவுகொண்டு
இந்திர ஞாலம் போல வந்தருளி
எவ்எவர் தன்மையும் தன்வயின் படுத்துத்
தானே ஆகிய தயாபரன் எம்இறை

அந்தம் இல் பெருமை-முடிவில்லாத விபூதி. அழல் உருக் கரந்து-தீ வண்ணத்தை மறைத்து. இந்திர ஞாலம்-மாயவித்தை. தன் வயின் படுத்து-தன்னிடத்து அடங்கியிருக்க வைத்து. தயாபரன்-கருணகரன்.

உபநிஷத் மந்த்ரம்—20.

मायां तु प्रकृतिं विद्यान्मायिनं च महेश्वरम् ।
तस्यावयव भूतैस्तु व्याप्तं सर्वमिदं जगत् ॥

மாயாம் து ப்ரக்ருதிம் வித்யான் மாயினம் ச மஹேச்வரம் ।
தஸ்யாவயவ பூதைஸ்து வ்யாப்தம் ஸர்வமிதம் ஜகத் ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 4—10)

मायां மாயாம் மாயையை प्रकृतिं ப்ரக்ருதிம் பிரகிருதியென்றும் महेश्वरम् மஹேச்வரம் மஹேசுவரனை मायिनं च மாயினம் ச மாயாவியென்றும் विद्यात् வித்யாத் அறிக सर्वं इदं जगत् ஸர்வம் இதம் ஜகத் இந்த ஜகத் முழுதும் तस्य தஸ்ய அவனுடைய अवयव भूतैः அவயவ பூதை: அவயவங்களாகிய உயிர்களால் व्याप्तं வ்யாப்தம் வியாபிக்கப்பட்டிருக்கிறது.

பிரளயத்தினின்று சிருஷ்டி வந்தபொழுது நீ முதலில் ஹிரண்ய கர்பன் அல்லது பொன்போன்ற நீ வண்ணன் ஆனாய். பின்பு முக்குணபேதத்தால் எண்ணிறந்த அழகு வடிவங்களை எடுத்தாய். உனது மாயா சக்தியால் ஜகத் முழுதையும் தோற்றுவித்தாய். பல்வேறு வகைப்பட்ட ஜீவர்களின் இயல்புகளெல்லாம் உன்னிடத்திருந்தே வந்தவைகளாம். இறைவா, உன் அருள் சக்தியினின்று நீ இந்தனையும் தோற்றுவித்துள்ளாய்.

97. சந்திர தீபத்துச் சாத்திர ஞாகி
98. யந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
99. சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியு

சந்திர தீபத்துச் சாத்திரன் ஆகி
அந்தரத்து இழிந்து வந்து அழகு அமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்து இருந்தருளியும்

சாத்திரன்-சாஸ்திரத்தில் வல்லவன். இழிந்து வந்து-இறங்கி வந்து. அழகு அமர்-அழகு நிறைந்த. துதைந்து இருந்தருளி-நெருங்கி யிருந்தருளி.

சந்திரதீபம் என்னும் ஸ்தலத்திலே நீ ஒரு சாஸ்திரியாக வடிவெடுத்து வந்தாய். வானவெளியினின்று கீழே இறங்கி வந்து அழகிய பாலை என்னும் பதியிலே பேரழகனாக நீ பொலிந்தருளினாய்.

100. மந்திர மாமலை மகேந்திர வெற்ப
101. னந்தமில் பெருமை யருளுடை யண்ண
102. லெந்தமை யாண்ட பரிசது பகரின்

பிரகிருதியை மாயை யென்றும் மஹேசுவரனை மாயாவியென்றும் அறிக. இந்த ஜகத் முழுதும் அவனுடைய அவயவங்களாகிய உயிர்களால் நிரம்பப் பெற்றிருக்கிறது.

இந்திர ஞாலம் என்பது இந்திர ஜாலம் அல்லது மாயவித்தை. இயற்கையும் அதில் உள்ள உயிர்களும் இறைவனுடைய மாயவித்தையாகும். அவை யாவற்றையும் அவன் தன்னிடத்திருந்து தோற்றுவித்துப் பின்பு தன்னுள்ளேயே ஒடுக்கிக்கொள்கிறான். மாயாவியாகிய அவனே யாண்டும் இருந்தபடி இருக்கிறான். அவனுடைய வித்தையாகிய ஜகத்துக்கும் ஜீவனுக்கும் தோற்றமும் ஒடுக்கமும் உண்டு.

மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தம் இல் பெருமைஅருள் உடை அண்ணல்
எம் தமை ஆண்ட பரிசு அது பகரின்

மந்திரம்-இருப்பிடம்,கோவில். வெற்பன்-மலையை இருப்பிட மாகக்கொண்டவன். அண்ணல்-போற்றுதலுக்குரிய பெரியோன்.

வேதங்களின் உட்பொருளை விளக்குதற்கு இடமாயிருந்த மகேந்திரமலைவாசி நீ. எண்ணிறந்த விபூதிகளையும் அருள் சக்திகளையும் படைத்துள்ள பெருமான் நீ. எம்மை நீ ஆட் கொண்டருளிய பேரியல்பை எவ்வாறு எடுத்துரைப்பது!

103. ஆற்ற லதுவுடை யழகமர் திருவுரு
104. நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்

ஆற்றல் அது உடை அழகு அமர் திருஉரு
நீற்றுக்கோடி நிமிர்ந்து காட்டியும்

நீற்றுக்கோடி-திருநீற்றுப் பட்டை. நிமிர்ந்து-தெளிவுபட.

சர்வசக்திமானும் சுந்தரேசனுமாகிய எம்பெருமான் தமது பேரழகைத் திருநீற்று வரிகளால் மேலும் அழகுறச்செய்கிறார்.

105. ஊனந் தன்னை யொருங்குட னறுக்கு
106. மானந் தம்மே யாறு வருளியு

ஊனம் தன்னை ஒருங்கு உடன் அறுக்கும்
ஆனந்தம்மே ஆறு அருளியும்

உபநிஷத் மந்த்ரம்—21.

आनन्दो ब्रह्मेति व्यजानात् ।
आनन्दाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते ।
आनन्देन जातानि जीवन्ति ।
आनन्दं प्रयन्त्यभिसंविशन्ति ।

ஆனந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத் ।
ஆனந்தாத்த்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே ।
ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி ।
ஆனந்தம் ப்ரயன்த்யபிஸம்விசந்தி ।

(தைத்ரியோபநிஷதம் 3—6)

ஊனம்-கேடு. ஆரு-ஆருக.

கேடதனை ஒன்று சேர்த்து அறவே அகற்றுகிற பேரானந்தத்தை ஐயனே எனக்கு நீ ஆருகக் கொடுத்தருளினை.

வாழ்வில் பேரியல்பு தலையெடுக்குமளவு சிற்றியல்பு தானே மறைகிறது.அதே விதத்தில் பேரானந்தம் ஓங்குமளவுவாழ்விலுள்ள குறைபாடுகள்நீங்கப்பெறுகின்றன. ஆனந்தமும் இறைவனும் ஒன்று. ஆனந்தத்திலிருந்தே அனைத்தும் வந்துள்ளன என்பது மறைமொழி.

107. மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையை
108. ஞுதப் பெரும்பறை நவின்று கறங்கவும்

आनन्दः ஆனந்தः ஆனந்தமானது ब्रह्म இति ப்ரஹ்ம இதி பிரம்மம் என்று व्यजानात् வ்யஜாஞத் அறிந்துகொண்டான் आनन्दात् हि एव ஆனந்தாத் ஹி ஏவ ஆனந்தத்திலிருந்தே खलु கலு நிச்சயமாக इमानि भूतानि இமானி பூதானி இந்த உயிர்கள் जायन्ते ஜாயந்தே தோன்றியுள்ளன. जातानि ஜாதானி தோன்றிய உயிர்கள் आनन्देन जीवन्ति ஆனந்தேன ஜீவந்தி ஆனந்தத்திலேயே ஜீவித்திருக்கின்றன. प्रयन्ति ப்ரயந்தி முடிவில் आनन्दं अभिसंविशन्ति ஆனந்தம் அபிஸம்விசந்தி ஆனந்தத்திலேயே லயமடைகின்றன.

ஆனந்தம் பிரம்மம் என்று(சாதகன்)ஞானத்தெளிவடைந்தான். ஆனந்தத்திலிருந்தே நிச்சயமாக உயிர்கள் தோன்றியுள்ளன. பிறந்தவைகளெல்லாம் ஆனந்தத்திலேயே வாழ்ந்திருக்கின்றன. இறுதியில் ஆனந்தத்திலேயே லயமடைகின்றன.

ஆனந்தமே பரம்பொருள். அது யாருக்கும் தனியுரிமையாகாது. அண்டங்கள் அனைத்தும் ஆனந்தத்தில் தோன்றி, ஆனந்தத்தில் நிலைத்திருந்து, ஆனந்தத்தில் ஒடுங்குகின்றன. ஆனந்தத்தை அறியாதரர் யார்?ஆனந்தமில்லாது யார் உயிர் வாழ்ந்திருக்கமுடியும்? உலப்பில்லா ஆனந்தத்தில் ஒன்றுபட்டிருப்பவர் பரமனை அடைந்தவர் ஆகின்றனர்.

மாதில் கூறுஉடை மாப்பெரும் கருணையன்
நாதம் பெரும்பறை நவின்று கறங்கவும்

பறை-முரசு. நவின்று-முழங்கி. கறங்குதல்-ஒலித்தல்.

நீ ஒரு பாகம் அம்மையாக இலங்குவதால் உனது பெருங் கருணை நன்கு உரைப்படுகிறது. நீ நாத பிரம்மமாக சதா சப்தம் செய்துகொண்டிருப்பதால் நன்கு அறியப்படுகின்றனை.

தனியாகக் களிமண்ணில் பாண்டம் வனையமுடியாது. களிமண்ணை நீரில் பிசையவேண்டும். அந்த நீருக்கு நிகரானது இறைவனுடைய கருணை என்னும் சக்தி. இக் காரணத்தை முன்னிட்டே உமாதேவி கருணாம்பிகை எனப்புடுகிறாள்.

நாத பிரம்மம் அல்லது சப்தப் பிரம்மம் இடையறாது ஒலித்துக்கொண்டிருக்கிறது. அந்த ஒலி அநாஹத த்வனி எனப்படுகிறது. அந்த ஓசையின் சிதைவுகளே பிரபஞ்ச மெங்கும் ஒலிக்கின்ற ஓசைகளாகின்றன.

109. அழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
110. கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியு

அழுக்கு அடையாமல் ஆண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்

அழுக்கு-மலம். கழுக்கடை-திரிசூலம்.

ஜீவர்களை மலத்தினின்று விடுவித்து உன்மயம் ஆக்குவது ஈசா, உனது அருள் செயலாம். திரிசூலத்தை நீ கையில் தாங்கி யிருந்து உயிர்களைப் பக்குவப்படுத்துவதும் உனது அருள் செயலாம்.

மலத்தை ஆணவம், மாயை, கர்மம் என மும்மல மாகக் கூறுவது சைவ சமய மரபாகும். மலம் அல்லது அழுக்கை உபாதியென்று கூறுவது வேதாந்தக் கோட் பாடு ஆகும். நீர் ஆனது அலை நுரை திவலைகளாக வடி வெடுப்பது உபாதிகளாகும். நீர் ஆனது தேங்கியிருப் பது அதன் நிஜசொரூபம். ஆத்மாவானது எண்ணிறந்த ஜீவ விகாரங்களை எடுப்பது அதன் உபாதியாகும்.

அத்தகைய சித்தமலம் அறுபடும்பொழுது அது சிவமாகிறது. அது ஆத்மாவின் நிஜசொரூபம்.

திரிசூலமானது இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தியாகிய மூவித சக்திகளின் புறச்சின்னமாம். ஜீவர்கள் பக்குவமடைந்து சிவசொரூபமாவதற்கு இந்த மூவித சக்திகளும் முறையாகப் பயன்படுகின்றன.

111. மூல மாகிய மும்மல மறுக்குந்
112. தூய மேனிச் சுடர்விடு சோதி
113. காதல ஞகிக் கழுநீர் மாலே
114. யேலுடைத் தாக வெழில்பெற வணிந்தும்

மூலம் ஆகிய மும்மலம் அறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதலன் ஆகிக் கழுநீர் மாலே
ஏல் உடைத்து ஆக எழில்பெற அணிந்தும்

மூலம் ஆகிய மும்மலம்-பிறவிநோய்க்கு முகாமையாகிய மூன்று மலங்கள். ஏல் உடைத்தாக-பொருத்தமுடையதாக.

இறைவா, நீ ஞானப்பிரகாசன், உனது சுயஞ்ஜோதியின் முன்னிலேயில் அக்ஞான இருள் இடம்பெறுது. அக்ஞான அந்தகாரம் அகலுமிடத்து அதனிடத்திருந்து உதிக்கின்ற மும்மலங்களும் அறுபடுகின்றன. நீ உயிர்களுக்கு மணுளன் ஆகிச் செங்கழுநீர்ப் பூவின் மாலேயைப் பொருத்தமாக அணிந்துகொண்டு உன் அழகைப் பெருக்குகின்றுய்.

சூரியன் முன்னிலேயில் இருள் இல்லே. அதே விதத்தில் சுயஞ்ஜோதியாகிய சிவ சான்னித்தியத்தில் அக்ஞான இருள் இல்லே. அக்ஞான இருளே ஆணவம், மாயை, கருமம் ஆகிய மும்மலங்களே உண்டு பண்ணுகிறது. அக்ஞானம் அகலுமிடத்து மும்மலங்களும் இருக்கும் இடம் தெரியாது மறைகின்றன.

செயற்கையழகைக் கொண்டு இயற்கையழகை அதிகப்படுத்தலாம். இறைவன் தானே அழகன். செங்கழுநீர் மாலேயைக்கொண்டு அவனுடைய அழகு மேலும் ஓங்கும்படி அவன் செய்துள்ளான்.

115. அரியொடு பிரமற் களவறி யாதவன்
116. பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமு

அரியொடு பிரமற்கு அளவு அறியாதவன்
பரிமாவின்மிசைப் பயின்ற வண்ணமும்

அரி-ஹரி, விஷ்ணு. பரிமாவின் மிசை-குதிரையின்மேல்.

ஈசா, உன்னை நாராயணனும் நான்முகனுமே முழுதும் அறிந்துகொள்ள மாட்டார்கள்; இனி மற்றவர்கள் எப்படி அறிய முடியும்? அத்தகைய நீ பலதடவைகளில் குதிரையின் மீது ஊர்ந்து வந்து உன்னை விளக்கியருளினாய்.

முழுமுதற் பொருளாகிய பரமசிவனே, பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளாக வடிவெடுத்து வருகிறார். அம்மூவர்க்கும் படைத்தல், காத்தல், மறைத்தல் ஆகிய மூன்று கிருத்தியங்கள் உண்டு. இனி கிருத்திய கர்த்தாக்கள் எல்லோரும் ஜீவ வியக்தி என்னும் கீழ்நிலைக்கு இறங்கி வந்தவர்களேயாம். ஜீவபோதம் படைத்தவர்கள் எல்லாரும் எல்லைக்கு உட்பட்டவர்கள் ஆகின்றனர். எல்லைக்கு உட்பட்டவர்கள் எல்லை கடந்த பொருளை முற்றும் அறியமாட்டார்கள். ஆழாக்கு ஒன்று ஆழ்கடலை அளப்பதற்கு உதவாதது போன்றது இந்நிலை. எந்த ஜீவனும் அகண்ட சச்சிதானந்தத்தை முற்றிலும் அறியமாட்டான்.

அகண்ட வஸ்துவாகியசிவபெருமான் மண்ணின் மீது மேனி தாங்கிவந்து குதிரையின் மீது ஊர்ந்தவனாகக் காட்சி கொடுத்தது அவனுடைய அருளைக் குறிக்கிறது.

117. மீண்டு வாரா வழியருள் புரிபவன்
118. பாண்டி நாடே பழம்பதி யாகவும்

மீண்டு வாராவழி அருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி ஆகவும்

பழம்பதி-பழைய இருப்பிடம் அல்லது ஊர்.

மீண்டும் பிறப்பு எடுப்பதற்கு அவசியமில்லாதவாறு ஈசா, நீ முக்தியைக் கொடுத்தருள்பவன். அத்தகைய நீ பாண்டி நாட்டை உன்னுடைய பழைய உறைவிடமாகக்கொண்டுள்ளாய்.

119. பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவ
120. னுத்தர கோச மங்கையூ ராகவும்

பத்தி செய் அடியரைப் பரம்பரத்து உய்ப்பவன்
உத்தரகோச மங்கை ஊர் ஆகவும்

பரம் பரம்-ஒப்பு உயர்வற்ற மோக்ஷ சாம்ராஜ்யம்.

பக்தி பண்ணுகிற அன்பர்களுக்கு, ஈசா, நீ முக்தியைக் கொடுத்தருள்கின்றாய். அத்தகைய நீ திருவுத்தரகோசமங் கையை உனது ஊராகக்கொண்டிருக்கிறாய்.

121. ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
122. தேவ தேவன் றிருப்பெய ராகவும்

ஆதிமூர்த்திகட்கு அருள்புரிந்தருளிய
தேவ தேவன் திருப்பெயர் ஆகவும்

சிருஷ்டியின் பகுதிகளுக்கெல்லாம் அதிஷ்டான தேவர் களாய் வாய்த்தவர்களுக்கெல்லாம் தேவையான வல்லமை களை நீ தந்தருளியிருப்பதால், ஈசா, உனக்கு மஹாதேவன் என்னும் காரணப்பெயர் வந்துள்ளது.

இந்திரன், வருணன், மித்திரன், அரியமன், ஈசானன், யமன், அக்னி, வாயு, சூரியன், சோமன், பிரஹஸ்பதி ஆகிய தேவர்கள் படைப்பின்போது கூடவே தோன்றியிருப்ப தால் அவர்கள் ஆதி மூர்த்திகள் என அழைக்கப்படுகின் றனர். அவர்களுக்குத் தேவையான திறமைகளை யெல் லாம் சிவனார் வழங்கியிருப்பதால் அவர் மஹாதேவன் என அழைக்கப்படுகிறார்.

123. இருள்கடிந் தருளிய வின்ப வூர்தி
124. யருளிய பெருமை யருண்மலை யாகவும்

இருள் கடிந்தருளிய இன்ப ஊர்தி
அருளிய பெருமை அருள்மலை ஆகவும்

இருள்கடிதல்-அக்ஞானத்தைப் போக்குதல். இன்ப ஊர்தி- ஆனந்தத்தையே வாகனமாகக் கொண்டிருத்தல்.

பேரானந்தத்தை வாகனமாகக்கொண்டுள்ள இறைவா, உன்னை அடையும் அடியார்களுக்கு ஆனந்தத்தின் மேலீட்டால் அக்ஞான இருள் அகலுகிறது. நீ அருளே வடிவெடுத்திருப்

நீ வீற்றிருக்கும் கயிலைமலையும் அருள்மயமாய் இலங்கு கிறது.

துன்புற்றிருப்பவர்களுக்கு ஞானமில்லை. பேரானந்தத்தில் திளைத்திருப்பவர்களுக்கு ஞானம் தானாய் வந்தமைகிறது. காந்தக்கல்லோடு கூடிய இரும்பு காந்தமாவது போன்று இறைவனது இருப்பிடமாகிய கயிலைமலையே அருள்மயமாய் அமைந்திருக்கிறது.

125. எப்பெருந் தன்மையு மெவ்வெவர் திறமு
126. மப்பரி சதனு லாண்டுகொண் டருளி

எப் பெரும் தன்மையும் எவ்எவர் திறமும்
அப் பரிசு அதனுல் ஆண்டு கொண்டருளி

யார் யார் எத்தகைய பெருமையோ, வல்லமையோ, தனியியல்போ படைத்தவர்களாயிருக்கிருர்களோ அவையாவும் அவர்களுக்கு உன்னிடத்திருந்து வந்தவைகளாம்.

ஓர் உபமானத்தைக்கொண்டு இக்கோட்பாட்டை நாம் நன்கு அறிந்துகொள்ளமுடியும். மின்விளக்கு வெளிச்சம் தருகிறது. மின்கொம்பு (electric horn) ஓலமிடுகிறது. மின்சங்கு (siren) கூவுகிறது. மின்விசிறி காற்றைச்சுழற்றி வீசுகிறது. மின் அடுப்பு அக்கினிக்கு நிகராயிருந்து உணவு சமைக்கிறது. தணுப்பை உண்டுபண்ணும் கருவி (refrigerator) பண்டங்களைக் குளிர்ந்திருக்கச் செய்கிறது. இவையாவுக்கும் மூலசக்தியாயிருப்பது மின்சக்தி. அதே விதத்தில் உயிர்கள் அனைத்திடத்தும் ஒளிர்கின்ற ஆத்மசக்திகளெல்லாம் உண்மையில் பரமேசுவரனிடத்திருந்து வந்துள்ள சக்திகளாம்.

127. நாயி னேனை நலமலி தில்லையுட்
128. கோல மார்தரு பொதுவினில் வருகென
129. வேல வென்னை யீங்கொழித் தருளி
130. யன்றுடன் சென்ற வருள்பெறு மடியவ
131. ரொன்ற வொன்ற வுடன்கலந் தருளியும்

நாயி னேனை நலம் மலி தில்லையுள்
கோலம் ஆர் தரு பொதுவினில் வருக என
ஏல என்னை ஈங்கு ஒழித்தருளி
அன்று உடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன் கலந்தருளியும்

நலம்மலி-நன்மை மிகுந்த. கோலம் ஆர்தரு-அழகு பொருந்திய. பொதுவினில்-அம்பலத்தில், சிதம்பரத்தில். ஏல-பொருத்தமாக, ஏற்றுக்கொள்ள. ஈங்கு ஒழித்தருளி-இந்நிலவுலகிலே விட்டுச்சென்று. ஒன்ற ஒன்ற-நெருங்கியிருந்து.

திருப்பெருந்துறையில் என்னை ஆட்கொண்ட ஈசன் சிவபுரத்துக்கு என்னை உடன் அழைத்துச் செல்லவில்லை. மண்ணுலகில் நலனும் அழகும் நிறைந்த சிதம்பரத்தில் தம்மை வந்து தரிசிக்கும்படி ஆக்ஞாபித்து என்னைப் பின்விட்டுச் சென்றனர். அருள்மேனி பெற்றுத் தம்மோடு நெருங்கியிருந்த திருக்கூட்டத்தை மட்டும் தம்மோடு அவர் அழைத்துச் சென்றார். அப்படி அவர் செய்தது அவருடைய திருவுளப்பாங்கு ஆகும்.

பஞ்சபூதங்களால் ஆகிய உடல் பிராகிருத சரீரமாகிறது. ஆனால் அருள் உடம்போ அப்பிராகிருத சரீரம் எனப்படுகிறது. சிவலோகத்தில் இருக்கும் சிவனடியார்கள் எல்லாரும் அப்பிராகிருத சரீரம் வாய்க்கப்பெற்றவர்கள். அத்தகைய திருக்கூட்டத்துடன் மண்ணுலகுக்கு வந்த சிவனார் அத்திருக்கூட்டத்துடனேயே விண்ணுலகுக்குத் திரும்பிவிட்டார். மாணிக்கவாசகரைக்கொண்டு மண்ணுலகில் அவர் நிறைவேற்ற வேண்டிய சிவ கிருத்தியங்கள் பல இருந்தன. ஆதலால் தம்மால் ஆட்கொள்ளப்பட்ட வாதவூரரை வையகத்திலே இன்னும் சிறிது காலத்துக்கு அவர் விட்டுவைத்துப் போனார்.

132. எய்தவந் திலாதா ரெரியிற் பாயவு

எய்தவந் திலாதார் எரியில் பாயவும்

எரி-நெருப்பு.

ஈசா, உன்னை அடைய மனமுவந்து வராதவர்கள் தீக்கு இரையாவதற்கு நிகராக அழிந்துபட்டுப் போகின்றனர்.

மானுடனாகப் பிறந்தவன் அடைகிற நஷ்டங்களுள் பெருநஷ்டம் பரஞானத்தை அடையப்பெறாததாம்.

133. மாலது வாகி மயக்க மெய்தியும்

மால் அது ஆகி மயக்கம் எய்தியும்

மால்-ஆசை.

அருளை நாடாதவர்கள் உலக ஆசையைப் பெருக்கி அறிவை இழக்கின்றனர்.

ஐம்பொறிகள் மூலமாக நுகரும் இந்திரிய சுகங்கள் உலக ஆசையை வளர்க்கின்றன. உலக ஆசை வளருமளவு விவேகம்போய்விடுகிறது;மதிமயக்கம்ஓங்குகிறது.

134. பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியுங்

பூதலம் அதனில் புரண்டு வீழ்ந்து அலறியும்

நிலவுலகில் மக்கள் பிறந்து வீழ்ந்து வாழ்வில் புரண்டு படாத பாடுபடுகின்றனர்.

135. கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
136. நாத நாத வென்றழு தரற்றிப்
137. பாத மெய்தினர் பாதமெய்தவும்

கால் விசைத்து ஓடி கடல்புக மண்டி
நாத நாத என்று அழுது அரற்றி
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்

விசைத்தல் - விரைவு பண்ணுதல். மண்டுதல் - மூண்டு போராடுதல்.

பிறவிப் பெருங்கடலில் புகாதபடி அதனோடு மூண்டு போராடி, அதனிடத்திருந்து விலகி விரைந்தோடி, நாதா, நாதாவென்று உன்னை நாடியழுது உன்னை அடைந்தவர்களைப் பின்பற்ற நான் விரும்புகிறேன்.

பக்குவம் அடையாத ஆத்மாக்கள் பிரவிருத்தியில் போகின்றனர். அதாவது உலக வாழ்க்கையில் அவர்கள் மேலும் மேலும் வீழ்ந்து அழுந்துகின்றனர். அதில் உள்ள துன்பங்களைத் துய்த்துச் சலித்துப்போனபிறகு அவர்கள் நிவிருத்தியைநாடுகின்றனர். அதாவது இறைவனை நாடிப் போகின்றனர். அப்பொழுது அவர்களுக்குப்பெருவாழ்வு துவங்குகிறது. மானுடப் பிறவியும் நன்கு பயன்படுவதாகிறது.

138. பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்
139. றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்

பதஞ்சலிக்கு அருளிய பரமநாடக என்று
இதம் சலிப்பு எய்த நின்று ஏங்கினர் ஏங்கவும்

பரம நாடக என்று-மேலான கூத்தனே என்று. இதம் சலிப்பு எய்த-ஹிருதயம் அல்லது நெஞ்சம் சோர்வு அடைய.

பதஞ்சலி முனிவர்க்கு அருள்புரிந்த மேலான தில்லைக் கூத்தனே என்று அருள் தாகம் எடுத்து நெஞ்சம் உருகினவர்கள் மேலும் மேலும் உருகும்படி நீ அனுக்கிரகம் செய்துள்ளாய்.

அடியவர் ஒருவர் ஆட்கொள்ளப்பட்டதைப் பார்த்து ஏனைய அடியவர்கள் தாங்களும் ஆட்கொள்ளப்பட வேண்டுமென்று பரமனிடம் விண்ணப்பிப்பது இயல்பு. பதஞ்சலி முனிவர் யோக சாஸ்திரத்தை இயற்றியவர். அவர் ஆதிசேஷனது அவதாரம் எனக் கருதப்படுகிறார். சிதம்பரத்துக்கு வந்து நடராஜருடைய ஆனந்தத்தாண்டவத்தைத் தரிசித்தது அவருடைய வாழ்க்கையின் முக்கியமான செயலாகும். இறைவனுடைய அருளைப் பெறுகிறவர்களுக்கு அந்த அருள் நாட்டம் மேலும் மேலும் அதிகரிக்கிறது.

140. எழில்பெறு மிமயத் தியல்புடை யம்பொற்
141. பொலிதரு புலியூர்ப் பொதுவினி னடநவில்

எழில் பெறும் இமயத்து இயல்புஉடை அம்பொன்
பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடம்நவில்

அம்பொன்-அழகிய பொன். புலியூர்-சிதம்பரம். நவிலுதல்-பயிலுதல்.

உபநிஷத் மந்த்ரம்—22.

हिरण्मयेन पात्रेण सत्यस्यापिहितं मुखम् ।
तत् त्वं पूषन्नपावृणु सत्य धर्माय दृष्टये ॥

ஹிரண்மயேன பாத்ரேண ஸத்யஸ்யாபிஹிதம் முகம் ।
தத் த்வம் பூஷன்னபாவ்ருணு ஸத்ய தர்மாய த்ருஷ்டயே ॥

(ஈசாவாஸ்யோபநிஷதம்—15)

அழகு நிறைந்த இமயமலையின் மேற்பகுதி பொன்மயமாய்த் திகழ்வது போன்று அழகிய சிதம்பரமும் பொன்னம்பலமாகத் திகழ்கிறது. ஆங்கு ஈசா, நீ நடனம் புரிகின்ருய்.

ஹிமாலயத்தின் உயர்ந்த பகுதியானது யாண்டும் உறைபனி மயம். அதன்மீது காலைக் கதிரவன் படியும் பொழுது மலை முழுதும் பொன்மயமாக மிளிர்கிறது. சிதம்பரத்தில் உள்ள சித்சபையும் கனகசபையாக ஞான

हिरण्मयेन पात्रेण ஹிரண்மயேனபாத்ரேண பொன்மயமான வட்டத்தால் सत्यस्य मुखम् ஸத்யஸ்ய முகம் ஸத்தியத்தின் வாயில் अपिहितम् அபிஹிதம் மூடப்பட்டிருக்கிறது पूषन् பூஷ உலகையெல்லாம் போஷிக்கிற இறைவா सत्य धर्माय ஸத்ய தர்மாய சன்மார்க்கத்தில் செல்லுகிற எனக்கு दृष्टये த்ருஷ்டயே மெய்ப்பொருள் காட்சியின் பொருட்டு तत् தத் அந்தப்பொன் வட்டத்தை त्वम् अपावृणु த்வம் அபாவ்ருணு நீ நீக்கியருள்வாயாக.

மெய்ப்பொருளே, உனது உண்மையான சொருபத்தை வட்ட வடிவமான பொன்போன்ற பிரகாசம் மறைத்துக்கொண்டிருக்கிறது. இறைவா, உனது மெய்க்காட்சியை நாடும் என் பொருட்டு அப்பொன் ஒளியை அகற்றியருள்வீராக.

ஆத்ம சாதகன் சத்துவ குணத்தில் நிலைபெற்றிருக்கும்பொழுது சகுண பிரம்மத்தின் காட்சி கிட்டுகிறது. நாத பிரம்மம் எனப்படுவதும் சகுண பிரம்மமேயாம். அனந்த கல்யாண குணங்களுடன் சகுண பிரம்மம் பிரகாசிக்கிறது. அப்பொழுது எல்லாம் உருக்கியெடுத்த பொன்மயமாய்ப் பிரகாசிக்கிறது.பொன்னம்பலம் என்று சொல்லப்படுவது அதுவே. அதையும் தாண்டி நிர்விகற்ப சமாதியில் நிர்க்குண பிரம்மத்தைச் சாதகன் எட்ட வேண்டும். நிர்க்குண பிரம்மமே சிதம்பர ரகசியம் எனப்படுகிறது. சகுண பிரம்மத்தின் அருளால், அதாவது நடராஜாவின் அருளால் நிர்க்குண பிரம்மம் அடையப் பெறுகிறது. காண்போன், காணப்படுபொருள், காணுதல் என்னும் திரிபுடியற்ற நிலையது. அதைச் சொல்லு

நிலையில் திகழ்கிறது. சபேசன் ஆங்கு ஞானத் தாண்டவம் ஆடுகிறான்.

142. கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
143. கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை

கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு
அருளிய திருமுகத்து அழகுஉறு சிறுநகை

கனி-கொவ்வைக்கனி. சிறுநகை-புன்னகை.

உனது அழகு நிறைந்த திருமுகத்திலே புன்னகை பொலியப் பெற்றவனும் இறைவா, நீ இருக்கின்றாய். அத்தகைய நீ உனது அருளால் கொவ்வைப்பழம் போன்ற சிவந்த வாயையுடைய உமாதேவியாருக்கும் பயங்கர சொரூபிணியாகிய காளிகாதேவிக்கும் இரண்டுவித இயல்பை நல்கியிருக்கின்றாய்.

தற்குக் கருவி கரணங்கள் இல்லை. ஆதலால் அது விளக்க முடியாத ரகசியம் எனப்படுகிறது.

உபநிஷத் மந்த்ரம்—23.

स तस्मिन्नेवाकाशे स्त्रियमाजगाम
बहुशोभमानामुमां हैमवतीं ताम्
होवाच किमेतद् यक्षमिति ॥

ஸ தஸ்மின்னேவாகாசே ஸ்த்ரியமாஜகாம
பஹுசோபமானும் உமாம் ஹைமவதீம் தாம்
ஹோவாச கிம் ஏதத் யக்ஷம் இதி ॥

(கேனோபநிஷதம் 3—12)

सः ஸ: அவன் (இந்திரன்) तस्मिन् एव आकाशे தஸ்மின் ஏவ ஆகாசே அந்த ஆகாசத்தில் बहुशोभमानाम् பஹுசோபமானும் சோபை மிகப்பொருந்தியிருந்த स्त्रियम् ஸ்திரியம் பெண் பாலை आजगाम ஆஜகாம காணலுற்றான் ताम् हैमवतीम् उमाम् தாம் ஹைமவதீம் உமாம் ஹைமவதியும் உமாதேவியுமாகிய அவளிடம் उवाच ह உவாச ஹ அவன் பகர்ந்ததாவது किम् एतत् यक्षम् इति கிம் ஏதத் யக்ஷம் இதி இந்த யக்ஷன் யார் என்று.

அதே இடத்தில் (அந்த யக்ஷனுக்குப் பதிலாக) சோபை நிறைந்த பெண் தெய்வம் ஹைமவதியாகிய உமாதேவியை (இந்திரனாகிய) அவன் காணலுற்றான். இந்த யக்ஷன் யார் என்று அவன் அம்பிகையிடம் வினவினன்.

இயற்கைத் தாய் ஈசனுடைய சக்தி எனப்படுகிருள். அவளிடத்து சாந்த சொரூபம் உக்கிர சொரூபம் ஆகிய

வரலாறு: அசுரர்களே வெல்ல முயன்ற தேவர்களுக்குப் பரபிரம்மம் வெற்றியைக் கொடுத்தார். வெற்றிக்குத் தாங்களே காரணகர்த்தாக்களென்று தேவர்கள் செருக்குற்றனர். அப்பொழுது பரபிரம்மம் அவர்கள் முன் தோன்றி வந்து நின்ருர். ஆனல் வந்தவரை அறிந்து கொள்ளத் தேவர்களுக்கு இயலவில்லே. இவர் யார் என்று கண்டுபிடி என்று அவர்கள் அக்னியிடம் இயம்பினர். அக்னியும் அதற்கிசைந்து பிரம்மத்திடம் (யக்ஷனிடம்) சென்ருன். நீ யார், என்று பிரம்மம் கேட்டது. நான் அனைத்தையும் எரிக்க வல்லவன் என்ருன் அக்னிதேவன். ஒரு துரும்பை எடுத்துப்போட்டு இதை தஹி என்றது பிரம்மம். ஆனல் அதைப் பொசுக்கமுடியாது நெருப்புத் தெய்வம் திரும்பியது. பிறகு வாயுதேவன் வந்தான். எதையும் ஊதித்தள்ளத் தனக்கு முடியும் என்ருன் அவன். ஆனல் பிரம்மம் (யக்ஷன்)வைத்த துரும்பை ஊதி அசைக்க அவனுக்கு இயலவில்லே. தோல்வியுற்ற அவன் திரும்பினுன். பிறகுதேவர்களுக்குத்தலைவன் இந்திரன் வந்தான். ஆயினும் அவனுக்குக் கட்புலனுகாது (யக்ஷன்) பிரம்மம் மறைந்தது. அதற்குப் பதிலாக உமாதேவி தென்பட்டாள். அவள்அருளால் தேவர்களுக்குப் பிரம்மம் விளங்குவதாயிற்று. அனைத்துக்கும் மூலப்பொருள் பிரம்மம் என்பதைப் பின்பு அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

தத்துவம்: தேவன் என்னும் சொல் பிரகாசமுடையவன் எனப் பொருள்படுகிறது. இந்திரியங்களைத் தேவர்கள் எனக் கூறுவது வேதாந்தத்தின் ஐதிகமாகும். இந்திரியங்களுக்கெல்லாம் தலைவனுக மனது இருப்பதால் அது தேவேந்திரன் எனப்படுகிறது. பஞ்சபூதங்களைப் பொருள்படுத்தும் வல்லமை இந்திரியங்களுக்கு உண்டு. ஆதலால் பூதங்களை வெல்லும் திறமை அவைகளுக்கு யாண்டும் உளது. இப்படிப்பட்ட இந்திரியங்களுக்குத் தங்கள் சாமர்த்தியத்தைக் குறித்துச் செருக்கு உண்டா

இரண்டு இயல்புகள் உண்டு. இவையிரண்டையும் உலகிலே நாம் கண்கூடாய்க் காண்கிறோம். சாந்தமூர்த்தி

யிற்று. பிரம்ம சைதன்யத்தின் சான்னித்தியம் எப்பொழுதுமே இந்திரியங்களுக்கிடையில் உளது. ஆனால் பிரம்ம சைதன்யத்தைக் கிரகித்துக்கொள்ளும் ஆற்றல் இந்திரியங்களுக்கில்லை. மனதாலும் அது அறியப்படுவதன்று. பரம்பொருள்தான் யாது என்று இந்திரியங்கள் திகைத்திருந்தபொழுது அன்னை பராசக்தி பிரசன்னமானாள். சக்தியின் அனுக்கிரகத்தின் வாயிலாகவே சிவம் அல்லது பரம்பொருள் அறியப்படுகிறது.

சக்தி ஹைமவதி எனச் சுருதிகளில் சொல்லப்பட்டிக்கிறது. ஹிமவான் அல்லது பர்வதராஜனுடைய புதல்வி என்பது ஒரு பொருள். பொன்னார் மேனியள் என்பது மற்றொரு பொருள். அனுக்கிரக சொரூபமாயிருக்கிற சக்தியும், சகுண பிரம்மமும், சபேசனும் வெவ்வேறு மூர்த்திகள் அல்லர். வஸ்து ஒன்று, அதற்கு இப்படிப் பெயர்கள் பல அமைந்துள்ளன. சோபை மிக வாய்க்கப் பெற்றவள் சக்தி என்று சுருதி சொல்லுகிறது. சோபை இருப்பதால்தான் தூய இந்திரியங்களுக்குச் சக்தியை அறிய இயலுகிறது.

ஆத்ம சாதகர்களுக்கு ஈண்டு அரியதொரு பாடம் புகட்டப்படுகிறது. "ஈசனால் இயற்கை முழுதும் வியாபிக்கப் பெற்றதாக வேண்டும்" என்பதை நினைவுக்குக் கொண்டுவரவேண்டும் (உபநி-2பக்கம் 102). பஞ்சேந்திரியங்கள் மூலமாக நாம் உலகத்தை உலகமாகவே பொருள் படுத்திப் பழகியிருக்கிறோம். நலமும் கேடும் நிறைந்ததாகவே அதை நாம் கருதி வருகிறோம். ஆனால் நம்மில் ஆத்மசாதனம் புரிகிறவர்கள் இவ்வுலகைத் தெய்வமாகவே பாவித்துப் பழகவேண்டும். அப்பொழுது நமக்குப் பக்குவம் விரைவில் வருகிறது. உலகக் காட்சியும் மெய்ப்பொருள் காட்சியாகத் திருந்தியமைகிறது. இப்படி மனப்பான்மையை மாற்றுவது ஆத்மசாதனத்துக்கு முற்றிலும் இன்றியமையாதது.

உமாதேவி எனப்படுகிறாள். பயங்கரமூர்த்தி காளிகா தேவி எனப்படுகிறாள்.

144. இறைவ னீண்டிய வடியவ ரோடும்
145. பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளின
146. னொலிதரு கைலை யுயர்கிழ வோனே

இறைவன் ஈண்டிய அடியவரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கு இனிது அருளினன்
ஒலி தரு கைலை உயர் கிழவோனே

ஈண்டுதல் - கூடுதல். பொலிதரு - கண்கூடாக விளங்குகிற. கிழவோன் - உடையவன். ஒலிதரு - நாதபிரம்மமாகிய.

கைலாசபதியாகிய இறைவா, நீ நாதபிரம்மம். அத்தகைய நீ சிதம்பரத்தின்கண் எழுந்தருளி அடியவர்களோடு கூடி இனிது வீற்றிருக்கின்றாய்.

கைலையும் கைலாய நாதனும் ஒன்றேயாம். அத்தகைய பெரிய பொருள் ஓசை வடிவினனாய் அல்லது நாதபிரம்மமாய் இலங்குகிறார். அவருடைய பாரமார்த்திகப் பெருநிலை ஞானக் கண்ணுடையார்க்கு விளங்குகிறது. பிறகு ஊனக்கண்கொண்டு பார்க்கிற அன்பர்களுக்கு அதற்கு நிகராகச் சிதம்பரம் இருக்கிறது. ஈண்டு அடியவர்களின் இடையறாத ஆராதனையின் ஆரவாரம் அனாஹத தொனிக்கு அதாவது நாதபிரம்மத்தின் ஓவாத சத்தத்துக்கு நிகராகிறது. ஞானபூமிக்கு நிகராய் ஞாலத்தில் இருப்பது சிதம்பரம். இதன் துணைகொண்டு கைலை அல்லது சிவஞான நிலையை எட்டுவது வாழ்வின் குறிக்கோள் ஆகும்.

சிவன் சாந்தமூர்த்தி; ருத்திரன் உக்கிர மூர்த்தி. அதே விதத்தில் உமாதேவி சாந்தமூர்த்தி; காளிகாதேவி உக்கிரமூர்த்தி. சாதகன் ஒருவன் இந்த இரண்டு அம்சங்களையும் சரியாக உபாசிக்கின்றபொழுதே அவனுடைய உபாசனை பரிபூரண உபாசனையாகின்றது

தில்லையில் அருளிய

3. திருவண்டப் பகுதி

உருண்டு திரண்டு அக்னிக் காற்ருயிருப்பது சூரியன். அதனிடத்திருந்து சிதறி வந்து குளிர்ந்து இறுகியிருப்பது நிலவுலகம். அதே விதத்தில் சுத்த சைதன்யமாயிருப்பது சிவம். அந்தச் சிவனிடத்திருந்து ஜடசக்தி வந்துள்ளது. ஜடசக்தி பஞ்சபூதங்களாயின. பஞ்சபூதங்களிலிருந்து எண்ணிறந்த அண்டங்கள் உண்டாயின. அவை யாவும் சிவனுருக்கு உடலாக அமைந்துள்ளன. ஆதலால் அவைகளைத் திரு அண்டம் என அழைப்பது முறை. அண்டம் என்னும் சொல் உருண்டை அல்லது முட்டை வடிவில் இருப்பது எனப் பொருள்படுகிறது.

1. அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்க
2. மளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி

அண்டம் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பு அரும் தன்மை வளம் பெரும் காட்சி

உண்டை-உருண்டை. பிறக்கம்-குவியல்.

பிரமாண்டமானது எண்ணிறந்த கோளங்களையுடையது. அக்கோளங்களின் தன்மைகளை முற்றிலும் தெரிந்துகொள்ள முடியாது. ஆராயுமளவு அவைகளின் அழகும் சீரமைப்பும் கண்டு வியப்பதற்கு உரியவைகளாயிருக்கின்றன.

3. ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரி
4. னூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன

ஒன்றனுக்கு ஒன்று நின்று எழில் பகரின்
நூற்று ஒரு கோடியின் மேல்பட விரிந்தன

ஒவ்வொரு கோளத்திலும் ஒரு தனியழகு பொலிகிறது. விளக்கிச் சொல்லுமிடத்துக் கோடிக் கணக்கில் அவைகள் அகண்டாகாரத்தில் விரிந்து போகின்றன.

5. இன்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
6. சிறிய வாகப் பெரியோன் றெரியின்

இல்நுழை கதிரின்துன் அணுப் புரையச்
சிறிய ஆகப் பெரியோன் தெரியின்

இல்நுழை-வீட்டின் துவாரம் வாயிலாக நுழைதல். துன்னுதல்-பொருந்துதல். புரைதல்-ஒத்திருத்தல். தெரியின்-ஆராயின்.

ஒரு பொத்தலில் வீட்டுக்குள் வருகிற சூரிய வெளிச்சத்தில் அணுப்போன்ற தூசிகள் அலைந்து திரிவது தென்படுகிறது. அது போன்று கோளங்கள் வானத்தில் மிதந்துகொண்டிருக்கின்றன. சிறியதாகிய அணுவுக்கும் பெரியதாகிய அண்டத்துக்கும் அமைப்பு ஒன்றேயாம். ஆராய்ந்து பார்ப்பவர்க்கு இவ்வுண்மை விளங்குகிறது.

வீட்டுக்குள் காற்றில் மிதந்துகொண்டிருக்கிற தூசிகள் போன்றவை பூமி, சந்திரன், சூரியன்முதலிய கோளங்கள். தூசிகள் நமக்கு அற்பமானவைகளாகத் தோன்றுவது போன்று இறைவனுக்கு அண்டகோடிகள் அற்பமானவைகளாம். இறைவனைப்பற்றிய பேருணர்வு நமக்கு வரும்போது நமது உடலைப் பற்றியோ, நிலவுலகைப் பற்றியோ கவலையொன்றும் நமக்கு உண்டாகாது.

7. வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியுந்
8. தோற்றமுஞ் சிறப்பு மீற்றெடு புணரிய
9. மாப்பே ரூழியு நீக்கமு நிலையுஞ்

வேதியன் தொகையொடு மால் அவன் மிகுதியும்
தோற்றமும் சிறப்பும் ஈற்றெடு புணரிய
மாப் பேர் ஊழியும் நீக்கமும் நிலையும்

வேதியன் தொகை-பிரம்மதேவர்களின் கூட்டம். மாலவன் மிகுதி-விஷ்ணுவின் சேஷம். தோற்றம்-சிருஷ்டி. சிறப்பு-ஸ்திதி. ஈற்றெடு-ஈறு உடன். ஈறு-சம்ஹாரம். மாப்பேர் ஊழி-மஹா பிரளயம்.

உபநிஷத் மந்த்ரம் — 24

नारायणः परं प्रह्म तत्वं नारायणः परः ।
नारायणः परो ज्योतिरात्मा नारायणः परः ॥

நாராயண: பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: |
நாராயண: பரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர: ||

(மஹாநாராயணோபநிஷதம் 13-4

எண்ணிறந்த பிரம்மாக்களும், அவர்களுக்கெல்லாம் சேஷனாய் இருக்கிற விஷ்ணுவும், சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய முத்தொழில்களும், மகாபிரளயமும் அதன் இருப்பும் முடிவும் ஆகிய இவை யாவும், ஈசா, உனது விராட் சொரூபத்தின் பாங்குகளாம்.

ஜீவர்களுள் தலையாயவன் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவன். ஒரு பிரம்மதேவன் கிரமமுக்தியடையும் பொழுது மகாபிரளயம் வருகிறது. இங்ஙனம் நான்முகக் கடவுள்கள் கணக்கற்ற பேர் தோன்றவும் ஒடுங்கவும் செய்கின்றனர். பிரம்மாக்களுக்கு ஆதிமூலமாக இருப்ப பவர் விஷ்ணு. ஆதலால் அவர் சேஷன் அல்லது எஞ்சி யிருப்பவர் எனப்படுகிறார். தோன்றுதும் மறையாதும் இருப்பதால் சொரூபத்தில் சங்கரனும் நாராயணனும் ஒன்றேயாம். மகாபிரளயம் உண்டாதலும் அது நீங்கு தலும் எல்லாம் ஈசனுடைய பெரிய விளையாட்டுக்களாம்.

नारायण: நாராயண: நாராயணன் परं பரம் மேலான ब्रह्म तत्वं ப்ரஹ்ம தத்வம் மெய்ப்பொருள் नारायण: நாராயண: நாராயணன் पर: பர: முடிந்த வஸ்து नारायण: நாராயண: நாராயணன் पर: ज्योति: பர: ஜ்யோதி: ஒப்பற்ற சுடர் नारायण: நாராயண: நாராயணன் पर: आत्मा பர: ஆத்மா பரமாத்மன்.

நாராயணன் பரபிரம்ம தத்துவமாகிறான். முழுமுதல் பொருள் நாராயணன்; பரஞ்ஜோதியாயிருப்பவன் நாராயணன். பரமாத்மாவாயிருப்பவன் நாராயணன்.

சங்கரனும் நாராயணனும் ஒன்றே என்பது வேத வாக்கு. வேதத்தில் மெய்ப்பொருளுக்குக் கொடுத்துள்ள பல பெயர்களில் நாராயணன் என்பதும் ஒன்றாகும். நாரா-தன்னிடத்திருந்து தோன்றி வந்துள்ள பஞ்சபூதங் களுக்கும் அவைகளின் காரியமாகிய ஜகத்துக்கும், அய னன்-தங்குமிடமாய் இருப்பவன், நாரா + அயனன் = நாரா யணன் என்பது அப்பெயரின் பொருளாகும். இந்தத் தத்துவத்தைப் புராணம் உருவகப்படுத்தி இயம்புகிறது. நாராயணனுடைய உந்திக்கமலத்தினின்று பிரம்மதேவன் தோன்றி வந்துள்ளான் என்பது புராண வரலாறு.

10. சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்
11. தெறியது வளியிற்
12. கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்

சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து
எறியது வளியின்
கொட்கப் பெயர்க்கும் குழகன் முழுவதும்

சூறைமாருதம்-சுழல் காற்று. எறிதல்-காற்று வீசுதல். வளி-சிறு காற்று. கொட்க - சுழல. பெயர்க்கும் - நிலைபெயர்க்கின்ற. குழகன்-இளையவன்.

வீசுகின்ற பெரிய சுழல்காற்றில் அடங்கியிருக்கிற சிறிய காற்றும் சுழன்று இடம் மாறுகிறது. அங்ஙனம் நித்திய யௌவனத்தில் இருக்கிற பரமனது சாந்நித்தியத்தில் கிருத்திய கர்த்தாக்களாகிய தெய்வங்கள் அவரவர் செயல்களை முறையாகச் செய்து வருகின்றனர். அப்படி அவர்கள் செய்கிற பிரபஞ்சக் கிருத்தியங்கள் சூக்ஷ்மநிலையிலும் ஸ்தூலநிலையிலும் நிகழ்ந்து வருகின்றன.

பரமன் மாருத்தன்மை வாய்ந்தவராதலால் அவர் எப்பொழுதும் யௌவனத்தில் அல்லது இளமையில் நிலைத்திருக்கிறார்.

13. படைப்போற் படைக்கும் பழையோன் [படைத்தவை
14. காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
15. கரப்போன் கரப்பவை கருதாக்
16. கருத்துடைக் கடவு டிருத்தகும்

படைப்போன் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போன் காக்கும் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள் திருத்தகும்

உபநிஷத் மந்த்ரம் — 25.

दिव्यो ह्यमूर्तः पुरुषः स बाह्याभ्यन्तरो ह्यजः ।
अप्राणो ह्यमनाः शुभ्रो ह्यक्षरात्परतः परः ॥

திவ்யோ ஹ்யமூர்த: புருஷ: ஸ பாஹ்யாப்யந்தரோ ஹ்யஜ: ।
அப்ராணோ ஹ்யமனா: சுப்ரோ ஹ்யக்ஷராத்பரத: பர: ॥

(முண்டகோபநிஷதம்)

அனைத்தையும் படைப்பவனுகிய பிரம்மதேவன் தொல்லோன் ஆகிருன்; படைக்கப்பட்டவைகளைக் காப்பவன் திருமால்; காக்கப் பட்டவைகளைத் துடைப்பவன் ருத்திரன். இம் முத்தொழில்களில் கருத்தைச் செலுத்தாது அதீதத்தில் இருப்பவன் பரமசிவம்.

மும்மூர்த்திகளும் மூன்று கிருத்தியங்களைச் செய்கின்றபொழுது அவர்கள் ஜீவர்கள் ஆகிருர்கள். ஏனென்ருல் கிருத்தியம் ஜீவர்களுக்கே உரியதாகிறது. மேலும் மனதோடு கூடியிருப்பவர்கள் ஜீவர்கள். மனதற்ற நிலையில் ஜீவர்களது ஜீவபோதம் ஒழிகிறது. ஜீவபோதத்தின் அழிவை முன்னிட்டே மும்மூர்த்திகளுக்கு அழிவு என்று சொல்லப்படுகிறது. ஆனல் அம்மும்மூர்த்திகளிடத்து இருக்கிற ஆத்ம சைதன்யமோ அழிவதில்லை. ஆத்மசைதன்யமே சுத்த சைதன்யம். அது பரமசிவன் எனப்படுகிறது. அதுவே கருதாக் கருத்துடைக் கடவுள்.

दिव्यः திவ்ய: சுடர் உடையது हि अमूर्तः ஹி அமூர்த: வடிவமே இல்லாதது हि अजः ஹி அஜ: யாண்டும் பிறவாதது शुभ्रः சுப்ர: தூயது पुरुषः புருஷ: அனைத்திலும் வியாபித்திருப்பது स बाह्याभ्यन्तरः ஸ பாஹ்யாப்யந்தர: புறத்திலும் அகத்திலும் இருப்பது अप्राणः அப்ராண: உயிர்க்காதது हि अमनाः ஹி அமனு: மனதற்றது अक्षरात्परतः परः அக்ஷராத் பரத: பர: பிரளய நிலையில் உள்ள பிரகிருதிக்கு அப்பாற்பட்டது हि ஹி நிச்சயமாகவே.

பரமாத்மன் சுயம் சுடரானது, வடிவமற்றது, பிறவாதது, தூயது, உள்ளும் புறமும் எங்கும் வியாபகமானது. பிராணனுக்கும் மனதுக்கும் அப்பாற்பட்டது. தோன்ருநிலையிலிருக்கிற பிரகிருதிக்கும் அப்பாற்பட்டது.

பரமனுக்கு வடிவமில்லை என்பதற்குச் சிவலிங்கம் சின்னமாகிறது. பிறப்பு இறப்பு இல்லாதவன் சிவன். நீக்கமற அவர் எங்கும் நிறைந்திருக்கிருர். சுவாசித்து அவர் உயிர் வாழ்ந்திருப்பதில்லை. மனதுக்கு அவர் அப்பாற்பட்டவர். சிருஷ்டி, பிரளயம் என்ற நிலைகள் பிரகிருதிக்கு உண்டு. பிரளயத்தில் எல்லாம் அழிந்துபோனதுபோன்று

கருதுதல்-சித்தம் அல்லது மனதின் செயல். கருதாக் கருத்து-சித் அல்லது சைதன்யம். அது மனதற்ற பரிசுத்தநிலை.

17. அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
18. வீடு பேருய் நின்ற விண்ணேர் பகுதி
19. கீடம் புரையுங் கிழவோ ஞடொறும்

அறுவகைச் சமயத்து அறுவகையோர்க்கும்
வீடு பேறு ஆய் நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையும் கிழவோன் நாள் தொறும்

(திருத்தகும்-வேதத்துக்கு உடன்பாடாகிய.) விண்ணோர் பகுதி-தேவகணம். கீடம்-புழு. புரைதல்-ஒத்திருத்தல். கிழவோன்-உரியவன், பகவான்.

வேதத்துக்கு உடன்பாடான ஆறு சமயங்களை அனுஷ்டிப்பவர்களுக்கெல்லாம் முக்தியைக் கொடுப்பவர் ஈசன். தேவர் கூட்டம் முதல் புழு வரையில் உள்ள ஜீவர்கள் எல்லாரிடமும் சமதிருஷ்டி வைத்திருப்பவர் ஈசன்.

சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம், ஸௌரம் ஆகிய ஆறு மதங்களும் வேதத்துக்கு உடன்பாடானவைகள். இந்த ஆறு மதங்களில் எதை வேண்டுமானாலும் பழகுபவன் ஆஸ்திகன்; இவைகளுக்குப் புறம்பானவன் நாஸ்திகன். இங்ஙனம் வேதாந்திகள் கருதுகின்றனர். ஆறு மதங்களைப் பின்பற்றுபவர்களுள் பரந்த மனப்பான்மை யுடையவர்களும் அங்ஙனமே ஆறு சமயங்களையும் சமரசத்தோடு கருதுகின்றனர். இந்த ஆறு சமயத்தவர்களுள் குறுகிய மனப்பான்மையுடையவர்கள் அவரவர் மதத்தையே சிலாகித்துச் சித்தாந்தப் படுத்துகின்றனர்.

ஆறு சமயத்தவர்களும் வேதாந்திகளும் ஒன்று கூடி புத்த மதத்தையும் ஜைன மதத்தையும் புற மதங்கள் என ஒதுக்கி வைத்தனர். ஆனால் ஹிந்து மதத்தில் இவை

இருக்கிறது. பரம்பொருளோ தோற்றம் ஒடுக்கம் என்னும் விகாரங்களுக்கு அப்பாற்பட்டது.

இரண்டும் இடம்பெறுகின்றன. மிக அண்மையில் தோன்றி வந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் எல்லா மதங்களையும் தாமே அனுஷ்டித்துப் பார்த்தவர். அவருக்குப் புத்த மதம், ஜைன மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்துவ மதம். ஆகிய எல்லா மதங்களும் சம்மதம். ஈசன் அருளால் இத்தனைவித மதங்கள் உலகில் தோன்றி யிருக்கின்றன என்பது அவரது துணிபு. ஈசனுடைய பெருந்திட்டத்தில் எந்த மதமும் புறமதம் ஆகாது என்பது சான்றோர் கொள்கை.

20. அருக்கனிற் சோதி யமைத்தோன் றிருத்தகு
21. மதியிற் றண்மை வைத்தோன் றிண்டிறற்
22. றீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
23. வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
24. காலி னூக்கங் கண்டோ னிழறிகழ்

அருக்கனில் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் திண்திறல்
தீயில் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல் திகழ்

அருக்கன் - சூரியன். திருத்தகு - அழகு பொருந்திய. மதி-திங்கள். திண்திறல் தீயில்-வலிய வெற்றியையுடைய நெருப்பில். வெம்மை-வெப்பம். கலப்பு-வியாபகம். மேதகு-மேன்மை பொருந்திய. கால்-காற்று. நிழல் திகழ்-குளிர்ச்சியோடு கூடிய.

ஈசா, நீ சூரியனிடத்து ஒளியை உண்டுபண்ணியுள்ளாய்; அழகுடைய சந்திரனிடத்துக் குளிர்ச்சியை யமைத்தாய்; வலிய வெற்றியையுடைய நெருப்பில் வெப்பத்தைத் தோற்றுவித்துள்ளாய்; யாண்டும் நிலைத்திருக்கிற ஆகாசத்தில் வியாபகத் தன்மையை அமைத்துள்ளாய்; மேன்மை பொருந்திய காற்றில் விரைந்தடித்தல் என்னும் வேகத்தைக் கொடுத்துள்ளாய்.

நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்கு பூதங்களும் சிருஷ்டியின் நடைமுறையில் ஓயாது நிலைமாறி யமைகின்றன. ஆகாசம் மட்டும் யாண்டும் இருந்தபடி இருக்கிறது. அது பொய்யாய்ப் போவதில்லை. எனவே அது பொய்தீர் வான் எனப்படுகிறது.

25. நீரி லின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
26. மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்
27. றெனைப்பல கோடி யெனைப்பல பிறவு
28. மனைத்தனைத் தவ்வயி னடைத்தோ னஃதான்று

நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் என்று என்று
எனைப் பல கோடி எனைப் பல பிறவும்
அனைத்து அனைத்து அவ்வயின் அடைத்தோன்
[அஃதான்று

திண்மை-திட்பம். அவ்வயின் அடைத்தோன்-அவ்வவ்விடங்களில் அமைத்தவன். அஃதான்று-அதுவன்றி.

குளிர்ச்சி பொருந்திய நீரில், ஈசா, நீ இனிய சுவையை வைத்துள்ளாய்; பூமியிலே வலிமையை நீ வைத்துள்ளாய்; இப்படியெல்லாம் உன் மகிமைகளை வேண்டியவாறு விளக்கிக்கொண்டே போகலாம். கோடிக் கணக்கில் அவைகள் விரிகின்றன. அவை யாவையும் நீ அவ்வவைகளுக்குரிய இடங்களில் வைத்துள்ளாய். அதற்கு மேலும் உன் மகிமை உளது.

ஸ்ரீமத் பகவத் கீதையில் பத்தாவது அத்தியாயத்தில், விபூதியோகத்தில் இவைபோன்ற விளக்கங்கள் வந்துள்ளன. அதாவது ஈசனே உலகனைத்தும் ஆகியுள்ளான். அந்தந்த வஸ்துவில் இருக்கிற சிறப்பு, உண்மையில் ஈசனுடைய மகிமையாம். நீரில் சுவையைச் சான்றாக எடுத்துக்கொள்ளலாம். நாம் சுவைப்பதெல்லாம் பரமாத்மனுடைய பேரியல்பேயாம். அவனுக்குப் புறம்பாக ஏதும் இல்லை. அனைத்தையும் அவன் சொரூபமாகக் காண்பது நல்ல ஆத்ம சாதனமாகிறது.

29. முன்னோன் காண்க முழுதோன் காண்க
முன்னோன் காண்க முழுதோன் காண்க

அனைத்துக்கும் ஆதிமூலமாயிருப்பவனும் பூரணனாய் இருப்பவனும் சுவானுபூதிக்கு உரியவன் ஆகுக.

30. தன்னே ரில்லோன் றானே காண்க
தன் நேர் இல்லோன் தானே காண்க

அவன் பூரணப்பொருள் ஆதலால் அவனுக்கு ஒப்பானவன் வேறு யாருமில்லை என்பதை உணர்க.

31. ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க

ஏனம் தொல் எயிறு அணிந்தோன் காண்க

ஏனம்-காட்டுப்பன்றி. தொல்-முதிர்ந்த. எயிறு-யானை, காட்டுப்பன்றி ஆகியவைகளின் தந்தம் அல்லது கொம்பு (tusk).

காட்டுப்பன்றியின் முதிர்ந்த தந்தத்தை அணிந்துகொண்டிருப்பவனைக் கண்டுகொள்க.

32. கானப் புலியுரி யரையோன் காண்க

கானம் புலி உரி அரையோன் காண்க

உரி-தோல்.

வனத்தில் வசிக்கின்ற புலியின் தோலை அணிந்துள்ள அரையையுடையவனை அறிந்துகொள்க.

व्याघ्र चर्माम्बरावृतः வ்யாக்ர சர்மாம்பராவ்ருதः அதாவது புலித்தோலை அணிந்திருப்பவன் என்பது அவனுடைய ஆயிரம் திருநாமங்களில் ஒன்றாகும்.

33. நீற்றேன் காண்க நினைதொறு நினைதொறு
34. மாற்றேன் காண்க வந்தோ கெடுவேன்

நீற்றேன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்

நீற்றேன்-திருநீறு பூசியவன்.

திருநீறு பூசியவனைக் கண்டுகொள்க. அவனை நினைந்து நினைந்து இன்புறும் நான் அவனை மறந்திருக்கச் சகியேன் என்பது வெளிப்படை. ஒருவேளை அவனை மறந்தால், ஐயோ, நான் கெட்டொழிவேன்.

சிவனார் திருநீறு பூசியிருப்பதை முன்னிட்டு அவருக்கு அமைந்திருக்கும் ஆயிரம் திருநாமங்களில் ஒன்று भस्मोद्धूलितविग्रहः பஸ்மோத்தூலித விக்ரஹः என்பதாம். எல்லாம் தீயில் வெந்துபோன பிறகு எவ்வளவுதான் எரித்தாலும் எது வேகாதிருக்கிறதோ அது நீறு. உலகெல்லாம் பிரளயத்தில் அழிந்துபோன போதிலும் அழியாதிருப்பவன் சிவன். எனவே நீறு சிவனுக்கு ஏற்ற நல்ல சின்னமாகிறது.

இனி 36வது பக்கத்தில் மஹாபாவத்தில் பதினெென்ருவது இயல்பாகிய விப்ரம: அல்லது மயக்கத்தின் தன்மையை ஆற்றேன் என்னும்சொல் எடுத்துக்காட்டுகிறது. அதன் ஏழாவது தன்மையில் எட்டு உட்பிரிவுகள் இருக்கின்றன. அது பிரளயம் எனப்படுகிறது. பக்தி போனல் தானும் அழிந்துபட்டுப் போவதாகப் பக்தன் உணருகிருன். அந்தோ கெடுவேன் என்னும் கூற்று அந்த நிலையை விளக்குகிறது.

35. இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க
36. வன்னதொன் றவ்வயி னறிந்தோன் காண்க

இன் இசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னது ஒன்று அவ்வயின் அறிந்தோன் காண்க

அன்னது ஒன்று அவ்வயின் அறிந்தோன்-அப்படிப்பட்ட ஓசையை ரசிப்பவன்.

வீணையினின்று வருகிற இனிய இசை வடிவினன் ஈசன். அந்த இசையை ரசிப்பவனுகவும் அவன் இருக்கிருன் என்பதை அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

லலித கலைகளில் ஒன்று இசை. ஓசையின் உயர்வை அது விளக்குகிறது. இறைவன் அழகனுகத் திகழ்கிருன். ஓசையின் அழகு இசையில் இனிது வெளியாகிறது. பாடத் தெரிந்தவன் பாடகன். பின் தன்பாட்டைப் பாடகன் தானே ரசிக்கிருன். இறைவனே நாத பிரம்மம் எனப்படுகிருன். நாதம் வித்துக்கு ஒப்பானது. பிரபஞ்சம் என்னும் விருக்ஷம் அந்த வித்தினின்று வந்ததாகும். இசை என்னும் கலைஞானத்தைச் சரியாகக் கையாண்டால் அது பரஞானத்தில் சாதகனைக்கொண்டு சேர்க்கிறது. இசையும் இறைவனும் ஒன்று என்பதைக் கண்ணன் கிளப்பிய குழல் ஓசை நிரூபித்திருக்கிறது. ஆதலால் இசையை நல்ல ஆத்ம சாதனமாகப் பயன்படுத்துவது முறை.

37. பரமன் காண்க பழையோன் காண்க
38. பிரமன்மால் காணுப் பெரியோன் காண்க

பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன் மால் காணுப் பெரியோன் காண்க

பரமன்-ஐம்புலன்களுக்கு எட்டாதவன்.

பரமசிவன் பிரபஞ்சத்துக்கு அப்பால் இருப்பவன் என்பதையும் அவன் புராணன் என்பதையும் அறிந்துகொள்க. அவன் அகண்ட வஸ்துவாதலால் கிருத்திய கர்த்தாக்களாகிய நான்முகப் பிரமனும் திருமாலும் அவனை முற்றும் அறியார்கள் என்பதையும் அறிந்து கொள்க.

ஈசனுடைய இந்த விபூதிகளைப்பற்றியெல்லாம் எண்ணுவது தியானப் பயிற்சிக்கு நன்கு உதவும்.

39. அற்புதன் காண்க வநேகன் காண்க
40. சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க

அற்புதன் காண்க அநேகன் காண்க
சொல் பதம் கடந்த தொல்லோன் காண்க

ஈசன் வியப்புக்குரிய பெரிய பொருள் என்பதையும், அவன் எண்ணிறந்த வடிவங்களை எடுத்திருப்பவன் என்பதையும், சொல்லில் அடங்காத பழைய பொருள் என்பதையும் எண்ணிப்பார்க்கவும்.

41. சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
42. பத்தி வலையிற் படுவோன் காண்க

சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையில் படுவோன் காண்க

சேட்சியன்-தூரத்தில் இருப்பவன்.

மனதுக்கு எட்டாததனுல் அவன் தூரத்தில் இருப்பவன் போன்று காணப்படுகிறுன். ஆனுல் பக்தியின் மூலம் அவனை நாம் முற்றிலும் நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம் என்பதை அறிந்துகொள்க.

43. ஒருவ னென்னு மொருவன் காண்க
44. விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க

ஒருவன் என்னும ஒருவன் காண்க
விரி பொழில் முழுதாய் விரிந்தோன் காண்க

பொழில்-உலகம்.

அவனைத் தவிர இரண்டாவது பொருள் ஏதும் இல்லை. அத்தகைய ஒருவனே உலகாய், உலகில் எல்லாமாய் விரிந்திருக்கிருன். இதை அறிந்துகொள்ளுதல் அவசியமாகிறது.

45. அணுத்தருந் தன்மையி லையோன் காண்க
46. இணைப்பரும் பெருமை யிலீசன் காண்க

அணுத் தரும் தன்மையில் ஐயோன் காண்க
இணைப்பு அரும் பெருமையில் ஈசன் காண்க

ஐயோன்-நுண்ணியன். இணைப்பு அரும் பெருமை-சீர்தூக்க முடியாத மகிமை.

உபநிஷத் மந்த்ரம்—26.

अणोरणीयान् महतो महीयानात्मास्य जन्तोर्निहितो गुहायाम् ।
तमक्रतुः पश्यति वीतशोको धातुप्रसादान्महिमानमात्मनः ॥

அணோரணீயான் மஹதோ மஹீயாநாத்மாஸ்ய
ஜந்தோர்நிஹிதோ குஹாயாம் ।
தமக்ரது: பச்யதி வீதசோகோ தாதுப்ரஸாதான்
மஹிமானமாத்மன: ॥

(கடோபநிஷதம் 2–20)

आत्मा ஆத்மா ஆத்மாவானவர் अणोः अणीयान् அணோ: அணீயான் அணுவுக்கு அணுவாய் இருக்கிருர் महतः महीयान् மஹத: மஹீயான் பெரியதற்கெல்லாம் பெரியதாய்இருக்கிருர் अस्य जन्तोः அஸ்ய ஜந்தோ: இந்த ஜந்துக்களுடைய गुहायां குஹாயாம் ஹிருதய குகையில் निहितः நிஹித: வசிக்கிருர் अक्रतुः அக்ரது: ஆசையற்றவன் वीतशोकः வீதசோக: சோகத்தினின்று விடுபட்டவனுகி धातुप्रसादात् தாதுப்ரஸாதாத் கருவி கரணங்களின் தூய்மையினுல் आत्मनः तं महिमानं ஆத்மன: தம் மஹிமானம் ஆத்மனுடைய அந்த மஹிமையை पश्यति பச்யதி பார்க்கிருன்.

ஆத்மாவானவர் அணுவுக்கு அணுவாயும் பெரியதற்கெல்லாம் பெரியதாயும் இருக்கிருர். உயிர்களின் உள்ளத்தில் அவர் வீற்றிருக்கிருர். ஆசையற்றவன் துயரத்தினின்று விடுபட்டவனுய், திரிகரண சுத்தியின் வாயிலாக ஆத்மனுடைய மஹிமையை அறிகிருன்.

வண்ணத்தில் அணுப்போன்று நுண்ணியனாய் இருக்கும் ஈசன் பெருமையில் ஒப்பற்றவனாய் இருப்பதை அறிந்து கொள்க.

47. அரியதி லரிய வரியோன் காண்க
48. மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க

அரியதில் அரிய அரியோன் காண்க
மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க

மருவுதல்-சேர்ந்திருத்தல்.

மனதால் கிரகிப்பதற்கும் வாயால் விளக்குதற்கும் அரியவனாய் இருப்பவன் ஈசன். பின்பு அவன் அனைத்திலும் ஊடுருவியிருந்து அவையாவையும் வளர்த்து வருகிறான் என்பதை அறிந்துகொள்க.

இம்மை மறுமையாகிய இருமையிலும் கிடைக்கிற இன்பங்களை நாடாதவன் ஆசையற்றவனாகிறான். ஆசை அகலுமளவு அச்சமும் நீங்குகிறது. நிராசையில் நிலை பெற்றிருப்பவனுக்கு மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களும் தெளிவடைகின்றன. தெளிந்த மனதில் ஆத்ம பிரகாசம் தரிசனமாகிறது. பரமாத்மன் நுண்ணியதிலெல்லாம் நுண்ணியவனாகவும், பெரியவைகளிலெல்லாம் பெரியவனாகவும் இருப்பது சுவானுபூதியில் விளங்குகிறது. சுவானுபூதி அடைகிறவன் ஆத்மனுடைய மகிமையை அடைகிறான்.

உபநிஷத் மந்த்ரம் — 27.

श्रवणायापि बहुभिर्यो न लभ्यः शृण्वन्तोऽपि बहवो यं न विद्युः ।
आश्चर्यो वक्ता कुशलोऽस्य लब्धाश्चर्यो ज्ञाता कुशलानुशिष्टः ॥

ச்ரவணாயாபி பகுபிர்யோ ந லப்ய: ச்ருண்வந்தோऽபி
பஹவோ யம் ந வித்யு: ।
ஆச்சர்யோ வக்தா குசலோऽஸ்ய லப்தாச்சர்யோ
ஞாதா குசலானுசிஷ்ட: ॥

(கடோபநிஷதம் 2 — 7)

य: யः எந்தப் பரமாத்மன் बहुभि: பகுபி: பலரால் श्रवणाय अपि ச்ரவணாய அபி கேள்விப்படுதற்கே न लभ्य: ந லப்ய:

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துமாய்ப் பின்பு அவை யனைத்திலும் அந்தர்யாமியாய் நீக்கமற எங்கும் வியாபித் திருப்பவன் பரமாத்மன். அப்படியிருந்தும் அவனைச் சரியாக யாரும் அறிந்துகொள்ள முடியாது. ஏனென்றால் அவனை அறிதற்கு மனது தவத்தின் வாயிலாக முற்றிலும் பண்பட்டிருக்க வேண்டும். பண்பட்ட மனதுக்குப் புத்தி யோகம் என்று பெயர். புத்தியோகம் அடையப் பெற்றவர் பரமனை அறிவர்; பின்பு பரமனை அடைவர்.

ஈசனுடைய சன்னிதான விசேஷமே உயிர்கள் அனைத்தையும் உருவாக்கவும் வளர்க்கவும் செய்கிறது. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். சூரியனிடத்திருந்து பூமி உண்டானது. பூமியினின்று நீர் உருவாயிற்று. அந்த நீர் கடலாக அமைந்திருக்கிறது. சூரியனுடைய சாந்நித்தியத்தால் நீர் ஆவியாக மாறுகிறது. ஆவியினின்று மேகங்களும் மழையும் உறைபனியும் மற்றும் பல நீர் வடிவங்களும் வருகின்றன. இந்நிகழ்ச்சிகளெல்லாம் ஜடநிலையில் ஆவதுபோன்று சேதன நிலையில் பலப்பல உயிர்வகைகள் ஈசனுடைய சந்நிதானத்தில் அமைகின்றன. பலப்பலவாக அவைகள் அமைவதற்குப் பிரகிருதி பேதம் காரணமாகும். சைதன்யம் அல்லது

வாய்ப்பதில்லையோ बहवः शृण्वन्तः அபி **பஹவ: ச்ருண்வந்த:** **அபி** பலர் கேள்விப்படுகிறார் எனினும் यं न विद्युः **யம் ந வித்யு:** எவரை அறிந்துகொள்கிறதில்லையோ अस्य **அஸ்ய** அந்தப் பரமாத்மனைப் பற்றிய वक्ता **வக்தா** போதகன் आश्चर्यः **ஆச்சர்ய:** வியப்புக்குரியவன் अस्य लब्धा **அஸ்ய லப்தா** அந்தப் பரமாத்மனை அடையப்பெறுகிற சிஷ்யன் कुशलः **குசல:** திறமை வாய்ந்தவன் कुशलानुशिष्टः **குசலானுசிஷ்ட:** திறமைவாய்ந்த குருவினால் போதிக்கப்பட்டு ज्ञाता **ஞாதா** அறிந்துகொள்ளும் சிஷ்யன் आश्चर्यः **ஆச்சர்ய:** வியப்புக் குரியவனேயாம்.

பரமாத்மனைப் பற்றிக் கேள்விப்படுதற்கே பலர்க்கு வாய்ப்பதில்லை. கேள்விப்படுகிறவர்களுள்ளும் பலர் அவரை அறிந்து

ஆத்மபோதம் அவைகளிடத்து மிளிர்தற்கும் பரமாத்மனது சான்னித்தியம் காரணமாகும்.

49. நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
50. மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க.

நூல் உணர்வுஉணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க

நூல் உணர்வு உணரா-ஏட்டுக்கல்விக்கு எட்டாத.

பரமன் ஏட்டுக் கல்விக்கு எட்டாத சூக்ஷ்மப் பொருள் என்பதையும், அவன் நீக்கமற எங்கும் வியாபித்திருக்கிறுன் என்பதையும் அறிந்துகொள்க.

இந்த ஆண்டில் இத்தனை மரக்கால் மழை பெய்யுமென்று பஞ்சாங்கம் பகர்கிறது. ஆனல் அந்தப் பஞ்சாங்கத்தை எவ்வளவுதான் கசக்கிப் பிழிந்தாலும் ஒரு சொட்டுத் தண்ணீர் கிட்டாது. அதே விதத்தில் நூல் அறிவில் மயங்கிக் கிடப்பவர்க்கு இறைவன் அருள் கிட்டாது. நூலில் சொல்லியுள்ளபடி இறைவனைச் சார்ந்திருக்கப் பழகுபவர்க்கு அவன் அருள் வாய்க்கிறது.

51. அந்தமு மாதியு மகன்றேன் காண்க
52. பந்தமும் வீடும் படைப்போன் காண்க

கொள்ள இயலாதவர்களாய் இருக்கின்றனர். அவரை உள்ளபடி புகட்டுபவன் வியக்கத்தக்கவன். அவரை அடையப் பெறுபவன் திறமைசாலி. திறமைசாலி புகட்ட, அதை அறிந்துகொள்ளும் சிஷ்யன் வியப்புக்குரியவனும்.

சமுதாயத்தில் உள்ள மக்களுள் பரஞானியானவன் கிடைப்பதற்கு அரியவனுவான். ஏனென்றுல் அவனுடைய பரிபாகமும் திறமையும் அலாதியானவைகள். அத்தகைய சான்றேனே மக்களுள் மேலோன் ஆகிறுன். அவன் புகட்டுகிற பரஞானத்தை ஏற்கவல்ல சிஷ்யனும் காண்பதற்கு அரியவனுகின்றுன். நீக்கமற எங்கும் நிறைந்திருப்பவர் பரமாத்மா. எனினும் அனுபூதியில் அறிதற்கும் அடைதற்கும் அவர் மிக அரியவராவார்.

அந்தமும் ஆதியும் அகன்ருேன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க

ஈசனுக்கு முடிவோ துவக்கமோ இல்லை யென்பதையும் அவன் ஜீவர்களுக்குக் கர்ம பந்தத்தையும் மோக்ஷத்தையும் உண்டுபண்ணுகிருன் என்பதையும் அறிந்துகொள்க.

உயிர்களுக்கு வினைத்தளையையும் பின்பு விடுதலையையும் விளைவிப்பது ஈசனுடைய பஞ்சகிருத்தியங்களுள் அடங்கியிருக்கின்றன.

53. நிற்பதுஞ் செல்வது மானேன் காண்க
54. கற்பமு மிறுதியுங் கண்டோன் காண்க

நிற்பதும் செல்வதும் ஆனேன் காண்க
கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க

கற்பம்-நெடுங்காலம்.

இயங்காதிருப்பதும் இயங்குவதும் ஈசன் செயல். காலத்தை யுணர்ந்து காலாதீதத்தில் இருப்பவன் ஈசன்.

படைப்புத் தெய்வமாகிய பிரம்மதேவனுடைய ஆயுள் கற்பமெனப்படுகிறது. அவனுக்குக் கிரம முக்தி வருவது அந்தக் கற்பகாலத்தின் இறுதியாகிறது. கால காலனாகிய கடவுள் இதற்கெல்லாம் சாக்ஷியாயிருக்கிருர்.

55. யாவரும் பெறவுறு மீசன் காண்க
56. தேவரு மறியாச் சிவனே காண்க

யாவரும் பெறஉறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க

பக்தி பண்ணுபவர் அனைவரும் ஈசனை அடைவர்; பக்தி பண்ணாதவர்கள் தேவராயிருந்தாலும் அவர்களால் ஈசனை அடைய முடியாது.

57. பெண்ணா ணலியெனும் பெற்றியன் காண்க
58. கண்ணா லியானுங் கண்டேன் காண்க

உபநிஷத் மந்த்ரம் — 28.

त्वं स्त्री त्वं पुमानसि त्वं कुमार उत वा कुमारी ।
त्वं जीर्णो दण्डेन वंचसि त्वं जातो भवसि विश्वतोमुखः ॥

பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானும் கண்டேன் காண்க

பெண், ஆண், அலி ஆகிய எல்லா உயிர்களாக இலங்குபவன் ஈசன். ஞானக்கண்ணைப் பெற்றபின் இவ்வுண்மை எனது ஊனக் கண்ணுக்கும் புலனாகிறது.

பால்வேற்றுமையானது உடலையே தான் என்று கருதும் மனநிலையினின்று வருகிறது. உடல் உணர்வு அல்லது தேகாத்ம புத்தியைக் கடந்தவர்க்கே பரஞானம் வருகிறது. பரஞானத்தை அடையப் பெற்றவர்களுக்குப் பரமனைப்பற்றிய உண்மை விளங்குகிறது. அவன் பால் வேற்றுமைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன். சூரியன் கடல் அலைகளில் பிரதிபிம்பித்துப் பல சூரியர்களாகத் தென்படுவதுபோன்று பரமன் பிரகிருதி விகாரங்களில் பிரதிபிம்பித்துப் பல ஜீவர்களாகத் தென்படுகிறான். பிரகிருதியின் பாங்குக்கு ஏற்ப ஜீவாத்மன் ஆண் என்றும் பெண் என்றும் அலி யென்றும் பகரப்பெறுகிறான். ஒரு பிறவியில் ஆணாய் இருக்கும் ஜீவன் மற்றொரு பிறவியில் பெண் ஆவதும், பெண் ஆண் ஆவதும் இயல்பு.

த்வம் ஸ்த்ரீ த்வம் புமானஸி த்வம் குமார
உத வா குமாரீ ।
த்வம் ஜீர்ணோ தண்டேன வம்சஸி
த்வம் ஜாதோ பவஸி விச்வதோமுக: ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 4-3)

त्वं स्त्री **த்வம் ஸ்த்ரீ** *நீ பெண்* त्वं पुमान् **த்வம் புமான்** *நீ ஆண்* त्वं कुमारः **த்வம் குமார:** *நீ குமாரன்* कुमारी उत **குமாரீ உத** *குமாரியுங்கூட* त्वं जीर्णः **த்வம் ஜீர்ண:** *நீ கிழவன் ஆய்* दण्डेन वञ्चसि **தண்டேன வஞ்சஸி** *தண்டம் தாங்கி நடுங்குகின்றாய்* त्वं विश्वतोमुखः जातः **த்வம் விச்வதோ முக: ஜாத:** *நீ விசுவரூபமெடுத்து இலங்குகின்றாய்.*

பெண், ஆண், குமாரன், குமாரி, தடி பிடித்து நடுங்கும் கிழவன் ஆகிய எல்லாம் நீ, நீ விசுவருபமுடையவன்.

ஈசனே ஜகத்தாகவும் ஜீவர்களாகவும் தன்னைத் தோற்று வித்துக்கொள்வதால் அவன் உலகனைத்தும் ஆயிருக் கிருன் எனப்படுகிருன். ஞானக்கண் உடையவர்களுக்கு இவ்வுண்மையைக் காண ஊனக் கண்ணும் பயன்படு கிறது.

59. அருணனி சுரக்கு மமுதே காண்க
60. கருணையின் பெருமை கண்டேன் காண்க

அருள் நனிசுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க

நனி-மிகுதியாக. அமுது-அமிர்தம்

அருளை மிகுதியாகப் பொழிகின்ற அமிர்த சொரூபம் ஈசன்; அவன் கருணைக்கடல் என்பது எனது அனுபவம்.

அருள் சுரத்தலும் கருணை காட்டுதலும் ஒன்றேயாம். ஈசன் எல்லார்க்கும் பொதுவாகவும் சமனுகவும் இருக் கிருன் எனினும் அவனிடம் சரண் புகுகின்றவர்களுக்கு அவன் தன்னை முழுதும் கொடுத்து உதவுகிருன். உலகில் எல்லா நாடுகளிலும் எல்லா மதங்களிலும் பக்தர்கள் தோன்றியுள்ளார்கள். அவர்கள் அனைவரும் பகவானைக் கருணைக் கடல் என்று கூறியிருக்கின்றனர். அதற்கேற்ற காரணமும் உளது. கடவுளை அடைவதற்காகவும், ஏனைய லட்சியங்களை அடைவதற்காகவும் தாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் மிகப் பெரியவைகள் என்று சொல் லுவர் உலகத்தவர்கள். பக்தர்களோவெனின் உண்மை யாகவே கடவுளை அடைதற்குப் பெருமுயற்சி யெடுத்துக் கொள்வார்கள். ஆனல் தங்களுடைய முயற்சிகளை மிக அற்பமானவைகள் என்று அவர்கள் மதிப்புப் போடு வார்கள். தங்களுடைய அற்ப முயற்சிக்கு இரங்கி அளவு கடந்த அருளையும் கருணையையும் கடவுள் வாரி வழங்கி யுள்ளார் என்று அவர்கள் போற்றுகின்றனர்.

அலைகள் அனைத்துமாயும் அவைகளுக்கு அதிகமாக வும் கடல் இருப்பது போன்று கடவுள் உலகனைத்து மாயும் அவைகளைக் கடந்தும் இருக்கிருர்.

61. புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
62. சிவனென யானுந் தேறினன் காண்க
63. அவனெனை யாட்கொண் டருளினன் காண்க

புவனியில் சேவடி தீண்டினன் காண்க
சிவன்என யானும் தேறினன் காண்க
அவன்எனை ஆட்கொண்டு அருளினன் காண்க

புவனி-பூமி. சேவடி-செம்மை அடி, செவ்விய திருவடி.

அடியேன் பொருட்டு ஆண்டவன் தனது செவ்விய திருவடி நிலத்தைத் தொடும்படி செய்தான். அவனைச் சிவனென நான் தெரிந்துகொண்டேன். அவனும் என்னை ஆட்கொண்டருளினன்.

ஆத்ம சாதனத்தில் மேலேறி முற்றிலும் மனபரிபாகம் அடைந்திருப்பவர்களுக்கு இத்தகைய தெய்வீகக் காட்சி வாய்ப்பது இயல்பு. மதுபானத்தைமுன்னிட்டோ, மனக்கோளாறை முன்னிட்டோ அசாதாரணக் காட்சிகள் கிட்டுவதுண்டு. இவ்விரண்டினுள் அருள் எது, மருள் எது எனப் பாகுபடுத்தத் தெரிந்துகொள்ளவேண்டும். தூய, தெள்ளிய மனமுடையவர்க்கு அருள் அனுக்கிரகிக்கப்படுகிறது. அதன் விளைவாக ஆத்மசாதகனது வாழ்வு மேல் நிலையை நோக்கி விரைந்து போகிறது. உலக நாட்டத்துக்கு அங்குச் சிறிதேனும் இடமில்லை. மருள் காட்சியோ அத்தகையதன்று. மனிதனை அது மேலோனாக மாற்றுவதில்லை. பழையபடி அவன் உலக பந்தத்திலேயே உழன்றுகொண்டிருக்கிறான். இங்ஙனம் ஒரு நிகழ்ச்சியின் விளைவினின்று அருளையும் மருளையும் பாகுபடுத்த முடியும். மன பரிபாகம் அடைந்துள்ள வாதவூரர்க்கு வாய்த்தது இறைவனுடைய இன்னருள். அது புறக்காட்சியாகவும் வடிவெடுத்தது.

64. குவளைக் கண்ணி கூறன் காண்க
65. அவளுந் தானு முடனே காண்க

குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க

குவளை-நீரில் உண்டாகிற கருங்குவளைப்பூ. **குவளைக்கண்ணி**-குவளைப்பூவின்கருநிறத்தையொத்தகண்ணுடையஉமாதேவியார். **கூறன்**-கூறு அல்லது பங்கு உடையவன். **உடனே**-உடன், ஒன்றாக.

குவளைப்பூவை யொத்த கண்களையுடைய அம்பிகையின் பாகன் சிவனார். அவர்கள் இருவரும் சொருபத்தில் ஒன்று என்பதை அறிந்துகொள்க.

சக்திக்கும் சிவத்துக்கும் உள்ள தொடர்வை ஐயம் திரிபு அற அறிந்துகொள்ளுதல் அவசியம். இது அர்த்த நாரீசுவர தத்துவமாகும். சக்தியே சிவம்; சிவமே சக்தி. சிவசக்தி அத்வைதம்; இரண்டு பொருள்கள் என்று அவர்களைப் பிரிக்கமுடியாது. பிரகிருதியாகப் பரிணமித்திருப்பது சக்தி; பரிணாமத்தில் பட்டும் படாமலும் இருப்பது சிவம். ஒன்று இயங்கும் சக்தி (kinetic energy) மற்றது இயங்காத சக்தி (potential energy). சமுத்திரத்தை சான்றாக வைத்து இக்கோட்பாட்டை விளக்கலாம். அலை வீசி விளையாடும் விரிகடல் சக்தி சொரூபம்; ஆழ்கடலின் அசைவற்ற அடிப்பகுதி சிவ சொரூபம். படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்சகிருத்தியங்களில் ஈடுபட்டிருப்பது சக்தி; கிருத்தியங்களையெல்லாம் கடந்த நிலையில் இருப்பது சிவம். ஆத்ம சாதகன் சக்தியின் துணைகொண்டு சிவத்தை அடைகிறான்.

66. பரமா னந்தப் பழங்கட லதுவே
67. கருமா முகிலிற் றோன்றித்
68. திருவார் பெருந்துறை வரையி லேறித்
69. திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய

பரம ஆனந்தம் பழம் கடல் அதுவே
கரு மா முகிலின் தோன்றி
திரு ஆர் பெருந்துறை வரையில் ஏறி
திருத்தகு மின் ஒளி திசை திசைவிரிய

வரை-மலை.

சிவசக்தியின் ஐக்கியத்தினின்று , பிரபஞ்சமெங்கும் பொலிகிற பரமானந்தம் பழைய ஆழ்கடல் போன்று அளப்

பரியது. பெருத்த கார்மேகம் உதித்து நான்கு திசையிலும் பரவுவது போன்று பரமன் அழகு நிறைந்த திருப்பெருந்துறை மலையின் மீது பிரசன்னமாகித் தனது ஞானப் பிரகாசத்தை எங்கும் ஒளிரச் செய்தான்.

70. ஐம்புலப் பந்தனை வாளர விரிய

ஐம் புலம் பந்தனை வாள் அரவு இரிய

*பந்தனை-கட்டு, தளை. **வாள்**-ஒளிபொருந்திய. **அரவு**-பாம்பு. இரிய-இரிதல், கெட்டுப்போதல்.*

உலகில் பந்தப்படுத்துகிற ஐம்பொறிகள் என்னும் ஒளி நிறைந்த பாம்பு விரண்டோடுகிறது.

ஐம்பொறிகள் வாயிலாக உண்டாகிய பற்றுதல் பாரமார்த்திக வாழ்வுக்குத் தடையாகிறது என்பது சமயங்கள் அனைத்துக்கும் ஒப்பமுடிந்த உண்மையாகும். பழைய சட்டையை நீக்கிய பாம்புக்குப் பிரகாசம் அதிகம்; அதற்குச் சீற்றமும் அதிகம். பெருநிலையில் இருந்த ஆதி மனிதனாகிய ஆதாமை ஐம்பொறிகள் என்னும் பாம்பு வீழச் செய்தது என்பது விவிலிய நூல் கோட்பாடாகும். பொறி என்னும் பாம்பை விரட்டியோட்டவேண்டும்.

71. வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப

வெம் துயர்க் கோடை மாத்தலை கரப்ப

***வெந்துயர்**-கொடிய துன்பம். **மாத்தலை**-பெருந்தலை. **கரப்ப**-மறைய.*

வெவ்விய கோடைக்காலம் போன்று இருக்கிற கொடிய துன்பம் அழிந்துபட்டுப் போகிறது.

பாரமார்த்திக வாழ்வில் உறுதியாக நிற்பவர்கள் உலக வாழ்வினின்று வருகிற துன்பங்களை மனதில் வாங்கிக்கொள்வதில்லை. வாதவூரரது வாழ்வே அதற்குச் சான்று ஆகும்.

72. நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர

நீடு எழில்தோன்றி வாள்ஒளி மிளிர

முகவிலாசத்தில் அழகும் பிரம்மதேஜஸும் ஒளிர்கின்றன.

நெறியான வாழ்க்கை வாழ்ந்து கடவுள் வழிபாட்டில் தீவிரமாக ஈடுபடுகிறவர்களைத் துன்பம் அசைப்பதில்லை; தெய்வீக இன்பத்தில் அவர்கள் திளைத்திருப்பதால் எழிலும் ஒளியும் முகத்தில் மிளிர்கின்றன.

73. எந்தம் பிறவியிற் கோப மிகுத்து

எம்தம் பிறவியில் கோபம் மிகுத்து

கோபம்-வெறுப்பு.

மேலும் பிறவிகள் எடுப்பதில் எனக்கு அருவருப்பு மிக உண்டாகும்படி செய்தருளினை.

இனிப் பிறவி வேண்டாம் என்னும் மனநிலையானது இறைவனை நாடுதற்கு உற்ற உபாயமாகிறது.

74. முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்

முரசு எறிந்து மாப்பெரும் கருணையின் முழங்கிப்

உலகம் அறியும் வண்ணம் பறையடித்து இறைவா, என்னை நீ பகிரங்கமாக ஆட்கொண்டருளினை.

75. பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட

பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட

பூப்புரை-பூவின் மடிப்பு. அஞ்சலி-கைகூப்பித் தொழுதல். காந்தள்-கார்த்திகைப் பூ.

நான் கைகூப்பித் தொழுத காட்சியானது இன்னும் அலராது கூம்பியிருந்த கார்த்திகைப் பூவின் தோற்றத்தை ஒத்திருந்தது.

76. எஞ்சா வின்னரு ளுண்டுளி கொள்ளச்

எஞ்சா இன் அருள் நுண்துளி கொள்ளச்

எஞ்சா-குறையாத.

இறைவனது குறையாத இனிய அருள் ஆனந்தக்கண்ணீர் சொட்டும்படி செய்தது.

77. செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட [வரையுறக்

செம்சுடர் வெள்ளம் திசைதிசை தெவிட்ட வரைஉறக்

வரையுற-மலையை யடைந்து.

மலைமீது வைத்த விளக்குப் போன்று இறைவனது செவ்விய ஞானப் பிரகாசமானது திசைகளிலெல்லாம் திகழ்ந்தது.

78. **கேதக் குட்டங் கையற வோங்கி**

கேதம் குட்டம் கை அற ஓங்கி

கேதம்-துக்கம். குட்டம்-சிறுமை.

துன்பம் என்னும் சிறுமை செயலற்றுப் போய் அது பேரின்ப மாக ஓங்கிற்று.

இறைவனுடைய அருளையும் ஞானத்தையும் பெற்ற வர்க்குப் பிறகு துன்பமொன்றுமில்லை. இன்பமே யாண்டும் நிலைத்திருக்கிறது.

79. **இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை**
80. **நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணந்**
81. **தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடு**
82. **மவப்பெருந் தாப நீங்கா தசைந்தன**

இருமுச் சமயத்து ஒரு பேய்த் தேரினை
நீர் நசை தரவரும் நெடும் கண் மான் கணம்
தவம் பெரும் வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவம் பெரும் தாபம் நீங்காது அசைந்தன

இரு முச்சமயத்து-ஆறுசமயங்களாகிய. ஒருபேய்த் தேரினை-பேய்த்தேரை அல்லது கானல் நீரை. நீர் நசை தரவரும்-நீர் வேட்கையுண்டாகி வருகிற. நெடுங்கண் மான் கணம்-நீண்ட கண் களையுடைய மான் கூட்டம். தவப்பெரு வாயிடைப் பருகி-தவம் என்னும் பெரிய வாயினால் குடித்து. தளர்வொடும்-தளர்ச்சியோடு கூடி. அவப்பெருந்தாபம்-கேடு நிறைந்த பெருவேட்கை. நீங்காது-ஒழிந்துபோகாது. அசைந்தன-துன்பப்பட்டன.

பெரிய கண்களையுடைய மான் கூட்டம் கானல் நீரை நிஜ நீர் என்றெண்ணி அதை நாடிச் சென்று தாகசாந்தியடையாது தவித் தது. அது போன்று புறச் சமயம் ஆறினுள் புகுந்து கடுந்தவம் புரிந்தவர் பலர் பரமனது அருளுக்குப் பாத்திரமாகாது அல்லல் பட்டனர்.

வேதத்திலும் கடவுளிலும் நம்பிக்கை வைக்காத சமயங்கள் புறச்சமயங்கள் என்னப்படுகின்றன. லோகாய தம், பௌத்த மதத்தின் நான்கு கிளைகள், ஜைனமதம்

ஆகிய இவை ஆறும் புறச் சமயங்கள் எனக் கருதப் பட்டு வந்துள்ளன.

83. ஆயிடை வானப் பேரியாற் றகவயிற்
84. பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்

ஆயிடை வானம்பேர் யாற்று அகவயின்
பாய்ந்து எழுந்து இன்பம் பெரும்சுழி கொழித்துச்

ஆயிடை-அ-இடை, அவ்விடம். வானப்பேர்-வானத்தை எட்டும்படியான பெரிய. யாற்று அகவயின்-ஆற்றின்கண். பாய்ந்து எழுந்து-மூழ்கியெழுந்து. இன்பப் பெரும்சுழி கொழித்து-இன்பமாகிய பெரிய சுழிகளை உண்டுபண்ணி.

வானத்தைத் தொடுகிற அம்மலையினின்று பெரிய ஆறு பெருக்கெடுத்து வந்தது. ஆனந்தத்தை ஊட்டும் பெரிய சுழிகள் அதில் உருவெடுத்தன.

85. சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்து

சுழித்து எம்பந்தம் மாக்கரைபொருது அலைத்து
[இடித்து

சுழித்து-சுழன்று. எம்பந்தம் - எம்மைப் பந்தப்படுத்துகிற. மாக்கரை-வினையாகிய பெரிய கரையை. பொருது-மோதி. அலைத்து இடித்து-அசைத்து வீழ்த்தி.

சுழித்துச் சுழித்துப் புரண்டோடி வருகிற அப்பேர் ஆறானது என்னைப்பிறவியிலே தளைக்கிற பற்றுதல் என்னும்பெரிய கரையின்மீது மோதி, அதை அசைத்து இடித்து வீழ்த்தியது.

86. ஊழூ ழோங்கிய நங்க
87. ளிருவினை மாமரம் வேர்ப றித்தெழுந்து

ஊழ்ஊழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம்வேர் பறித்து எழுந்து

ஊழ் ஊழ்-நெடுங்காலம். இருவினை-நல்வினை தீவினை:

எத்தனையோ பிறவிகளில் நம்மை வந்து சூழ்ந்த இருவினை ஆகிய பெரிய மரத்தை வேரோடு பறித்துக் களைந்தது அந்த நீர்ப்பெருக்கு.

88. உருவ வருணீ ரோட்டா வருவரைச்
89. சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
90. வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகின்

உருவ அருள் நீர்ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டு அவிழ்
வெறி மலர்க்குளவாய் கோலி நிறை அகில்

உருவ-உருவும்படி, ஊடுருவிச் செல்லும்படி. **வரைச்சந்து**-மலையிடுக்கு. **வான்சிறை**-பெரிய அணை. **மட்டுஅவிழ்**-தேனுடன் மலர்கின்ற. **வெறி மலர்**-மணமலர். **குளவாய்**-நிறைந்த குளம். **கோலி**-(கோலுதல்) அமைத்து, வளைத்து.

திருவருளாகிய நீர் ஆனது ஊடுருவிப் பாய்ந்து ஓடும்படி செய்தும், அருமையான மலையிடுக்கில் பெரிய அணைகட்டிப் பரந்த நீர்த் தேக்கத்தைக் குளமாக அமைத்தும், அங்குத் தேன் சொட்டுகிற நறுமணத்தோடு கூடிய மலர்கள் உண்டாகும்படி செய்தும், இறைவா, நீ அருளினை.

91. மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
92. மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி

மாப்புகைக்கரைசேர் வண்டுஉடைக் குளத்தின்
மீக் கொள மேல் மேல் மகிழ்தலின் நோக்கி

மாப்புகை-பெரும்புகை. **மீக்கொள**-அதிகரிக்க.

கரையிலே மக்கள் எரித்த அகில் கட்டையினின்று கிளம்பிய வாசனைப்புகை படலம் படலமாகப் பரவிற்று. குளத்தினுள் வண்டு இனங்கள் ரீங்காரமிட்டுக்கொண்டிருந்தன. பார்ப்பதற்கும், கேட்பதற்கும், மோப்பதற்கும் அவையாவும் தகுந்தவைகளாயிருந்து மகிழ்வூட்டின.

93. அருச்சனை வயலு ளன்புவித் திட்டுத்
94. தொண்ட வுழவ ராரத் தந்த
95. வண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க.

அருச்சனை வயலுள் அன்புவித்து இட்டு
தொண்ட உழவர் ஆரத் தந்த
அண்டத்து அரும் பெறல் மேகன் வாழ்க

அருச்சனை-வழிபாடு. **தொண்ட உழவர்**-தொண்டர்களாகிய கிருஷிகர். **ஆரத்தந்த**-உண்ணக்கொடுத்த. **அண்டம்**-பரவெளி. **அரும்பெறல்**-பெறுதற்கரிய. **மேகன்**-மேகேசுவரன், மேகம் போன்ற கடவுள்.

வழிபாடு என்னும் வயலிலே அன்பு என்னும் விதையை இட்டு, பரவெளியிலே பிரகாசிக்கிற பெரிய பொருளாகிய

மிருந்து வருகிற சிவபோகம் என்னும் அமிர்தத்தை இறைவனின் தொண்டர்களாகிய உழவர்கள் விளைவித்தார்கள். அருட் பசியைப் போக்குதற்கு அது நல்லுணவாயிற்று.

83-95 அகவல் வரிகள் உலகநிலை, பக்தி நிலை, யோகநிலை ஆகிய மூன்று நிலைகளில் வைத்துப்பொருள் படுத்துதற்கு இடம் தருகின்றன.

வானத்தினின்று மழையாகக் கீழே இறங்கி வருகிற ஆகாய கங்கையை மலைத்தொடர்கள் என்னும் சிவபெருமானது ஜடாபாரம் தாங்குகிறது. பிறகு அது பூலோக கங்கையாக மலைப்பள்ளத்தாக்குகளில் வடிவெடுக்கிறது. பொருத்தமான இடங்களில் மலையிடுக்குகளில் அணைகட்டி நீர்த்தேக்கம் செய்யப்படுகிறது. அது நல்ல தடாகமாகும்படி அலங்கரிக்கப்படுகிறது. அதினின்று நீரை அளவெடுத்துச் சமவெளியில் பாய்ச்சிச் சாகுபடிசெய்யப்படுகிறது. விளைபொருளை வேண்டியவாறு விருத்தி செய்து மக்களுக்கு உணவூட்டப்படுகிறது. அவர்களும் நல்வாழ்வு வாழ்ந்து இன்புற்றிருக்கின்றனர்.

பக்தி மார்க்கத்தில் பாரமார்த்திகப் பெருநிலையில் இருக்கும் பரமனையே பக்தன் யாண்டும் சார்ந்திருக்கிறான். இறைவனுடைய இன் அருள் சுகவாரியாக அவனுக்கு வந்து வாய்க்கிறது. அதைக்கொண்டு அவனுடைய இகலோக வாழ்வு மேலும் மேலும் திருத்தியமைக்கப் படுகிறது. நல்லார்க்கு அது அருள் விருந்தாகி ஆனந்தத்தை ஊட்டுகிறது. இறைவனுடைய மகிமை மேலும் மேலும் மாநிலத்தில் மேலோங்குகிறது.

யோக நிலையில் ஆத்மசாதகனுடைய உச்சந்தலையில் சகஸ்ராரம் என்னும் ஏழாவது ஞானபூமி இருக்கிறது. அதுவே கயிலாயகிரி எனப்படுகிறது. சிவசக்தியின் ஐக்கியத்தால் ஆங்கு அமிர்ததாரை ஊற்றெடுத்துப் பாய்கிறது. அது பரமானந்தத்தை ஊட்டுகிறது. வாழ்வே அமிர்த சரசு ஆகிறது. இனிமை என்னும் பூக்களை அது பூக்கிறது.

நல்வாழ்வு என்னும் பிராணன் நறுமணத்தை வீசும்படி அது செய்கிறது. பர ஆகாசமாகப் பரவியிருக்கும் பரமனது பெருமையே யாண்டும் பிரகாசிக்கிறது.

96. கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
97. வருந்தவர்க் கருளு மாதி வாழ்க

கரும் பணம் கச்சைக் கடவுள் வாழ்க
அரும் தவர்க்கு அருளும் ஆதி வாழ்க

பணம்-பாம்பின் படம், ஃபண-பணம்.

கருநிறப் படத்தோடு கூடிய பாம்பை இடுப்பில் கச்சையாகக் கட்டியிருக்கும் கடவுள் வாழ்க. அரிய தவத்தைச் செய்கின்ற தவசிகளுக்கு அருள்புரிகிற முதல்வன் வாழ்க.

98. அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
99. நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க

அச்சம் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலும் ஈர்த்து ஆட்கொள்வோன் வாழ்க

நிச்சலும்-நாள்தோறும்.

மரண பயத்தைப் போக்குகிற வீரன் வாழ்க. எப்பொழுதும் அடியவரைத் தன்பால் கவர்ந்தெடுத்து ஆட்கொள்கிற ஈசன் வாழ்க.

100. சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
101. வெய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க

சூழ் இரும் துன்பம் துடைப்போன் வாழ்க
எய்தினர்க்கு ஆர்அமுது அளிப்போன் வாழ்க

வளைத்துப் பிடித்திருக்கிற பெரிய வினையின் வேதனையை அகற்றுவோன் வாழ்க. தன்னை வந்தடைந்தவர்களுக்கு அரிய அருள் அமிர்தத்தை வழங்குபவன் வாழ்க.

102. கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
103. பேரமைத் தோளி காதலன் வாழ்க

கூர்இருள் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேர் அமைத் தோளி காதலன் வாழ்க

கூர்-மிகுதி. குனித்தல்-ஆடுதல். அமை-அழகு.

அடர்ந்த இருளிலும் ஆனந்தக் கூத்தாடும் இறைவன் வாழ்க. தோள் அழகு மிகப்படைத்துள்ள உமாதேவியாரின் பாகன் வாழ்க.

104. ஏதிலர்க் கேதிலெம் மிறைவன் வாழ்க
105. காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க

ஏதிலர்க்கு ஏதில் எம் இறைவன் வாழ்க
காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க

ஏதிலர்-வேற்றூர். **ஏது இல்**-துன்பமின்மை. **எய்ப்பு**-வறுமைக் காலம். **வைப்பு**-சேமநிதி.

தொழாது பராமுகமாய் இருப்பவர்க்குத் தீங்கு ஒன்றும் செய்யாத சிவன் வாழ்க. அன்போடு நேசிப்பவர்க்கு வறுமைக் காலத்தில் உதவும் சேமநிதிபோன்று உள்ள இறைவன்வாழ்க.

குழந்தையும் தெய்வமும் கொண்டாடிய இடத்தில் என்பது பழமொழி. பழகாதவர்களிடம் குழந்தை பராமுகமாயிருக்கிறது. ஆனால் அவர்களுக்கு அது தீங்கு ஒன்றும் செய்வதில்லை. இனி ஜடசக்திகளுள் மின்சக்தி என்பது ஒன்று. அதைப் பயன்படுத்துகிறவர்களுக்கு அது வேண்டியவாறு உதவுகிறது. அங்ஙனம் ஈசனோடு தொடர்வு வைக்கின்றவர்களுக்குச் சம்பத்துக்கள் எல்லாம் வாய்க்கின்றன. மற்றவர்களுக்கு அவை இருந்தும் இல்லாது போய்விடுகின்றன.

கஷ்டதசை, மரணம் போன்ற விபத்துக்கள் சாதாரண மக்களை மிகவும் துன்புறுத்துகின்றன. ஆனால் சிவனுடைய அருளுக்குப் பாத்திரமானவர்கள் உலக விபத்து எதை முன்னிட்டும் தளர்வுறுவதில்லை. அடியார்களுக்கு வறுமை நோய் கொடியதாகத் தோன்றுவதில்லை. சிவ சான்னித்தியம் என்னும் குறையாத செல்வம் அவர்களுக்குண்டு.

106. நச்சர வாட்டிய நம்பன் போற்றி
107. பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி

நச்சு அரவு ஆட்டிய நம்பன் போற்றி
பிச்சு எமை ஏற்றிய பெரியோன் போற்றி

நச்சு அரவு-விஷப்பாம்பு. *நம்பன்*-நம்பி, பூரணன், கடவுள். *பிச்சு*-பித்து.

விஷமுடைய பாம்பை ஆட்டுகிற கடவுளுக்கு வணக்கம். பக்தி மிகுதியால் என்னைப் பிடித்துப் பித்தனுக்கிய பெரிய பொருளுக்கு வணக்கம்.

பூரணத்தில் பொதியும்பொழுது ஆபத்து நிறைந்த ஒன்று ஆபத்து இல்லாததாக மாறுகிறது. அக்கோட்பாட்டுக்குச் சின்னமாக சிவனார் நச்சுப் பாம்பை அணிந்திருக்கிறார். உயிர்களைத் தமக்கு உரியவைகளாக ஆக்குதலில் சிவன் பித்துப் பிடித்தவராக இருக்கிறார். அதே விதத்தில் அன்பர்களுக்கு பக்தி என்னும் பித்துப்பிடிக்கும்படி அவர் செய்கிறார்.

108. நீற்றெடு தோற்ற வல்லோன் போற்றி [நாற்றிசை
109. நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்

நீற்றெடு தோற்ற வல்லோன் போற்றி நால் திசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்

நீற்றெடு-திருநீற்றுடன்.

திருநீறு பூசப்பெற்றவனாய்க் காட்சி கொடுக்க வல்லவனுக்கு வணக்கம்; நான்கு திசைகளிலும் நடமாடுபவைகளை நடமாடச் செய்பவனும், அசையாது கிடப்பவைகளை அந்நிலையில் வைத்திருப்பவனும் ஆகிய ஈசனுக்கு வணக்கம்.

சராசரங்கள் யாவும் அவனுடைய ஆணையால் அவ்வவைகளுக்குரிய கிருத்தியங்களைச் செய்துவருகின்றன.

110. நிற்பன நிறீஇச்
111. சொற்பதங் கடந்த தொல்லோன்

நிற்பன நிறீஇச
சொல் பதம் கடந்த தொல்லோன்

தொல்லோன்-பழையவன்.

உபநிஷத் மந்த்ரம்—29.

यतो वाचो निवर्तन्ते । अप्राप्य मनसा सह ।
आनन्दं ब्रह्मणो विद्वान् । न बिभेति कदाचनेति ।

நிற்கின்றவைகளை ஈசன் நிற்கச் செய்கிருன். பழைய பொருளாகிய அவன் சொல்லில் அடங்காதவன் ஆகிருன்.

112. உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
113. கண்முதற் புலனுற் காட்சியு மில்லோன்

உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படாஅன்
கண்முதல் புலனால் காட்சியும் இல்லோன்

அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி ஆகியவைகளுக்கு ஈசன் எட்டாதவன். புறக்கரணங்களாகிய கண், காது முதலியவைகளைக்கொண்டும் அவனை அறிந்துகொள்ள முடியாது.

114. விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்

விண்முதல்பூதம் வெளிப்பட வகுத்தோன்

ஆகாசம் முதலிய ஐம்பூதங்கள் இந்திரியங்களுக்கு எட்டும் வண்ணம் ஈசன் அவைகளை அமைத்துள்ளான்.

தனது யதார்த்த நிலையில் ஈசன் கருவி கரணங்களுக்கு எட்டாதவன். ஆனல் அவன் ஐம்பூதங்களாகப் பரிணமித்திருக்கும் நிலையில்பொறிகளுக்கு இலக்குஆகிருன்.

யதோ வாசோ நிவர்தந்தே । அப்ராப்ய மனஸா ஸஹ ।
ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான் । ந பிபேதி கதாசனேதி ।

(தைத்திரீயோபநிஷதம் 2—4)

यतः யதः எதினின்று वाचः வாசः வார்த்தை मनसा सह மனஸா ஸஹ மனதோடு கூட अप्राप्य அப்ராப்ய அடையப்பெருது निवर्तन्ते நிவர்தந்தே பின்வாங்குகின்றன ब्रह्मणः ப்ரஹ்மண: பிரம்மத்தினுடைய आनन्दम् ஆனந்தம் ஆனந்தத்தை विद्वान् வித்வான் அறிகிறவன் कदाचन கதாசந ஒருபொழுதும் बिभेति பிபேதி பயப்படுகிறதில்லை इति இதி இப்படியுள்ளது.

எந்த பிரம்மத்தை அடையப்பெருது வாக்கும் மனதும் பின் வாங்குகின்றனவோ அந்த பிரம்மத்தின் ஆனந்தத்தை அறிகிற வித்வான் எதற்கும் அஞ்சுவதில்லை. இது உண்மை.

இந்திரியங்களுக்கும் மனதுக்கும் எட்டாதது பிரம்மம். அந்த பிரம்மத்தை அனுபூதியில் அறிகிறவன் உலப்பில்லா ஆனந்தத்தை அடைகிருன். பின்பு மரணம் உட்பட எதற்கும் அவன் அஞ்சுவதில்லை. இது தத்துவம்.

115. பூவி ஞற்றம் போன்றுயர்ந் தெங்கு
116. மொழிவற நிறைந்து மேவிய பெருமை

பூவில் நாற்றம் போன்று உயர்ந்து எங்கும்
ஒழிவு அற நிறைந்து மேவிய பெருமை

மேவிய-பொருந்திய.

மலரில் மணம் போன்று இருந்து ஈசன் தனது விபூதியைப் பிரபஞ்சமெங்கும் நீக்கமற நிறைத்து வைத்துள்ளான்.

உபநிஷத் மந்த்ரம்—30.

अजामेकां लोहितशुक्लकृष्णां बह्वीः प्रजाःसृजमानां सरूपाः ।
अजो ह्येको जुषमाणोऽनुशेते जहात्येनां भुक्तभोगामजोऽन्यः ॥

அஜாமேகாம் லோஹிதசுக்லகிருஷ்ணும்
பஹ்வீ: ப்ரஜா: ஸ்ருஜமானும் ஸரூபா: ।
அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோऽனுசேதே
ஜஹாத்யேனும் புக்தபோகாமஜோऽன்ய: ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 4—5)

अजां एकां அஜாம் ஏகாம் பிறவாத ஒருத்தி लोहितशुक्लकृष्णां லோகிதசுக்லகிருஷ்ணும் சிவப்பு, வெள்ளை, கறுப்பு நிறமுடையவள் सरूपाः ஸரூபா: வடிவத்தில் அவளை ஒத்துள்ள बह्वीः प्रजाः பஹ்வீ: ப்ரஜா: பல பிரஜைகளை सृजमानां ஸ்ருஜமானும் அவள் தோற்றுவிக்கின்றுள் जुषमाणः ஜுஷமாண: கட்டுண்டவனுய் एकः अजः ஏகஅஜ: பிறவாத ஒருஜீவன் अनुशेते அனுசேதே அவளைச் சார்ந்து கிடக்கிருன் अन्यः अजः அன்ய: அஜ: பிறவாத மற்றவனே एनां भुक्तभोगां ஏனும் புக்தபோகாம் அவளைச்சுகித்தானபிறகு जहाति ஜஹாதி துறந்துவிடுகிருன்.

பிறவாத பிரகிருதியானவள் சிவப்பு, வெள்ளை, கருப்புநிறமுடையவளாக இருக்கிருள். தன்னை ஒத்த பல வடிவங்களை அவள் உண்டுபண்ணுகிருள். பிறவாத ஒரு ஜீவன் அவளில் கட்டுண்டு அவளைச் சார்ந்து கிடக்கிருன். பிறவாத மற்ருெரு ஜீவன் அனுபவித்துப் பார்த்துவிட்டு அவளைத் துறந்துவிடுகிருன்.

சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணமயமாய் இருப்பவள் பிரகிருதி. சத்துவத்தின் நிறம் வெள்ளை.

எங்குத் திரும்பி எதைப் புலப்படுத்தினலும் அது உண்மையில் ஈசனுடைய விபூதியேயாம்.

117. இன்றெனக் கெளிவந் தருளி
118. யழிதரு மாக்கை யொழியச் செய்த
[வொண்பொருள்

இன்று எனக்கு எளிவந்து அருளி
அழிதரும் ஆக்கை ஒழியச் செய்த ஒண் பொருள்

எளிவந்து-எளிதில் வந்து. அழிதரும் ஆக்கை-அழியும் இயல்புடைய சரீரம். ஒண் பொருள்-சிறந்த பொருளாகிய சிவன்.

இன்று எளிதில் வந்து என்னை ஆட்கொண்டருளினை. அழியும் தன்மையுடைய உடலைப்பற்றிய உணர்வை என்னிடமிருந்து நீக்கிவைத்தாய். அத்தகைய செம்பொருள் நீ.

இறைவனது அருளுக்குப் பாத்திரமாவதன் அறிகுறிகள் சிலவுள. அவைகளுள் மிக முக்கியமானதொன்று ஆத்ம சாதகன் உடல் உணர்வை, அதாவது தேகாத்ம புத்தியைக் கடந்தவனுதல். உடலைத் தான் என்று கருதுவதினின்றே தீமைகள் யாவும் வருகின்றன. ஒண் பொருளைச் சோபன வஸ்து எனலாம்.

119. இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
இன்று எனக்கு எளிவந்து இருந்தனன் போற்றி

ரஜஸ் சிவப்பானது. தமோகுணம் கருமை நிறமானது. பிரகிருதி பிரம்மத்துக்கு அபின்னமாதலால் பிரம்மம் போன்று அதுவும் நித்தியமானது. முக்குணங்களைக் கொண்டு எண்ணிறந்த வடிவங்களைப் பிரகிருதி உண்டு பண்ணுகிறது. ஜீவாத்மாக்களும் நித்தியமானவைகள். ஏனென்றால் அவைகளுக்குப் பிறப்பு, இறப்பு இல்லை. பசு, பதி, பாசம் ஆகிய முப்பொருள் உண்மைக்கு ஈண்டு உபநிஷதப் பிரமாணம் இருக்கிறது. பிரகிருதியில் கட்டுண்டு கிடக்கிற ஜீவன் அசுரன். சுகபோகம் நித்தியமானதல்லவென்று அதை ஒதுக்கிவிட்டு இறைவன் அருளை நாடுபவன் மேலோன். இவர்கள் எல்லோருமே ஈசனுடைய விபூதிகள் ஆகின்றனர்.

இன்று எனக்காகவென்று எளிதில் பிரசன்னமாயிருப் பவனை வணங்குகிறேன்.

120. அளிதரு மாக்கை செய்தோன் போற்றி

அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி

அளிதரும்-அன்பைப் பெருக்குகிற.

பக்தியைப் பெருக்குதற்கான அருள் உடம்பை என் பொருட்டு அமைத்துக் கொடுத்தவனுக்கு வணக்கம்.

மஹாபாவம் அல்லது பக்தியின் பேரியல்பைப்பெறு தற்கான உபாயங்களுள் அருள் உடம்பைப் பெறுதல் ஒன்று. அது 'அளிதரும் ஆக்கை' என ஈண்டு இயம்பப் பெறுகிறது. சக்தி சமய சாதகர்கள் இதை பகவதி தனு என்று இயம்புகின்றனர். அன்னைபராசக்தியின் திருமேனி என்பது இதன் பொருள். தூயவாழ்வு வாழ்கின்றவர் களது தேகம் இங்ஙனம் தானாகவே திருந்தியமைகிறது.

121. ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி

ஊற்று இருந்து உள்ளம் களிப்போன் போற்றி

ஊற்று-நீர் சுரக்குமிடம்.

அன்பு சொரூபியாகிய சிவன் உள்ளத்தினுள் அன்பாக ஊற்றெடுத்து ஆனந்தத்தைப் பெருக்குகிறான். அன்னவ னுக்கு வணக்கம்.

பக்தியைப் பெறுகிற பக்தன் பரம திருப்தன் ஆகி றான் என பக்தி சூத்திரம்–4 பகர்கிறது. 44ம் பக்கம் பார்க்கவும்.

122. ஆற்றா வின்ப மலர்ந்தலை செய்யப்

123. போற்றா வாக்கையைப் பொறுத்தல் புகலேன்

ஆற்றா இன்பம் அலர்ந்து அலை செய்யப்

போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்

அலர்ந்து-விரிந்து. போற்றா-பேணாத. பொறுத்தல்-தாங்கு தல். புகலேன்-விரும்பேன்.

பேரின்பம் பெருகி அலைவீசிக்கொண்டு வந்து என்னைத் தன்மயமாக்குகிறபொழுது அதை ஏற்றுக் காப்பாற்றிவைக்க இயலாத ஊன் உடலைச் சுமக்க நான் விரும்பமாட்டேன்.

மஹாபாவத்தின் கூறுகளில் இது ஒன்று. வலிவற்ற சிறு குடிசையுள் மதயானை யொன்று புகுந்தால் அக் குடிசை அழிந்துபட்டுப்போம். அங்ஙனம் பிரேமை பக்தி யின் பேரின்பம் உருவெடுக்கும்பொழுதுபூதவுடல்அதைத் தாங்கத் தகுதியற்றதாம். அத்தகைய உடலில் அபிமானம் அகலுவது பக்தர்களது இயல்பு.

124. மரகதக் குவாஅன் மாமணிப் பிறக்க
125. மின்ஞெளி கொண்ட பொன்ஞெளி திகழத்
126. திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்து

மரகதம் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின் ஒளி கொண்ட பொன்ஒளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க்கு ஒளித்தும்

மரகதக்குவால்-மரகதக் கூட்டம். **மாமணிப் பிறக்கம்**-மாணிக்கத்தின் பிரகாசம். **ஒளித்தும்**-மறைந்திருந்தும். **திசை முகன்**-திக்குகளில்.

பச்சைமணிக் குவியல், சிவப்புமணிக் குவியல் ஆகியவை களின் பிரகாசமும் மின்னலின் ஒளியும் தங்கத்தின் ஒளியும் ஒன்று சேர்ந்து திகழ்கின்ற தெய்வமே, புறநாட்டம்கொண்டு உன்னை வெளியுலகில் தேடுகிறவர்களுக்கு நீ தென்படாது ஒளிந்திருக்கிறாய்.

ஜடப்பொருள்களின் பிரகாசம்ஆத்மப் பிரகாசத்தை ஏகதேசம் விளக்குகின்றது; அது முற்றிலும் விளக்க மாட்டாது. பிரபஞ்சத்தைக் காண்பதற்கு ஊனக்கண் உதவுகிறது; பரமனைக்காண அது உதவாது. ஞானக் கண் பெற்றவர்க்கே பரமனைக் காண இயலும்.

127. முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்து

முறையுளி ஒற்றி முயன்றவர்க்கு ஒளித்தும்

முறையுளி-நூல்களில். **ஒற்றுதல்**-தழுவுதல்.

நூல்களில் சொல்லி வைத்துள்ள நன்னெறிகளை ஒழுங் காகப் பழகியவர்களுக்கும் காட்சிக்கெட்டாதவன் பரமன்.

நல்லொழுக்கம் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. வாழ்வை அது செப்பனிடுகிறது. இறைவனுடைய அரு

ளைப் பெறுதற்கும் ஒழுக்கம் வேண்டும். ஆனால் வெறும் நல்லொழுக்கத்தாலேயே ஒருவன் மெய்ப்பொருள் அனுபூதி அடையப் பெற்றவன் ஆகான். இறைவன் அருளும் அதற்குத் தேவையாகிறது.

128. ஒற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்
129. துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்தும்

ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த உறைப்பவர்க்கு ஒளித்தும்

உற்றவர்-உறவினர். உறைப்பவர்-கடுந்தவம் புரிபவர்.

பந்தபாசத்தால் நட்பும் அனுதாபமும் கொண்ட உறவினர் மனம் வருந்தும்படி வெயிலில் கடுந்தவம் புரிகிறவர்களாலும் காணப்பெருதவன் ஈசன்.

ஒருவன் க்ஷ்டப்படுவதைப் பார்த்து அவன் சொந்தக்காரர் வருந்துவது இயல்பு. பஞ்சாக்கினி தபசு என்பது நான்கு பக்கமும் தீமூட்டி வைத்தும், தலைக்குமேல் சூரிய வெப்பம் படும்படி செய்தும் தவம் புரிவதாம். அது மிகக் கஷ்டமான அசுர தபசாகும். அப்படித் தன்னை வாட்டிக்கொண்டிருப்பவனைப் பார்த்து உற்றார் உறவினர் மனம் மிக இரங்குவர். ஆனால் கருணாகரனாகிய கடவுளோ அதைச் சிறிதும் பொருள்படுத்தமாட்டார். முறை தவறிய வழிபாடு அருளைப்பெறுதற்கு உபாயமாகாது. அது அஹங்காரத்தை வளர்க்கிறது. அருளைச் சார்ந்திருந்து புரிகிற தபசே முறையானது. அது அஹங்காரத்தைத் தேய்க்கிறது.

130. மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்தும்

மறைத்திறம் நோக்கி வருந்தினர்க்கு ஒளித்தும்

சாஸ்திர ஞானத்தை முகாமையாகக் கொண்டு இறைவனைக் காண முயல்பவர்க்கு அவன் அகப்படான்.

உபநி—9. பக்கம் 115.

131. இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
132. கத்தந் திரத்தி னவ்வயி னொளித்து

இத்தந்திரத்தில் காண்டும் என்று இருந்தோர்க்கு
அத் தந்திரத்தில் அவ்வயின் ஒளித்தும்

தந்திரம்-உபாயம். வயின்-இடம்.

இந்த உபாயத்தால் இறைவனைக் கண்டுவிடலாம் என்று முயல்பவர்க்கு அந்த உபாயத்திலேயே அங்கு அவன் மறைந்திருந்து காட்சிக்கு எட்டாதவன் ஆகிருன்.

திருக்-திருசியம் என்னும் கோட்பாட்டில் திருக் ஒரு நாளும் திருசியம் ஆவதில்லை. அதாவது காண்போன் ஒருபொழுதும் காணப்படுபொருள் ஆவதில்லை.

தந்த்ர சாஸ்திரம் என்பது ஓர் அலாதியான வழிபாட்டு முறையாகும். வராகி பூஜை என்பதும் இதைச் சார்ந்தது. இதை வாமாச்சாரம் என்பது மரபு. இதற்கு மாருக நாம் கையாண்டு வரும் வைதிக முறையும் ஆகம முறையும் சேர்ந்து தக்ஷிணச்சாரம் என்று அழைக்கப்படுகிறது. வாமாச்சாரத்தில் உள்ள ஆபத்தான 64 சாதனங்களையும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் வெற்றிகரமாகச் சாதித்தார். ஆனல் இறைவனது அல்லது இறைவியின் அருள் இல்லாது அவைகளை ஒருநாளும் சாதிக்க முடியாதென்று அவர் சாதகர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிருர். மாணிக்கவாசகர் கருத்தும் அதுவேயாம்.

133. முனிவற நோக்கி நனிவரக் கௌவி
134. யாணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து
135. வாணுதற் பெண்ணென வொளித்துஞ்

[சேண்வயின்

உபநிஷத் மந்த்ரம் — 31.

नैव स्त्री न पुमानेष न चैवायं नपुंसकः ।
यद्यच्छरीरमादत्ते तेन तेन स युज्यते ॥

நைவ ஸ்திரீ ந புமானேஷ ந சைவாயம் நபும்ஸக: ।
யத்யச்சரீரமாதத்தே. தேன தேன ஸ யுஜ்யதே ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 5 — 10)

एषः ஏஷ: ஈசன் **न पुमान् ந புமான்** ஆணல்ல **न एव स्त्री ந ஏவ ஸ்திரீ** பெண்ணும் அல்ல **अयं அயம்** அவர் **न एव नपुंसकः च**

முனிவு அற நோக்கி நனிவரக் கௌவி
ஆண் எனத் தோன்றி அலி எனப் பெயர்ந்து
வாள்நுதல் பெண் என ஒளித்தும் சேண்வயின்

முனிவு அற நோக்கி-வெறுப்பு இல்லாது பார்த்து. **நனி வரக் கௌவி**-மிகுதியும் வரப் பற்றி. **வாள்நுதல்**-ஒளியுடைய நெற்றியையுடைய. **சேண்வயின்**-நெடுந்தூரத்தில்.

பேரூக்கத்துடன் உன்னை நன்ருய்ப் பற்றிப் பிடித்து ஆராய்ந்து பார்ப்பவர்க்கு நீ ஆணுக விளங்குகின்ருய். அலியாக விளங்குகின்ருய். பண்பாடு அடைந்துள்ள பெண்ணுகப் பரிணமிக்கின்ருய். பின்பு இவையாவையும் கடந்தும் இருக்கின்ருய்.

136. ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும் [போய்த்
137. துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
138. யருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்தும்

ஐம்புலன் செலவிடுத்து அருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்று உயிர் ஆக்கை
அரும் தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்

ந ஏவ நபும்ஸக: ச பால் இல்லாதவரும் அல்ல यत् यत् **யத் யத்** எந்த எந்த शरीरं சரீரம் சரீரத்தை आदत्ते ஆதத்தே எடுத்துக்கொள்கிருரோ तेन तेन தேன தேன அந்தந்த சரீரத்துடன் स: ஸ: அவர் युज्यते யுஜ்யதே புணர்ந்திருக்கிருர்.

ஈசன் ஆணல்ல, பெண்ணல்ல, அலியுமல்ல. எந்தச் சரீரத்தை அவர் எடுக்கிருரோ, அந்தச் சரீரமயமாக அவர் மிளிர்கிருர்.

உபாதி சஹிதராகவும், உபாதி ரஹிதராகவும் ஈசன் இருக்கிருர். ஆற்று நீர், கடல் நீர் என்னும் பலப்பல உபாதிகளுடன் கூடியிருப்பதற்கு இடையில் உண்மையில் நீர் தன்மயமாயிருக்கிறது. அங்ஙனம் பரமாத்மன் யாண்டும் தன்மயம். பெயரளவில் பலப்பல சரீரங்களுடன் ஆணுகவும், பெண்ணுகவும் அவர் தோன்றிக்கொண்டிருக்கிருர்.

அரும் வரைதொறும் போய்-அரிய மலைகளிடையே சென்று. துற்றவை துறந்த-உணவை விலக்கின. வெற்று உயிர் ஆக்கை-குற்றுயிர் பிடித்துள்ள உடலோடு கூடிய. காட்சியுள்-அறிவினுள். திருந்த ஒளித்தும்-முற்றிலும் மறைந்தும்.

ஐம்பொறிகளின் செயல்களைத் தூர ஒதுக்கி வைத்து விட்டு, அரிய மலைகளிடையே சென்று, உணவையும் அறவே துறந்துவிட்டு வெறும் குற்றுயிர் பிடித்துள்ள கடுந்தவசிகளுடைய தேங்கிய அறிவுக்கும் எட்டாதவன் ஈசன்.

இறைவனுடைய அருளோடு சம்பந்தப்படுத்தாத கடுமையான ஆத்ம சாதனங்கள் எல்லாம் ஒன்றுக்கும் உதவாதுபோய்விடும். வாழ்வைக் குலைப்பதுகுறிக்கோள் ஆகாது. வாழ்வாங்கு நிறை வாழ்வு வாழ்ந்து அதை இறைவனுடைய பணியில் பயன்படுத்துவதே குறிக்கோள் ஆகும்.

139. ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
ஒன்று உண்டு இல்லை என்ற அறிவு ஒளித்தும்

அனைத்துக்கும் ஆதாரமாய் முழுமுதற் பொருள் ஒருவன் இருக்கிறான் என்று ஓர்ந்துகொள்ள இயலாத சிற்றறிவுக்கு ஈசன் எட்டாதவன் ஆகிறான்.

140. பண்டே பயிறொறு மின்றே பயிறொறு
141. மொளிக்குஞ் சோரனைக் கண்டன
142. மார்மி னார்மி னாண்மலர்ப் பிணையலிற்
143. றாடளை யிடுமின்
144. சுற்றுமின் சூழ்மின் றொடர்மின் விடேன்மின்
145. பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித்துந்

பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்கும் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாள் மலர்ப் பிணையலில்
தாள் தளை இடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்று முற்று ஒளித்தும்

பண்டே பயில்தொறும் - பூர்வகாலத்தில் பழகுந்தோறும். சோரனை - கள்வனை. ஆர்மின் - ஆரவாரியுங்கள். நாள் மலர் பிணையலில்-புதிய மலர்கொண்டு தொடுத்த மாலைகளால். தாள்

தளை இடுமின்-திருவடியைத் தளைத்திடுங்கள். **விடேல் மின்**-விடாதேயுங்கள். **பற்று முற்று ஒளித்தும்**-பற்றுக்கு முற்றிலும் அகப்படாதிருந்தும்.

முன்பு தோன்றிய நூல்களிலும் பின்பு தோன்றிய நூல்களிலும் சிறு தெய்வங்களை வசப்படுத்துதற்கான வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அம்முறைகளைக் கையாண்டு கள்வனைக் கண்டு பிடிக்க முயல்வது போன்று கடவுளைக் காணுதற்குப் படாடோபமான வழிபாடுகளில் ஆரவாரியுங்கள். புதிய மலர்கொண்டு தொடுத்த மாலைகளால் அவனுடைய திருவடிகளைத் தளைத்திடுங்கள். சுற்றுங்கள், சூழுங்கள், தொடருங்கள், விடாதேயுங்கள், பற்றிப் பிடியுங்கள் என்றெல்லாம் முயலுபவர்க்கு ஈசன் அகப்படமாட்டான்.

பஞ்சபூதங்களில் மறைந்துள்ள சில அரிய சக்திகள் சிறு தெய்வங்கள் என அழைக்கப்படுகின்றன. அவைகளை வசப்படுத்தி வேலை வாங்குவதற்கான் பூஜா விதிகள் பழைய நூலாகிய அதர்வவேதத்திலும் புதிய நூலாகிய தந்த்ர சாஸ்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்விதிகளைச் சரியாகப் பின்பற்றிப் பூஜைகள் போட்டால் அந்த தேவதைகள் வசப்பட்டே ஆகவேண்டும். அந்த விதிக்கு விலக்குக் கிடையாது. இன்று ஜட சக்தியை பௌதிக விஞ்ஞானம் கட்டியாள்வது போன்று அன்று சித் சக்தியை வேதத்தில் உள்ள கர்மகாண்டம் கட்டியாண்டது. ஆனல் அம்முறை எதையும் கொண்டு பரமனை வசப்படுத்த முடியாது. சேய் தன் தாயைச் சார்ந்திருப்பது போன்று சாதகன் பரமனையே சார்ந்திருந்து அவனுடைய அருளுக்குப் பாத்திரமாக வேண்டும்.

146. தன்னே ரில்லோன் ருனே யான தன்மை
147. யென்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
148. யறைகூவி யாட்கொண் டருளி
149. மறையோர் கோலங் காட்டி யருளலு
150. முளையா வன்பென் புருக வோலமிட்டு

தன்நேர் இல்லோன் தானே ஆனதன்மை
என்நேர் அனையார் கேட்கவந்து இயம்பி
அறைகூவி ஆட்கொண்டு அருளி

மறையோர் கோலம் காட்டி அருளலும்
உளையா அன்பு என்பு உருக ஓலம் இட்டு

அறைகூவி-வலிந்து அழைத்து. உளையா-வருந்தி. அன்பு என்பு உருக-அன்பினால் எலும்பு உருகும்படி.

ஈசா, உனக்கு நீயே நிகர். உனக்கு ஒப்பானவர் யாருமில்லை. தன்னில் தானாகிய நீ என் போன்ற அடியார்கள் உய்தற்பொருட்டு அந்தணன் வேஷம் பூண்டு வந்து உன் மகிமையைப் புகட்டியருளினை. என்னை நீ வலிய வந்து அழைத்து ஆட்கொண்டருளினதை வியந்து வருந்தி நான் அன்பினால் எலும்பு உருகும்படி ஓலமிட்டு அழுதேன்.

ஒன்பதாவதும் பன்னிரண்டாவதுமாகிய மஹாபாவங்கள் ஈண்டுத் தென்படுகின்றன. பக்கம் 40.

151. அலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
152. தலை தடுமாறு வீழ்ந்துபுரண் டலறிப்

அலைகடல் திரையின் ஆர்த்து ஆர்த்து ஓங்கித்
தலைதடுமாறு வீழ்ந்து புரண்டு அலறிப்

அலைவீசுகின்ற கடலில் எழுகின்ற ஓசை போன்று நான் பிரலாபிக்கிறேன். அவ் அலைபோன்று நான் தலைகீழாக வீழ்ந்து புரண்டு கத்துகிறேன்.

பக்கம் 41ல் விளக்கியுள்ள மஹாபாவம் பதினொன்று ஈண்டுப் புலனாகிறது.

153. பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
154. நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவுங்

பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்

பித்துப் பிடித்தவர் போல மயக்கம் கொண்டும் வெறி பிடித்தவர் போலக் களியாட்டம் காட்டியும் நான் என் பேருணர்வை வெளிப்படுத்தினேன். இதையெல்லாம் பார்த்த ஊரார் திகைத்தனர்; வதந்தி மூலம் கேள்விப்பட்டவர் வியப்படைந்தனர்.

ஈண்டும் அதே மஹாபாவம் வெளியாகிறது.

155. கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தி
156. னாற்றே னாக வவயவஞ் சுவைதரு

157. கோற்றேன் கொண்டு செய்தனன்

கடக்களிறு ஏற்ருத் தடம்பெரு மதத்தின்
ஆற்றேன் ஆக அவயவம் சுவைதரு
கோல் தேன் கொண்டு செய்தனன்

கடக்களிறு-மதயானை. **ஏற்ரு**-ஏறவிடாதபடி. **தடம்பெரு மதத்தின்**-மிகப்பெரிய மதத்தினுல். **ஆற்றேனுக**-நான் ஆற்ருதவன் ஆகும்படி. **அவயவம்**-உறுப்பு. **கோல்தேன்**-கொம்புத்தேன்.

மதம் பிடித்த ஆண் யானையானது தன்மீது பாகன் ஏறவொட்டாது தனது தடுமாற்றத்தை வெளிப்படுத்துகிறது. என்னுடைய நிலையும் அத்தகையதாயிருக்கிறது. அன்பின் பெருக்கினுல் என் உடம்பில் உள்ள உறுப்புக்கள் அனைத்தும் கொம்புத் தேனில் ஊறவைத்தவைகள் போன்று தித்திக்கின்றன.

பத்தாவது மஹாபாவத்தில் தித்திக்கும் இயல்பு வெளியாகிறது. பக்கம் *40*.

பக்தி சூத்திரம் மூன்றிலா இயல்பு ஈண்டுக் காணப் படுகிறது. பக்கம் *44*.

158. ஏற்ருர் மூதூ ரெழினகை யெரியின்
159. வீழ்வித் தாங்கன்
160. றருட்பெருந் தீயி னடியோ மடிக்குடி
161. லொருத்தரும் வழாமை யொடுக்கினன்

ஏற்ருர் மூதூர் எழில் நகை எரியின்
வீழ்வித்து ஆங்கு அன்று
அருள் பெரும் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்

ஏற்ருர்-எதிர்த்தவர்கள். **மூது ஊர்**-பழைய ஊர். **எழில் நகை**-அழகிய புன்னகை. **எரியின்**-தீயில். **வீழ்வித்து**-விழச் செய்து. **ஆங்கு அன்று**-அங்கே அக்காலத்தில். **அருள் பெரும் தீயின்**-ஞானக்கினியில். **அடியோம்**-நாங்கள். **அடிக்குடில்**-தன்னைச் சார்ந்தவர்களுள். **ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்**-யாரும் மிச்சமில்லாது தன்மயமாக்கினன்.

அன்று தனது அழகிய புன்னகை என்னும் தீயைக் கொண்டு மிகப் பழையனவாகிய முப்புரங்களை சம்மாரம் செய்வதன் வாயிலாகத் தன்னைப் புறக்கணித்து வாழ்ந்தவர்களை

யெல்லாம் இறைவன் துடைத்தருளினன். ஆனால் அவனுடைய அடியார்களாகிய எங்களிடம் பிறவிப் பிணிக்கு ஏதுவாயிருந்த பிரகிருதி என்னும் மலத்தைத் தனது அருள் என்னும் ஞானக் கினியினால் சுட்டெரித்து அவன் எங்களை முற்றிலும் தன்மய மாக்கினான், என்னே!

சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களால் ஆகியது பிரகிருதி அல்லது பிரபஞ்சம். இந்தப் பிரகிருதியிலேயே கட்டுண்டு கிடப்பவர்கள் ஈசனைப்பற்றி விசாரித்துப் பார்ப்பதுமில்லை, அவனை வழுத்துவதுமில்லை. ஆதலால் அவர்கள் அண்ணலுக்கு எதிரிகள் போன்று நடந்து கொள்கின்றனர். பிரளயம் நிகழ்வதுதான் திரிபுர சம்மாரம் என உருவகப்படுத்தி இயம்பப்பட்டுள்ளது. அது ஈசனுக்கு வெறும் விளையாட்டாக நடைபெறுகிறது. அவனது புன்சிரிப்பு விளையாட்டை விளக்குகிறது. பிரளயத்தில் அழிகிற உயிர்களெல்லாம் அதைத் தொடர்ந்து வரும் சிருஷ்டியில் மீண்டும் பிறப்பெடுக்கின்றன. ஆனால் இறைவனை அடைகிற உயிர்களுக்கு மீண்டும் பிறப்பு இல்லை. அவர்கள் முக்தி பெறுகின்றனர்:

162. தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
தடம்கையின் நெல்லிக்கனி எனக்கு ஆயினன்

தடம்கையில்-பெரிய கையின்கண் உள்ள.

உள்ளங்கை நெல்லிக்கனிபோல இறைவன் எனக்கு முற்றிலும் பிரத்தியக்ஷமானான்.

163. சொல்லுவ தறியேன் வாழி முறையோ
164. தரியே னாயேன் றானெனைச் செய்தது
165. தெரியே னாவா செத்தே னடியேற்
166. கருளிய தறியேன் பருகியு மாரேன்
167. விழுங்கியு மொல்ல கில்லேன்

சொல்லுவது அறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தான் எனைச் செய்தது
தெரியேன் ஆ ஆ செத்தேன் அடியேற்கு
அருளியது அறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்லகில்லேன்

வாழி-நீ வாழ்வாயாக. தரியேன்-ஆற்றேன். ஆரேன்-திருப்தி யடையேன். ஒல்லகில்லேன்-பொறுக்கமாட்டேன்.

சுவானுபூதியில் சிவானந்த போகத்தை அனுபவிக்கப்பெற்ற நான் அதைப்பற்றி எப்படி எடுத்துரைப்பது என்று அறிந்திலேன். இறைவா, நீ வாழ்வாயாக. என்னை நீ ஆட்கொண்டது முறையோ அல்லவோ, நானறியேன். நீ என்னை ஆட்கொண்டவிதத்தை அற்பனாகிய நான் ஆற்றேன். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆ! ஆ!! நான் மடிந்தேன். நீ அருள் புரிந்தது என் அறிவுக்கு எட்டாதிருக்கிறது. பருகப் பருக அது தெவிட்டாதது. உண்ண உண்ண அது போதுமெனாதது.

பரமனை அடையப்பெற்று அவனிடத்திருந்து பெருக்கெடுத்து வருகிற பேரானந்தத்தை விளக்குதற்கு எந்தப் பக்தனுக்கும் இயலுவதில்லை. அது சொல்லில் ஒரு பொழுதும் அடங்காது. அவனது மனித இயல்பு மடிந்து போகிறது; தெய்விக இயல்பு தோன்றுகிறது. ஜன்மம் சாபல்யமாகிறது.

168. செழுந்தண் பாற்கடற் றிரை புரைவித்
169. துவாக்கட னள்ளுநீ ருள்ளகந் ததும்ப

செழும் தண் பால்கடல்திரை புரைவித்து
உவாக்கடல் நள்ளும் நீர் உள் அகம் ததும்ப

செழுமை-செழுமையான. தண்-குளிர்ந்த. திரை-அலை. புரைவித்து-ஒத்திருக்கச் செய்து. உவா-பௌர்ணமி. நள்ளுதல்-செறிதல். உள் அகம் ததும்ப-உள் இடம் தளும்ப.

செழுமையும் குளிர்ச்சியும் பொருந்திய பாற்கடலில் கிளம்பும் அலைகள் போன்றது இறைவனிடத்திருந்து வருகிற பேரானந்தம். நிறை நிலாவன்று கடலில் நீர் உயர்ந்திருப்பது போன்று என் உள்ளத்தினுள் ஆனந்தம் பொங்கி நிற்கிறது.

ஞானிகளுடைய அனுபூதி யாண்டும் ஒரேவிதமானது. சமாதி நிலையில் வாய்க்கிற பேரானந்தம் பரந்த பாற்கடல் போன்றது. அதில் கிளம்புகிற அலையை ஆனந்த லஹரீ என ஆதி சங்கரர் விளக்கியிருக்கிறார். லஹரீ என்னும் சொல் அலை எனப் பொருள்படுகிறது. இவ்வனுபூதியை உருவகப்படுத்திப் பரமன் பாற்கடலில் பள்ளிகொண்டிருப்பதாகப் புராணங்கள் பகருகின்றன.

றன. பௌர்ணமியன்று ஆகர்ஷண சக்தியை முன்னிட்டுக் கடலில் நீர் உயர எழும்புவது இயற்கையின் நியதியாகும். அனுபூதிமானுடைய பேரானந்தம் அதனோடு ஒப்பிடப்படுகிறது.

170. வாக்கிறந் தமுத மயிர்க்கா ரேறும்
171. தேக்கிடச் செய்தனன் கொடியே னூன்றழைக்

வாக்கு இறந்து அமுதம் மயிர்க்கால்தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன் தழை

தேக்கிட-தேங்கும்படி. ஊன் தழை-தசையால் செழித்த.

சொல்லில் அடங்காத அமிர்த சொரூபமாகிய ஆனந்தம் மயிர்க்கால் தோறும் ததும்பி யிருக்கும்படி இறைவன் செய்தான். வினையேனது தசையினால் கொழுத்த......

172. குரம்பை தோறு நாயுட லகத்தே
173. குரம்பை கொண்டின்றேன் பாய்த்தி நிரம்பிய

குரம்பை தோறும் நாய் உடல் அகத்தே
குரம்பை கொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய

குரம்பை தோறும்-உடல்கள் அனைத்தினும். நாயுடல் அகத்தே-அற்பனாகிய என் உடலினுள். குரம்பை கொண்டு-சிறு வீடாகக்கொண்டு. இன்தேன் பாய்த்தி-இனிய தேனைச் சொரிந்து. நிரம்பிய-நிறைந்த.

உடம்புகள் அனைத்திலும் தகுதியற்ற என் உடலை இருப்பிடமாகக்கொண்டு சிவானந்தம் என்னும் தேனை இறைவன் பொழிந்தான். அப்படி நிறைந்த......

174. அற்புத மான வமுத தாரைக
175. ளெற்புத் துளைதொறு மேற்றின னுருகுவது

அற்புதம் ஆன அமுதம் தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது

எற்புத்துளை-எலும்பின் துவாரம்.

வியக்கத்தக்க அமிர்த தாரைகளை எலும்பின் துவாரங்களிலெல்லாம் இறைவன் ஏறப்பண்ணினான். அதை முன்னிட்டு உருகுவதாகிய......

176. உள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
177. கள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய

உள்ளம் கொண்டு ஓர்உரு செய்தாங்கு எனக்கு
அள்ஊறு ஆக்கை அமைத்தனன் ஒள்ளிய

அள்ஊறு ஆக்கை-மிகுதியும் உருகுகின்ற உடல். **ஒள்ளிய**-அறிவுடைய.

மனதைக்கொண்டு ஒரு வடிவத்தைச் செய்தாற்போல என்னிடம் அன்பு கசிந்தூறும் உடலை இறைவன் செய்தருளினன். அறிவுடைய......

178. கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
179. யென்னையு மிருப்ப தாக்கின னென்னிற்

கன்னல் கனிதேர் களிறுஎனக் கடைமுறை
என்னையும் இருப்பது ஆக்கினன் என்னில்

கன்னல்-கரும்பு. **தேர்**-தேடுகின்ற. **களிறு**-யானை.

யானையானது கரும்பையும விளாங்கனியையும் தேடுவது போன்று தகுதியற்ற என்னையும் இறைவன் பேரானந்தத்தில் திளைத்திருக்கச் செய்தனன். என்னிடத்தில்......

180. கருணை வான்றேன் கலக்க
181. வருளொடு பராவமு் தாக்கினன்
182. பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

உபநிஷத் மந்த்ரம் — 32.

मधुवाता ऋतायते मधु क्षरन्ति सिन्धवः ।
माध्वीर्नः सन्त्वोषधीः ॥
मधु नक्तमुतोषसि मधुमत्पार्थिवं रजः ।
मधुद्यौरस्तु नः पिता ॥
मधुमान्नो वनस्पतिर्मधुमाँ अस्तु सूर्यः ।
माध्वीर्गावो भवन्तु नः ॥

மது வாதா ரிதாயதே மது க்ஷரந்தி ஸிந்தவ: ।
மாத்வீர்ந: ஸந்த்வோஷதீ: ॥
மது நக்தமுதோஷஸி மதுமத்பார்த்திவம் ரஜ: ।
மதுத்யௌரஸ்து ந: பிதா ॥
மதுமாந்நௌ வனஸ்பதிர்மதுமாம் அஸ்து ஸூர்ய: ।
மாத்வீர்காவோ பவந்து ந: ॥

(மஹாநாராயணோபநிஷதம் 39—4)

கருணை வான் தேன் கலக்க
அருளொடு பரா அமுது ஆக்கினன்
பிரமன் மால் அறியாப் பெற்றியோனே.

பரா அமுது-தேவர்களுக்குரிய அமிர்தம்.

சிவஞானம் என்னும் தேனில் நிலைத்திருந்து நான் அமிர்த சொரூபம் ஆகும்படி இறைவன் செய்தருளினன். பிரம்மாவுக்கும் திருமாலுக்கும் எட்டாத பேரியல்புடைய பெம்மான் எனக்கு எட்டிய வன் ஆனன் என்னே!

மீதேவர்களுக்கு ஆயுள் அதிகம். ஆதலால் அவர்கள் அமிர்தம் அல்லது சாவா மருந்து அருந்தினவர்களாகக்

वाता: வாதா: காற்று मधु மது இனிமையாக ऋतायते ருதாயதே வீசட்டும் सिन्धवः ஸிந்தவ: நதிகள் मधु क्षरन्ति மது க்ஷரந்தி இனிமையாக ஓடட்டும் ओषधीः ஓஷதீ: மூலிகைகள் नः ந: நமக்கு माध्वीः மாத்வீ: இனிமையாக सन्तु ஸந்து இருக்கட்டும் नक्तम् நக்தம் இரவு उत உத அதனேடு उषसि உஷஸி பகல் मधु மது இனிமையாயிருக்கட்டும் पार्थिवं रजः பார்த்திவம் ரஜ: பூமியின் தூள் मधुमत् மதுமத் இனிமை நிறைந்திருக்கட்டும் पिता द्यौः பிதா த்யெள: தந்தையாகிய விண்ணுலகம் नः ந: நமக்கு मधु अस्तु மது அஸ்து இனிமையாக இருக்கட்டும் वनस्पतिः வனஸ்பதி: கனிகொடுக்கிற மரம் नः ந: நமக்கு मधुमान् மதுமான் இனிமையாயிருக்கட்டும் सूर्यः ஸூர்ய: சூரியன் मधुमान् अस्तु மதுமான் அஸ்து இனியவனயிருக்கட்டும் गावः காவ: பசுக்கள் नः ந: நமக்கு माध्वीः भवन्तु மாத்வீ: பவந்து இனியவைகளாக இருக்கட்டும்.

காற்று இனிது விசட்டும். நதிகள் இனியவைகளாக ஓடட்டும். மூலிகைகள் நமக்கு இன்பம் தருபவைகள் ஆகுக. இரவிலும் பகலிலும் இனிமையே நிறைந்திருக்கட்டும். நிலத்தின் புழுதியில் இன்பம் பொலிக. நம் தந்தையாகிய வானுலகில் இன்பம் ஓங்குக. கனி கொடுக்கும் மரங்களில் இன்பம் ததும்புக. சூரியன் இன்பத்தைத் தோற்றுவிப்பானுக. பசுக்களினின்று நமக்கு இன்பம் சுரப்பதாகுக.

மது என்னும் சொல் தேனைக் குறிக்கிறது. பிரம்ம வித்யாவானது மதுவித்யா எனவும் இயம்பப் பெறு

கருதப்படுகின்றனர். ஆனால் பரம்பொருளை அடைகிற மனிதன் அமிர்தத்வம் அடைந்தவனாகிறான். அது பிறப்பு இறப்புக்கு அப்பாற்பட்ட பெருநிலையாம். அது ஞானி களின் தனியுடைமை.

தில்லையில் அருளிய

4. போற்றித் திருவகவல்

1. நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
2. வீரடி யாலே மூவுல களந்து
3. நாற்றிசை முனிவரு மைம்புலன் மலரப்
4. போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
5. றடிமுடி யறியு மாதர வதனிற்

நான்முகன் முதலா வானவர் தொழுது எழ
ஈர் அடியாலே மூஉலகு அளந்து
நால்திசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடுமால் அன்று
அடிமுடி அறியும் ஆதரவு அதனில்

கிறது. பரஞானத்தை அடையப்பெற்றவர்க்கு எதைப் பார்த்தாலும் அதில் பிரமானந்தம் திகழ்வது வெளிப் படை. பிரபஞ்சத்தில் இருப்பவைகளெல்லாம் பிரம்ம சொரூபமாகத் தென்படுவது விசிஷ்டாத்வைத நிலையா கும். பரமனுக்கு அன்னியமாக அவனுடைய சரீரம் இல்லை என்பது அதன் கோட்பாடு. தேன் என்னும் சொல்லைப் பலவிடங்களில் மாணிக்கவாசகர் பகர்வதற்குக் காரணம் அவர் பரஞானத்தில் திளைத்திருந்ததேயாம். தமது உட லில் உள்ள எலும்பிலும் தேன் செறிந்திருப்பதாக அவர் உணர்கிறார். சிவானந்த போகத்தின் மேலீடு அங்ஙனம் சொல் ஓவியமாக வடிவெடுக்கிறது. ஈயானது தேனைத் தெளிந்தெடுப்பது போன்று சொல்லில் புதைந்துள்ள பொருளை உணர்ந்தெடுப்பது நம் கடனாகும். பரப்பிரம் மத்தை மது என்றனர் பழங்காலத்து ரிஷிகள். சிவானந் தத்தைத் தேன் என்கின்றார் மாணிக்கவாசகர். இச்சொற் களெல்லாம் பரசிவம் என்னும் ஒரே பொருளைக் குறிப் பது தேற்றம்.

நாற்றிசை-நான்கு திசை. **கதிர்முடி**-பிரகாசம் பொருந்திய கிரீடம். **திருநெடுமால்**-லக்ஷ்மிநாராயணன். **ஆதரவு அதனில்**-விருப்பத்தினால்.

நான்கு முகங்களையுடைய பிரம்மா முதலிய தேவர்கள் தொழுது வழுத்திக்கொண்டிருக்கையில் இரண்டு அடியில் மூன்று உலகங்களையும் லக்ஷ்மிநாராயணன் அளந்து முடித்தான். அப்பொழுது நான்கு திக்குகளிலும் உள்ள முனிவர்கள் தங்களின் ஐம்பொறிகளும் மலரும்படி பிரகாசமான கிரீடத்தையுடைய அத்திருமாலை வணங்கினார்கள். பின்பு அத்திருமாலோ ஈசனது அடிமுடி காண விரும்பினான்.

6. கடுமுர ணேன மாகிமுன் கலந்
7. தேழ்தல முருவ விடந்து பின்னெய்த்
8. தூழி முதல்வ சயசய வென்று
9. வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்

கடும்முரண் ஏனம் ஆகி முன் கலந்து
ஏழ்தலம் உருவ இடந்து பின் எய்த்தும்
ஊழிமுதல்வ சய சய என்று
வழுத்தியும் காணா மலர்அடி இணைகள்

கடுமுரண்-வேகமும் வலிமையும் கூடிய. **ஏனம் ஆகி**-பன்றி வடிவெடுத்து. **முன் கலந்து**-முன் தோன்றி. **ஏழ்தலம் உருவ இடந்து**-பாதாளம் ஏழையும் ஊடுருவிப் பிளந்து. **பின் எய்த்து**-பிறகு தளர்வுற்று.

வேகமும் வலிவும் கூடிய பன்றி வடிவெடுத்து வந்து, முன்னே தோன்றி, ஏழு பாதாளங்களையும் ஊடுருவிப் பிளந்து பார்த்துத் திருமால் தளர்வுற்றனன். அனைத்துக்கும் முதல்வனே உனக்கு வெற்றி யுண்டாகுக வென்று அவன் சிவனை வழுத்திய பின்பும் அவரது தாமரைத் திருவடிகளைக் காண அவனுக்கு முடியவில்லை.

10. வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்
11. யானை முதலா வெறும்பீ றுய
12. வூனமி லியோனியி னுள்வினை பிழைத்து
13. மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத்
14. தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்

வழுத்துதற்கு எளிது ஆய் வார்கடல் உலகினில்
யானை முதலா எறும்பு ஈறு ஆய்

ஊனம் இல் யோனியின் உள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனம் இல் கிருமிச் செருவினில் பிழைத்தும்

வார்கடல்-எங்கும் விரிந்த கடல். **ஊனமில் யோனி**-அழிவற்ற யோனிகளுள்ளே. **ஈனம் இல்**-அழிவற்ற. **கிருமிச் செரு**-சிற்றுயிர்களின் போராட்டம்.

அருவநிலையில் தேவர்களாலும் காணமுடியாத திருவடிகளை உயிர்கள் கண்டு வழுத்துதற்கு எளிதாகும்படி சிவன் உருவம் தாங்கிவருகிறான். இறைவனை வழுத்துதற்குப் பக்குவமாக வேண்டிய ஜீவர்கள் கடல் சூழ்ந்த உலகில் வந்து பிறக்கின்றன. வினைக்கு ஏற்ப அவ்வுயிர்கள் அழிவற்ற யோனிகளில் யானை முதல் எறும்புவரையில் உள்ள பல வடிவங்களில் பிறக்கின்றன. பிறகு மானுட யோனியில் மனிதனாய்ப் பிறக்கிறது. யோனிவாசத்தில் ஒன்றையொன்று ஒத்துள்ள உயிர்த் தத்துவங்களுக்கிடையில் போராட்டம் ஏற்பட்டு, அவைகளுள் ஏதேனும் ஒன்று ஓங்கி வளர்கிறது.

15. ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்து
16. மிருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்

ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்

தான்றி-எல்லை.

ஒருமாதம் பூர்த்தியானதும் தான் தனக்காக வென்று ஒரு தனி வடிவெடுத்தல் என்னும் செயலில் தேர்ச்சியடைந்தும், இரண்டு மாதங்கள் நிறைவேறும்பொழுது தனது தனி வியக்தி வலிவடைதலில் ஈடேறியும்;

17. மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்து
18. மீரிரு திங்களிற் பேரிருள் பிழைத்து
19. மஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்து
20. மாறு திங்களி னூறலர் பிழைத்தும்

மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈர்இரு திங்களில் பேர்இருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களில் ஊறுஅலர் பிழைத்தும்

மதம்-கொழுப்பான நீர். **முஞ்சுதல்**-சாதல். **ஊறு அலர்**-உடல் மிகைப்படுதல்.

மூன்றும் மாதத்தில் தாயின் கருவில் பெருகும் கொழுப்பு நீரில் புதையுண்டு போகாமல் உயிர் வாழ்ந்திருந்தும்; நான்காவது மாதத்தில் கண் இல்லாதிருப்பதற்கிடையில் உயிர் வாழ்ந்திருந்தும்; ஐந்தாவது மாதத்தில் கருக்கலைந்து செத்துப்போகாதிருந்தும்; ஆறாவது மாதத்தில் அவயவங்கள் முறையாக அமைந்து உயிர் வாழ்ந்திருந்தும்;

21. ஏழு திங்களிற் ருழ்புவி பிழைத்து
22. மெட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்து
23. மொன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்

ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்

தாழ் புவி-தாழ்ந்த நிலம். கட்டம்-கஷ்டம்.

ஏழு, எட்டு, ஒன்பதாம் மாதங்களில் இயல்பாக உண்டாகும் பல துன்பங்களினின்று ஈடேறியும்;

24. தக்க தசமதி தாயொடு தான்படுந்
25. துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்

தக்க தச மதி தாயொடு தான்படும்
துக்க சாகரம் துயர் இடைப் பிழைத்தும்

தசமதி-பத்தாம் மாதம். துக்கசாகரம்-துன்பக்கடல்.

பத்தாம் மாதம் வரையில் தகுதியுடன் கர்ப்பத்தில் வளர்ந்து பிறக்கும்பொழுது தாயும் சேயும் ஆகிய இருவரும் பிரசவ வேதனை யில் கஷ்டப்படுகின்றனர்.

26. ஆண்டுக டோறு மடைந்தவக் காலை
27. யீண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்தும்

ஆண்டுகள் தோறும் அடைந்த அக்காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்

ஈண்டுதல்-மிகுதல்.

காலக்கிரமத்தில் காயம் கட்டுடன் வளர்ந்திருக்கிறது.

28. காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
29. வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்

காலை மலமொடு கடும்பகல் பசி நிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்

நிசி வேலை-இரவு நேரத்தில்.

உண்பது உறங்குவது ஆகிய நித்திய கருமங்களை முறையாகச் செய்தும்;

30. கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயி
31. லொருங்கிய சாய னெருங்கியுண் மதர்த்துக்
32. கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
33. தெய்த்திடை வருந்த வெழுந்து புடைபரந்
34. தீர்க்கிடை போகா விளமுலை மாதர்தங்
35. கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

கரும்குழல் செவ்வாய் வெள் நகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கி உள்மதர்த்துக்
கச்சு அற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்து
எய்த்து இடைவருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கு இடைபோகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனம் கொள்ளையில் பிழைத்தும்

காளைப் பருவத்தில் காமநோய்க்கு சிப்படாதிருந்தும்;

36. பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுண்
37. மத்தக் களிறெனு மவாவிடைப் பிழைத்துங்

பித்தம் உலகர் பெரும் துறைப் பரப்பினுள்
மத்தம் களிறு எனும் அவாவிடைப் பிழைத்தும்

மத்தக் களிறு-மதயானை.

நிலவுலக வாழ்க்கையில் பைத்தியம் கொண்டுள்ள மக்களுக்கிடையில் வாழ்வதால் வரும் பேராசை என்னும் மதயானையினிடத்திருந்து தப்பிப் பிழைத்தும்;

38. கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
39. செல்வ மென்னு மல்லலிற் பிழைத்தும்

கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்

விடுபேறு அடைதற்கு விக்கினமாயிருக்கிற கல்விச் செருக்கினின்று விலகியிருந்தும்; செல்வம் என்னும் துன்பத்திலிருந்து தப்பித்தும்;

40. நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
41. புல்வரம் பாய பலதுறை பிழைத்துங்

நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம்பு ஆய பலதுறை பிழைத்தும்

நல்குரவு-வறுமை. தொல்விடம்-பழைய விஷம். புல்வரம்பு-கீழான ஒழுக்கம்.

தரித்திரம் என்னும் கொடுமையினின்று விடுபட்டும், பொருந்தாத நடத்தை பலவற்றினின்று ஈடேறியும்;

42. தெய்வ மென்பதோர் சித்த முண்டாகி
43. முனிவி லாததோர் பொருளது கருதலு
44. மாறு கோடி மாயா சக்திகள்
45. வேறு வேறுதம் மாயைக டொடங்கின

தெய்வம் என்பது ஓர்சித்தம் உண்டாகி
முனிவு இலாதது ஓர்பொருள் அது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறு தம்மாயைகள் தொடங்கின

முனிவு இலாதது-வெறுப்பு இல்லாதது. மாயா சத்திகள்-இயற்கையின் ஆற்றல்கள்.

வெறுப்பு என்னும் எதிர்மறை உணர்ச்சி சிறிதேனும் இல்லாது பேரன்பு சொரூபமாகிய பரம்பொருள் ஒன்று உண்டு என்ற விவேகம் ஜீவாத்மாவுக்கு எண்ணிறந்த பிறவிகளுக்குப் பிறகு உண்டாகிறது. ஆனல் அந்த நல்லறிவுக்கு விக்கினமாக இயற்கையின் எத்தனை யெத்தனையோ இயக்கங்கள் குறுக்கிடுகின்றன.

உபநிஷத் மந்த்ரம்–20 பக்கம் 166ல் இதற்கு விளக்கம் காண்க.

46. ஆத்த மாஞ ரயலவர் கூடி
47. நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்

ஆத்தம் ஆனர் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்

ஆத்தம் ஆனர்-அன்புக்கு உரியவர். அயலவர்-மற்றவர். நாத்திகம்-நாஸ்திகம்.

அன்பினரும் மற்றவர்களும் கூடிக் கடவுளே இல்லையென்று, நாவில் தழும்பு ஏறும் வரையில் நிரீசுவர வாதம் செய்கின்றனர். (மாயாசக்தியின் மோகவலைகளில் இது ஒன்று ஆகிறது.)

48. சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
49. பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்

சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர் பெருகவும்

உறவினர் என்று சொல்லப்படும் ஜீவாத்மாக்கள் வந்து சூழ்ந்துகொண்டு பாரமார்த்திகத்தில் தீவிரமாகப் போக வேண்டாமென்று வருந்தி வேண்டினர்.

50. விரத மேபர மாகவே தியருஞ்
51. சரத மாகவே சாத்திரங் காட்டினர்

விரதமே பரம் ஆக வேதியரும்
சரதம் ஆகவே சாத்திரம் காட்டினர்

சரதம்-உண்மை.

கர்ம காண்டத்தில் சொல்லியுள்ள கரும நியதிகளே பெரு நலனைத் தரும் என்று அவ்வழி செல்லுகின்ற வேதியர் தக்க சாஸ்திரப் பிரமாணங்கள் காட்டி, ஆத்ம சாதகனை ஈசுவர உபாசனையினின்று மாற்ற முயன்றனர்.

52. சமய வாதிக டத்த மதங்களே
53. வமைவ தாக வரற்றி மலைந்தனர்

சமய வாதிகள் தம் தம் மதங்களே
அமைவது ஆக அரற்றி மலைந்தனர்

அரற்றுதல்-ஆரவாரித்தல். மலைதல்-செருக்குக்கொள்ளுதல்.

பல்வேறு சமயங்களை அனுஷ்டித்து வருபவர்கள் தங்கள் மதங்களைப் பின்பற்றினாலொழிய உய்வு இல்லையென்று வீண் பெருமை காட்டினர்.

54. மிண்டிய மாயா வாத மென்னுஞ்
55. சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து

மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்து அடித்து ஆஅர்த்து

மிண்டுதல்-வம்பு செய்தல். சண்டமாருதம்-பெருங்காற்று.

இவ்வுலகம் வெறும் பொய்த் தோற்றம் என்று மாயா வாதம்செய்பவர்களுடைய விவாதம்பெருங்காற்றுப்போன்று குழப்பத்தை உண்டுபண்ணக்கூடியது. இறைவழிபாட்டில் செல்லுபவன் அதினின்று தப்பிப்பது அவசியமாகிறது..

பக்கம் 16ல் முகவுரை 4. மாயா தத்துவம் காண்க.

56. உலோகா யதனெனு மொண்டிறற் பாம்பின்
57. கலாபே தத்த கடுவிட மெய்தி

உலோகாயதன் எனும் ஒள் திறல் பாம்பின்
கலா பேதத்த கடுவிடம் எய்தி

ஒள் திறல்-ஒளியும் வலிவும். கலாபேதம்-கலை வேறுபாடு. கடுவிடம்-துன்பம் தரும் விஷம்.

இவ்வுலகைத் தவிர மறுமையென்பது ஒன்றுமில்லை யென்று வாதிப்பவன் உலோகாயதன். அவன் ஒளி விசிக் கொண்டும் திறமை நிறைந்தும் இருக்கிற பாம்புக்கு நிகரானவன். அவனுடைய விபரீதமான கோட்பாடுகள் கடுகடுக்கின்ற விஷத்துக்கு ஒப்பானவைகள்.

58. அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவுந்

அதில்பெரு மாயை எனைப்பல சூழவும்

எது சரி, எது தப்பு என்று ஓர்ந்துகொள்ள முடியாமல் அக் கோட்பாடுகள் மயக்கத்தை உண்டுபண்ணுவன வாயின.

59. தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
60. தழலது கண்ட மெழுகது போலத்
61. தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்து

தப்பாமே தாம்பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகுஅது போலத்
தொழுது உளம் உருகி அழுது உடல் கம்பித்து

தழலது கண்ட-நெருப்பை அணுகிய. கம்பித்து-நடுங்கி.

இத்தனை விதமான மதிமயக்கங்களுக்கிடையில் தனது தெளிந்த கொள்கையினின்று பிசகாதிருக்கும் ஆத்ம சாதகன் பாக்கியவான் ஆகிறான். அவன் தீயிலிட்ட மெழுகு போல உள்ளம் உருகி இறைவனைத் தொழுகிறான். இறைவனை நாடி அழுது உடல் நடுங்கிறான்.

62. ஆடியு மலறியும் பாடியும் பரவியுங்
63. கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
64. படியே யாகிநல் லிடையறு வன்பின்

ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடாது எனும்
படியே ஆகி நல்இடை அறுஅன்பின்

பரவியும்-வழிபட்டும். கொடிறு - குறடு. பேதை-அறிவிலி. நல்-நல்ல. இடையறு அன்பின்-மாருத அன்பினல்.

பக்தன் ஆடவும், அரற்றவும், பாடவும், வழுத்தவும் செய்கிருன். அவன் குறடு போன்றும் அறிவிலி போன்றும் தான் பிடித்த நன்னெறியினின்று சிறிதும் பிசகுவதில்லை. பக்தி என்னும் தூய அன்பில் மூழ்கியவனுக இருக்கிருன்;

65. பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
66. கசிவது பெருகிக் கடலென மறுகி

பசுமரத்து ஆணி அறைந்தால் போலக்
கசிவது பெருகிக் கடல்என மறுகி

கசிதல்-உள்ளம் குழைதல். மறுகுதல்-சுழலுதல்.

பச்சை மரத்தில் ஆணியை இலகுவாகச் செலுத்துவது போன்று பேருணர்ச்சியை உள்ளத்தினுள் ஊட்டி, அதன் விளைவாக உள்ளம் குழைவதும் உடல் சுழலுவதும் நிகழ்கின்றன.

67. அகங்குழைந் தனுகு லமாய்மெய் விதிர்த்துச்
68. சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப

அகம் குழைந்து அனுகுலம் ஆய் மெய்விதிர்த்துச்
சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப

அனுகுலமாய்-அதற்கு உடந்தையாய்.

நெஞ்சம் நைந்துருகுகிறது; அதன் ஸ்தூல தோற்றமாகிய உடல் நடுங்குகிறது; பக்தனை உலகத்தவர் பேய் என்று நகைக்கின்றனர்.

69. நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
70. பூணது வாகக் கோணுத லின்றிச்

நாண் அது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூண் அதுஆகக் கோணுதல் இன்றிச்

நாண்-நாணம். பூண் அது ஆக-ஆபரணமாக. கோணுதல்-மனம் கோணுதல்.

நல்ல ஆத்மசாதகன் வெட்கப்படுவதுமில்லை; எதைக் குறித்தும் மனம் கோணுவதுமில்லை. உலகத்தவர் நிந்தையை அவன் ஆபரணமாக எடுத்துக்கொள்கிருன். ஏனென்ருல் தன்னிடத்துத் தற்பெருமை ஏதாவது இருக்குமாகில் அதைச் சோதித்து அறிந்து கொள்ளுதற்கு அது பயன்படுகிறது.

71. சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
72. கதியது பரமா வதிசய மாகக்

சதுர் இழந்து அறிமால் கொண்டு சாரும்
கதியது பரமா அதிசயம் ஆகக்

சதுர்-திறமை. அறிமால்-ஞானவேட்கை. கதி-முக்தி. பரமா அதிசயம்-பெருவியப்பு.

நான் வல்லவன் என்னும் செருக்கு சாதனத்துக்குத் தடையாகும். மெய்யறிவு ஓங்கவேண்டும் என ஊக்கங்கொள்ளுதல் வேண்டும். பக்தன் பெறுகிற பேறுகளில் முக்திக்கு நிகரானது ஒன்றுமில்லை என்று அதன் மகிமையைக் குறித்து வியப்படைதல் நல்ல ஆத்ம சாதனமாகிறது.

73. கற்று மனமெனக் கதறியும் பதறியு
74. மற்றோர் தெய்வங் கனவிலு நினையாது

கற்று மனம் எனக் கதறியும் பதறியும்
மற்றுஓர் தெய்வம் கனவிலும் நினையாது

கற்று மனம்-கன்றையுடைய பசுவினது உருகும் மனம்.

கன்றினுக்காகப் பசு உருகுவதுபோன்று பக்தர்கள் பகவானுக்காக உருகுகின்றனர். அவர்கள் கதறவும் பதறவும் செய்கின்றனர். இறைவனைப்பற்றியல்லாது வேறு எந்தச் சிந்தனையும் அவர்கள் உள்ளத்தில் கனவிலும் வருவதில்லை.

75. அருபரத் தொருவ னவனியில் வந்து
76. குருபர னாகி யருளிய பெருமையைச்

அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்

அருபரம்-அருமையாகிய அதீத நிலை. அவனி-பூமி.

பிரபஞ்சத்துக்கு அப்பால் இருக்கிற பரமன் பிரபஞ்சத்தில் ஒரு பகுதியாகிய பூமியில் பரம குருவாக வந்து என்னை ஆட்கொண்டது அவனுடைய பெருமைக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

77. சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
78. பிறிவினை யறியா நிழலது போல

சிறுமை என்று இகழாதே திருவடி இணையைப்
பிறிவினை அறியா நிழல் அதுபோல

இறைவன் இப்படிச் செய்தது சாமானியமான செயல் என்று அதை அலட்சியப்படுத்தலாகாது. நிழல் வஸ்துவை விட்டுப் பிரியாதிருப்பது போன்று அவனுடைய திருவடிகளை பக்தன் ஒருபொழுதும் மறந்துவிடலாகாது.

79. முன்பின் ஞகி முனியா தத்திசை
80. யென்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
81. யன்பெனு மாறு கரையது புரள
82. நன்புல னென்றி நாதவென் றரற்றி

முன் பின் ஆகி முனியாது அத்திசை
என்பு நைந்து உருகி நெக்கு நெக்கு ஏங்கி
அன்பு எனும் ஆறுகரை அதுபுரள
நன்புலன் ஒன்றி நாத என்று அரற்றி

முனியாது-வெறுப்படையாமல்.

மெய்யன்பன் கொண்டுள்ள பரா பக்தியில் ஏற்றத் தாழ்வோ வெறுப்போ உண்டாவதற்கு இடமில்லை. தான் ஆட்கொள்ளப்பட்ட திக்கை நோக்கி அவன் எலும்பு உருகும் படி தழதழத்து அன்பு செலுத்துகிறான். ஆறு கரைபுரளப் பெருக்கெடுப்பது போன்று அவனது பக்தி பெருகுகிறது. அவனது ஐம்புலன்களும் ஒன்றுபடுகின்றன. இறைவனது நாமம் அவனது நாவினின்று வருகிறது.

83. உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
84. கரமலர் மொட்டித் திருதய மலரக்
85. கண்களி கூர நுண்டுளி யரும்பச்

உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்பக்
கரம் மலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண் களிகூர நுண் துளி அரும்ப

கரமலர்மொட்டித்து-கைகூப்பி. இருதயம் மலர-நெஞ்சம் பொங்கியெழ.

பக்தியின் மேலீட்டால் சொல் தடைப்படுகிறது. மயிர்க் கூச்சு உண்டாகிறது; கை குவிகிறது; உள்ளத்தில் உணர்ச்சி பெருவகை யடைகிறது. ஆனந்தக்கண்ணீர் துளியாக அரும்புகிறது.

பாவசமாதி என்னும் பரவச நிலையில் இந்த அறிகுறிகள் யாவும் தென்படுகின்றன. அப்பொழுது கண்ணீர்

ஆருகப் பெருகுவதில்லே. காதுக்கு அருகில் இருக்கும் கடைக்கண்ணில் இரண்டொரு சொட்டு ஆனந்த பாஷ்பம் தோன்றுகிறது.

86. சாயா வன்பினே நாடொறுந் தழைப்பவர்
87. தாயே யாகி வளர்த்தனே போற்றி

சாயா அன்பினே நாள்தோறும் தழைப்பவர்
தாயே ஆகி வளர்த்தனே போற்றி

சாய்தல்-அழிதல். சாயா-அழியாத.

பக்தி அழிந்து பட்டுப்போகாது தினந்தோறும் அதைச் செழிக்கச் செய்பவர்களுக்கு இறைவன் தாய் ஆகி அவர்களுடைய அன்பை வளர்க்கிருன். அன்னவனுக்கு வணக்கம்.

88. மெய்தரு வேதிய ஞகி வினேகெடக்
89. கைதர வல்ல கடவுள் போற்றி

மெய்தரு வேதியன் ஆகி வினேகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி

மெய்தரு-மெய்ப்பொருள் விளக்குகிற.

மெய்ப்பொருள் அல்லது பரதத்துவத்தை விளக்கிக் காட்டுகிற அந்தணனுகி வந்து என் பழவினேகளே அறுத்து உதவுகிற கடவுளே, உனக்கு வணக்கம்.

90. ஆடக மதுரை யரசே போற்றி
91. கூட லிலங்கு குருமணி போற்றி

ஆடுஅகம் மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி

ஆடு அகம்-ஆடுகிற இடம். கூடல்-மதுரை. குருமணி-பரமாசாரியன்; ஒளி பொருந்திய ரத்தினம்.

மதுரையைத் தாண்டவத்துக்குரிய பதியாய்க் கொண்டுள்ள இறைவா, போற்றி; என்னேச் சிஷ்யனுக உன்னேடு சேர்த்துக் கொண்ட பரமாசாரியனே, உனக்கு வணக்கம்.

பரமன் சுயஞ்சோதி சொரூபம் என்கிற கோட்பாடும் இதில் அடங்கியிருக்கிறது.

92. தென்றில்லே மன்றினு ளாடி போற்றி
93. யின்றெனக் காரமு தானுய் போற்றி

தென் தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்று எனக்கு ஆர்அமுது ஆனாய் போற்றி

தெற்கில் உள்ள சிதம்பரத்தில் ஆடினவனுக்கு வணக்கம். என்னை அமிர்த சொருபம் ஆக்கினவனுக்கு வணக்கம்.

94. மூவா நான்மறை முதல்வா போற்றி
95. சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சே ஆர் வெல் கொடிச் சிவனே போற்றி

சே-ரிஷபம், காளை. ஆர்-அலங்கரிக்கிற.

காலத்தால் அடிபடாத நான்கு வேதங்களுக்கும் தலைவா போற்றி. காளையின் வடிவத்தைப் பொறித்து அலங்கரிக்கப்பட்டுள்ள வெற்றிக் கொடியையுடைய சிவனே போற்றி.

வேதங்களாக இயற்றப் பெற்றுள்ள நூல்கள் பிரளய காலத்தில் அழிந்துபட்டுப் போகலாம். ஆனல் வேதங்களில் சொல்லியுள்ள தத்துவங்கள் என்றென்றும் இருப்பவைகள். அவைகளுக்கு அழிவு இல்லை.

ஒவ்வொரு தெய்வமும் தனது வாகனத்தின் வடிவத்தைத் தனது கொடியில் பொறித்து வைத்திருப்பது ஐதிகம். சிவனும் அங்ஙனம் செய்திருக்கிறார்.

96. மின்னா ருருவ விகிர்தா போற்றி
97. கன்னா ருரித்த கனியே போற்றி
மின்ஆர் உருவ விகிர்தா போற்றி
கல்நார் உரித்த கனியே போற்றி

மின்-பிரகாசம். விகிர்தா-விக்ருதம், வேறுபாடு உடைத்திருத்தல். கல்நார்-கல்லில் நார்.

பிரபஞ்சமெங்குமுள்ள வேறு வேறு வடிவங்களை எடுத்துள்ள ஒளி வண்ணனே போற்றி. கல்லில் நார் உரிப்பதற்கு ஒப்ப பெறுதற்கு அரிய ஞானக்கனியே போற்றி.

98. காவாய் கனகக் குன்றே போற்றி
99. ஆவா வென்றனக் கருளாய் போற்றி
காவாய் கனகம் குன்றே போற்றி
ஆ ஆ என் தனக்கு அருளாய் போற்றி

பொன்மலே போன்று இருந்து என்னைக் காப்பவனே, உனக்கு வணக்கம். ஆ, ஆ, என்று அரற்றி உன்னை அழைக்கின்ற எனக்கு அருள் செய்வாய் போற்றி.

கனகக்குன்று மஹாமேருவைக் குறிக்கிறது. மானுட அமைப்பில் சுஷும்னை நாடி மஹாமேருவாகிறது. யோக சாதனத்தில் அதில் நடுநிற்பவர் சிவ சாயுஜ்யத்தில் காக்கப்படுகின்றனர்.

100. படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
101. யிடரைக் களையு மெந்தாய் போற்றி

படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி

பிரபஞ்சத்தின் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய முத்தொழிலைச் செய்பவனே உனக்கு வணக்கம். உயிர்களுக்கு உண்டாகும் இடுக்கண்களை அகற்றும் எந்தையே போற்றி.

102. ஈச போற்றி யிறைவ போற்றி
103. தேசப் பளிங்கின் றிரளே போற்றி

ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி

தேசப் பளிங்கின் திரள்-ஒளியும் அழகும் ஒன்ருய்க் குவிந்த ஆத்ம ஜோதி.

என்னை ஆள்பவனே போற்றி; என் தலைவா போற்றி; திரண்ட ஆத்ம ஜோதியே (சித்கனலே) போற்றி.

104. அரைசே போற்றி யமுதே போற்றி
105. விரைசேர் சரண விகிர்தா போற்றி

அரைசே போற்றி யமுதே போற்றி
விரை சேர் சரணம் விகிர்தா போற்றி

அரைசு-அரசன். விரை-மணம். சரணம்-திருவடி. விகிர்தன்-உலகினின்று மாறுபட்டவன்.

வேந்தே போற்றி; அமிர்தமே போற்றி; மணம் நிறைந்த திருவடிகளை யுடையவனும் உலகுக்குப் புறம்பானவனும் ஆகிய இறைவா போற்றி.

106. வேதி போற்றி விமலா போற்றி
107. யாதி போற்றி யறிவே போற்றி

வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி

வேதி-பண்டிதன். விமலன்-மாசற்றவன்.

அனைத்தையும் அறிந்தவனே போற்றி; புனிதனே போற்றி; முதல்வனே போற்றி; பேரறிவே போற்றி.

108. கதியே போற்றி கனியே போற்றி
109. நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செம்சடை நம்பா போற்றி

முக்தி என்னும் கதியைக் கொடுப்பவனே போற்றி; கங்கா நதியைச் சிவந்த ஜடாபாரத்தில் வைத்திருக்கும் சிவனே போற்றி.

110. உடையாய் போற்றி யுணர்வே் போற்றி
111. கடையே னடிமை கண்டாய் போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி

அனைத்தையும் தனக்குச் சொந்தமாக்கியவனே போற்றி; மெய்யுணர்வே போற்றி; கீழான என்னை உனக்குச் சொந்தமாக்கியவனே போற்றி.

112. ஐயா போற்றி யணுவே போற்றி
113. சைவா போற்றி தலைவா போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி

பெரியவனே போற்றி; அணுவாய் இருப்பவனே போற்றி; மங்கள சொருபமே போற்றி; அனைத்துக்கும் ஈசா போற்றி.

114. குறியே போற்றி குணமே போற்றி
115. நெறியே போற்றி நினைவே போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி

வாழ்க்கையின் லட்சியமே போற்றி; சீரிய குணமே போற்றி; நன்னெறியே போற்றி; பிரக்ஞை வடிவினனே போற்றி.

நினைவு ஆத்ம சைதன்யத்தைக் குறிப்பதாகும். பிரக்ஞானம் பிரம்மம் என்பது மஹாவாக்கியம்.

116. வானோர்க் கரிய மருந்தே போற்றி
117. யேனோர்க் கெளிய விறைவா போற்றி

வானோர்க்கு அரிய மருந்தே போற்றி
ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி

தேவர்களுக்குக் கிடைப்பதற்கு அரிய அமிர்தமே போற்றி; எம்மனோர்க்கு எளிதில் வாய்க்கும் இறைவா போற்றி;

நெடுநாள் ஜீவபோதத்தை வளர்த்து வைத்து இன்பம் துய்ப்பதற்கான அமிர்தமாக இறைவன் தேவர்களுக்குப் பயன்படுகிறான். ஏனென்றால் அவர்களுக்கு இன்பம் துய்ப்பதைவிட மேலான லட்சியம் விளங்குவதில்லை. ஆனால் மக்களிடம் முக்தியை நாடும் நல்லறிவுண்டு. ஆகையால் அவர்களுக்கு அவன் தனது நிஜசொருபமாகிய ஞானத்தையும் முக்தியையும் நல்குகின்றான்.

(உபநி–23 பக்கம் 179)

118. மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை
119. யாழா மேயரு ளரசே போற்றி

மூஏழ் சுற்றம் முரண்உறு நரகுஇடை
ஆழாமே அருள் அரசே போற்றி

மூவேழ்-மூ ஏழ்-இருபத்தொன்று.

ஜீவன் ஒருவன் சிவ சாயுஜ்யம் என்னும் முக்தியடைவானாகில் அவனுடைய சுற்றத்தார் இருபத்தொரு தலைமுறையாக வருபவர்கள் நரகத்தில் மூழ்கித் துன்பப்படாமல் அவர்களைக் காத்தருளும் அரசே போற்றி.

120. தோழா போற்றி துணைவா போற்றி
121. வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி

தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றி என் வைப்பே போற்றி

என் நண்பா போற்றி; ஆதரவே போற்றி; வாழ்வுக்கு மூல காரணனே போற்றி; எனக்கு யாண்டும் இருப்பிடமே போற்றி.

(உபநி–4 பக்கம் 106)

122. முத்தா போற்றி முதல்வா போற்றி
123. யத்தா போற்றி யரனே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி

நித்திய முக்தனுய் இருக்கும் ஈசா போற்றி; அனைத்துக்கும் ஆதிமூலமே போற்றி; அனைவர்க்கும் தந்தையே போற்றி; உயிர்களின் மலத்தை யகற்றும் ஹரனே போற்றி.

124. உரையுணர் விறந்த வொருவ போற்றி
125. விரிகட லுலகின் விளைவே போற்றி
உரை உணர்வு இறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி

சொல்லுக்கும் மனதுக்கும் எட்டாத தனிப்பொருளே போற்றி; கடல்சூழ்ந்த உலகில் வாழ்ந்திருப்பவர்கள் வாழ்வில் பெறுகிற பேறுகளுள் பெரிய பேறே போற்றி.

126. அருமையி லெளிய வழகே போற்றி
127. கருமுகி லாகிய கண்ணே போற்றி
அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகில் ஆகிய கண்ணே போற்றி

உயிர்களால் பெறமுடியாத அருமையான பொருள் நீ. ஆயினும் பக்தர்களுக்கு எளிதில் அகப்படக்கூடிய அழகன் நீ. அத்தகைய உன்னை வணங்குகிறேன், உயிர்களை உய்வித்தல் பொருட்டுக் கார்மேகமாகி அவைகளின் யோக க்ஷேமத்தைப் பார்த்து வருகிற கண்ணே போற்றி.

128. மன்னிய திருவருண் மலையே போற்றி
129. யென்னையு மொருவ னாக்கி யிருங்கழற்
130. சென்னியில் வைத்த சேவக போற்றி
மன்னிய திருஅருள் மலையே போற்றி
என்னையும் ஒருவன் ஆக்கி இரும் கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி

மன்னிய-நிலைபெற்ற. இருங்கழல்-பெரிய பாதம். சேவகன்-வீரன்.

அருள் சுரப்பதில் நிலைபேறுடைய மஹாமேருமலையே போற்றி. தகுதியற்ற என்னையும் தகுதிவாய்ந்த ஒருவனாகச் செய்து உனது

பெரிய பாதத்தை என் சிரசில் வைத்து என்னை ஆட்கொண்ட வீரனே போற்றி.

131. தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
132. அழிவிலா வானந்த வாரி போற்றி

தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி
அழிவு இலா ஆனந்த வாரி போற்றி

வாரி-கடல்.

உன்னை வந்தடைந்து வழுத்துபவர்களுடைய துன்பத்தைத் துடைப்பவனே போற்றி. சாசுவதமாயுள்ள ஆனந்தக் கடலே போற்றி.

அறியாமையினால் வருவிக்கப்பட்ட துக்கம் நிவர்த்தி யாகுமிடத்து எஞ்சியிருப்பது அகண்டமாய் நித்தியமாய் இருக்கிற ஆனந்தமாம்.

(உபநி-21 பக்கம் 168)

133. அழிவது மாவதுங் கடந்தாய் போற்றி
134. முழுவது மிறந்த முதல்வா போற்றி

அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி

ஒடுங்குவதும் தோன்றுவதும் ஆகிய பிரபஞ்சத்துக்கு அப்பாற் பட்டவனே போற்றி. பிரபஞ்ச சம்பந்தமான அனைத்தும் மறைந்த பின்பும் அதற்கு மூலப்பொருளாய் யாண்டும் இருப்பவனே போற்றி.

(உபநி-20 பக்கம் 166)

135. மானேர் நோக்கி மணாளா போற்றி
136. வானகத் தமரர் தாயே போற்றி

மான் நேர் நோக்கி மணாளா போற்றி
வான்அகத்து அமரர் தாயே போற்றி

மான் நேர் நோக்கி-*மானை ஒத்த கண்களையுடையவள், ராஜீவ லோசனா, மிருகாக்ஷி.* வான் அகம்-*சுவர்க்கம்.* அமரர்-*சாகாதவர்.*

மான் விழிகளையொத்த கண்களையுடைய உமாதேவியார்க்கு மணவாளா போற்றி. விண்ணுலகில் இருக்கும் தேவர்களுக்குத் தாயாக இருந்து காப்பவனே போற்றி.

137. பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
138. நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி

பார்இடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீர்இடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி

பார்-நிலம்.

நிலமாகிய ஐந்தாவது பூதமாயும் நீராகிய நான்காவது பூதமாயும் பரிணமித்துள்ள உன்னை வணங்குகிறேன்.

139. தீயிடை மூன்ருய்த் திகழ்ந்தாய் போற்றி
140. வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
141. வெளியிடை யொன்ருய் விளைந்தாய் போற்றி
142. யளிபவ ருள்ளத் தமுதே போற்றி

தீஇடை மூன்ருய்த் திகழ்ந்தாய் போற்றி
வளிஇடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்ருய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி

வளி-வாயு. வெளி-ஆகாசம். அளிபவர்-முற்றும் கனிபவர்.

மூன்ரும் பூதமாகிய அக்னியாகவும் இரண்டாம் பூதமாகிய வாயுவாகவும் முதல் பூதமாகிய ஆகாசமாகவும் இருப்பவனே போற்றி. மனம் முற்றிலும் பரிபக்குவமாயிருப்பவர் உள்ளத்தில் அமிர்தமாக ஒளிர்பவனே போற்றி.

இறைவனே ஐம்பூதங்கள் ஆயிருக்கிருர் என்பதை மக்களுக்கு அறிவுறுத்துதல் பொருட்டு அவர் சிதம்பரத்தில் ஆகாச லிங்கமாகவும், காளஹஸ்தியில் வாயுலிங்கமாகவும், திருவண்ணுமலையில் அக்னி லிங்கமாகவும்,

---

உபநிஷத் மந்த்ரம் — 33.

तस्माद्वा एतस्मादात्मन आकाशः सम्भूतः ।
आकाशाद्वायुः । वायोरग्निः । अग्नेरापः ।
अद्भ्यः पृथिवी । पृथिव्या ओषधयः ।
ओषधीभ्योऽन्नम् । अन्नात्पुरुषः ।

தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மன ஆகாச: ஸ்ம்பூத: ।
ஆகாசாத்வாயு: । வாயோரக்னி: । அக்னேராப: ।
அத்ப்ய: ப்ருதிவீ । ப்ருதிவ்யா ஓஷதய: ।
ஓஷதீப்யோऽன்னம் । அன்ஞத்புருஷ: ।

(தைத்திரீயோபநிஷதம் 2-1)

திருவானைக்காவில் அப்பு லிங்கமாகவும், காஞ்சிபுரத்தில் பிருதிவி லிங்கமாகவும் எழுந்தருளியிருக்கிருர்.

முற்றிலும் மனபரிபாகம் ஆயிருப்பவர்களுக்கே உள்ளத்தினுள் அமரநாதன் தரிசனம் கிட்டுகிறது.

143. கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
144. நனவிலு நாயேற் கருளினை போற்றி

கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி
நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி

நனவில் கைகூடாத சில திவ்விய தரிசனங்கள் கனவில் வாய்ப்பதுண்டு. ஆனல் தேவர்களுக்கு அவை வாய்ப்பதில்லை. அற்பனுகிய எனக்கு ஜாக்ரதாவஸ்தையில் வந்து அனுக்ரகம் செய்தனை போற்றி.

तस्मात् தஸ்மாத் அந்தப் பிரம்மத்திடமிருந்து एतस्मात् आत्मनः ஏதஸ்மாத் ஆத்மன: அந்த ஆத்மனிடமிருந்து वै வை நிச்சயமாகவே आकाश सम्भूतः ஆகாச: ஸம்பூத: ஆகாசம் உண்டாயிற்று. आकाशात् ஆகாசாத் ஆகாசத்திினின்று वायुः வாயு: காற்று वायोः வாயோ: காற்றினின்று अग्निः அக்னி: தீ अग्नेः அக்னே: தீயினின்று आपः ஆப: நீர் अद्भ्यः அத்பய: நீரினின்று पृथिवी ப்ருதிவீ நிலம் पृथिव्याः ப்ருதிவ்யா: நிலத்தினின்று ओषधयः ஓஷதய: மூலிகைகள் ओषधीभ्यः ஓஷதீப்ய: மூலிகைகளினின்று अन्नम् அன்னம் உணவு अन्नात् அன்னத் உணவினின்று पुरुषः புருஷ: மனிதன்.

பிரம்மம் எனப்படுகிற அந்த ஆத்மனிடமிருந்து நிச்சயமாகவே ஆகாசம் உண்டாயிற்று. ஆகாசத்திலிருந்து வாயு உண்டாயிற்று. வாயுவிலிருந்து அக்னி உண்டாயிற்று. அக்னியிலிருந்து அப்பு உண்டாயிற்று. அப்புவிலிருந்து பிருதிவி உண்டாயிற்று. பிருதிவியிலிருந்து மூலிகைகள் உண்டாயின. மூலிகையிலிருந்து அன்னம் உண்டாயிற்று. அன்னத்திலிருந்து மனிதன் உண்டாயினன்.

மூலப்பொருள் பரமாத்மன். அவனிடமிருந்து ஐம்பூதங்கள் ஒன்றினின்று ஒன்ருக உரு எடுத்தன. அவைகள் தோன்றிய பின் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களும் தோன்றலாயின. ஜங்கமங்களுள் மனிதன் சிறந்தவன்.

பரிணமித்து மேல் நிலேக்கு வந்திருப்பதில் மக்களி லும் மிக்காரராகத் தேவர்கள் இருக்கின்றனர். ஆனல் இந் திரிய சுகபோகம் ஒன்றே அவர்களது குறிக்கோள். ஆத லால் அவர்களுக்குக் கனவிலோ, நனவிலோ பரமனது திவ்விய தரிசனம் வாய்ப்பதில்லே. ஆனல் ஞானத்துக்கு மானுடரே அர்ஹறதையுடையவர்கள். ஆதலால் ஈசன் அண்ணலே ஆட்கொண்டார்.

தேவர்கள் என்பதற்கு இந்திரியங்கள் என்பது ஒரு பொருள். இந்திரியங்களுக்கு எட்டாத பரமன் பரிபாக மாயுள்ள மனத்தில் மிளிர்கிருன்.

145. இடைமரு துறையு மெந்தாய் போற்றி
146. சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி

இடை மருது உறையும் எந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி

திருவிடைமருதூரில் எழுந்தருளியுள்ள இறைவா போற்றி. கங்காதரனுய் இலங்குபவனே போற்றி.

147. ஆரு ரமர்ந்த வரசே போற்றி
148. சீரார் திருவை யாரு போற்றி

ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீர்ஆர் திருவையாரு போற்றி

சீர்ஆர்-சிறப்பு அமைந்த.

திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் ஈசா போற்றி. அழகு நிறைந்த திருவையாற்றில் எழுந்தருளியிருப்பவனே போற்றி.

149. அண்ணு மலேயெம் மண்ணு போற்றி
150. கண்ணு ரமுதக் கடலே போற்றி

அண்ணுமலே எம் அண்ணு போற்றி
கண்ஆர் அமுதம் கடலே போற்றி

கண்ஆர்-ஞானம் நிறைந்த.

திருவண்ணுமலேயில் எழுந்தருளியுள்ள ஈசா போற்றி; ஞானம் நிறைந்த அமிர்த சாகரமே போற்றி.

தனது நிறை ஞானத்தை முன்னிட்டுக் கிருஷ்ணன் கண்ணன் எனப்படுகிருன். இகம் பரம் ஆகிய இரண்டின் ஞானத்தை முன்னிட்டுச் சிவபெருமான் முக்கண்ணன் எனப்படுகிருன். அவனை அடைந்தவர்களுக்கு அழிவில்லையாதலால் அவன் அமிர்தக்கடல் எனப்படுகிருன்.

151. ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
152. பாகம் பெண்ணுரு வாஞய் போற்றி

ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி
பாகம் பெண்உரு ஆஞய் போற்றி

திருவேகம்பத்தில் உறைகின்ற என் ஈசா போற்றி; அர்த்த நாரிசுவரனுய் இருப்பவனே போற்றி.

153. பராய்த்துறை மேவிய பரனே போற்றி
154. சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி

பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி

திருப்பராய்த்துறையில் விற்றிருக்கும் பெரியோய் போற்றி. திருச்சிராப்பள்ளியில் திகழும் தலைவா போற்றி.

155. மற்ருேர் பற்றிங் கறியேன் போற்றி
156. குற்ரு லத்தெங் கூத்தா போற்றி

மற்று ஓர்பற்று இங்கு அறியேன் போற்றி
குற்ருலத்து எம் கூத்தா போற்றி

உன்னையல்லால் வேறு ஒரு பற்றுக்கோட்டை இவ்வுலகில் நான் அறிந்திலேன். அத்தகைய உனக்கு வணக்கம். திருக்குற்ருலத்தில் எழுந்தருளியிருக்கின்ற கூத்தா உனக்கு வணக்கம்.

157. கோகழி மேவிய கோவே போற்றி
158. யீங்கோய் மலையெம் மெந்தாய் போற்றி
159. பாங்கார் பழனத் தழகா போற்றி

கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய்மலை எம் எந்தாய் போற்றி
பாங்குஆர் பழனத்து அழகா போற்றி

திருவாவடுதுறையில் தோன்றியுள்ள வேந்தே போற்றி. திருவீங்கோய் மலையையுடைய எம் தந்தையே போற்றி. அழகு நிறைந்த திருப்பழனத்தில் அழகனாய் வீற்றிருப்பவனே போற்றி.

160. கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
161. யடைந்தவர்க் கருளு மப்பா போற்றி

கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி

விடங்கன-அழகன்.

திருக்கடம்பூரில் எழுந்தருளியுள்ள அழகா போற்றி. உன்னை வந்து சேர்பவர்க்கு அனுக்கிரகம் செய்பவனே போற்றி.

விடங்கன் என்னும் சொல்லுக்கு சுயம்பு லிங்கம் என்பது மற்றொரு பொருள்.

162. இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
163. கத்திக் கருளிய வரசே போற்றி

இத்தி தன்னின்கீழ் இரு மூவர்க்கு
அத்திக்கு அருளிய அரசே போற்றி

இத்தி-கல்லால மரம். இருமூவர்-ஆறுபேர். அத்தி-யானை.

இத்தி மரத்தின் கீழ் இருந்த ஆறுபேர்க்கும்யானைக்கும் அருள் செய்த அரசே போற்றி.

(திருவிளையாடல் புராணத்தில் இவ்வரலாறு உளது)

164. தென்னா டுடைய சிவனே போற்றி
165. யெந்நாட் டவர்க்கு மிறைவா போற்றி

தென் நாடு உடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

நீக்கமற எங்கும் நிறைந்துள்ள ஈசா உன்னை நான் தென்னாட்டில் சிறப்பாகக் காண்கிறேன். அத்தகைய உன்னை வணங்குகிறேன்.

ஆத்மசாதகன் இறைவனை முதலில் தன் ஹிருதய கமலத்தில் தரிசிக்கிறான். அந்தத் தரிசனத்தின் விளைவாகப் பிறகு அவனை எங்கும் வியாபியாக பக்தன் உணர்கிறான்.

166. ஏனக் குருளைக் கருளினை போற்றி
167. மானக் கயிலை மலையாய் போற்றி

ஏனம் குருளைக்கு அருளினை போற்றி
மானம் கயிலை மலையாய் போற்றி

ஏனம்-பன்றி. குருளை-குட்டி. மானம்-மேன்மை.

பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டி அருள்புரிந்தவனே போற்றி. மேன்மை பொருந்திய கயிலை மலையில் உறைபவனே போற்றி.

168. அருளிட வேண்டு மம்மான் போற்றி
169. யிருள்கெட வருளு மிறைவா போற்றி

அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி

அம்மான்-கடவுள்.

தாயை ஒத்த இறைவா, எனக்கு அருள்புரிவாயாக. அஞ்ஞான இருளை அகற்றும் இறைவா போற்றி.

170. தளர்ந்தே னடியேன் றமியேன் போற்றி
171. களங்கொளக் கருத வருளாய் போற்றி

தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
களம் கொளக் கருத அருளாய் போற்றி

களம்-நிலைத்த இடம், பரமபதம். தமியேன்-தனித்திருப்பவன்

பிறவிப் பெருங்கடலில் தன்னந் தனியனாய் அலைந்து அலுத்துப்போய் உன்னை அழைக்கிறேன், அருள்புரிவாயாக. எனக்கு நிலைத்த இருப்பிடமாகிய உன்னையே யாண்டும் நினைந்து நாடியிருக்கும்படி அருள்புரிவாயாக.

பிறப்பு இறப்பு மயமாயிருக்கும் பிரபஞ்ச வாழ்வில் ஜீவனுக்கு நிலைத்த இடம் ஒன்றுமில்லை. இறைவனை அடைவது வீடுபேறு. அது சாசுவதமானது.

172. அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
173. நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி

அஞ்சேல் என்று இங்கு அருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி

நயந்தாய்-விரும்பினுய்.

அபயம் அளிப்பவனே போற்றி. விஷத்தை விரும்பி அமிர்தமாக்கியவனே போற்றி.

பிறவிக்கடல் பயத்தை வளர்க்கிறது. ஆனல் இறைவனை அடைந்தவர்க்குப் பயம் ஒன்றுமில்லை. பிரபஞ்ச வாழ்வில் மரணம் என்னும் விஷமுண்டு. பாரமார்த்திக வாழ்வில் இறைவனை அடைதல் என்னும் அமிர்தமுண்டு.

174. அத்தா போற்றி யையா போற்றி
175. நித்தா போற்றி நிமலா போற்றி
176. பத்தா போற்றி பவனே போற்றி

அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி

அப்பனும், ஆசிரியனும், அழிவற்றவனும், மாசற்றவனும், பேரன்பாயும், உயிர்களுக்குப் பிறப்பிடமாயும் இருப்பவனே போற்றி.

177. பெரியாய் போற்றி பிரானே போற்றி
178. யரியாய் போற்றி யமலா போற்றி

பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி

அனைத்துக்கும் பெரியவனே, உயிர்களை இரட்சிப்பவனே, பஞ்சேந்திரியங்களுக்கு எட்டாதவனே, நிர்மலனுய் இருப்பவனே போற்றி.

179. மறையோர் கோல நெறியே போற்றி
180. முறையோ தரியேன் முதல்வா போற்றி

மறையோர் கோலம் நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி

நேர்மை பிறழாதவனே, நீ வேதியன் வடிவெடுத்து வந்துள்ளாய். அனைத்துக்கும் முதல்வா, நான் பிறவிப் பிணியை இனித் தாங்கமாட்டேன். அத்தகைய என்னை ஆட்கொள்ளாதிருப்பது தகுமோ? உன்னை நான் போற்றுகிறேன்.

181. உறவே போற்றி யுயிரே போற்றி
182. சிறவே போற்றி சிவமே போற்றி

உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி

சிறவு-சிறப்பு.

நீ எனக்குச் சுற்றம்; எனது உயிர்; நலன் அனைத்தும் நீ; மங்களம் யாவும் நீ; அத்தகைய உனக்கு வணக்கம்.

183. மஞ்சா போற்றி மணாளா போற்றி
184. பஞ்சே ரடியாள் பங்கா போற்றி

மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சுஏர் அடியாள் பங்கா போற்றி

மஞ்சு-அழகு. பஞ்சு-செம்பஞ்சு. ஏர்-அழகு.

நீ அழகன்; உயிர்களுக்கு நீ மணவாளன்; செம்பஞ்சு ஊட்டிய அழகிய பாதங்களையுடைய உமாதேவியின் பங்கன் நீ; அத்தகைய் உனக்கு நமஸ்காரம்.

185. அலந்தே னாயே னடியேன் போற்றி
186. யிலங்கு சுடரெம் மீசா போற்றி
அல்ந்தேன் நாயேன் அடியேன் போற்றி
இலங்கு சுடர்எம் ஈசா போற்றி

உன்னைச் சார்ந்துள்ள நான் துன்பங்களில் மிக வருந்துகின்றேன். சுயஞ்ஜோதியாயுள்ள ஈசா போற்றி.

187. கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
188. குவைப்பதி மலிந்த கோவே போற்றி

கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி

கவைத்தலை என்னும் ஊரில்எழுந்தருளியுள்ள ஞான சொரூபமே போற்றி. குவைப்பதி என்னும் ஊரில் உள்ள இறைவா போற்றி.

189. மலைநா டுடைய மன்னே போற்றி
190. கலையா ரரிகே சரியாய் போற்றி

மலை நாடு உடைய மன்னே போற்றி
கலைஆர் அரிகேசரியாய் போற்றி

மலைநாட்டுக்கு அதிபதியே உனக்கு வணக்கம். கலைஞானங்கள் நிறைந்த அரிகேசரி என்னும் ஊருக்கு உரியவனே உனக்கு வணக்கம்.

191. திருக்கழுக் குன்றில் செல்வா போற்றி
192. பொருப்பமர் பூவணத் தரனே போற்றி

திருக்கழுக் குன்றில் செல்வா போற்றி
பொருப்பு அமர் பூவணத்து அரனே போற்றி

பொருப்பு-மலை.

திருக்கழுக்குன்றிலும் மலைகளோடுகூடிய திருப்பூவணத்திலும் எழுந்தருளியுள்ள இறைவா போற்றி.

193. அருவமு முருவமு மானாய் போற்றி
194. மருவிய கருணை மலையே போற்றி

அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி

வடிவம் இல்லாதவனும் வடிவம் உடைத்திருப்பவனும் ஆனாய் போற்றி. மலைபோன்ற பெருங்கருணையுடையவனே போற்றி.

அதீத நிலையில் இறைவனுக்கு வடிவம் இல்லை. அவன் உலகு அனைத்தும் ஆயிருக்கிற நிலையில் அவனுக்கு வடிவம் உண்டு. உயிர்களை உய்விப்பதில் அவன் ஊக்கம் கொண்டிருப்பதால் அவன் கருணாகரன் எனப்படுகிறான்.

195. துரியமு மிறந்த சுடரே போற்றி
196. தெரிவரி தாகிய தெளிவே போற்றி

துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவு அரிது ஆகிய தெளிவே போற்றி

துரியாதீதமாய் இருக்கும் பேரொளியே போற்றி. சிவசைதன்யமாய் விளங்கும் பரமனே போற்றி.

பழைய சம்பிரதாயப்படி முக்குணங்களுக்கு அப்பால் இருப்பது எதுவோ அது துரியம். நனவு, கனவு, உறக்கம் (ஜாக்ரதம், சொப்பனம், சுஷுப்தி) ஆகிய மூன்று அவஸ்தைகளுக்கும் சாக்ஷியாயிருப்பது எதுவோ அது துரியம். பிரம்ம சைதன்யத்துக்குத் துரியம் என்று பெயர். புதிய சம்பிரதாயத்தின்படி சுத்த சத்துவ குணத்தில் ஒளிரும் ஆத்மப் பிரகாசம் துரியம் எனப்படுகிறது.

சுத்த சத்துவக் குணத்தையும் கடந்த நிலையில் இருக்கும் பர சைதன்யம் துரியாதீதம் எனப்படுகிறது. சொற்களில் மயங்கிவிடாது பொருளைச் சரியாக அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. உண்மையில் துரியமும் துரியாதீதமும் ஒன்றே.

புறக்கரணங்களுக்கும் அந்தக் கரணங்களுக்கும் எட்டாது தன்மயமாய் பரமாத்மா சதா தன்னையே உணர்ந்து கொண்டிருப்பதால் அது தெளிவு என அழைக்கப்படுகிறது.

197. தோளா முத்தச் சுடரே போற்றி
198. யாளா னவர்கட் கன்பா போற்றி

தோளா முத்தம் சுடரே போற்றி
ஆள் ஆனவர்கட்கு அன்பா போற்றி

தோளா-துளைக்கப்படாத. தோளுதல் - துளைத்தல். ஆள் ஆனவர்களுக்கு-அடிமைப்பட்டவர்களுக்கு.

துளைக்கப்படாத முத்தின் ஒளியே போற்றி. ஆட்பட்டவர்களுக்கு அன்பு மிகக் காட்டுபவனே உனக்கு வணக்கம்.

பரமாத்மாவின் ஜோதி அகண்டமாய் எங்கும் வியாபித்திருக்கிறது. அது பிளவுபடாதிருக்கிறது. துளைக்கப்படாத முத்தை உபமானமாகக் காட்டி அவனது பூரணநிலை பகரப்பெறுகிறது.

199. ஆரா வமுதே யருளே போற்றி
200. பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி

ஆரா அமுதே அருளே போற்றி
பேர் ஆயிரம் உடைப் பெம்மான் போற்றி

தெவிட்டாத அமிர்தமே, அருளாளா போற்றி. ஆயிரம் பெயர்களை உடையவனே போற்றி.

201. தாளி யறுகின் றாராய் போற்றி
202. நீளொளி யாகிய நிருத்தா போற்றி

தாளி அறுகின் தாராய் போற்றி
நீள்ஒளி ஆகிய நிருத்தா போற்றி

தார்-மாலை. தாராய்-மாலையணிந்தவனே.

தாளிக்கொடி, அறுகம்புல் ஆகியவைகளைக்கொண்டு அமைத்துள்ள மாலையை அணிந்திருப்பவனே போற்றி. அகண்டாகார ஜோதியாகிய சிதாகாசத்தில் தாண்டவம் ஆடுபவனே போற்றி.

203. சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
204. சிந்தனைக் கரிய சிவமே போற்றி

சந்தனம் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி

சந்தனக் குழம்பைப் பூசியுள்ள அழகனே போற்றி. மனதுக் கெட்டாத மங்கள சொருபமே போற்றி.

இறைவன் மனாதீதன்; அதாவது மனதுக்கு அப்பாற் பட்டவன். மனதுக்கு இலக்காவதனுள் நலம் கேடு ஆகிய இரண்டும் கலந்திருக்கின்றன. மனதுக்கு அப்பாற் பட்ட பொருளில் நலம் அனைத்தும் உண்டு; கேடு சிறிதுமில்லை.

205. மந்திர மாமலை மேயாய் போற்றி
206. யெந்தமை யுய்யக் கொள்வாய் போற்றி

மந்திரம் மாமலை மேயாய் போற்றி
எம்தமை உய்யக் கொள்வாய் போற்றி

வேதங்களை விளக்குதல் பொருட்டு மஹேந்திர மலையில் எழுந்தருளியவனே போற்றி. எங்களை மேன்மையுற ஆட்கொள்வாய் போற்றி.

207. புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
208. யலைகடன் மீமிசை நடந்தாய் போற்றி

புலிமுலை புல்வாய்க்கு அருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி

மான் குட்டிக்குப் புலி முலைப்பால் தரும்படி அருளினவனே போற்றி. கடல்மீது நடந்தவனே போற்றி.
(இவையிரண்டும் திருவிளையாடல் புராண வரலாறுகள்.)

209. கருங்குரு விக்கன் றருளினை போற்றி
210. யிரும்புலன் புலர விசைந்தனை போற்றி

போற்றி போற்றி புயங்கம் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சய சய போற்றி

புயங்கம்-புஜங்கம், பாம்பு. புராண காரணம்-முழுமுதற் காரணம். சயம்-ஜயம், வெற்றி.

பாம்பை அணிந்திருக்கும் தலைவா போற்றி; அனைத்துக்கும் ஆதிகாரணனே போற்றி. உனது திருவிளையாடலில் வெற்றியே வடிவெடுத்திருப்பவனே போற்றி.

திருப்பெருந்துறையில் அருளிய

திருச்சதகம்

பக்தி வைராக்கிய விசித்திரம்

1. மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

1. மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து
உன் விரை ஆர் கழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சய சய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே.

மெய் அரும்பல்-உடல் புளகித்தல். விதிர்விதிர்த்தல்-நடு நடுங்குதல். விரை ஆர் கழல்-மணம் நிறைந்த திருவடி. கழல் என்பது வீரச் சதங்கை. அதை அணிந்திருக்கும் திருவடி ஈண்டுக் குறிப்பிடப்படுகிறது. வெதும்புதல்-இளஞ்சூடு ஆதல். சயசய-ஜயஜய, வெற்றிக்குமேல் வெற்றி. கை-ஒழுக்கம். நெகிழவிடேன்-தளரவிடேன்.

நறுமணம் நிறைந்த உனது திருவடியை நாடுகிற எனக்கு உடல் புளகாங்கிதமடைகிறது; உணர்ச்சியின் வேகத்தால் அது நடுநடுங்குகிறது. என் கைகள் இரண்டையும் தலையில் வைத்து உன்னை வணங்குகிறேன். கண்ணீர் பொங்கி வருகிறது. உள்ளத்தில் இளம் சூடு தட்டுகிறது. அந்த உள்ளத்தை உனக்கே கோவில் ஆக்கியதால் நிலையற்ற உலக வியவகாரங்கள் எல்லாம் அதைவிட்டுப் பறந்தோடுகின்றன. நாவால் உன்னைப் போற்றுகிறேன். உனது திருவருள் விலாசத்துக்கு மேலும் மேலும் வெற்றியுண்டாகுக என்று வழுத்துகிறேன். ஈசா, உன்னை நாடியிருப்பதே சன்மார்க்கமாகிறது. அந்த சன்மார்க்கத்திலிருந்து நான் ஒரு பொழுதும் பிசகேன். நான் உன் உடைமை, நீ என்னை உடையவன். மேலும் நீ சர்வக்ஞன், அதாவது ஓதாது முற்றும் உணர்ந்தவன். ஆதலால் நான் எவ்வளவு தூரம் பண்பாடு அடைந்திருக்கிறேன் என்பதை நீயே நன்கு அறிகிறாய். உனது திருவுளத்துக்கு ஒத்து ஒழுகுவது நான் கடைப்பிடிக்கும் நல்லொழுக்கமாகும்.

மெய், மொழி, மனம் ஆகிய முக்கரணங்கள் முதல்வனுக்கென்றே ஒப்படைக்கப்படுகின்றன. இப்படிச் செய்வதைவிடச் சிறந்த செயல் ஏதும் சாதகனுக்கில்லை. தெய்வநாட்டம் தீவிரமாகப் பக்தனிடத்து வரும்பொழுது அவைகள் எப்படிச் செயல்புரிகின்றன என்பது ஈண்டு விளக்கப்படுகிறது.

உள்ளத்தினின்று பொய்யெல்லாம் நீங்கப்பெறுமளவு சித்த சுத்தி உண்டாகிறது. பரதரிசனத்துக்குத் தூய நெஞ்சம் தகுதியுடையதாகிறது.

இறைவன் உடையவன், உயிர்களும் உலகும் அவனுடைய உடைமைகளாகின்றன. அலைகள் அனைத்தும் கடலின் உடைமைகளாய் இருப்பது போன்று ஜீவனும் ஜகத்தும் பரமாத்மாவின் உடைமைகளாம். இது துவைத

நிலையின் அனுபூதியாகும். முப்பொருள் உண்மை இங்குத் தெளிவடைகிறது.

ஈசன் சர்வக்ஞனயிருப்பதால் ஜீவர்களின் பக்குவம் எத்தகையது என்பது அவனுக்கு விளங்குகிறது. 'கண்டுகொள்ளே' என்னும் சொல்லில் இக்கோட்பாடு அடங்கியிருக்கிறது.

இப்பாடலில் உள்ள மஹாபாவம் அல்லது பராபக்தியின் பாகுபாடுகளைப் பக்கங்கள் 37, 39ல் இருக்கும் மஹாபாவம் பிரிவுகள் 1, 4, 7 தெளிவுறுத்துகின்றன.

ஐம்பூதங்களில் நிலம் மிக ஸ்தூலமானது. அதன் தன் மாத்திரை மணம். இறைவனுடைய ஸ்தூல தோற்றத்தில் அவனுக்குப் பாதமாயிருப்பது பிருதிவி அல்லது மண்.

2. கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடி யாரொடல்
லாலா் ர கம்புகினு
மெள்ளேன் றிருவரு ளாலே
யிருக்கப் பெறினிறைவா
வுள்ளேன் பிறதெய்வ முன்னையல்
லாதெங்க ளுத்தமனே.

கொள்ளேன் புரந்தரன் மால் அயன்
வாழ்வு குடி கெடினும்
நள்ளேன் நினது அடியாரொடு
அல்லால் நரகம்புகினும்
எள்ளேன் திருஅருளாலே
இருக்கப்பெறின் இறைவா
உள்ளேன் பிற தெய்வம் உன்னை அல்லாது
எங்கள் உத்தமனே.

கொள்ளேன்-ஏற்றுக்கொள்ள மாட்டேன். புரந்தரன்-இந்திரன். மால்-திருமால், மஹாவிஷ்ணு. அயன்-அஜன், பிரம்மா. நள்ளேன்-நட்புக்கொள்ளேன். எள்ளேன்-ஏளனம் செய்யேன். உள்ளேன்-நினைக்கமாட்டேன். உத்தமன்-மேலோன்.

ஈசா, நான் உன் திருவருளுக்குப் பாத்திரமானல், இந்திரன், விஷ்ணு, பிரம்மா முதலியவர்களின் பதவிகளை ஏற்றுக்கொள்ள மாட்டேன். என் குடிகெட்டாலும் உன் அன்பர்கள் அல்லாது மற்ற வர்கள் நட்பை விரும்பேன். நரகம் புகுவதாயினும் அதை இகழ மாட்டேன். மேலோய், உன்னையல்லாது மற்றத் தெய்வங்களை நான் மதிக்கமாட்டேன்.

மெய்ப்பொருள் ஒன்று; அது பல வடிவங்களில் இலங்குகின்றது. சாதனத்தின் ஆரம்பதசையில் இருப்ப வர்கள் பல தெய்வங்கள் இருப்பதாகவே உணர்கிருர் கள். அவைகளுள் தனது இஷ்டமூர்த்தியினிடத்துஅலாதி அன்பு வைப்பது உசிதம். அதனுல் பக்தி பெருகுகிறது. சிறுவன் ஒருவன் தன் தாயையே நேசிப்பது போன்று பக்தன் தன் வழிபடுதெய்வத்தையே உபாசிக்கவேண் டும். தாயோடு இருக்கும் குழந்தைக்கு வறுமைநோய் தோன்ருது. அங்ஙனம் அருளுக்குப் பாத்திரமான பக்த னுக்கு நரகம் வேதனையுடையதாகத் தோன்ருது.

3. உத்தம னத்த னுடையா
னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ
னென்ன மனநினைவி
லொத்தன வொத்தன சொல்லிட
வூரூர் திரிந்தெவருந்
தத்த மனத்தன பேசவெஞ்
ஞான்றுகொல் சாவதுவே.

உத்தமன் அத்தன் உடையான்
அடியே நினைந்து உருகி
மத்தம் மனத்தொடு மால்இவன்
என்ன மனம் நினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட
ஊர்ஊர் திரிந்து எவரும்
தம் தம் மனத்தன பேச
எஞ்ஞான்று கொல் சாவதுவே.

உத்தமன்-புருஷோத்தமன், அனைவர்க்கும் மேலோன். அத் தன்-தந்தை. மத்தம்-உன்மத்தம், பித்து. மால்-மயக்கம்.

இறைவா, உன்னை எல்லார்க்கும் மேலோன் என்றும், அப்பன் என்றும், என்னை உடையவன் என்றும் இயம்பிக்கொண்டு நான் ஸ்தலங்களுக்கெல்லாம் போகவேண்டும். உனது நினைவில் நான் பித்தம் பிடித்தவன் ஆகவேண்டும். நான் மயங்கியிருப்பதாக ஊரார் அவரவர்க்குத் தோன்றியவாறு பேசுவார்கள். செத்தவன் போன்று நான் அவைகளைப் பொருள்படுத்தாது சிவபோதத்தில் திளைத்திருப்பேனாக.

கடவுள் பித்தம் பிடித்தவர்கள் பாக்கியவான்கள். உலகத்தவர்களின் புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பொருள்படுத்துகிறவர்கள் ஆத்ம சாதனத்துக்கு உதவ மாட்டார்கள். உயிரோடு இருக்கும்போதே உலக வாழ்க்கைக்குச் செத்தவர் போன்று ஆகிறவர்கள் தீவிர பக்குவம் அடையப்பெற்றவர்களாவர்.

மஹாபாவம் அல்லது பராபக்தியின் பிரிவுகள் 1, 7, 11 ஈண்டுத் தென்படுகின்றன.

4. சாவமுன் னாட்டக்கன் வேள்வித்
தகர்தின்று நஞ்சமஞ்சி
யாவவெந் தாயென் றவிதா
விடுநம் மவரவரே
மூவரென் றேயெம்பி ரானொடு
மெண்ணிவிண் ணாண்டுமண்மேற்
றேவரென் றேயிறு மாந்தென்ன
பாவந் திரிதவரே.

சாவ முன் நாள் தக்கன் வேள்வித்
தகர் தின்று நஞ்சம் அஞ்சி
ஆவ எந்தாய் என்று அவிதா
இடும் நம்மவர் அவரே
மூவர் என்றே எம்பிரானொடும்
எண்ணி விண் ஆண்டு மண்மேல்
தேவர் என்றே இறுமாந்து என்ன
பாவம் திரிதவரே.

வேள்வித் தகர் தின்று-யாகத்தில் பலியிடப்பட்ட ஆட்டு மாமிசத்தைப் புசித்து. நஞ்சம்-விஷம். ஆவ ஐயோ. எந்தாய்

என்று-எந்தையே என்று. அவிதா இடும்-முறையிட்டும். இறுமாந்து-செருக்கடைந்து. திரிதவர்-திரிகின்ற இவர்கள். என்ன பாவம்-இவர்கள் அனுதாபத்துக்குரியவர்கள்.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலைச் செய்கின்ற மும்மூர்த்திகள் தக்கன் வேள்வியில் ஆட்டின் ஊனைத் தின்று மகிழ்ந்தனர். வீரபத்திரனிடம் அடியுண்டு இறைவனிடம் முறையிட்டனர். பால் கடல் கடைந்தபொழுது வந்த நலன்களை மகிழ்வுடன் ஏற்றனர். விஷம் என்னும் தீங்கு வந்தபொழுது ஐயோ வென்று மகாதேவனிடம் முறையிட்டு ஓடினர். பிரபஞ்சத்தின் இன்ப துன்பங்களுக்கு ஆளாகிய இவர்கள் நம்போன்று ஜீவர்களேயாவர்.

ஈண்டு இயம்பியுள்ள கருத்துத் தத்துவத்தினின்று ஒருவாறு பிசகியுள்ளது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்ச கிருத்தியங்கள் ஈசனுடைய திட்டத்துக்குப் புறம்பானவைகளல்ல. அக்கிருத்தியங்களுக்குக் கர்த்தர்களாயிருப்பவர்கள் ஈசனுடைய அம்சங்களேயாம். ஈசனுடைய மகிமையை விளக்குகின்றவிதத்தில் அக்கிருத்தியங்கள் இடையறுது நிகழ்ந்து வருகின்றன. அவர்கள் இறுமாப்புக்கொள்கிறவர்கள் அல்லர். மற்றுக் கிருத்தியம் படைத்திருப்பவர்கள் உபாசனைக்கு உரியவர்கள் அல்லர் என்பதுவே கோட்பாடு.

தக்கன் வேள்வியில் தேவர்கள் மட்டும் ஹவிர்பாகத்தை நாடி ஓடினர். பால்கடலைக் கடைதலில் தேவர்களும் அசுரர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். மும்மூர்த்திகள் இந்த இரண்டு சம்பவங்களிலும் சேரவில்லை; சேர்வது தத்துவத்துக்குப் பொருந்தாது. பக்கம் 97. புராணக் கதை 4. பார்க்கவும்.

5. தவமே புரிந்திலன் றண்மல
ரிட்டுமுட் டாதிறைஞ்சே
னவமே பிறந்த வுருவிலீன
யேனுனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி
லேனின் திருவடிக்காம்

பவமே யருளுகண் டாயடி
யேற்கெம் பராபரமே.

தவமே புரிந்திலன் தண்மலர் இட்டு
முட்டாது இறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினையேன்
உனக்கு அன்பர் உள் ஆம்
சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்
நின் திருவடிக்கு ஆம்
பவமே அருளு கண்டாய் அடியேற்கு
எம் பராபரமே.

முட்டாது-குறைபாடின்றி. அவமே பிறந்த-வீணில் ஜன்மம் எடுத்த. அருவினையேன்-பாதகன். பவம்-பிறப்பு.

ஈசா, நான் தவம் செய்திலேன்; குளிர்ந்த மலர் தூவி முறையாக உன்னை வழுத்தியவன் அல்லேன். வீணில் பிறந்த பாதகன் நான்; பக்தர்களுக்குச் சொந்தமாகிய சிவபோதம் என்னும் அழியாச் செல்வத்தை நான் பெற்றிலேன்; உன்னை அடைதற்கான நல்ல பிறவியை எனக்கு நல்கு.

மனது மேலானதாக மாறிவிட்டால் ஆத்மசாதகன் இந்த உடல் இருக்கும்போதே மேலான பிறப்பு எடுத்தவன் ஆகிறான். அவனே இருபிறப்பாளன் எனப்படுகிறான். தவம் 54ஆம் பக்கத்தில் விளக்கப் பெற்றிருக்கிறது.

6. பரந்துபல் லாய்மல ரிட்டுமுட்
டாதடி யேயிறைஞ்சி
யிரந்தவெல் லாமெமக் கேபெற
லாமென்னு மன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன்
வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை
யேத்த முழுவதுமே.

பரந்து பல் ஆய்மலர் இட்டு
முட்டாது அடியே இறைஞ்சி

இரந்த எல்லாம் எமக்கே பெறலாம்
என்னும் அன்பர் உள்ளம்
கரந்து நில்லாக் கள்வனே நின் தன்
வார் கழற்கு அன்பு எனக்கும்
நிரந்தரமாய் அருளாய் நின்னை
ஏத்த முழுவதுமே.

பரந்து-விரிவடைந்து. இரந்த-வேண்டிய. கரந்து-மறைந்து. வார்கழற்கு-நீண்ட கழல்களை அணிந்துள்ள திருவடிகளுக்கு. நிரந்தரமாய்-இடையீடின்றி

விதவிதமான நல்ல மலர்களை நின் அன்பர்கள் கவனமாய் எடுத்து விரிவாகவும் முறையாகவும் உன்னை வழுத்துகின்றனர். உன் அருளால் வேண்டியதையெல்லாம் வேண்டியவாறு பெறலாம் என்னும் தெளிவு அவர்களுக்கு உண்டாகிறது. அன்னவர் உள்ளத்தில் நீ ஒளிர்கின்றாய். மற்றவர் உள்ளத்தில் கள்ளன் போன்று நீ மறைந்திருக்கிறாய். இடையிடின்றி உன்னை நாள் முழுதும் ஏத்துதற்கு எனக்கும் அருள்புரிவாயாக.

7. முழுவதுங் கண்டவ னைப்படைத்
தான்முடி சாய்த்துமுன்னாட்
செழுமலர் கொண்டெங்குந் தேடவப்
பாலனிப் பாலெம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடக
மாடிக் கதியிலியா
யுழுவையின் றோலுடுத் துன்மத்த
மேற்கொண் டுழிதருமே.

முழுவதும் கண்டவனைப் படைத்தான்
முடிசாய்த்து முன்நாள்
செழும் மலர் கொண்டு எங்கும் தேட
அப்பாலன் இப்பால் எம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடகம்
ஆடிக் கதி இலியாய்
உழுவையின் தோல் உடுத்து உன்மத்தம்
மேற்கொண்டு உழி தருமே.

கண்டவனை-படைத்தவனை. செழு மலர் கொண்டு-பேரூக்கம் பூண்டு. அப்பாலன் - தென்படாதிருந்தவன். இப்பால் - ஈண்டு

கழுதொடு-பேய்களோடு சேர்ந்து. காட்டிடை-சுடுகாட்டில். கதி இலியாய்-ஒன்றையும் உடைத்திலனாய். உழுவை-புலி. உன்மத்தம்-பித்து. உழிதரும்-திரிகிறான்.

பிரபஞ்சம் முழுதையும் சிருஷ்டித்த பிரம்மதேவன் தந்தையாகிய திருமால் முன்பு ஒரு காலத்தில் தன் தலையைக் கீழ் நோக்கிப் பேர் ஊக்கத்துடன் பாதாளத்தில் தேடியும் அவனுக்கு உன் திருப்பாதம் தென்படவில்லை. அத்தகைய நீ இங்கு எங்களுக்கு உபகாரம் செய்பவனாய் சுடுகாட்டில் பேய்களுடன் கூடி சம்மாரத் தாண்டவமாடும் திருப்பாதம் காட்டியருள்கிறாய். தெய்வ சம்பத்து ஏதுமே இல்லாதவனாய் அற்பப் புலித்தோலை அணிந்துகொண்டு பித்துப் பிடித்தவன் போன்று திரிகிறாய். (ஈது என்ன விந்தை!)

சித்தன் போக்கும் சிவன் போக்கும் ஒன்று. அன்னவர்களின் செயல்களில் பொருத்தம் காண்பது மிகக் கடினம். அகண்ட வஸ்துவாகிய சிவனாரது அடிமுடி காணத் திருமாலுக்கும் அயனுக்குமே முடியவில்லை. அத்தகைய பெரியோர்க்கும் பிடிபடாத பாரமார்த்திகப் பெரிய பொருள் இங்குப் பேய்களுக்கும் எம்போன்றவர்களுக்கும் எளியவனாய், பொருள் ஒன்றும் இல்லாதவனாய், எம் போன்றவர்களை உய்விப்பதில் பித்துப் பிடித்தவனாய் அலைகிறான். இது என்ன கூத்து!

முரண்படுகிற இத்தகைய இயல்பு அம்பிகையிடத்திலும் இருப்பது லலிதா சகஸ்ர நாமங்களுள் இரண்டில் காணலாம். 624-வது நாமம் குஹ்யா गुह्या என்பதன் பொருள் அவளுடைய சொரூபமும் செயலும் யாருக்குமே விளங்காது என்பதாம். 994-வது நாமம் ஆபால கோப் விதிதா आबाल गोप विदिता என்பதன் பொருள் பாலர்களுக்கும் இடையர்களுக்குங்கூட எளிதில் விளங்குபவள் என்பதாம்.

8. உழிதரு காலுங் கனலும்
புனலொடு மண்ணுவிண்ணு
மிழிதரு காலமெக் காலம்
வருவது வந்ததற்பி

ழுழிதரு காலத்த வுன்னடி
யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை
காத்தெம்மைக் காப்பவனே.

உழிதரு காலும் கனலும்
புனலொடு மண்ணும் விண்ணும்
இழிதரு காலம் எக்காலம்
வருவது வந்ததன்பின்
உழிதரு காலத்த உன் அடியேன
செய்த வல் வினையைக்
கழி தரு காலமும் ஆய் அவை காத்து
எம்மைக் காப்பவனே.

உழிதரு-சஞ்சரிக்கிற. காலும்-வாயுவும். இழிதரு காலம்-பிரளய காலம். உழிதரு காலத்த-மாறியமைகிற காலத்தை ஆள் பவனே. கழிதரு-நீக்கியருளுகிற. காலமும் ஆய்-காலசொருபமாக இருந்து. அவை காத்து-அவைகள் எம்மைப் பீடிக்காது தடுத்து.

சஞ்சரிக்கிற வாயுவும், தீயும், நீரும், மண்ணும், ஆகாசமும் காலாந்தரத்தில் பிரளயத்தில் ஒடுங்கும். சிருஷ்டியையும் பிரளயத்தையும் உண்டுபண்ண வல்ல காலத்தை இறைவா, நீ ஆளுகின்றாய். எனது கொடிய வினையை அழிக்கும் மகா காலனாய் நீ இருப்பாயாக. வினையும் காலமும் எங்களை வந்து பாதிக்காதபடி காப்பாற்றுவாயாக.

ஆதியும் அந்தமும் இல்லாது சர்வகாலமும் நிகழ்ந்து வருகிற சிருஷ்டியும் பிரளயமும் மாயையின் காரியங்களாம். இனிக் காலதேவதையும் மாயா சக்தியின் கூறு ஆகிறது. சிவபெருமானே காலகாலன் என்றும், மஹாகாலன் என்றும், காலாதீதன் என்றும் அழைக்கப்பெறுகிறான். அவனுடைய அருளால் ஜீவர்கள் வினையையும் காலத்தையும் கடக்க முடியும்.

பக்கம் 123. உபநி. 11 பார்க்கவும்.

9. பவனெம் பிரான்பனி மாமதிக்
கண்ணிவிண் ணோர்பெருமான்

சிவனெம் பிரானென்னை யாண்டுகொண்
டானென் சிறுமைகண்டு
மவனெம் பிரானென்ன நானடி
யேனென்ன விப்பரிசே
புவனெம் பிரான்றெரி யும்பரி
சாவதி யம்புகவே.

பவன் எம்பிரான் பனி மாமதிக்
கண்ணி விண்ணோர் பெருமான்
சிவன் எம்பிரான் என்னை ஆண்டு
கொண்டான் என் சிறுமை கண்டும்
அவன் எம்பிரான் என்ன நான்
அடியேன் என்ன இப் பரிசே
புவன் எம்பிரான் தெரியும்
பரிசு ஆவது இயம்புகவே.

பவன்-தோற்றுவிப்பவன். பனி-குளிர்ந்த. மாமதி-பெருமை வாய்ந்த சந்திரன். கண்ணி-முடியில் அணியும் சிறுமாலை. சிவன்-மங்களமானவன். இப்பரிசு-இத்தன்மை. புவன்-பிரகாசமான பெருவெளியானவன். இயம்புக-சொல்லுக.

உலகுக்கெல்லாம் தலைவன், சந்திரசேகரன், தேவர்களுக்கெல்லாம் தலைவன், மங்களத்தையே உண்டு பண்ணுபவன், அறிவுப் பெருவெளியாயிருப்பவன், அற்பனாகிய என்னையும் தனக்குச் சொந்தமென்று ஆட்கொண்டுள்ளான். அவன் ஆண்டானாகவும் நான் அடிமையாகவும் இருப்பது வியப்புக்குரிய அவனது பெருந் தன்மையென்று யாண்டும் பகரவேண்டும்.

உலகையும் உயிர்களையும் தன்னிடத்திருந்து தோற்றுவிப்பதால் சிவனுக்கு **பவன் भवः** என்றும் அம்பிகைக்கு **பவானீ भवानी** என்றும் பெயர்கள் வந்துள்ளன. உயிர்களுக்கெல்லாம் அவன் தலைவனாயிருந்து அவைகளைப் படிப்படியாக மேல் நிலைக்கு வரத்தூண்டும்பொழுது இறைவன் **சபாபதி सभापति** எனப்படுகிறான். அவன் முற்றிலும் தன்மயமாயிருக்கும்பொழுது அவன் **புவபதி भुवपति** யென்றும், **சிதாகாசம் चिदाकाशः** என்றும், **சிதம்பரம் चिदम्बरं** என்றும் அழைக்கப் பெறுகிறான். அறிவுப் பெரு

வெளியென்பது இதன் பொருள். இந்தத் தத்துவத்தை அறிந்துகொள்ளுதற்கு சினிமாத் திரை பயன்படுகிறது. படக்காட்சிக்கு ஆதாரமாய் இருக்கிறபொழுதும், படம் காண்பிக்கப்படாத பொழுதும் திரை தன்மயமாயிருக் கிறது. அதில் விகாரம் ஒன்றும் உண்டாவதில்லை. அங் ஙனம் ஜகத்தையும் ஜீவர்களையும் தன்மீது தோற்று விக்கின்றபொழுதும் அவையாவையும் ஒடுக்கி வைத் திருக்கிறபொழுதும் சிதம்பரநாதன் யாண்டும் தன் மயமாயிருக்கிறான்.

உயிர்களை உய்வித்து உயர்நிலைக்குக் கொண்டுவரு வது அவனுடைய அருள். ஆண்டான் அடிமை நிலையில் (துவைத நிலையில்) தம்மை ஆட்கொண்ட மகிமையை உச்ச நிலையில் வைத்து மாணிக்கவாசகர் இத்திருப்பாட லில் பகர்ந்தருள்கிறார். இஃதகைய மணி மொழிகளே மாணிக்க வாசகங்களாகின்றன.

10. புகவே தகேனுனக் கன்பருள்
 யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட
 தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணோரைப்
 பணித்தியண் ணாவமுதே
நகவே தகுமெம் பிரானென்னை
 நீசெய்த நாடகமே.

புகவே தகேன் உனக்கு அன்பருள்
 யான் என் பொல்லா மணியே
தகவே எனை உனக்கு ஆட்கொண்ட
 தன்மை எப் புன்மையரை
மிகவே உயர்த்தி விண்ணோரைப்
 பணித்தி அண்ணா அமுதே
நகவே தகும் எம்பிரான் என்னை
 நீ செய்த நாடகமே.

பொல்லாமணி-பொள்ளாமணி, துளைக்க முடியாத மணி, பூரணப்பொருள். நகவே-தகுதியோ. நகவேதகும்-நகைப்பதற்கு உரியதாகும்.

பூரணனே, உன் அன்பர் கூட்டத்தில் பிரவேசிக்க நான் சிறிதும் தகுதியில்லாதவன். அத்தகைய என்னை நீ ஆட்கொண்டது உன் முறைக்கே தகும். கீழான மண்ணுலகில் இருப்பவரைச் சிவஞானத்தால் நீ மேலோராக்குகின்றனை. விண்ணுலகில் இருப்பவர்க்குச் சிவஞானம் வாய்க்காவிடில் அவர்கள் கீழோராகின்றனர். அப்பனே, அமிர்தமே, இறைவா, உனது இத்தகைய திருவிளையாடல் வியப்புக்குரியதன்றே!

தேவர்கள் நெடிது வாழ்ந்திருந்து சுகஜீவனம் பண்ணுகின்றனர்; களிப்புற்றிருக்கின்றனர். ஆனல் அவர்களுக்குப் பரஞானம் எளிதில் கிட்டுவதில்லை. துன்பம் நிறைந்த நிலையற்ற வாழ்வு நரர்களுடையது எனினும், அவர்கள் விரைவில் இறைவனது அருளுக்குப் பாத்திரமாகி ஞானத்தையும் முக்தியையும் பெறமுடியும். மண்ணுலகில் இருக்கிற ஞானியர் விண்ணுலகத்தவரைக் காட்டிலும் மேலானவர் என்பது வெளிப்படை.

---

2. அறிவுறுத்தல்

(விவேகத்தைப் பெறுதல்)

தரவு கொச்சகக் கலிப்பா

11. நாடகத்தா லுன்னடியார்
போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றே
ளுடகச்சீர் மணிக்குன்றே
யிடையரு வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத்
தந்தருளெம் முடையானே.

நாடகத்தால் உன் அடியார்
போல்நடித்து நான் நடுவே

வீடு அகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகம் சீர் மணிக்குன்றே
இடைஅரு அன்பு உனக்குஎன்
ஊடுஅகத்தே நின்று உருகத்
தந்தருள் எம் உடையானே.

நாடகம் - கூத்து. வீடு அகத்தே - முக்தியின்கண். விரைகின்றேன் - அவசரப்படுகின்றேன். ஆடகம்-தங்கம். சீர்-சிறப்பு. மணிக்குன்று-மாணிக்க மலை. ஊடு அகத்தே-மனதின்கண்.

நான் பக்தி பண்ணுவது நாடகத்தில் நடிப்பதுபோன்று நிலையற்றதாயும், என் இயல்பில் ஒன்றுபடாததாயும் இருக்கிறது. அதற்கிடையில் முக்திபெற நான் அவசரப்படுகிறேன். மற்றுப் பேரன்பு பூண்டு இடையருது நான் உருகி வந்தால் என் உள்ளம் தூயதாகும். அப்பொழுது அம்பலத்து அரசனுகிய உனது ஜோதி சொருபத்தை உள்ளத்தினுள்ளே நான் சுவானுபூதியில் காண்பேன். உடையவனே, என் பாசாங்கைப் பொருள்படுத்தாது உன் முறைப்படி என்னைப் பக்குவப்படுத்துவாயாக.

இகம் பரம் ஆகிய இரண்டிலும் மனிதன் எதற்குத் தகுதி வாய்ந்தவனுகத் தன்னைச் செய்துகொள்கிருனே அது தானுக அவனுக்கு வந்து வாய்க்கிறது. இவ்வுண்மையை உணர்வது அறிவு. முக்தி வேண்டும் என்று இறைவனைக் கேட்பதைவிட, முக்திக்குத் தன்னைப் பக்குவப்படுத்துவது அறிவுடையோர் செயல்.

தெரிந்த ஒன்றை உபமானமாகக்கொண்டு தெரியாத ஒன்றைத் தெரிந்துகொள்ள முயலுதல் முறை. ஆடகம் என்ருல் தங்கம். தங்கத்தில் பதித்த மாணிக்கம் போன்றது ஆத்மப் பிரகாசம். பின்பு மலை போன்று ஆத்மா அசைவற்றது, அசலம். பக்தி முதிர்ந்து மனம் தெளியும் போது இவ்வுண்மை விளங்குகிறது.

12. யானேதும் பிறப்பஞ்சே
னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன்
மண்ணாள்வான் மதித்துமிரேன்
றேனேயு மலர்க்கொன்றைச்
சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா
ளென்றென்றே வருந்துவனே.

யான் ஏதும் பிறப்பு அஞ்சேன்
இறப்பு அதனுக்கு என் கடவேன்
வான் ஏயும் பெறில் வேண்டேன்
மண் ஆள்வான் மதித்தும் இரேன்
தேன் ஏயும் மலர்க் கொன்றைச்
சிவனே எம்பெருமான் எம்மானே
உன் அருள்பெறும் நாள்
என்று என்றே வருந்துவனே.

வான் ஏயும்-சுவர்க்க லோகமாயினும். தேன் ஏயும்-தேன் பொருந்திய.

பிறப்பைப் பற்றியோ இறப்பைப் பற்றியோ எனக்குச் சிறிதும் அச்சமில்லை. விண்ணுலகிலோ மண்ணுலகிலோ பதவி எதையும் நான் விரும்பவில்லை. தேன் செறிந்த கொன்றைப் பூவை அணிந்திருக்கும் சிவனே, எம்பெருமானே, எம்மானே, உனது! அருள் ஒன்றையே நான் யாண்டும் வேண்டுகின்றேன்.

ஞானமார்க்கத்தில் போகின்றவர்களுக்கு साधन चतुष्टयम् ஸாதன சதுஷ்டயம் என்பன உண்டு. அவைகள் நான்கு சாதனங்கள் ஆகின்றன. முறையே அவைகள்:—

1. इहामुत्र फलभोग विराग: இஹ அமுத்ர பலபோக விராக: இம்மையிலும் மறுமையிலும் கர்மபலனை அனுபவிப்பதில் ஆசைகொள்ளாதிருப்பது. (2) नित्यानित्यवस्तु विवेक: நித்ய அநித்யவஸ்து விவேக: நிலைபேறு உடைய பொருள் எது, நிலைபேறு அற்ற பொருள் எது என்னும் விவேகம் படைத்திருப்பது. (3) शम दमादि षट्क संपत्ति: சம தமாதி ஷட்க ஸம்பத்தி: சமம் தமம ஆகிய ஆறுபேறுகள் படைத்திருப்பது

நிலையற்றவைகளை ஒதுக்கி நிலைபேறு உடையதை நாடுவது அறிவுடையோர் செயல். உடல் வாழ்வை விரும்புகிற உயிர்களெல்லாம் மரணத்துக்கு அஞ்சுகின்றன. அருள்தாகம் பிடித்தவர்களுக்கு ஜனன மரண பயமில்லை; பதவி எதிலும் நாட்டமில்லை.

13. வருந்துவனின் மலர்ப்பாத
மவைகாண்பா னாயடியே
னிருந்துநல மலர்புனையே
னேத்தேனாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தா
யருளமுதம் புரியாயேல்
வருந்துவனற் றமியேன்மற்
றென்னேநா னாமாறே.

शमः சம: அந்தக்கரணங்களை அடக்குதல். दमः தம: புறக்கரணங்களை அடக்குதல். उपरति உபரதி ஆசையின்மை. तितिक्षा திதிக்ஷை தானாக வருகிற கஷ்டத்தை சகித்தல். समाधान ஸமாதான மனவமைதி. श्रद्धा ச்ரத்தா சிரத்தை அல்லது முழு நம்பிக்கையுடன் ஸாதனத்தில் ஈடுபடுதல். (4) मुमुक्षुत्व मुमुक्षुत्वम् முமுக்ஷுத்வம் முக்தியடைவதில் கண்ணுங் கருத்துமாயிருத்தல்.

சிவனை மெய்யன் என்றும், பிறப்பு இறப்பு மயமான பிரபஞ்ச வாழ்வைப் பொய் என்றும் கருதும் மாணிக்கவாசகரிடம் நித்திய அநித்திய வஸ்து விவேகம் இருக்கிறது.

வானேயும் பெறில் வேண்டேன், மண் ஆள்வான் மதித்துமிரேன் என்பதில் இஹ அமுத்ர பலபோக விராகம் இருக்கிறது.

சமம் தமம் ஆகிய ஆறு உயர்ந்த மனநிலைகளுக்கு வாதவூரர் சிறந்த எடுத்துக்காட்டு ஆகிறார்.

உன் அருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே என்னும் கூற்றில் அவருடைய முக்தி நாட்டம் வெளிப்படுகிறது.

வருந்துவன் நின்மலர்ப்பாதம்
அவை காண்பான் நாய் அடியேன்
இருந்து நலமலர் புனையேன்
ஏத்தேன் நாத்தழும்பு ஏறப்
பொருந்திய பொன் சிலை குனித்தாய்
அருள் அமுதம் புரியாயேல்
வருந்துவன் நல்தமியேன்
மற்று என்னே நான் ஆம் ஆறே.

நலம்மலர் புனையேன்-நல்ல மலர்களைச் சூட்டேன். ஏத்தேன்-தோத்திரம் பண்ணேன். பொன் சிலை குனித்தாய்-மேருமலையை வில்லாக வளைத்தவனே. புரியாயேல்-கொடாவிடின். நல்தமியேன்-முற்றிலும் தனியேனாகிய நான்.

தகுதி நிறைந்த மேரு மலையை வில்லாக வளைத்தவனே, இச் சிறியேன் உன்னுடைய தாமரைத் திருவடிகளைக் காணுதல் பொருட்டு நொந்து முயலுகிறேன். உறுதியான உடல் இருந்தும் நல்ல மலர் தொடுத்து உன்னை நான் அலங்கரிக்கிறேனில்லை. நாவில் தழும்பு உண்டாகும்படி உன்னை நான் போற்றுகிறேனில்லை. உன் கருணையாகிய அமிர்தத்தை நீ எனக்கு வழங்காவிடில் முற்றிலும் கதியற்ற நான் மிக வருந்துவேன். வேறு எதைத்தான் என்னால் செய்ய முடியும்?

தனக்கென உழைப்பவன் பிறவிப் பெரும் பிணியைப் பேணுகிறான். ஆண்டவனுக்கும் ஆருயிர்களுக்குமாக உழைப்பவன் பிறவிப் பிணியை வேர் அறுக்கிறான். தனது சுகபோகத்துக்காக வருந்துபவன் தன்னைக் கெடுக்கிறான். கடவுளை நாடி வருந்துபவன் தன்னை அருள்துறையில் உயர்த்துகிறான். இக்கோட்பாடுகளை அறிகிறவன் அறிவாளியாகின்றான்.

14. ஆமாறுன் றிருவடிக்கே
யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயி
றூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே.

ஆம்ஆறுஉன் திருவடிக்கே
அகம் குழையேன் அன்பு உருகேன்
பூமாலை புனைந்து ஏத்தேன்
புகழ்ந்து உரையேன் புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில்
தூகேன் மெழுகேன் கூத்து ஆடேன்
சாம் ஆறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே.

ஆம்ஆறு-நான் உய்யும் வண்ணம். புத்தேளிர் கோமான்-தேவர்களுக்கெல்லாம் தேவன், மகாதேவன். தூகேன்-அலகிடேன், கூட்டிப் பெருக்குதல் என்னும் பணியைச் செய்யேன். மெழுகேன்-சாணமிட்டு மெழுகுகின்றேனில்லை. சதுராலே சார்வானே-யோகபலத்தால் அடையப்படுபவனே.

மஹாதேவா, யோக சாதனத்தால் அடையப் பெறுபவனே, அடியேன் உய்தல் பொருட்டு உன் திருவடியை நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்திலேன். அன்பு பூண்டு இளகிலேன், பூமாலை தொடுத்து உன்னை அலங்கரிக்கவில்லை, பாராட்டிப் பேசவில்லை. உன் திருக்கோயில்களைத் துப்புரவாக்கி மெழுக்கெடுத்திலேன். உனது நாமத்தை உச்சரித்துக்கொண்டு நான் குதித்து ஆடினது இல்லை. வீணில் மரணத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறேன்.

புத்தியோகம் என்னும் சாதன நிலையொன்று உண்டு. அது ஈண்டுச் சதுர் அல்லது திறமையென அழைக்கப் படுகிறது. அதே மேன்மையைக் 'குசலம்' என்று உபநிஷதம் கூறுகிறது. புத்தியோகம் ஓர் ஆத்ம சாதகனுக்கு வாய்த்துவிட்டால் அவன் தீவிர பக்குவியாகிறான். அதிகாலையில் கீழ்த்திசை வெளுப்பதும் பிறகு செவ்வானம் கூடுவதும் சூரியோதயத்துக்கு முன் அறிகுறியாகும். அதே பாங்கில் புத்தியோகம் வாய்த்துவிட்டால் பிறகு பரமனை அடைதல் எளிது. இவ்வுண்மையை அறிந்திருப்பது அறிவு ஆகும். புத்தியோகம் வரும் வரையில் திரிகரணங்களைத் தெய்வ வழிபாட்டுக்கே பயன்படுத்துவது உசிதம். அதைத் தாம் செய்யவில்லையே என்று அண்ணல் வருந்துவது தமக்குத் தாமே அறிவுறுத்துவதாகும்.

15. வானாகி மண்ணாகி
வளியாகி யொளியாகி
யூனாகி யுயிராகி
யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென்
றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை
யென்சொல்லி வாழ்த்துவனே!

வான் ஆகி மண் ஆகி
வளிஆகி ஒளிஆகி
ஊன்ஆகி உயிர்ஆகி
உண்மையும்ஆய் இன்மையும் ஆய்க்
கோன்ஆகி யான் எனதுஎன்று
அவர் அவரைக் கூத்தாட்டு
வான்ஆகி நின்றாயை
என் சொல்லி வாழ்த்துவனே!

விண், மண், காற்று, நெருப்பு, நீர் ஆகிய ஐம்பூதங்கள் ஆனது நீயே, உடலும் உயிரும் ஆனது நீயே, தோற்றத்தில் இருப்பவைகளும் தோன்றா நிலையில் இருப்பவைகளும் நீயே. உயிர்களுக்கு 'யான் எனது' என்னும் ஜீவ வியக்தியைக் கொடுத்திருப்பவனும் நீயே. இவை யாவுக்கும் ஈசனாய் இருப்பவனும் நீயே; இவையாவின் செயல்களெல்லாம் உண்மையில் உன் செயல்களாம், அளவு கடந்த உன் மகிமைகளை என்னால் எப்படி விளக்க முடியும்!

ஐம்பூதங்களுள் நீர் இத்திருப்பாடலில் சேர்க்கப்படவில்லை யெனினும் அதை நாம் சேர்த்துக்கொள்வது முறை. யாவும் ஈசன் சொரூபம், யாவும் அவன் செயல் என்று அறிந்துகொள்வது அறிவாகும்.

உபநி-33 பக்கம் 247 பார்க்கவும்.

16. வாழ்த்துவதும் வானவர்க
டாம்வாழ்வான் மனநின்பாற்
றாழ்த்துவதுந் தாமுயர்ந்து
தம்மையெல்லாந் தொழவேண்டிச்

சூழ்த்துமது கரமுரலுந்
தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான்
யானுமுன்னைப் பரவுவனே.

வாழ்த்துவதும் வானவர்கள்
தாம் வாழ்வான் மனம் நின்பால்
தாழ்த்துவதும் தாம் உயர்ந்து
தம்மை எல்லாம் தொழவேண்டிச்
சூழ்த்து மதுகரம் முரலும்
தாரோயை நாய் அடியேன்
பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான்
யானும் உன்னைப் பரவுவனே.

வானவர்கள்-தேவர்கள். சூழ்த்து-சூழ்ந்து. மதுகரம்-தேனீ. முரலும்-ஒலிக்கின்ற. தார்-மாலை. தாரோயை-மலர்மாலையணிந்திருக்கிற உன்னை. பரவுவன்-துதித்து வணங்குவேன்.

தேனீக்கள் ரீங்காரமிட்டு மொய்த்துக் கொண்டிருக்கும் மலர் மாலையை அணிந்திருக்கும் அண்ணலே, தேவர்கள் நெடிது வாழ்ந்திருத்தல் பொருட்டும், பிறர் தம்மைத் தொழுதற்கான பதவியைப் பெறுதற் பொருட்டும் தங்கள் மனதை நின்பால் செலுத்தி உன்னை வணங்குகின்றனர். சிறியேனாகிய நான் பிறவித் தளையினின்று விடுபடுதற்பொருட்டு உன்னை வழுத்துவேன்.

சுயநலத்தை நாடித் தேனீக்கள் மலரண்டை வருவது போன்று தேவர்களும் நரர்களும் போகத்தையும் பதவியையும் நாடி இறைவனிடம் வருகின்றனர். அவர்கள் செய்வது காமியப் பிரார்த்தனையாகும். நல்ல ஆத்ம சாதகன் பிறப்பினின்று முக்தியடைதல் பொருட்டுப் பரமனைப் போற்றுகிறான். அவன் செய்வது நிஷ்காமிய பிரார்த்தனை. நித்திய அநித்திய வஸ்து விவேகம் படைத்திருப்பவன் நிஷ்காமிய பிரார்த்தனை பண்ணுகிறான். அவனே நல்லறிவு படைத்தவனாகிறான். இறைவனிடமிருந்து வேண்டியதை வேண்டியவாறு பெறலாம். பின்பு நித்திய வஸ்துவாகிய இறைவனையே பெற முயலுவது அறிவாளியின் செயலாம்.

17. பரவுவா ரிமையோர்கள்
பாடுவன நால்வேதங்
குரவுவார் குழன்மடவாள்
கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பி
னடியார்கண் மேன்மேலுன்
னரவுவார் கழலிணைகள்
காண்பாரோ வரியானே.

பரவுவார் இமையோர்கள்
பாடுவன நால்வேதம்
குரவுவார் குழல் மடவாள்
கூறு உடையாள் ஒருபாகம்
விரவு வார் மெய்அன்பின்
அடியார்கள் மேன்மேல் உன்
அரவுவார் கழல் இணைகள்
காண்பாரோ அரியானே.

பரவுவார்-வாழ்த்தி வணங்குவார்கள். இமையோர்கள்-தேவர்கள். குரவு-குராமலர். வார்-நீண்ட. மடவாள்-உமாதேவியார். விரவுவார்-கலந்துகொள்வார்கள். அரவு-ஓசை. அரியானே-அரியவனே.

யாராலும் அறியப்படாதவனே, தேவர்கள் உன்னை முன்னிலையில் வைத்துப் பாராட்டுகின்றனர். வேதங்கள் உன்னைப் படர்க்கையில் வைத்துப் பாடுகின்றன. குராமலரை யணிந்த நீண்ட கூந்தலையுடைய உமாதேவி உனது சொரூபத்தின் இடப்பக்கமாகின்றாள். உன்னிடம் பேரன்பு பூண்டுள்ள அன்பர்கள் திரும்பத் திரும்ப உன்னோடு கலக்கின்றனர். ஒலிக்கின்ற நீண்ட கழல்களை அணிந்திருக்கும் உன் திருவடிகளை இவர்களுள் யார்தான் முற்றும் கண்டிருக்கின்றனர்? யாருமில்லை!

மனம் வாக்கு காயம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டுள்ள பரவஸ்துவை மனதைக்கொண்டோ, வாக்கைக் கொண்டோ, காயத்தைக் கொண்டோ எந்த ஜீவனாலும் முழுதும் அறிந்துகொள்ள முடியாது. அவரவர் பண்புக்கு ஏற்ப ஈசுவரனது மகிமையைச் சிறிது அவர்கள் அறிந்து கொள்கின்றனர். ஸாதகன் இக்கோட்பாட்டை ஞாபகத்தில் வைப்பது அறிவு ஆகும்.

18. அரியானே யாவர்க்கு
மம்பரவா வம்பலத்தெம்
பெரியானே சிறியேனை
யாட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன்
வியந்தலறே னயந்துருகேன்
றரியேனு ஞமாறென்
சாவேனுன் சாவேனே.

அரியானே யாவர்க்கும்
அம்பரவா அம்பலத்து எம்
பெரியானே சிறியேனை
ஆட்கொண்ட பெய்கழல்கீழ்
விரை ஆர்ந்த மலர்தூவேன்
வியந்து அலறேன் நயந்து உருகேன்
தரியேன் நான்ஆம் ஆறுஎன்
சாவேன் நான் சாவேனே.

அம்பரவா-சித் ஆகாசம் அல்லது சிதம்பர ரகசியம் ஆனவனே. அம்பலத்து எம் பெரியானே-சபாபதியே. பெய்கழல்-அணிந்துள்ள கழல். விரை-மணம். நயந்து-அன்போடு கூடி. தரியேன்-இப்படி இருக்கமாட்டேன்.

நீ சிதம்பர ரகசியமாக அல்லது நிர்க்குண சொரூபமாயிருப்பது யாருக்குமே விளங்காது. மற்று நீ சபாபதியாயிருந்து அற்பனுகிய என்னை ஆட்கொண்டாய்; அதில் நான் நிலைபெறுதல் பொருட்டு உன் திருவடிகளில் மணமலர் தூவவில்லை; உன் செயலை அதிசயித்து ஆரவாரம் செய்யவில்லை; அன்பால் நெஞ்சம் உருகவில்லை. பொருந்தாத இவ்வாழ்வை நான் வைத்திருக்கமாட்டேன். நான் உய்யும் வழி யாது? நான் செத்தே போவேன்.

நிர்க்குண பிரம்மம், தகராலயம், சிதாகாசம், சிதம்பர ரகசியம்—இவை யாவும் ஒரு பொருள்கிளவிகள். மனதுக்கு அப்பால் உள்ள இந்நிலையானது மனதோடுகூடிய யாருக்குமே விளங்காது. பின்பு சிவனார் சபாநாயகனுயிருப்பது அடியார்களுக்கு விளங்குகிறது. அவன் பக்தனை ஆட்கொண்டதை உறுதிப்படுத்துதற்குத் திரி

கரணங்களால் அவனை வழுத்தாதிருப்பது சாவதிலும் கொடியதாம். பரபோதம் அடையப்பெற்ற ஆத்ம சாதகன் அதை வளர்க்காவிடில் அவன் தற்கொலை செய்துகொண்டவன் ஆகிறான் என்பது ஞானயோகக் கோட்பாடு. இது ஈண்டு அறிவுறுத்தப்படுகிறது.

19. வேனில்வேண் மலர்க்கணைக்கும்
வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும்
பதைத்துருகும் பாழ்நெஞ்சே
யூனெலா நின்றுருகப்
புகுந்தாண்டா னின்றுபோய்
வானுளான் காணாய்நீ
மாளாவாழ் கின்றாயே.

வேனில் வேள் மலர்க்கணைக்கும்
வெள் நகை செவ் வாய்க் கரிய
பானல் ஆர் கண்ணியர்க்கும்
பதைத்து உருகும் பாழ் நெஞ்சே
ஊன் எலாம் நின்றுஉருகப்
புகுந்து ஆண்டான் இன்றுபோய்
வான் உளான் காணாய் நீ
மாளா வாழ்கின்றாயே.

வேனில்வேள் - வசந்தகால மன்மதன். மலர்க்கணை - புஷ்ப பாணம். வெள்நகை-வெள்ளையான பற்கள். செவ்வாய்-சிவந்த உதடு. கரியபானல் ஆர்-கருங்குவளை மலரையொத்த. கண்ணியர்-கண்களையுடைய மாதர்.

மன்மத பாணத்துக்கும் காமத்துக்கும் வசப்பட்டுள்ள மனதே, நீ பாழாய்ப்போகின்றாய். உருவம் எடுத்து நம்மை ஆளவந்த ஈசன் இன்று அருவமாயிருக்கிறான். அவனைக் குறித்து ஏழுதும் உருகுவாயாகில் நீ உய்வு அடைவாய்.

காமநோய்க்கு உட்பட்டவர் ஒருபொழுதும் பரமனை அடையார். மன்மத தஹனம் செய்தவரே ஈசனை அடைவார்கள் என்னும் கோட்பாடு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

20. வாழ்கின்ருய் வாழாத
நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்ரு யாழாமற்
காப்பானை யேத்தாதே
சூழ்கின்ருய் கேடுனக்குச்
சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்ருய் நீயவலக்
கடலாய வெள்ளத்தே.

வாழ்கின்ருய் வாழாத
நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்ருய் ஆழாமல்
காப்பானை ஏத்தாதே
சூழ்கின்ருய் கேடு உனக்குச்
சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்ருய் நீ அவலம்
கடல் ஆய வெள்ளத்தே.

சூழ்கின்ருய்-கருதுகின்ருய். அவலக்கடல்-துன்பக்கடல்.

பெருவாழ்வு வாழத்தெரியாத நெஞ்சமே, நீ புல்லிய வாழ்வு வாழ்கின்ருய். தீவினையில் அகப்பட்டு அதனுள் அழுந்துகின்ருய். அப்படி அழுந்தாமல் காப்பாற்றும் கடவுளை வணங்காது உனக்கு நீயே கேட்டைத் தேடிக்கொள்ள நினைக்கின்ருய். உனக்கு நான் திரும்பத் திரும்ப இடித்துரைக்கின்றேன். ஆயினும் நீ துன்பக் கடலில் மூழ்குகின்ருய்.

மனதின் அறியாமையே மனிதன் படும் துன்பத்துக்கெல்லாம் காரணம். விஷய சுகத்தில் பற்றுவைக்குமளவு அது துன்பமாக வடிவெடுக்கும். விவேகம் படைத்தவனுக்கு இவ்வுண்மை விளங்குகிறது.

---

3. சுட்டறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சுட்டு என்னும் சொல் சுட்டறிவு அல்லது சுட்டுணர்வைக் குறிக்கிறது. பஞ்சேந்திரியங்களுக்கு விஷயமாவதெல்லாம் சுட்டறிவு. அந்தக்கரணங்களாகிய மனம்,

புத்தி, அஹங்காரத்தால் கிரகிக்கப்படுவதெல்லாம் சுட்டுணர்வு. இங்ஙனம் ஜீவாத்மனுக்கு எட்டுகிற பிரகிருதி சம்பந்தமான விஷயங்களில் அவன் பற்றுவைக்கிறான். பற்றுதல் ராகம் (राग:) எனப் பகரப்பெறுகிறது. பற்றற்ற நிலை விராகம் அல்லது வைராக்கியம் ஆகிறது. ஆகச் சுட்டறுத்தல் என்பது வைராக்கியத்தைப் பெறுதலாம்.

21. வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய்
விண்ணோர் பெருமானே யெனக்கேட்டு
வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னையாண்டாய்க்
குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாம் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே.

வெள்ளம் தாழ்விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளம் தாழ்உறு புனலில் கீழ்மேல்ஆகப்
பதைத்துஉருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளம்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பு எல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளம்தான் பாயாதால் நெஞ்சம் கல்ஆம்
கண் இணையும் மரம்ஆம் தீவினையினேற்கே.

விடையாய்-காளை வாகனத்தையுடையவனே. **வேட்ட நெஞ்சு ஆய்**-ஆசைப்பட்ட மனதையுடையவனாய். **புனலில்**-நீரில்.

உபநிஷத் மந்த்ரம் —34.

यत्र नान्यत्पश्यति नान्यच्छृणोति नान्यद्विजानाति स भूमा ।
யத்ர நான்யத்பச்யதி நான்யச்ச்ருணோதி
நான்யத்விஜாநாதி ஸ பூமா ।

(*சாந்தோக்யோபநிஷதம் 7-24-1.*)

यत्र யத்ர எதன்கண் अन्यत् न पश्यति அன்யத் ந பச்யதி வேறு எதையும் ஒருவன் காண்கிறதில்லையோ अन्यत् न

கங்காதரா என்றும், ஜடாதரா என்றும், ரிஷபாருடா என்றும், மஹாதேவா என்றும் உன்னை அழைப்பதைக் கேட்ட மாத்திரத்தில் உன் அன்பர்கள் அருள்வேட்கையெடுத்துப் பரவசமடைகின்றனர். பேர் அருவி விழ்கின்ற மடுவினுள் தலைகீழாக மாட்டிக்கொண்டவர்கள் உயிர் தப்பிக்கத் திணறுவது போன்று உன் அன்பர்கள் உன் அருளைப் பெறப் பேர் அவா உறுகின்றனர். அன்னவர்களைக் காத்திருக்க வைத்துவிட்டு என்னை நீ ஆட்கொண்டுள்ளாய். அவர்கள் பெற்றுள்ள பேர் அவாவைப் பெறுதற்கு அடியேனது சிறு நெஞ்சம் போதாது. உள்ளங்கால் முதல் உச்சியளவு நான் நெஞ்சு ஆகி உருகவேண்டும். அவர்களுக்கு நிகராக அன்புக் கண்ணீர் மல்குதற்கு எனக்கு இரண்டு கண்கள் போதா. உடம்பெல்லாம் கண்ணாய் அவைகளினின்று கண்ணீர் பெருகி வெள்ளமாய்ப் பாய்தல் வேண்டும். ஆனால் என் தந்தையே, இந்தச் சிறு நெஞ்சமும் கல்நெஞ்சமாகி உருகாதிருக்கிறது. உலர்ந்த மரக்கட்டையில் செய்த கண்கள் போன்று என் கண்கள் இரண்டும் வறண்டு கிடக்கின்றன. என் வினை அவ்வளவு கொடியது.

அண்ணலின் இக்கூற்றை வாச்சியார்த்தம் பண்ணி நாம் எடுத்துக்கொள்ளலாகாது. பொருள் ஆசை கொண்டவர்களுக்கு எவ்வளவு பொருள் சேர்ந்தாலும் போதாது. அருள் நாட்டம் கொண்டவர்களுக்கு இறைவன் எவ்வளவு அருள் சுரந்தாலும் போதாது. ஆனால் பொருள் ஆசை மனிதனைப் பாழ்படுத்துகிறது. அருள் ஆசையோ அவனை மேலும் மேலும் உய்விக்கிறது.

மஹாபாவம் அல்லது பராபக்தியின் உச்ச நிலையை ஈண்டுக்காண்கிறோம். இந்நிலையைச்சிந்திக்குமளவு, இதில் ஊறியிருக்குமளவு ஆத்மசாதகன் உயர்நிலையடைவான்.

शृणोति அன்யத் ந ச்ருணோதி வேறு எதையும் கேட்கிறதில்லையோ अन्यत् न विजानाति அன்யத் ந விஜாநாதி வேறு எதையும் அறிகிறதில்லையோ सः भूमा ஸ: பூமா அது அகண்ட வஸ்து.

எதற்கு அன்னியமாக வேறு எதையும் ஒருவன் காண்கிறதில்லையோ, வேறு எதையும் கேட்கிறதில்லையோ, வேறு எதையும் அறிகிறதில்லையோ அது அகண்டவஸ்து.

மனதில் மாறுபடுகிற இரண்டு ஆசைகள் ஏககாலத்தில் தோன்றுவதில்லை. உலக ஆசைகள் நீங்கவேண்டுமென்று எதிர்மறையில் எண்ணுவது உதவாது. கடவுள் நாட்டம் அதிகரிக்குமளவு உலக ஆசைகள் அகன்று போய்விடுகின்றன. அது வைராக்கியமாகும்.

22. வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய் போல
வினையனு னென்றுன்னை யறிவித் தென்னை
யாட்கொண்டெம் பிரானுனுய்க் கிரும்பின்-
யனையநான் பாடேனின் ருடே னந்தோ [பாவை
வலறிடே னுலறிடே னுவி சோரேன்
முனைவனே முறையோநா னுன வாறு
முடிவறியேன் முதலந்த மாயி னுனே.

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போது நான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன் நான் என்று உன்னை அறிவித்து என்னை
ஆட்கொண்டு எம்பிரான் ஆனாய்க்கு இரும்பின்-
[பாவை
அனைய நான் பாடேன் நின்று ஆடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோ நான் ஆன ஆறு
முடிவு அறியேன் முதல் அந்தம் ஆயினனே.

பார்ப்பதும் கேட்பதும் அறிவதும் கரணங்களின் துணைகொண்டு நிகழ்கின்றன. திரிபுடி அல்லது காண்போன், காணப்படுபொருள், காணுதல் என்னும் மூன்று கூறுகள் ஆங்கு உள. உணர்ச்சியின் வேகம் அகண்டாகாரமாக வடிவெடுக்கும்போது அந்த மூன்று கூறுகள் பரபோதம் என்னும் ஒரேகூருக விரிவடைகின்றன. பக்தியின் உச்சநிலை அகண்டமாக விரிவடைகிறது. எது அகண்டமோ அதில் பல வஸ்துக்கள் இல்லை; ஒன்றுதான் உளது. அது அத்வைதநிலை. ஆகவே அனன்ய பக்தி அத்வைதத்தில் கொண்டு சேர்க்கிறது.

முனைவனே-இறைவா. முதல் அந்தம் ஆயினனே-தோற்றத் துக்கும் ஒடுக்கத்துக்கும் காரணமாய் இருப்பவனே. வினையிலே கிடந்தேனை-கரும பந்தத்தில் உழலும் என்னை. புகுந்து நின்று-பிரசன்னமாகி. போது-வா. நான் வினைக்கேடன் என்பாய் போல-நான் வினையை ஒழிப்பவன் என்று சொல்லுவது போன்று. இனையன் நான் என்று உன்னை அறிவித்து-நான் இத்தன்மை வாய்ந்தவன் என்று உன்னை அறிமுகப்படுத்தி. என்னை ஆட்கொண்டு-என்னை உனக்கு உரியவன் ஆக்கி. எம்பிரான் ஆனாய்க்கு-எங்கள் தலைவனாகிய உன் பொருட்டு. இரும்பின் பாவை அனைய நான்-இரும்புப் பொம்மை போன்ற நான். பாடேன் நின்று ஆடேன்-பாடுவதையும் ஆடுவதையும் செய்கிறேனில்லை. அந்தோ-ஐயோ. அலறிடேன்-கதறுகிறேனில்லை. உலறிடேன்-என் உடல் வற்ற வில்லை. ஆவிசோரேன்-நான் மூர்ச்சை போகவில்லை. முறையோ நான் ஆன ஆறு-நான் இப்படியானது முறையாகுமா? முடிவு அறியேன்-இது எப்படி முடியும் என்பதை அறிந்திலேன்.

ஈசா, உயிர்களின் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் காரணமாயிருப்பவனே, கரும பந்தத்துக்கு ஆளாயிருக்கும் என் முன் நீ வந்து, என்னை வாவென்று அழைத்து, நீ வினைத்தளையை அகற்றும் பரமன் என்று உன்னை அறிமுகப்படுத்தி என்னை ஆட்கொண்டாய். நீ எங்கள் தலைவன். உன்பொருட்டு, இரும்புப் பொம்மை போன்ற நான் பாடவுமில்லை, ஆடவுமில்லை, வற்றி வாடவுமில்லை, பரவசத்தால் மூர்ச்சை போகவுமில்லை, இப்படி நான் நடந்துகொள்வது சரியா? என் கதி என்னவாகுமென்று எனக்கு விளங்கவில்லை.

தலைவனைக் கண்டறிந்ததும் உயிர்கள் தாமாகத் தங்களைத் தலைவனிடம் ஒப்படைத்து விடுகின்றன. கனவினின்று விழித்துக்கொண்டவன் அக்கனவில் பெற்ற பொருள்களிடத்து வைராக்கியம் பூணுவது போன்று, இறைவனுக்கு ஆட்படுபவன் தன் வினையைச் சுட்டறுக்கிறான்.

நா உலர்தல், உடல் வற்றுதல், மூர்ச்சை போதல் ஆகியவை மஹாபாவத்தின் அறிகுறிகளாம். மாணிக்கவாசகரிடத்து இவையெல்லாம் இருந்தும், பணிவின் காரணமாக இவையில்லையென்கின்றார்.

23. ஆயநான் மறையவனு நீயே யாத
லறிந்தியா னியாவரினுங் கடைய னுய
நாயினே னுதலையு நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோ ரன்ப னென்பே
னுயினே னுதலா லாண்டு கொண்டா
யடியார்தா மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதானின் பெருமை யன்றே
யெம்பெருமா னென்சொல்லிப் பேசுகேனே.

ஆய நான்மறையவனும் நீயே ஆதல்
அறிந்து யான் யாவரினும் கடையன் ஆய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டும்
நாதனே நான் உனக்கு ஓர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டுகொண்டாய்
அடியார் தாம் இல்லையே அன்றி மற்றுஓர்
பேயனேன் இதுதான் நின்பெருமை அன்றே
எம்பெருமான் என் சொல்லிப் பேசுகேனே.

ஆய-ஆராய்ந்து பார்க்குமிடத்து. நாதன்-ஈசன்.

ஆராய்ந்து பார்க்குமிடத்து நீயே யாவர்க்கும் பெரியவன் என்று நான்கு வேதங்களும் முறையிடுகின்றன. நான் யாவர்க்கும் சிறியவன் என்பதும் வெளியாகிறது. ஆயினும் நான் உனக்குப் புறம்பானவன் அல்லன் என்பதும் அந்த ஆராய்ச்சியின் விளைவாம். நாயையும் பேயையும் ஒத்த நான் உனக்கு அன்பன் என்று சொன்னதும் நீ அதை உறுதிப்படுத்தி விட்டாய். உனக்கு வேறு அன்பர்கள் இல்லாமையினால் நீ இப்படிச் செய்யவில்லை. தகுந்த அன்பர்கள் பலர் உனக்கு இருக்கின்றனர். கருணையினால் நீ இங்ஙனம் செய்தாய். உன் மகிமையை நான் எப்படிக் கூற முடியும்?

இராஜகுமாரன் ஒருவன் எவ்வளவு கீழ்மையுறினும் அவன் கீழோருக்கு உரியவன் ஆகான். அவன் உண்மையில் ராஜகுமாரனே. அங்ஙனம் எவ்வளவுதான் கீழ்மைப் படினும் ஜீவாத்மன் உண்மையில் ஈசனுக்கே உரியவன். இதை அறிவுறுத்துமளவு ஜீவனுக்கு வைராக்கியம் வளர்கிறது.

24: பேசிற்ரு மீசனே யெந்தா யெந்தை
பெருமானே யென்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்ருன் றிருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்ரு
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
யாண்டானே யவாவெள்ளக் கள்வனேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தா யந்தோ
வென்னைநீ யாட்கொண்ட வண்ணந்தானே.

பேசின் தாம் ஈசனே எந்தாய் எந்தை
பெருமானே என்று என்றே பேசிப் பேசிப்
பூசின் தாம் திருநீறே நிறையப் பூசிப்
போற்றி எம்பெருமானே என்று பின்ரு
நேசத்தால் பிறப்பு இறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவா வெள்ளம் கள்வனேனை
மாசு அற்ற மணிக்குன்றே எந்தாய் அந்தோ
என்னை நீ ஆட்கொண்ட வண்ணம் தானே.

பின்ரு நேசத்தால்-பிறழாத மெய்யன்பினுல். மாசு அற்ற மணிக்குன்றே-சுயஞ்சோதியாய் ஒளிரும் மலையே.

தேஜோ மயமான எந்தையே, பேச வேண்டியதாயின், உன் அன்பர்கள் ஈசா, எந்தாய், எம் தந்தை, எம்பெருமான் என்று ஓயாது உன்னையே பற்றிப் பேசுவார்கள். அவர்கள் திருநீற்றையே நிரம்பப் பூசுவார்கள். உன்னிடத்து மாருத அன்பு பூண்டதினுல் அவர்கள் ஜனன மரணத்தைக் கடந்தனர். நீயும் அவர்களை ஆட்கொண்டாய். பின்பு உலக ஆசை வெள்ளத்தில் மூழ்கிய கள்வனுகிய என்னையும் நீ ஆட்கொண்ட தன்மைதான் என்னே!

பொம்மைகளை வைத்து விளையாடும் ஊக்கத்தில் குழந்தையொன்று தன் தாயை மறந்திருக்கிறது. ஆனல் தாயைக் கண்டதும் அது பொம்மைகளை ஒதுக்கி வைத்து விட்டு அவளிடம் ஓடுகிறது. அங்ஙனம் உலகப்பற்று வைத்திருக்கும் ஆத்ம சாதகனொருவனுக்கு இறைவன் அருள் வாய்க்கும்போது வைராக்கியம் தானுக வாய்க்கிறது.

25. வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
னேகனேக னணுவணுவி லிறந்தா யென்றங்
கெண்ணந்தான் றடுமாறி யிமையோர் கூட்ட
மெய்துமா றறியாத வெந்தா யுன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டா
யெம்பெருமா னென்சொல்லிச் சிந்திக்கேனே.

வண்ணம்தான் சேயது அன்று வெளிதே அன்று
அனேகன் ஏகன் அணு அணுவில் இறந்தாய் [என்று அங்கு
எண்ணம்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்தும் ஆறு அறியாத எந்தாய் உன்தன்
வண்ணம்தான் அது காட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்கள் அவை காட்டி வழி அற்றேனைத்
திண்ணம்தான் பிறவாமல் காத்து ஆட்கொண்டாய்
எம்பெருமான் என் சொல்லிச் சிந்திக்கேனே.

வண்ணந்தான்-நிறந்தான். சேயது அன்று-சிவப்பானது அன்று. வெளிதேயன்று-வெள்ளையானதுமன்று. அணுவில் இறந்தாய்-அணுவைவிட மிகச் சிறியவனே. வண்ணம்-நிஜசொருபம். வழியற்றேனை-மார்க்கம் தெரியாதிருந்த என்னை. திண்ணம்தான்-ஐயம் திரிபு அற.

நீ நிறத்தில் சிவந்தவனு, வெளுத்தவனு, நீ அநேகனு ஏகனு, நீ அணு வடிவினனு, பரம அணு வடிவினனு, இப்படி யெல்லாம் ஆராய்ந்து தேவர்கள் குழப்பமடைந்தனர். உன்னை அடையும் மார்க்கம் அறியாதிருந்த எனக்கு அதைக் காட்டியருளி, உனது நிஜசொருபமானது இவை யாவுக்கும் அப்பாற்பட்டது என்பதை யும் அனுபூதியில் விளக்கினாய். என் ஐயங்கள் அகன்று போயின. நான் பிறப்பு இறப்புக்கு அப்பாற்பட்டவன் என்பதையும் அறிந்து கொண்டேன். சொல்லாலும் சிந்தனையாலும் உன்னைப் போற்று வது குறைபட்ட வழிபாடாம்.

இந்திரியங்களைத் தேவர்கள் எனப் பாகுபடுத்து வது உபநிஷத சம்பிரதாயமாகும். இந்திரியங்களுக்குத் தலைமை வகிக்கின்ற மனது தேவேந்திரனோடு ஒப்பிடப்

படுகிறது. பரம்பொருள் இந்திரியங்களுக்குப் புலனுகாதது. மனதும் அதைக் கிரகிக்க வல்லதன்று. இந்திரியங்களையும் மனதையும் ஒதுக்கி வைக்கவல்ல ஜீவாத்மாவானது பரமாத்மாவைச் சுவானுபூதியில் உணர்கிறது. ஆனல் தன் அனுபவத்தை அது வாக்கால் விளக்கமுடியாது. இந்திரியங்களிடத்தும் மனதினிடத்தும் பற்றை ஒழித்தல் என்னும் வைராக்கியம் பூணுவது ஆத்மசாதனத்துக்கு இன்றியமையாத கோட்பாடாகும்.

உபநி—29. பக்கம் 211ல் காண்க.

26. சிந்தனைநின் றனக்காக்கி நாயி .னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

சிந்தனை நின்தனக்கு ஆக்கி நாயினேன் தன்
கண் இணை நின் திருப்பாதம் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்கு உன்
மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை
மால் அமுதம் பெரும் கடலே மலையே உன்னைத்
தந்தனை செம் தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே இரண்டும்இல் இத்தனியனேற்கே.

உபநிஷத் மந்த்ரம் — 35

ॐ आप्य यन्तु ममाङ्गानि वाक् प्राणश्चक्षुः
श्रोत्रमथो बलमिन्द्रियाणि च सर्वाणि ।
सर्वं ब्रह्मौपनिषदं माहं ब्रह्म निराकुर्यां मा
मा ब्रह्म निराकरोत् अनिराकरणम् अस्तु अनिराकरण मे ऽस्तु ।
तदात्मनि निरते य उपनिषत्सु धर्मास्ते मयि सन्तु ते मयि सन्तु ॥

போதுக்கு ஆக்கி-மலருக்கு உரியதாக்கி. ஐம்புலன்கள் ஆர-ஐம்பொறிகளும் நுகரும்படி. விச்சை-வியக்கத்தக்க வித்தை.

பேர் அமிர்தப் பெருங்கடலே, மலையே, செந்தாமரைக் காடு போன்ற மேனியனே, சுயஞ்ஜோதியே, என் மனதை உனக்கு உரியதாக்கினாய்; கண் இரண்டும் உன் திருவடிக் கமலங்களைக் காண்பதற்கு ஏவினாய்; செய்யும் வழிபாடும் உன் திருவடிகளுக்கு உரியதாக்கினாய்; என் பேச்செல்லாம் உன் பெருமையைப் புகழ்தற்குப் பயன்படுத்தினாய்; ஐம்பொறிகளுக்கும் உனது அருட் பிரசாதத்தை வழங்கினாய். என்னுள்ளே நீ பிரவேசித்திருப்பது வியப்புக்குரிய வித்தையாம். கரணங்களை ஒடுக்குதல், கரணங்களை வழிபாட்டுக்குப் பயன்படுத்துதல் ஆகிய இரண்டு நெறிகளையும் அறியாத என்னை நீ இங்வனம் ஆட்கொண்டுள்ளாய்.

ஐம்பொறிகளை அவிப்பதும் மனோநாசம் பண்ணுவதும் ஞானயோகத்துக்குரிய சாதனங்கள். அம்முறை 25வது திருப்பாடலில் விளக்கப்பட்டுள்ளது. அது எதிர்மறை உபாயம்.

அகக்கரணங்கள் புறக்கரணங்கள் ஆகிய யாவையும் இறை வழிபாட்டுக்கே பயன்படுத்துவது அதற்கு மாறுயுள்ள உடன்பாட்டு முறையாகும். இது பக்தியோக சாதனம். ஆலய வழிபாட்டில் ஐம்பொறிகளும் ஈடுபடுகின்றன. கண்கள் விக்கிரகத்தில் மூர்த்தியைக் காண்கின்றன.

ஓம் ஆப்யாயந்து மமாங்கானி வாக் ப்ராண ஸ்சக்ஷு:
ச்ரோத்ரமதோ பலமிந்த்ரியாணி ச ஸர்வாணி ।
ஸர்வம் ப்ரஹ்மௌபநிஷதம் மாஹம் ப்ரஹ்ம நிராகுர்யா மா
மா ப்ரஹ்ம நிராகரோத் அநிராகரணம் அஸ்து அநிரா
கரணம் மே அஸ்து ।

ததாத்மனி நிரதே ய உபநிஷத்ஸு தர்மாஸ்தே மயி
ஸந்து தே மயி ஸந்து ॥

(கேனோபநிஷதம்)

मम अङ्गानि மம அங்கானி என்னுடைய அங்கங்கள் आप्यायन्तु ஆப்யாயந்து உறுதிபெறுவனவாகுக अथो அதோ அங்ஙனமே वाक् வாக் வாக்கும் प्राणः ப்ராண: பிராணனும்

காது அவன் புகழைக் கேட்கிறது. மூக்கு ஆராதனை யோடு சம்பந்தப்பட்ட நறுமணத்தை நுகர்கிறது. நைவேத்தியமான பிரசாதத்தை நாவானது பக்திபூர்வ மாகச் சுவைக்கிறது. பிறகு அது இறைவன் நாமத்தையே நவிலுகிறது. மூர்த்திக்குச் சாத்திய பூமாலையையும் சந்த னத்தையும் பக்தன் மேனியில் அணியும்போது அவனு டைய ஊறு அல்லது ஸ்பரிச உணர்ச்சி இறைவனோடு இணைக்கப்படுகிறது. இப்படிக் கருவி கரணங்களை யெல் லாம் இறைவழிபாட்டிலேயே பயன்படுத்துவது உடன் பாட்டு முறையாகும்.

மனத்தையும் பொறிகளையும் அடக்குதல் ஆகிய எதிர் மறை உபாயத்தையோ, அவை யாவையும் இறைவணக் கத்துக்கே பயன்படுத்துதல் ஆகிய உடன்பாட்டு உபா யத்தையோ தாம் கையாளாமையினால் "இரண்டும் இல் இத்தனியனேற்கே" என்கிறார் மாணிக்கவாசகர்.

चक्षुः சக்ஷு: கண்ணும் श्रोत्रम् ச்ரோத்ரம் காதும் बलम् பலம் உடல் வலிவும் सर्वाणि इन्द्रियाणि च ஸர்வாணி இந்த்ரியாணி ச எல்லா இந்திரியங்களும் (உறுதி பெறுக) औपनिषदम् ஔப நிஷதம் உபநிஷதங்களின் (குறியாகிய) ब्रह्म सर्वम् ப்ரஹ்ம ஸர்வம் பிரம்மமே அனைத்துமாகிறது अहम् அஹம் நான் ब्रह्म ப்ரஹ்ம பிரம்மத்தை मा निराकुर्याम् மா நிராகுர்யாம் நிராகரி யாதிருப்பேனாக ब्रह्म ப்ரஹ்ம பிரம்மமானது मा மா என்னை मा निराकरोत् மா நிராகரோத் நிராகரியாதிருக்கட்டும் अनिरा करणम् अस्तु அநிராகரணம் அஸ்து நிராகரித்தல் நிகழா திருக்கட்டும் अनिराकरणम् मे अस्तु அநிராகரணம் மே அஸ்து நிராகரித்தல் என்னிடத்தில் நிகழாதிருக்கட்டும் उपनिषत्सु உபநிஷத்ஸு உபநிஷதங்களில் ये धर्माः யே தர்மா: என் னென்ன தர்மங்கள் (இருக்கின்றனவோ) ते தே அவை யாவும் तदात्मनि निरते ததாத்மனி நிரதே அந்த ஆத்மனிடத்து பக்தி வைத்துள்ள मयि सन्तु மயி ஸந்து என்னிடத்தில் இருக்கட்டும்.

என்னுடைய அங்கங்கள் உறுதி பெறுவனவாகுக. அங் ஙனமே என் வாக்கும் பிராணனும் கண்ணும் காதும் உடல்

இறைவன் செந்தாமரைக்காடு அனைய மேனியனாய் இருப்பதற்கு நிகராக அம்பிகை மஹா பத்மாடவீ ஸம்ஸ்தா-தாமரைப் புஷ்பங்கள் செறிந்த விரிந்த காட்டில் இருப்பவள் என இயம்பப்படுகிறாள். உபாஸனா மூர்த்தியின் மேனி இங்ஙனம் அனுபூதியில் மிளிர்கிறது. கருவிகரணங்களை யெல்லாம் பகவத் சேவையிலேயே பயன்படுத்துவதும் சுட்டறுத்தல் அல்லது வைராக்கியமாகும். தனிச்சுடர் என்பதும் பிரபஞ்சப் பொருள்களில் உள்ள சுடருக்கு அப்பாற்பட்டதாகிறது.

27. தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்

வலிவும் இந்திரியங்கள் யாவும் உறுதி பெறுக. உபநிஷதங்களின் லட்சியமாகிய பிரம்மமே அனைத்துமாயிருக்கிறது. பிரம்மத்தை நான் புறக்கணியாதிருப்பேனாக. பிரம்மம் என்னைப் புறக்கணியாதிருக்கட்டும். புறக்கணித்தல் ஆகாது. புறக்கணித்தலை நான் செய்யவே மாட்டேன். உபநிஷதங்களில் என்னென்ன தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவையாவும் பிரம்மத்தின்கண் பக்தி வைத்துள்ள என்னிடத்தில் நிலைத்திருக்கட்டும்.

எல்லாம் சிவமயம் என்னும் கோட்பாட்டுக்கு ஒப்ப எல்லாம் பிரம்ம மயம் என்கின்றன உபநிஷதங்கள். என்னுடைய அகக்கரணங்கள் புறக்கரணங்கள் ஆகிய யாவும் உறுதி பெற்று பிரம்ம உபாசனைக்கே அவை யாவும் பயன்படுக. என்னை யாண்டும் காப்பாற்றுதற்கே பிரம்மம் இருக்கிறது. ஆதலால் நான் பிரம்மத்தைச் சார்ந்திருத்தல் வேண்டும். பிரம்மத்தை நான் சார்ந்திருக்குமளவு எனக்கு நலன் உண்டாகிறது. தர்மங்கள் யாவும் அதாவது கடமைகள் யாவும் பிரம்மத்தைச் சார்ந்திருப்பதில் பூர்த்தியாகின்றன. திரிகரணங்களால் நான் செய்கின்ற செயல்கள் யாவும் பிரம்மத்துக்கு உரியனவாகுக.

கருவி கரணங்களைக் கடவுள் வழிபாட்டுக்கென்றே பயன்படுத்துவது சுட்டறுத்தலுக்கு நிகராகிறது.

டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்கனேற்கே.

தனியனேன் பெரும் பிறவிப் பௌவத்து எவ்வம்
தடம் திரையால் எற்றுண்டு பற்றுஒன்று இன்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காம வான்சுறவின் வாய்ப்பட்டு
இனி என்னே உய்யும்ஆறு ஒன்றுஎன்று எண்ணி
அஞ்சு எழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லல்
கரை காட்டி ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே.

பௌவத்து-கடலில். எவ்வம்-துன்பம். தடம் திரையால்-பேரலையால் எற்றுண்டு-அறையப்பட்டு. துவர்வாயார்-சிவந்த வாயையுடைய மாதர். காலால்-காற்றால். வான்சுறவின்-பெரும் சுறுவினது. புணை-மரக்கலம். முனைவனே-தலைவனே. மல்லல்-வளம். கரை-நிலம்.

துணை ஏதும் கிடைக்கப்பெறாத நான் பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்கிறேன்; துன்பம் என்னும் பேரலை வந்து மோதுகிறது; மாதர் மயக்கம் என்னும் காற்று வீசி என் மனதைக் கலக்குகிறது. ஆசை என்னும் சுறுமீன் என்னை விழுங்க வருகிறது. இனி உய்யும் வகை யாது என்று பலவாறு எண்ணுகிறேன். இந்த நெருக்கடியில் பஞ்சாக்ஷரமாகிய நமசிவாய என்னும் மரக்கலம், முதல்வா, உனது அருளால் கிடைக்கிறது. அறிவிலியாகிய என்னை நீ முக்தியென்னும் சாசுவதமான பெரு நிலத்தில் கொண்டு சேர்க்கிறாய்.

அற்ப வாழ்வு வாழ்கிற கடைத்தரமான மனிதனுக்குப் பஞ்சாக்ஷர ஜபம் பெருந்துணை புரிந்து, ஆசைகளினின்று அவனை விடுவித்து முக்தியின்கண் கொண்டு சேர்க்கிறது. உலகப் பொருள்களிடத்து வைராக்கியத்தை உண்டுபண்ணுதற்கு இறைவனுடைய நாமஜபம் சிறந்த சாதனமாகிறது.

28. கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டா
னுட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டா
னெம்பெருமான் செய்திட்ட விச்சை தானே.

கேட்டு ஆரும் அறியாதான் கேடு ஒன்று இல்லான்
கிளை இலான் கேளாதே எல்லாம் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசு இட்டு நாயினேற்கே
காட்டாதன எல்லாம் காட்டிப் பின்னும்
கேளாதன எல்லாம் கேட்பித்து என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்து ஆட்கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே.

உபநிஷத் மந்த்ரம்—36.

सत्येन लभ्यस्तपसा ह्येष आत्मा सम्यग्ज्ञानेन ब्रह्मचर्येन नित्यम् ।
अन्तः शरीरे ज्योतिर्मयो हि शुभ्रो यं पश्यन्ति यतयः क्षीणदोषाः ॥

ஸத்யேன லப்யஸ்தபஸா ஹ்யேஷ ஆத்மா
ஸம்யக்ஞானேன ப்ரஹ்மசர்யேன நித்யம் ।
அந்த: சரீரே ஜ்யோதிர்மயோ ஹி சுப்ரோ
யம் பச்யந்தி யதய: க்ஷீணதோஷா: ॥

(முண்டகோபநிஷதம் 3-5)

एषः आत्मा ஏஷ: ஆத்மா இந்த ஆத்மாவானது सत्येन ஸத்யேன சத்தியத்தால் तपसा தபஸா தவத்தால் सम्यग्ज्ञानेन ஸம்யக்ஞானேன நிறை ஞானத்தால் ब्रह्मचर्येन नित्यम् ப்ரஹ்மசர்யேன நித்யம் இடையறு பிரம்மச்சரியத்தால் लभ्यः हि லப்ய: ஹி நிச்சயமாக அடையப்படுகிறது क्षीणदोषाः यतयः க்ஷீணதோஷா: யதய: சித்தமலம் நீங்கப்பெற்ற துறவியர்கள் अन्तः शरीरे हि அந்த: சரீரே ஹி தங்கள் உள்ளத்தின் உள்ளேயே यम् யம் இந்த ஆத்மனை ज्योतिर्मयः ஜ்யோ

கேடு ஒன்று இல்லான்-மாறுபாடு ஏதும் இல்லான். கிளை இலான்-பூரணன். ஞாலத்துள்ளே-உலகத்தில். தவிசு இட்டு-ஆசனம் கொடுத்து. விச்சை-சிவஞானம்.

பூதங்களால் ஆகிய காது கொடுத்துக் கேட்டுப் பரமனை யாரும் அறிந்துகொள்ள முடியாது. அவன் நிர்விகாரி; அவயவங்கள் இல்லாத பூரணன்; ஊனச் செவியில்லாது அவன் அனைத்தையும் கேட்கிறான். உலகத்தவர்கள் உலக போதத்தில் விழித்திருக்கையில் அவர்களுக்கிடையில் எனக்கு உட்கார்ந்திருக்க ஆசனம் கொடுத்துப் பரபோதத்தைஎன்பால் அவன் ஊட்டியருளினான். கரணங்களின் துணையில்லாது சிவபோதத்தை நான் பெறலானேன். பிறப்பு இறப்பு அற்ற ஆத்மசொரூபம் நான் என்பதை அனுபூதியில் அறிந்து கொண்டேன். இறைவன் தந்தருளிய சிவஞானத்தை வாக்கால் விளக்க முடியாது.

கருவி கரணங்களால் அறியப்படுவது பரோக்ஷ ஞானம். அது இவ்வுலக சம்பந்தமானது. சுட்டறுத்தல் என்னும் சாதனங்கள் பயிலுமிடத்து ஆத்ம சாதகனிடம் ஞானக்கண் உருவெடுக்கிறது. அப்பொழுது அவனுக்கு அபரோக்ஷ அனுபூதி வாய்க்கிறது. மனதையும் கடந்த

திர்மய: சுயஞ்ஜோதியாகவும் ஶுப்ர: சுப்ர: தூயதாகவும் பஶ்யந்தி பச்யந்தி காண்கிறார்கள்.

இந்த ஆத்மாவானது ஸத்தியத்தாலும் தவத்தாலும் நிறை ஞானத்தாலும் நைஷ்டிக பிரம்மசரியத்தாலும் நிச்சயமாக அடையப்படுகிறது. பரிபக்குவம் அடைந்த துறவியர்கள் இந்த ஆத்மனைத் தங்கள் உள்ளத்தின் உள்ளேயே ஜோதிர்மயமானதாகவும் தூயதாகவும் காண்கின்றனர்.

தன்னை உடல் சொரூபமாக உணர்பவன் பொய்யன். மாணிக்கவாசகர் தம்மைப் பொய்யன் என்று அடிக்கடி இயம்புவது இக்கோட்பாட்டுக்கு உட்பட்டேயாம். ஸத்வஸ்துவாகிய ஆத்மாவாகத் தன்னை உணர்பவன் சத்திய விரதத்தை அனுஷ்டிக்கிறான். திரிகரணங்களின் செயல்களாகிய மெய்ம்மை, வாய்மை, உண்மை சத்தியத்தில் நிலைபெற்றிருப்பவனுக்கு இயல்பாக வந்தமைகின்றன. சத்திய விரதம் ஆத்ம தரிசனத்துக்கு உற்ற உபாயம்.

அதீத நிலே அது. தான் உண்மையில் அழிவு இல்லாத ஆத்ம சொரூபம் என்பது அப்பொழுது தெளிவாகிறது. பரமனுக்கும் தனக்குமுள்ள தொடர்வு அப்பொழுது உணரப்படுகிறது. நூல் அறிவு அதற்கு உதவாது. பொறிகளும் அதற்கு உதவா. வைராக்கியத்தின் விளைவு இதுவாம்.

29. விச்சைதா னிதுவொப்ப துண்டோ கேட்கின்
மிகுகாத லடியார்தம் மடிய னுக்கி
யச்சந்தீர்த் தாட்கொண்டா னமுத மூறி
யகநெகவே புகுந்தாண்டா னன்பு கூர
வச்சனுண் பெண்ணலியா காச மாகி
யாரழலா யந்தமா யப்பா னின்ற

தவத்தின் வாயிலாக ஆத்ம சாதகன் ஓயாது தன்னைத் தூயவனுகத் திருத்தியமைக்கிருன்.

பரம்பொருள் ஒன்றே பிரபஞ்சமாகவும் எண்ணிறந்த ஜீவர்களாகவும் வடிவெடுத்திருக்கிறது என்னும் ஞானத்தில் உறுதிபெற்றிருப்பது நிறை ஞானமாகிறது.

சிவனுர் காமனைக் காய்ந்ததில் நித்திய பிரம்மசரிய தத்துவம் அடங்கியிருக்கிறது. வியாசர் மகனுகிய சுகப் பிரம்மத்துக்குப் பிறவியிலிருந்தே நைஷ்டிக பிரம்மசரியம் நிலேபெற்றிருக்கிறது. ஆதலால் பரஞானம் அவருக்கு மிக எளிதாயிற்று. ஆத்மசாதகன் பிரம்மசரியத்தில் நிலேபெறுமளவு அனுபூதிக்கு அவன் அருகதையுடையவன் ஆகிருன்.

மனதை மலினப்படுத்துகிற தோஷங்கள் ஆறு இருக்கின்றன. அவையாவன: காமம், குரோதம், உலோபம், மோஹம், மதம், மாச்சரியம். இந்த ஆறு குறைபாடுகளும் முறையே ஆசை, சினம், ஈயாமை, மயக்கம், செருக்கு, பொருமை எனப் பொருள்படுகின்றன. இவையாவும் நீங்கப்பெற்றவனே துறவி. அவன் கருவி கரணங்கள் ஓய்ந்த தொண்டனுகிருன். ஆத்ம சைதன்யம் அவனுடைய உள்ளத்தில் ஒளிர்வது உறுதி.

செச்சைமா மலர்புரையு மேனி யெங்கள்
சிவபெருமா னெம்பெருமான் றேவர் கோவே.

விச்சை தான் இது ஒப்பது உண்டோ கேட்கின்
மிகு காதல் அடியார்தம் அடியன் ஆக்கி
அச்சம் தீர்த்து ஆட்கொண்டான் அமுதம் ஊறி
அகம் நெகவே புகுந்து ஆண்டான் அன்பு கூர
அச்சன் ஆண் பெண் அலி ஆகாசம் ஆகி
ஆர் அழல்ஆய் அந்தம் ஆய் அப்பால் நின்ற
செச்சை மாமலர் புரையும் மேனி எங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே.

விச்சை-வித்தை. அன்பு கூர-அன்பு மிக. அச்சன்-அப்பன். ஆர் அழல் ஆய்-நிறைந்த அக்கினியாகி. செச்சை-வெட்சி. மாமலர்-அழகிய சிவப்புப் பூ. புரையும்-ஒத்துள்ள.

தந்தை, ஆண், பெண், அலி, பஞ்சபூதங்கள் ஆகிய இத்தனையுமாயிருப்பவன் சிவன். இவை யாவும் ஒடுங்குமிடம் அவனே. இவை யாவுக்கும் அப்பால் இருப்பவனும் அவனே. அழகிய வெட்சிப் பூப்போன்று சிறந்த மேனியுடையவன் அவன். பேரன்பே வடிவெடுத்துள்ள தன் அன்பர் கூட்டத்தில் அவன் என்னைச் சேர்த்து வைத்தான். அவர்களோடு சேர்ந்திருக்கும்போது உலகப் பற்று வந்துவிடுமோ என்னும் அச்சமில்லை. அமிர்த சொருபமாக அவன் என் நெஞ்சில் கலந்துள்ளான். இது போன்ற பரவித்தையொன்றை வேறு எங்கேனும் யாராவது கேட்டதுண்டா?

சிவன் அடியார் கூட்டத்தில் அல்லது ஸத் ஸங்கத்தில் ஆத்ம சாதகன் ஒருவன் சேர்ந்துவிட்டால் அது அவனுக்குப் பேராதரவாகிறது; உலகப்பற்று அகலுகிறது. வைராக்கியம் தானே உறுதி பெறுகிறது.

30. தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்குமற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை

உபநிஷத் மந்த்ரம்—37.

महान् प्रभुर्वै पुरुषः सत्वस्यैष प्रवर्तकः ।
सुनिर्मलामिमां प्राप्तिमीशानो ज्योतिरव्ययः ॥

யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோ
மேவினோ மவனடியா ரடியாரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே.

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும் பொழில்கள் பயந்து காத்து அழிக்கும் மற்றை
மூவர் கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாது ஆளும் பாகத்து எந்தை
யாவர் கோன் என்னையும் வந்து ஆண்டு கொண்டான்
யாம் ஆர்க்கும் குடி அல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவன் அடியார் அடியாரோடு
மேல் மேலும் குடைந்து ஆடி ஆடுவோமே.

தேவர்கோ-இந்திரன். செழும் பொழில்கள்-வளமான உலகங்கள். பயந்து-சிருஷ்டித்து. மூர்த்தி-அனைத்துமானவன். மூதாதை-எல்லார்க்கும் முதல்வன். மேவினோம்-கூடினோம். குடைந்து-ஆனந்தக் கடலில் மூழ்கி.

மஹான் ப்ரபுர்வை புருஷ: ஸதவஸ்யைஷ; ப்ரவர்தக: |
ஸுநிர்மலாமிமாம் ப்ராப்திமீசானோ ஜ்யோதிரவ்யய: ||
(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 3—12)

महान् प्रभुः மஹான் ப்ரபு: பெரிய தலைவன் पुरुषः புருஷ: பரமபுருஷன் वै வை நிச்சயமாகவே ईशानः ஈசான: அடக்கியாளுபவ்வன் अव्ययः அவ்யய: அழிவற்றவன் ज्योतिः ஜ்யோதி: ஜோதியாயிருப்பவன் सुनिर्मलां इमां प्राप्तिं ஸு நிர்மலாம் இமாம் ப்ராப்திம் நிர்மலமான இந்த நிலையை (உயிர்கள் அடைதற்பொருட்டு) सत्वस्य ஸத்வஸ்ய உயிர்களின் அறிவை एषः ஏஷ: அவன் प्रवर्तकः ப்ரவர்தக: நடாத்துகிறான்.

பரம புருஷன் பெரிய தலைவனாகிறான். அவன் நிச்சயமாகவே அனைத்தையும் அடக்கியாளுகிற அழிவற்ற அந்தர் ஜோதி (உள் ஒளி) யாயிருக்கிறான். நிர்மலமான இந்த நிலையை உயிர்கள் அடைதற்பொருட்டு அவைகளின் அறிவை அவன் (முக்தி மார்க்கத்தில்) நடாத்துகிறான்.

மகாதேவனைத் தேவேந்திரன் அறியமாட்டான்; மும்மூர்த்திகளுக்கும் அவனே தலைவன். தோன்றியுள்ள அனைவர்க்கும் அனைத்துக்கும் அவனே முழுமுதற்பொருள். உமாதேவியாரை ஒரு பாகத்தில் வைத்துள்ள தந்தை என்னை வலியவந்து ஆட்கொண்டான். அவனைத்தவிர வேறுயாருக்கும் நாங்கள் குடியல்லோம். இனி அஞ்சுதற்கு யாண்டும் ஒன்றுமில்லை. அவன் அடியார் அனைவரும் கூடி ஆனந்த சாகரத்தில் திளைத்திருப்போம்.

சுட்டறுத்தலில் அல்லது பூரண வைராக்கியத்தில் நிலைத்திருப்பவர்க்குச் சிவஞானம் வாய்க்கிறது. அதை அடையப் பெற்றவர்க்கு அபயம் அல்லது அஞ்சாமை வாய்க்கிறது.

---

4. ஆத்ம சுத்தி

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆத்மா என்னும் சொல்லானது உடல், உள்ளம், ஜீவன், பரம்பொருள் ஆகிய இவை யாவையும் குறிப்பதாம். ஈண்டு அது உள்ளம் அல்லது அந்தக்கரணத்தைக் குறிக்கிறது. சித்த சுத்தியடைதல் சாதனத்தில் முன்னேற்றத்துக்கு இன்றியமையாததாம்.

31. ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே.

உயிர்களின் உள்ளத்தில் மாசற்ற ஜோதியாக அவன் யாண்டும் மிளிர்ந்து கொண்டிருக்கிறான். அவைகளை முக்தி நெறியில் நடாத்துபவன் அவனே. அவனை அறிகிறவர்களுக்கு அச்சமும் இல்லை; துன்பமும் இல்லை

ஆடுகின்றிலை கூத்து உடையான் கழற்கு
அன்பு இலை என்பு உருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதம் மலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதும் இலை
துணை இலி பிணம் நெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை
செய்வது ஒன்று அறியேனே.

கழற்கு-கழலை அணிந்திருக்கின்ற திருவடிகளுக்கு. என்பு உருகி-எலும்பு இளகப்பெற்று.

செயலற்றுப் பிணம்போன்று கிடக்கிற நெஞ்சே உனக்கு ஆனந்தக் கூத்தனது திருவடியில் அன்பு இல்லை; அன்பின் மேலீட்டால் நீ ஆடுவதில்லை; எலும்பு உருகப் பாடுவதில்லை. உணர்ச்சியின் வேகத்தால் பதைபதைப்பு அடைவதில்லை; வணங்குவதில்லை; பாத கமலத்தைத் தலையில் தரிப்பதில்லை; மலர் தூவிப் பாதங்களை அலங்கரிப்பதில்லை; கடவுள் நாட்டம் கொள்வதில்லை; கடவுளைப் போற்றிப் பஜனை பண்ணிக்கொண்டு வீதிவீதியாய்ப் போவதில்லை. இறைவனது துணையைத் தேடாத உன்னை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று எனக்கு விளங்கவில்லை.

மனதை அடுப்புக்கரியோடு ஒப்பிடலாம். அடுப்புக்கரி தீயைச் சார்ந்தால் அது தானே தீயாகிறது. தீயினின்று பிரிந்தால் அது பிணத்துக்குநிகர். மனது ஈசனைச் சார்ந்தால் அது அனைத்துக்கும் உதவுகிறது; ஈசனிடமிருந்து பிரிந்தால் அது பிணம். வேறு எந்தத் துணையும் அதை உயர்நிலைக்கு உயர்த்தாது.

ஈண்டுப் பகர்ந்துள்ள சாதனங்கள் திரிகரணங்களுக்கும் உரியவைகள் எனினும் அவையாவும் மனதைப் பரிசுத்தப்படுத்த வல்லவைகளாம். எலும்பு உருகுதல் பராபக்தி அல்லது மஹாபாவத்தின் அறிகுறியாம். உடலைத் தூயதாக்கும் தன்மை அதற்குண்டு. மாணிக்கவாசகர் அவையாவையும் தீவிரமாக அனுஷ்டித்தவரெனினும் அவைகளை அனுஷ்டிக்காவிட்டால் விளையும் தீங்கை மனதுக்கு எடுத்து ஓதுகிறார். தெருவில் பஜனை பண்ணிக்

கொண்டு போவது மற்ற ஜீவர்களையும் பக்தி நெறியில் தூண்டுதற்கு உற்ற உபாயமாம்.

32. அறிவி லாத வெனைப்புகுந் தாண்டுகொண்
டறிவதை யருளிமேல்
நெறியெ லாம்புல மாக்கிய வெந்தையைப்
பந்தனை யறுப்பானைப்
பிறிவி லாதவின் னருள்கள் பெற் றிருந்து
மாறுடுதி பிணநெஞ்சே
கிறிய லாமிகக் கீழ்ப்படுத் தாய்கெடுத்
தாயென்னைக் கெடுமாறே.

அறிவு இலாத எனைப்புகுந்து ஆண்டுகொண்டு
அறிவதை அருளி மேல்
நெறி எலாம் புலம் ஆக்கிய எந்தையைப்
பந்தனை அறுப்பானை
பிறிவு இலாத இன் அருள்கள் பெற்றிருந்தும்
மாறு ஆடுதி பிணம் நெஞ்சே
கிறி எலாம் மிகக் கீழ்ப்படுத்தாய்
கெடுத்தாய் என்னைக் கெடுமாறே.

மாறு ஆடுதி-தடுமாறுகின்றாய். கிறிஎலாம்-பொய் நடைகள் எல்லாம். மிக-அதிகப்பட்டிருக்க. என்னைக் கீழ்ப்படுத்தாய்-நான் கீழ்மையுறும்படி செய்தாய். கெடுமாறு கெடுத்தாய்-கெடுப்பதற்கான உபாயங்களால் கெடுத்தாய்.

ஞானமில்லாத என் உள்ளத்தில் எழுந்தருளி இறைவன் எனக்கு மெய்ஞ்ஞானத்தை நல்கியருளினர்; மேலான மார்க்கங்களை யெல்லாம் எனக்குத் தெளிவாக்கிய என் தந்தை அவன்; பிறவித்தளையை அகற்றியவன் அவன். அப்பெம்மானை விட்டுப் பிரியாத இனிய விபூதிகள் பல இருக்கின்றன. இவைகள் உனக்குச் சொந்தமாயிருந்தும் அற்ப மனதே, நீ கீழ்மையில் தடுமாற்றமடைகின்றாய். பொய் நடைகள் உன்னிடத்து மிகுந்திருக்கின்றன. கெடுவதற்கான உபாயங்களால் என்னைக் கெடுத்துக் கீழ்மையில் ஆழ்த்துகின்றாய்.

பக்தியோகம், ஞானயோகம், ராஜயோகம், கர்மயோகம் ஆகிய மார்க்கங்களெல்லாம் ஈசனை அடைவதற்கான வழிகள் என்பதை அவன் காட்டியருளியிருக்கின்

ருன். அவனை விட்டு அகலாத விபூதிகள் பல சிந்தனைக்கு உரியவைகளாயிருக்கின்றன. சிவ ஸஹஸ்ர நாமங்கள் அவன் விபூதிகளை விளக்குதற்கென்றே அமைந்துள்ளன. இவையாவும் மனதுக்கு நல்ல அருள்விருந்துகள் ஆகின்றன. மனதைத் தூய்மைப்படுத்துதற்கு இவை சிறந்த உபாயங்களாகின்றன. இந்த மேன்மைகளில் செல்லுதற்கு மாருக மனது கீழ்மைகளில் சென்று சாதகனைக் கெடுத்து விடுகிறது. அத்தகைய சித்தத்தைச் சிவன்பால் திருப்பி அதைத் தூயதாக்குவது சாதகனது கடமை.

33. மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையெம்
மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றில மினியுனைச் சிக்கெனச்
சிவனவன் றிரடோண்மேல்
நீறு நின்றது கண்டனை யாயினு
நெக்கிலை யிக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது
கேட்கவுங் கில்லேனே.

மாறி நின்று எனைக் கெடக் கிடந்தனை எம்
மதி இலி மடம் நெஞ்சே
தேறுகின்றிலம் இனி உனைச் சிக்கெனச் சிவன்
அவன் திரள் தோள் மேல்
நீறு நின்றது கண்டனை ஆயினும்
நெக்கிலை இக் காயம்
கீறுகின்றிலை கெடுவது உன் பரிசு இது
கேட்கவும் கில்லேனே.

உபநிஷத் மந்த்ரம்—38.

न कर्मणा न प्रजया धनेन
त्यागेनैके अमृतत्वमानशुः ॥

ந கர்மணா ந ப்ரஜயா தனேந
த்யாகேனைகே அம்ருதத்வமானசு: ||

(கைவல்யோபநிஷதம்-2)

மாறி நின்று-பகைத்திருந்து. எனைக்கெட-என்னைக் கெடுக்குமாறு. கிடந்தனையை-(கிடந்தாலனையை) என்னுள்கிடந்தமைபோன்ருய். இனி உனைச் சிக்கெனத் தேறுகின்றிலம்-இனி உன்னை உறுதியாக நம்பமாட்டோம். திரள் தோள்-திரண்ட புயங்கள். நீறு-திருநீறு. நெக்கிலை-கனிந்து உருகுகின்ருயில்லை. கீறுகின்றிலை-பிளவுபடச் செய்கின்ருயில்லை. பரிசு-தன்மை. கேட்கவும் கில்லேன்-கேட்கவும் சகியேன்.

அறிவுகெட்ட எமது மூடமனதே, பகைத்திருந்து என்னைக் கெடுக்குமாறு என்னுள் உறைகின்றமை யொத்தாய். உன்னை இனி ஒருபோதும் நம்பமாட்டோம். தமது திரண்ட தோளின்மீது சிவனுர் திருநீறு அணிந்திருந்ததை நீ கண்டாய். அப்படியிருந்தும் உள்ளக் கசிவு உனக்கு உண்டாகவில்லை. உடல் பாசம் உனக்கு நீங்கவில்லை. அழிந்துபட்டுப் போவது உன் போக்கு. இதனைக் கேட்கவும் சகியேன்.

மனது எதைச் சார்கிறதோ அதன் மயமாகிறது. சிவனைச் சார்கிற மனது சுத்தியடைகிறது; பிறகு சிவமயமாகிறது. உலக விஷயங்களைச் சார்கிற மனது மலினமடைகிறது; பிறகு மரணத்திற்கு ஆளாகிறது. திருநீறு சிறந்ததொரு சின்னம்; அதன் வாயிலாக ஜீவன் உய்வதற்கான வழியை இறைவன் காட்டியருள்கின்ருன். பண்டங்களெல்லாம் தீயில் வெந்து அழிந்துபோன பிறகு நீற்றிருப்பது நீறு. அதை மீண்டும் எவ்வளவுதான் சுட்டாலும் அதன் தன்மை மாருது. ஆக, அது மெய்ப்பொருளாகிய சிவனது சின்னம். உலகமெல்லாம் பிரளயத்தில் அழியுமிடத்து அவன் அழிவதில்லை. உடலோ அழியும்

न कर्मणा ந கர்மணு கர்மத்தாலன்று न प्रजया ந ப்ரஜயா சந்தானத்தாலன்று धनेन தனேந தனத்தாலன்று त्यागेनैके த்யாகேனைகே தியாகத்தாலேயே अमृतत्वम् அம்ருதத்வம் பரநிலையை आनशुः ஆனசு: அடைந்தனர்.

கர்மத்தினுலன்று, மக்களைப் பெறுவதாலன்று, செல்வத்தாலன்று, தியாகத்தாலேயே பரம்பொருளை அடைந்தனர்.

காமிய கர்மம் பிறவியை வளர்க்கிறது. மற்றுக் கர்மயோகமோ கர்மபந்தத்தை நீக்குகிறது. மகப்பேறு பெறுவது காமியகர்மமாகும். புத்திர பாக்கியம் மோக்ஷத்துக்கு உபாயமாகாது. கர்ம காண்டக் கோட்பாட்டின்படி அது

தன்மையுடையது. உடல் சுகத்தை நாடுகிற மனது தனக்குக் கேடு சூழ்ந்து கொள்கிறது. தியாகத்தின் சின்னம் திருநீறு. ஆதலால் தியாகராஜன் அதை அணிந்திருக்கிறான். உடல் உணர்வு அல்லது தேகாத்மபுத்தியை வெல். உடல் உடைத்திருப்பதற்கிடையில் அதைச் சாம்பல் போன்று வைத்திரு. அதன் மூலம் அற்ப சுகத்தை நாடாதிருப்பது ஆத்ம சுத்தி.

34. கிற்ற வாமன மேகெடு வாயுடை
யானடி நாயேனை
விற்றெ லாமிக வாள்வதற் குரியவன்
விரைமலர்த் திருப்பாத
முற்றி லாவிளந் தளிர்பிரிந் திருந்துநீ
யுண்டன வெல்லாமுன்
னற்ற வாறுநின் னறிவுநின் பெருமையு
மளவறுக் கில்லேனே.

கிற்றவர் மனமே கெடுவாய் உடையான்
அடி நாயேனை
விற்று எலாம் மிக ஆள்வதற்கு உரியவன்
விரை மலர்த் திருப்பாதம்
முற்று இலா இளம் தளிர் பிரிந்திருந்து நீ
உண்டன எல்லாம் முன்
அற்ற ஆறும் நின் அறிவும் நின் பெருமையும்
அளவு அறுக்கில்லேனே.

கிற்றவர்-கில்-தவர்-விஷயாதிகளில் செல்லும் ஆற்றல் ஒழியாதிருக்கிற (greedy). விற்று-விலைப்படுத்தி. விரை-மணம், சுகந்தம். முற்று இலா-முதிர்ச்சியடையாத. தளிர்-கொழுந்து. உண்டன-அனுபவித்தன. முன் அற்ற ஆறும்-முன்பே பயனற்றுப் போன போக்கும்.

ஒரு வேளை சுவர்க்க பதவிக்குத் துணைபுரியலாம். செல்வம் சுகபோகத்தைக் கொடுக்கிறது. ஆனால் பரத்தை நாடுபவர்க்கு அது பொருந்தாத உபாதியாகிறது. இந்த உபாதிகள் அனைத்தையும் முற்றத் துறப்பதாலேயே பரம் அடையப்பெறுகிறது.

சலிப்பில்லாது இந்திரிய விஷயங்களில் உழன்று கொண்டிருக்கும் மனமே, நீ அழிந்துபட்டுப் போவாய். யாண்டும் தனது இளமை மாறுதிருக்கும் இறைவனது திருவடிக்கே நான் ஆளாகியிருக்கிறேன். என்னை விற்கவோ வேறு என்ன செய்யவோ அவனுக்கு உரிமையுண்டு. அந்த இறைவனைப் புறக்கணித்துவிட்டு என்னால் கணக்கிட முடியாத அற்ப சுகங்களை நீ அனுபவித்திருக்கிறாய்; அதற்கேற்ற சிற்றறிவும் உன்னிடத்திருக்கிறது. நீ பெற்ற பெருமையெல்லாம் மாயமாய் மறைந்து போனதை எண்ணிப்பார்.

பரமனிடத்திருந்து வருகிற பேரானந்தம் சாசுவதமானது. விஷய சுகமே உடனடியாக மறைகிறது. சித்தத்தில் விகல்பத்தை உண்டுபண்ணுவதைத் தவிர அதில் பயன் ஒன்றுமில்லை. விசாரித்துப் பார்த்து அந்த விகல்பத்தையும் ஒதுக்கித் தள்ளுவது ஆத்ம சக்தி.

உலக நடைமுறையில் பொருள் ஒன்றை உடைத்திருப்பவன் வேண்டியவாறு அதை விற்க அவனுக்கு உரிமையுண்டு. ஜீவாத்மன் யாண்டும் பரமாத்மனுக்கே உரியவன் என்னும் கோட்பாடு இதன் மூலம் இயம்பப் படுகிறது. இது துவைத மதக்கோட்பாடாகும்.

35. அளவ றுப்பதற் கரியவ னிமையவர்க்
கடியவர்க் கெளியானங்
களவ றுத்துநின் றாண்டமை கருத்தினுட்
கசிந்துணர்ந் திருந்தேயும்
உளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன்
செய்தது மிலைநெஞ்சே
பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை
பரகதி புகுவானே.

அளவு அறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு
அடியவர்க்கு எளியான் நம்
களவு அறுத்து நின்று ஆண்டமை கருத்தினுள்
கசிந்து உணர்ந்திருந்தேயும்

உள கறுத்து உனை நினைந்து உளம் பெருங்களன்
செய்ததும் இலை நெஞ்சே
பளகு அறுத்து உடையான் கழல் பணிந்திலை
பரகதி புகுவானே.

இமையவர்க்கு-தேவர்களுக்கு. களவு-கள்ள வழியை. உள-இந்திரியங்களுக்கு விஷயமாகின்றவைகளை யெல்லாம். கறுத்து-வெறுத்து. உனை நினைந்து-சாதனத்துக்குப் பொருந்திய கருவி நீ யென்று முடிவு செய்து. களன்-தங்குமிடம். பளகு அறுத்து-குற்றங்களை நீக்கி.

தேவர்களால் அறியவொண்ணுதவன், ஆனுல் அன்பர்களுக்கு எளியவன் இறைவன். அவன் நமது தீமையை அகற்றி நம்மை ஆட்கொள்ள உள்ளத்தில் உறுதிபடைத்துள்ளான். அவன் கருணையைக் கருத்தில் வாங்கிக் கசிந்துருகி யிருக்கவேண்டும். முக்தியடைதல் பொருட்டு இந்திரியங்களுக்கு இலக்காயுள்ள விஷயங்களை வெறுத்து விலக்கவேண்டும். உள்ளத்தை இறைவனுக்கு உறைவிடமாகச் செய்தல் வேண்டும். கேடுகளை அகற்றி ஆண்டவனது திருவடியை வணங்குதல் வேண்டும். மனமே, இங்ஙனம் செய்யாத உன் இயல்பு தான் எத்தகையது.

வாழ்க்கைத் தத்துவம் ஜீவர்கள் அனைவருக்கும் பொதுவானது. இந்திரிய சுகத்திலேயே உழன்று கிடக்கிற விண்ணவர்களும மண்ணவர்களும் பரமனை அறிந்து கொள்ளமாட்டார்கள். அவைகளை நீத்துவிட்டு இறைவனை நாடுகின்றவர்களுக்கு அவன் எளியவன். மனமே, நீ மானச பூஜையின் வாயிலாகவும், பாகிய பூஜையின் வாயிலாகவும் பரமனையே நாடியிரு. நீ உய்வு அடைவதற்கு இவையாவும் உற்ற உபாயங்களாம்.

36. புகுவ தாவதும் போதர வில்லதும்
பொன்னகர் புகப்போதற்
குகுவ தாவது மெந்தையெம் பிரானென்னை
யாண்டவன் கழற்கன்பு
நெகுவதாவது நித்தலு மமுதொடு
தேனொடு பால்கட்டி
மிகுவ தாவது மின்றெனின் மற்றிதற்
கென்செய்கேன் வினையேனே.

புகுவது ஆவதும் போதரவு இல்லதும்
பொன் நகர் புகப் போதற்கு
உகுவது ஆவதும் எந்தை எம்பிரான்
என்னை ஆண்டவன் கழற்கு அன்பு
நெகுவது ஆவதும் நித்தலும் அமுதொடு
தேனொடு பால் கட்டி
மிகுவது ஆவதும் இன்று எனின் மற்று இதற்கு
என் செய்கேன் வினையேனே.

புகுவது ஆவதும்-பிரவேசிப்பதும். போதரவு இல்லதும்-திரும்பிவருதல் இல்லாததும். பொன்நகர்-பரிபூரணநிலை. உகுவது ஆவதும்-பற்று நீங்குதலும். நெகுவது ஆவதும்-நெஞ்சம் உருகுதலும். நித்தலும்-நாள்தோறும். மிகுவது ஆவதும்-மேம்படுவதும். இன்று எனின்-இல்லையெனின்.

சிவசாயுஜ்யம் அல்லது பாரமார்த்திகப் பெருநிலை அன்பரால் அடையப்பெறுவதாகிறது; பின்பு அது ஒரு பொழுதும் இழக்கப்படுவதன்று. அதை அடைதற்கு உலகப்பற்று நீங்குதல் வேண்டும். என் தந்தை, எம் தலைவன், என்னை ஆட்கொண்ட இறைவன் திருவடியில் அன்பு வைத்து உருகவேண்டும். அப்படிச் செய்வதன் விளைவாகிய பேரானந்தம் மேலும் மேலும் வளரவேண்டும். அத்தகைய அருள்பேறுகள் எனக்கு இல்லாது போனது என் வினையின் விளைவாம்.

சிவானந்த போகத்தை உலகில் எதனோடும் ஒப்பிட முடியாது. ஆனால் உபசாரத்துக்காக அது அமுது, தேன், பால், கற்கண்டு ஆகியவைகளோடு ஒப்பிடப்படுகிறது.

உலகப்பற்று நீங்குவது சித்த சுத்தி பெறுதற்கு உற்ற உபாயமாம்.

37. வினையென் போலுடை யார்பிற ராருடை
யானடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்
பன்றுமற் றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான்
முட்டிலேன் றலைகீறே
னினையன் பாவனை யிரும்புகன் மனஞ்செவி
யின்னதென் றறியேனே.

வினை என்போல் உடையார் பிறர் ஆர்
உடையான் அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பு
அன்று மற்று அதனாலே
முனைவன் பாதம் நல் மலர் பிரிந்திருந்தும் நான்
முட்டிலேன் தலை கீறேன்
இனையன் பாவனை இரும்பு கல் மனம் செவி
இன்னது என்று அறியேனே.

தினையின் பாகமும்-சிறிதளவாவதும். திருக்குறிப்பு அன்று-சிவனார்க்குச் சம்மதமன்று. முனைவன்-அனைத்துக்கும் ஆதிகாரணன். முட்டிலேன்-மோதுகிறேனில்லை. கீறேன்-பிளந்துகொள்கிறேனில்லை. இனையன்-இத்தகையவனாகிய எனது. பாவனை-உணர்ச்சி.

என்னைப் போலக் கொடிய வினையாளன் யாருமில்லை. அதை முன்னிட்டு என்னைப் பிரித்து வைப்பது இறைவனுடைய திருவருள் நோக்கமன்று. என் வினையின் விளைவாக ஆதிபகவனிடமிருந்து நானே பிரிந்திருக்கிறேன். அதைக் குறித்து வருந்தி நான் தலையை மோதிக்கொள்ளவில்லை. அதைப் பிளக்க முயலவுமில்லை. இரும்பு போன்று நான் உணர்ச்சியற்றவன். என் மனம் கல். இவரிக் காது எத்தகையதென்று எனக்கே தெரியாது.

முமுக்ஷுத்வம் அல்லது முக்தியில் ஆசை கொள்வது சித்த சுத்தி பெறுதற்கு உற்ற உபாயமாகும்.

38. ஏனை யாவரு மெய்திட லுற்றுமற்
றின்னதென் றறியாத
தேனை யானெயைக் கரும்பினின் றேறலைச்
சிவனையென் சிவலோகக்
கோனை மானன நோக்கிதன் கூறனைக்
குறுகிலே னெடுங்காலம்
ஊனை யானிருந் தோம்புகின் றேன்கெடு
வேனுயி ரோயாதே.

உபநிஷத் மந்த்ரம்—39.

उमासहायं परमेश्वरं प्रभुं त्रिलोचनं नीलकण्ठं प्रशान्तम् ।
ध्यात्वा मुनिर्गच्छति भूतयोनिं समस्तसाक्षिं तमसः परस्तात् ॥

ஏனையாவரும் எய்திடல் உற்று மற்று
இன்னது என்று அறியாத
தேனைஆன் நெயைக்கரும்பின் இன்தேறலைச்
சிவனை என் சிவலோகக்
கோனை மான் அன நோக்கி தன் கூறனைக்
குறுகிலேன் நெடும் காலம்
ஊனை யான் இருந்து ஓம்புகின்றேன்
கெடுவேன் உயிர் ஓயாதே.

ஏனையாவரும்-பக்தர் அல்லாத மற்றவர்களும். எய்திடல் உற்று-அடைதற்கு முயன்று. ஆன்நெயை-பசுவினது நெய்யை. இன்தேறலை-இனிய சாற்றை. மான் அன நோக்கி-மானின் பார்வை போன்ற நோக்குடைய உமாதேவி. கூறனை-பாகத்தை யுடையவனை. குறுகிலேன்-அடைந்திலேன். ஊனை-உடம்பை. ஓம்புகின்றேன்-பாதுகாக்கின்றேன். ஓயாதே-அழியாதோ.

பக்தர் அல்லாத ஏனையவர்க்குச் சிவ சொரூபம் எத்தகையது என்பது பிடிபடாது. அவனை நாடுகின்றவர்களுக்குத் தேன், பசு நெய், கருப்பஞ்சாறு போன்று சிவானந்தம் அதிகரிக்கும். அவன் மங்களத்தை உண்டுபண்ணுபவன், சிவலோகத்துக்கு இறைவன். மானின் பார்வை போன்ற நோக்குடைய உமாதேவியாரின் வலப் பக்கத்தில் இருப்பவன். அப்பெம்மானை நான் பக்தி பூண்டு அணுகவில்லை. அதற்கு மாறாக உடலை ஓம்புதலிலேயே நான் கண்ணுங்கருத்துமாயிருக்கிறேன். இப்படிச் செய்வதைவிட நான் செத்து ஒழிவது நலம்.

உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும்
த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரசாந்தம் ।
த்யாத்வா முனிர்கச்சதி பூதயோனிம்
ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் ॥

(கைவல்யோபநிஷதம்—7)

उमासहायं உமாஸஹாயம் உமைக்குத் தலைவனை परमेश्वरं பரமேச்வரம் பரமேசுவரனை प्रभुं ப்ரபும் ஆண்டவனை त्रिलोचनं த்ரிலோசனம் முக்கண்ணனை नीलकण्ठं நீலகண்டம் நீலகண்டனை प्रशान्तम् ப்ரசாந்தம் பரமசாந்தி வடிவினனை ध्यात्वा த்யாத்வா தியானித்து मुनिः முனி: முனியானவன் भूतयोनिं பூதயோனிம் உயிர்களுக்கெல்லாம் பிறப்பிடமாயிருப்ப

சிவபோதத்தை வளர்க்குமளவு சித்த சுத்தி தானே உண்டாகிறது. தேகாத்ம புத்தி அல்லது உடல் உணர்வைப் பெருக்குமளவு சித்த மலம் அதிகரிக்கிறது.

அம்பிகைக்கு ராஜீவலோசனை என்பது ஒரு பெயர்; மான் விழியாள் என்பது அதன் பொருள்.

39. ஒய்வி லாதன வுவமனி லிறந்தன
வொண்மலர்த் தாடந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படுமென்னை
நன்னெறி காட்டித்
தாயி லாகிய வின்னருள் புரிந்தவென்
றலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் றிண்வரை யுருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே.

ஒய்வு இலாதன உவமனில் இறந்தன
ஒள்மலர்த் தாள் தந்து

வனை समस्तसाक्षिं ஸமஸ்தஸாக்ஷிம் அனைத்துக்கும் சாக்ஷியாயிருப்பவனை तमसः परस्तात् தமஸ: பரஸ்தாத் அக்ஞான இருளுக்கு அப்பாற்பட்டவனை गच्छति கச்சதி அடைகிறான்.

உமாதேவியார்க்குத் தலைவனை, பரமேசுவரனை, ஆண்டவனை, முக்கண்ணனை, நீலகண்டனை, பரமசாந்தி மூர்த்தியைத் தியானித்து முனியானவன் உயிர்களுக்கெல்லாம் பிறப்பிடமாயிருக்கிற, அனைத்துக்கும் சாக்ஷியாயிருக்கிற, அக்ஞான இருளுக்கு அப்பாற் பட்டவனுயிருக்கிற அந்தச் சிவனை அடைகிறான்.

சிவத்துக்கும் சக்திக்குமுள்ள தொடர்பு ஈண்டு இயம்பப் பெறுகிறது. சிவ சான்னித்தியத்தில் சக்தி உயிர்களைத் தோற்றுவிக்கவும், நிலைத்து வைக்கவும், ஒடுக்கவும் செய்கின்றாள். சிவனோ யாண்டும் சாந்த மூர்த்தியாகவும், சாக்ஷியாகவும் அக்ஞானத்தில் உதிக்கிற கிருத்தியங்களுக்கு அப்பாற்பட்டவனாகவும் இருக்கிறான்.

தைலதாரை போன்று யாருடைய மனது சிவ சன்னிதிக்குப் போகிறதோ அவன் முனி எனப்படுகிறான்.

நாயில் ஆகிய குலத்தினும் கடைப்படும் என்னை
நல்நெறி காட்டித்
தாயில் ஆகிய இன்அருள் புரிந்த
என் தலைவனை நனி காணேன்
தீயில் வீழ்கிலேன் திண் வரை உருள்கிலேன்
செழும்கடல் புகுவேனே.

ஓய்வு இலாதன-அழிந்து போகாதவைகள். உவமனில் இறந்தன-உவமையில்லாதவைகள். ஒள் மலர் தாள் தந்து-ஞான ஒளி நிறைந்த தாமரை மலர்போன்ற திருவடிகளை அளித்து. நனி காணேன்-நன்கு கண்டிலேன். திண்வரை-திண்ணிய மலை. செழும் கடல்-வளம் நிறைந்த கடல்.

அழிவில்லாதவைகளும், ஒப்பு உவமையில்லாதவைகளும், ஞான ஒளி வீசும் தாமரை போன்றவைகளுமாகிய தன் திருவடிகளை இறைவன் எனக்குத் தந்தருளினன். குலத்தில் நாயினும் கடைப்பட்ட எனக்கு அவன் ஞானநெறி காட்டியருளினன். தாயின் உள்ளம் கொண்டு அவன் என்னை ஆண்டருளினன். அவனை ஓவாது காணப்பெருமையை முன்னிட்டு நான் தீயில் விழ்ந்தோ, செங்குத்தான மலையினின்று உருண்டோ, ஆழ்கடலில் மூழ்கியோ உயிர் துறவாதிருக்கிறேன். அந்தோ!

இறைவனது இடையறாக் காட்சி பெறுதற்காக உயிர் துறக்கவும் ஆயத்தமாயிருப்பவனுக்குச் சித்த சுத்தி தானாக வாய்க்கிறது. தான் பெறுகிற ஞானத்தை இறைவனது திருவடியெனப் போற்றுவது பக்தனது இயல்பு.

40. வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடு
மதுதனை நினையாதே
மானி லாவிய நோக்கியர் படிறிடை
மத்திடு தயிராகித்

உபநிஷத் மந்த்ரம் — 40.

तां योगमिति मन्यन्ते स्थिरामिन्द्रिय धारणाम् ।
अप्रमत्तस्तदा भवति योगो हि प्रभवाप्ययौ ॥

தாம் யோகமிதி மன்யந்தே ஸ்திராம் இந்த்ரிய தாரணம் ।
அப்ரமத்த: ததா பவதி யோகோ ஹி ப்ரபவாப்யயௌ ॥

(கடோபநிஷதம் 6—11)

தேனி லாவிய திருவருள் புரிந்தவென்
சிவநகர் புகப்போகேன்
ஊனி லாவியை யோம்புதற் பொருட்டினு
முண்டுடுத் திருந்தேனே.

வேனில் வேள் கணை கிழித்திட மதி சுடும்
அது தனை நினையாதே
மான் நிலாவிய நோக்கியர் படிறிடை
மத்து இடு தயிர் ஆகித்
தேன் நிலாவிய திரு அருள் புரிந்த
என் சிவன் நகர் புகப் போகேன்
ஊனில் ஆவியை ஓம்புதல் பொருட்டு இனும்
உண்டு உடுத்து இருந்தேனே.

வேனில் வேள்-மன்மதன். கணை-புஷ்ப பாணம். கிழித்திட-நெஞ்சைப் பிளந்திட. மதி சுடும்-சந்திரன் சூட்டை உண்டுபண்ணும். மான் நிலாவிய நோக்கியர்-மான் போன்ற பார்வையுடைய மகளிர். படிறிடை-வஞ்சகச் செயலுக்கிடையில்.

தேன் போன்று தித்திக்கிற சிவ சாம்ராஜ்யத்தை நான் நாடுகின்றேனில்லை. நல்லுணவு உண்டும், அழகிய உடை உடுத்தும் உடல் வாழ்க்கையிலேயே களித்திருக்கிறேன். அதன் விளைவாக மன்மதன் பாணத்துக்கு நான் இலக்காயினேன். அது நெஞ்சத்தைத் துளையாது துளைத்துச் சந்திரிகைபோன்று வெப்பமில்லா திருந்தும் என்னை வருத்துகிறது. ஆதலால் மாதர் காம வலையில் நான் அகப்பட்டுள்ளேன்.

तां स्थिरां इन्द्रियधारणां தாம் ஸ்திராம் இந்த்ரிய தாரணாம் அந்த உறுதியான இந்திரிய நிக்ரஹத்தை योगं इति मन्यन्ते யோகம் இதி மன்யந்தே யோகம் என்று சொல்லுகிறார்கள் तदा ததா அதன் வாயிலாக अप्रमत्तः भवति அப்ரமத்த: பவதி மனம் தெளிந்தவன் ஆகிறான் हि ஹி ஏனென்றால் योगः யோக: யோகமானது प्रभवाप्ययौ ப்ரபவாப்யயௌ பெறவும் இழக்கவும் வல்லது.

உறுதியான இந்திரிய நிக்கிரகத்தை யோகம் என்று சொல்லுகின்றனர். அதனால் யோகி ஞானவான் ஆகிறான். யோகம் வாய்க்கவும், வழுவவும் வல்லது.

உடல் உணர்வு அல்லது தேகாத்ம புத்தி இருக்கும் வரையில் காம நோயும் இருக்கும். மத்தானது தயிரைக் கடைவது போன்று காமநோய் மனதை அலேக்கழிக்கும். மற்று அருள் நாட்டம் ஒன்றே சித்த சுத்தியை உண்டு பண்ணும்.

---

5. கைம்மாறு கொடுத்தல்

கலி விருத்தம்

ஒருவர் செய்த உபகாரத்துக்குப் பிரதியுபகாரம் செய்வது கைம்மாறு கொடுப்பதாகும். பிரதியுபகாரம் செய்ய இயலாதவன் பிறர் செய்த நன்றியை மறவாதிருப்பது கைம்மாறு கொடுப்பதற்கு ஒப்பாகும். பரமாத்மனுக்குக் கைம்மாறு கொடுக்க ஜீவாத்மனுக்கு இயலாது. மற்று ஆண்டவனது அருளை எண்ணிக்கொண்டே இருப்பது கைம்மாருகும். தனது ஜீவசொரூபம் முழுதையும் ஈசனிடம் கொடுக்கும் வரையில் நன்றியுணர்வு செலுத்தி வருவது ஆத்ம சாதனமாகும்.

41. இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெவ்வமே

ஞானம் குருட்டு வாய்ப்பாக அல்லது மற்றவர்களால் வழங்கப்பெற்றதாக மனிதனுக்கு வருவதன்று. ஐம்பொறிகளையும் ஆசையையும் அறவே அடக்கி வாழ்பவவனுக்கு அதன் விளைவாக ஞானக்கண் உருவெடுக்கிறது. தன்னை அழிவற்ற ஆத்மன் என்று அறிந்துகொள்வது ஞானம். ஆரம்பதசையில் புலனடக்கத்தின் தரத்துக்கு ஏற்ப சாதகன் யோகத்தால் முன்னேறவும், பின்வாங்கவும் செய்கிருன். ஆயினும் எவ்வளவுக்கெவ்வளவு இந்திரிய நிக்ரகமோ அவ்வளவுக்கவ்வளவு நலன் மனிதனுக்கு உண்டாகிறது. சுட்டறுத்தலின் சிறப்பை எவ்வளவு சிலாகித்துப் பேசினுலும் அது மிகையாகாது.

வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே.

இரு கை யானையை ஒத்து இருந்தது என் உளம்
கருவை யான் கண்டிலேன் கண்டது எவ்வமே
வருக என்று பணித்தனை வான் உளோர்க்கு
ஒருவனே கிற்றிலேன் கிற்பன் உண்ணவே.

கருவை-மூலப்பொருளை. எவ்வம்-துன்பம். கிற்றிலேன்-சிவ போகத்தை அனுபவிக்கும் ஆற்றல் இல்லாதவனாயினேன். உண்ணவே கிற்பன்-இந்திரிய சுகங்களை அனுபவிக்கவல்லவன்.

யானை உடலில் பெரியது எனினும் அது பரஞானத்துக்குத் தகுதியற்றது. என் அறிவுக்கு அறிவாயுள்ள மூலப்பொருளைக் காண எனக்கு இயலவில்லை யாதலால் நான் இரண்டு கைகளை யுடைய யானையைப் போன்றவன். இந்திரிய சுகம் என்னும் பெயர் பெற்றுள்ள துன்பத்தையே நான் அனுபவித்து வருகிறேன். தேவாதி தேவா, பேரானந்தத்தைப் பெற வா வென்று ஆக்ஞாபித்தாய். நானோ அதற்குத் தகுதியற்றவனாய்ச் சிற்றின்பத்திலேயே உழல்கின்றேன்.

உபநிஷத் மந்த்ரம்—41.

युजे वां ब्रह्म पूर्व्यं नमोभिर्विश्लोक एतु पथ्येव सूरेः ।
शृण्वन्तु सर्वे अमृतस्य पुत्रा आये दिव्यानि धामानि तस्थुः ॥

யுஜே வாம் ப்ரஹ்ம பூர்வ்யம் நமோபிர்
விச்லோக ஏது பத்யேவ ஸூரே: ।
ச்ருண்வந்து ஸர்வே அம்ருதஸ்ய புத்ரா ஆ
யே திவ்யானி தாமானி தஸ்து: ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 2–5)

सूरेः ஸூரே: சான்றோர்களுடைய पथि एव பதி ஏவ மார்க்கத்திலேயே சென்று पूर्व्यं ब्रह्म பூர்வ்யம் ப்ரஹ்ம பழம் பொருள் ஆகிய பிரம்மத்தின் கண் वाम् வாம் உங்கள் இருவரையும் नमोभिः நமோபி: தியானத்தால் युजे யுஜே ஒழிப்பேன் विश्लोकः விச்லோக: போற்றுதற்குரிய பொருள் एतु ஏது ஒளிர்வதாகுக दिव्यानि धामानि திவ்யானி தாமானி தேஜோ மண்டலத்தில் ये आतस्थुः யே ஆதஸ்து: வசிப்பவர்களாகிய सर्वे अमृतस्य पुत्राः ஸர்வே அம்ருதஸ்ய புத்ரா: அழியாப்பொரு

பெரியோர் நல்கிய பெருமையைப் பாதுகாப்பது கைம்மாறு கொடுப்பதற்கு ஒப்பாகும்; அதைப் புறக் கணிப்பது கைம்மாறு கொடாமை போன்றது.

42. உண்டொ ரொண்பொரு ளென்றுணர் [வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினுய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே.

உண்டுஒர் ஒள்பொருள் என்று உணர்வார்க்கு எலாம்
பெண்டிர் ஆண் அலி என்று அறி ஒண்கிலை
தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினுய்
கண்டும் கண்டிலேன் என்ன கண் மாயமே.

ஒண் பொருள்-ஒள் பொருள், பரவஸ்து. அறி ஒண்கிலை-நிச்சயிக்க முடியாதவனுய் இருக்கிருய்.

பரம்பொருள் ஒன்று உண்டு என்று தங்கள் அந்தக்கரணத்தைக் கொண்டு யூகிப்பவர்கள் உன்னைப் பெண் என்ருே, ஆண் என்ருே, அலியென்ருே அறிந்துகொள்ள இயலாதவர்களாயிருக்கின்றனர். மற்று, உன் தொண்டனுகிய எனக்கு உன்னை உள்ளவாறு காட்டியருளினுய். உன்னைக் கண்டபின்பும் காணுதவனுடைய நிலையில் இருக்கிறேன். இது என்ன மயக்கம்!

ளின் புதல்வர்கள் எல்லாரும் ஶ்ருண்வந்து நான் சொல்வதைக் கேட்பார்களாக.

சான்ருேர்களுடைய மார்க்கத்திலேயே சென்று பழம் பொருள் ஆகிய பிரம்மத்தின்கண் உங்கள் இருவரையும் இடையருத தியானத்தால் ஒழிப்பேன். போற்றுதற்குரிய பழம் பொருளே யாண்டும் ஒளிர்வதாகுக. தேஜோ மண்டலத்தில் வசிப்பவர்களாகிய அமரநாதனுடைய புதல்வர்காள், நீங்கள் எல்லாரும் நான் சொல்வதைக் கேளுங்கள்.

மனம், புத்தி ஆகிய உங்கள் இருவரையும் பிரம்ம தியானத்தில் சம்மாரம் செய்துவிடுவேன். நிர்விகல்ப சமாதி அதன் விளைவாகும். பரபிரம்மம் ஒன்றே ஆங்கு எஞ்சியிருக்கிறது. நீங்கள் அனைவரும் அந்த அமரவஸ்துவுக்குச் சொந்தம். அதில் கலந்துகொள்ள வாருங்கள்.

நீ வலிய வந்து ஆட்கொண்டும் அதற்கு நான் கடப்பாடு இல்லாதவனாய் இருக்கிறேன்.

**43. மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை யாட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோம்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே.**

மேலை வானவரும் அறியாதது ஓர்
கோலமே எனை ஆட்கொண்ட கூத்தனே
ஞாலமே விசும்பே இவை வந்து போம்
காலமே உனை என்று கொல் காண்பதே

மேலை வானவரும்-மேன்மை தங்கிய தேவர்களும். கோலமே-திருவுருவமே. ஞாலம்-பூமி. விசும்பு-வானம்.

மேலோராகிய தேவர்களுக்கும் காட்சிக்கு எட்டாத திருவுருவத்தையுடைய நடராஜப் பெருமானே, நீ என்னை ஆட்கொண்டுள்ளாய். பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் சாக்ஷியாயிருக்கும் கால சொருபம் நீ. உன்னை நான் எப்பொழுது காண்பேன்?

**44. காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கோர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றுக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே.**

உபநிஷத் மந்த்ரம் — 42

कालोऽस्मि लोकक्षयकृत्प्रवृद्धो लोकान् समाहर्तुमिह प्रवृत्तः

காலோऽஸ்மி லோகக்ஷயக்ருத்ப்ரவ்ருத்தோ
லோகான் ஸமாஹர்துமிஹ ப்ரவ்ருத்த: ।

(பகவத்கீதோபநிஷதம்—11-32)

உலகங்களை அழிக்கவல்ல காலம் நான். உலகங்களைச் சங்கரிக்கத் தலைப்பட்டிருக்கிறேன்.

பரமனுக்கு மஹாகாலம் என்பது ஒருபெயர். அகண்டாகார கால சொருபமாக இருந்து அவன் அண்டங்கள் யாவையும் எடுத்து விழுங்கிக்கொண்டிருக்கிறான்.

காணல் ஆம் பரமே கட்கு இறந்தது ஓர்
வாள் நிலாப் பொருளே இங்கு ஓர் பார்ப்பு என
பாணனேன் படிற்று ஆக்கையை விட்டு உனைப்
பூணும் ஆறு அறியேன் புலன் போற்றியே.

காணல் ஆம் பரமே-சிவஞானத்தால் காணக்கூடிய பரம் பொருளே. கட்கு இறந்தது-ஊனக் கண்ணுக்கு எட்டாதது. வாள் நிலாப் பொருளே-அருள் ஜோதி மயமான வஸ்துவே. பார்ப்பு-பறவைக் குஞ்சு. பாணனேன்-பாழ் நன் ஏன்-பாழாகிய நான். படிற்று-பொய்யான. ஆக்கை-உடம்பு. பூணும் ஆறு-பொருந்தும் நெறி.

ஈசா, ஊனக் கண்ணால் அல்ல, ஞானக் கண்ணாலேயே காண்பதற்குரிய பரஞ்ஜோதி நீ. பறவைக் குஞ்சு கூட்டை விட்டுப் பறக்க முடியாதிருப்பது போன்று பாழாய்ப்போன நான் பொய்யுடலை விட்டுப் பிரிந்து உன்னோடு பொருந்தியிருக்கும் நெறியை அறியாதிருக்கிறேன். ஐம்புலன்களில் வைத்துள்ள பற்றுதலே அதற்குக் காரணம். பொறிவாயில் ஐந்தையும் எரிந்து போனவைகளாக ஒதுக்கிவைத்துப் பழகுவேனாக.

உபநி—40 பக்கம் 313ல் காண்க.

45. போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துநின்
ருற்றன் மிக்கவன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறும்
கூற்ற மன்னதோர் கொள்கையென்
[கொள்கையே.

போற்றி என்றும் புரண்டும் புகழ்ந்தும் நின்று
ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கின்றிலேன்
ஏற்று வந்து எதிர் தாமரைத் தாள் உறும்
கூற்றம் அன்னது ஓர் கொள்கை என் கொள்கையே.

எதிர் ஏற்று வந்து-எதிர்த்து வந்து. தாள் உறும்-திருவடிகளை அடைந்த. கூற்றம் அன்னது-யமனை ஒத்தது.

இறைவா, உன்னை வாயால் வாழ்த்தியும் காயத்தால் அங்கப் பிரதக்ஷிணம் பண்ணியும் பலவிதங்களில் புகழ்ந்துரைத்தும் பக்தியில் நிலைநின்று அந்த உறுதியான பக்தியின் வலிவைக்கொண்டு உன்னை அழைக்கின்றேனில்லை. மார்க்கண்டனைப் பிடித்தல் பொருட்டு உன்னை எதிர்த்து வந்த கூற்றுவன் உன் திருவடியை அடைந்தான். என்னுடைய போக்கும் அத்தகையதாயிருக்கிறது.

இறைவனைப் பகைப்பதும் அவனை அடைவதற்கான ஓர் உபாயமாயிருக்கிறது. ஆனால் மெய்யன்பன் சத்ரு பாவனையை ஒருநாளும் மேற்கொள்வதில்லை.

46. கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டு மருமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்
எள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தையே.

கொள்ளும்கில் எனை அன்பரில் கூய்ப் பணி
கள்ளும் வண்டும் அரு மலர்க் கொன்றையான்
நள்ளும் கீழ் உளும் மேல் உளும் யா உளும்
எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தையே.

கொள்ளுங்கில்-கொள்ளவல்லவன். கூய்-கூவி. கள்ளும் வண்டும் அரு-தேனும் வண்டும் நீங்காத. நள்ளும்-நடுப்பாகத்திலும்.

எள்ளில் எண்ணெய்போல் என் தந்தை எல்லாப் பொருள்களின் நடுவிலும், கீழும், மேலும், எங்கும் வியாபித்துள்ளான். தேனும் அதை நுகரும் வண்டும் நீங்காத கொன்றை மலர் மாலையை அவன் அணிந்திருக்கிறான். மெய்யன்பரைக் கூவி அழைத்து ஆட்கொள்ளுவது போன்று ஆற்றல் இல்லாத என்னையும் அவன் அழைத்து ஆட்கொள்வான்.

உபநிஷத் மந்த்ரம்—43.

तिलेषु तैलं दधनीव सर्पिरापः स्रोतःस्वरणीषु चाग्निः ।
एवमात्माऽऽत्मनि गृह्यतेऽसौ सत्येनैनं तपसा योऽनुपश्यति ॥

திலேஷு தைலம் ததினீவ ஸர்பிராப:
ஸ்ரோத: ஸ்வரணீஷு சாக்னி: ।
ஏவமாத்மாऽத்மனி க்ருஹ்யதேऽஸௌ
ஸத்யேனைனம் தபஸா யோऽனுபச்யதி ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 1—15)

तिलेषु तैलं इव திலேஷு தைலம் இவ எள்ளில் எண்ணெய் போலவும் दधनि सर्पिः ததனி ஸர்பி: தயிரில் வெண்ணெய் போலவும் स्रोतःसु आपः ஸ்ரோத:ஸு ஆப: ஊற்றில் நீர்போலவும் अरणीषु अग्निः च அரணீஷு அக்னி: ச மரத்தில் தீ போலவும் एवम् असौ आत्मा ஏவம் அஸௌ ஆத்மா இங்

எள்ளும் எண்ணெயும் ஒரே வஸ்து; பிரிக்குங்கால் இரண்டு. அங்ஙனம் பரமன் ஒருவனே பிரபஞ்சமாய், அதில் உள்ள சேதன அசேதனமான யாவையுமாய் விளங்குகிருன். இது விசிஷ்டாத்வைத நிலையாம்.

47. எந்தை யாயெம்பி ரான்மற்று மியாவர்க்கும்
தந்தை தாய்தம்பி ரான்றனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலு மறிவருஞ் செல்வனே.

எந்தை யாய் எம்பிரான் மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய் தம்பிரான் தனக்கு அஃது இலான்
முந்தி என்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தையாலும் அறிவு அரும் செல்வனே.

யாய்-ஆய், தாய். செல்வன்-ஞான ஐசுவரியத்தையுடையவன்.

ஈசன் எனக்குத் தந்தையும், தாயும், தலைவனும் ஆன வன். அவன் உயிர்கள் அனைத்துக்குமே தந்தையும், தாயும், தலைவனும் ஆகிருன்; மற்றுத் தனக்கு அம்முறை உரிமை ஒன்றுமில்லாதவன். வாக்கால் மட்டுமல்ல, மனத்தாலும் யாரா லுமே அறிய முடியாத ஞான ஐசுவரியத்தை உடையவன்

னம் இந்த ஆத்மா आत्मनि गृह्यते ஆத்மனி க்ருஹ்யதே ஜீவாத்மனில் கிரகிக்கப்படுகிறது.

எள்ளில் எண்ணெய் போன்றும், தயிரில் வெண்ணெய் போன் றும், ஊற்றில் நீர்போன்றும், மரக்கட்டையில் தீ போன்றும் பர மாத்மன் ஜீவாத்மாவின்கண் அந்தர்யாமியாயிருக்கிறுர்.

எள், தயிர், ஊற்று, விறகுக்கட்டை ஆகியவைகளை முன்னணியில் வைத்துப் பார்க்குங்கால் முறையே அவை களில் உள்ள எண்ணெய், வெண்ணெய், நீர், நெருப்பு ஆகியவைகள் மறைந்து பின்னணியில் இருக்கின்றன. அங்ஙனம் உபாதிகளோடு கூடிய ஜீவாத்மனை முன்னணி யில் வைத்துப் பார்க்குமிடத்துப் பரமாத்மன் அந்தராத் மாவாக மறைந்திருக்கிருன். ஜீவ உபாதிகளை அகற் றுங்கால் ஜீவாத்மன் பரமாத்மாவில் ஒன்றுபடுகிருன்.

அவன். அவனை நான் அறிதற்கு முன்பே என் உள்ளம் குடி கொண்டுள்ளான்.

மைந்தனுக்கு முன்பே தந்தை தோன்றியிருப்பது இயற்கையின் நியதி. இனி ஈசனே பிரபஞ்சத்துக்கும் உயிர்கள் அனைத்துக்கும் ஆதிமூலமாகிறான். அவனை ஆதாரமாகக்கொண்டே ஜீவர்கள் தோன்றியுள்ளார்கள்

48. செல்வ நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கு மரும்பொரு
ளெல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே.

செல்வம் நல்குரவு இன்றி விண்ணோர் புழு
புல் வரம்பு இன்றி யார்க்கும் அரும் பொருள்
எல்லை இல்கழல் கண்டும் பிரிந்தனன்
கல் வகை மனத்தேன் பட்ட கட்டமே.

நல்குரவு-வறுமை. கல்வகை மனத்தேன்-கல்போன்ற ஜட புத்தியுடைய நான். கட்டமே-கஷ்டமே.

செல்வர்களுக்கிடையிலும், வறியோர்களுக்கிடையிலும், தேவர் களுக்கிடையிலும், புழுப்போன்ற அற்ப உயிர்களுக்கிடையிலும், புல்போன்ற ஸ்தாவரங்களுக்கிடையிலும் சிவ சைதன்யம் பாகுபா டின்றி நிறைந்திருக்கிறது. அந்த அகண்ட சொரூபத்தைக் காணப் பெற்ற பின்பு அப்பெருநிலையினின்று வழுவியவன் ஆனேன். முற்றிலும் மனபரிபாகம் அடையாததே இந்தக் கஷ்டதசைக்குக் காரணமாகும்.

அக்ஞானத்தில் உழல்பவர்க்கிடையில் செல்வம், வறுமை என்ற உபாதி வேற்றுமையும், மேலான பிறவி, இழிந்த பிறவி என்ற பிறப்பு வேற்றுமையும் இருக்கின் றன. பின்பு சமாதி நிலையில் அகண்ட சச்சிதானந்தத்தில் திளைத்திருப்பவர்க்கு இந்த மாயா பேதங்கள் மறைந்து போகின்றன. ஈசன் அருளால் வந்த சமாதி நிலையானது மனதின் குறைபாட்டால் தடைப்பட்டுவிட்டது என்று அண்ணல் வருந்துகிறார். பெற்ற பெரிய பேற்றினைக் காப்பாற்றுவது, அதைக் கொடுத்தவனுக்குச் செய்யும் கைம்மாறு ஆகும்.

49. கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட வன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
யெட்டி னோடிரண் டுமறி யேனையே.

கட்டு அறுத்து எனை ஆண்டு கண் ஆர நீறு
இட்ட அன்பரொடு யாவரும் காணவே
பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டினோடு இரண்டும் அறியேனையே.

கட்டு அறுத்து-*பாசப்பிணிப்பை அகற்றி.* பட்டிமண்டபம்-*சமய ஆராய்ச்சி செய்யும் வித்யா மண்டபம்.*

அஷ்டமூர்த்தி தத்துவத்தையும் அர்த்தநாரீசுவர தத்துவத்தையும் அறிந்துகொள்ளாத எனது பாசத்தளையைக் களைந்து என்னை ஆட்கொண்டாய். அதுமட்டுமன்று, திருநீறு பூசிய உன் மெய்யன்பர்கள் கூட்டத்தில் இருக்க நான் தகுந்தவன் என்று உலகம் அறியும்படி என்னை அவர்களது சபையிலே சேர்த்து வைத்தாய்.

ஏற்றினை, ஏற்றினை என்று இரண்டுதடவை சொல்லுவது ஏற்றிவைத்த செயலை வற்புறுத்துதல் பொருட்டாம்.

ஆதிபகவன் முதற்றே உலகு என்னும் கோட்பாட்டுக்கு இணங்க, சக்திக்கும் சிவத்துக்கும் புறம்பாகப் பிரபஞ்சமில்லை. எட்டு என்னும் சொல் அஷ்ட மூர்த்தியைக் குறிக்கிறது. நிலம், நீர், நெருப்பு, வாயு, ஆகாசம், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய இந்த எட்டு ஜடவஸ்துக்களும் ஈசனுடைய சொரூபங்களாம். ஐந்து பூதங்களையும் அவன் சொரூபமாக வைத்து வணங்குவதே ஐதிகம். காஞ்சியில் பிருதுவி லிங்கம், திருவானைக்காவில் அப்பு லிங்கம், திருவண்ணமலையில் அக்னி லிங்கம், காளஹஸ்தியில் வாயு லிங்கம், சிதம்பரத்தில் ஆகாச லிங்கம் அமைந்திருப்பது அவையாவும் சிவசொரூபம் என்பதை அனுஷ்டானத்தில் கொண்டுவருதல் பொருட்டேயாம். அடுத்தபடி ஆத்ம சாதகனுக்கு வாய்த்துள்ள மனம், புத்தி, அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்களைச் சிவ சொரூபமாகக் கருதி

சிவனுடைய ஆராதனைக்கென்றே அவைகளைப் பயன் படுத்துவது ஈசனுக்குக் கைம்மாறு கொடுப்பதாகும். பிரகிருதி-புருஷன் அல்லது சக்தி-சிவம் ஆகிய இரண்டு தத்துவங்களின் கூட்டுறவு அர்த்தநாரீசுவரன் எனப்படு கிறது. உடல் அம்பிகையின் சொரூபம். உயிர் சிவசொரு பம். இவையிரண்டும் பிரிந்தால் வாழ்வு நடைபெறாது. சிவசொரூபத்தில் இந்த எட்டும் இரண்டும் மிக ஸ்தூல நிலையில் இருக்கின்றன. இவைகளை அறியாதவன் அவ னுடைய சூக்ஷ்மநிலை, காரணநிலை, அதீத நிலை, அகண்ட நிலை ஆகியவைகளை அறிவது எங்ஙனம்?

50. அறிவ னேயமு தேயடி நாயினே
னறிவ னாகக்கொண் டோவெனை யாண்டது
வறிவி லாமையன் றேகண்ட தாண்டநா
ளறிவ னோவல்ல னோவரு ளீசனே.

அறிவனே அமுதே அடி நாயினேன்
அறிவன் ஆகக் கொண்டோ எனை ஆண்டது
அறிவு இலாமை அன்றே கண்டது ஆண்ட நாள்
அறிவனோ அல்லனோ அருள் ஈசனே.

பேரறிவு சொருபியே, அமிர்த சொருபியே, அற்பனாகிய என்னை ஒரு ஞானியாக்குதற் பொருட்டன்றோ நீ என்னை ஆட்கொண்டது? நீ ஆட்கொண்டதற்கு முன்பு நான் அறிவிலியாயிருந்தது வெளிப் படை. இன்று நான் ஞானியோ அல்லனோ, எனக்கு விளங்கவில்லை. எனது நிலைமையைக் கிருபைகூர்ந்து தெளிவுபடுத்துவாயாக.

நதியொன்று கடலுக்கு அருகில் வந்த பிறகு அதனி டத்துக் கடலின் தன்மையையும் நதியின் தன்மையையும் மாறி மாறிக் காணலாம். அங்ஙனம் ஆத்ம சாதகன் ஒருவன் சிவசாயுஜ்யமாதற்குச் சற்று முன்பு ஜீவ போதத்தையும் சிவ போதத்தையும் மாறி மாறிப் பெறு வது இயல்பு. அத்தகைய நிலையை அண்ணல் ஈண்டு விளக்குகிறார்.

அனுபோக சுத்தி

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆத்ம சுத்தியானது அனுபவ சுத்திக்கு ஏதுவாகிறது. அனுபவ சுத்தியை அனுபோக சுத்தியாக மாற்றுவது ஆத்ம சாதகனுடைய கடமையாகிறது. இக்கோட்பாட்டை மேலும் விளக்குவது அவசியமாகிறது.

ஆத்ம சுத்திக்கு மற்றோர் பெயர் சித்த சுத்தி அல்லது அந்தக்கரண சுத்தி. தெளிந்த மனதுக்குப் பொருள்கள் எல்லாம் உள்ளவாறு புலனாகின்றன. கண்ணுக்கு உபகரணமாயணியும் கண்ணாடியில் குற்றமிருந்தால் புறப்பொருள் உள்ளவாறு தென்படாது. பொருத்தமான கண்ணாடி தெளிந்த காட்சிக்கு முகாமையாகிறது. அதே விதத்தில் தெளிந்த மனது விவேகமாக வடிவெடுக்கிறது. விவேகத்தோடு புறப்பொருள்களை நுகர்வது அனுபவ சுத்தி. பின்பு அவையாவையும் சிவ சொரூபமாகக் கண்டு களிப்பது அனுபோக சுத்தியாகும்.

51. ஈச னேயென் னெம்மானே
யெந்தை பெருமா னென்பிறவி
நாச னேநான் யாதுமொன்
றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு
நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே
செய்வ தொன்று மறியேனே.

ஈசனே என் எம்மானே
எந்தை பெருமான் என்பிறவி
நாசனே நான் யாதும் ஒன்று
அல்லாப் பொல்லா நாய் ஆன
நீசனேனை ஆண்டாய்க்கு
நினைக்கமாட்டேன் கண்டாயே
தேசனே அம்பலவனே
செய்வது ஒன்றும் அறியேனே.

பிறவி நாசனே-பிறவியை ஒழிப்பவனே. பொல்லா-கெட்ட. நீசனேனை-இழிந்தவனாகிய என்னை. தேசனே-ஆத்ம ஜோதியே.

ஈசனே, என் தலைவா, பெருமை வாய்ந்த என் தந்தையே. நீ என் பிறவி நோயைப் போக்கியுள்ளாய். சித் அம்பலச் செழுஞ் சுடரே, உடல் உணர்ச்சியில் உழன்று கிடந்த என்னை நீ பரபோதம் அடையப்பெற்றவனாக்கினாய். உன்னை விட்டுப் பிசகுகிற மனதை யுடைய எனக்கு இனி என்ன செய்வதென்று விளங்கவில்லை.

உடல் உணர்வில் ஊறியிருப்பவன் நீசன் அல்லது புலையன் ஆவான். ஆத்ம போதம் அடையப்பெறுபவன் தனக்குப் பிறப்பும் இறப்பும் இல்லையென்பதை அனுபூதி யில் உணர்கிறான். அத்தகையவனுக்குச் சிவபோதம் எப் போதாவது மறைந்து கீழான ஜீவபோதம் தலையெடுக்கு மாயின் அது பெருவேதனையாயிருக்கும். சிவ போதத் தில் திளைத்திருப்பதே அனுபோக சுத்தியாகிறது.

52. செய்வ தறியாச் சிறுநாயேன்
செம்பொற் பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பே றத்தனையும்
பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத
மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேனா னுண்டுடுத்திங்
கிருப்ப தானேன் போரேறே.

உபநிஷத் மந்த்ரம்—44.

नायमात्मा बलहीनेन लभ्यो न च प्रमादात् तपसो वाप्यलिङ्गात् ।
एतैरुपायैर्यतते यस्तु विद्वांस्तस्यैष आत्मा विशते ब्रह्मधाम ॥

நாயமாத்மா பலஹீனேன லப்யோ ந ச
ப்ரமாதாத் தபஸோ வாப்யலிங்காத் ।
ஏதைருபாயைர்யததே யஸ்து வித்வான்ஸ்தஸ்யைஷ
ஆத்ம விசதே ப்ரஹ்மதாம ॥

(முண்டகோபநிஷதம் 3-4)

अयम् आत्मा அயம் ஆத்மா இந்த ஆத்மா बलहीनेन பல ஹீனேன பலமில்லாதவனால் न लभ्यः ந லப்ய: அடைய

செய்வது அறியாச் சிறு நாயேன்
    செம் பொன் பாதம் மலர் காணாப்
பொய்யர் பெறும் பேறு அத்தனையும்
    பெறுதற்கு உரியேன் பொய் இலா
மெய்யர் வெறி ஆர் மலர்ப் பாதம்
    மேவக் கண்டும் கேட்டிருந்தும்
பொய்யனேன் நான் உண்டு உடுத்து இங்கு
    இருப்பது ஆனேன் போர் ஏறே.

வெறி ஆர்-பரிமளம் நிறைந்த. மேவ-பொருந்த. ஏறே-ஆண் சிங்கமே

அக்ஞான இருளை அறவே அகற்றும், போர் வீரனாகிய இறைவா, அப்பெரிய செயலை அறிந்துகொள்ளாத அறிவிலி நான். ஞான சொரூபியாகிய உன்னை வணங்காது, அநித்தியமாகிய உடலைப்பேணி அதினின்று வருகிற அற்ப சுகத்தை நாடும் நாய் போன்றவன் நான். பொய்யாகிய உடல்பற்றை ஒழித்துவிட்டு மெய்ப்பொருளாகிய உன்னையே சேவிக்கும் சான்றோர்களைப் பார்த்திருந்தும் அவர்களைப் பற்றிக் கேட்டிருந்தும், அவர்களது

முடியாது प्रमादात् च न वा ப்ரமாதாத் ச ந வா கவனமின்மையாலும் அடைய முடியாது अलिङ्गात् அலிங்காத் சரியான அறிகுறி யில்லாது तपसः अपि न தபஸ: அபி ந சரியான தவம் இல்லாதவிடத்தும் यः विद्वान् ய: வித்வான் எந்த அறிவாளி एतैः उपायैः ஏதை: உபாயை: சரியான இந்த உபாயங்களால் यतते யததே முயலுகிறான் तस्य தஸ்ய அவனுக்கு एषः आत्मा ब्रह्मधाम ஏஷ: ஆத்மா ப்ரஹ்மதாம பிரம்மசொரூபமாகிய இந்த ஆத்மா विशते விசதே (பிரவேசிக்கிறான்) கிட்டுகிறது.

இந்த ஆத்மாவானது பலவீனனால் அடையப்படுவதன்று. கவனமின்மை, ஆச்ரமநெறிவழு, பொருந்தாத தபசு ஆகியவைகளும் ஆத்மாவை அடைவதற்கு இடைஞ்சல்களாம். சரியான உபாயங்களால் முயலுகிற அறிவாளி பிரம்மத்தை அடைகிறான்.

உடல் உறுதியும் உள்ளத்தில் திட்பமும் ஆத்ம சாதனத்துக்கு இன்றியமையாதவைகள். சாதனத்தில் தீவிர

செந்நெறி சாராது உடலை ஓம்புதலிலேயே நான் கண்ணுங் கருத்து மாயிருக்கிறேன். என்னே என் இழிசெயல்!

பூர்வஜன்மாந்தர வாசனையானது ஜீவனைப் போகத்தில் தூண்டுகிறது. ஆனால் யோகத்தின் சிறப்பை அறிந்து கொண்டவன் போகம் வேண்டாம் என்று தனது சிற்றியல்புக்கு உபதேசிக்கிறான். இது அனுபோக சுத்தியாகிறது.

அக்ஞான இருளை அகற்றும் போர் ஏறு ஈசன். தங்கள் அக்ஞானத்தை அகற்ற முயல்பவர்களே உண்மையில் ஈசனை வழுத்துகின்றனர். உடல் பற்றை ஒழிப்பவரே உண்மையில் ஈசனை வழுத்துகின்றனர். இதற்கெல்லாம் போர்வீரனது ஆற்றல் வேண்டும்.

53. போரே றேநின் பொன்னகர்வாய்
நீபோந் தருளி யிருணீக்கி
வாரே றிளமென் முலையாளோ
டுடன்வந் தருள வருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ்
சேரக் கண்டுங் கண்கெட்ட

மாகக் கவனம் செலுத்துவதும் முற்றிலும் அவசியம். துறவறம் பூண்டிருப்பவன் அதற்குரிய நெறியினின்று சிறிதும் பிசகலாகாது என்பதை அலிங்கம் என்னும் சொல் தெளிவுறுத்துகிறது. தவத்தின் கோட்பாட்டை உள்ளபடி அறிந்து அதை முறையாக அனுஷ்டிப்பதும் அவசியமாகிறது. பரமனை அடைதற்கு இந்த நிபந்தனைகளெல்லாம் நன்கு நிறைவேறப் பெறுதல் வேண்டும்.

உபநிஷத் மந்த்ரம் — 45

यत्र योगेश्वरः कृष्णो यत्र पार्थो धनुर्धरः ।
तत्र श्रीर्विजयो भूतिर्ध्रुवा नीतिर्मतिर्मम ॥

யத்ர யோகேச்வர: க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்தர: ।
தத்ர ஸ்ரீர்விஜயோ பூதிர்த்ருவா நீதிர்மதிர்மம ॥

(பகவத்கீதோபநிஷதம் 18-78)

ஊரே றாயிங் குழல்வேனே
கொடியே னுயிர்தா னுலவாதே.

போர் ஏறே நின் பொன் நகர்வாய்
நீ போந்தருளி இருள் நீக்கி
வார் ஏறு இளம் மென் முலையாளோடு
உடன் வந்தருள அருள் பெற்ற
சீர் ஏறு அடியார் நின் பாதம்
சேரக் கண்டும் கண்கெட்ட
ஊர் ஏறு ஆய் இங்கு உழல்வேனே
கொடியேன் உயிர்தான் உலவாதே.

வார் ஏறு-கச்சு கட்டிய. சீர் ஏறு அடியார்-தவத்தில் சிறப்பு எய்திய அன்பர்கள். ஊர் ஏறு-பன்றி. உலவாது-நீங்கப்பெறுது.

அக்ஞான இருளை நீக்குதல் என்னும் போர் புரிதலில் ஆண் சிங்கமே, அருள்புரிதல் பொருட்டுப் பாரமார்த்திகப் பெரு நிலையி லின்று பிரபஞ்சச் சிறுநிலைக்கு, யாண்டும் யௌவன தசையில் இருக்கும் நினது அருள் சக்தியோடு, நீ எழுந்தருள்கின்றாய். தவத்தால் பரிபக்குவம் அடைந்துள்ள உன் அன்பர்கள் உன் அருளால் உன்னை அடையப் பெறுவதைக் காண்கிறேன். ஆயினும் கண் இல்லாத ஊர்ப்பன்றிபோல் நான் இங்குக் கீழ்மையில் உழல்கின்றேன். இப்படி யிருப்பதைவிட நான் உயிர் துறந்துவிடலாகாதா?

यत्र யத்ர எங்கு योगेश्वरः கிருஷ்ண: யோகேச்வர: க்ருஷ்ண: யோகேசுவரனாகிய கிருஷ்ணன் यत्र யத்ர எங்கு धनुर्धरः पार्थः தனுர்தர: பார்த்த: தனுசைத் தாங்கிய பார்த்தன் तत्र தத்ர ஆங்கு श्रीः ஸ்ரீ: திரு विजयः விஜய: வெற்றி भूतिः பூதி: விரிவு ध्रुवा नीतिः த்ருவா நீதி: நிலைத்த நியாயமும் உள इति இதி என்பது मे மே என்னுடைய मतिः மதி: கொள்கை.

யோகேசுவரக் கிருஷ்ணனும் தனுசைத் தாங்கிய பார்த்தனும் எங்குளரோ ஆங்குத் திருவும், வெற்றியும், விரிவும், நிலைத்த நீதியும் உளவென்பது என் கொள்கை.

தெய்வத்தின் சகாயமும் மனிதனுடைய நேர்மையான முயற்சியும் ஒன்று சேர்ந்திருக்கவேண்டும். மனிதனுக்கு ஆகவேண்டியதையெல்லாம் தெய்வம் செய்து வைக்கும் என்று நினைத்துக்கொண்டு தன் முயற்சியை

தவத்தில் தீவிரமாக முயன்று தகுதி வாய்க்கப் பெற்றவர்களையே அருள் அன்னையும் அப்பனும் ஒன்ருய் வந்து ஆட்கொள்கின்றனர். இவ்வுண்மையை அறியும் ஆத்மசாதகன் தான் கீழ்மையில் உழல்வதை விடச் சாவது மேல் என்று வருந்துவானாகில் அது அனுபோக சுத்தியாகிறது.

இறைவனுடைய அருளோடு ஜீவப்பிரயத்தனத்தை ஒன்றுசேர்ப்பது யோகம்.

54. உலவாக் காலந் தவமெய்தி
யுறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை யிதுமாய்க்க
மாட்டேன் மணியே யுனைக்காண்பா
னலவா நிற்கு மன்பிலே
னென்கொண் டெழுகே னெம்மானே.

உலவாக் காலம் தவம் எய்தி
உறுப்பும் வெறுத்து இங்கு உனைக் காண்பான்
பல மா முனிவர் நனி வாடப்
பாவியேனைப் பணி கொண்டாய்
மல மாக் குரம்பை இது மாய்க்க
மாட்டேன் மணியே உனைக் காண்பான்
அலவா நிற்கும் அன்பு இலேன்
என் கொண்டு எழுகேன் எம்மானே.

யெல்லாம் நிறுத்திவிடலாகாது. பிறகு துரியோதனன் கூட்டம் செய்ததுபோன்று ஈசுவரனது திட்டத்தைப் புறக்கணித்துவிட்டுத் தனது சொந்த முயற்சியால் எல்லாம் ஆய்விடும் என்று கருதி வினையாற்றலாகாது. யாண்டும் கடவுளைச் சார்ந்திருந்து தன் கடமையைக் கடவுள் பொருட்டு முழு மனதுடன் செய்யவேண்டும். ஈசுவர கிருபையும் மானுட முயற்சியும் ஒன்றுசேர்வது யோகம். அதனல் இகமும் பரமும் மனிதனுக்கு வாய்க்கின்றன.

உலவாக் காலம்-அளவிறந்த காலம். **உறுப்பும் வெறுத்து**-உடல் ஞாபகத்தைக் கடந்து. **பல மா முனிவர்**-அநேக பெரிய முனிவர்கள். **நனி வாட**-உன்னை நினைந்து மிகவும் வாடி நிற்க. **மல மாக் குரம்பை**-அழுக்கு மயமாகிய பெரிய உடம்பு. **அலவா நிற்கும் அன்பு இலேன்**-வருந்தி நிற்கும் மெய்யன்பு இல்லேன். **எழுகேன்**-உயர்வேன்.

பெரிய முனிவர்கள் பலர் உடல் உணர்வைக் கடந்து நின்று உன் தரிசனத்தின் பொருட்டுப் பெரிதும் வாடியிருத்தல் என்னும் கடுந்தவத்தை நெடுநாள் செய்தனர். நீயோ, அஃதொன்றும் செய்யாத என்னை ஆட்கொண்டாய். நானே அழுக்கில் அமைந்துள்ள உடல் ஞாபகத்தை ஒழித்திலேன். அருள் ஜோதியே, உன்னைக் காண்பதற்கான தீவிரமான பேரன்பு பெற்றிலேன். இறைவா, நான் உய்வு அடைவது எங்ஙனம்?

தேகாத்ம புத்தி அல்லது உடல் உணர்வு படைத்திருப்பது கீழான நிலை. அதைக் கடந்து மேலே போவது ஆத்ம சாதனம். தங்களுக்குப் பிரேமை பக்தியைக் கொடுத்துதவ வேண்டுமென்று கோபிமார்கள் பால கிருஷ்ணனிடம் வேண்டினர். அதற்கு அவர்கள் இன்னும் பக்குவமாகவில்லையென்று கண்ணன் கூறியது கோபிமார்களுக்கு விளங்கவில்லை. எனவே நீராடிக் கொண்டிருந்த கோபியர்களுடைய துகில்களை மரத்தின் மீது எடுத்து வைத்து அவர்களுக்குத் தேகாத்மபுத்தி இருந்ததென்று கண்ணன் நிரூபித்துக் காட்டினன். அப்பொழுதுதான் தங்களுடைய பரிபக்குவம் அடையாத நிலை அவர்களுக்கு விளங்கிற்று. இக்கோட்பாட்டை ஈண்டு நினைவுக்குக் கொண்டுவருவது அவசியம். உடல் உணர்வைத் தாண்டிய பெருநிலையை உன்னுவது அனுபோக சுத்தி.

உபநி—36. பக்கம் 296ல் காண்க.

55. மானேர் நோக்கி யுமையாள்
பங்கா வந்திங் காட்கொண்ட

உபநிஷத் மந்த்ரம்—46.

असतो मा सद्गमय । तमसो मा ज्योतिर्गमय
मृत्योर्माऽमृतं गमय ॥

தேனே யமுதே கரும்பின்
　　தெளிவே சிவனே தென்றில்லைக்
கோனே யுன்றன் றிருக்குறிப்புக்
　　கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங்
　　கிருப்ப தானே னுடையானே.

மான் நேர் நோக்கி உமையாள்
　　பங்கா வந்து இங்கு ஆட்கொண்ட
தேனே அமுதே கரும்பின்
　　தெளிவே சிவனே தென் தில்லைக்
கோனே உன் தன் திருக்குறிப்புக்
　　கூடுவார் நின் கழல் கூட
ஊன் ஆர் புழுக்கூடு இது காத்து இங்கு
　　இருப்பது ஆனேன் உடையானே.

மான்விழி போன்ற விழியினையுடைய அம்பிகையின் வலப் பாகா, சிதம்பரநாதா, நீ சகுண பிரம்மமாகத் தோன்றி உன் அடியார்க்கு அமிர்தம் ஆகின்றாய். உன்னை உன்னுவதே மானுட வாழ்க்கையின் குறிக்கோள் என்று நீ காட்டியருளியதை அறிந்துகொண்ட நின் அன்பர் உன்னையே நினைந்து உன்னை

அஸதோ மா ஸத்கமய ।　தமஸோ மா ஜ்யோதிர்கமய ।
ம்ருத்யோர்மாऽம்ருதம் கமய ॥

(ப்ரஹதாரண்யகோபநிஷதம் 1-3-28)

असत. அஸத: பொய்யினின்று मा மா என்னை सत् ஸத் மெய்ப்பொருளின்கண் गमय கமய அழைத்துச் செல் तमसः தமஸ: அக்ஞான இருளினின்று मा மா என்னை ज्योतिः ஜ்யோதி: ஞான விளக்கின் கண் गमय கமய அழைத்துச் செல் मृत्योः ம்ருத்யோ: மரணத்தினின்று मा மா என்னை अमृतं அம்ருதம் அழிவின்மையின்கண் गमय கமய அழைத்துச் செல்.

பொய்யாகிய பிரபஞ்சத்தினின்று என்னை மெய்ப்பொருளின் கண் அழைத்துச் செல். அக்ஞான இருளினின்று என்னை ஞான ஒளியின்கண் அழைத்துச் செல். மரணத்தினின்று என்னை அழியாப் பொருளாகிய ஆத்மாவின்கண் அழைத்துச் செல்.

அடைந்தனர். உன் உடைமையாகிய நானே, உடலையே நினைந்து நிலவுலகுக்கு உரியவன் ஆனேன்.

மனிதன் ஆழ்ந்து எதை யாண்டும் எண்ணுகிறானோ அந்த மயம் ஆகிறான்.

56. உடையா னேநின் றனையுள்கி
யுள்ள முருகும் பெருங்காத
லுடையா ருடையாய் நின்பாதஞ்
சேரக் கண்டிங் கூர்நாயிற்
கடையா னேனெஞ் சுருகாதேன்
கல்லாமனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தாக முடித்தாயே.

பிரபஞ்சம் ஒரு காலத்தில் இருக்கிறது; மற்றொரு காலத்தில் மறைந்து போகிறது. ஆதலால் அது அஸத் அல்லது பொய். ஆத்மா எப்பொழுதுமே இருப்பதால் அது ஸத். பிரபஞ்சம் அக்ஞான சொரூபம்; ஆத்மாவோ ஞான சொரூபம்; ஆதலால் அது சித். பிரபஞ்சம் மரண சொரூபம். ஆத்மா அமிர்த சொரூபம். மரணம் துக்கத்தைத் தருகிறது. அமிர்தம் ஆனந்தத்தைத் தருகிறது. ஆதலால் ஆத்மா ஆனந்த சொரூபம். ஸத் + சித் + ஆனந்தம் = ஸச்சிதானந்தம் மெய்ப்பொருளின் முடிந்த விளக்கமாகிறது. உயிர்கள் அனைத்தும் நாடுவனயாவும் ஸச்சிதானந்தத்தின் கூறுகளாம்.

உபநிஷத் மந்த்ரம்—47.

सूक्ष्मातिसूक्ष्मं कलिलस्य मध्ये विश्वस्य स्रष्टारमनेकरूपम्।
विश्वस्यैकं परिवेष्टितारं ज्ञात्वा शिवं शान्तिमत्यन्तमेव ॥

ஸூக்ஷ்மாதிஸூக்ஷ்மம் கலிலஸ்ய மத்யே
விச்வஸ்ய ஸ்ரஷ்டாரமநேகரூபம் ।
விசுவஸ்யைகம் பரிவேஷ்டிதாரம் ஞாதவா
சிவம் சாந்திமத்யந்தமேதி ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 4 - 14)

உடையானே நின்தனை உள்கி
　　உள்ளம் உருகும் பெரும் காதல்
உடையார் உடையாய் நின் பாதம்
　　சேரக் கண்டு இங்கு ஊர் நாயின்
கடை ஆனேன் நெஞ்சு உருகாதேன்
　　கல்லா மனத்தேன் கசியாதேன்
முடை ஆர் புழுக் கூடு இது காத்து இங்கு
　　இருப்பது ஆக முடித்தாயே.

உள்கி-நினைந்து. பெருங்காதல்-பிரேமை பக்தி. முடை ஆர் புழுக்கூடு-புலால் நாற்றம் பொருந்திய உடல்.

உயிர்கள் அனைத்தும் இறைவா, உனக்குச் சொந்தம். ஆயினும் பேரன்போடு உன்னையே நினைப்பவர் மட்டும் உன்னை அடைகின்றனர். இதை நான் கண்டிருந்தும் என் நெஞ்சம் உருகவில்லை. எனக்கு விவேகம் வரவில்லை. உள்ளக் கனிவு உண்டாகவில்லை. துர்நாற்றம் வீசும் உடலில் அபிமானம் வைத்து ஊர் நாய்க்கும் கீழ்ப்பட்டவனாக இங்கு வாழ்ந்திருக்கிறேன்.

பரபோதத்தில் ஊறியிருப்பவர் பரம்பொருளின் சொரூபம் ஆகின்றனர். உடல் உணர்வில் ஊறியிருப்பவர் சிவனுக்குச் சொந்தமாயிருந்தும் கவனிப்பார் அற்ற

सूक्ष्मातिसूक्ष्मं ஸூக்ஷ்ம அதிஸூக்ஷ்மம் நுண்ணியதிலும் அதி நுண்ணியதை कलिलस्य मध्ये கலிலஸ்ய மத்யே பிரளயத்துக்கிடையில் विश्वस्य स्रष्टारं விச்வஸ்ய ஸ்ரஷ்டாரம் விசுவத்தைச் சிருஷ்டி செய்தவனை अनेकरूपं அநேக ரூபம் பல வடிவங்களை எடுத்தவனை विश्वस्य விஸ்வஸ்ய விசுவத்தினுடைய एकं परिवेष्टितारं ஏகம் பரிவேஷ்டிதாரம் ஒரே நிறை பொருளை शिवं சிவம் சிவனை ज्ञात्वा ஞாத்வா அனுபூதியில் அறிந்து अत्यन्तं शान्तिं அத்யந்தம் சாந்திம் அளவு கடந்த சாந்தியை एति ஏதி ஒருவன் அடைகிறான்.

சூக்ஷ்மத்திலும் அதி சூக்ஷ்மமாயிருக்கிறவனை, பிரளயத்தினின்று விசுவத்தை உண்டுபண்ணுகிறவனை, எண்ணிறந்த வடிவங்களை எடுத்திருக்கிறவனை, விசுவம் முழுவதும் நிறைந்திருக்கிறவனை, சிவனை, அனுபூதியில் அறிகிறவன் அத்தியந்த சாந்தியை அடைகிறான்.

நாய்க்கும் கீழோர் ஆகின்றனர். வெவ்வேறு ஞான பூமிகள் அவரவர் மனநிலையில் இருக்கின்றன என்பது கோட்பாடு.

57. முடித்த வாறு மென்றனக்கே
தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற்
சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே
சோர்ந்த வாறு முகங்குறுவேர்
பொடித்த வாறு மிவையுணர்ந்து
கேடென் றனக்கே சூழ்ந்தேனே.

முடித்த ஆறும் என் தனக்கே
தக்கதே முன் அடியாரைப்
பிடித்த ஆறும் சோராமல்
சோரனேன் இங்கு ஒருத்திவாய்
துடித்த ஆறும் துகில் இறையே
சோர்ந்த ஆறும் முகம் குறு வேர்
பொடித்த ஆறும் இவை உணர்ந்து
கேடு என் தனக்கே சூழ்ந்தேனே.

சோராமல் - தளரவிடாமல். **சோரனேன்** - கள்ளனாகிய நான். **துகில்**-ஆடை. **இறையே**-மிகச் சிறிய அளவு. **சோர்ந்தவாறும்**-நழுவிய விதமும். **குறுவேர்**-சிறு வியர்வை. **பொடித்தவாறும்**-அரும்பிய விதமும். **சூழ்ந்தேனே**-செய்துகொண்டேனே.

உன் வழிபாட்டின் பொருட்டு நீ எனக்கு இவ்வுடலைக் கொடுத்தது பொருத்தம். தளராது நான் முன்பு உன் அடியாரோடு சேர்ந்திருந்ததும் பொருத்தம். இங்ஙனம் யோகத்துக்குரிய எனது உடல் வாழ்க்கையைப் போகத்துக்கு உரியதாகச் செய்துவிடுவேனாகில் அது பொருந்தாது. அது திருட்டுச் செயல்.

சிவனுடைய சொரூபம் எத்தகையது என்பதும் அது யாரால் அடையப்பெறுகிறது என்பதும் ஈண்டுத் தெளிவடைகின்றன.

யோகத்தின் திறனும் போகத்தின் தளர்வும் சீர் தூக்கப்படுகின்றன.

உபநி — 40. பக்கம் 313ல் காண்க.

58. தேனைப் பாலைக் கன்னலின்
 றெளியை யொளியைத் தெளிந்தார் த
மூனை யுருக்கு முடையானை
 யும்ப ரானை வம்பனே
னானின் னடியே னீயென்னை
 யாண்டா யென்று லடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந்
 தன்மை யாமென் றன்மையே.

தேனை பாலை கன்னலின்
 தெளியை ஒளியை தெளிந்தார் தம்
ஊனை உருக்கும் உடையானை
 உம்பரானை வம்பனேன்
நான் நின் அடியேன் நீ என்னை
 ஆண்டாய் என்றுல் அடியேற்குத்
தானும் சிரித்தே அருளலாம்
 தன்மை ஆம் என் தன்மையே.

உம்பரானை - மேலாக உள்ளவனை. வம்பனேன் - வீணுகிய நான்.

மனம் தெளிந்தவர்களுக்குப் பரமானந்தத்தை ஊட்டும் ஞானப் பிரகாசன் நீ; அவர்களுக்கு ஒப்பற்ற மேலாம் பொருள் நீ; மற்றும் பக்குவம் அடையாத நான் உனக்கு அடிமையென்றும், நீ எனக்குத் தலைவன் என்றும் சொந்தம் பாராட்டினுல் ஒரு புன் சிரிப்பின் மூலம் நீ அதை மறுப்பாய். உன் அருளுக்குத் தகுதி யற்ற நான் அதற்குத் தகுதியுடையவன் என்று சொல்லுவது தகாது.

இறைவனுடைய அருளுக்குத் தக்கார் தகவிலர் என்பதை அவரவர் பெறும் சிவானந்த போகம் என்னும் பேறு ஒன்றே உள்ளபடி விளக்கிக்காட்டும்.

59. தன்மை பிறரா லறியாத
தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா
புறமே போக விடுவாயோ
வென்னை நோக்கு வார்யாரே
யென்னுன் செய்கே னெம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி
யெந்தா யெங்குப் புகுவேனே.

தன்மை பிறரால் அறியாத
தலைவா பொல்லா நாய் ஆன
புன்மையேனை ஆண்டு ஐயா
புறமே போக விடுவாயோ
என்னை நோக்குவார் யாரே
என் நான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழும் திருமேனி
எந்தாய் எங்குப் புகுவேனே.

ஈசா, உன் இயல்பு முழுதையும் நீயே அறிவாய்; நின் அன்பர் உட்பட வேறு யாரும் உன்னை முழுதும் அறிந்துகொள்ளமாட்டார். தகுதியற்ற அடியேனை நீ ஆட்கொண்டு உன் அடியவன் ஆக்கினுய். இனி, நீ கைவிட்டுவிட்டால் எனக்கு வேறு புகலிடம் யாது உளது? பொன்னுர் மேனியனே, எப்படியும் நீயே என்னைக் காத்தருள வேண்டும்.

மணந்தபின் கணவன் மனைவியைப் புறக்கணித்து விட்டால் கற்புடைய அவளுக்கு வேறுகதியில்லை. ஜீவாத்மனுக்குப் பரமாத்மனைவிடப் புகலிடம் வேறு இல்லை. இச்சா சுதந்திரமும் அவனுக்கில்லை. அவனை உய்விப்பது பரம்பொருளின் பாரமாகும்.

60. புகுவே னெனதே நின்பாதம்
போற்று மடியா ருண்ணின்று
நகுவேன் பண்டு தோணேக்கி
நாண மில்லா நாயினேன்

உபநிஷத் மந்த்ரம் — 48.

द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते ।
तयोरन्यः पिप्पलं स्वाद्वत्त्यनश्नन्न्यो अभिचाकशीति ॥

னெகுமன் பில்லை நினைக்காண
நீயாண் டருள வடியேனுந்
தகுவ னேயென் றன்மையே
யெந்தா யந்தோ தரியேனே.

புகுவேன் எனதே நின் பாதம்
போற்றும் அடியார் உள் நின்று
நகுவேன் பண்டு தோள் நோக்கி
நாணம் இல்லா நாயினேன்
நெகும் அன்பு இல்லை நினைக்காண
நீ ஆண்டு அருள அடியேனும்
தகுவனே என் தன்மையே
எந்தாய் அந்தோ தரியேனே.

நகுவேன் - நகைப்பேன். பண்டு-முன்பு. தோள் நோக்கி-உடலைப் பார்த்துச் செருக்கடைந்து. நெகும் அன்பு-உருகுகிற பேரன்பு.

த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம்
வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே ।
தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யனச்
னன்னன்யோ அபிசாககீதி ॥

(முண்டகோபநிஷதம் 3-1)

सखाया ஸகாயா தோழமையில் सयुजा ஸயுஜா நன்கு இணைக்கப்பெற்றுள்ள द्वा सुपर्णा த்வா ஸுபர்ணா இரண்டு அழகிய பறவைகள் समानं वृक्षं ஸமானம் வ்ருக்ஷம் ஒரே மரத்தில் परिषस्वजाते பரிஷஸ்வஜாதே சேர்ந்து வாழ்கின்றன तयोः தயோ: அவ்விரண்டினுள் अन्यः அன்ய: ஒன்று पिप्पलं பிப்பலம் பழத்தை स्वादु ஸ்வாது சுவைத்து अत्ति அத்தி அருந்துகிறது अन्यः அன்ய: மற்றது अनश्नन् அனச்னன் அருந்தாது अभिचाकशीति அபிசாகசீதி பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறது.

தோழமையில் ஒன்றோடு ஒன்று நன்கு இணைக்கப்பெற்றுள்ள இரண்டு அழகிய பறவைகள் ஒரே மரத்தில் சேர்ந்து வாழ்கின்றன. அவ்விரண்டினுள் ஒன்று பழத்தைச் சுவைத்து உண்கிறது. மற்றது அருந்தாது சும்மா இருக்கிறது.

வெட்கம் கெட்ட நான் முன்பு உன் அடியார்கள் திருக்கூட்டத்தில் இருந்துகொண்டு எனது தோளின் வலிமையையும் அழகையும் பார்த்து மனம் மகிழ்ந்திருந்தேன். உனது சொருபத்தைக் கண்டு பரவசமடைவதற்கான பேரன்பு என்னிடமில்லை. இந்நிலைமையில் நீ என்னை ஆள உனக்கு அடிமையாயிருக்க நான் தகுந்தவனு? என் தந்தையே என் இயல்பு இப்படியும் சிறுமையுறுமா? இக்கீழ்மையை நான் சகியேன். எனக்குச் சொந்தமாகிய உன் திருவடியையே நான் அடையவேண்டும்.

ஜீவாத்மனும் பரமாத்மனும் இணைபிரியாத இரண்டு பறவைகள் எனப்படுகின்றன. உடல் ஈண்டு மரம் என இயம்பப்படுகிறது. பிரகிருதியையும் மரம் என மொழிவது முறை. வினைப்பயன் பழம் என்று சொல்லப்படுகிறது. ஜீவாத்மன் வினைப்பயன் என்னும் பழத்தை அருந்துகிறது. நீக்கமற எங்கும் நிறைந்துள்ள பரமாத்மன் உடலிலும் உறைந்திருக்கிறுன். ஆனுல் அவனுக்கு உடல் உபாதியாவதில்லை. வினையிலும் அவன் கட்டுப்பட்டவன் அல்லன்.

உபநிஷத் மந்த்ரம்—49.

समाने वृक्षे पुरुषो निमग्नोऽनीशया शोचति मुह्यमानः ।
जुष्टं यदा पश्यत्यन्यमीशमस्य महिमानमिति वीतशोकः ॥

ஸமானே வ்ருக்ஷே புருஷோ நிமக்னோऽநீசயா
சோசதி முஹ்யமான: ।
ஜுஷ்டம் யதா பச்யத்யன்யமீசமஸ்ய
மஹிமானமிதி வீதசோக: ॥

(முண்டகோபநிஷதம் 3–2)

समाने वृक्षे ஸமானே வ்ருக்ஷே அதே மரத்தில் निमग्नः நிமக்ன: கட்டுண்டவனும் अनीशया அனீசயா தனதுமேலாம் கதியை மறந்துவிட்டு मुह्यमानः முஹ்யமான: அக்ஞானத்தால் மோஹமடைந்திருப்பவனுமாகிய पुरुषः புருஷ: ஜீவாத்மன் शोचति சோசதி துயரடைகிறுன் जुष्टं ஜுஷ்டம் பக்தர்களால் போற்றப்படுகிறவனை अन्यं ईशं அன்யம் ஈசம் மற்றவனுகிய ஈசனை यदा पश्यति யதா பச்யதி பார்க்கும்பொழு

ஆத்ம சாதகன் தான் இருக்கவேண்டிய பெருநிலையி னின்று வழுவிக் கீழ்மையுற்றிருக்கிற காலத்திலும் அந்த மேல் நிலையையே உன்னி அருள் தாகம் பிடித்திருப்பது அனுபோக சுத்தியாகும்.

7. காருண்யத்திரங்கல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பிரபஞ்சமெங்குமுள்ள உயிர்வகைகள் தத்தம் நிலை களினின்று மேல் நிலைக்குப் போக இயற்கைத் தாய் வேண்டியவாறு வசதிகள் செய்து வைத்துள்ளாள். மேல் நிலைக்குப் போவதற்குத் துன்பமும் ஒரு தூண்டுகோலா யிருக்கிறது. ஜீவர்களை உயர்நிலைக்குப் போம்படி உந்தித் தள்ளுவது கடவுளின் காருண்யம். பாரமார்த்திகப் பெருநிலையடைய விரும்புபவர்களுக்கு அக்காருண்யம்

தெல்லாம் अस्य महिमानं इति அஸ்ய மஹிமானம் இதி அவனு டைய மஹிமை என்று पश्यति பச்யதி உணர்கிறுன் (அத ஞல்) वीतशोकः வீதசோக: துயரம் நீங்கப்பெறுகிறுன்.

ஆதே மரத்தில் கட்டுண்டவனும் தனது மேலாம் இயல்பை மறந்துவிட்டு அக்ஞானத்தால் மோகமடைந்திருப்பவனுமாகிய ஜீவாத்மன் துயரடைகிறுன். மற்றுப் பக்தர்களால் போற்றப்படு பவனும் மகிமை வாய்ந்தவனும் ஆகிய ஈசனைப் பார்க்கும் பொழு தெல்லாம் அவனுக்குத் துயரம் ஒழிகிறது.

ஜீவாத்மனுக்கு ஒவ்வொரு இன்பத்திலும் துன்பம் கலந்தே இருக்கிறது. அனுபவத்தில் அவனுக்கு இவ் வுண்மை விளங்குகிறது. சாக்ஷியாயிருக்கும் பரமாத் மனைச் சிந்தித்துப் பார்க்கும் பொழுதெல்லாம் அவன் துயரத்தை ஒதுக்கிவிட்டுப் பரமாத்மனுக்குப் பக்கத்தில் போகிறுன். அது துவைத நிலை. ஆங்கு ஜகத், ஜீவன், பரம் ஆகிய முப்பொருள்களும் மெய்ப்பொருள்களாம். பின்பு ஜீவாத்மன் தன்னைப் பரமாத்மாவின் பிம்பம் என்று உணர்கிறுன். அது விசிஷ்டாத்வைத நிலை. இறுதியில் அவன் பரமாத்மாவில் லயமாகிறுன். அது அத்வைத நிலை.

விரைந்து வகைப்படுகிறது. அதை உணரும் பக்தர்கள் இறைவன்பால் மேலும் மேலும் கடப்பாடுடையவர்கள் ஆகின்றனர். அக்கோட்பாடு ஈண்டு இனிது வெளியாகிறது.

61. தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி யெங்கள்
விடலையே போற்றி யொப்பி
லொருத்தனே போற்றி யும்பர்
தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி யெங்க
ணின்மலா போற்றி போற்றி.

தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள்
விடலையே போற்றி ஒப்பு இல்
ஒருத்தனே போற்றி உம்பர்
தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள்
நின்மலா போற்றி போற்றி.

உபநிஷத் மந்த்ரம்—.50

यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ।
तं ह देवं आत्मबुद्धिप्रकाशं मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये ॥
निष्कलं निष्क्रियं शान्तं निरवद्यं निरञ्जनम् ।
अमृतस्य परं सेतुं दग्धेन्धनमिवानलम् ॥

யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை
வேதாம்ஸ்ச ப்ரஹிணோதி தஸ்மை ।
தம் ஹ தேவம் ஆத்மபுத்திப்ரகாசம் முமுக்ஷுர்வை
சரணமஹம் ப்ரபத்யே ॥
நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜனம் ।
அம்ருதஸ்ய பரம் ஸேதும் தக்தேந்தனமிவானலம் ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 6-18, 19)

சங்கரன்-சம் + கரன், நலன் செய்பவன். வானவிருத்தன்—சித் ஆகாசத் தொல்லோன். விடலை-திண்மைபொருந்திய அண்ணல். உம்பர் தம்பிரான்-தேவதேவன். தில்லை நிருத்தன்-நடராஜா, சகுணப் பிரம்மம். நின்மலன்-நிர்மலன், தூயவன்.

உடல் வாழ்க்கை எனக்கு வேண்டாம். சங்கரா, சிதாகாசனே, பழமையும் புதுமையும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவனே, முழுமுதல் பொருளே, மஹாதேவா, ஆனந்தத்தாண்டவா, நிர்மலனே உன்னையே வணங்குகிறேன்.

உடல் உணர்வு படைத்தவன் ஜீவாத்மாவாகிறான். பரமாத்மாவின் அருளால் பரமாத்ம உணர்விலேயே ஊறியிருப்பவனுக்குப் பரபோதம் உண்டாகிறது.

यः ब्रह्माणं पूर्वं विदधाति யः ப்ரஹ்மாணம் பூர்வம் விததாதி யார் பிரம்மதேவனைச் சிருஷ்டியின் பொழுது தோற்றுவித்தானோ यः च वेदान् प्रहिणोति वै யः ச வேதான் ப்ரஹிணோதி வை யார் மேலும் வேதங்களை (அந்தப் பிரம்ம தேவனுக்குக்) கொடுத்தானோ तस्मै தஸ்மை அவனை आत्मबुद्धिप्रकाशं ஆத்ம புத்தி ப்ரகாசம் அறிவை ஆத்ம ஞானத்தில் திருப்புபவனை निष्कलं நிஷ்கலம் அவயவங்கள் இல்லாதவனை निष्क्रियं நிஷ்க்ரியம் செயலைக் கடந்தவனை शान्तं சாந்தம் சாந்த மூர்த்தியை निरवद्यं நிரவத்யம் குற்றமற்றவனை निरञ्जनं நிரஞ்சனம் மாசற்றவனை अमृतस्य परं सेतुं அம்ருதஸ்ய பரம் ஸேதும் மரணமின்மைக்குச் சீரிய பாலமாயிருப்பவனை दग्धेन्धनं अनलं इव தக்தேந்தனம் அனலம் இவ விறகு எரிந்த பிறகு இருக்கிற தீப்போன்றவனை तं ह தம் ஹ அவனையே मुमुक्षुः अहं முமுக்ஷு: அஹம் மோக்ஷத்தை நாடுகிற நான் शरणं प्रपद्ये சரணம் ப்ரபத்யே சரணடைகிறேன்.

யார் பிரம்மதேவனைச் சிருஷ்டியின் பொழுது தோற்றுவித்தானோ, யார் மேலும் வேதங்களை அந்தப் பிரம்ம தேவனுக்குக் கொடுத்தானோ அப்பரமனை, அறிவை ஆத்ம ஞானத்தில் திருப்புபவனை, அவயவங்கள் இல்லாதவனை, கருமமில்லாதவனை, சாந்த மூர்த்தியை, குற்றமற்றவனை, மாசற்றவனை, மரணமின்மைக்குச் சீரிய பாலமாயிருப்பவனை, விறகு எரிந்த பிறகு ஒளிரும் தீப்போன்றவனை மோக்ஷத்தை நாடுகிற நான் சரணடைகிறேன்.

இது தியானத்துக்குப் பொருந்திய கருத்து ஆகிறது.

62. போற்றியோ நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய
சயசய போற்றி போற்றி.

போற்றி ஓம் நமச்சிவாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றி ஓம் நமச்சிவாய
புகல் இடம் பிறிது ஒன்று இல்லை
போற்றி ஓம் நமச்சிவாய
புறம் எனைப் போக்கல் கண்டாய்
போற்றி ஓம் நமச்சிவாய
சய சய போற்றி போற்றி.

புயங்கனே-புஜங்கம் அல்லது பாம்பை அணிந்தவனே. புகல் இடம்-கதி. போக்கல்-போக்கிவிடாதே. கண்டாய்-அசைச்சொல்.

ஓம் நமச்சிவாய என்னும் மந்த்ர சொருபியே, பாம்பை அணிந்திருப்பவனே, உலக வாழ்க்கையில் மயங்கிக்கிடக்கிற எனக்கு அதினின்று விடுபடுவதற்கு உன்னைத் தவிர வேறு கதியில்லை. என்னைப் புறக்கணித்துவிடவேண்டாம். என்னை உய்விப்பதில் உனக்கு வெற்றியுண்டாகுக.

உணர்ந்து ஆர்வத்துடன் இறை நாமத்தை ஓதுபவர்க்கு அவன் அருள்கிட்டுகிறது.

63. போற்றியென் போலும் பொய்யர்
தம்மையாட் கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி
நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப்
புதுமதுப் புவன நீர்தீக்
காற்றிய மானன் வான
மிருசுடர்க் கடவு ளானே.

போற்றி என்போலும் பொய்யர்
தம்மை ஆட்கொள்ளும் வள்ளல்
போற்றி நின்பாதம் போற்றி
நாதனே போற்றி போற்றி
போற்றி நின்கருணை வெள்ளம்
புதுமதுப் புவனம் நீர் தீ
காற்று இயமானன் வானம்
இருசுடர்க் கடவுளானே.

வள்ளல் - பெருங்கொடையாளனே. புதுமது - புதிய தேன். புவனம்-நிலம். இயமானன்-ஜீவன். இருசுடர்-சூரியன், சந்திரன்.

பொய்யுடலில் வாஞ்சை வைத்துள்ள என் போன்றவர்களுக்கு அருள் புரிவதால் நீ வள்ளல் ஆகின்றாய். உன் கருணையோ புதிய தேனுக்கு ஒப்பானது. ஐம்பெரும் பூதங்கள், சூரியன், சந்திரன், ஜீவாத்மா ஆகிய அஷ்டமூர்த்திகளாய் நீ இருக்கிறாய். இப்படியெல்லாம் இருக்கிற உனக்கு மேலும் மேலும் வணக்கம் செலுத்துகிறேன்.

பஞ்சபூதங்கள், மனம், புத்தி, அகங்காரம் ஆகியவைகளைக்கொண்டு அஷ்டமூர்த்தியாவது ஒரு கொள்கை. பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், ஜீவன் ஆகியவைகளைக் கொண்டு அஷ்டமூர்த்தியாவது மற்றொரு கொள்கை. இவைகளுள் வேறுபாடு இல்லை.

64\. கடவுளே போற்றி யென்னைக்
கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை
யாண்டிட வேண்டும் போற்றி
யுடலிது களைந்திட் டொல்லை
யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி.

கடவுளே போற்றி என்னைக்
கண்டுகொண்டு அருளு போற்றி
விடஉளே உருக்கி என்னை
ஆண்டிட வேண்டும் போற்றி

உடல்இது களைந்திட்டு ஒல்லை
உம்பர் தந்து அருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி.

கடவுளே-அனைத்தையும் கடந்தும், அவைகளின் உள்ளேயும் இருப்பவனே. விட-பற்றற. உளே-உள்ளத்தை. ஒல்லை-விரைவாக. உம்பர்-முக்தி.

நான் தகவிலன் என்பதை அறிந்து என்னை ஆட்கொள். என் உள்ளத்தை உருக்கி அதை விலகச் செய். உடலை ஒதுக்கி விட்டு நான் விரைவில் முக்தியடையும்படி செய். கங்காதரா, உன்னை நான் மீண்டும் மீண்டும் வணங்குகிறேன்.

நான் தகாதவன் எனினும் நீ சங்கரன் ஆதலால் என்னை ஆட்கொண்டருள்க.

65. சங்கரா போற்றி மற்றோர்
சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய்
வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி
மால்விடை யூர்தி போற்றி
யிங்கிவ்வாழ் வாற்ற கில்லே
னெம்பிரா னிழித்திட் டேனே.

சங்கரா போற்றி மற்று ஓர்
சரண் இலேன் போற்றி கோலம்
பொங்கு அரா அல்குல் செவ்வாய்
வெள் நகை கரிய வாள் கண்
மங்கை ஓர்பங்க போற்றி
மால்விடை ஊர்தி போற்றி
இங்கு இவ்வாழ்வு ஆற்றகில்லேன்
எம்பிரான் இழித்திட்டேனே.

கோலம்-அழகு. பொங்கு அரா-சீறுகிற பாம்பின் படம். வாள்கண்-வாள்போன்ற கண். மால்விடை-பெரிய காளை. ஆற்றகில்லேன்-சகித்திலேன். இழித்திட்டேன்-அருவருத்தேன்.

சங்கரா, உமாதேவியார் பங்கா, ரிஷபவாகனு, உன்னையல்லால் எனக்கு வேறு அடைக்கலம் இல்லை. உடல் வாழ்வில்

எனக்கு அருவருப்பு மேலிடுகிறது; இதை நான் சகியேன். என்னைக் காத்தருள்க.

66. இழித்தன னென்னை யானே
யெம்பிரான் போற்றி போற்றி
பழித்திலே னுன்னை யென்னை
யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம்
பெரியவர் கடமை போற்றி
யொழித்திடிவ் வாழ்வு போற்றி
யும்பர்நாட் டெம்பி ரானே.

இழித்தனன் என்னை யானே
எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை
ஆளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை எல்லாம்
பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடு இவ்வாழ்வு போற்றி
உம்பர் நாட்டு எம்பிரானே.

உம்பர் நாடு-மோக்ஷ சாம்ராஜ்யம்.

என்னைக் கெடுத்தவன் நான். ஆதலால் நான் உன்மீது குறைகூறலாகாது. என்னை யாண்டும் ஆளுபவனாகிய உன்னை வணங்குகிறேன். சிறியேனாகிய நான் செய்த பிழையைப் பெரியோனாகிய நீ பொறுத்தருள்க. முக்தி நல்கும் இறைவா, இப்பிரபஞ்ச வாழ்விலின்று என்னை விடுவிப்பாயாக. உன்னை நான் ஓவாது வணங்குகிறேன்.

67. எம்பிரான் போற்றி வானத்
தவரவ ரேறு போற்றி
கொம்பரார் மருங்குன் மங்கை
கூறவெண் ணீற போற்றி

உபநிஷத் மந்திரம்—51.

ओं पूर्णमदः पूर्णमिदं पूर्णात् पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥

செம்பிரான் போற்றி தில்லைத்
திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி யென்னை
யாளுடை யொருவ போற்றி.

எம்பிரான் போற்றி வானத்து
அவர் அவர் ஏறு போற்றி
கொம்பர் ஆர் மருங்குல் மங்கை
கூறவெள் நீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத்
திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி என்னை
ஆளுடை ஒருவ போற்றி

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே ।
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம்)

ओं ஓம் ஓம் अदः அத: அது पूर्णम् பூர்ணம் பூர்ணம் इदम् இதம் இது पूर्णम् பூர்ணம் பூர்ணம் पूर्णात् பூர்ணாத் பூரணத்தினின்று पूर्णम् பூர்ணம் (பிரபஞ்சமாகிய) பூர்ணம் उदच्यते உதச்யதே உதித்திருக்கிறது पूर्णस्य பூர்ணஸ்ய பூரணத்தினின்று पूर्णम् பூர்ணம் (பிரபஞ்சமாகிய) பூர்ணத்தை आदाय ஆதாய எடுத்தபின் पूर्णम् एव பூர்ணம் ஏவ பூர்ணமே अवशिष्यते அவசிஷ்யதே யாண்டும் இருக்கிறது.

அப்பால் இருப்பது பூரணம்; இயற்கையாய் இலங்குவது பூரணம்; பூரணத்தினின்று பூரணம் தோன்றியுள்ளது. பூரணத்தினின்று பூரணம் வந்திருந்தும் பூரணமே யாண்டும் உளது.

கடவுள் உலகைக் கடந்தும் இருக்கிறார்; உலகில் ஊடுருவியும் இருக்கிறார். பரப்பிரம்மம் பஞ்சேந்திரியங்களுக்கு எட்டாதவர்; மன மொழிகளிலும் நட்டுப்படாதவர். அந்த அதீத நிலையில் அவர் பரிபூரணராய் இருக்கிறார். பின்பு அவர் இப்பிரபஞ்சமாயும் இதில் உள்ள உயிர்கள் அனைத்துமாயும் வந்துள்ளார். ஆதி பகவன் முதற்றே உலகு என்னும் வள்ளுவர் வாக்கும் இதே

ஏறு - ஆண் சிங்கம். கொம்பர் ஆர் மருங்குல் - பூங்கொடி போன்ற இடை. கூறு-ஒரு பாகத்தில் வைத்தவனே. வெண்நீற-திருவெண்ணீறு பூசியவனே. செம்பிரான்-செம்மையா' குண முடையவனே.

கோட்பாட்டைக் குறிக்கிறது. பரம்பொருள் பிரபஞ்ச மாய்த் தோன்றியிருப்பதுபற்றி மூன்றுவித சம்பிரதாயங் கள் உண்டு. அவைகளுள் பரிணமவாதம் என்பது ஒன்று. பால் தயிராகப் பரிணமிப்பது போன்று பரம்பொருள் பிரபஞ்சமாகப் பரிணமித்திருக்கிறார் என்பது ஒருகோட் பாடு. இது துவைத மதத்துக்குரியது. விவர்த்த வாதம் என்பது மற்றொன்று. கயிறு பாம்பாகத் தென்பட்டுக் கொண்டிருப்பதுபோன்று பரம்பொருள் பிரபஞ்சமாகத் தென்படுகிறார். இக்கோட்பாடு விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய இரண்டுக்கும் பொதுவானது. அஜாத வாதம் என்பது மூன்றாவது கோட்பாடு. இது சுத்த அத்வைதத்துக்கு உரியது. பூரணப் பொருளில் எந்த விதமான மாறுதலும் எப்பொழுதுமே உண்டாவதில்லை என்பது இதன் சித்தாந்தம்.

இனிப் பூரணத்தைப்பற்றிய உண்மையென்ன? தோற் றத்துக்கு அப்பால் உள்ள நிலை, தோன்றியுள்ள நிலை ஆகிய எல்லா நிலைகளிலும் அது பூரணமாகவே இருக் கிறது. புலப்படுகிற பிரபஞ்சத்தில் பூரணத்தைக் காண முயலுபவன் நல்ல ஆத்மசாதகன். பூரணத்தை அதனுள் காண்பவன் ஞானி. கருவி கரணங்களின் துணைகொண் டும், அவைகளின் துணையில்லாமலும் பூரணத்திலேயே புதைந்திருப்பவன் நிறை ஞானி.

உள்ளது ஒன்று; அது பலவாகத் தன்னைத் தோற்று வித்துக்கொள்கிறது. ஜடப்பொருள்களாகவும் எண் ணிறந்த ஜீவர்களாகவும் அது இலங்குகிறது. இங்ஙனம் அதை உணர்வது விசுவரூபதரிசனமாகும். பூரணத்தையே யாண்டும் உணர்பவன் தானே பூரணமாகிறான்.

எமது இறைவா, பலப் படித்தரங்களில் இருக்கும் தேவர்களுக் குத் தலைவா. அம்பிகையின் பங்கா, திருநீறு அணிந்தவனே, நற்குணம் அனைத்தும் உடையவனே. சிதாகாச வடிவினனே. மோக்ஷம் நல்குபவனே உன்னை அல்லாது எனக்குக் கதியில்லை. என்னைக் காத்தருள்வாயாக.

68. ஒருவனே போற்றி யொப்பி
லப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள்
கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி
தமியனேன் றனிமை தீர்த்தே.

ஒருவனே போற்றி ஒப்பு இல்
அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள்
கோமளம் கொழுந்து போற்றி
வருக என்று என்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருக நின் பாதம் போற்றி
தமியனேன் தனிமை தீர்த்தே.

ஒப்பு இல்-சமானமில்லாத. குருவனே-மூத்தவனே. கோமளக் கொழுந்து-யாண்டும் இளமை தாங்கியிருக்கும் வஸ்துவே. வாங் கிட வேண்டும்-சேர்த்துக் கொள்ளவேண்டும். தமியனேன்-கதி யற்ற நான்.

பல்வாகத் தோன்றும் பொழுதும் நீ ஒருவன்தான் இருக் கிறாய். உயிர்கள் அனைத்துக்கும் நீ சிறந்த தந்தையாயிருக்கிறாய். தேவர்களுக்கெல்லாம் நீ மூத்தவன். உயிர்கள் உள்ளத்தில் நீ நித்திய யௌவனத்தில் இருக்கிறாய். உனக்கும் எனக்கும் உள்ள ஸம்யோகத்தை நீ உறுதிப்படுத்து. நான் உன் மயம் ஆகுக.

பூரணம் அகண்டமானது. காலதேச வர்த்தமானத் துக்கு ஆங்கு இடமில்லை. பூரணத்தில் ஒன்று, இரண்டு என்ற எண்ணிக்கைக்கு இடமில்லை. ஆதலால் அது அத்வைதம்.

எனது ஜீவபோதத்தை அகற்றிவிடு. உனது மகிமையை உன்னி நான் உன்னையே போற்றுகிறேன்.

ஜீவன் ஒருவன் ஜீவபோதத்தில் இருக்கும் வரையில் அவன் தமியனாகவே இருக்கிறான். பரபோதத்தில் குறைவில்லா நிறைநிலை அவனுக்கு வாய்க்கிறது.

உபநி—37. பக்கம் 299ல் காண்க

69. தீர்ந்தவன் பாய வன்பர்க்
கவரினு மன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்ம்மை யாட்கொண்
டருளிடும் பெருமை போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க்
கமுதமீ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாத நாயேற்
கருளிட வேண்டும் போற்றி.

தீர்ந்த அன்பு ஆய அன்பர்க்கு
அவரினும் அன்ப போற்றி
பேர்ந்தும் என்பொய்ம்மை ஆட்கொண்டு
அருளிடும் பெருமை போற்றி
வார்ந்த நஞ்சு அயின்று வானோர்க்கு
அமுதம் ஈ வள்ளல் போற்றி
ஆர்ந்த நின்பாதம் நாயேற்கு
அருளிட வேண்டும் போற்றி.

தீர்ந்த அன்பு-முதிர்ந்த அன்பு. பேர்ந்தும்-நீக்கியும். வார்ந்த நஞ்சு அயின்று-பெருகிய விஷத்தை உண்டு. அமுதம் ஈ வள்ளல்-அமிர்தத்தை வழங்கிய பேருதவியாளனே. ஆர்ந்த நின்பாதம்-நீக்கமற நிறைந்துள்ள உனது சொரூபம்.

உன் அன்பர்கள் உன்மீது பேரன்பு வைத்திருக்கிறார்கள். நீயோ அவர்கள்மீது அதை விட அதிகம் அன்பு வைத்திருக்கிறாய். எனது ஜீவபோதமாகிய பொய்ம்மையை அழித்துச் சிவபோதமாகிய மெய்ம்மையை நல்கிய பெருமை உனக்குண்டு. பாற்கடல் கடைந்த பொழுது பெருகி வந்த விஷத்தை நீ அருந்தவும் தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுக்கவும் செய்த பெருங்கொடையாளன் நீ. உனது அகண்டாகார சொருபத்தில் என்னை ஏற்றருள் வாயாக. உன்னை நான் வணங்குகிறேன்.

காந்த ஊசியினிடத்துக் காந்தம் இருப்பதுபோன்று பக்தர்களிடத்து, அன்பு இருக்கிறதென்ருல், காந்தமலையில் காந்தம் இருப்பது போன்று கடவுளிடத்து அன்பு இருக்கிறது.

சிவனுர் தியாகராஜாவாகிருர். உலகத்தவர்செயலின் விளைவாக வந்த விஷத்தைத் தாம் ஏற்றுக்கொண்டு உலகத்தவர்க்கு அமிர்தம் வழங்கியது அவருடைய தியாகமாகும். இது காருண்யத்திரங்கலின் உச்சநிலையாகும்.

உபநி—38. பக்கம் 304ல் காண்க.

70. போற்றியிப் புவன நீர்தீக்
காலொடு வான மாஞய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்ற
மாகிநீ தோற்ற மில்லாய்
போற்றியெல் லாவு யிர்க்கு
மீருயீ றின்மை யாஞய்
போற்றியைம் புலன்க ணின்னைப்
புணர்கிலாப் புணர்க்கை யானே.

போற்றி இப் புவனம் நீர் தீக்
கால் ஒடு வானம் ஆஞய்
போற்றி எவ்உயிர்க்கும் தோற்றம்
ஆகி நீ தோற்றம் இல்லாய்
போற்றி எல்லா உயிர்க்கும்
ஈறு ஆய் ஈறுஇன்மை ஆஞய்
போற்றி ஐம்புலன்கள் நின்னைப்
புணர்கிலாப் புணர்க்கையானே.

உபநிஷத் மந்த்ரம் — 52.

यो योनिं योनिमधितिष्ठत्येको यस्मिन्निदं सं च वि चैति सर्वम्
तमीशानं वरदं देवमीड्यं निचाय्येमां शान्तिमत्यन्तमेति ॥

யோ யோனிம் யோனிமதிதிஷ்டத்யேகோ
யஸ்மின்னிதம் ஸம் ச வி சைதி ஸர்வம் ।
தமீசானம் வரதம் தேவமீட்யம்
நிசாய்யேமாம் சாந்திமத்யந்தமேதி ॥

(ஶ்வேதாச்வதரோபநிஷதம் 4 11)

காலோடு-காற்றுடன். ஈறுஆய்-முடிவாகி. புணர்கிலா-அணுகப்பெருத.

இறைவா, ஐம்பூதங்கள் உன்னிடத்திருந்து தோன்றி வந்துள்ளன. உயிர்கள் எல்லாம் உன்னிடத்திருந்து தோன்றி வந்துள்ளன. அவைகளின் தோற்றத்தை முன்னிட்டு நீ விகாரப்படுவதில்லை. உயிர்கள் எல்லாம் பிரளயத்தில் உன்னிடம் ஒடுங்குகின்றன. ஆனல் பூரணனுகிய நீ எதிலும் ஒடுங்குவதில்லை. ஐம்பொறிகள் உன்னை நுகரமாட்டா. ஆனல் ஐம்பொறிகளுக்கும் உள்ள இயல்புகள் உன்னிடத்திருந்து வருகின்றன. அத்தகைய அதீதப் பொருளே, உன்னைப்போற்றுகிறேன்.

பரம்பொருள் யாண்டும் தன்மயமாய் நிர்விகாரியாய் இருக்கிருர். அவருடைய சன்னிதான விசேஷத்தால் அவருக்கு அபின்னமான மாயா சக்தி இத்தனைவிதத் தோற்றங்களையும் அவைகளின் ஒடுக்கங்களையும் உண்டு பண்ணுகிருள்.

यः एकः யः ஏகः எந்த ஒரு வஸ்து योनिं योनिं யோனிம் யோனிம் பிரகிருதியின் பிறப்பிடங்களிலெல்லாம் अधितिष्ठति அ·திதிஷ்டதி தலைமை தாங்குகிறது यस्मिन् யஸ்மின் எதன் கண் इदं सर्वं இதம் ஸர்வம் இவை யாவும் समेति ஸமேதி ஒடுங்குகின்றன व्येति च வ்யேதி ச பல வடிவங்களையும் எடுக்கிறது तं ईशानं தம் ஈசானம் அந்த ஈசனை वरदं வரதம் வரங்கொடுக்கிறவனை ईड्यं ஈட்யம் போற்றுதற்கு உரியவனை देवं தேவம் ஒளிர்பவனை निचाय्य நிசாய்ய அனுபூதியில் அறிந்து इमां अत्यन्तं शान्तिं இமாம் அத்யந்தம் சாந்திம் இந்த அளவு கடந்த சாந்தியை एति ஏதி ஒருவன் அடைகிருன்.

எந்த ஒரு பரமன் பிரகிருதியின் பிறப்பிடங்களிலெல்லாம் தலைமை தாங்குகிருனே, எவனிடத்து இவையாவும் ஒடுங்குகின்றனவோ, எவன் பல வடிவங்களை எடுக்க வல்லவனே, அந்த ஈசனை, வரம் கொடுக்கிறவனை, போற்றுதற்கு உரியவனை, பிரகாசமானவனை அனுபூதியில் அறிகிற ஒருவன் அளவுகடந்த சாந்தியை அடைகிருன்.

8. ஆனந்தத்தழுந்தல்

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆனந்தத்தை நாடுதல் மனிதனது அலாதிச் செயல் என்று நாம் எண்ணலாகாது. உயிர்கள் அனைத்தும் அப் பேரியக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றன. ஆனந்தம் நிறைந்த உயிர் வாழ்க்கையையே அவை யாவும் நாடுகின்றன. ஆனந்த மில்லாத உயிர் வாழ்க்கையை அவை வெறுக்கின்றன. ஏனென்றால் அவையாவும் ஆனந்தத்தினின்று வந்தவைகள். ஆனந்தம் பிரம்மம்—ஆனந்தமே மெய்ப்பொருள்—என்கிறது உபநிஷதம். இது எல்லாருடைய பொதுவுடைமை. எந்தச் சமயத்திலோ சமுதாயத்திலோ இது கட்டுப்பட்டதன்று.

பிரகிருதியின் மூலமாகப் பிரதிபலிக்கும் ஆனந்தம் தங்குதடையுடையது. அதில் அழுந்தியிருக்க ஜீவன் முயன்றாலும் அது நிலைத்திருப்பதில்லை. ஆதலால் அது சிற்றின்பம் எனப்படுகிறது. பிரகிருதியோடு சம்பந்தப் படாத ஆனந்தமோ நிரந்தரமானது. சிவானந்த போதம் என்பது அதுவே. அதில் அழுந்தியிருத்தல் வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும்.

71. புணர்ப்ப தொக்க வெந்தை யென்னை
யாண்டு பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது
நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக வன்றி தாக
வன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக வங்க ணாள
புங்க மான போகமே.

புணர்ப்பது ஒக்க எந்தை என்னை
ஆண்டு பூண நோக்கினாய்
புணர்ப்பது அன்று இது என்ற போது
நின்னொடு என்னொடு என் இது ஆம்

புணர்ப்பது ஆக அன்று இது ஆக
அன்பு நின் கழல்கணே
புணர்ப்பு அது ஆக அம் கணுள
புங்கம் ஆன போகமே.

புணர்ப்பது ஒக்க-கூட்டிக்கொள்வது ஒப்ப. பூண-அருளோடு சேர்ந்து. அம்கணுள-அழகிய கண்களையுடையவனே. புங்கம்-உயர்வு.

புணர்ப்பது ஒக்க எந்தை என்னை ஆண்டு பூண நோக்கினுய்-என் தந்தையே என்னை உன்னேடு ஐக்கியப்படுத்துவது போன்று அருள் சுரந்து என்னையே நீ ஆரநோக்கினுய்.

நின்னெடு என்னெடு புணர்ப்பது அன்று இது என்ற போது-பின்பு உன்னேடு என்னை ஐக்கியப்படுத்துவதற்கு ஏற்ற காலம் இஃதன்று என்று நீ திருவுளங்கொண்ட பொழுது.

என் இது ஆம்?-இதைக் குறித்து நான் செய்யக்கிடப்பது யாது உளது? ஒன்றுமில்லை.

புணர்ப்பது ஆக அன்று இது ஆக-உன்னேடு இரண்டறக் கலப்பதற்கு இஃதன்று காலம் என நீ திருவுளம் கொண்டுள்ளாய்.

அங்கணுள-அழகிய கண்களையுடையவனே. நின் கழற்கண் அன்பே-உன் திருவடிக்கண் நான் வைத்துள்ள மாருத அன்பே. புங்கம் ஆன போகம் புணர்ப்பதாக-மேலான சிவானந்த போகத்தை விளைவிப்பதாகுக.

எந்தையே, என்னை ஆட்கொள்ளுதலில் நீ காட்டிய காருண்யம் என்னை இரண்டற உன்னில் ஏற்றுக் கொள்வாய் போல் தென் பட்டது. ஆனுல் இவ்வுடல் வாழ்க்கையிலேயே இன்னும் சிறிது காலம் இருகக என்னை நீ விட்டு வைத்திருக்கிருய். நானே உன்மீது வைத்துள்ள பேரன்பால் உடல் வாழ்க்கையை உள்ளத்தில் வாங்கிக் கொள்ளாது சிவானந்த போதத்திலேயே திளைத்திருப்பேன்.

சிறிதேனும் உடல் உணர்வு கொள்ளாது யாண்டும் சிவ போதத்திலேயே திளைத்திருப்பவன் தீவிரமான ஆத்ம சாதகன் ஆகிருன். உடலில் வசித்திருக்கிற வேளை யிலும் அவன் சிவபுரத்தில் இருப்பவனுகிருன். தேகத் தைப்பற்றிய ஞாபகமே சிறிதும் இல்லாதிருந்ததனுல் ஜனக மகாராஜனுக்கு விதேகன் என்ற பெயர் வந்தது.

72. போகம் வேண்டி வேண்டி லேன்பு
ரந்த ராதி யின்பமு
மேக நின்க ழலிணைய
லாதி லேனெ னெம்பிரா
ளுகம் விண்டு கம்பம் வந்து
குஞ்சி யஞ்ச லிக்கணே
யாக வென்கை கண்க டாரை
யாற தாக வையனே.

போகம் வேண்டி வேண்டிலேன்
புரந்தரன் ஆதி இன்பமும்
ஏக நின்கழல் இணை அலாது
இலேன் என் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து
குஞ்சி அஞ்சலிக் கணே
ஆக என்கை கண்கள் தாரை
ஆறு அது ஆக ஐயனே.

புரந்தராதி-புரந்தரன் முதலியோர். புரந்தரன்-பகைவர் நகரங்களை அழிப்பவன், இந்திரன். ஏக-தனிப்பொருளே. ஆகம் விண்டு-உடல் நெகிழ்ந்து. கம்பம் வந்து-நடுக்கம் எடுத்து. குஞ்சி-குடுமியையுடைய தலை. அஞ்சலி-வணங்குதல். கண்கள் தாரை ஆறு அது ஆக-கண்களினின்று பெருக்கெடுக்கிற கண்ணீர் நதியாகப் புரண்டோட.

ஏகனே, எம்பிரானே, என் ஐயனே, சுகபோகத்தின் பொருட்டு இந்திரலோகம் முதலிய போக பூமிகளை நான் விரும்பவில்லை. உனது திருவடியல்லாது வேறு பற்றுக்கோடு எனக்கு இல்லை. உடல் நெகிழ்ந்து நடுங்கிக் கொண்டிருக்க, கையைத் தலைமீது வைத்து உன்னை வணங்குகிறேன். கண்ணீர் ஆருகப் பெருகிக் கொண்டிருப்பதாகுக.

மஹாபாவம் அல்லது பராபக்தியின் அறிகுறிகள் ஈண்டுத் தென்படுகின்றன.

73. ஐய நின்ன தல்ல தில்லை
மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை
பொய்ம்மை யேனே னெம்பிரான்

மைக லந்த கண்ணி பங்க
வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த வன்ப ரென்பெ
னக்கு மாக வேண்டுமே.

ஐய நின்னது அல்லது இல்லை
மற்று ஓர் பற்று வஞ்சனேன்
பொய் கலந்தது அல்லது இல்லை
பொய்ம்மையேன் என் எம்பிரான்
மை கலந்த கண்ணி பங்க
வந்து நின் கழல் கணே
மெய் கலந்த அன்பர் அன்பு
எனக்கும் ஆக வேண்டுமே.

ஐயனே, எம்பிரானே, கண்ணில் மை தீட்டியுள்ள உமாதேவியாரின் வலப்பக்கத்தில் இருப்பவனே. பொய்யான உடல்வாழ்க்கையில் பற்று வைத்தால் நான் வஞ்சகன் ஆவேன். அப்படி நான் பொய்ம்மையில் மூழ்கேன். மெய்ப் பொருளாகிய உன்னிடத்தே உன் அன்பர்கள் பற்று வைத்திருக்கின்றனர். நான் வேண்டுவதும் அப்பேரன்பேயாம்.

74. வேண்டு நின்க ழற்க ணன்பு
பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே
யாண்டு கொண்டு நாயி னேனை
யாவ வென்ற ருளுநீ
பூண்டுகொண் டடிய னேனும்
போற்றி போற்றி யென்று மென்று
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின்வ ணங்கவே.

வேண்டும் நின் கழல் கண் அன்பு
பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டுகொண்டு நாயினேனை
ஆவ என்று அருளு நீ
பூண்டு கொண்டு அடியனேனும்
போற்றி போற்றி என்றும் என்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின் வணங்கவே.

பொய்ம்மை தீர்த்து-உடல் உணர்வை அகற்றி. மெய்ம்மையே ஆண்டுகொண்டு-சிவ போதமே நிலைத்திருக்கச் செய்து. ஆவ-பரிதாபம் காட்டுதல். பூண்டுகொண்டு-பக்தி பூண்டுகொண்டு. என்றும் என்றும்-திரும்பத் திரும்ப வந்து வந்து-பிறந்து பிறந்து.

இறைவா, எனது ஜீவபோதத்தை ஒழித்துச் சிவபோதத்தை உறுதியாக்கி, என்மீது இரக்கம் வைத்து எனக்குப் பேரன்பைக் கொடுத்தருளுக. பேரன்பு பூண்டு உன்னைப் போற்றும் வாய்ப்புக் கிடைக்குமிடத்துப் பிறப்பு இறப்பு எத்தனை வந்தாலும் அதனால் எனக்குக் கேடு இல்லை.

75. வணங்கு நின்னை மண்ணும் விண்ணும்
வேத நான்கு மோலமிட்
டுணங்கு நின்னை யெய்தலுற்று
மற்றொ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன
வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க
வென்கொ லோநி னைப்பதே.

வணங்கு நின்னை மண்ணும் விண்ணும்
வேதம் நான்கும் ஓலம் இட்டு
உணங்கும் நின்னை எய்தல் உற்று
மற்று ஓர் உண்மை இன்மையின்
வணங்கி யாம் விடேங்கள் என்ன
வந்து நின்று அருளுதற்கு
இணங்கு கொங்கை மங்கை பங்க
என் கொலோ நினைப்பதே.

எய்தல் உற்று-அடைய வேண்டி. மற்று ஓர் உண்மை இன்மையின் - நீயே மெய்ப்பொருள் ஆதலால். உணங்கும் - தளரும். இணங்கு-நெருங்கிய.

உபநிஷத் மந்த்ரம் — 53, 54.

द्वे विद्ये वेदितव्ये इति ह स्म यद् ब्रह्मविदो वदन्ति, परा चैवापरा च ॥

த்வே வித்யே வேதிதவ்யே இதி ஹ ஸ்ம யத்
ப்ரஹ்மவிதோ வதந்தி பரா சைவாபரா ச ||

(முண்டகோபநிஷதம் 1·4)

ஈசா, நீயே மெய்ப்பொருள் ஆதலால் மண்ணுலகும் விண்ணுலகும் உன்னையே வணங்குகின்றன. நான்கு வேதங்களும் சொல்லின் மூலம் உன்னை அடைய முயன்று அது முடியாமற்போக, அவைகள் தளர்வுற்று நிற்கின்றன. பக்தர்களாகிய நாங்கள் உன்னை விடமாட்டோம் என்று பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கையில், பார்வதி நாயகா, நீ பராமுகமாய் இருப்பது பொருந்துமா?

यत् परा च अपरा च एव யத் பரா ச அபரா ச ஏவ எது பர ஞானம் எது பிரபஞ்ச ஞானம் என द्वे विद्ये वेदितव्ये த்வே வித்யே வேதிதவ்யே இரண்டு வித்தைகள் அறியப்பட வேண்டியவைகள் इति ह இதி ஹ இங்ஙனம் ब्रह्मविदः ப்ரஹ்ம வித: பிரம்ம ஞானிகள் वदन्ति स्म வதந்தி ஸ்ம சொல்லியிருக்கிறார்கள்.

பரஞானம் என்றும் பிரபஞ்ச ஞானம் என்றும் இரண்டு வித்தைகள் அறியப்பட வேண்டியவைகள் இருக்கின்றனவென்று பிரம்ம ஞானிகள் சொல்லியிருக்கிறார்கள்.

तत्रापरा, ऋग्वेदो यजुर्वेदः सामवेदोऽथर्ववेदः शिक्षा कल्पो व्याकरणं निरुक्तं छन्दो ज्योतिषमिति । अथ परा, यया तदक्षरमधिगम्यते ॥

தத்ராபரா, ர்க்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோ அதர்வ வேத: சிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம் சந்தோ ஜ்யோதிஷ மிதி । அத பரா, யயா ததக்ஷரமதிகம்யதே ॥

(முண்டகோபநிஷதம் 1–5)

तत्र தத்ர அவைகளுள் अपरा அபரா பிரபஞ்ச ஞானமாயிருப்பவைகள் ऋग्वेदः ர்க்வேத: ரிக்வேதம் यजुर्वेदः யஜுர்வேத: யஜுர்வேதம் सामवेदः ஸாமவேத: ஸாமவேதம் अथर्ववेदः அதர்வவேத: அதர்வணவேதம் शिक्षा சிக்ஷா உச்சரிப்பு कल्पः கல்ப: கிரியாமுறைகள் व्याकरणम् வ்யாகரணம் இலக்கணம் निरुक्तम् நிருக்தம் வேதங்களில் உள்ள சொல் ஆராய்ச்சி छन्दः சந்த: வேதச்செய்யுளின் வண்ணம் ज्योतिषम् ஜ்யோதிஷம் ஜோதிட நூல் इति இதி இவைபோன்றவை अथ அத இனி यया யயா எதனால் तत् अक्षरं தத் அக்ஷரம் அந்த அழிவற்ற பொருள் अधिगम्यते அதிகம்யதே அடையப்படுகிறதோ அது परा பரா பரவித்தையாம்.

மெய்ப்பொருள் நாட்டம் உயிர்கள் அனைத்துக்கு மிருக்கிறது. ஆனால் பிரபஞ்சத்தினுள் அதை அடைய முடியாது. சொல்மயமாயுள்ள நான்கு வேதங்களும் அதற்கு உதவமாட்டா. பரவஸ்துவை நேரே நாடுவது ஒன்றே அதற்கு உற்ற உபாயமாம்.

அவைகளுள் பிரபஞ்ச ஞானமாயிருப்பவைகள் ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம், உச்சரிப்பு, கிரியா முறைகள், இலக்கணம், வேதசொல் ஆராய்ச்சி, வேதச் செய்யுள் வண்ணம், ஜோதிடம் முதலியனவாம். இனி எதனுல் பரம்பொருள் அடையப்படுகிறதோ அது பரஞானம்.

அறிவைக்கொண்டும் ஐம்பொறிகளைக் கொண்டும் கற்பவைகளெல்லாம் அபரவித்தைகள் அல்லது சாமா னியமான கல்விகள் எனப்படுகின்றன. அவைகளுள் மாதிரிக்குச் சில ஈண்டுத் தரப்பட்டிருக்கின்றன. அபர வித்தை, பிரபஞ்ச ஞானம், சுட்டறிவு, சுட்டுணர்வு, புல னறிவு ஆகிய சொற்கள் இந்த அபரவித்தையையே குறிக் கின்றன. நவீன பௌதிக விக்ஞானத்தின் பல கிளைகள் உட்படக் கலைஞானங்கள் அனைத்தும் அபரவித்தையில் அடங்குகின்றன. நான்கு வேதங்களும் அபரவித்தையில் அடங்கிக் கிடக்கின்றன. ஏனென்றால் அவைகள் சம்சார சாகரம் அல்லது பிறவிப் பெருங்கடலைப்பற்றிய போதனை களாம். பிறவிப் பிணியைப் போக்க நான்கு வேதங் களும் உதவமாட்டா.

பரம்பொருளைச் சுவானுபூதியில் அறிவதே பர வித்தை. சிவஞானம் என்பதும் இதுவே. வேதத்தின் அந்தமாக இது இருப்பதால் இதற்கு வேதாந்தம் என் பது மற்றொரு பெயர். நூல்களை உபசாரத்துக்காக சிவஞான போதம் என்றும், வேதாந்த சாஸ்திரம் என் றும் சொல்லுகிறோம். வாதவூரருக்குச் சிவபெருமான் நேரே வழங்கியதைப் பரவித்தை, சிவஞானம், பிரம்ம ஞானம், வேதாந்தம், அனுபூதி இப்படியெல்லாம் இயம் பலாம்.

76. நினைப்ப தாக சிந்தை செல்லு
மெல்லை யேய வாக்கினாற்
றினைத்த னையு மாவதில்லை
சொல்ல லாவ கேட்பவே
யனைத் துலகு மாய நின்னை
யைம்பு லன்கள் காண்கிலா
வெனைத் தெனைத்த தெப்புறத்த
தெந்தை பாத மெய்தவே.

நினைப்பது ஆக சிந்தை செல்லும்
எல்லை ஏய வாக்கினால்
தினைத் தனையும் ஆவது இல்லை
சொல்லல் ஆவ கேட்பவே
அனைத்து உலகும் ஆய நின்னை
ஐம்புலன்கள் காண்கிலா
எனைத்து எனைத்து அது எப்புறத்து அது
எந்தை பாதம் எய்தவே.

அனைத்து உலகும் ஆய நின்னை-உலகெல்லாம் ஆகியிருக்கிற உன்னை. சொல்லல் ஆவ கேட்பவே-சொல்லால் விளக்குதற்குப் பொருந்தியவைகளெல்லாம் கேட்கப்படுவனவேயாம்; (ஆயினும்) ஏய வாக்கினால் தினைத்தனையும் ஆவது இல்லை- (வேதங்களில்) பொருந்திய சொற்களால் தினையளவும் பிரயோஜனமில்லை. சிந்தை செல்லும் எல்லை நினைப்பது ஆக-மனதுக்கு எட்டுவதெல்லாம் எண்ணமாக வடிவெடுக்கிறது. ஐம்புலன்கள் காண்கிலா-எந்தையே உன்னை நுகர்தற்கு ஐம்பொறிகள் உதவமாட்டா. எந்தை பாதம் எய்தவே-பரமனை அனுபூதியில் அடைதற்கு. எனைத்து எனைத்து அது-கரணம் சிறிதும் பயன்படாது. எப்புறத்து அது-அது இடத்தில் இருப்பதன்று.

பரமனே உலகனைத்தும் ஆயிருக்கிறான் எனினும் அவனை அனுபூதியில் அடைதற்கு மனது உதவாது, வாக்கு உதவாது, ஐம்பொறிகளும் உதவமாட்டா.

அந்தக்கரணம், பாகியகரணங்கள் ஆகிய யாவும் பிரபஞ்சத்தை நுகருதற்கே உதவுகின்றன. நிஷ்பிரபஞ்சப்பொருளாகிய பரமனை சாக்ஷாத்கரிப்பதற்கு அவைகள் சிறிதேனும் பயன்படமாட்டா.

உபநி—29. பக்கம் 211ல் காண்க.

77. எய்த லாவ தென்று நின்னை
யெம்பி ரானிவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி
மற்றொ ருண்மை யின்மையிற்
பைத லாவதென்று பாது
காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்க ணொன்றும்
வண்ண மில்லை யீசனே.

எய்தல் ஆவது என்று நின்னை
எம்பிரான் இவ் வஞ்சனேற்கு
உய்தல் ஆவது உன்கண் அன்றி
மற்று ஓர் உண்மை இன்மையின்
பைதல் ஆவது என்று பாதுகாத்து
இரங்கு பாவியேற்கு
ஈது அலாது நின்கண் ஒன்றும்
வண்ணம் இல்லை ஈசனே.

எய்தல்-அடைதல். வஞ்சனேற்கு-வினையின் வசப்பட்டிருக்கிற எனக்கு. உய்தல்-ஈடேறுதல். உண்மை-மெய்நெறி. பைதல்-துன்பம். ஒன்றும் வண்ணம்-ஒன்றுபடும் வழி.

இறைவா, உன்னை நான் அடைவது எக்காலம்? கர்மத்தில் உழலும் நான் ஈடேறுதற்கு உன்னைச் சார்தல் அன்றி வேறு சன்மார்க்கமில்லை. ஆதலால் துன்பம் துய்க்கும் என்னைக் காப்பாற்றக் கருணை பூணுவாயாக. ஈசா உன்னோடு ஒன்றுபடுவதை விட வேறு உபாயம் வினைக்கேடனுகிய எனக்கு இல்லை.

ஜீவாத்மனுக்குக் கர்மத்தில் பற்றிருக்கும் வரையில் அவனுக்குத் துன்பமுண்டு. பரம்பொருள் பற்று ஒன்றே பரமனது கருணையைப் பெறுதற்கும் பிறகு அவனிடத்து லயமாவதற்கும் உற்ற உபாயமாகும்.

உபநி—38. பக்கம் 304ல் காண்க.

78. ஈசனேநீ யல்ல தில்லை
யிங்கு மங்கு மென்பதும்
பேசி னேனொர் பேத மின்மை
பேதை யேனெ னெம்பிரான்

நீச னேனை யாண்டு கொண்ட
நின்ம லாவொர் நின்னலால்
தேச னேயொர் தேவ ருண்மை
சிந்தி யாது சிந்தையே.

ஈசனே நீ அல்லது இல்லை
இங்கும் அங்கும் என்பதும்
பேசினேன் ஓர்பேதம் இன்மை
பேதையேன் என் எம்பிரான்
நீசனேனை ஆண்டு கொண்ட
நின்மலா ஓர் நின் அலால்
தேசனே ஓர் தேவர் உண்மை
சிந்தியாது சிந்தையே.

பேதம்-வேற்றுமை. நின்மலா-நிர்மலா, மாசு இல்லாதவனே. தேசனே-தேஜோமயனே, ஒளி வடிவினனே. தேவர்-பிரகாசம் பொருந்தியவர்.

ஈசா, இவ்வுலகம் அவ்வுலகம் ஆகிய எல்லாம் நீயே ஆகியிருப்பதால் உனக்கு வேறான பொருள் ஒன்றுமில்லையென்று என் சிற்றறிவுக்கு எட்டியவாறு நான் பேசியுள்ளேன். உனக்குப் புறம்பாக என்னை நான் கருதுவேனாகில் நான் நீசன் ஆவேன். உனக்குப் புறம்பாக வேறு ஒரு பொருள் இல்லாததால் நீ நிர்மலன். எங்கும் ஒரே ஒளிப்பிழம்பாக நீ இருப்பதால் நான் சிந்திப்பதற்கு மற்றோர் ஒளி வடிவும் ஏதும் இல்லை.

பரமாத்மப் பிரகாசமே எல்லாவிதப் பிரகாசமாக ஒளிர்கிறது. அப்பரமன் ஏகன்.

உபநி—51. பக்கம் 346ல் காண்க.

79. சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீரி லைம்பு லன்களால்
முந்தை யான கால நின்னை
யெய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி முந்தி லேனெ
னுள்ளம் வெள்கி விண்டிலே
னெந்தை யாய நின்னை யின்ன
மெய்த லுற்றி ருப்பனே.

சிந்தை செய்கை கேள்வி வாக்கு
சீர் இல் ஐம் புலன்களால்
முந்தை ஆன காலம் நின்னை
எய்திடாத மூர்க்கனேன்
வெந்து ஐயா விழுந்திலேன் என்
உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை ஆய நின்னை இன்னம்
எய்தல் உற்று இருப்பனே.

முந்தை-முன்பு. வெள்கி-நாணமடைந்து. விண்டிலேன்-வாய் விட்டு அலறிலேன். எய்தல்-அடைதல்.

மனம், கர்மம், கேள்வி, மொழி ஆகியவைகளை நான் கடவுள் வழிபாட்டுக்கே பயன்படுத்தியிருக்கலாம். ஐம்பொறிகள் குறைபாடு உடையவைகள் எனினும் அவைகளையும் அதே வழிபாட்டுக்கு ஒப் படைத்திருக்கலாம். இச்சீரிய செயல் நெடுநாளைக்கு முன்பே நிகழ்ந்திருக்கவேண்டியது. அப்படிச் செய்யாத குற்றம் என்னு டையது. உன்னை அடையப்பெருத அறிவிலியாகிய நான் தீயில் வீழ்ந்து வெந்து போகவில்லை. என் மனம் வெட்கப்பட்டு உடைந்து போகும்படி நான் செய்யவில்லை. என் தந்தையாகிய உன்னை அடைய விருப்பமுடையவன் என்று இன்னமும் வீண் வார்த்தை பேசி வாழ்ந்திருக்கிறேன்.

ஜீவபோதத்தைக் கலைப்பதுதான் ஜீவிதத்தின் குறிக்கோள் என்று அறிந்துகொள்ளாத ஜீவன் வீணே வாழ்பவன் ஆகின்முன்.

80. இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை
யாண்டு கொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ
னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டி யானு முண்டி
ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்க ணென்க
ணென்ப தென்ன விச்சையே.
இருப்பு நெஞ்சம் வஞ்சனேனை
ஆண்டு கொண்ட நின்ன தாள்

கருப்பு மட்டு வாய் மடுத்து
எனைக் கலந்து போகவும்
நெருப்பும் உண்டு யானும் உண்டு
இருந்தது உண்டது ஆயினும்
விருப்பும் உண்டு நின்கண் என்கண்
என்பது என்ன விச்சையே.

இருப்பு-இரும்பு. கருப்பு மட்டு-கரும்பின் சாறு. மடுத்து-பருகி. விச்சை-மாயவித்தை.

இரும்பு போன்ற வலிய நெஞ்சத்தையுடைய வஞ்சகனாகிய என்னை ஆட்கொண்டருளிய உன் திருவடிகள் கரும்பின் சாற்றை அருந்துவது போன்று எனக்கு ஆனந்தத்தைக் கொடுத்தருளின. அதைவிட்டுப் பிரிந்த நான் வெந்து பட்டுப் போவதற்கு நெருப்பு இருந்தும் இன்னும் சாகாதிருக்கிறேன். உயிர் வாழவும் உணவு புசிக்கவும் செய்கிற நான் உன்னிடத்து அன்பு வைத்திருக்கிறேன் என்று சொல்லுவது என்ன மாய வித்தையோ தெரியவில்லை.

பரத்தைச் சார்தல் வேண்டும்; அஃது இல்லையேல் உயிர் துறத்தல் வேண்டும். இதுவே தீவிர அதிகாரியின் போக்கு ஆகும்.

---

9. ஆனந்த பரவசம்

கலிநிலைத்துறை

ஜீவபோதம் முற்றும் ஒடுங்கிச் சிவபோதம் எஞ்சியிருக்கும்போது அது ஆனந்த பரவசமாகிறது. ஜீவன் அடையவேண்டிய குறியும் அதுவேயாம்.

81. விச்சுக் கேடுபொய்க் காகா
தென்றிங் கெனைவைத்தா
யிச்சைக் கானு ரெல்லாரும்
வந்துன் ருள்சேர்ந்தா
ரச்சத் தாலே யாழ்ந்திடு
கின்றே னாருரெம்
பிச்சைத் தேவா வென்னான்
செய்கேன் பேசாயே.

விச்சுக் கேடு பொய்க்கு ஆகாது
என்று இங்கு எனைவைத்தாய்
இச்சைக்கு ஆனார் எல்லாரும்
வந்து உன்தாள் சேர்ந்தார்
அச்சத்தாலே ஆழ்ந்திடுகின்றேன்
ஆரூர் எம்
பிச்சைத்தேவா என் நான்
செய்கேன் பேசாயே.

விச்சு-வித்து. பிச்சை-பிக்ஷா.

ஆரூர் எம் பிச்சைத் தேவா-திருவாரூரிலே பிக்ஷாடனராய் எழுந்தருளியிருக்கும் தியாகராஜப் பெருமானே. பொய்க்கு விச்சுக்கேடு ஆகாது என்று இங்கு எனை வைத்தாய்-மாயையாகிற பிரபஞ்சத்துக்கு வித்தாக இருக்கிற எனது அக்ஞானம் அழிந்து போகாதிருக்கும்படி இப்பிரபஞ்ச வாழ்வில் என்னை வைத்திருக்கிறாய். இச்சைக்கு ஆனார் எல்லாரும்-உன் திருவருளுக்குப் பாத்திரமானவர் எல்லாரும். வந்து உன் தாள் சேர்ந்தார்-உன் சொரூபத்தில் லயமாயினர். அச்சத்தால் ஆழ்ந்திடுகின்றேன் - மாயப்பிரபஞ்ச வாழ்வு வேண்டாமென்ற வியாகூலத்தில் மூழ்கியிருக்கிறேன். நான் என் செய்கேன்-நான் செய்யக் கிடப்பது யாது? பேசாய்-கிருபை கூர்ந்து சொல்லியருள்வாய்.

நீ தியாகராஜனாயும் பிக்ஷாடனனாயுமிருந்து பக்குவப்பட்டுள்ள ஆத்மாக்களுக்கு இவ்வுலகப்பற்று வேண்டாமென்று புகட்டியருள்கின்றாய். நான் மட்டும் உலகப்பற்றில் உழல்வது முறையோ?

பிரபஞ்ச வாழ்வில் பற்று வைத்திருப்பவர்களுக்கு ஆனந்த பரவசம் இல்லை.

உபநி—38. பக்கம் 304ல் காண்க.

82. பேசப் பட்டே னின்னடி
யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல
ராலுன் னடியானென்
றேசப் பட்டே னினிப்படு
கின்ற தமையாதா
லாசைப் பட்டே னாட்பட்
டேனுன் னடியேனே.

பேசப்பட்டேன் நின் அடியாரில் திரு நீறே
பூசப்பட்டேன் பூதலரால் உன் அடியான் என்று
ஏசப்பட்டேன் இனிப் படுகின்றது அமை யாதால்
ஆசைப்பட்டேன் ஆட்பட்டேன் உன் அடியேனே.

பூதலரால்-உலகத்தவர்களால். ஏசப்பட்டேன்-இகழப்பட்டேன்.

உன் அன்பர்களில் நான் ஒருவன் என்று நல்லோர்களால் பாராட்டிப் பேசப்பட்டேன். ஞான குருவினுல் திருநீறு பூசப்பெற்றேன். அறிவிலிகளாகிய உலகத்தவர்களால் உன் அடியவன் என்று நான் இகழப்பட்டேன். இப்படி உலகில் பட்டும் படாமலும் இருப்பது இனி ஒவ்வாது உன்னையே அடைந்தாக வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். உனக்கே நான் ஆளாகவேண்டும்.

பரநாட்டம் தீவிரமாகுமிடத்து அஃது ஆனந்த பரவசத்தில் கொண்டு சேர்க்கிறது. உலகத்தவர்களுடைய பொருள் சேர் புகழ்ச்சிக்கும் பொருள் சேராத இகழ்ச்சிக்கும் ஆங்கு இடமில்லை.

பக்தி சூத்ரம் 2. பக்கம் 43ல் காண்க.

83. அடியே னல்லேன் கொல்லோ தானெனை
யாட்கொண் டிலைகொல்லோ
வடியா ராணு ரெல்லாரும்
வந்துன் ருள்சேர்ந்தார்
செடிசே ருடல மிதுநீக்க மாட்டே
னெங்கள் சிவலோகா
கடியே னுன்னைக் கண்ணுரக்
காணுமாறு காணேனே.

அடியேன் அல்லேன் கொல்லோ தான் எனை
ஆட்கொண்டிலை கொல்லோ
அடியார் ஆனுர் எல்லாரும் வந்து
உன் தாள் சேர்ந்தார்
செடி சேர் உடலம் இது நீக்க மாட்டேன்
எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ஆரக்
காணும் ஆறு காணேனே.

செடிசேர்-துன்பம் நிறைந்த. கடியேன்-கல்நெஞ்சமுடைய நான்.

எங்கள் சிவலோக நாதா, உன் மெய்யன்பர்கள் உன்னை அணுகி உன் திருவடி அடையப்பெற்றனர். கல்நெஞ்சக்காரனாகிய நான் துன்பத்துக்கு இருப்பிடமாகிய இந்த உடலைப் பிரியவுமாட்டேன்; உன்னை அடைவதற்கான மார்க்கத்தைப் பின்பற்றவுமாட்டேன். இத்தகைய நான் உன் அடியவன் அல்லேனோ? நீ என்னை ஆட்கொள்ளவில்லையோ?

மனிதன் தன்னை எதற்குத் தகுதியுடையவனாக்கு கிறானோ அதை அவன் அடைவது திண்ணம்.

84. காணு மாறு காணே னுன்னை
யந்நாட் கண்டேனும்
பாணே பேசி யென்றன்னைப்
படுத்த தென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே யாரமுதே
யத்தா செத்தே போயினே
னேணு ணில்லா நாயினே னென்கொண்
டெழுகே னெம்மானே.

உபநிஷத் மந்த்ரம் — 55.

तेजोऽसि तेजोमयि धेहि । वीर्यमसि वीर्यं मयि धेहि ।
बलमसि बलंमयि धेहि । ओजोऽसि ओजो मयि धेहि ।
मन्युरसि मन्युं मयि धेहि । सहोऽसि सहो मयि धेहि ।

தேஜோ஽ஸி தேஜோமயி தேஹி । வீர்யமஸி வீர்யம் மயி தேஹி ।
பலமஸி பலம் மயி தேஹி । ஓஜோ஽ஸி ஓஜோ மயி தேஹி ।
மன்யுரஸி மன்யும் மயி தேஹி । ஸஹோ஽ஸி ஸஹோ மயி தேஹி ।

(யஜுர் வேதம் 19-9)

तेजः असि தேஜ: அஸி நீ தேஜஸ் ஆக இருக்கிறாய் तेजः मयि धेहि தேஜ: மயி தேஹி தேஜஸ் எனக்கு வழங்கு मन्युः மன்யு: தீமையில் வெறுப்பு सहः ஸஹ: சகித்தல்.

நீ தேஜஸ் ஆக இருக்கிறாய். எனக்கு தேஜஸ் வழங்கு.

நீ வீரியமாக இருக்கிறாய். எனக்கு வீரியம் வழங்கு.

காணும் ஆறு காணேன் உன்னை
அந்நாள் கண்டேனும்
பாணே பேசி என் தன்னைப் படுத்தது
என்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆர் அமுதே அத்தா
செத்தே போயினேன்
ஏண் நாண் இல்லா நாயினேன் என்கொண்டு
எழுகேன் எம்மானே.

பாணே பேசி-வீண் வார்த்தை பேசி. ஏண்-வலிமை. நாண்-வெட்கம்.

பரஞ்சோதியே, ஆணே, பெண்ணே, ஆர் அமுதே, அத்தா, எம்மானே, உன்னை அடையும் மார்க்கத்தை நான் கண்டிலேன். அன்று உன்னைக் கண்டபின் நான் வீண் பேச்சுப் பேசி ஒரு நலனையும் அடைந்திலேன். செத்துப்போன நிலையில் இப்பொழுது இருக்கிறேன். எனது கீழ்மையைக் குறித்து நான் வெட்கப்பட வில்லை. மேல்நிலையடைவதற்கான ஆற்றல் என்னிடத்தில்லை. நான் எப்படி உய்வேன்?

அனுபூதியை நாடுகிறவர்கள் பலர் இடைவழியில் ஏமாற்றமடைந்து நின்றுவிடுகின்றனர். குறியை அடையும் வரையில் தீவிர நாட்டம் கொள்வது முறை.

நீ பலம் ஆக இருக்கிறாய். எனக்குப் பலம் வழங்கு.

நீ ஓஜஸ் ஆக இருக்கிறாய். எனக்கு ஓஜஸ் வழங்கு.

நீ தீமையில் வெறுப்பாக இருக்கிறாய். எனக்குத் தீமையில் வெறுப்பை வழங்கு.

நீ கஷ்டத்தைச் சகிக்கிறாய். எனக்குக் கஷ்டத்தைச் சகிக்கும் தன்மையை வழங்கு.

தேஜஸ் என்பது சீலத்தினின்று உண்டாகிற உடல் பொலிவு.

வீரியம் என்பது துணிந்து நலனையே செய்வது.

பலம் என்பது உடல் வலிவு.

ஓஜஸ் என்பது சீலத்தினின்று உண்டாகிற உள்ஒளி.

நல்ல ஆத்ம சாதகன் யாருக்கும் தீங்குசெய்வதில்லை. தனக்கு வருகிற கஷ்டங்களை அவன் பொறுத்துக்கொள்கிறான். அப்படிச் செய்வது சகிப்பு.

85. மானேர் நோக்கி யுமையாள் பங்கா
மறையீறறியா மறையோனே
தேனே யமுதே சிந்தைக்கரியாய்
சிறியேன் பிழை பொறுக்குங்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன்
சிவமா நகர்குறுகப்
போர்ளு ரடியார் யானும் பொய்யும்
புறமே போந்தோமே.

மான்நேர் நோக்கி உமையாள் பங்கா
மறைஈறு அறியா மறையோனே
தேனே அமுதே சிந்தைக்கு அரியாய்
சிறியேன் பிழை பொறுக்கும்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன்
சிவம் மா நகர் குறுகப்
போனர் அடியார் யானும் பொய்யும்
புறமே போந்தோமே.

மறை ஈறு-வேதத்தின் முடிவு, வேதாந்தம். மறையோன்-மறைபொருள். என் கொடுமை பறைந்தேன்-எனது குறைபாட்டைப்பற்றி முறையிட்டேன். குறுகுதல் - அடைதல். யானும் பொய்யும்-நானும் பொய்யாகிய இப்பிரபஞ்சமும். புறமே போந்தோம்-வேற்றார் ஆனேம்.

மான்விழி போன்ற விழிகளையுடைய உமாதேவியாரின் தக்ஷிண பாகா, வேத, வேதாந்தத்துக்கு எட்டாத மறைப் பொருளே, தேனே, அமிர்தமே, மனதுக்கு எட்டாதவனே, என் குற்றத்தை மன்னித்து அருளும் அரசே, எனது குறைபாட்டை நான் பரிந்து உன்னிடம் முறையிட்டேன், அதாவது உன் அடியார்கள் உனக்கு உரியவர்கள் ஆயினர். நானோ பொய்யாகிய பிரபஞ்சத்துக்கு உரியவனுய், நானும் பிரபஞ்சமும் உனக்கு வேருக இருந்து வருகிரேம்.

பரஞானம் அடையப் பெருதவர்களுக்கு ஜகத், ஜீவன், பரம் என்ற முப்பொருள் உண்மையெனத் தோன்றுகின்றன. பரஞானம் அடையப்பெற்றவர்கள் பரம்பொருளில் இரண்டறக் கலக்கின்றனர். ஜீவபோதம் உடையவர்களுக்கோ ஜீவபோதமும் பிரபஞ்சபோதமும் நிலைத்திருப்பவைகள் போல் காட்சி கொடுக்கின்றன.

உபநி—48. பக்கம் 337ல் காண்க.

86. புறமே போந்தோம் பொய்யும்
யானு மெய்யன்பு
பெறவே வல்லே னல்லா
வண்ணம் பெற்றேன்யா
னறவே நின்னைச் சேர்ந்த வடியார்
மற்ரென் றறியாதார்
சிறவே செய்து வழிவந்து
சிவனே நின்ருள் சேர்ந்தாரே.

புறமே போந்தோம் பொய்யும்
யானும் மெய்அன்பு
பெறவே வல்லேன் அல்லா
வண்ணம் பெற்றேன் யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார்
மற்று ஒன்று அறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே.
நின் தாள் சேர்ந்தாரே.

வண்ணம்-தன்மை. அறவே-ஜீவபோதம் நீங்கும்படி. சிறவே செய்து-சிறப்பே செய்து. (சிரேயஸ்).

ஜீவனுகிய நானும், ஜகத் ஆகிய மாயையும் உனக்குப் புறம் பாலேம். உன்பால் பராபக்தி அல்லது அனன்ய பக்தி பண்ணுவதற்கான உறுதியான தெய்விகத் தன்மை என்னிடத்து இல்லை. உன்னைத் தவிர வேறு எதையும் அறியாத பரிபக்குவ ஆத்மாக்கள் தங்கள் ஜீவபோதத்தை அகற்றி உன்பால் இரண்டறக் கலந்தனர். அதற்காக அவர்கள் சிரேயஸ் மார்க்கத்தையே தீவிரமாகக் கையாண்டனர்.

உபநி—10 பக்கம் 133ல் காண்க.

87. தாரா யுடையா யடியேற்
குன்று ளிணையன்பு
பேரா வுலகம் புக்கா ரடியார்
புறமே போந்தேன்யா

உபநிஷத் மந்த்ரம்—56.

उत्तिष्ठत जाग्रत प्राप्य वरान् निबोधत ।
क्षुरस्य धारा निशिता दुरत्यया दुर्गं पथस्तत् कवयो वदन्ति ॥

ஞூரா மிலேக்கக் குருட்டா மிலேத்திங்
குன்ரு ளிணேயன்புக்
காரா யடியே னயலே
மயல்கொண் டழுகேனே.

தாராய் உடையாய் அடியேற்கு உன்
தாள் இணே அன்பு
பேரா உலகம் புக்கார் அடியார்
புறமே போந்தேன்யான்
ஊர் ஆ மிலேக்கக் குருட்டு ஆ மிலேத்து இங்கு
உன் தாள் இணே அன்புக்கு
ஆரா அடியேன் அயலே
மயல்கொண்டு அழுகேனே.

தாராய்-கொடுத்தருள்வாய். பேரா உலகம்-அழியாத உலகம், மோக்ஷ சாம்ராஜ்யம். புக்கார்-பிரவேசித்தார். ஊர் ஆ மிலேக்க-ஊர்ப்பசு கனேப்பதைக் கேட்டு. குருட்டு ஆ மிலேத்து இங்கு-குருட்டுப்பசு கனேத்ததை ஒக்க. ஆரா அடியேன்-அனுபவ மில்லாத அடியேன். அயலே-மெய்யடியார்க்குப் புறம்பாயிருந்துகொண்டு மயல்கொண்டு-விவேகமில்லாத ஆசைகொணடு.

உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வரான் நிபோதத ।
க்ஷுரஸ்ய தாரா நிசிதா துரத்யயா துர்கம் பதஸ்தத்
கவயோ வதந்தி ॥
(கடோபநிஷதம் 3-14)

उत्तिष्ठत உத்திஷ்டத எழுந்திரு जाग्रत ஜாக்ரத விழித்திரு वरान् வரான் சிறந்தவர்களே प्राप्य ப்ராப்ய அடைந்து तत तத் அந்த ஆத்மனே निबोधत நிபோதத அனுபூதியில் அறிந்துகொள் तत् पथ த்த் பத: அந்தப் பாதையானது निशिता क्षुरस्या நிசிதா க்ஷுரஸ்யா கூர்மையான க்ஷவரக்கத்தியினுடைய धारा தா்ரா வாய்போன்று दुरत्यया துரத்யயா கடப்பதற்கு துர்கம் நடப்பதற்கு இயலாதது (என்று) कवय, वदन्ति கவய: வதந்தி ஞானிகள் சொல்லுகின்றனர்.

எழுந்திரு, விழித்திரு, சான்ரேரை அணுகி ஆத்மனே அனுபூதியில் அறிந்துகொள். அந்த ஞானமார்க்கமானது கூர்மையான க்ஷவரக்கத்தியின் வாய்போன்று கடப்பதற்கு

யாண்டும் என்னை உடையவனே! எனக்கு உன்பால் மெய் யன்பு கொடுத்தருள். உன்னை முறையாக நாடிய அன்பர்கள் மீண்டும் பிறவி விளையாத முக்தியடையப்பெற்றனர். ஆனால் நானே வீடுபேற்றினுக்கு வேற்றனுயிருக்கிறேன். கன்றைப் பார்த்தோ திண்டியைப் பார்த்தோ ஊர்ப்பசுவானது பொருள்படக் கத்து கிறது. அதைக்கேட்ட குருட்டுப் பசு பொருளற்ற கூச்சல் போடு கிறது. அங்ஙனம் உன் அன்பு வேண்டுமென்று நான் வீணில் ஓல மிடுகிறேன்; செந்நெறியைப்பற்றிய அனுபவம் எனக்கில்லை.

விவேகம் என்கிற கண்ணில்லாதவன் குருட்டுப் பசுவுக்கு ஒப்பாகிறான். சாதனத்தில் அவன் எடுத்துக் கொள்கிற முயற்சி பயனற்றதாகிறது.

88. அழுகே னின்பா லன்பா
மனமா யழல்சேர்ந்த
யெழுகே யன்னார் மின்னார்
பொன்னார் கழல்கண்டு

அரியது. நடப்பதற்கு இயலாதது என்று ஞானிகள் இயம்பு கின்றனர்.

தூங்குகிறவனுக்கு எழுந்திருக்கவும் தன் முயற்சி யில் ஈடுபடவும் வேளை ஒன்று வருகிறது. அங்ஙனம் பிரபஞ்ச வாழ்வில் உழல்பவனுக்கு அதில் சலிப்புத்தட்டு கிறது. அப்பொழுது ஆத்மபோதத்தில் அல்லது அருள் நாட்டத்தில் உணர்வும் ஊக்கமும் ஓங்குகின்றன. அவ னுடைய சிரத்தைக்கு ஏற்ப ஞானசாரியர் ஒருவரோடு தெய்வாதீனமாகத் தொடர்பும் ஏற்படுகிறது. அப்படி யிருந்தும் ஞானமார்க்கமானது மிகத் துர்லபமானது. கூரிய கத்தி முனையில் நடப்பதற்கு நிகர் அது. எச்சரிக் கையும், விடாமுயற்சியும், நல்லார் இணக்கமும், தெளிந்த விவேகமும் அதற்கு இன்றியமையாதவைகளாம். ஞானி களின் துணிபும் இதுவேயாம்.

உபநிஷத் மந்த்ரம்—57

अथ यदि ते कर्मविचिकित्सा वा वृत्तविचिकित्सा वा स्यात्
ये तत्र ब्राह्मणाः सम्मर्शिनः। युक्ता आयुक्ताः। अलूक्षा
धर्मकामा स्युः। यथा ते तत्र वर्तेरन्। तथा तत्र वर्तेथाः।

தொழுதே யுன்னைத் தொடர்ந்தா
ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தே னென்கொண்
டுன்னைப் பணிகேனே.

அழுகேன் நின்பால் அன்புஆம்
மனம் ஆய் அழல் சேர்ந்த
மெழுகே அன்னுர் மின் ஆர்
பொன் ஆர் கழல் கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தா
ரோடும் தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண்டு
உன்னைப் பணிகேனே.

அத யதி தே கர்மவிசிகித்ஸா வா வ்ருத்தவிசிகித்ஸா வா ஸ்யாத் । யே தத்ர ப்ராஹ்மணா: ஸம்மர்சின: । யுக்தா ஆயுக்தா: । அலூக்ஷா தர்மகாமா: ஸ்யு: । யதா தே தத்ர வர்தேரன் । ததா தத்ர வர்தேதா: ।

(தைத்ரீயோபநிஷதம் 1—11)

अथ அத இப்பொழுது ते தே உனக்கு कर्म विचिकित्सा கர்ம விசிகித்ஸா கர்மம் செய்வதில் சந்தேகம் वा வா அல்லது वृत्त-विचिकित्सा வ்ருத்த விசிகித்ஸா நல்லொழுக்கத்தில் சந்தேகம் स्यात् ஸ்யாத் உண்டாகுமிடத்து तत्र தத்ர அது விஷயத்தில் ये யே யார் सम्मर्शिनः ஸம்மர்சின: நேராக ஓர்கிருர்களோ युक्ताः யுக்தா: அனுபவப்பட்டவர்களாக இருக்கிருர்களோ आयुक्ताः ஆயுக்தா: ஓரம் சாராதிருக்கிருர்களோ अलूक्षाः அலூக்ஷா: பதைபதைப்பில்லாதிருக்கிருர்களோ धर्मकामाः தர்மகாமா: தர்ம மார்க்கத்தில் கண்ணுங் கருத்துமாயிருக்கிருர்களோ ब्राह्मणाः स्युः ப்ராஹ்மணா: ஸ்யு: அது விஷயத்தில் சம்பந்தப்பட்ட பிராமணர்களாயிருக்கிருர்களோ ते தே அவர்கள் तत्र தத்ர அது விஷயத்தில் यथा யதா எங்ஙனம் वर्तेरन् வர்தேரன் செய்கிருர்களோ तथा ததா அங்ஙனம் वर्तेथाः வர்த்தேதா: நீ நடந்துகொள்ள வேண்டும்.

அழல்-தீ. பழுதே-வீணில்.

உன்னிடத்து மெய்யன்பு உடையவராய், ஒளி பொருந்திய பொன் போன்ற உன் திருவடிகளைக் கண்டு, தீயில் இட்ட மெழுகை ஒத்தவராய், உன் அன்பர்கள் தொழுது, உன்னைப் பின்பற்றினர். அவர்களைப் பின்பற்றாமல் நான் புன்மைக் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிறேன். அத்தகைய நான் வீணில் பிறந்தவனாகிறேன்; எம்முறையைக் கையாண்டு நான் உன்னை வழுத்துவது என்று எனக்கு விளங்கவில்லை.

விவேகம் படைத்திருப்பவர்களுக்கு வழிபாட்டு முறை தானே விளங்குகிறது. விவேகம் இல்லாதவர்கள் சான்றோர் செல்லும் செந்நெறியில் செல்லுவது முறை.

இப்பொழுது உனக்கு எக்கர்மத்தைச் செய்வது, எதை விலக்குவது என்பதில் சந்தேகம் உண்டாகுமிடத்து அல்லது எது நல்லொழுக்கம், எது நல்லொழுக்கமல்லாதது என்கிற சந்தேகம் உண்டாகுமிடத்து, அது விஷயத்தை நேராக ஆராய்கிறவர்களும், அனுபவப்பட்டவர்களும், பக்ஷபாதமில்லாதவர்களும், பதைபதைப்பில்லாதவர்களும், அறநெறியிலேயே நாட்டம் கொண்டிருப்பவர்களும், ஆராய்ச்சிக்குரிய விஷயத்தில் சம்பந்தப்பட்டவர்களும் ஆகிய அந்தணர்கள் அந்நிலைமையில் எங்ஙனம் நடந்து கொள்கிறார்களோ அங்ஙனம் நீயும் நடந்து கொள்க.

செய்யத் தக்கவைகளையும் தகாதவைகளையும் நூலோர்கள் முற்றிலும் நிர்ணயம் செய்யவில்லை; அப்படிச் செய்வதும் சாத்தியமன்று. கால தேச வர்த்தமானத்துக்கு ஏற்பச் சில நடைமுறைகளை மாற்றியமைப்பது அவசியமாகிறது. அது போழ்தெல்லாம் சான்றோர்கள் செய்வதை நீயும் பின்பற்றுக. திரிகரணங்களில் அந்தணர்களாயிருப்பவர்க்கே சூழ்நிலைக்கேற்ற செந்நெறி நன்கு விளங்கும்.

மெய்யடியார்களைப் பின்பற்றத் தமக்கு இயலாமையைக் குறித்து மாணிக்கவாசகர் வருந்துவது ஆத்ம சாதகர்களுக்கு அரிய பாடத்தைப் புகட்டுகிறது. நூல்களிலும் மிக்கார் ஆகின்றனர் நல்ல ஆத்ம சாதகர்கள்.

89. பணிவார் பிணிதீர்த் தருளிப்
பழைய வடியார்க்குன்
ணணியார் பாதங் கொடுத்தி
யதுவு மரிதென்றாற்
றிணியார் மூங்கி லனையேன்
வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை
தாராய் பொய்தீர் மெய்யானே.

பணிவார் பிணி தீர்த்து அருளிப்
பழைய அடியார்க்கு உன்
அணி ஆர் பாதம் கொடுத்தி
அதுவும் அரிது என்றால்
திணி ஆர் மூங்கில் அனையேன்
வினையைப் பொடி ஆக்கித்
தணி ஆர் பாதம் வந்து ஒல்லை தாராய்
பொய்தீர் மெய்யானே.

பிணி-பிறவி நோய். அணி ஆர்-அழகு பொருந்திய. திணி ஆர்-வலிமை பொருந்திய. பொடி ஆக்கி-சாம்பல் பண்ணி. தணி ஆர்-தண்மை நிறைந்த. ஒல்லை-விரைவில். பொய்தீர் மெய்யானே.

உபநிஷத் மந்த்ரம்—68.

क्लेशोऽधिकतरस्तेषामव्यक्तासक्तचेतसाम् ।
अव्यक्ता हि गतिर्दुःखं देहवद्भिरवाप्यते ॥

க்லேசோऽதிகதரஸ்தேஷாமவ்யக்தாஸக்தசேதஸாம் ।
அவ்யக்தா ஹி கதிர் துःகம் தேஹவத்பிர வாப்யதே ॥

(பகவத்கீதோபநிஷதம்—12-5)

अव्यक्त आसक्त चेतसां அவ்யக்த ஆஸக்த சேதஸாம் நிர்க்குண பிரம்மத்தில் சித்தத்தை வைத்த तेषां தேஷாம் அவர்களுக்கு क्लेशः க்லேச: பிரயாசை अधिकतरः அதிகதர: மிக அதிகமானது हि ஹி ஏனென்றால் देहवद्भिः தேஹவத்பி: தேகாபிமானமுடையவர்களால் अव्यक्ता गतिः அவ்யக்தா கதி: நிர்க்குண பிரம்ம நிஷ்டை दुःखं துःகம் கஷ்டப்பட்டு अवाप्यते அவாப்யதே அடையப்படுகிறது.

பிரபஞ்சம் என்னும் பொய்த் தோற்றத்துக்கு அப்பால் உள்ள பரவஸ்துவே.

நிர்க்குண பிரம்மமாய் இருப்பவனே, உன்னுடைய முதிர்ந்த அன்பர்களது பிறவிப் பிணியைப் போக்கி அவர்களை உன்னிடத்து ஒன்றுபடுத்திவிடுகின்றனை. அப்பெருநிலைக்கு நான் இன்னும் தகுதியாகவில்லையென்றால், கெட்டி மூங்கில் போன்று வளையாதிருக்கும் எனது வினையைச் சாம்பலாக்கி இன்பம் நிறைந்த உன் திருவடிக்கு என்னை ஆளாக்குவாயாக.

சகுண பிரம்மம் அல்லது ஈசுவர உபாசனை செய்து அவருடைய அனுக்கிரகத்தைப் பெற்று, பிறகு நிர்க்குண பிரம்ம உபாசனை பண்ணுவது பெரும்பாலான சாதகர்களுடைய பாங்கு ஆகும். சிதம்பரத்தில் நடராஜாவுக்கும் பிறகு சிதம்பர ரகசியத்துக்கும் நடைபெறுகிற தீபாராதனையே இதற்கு நல்ல விளக்கமாகும்.

90. யானே பொய்யென் னெஞ்சும்
பொய்யென் னன்பும்பொய்
யானால் வினையே னழுதா
லுன்னைப் பெறலாமே

நிர்க்குண பிரம்மத்தில் சித்தம் வைப்பவர்க்குப் பிரயாசை மிக அதிகம். ஏனென்றால் உடலுணர்ச்சியுடையார்க்கு நிர்க்குண பிரம்ம நிஷ்டையடைதல் அரிதாம்.

இருதர உபாசகர்களும் அடையும் குறி ஒன்றே. ஆனால் தேகாபிமானம் உடைய ஒருவனுக்கு நிர்க்குண பிரம்ம உபாசனையைவிட சகுண பிர்ம்ம உபாசனை எளிது. நிர்க்குண பிரம்ம உபாசகன் துவக்கத்திலேயே உடல் பற்றை அறவே நீக்கவேண்டும். பிஞ்சாகிக் காயாகிக் கனியாகின்றவிடத்து மேல் ஓடு பழத்தினின்று தானாகப் பிரிந்துவிடுகிறது. அங்ஙனம் ஞான முதிர்ச்சியடைபவனுக்குத் தேகாபிமானம் போய்விடுகிறது. தேகப் பற்றுடையவனுக்கு எளிதாயிருப்பது சகுண பிரம்ம உபாசனை. அதில் துவக்கி மேல்நோக்கிப் போகின்றவனுக்குச் சாதனத்தில் அதிக சிரமம் ஏற்படுவதில்லை.

தேனே யமுதே கரும்பின்
றெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியே
னுனைவந் துறுமாறே.

யானே பொய் என் நெஞ்சும்
பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந்து உறும்ஆறே.

மானே-மஹானே, பெரியோனே.

ஜீவாத்மாவாகிய நான் நித்திய வஸ்து அல்லன். ஆதலால் அநித்திய வஸ்துவாகிய நான் படைத்திருக்கிற மனதும் நித்திய மானதன்று. நிலையற்ற அந்த மனதைக்கொண்டு நான் பாராட்டு கிற அன்பும் நித்தியமன்று. ஆனால் இந்த அநித்திய தத்துவங் களை, ஈசா, உன்பொருட்டுப் பயன்படுத்தினால் நித்திய வஸ்துவாகிய உன்னை நான் சேரலாம். உன்னை அணுகுமளவு எனக்குப் பரமா னந்தம் மேலிடுகிறது. எனவே உன்னை உறுதியாக அடையப் பெறுவதற்கான உபாயத்தை எனக்குக் காட்டியருள்வாயாக.

கடலில் உள்ள அலைகளின் மீது ஒரு சூரியன் பல சூரியர்களாகப்பிரதிபிம்பிப்பதுபோன்று,குணபேதத்தை உடைய பிரகிருதியின் மீது பரமாத்மாவானவர் பல கோடி ஜீவர்களாகப் பிரதிபிம்பிக்கிறார். ஆதலால்தான் ஜீவாத்மாவுக்குச் சிதாபாசன் என்னும் பெயர் வந்துள் ளது. பிரதிபிம்பிக்கிற சைதன்யம் என்பது அதன் பொருள். இந்த ஜீவாத்மன் பிரகிருதியிலேயே உழன்று கிடக்கும்பொழுது அவன் பிறவிப் பெருங்கடலில் தத் தளிக்கிறான். பிரகிருதியைப் புறக்கணித்துவிட்டு அவன் பரமாத்மாவை நாடுமிடத்து அவனுக்கு நிலைத்த ஆனந்தம் வாய்க்கிறது. பரமனை அடைவது ஜீவனது குறிக்கோள்

உபநி—48. பக்கம் 337ல் காண்க.

10. ஆனந்தாதீதம்

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சகுண பிரம்மம் அல்லது நடராஜமூர்த்தி அல்லது ஈசுவரன் சத் சித் ஆனந்த சொரூபம். அந்த சொரூபத்தில் ஆனந்தம் சிறப்பாகச் சென்ற பதிகத்தில் விளக்கப்பட்டது. ஜீவாத்மன் சுத்த சத்வகுணத்தில் நிலேத்திருந்து, சித்தசுத்தியடைந்து ஆனந்தத்தில் அழுந்தியிருக்கிறுன். இனி ஆனந்தாதீதம் என்பது நிர்க்குண பிரம்மம். சிதம்பர ரகசியம் எனவும் சதாசிவம் எனவும் இப்பரவஸ்து இயம்பப் பெறுகிறது. சிதம்பரம் போனவர்கள் திரும்பி வருவதில்லே என்பது கோட்பாடு. அதாவது பரவெளி அல்லது சிதாகாசத்தில் கலந்தவர்களுக்கு ஜீவபோதம் எஞ்சியிருப்பதில்லே. அந்நிலேயானது மனதுக்கு அதீதம், கர்மத்துக்கு அதீதம், குணத்துக்கு அதீதம், நாதத்துக்கு அதீதம்; ஆதலால் ஆனந்தத்துக்கும் அதீதம். ஜீவபோதம் அழிதல் ஒன்பதாவது பதிகத்தின் இறுதியில் இயம்பப்பெற்றது. ஆனந்தாதீதமோ சொற்பதங்கடந்த தொன்மையாம். சொல்லில் அடங்காததைக் கூடியவரையில் சொல்லால் விளக்க இப்பதிகம் பயன்படுகிறது.

91. மாறி லாதமாக் கருணே வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொ டாளிணே
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவிஞ
ரீறி லாதநீ யெளியை யாகிவந்
தொளிசெய் மானுட மாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சுடைய ஞயினேன்
கடைய ஞயினேன் பட்ட கீழ்மையே.

உபநிஷத் மந்த்ரம்—59.

आपूर्यमाणमचलप्रतिष्ठं समुद्रमापः प्रविशन्ति यद्वत् ।
तद्वत्कामा यं प्रविशन्ति सर्वे स शान्तिमाप्नोति न कामकामी ॥

மாறு இலாத மாக் கருணை வெள்ளமே
வந்து முந்தி நின்மலர் கொள் தாள் இணை
வேறு இலாப் பதம் பரிசுபெற்ற நின்
மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினர்
ஈறு இலாத நீ எளியை ஆகி வந்து
ஒளிசெய் மானுடம் ஆக நோக்கியும்
கீறுஇலாத நெஞ்சுஉடையன் ஆயினேன்
கடையன் நாயினேன் பட்டகீழ்மையே.

மாறு இலாத-மாறியமையாத, அக்ஷரமாகிய. மாக்கருணை வெள்ளமே-பெருங்கருணைக் கடலே. மலர்கொள்தாள் இணை-மெல்லிய பூப்போன்று இனிமை நிறைந்த திருவடிகள். வேறு இலாப் பதப்பரிசு-அபேத அத்வைத சித்தி. மெய்ம்மை அன்பர்-முற்றிலும் பரிபக்குவம் அடைந்துள்ள ஆத்ம சாதகர்கள். உன் மெய்ம்மை மேவினர்-உனது சாசுவத சொருபத்தில் கலந்தனர். ஈறு இலாத நீ-ஆதியும் அந்தமும் இல்லாத நீ, அனாதி அனந்த வஸ்துவாகிய நீ. எளியை ஆகி வந்து-காணக்கூடியவனாக வந்து. ஒளி செய்-தேஜோமயமான. நோக்கியும்-திருவருள் பார்வை செய்தும். சக்ஷுதீக்ஷை செய்தவுடனே. கீறு-கண்டம், பிளவு. கீறு இலாத நெஞ்சு-அகண்டாகார சித்த விருத்தி.

ஆபூர்யமாணமசலப்ரதிஷ்டம்
ஸமுத்ரமாப: ப்ரவிசந்தி யத்வத் ।
தத்வத்காமா யம் ப்ரவிசந்தி ஸர்வே
ஸ சாந்திமாப்னோதி ந காமகாமீ ॥
(பகவத்கீதோபநிஷதம்2-70)

आपूर्यमाणं ஆபூர்யமாணம் முழுதும் நிறைந்த अचलप्रतिष्ठ அசலபிரதிஷ்டம் அசைவின்மையில் நிலைபெற்ற समुद्रम् ஸமுத்ரம் சமுத்திரத்தை आपः ஆப: நீர்கள் यद्वत् प्रविशन्ति யத்வத் ப்ரவிசந்தி எப்படி பிரவேசிக்கின்றனவோ तद्वत् தத்வத் அப்படியே सर्वेकामाः ஸர்வே காமா: ஸர்வகாமங்களும் यं (मुनिं) प्रविशन्ति யம் (முனிம்) ப்ரவிசந்தி எந்த முனியின்கண் பிரவேசிக்கின்றனவோ सः ஸ: அவன் शान्ति சாந்திம் சாந்தியை आप्नोति ஆப்னோதி அடைகிறான் कामकामी காமகாமீ விஷய ஆசையுள்ளவன் न ந அடைகிறதில்லை.

யாண்டும் தன்மயமாயிருக்கும் தனிக் கருணைக் கடலே, முன்னுளில் முற்றும் பரிபக்குவம் அடைந்த பெருமக்கள் உனது இன் அருளால் உன்னோடு இரண்டறக் கலந்தனர். அனாதி—அனந்தனாகிய நீ விளையாட்டுப் போன்று தேஜோ மயமான மானுட உடல் தாங்கி வந்து என்மீது கருணாகர நோக்கம் வைத்தாய். அதன் விளைவாக நான் ஜீவபோதத்தைத் கடந்து அகண்ட சிவபோதத்தில் ஒன்றுபட்டேன். அதற்கு முன்பு மாயையின் வசப்பட்டிருந்த போது எண்ணிறந்த பிறவிகளில் நான் கீழ்மையுற்றுக் கிடந்தேன்.

மலம் செறிந்த மனதே மாயா விகாரமெனப்படுகிறது. தூய்மையில் நிலைபெற்ற மனதுக்குப் பிரபஞ்சக் காட்சி ஈசனது காட்சியாக மாறுகிறது. ஈசனோடு ஜீவனுக்கு மாருது இருக்கிற உறவு பேரானந்தமாகப் பொலிகிறது. அந்நிலையில் ஞாதா, ஞானம், ஞேயம் ஆகிய திரிபுடி இருக்கிறது. ஆனந்தத்தை நல்குபவன், ஆனந்தம், ஆனந்தத்தை அனுபவிப்பவன் என்ற திரிபுடி காணப்படுகிறது. திரிபுடி என்பதற்குப் பொருள் மும்மை. இது வித்யா மாயையின் கூறு. அதீத நிலையில் இந்த மும்மை அழிந்துபட்டுப் போவதால் இதை முப்பாழ் என்று இயம்புவதுண்டு.

அசைவற்ற நிறை கடலில் ஆறுகள் சென்றடங்குவதுபோல் எம்முனிவன்பால் ஆசைகளனைத்தும் சென்றொடுங்குகின்றனவோ அவனே சாந்தியடைகிறான். ஆசையுள்ளான் சாந்தியடையான்

கடலின்கண் கூட்டுதல், குறைத்தல் முதலியன செய்தல் எவருக்கும் இயலாது. உலகிலுள்ள நதிகளெல்லாம் ஓயாது அதில் வந்து வீழ்ந்தாலும் அது மிகைப்படுவதில்லை. நதிகள் வாராதொழியினும் கடல் குறைபடுவதில்லை. உள்ளே வரும் நதிகளோ உருவை இழந்துவிடுகின்றன. நாம ரூபம் அடிபட்டுப் போய்விடினும் நதி எப்பொருளாலானதோ அப்பொருளுக்கு நஷ்டமில்லை. கருவி கரணங்களை வென்ற முனிவனது மனம் கடல்போன்றது. காமத்தை உண்டுபண்ணும் பொருள்கள் ஓயாது அவனது முன்னிலைக்கு வந்துகொண்டிருக்கலாம். பொறி

ஆனந்தத்தை நாடுவது ஜீவர்களின் இயல்பு. சகுண பிரம்மம் அல்லது ஈசுவரன் மாயா சகிதனுயிருக்கும் பொழுது அவனுடைய மஹோன்னத நிலை ஆனந்தம். ஆதலால் ஆனந்தத் தாண்டவம் அவனது மஹிமையாக மிளிர்கிறது. ஜீவபோதம் என்னும் உபாதியைக் கலைப் பது ஜீவாத்மாவின் குறிக்கோள் ஆகும். அப்படி ஜீவ வியக்தியைக் கலைக்கும்போது அவன் ஈசுவரக் காட்சியை யும் ஒதுக்கிவிட்டு நிர்விகற்ப சமாதியில் நிர்க்குண பிரம் மத்தில் ஒன்றுபடுகிறுன். அந்த நிலையே ஆனந்தத்துக்கும் அப்பாற்பட்டதாம்.

92. மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலா
லரியை யென்றுனைக் கருது கின்றிலேன்

வாயிலாக அவன் அவைகளை பொருள்படுத்தவும் செய் யலாம். கடலில் நதிகள் ஒடுங்குவது போன்று இந்திரி யார்த்தங்கள் என்னும் சித்த விருத்திகள் அவனது உள் ளத்தில் ஒடுங்கிவிடுகின்றன. மனம் ஒரு விகாரத்தையும் அடையாத பரிபூரண நிலையில் அவன் வீற்றிருக்கிறுன். அகண்டாகார விருத்தியென்று அதைப் பகர்வதுண்டு. கடல் போன்று அகண்டமாய் விடுகிறது ஞானியின் உள்ளம். கடலைக் கலக்கிச் சேறுபடுத்த யாராலும் முடி யாது. முனியின் நிறைமனது கலங்கிய மனது ஆய்விடு வதில்லை. சாந்தம் அல்லது ஜீவன் முக்தி என்ற பெரு நிலையும் அவனுக்கே உரியது. ஆசை வலையில் அழுந்து பவர்க்கும் அதற்கும் வெகுதூரம்.

உபநிஷத் மந்த்ரம் — 60

अशब्दमस्पर्शमरूपमव्ययं तथाऽरसं नित्यमगन्धवच्च यत् ।
अनाद्यनन्तं महतः परं ध्रुवं निचाय्य तन्मृत्युमुखात् प्रमुच्यते ॥

அசப்தம் அஸ்பர்சம் அரூபம் அவ்யயம் ததா அரஸம்
நித்யம் அகந்தவத் ச யத் ।
அனுதி அனந்தம் மஹத: பரம் த்ருவம் நிசாய்ய தன்ம்ருத்யு
முகாத் ப்ரமுச்யதே ॥

(கடோபநிஷதம் 3 15)

மெய்யி லங்குவென் ணீற்று மேனியாய்
மெய்ம்மை யன்பருள் மெய்ம்மை மேவினூர்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே.

மை இலங்கு நல்கண்ணி பங்கனே
வந்து எனைப் பணிகொண்டபின் மழக்
கை இலங்கு பொன் கிண்ணம் என்று அலால்
அரியை என்று உனைக் கருதுகின்றிறேன்
மெய் இலங்கு வெண் நீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினூர்
பொய்யில் அங்குஎனைப் புகுதவிட்டு நீ
போவதோ சொலாய் பொருத்தம் ஆவதே.

நல்கண்ணி-மங்களமான கண்களையுடையவள், சுலோசனை. மழக்கை-குழந்தையின் கை. மெய் இலங்கு-உண்மைக்கு அடையாளமாகத் திகழ்கின்ற. பொய்யில்-பிரபஞ்ச வாழ்க்கையில். புகுத விட்டு-உழலும்படி செய்து. போவதோ-பராமுகமாய் இருப்பதோ. பொருத்தம் ஆவதோ-இது தகுமோ.

यत् யத் யாதொன்று अशब्दं அசப்தம் ஓசையில்லாதது अस्पर्शं அஸ்பர்சம் தொட்டு உணர முடியாதது अरूपं அரூபம் உருவமில்லாதது अव्ययं அவ்யயம் அழிவற்றது तथा ததா அங்ஙனமே अरसं அரஸம் சுவையற்றது नित्यं நித்யம் எப்பொழுதும் இருப்பது अगन्धवत् அகந்தவத் மணமில்லாதது अनादि अनन्तं அநாதி அனந்தம் ஆதி அந்தமில்லாதது महतः परं மஹத: பரம் மஹத்துக்கும் மேலானது ध्रुवं த்ருவம் அசைவற்றது तत् தத் அந்த ஆத்மனை निचाय्य நிசாய்ய அனுபூதியில் அடைந்து मृत्युमुखात् ம்ருத்யு முகாத் மரணத்தின் வாயினின்று प्रमुच्यते ப்ரமுச்சயதே ஒருவன் விடுதலையடைகிறுன்.

ஆத்மாவானது ஓசையில்லாதது, தொட்டு உணர முடியாதது, உருவமில்லாதது, அழிவற்றது, அங்ஙனமே சுவையற்றது, எப்பொழுதும் இருப்பது, நாற்றமில்லாதது, துவக்கமும் முடிவும் இல்லாதது, மூலப்பிரகிருதிக்கும் மேலானது, அசையாதது. அந்த ஆத்மனை அனுபூதியில் அடைகிறவன் மரணத்தின் வாயினின்று விடுதலையடைகிறுன்.

அம்பிகை சமேதா, குழந்தையின் கையில் பொற்கிண்ணத்தைக் கொடுப்பதற்கு ஒப்ப என்னை நீ ஆட்கொண்டாய். பொற்கிண்ணத்தின் அருமையைக் குழந்தையானது அறியாதிருப்பது போல உனது அருமையை நான் அறியாதிருக்கிறேன். மெய்ப்பொருளின் சின்னமாகிய திருநீறு பூசியிருப்பவனே! முடிந்த நிலையை அறிந்த முனிவர்கள், உன்பால் இரண்டறக் கலந்தனர். என்னை ஆட்கொண்டபின் மாயப்பிரபஞ்சமாகிய இவ்வையக வாழ்க்கையில் என்னைப் புகும்படி செய்துவிட்டு நீ பராமுகமாய் இருக்கலாமா, இயம்புவாயாக. அப்படிச் செய்வது உனக்குத் தகுமோ?

பிரபஞ்சத்தின் அதீதத்துக்குப் போகும் வரையில் ஜீவாத்மாவுக்கு ஓய்வில்லை. இடைவழியில் நிற்பதும் அவனுக்குத் தகாது.

93. பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மை [யேன்

போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்

வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்

மஹத் என்பது ஆதிசக்தி எனவும் மூலப்பிரகிருதி எனவும் பொருள்படுகிறது. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்பொறிகளின் செயல்கள் வாயிலாக வெளியே உள்ள உலகம் அறியப்படுகிறது. இந்த உலகம் பிரகிருதியின் கூறு ஆகிறது. ஐம்பொறிகளும் அவைகளின் செயல்களும் சுட்டு எனப்படுகின்றன. இவையாவையும் நீக்குமிடத்து ஆத்ம சொரூபம் எஞ்சி நிற்கிறது. அது பிரகிருதிக்கும் அப்பாற்பட்டது.

உபநிஷத் மந்த்ரம்—61.

पराञ्चि कानि व्यतृणत् स्वयम्भूस्तस्मात् पराङ् पश्यति नान्तरात्मन् ।
कश्चिद् धीरः प्रत्यगात्मानमैक्षदावृत्तचक्षुरमृतत्वमिच्छन् ॥

பராஞ்சி கானி வ்யத்ருணத் ஸ்வயம்பூ:தஸ்மாத்
பராங் பச்யதி நாந்தராத்மன் ।
கஸ்சித்தீர: ப்ரத்யகாத்மானம் ஐக்ஷத் ஆவ்ருத்த
சக்ஷு: அம்ருதத்வம் இச்சன் ॥

(கடோபநிஷதம் 4—1)

மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியா யருள்செ யன்பரும்
நீயு மங்கெழுந் தருளி யிங்கெனை
யிருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே.

பொருத்தம் இன்மையேன் பொய்ம்மை உண்மையேன்
போத என்று எனைப் புரிந்து நோக்கவும்
வருத்தம் இன்மையேன் வஞ்சம் உண்மையேன்
மாண்டிலேன் மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள் செய் அன்பரும்
நீயும் அங்கு எழுந்தருளி இங்குஎனை
இருத்தினாய் முறையோ என் எம்பிரான்
வம்பனேன் வினைக்கு இறுதி இல்லையே.

போத என்று-வருக என்று. **புரிந்து நோக்கவும்**-விரும்பி அருளோடு பார்க்கவும். **வருத்தம் இன்மையேன்**-கவலையற்றவன். **அரத்த மேனியாய்**-செந்நிறமான உடலையுடையாய். **வம்பனேன் வினைக்கு**-வீணில் வாழ்பவனாகிய எனது தீவினைக்கு.

स्वयम्भूः **ஸ்வயம்பூ:** *தானாகத் தோன்றியவன்* खानि **கானி** *இந்திரியங்களை (திறப்புக்களை)* पराञ्चि **பராஞ்சி** *புறத்தில் போகும்படி* व्यतृणत् **வ்யத்ருணத்** *சிருஷ்டித்தான்* तस्मात् **தஸ்மாத்** *ஆகையினால்* पराङ् **பராங்** *புறத்தில் இருப்பவைகளை* पश्यति **பச்யதி** *பார்க்கிறான்* न अन्तरात्मन् **ந அந்தராத்மன்** *உள்ளிருக்கும் ஆத்மனை அல்ல* अमृतत्वं इच्छन् **அம்ருதத்வம் இச்சன்** *மரணமின்மையை விரும்பும்* कश्चित् धीरः **கஸ்சித் தீர:** *யாரோ ஒரு பேரறிவாளி* आवृत्त चक्षुः **ஆவ்ருத்த சக்ஷு:** *கண்களை உள்முகமாகத் திருப்பி* प्रत्यगात्मानम् **ப்ரத்யகாத்மானம்** *உள்ளிருக்கும் ஆத்மனை* ऐक्षत् **ஐக்ஷத்** *பார்த்தான்.*

தானாகத் தோன்றிய பிரம்மதேவன் இந்திரியங்களைப் புறத்தில் போகும்படி சிருஷ்டித்தான். ஆகையினால் புறத்தில் இருப்பவைகளையே அவன் காண்கிறான். உள்ளிருக்கும் ஆத்மனை அவன் காண்கிறதில்லை. மரணமின்மையை விரும்புகிற யாரோ ஒரு பேரறிஞன் இந்திரியங்களைச் சேர்த்தெடுத்து உள்முகமாகத் திருப்பி ஆத்ம தர்சனம் பெறுகிறான்.

செந்தாமரை மலர்போன்ற திருவடிகளை யுடையவனே, செந்நிறமான திருமேனியுடையவனே, எனக்குச் சொந்தமான எங்கள் தலைவனே, உனது அருளுக்கு நான் தகுதியற்றவன்; பொய்யுலக வாழ்க்கையை மெய்யென்றிருப்பவன்; வா என்று நீ விரும்பி அருளோடு பார்க்கவும் நான் அதைப்பற்றிக் கவலைப்படாதவன்; நான் வஞ்சகத்தை யுடையவன்; ஏனென்றால் எனது ஜீவபோதத்தை அழிக்க நான் இன்னும் முயற்சி செய்யவில்லை. அருளுக்குப் பாத்திரமான அன்பர்களும் நீயும் அதீத நிலையில் ஒன்றுபட்டிருக்கிறீர்கள். இந்த நிலையற்ற உலக வாழ்க்கையில் என்னை நீ விட்டு வைத்திருப்பது முறையா? இங்கு வீணில் வாழ்ந்திருக்கும் எனது கர்மத்துக்கு ஒரு முடிவு இல்லையா?

கர்மாதீதமும் ஆனந்தாதீதமும் ஒன்றே.

94. இல்லை நின்கழற் கன்ப தென்கணே
யேல மேலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்

ஸ்வயம்பூ என்னும் சொல் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்ம தேவனையும் குறிக்கிறது; ஜீவாத்மனையும் குறிக்கிறது. தன்னைத்தானே தோற்றுவித்துக்கொள்ளுதல் இருவருக்கும் பொதுவான செயல். பொறிகள் வாயிலாகப் புறவுலகை நாடுவது பிரவிருத்தி. அது பிறவிப் பெருங்கடல். பொறிகளைச் சுட்டுச் சாம்பலுக்கு நிகராக்கி மனதை அந்தர்முகத்தில் திருப்புவது நிவிருத்தி. ஆத்மானுபூதிக்கு அதுவே உற்ற உபாயம். பொறிகளை வெல்லுமளவு ஆத்ம சாதனம் உறுதிபெறுகிறது.

உபநிஷத் மந்த்ரம் — 62.

तं दुर्दर्शं गूढमनुप्रविष्टं गुहाहितं गह्वरेष्ठं पुराणम् ।
अध्यात्मयोगाधिगमेन देवं मत्वा धीरो हर्षशोकौ जहाति ॥

தம் துர்தர்சம் கூடமனுப்ராவிஷ்டம்
குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம் ।
அத்யாத்ம யோகாதிகமேன தேவம் மத்வா தீரோ
ஹர்ஷசோகௌ ஜஹாதி ॥

(கடோபநிஷதம் 2-12)

யெல்லை யில்லைநின் கருணை யெம்பிரா
னேது கொண்டுநா னேது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னு முன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே.

இல்லை நின் கழற்கு அன்பு அது என் கணே
ஏலம் ஏலும் நல் குழலி பங்கனே
கல்லை மென்கனி ஆக்கும் விச்சை கொண்டு
என்னை நின் கழற்கு அன்பன் ஆக்கினாய்
எல்லை இல்லை நின் கருணை எம்பிரான்
ஏதுகொண்டு நான் ஏதுசெய்யினும்
வல்லையே எனக்கு இன்னும் உன் கழல்
காட்டி மீட்கவும் மறு இல் வானனே.

ஏலம் ஏலும் நல்குழலி பங்கனே-மலர்ச்சாந்து அணிந்த அழகிய கூந்தலை உடைய உமை அம்மை பாகனே. விச்சை-பரவித்யா, சிவஞானம். வல்லையே-ஆற்றல் உடையவனே. மீட்கவும்-மீண்டு ஆட்கொள்ளவும். மறு இல்வானனே-குற்றமில்லாத சித் ஆகாச சொருபியே.

மலர்ச்சாந்து அணிந்த அழகிய கூந்தலையுடைய அம்பிகையின் பாகனே, எம்பெருமானே, உனது திருவடியில் நான் அன்பு வைத்திலேன். உனது பரஞான பக்தியைக்கொண்டு, கல்போன்ற என் நெஞ்சை ஞானக் கனியாகப் பக்குவப்படுத்தி என்னை உன் திருவடிக்கு அன்புடையவனாக்கினாய். நான் எதைக் கருவியாகக்

दुर्दर्शं துர்தர்சம் காணபதற்கு அரியதை गूढं கூடம் பொருளை अनुप्रविष्टं அனுப்ரவிஷ்டம் உள்ளிருக்கும் பொருளை गुहाहितं குஹாஹிதம் ஹிருதயத்தில் வீற்றிருப்பதை गह्वरेष्ठं கஹ்வரேஷ்டம் உடலில் இருப்பதை पुराणं புராணம் பழைய பொருளை तं தம் அதை देवं தேவம் பிரகாசமானதை अध्यात्मयोग अधिगमेन அத்யாத்மயோக அதிகமேன உள்ளிருக்கும் பொருளைத் தியானிப்பதன் வாயிலாக मत्वा மத்வா அனுபூதியில் அறிந்துகொண்டு धीरः தீரः ஞானி हर्षशोकौ ஹர்ஷசோகௌ இன்பதுன்பங்களை जहाति ஜஹாதி விலக்குகிறான்.

உடலில், உள்ளத்தில் வீற்றிருப்பதும், ஊடுருவியிருப்பதும், புலப்படாததும், காண்பதற்கரியதும் ஆகிய பிரகாசம் பொருந்திய

கொண்டு எச்செயலைச் செய்தாலும் உனது பேரருளால் அதை உனது ஆராதனையாக ஏற்றுக்கொண்டாய். ஆயினும் சர்வசக்தி மானாகிய நீ உனது நிர்மலமாயிருக்கும் சித் ஆகாச சொரூபத்தில் என்னை இன்னும் லயமாகும்படி செய்யவில்லையே!

ஜீவபோதமானது சுத்த சைதன்யமாயிருக்கும் சிவபோதமாக விரிவடைந்தாலொழிய ஆனந்தாதீதம் வாய்க்காது.

95. வான நாடரு மறியொ ணாதநீ
மறையி லீறுமுன் றொடரொ ணாதநீ
யேனை நாடருந் தெரியொ ணாதநீ
யென்னை யின்னிதா யாண்டு கொண்டவா
வூனை நாடக மாடு வித்தவா
வுருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடக மாடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே.

வானம் நாடரும் அறி ஒணாத நீ
மறையில் ஈறும் முன்தொடர் ஒணாத நீ
ஏனை நாடரும் தெரி ஒணாத நீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா

பூரணப் பொருளை அந்தர்முக தியானத்தில் அனுபூதியில் அறிகிற ஞானிக்கு இன்பமும் துன்பமும் இல்லை.

மனிதன் உண்மையில் ஆத்ம சொரூபம். அவன் உடல் சொரூபம் அல்லன். தன்னைத் தேகம் என்று கருதுகிறவனுக்குப் பிறப்பு இறப்பு உண்டு; நலனும் கேடும் உண்டு; இவைகளை முன்னிட்டு வருகிற இன்பமும் துன்பமும் உண்டு. உடலில் உண்டாகிற விகாரங்களே இன்ப துன்பங்களுக்கு முகாமையாகின்றன. ஆனால் ஆத்மாவோ விகாரமற்றது. இவ்வுலக சம்பந்தமான இன்பதுன்பங்கள் ஆத்மனை வந்து சார்வதில்லை.

ஊனை நாடகம் ஆடுவித்தவா
உருகி நான் உனைப் பருக வைத்தவா
ஞானம் நாடகம் ஆடுவித்தவா
நைய வையகத்து உடைய விச்சையே.

மறையில் ஈறும்-உபநிஷதங்களும். முன்-அனுதியாக. ஊனை-உடம்பினை. நாடகம் ஆடுவித்தவா-சிவசேவை செய்வித்தவனே. நைய-நீங்குதற்கு. விச்சை-அறிவு.

தேவர்கள் உன்னை அறிந்துகொள்ள மாட்டார்கள். உபநிஷதங்கள் அன்றும், இன்றும் என்றுமே உன்னை விளக்க மாட்டா. மற்ற ஜீவர்களும் உன்னை அறிந்துகொள்ள மாட்டார்கள். உன்னை அறிதற்கு என்னை நீ இனிது ஆட்கொண்டாய். என்னைப் பக்குவப் படுத்துதற்குச் சிவசேவையில் என்னை ஈடுபடுத்தினுய். பக்தியில் நான் உருகிப் பரவசமடைந்து உனது சொரூபத்தில் திளைத்திருக்க வைத்தாய். ஞான விசாரம் என்னிடத்து ஓங்குமாறு நீ அனுக்கிரகம் செய்தாய். அதன் விளைவாக என்னிடத்திருந்த அபரஞானம் பரஞானமாக மாறிவிட்டது.

ஜீவபோதம் படைத்திருப்பவர்கள் யாருமே அகண்ட வஸ்துவாகிய பரம்பொருளை அறிந்துகொள்ளமாட்டார்கள். கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய சாதனங்களைத் தீவிரமாக அனுஷ்டிப்பவர்களுக்கு அபர ஞானம் பரஞானமாக விகசிக்கிறது. ஆங்கு ஜீவதசை எஞ்சியிருப்பதில்லை. பரஞானமோ ஆனந்தாதீதமாகிறது.

உபநி—53. பக்கம் 357ல் காண்க.

96. விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலிற்

உபநிஷத் மந்த்ரம் — 63

नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः ।
नाशान्तमानसो वापि प्रज्ञानेनैनमाप्नुयात् ॥

நாவிரதோ துஸ்சரிதான்னுசாந்தோ நாஸமாஹித: ।
நாசாந்தமானஸோ வாபி ப்ரக்ஞானேனைனமாப்னுயாத் ॥

(கடோபநிஷதம் 2 24)

பிச்ச ஞக்கிஞய் பெரிய வன்பருக்
குரிய ஞக்கிஞய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
நானு மங்ஙனே யுடைய நாதனே.

விச்சு அது இன்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்சகம் பெரும்
புலையனேனை உன்கோயில் வாயிலில்
பிச்சன் ஆக்கிஞய் பெரிய அன்பருக்கு
உரியன் ஆக்கிஞய் தாம் வளர்த்தது ஓர்
நச்சு மாமரம் ஆயினும் கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே.

விச்சு-வித்து. வைச்சு-நிலைபெறச் செய்து. வாங்குவாய்-ஒடுக்குவாய். பிச்சன்-பித்தன். நச்சு மாமரம்-நஞ்சு உடைய மரம். கொலார்-கொல்லார், வெட்டமாட்டார்கள்.

விண்ணுலகம், மண்ணுலகம் ஆகிய அண்டங்கள் அனைத்தையும் விதை விதைக்காமலேயே தோற்றுவிப்பாய். நிலைபெறச் செய்வாய், கரக்கவும் செய்வாய். உனக்கே உரிய நான் அந்தப் பிரபஞ்சத்துக்கு உரியவஞக என்னைச் செய்து கொண்டதிஞல் நான் வஞ்சகன். புலால் உடம்பை நான் என்று பாவிப்பதால் நான் புலையன். உடல் பற்று வைத்திருப்பதால் நான் உன் சொருபத்தில் கலக்க முடியாது. என்னைப் பக்குவப்

एनम् ஏனம் இந்த ஆத்மனை आप्नुयात् ஆப்னுயாத் அடைதல் प्रज्ञानेन अपि ப்ரக்ஞானேன அபி நுண்ணறிவு படைத்திருந்த போதிலும் दुश्चरितात् துஸ்சரிதாத் துராசாரத்தினின்று अविरतः न அவிரத: ந விலகாதவருக்கு இல்லை न अशान्तः ந அசாந்த: புலனடக்கம் செய்யாதவருக்கில்லை न असमाहितः ந அஸமாஹித: தியானம் பழகாதவர்க்கில்லை न वा अशान्तमानसः ந வா அசாந்தமானஸ. மனம் அடங்கப் பெருதவருக்கு இல்லை.

நுண்ணறிவு படைத்திருந்தாலும் இந்த ஆத்மனை அடையும் பேறு தீய ஒழுக்கத்திளின்று விலகாதவருக்கில்லை. புலனடக்கம் பெருதவருக்கில்லை, தியானம் பயிலாதவர்க்கில்லை, மனம் அடங்கப் பெருதவருக்கும் இல்லை.

படுத்துதற்கு உன் பொருட்டுப் பித்துப் பிடித்தவனுய் என்னை உன் கோயில் வாயிலில் வைத்தாய். உன் அன்பர்க்குத் தொண்டனுக வும் என்னை அமைத்துள்ளாய் இவையெல்லாம் உன் கருணை. உலகத்தவர் வளர்த்த மரம் நஞ்சாகிப் பயனற்றதாயினும் அதை, வெட்டிக் களைவதில்லை. அங்ஙனம் உன்னுல் உருவான என்னைப் புறக்கணித்து விடவேண்டாம்,

உலகப்பற்று வைத்துள்ள ஜீவாத்மாவுக்குத் தெய்வப்பற்று வருவதற்குத் தெய்வத்தின் கிருபை வேண்டும். அத்துடன் நல்லார் இணக்கமும் அவசியம்.

கால தேச நிமித்தம் (time space causation) ஆகிய முப்பாழுக்கும் அப்பாற்பட்டவன் பரம்பொருள். அவனுக்கு ஆதியும் அந்தமும் இல்லாததால் அவன் காலாதீதன். தான் யாண்டும் தன்மயமாயிருந்து கொண்டு தனது மாயா சக்தியால் அண்டங்களைத் தோற்றுவிக்கவும் ஒடுக்கவும் செய்வதால் அவன் தேசாதீதன். எச் செயலும் அவனை வந்து பாதிப்பதில்லை யாதலால் அவன் கர்மாதீதன், காரண-காரியாதீதன். அத்தகைய பரவஸ்துவே ஆனந்தாதீதனுய் உள்ளான்.

பிரக்ஞானம் என்னும் சொல் பரபிரம்மத்தைக் குறிக்கிறது. ஆனுல் ஈண்டு அது தெளிந்த நூல் அறிவு எனப் பொருள்படுகிறது. பரம்பொருளின் அனுபூதி பெறுதற்கு வெறு நூல் அறிவு போதாது. சதாசாரம் அல்லது நல்லொழுக்கமே வடிவெடுத்தவனுக சாதகன் இருக்க வேண்டும். நல்வாழ்வு வாழவேண்டும் என்னும் விரதத்தினின்று அவன் பிசகலாகாது. அவனுடைய பொறிகள் புலன்களில் ஆசைகொண்டு போகலாகாது. பரம்பொருள் சொருப தியானம் தீவிரமாகப் பழகவேண்டும். மனம் ஒடுங்கிய நிலையில் அவன் உறுதிபெற்று வரவேண்டும். பரவஸ்துவானது பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டது. ஆதலால் அதனேடு யோகம் ஆவதற்குப் பிரபஞ்ச நுகர்ச்சிக்கு ஏதுவான கருவி கரணங்களை ஒடுக்குதல் அவசியமாகிறது.

97. உடைய நாதனே போற்றி நின்னலாற்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
யுடைய னேபணி போற்றி யும்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
னடிய னாக்கினாய் போற்றி யாதியு
மந்த மாயினாய் போற்றி யப்பனே.

உடைய நாதனே போற்றி நின் அலால்
பற்று மற்று எனக்கு ஆவது ஒன்று இனி
உடையனே பணி போற்றி உம்பரார்
தம் பரா பரா போற்றி யாரினும்
கடையன் ஆயினேன் போற்றி என்பெரும்
கருணையாளனே போற்றி என்னை நின்
அடியன் ஆக்கினாய் போற்றி ஆதியும்
அந்தம் ஆயினாய் போற்றி அப்பனே.

பற்று-ஆதாரம். பணி-பகர்ந்தருள்வாயாக. உம்பரார்-தேவர்கள். பராபரா-மேலானவைகளுக்கெல்லாம் மேலானவனே. கடையன்-கீழ்ப்பட்டவன்.

நீ என்னை உடையவன் ஆதலால் எனக்கு உன்னையல்லாது வேறு ஆதாரம் ஏதேனும் உளதா, பகர்ந்தருள்வாயாக. தேவர்களுக்கெல்லாம் மேலாகிய மேலோனே, உன்னை வணங்குகின்றேன்; இனி யானே எவர்க்கும் கீழ்ப்பட்டவன். அத்தகைய என்னை உன் கருணையினால் அடிமையாக்கினாய். எனக்குத் துவக்கமும் முடிவும் நீயே. அப்பனே உன்னை நமஸ்கரிக்கிறேன்.

அலைக்குக் கடல் ஆதாரமாய் இருப்பதுபோன்று பரமாத்மாவானது ஜீவாத்மாவுக்கு ஆதாரமாயிருக்கிறது. அலையானது கடலில் தோன்றி கடலில் ஒடுங்குவது போன்று ஜீவாத்மா பரமாத்மாவில் தோன்றி அதனிடத்தே ஒடுங்குகிறது. ஜீவவியக்தியை இழக்கும் போது ஜீவாத்மன் ஆனந்தாதீதத்துக்குப் போகிறான்.

சிவபெருமான் பராபரனாய் இருப்பதால் அவன் ஒப்புஉயர்வு அற்றவன். அவன் அங்ஙனம் சர்வாதீத

ஞய் இருப்பதால் அவன் ஆனந்தாதீதஞயிருப்பதும் இயல்பே.

98. அப்ப னேயெனக் கமுத னேயா
னந்த னேயக நெகவள் ளூறுதே
ஞெப்ப னேயுனக் குரிய வன்பரி
லுரிய ஞயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கண் மன்னனே.

அப்பனே எனக்கு அமுதனே
ஆனந்தனே அகம் நெக அள்ஊறு தேன்
ஒப்பனே உனக்கு உரிய அன்பரில்
உரியவஞய் உனைப்பருக நின்றதுஓர்
துப்பனே சுடர் முடியனே துணையாளனே
தொழும்பாளர் எய்ப்பினில்
வைப்பனே என்னைவைப்பதோ சொலாய்
நைய வையகத்து எங்கள் மன்னனே.

அகம்நெக-உள்ளம் இளகும்படி. அள்ஊறு-வாய் ஊறுதற்கு முகாமையாயிருக்கிற. உரியஞய்-நானும் உரிமையாளஞகிய. பருக-அனுபவிக்க. துப்பனே-உணவாக உள்ளவனே. தொழும்பாளர்-தொண்டர்கள். எய்ப்பினில்-இளைத்த காலத்தில். வைப்பனே-உதவும் பொருளாக இருப்பவனே. நைய-வருந்தும்படி. வைய கத்து-உலக மாயையில்.

எனக்குத் தந்தையே, அமிர்தமே, ஆனந்தமே, உள்ளம் உருக வாய் ஊறுதற்கு ஏதுவாயுள்ள தேன் போன்றவனே, உனக்கு உரிமையுடைய மெய்யன்பரைப் போல நானும் உரிமையாளஞகி, உன்னைப் புசித்து உயிர் வாழ்வதற்கான ஒப்பற்ற உணவே, ஒளி விளங்கும் திருமுடியையுடையவனே, மாருத்துணையாயிருப்பவனே, தொண்டர்க்குத் தளர்வுற்றிருக்குங்கால் உதவும் செல்வமே. இப் பொய்யுலக வாழ்க்கையில் நான் துன்புற்றிருக்கும்படி வைப்பது முறையாகுமோ? எங்கள் அரசே, இயம்பாய்.

குழந்தைப் பருவம், யௌவனம், முதுமை ஆகியவைகள் முறையாக மனிதனுக்கு வருவது போன்று ஆத்ம சாதகனுக்கு துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகியவைகள் முறையாக வந்தமைகின்றன. ஈண்டு இயம்பப் பெற்றிருப்பது துவைதநிலை. இதில் இன்பதுன்பத்துக்கு இடமுண்டு. சாதனத்துக்கு இது பேருதவி புரிகிறது. சாதனத்தின் பெரும்பகுதி துவைதத்தில் நிகழ்கிறது. இன்பம் துன்பம் ஆகிய இருமை இதில் இடம் பெறுகின்றது. ஆதலால் ஆனந்தாதீதத்துக்கும் துவைத மதத்துக்கும் தொடர்வு இல்லை.

99. மன்ன வெம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன வெம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையு மிறுதி யுற்றநாள்
பின்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பெய்க ழற்கணன் பாயெ னுவினுற்
பன்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே.

மன்ன எம்பிரான் வருக என் எனை
மாலும் நான் முகத்து ஒருவன் யாரினும்
முன்ன எம்பிரான் வருக என் எனை
முழுதும் யாவையும் இறுதி உற்ற நாள்
பின்ன எம்பிரான் வருக என் எனைப்
பெய் கழற் கண் அன்பாய் என் நாவினால்
பன்ன எம்பிரான் வருக என் எனைப்
பாவ நாச நின்சீர்கள் பாடவே.

மன்ன-நிலைபேறுடைய. **முன்ன**-முதல்வனே. **இறுதி உற்ற நாள்**-நாசமடைந்த காலத்தில். **பின்ன**-பிந்தியிருப்பவனே. **பெய் கழற்கண்**-வீரக் கழலை அணிந்துள்ள உன் திருவடியின் கண். **பன்ன**-புகழ. **பாவநாச**-பாபங்களைப் போக்குபவனே. **சீர்கள்**-பெருமைகள்.

யாண்டும் நிலைபேறுடைய எங்கள் தலைவனே, அடியேனை வருகவென்று கட்டளையிடுவாயாக. விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்கும்

மூலப்பொருளே. என்னை வருகவென்று ஏற்றுக்கொள்வாயாக. சம்மார காலத்தில் எல்லாம் ஒடுங்கியிருக்கும் போதும், எஞ்சித் தன் மயமாயிருக்கும் எம் தலைவ, என்னை வருகவென்று அழைப்பாயாக. உன்னை வந்தடைந்தவர்களது பாபத்தைப் போக்குபவனே! நான் உன்னைப் புகழவும் உனது மகிமையைப் பாடவும் என்னை உன்னேடு சேர்த்துக்கொள்வாயாக.

இறைவனது விசிஷ்டாத்வைத நிலை ஈண்டு இயம்பப் படுகிறது. யாண்டும் தன்மயமாயுள்ள பரமன் அனைத்துக்கும் ஆதிமூலம். பேத அபேதமாக அனைத்தும் பரமனின் அம்சங்களாக அவனைச் சார்ந்திருக்கின்றன. இந்த நிலையை எட்டுகிற ஜீவனுக்குப் பாபமில்லை. அவன் பேரானந்தத்தில் திளைத்திருக்கிருன். சகுணப் பிரம்மம் ஈண்டுப் பாராட்டப்படுகிறது.

100\. பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடுநீக்கெனைப் போற்றி பொய்யெல்லாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

உபநிஷத் மந்த்ரம்—*64.*

ब्रह्मैवेदममृतं पुरस्ताद् ब्रह्म पश्चाद् ब्रह्म दक्षिणतश्चोत्तरेण ।
अधश्चोर्ध्वं च प्रसृतं ब्रह्मैवेदं विश्वमिदं वरिष्ठम् ॥

ப்ரஹ்மைவேதமம்ருதம் புரஸ்தாத் ப்ரஹ்ம பஸ்சாத்
ப்ரஹ்ம தக்ஷிணதஸ்சோத்தரேண ।
அதஸ்சோர்த்வம் ச பரஸ்ருதம் ப்ரஹ்மைவேதம்
விச்வமிதம் வரிஷ்டம் ॥

(முண்டகோபநிஷதம் 2-2-11)

इदं இதம் இதெல்லாம் अमृतम् ब्रह्म एव அம்ருதம் ப்ரஹ்ம ஏவ அழியாப் பொருளாகிய பிரம்மமே ब्रह्म पुरस्तात् ப்ரஹ்ம புரஸ்தாத் முன்புறம் இருப்பது பிரம்மம் ब्रह्म पश्चात् ப்ரஹ்ம

பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்து உருகி நெக்கு நெக்கு
ஆடவேண்டும் நான் போற்றி அம்பலத்து
ஆடும் நின் கழல்போது நாயினேன்
கூடவேண்டும் நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்குளைப் போற்றி பொய்எலாம்
வீடவேண்டும் நான் போற்றி வீடுதந்து
அருளு போற்றி நின்மெய்யர் மெய்யனே.

நைந்து நைந்து உருகி-மனம் அழிந்து அழிந்து கரைந்து. நெக்கு நெக்கு ஆடவேண்டும்-உடல் நெகிழ்ந்து நெகிழ்ந்து கூத்தாடவேண்டும். நின்கழல்போது-உன் திருவடித்தாமரை. இப்புழுக்கூடு-இந்த அற்ப உடல். பொய் எலாம் வீடவேண்டும்-அநித்தியமாகிய பிரகிருதித்தத்துவங்களை யெல்லாம் விட்டொழிக்க வேண்டும். மெய்யர் மெய்யனே-பரபோதத்தில் திளைத்திருப்பவர்க்கு உரிய பரம்பொருளே.

"சிவோஹம்" என்னும் கேவலாவஸ்தையில் நிலைபெற்றிருப்பவர்க்கு உரிய செம்பொருளே உனக்கு வணக்கம். உன்னைப்பற்றியே நான் பாடவேண்டும் மனம் நெகிழ்ந்து கரைந்து போம்படி பாடிப் பரவசமடைந்து நான் கூத்தாடவேண்டும். சிதாகாசத்தில் ஊர்த்தவ தாண்டவமாடும் உன் சொரூபத்தில் நான் ஒன்றுபட வேண்டும். உடலை நான் என்று உணரும் உணர்வுக்கு அதீதத்தில் நான் போவேனாக. பிரகிருதி தத்துவங்களுக்கு அப்பால் நான் போவேனாக. *"அஹம் பிரம்மாஸ்மி"* என்னும் விடுபேறு எனக்கு உரியதாகுக.

பஸ்சாத் பின்புறம் இருப்பது பிரம்மம் ब्रह्म दक्षिणतः ப்ரஹ்ம தக்ஷிணத: வலப்புறம் இருப்பது பிரம்மம் उत्तरेण च உத்தரேண ச இடப்புறம் இருப்பதும் பிரம்மம் अधः ऊर्ध्वम् च प्रसृतम् அத: ஊர்த்வம் ச ப்ரஸ்ருதம் கீழும் மேலும் வியாபித்திருப்பதும் பிரம்மம் इदम् विश्वम् இதம் விச்வம் இந்த அண்டம் वरिष्ठम् ब्रह्म एव வரிஷ்டம் ப்ரஹ்ம ஏவ பர பிரம்மமே.

இதெல்லாம் அழியாப் பொருளாகிய பிரம்மமே. முன்புறம் இருப்பது பிரம்மம், பின்புறம் இருப்பது பிரம்மம், வலப்புறம் இருப்பது பிரம்மம், இடப்புறம் இருப்பதும் பிரம்மம், கீழு மேலும் வியாபித்திருப்பதும் பிரம்மம். இந்த அண்டம் பரபிரம்மமே.

சிதம்பரத்துக்குப்போன ஜீவாத்மா திரும்பி வருவதில்லை என்னும் கோட்பாடு ஈண்டு நிறைவேறுகிறது. இது அத்வைத ஸித்தி, சிவனுரது ஊர்த்தவ தாண்டவம் பிரகிருதிக்கு அப்பாற்பட்டது. ஆதலால் அதுவே ஆனந்தாதீதம்.

உத்தரகோசமங்கையில் அருளிய

6. நீத்தல் விண்ணப்பம்

பிரபஞ்ச வைராக்கியம்

கட்டளைக் கலித்துறை

அநித்தியமாகிய பிரபஞ்சத்தில் பற்று வைத்திருக்கும் ஜீவாத்மாவுக்குச் சிவஞானம் கிட்டாது. உலகப் பற்றை நீத்தல் அல்லது துறத்தல் வேண்டும். சிவபெருமான் தாமே தியாகராஜனுகவும் ஸ்மசான வாசியாகவும் இருந்து துறவின் அவசியத்தை விளக்குகிருர். பிரகிருதி என்னும் மாயையை நீத்துப் பரமனைப் பறறிப் பிடிப்பது நல்ல ஆத்ம சாதனமாகிறது. ராகம் என்பது உலகின்கண் பற்று வைத்தல்: வைராக்கியம் என்பது உலகப் பற்றை ஒழித்தல்.

1. கடையவ னேனைக் கருணையி
ஞற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்ரே

பரதிருஷ்டி வரும்போது பிரபஞ்சம் என்னும் பொய்க் காட்சி மறைந்துபட்டுப் போகிறது. பாம்பாகத் தோன்றிக்கொண்டிருக்கிறபொழுதும் கயிறு கயிறே; அது பாம்பு அன்று. அங்ஙனம் பிரபஞ்சம் என்னும் பொய்க் காட்சி தென்படுகிறபொழுதும் அது உண்மையில் பரவஸ்துவே. பரம்பொருளுக்கு அன்னியமாகத் தென்படும் ஜகத்தும் ஜீவனும் வெறும் தோற்றமாம். இது அத்வைத நிலை.

லுடையவ னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி
ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

கடையவனேனைக் கருணையினால்
கலந்து ஆண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின்தோல்
உடையவனே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்
என்னைத் தாங்கிக்கொள்ளே.

விடையவனே - ரிஷபவாஹனனே. விட்டிடுதி - என்னைக் கைவிடாது காத்தருள்வாயாக. விறல்-வலிமையுடைய. மன்னும்-நிலைபெற்ற. சடையவனே-ஜடாபாரத்தை யுடையவனே.

ரிஷபவாஹனனே, புலித்தோல் அணிந்தவனே, ஜடாபார முடையவனே, கீழ்மையில் உழலும் என்னை உன் கருணையினால் அணைத்து ஆட்கொண்டாய். மீண்டும் நான் பிரபஞ்ச வாழ்க்கை யில் விழாதிருக்கும்படி என்னைத் தாங்கிக்கொள்வாயாக.

2. கொள்ளேர் பிளவக லாத்தடங்
கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளே னெனினும் விடுதிகண்
டாய்நின் விழுத்தொழும்பி
னுள்ளேன் புறமல்லே னுத்தர
கோசமங் கைக்கரசே
கள்ளே னொழியவுங் கண்டுகொண்
டாண்டதெக் காரணமே.

கொள்ஏர் பிளவு அகலாத் தடம்
கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளேன் எனினும் விடுதி கண்டாய்
நின்விழுத்தொழும்பின்

உள்ளேன் புறம் அல்லேன் உத்தர
கோசமங்கைக்கு அரசே
கள்ளேன் ஒழியவும் கண்டு கொண்டு
ஆண்டது எக்காரணமே.

ஏர்-அழகிய. கொள்பிளவு அகலா-கொள் என்ற தானியப் பருப்பு அளவு கூடப் பிளவுபடாத. தடம்-பெரிய. கொவ்வை-கோவைப்பழம். விள்ளேன் எனினும்-விடமாட்டேன் ஆயினும். விடுதி-கைவிட்டு விடுவாயோ? நின் விழுத்தொழும்பின் உள்ளேன்-உனது மிகப் பெரியதாகிய தொண்டில் ஈடுபட்டிருக்கிறேன். கள்ளேன்-திருடனாகிய நான். ஒழிய-உன்னைப் பிரிந்து நிற்க.

என்னை விட்டு இன்னும் காமநோய் அகலவில்லை. உனக்கு உரியவனாகிய என்னை நானே காமனிடத்தில் ஒப்படைத்ததால் நான் கள்ளன். அதை அறிந்திருந்தும் ஆண்டவா, என்னை நீ ஆட்கொண்டுள்ளாய். அதற்குக் காரணம் யாதோ? நானும் ஒருவாறு உன் சீரிய தொண்டில் ஈடுபட்டிருக்கிறேன். உன் அடியார்க்கு நான் வேற்றான் அல்லன். ஆதலால் என்னைப் பிரபஞ்சத்தில் விட்டு விடவேண்டாம்.

ஆழ்ந்த பிரார்த்தனை பிரபஞ்ச பாசத்தினின்று விடுபடுவதற்கு உற்றதோர் உபாயமாகும்.

3. காருறு கண்ணிய ரைம்புல
னாற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண்
டாய்விளங் குந்திருவா
ரூருறை வாய்மன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க
வென்னை வளர்ப்பவனே.

கார் உறு கண்ணியர் ஐம் புலன்
ஆற்றங்கரை மரமாய்
வேர் உறுவேனை விடுதி கண்டாய்
விளங்கும் திருவாரூர்
உறைவாய் மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
வார் உறு பூண் முலையாள் பங்க
என்னை வளர்ப்பவனே.

கார் உறு கண்ணியர்-அழகு பொருந்திய கண்களையுடைய மாதர். மன்றும்-நிலைபெற்றுள்ள. வார் உறு-கச்சு அணிந்த.

ஆற்றங்கரையில் வேர்பிடித்த மரம் வெள்ளத்தால் அரிப்புண்டு அழிவது திண்ணம். என் ஐம்பொறிகளும் காமநோயால் அரிப் புண்டு என்னை அழிக்கின்றன. என்னை நல்வழியில் வளர்ப்பதற் கென்றே மாது ஒருபாகம் ஆகியிருப்பவனே என்னை விட்டு விடாதே.

போகத்தை நாடுபவனுக்கு யோகம் இல்லை. இனி மாதர் போகத்துக்கு ஐம்பொறிகளும் உடந்தையாவ தால் அது சம்போகம் எனப்படுகிறது. ஆதலால் போகி அழிவது திண்ணம்.

உபநி—40, பக்கம் 313ல் காண்க.

4. வளர்கின்ற நின்கரு ணைக்கையில்
வாங்கவு நீங்கியிப்பான்
மிளிர்கின்ற வென்னை விடுதிகண்
டாய்வெண் மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்ற நீண்முடி யுத்தர
கோசமங் கைக்கரசே
தெளிகின்ற பொன்னு மின்னுமன்ன
தோற்றச் செழுஞ்சுடரே.

வளர்கின்ற நின் கருணைக் கையில்
வாங்கவும் நீங்கி இப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதிகண்டாய்
வெண் மதிக் கொழுந்து ஒன்று
ஒளிர்கின்ற நீள்முடி உத்தர
கோசமங்கைக்கு அரசே
தெளிகின்ற பொன்னும் மின்னும்
அன்ன தோற்றம் செழும் சுடரே.

வளர்கின்ற-பெருகிக்கொண்டே வருகிற. வாங்கவும்-வளைத் துப் பிடிக்கவும். நீங்கி-பிடிப்பினின்று விலகி. வெண்மதிக் கொழுந்து-பாலசந்திரன். நீள்முடி-நீண்ட ஜடை. மின்னும்-மின்ன லையும். அன்ன-ஒத்த. செழும் சுடரே-ஜோதியே.

சந்திரசேகரா, பொன்னையும் மின்னலையும் ஒத்த தேஜோமயனே, யாண்டும் கருணையில் வளர்ந்துகொண்டேயிருக்கிற நினது திருக்கரத்தால் என்னை வளைத்துப் பிடித்தும், நான் உன் பால் பிடிபடாமல் இப்பொய்யுலக வாழ்வில் முன்னேற்றம் அடைபவன் போன்று தென்படுகிறேன். ஆயினும் என்னை நீ கைவிட்டு விடாதே.

ஈசன் கருணை எப்பொழுதும் சுரந்துகொண்டே இருக்கிறது. அதைப் பயன்படுத்த ஜீவாத்மன் முன்வருவதில்லை. பிரபஞ்சப் பற்றே அதற்குக் காரணம்.

5. செழிகின்ற தீப்புகு விட்டிலிற்
சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற வென்னை விடுதிகண்
டாய்வெறி வாயறுகா
லுழுகின்ற பூமுடி யுத்தர
கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு
தூட்ட மறுத்தனனே.

செழிகின்ற தீப் புகு விட்டிலின்
சில் மொழியாரில் பல் நாள்
விழுகின்ற என்னை விடுதி கண்டாய்
வெறி வாய் அறுகால்
உழுகின்ற பூ முடி உத்தர
கோசமங்கைக்கு அரசே
வழிநின்று நின் அருள் ஆர்
அமுது ஊட்ட மறுத்தனனே.

செழிகின்ற தீ-வளர்கின்ற தீ. சில் மொழியாரில்-திருந்தாத மொழியையுடைய மாதரிடத்து. வெறிவாய்-மணம் பொருந்திய. அறுகால்-ஆறு கால்களை உடைய வண்டு. உழுகின்ற-கிளறுகின்ற வழிநின்று-வழியில் மறித்து நின்று.

வளர்கின்ற தீயில் விட்டில் பூச்சி வீழ்வது போன்று நான் காமக் கனலில் உழல்கிறேன். வண்டு மொய்க்கும் மணம் கமழும் பூவை முடியில் அணிந்திருக்கும் இறைவா, அத்தகைய என்னை நீ வழிமறித்து ஆட்கொண்டு, அருள் நிறைந்த அமிர்தத்தை

வழங்கினாய். நானோ அதை ஏற்க மறுத்தேன். ஆயினும் நீ என்னைக் கைவிட்டு விடாதே.

பிரபஞ்சப் பற்றுதல்களுள் காமம் என்னும் நோய் மிகக் கொடியது.

6. மறுத்தனன் யானுன் னருளறி
யாமையி லென்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண்
டாய்வினை யின்றொகுதி
யொறுத்தெனை யாண்டுகொ ளுத்தர
கோசமங் கைக்கரசே
பொறுப்ப ரன்றேபெரி யோர்சிறு
நாய்கடம் பொய்யினையே.

மறுத்தனன் யான் உன் அருள்
அறியாமையின் என்மணியே
வெறுத்து எனை நீ விட்டிடுதி கண்டாய்
வினையின் தொகுதி
ஒறுத்து எனை ஆண்டுகொள் உத்தர
கோசமங்கைக்கு அரசே
பொறுப்பர் அன்றே பெரியோர்
சிறு நாய்கள் தம் பொய்யினையே.

ஒறுத்து-கடிந்து. சிறு நாய்கள்-அறிவிலிகள்.

பெறுதற்கரிய மெய்ப்பொருளே, என் அறியாமையால் நான் உனது அருளைப் புறக்கணித்துவிட்டேன். அதனால் நீ என்னை வெறுத்துக் கைவிட்டுவிடுவாயோ? கைவிட்டுவிடாதே. ஜன்மாந்தரங்களில் நான் செய்த கர்மங்களை யெல்லாம் அகற்றி என்னை ஆண்டருள்வாயாக. பொய்யான பிரபஞ்சத்தை மெய்யென்று மயங்குகிற அக்ஞானிகளின் போக்கை மன்னிப்பது பெரியோர் செயல்.

உடலைத் தான் என்று எண்ணிச் சிறுமையுறுவோரைக் காப்பாற்றுவது இறைவன் அருளே.

உபநி—2, 13 முறையே பக்கங்கள் 102, 133ல் காண்க.

7\. பொய்யவ னேனைப் பொருளென
வாண்டொன்று பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண்
டாய்விட முண்மிடற்று
மையவ னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி
யேன்பவந் தீர்ப்பவனே.

பொய்யவனேனைப் பொருள் என ஆண்டு
ஒன்று பொத்திக்கொண்ட
மெய்யவனே விட்டிடுதி கண்டாய்
விடம் உண் மிடற்று
மையவனே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
செய்யவனே சிவனே
சிறியேன் பவம் தீர்ப்பவனே.

பொத்திக்கொண்ட-குறை நிலையை நிறைநிலையாக்கிய விடம் உண்-நஞ்சு உண்ட. மிடற்று-கண்டத்து. மையவனே-கருமையுடையவனே. செய்யவனே-சிவந்த நிறமுடையவனே. பவம்-பிறப்பு. தீர்ப்பவனே-ஒழிப்பவனே.

உயிர்களைக் காத்தல் பொருட்டு விஷம் உண்ட நீலகண்டனே, செம்மேனியனே, சிவனே, என் பிறவிப் பிணியை ஒழிப்பவனே, மாயப்பிரபஞ்சத்தில் மூழ்கிக்கிடந்த என்னிடத்து ஒரு பெரிய சீர் திருத்தத்தைக் கொண்டுவந்த மெய்ப்பொருளே, என்னை விட்டுவிட வேண்டாம்.

கருணாகரனிடத்துப் பிரார்த்தனை பண்ணுவது சிறந்த ஆத்மசாதனமாகிறது.

8\. தீர்க்கின்ற வாறென் பிழையைநின்
சீரரு ளென்கொலென்று

உபநிஷத் மந்த்ரம்—66.

प्रशान्तात्मा विगतभीर्ब्रह्मचारिव्रते स्थितः ।
मनः संयम्य मच्चित्तो युक्त आसीत मत्परः ॥

வேர்க்கின்ற வென்னை விடுதிகண்
டாய்விர வார்வெருவ
வார்க்கின்ற தார்விடை யுத்தர
கோசமங் கைக்கரசே
யீர்க்கின்ற வஞ்சொடச் சம்வினை
யேனை யிருதலையே.

தீர்க்கின்ற ஆறு என் பிழையை
நின் சீர் அருள் என்கொல் என்று
வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய்
விரவார் வெருவ
ஆர்க்கின்ற தார் விடை உத்தர
கோசமங்கைக்கு அரசே
ஈர்க்கின்ற அஞ்சொடு அச்சம்
வினையேனை இருதலையே.

தீர்க்கின்ற ஆறு-பொறுக்கும் விதம். நின்சீர் அருள்-உன் சிறந்த அருளானது. வேர்க்கின்ற-மனம் புழுங்குகின்ற. விரவார்-பகைவர். வெருவ-அஞ்சும் வண்ணம். ஆர்க்கின்ற-ஒலிக்கின்ற. தார்-கிண்கிணிமாலை. விடை-ரிஷபம். ஈர்க்கின்ற-இழுக்கின்ற. அஞ்சொடு-ஐம்பொறிகளோடு. இருதலை-இரண்டு பக்கத்திலும்.

ப்ரசாந்தாத்மா விகதபீர்ப்ரஹ்மசாரிவ்ரதே ஸ்தித: ।
மன: ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆசீத மத்பர: ॥

(பகவத்கீதோபநிஷதம் 6.14)

प्रशान्तात्मा ப்ரசாந்தாத்மா அமைதியான உள்ளத்தை உடையவன் विगतभी: விகதபீ: பயம் நீங்கியவன் ब्रह्मचारिव्रते ப்ரஹ்மசாரி வ்ரதே பிரம்மச்சாரி விரதத்தில் स्थित: ஸ்தித: நிலைபெற்றவன் मन: மன: மனதை संयम्य ஸம்யம்ய அடக்கி मच्चित्त: மச்சித்த: சித்தத்தை என்பால் வைத்தவன் मत्पर: மத்பர: என்னையே குறிக்கோளாகக் கொண்டவன் युक्त: யுக்த: யோக முயற்சியுடையவனாக आसीत ஆஸீத அமர்ந்திருக்கவேண்டும்.

உள்ளம் அமைதிபெற்று, அச்சத்தையகற்றி, பிரம்மசரிய விரதம் காத்து, மனதை யடக்கி, சித்தத்தை என்பால் இசைத்து,

ரிஷபவாஹனனே, உன் காளையினது கழுத்தில் அணிந்திருக்கிற கிண்கிணிமாலையின் ஒலியே பகைவர்களைப் பயமுறுத்தி ஓட்டுகிறது. ஐம்பொறிகள் என்னைச் சிறுநெறியில் இழுக்கின்றன. பொறிவழி செல்லலாகாது என்னும் பயம் என்னை மற்றொரு பக்கம் இழுக்கிறது. இரு விதத்திலும் பிழை செய்கிற என்னை நீ எங்ஙனம் பொறுத்தருள்வாய் என்று நான் மனம் புழுங்கியிருக்கிறேன். அத்தகைய என்னை நீ கைவிட்டு விடுவாயோ?

இந்திரியங்களுக்கு வசப்படுகிறவன் சிறுமை படைகிருன். அஞ்சுபவனும் சிறுமையடைகிருன். ஜிதேந்திரியன் அல்லது ஐம்பொறிகளை வென்றவன் ஆவதும் அபயத்தில் நிலைபெற்றிருப்பதும் ஆத்ம சாதனத்துக்கு இன்றியமையாத கோட்பாடாகும்.

9. இருதலைக் கொள்ளியி னுள்ளெறும்
 பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண்
 டாய்வியன் மூவுலகுக்

என்னைக் குறியாகக் கொண்டு, சாதகன் யோகத்தில் அமர்ந்திருக்கவேண்டும்.

தேங்கிய தடாகம் போன்று மனது தெளிவும்அமைதியும் அடையப்பெறுமிடத்து அது பிரசாந்தாத்மா எனப்படுகிறது. அந்த அமைதியில் வீரமும் சேர்ந்திருக்கிறபடியால் அச்சத்துக்கு ஆங்கு இடமில்லை. சிற்றின்ப போகம் எதிலும் ஈடுபடாதிருப்பது பிரம்மசரிய விரதம். குருவுக்கும் உலகுக்கும் சேவைபுரிவதன் மூலம் மனதினின்று காம எண்ணங்கள் அடியோடு அகற்றப்படுகின்றன. அதன் பிறகு மனதை அடக்குதல் எளிதாகிறது. அடங்கிய மனதில் ஈசுவரனைப்பற்றிய எண்ணமே குடிகொண்டு விடுமானுல் கீழான எண்ணங்கள் ஆங்குத் தலையெடுக்கமாட்டா. ஈசுவரன் ஒருவனே ஒப்பற்ற பொருள் என்றும், அவனை அடைதலே வாழ்வின் முடிவான நோக்கம் என்றும் கருதியிருப்பவன் நல்ல யோகியாகிருன்.

கொருதலை வாமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வல
னேந்திப் பொலிபவனே.

இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து
நினைப் பிரிந்த
விரிதலையேனை விடுதி கண்டாய்
வியன் மூவுலகுக்கு
ஒரு தலைவா மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
பொரு தலை மூவிலைவேல்
வலன் ஏந்திப் பொலிபவனே.

விரிதலையேனை-அழிந்து தலைவிரிகோலத்தில் இடர்ப்படுகின்ற என்னை. வியன்-அகன்ற. பொரு-போர் செய்தற்குரிய. தலை-நுனி. மூவிலை வேல்-திரிசூலம். வலன் ஏந்தி-வெற்றியுடன் தாங்கி. பொலிபவனே-விளங்குபவனே.

அகன்ற மூவுலகுக்கும் ஒப்பற்ற தலைவா, போரில் திரிசூலத்தை வெற்றியுடன் கையாளுபவனே, இருபக்கமும் தீப்பற்றி யெரிகிற கொள்ளியின் உள்ளே அகப்பட்டுக்கொண்ட எறும்பு போன்று உன்னைப் பிரிந்துள்ள நான் தலைவிரிந்த கோலத்தோடு தவிக்கிறேன். அத்தகைய என்னை நீ விட்டு விடுவாயோ ?

புறத்தில் மூவுலகமாயிருப்பது பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம். அகத்தில் மூவுலகமாயிருப்பது ஜாக்கிரதம், சொப்பனம், சுஷுப்தி. சுத்த சைதன்யமாகிய சிவம் இம்மூவுலகுக்கும் மேலானது. மூவுலகை அது தாங்கிக்கொண்டும் இருக்கிறது. கூர்மையான திரிசூலம் ஞானத்தின் சின்னமாகும். அக்ஞானம் என்னும் எதிரியைத் தாக்கி வீழ்த்துதலில் அதற்கு யாண்டும் வெற்றியுண்டு. ஞானோதயத்தில் பயம் அகலுகிறது; ஐம்பொறிகளின் வேகம் அடங்குகிறது.

10. பொலிகின்ற நின்றாள் புகுதப்பெற்
றாக்கையைப்போக் கப்பெற்று

மெலிகின்ற வென்னை விடுதிகண்
டாயளி தேர்விளரி
யொலிநின்ற பூம்பொழி லுத்தர
கோசமங் கைக்கரசே
வலிநின்ற திண்சிலை யாலெரித்
தாய்புர மாறுபட்டே.

பொலிகின்ற நின் தாள் புகுதப்பெற்று
ஆக்கையைப் போக்கப் பெற்று
மெலிகின்ற என்னை விடுதி கண்டாய்
அளி தேர் விளரி
ஒலி நின்ற பூம் பொழில் உத்தர
கோசமங்கைக்கு அரசே
வலி நின்ற திண் சிலையால்
எரித்தாய் புரம் மாறுபட்டே.

பொலிகின்ற - தேஜோமயமான. ஆக்கையைப் போக்கப் பெற்று-உடலை நான் என்று உணரும் உணர்வைக் கடந்து. அளி-வண்டு. தேர்-ஆராய்ந்து பாடுகிற. விளரி-ஒருவகை இசை. பூம் பொழில்-பூஞ்சோலை. வலிநின்ற-வலிமை பொருந்திய. திண்சிலை யால்-திடமான வில்லினால். புரம்-முப்புரம். மாறுபட்டு-பகைத்து.

உனது உறைவிடமாகிய உத்தரகோசமங்கையில் உள்ள பூஞ் சோலைகளில் வண்டுகள் விளரி என்னும் இசையை ஆராய்ந் தெடுத்துப் பாடுகின்றன. வலிமை பொருந்திய மஹாமேரு மலை யைத் திடமான வில்லாகக்கொண்டு நீ பகைத்த திரிபுரத்தைத் தகனம் செய்தாய். உடல் உணர்வைப் போக்கி உனது சித்சொரு பத்தில் திளைத்திருக்க வேண்டிய நான் இன்னும் உடல் வாழ்க்கை யிலேயே சிறுமையுற்றுக் கிடக்கின்றேன். ஆயினும் நீ என்னைக் கைவிடாதே.

திரிபுர சம்மாரம் கதை எண் 3, பக்கம் 95ல் காண்க. தேகாத்ம புத்தியைத் தாண்டி பரபோதம் அடையப் பெறும் ஆத்ம சாதகன் தன்பால் உள்ள திரிபுரத்தைச் சம்மாரம் செய்பவன் ஆகிறான்.

11. மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப
யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண்
டாய்வினை யேன்மனத்தே

ஊறுமட்டே மன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும்பொன்
மேனி நெடுந்தகையே.

மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப
யான் உன் மணி மலர்த் தாள்
வேறுபட்டேனை விடுதி கண்டாய்
வினையேன் மனத்தே
ஊறும் மட்டே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
நீறு பட்டே ஒளி காட்டும்
பொன் மேனி நெடுந்தகையே.

அஞ்சு-ஐம்பொறிகள். ஊறும்மட்டே - சுரக்கின்ற தேனே. நீறுபட்டு-திருநீறு பூசப்பட்டு. நெடுந்தகையே-பேரருளாளனே.

கர்மசொரூபியாகிய எனது மனதில் சுரக்கின்ற தேனே, திருநீறு பூசப்பெற்றுப் பிரகாசிக்கின்ற பொன்போன்ற மேனியையுடைய கருணாகரனே, மெய்ப்பொருள் காட்சியைத் திரிவுபடுத்துகிற ஐம்பொறிகளில் கட்டுண்டிருப்பதால் உனது சுயஞ்ஜோதி சொரூபத்தை சுவானுபவத்தில் பெற இயலாது நான் உனக்கு வேறுபட்டவனாயிருக்கிறேன். அதனால் நீ என்னைப் புறக்கணிப்பது பொருந்துமா?

பரம்பொருள் எனப்படுவது ஐம்பொறிகளுக்கு அப்பாற்பட்டது. அதே பொருள் ஐம்பொறிகள் வாயிலாகப் புலனாகும்போது பிரபஞ்சம் எனப்படுகிறது.

உபநி—60. பக்கம் 381ல் காண்க.

12. நெடுந்தகைநீ யென்னையாட் கொள்ளயா
னைம்புலன் கள்கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண்
டாய்விர வார்வெருவ
வடுந்தகை வேல்வல்ல வுத்தர
கோசமங் கைக்கரசே
கடுந்தகை யேனுண்ணுந் தெண்ணீ
ரமுதப் பெருங்கடலே.

நெடுந்தகை நீ என்னை ஆட்கொள்ள யான்
ஐம்புலன்கள் கொண்டு
விடும் தகையேனை விடுதி கண்டாய்
விரவார் வெருவ
அடும் தகை வேல் வல்ல உத்தர
கோசமங்கைக்கு அரசே
கடும் தகையேன் உண்ணும் தெள் நீர்
அமுதம் பெருங் கடலே.

விடும் தகையேனை-உன்னை விட்டுப் பிரிகிற தன்மையுடைய என்னை. விரவார்-பகைவர். வெருவ-அஞ்சும்படி. அடும்தகை வேல்-கொல்லும் தன்மையுள்ள சூலாயுதம். வல்ல-திறமையுடைய. கடும் தகையேன்-மிகத் தளர்வுற்றிருக்கிற நான்.

அக்ஞானம் என்னும் பகைமையை மாய்க்கவல்ல சூலாயு தத்தையுடையவனே, தளர்வுற்றுக் கிடக்கும் நான் பருகும் தெளி நீர் போன்ற அமிர்த சாகரமே, நீ கருணாகரனாயிருந்து என்னை ஆட் கொண்டாய் எனினும் நான் பொறி வழியே சென்று உன்னைப் பிரிந்திருக்கிறேன். ஆயினும் நீ என்னை விட்டு விடாதே.

நான் அறிவிலி எனினும், கல்நெஞ்சக்காரன் எனி னும் நீ என்னைக் காப்பாற்றி யருள்வாயாக.

13. கடலினுள் நாய்நக்கி யாங்குன்
கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண்
டாய்விட லில்லடியா
ருடலில மேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
மடலின்மட் டேமணி யேயமு
தேயென் மதுவெள்ளமே.

கடலில் நாய் நக்கி ஆங்கு உன்
கருணைக் கடலின் உள்ளம்
விடல் அரியேனை விடுதி கண்டாய்
விடல் இல் அடியார்

உடல் இலமே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
மடலின் மட்டே மணியே அமுதே
என் மது வெள்ளமே.

நக்கியாங்கு-நக்குவது போன்று. விடல் அரியேனை-செலுத்த இயலாத உன்னை. விடல் இல் அடியார்-விடாது உறுதியாகப் பிடிக்கின்ற அடியவர்கள். உடல் இலமே-உடலை இல்லமாகக் கொண்டவனே. மடலின் மட்டே-பூவிதழில் சுரக்கும் தேனே. மது வெள்ளமே-தேன் பெருக்கே.

உன்னை விடாது பற்றிப் பிடிக்கும் அன்பர்களது உடலை ஆலயமாகக் கொண்டவனே, பூவிதழில் சுரக்கும் தேனே, தேஜோமயனே, அமிர்தமே, எனக்குரிய தேன் கடலே, கடலில் நாய் நக்குவது போன்று உனது அகண்டாகாரக் கருணையை நான் நன்கு பயன் படுத்தத் தெரியாதவன். உன்பால் என் உள்ளத்தைச் செலுத்த எனக்கு இயலவில்லை. ஆயினும் நீ என்னை ஒருபோதும் கைவிட்டு விடாதே.

கடல்போன்று ஏராளமாகக் கூழ் அகப்பட்டவிடத்தும் அதைச் சிறிது சிறிதாக நக்குவது நாயின் இயல்பு. அங்ஙனம் ஆண்டவன் அருள் அளப்பரியவாறு அமைந்திருக்கிறது எனினும் பக்குவமடையாத ஜீவாத்மன் அதை முறையாகப் பயன்படுத்துவதில்லை; சித்தத்தைச் சிவன்பால் சரியாக அவன் செலுத்துவதுமில்லை. இதுவே ஜீவாத்மனிடத்துள்ள குறைபாடு.

உபநி—13. பக்கம் 133ல் காண்க.

14. வெள்ளத்து ளுவற்றி யாங்குன்
னருள்பெற்றுத் துன்பத்தின்றும்
விள்ளக் கிலேனை விடுதிகண்
டாய்விரும் புமடியா
ருள்ளத்துள் ளாய்மன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களி
யாத களியெனக்கே.

வெள்ளத்துள் நா வற்றியாங்கு உன்
அருள் பெற்றுத் துன்பத்து இன்றும்
விள்ளக்கிலேனை விடுதி கண்டாய்
விரும்பும் அடியார்
உள்ளத்து உள்ளாய் மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
கள்ளத்து உளேற்கு அருளாய்
களியாத களி எனக்கே.

விள்ளக்கிலேனை-நீங்க இயலாத என்னை. கள்ளத்து உளேற்கு-பொறிகளில் கட்டுண்டு கிடக்கும் எனக்கு. களியாத களி-பேரானந்தம்.

நீர்ப்பெருக்கினுள் இருந்துகொண்டே நீர் பருகாமல் நாவுலர்ந்து வருந்துவதுபோல், உன் அருள் வெள்ளத்தைப் பெற்றும் துன்பத்தினின்று இப்பொழுதும் விலகிக்கொள்ள எனக்கு இயலவில்லை. ஆயினும் நீ என்னை ஒதுக்கிவிடாதே. உன்பால் பக்தி பண்ணுகிற பக்தர் உள்ளத்தில் நீ எப்பொழுதும் குடியிருக்கிறாய். பொறிகளில் கட்டுண்டு கிடக்கிற எனக்கு உன் பேரானந்தத்தைக் கொடுத்தருள்வாயாக.

பொறிகளைக்கொண்டு போகத்தை நாடுபவன் துன்பத்துக்கு ஆளாவது திண்ணம்.

15. களிவந்த சிந்தையொ டுன்கழல்
கண்டுங் கலந்தருள
வெளிவந்தி லேனை விடுதிகண்டாய்
மெய்ச்சுட ருக்கெல்லா
மொளிவந்த பூங்கழ லுத்தர
கோசமங் கைக்கரசே
யெளிவந்த வெந்தைபி ரானென்னை
யாளுடை யென்னப்பனே.

களிவந்த சிந்தையொடு உன் கழல்
கண்டும் கலந்தருள
வெளி வந்திலேனை விடுதி கண்டாய்
மெய்ச் சுடருக்கு எல்லாம்
ஒளிவந்த பூம் கழல் உத்தர
கோசமங்கைக்கு அரசே

எளிவந்த எந்தை பிரான் என்னை
ஆளுடை என் அப்பனே.

பிரகாசப் பொருள்கள் அனைத்துக்கும் மூலப் பிரகாசமே, யான்றும் எனக்கு அப்பனுயிருந்து என்னைக் காத்தருள்பவனே, என்னை உன்மயமாக்குவதற்கு நீ எழுந்தருளியதை நான் மகிழ்வோடு பார்த்தேன்; ஆனால் உன்னில் கலந்துகொள்ள உலகைவிட்டு வெளியேக நானே ஆயத்தமாயில்லை. அத்தகைய என்னை நீக்கிவிட நீ நினைவு கொள்ளாதே.

மனம் நலத்தை நாடுகிறது; ஆனல் தீய சம்ஸ்காரம் மனிதனைத் தலையெடுக்க விடுவதில்லை.

உபநி—14. பக்கம் 134ல் காண்க.

16. என்னையப் பாவஞ்ச லென்பவ
ரின்றிநின் றெய்த்தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண்
டாயுவமிக் கின்மெய்யே
யுன்னையொப் பாய்மன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
யன்னையொப் பாயெனக் கத்தனொப்
பாயென் னரும்பொருளே.

என்னை அப்பா அஞ்சல் என்பவர் இன்றி
நின்று எய்த்து அலைந்தேன்
மின்னை ஒப்பாய் விட்டிடுதி கண்டாய்
உவமிக்கின் மெய்யே
உன்னை ஒப்பாய் மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய்
என் அரும்பொருளே.

எய்த்து-இளைத்து. உவமிக்கின்-ஒத்துப் பார்க்குமிடத்து.

சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, மெய்ப்பொருளே, உனக்கு நீதான் நிகர் ஆவாய். எனக்குத் தாய் போன்றவனே, தந்தை போன்றவனே, என் அரும்பொருளே, என்னை இரக்கம் கொண்டு பார்த்து, 'அப்பா, நீ பயப்படாதே' என்று சொல்லுவார் இல்லாமையால்

நான் ஏங்கி நின்று இளைத்து அலைந்தேன். பரிதாபத்துக்குரிய என்னை நீ கைவிட்டு விடாதே.

ஈசனது உதவியை நாடி நிற்பது பக்தனது இயல்பு.

17. பொருளே தமியேன் புகலிட
மேநின் புகழிகழ்வார்
வெருளே யெனைவிட் டிடுதிகண்
டாய்மெய்ம்மை யார்விழுங்கு
மருளே யணிபொழி லுத்தர
கோசமங் கைக்கரசே
யிருளே வெளியே யிகபர
மாகி யிருந்தவனே.

பொருளே தமியேன் புகல் இடமே
நின் புகழ் இகழ்வார்
வெருளே எனை விட்டிடுதி கண்டாய்
மெய்ம்மையார் விழுங்கும்
அருளே அணி பொழில் உத்தர
கோசமங்கைக்கு அரசே
இருளே வெளியே இகம் பரம்
ஆகி இருந்தவனே.

தமியேன்-தனியனாகிய நான். **வெருளே**-அச்சம் உண்டுபண்ணும் பொருளே. **அணிபொழில்**-அழகிய சோலை.

யாண்டும் இருந்தபடி இருக்கிற மெய்ப்பொருளே, ஆதரவு அற்ற எனக்கு ஆதரவாயிருப்பவனே, உன்னை நிந்திப்பவர்க்கு அச்சமூட்டுபவனே, மெய்ப்பொருள் உணர்ந்த ஞானியர் அருந்தும் அருள்கனியே, அக்ஞான இருளும் ஞான வெளிச்சமும் ஆனவனே, பிரபஞ்சமாகவும் அதற்கு அதீதப் பொருளாகவும் இருப்பவனே என்னைப் புறக்கணித்துவிடாதே.

இறைவனோடு முறையாக இணக்கம் வைக்கத் தெரியாதவர்களுக்கு அவன் பயங்கர சொரூபியாக விளங்குகிறான். எல்லா முரண்பாடுகளுக்கும், வேறுபடுகிற நிலைகள் யாவுக்கும் உறைவிடம் ஈசன்.

உபநி—15. பக்கம் 138ல் காண்க.

18. இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொ
ளொற்றிவை யென்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண்
டாய்மிக்க நஞ்சமுதா
வருந்தின னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப்
பட்டு மடங்கினர்க்கே.

இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுக்கொள்
ஒற்றிவை என்னின் அல்லால்
விருந்தினனேனை விடுதி கண்டாய்
மிக்க நஞ்சு அமுதாய்
அருந்தினனே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
மருந்தினனே பிறவிப் பிணிப்பட்டு
மடங்கினர்க்கே.

விற்றுக்கொள்-விலைக்குக் கொடுத்துவிடு. ஒற்றிவை-அடைவு வை. விருந்தினனேனை-புதியவனான என்னை. மிக்க நஞ்சு-கொடிய விஷம். மடங்கினர்க்கே-ஒடுங்கிக் கிடந்தவர்களுக்கு.

கொடிய விஷத்தை அமிர்தமாக ஏற்றவனே, பிறவிப் பிணியில் முடங்கிக் கிடக்கின்றவர்களுக்கு அருமருந்தாயிருப்பவனே, என் முன் எழுந்தருளியிருந்து என்னை உனக்கே சொந்தமாக்கிக்கொள், விலைக்கு விற்றுக்கொள், அடைமானம் வை. இவ்வாறெல்லாம் சொல்லுவதன்றி வேறு நான் என்ன செய்யக்கடவேன்? உன் அருளுக்குப் புதியவனாய் வந்திருக்கும் என்னை வெறுமனே விட்டு விடவேண்டாம் என்பது ஒன்றே என் விண்ணப்பம்.

பரமாத்மாவுக்குப் புறம்பாக ஜீவாத்மாவுக்குத் தனி வியக்தி கிடையாது. பரமாத்மாவோடு ஸம்போகம் செய்யுமளவு ஜீவாத்மாவுக்கு சிரேயஸ் வாய்க்கிறது.

19. மடங்கவென் வல்வினைக் காட்டைநின்
மன்னருட் டீக்கொளுவும்

உபநிஷத் மந்த்ரம்—66

यथैधांसि समिद्धोऽग्निर्भस्मसात्कुरुतेऽर्जुन ।
ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा ॥

விடங்கவென் றன்னை விடுதிகண்
டாயென் பிறவியையவே
ரொடுங்களைந் தாண்டுகொ ளுத்தர
கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித்
தாய்வஞ்சிக் கொம்பினையே.

மடங்க என் வல் வினைக் காட்டை
நின் மன் அருள் தீக் கொளுவும்
விடங்க என் தன்னை விடுதி கண்டாய்
என் பிறவியை வேரொடும்
களைந்து ஆண்டுகொள் உத்தர
கோசமங்கைக்கு அரசே
கொடும் கரிக்குன்று உரித்து அஞ்சுவித்தாய்
வஞ்சிக் கொம்பினையே.

மடங்க-*அழியும்படி*. மன்-*நிலைபெற்ற*. தீக்கொளுவும்-*நெருப்பினால் எரிக்கின்ற*. விடங்க-*ஆண்மை நிறைந்த அழகனே* கொடும் கரிக்குன்று-*கொடுமையானதும் குன்று போன்றதுமான யானை* அஞ்சுவித்தாய்-*பயப்படும்படி செய்தாய்*. வஞ்சிக் கொம்பினை-*பிரப்பங்கொடி போன்ற உமாதேவியை*.

கொடியதும் குன்று போன்றதுமான யானையைக் கொன்று அதன் தோலை நீ உரித்த செயலைப் பார்த்து அம்பிகை பயந்து நடுக்கமுற்றாள். எனது கொடிய வினை காடு போன்றது. அதனை முழுதும் அழியும்படி உனது பேர் அருள் என்னும் ஞானக்கினியால் கொளுத்தி விடு. என் பிறவிப் பிணியை வேர் அறக் களைந்தருள்க. கட்டழகனே என்னை ஒருபொழுதும் கைவிட்டு விடாதே.

யதைதாம்ஸி ஸமித்தோऽக்னிர்பஸ்மஸாத்குருதேऽர்ஜுன ।
ஞானக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதே ததா ॥
(பகவத்கீதோபநிஷதம்—4-37)

अर्जुन அர்ஜுன அர்ஜுனா समिद्धः अग्निः ஸமித்த: அக்னி: சுடர்விட்டெரியும் தீயானது एधांसि ஏதாம்ஸி விறகுகளை यथा யதா எப்படி भस्मसात् कुरुते பஸ்மஸாத் குருதே சாம்பலாக்குகிறதோ तथा ததா அப்படியே ज्ञानाग्निः ஞானக்னி:

யானையின் வடிவெடுத்திருந்த கஜமுகன் என்ற அசுரனை அண்ணல் அழித்தது புராண வரலாறு ஆகும். அம்பிகை அதைப்பார்த்து அஞ்சியது பெண்ணியல்பை விளக்குவதாகும்.

வினையையும் பிறவியையும் போக்க வல்லது பர ஞானம் ஒன்றேயாம்.

20. கொம்பரில் லாக்கொடி போலல
மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண்
டாய்விண்ணர் நண்ணுகில்லா
வும்பருள் ளாய்மன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
யம்பர மேநில னேயனல்
காலொடப் பானவனே.

ஞானக்னியானது सर्वकर्माणि ஸர்வகர்மாணி எல்லாக் கர்மங் களையும் भस्मसात् कुरुते பஸ்மஸாத் குருதே சாம்பலாகச் செய்கிறது.

சுடர்விட்டெரியும் தீயானது விறகுகளைச் சாம்பலாக்குவது போன்று, அர்ஜுனா, ஞானக்கனல் கர்மங்களையெல்லாம் சாம்பலாக்கிவிடுகிறது.

பிராரப்த கர்மத்தைத் தவிர மற்றக் கர்மங்களெல்லாம் வெந்து போகின்றன. வெந்துபோன விதை பழைய வடிவத்தோடு இருப்பினும் அதை விதைத்தால் செடியாக முளைக்காது. அங்ஙனம் ஞானத் தீயானது கர்மங்களை அவித்துவிடுகிறது. பிராரப்த கர்மம் மட்டும் வேலை செய்யும் எனினும் அதற்கு வேகம் கிடையாது. சொப்பனத்தில் பயந்து எழுந்த ஒருவனுக்கு ஹிருதயம் துடிதுடிக்கிறது. எனினும் விழித்துக்கொண்ட பிறகு அதில் கேடு ஒன்றுமில்லை. அங்ஙனம் பிராரப்த கர்மமும் ஞானியை ஒன்றும் செய்யாது.

கொம்பர் இல்லாக் கொடிபோல்
அலமந்தனன் கோமளமே
வெம்புகின்றேனை விடுதி கண்டாய்
விண்ணார் நண்ணுகில்லா
உம்பர் உள்ளாய் மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
அம்பரமே நிலனே அனல் காலொடு
அப்பு ஆனவனே.

கொம்பர்-கொம்பு. அலமந்தனன் - மனம் சுழல்கின்றேன். கோமளமே-இளமையோடு கூடிய அழகே. வெம்புகின்றேனை-தவிக்கின்ற என்னை. விண்ணார் நண்ணுகில்லா-தேவர்களுக்கும் எட்டாத. உம்பர்-உயர்நிலையில். அம்பரமே-ஆகாசமே. அனல்-தீ. காலொடு-காற்றோடு. அப்பு-நீர்.

தேவர்களுக்கும் எட்டாத அந்தத்தில் இருக்கும் சித் ஆகாசனே, பஞ்ச பூதங்கள் ஆனவனே, யாண்டும் இளமை யோடு கூடிய அழகனே, பற்றிப்பிடித்து வளர்தற்குக் கொம்பு ஒன்றும் இல்லாத கொடி சுழல்வது போன்று நான் மனம் தடுமாறு கிறேன். தவிக்கின்ற என்னைக் காத்து அருள்வாயாக.

கடவுள் கோமளனாயிருப்பது போன்று அம்பிகை நித்திய யௌவனத்தோடு இருக்கிறாள்.

மனம் சாந்தியடைவது வாழ்வின் குறிக்கோள்.

21. ஆனைவெம் போரிற் குறுந்தூ
றெனப்புல னாலலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண்
டாய்வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலை
யுமமு தத்தையுமொத்
தூனையும் மென்பினை யும்உருக்
காநின்ற வொண்மையனே.

ஆனைவெம் போரில் குறும் தூறு எனப்
புலனால் அலைப்புண்டேனை
எந்தாய் விட்டிடுதி கண்டாய்
வினையேன் மனத்துத்

தேனையும் பாலையும் கன்னலையும்
அமுதத்தையும் ஒத்து
ஊனையும் என்பினையும் உருக்காநின்ற
ஒண்மையனே.

ஆனை வெம்போரில்-யானைபுரிகின்ற கொடிய யுத்தத்தில். குறும் தூறு-சிறு செடி. ஒண்மையனே-ஞானப் பிரகாசனே.

யானையானது கொடும்போர் புரியும்பொழுது சிறு செடி மிதியுண்டு அழிவது போன்று ஐம்புலன்களால் நான் அலைக்கழிக்கப் படுகிறேன். அதற்கு மாருக, ஞானப் பிரகாசனுகிய நீ, கர்மசொருபியாகிய என் உள்ளத்தினுள் தேன், பால், கருப்பஞ்சாறு, அமிர்தம் போன்று பேரானந்தப் பெருக்கெடுத்து ஒளிர்ந்து ஊனையும் எலும்பையும் உருக்கி என்னை உன்மயமாக்குவாயாக. பொறிகளின் ஆதிக்கத்தில் என்னை ஒரு பொழுதும் விட்டுவிடாதே.

போகத்தில் உருகுவது அழிவாகும். யோகத்தில் உருகுவது ஞானப் பேறு என்னும் ஆக்கமாகும்.

22. ஒண்மைய னேதிரு நீற்றையுத்
தூளித் தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண்
டாய்மெய் யடியவர்கட்
கண்மைய னேயென்றுஞ் சேயாய்
பிறர்க்கறி தற்கரிதாம்
பெண்மைய னேதொன்மை யாண்மைய
னேயலிப் பெற்றியனே.

ஒண்மையனே திருநீற்றை உத்தூளித்து
ஒளி மிளிரும்
வெண்மையனே விட்டிடுதி கண்டாய்
மெய் அடியவர்கட்கு
அண்மையனே என்றும் சேயாய் பிறர்க்கு
அறிதற்கு அரிது ஆம்
பெண்மையனே தொன்மை ஆண்மையனே
அலிப் பெற்றியனே.

உத்தூளித்து-பூசி. அண்மையனே-பக்கத்தில் இருப்பவனே, சேயாய்-எட்ட இருப்பவனே,

நியாகத்நின் சின்னமாகத் திருநீறு பூசித் திகழும் ஞானப்பிர காசனே, நீ தொண்டர் உள்ளத்தில் திகழ்கின்றாய்; மற்றவர்க்கு நீ புலப்படுவதில்லை. உன்னை முழுதும் யாரும் அறியார். பெண்ணாய், ஆணாய், அலியாய் இருப்பவன் நீயே. என்னைத் தகாதவன் என நீ தள்ளிவிடாதே.

வெந்து சாம்பலானதற்கு நிகராக உடலைக் கருதுவது ஒன்றே ஐம்பொறிகளை வெல்லுதற்கு உற்ற உபாயம். அதற்கு அறிகுறியாகத் திருநீறு பூசப்படுகிறது. உபநி--28. பக்கம் 198ல் காண்க.

23. பெற்றது கொண்டு பிழையே
பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண்
டாய்விடி லோகெடுவேன்
மற்றடி யேன்றன்னைத் தாங்குந
ரில்லையென் வாழ்முதலே
யுற்றடி யேன்மிகத் தேறிநின்
றேனெனக் குள்ளவனே.

பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச்
சுருக்கும் அன்பின்
வெற்று அடியேனை விடுதி கண்டாய்
விடிலோ கெடுவேன்
மற்று அடியேன் தன்னை தாங்குநர் இல்லை
என் வாழ் முதலே
உற்று அடியேன் மிகத் தேறி நின்றேன்
எனக்கு உள்ளவனே.

சுருக்கும் அன்பின்-குறைந்த அன்போடு கூடினமையால். வெற்று அடியேனை-அடியவன் போன்று வெறுமனே தென்படும்

உபநிஷத் மந்த்ரம்—67.

भोक्तारं यज्ञतपसां सर्वलोकमहेश्वरम् ।
सुहृदं सर्वभूतानां ज्ञात्वा मां शान्तिमृच्छति ॥

போக்தாரம் யக்ஞதபஸாம் ஸர்வலோகமஹேச்வரம் ।
ஸுஹ்ருதம் ஸர்வபூதானும் ஞாத்வா மாம் சாந்திம்ருச்சதி ॥

(பகவத்கீதோபநிஷதம் 5-29)

என்னை. தாங்குநர்-தாங்குவோர். வாழ்முதலே-வாழ்வுக்கு மூலாதாரமாயிருப்பவனே. உற்று-உன்னையடைந்து. தேறி-தெளிந்து. எனக்குஉள்ளவனே-என்னுள் யாண்டும் இருப்பவனே.

அருமையாகக் கிடைத்த மானுட சரீரத்தைக் கொண்டு பிரபஞ்ச வாழ்க்கையில் மிகைபட ஈடுபட்டுக் கடவுள் பக்தியைக் குறைத்துள்ள போலி பக்தனாகிய என்னை இறைவா, விட்டுவிடுவாயோ? ஒருவேளை விட்டுவிடுவாயாகில் நான் அழிந்து போவேன். பின்பு உன்னைத் தவிர எனக்கு வேறு ஆதாரம் ஒன்றுமில்லை. உன்னை முன்னிட்டே எனக்கு ஜீவப்பெற்றி வந்துள்ளது. உன்னைச் சார்ந்திருந்து உண்மையாவதற்கான தெளிந்த நிலையை அடையப் பெற்றேன். அந்தர்யாமியாயும் அடிப்படை வஸ்துவாயும் யாண்டும் நீ என்னுள் இருக்கிருய்.

கிடைப்பதற்கரிய மானுடப் பிறவியானது பிரபஞ்ச வாழ்வுக்காக அமைந்ததன்று. அலைக்குப் பிறப்பிடமாயும் ஆதாரமாயும் கடல் இருப்பதுபோன்று ஜீவாத்மனுக்குப்

यज्ञतपसां யக்ஞ தபஸாம் யக்ஞம், தபசு இவைகளை भोक्तारं போக்தாரம் அனுபவிப்பவன் என்றும் सर्वलोकमहेश्वरं ஸர்வலோக மஹேச்வரம் எல்லா லோகங்களுக்கும் ஈசுவரன் என்றும் सर्वभूतानां ஸர்வ பூதானாம் எல்லா உயிர்களினுடைய सुहृदं ஸுஹ்ருதம் நண்பன் என்றும் मां மாம் என்னை ज्ञात्वा ஞாத்வா அறிந்து शान्तिं சாந்திம் சாந்தியை ऋच्छति ருச்சதி அடைகிருன்.

யக்ஞம், தபசு இவைகளை அனுபவிப்பவனும், உலகனைத்துக்கும் ஈசனும், உயிர்களுக்கெல்லாம் நண்பனும் நான் என்று அறிபவன் சாந்தியடைகிருன்.

யாகம், தபசு இவைகளைச் செய்விக்கும் கர்த்தாவாயிருப்பவரும், இவைகள் வாயிலாக அடையப்பெறும் தேவதையாயிருப்பவரும் பரமாத்மனே. உலகம் முழுதையும் அவர் ஆளுகிருர். அப்படிச் செய்வதால் அவரிடத்து அன்பு இல்லாது போய்விடவில்லை. கைம்மாறு கருதாது எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்கிருர் அவர். எல்லாருடைய உள்ளத்திலும் மனசாக்ஷியாக வீற்றிருந்து அவரவர் கர்மத்துக்கு ஏற்ற பலனை அவர்

பிறப்பிடமாயும் இருப்பிடமாயும் கதியாயும் இருப்பது பரமாத்மா. பரமனைச் சார்பவனே பெருவாழ்வு வாழ்கிறான்.

24. உள்ளன வேநிற்க வில்லன
செய்யுமை யற்றுழனி
வெள்ளன லேனை விடுதிகண்
டாய்வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய்
புலனின்கட் போதலொட்டா
மெள்ளென வேமொய்க்கு நெய்க்குடந்
தன்னை யெறும்பெனவே.

உள்ளனவே நிற்க இல்லன
செய்யும் மையல் துழனி
வெள்ளன் அலேனை விடுதி கண்டாய்
வியன் மாத்தடக்கைப்
பொள்ளல் நல்வேழத்து உரியாய்
புலன் நின்கண் போதல் ஒட்டா
மெள்ளனவே மொய்க்கும் நெய்க்குடம்
தன்னை எறும்பு எனவே.

மையல்-மயக்கம். துழனி-பேரொலி. வெள்ளனலேனை-வெள்ளன்+அலேனை-கெட்டவனாகிய என்னை. வியன் மாத் தடக்கை-

---

எடுத்து வழங்குகிறார். செயலுக்குத் தலைவனாயிருப்பது போன்று அறிவுக்கும் அறிவாய் இலங்குகிறார் அவர். இவ்வுண்மையை அறிகின்றவர்களுக்கு மனச் சஞ்சலம் இல்லை. சாந்தி தானே வந்தமையும்.

உபநிஷத் மந்த்ரம்—68.

श्वोभावा मर्त्यस्य यदन्तकैतत् सर्वेन्द्रियाणां जरयन्ति तेजः ।
अपि सर्वं जीवितमल्पमेव......... ॥

ச்வோபாவா மர்த்யஸ்ய யதந்தகைதத் ஸர்வேந்த்ரி
யாணும் ஜரயந்தி தேஜ: ।
அபி ஸர்வம் ஜீவிதமல்பமேவ...... ॥

(கடோபநிஷதம் 1—26)

மிகவும் பெரிய நீண்ட துதிக்கை. பொள்ளல்-துவாரம். நல்வேழத்து உரியாய்-அழகிய யானையின் தோலை உடையோனே.

நீண்ட நாசித் துவாரத்தோடு கூடிய அழகிய யானையின் தோலை அணிந்திருப்பவனே, எறும்புகள் மோப்பத்தால் தேடிச் சென்று நெய்க்குடம் ஒன்றை மொய்ப்பதுபோன்று ஐம்பொறிகள் என்னை உன்னிடம் போக வொட்டாது தடுத்து என் உடலைத் தேய்க்கின்றன. அதற்கு உடந்தையாயிருக்கும் நான் மெய்ப் பொருள் நாட்டம் கொள்கிறேனில்லை. மயக்கத்துக்கு உட்பட்டுப் பொய்ம்மையானவற்றையே செய்து வீண்பேச்சைப் பெருக்கிக் கொண்டிருக்கிறேன். அப்படி எனக்குக் கேடு சூழும் என்னை நீ கைவிட்டுவிடுவாயோ?

தேகாத்மபுத்தியை அல்லது உடலைத் தான் என்ற உணர்வைத் தாண்டியிருப்பவன் ஆத்ம சாதகன் ஆகிறான். இதற்குச் சின்னமாகச் சிவனார் யானைத் தோல் போர்த்திருக்கிறார். ஐம்பொறிகளைச் சிவ சேவையிலேயே

अन्तक அந்தக கூற்றுவனே श्वोभावाः ச்வோபாவா: போகங்கள் யாவும் நிலையற்றவைகள் मर्त्यस्य सर्वेन्द्रियाणां மர்த்யஸ்ய ஸர்வேந்த்ரியாணும் மனிதனின் எல்லா இந்திரியங்களின் यत् तेजः யத் தேஜ: என்ன பொலிவோ அதை एतत् ஏதத் இந்த சுகபோகங்கள் जरयन्ति ஜரயந்தி தேய்க்கின்றன अपि அபி மேலும் सर्वं जीवितं ஸர்வம் ஜீவிதம் ஆயுள் முழுவதும் अल्पं एव அல்பம் ஏவ மிகக் குறைந்தது.

கூற்றுவனே, போகங்கள் யாவும் நிலையற்றவைகள். மனிதனுடைய இந்திரியங்களின் பொலிவையெல்லாம் அவை தேய்த்துத் தள்ளுகின்றன. மேலும் தீர்க்காயுள் என்பதும் மிக அற்பமானதே.

பஞ்சேந்திரியங்களால் அனுபவிக்கப்படுபவைகள் எல்லாம் போகங்கள் எனப்படுகின்றன. அவை யாவும் இன்பமாகத் துவங்கித் துன்பமாக முடிவுறுகின்றன. அந்த போகங்களில் ஈடுபடுமளவு மனிதன் இந்திரியங்களில் இயல்பாக அமைந்துள்ள பொலிவு மங்கித் தேய்கிறது. ஜீவர்களுள் நெடிது வாழ்ந்திருப்பவன் பிரம்ம தேவன். அவனது ஆயுள் கல்பம் எனப்படுகிறது.

பயன்படுத்துவது சாதனம். அப்படிப் பயன்படும் ஐம் பொறிகள் கேடு சூழமாட்டா. பின்பு அவைகள் போகத்தில் புகுமாகில் எறும்புகள் நெய்க்குடத்தை மொய்ப்பது போன்று அவைகள் ஆக்கையை அழிக்கின்றன.

25. எறும்பிடை நாங்கூ ழெனப்புல
 னலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண்
 டாய்வெய்ய கூற்றொடுங்க
வுறுங்கடிப் போதவை யேயுணர்
 வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய
 ராத பெருமையனே.

எறும்பிடை நாங்கூழ் எனப் புலனால்
 அரிப்புண்டு அலந்த
வெறும் தமியேனை விடுதிகண்டாய்
 வெய்ய கூற்று ஒடுங்க
உறும் கடிப்போது அவையே உணர்வு
 உற்றவர் உம்பர் உம்பர்
பெறும்பதமே அடியார் பெயராத
 பெருமையனே.

நாங்கூழ்-பூநாகம், நாகப்பூச்சி, நிலப்புழு. அலந்த-வருந்தின. வெய்ய கூற்று ஒடுங்க-கொடிய யமன் ஒடுங்கும்படி. உறும்-அவன் மேல் பாய்ந்த. கடிப்போது-மணமலர் போன்ற திருவடிகள். உணர்வு உற்றவர்-எண்ணி யெண்ணி அனுபூதியில் அறிந்தவர். உம்பர் உம்பர் பெறும்பதமே-தேவர்கள் பெறும் பேறுகளுக்கெல்லாம் மேலான மோக்ஷ சொருபியே. பெயராத-நிலைபெயராத.

மணமலர் போன்ற உன் திருவடிகள் கூற்றுவனைச் செயல் அற்றவனுக்க வல்லவைகள். அத்திருவடிகளிலேயே மனதை நிலை

அதீத நிலையோடு சீர்தூக்குமிடத்துக் கல்பமே ஒரு கணப்பொழுது போன்று முடிவுறுகிறது. ஆதலால் தங்களுடைய தீர்க்காயுளைக்குறித்து மக்கள் மகிழ்வுறவேண்டியதில்லை. கனவுபோன்று மண்ணுலக வாழ்வு விரைவில் அழிந்துபட்டுப்போம்.

நாட்டிய தேவர்களாலும் அடையப்பெருத மோக்ஷம் என்னும் உனது சிவ பதவியை அன்பர்கள் அடையப் பெற்றனர். உன்னை அடைந்தவர்களிடமிருந்து நழுவிப் போகாத பெரிய பொருளே, சிறுமையில் சிந்தையைச் செலுத்தியவன் நான், அதனல் நாங் கூழானது எறும்புகளால் அரிப்புறுவது போன்று நான் புலன் களால் அரிப்புண்டு அவதிப்படுகிறேன், என்னை நீ காப்பாற்றி யருள்க!

ஆத்ம சாதகனை எடுப்பதும் கெடுப்பதும் அவன் எண்ணுகிற எண்ணங்களேயாம். மேலான எண்ணங்கள் அவனை எடுக்கின்றன. புல்லிய எண்ணங்கள் அவனைக் கெடுக்கின்றன.

26. பெருநீ ரறச்சிறு மீன்றுவண்
டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதிகண்
டாய்வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுண் மலைச்சிறு
தோணி வடிவின் வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை
வானக்கொழுமணியே.

பெருநீர்அறச் சிறுமீன் துவண்டு
ஆங்கு நினைப் பிரிந்த
வெரு நீர்மையேனை விடுதி கண்டாய்
வியன் கங்கை பொங்கி
வரும் நீர்மடுவுள் மலைச்சிறு
தோணி வடிவின் வெள்ளைக்
குரு நீர் மதி பொதியும் சடை
வானம் கொழு மணியே.

துவண்டு ஆங்கு-துடித்தாற்போல, வெரு(வு) நீர்மையேனை-அஞ்சுகிற இயல்புடைய என்னை. வியன்-அகன்ற. மலை-தடுமாறும். குரு-நிறம். நீர்-நீர்மை, தன்மை. பொதியும்-தவழும். வானக் கொழு மணியே-சிதாகாசச் செழுஞ்சுடரே.

பெரிய கங்கை பொங்கி வரும்போது அதன் நீர்ப்பெருக்கில் தடுமாறுகிற தோணி போன்று தென்படுகிற வெள்ளை நிறத்தோடு திகழ்கிற திங்களை ஜடாபாரத்தில் தரித்திருக்கும் சிதாகாசச் செழுஞ்

சுடரே, (நான் விடுக்கும் விண்ணப்பங்கள்) மடுவில் உள்ள நீர் வற்றும் பொழுது சிறு மீன்கள் துடிப்பது போன்று அஞ்சும் தன்மையுடையவன் நான். அத்தகைய என்னை ஆபத்தில் விட்டு விடுவாயோ?

பிரபஞ்சவாழ்வு ஆபத்து நிறைந்தது; அச்சமூட்டக்கூடியது. அதில் வாழும் ஜீவாத்மனே அஞ்சும் தன்மையன்.

27. கொழுமணி யேர்நகை யார்கொங்கைக்
குன்றிடைச் சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண்டாய்
மெய்ம்முழு துங்கம்பித்
தழுமடி யாரிடை யார்த்துவைத்
தாட்கொண் டருளியென்னைக்
கழுமணி யேயின்னுங் காட்டுகண்
டாய்நின் புலன்கழலே.

கொழும்மணி ஏர் நகையார் கொங்கைக்
குன்றிடைச் சென்று குன்றி
விழும் அடியேனை விடுதி கண்டாய்
மெய்ம் முழுதும் கம்பித்து
அழும் அடியாரிடை ஆர்த்து வைத்து
ஆட்கொண்டருளி என்னைக்
கழுமணியே இன்னும் காட்டு கண்டாய்
நின் புலன் கழலே.

கொழுமணி-செழுமையான முத்து. ஏர் நகையார்-அழகிய பற்களையுடைய மாதர். கொங்கைக் குன்றிடை-குன்றுகள் போன்ற ஸ்தனங்கள் மீது. சென்று குன்றி விழும்-போய் அறிவிழந்து விழுகின்ற. கம்பித்து-நடுங்கி. ஆர்த்து-சேர்த்து. கழுமணியே-கழுவியெடுத்ததினால் மிளிரும் மாசிலாமணியே. புலன் கழல்-ஞானம் நல்கும் திருவடி.

மாதருடன் கலந்து சிற்றின்பம் துய்த்து அழிந்துபோம் அறிவிலியாகிய என்னைக் காப்பாற்றமாட்டாயா? அன்பால் உடல் முழுதும் நடுங்கி அழுகின்ற பக்தர்களோடு என்னைச் சேர்த்துவை. மாசிலாமணியே, உனது ஞான சொருபத்தை எனக்குக் காட்டியருள்க.

ஸத்சங்கம் காமநோய்க்கு நல்ல மருந்து.

28. புலன்கடி கைப்பிக்க யானுந்
திகைத்திங்கொர் பொய்ந்நெறிக்கே
விலங்குகின்றேனை விடுதிகண்
டாய்விண்ணு மண்ணுமெல்லாங்
கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய்
தாய்கரு ணாகரனே
துலங்குகின் றேனடி யேனுடை
யாயென் றொழுகுலமே.

புலன்கள் திகைப்பிக்க யானும் திகைத்து
இங்குஓர் பொய்ந் நெறிக்கே
விலங்குகின்றேனை விடுதி கண்டாய்
விண்ணும் மண்ணும் எல்லாம்
கலங்க முந்நீர் நஞ்சு அமுது செய்தாய்
கருணாகரனே
துலங்குகின்றேன் அடியேன் உடையாய்
என்தொழுகுலமே.

திகைத்து-பிரமித்து. விலங்குகின்றேனை-விலகிச் செல்கின்ற என்னை. கலங்க-அஞ்சி நடுங்க. முந்நீர்-ஊற்றுநீர், ஆற்று நீர், மழை நீர் ஆகிய மூன்று நீர் சேர்ந்து ஆகிய கடல். துலங்குகின்றேன்-துளங்குகின்றேன், நிலைகலங்குகின்றேன். தொழுகுலமே-இஷ்டமூர்த்தியே.

விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் ஆகிய எல்லாரும் அஞ்சி நடுங்கக்கண்டு நீ கடலில் கிளம்பிய நஞ்சை அமிர்தமாக ஏற்றாய். அத்தகைய கருணாகரனே, நிலை கலங்குகின்ற என்னையும் காத்தருள்க. நான் உனக்கே உரியவன். என்னை உடையவனாகிய நீ எனக்கு இஷ்டமூர்த்தி. உன்னையே சார்ந்திருக்கவேண்டிய நான் புலன்களினால் பிரமிக்கப்பட்டுப் பொய்ந் நெறியில் பிசகிப் போகிறேன். என்னை நீ காத்தருள வேண்டாவோ?

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்தும் புலன்கள். அவைகளில் மயக்குண்டு அவைகளை நாடி வழிமாறிப் போவது பொய்ந்நெறியாகும்.

29. குலங்களைந் தாய்களைந் தாயென்னைக்
குற்றங்கொற் றச்சிலையாம்
விலங்கலெந் தாய்விட் டிடுதிகண்
டாய்பொன்னின் மின்னுகொன்றை
யலங்கலந் தாமரை மேனியப்
பாவொப்பி லாதவனே
மலங்களைந் தாற்சுழல் வன்றயி
ரிற்பொரு மத்துறவே.

குலம்களைந்தாய் களைந்தாய் என்னைக்
குற்றம் கொற்றம் சிலை ஆம்
விலங்கல் எந்தாய் விட்டிடுதி கண்டாய்
பொன்னின் மின்னு கொன்றை
அலங்கல் அம் தாமரை மேனிஅப்பா
ஒப்பு இலாதவனே
மலங்கள் ஐந்தால் சுழல்வன் தயிரில்
பொரு மத்து உறவே.

குலம்-ஜீவபோதம். குற்றம்-உபாதி. கொற்றச்சிலை-வெற்றிவில். விலங்கல்-மேருமலை. அலங்கல்-மாலை. பொருமத்து உற-கடைகின்ற மத்தானது பொருந்தின அளவில்.

உபநிஷத் மந்த்ரம்—69.

असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम् ।
अभ्यासेन तु कौन्तेय वैराग्येण च गृह्यते ॥

அஸம்சயம் மஹாபாஹோ மனோ துர்நிக்ரஹம் சலம் ।
அப்யாஸேன து கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே ॥
(பகவத்கீதோபநிஷதம் 6-35)

महाबाहो மஹாபாஹோ நீண்ட கைகளையுடையவனே मनः மன: மனமானது दुर्निग्रहं துர்நிக்ரஹம் அடக்கமுடியாதது चलं சலம் அலைந்து திரிவது असंशयं அஸம்சயம் இதில் சந்தேகமில்லை तु து ஆனால் कौन्तेय கௌந்தேய குந்தியின் மைந்தா अभ्यासेन அப்யாஸேன அப்பியாசத்தாலும் वैराग्येण च வைராக்யேண ச வைராக்கியத்தாலும் गृह्यते க்ருஹ்யதே அடக்கப்படுகிறது.

பொன்போல மின்னுகிற கொன்றைமாலை யணிந்தவனே, அழகிய செந்தாமரை போன்ற திருமேனியையுடைய அப்பனே, உனக்கு நிகர் வேறு யாரும் இல்லாதவனே, கடைகின்ற மத்துப் பொருந்தியவுடனே தயிர் சுழல்வது போல, என்னைப் பற்றிய பாசங்கள் ஐந்தால் நான் அலைப்புண்டு வருந்துகிறேன். என்னுடைய உபாதிகளையெல்லாம் ஒழிக்கவல்லவனே, எனது ஜீவபோதத்தை அழிக்க வல்லவனே, மேரு மலையை வெற்றி வில்லாக உடையவனே, என்னைப் புறம்பே போக விட்டுவிடுவாயோ?

ஆணவம், கர்மம், மாயை, வைந்தவம், திரோதாயி ஆகியவைகளை ஐந்து மலங்களாகக் கருதுவது ஐதிகம். ஆனால் ஈண்டு ஐம்புலன்களையும் மலங்களாக வைத்துக் கொள்வது பொருந்தும். ஏனென்றால் அவைகள் ஜீவ போதத்தை வளர்ப்பனவாம்.

தடந்தோளாய், மனம் கட்டுப்படாதது, அலையும் தன்மையது என்பதில் ஐயமில்லை. எனினும் குந்தியின் மைந்தா, அப்பியாசத்தாலும் வைராக்கியத்தாலும் அதை அடக்கலாம்.

அப்பியாசம் என்பது பழக்கம். பழக்கத்தால் தன்னை எப்படி வேண்டுமானாலும் திருத்தியமைத்துக்கொள்ளலாம். அவரவர் பெற்றுள்ள பான்மை பழக்கத்தைப் பொறுத்தது. இடையறுப் பழக்கத்தால் எப்பான்மையை வேண்டுமானாலும் பெறலாம். நாடிய லட்சியத்தினிடத்து அல்லது வழிபடு தெய்வத்தினிடத்து மனதை அடிக்கடி திருப்புவது அப்பியாசமாகும். ஈசுவர தியானத்தை முறையாகச் செய்வது அப்பியாசம். எண்ணம் இறைவனைப்பற்றியதாகுமளவு மனது வெளி விஷயங்களில் செல்லாது ஒருமுகப்படும்.

வைராக்கியம் என்பது ராகமின்மை. புலன்களில் பற்றில்லாதிருப்பது வைராக்கியம். மனம் அடங்காது ஓடுதற்குக் காரணம் யாது என்று விசாரித்துப் பார்த்தால் அது எப்பொழுதாவது எதனிடத்தாவது பற்று வைத்திருந்தால் அப்பொருளையே அது நாடியலைகிறது என்பது விளங்கும். இந்திரிய விஷயங்களிலுள்ள கேடுகளை மனதுக்கு ஞாபகமூட்டி அதை அவைகளிடத்திருந்து மீட்டெடுப்பது வைராக்கியமாம்.

30. மத்துறு தண்டயி ரிற்புலன்
தீக்கது வக்கலங்கி
வித்துறு வேனே விடுதிகண்
டாய்வெண் டலேமிலேச்சிக்
கொத்துறு போது மிலேந்து
குடர்நெடு மாலேசுற்றித்
தத்துறு நீறுட ஞரச்செஞ்
சாந்தணி சச்சையனே.

மத்துஉறு தண் தயிரின் புலன்
தீக் கதுவக் கலங்கி
வித்து உறுவேனே விடுதி கண்டாய்
வெண்தலே மிலேச்சிக்
கொத்துஉறு போது மிலேந்து
குடர் நெடுமாலே சுற்றித்
தத்துஉறு நீறுடன் ஆரச்'செம்
சாந்துஅணி சச்சையனே.

உபநிஷத் மந்த்ரம் — 70

परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो निर्वेदमायान्नास्त्यकृतः कृतेन ।
तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत् समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ॥

பரீக்ஷ்ய லோகான் கர்மசிதான் ப்ராஹ்மணோ
நிர்வேதமாயான்னுஸ்த்யக்ருத: க்ருதேன ।
தத்விக்ஞானர்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்
ஸமித்பாணி: ச்ரோத்திரியம் ப்ரஹ்மநிஷ்டம் ॥

(முண்டகோபநிஷதம்1-2-12)

ब्राह्मणः ப்ராஹ்மண: பிரம்மஞானத்தை நாடுகிறவன் कर्मचितान् लोकान् கர்மசிதான் லோகான் கர்மத்தைக்கொண்டு அடைகிற உலகங்களே परीक्ष्य பரீக்ஷ்ய ஆராய்ந்து பார்த்து निर्वेदम् நிர்வேதம் நாட்டமின்மையை आयात् ஆயாத் அடைய வேண்டும் कृतेन க்ருதேன கர்மத்தைக்கொண்டு अकृतः அக்ருத: கர்மத்துக்கு அப்பாற்பட்டதை न अस्ति ந அஸ்தி அடையமுடியாது तत् विज्ञानार्थम् தத்விக்ஞானர்த்தம் பிரம்ம ஞானத்தின்பொருட்டு सः ஸ: அவன் समित्पाणिः ஸமித்பாணி:

தண்-தணுப்பான. நீக்கதுவ-நெருப்புப்பற்ற. வித்து உறு வேனே-பிறவிக்கு விதையாகின்ற என்னை. மிலேச்சி-அணிந்து. கொத்து-பூங்கொத்து. போது-பூ. மிலேந்து-சூடி. தத்துறு-பரந்து. பூசிய. ஆர-பொருந்த. செம் சாந்து-செஞ்சந்தனம். சச்சை யனே-ஸத் சொருபியே. மெய்ப்பொருளே.

வெண்மையான கபாலங்களை மாலையாக அணிந்து, கொத்துக் கொத்தாயுள்ள கொன்றை மலர் சூடி, குடராகிய நீண்ட மாலையைக் கழுத்தில் சுற்றி, உடலெங்கும் பரந்து விளங்குகின்ற திரு வெண்ணீறோடு பொருந்தச் செஞ்சந்தனச் சாந்து அணிந்த மெய்ப்பொருளே, மத்தைக்கொண்டு கடையும் பொழுது தணுப்பான தயிர் உடைந்து கலங்குவது போன்று புலன்கள் என்னும் நெருப்புப்பற்றி நான் கலங்குகின்றேன். இங்ஙனம் பிறவிக்கு வித்து ஆகின்ற என்னை நீ காத்தருள மாட்டாயா?

மனக்கலக்கம் இருக்கும் வரையில் ஜீவ வியக்திக்கும் நிலைபேறு உண்டு. சம்மார மூர்த்தியாக சிவபெருமான் ஈண்டு விளக்கப்பெறுகிறார். பிரபஞ்சத்தைத் துடைக்கின்ற அவர் பக்தனது மனதையும் துடைத்து விடுவாராகில் அது பெருங்கருணையாகும்.

ஸமித்தைக் கையில் ஏந்திக்கொண்டு (சிஷ்ய பாவனை யோடு) श्रोत्रियम् ச்ரோத்ரியம் வேதங்களை நன்கு அறிந்தவனை ब्रह्मनिष्ठम् ப்ரஹ்மநிஷ்டம் பிரம்ம ஞானியை गुरुम् एव- குரும் ஏவ குருவாக இருப்பவரையே अभिगच्छेत् அபிகச்சேத் அணுகவேண்டும்.

கர்மத்தைக்கொண்டு அடைகிற உலகங்களை ஆராய்ந்து, பிரம்ம நிஷ்டன் அவைகளிலின்று நீங்கவேண்டும். கர்மத்தைக் கொண்டு கர்மத்துக்கு அப்பாற்பட்டதை அடைய முடியாது. பிரம்ம ஞானத்தின் பொருட்டு அவன் சிஷ்ய பாவனையோடு, வேதங்களை நன்கு அறிந்தவனும் பிரம்ம ஞானியுமாகிய குருவையே அடையவேண்டும்.

பிரம்ம ஞானியும் பிரம்மமும் ஒன்றே. சிவ ஞானியும் சிவமும் ஒன்றே. அத்தகைய பரஞானி குருவாக வாய்ப்பது கிடைப்பதற்கு அரிய பேறு. எரியும் தீபம் மற்றொரு தீபத்தை ஏற்றுவதுபோன்று, ஞானி பக்குவமாயிருக்கிற சிஷ்யனைப் பரஞானத்தில் கொண்டு சேர்க்கிறார்.

31. சச்சைய னேமிக்க தண்புனல்
விண்கால் நிலநெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண்
டாய்வெளி யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய
னேயொண் படவரவக்
கச்சைய னேகடந் தாய்தடந்
தாள வடற்கரியே.

சச்சையனே மிக்கதண் புனல்
விண் கால் நிலம் நெருப்பு ஆம்
விச்சையனே விட்டிடுதி கண்டாய்
வெளியாய் கரியாய்
பச்சையனே செய்ய மேனியனே
ஒண் பட அரவம்
கச்சையனே கடந்தாய் தடம்
தாள அடல் கரியே.

சச்சையனே-ஸத்பொருளே, மெய்ப்பொருளே. தண்புனல்-தணுப்பான நீர். கால் - காற்று. விச்சையனே - விந்தைக்குரியவனே. வெளியாய்-வெண்ணிறமுடையவனே. கரியாய்-கருப்பு நிறமுடையவனே. ஒண்-ஒள், அழகிய. பட அரவம்-படத்தையுடைய பாம்பு. கச்சையனே-இடுப்புப்பட்டையையுடையவனே. கடந்தாய்-வென்றவனே. தடம்தாள-பெரிய கால்களையுடைய. அடல்-வலிமையுள்ள. கரி-யானை.

அனைத்துக்கும் அடிப்படையாயுள்ள மெய்ப்பொருளே, ஐம்பூதங்களாய் இலங்குபவனே, வியப்புக்குரியவனே, எல்லா நிறங்களிலும் ஒளிர்பவனே, பாம்பைக் கச்சையாக இடையில் கட்டியிருப்பவனே, பெரிய கால்களையுடைய வலிய யானையைக் கொன்றவனே, என்னை நிலையற்ற நிலவுலக வாழ்வில் விட்டு விடாதே.

ஈசன் ஒருவனே அனைத்துமாய் விளங்குவதால் அவன் வியப்புக்குரியவன்.

உபநி—2. பக்கம் 102ல் காண்க.

32. அடற்கரி போலும் புலன்களுக்
கஞ்சி யழிந்தவென்னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண்
டாய்விழுத்தொண் டர்க்கல்லால்.
தொடற்கரி யாய்சுடர் மாமணி
யேசுடு தீச்சுழலக்
கடற்கரி தாயெழு நஞ்சமு
தாக்குங் கறைக்கண்டனே.

அடல் கரிபோல் ஐம்புலன்களுக்கு
அஞ்சி அழிந்த என்னை
விடற்கு அரியாய் விட்டிடுதி கண்டாய்
விழுத் தொண்டர்க்கு அல்லால்
தொடற்கு அரியாய் சுடர் மாமணியே
சுடுதீச் சுழல
கடல் கரிது ஆய் எழு நஞ்சு அமுது
ஆக்கும் கறைக் கண்டனே.

அடல் கரிபோல்-வலிமையுள்ள யானைபோல். அழிந்த-மனத்தடுமாற்றம் அடைந்த. விடற்கு-பிரித்து வைப்பதற்கு. விழு-மேன்மையான. தொடற்கு-தொடர்வு வைப்பதற்கு. சுடுதீச் சுழல-வடவாமுக அக்கினியும்கலங்கும்படி. கடல் கரிது ஆய் எழு-கடலிலே கருநிறத்துடன் எழுந்த.

உபநிஷத் மந்த்ரம்—71

यततो ह्यपि कौन्तेय पुरुषस्य विपश्चितः ।
इन्द्रियाणि प्रमाथीनि हरन्ति प्रसभम् मनः ॥

யததோ ஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபஸ்சித: ।
இந்திரியாணி ப்ரமாதீனி ஹரந்தி ப்ரஸபம் மன: ॥

(பகவத்கீதோபநிஷதம் 2-69)

कौन्तेय கௌந்தேய குந்தியின் மைந்தா हि ஹி நிச்சயமாக यततः யதத: யத்தனம் செய்கிற विपश्चितः पुरुषस्य விபஸ்சித: புருஷஸ்ய விவேகமுள்ள புருஷனுடைய मनः अपि மன: அபி மனதையும் प्रमाथीनि ப்ரமாதீனி கொந்தளிப்புள்ள इन्द्रियाणि இந்த்ரியாணி இந்திரியங்கள் प्रसभं ப்ரஸபம் பலவந்தமாக हरन्ति ஹரந்தி இழுத்துச் செல்கின்றன.

மேலான தொண்டர்கள் அல்லாது மற்றவர்களால் தொடர்வு வைக்க எட்டாதவனே, ஞான ஜோதியே, கடல் நீரை ஆவியாக்கும் வடவாமுக அக்கினியையே நிலைகுலையச் செய்ததும் கடலைக் கறே ரென்று மறைத்ததுமாகிய விஷத்தை அமிர்தமாக ஏற்ற நீலகண் டனே, வலிய யானை போன்ற ஐம்பொறிகளுக்கு அஞ்சி மனத்தடு மாற்றத்துடன் இருக்கிறேன். உனக்கு வேற்றாய்ப் பிரிந்திருக்க இயலாத என்னை நீ விட்டுவிடுவாயோ?

சாதகனை மெய்ப்பொருளுக்கு வேற்றாகும்படி செய்யவல்லவைகள் ஐம்பொறிகள். ஆனால் எப்படிக் கடலும் அலையும் ஒன்றினின்று ஒன்று பிரிந்திருப்ப தில்லையோ அப்படிப் பரமாத்மனும் ஜீவாத்மனும் என்றுமே பிரிவதில்லை. தன்னைக் கைவிட்டுவிடவேண்டா மென்று ஜீவாத்மன் பரமாத்மனிடம் விண்ணப்பிப்பது தன்னை மெய்ஞ்ஞானத்துக்குப் பக்குவப் படுத்துதற் பொருட்டேயாம்.

33. கண்டது செய்து கருணைமட்
டுப்பரு கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண்
டாய்நின் விரைமலர்த்தாள்

நெறிநிற்கும் நல்லறிஞனுடைய மனதையும் கொந்தளிப்புள்ள இந்திரியங்கள் பலவந்தமாகப் பற்றியிழுக்கின்றன.

இந்திரியங்கள் பொல்லாதவைகள். தவ விரத முடையவர்களையும் அவைகள் தத்தளிக்கச் செய்கின் றன. அவைகளைப் பின்பற்றுவது காட்டுக் குதிரையின் மீது சவாரி செய்வதற்கு ஒப்பாகும். அறிஞர்களையே அவைகள் படுகுழியில் வீழ்த்துபவைகள். பின்பு பாமரர் களை அவைகள் என் செய்யமாட்டா? இந்திரியங்களை வெல்லுமளவு மனிதன் மேலோன் ஆகிறான். தனி மனி தன் அல்லது ஒரு சமுதாயம் அடைந்துள்ள பண்பாட்டை ஆங்குத் தென்படும் புலனடக்கத்தைக்கொண்டு அளந்து விடலாம். சிறிய புலனடக்கமே மேலான நாகரிகம் என்று கருதப்படுகிறது; இம்மை மறுமையாகிய இரண் டிலும் மேன்மைக்கு இந்திரிய நிக்ரகமே உற்ற உபாயம்.

பண்டுதந் தாற்போற் பணித்துப்
பணிசெயக்கூ வித்தென்னைக்
கொண்டெனந் தாய்களை யாய்களை
யாய குதுகுதுப்பே.

கண்டது செய்து கருணை மட்டுப்
பருகிக் களித்து
மிண்டு கின்றேனை விடுதி கண்டாய்
நின் விரை மலர்த்தாள்
பண்டு தந்தால் போல் பணித்துப்
பணிசெயக் கூவித்து என்னைக்
கொண்டு என் தாய் களையாய்
களை ஆய குதுகுதுப்பே.

மட்டு-தேன். களித்து-செருக்கடைந்து. மிண்டுகின்றேனை-மதம் பிடித்துத் திரிகின்ற என்னை. விரை-மணம். பணித்து-கொடுத்தருளி. களையாய்-வேர் அறச் செய்தருள். களைஆய-குற்றமாகிய. குதுகுதுப்பு-வரம்பு கடந்த மகிழ்ச்சி.

என் தந்தையே, உனது அருளாகிய தேனைப் பருகிச் செருக்கடைந்து, மனதில் தோன்றியவாறெல்லாம் செய்து மதம் பிடித்துத் திரிகிற என்னைக் கைவிடவேண்டாம். மணம் நிறைந்த உனது மலர்த்தாளை முன்பு எனக்குக் கொடுத்தருளியது போன்று இப்பொழுதும் கொடுத்தருள்வாயாக. உன் திருத்தொண்டு செய்ய அழைத்து என்னை உனக்கே ஆள் ஆக்கிக்கொள். என்பால் உள்ள குற்றமாகிய வரம்பு கடந்த மகிழ்ச்சியை அறவே களைந்தருள்க.

அடக்கமும், சாந்தமும், இனிமையும்கூடிய சந்தோஷம் ஆத்மசாதனத்துக்கு உறுதுணையாகிறது. ஆனால் பேருவகை யென்றும், மாணு உவகையென்றும், ஹர்ஷ விஹ்வளம் என்றும் இயம்பப் பெறுகிற அற்பத்தனமான குதூகலம் உதவாது. சாதனத்துக்கு அது இடைஞ்சல். சீரிய கருத்துக்களை ஏற்க அத்தகைய புல்லிய களியாட்டம் புரிகிற மனதுக்கு இயலாது. மேலும் உலக மகிழ்ச்சி ஒவ்வொன்றும் பிறகு துன்பமாய் வடிவெடுப்பது திண்ணம்.

34. குதுகுதுப் பின்றிநின் றென்குறிப்
பேசெய்து நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண்
டாய்விரை யார்ந்தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப்
பழத்தின் மனங்கனிவித்
தெதிர்வதெப் போது பயில்விக்
கயிலைப் பரம்பரனே.

குதுகுதுப்பு இன்றி நின்று என் குறிப்பே
செய்து நின் குறிப்பில்
விதுவிதுப்பேனை விடுதி கண்டாய்
விரை ஆர்ந்து இனிய
மதுமதுப்போன்று என்னை வாழைப்
பழத்தின் மனம் கனிவித்து
எதிர்வது எப்போது பயில்விக்
கயிலைப் பரம்பரனே.

குதுகுதுப்பு இன்றி-ஆவல் இன்றி. என் குறிப்பே-என் மனதில் தோன்றுவதையே. நின்குறிப்பில்-உனது திருவுளப் பாங்கின் படி. விதுவிதுப்பேனை-விரும்பிச் செல்லுகிற என்னை. விரை ஆர்ந்து-மணம் நிறைந்து. மதுமதுப் போன்று-தேனின் தெளிவு போன்று. எதிர்வது-இனிப் பக்குவமாவது. பயில்வி-பயிற்சி கொடு.

உபநிஷத் மந்த்ரம் — 72.

कर्मेन्द्रियाणि संयम्य य आस्ते मनसा स्मरन् ।
इन्द्रियार्थान्विमूढात्मा मिथ्याचारः स उच्यते ॥

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா ஸ்மரன் ।
இந்த்ரியார்த்தான் விமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே ॥

(பகவத்கீதோபநிஷதம்—3-ப.)

यः ய: யாவன் कर्मेन्द्रियाणि கர்மேந்த்ரியாணி கர்மேந்திரியங்களை संयम्य ஸம்யம்ய அடக்கி इन्द्रियार्थान् இந்த்ரியார்த்தான் இந்த்ரியார்த்தங்களை मनसा மனஸா மனதால் स्मरन् आस्ते ஸ்மரன் ஆஸ்தே ஸ்மரித்துக்கொண்டிருக்கிறானோ सः ஸ: அவன் विमूढात्मा விமூடாத்மா மூடாத்மா मिथ्याचारः மித்

கயிலையின்கண் வீற்றிருக்கும் எல்லார்க்கும் மேலான பொருளே, உன்னைச் சார்ந்திருப்பதில் ஆவல் இன்றி என் மனதில் தோன்றியதை நான் செய்கிறேன். பின்பு அது உன் திருவுளப் பாங்கு என்று துணிந்து சொல்லுகிறேன். இத்தகைய முரண்பாடு உடைய என்னை நீ கைவிட்டுவிடவேண்டாம். தெளிந்த தேன் போன்றும் பழுத்த வாழைப்பழம் போன்றும் என்னை நீ பக்குவப் படுத்துவது எப்போது? அதற்கேற்ற பயிற்சியை எனக்குக் கொடுத்தருள்வாயாக.

ஆசையை அறவே வென்ற ஜீவாத்மன் ஒருவன் மூலம் நிகழ்கிற கிருத்தியங்கள் அனைத்தும் ஈசன் செயல். "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று ஆசையைவென்ற புனித ஆத்மா பகரலாம். ஆனால் ஆசைக்கு அடிமையாயிருக்கிற ஜீவாத்மன் செய்கிற பாபபுண்ணியங்களுக்கு அவனே பொறுப்பாளி. ஆசைக்கு உட்பட்டுப் பல பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவைகளைப் பராமரிக்க இயலாது வருந்துகிற ஒருவன் தனக்குப் பல பிள்ளைகள் வாய்த்தது ஈசன் செயல்என்று சொல்லலாகாது. அந்நிலையில் அவன் தானே தனக்கு விதிவகையாகிருன். இக்கோட்பாட்டை அறிந்துகொள்

யாசார: பொய்யொழுக்கமுடையவனென்று उच्यते உச்யதே சொல்லப்படுகிருன்.

கர்மேந்திரியங்களை அடக்கி, இந்திரிய விஷயங்களை மனதால் எண்ணிக்கொண்டிருக்கும் மூடன் பொய்யொழுக்க முடையவனென்று பகரப்படுகிருன்.

பிரகிருதியில் ஆத்மா கட்டுண்டிருக்குமளவு மனது இருக்கிறது. ஓயாது சங்கற்பித்துக்கொண்டிருப்பது அதன் தொழில். மனது எண்ணுகிறது; அதே வேளையில் புறக்கரணங்கள் தடுக்கப்படுகின்றன. அப்படிச் செய்வது முறையன்று. ஓர் உபமானத்தால் இதை விளக்குமிடத்து நீராவியந்திரத்தில் ஆவி நிறைந்திருக்கிறது. ஆவி ஒருபுறம் சக்கரத்தை உந்தித் தள்ளுகையில் மற்றெருபுறம் அதற்கு முட்டுப்போடுவது முறையன்று. முதலில் ஆவியை அடைக்கவேண்டும். பிறகு சக்கரத்துக்கு

ளாது தனது ஆசாபாசச் செயலை ஈசன் செயல் என்று சாக்குச் சொல்லுபவன் ஆத்ம சாதனத்தில் முன்னேற்ற மடையான். தனது பான்மையைத் திருத்தியமைக்க அவன் கடமைப்பட்டிருக்கிறான். உலகத்தவரிடத்துள்ள இக்குறைபாட்டைத் தம்மிடமிருப்பதாக மாணிக்கவாசகர் ஏற்றுக்கொண்டு அதைத் திருத்தியமைக்க வேண்டுமென்று இறைவனிடம் விண்ணப்பிக்கிறார்.

35. பரம்பர னேநின் பழவடி
யாரொடு மென்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண்
டாய்மென் முயற்கறையி
னரும்பர நேர்வைத் தணிந்தாய்
பிறவியை வாயரவம்
பொரும்பெரு மான்வினை யேன்மன
மஞ்சிப் பொதும்புறவே.

பரன்பரனே நின்பழ அடியாரொடும்
என் படிறு
விரும்பு அரனே விட்டிடுதி கண்டாய்
மென்முயல் கறையின்
அரும்பு அர நேர் வைத்து அணிந்தாய்
பிறவி ஐவாய் அரவம்
பொரும் பெருமான் வினையேன் மனம்
அஞ்சிப் பொதும்பு உறவே.

முட்டுப்போடவேண்டும். ஆவியை அடைக்காது சக்கரத்துக்கு முட்டுப்போட்டால் யந்திரம் ஒடியும் அல்லது பழுதுபடும். மனிதன் மனதை அடக்காது வெளிக்கரணங்களை அடக்குவதால் தன் இயல்பை அவன் பிளவுபடுத்துகிறான். ஆகையால் அது மித்தியாசாரம் (பொய்யொழுக்கம்) எனப்படுகிறது. எது வாழ்வைக் குலைக்கிறதோ அது பொய்யொழுக்கம். அக்ஞானத்தில் இருப்பவன் கர்மத்தை விட்டுவிடுவதாகப் பாசாங்கு செய்வது மித்தியாசாரம் ஆகிறது. அது துராசாரத்துக்கு ஒப்பானது.

படிறு - பொய்யொழுக்கம். அரனே - ஹரனே, தீமையைத் துடைப்பவனே. மென்முயல் கறையின் அரும்பு-முயல் போன்ற களங்கத்தையுடைய பிறையின் மெல்லிய கொழுந்து. அர-அரவு, பாம்பு. நேர் வைத்து-சமமாக வைத்து. ஐவாய்-ஐந்து தலைகள். பொரும்-சண்டையிடும். பொதும்பு உற-பொந்தில் புகும்படி.

ஒன்றோடு ஒன்று இணங்காதவைகளும் தரத்தில் வேறுபட்டவைகளுமாகிய சந்திரனும் சர்ப்பமும் உன்னிடம் சம அந்தஸ்துப் பெற்று உன்னை அலங்கரிக்கின்றன. அனைத்துக்கும் மேலானவனே, அரனே, அங்ஙனம் உன் பழைய அடியவர்களோடு பொய்யொழுக்கமுடைய என்னைச் சமனாக வைத்த நீ இனி என்னைக் கைவிட்டு விடாதே. பிறவியானது ஐந்துதலை நாகத்திற்கு ஒப்ப ஐம்பொறிகள் வாயிலாக வந்து என்னைப் பயமுறுத்துகிறது. பாம்புக்கு அஞ்சி எலியானது பொந்தில் பதுங்குவது போன்று கர்ம சொரூபமாகிய என் மனம் இந்த ஐம்பொறி நாகத்தோடு சண்டையிட அஞ்சி உள்முக நோக்கம் என்னும் பொந்தில் ஒடுங்குகிறது.

சந்திரனுக்கு சசாங்க शशांक முயல் வடிவத்தைத் தன்னுள் கொண்டுள்ளவன் என்பது ஒரு பெயர்.

அரன் அல்லது ஹரன் ஜீவர்களுடைய குற்றத்தைக் களைந்து அவர்களை உயர்நிலைக்குக் கொண்டு வருபவன்.

மனதானது பொறிகள் வாயிலாகப் புறத்தே போகாது அகத்தில் ஒடுங்கியிருப்பது கர்மத்தை ஒழிப்பதற்கு உற்ற உபாயமாம்.

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். — குறள்

36. பொதும்புறு தீப்போற் புகைந்தெரி
யப்புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண்
டாய்விரை யார்நறவந்

உபநிஷத் மந்த்ரம்—73.

काम एष क्रोध एष रजोगुणसमुद्भवः ।
महाशनो महापाप्मा विद्ध्येनमिह वैरिणम् ॥

ததும்புமந் தாரத்திற் றூரம்
பயின்றுமந் தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தே னவிர்சடை
வானத் தடலரைசே.

பொதும்பு உறுதீப்போல் புகைந்து எரிய
புலன் தீக் கதுவ
வெதும்புறுவேனை விடுதி கண்டாய்
விரை ஆர் நறவம்
ததும்பும் மந்தாரத்தில் தாரம் பயின்று
மந்தம் முரல் வண்டு
அதும்பும் கொழும் தேன் அவிர் சடை
வானத்து அடல் அரைசே.

பொதும்பு-மரப்பொந்து. தீக்கதுவ-நெருப்புப்பற்ற. வெதும்புறுவேன்-தவிக்கின்ற என்னை. விரை-மணம். நறவம்-தேன். மந்தாரத்தில்-மந்தாரப்பூவில். தாரம்-எடுத்தல் ஓசை. மந்தம்-படுத்தல் ஓசை. முரல்-ஒலிக்கின்ற. அதும்பும்-படிகின்ற. கொழும்தேன்-செழுந்தேன். அவிர்சடை-பிரகாசிக்கின்ற ஜடாபாரம். வானத்து-சிதாகாசத்தில். அடல்-வலிமை. அரைசு-அரசு.

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுணஸமுத்பவ: ।
மஹாசனோ மஹாபாப்மா வித்த்யேனமிஹ வைரிணம் ॥

(பகவத்கீதோபநிஷதம் 3-37)

रजोगुणसमुद्भवः ரஜோகுணஸமுத்பவ: ரஜோகுணத்துதித்த महाशनः மஹாசன: எதையும் உண்ணவல்லது महापाप्मा மஹாபாப்மா பெரும் பாபமுடையது एषः ஏஷ: இது कामः காம: காமம் एषः ஏஷ: இது क्रोधः குரோத: குரோதம் इह இஹ இங்கே एनं ஏனம் இதை वैरिणं வைரிணம் விரோதி என்று विद्धि வித்தி அறிக.

ரஜோகுணத்துதித்த இக்காமமே, இக்குரோதமே, எதையும் உண்ணவல்லது; பெரும் பாபமுடையது; ஈண்டு இதை எதிரியென அறிக.

உலகத்தவர் எல்லார்க்கும் பரம சத்துருவாயிருப்பது ஆசை. இந்த ஆசைக்குத் தடையுண்டாகும்பொழுது அது கோபமாக வடிவெடுக்கிறது. ஆகையால் காமத்தை

சிதாகாசமாகத் திகழும் பேராற்றல் படைத்த அரசே, பிரகாசிக்கின்ற உனது ஜூடாபாரத்தில் மந்தாரப்பூவின் செழுந்தேன் நறுமணத்தோடு தோன்றுகிறது. ஆதலால் அப்பூவில் படியவரும் வண்டுகள் எடுத்தல் ஓசையையும் படுத்தல் ஓசையையும் உண்டு பண்ணுகின்றன. வண்டுகள் உன்னிடமிருந்து பெருவாழ்வு பெறுகையில் நானே, மரப்பொந்தில் தீப்பற்றி எரிவதுபோன்று உள்ளத்தினுள்ளே ஐம்பொறிகளின் ஆசை என்னும் காமத்தீயில் தவிக்கிறேன். என்னை நீ காப்பாற்றியருளமாட்டாயா?

பரமனை நாடும் ஜீவன் பெருவாழ்வுக்கு உரியவன் ஆகிறான். இந்திரிய சுகத்தை நாடும் ஜீவன் காமத்தீயில் அவதிப்படுகிறான்.

37. அரைசே யறியாச் சிறியேன்
பிழைக்கஞ்ச லென்னினல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண்
டாய்வெண் ணகைக்கருங்கட்

யும் குரோதத்தையும் ஒன்றாகப் பகவான் பகருகிறார். இது ரஜோகுணத்திலிருந்து உதிக்கிறது. மேலும் ரஜோ குண வளர்ச்சியையும் உண்டுபண்ணுகிறது. நெருப்புக்கு எவ்வளவு விறகுகொடுத்தாலும் அதைப் பொசுக்கிவிட்டு மேலும் அது விறகை வேண்டி நிற்கிறது. அங்ஙனமே காமத்துக்கு விஷயங்களை ஊட்ட ஊட்ட அது அவைகளை உண்டு வளர்கிறது. விஷயம் என்னும் உணவை வேண்டியவாறு அது உண்ணவல்லது. ஆசை பெருகப் பெருக பாபமும் பெருகுகிறது. மனிதனுக்கு வரும் கேடுகளெல்லாம் ஆசையிலிருந்து வந்தவைகள். ஆகையால் இது இவ்வுலக வாழ்க்கையில் எல்லார்க்கும் பகையாம்.

உபநிஷத் மந்த்ரம்—74.

श्रेयान्द्रव्यमयाद्यज्ञाज्ज्ञानयज्ञः परंतप ।
सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते ॥

ச்ரேயான்த்ரவ்யமயாத்யக்ஞாஜ்ஞானயக்ஞ: பரந்தப ।
ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஞானே பரிஸமாப்யதே ॥

(பகவத்கீதோபநிஷதம்—4-33)

டிரைசேர் மடந்தை மணந்த
திருப்பொற் பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை
தான்வந் தடர்வனவே.

அரைசே அறியாச் சிறியேன் பிழைக்கு
அஞ்சல் என்னின் அல்லால்
விரைசேர் முடியாய் விடுதி கண்டாய்
வெள் நகைக் கரும் கண்
திரைசேர் மடந்தை மணந்த
திருப்பொன் பதம் புயங்கா
வரை சேர்ந்து அடர்ந்து என்ன
வல்வினை தான்வந்து அடர்வனவே.

விரை-மணம். வெள்நகை-வெள்ளையான பல். திரை-கடல். பொன் பதம்-பொன்னார் மேனி. புயங்கா-புஜங்கா, பாம்பை அணிந்தவனே. வரை-மலை. அடர்ந்து அன்ன-நெருங்குதல் போன்று. அடர்வன-துன்புறுத்துகின்றன.

வெள்ளை நிறமான பற்களையும், கடல்போன்ற கரிய கண்களையும் உடைய உமாதேவியின் பங்கா, பொன்போன்ற மேனியுடையவனே, பன்னக பூஷணு, இரண்டு மலைகள் ஒன்றுசேர்ந்து நெருக்குவது போன்று உறுதிவாய்ந்த நல்வினையும் தீவினையும் சேர்ந்து என்னைத் துன்புறுத்துகின்றன. ஆதலால் அரசே, மணம் நிறைந்த ஜடாபாரத்தை யுடையவனே, எனது அக்ஞானத்தை அகற்றி அபயம் தந்தருள மாட்டாயா?

परन्तप பரந்தப எதிரிகளை வாட்டுபவனே द्रव्यमयात् यज्ञात् த்ரவ்யமயாத் யக்ஞாத் திரவியமயமான யாகத்தைவிட ज्ञानयज्ञः ஞானயக்ஞ: ஞானயக்ஞமானது श्रेयान् ச்ரேயான் மேலானது पार्थ பார்த்த பார்த்தா सर्वं ஸர்வம் अखिलं அகிலம் कर्म கர்ம கர்மம் எல்லாம் ज्ञाने ஞானே ஞானத்தில் परिसमाप्यते பரிஸமாப்யதே முற்றுப்பெறுகிறது.

பரந்தபா, பொருளைக்கொண்டு செய்யும் யக்ஞத்தைவிட ஞானயக்ஞம் மேலானது. பார்த்தா, கர்மம் முழுதும் ஞானத்தில் முற்றுப்பெறுகிறது.

மனிதன் அறிவைப் பெறுதற்கு உயிர் வாழ்ந்திருக்கிருன். பொருளைப் பெருக்குவதால் கவலை அதிகம் உண்

நல்வினை தீவினையாகிய இருவினையும் விவேகிக்குச் சத்ருக்களாம். ஏனென்றால் அவைகள் அக்ஞானத்தில் தோன்றி வந்து பிறவியைப் பெருக்குகின்றன; துன்பத்தையும் வளர்க்கின்றன. பரஞானோதயத்தில் கர்மம் நசிக்கிறது; பயம் போகிறது.

38\. அடர்புல னனிற் பிரிந்தஞ்சி
யஞ்சொனல் லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண்
டாய்விரிந் தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டர
சேதொழும் பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்றனி
நீக்குந் தனித்துணையே.

அடர் புலனால் நின்பிரிந்து அஞ்சி
அம்சொல் நல்லார் அவர் தம்
விடர் விடலேனை விடுதி கண்டாய்
விரிந்தே எரியும்

டாகிறது. ஓரளவுக்குமேல் திரவியம் ஒருவனுக்குப் பயன் படாது. ஞானம் பெருகுகின்றவளவு சாந்தியும் மோக்ஷமும் கைகூடும். திரவிய விருத்தி ஜடபுத்தியை உண்டு பண்ணுகிறது. ஞான வளர்ச்சி ஆத்ம சைதன்யமாகிறது. திரவியம் பிரகிருதியில் கட்டுப்படுத்துகிறது. ஞானமோ, ஆத்மாவானது கர்மத்தில் கட்டுப்படாத சாக்ஷி என்ற பேருண்மையை விளக்குகிறது. ஆகையால்தான் யக்ஞமெல்லாம் விரைவில் ஞானயக்ஞமாக வடிவெடுக்கவேண்டும். தேவாராதனையில் ஒருவன் ஒருமணங்கு கற்பூரத்தை எரித்து அதைப் பெரிய பூஜையென்று எண்ணுகிறான். மற்றொருவன் கற்பூரம் எரிந்தால் எஞ்சியிருப்பது ஒன்றுமில்லை, அங்ஙனம் கர்மம் ஞானமாய்விடுங்கால் ஜீவபோதத்தில் எஞ்சியிருப்பது ஒன்றுமில்லை என்று அறிகிறான். முந்தையது திரவிய யக்ஞம்; பிந்தியது ஞான யக்ஞம். சாதகனுக்கு சிரேயஸைத் தருவது ஞானயக்ஞம்.

சுடர் அனையாய் சுடுகாட்டு அரசே
தொழும்பர்க்கு அமுதே
தொடர்வு அரியாய் தமியேன் தனி
நீக்கும் தனித்துணையே.

அடர் புலனல்-துன்புறுத்துகின்ற இந்திரியங்களால். அம் சொல் நல்லார்-மாதர். விடர்-காடு. விடலேனை-விட்டுப் பிரிய இயலாத என்னை. விரிந்தே-எங்கும் வியாபித்து. தமியேன் தனி நீக்கும்-கதியற்ற எனது கதியின்மையை நீக்கும். தனித்துணையே-ஒப்பற்ற ஆதரவே.

எங்கும் வியாபித்துள்ள ஆத்ம ஜோதியே, ஸ்மசான வாசியே, தொண்டர்களுக்கு அமிர்தமே, யோகத்தால் அன்றி அடைய முடியாதவனே, வேறு துணையற்ற எனக்கு ஒப்பற்ற துணையே, துன்புறுத்துகின்ற இந்திரியங்களுக்கு வசப்பட்டு, உனக்கு வேற்ருகி, சிற்றின்பம் என்னும் காட்டில் அகப்பட்டுக்கொண்டு அங்கேயே அல்லலுற்றுக் கிடக்கின்ற என்னைக் கடைத்தேற்ற மாட்டாயா?

பரம்பொருளை அறிதற்கும் அடைதற்கும் யோக சாதனம் ஒன்றே உற்ற உபாயம். போகத்தில் உழல்பவனுக்கு அது சாத்தியமாகாது.

உபநி—40. பக்கம் 313ல் காண்க.

**39. தனித்துணை நீநிற்க யான்தருக்
கித்தலை யானடந்த
வினைத்துணை யேனை விடுதிகண்
டாய்வினை யேனுடைய
மனத்துணை யேயென்றன் வாழ் முத
லேயெனக்கெய்ப் பில்வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்றுய
ராக்கையின் திண்வலையே.**

உபநிஷத் மந்த்ரம் — 75.

**मामुपेत्य पुनर्जन्म दुःखालयमशाश्वतम् ।
नाप्नुवन्ति महात्मानः संसिद्धिं परमां गताः ॥**

மாமுபேத்ய புனர்ஜன்ம து:காலயமசாச்வதம் ।
நாப்னுவந்தி மஹாத்மான: ஸம்ஸித்திம் பரமாம் கதா: ॥

(பகவத்கீதோபநிஷதம் 8-15)

தனித்துணை நீ நிற்க யான் தருக்கித்
தலையால் நடந்த
வினைத்துணையேனை விடுதி கண்டாய்
வினையேனுடைய
மனத்துணையே என் தன் வாழ் முதலே
எனக்கு எய்ப்பில் வைப்பே
தினைத்துணையேனும் பொறேன் துயர்
ஆக்கையின் திண்வலையே.

தருக்கி-செருக்கடைந்து. எய்ப்பில் வைப்பே-கஷ்ட காலத்தில் உதவும் பொருளே. ஆக்கை-உடல். திண்வலை-திண்ணிய வலை.

நான் கர்ம சொரூபி, எனது ஜடமனதுக்குச் சேதனத்தைத் தருபவனே, எனது உயிர்க்கு உயிராய் இருப்பவனே, தளர்வுற்ற காலத்தில் எனக்குச் சேமநிதியாய் இருப்பவனே, யான்டும் எனக்கு மூலப்பொருளாய் நீ இருக்க, ஜீவபோதத்தை வளர்ப்பதற்கான செருக்குற்று நான் நிலைதடுமாறிப் போயிருக்கிறேன். கர்ம பந்தத்தில் உழலும் என்னை நீ விட்டுவிடவேண்டாம். துன்பத்துக்கு இருப்பிடமாகிய உடல் என்னும் உறுதியான வலையில் அகப்பட்டு அல்லல்படும் நான் இந்த அல்லலைச் சிறிதேனும் சகியேன்.

மனமானது பிரபஞ்சத்தைச் சார்ந்தால் அது ஜடவஸ்துவாகிறது; அதே மனது பரமனைச் சார்ந்தால் அது

परमां संसिद्धिं பரமாம் ஸம்ஸித்திம் பரம பக்குவத்தை गताः கதா: அடைந்த महात्मानः மஹாத்மான: மஹாத்மாக்கள் मां उपेत्य மாம் உபேத்ய என்னை அடைந்து दुःखालयं து:காலயம் துன்பத்துக்கு இருப்பிடம் अशाश्वतं அசாச்வதம் நிலையற்றது पुनर्जन्म (पुनः + जन्म) புனர் ஜன்ம (புன: + ஜன்ம) மறுபிறப்பை न आप्नुवन्ति ந ஆப்னுவந்தி அடைகிறதில்லை.

பரம பக்குவப்பட்ட மகாத்மாக்கள் என்னை அடைந்து, துன்பத்துக்கு இருப்பிடமும் நிலையற்றதுமாகிய மறுபிறப்பை எடுப்பதில்லை.

மனிதன் தன்னை எதற்குத் தகுதியுடையவனாக்குகின்றானோ அதைத்தான் அவன் பெறுகின்றான். பகவானைப்

சேதனமாகிறது. சிவபெருமான் மனது என்னும் மானை ஒரு கையில் தாங்கியிருக்க, அந்த மான் அவருடைய முகத்தையே பார்த்தவண்ணமாயிருப்பது இத்தத்து வத்தை விளக்குகிறது.

ஜீவபோதத்தை வளர்ப்பது ஜீவாத்மாவின் சிறுமை யாகும்.

40. வலைத்தலை மானன்ன நோக்கியர்
நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண்
டாய்வெண் மதியினொற்றைக்
கலைத்தலை யாய்கரு ணாகர
னேகயி லாயமென்னும்
மலைத்தலை வாமலை யாண்மண
வாளவென் வாழ்முதலே.

வலைத்தலை மான் அன்ன நோக்கியர்
நோக்கின் வலையில் பட்டு
மிலைத்து அலைந்தேனை விடுதி கண்டாய்
வெள் மதியின் ஒற்றைக்
கலைத்தலையாய் கருணாகரனே
கயிலாயம் என்னும்
மலைத்தலைவா மலையாள் மணவாள
என் வாழ் முதலே.

வலைத்தலை மான் - வலையில் அகப்பட்டுக்கொண்ட மான். மிலைத்து-மருண்டு. வெள் மதி-வெண்மையான சந்திரன்.

பெறத் தகுந்தவனுக்கு பகவான் தன்னைக் கொடுத்து விடுகிறான். பகவானை அடைந்தவனுக்கோ பிறவிப்பிணி யில்லை. இறைவனை அடைந்தவர் ''இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' என்கின்றனர். பிறப்பு எப்பொழுதும் மாறுபடும் தன்மையுடையது. பிறவி எது, பிறவாமை எது என்பது விவேகிக்கு விளங்குகிறது.

சந்த்ரசேகரா, கருணாகரா, கைலாய நாதா, பார்வதி சமேதா, என் வாழ்வுக்கு மூலகாரணமாகிய தலைவா, வலையில் அகப்பட்ட மானின் பார்வை போன்ற பார்வையுடைய பெண்களின் மயக்கத்தில் அகப்பட்டு மருண்டு திரிகிற என்னை நீ கைவிட்டு விடாதே.

காமம் ஆத்மசாதகனுக்கு ஹிதச் சத்ருவாகிறது. அதை நீக்கியருளும்படி ஈசனிடத்துப் பிரார்த்தனை பண்ணவேண்டும்.

41. முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந்
நீரிற் கடிப்பமூழ்கி
விதலைச்செய் வேனை விடுதிகண்
டாய்விடக் கூன்மிடைந்த
சிதலைச்செய் காயம் பொறேன்சிவ
னேமுறை யோமுறையோ
திதலைச்செய் பூண்முலை மங்கைபங்
காவென் சிவகதியே.

முதலைச் செவ்வாய்ச்சியர் வேட்கை
வெந்நீரில் கடிப்ப மூழ்கி
விதலைச் செய்வேனை விடுதி கண்டாய்
விடக்கு ஊன் மிடைந்த
சிதலைச் செய் காயம் பொறேன்
சிவனே முறையோ முறையோ
திதலைச் செய் பூண்முலை மங்கை பங்கா
என் சிவகதியே.

வேட்கை வெந்நீரில் செவ்வாய்ச்சியர் முதலைகடிப்பமூழ்கி-ஆசையென்னும் வெப்பமுள்ள நீரில் சிவந்த வாயையுடைய மாதராகிய முதலை கடிக்கும்படி மூழ்கி. விதலை செய்வேனை-நடுங்குகிற என்னை. விடக்கு-இறைச்சி. மிடைந்த-நிறைந்த. சிதலைச் செய்காயம் பொறேன்-நோய்க்கு இடமாகிய இந்த உடலைச் சகியேன். திதலைச் செய்-தேமல் படர்ந்த.

புலால் நாற்றத்தையுடைய மாமிச மயமானதும் நோய்கள் பலவற்றிற்கு இருப்பிடமானதும் ஆகிய உடம்பை நான் தாங்கியிருக்க மாட்டேன். ஈசா, என்னை இக்கீழ்நிலையில் விட்டு வைப்பது உனக்குத் தகுமோ? தேமல் படர்ந்த, ஆபரணமணிந்த ஸ்தன பாரங்களை

யுடைய உமாதேவியின் சமேதா, எனக்கு நல்ல கதியானவனே, ஆசையென்கின்ற வெந்நீரில் மூழ்கி அதனுள் இருக்கும் சிவந்த வாயையுடைய மாதராகிய முதலைகள் கடிக்க வரும்பொழுது நடுங்குகின்ற என்னை விட்டுவிடுவாயோ?

மாமிச தேகத்தின்மீது அருவருப்புக்கொள்வது ஆத்ம சாதனத்துக்கு உற்ற உபாயம்.

42. கதியடி யேற்குன் கழறந்
தருளவு மூன்கழியா
விதியடி யேனை விடுதிகண்
டாய்வெண் டலைமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை
பைத்துச் சுருங்கவஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக்
குஞ்சடை மன்னவனே.

கதி அடியேற்கு உன் கழல் தந்தருளவும்
ஊன் கழியா
விதி அடியேனை விடுதி கண்டாய்
வெள் தலை முழையில்
பதிஉடைவாள் அரப் பார்த்து
இறை பைத்துச் சுருங்க அஞ்சி
மதிநெடு நீரில் குளித்து ஒளிக்கும்
சடை மன்னவனே.

கதி-புகலிடம், வீடு. ஊன்கழியா விதி-உடலை நான் என்று எண்ணுகிற வினை. வெள்தலை-கபாலம். முழையில்-பொந்தில். பதியுடை-பதித்திருத்தலையுடைய. வாள் அர-ஒளி பொருந்திய பாம்பு. இறை-சிறிது. பைத்து-படம் விரித்து. நெடுநீரில்-கங்கையில். குளித்து-முழுகி. ஒளிக்கும்-மறைந்துகொள்ளும்.

வெள்ளை நிறமான கபாலத்தின் பொந்தில் பதுங்கியிருக்கும் பளபளப்பான பாம்பானது சிறிது படம் விரித்தாடிச் சுருங்கிற்று. அதைப் பார்த்துப் பயந்துபோன பிறைச் சந்திரன் கங்கையில் முழுகி மறைந்துகொண்டான். முரண்படுகிற இவ்விரண்டையும் உன் ஜடாபாரத்தில் வைத்துள்ள இறைவா, நீ எனக்கு ஞானத்தை

நல்கினை, ஆனால் உடலை நான் என்று உணருகிற நான் கர்ம வசப் பட்டவனாயிருக்கிறேன். என்னை நீ காத்தருள்வாயா ?

உடலைத் தான் என்று கருதுகிற ஜீவனுக்குச் சீற்ற முண்டு, பயமுண்டு, வினைப்பயன் உண்டு. உடல் உணர்வைக் கடந்தவனுக்கே பரஞானம் வாய்க்கிறது.

43. மன்னவ னேயொன்று மாறறி
யாச்சிறி யேன்மகிழ்ச்சி
மின்னவ னேவிட் டிடுதிகண்
டாய்மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ
னேகழி யாத்தொழும்பர்
முன்னவ னேபின்னு மானவ
னேயிம் முழுதையுமே

மன்னவனே ஒன்றும் ஆறு அறியாச்
சிறியேன் மகிழ்ச்சி
மின்னவனே விட்டிடுதி கண்டாய்
மிக்கவேத மெய்ந்நூல்
சொன்னவனே சொல்கழிந்தவனே
கழியாத் தொழும்பர்
முன்னவனே பின்னும் ஆனவனே
இம் முழுதையுமே.

ஒன்றும் ஆறு-ஒன்றுபடுகிற நெறி. மகிழ்ச்சி மின்னவனே-ஆனந்தத்தில் ஒளிர்பவனே. மிக்க வேதம்-மேலாகிய வேதம் கழியாத் தொழும்பர்-நீங்காத தொண்டர்.

மேலான வேதம் என்னும் உண்மை நூலை விளக்கினவனே, சொல்லுக்கு அப்பாற்பட்டவனே, மாருத பக்தர்களுக்குப் பிரத்யக்ஷமாயிருப்பவனே, மேலும் அனைத்துமாயிருப்பவனே, ஈசா, நான் உன்னோடு ஒன்றுபடும் முறையை அறியாதிருக்கிறேன். எனக்கு ஆனந்தத்தை ஊட்டி ஒளிர்பவனே என்னைக் கைவிட்டு விடாதே.

இப்பிரபஞ்சமே அழியாததும் மேலானதுமான வேதம். இதை இப்படியெல்லாம் தோற்றுவித்துக் கொண்டிருப்பது வேதத்தின் பெருவிளக்கமாம்.

உபநி—50. பக்கம் 341ல் காண்க.

44. முழுதயில் வேற்கண் ணியரென்னு
மூரித் தழன்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண்
டாய்நின் வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வானத் தொழும்பரிற்
கூட்டிடு சோத்தம்பிரான்
பழுதுசெய் வேனை விடேலுடை
யாயுன்னைப் பாடுவனே.

முழுது அயில் வேல் கண்ணியர் என்னும்
மூரித் தழல் முழுகும்
விழுது அனையேனை விடுதி கண்டாய்
நின்வெறி மலர்த்தாள்
தொழுதுசெல் வானம் தொழும்பரில்
கூட்டிடு சோத்தம் பிரான்
பழுது செய்வேனை விடேல் உடையாய்
உன்னைப் பாடுவனே.

முழுது-முற்றும். அயில்-கூர்மையான. மூரித்தழல்-பெருந்தீ. விழுது-வெண்ணெய். வெறி-மணம். தொழுது செல்-வணங்கிச் சென்ற. வானத் தொழும்பரில் கூட்டிடு-சித் ஆகாசத்தில் கலந்த அடியவரோடு சேர்த்துக்கொள். சோத்தம்-வணக்கம். பழுது செய்வேனை-தவறு செய்கின்ற என்னை. விடேல்-விடாதே.

முற்றும் கூரிய வேல்போன்ற கண்களையுடைய மாதராகிய பெருந்தீயில் குளித்து வெண்ணெய் போன்று உருகுகிற என்னை நீ புறக்கணித்து விடுவாயோ? மணம் நிறைந்த மலர் போன்ற உனது திருவடியைத் தொழுது உன் பக்தர்கள் சிதாகாசத்தில் கலந்தனர். அவர்களோடு என்னையும் சேர்த்துக்கொள். எம்பிரானே, உனக்கு வணக்கம் செலுத்துகிறேன்; குற்றம் செய்கின்ற என்னை நழுவ விடாதே; உடையாய் உன்னை நான் போற்றிப் பாடுகிறேன்.

காமத் தீ கொடியது. ஆத்ம சாதகன் அதில் வீழ்ந்து அழிந்து போகாதிருப்பதற்கு இறைவன் அருளும் சான்றோர் நல்லிணக்கமும் வேண்டும்.

45. பாடிற்றி லேன்பணி யேன்மணி
நீயொளித்தாய்க் குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண்
டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்விடத்
தானெவர் கண்டனரென்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுரு
கேனின் றுழைத்தனனே.

பாடிற்றிலேன் பணியேன் மணி
நீ ஒளித்தாய்க்குப் பச்சூன்
வீடிற்றிலேனை விடுதி கண்டாய்
வியந்து ஆங்கு அலறித்
தேடிற்றிலேன் சிவன் எவ்இடத்தான்
எவர் கண்டனர் என்று
ஓடிற்றிலேன் கிடந்து உள் உருகேன்
நின்று உழைத்தனனே.

மணி-மாணிக்கம். பச்சூன்-பச்சையான ஊன், உடம்பு. விடிற்றிலேனை-நீங்காத என்னை.

மாணிக்கமே உன்னை நான் பாடிலேன்; பணி செய்யவில்லை. நீ என்னை விட்டு மறைந்து சென்றபின் பச்சை ஊனுலாகிய இந்த உடம்பை ஒழித்திலேன். அத்தகைய என்னை நீ விட்டு விடாதே. நீ பிரிந்த பிறகு சிவன் எங்கு இருக்கிறன்? அவனைக் கண்டவர் யார்? என்று வியந்து அப்பொழுதே நான் தேடவில்லை. ஓடிப் பார்க்கவில்லை. ஸ்தம்பித்து மனம் உருகவில்லை. வீணே நின்று வருந்தினேன்.

ஸ்தம்பித்து மனம் உருகுதல் மஹாபாவத்தின் கூறு ஆகும். *39*-வது பக்கம், 7 (*1*) பகுதியைப் பார்க்க.

46. உழைதரு நோக்கியர் கொங்கைப்
பலாப்பழத் தீயினைப்பாய்
விழைதரு வேனை விடுதிகண்
டாய்விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி
மானிடன் தேய்மதியன்

பழைதரு மாபர னென்றென்
றறைவன் பழிப்பினையே.

உழை தரு நோக்கியர் கொங்கைப்
பலாப்பழத்து ஈயின் ஒப்பாய்
விழை தருவேனை விடுதி கண்டாய்
விடின் வேலை நஞ்சு உண்
மழைதரு கண்டன் குணம் இலி
மானிடன் தேய் மதியன்
பழைதரு மா பரன் என்று என்று
அறைவன் பழிப்பினையே.

உழை தரு-மான் போன்ற விழைதருவேனை-விரும்புகின்ற என்னை. வேலை-கடல்.மழைதரு-நீலமேகம் போன்ற. தேய் மதியன்-அறிவைப் பாழ்படுத்தியவன். பழைதரு-வயது முதிர்ந்த. மா பரன்-பெரிய பரதேசி.

பலாப்பழத்தை ஈ நாடுவது போன்று மான் போன்ற பார்வையுடைய மாதர் சிற்றின்பத்தை நான் விரும்புகிறேன். அதை முன்னிட்டு என்னை நீ புறக்கணித்து விடுவாயோ? என்னை நீ விலக்கி விடுவாயாகில் உன்னை நான் கடல் நஞ்சு உண்டவன் என்றும், கறைக்கண்டன் என்றும், நற்குணம் இல்லாதவன் என்றும், என்னைப்போன்ற வெறும் மானிடன் என்றும், அறிவு குறைந்தவன் என்றும், வயது முதிர்ந்த முழு வேற்றான் அல்லது பரதேசி என்றும் பழித்துப் பேசுவேன்.

இது ஒரு நிந்தா ஸ்துதி, அதாவது நிந்திப்பது போன்று தென்படும் ஸ்துதி; தூற்றுதல் போன்ற போற்றுதல்,

உணவு உண்ணாது கடல் நஞ்சு உண்பவன்; இச் செயல் கருணையால் நேர்ந்தது. நீலகண்டன் ஆனது தியாகத்தின் விளைவு.

குணம் இலி என்பது முக்குணங்களுக்கு அப்பாற் பட்டவன் எனப் பொருள்படுகிறது.

மானிடன் = மான் + இடன் என்றால் இடக்கையில் மானைப் பிடித்து வைத்திருப்பவன் எனப் பொருள்படுகிறது. மான்போன்று ஓடித்திரியும் மனதை அடக்கியவன் சிவன்.

தேய் மதியன் என்பது பதின்மூன்றும் தேய்பிறைச் சந்திரனுக்கு அடைக்கலம் கொடுத்தவன் எனப்பொருள் படுகிறது. பழைதரு என்பது அவனைவிடத் தொல்லோன் யாருமில்லை எனப் புலப்படுத்துகிறது.

மா பரன் என்பது எல்லாவற்றிலும் மேலான பரம் பொருள் எனவும், உமாதேவியாரை ஒருபாகத்தில் உடையவன் எனவும் விளக்க இடம் கொடுக்கிறது.

இறைவனிடத்துச் சிறுமைகள் போன்று தென்பட்டுக் கொண்டிருப்பவைகளெல்லாம் உண்மையில் அவனுடைய மகிமைகளாம். இறைவனோடு இணைத்து வைத்துப் பார்க்குமிடத்து, உலகில் உள்ள சிறுமைகளும் பெருமைகளாகவே பொலிகின்றன.

47. பழிப்பினின் பாதப் பழந்தொழும்
பெய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண்
டாய்வெண் மணிப்பணிலங்
கொழித்துமந் தாரமந் தாகினி
நுந்தும்பந் தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ்
சேர்தரு தாரவனே.

பழிப்பு இல் நின் பாதம் பழம் தொழும்பு
எய்தி விழப் பழித்து
விழித்து இருந்தேனை விடுதி கண்டாய்
வெண் மணிப் பணிலம்
கொழித்து மந்தாரம் மந்தாகினி
நுந்தும் பந்தம் பெருமை
தழிச் சிறை நீரில் பிறைக்கலம்
சேர்தரு தாரவனே.

பழிப்பு-நிந்தை. தொழும்பு-தொண்டு. வெணமணி-முத்து. பணிலம்-சங்கு. கொழித்து-வீசி. மந்தாரம்-மந்தார மலர். மந்தாகினி-கங்கை நதி. நுந்தும்-தள்ளிவரும். பந்தப் பெருமை-ஜடையை அணையாக அமைந்துள்ள பெருமை. தழி-தழுவி. சிறை

நீரில்-கட்டுண்டு கிடக்கும் நீரில். பிறைக்கலம்-சந்திரனுகிய தோணி, சேர்தரு-அமைத்து. (தார்-மாலே) தாரவனே-மாலேயை உடைய வனே.

கங்கா நதியானது முத்துக்களேயும் சங்குகளேயும் உருட்டிக் கொண்டு வருகிறது. அதில் மந்தார மலர் மிதந்துகொண்டு வருகிறது. உனது ஜடாபாரம் அணேயாக அமைந்து அந்த நீரைத் தேக்கி வைத்திருக்கிறது. அதன்மீது படகுபோன்று பிறைச் சந்திரன் மிளிர்கிறது. நீயோ வெற்றிமாலேயணிந்திருக்கிருய். பழிப்புக்கு இடமில்லாத உன் திருவடிக்குத் தொன்றுதொட்டு வந்துள்ள முறைப்படி பணிவிடை செய்து, பிறகு அதைப் பழித்துச் சிறுமையடைந்த நான் வெருண்டு விழித்து நிற்கிறேன். அத்தகைய புல்லியனுகிய என்னே நீ பொருள்படுத்தாது விட்டுவிடுவாயோ?

பராபக்தி அல்லது மஹாபாவம் 14. பக்கம் 42ல் காண்க.

48. தாரகை போலுந் தலேத்தலே
மாலேத் தழலரப்பூண்
வீரவென் றன்னே விடுதிகண்
டாய்விடி னென்னேமிக்கா
ரார்அடி யானென்னி னுத்தர
கோசமங் கைக்கரசின்
சீரடி யாரடி யானென்று
நின்னேச் சிரிப்பிப்பனே.

தாரகை போலும் தலேத்தலே மாலே
தழல் அரப்பூண்
வீர என் தன்னே விடுதி கண்டாய்
விடின் என்னே மிக்கார்
ஆர் அடியான் என்னின்
உத்தரகோச மங்கைக்கு அரசின்
சீர் அடியார் அடியான் என்று
நின்னேச் சிரிப்பிப்பனே.

தாரகை-நக்ஷத்திரம். தலேத்தலேமாலே-தலேயில் கபால மாலே. தழல்-தீ. அரப்பூண்-விஷப்பாம்பை ஆபரணமாகப் பூண்ட. மிக்கார்-மேலோர்.

நக்ஷத்திரம்போன்ற கபாலத்தைத் தலைமாலையாக அணிந்திருக்கிறாய். தீயை வைத்திருக்கிறாய். விஷப்பாம்பை ஆபரணமாக அணிந்திருக்கிறாய். ஆதலால் நீ ஒருவீரனே. அத்தகையநீ என்னைக் கீழ்மையில் விட்டுவிடாதே. கீழ்மையில் வைக்கப்பட்டுள்ள என்னைப் பார்த்து, "நீ யாருடைய அடியவன்?" என்று சான்றோர்கள் கேட்பார்கள். "உன் அடியார்க்கு அடியவன்" என்று நான் பதில் சொல்லுவேன். உனது நிலைமை அப்பொழுது சிரிப்புக்கு இடமாகும்!

தோழமை பாவம் ஈண்டுத் தோன்றுகிறது. மஹாபாவம் 15. பக்கம் 42ல் காண்க.

49. சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்
தொழும்பையுமீ சற்கென்று
விரிப்பிப்ப னென்னை விடுதிகண்
டாய்விடின் வெங்கரியி
னுரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ்
சூண்பிச்ச னூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப்
பிச்சனென் றேசுவனே.

சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்
தொழும்பையும் ஈசற்கு என்று
விரிப்பிப்பன் என்னை விடுதி கண்டாய்
விடின் வெம் கரியின்
உரிப்பிச்சன் தோல் உடைப் பிச்சன்
நஞ்சு ஊண் பிச்சன் ஊர்ச்சுடுகாட்டு
எரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப்பிச்சன்
என்று ஏசுவனே.

சீறும்-வெறுக்கும். பிழைப்பை-குற்றத்தை. தொழும்பையும்-தொண்டு செய்ததையும். வெம்-கொடிய. கரியின்-யானையின் உரி-தோல். பிச்சன்-பித்தன். எரிப்பிச்சன்-தீயில் உழலும் பித்தன்.

நான் பிழை செய்தவனென்று நீ என்னை வெறுத்துப் புறக்கணிப்பாயாகில் உன் செயல் சரியல்லவென்று ஊரார் சிரிக்கும்படி செய்துவிடுவேன். பின்பு நான் உனக்கே தொண்டன் என்பதை

என் செயல்கள் அனைத்தின் வாயிலாக விஸ்தாரமாக விளக்கிக் காட்டுவேன். அப்படியிருந்தும் நீ என்னை ஒதுக்கித் தள்ளிவிடுவாயோ? தகாத அச்செயலைச் செய்வாயாயின், நீ யானைத் தோலைப் போர்த்த பித்தன், புலித்தோலை உடுத்தபித்தன், நஞ்சு உண்ட பித்தன், ஊர்ச் சுடுகாட்டுத் தீயில் விளையாடும் பித்தன், என்னை ஆண்டுகொண்டு பிறகு புறக்கணித்த பித்தன்—இப்படியெல்லாம் உன்னைப் பழிக்கு ஆளாக்குவேன்.

பராபக்தி அல்லது மஹாபாவம் 20. பக்கம் 42ல் காண்க.

இதுவும் ஒரு நிந்தாஸ்துதி.

யானை, புலி, கருமான் ஆகியவைகளின் தோலைஅணிதல் தீமையை நலமாக மாற்றுதலாம். சுடலைத் தீயில் விளையாடுதல் சம்மார காலத்திலும் தான் அழிந்துபட்டுப் போகாதிருத்தலாம்.

ஜீவாத்மாவைத் தனக்குச் சொந்தமாக்குவது பரமாத்மாவின் பேரியல்பு.

50. ஏசினும் யானுன்னை யேத்தினும்
 மென்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண்
 டாய்செம் பவளவெற்பின்
றேசுடை யாயென்னை யாளுடை
 யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின வாலமுண் டாயமு
 துண்ணக் கடையவனே.

ஏசினும் யான் உன்னை ஏத்தினும்
 என் பிழைக்கே குழைந்து
வேசறுவேனை விடுதி கண்டாய்
 செம்பவளம் வெற்பின்
தேசு உடையாய் என்னை ஆளுடையாய்
 சிறு உயிர்க்கு இரங்கிக்
காய்சினம் ஆலம் உண்டாய் அமுது
 உண்ணக் கடையவனே.

வேசறுவேனை-வருந்துகிற என்னை. வெற்பின்-மலைபோன்ற. தேசு-தேஜஸ், ஒளி. காய்சின ஆலம்-கொதித்து எழுந்த கொடிய நஞ்சு. கடையவனே-உயிர்களின் பிரபஞ்ச வாழ்வை ஒழித்தல் என்னும் கடைசிச் செயலாகிய சம்மாரம் செய்பவனே.

நான் உன்னை வைதாலும் வாழ்த்தினாலும் என் குற்றத்தின் பொருட்டு வருந்துகிற என்னை நீ ஒதுக்கித் தள்ளிவிட வேண்டாம். ஏனென்றால் நீ யாண்டும் என்னை ஆளுடைய அண்ணல்; நான் உன் அடிமை. நீ ஞான தேஜஸுடைய பவளமலை; என்னை ஞான வான் ஆக்கு. ஜீவகோடிகள் அனைத்தும் வாழ்வு என்னும் அமுதை உண்ணாமுந்துகின்றன. அதன் எதிர்ச் செயலாய் வருகிற கொடிய விஷத்தை நீ ஏற்று அவ்வுயிர்களை ஓம்புகின்றாய். அது உன்னு டைய கருணை நிறைந்த தியாகமாகும். உயிர்களின் அக்ஞானத்தை அழித்தல் என்னும் கடைசிச் செயலைச் செய்கின்றவனே, எனது அக்ஞானத்தையும் அழித்துவிடு.

நீத்தல் விண்ணப்பம் முழுதும் அந்தாதியாகப் பாடப் பெற்றுள்ளது. ஒரு பாட்டின் அந்தத்தில் உள்ள பதம் அடுத்த பாட்டின் ஆதியாக மீண்டும் இடம் பெறு கிறது. 'கடையவனேனை' என்று துவக்கிய நீத்தல் விண் ணப்பம் ஐம்பதாவது பாடலின் இறுதியில் 'கடைய வனே' என்று முடிவு பெறுகிறது. ஆதியில் 'கடையவ னேனை' என்று கூறியிருப்பது ஜீவாத்மனுடைய கீழ்மை யைக் குறிக்கிறது. அந்தத்தில் 'கடையவனே' என்று கூறியிருப்பது ஜீவாத்மனை ஜீவபோதத்தினின்று விடு விப்பது என்ற செயற்கரிய கடைசிச் செயலைச் செய்ப வனே என்ற உயர்ந்த பொருள் கொள்கிறது.

மஹாபாவங்கள் 18, 19, 20 ஈண்டு இலங்குகின்றன. பக்கம் 42ல் காண்க.

7. திருவெம்பாவை

சத்தியை வியந்தது

(வெண்டளையான் வந்த இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா)

தை மாதம் முதல் ஆனி மாதம் வரையில் ஆறு மாத காலம் சூரியனுடைய உத்தராயனம். அது தேவர்களுக்குப் பகல். ஆடி முதல் மார்கழி வரையில் சூரியனுடைய தக்ஷிணயனம். அது தேவர்களுக்கு இரவு. நமக்கு அதிகாலை நான்கு மணியிலிருந்து ஆறுமணி வரையில் பிரம்ம முகூர்த்தம். கடவுள் வழிபாட்டுக்கு அது சிறந்த நேரம். அதே போன்று தேவர்களுடைய நாளில் மார்கழி முழுதும் பிரம்ம முகூர்த்தம். ஆதலால் மாதங்களுள் மார்கழி மிகச் சிறந்தது. மக்களும் அம்மாதத்தில் வழிபாடு மிகச் செய்கின்றனர். மார்கழி மாதத்தில் மக்கள் அதிகாலையில் எழுந்திருப்பதற்குத் திருவெம்பாவை திருவண்ணமலையில் பாடப்பெற்றது. பரபோதம் பெற்று எழுந்திருக்க இது எக்காலத்திலும், எங்கும், யாவர்க்கும் பயன்படும்.

1. ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்
[தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்
[மறந்து

உபநிஷத் மந்த்ரம்—76.

या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी ।
यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः ॥

யா நிசா ஸர்வபூதானும் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ ।
யஸ்யாம் ஜாக்ரதி பூதானி ஸா நிசா பச்யதோ முனே: ॥

(பகவத்கீதோபநிஷதம் 2-69)

போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ங
னேதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடம் கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின் செவி தான்
மாதேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போது ஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டும் இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசு ஏல் ஓர் எம்பாவாய்.

வாள் தடம் கண்-ஒளியுடைய விசாலமான கண். **வளருதியோ**-தூங்குகின்றாயோ. **மாதேவன்**-மகாதேவன். **வார் கழல்கள்**-நெடிய வீரக்கழலை யணிந்த திருவடிகள். **விம்மிவிம்மி**-ஏங்கியழுது. **போது ஆர்**-புஷ்பம் நிறைந்த. **அமளியின்மேல்**-படுக்கையின்மேல். **பரிசு**-இயல்பு. **எம்பாவாய்**-எமது பாவை போன்ற தோழியே.

பரமன் அகண்ட வஸ்து; அவன் அருள் பெருஞ்ஜோதி. அவனுடைய மகிமையை நாங்கள் பாடிக்கொண்டு வருகிறோம். ஆனால் ஒளிபொருந்திய அகன்ற கண்களையுடைய தோழீ, நீ ஏன் தூங்கிக் கொண்டிருக்கிறாய்? உன் காதுகள் கூரியவைகளல்லவோ? மகாதேவனுடைய மாட்சிமைகளை நாங்கள் பாடக் கேட்ட மற்றொருத்தி திடீ

सर्वभूतानां ஸர்வபூதாநாம் சர்வபிராணிகளுக்கும் **या** யா எது **निशा** நிசா இராத்திரியோ **तस्यां** தஸ்யாம் அதில் **संयमी** ஸம்யமீ அடக்கம் பயின்ற யோகி **जागर्ति** ஜாகர்தி விழித்திருக்கிறான் **यस्यां** யஸ்யாம் எதில் **भूतानि** பூதானி பிராணிகள் **जाग्रति** ஜாக்ரதி விழித்திருக்கின்றனவோ **सा** ஸா அது **पश्यतः मुनेः** பச்யத: முனே: தத்துவதர்சியாகிய முனிக்கு **निशा** நிசா இரவு.

உயிர்களனைத்துக்கும் எது இரவோ அதில் யோகி விழித்திருக்கிறான். உயிர்களெல்லாம் துய்த்துணரும் நிலை தத்துவ ஞானிக்கு இரவு.

ரென்று எழுந்திருந்தாள், தேம்பியழுதாள், பரவசமடைந்தாள், மலர்தூவிய படுக்கையில் புரண்டு பக்தி நிறைந்தவள் ஆனுள், உணர்ச்சியின் வேகத்தால் அவள் கட்டை போன்று ஸ்தம்பித்துக் கிடந்தாள். இதுவன்ருே பாராட்டத்தக்க நிலை! பாவை போன்ற எமது தோழி, இப்பரவச நிலையைப் பற்றிக் காதுகொடுத்துக்கேள். இதை ஓர்ந்து எண்ணிப் பார். பின்பு நீயும் இப்பெருநிலையைப் பெறமுயல்வாயாக.

பரபோதத்தில் விழிப்படைந்துள்ள ஜீவாத்மனுடைய பக்தி லக்ஷணம் ஈண்டு விளக்கப்பட்டுள்ளது. மஹாபாவம் அல்லது பராபக்தியின் கூறுகள் 6, 7 (1) (8), 11 (3) ஆகியவைகள் தோற்றத்துக்கு வருகின்றன. பக்கம் 39ல் காண்க.

2. பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகலும்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனேயோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி

மக்கள் எல்லாரும் உலக வாழ்க்கையில் உழன்று கொண்டிருக்கின்றனர். அப்படியிருப்பது உறங்கிக் கொண்டிருப்பதற்கு நிகர். அவர்களுக்கு உலக விஷயம் பகலாகவும் தெய்விக விஷயம் இரவாகவும் இருக்கின்றன. அருள்தாகம் கொள்வது திருப்பள்ளியெழுச்சியாம். அருள்தாகம் எடுத்துப் பரபோதத்தில் ஊறியிருப்பவர்களுக்குத் தெய்விக விஷயம் பகலாகவும் உலக விஷயம் இரவாகவும் இருக்கின்றன. மக்களிடத்துச் சிவபோதத்தை ஊட்டுவது திருப்பள்ளியெழுச்சியாம்.

உபநிஷத் மந்திரம் —77.

ये तु सर्वाणि कर्माणि मयि संन्यस्य मत्पराः ।
अनन्येनैव योगेन मां ध्यायन्त उपासते ॥
तेषामहं समुद्धर्ता मृत्युसंसारसागरात् ।
भवामि नचिरात्पार्थ मय्यावेशितचेतसां ॥

யேசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
ளீசனுர்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போது எப்போது இப்போதுஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீ சி இவையும் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனுர்க்கு அன்புஆர் யாம்ஆர் ஏல் ஓர் எம்பாவாய்.

பாசம்-*பற்றுதல்.* **என்பாய்**-*என்று சொல்லுவாய்.* **நேரிழையாய்**-*நல்ல ஆபரணங்களுடைய மாதே.* **சீ சி**-*இகழ்ச்சிக் குறிப்பு.* **சிலவோ**-*இப்படிப் பேசுகிற பாங்கும் சில உன்னிடத்து இருக்கின்றனவா?* **கூசும்**-*நாணுகின்ற.* **தேசன்**-*தேஜோமயன்.* **அன்பு ஆர் யாம் ஆர்**-*அன்பு நிறைந்த நாம் எத்தகையவர்?*

யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸம்ன்யஸ்ய மத்பரா: ।
அனன்யேனைவ யோகேன மாம் த்யாயந்த உபாஸதே ॥
தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத் ।
பவாமி நசிராத்பார்த்த மய்யாவேசிதசேதஸாம் ॥

(*பகவத்கீதோபநிஷதம் 12-6, 7*)

ये யே *யார்* तु து *ஆனல்* सर्वाणि कर्माणि சர்வாணி கர்மாணி *சர்வ கர்மங்களையும்* मयि மயி *என்னிடத்து* संन्यस्य ஸம்ன்யஸ்ய *அர்ப்பித்து* मत्पराः மத்பரா: *என்னையே மேலாம் கதியாகக்கொண்டு* अनन्येन योगेन அனன்யேன யோகேன *அன்னியது எதையும் அணுகாத யோகத்தால்* मां एव மாம் ஏவ *என்னையே* ध्यायन्तः த்யாயந்த: *தியானிக்கிறவர்களாய்* उपासते உபாஸதே *உபாசிக்கிறார்களோ॥* पार्थ பார்த்த *பார்த்தா* अहं அஹம் *நான்* मयि மயி *என்னிடத்து* आवेशित चेतसां ஆவேசித சேதஸாம் *செலுத்திய மனதையுடைய* तेषां தேஷாம் *அவர்களுடைய* मृत्यु संसार सागरात् ம்ருத்யு ஸம்ஸார ஸாகராத் *மரணத்தோடு கூடிய சம்சார சாகரத்தி*

ஜோதி சொரூபமாகிய பரமனைப்பற்றி நாம் இரவும் பகலும் பேசிக்கொண்டிருந்தபொழுதெல்லாம் உன்னுடைய பற்றுதல் எல்லாம் அவனுக்கே உரியது என்று சொல்லிக்கொண்டிருந்தாய். நல்ல நகையணிந்துள்ள நங்காய், இப்பொழுது மலர் தூவிய படுக்கையின் மீது உனக்குப் பற்றுதல் வந்து விட்டதோ?

பொருந்திய அணிகளைப் பூண்டிருக்கும்பெண்டிர்காள், வேண்டாம், வேண்டாம். இப்படிச் சில்லறைப் பேச்சுப் பேசிப் பரிகசித்து விளையாடுவதற்கு இதுவன்று நேரம்; இதுவன்று இடம். அறிவில் சிறந்த விண்ணோர்களே பரமனைப் போற்றத் தாங்கள் தகுதியற்றவர் என்று தயங்கிப் பின்வாங்குகின்றனர். அத்தகைய தேஜோமயன், சிவலோகநாதன், தில்லைச் சிற்றம்பலத்துக்கு ஈசன் நம்மைக் காத்தருள வந்து காத்துக்கொண்டிருக்கிறான். அவனைப்பற்றிய ஞானம் சிறிதுமில்லாது வெறும் அன்போடு நிறைந்துள்ள நாம் அவனை உள்ளபடி போற்ற வல்லவர்களா? பாவை போன்ற பாங்கியே, இக்கோட்பாட்டை ஏற்றுக்கொள், பின்பு இதை ஓர்ந்துபார்.

ஞான மார்க்கத்தில் செல்லுகின்றவர்களுக்கு விளங்காத பரதத்துவம் பக்தி மார்க்கத்தில் போகின்றவர்களுக்கு விளங்குகிறது. ஏனென்றால் பரமன் பக்திவலையில் படுகிறான். ஞானிகளுக்கும் யோகிகளுக்கும் எட்டாத கிருஷ்ண பரமாத்மா கோபியர்களுக்கு எளியவன் ஆனது இதற்குச் சான்று ஆகும்.

னின்று नचिरात् நசிராத் விரைவில் समुद्धर्ता ஸமுத்தர்தா கரையேற்றுபவனாக भवामि பவாமி ஆகிறேன்.

ஆனால் யார் வினையனைத்தையும் எனக்கு அர்ப்பித்து, என்னையே பரகதியாகக்கொண்டு, சிதைவுறு யோகத்தால் என்னைத் தியானித்து வணங்குகிறார்களோ, சித்தத்தை என்பால் வைத்த அவர்களை, பார்த்தா, நான் மரண ஸம்ஸார ஸாகரத்தினின்று விரைவில் கரையேற்றுகிறேன்.

விசுவ ரூபத்தையுடைய ஈசுவரனைத் தவிர வேறு ஒன்றையும் பற்றுக்கோடாகக் கொள்ளாது அவனையே சார்ந்து யார் அவனுக்கென்றே பணி செய்யும் பான்மையுடையவர்களாயிருக்கிறார்களோ அவர்கள் பிறப்பு இறப்பு மயமாயுள்ள சம்சாரப் பெருங்கடலினின்று விரைவில் கரையேற்றப்படுகிறார்கள்.

3. முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் [தெதிரெழுந்தென்
னத்த னானந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் [பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமை யெல்லோ [மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.

முத்து அன்னவெள் நகையாய் முன்வந்து எதிர் [எழுந்து என்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துஉன் கடைதிறவாய்
பத்து உடையீர் ஈசன் பழ அடியீர் பாங்கு உடையீர்
புத்து அடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் [பொல்லாதோ
எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கு ஏல் ஓர் எம்பாவாய்.

உபநிஷத் மந்த்ரம்—78.

मच्चित्ता मद्गतप्राणा बोधयन्तः परस्परम् ।
कथयन्तश्च मां नित्यं तुष्यन्ति च रमन्ति च ॥

மச்சித்தா மத்கதப்ராணா போதயந்த: பரஸ்பரம் ।
கதயந்தஸ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச ॥

(பகவத்கீதோபநிஷதம் 10-9)

मच्चित्ताः மச்சித்தா: என் மீது சித்தம் வைத்தவர்கள் मद्गत प्राणाः மத்கத ப்ராணா: உயிரை என்பால் செலுத்திய வர்கள் मां மாம் என்னை परस्परं பரஸ்பரம் ஒருவருக்கொருவர் बोधयन्तः போதயந்த: விளக்கிக்கொள்பவர்கள் नित्यं நித்யம்

அள்ளூறி-வாயூறி. கடை திறவாய்-வாயிற் கதவைத் திறவாய். பத்து உடையீர்-பக்தி பூண்டிருப்பவர்களே. பொல்லாதோ-கேடாய் முடியுமோ. எத்தோ-ஏமாற்றமோ. சித்தம் அழகியார்-மனபரி பாகம் உடையவர்கள்.

முத்துப் போன்ற வெள்ளைப் பற்களையுடையவளே, எல்லார்க்கும் முன்னே வந்து எதிரில் எழுந்து நின்று என் தந்தை, ஆனந்தன், அமிர்த சொரூபி என்று வாயால் சொல்லி, வாயூற இனிய பேச்சுப் பேசுவாய். அத்தகைய நீ இன்னும் உறங்கிக்கொண்டிருக்கிறாய். எழுந்து வந்து உன் வீட்டு வாயிலின் கதவைத் திறப்பாயாக.

அயர்ந்து உறங்கிய மாது மறுமொழி கூறுகின்றாள்; நீங்கள் பக்தி நிறைந்தவர்கள். ஈசனுக்கு நெடிது அடிமை பூண்டவர்கள். ஒழுங்குப்பாடு மிகவுடையவர்கள். நாங்களோ புதிதாக அடிமை பூண்டவர்கள். எங்கள் குறைபாட்டைப் பொருள்படுத்தாது எங்களையும் உங்களோடு சேர்த்துக் கொண்டால் ஏதாவது தீங்கு விளையுமோ ?

எப்பொழுதும் கதயந்த: ச கதயந்த: ச கீர்த்தனம் செய்பவர்களாயும் துஷ்யந்தி ச துஷ்யந்தி ச திருப்தியடைகிறவர்களாயும் ரமந்தி ச ரமந்தி ச ஆனந்தமடைபவர்களாயுமாகிறார்கள்.

சித்தத்தை என்பால் வைத்து, உயிரை எனக்குரியதாக்கி, ஒருவர்க்கொருவர் என்னை விளக்கிக்கொண்டும், யாண்டும் என்னைப் புகழ்ந்து பேசியும், மன நிறைவடைந்தும் மகிழ்வடைந்துமிருக்கின்றனர்.

விரும்பிய பொருளில் மனதை வைப்பது மிக எளிது. தாய் தந்தையர்களிடத்திருந்து தங்களுக்கு எல்லாம் வந்தமைந்தனவென்று அறியும் குழந்தைகள் முழுமனதையும் அவர்களிடத்தே திருப்புகின்றனர். தனக்குத் தோற்றமும் இருப்பிடமும் பகவான் என்பதை அறிகிற பக்தன் தன்னுடைய உள்ளத்தை இறைவன்பால் வைக்கிறான். தான் வளர்ந்தபின் பெற்றோரைப்பேணப்பிள்ளை ஒருவன் தன் உயிரையே கொடுக்கிறான். உயிரினும் மிக்கதொன்று யாருக்குமில்லை. பக்தன் அதைப் பகவானுக்குக் கொடுக்கிறான். காதலன் காதலிக்கு உயிர்கொடுப்பதுபோன்றது அல்ல பக்தன்செயல். காதலில் தனி நலமும் தனியுரிமை

வந்தவர்கள்: எங்களை ஏமாற்றப் பார்க்கின்றாயா? இறைவன் பால் நீ கொண்டுள்ள இணக்கத்தை நாங்கள் அறிந்திலமோ?

மனபரிபாகம் அடைந்துள்ள பக்திமதிகள் நம் சிவனைப் போற்றிப் பாடமாட்டார்களா? நமக்கிடையில் பரஸ்பர நட்பும், சிவ பக்தியும் பெருக்கமும் தேவை. பாவை போன்ற பெண்ணே இக்கோட்பாடுகளை யெல்லாம் ஏற்றுக்கொள். அவைகளை எண்ணிப்பார்.

சிவபக்திக்கு ஸத் சங்கமும் சிரத்தையும் இன்றியமையாதவைகள்.

4. ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
வெண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ
[மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப்
[போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொரு
[ளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக்குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்.

ஒள் நித்திலம் நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணம் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ

யும் இருக்கின்றன. பக்தியில் மற்றவர்கள் எல்லாரும் சேரவேண்டுமென்று, தான் பகவானைக் காண்கிறவாறு மற்றவர்களுக்குப் பக்தன்விளக்குகிறான். மற்றவர்புகட்டுவதையும் தெவிட்டாது சுவைக்கிறான். அதைப்பலதடவை சொல்லுதலிலும் கேட்பதிலும் மகிழ்வு வருகிறது. ஆனால் சிற்றின்பம்போன்று அது முடிவில் மனக்கிலேசத்தையோ, குறையையோ உண்டுபண்ணுவதில்லை. பக்தியினால் என்றைக்கும் நிறைமனது அமையப்பெறுகின்றது. அந்த நிறைவில் ஆனந்தமும் ஓயாது ஊற்றெடுக்கிறது.

எண்ணிக் கொடு உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒரு மருந்தை வேதம் விழுப் பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துஉள்ளம்
உள்நெக்கு நின்றுஉருக யாம் மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயில் ஏல் ஓர் எம்பாவாய்.

ஒள் நித்தில நகையாய்-ஒளியுள்ள முத்தைப் போன்ற பல் வரிசையுடையாளே. வண்ணக்கிளி-அழகிய கிளி. அவமே-வீணே. மருந்தை-அமிர்தத்தை. விழுப்பொருள்-வேதங்களால் சொல்லப் படுகிற மேலான பொருள்.

வந்தவர்களுள் ஒருத்தி: ஒளியுள்ள முத்தைப்போன்ற பல் வரிசையுடையாளே, உனக்கு இன்னும் விடியவில்லையோ!

உறங்கிக்கொண்டிருந்தவள்: அழகிய கிளிமொழிபோன்ற மொழியை யுடையவரெல்லாரும் வந்திருக்கிறார்களா?

வந்தவள்: எண்ணிக்கையெடுத்துப் பார்த்து உள்ளபடி சொல்லுகிறோம். அதற்கிடையில் நீ கண்ணுறங்கிக் காலத்தை வீணில் போக்காதே. விண்ணுலகத்தவர்க்கு ஒப்பற்ற அமிர்தமா யிருப்பவனை, வேதங்கள் போற்றுகிற மேலான பொருளை, ஞானக் கண்ணுக்கு விருந்தாயிருப்பவனைப் புகழ்ந்துபாடி மனம் குழைந்து, மனம் நெகிழ்ந்து நின்று உருகுவாயாக.

இவ்வேண்டுதலுக்குச் செவி சாய்க்காது உறங்கியவள் இன் னும் கொஞ்சம் உறங்கப் போனாள். அதைக் கவனித்தாள் வந்தவள். அவள் கூறுகின்றாள், நாங்கள் வந்திருப்பவர்களையெல்லாம் கணக் கெடுத்துக் காலத்தை விரயம் செய்யோம். நீயே வந்து கணக்கிட் டுப் பார்த்துக்கொள். கூடியிருப்பவரது எண்ணிக்கை குறையு மாயின் நீயும் சென்று சயனிக்கலாம். பாவைபோன்ற பாங்கியே, செய்யத்தக்கது எது என்று சொல்லுவதை ஏற்றுக்கொள். பின்பு அதை எண்ணிப்பார்.

தமோகுண விருத்தியுள்ள ஜீவாத்மன் வீண் காலம் போக்குதற்குச் சாக்குக் கண்டுபிடிக்கிறான். ஊக்க முடையவர் அதற்கு உடந்தையாகார்.

5. மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மால் அறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போல் அறிவோம் என்று உள்ள பொக்கங்களே பேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவு அரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலம்குழலி பரிசு ஏல் ஓர் எம்பாவாய்.

உபநிஷத் மந்த்ரம்—79.

आश्चर्यवत्पश्यति कश्चिदेनं आश्चर्यवद्वदति तथैव चान्यः ।
आश्चर्यवच्चैनमन्यः श्रुणोति श्रुत्वाप्येनं वेद न चैव कश्चित् ॥

ஆஸ்சர்யவத்பச்யதி கஸ்சிதேனம்
ஆஸ்சர்யவத்வததி ததைவ சான்ய: ।
ஆஸ்சர்யவச்சைனமன்ய: ச்ருணோதி
ச்ருத்வாப்யேனம் வேத ந சைவ கஸ்சித் ॥

(பகவத்கீதோபநிஷதம் 2-29)

कश्चित् கஸ்சித் ஒருவன் एनं ஏனம் இவ்வாத்மாவை आश्चर्यवत् ஆஸ்சர்யவத் ஆச்சரியமானதுபோல पश्यति பச்யதி காண்கிறான் तथा एव च ததா ஏவ ச அங்ஙனமே अन्यः அன்ய: இன்னொருவன் आश्चर्यवत् ஆஸ்சர்யவத் ஆச்சரியம்போல वदति வததி பேசுகிறான் अन्यः च அன்ய: ச வேறு ஒருவன் एनं ஏனம் இவ்வாத்மாவை आश्चर्यवत् ஆஸ்சர்யவத் ஆச்சரியம் போல श्रुणोति ச்ருணோதி கேட்கிறான் कश्चित् च கஸ்சித் ச

பொக்கங்கள் - பொய்யானவைகள். படிறீ - வஞ்சகமுடைய வளே. கடைதிறவாய்-வாயில் கதவைத் திறப்பாயாக. ஞாலம்- பூமி. கோதாட்டும்-குற்றங்களை நீக்கும். ஓலம் இடினும்-முறையிட்டு அழுதாலும். ஏலம் குழலி-மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடையவளே.

பரமசிவம் என்னும் மலைபோன்ற பெரிய பொருள் முழுதையும் மால், அயன் போன்ற தேவர்களே தெரிந்துகொள்ளவில்லை யென்றால், மானுடமாதர்களாகிய நம்போன்றவர்கள் எங்ஙனம் அறியப்போகின்றோம்! அறிய முடியும் என்றால் நம் பேச்சு வெறும் பொய்ப்பேச்சு ஆகும். பால் ஊறுவது போன்றும் தேன் சொட்டு வது போன்றும் இன் சொல்லைப் பேசுகின்றாய். ஆனால் இறை வழி பாட்டில் வஞ்சகமுடையவளே, உன் வீட்டு வாயில் கதவைத் திறப் பாயாக. மண்ணுலகும், விண்ணுலகும் மற்ற உலகங்களும் அவனை முற்றும் அறியமாட்டா. அத்தகைய அரிய பெரிய பொருளின் அழகை நம் அறிவுக்கு எட்டியவாறு பாடுவோம். நம்மை அவன் எப் படி ஆட்கொண்டிருக்கிறான் என்பதையும் நம்மை எப்படித் திருத்தி யமைத்துச் சீர்படுத்தும் நல்லொழுக்கம் உடைத்திருக்கிறான் என்ப தையும் போற்றுவோம். மயிர்ச்சாந்தணிந்து கூந்தலை அலங்கரித் துக்கொண்டு அயர்ந்து உறங்குபவளே, நாங்கள் சிவனே சிவனே என்று உரக்கக் கத்தினாலும் நீ துயில் எழுந்திருக்க மாட்டாய்,துயில்

மற்றும் ஒருவன் श्रुत्वा अपि ச்ருத்வா அபி கேட்டாலும் एनम् ஏனம் இவ்வாத்மாவை न एव वेद ந ஏவ வேத அறிகிறதே யில்லை.

இவ்வாத்மா வியப்புக்குரியதென்று விழிக்கிறானொருவன், இது என்ன விந்தையென்று விள்ளுகிறான் வேறு ஒருவன், ஆச்சர்யம் என்று காதுகொடுக்கிறான் இன்னொருவன், மற்றொருவன் இதைக் கேட்டும் அறிந்திலன்.

கட்புலனாகின்ற உலகப் பொருள்களைப் போன்ற தன்று ஆத்மா. பொறி புலன்களுக்கு அதீதத்திலுள்ளதை ஆராய்ச்சி செய்யும் வாய்ப்பே ஆயிரத்தில் ஒருவனுக் குக் கிடைப்பதரிது. ஆகையால் ஆத்ம விசாரம் செய்கின் றவர்களே ஆச்சரியத்திற்குரியவர்களாம். மனபரிபாகம் ஏற்படாமையால் அவர்களில் பெரும்பான்மையோருக்கு ஆத்ம தத்துவம் விளங்குவதில்லை. அழுக்குப் படிந்த கரடுமுரடான கண்ணாடியின் வாயிலாக விளக்கு வெளிச்

எழுந்திருக்கமாட்டாய். பாவை போன்ற பெண்ணே, சிவதத்துவம் எவ்வளவு சீரியது என்பதை ஏற்றுக் கொள், பிறகு அதை ஓர்ந்து பார்.

தமோகுணத்தில் ஊறியிருக்கும் ஜீவாத்மாவுக்குப் பரதத்துவம் பிடிபடாது.

6. மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணுமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றே
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் [கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய் [திறவா

சம் சிதைந்து வெளிவருவது போன்று ஆத்ம சொரூபம் அவர்களுக்கு விளங்கியும் விளங்காமலும் இருக்கிறது. தியானவஸ்தையில் அல்லது விழிப்பில் அதைக் கண்டதாக எண்ணிக்கொண்டு ஒருவன் வியப்படைகிறான். காணுதல், கேட்டல், எண்ணுதல் ஆகிய இத்தனை விதங்களிலும் அதைப்பற்றி ஆச்சரியப்படுவது இயல்பு. எத்தனை விதங்களில் பார்த்தாலும், கேட்டாலும், எண்ணினாலும் அது தென்பட்டும் தென்படாமலும் இருக்கிறது. மனது என்னும் திரையையுடைய மனிதரில் ஆத்மாவை உள்ளபடி அறிந்தவர் யார்?

உபநிஷத் மந்த்ரம்—80.

स्थाने हृषीकेश तव प्रकीर्त्या जगत्प्रहृष्यत्यनुरज्यते च ।
रक्षांसि भीतानि दिशो द्रवन्ति सर्वे नमस्यन्ति च सिद्धसङ्घाः ॥

ஸ்தானே ஹ்ருஷீகேச தவ ப்ரகீர்த்யா
ஜகத்ப்ரஹ்ருஷ்யத்யனுரஜ்யதே ச ।
ரக்ஷாம்ஸி பீதானி திசோ த்ரவந்தி
ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்தஸங்கா: ॥

(பகவத்கீதோபநிஷதம் 11-36)

ஹூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேஞேர்க்குந் தங்கோனைப் பாடேலோ
[ரெம்பாவாய்.

மானே நீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணுமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்ரு
வானே நிலனே பிறவே அறிவு அரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்
[டருளும்
வான் வார்கழல்பாடி வந்தோர்க்கு உன்வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப்பாடு ஏல் ஓர் எம்பாவாய்.

நென்னலை-நேற்று. திசை-திக்கு. தலையளித்து-காப்பாற்றி. வான்-மிகவுயர்ந்த. வார்கழல்-நீண்ட கழலை அணிந்துள்ள திருவடி. ஊன்-உடல் முழுதும்.

हृषीकेश ஹ்ருஷீகேச ஹிரிஷீகேசா तव தவ தம்முடைய प्रकीर्त्या ப்ரகீர்த்யா புகழ்ச்சியில் जगत् ஜகத் ஜகத்தானது प्रहृष्यति ப்ரஹ்ருஷ்யதி மகிழ்ச்சியடைகிறது अनुरज्यते च அனுரஜ்யதே ச ஆனந்தமடைகிறது रक्षांसि ரக்ஷாம்ஸி ராக்ஷஸர்கள் भीतानि பீதானி பீதியடைந்தவர்களாய் दिशः திசः திசைகளில் द्रवन्ति த்ரவந்தி ஓடுகிருர்கள் सिद्धसङ्घाः ஸித்தஸங்கா: சித்தர்கள் सर्वे ஸர்வே எல்லாரும் नमस्यन्ति च நமஸ்யந்தி ச நமஸ்கரிப்பதும் स्थाने ஸ்தானே உமது ஸ்தானத்துக்கு ஏற்றது.

ஹிரிஷீகேசா, உமது புகழில் உலகம் இன்புற்று மகிழ்கிறது; ராக்ஷஸர்கள் அஞ்சி நாலாபக்கமும் ஓடுகிருர்கள்; சித்தர் கணங்கள் எல்லாரும் உம்மை வணங்குகிருர்கள். இவை யாவும் பொருத்தமானவைகளேயாம்.

முன்பு காணுத மோட்டார்வண்டி முதலியவற்றை நாட்டுப்புறத்தார் பார்த்தால் உடனே அச்சம் கொள்ளுதல் இயல்பு. காணுத அற்புதச் செயலை முதன் முதல் கண்டதும் அதனிடத்துப் பீதி கொள்ளுதல் அறிவிலிகளின் இயல்பு. ராக்ஷஸர்கள் இறைவனைப்பற்றி ஞானமில்

"நாளைக்கு நானே வந்து உங்களை எழுப்புவேன்" என்று பெண்ணே, நீ நேற்றுச் சொன்ன சொல்லை வெட்கமின்றி எத்திக்கில் போக விட்டாய்? இன்னமும் விடியவில்லையோ? விண்ணுலகத்தவரும், மண்ணுலகத்தவரும், மற்ற உலகத்தவரும் அறிந்து கொள்ளமுடியாத மகாதேவன் வலிய வந்து எங்களைக் காப்பாற்றி அடிமை கொண்டருளினன். அவனுடைய மேலாம் திருவடியை நாங்கள் பாடிக்கொண்டு வருகிறோம். எங்களுக்கு உன் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசமாட்டாயா? உன் உடல் அன்பில் குழைந்து உருகாதோ? இத்தகைய புல்லிய பான்மை அலாதியாக உன்னுடையது போலிருக்கிறது! வந்திருக்கிற எங்களை முன்னிட்டாவது இறைவனைப் புகழ்ந்து பாடு. பாவை போன்ற பாங்கியே, பக்திமதி ஒருத்திக்கு இத்தகைய பாங்கு பொருந்தாது என்னும் கோட்பாட்டை ஏற்றுக்கொள், அதை எண்ணிப்பார்.

செய்த தீர்மானப்படி நடந்துகொள்ள தமோகுண விருத்தியுடைய ஜீவனுக்குச் சாத்தியமாவதில்லை.

லாதவர்கள்; அகங்கரித்து அடாத செயலில் ஈடுபடுபவர்கள். அத்தகையவர் இறைவனது உலக நடைமுறையைத் தொகுத்துக் காணுமிடத்து நடுங்கி நாலா பக்கமும் ஓடுவார்கள். மோட்டார் வண்டி ஒன்றன் அமைப்பையும், பயனையும் அறியுமளவு மக்கள் அதை மெச்சுவார்கள். அங்ஙனம் பகவானின் மகிமைகளைத் தெரிந்துகொள்ளுமளவு பக்தர்கள் அவனைப் போற்றிப் புகழ்வார்கள். அப்படிச் செய்வதில் அவர்களுக்குப் பெருமகிழ்வு உண்டாகிறது. இனி, மோட்டார் வண்டியைப் பயன்படுத்துபவரோ ஒரு சிறு கூட்டத்தார். பகவானை வணங்கி அவனிடத்து யோகம் செய்து அவனுக்கு உரியவர் ஆகின்றவர்கள் சித்தர்கள். அங்ஙனம் எல்லா நிறைநிலையும் அவர்கள் எய்துகின்றனர். உலகை அறிகின்றவளவு ஒருவன் உலகைப் பயன்படுத்துகிறான். பகவானை அறிகின்றவளவு ஒருவன் பண்பும், பயனும் அடைகிறான். இது அர்ஜுனனுக்கு அனுபவபூர்வமாக இப்பொழுது விளங்குகிறது. ஆக ராக்ஷஸர் முதல் சித்தர் ஈறாக அவரவர் அறிவுக்கு எட்டியவாறு கடவுளோடு இணக்கம் வைப்பது யுக்தமானதே என்று பார்த்தன் பகர்கிறான்.

7. அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீ ரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென்
[றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந்
[துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இரும் சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய் திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகு ஒப்பாய்
என்னானை என் அரையன் இன் அமுது என்று
[எல்லோமும்
சொன்னோம் கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்நெஞ்சம் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின்பரிசு ஏல் ஓர் எம்பாவாய்.

உன்னற்கு-எண்ணுதற்கு. ஒருவன்-ஒப்பு உயர்வு அற்றவன். இரும்சீரான்-பெருஞ் சிறப்பையுடையவன். சின்னங்கள்-காளம் ஊதும் ஒலி. என்னானை-எனக்கு இனியவனை. அரையன்-அரசன்.

அம்மா, இப்படியும் சில இயல்புகள் உன்னிடம் இருக்கின்றனவா? தேவர்கள் பலரால் நினைத்தற்கரியவனும், ஒப்பு உயர்வு அற்றவனும், பெருஞ் சிறப்பு உடையவனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளி வருவதற்கு அடையாளமாகக் காளம் ஊதும் ஒலி கேட்டவுடனே 'சிவ' என்று நீ வாய் திறப்பாயே! தென்னா என்று அவன் பெயரைச் சொல்லுதற்கு முன்பே தீயிலிட்ட மெழுகுபோல மனம் உருகுவாயே! அத்தகையவளாகிய உனது முன்னிலையில் எனக்கு இனியவன் என்றும், என் அரசன் என்றும், இனிய அமுதன் என்றும் நாங்கள் எல்லாரும் தனித்தனியே சொன்

னேம். அவையெல்லாம் கேட்டும் இன்னும் உறங்கிக்கொண்டிருக்கிருயா ? கல்நெஞ்சத்தையுடைய அறிவிலிகள் போல நீ உணர்ச்சியற்றுக் கிடக்கின்ருயே! நித்திராதேவியின் தன்மை இத்தகையதோ !

ஆத்மபோதம் அடையப்பெருதவர்கள் ஜடம் போன்று கிடக்கின்றனர். தீசேர் மெழுகு ஒத்த மனம், மகாபாவம் 6ல் இடம் பெறுகிறது. பக்கம் 39ல் காண்க.

8. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கே ழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணே
கேழில் விழுப்பொருள்கள் பாடினேங்
[கேட்டிலேயோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாருே
வூழி முதல்வனுய் நின்ற வொருவனே
யேழைபங் காளனேயே பாடேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெள்சங்கு எங்கும்
கேழ் இல் பரஞ்சோதி கேழ்இல் பரங்கருணே
கேழ்இல் விழுப்பொருள்கள் பாடினேம் கேட்டிலேயோ
வாழி ஈது என்ன உறக்கமோ வாய் திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆம் ஆறும் இவ்வாருே
ஊழி முதல்வனுய் நின்ற ஒருவனே
ஏழை பங்காளனேயே பாடு ஏல் ஓர் எம்பாவாய்.

சிலம்ப-ஒலி செய்ய. குருகு-பறவைகள். ஏழில் இயம்ப-ஏழிசை போன்று ஒலிக்க. கேழ்இல்-ஒப்பு இல்லாத. வாழி-நீ வாழ்வாயாக. ஆழியான்-கருணை என்ற கடலை உடைத்திருப்பவன். ஏழை-பெண், உமாதேவி.

கோழிகள் கூவுகின்றன; பறவைகள் ஒலித்து ஏழுவித இசை போல நாதம் செய்கின்றன; வெள்ளைச் சங்குகள் முழங்குகின்றன; உவமையில்லாத பரஞ்சோதி, உவமையில்லாத கருணை, உவமையில்லாத மேலாம் பொருள்—இத்தகைய சிவனை நாங்கள் பாடு

கிறோம்—இவையாவையும் நீ கேட்க வில்லையோ? நீ வாழ்ந்திருப்பா யாக. இதுவும் ஓர் உறக்கமோ? இதைக் கொஞ்சம் எடுத்துச்சொல், கேட்போம். கருணைக் கடலாகிய சிவனிடத்து அன்பு வைப்பது இம்முறையில் தானே? பிரளயத்தில் அனைத்தும் ஒடுங்குகையில் எஞ்சியிருப்பவன் அவன் ஒருவனே. அவன் உமாதேவியின் சமே தன். அத்தகையவனது மகிமையைப் பாடுகிறோம். தோழி, நீ ஏற்றுக்கொள். ஓர்ந்து பார்.

9. முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்
[பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோ
முன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே
[பாங்காவோ
மன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோ
மின்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன்சீர் அடியோம்
உன் அடியார் தாள் பணிவோம் ஆங்கு அவர்க்கே
[பாங்கு ஆவோம்
அன்னவரே எம் கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏல் ஓர் எம்பாவாய்.

பேர்த்தும்-மீட்டும். பாங்கு-தோழமை. பரிசே-வண்ணமே. தொழும்பாய்-பணிவாயும் அன்பாயும். நல்குதியேல்-அருள்வா யானல்.

பழையவைகளிலெல்லாம் மிகப்பழையவனே, பின்பு புதிய வைகளிலெல்லாம் மறுபடியும் புதிய இயல்போடிருப்பவனே, உன் னைத் தலைவனாகப் பெற்ற நாங்கள் உன் சிறப்பு வாய்ந்த திரு வடிக்கே உரியவர் ஆகின்றோம். உனக்கு ஆட்பட்டவர்களின்

பாதங்களை வணங்குவோம். அவ்விடத்து அவர்களை அனுசரித்து ஒழுகுவோம். அத்தகையவர்களே எங்களுக்குக் கணவன்மார்கள் ஆவார்களாக. அவர்கள் விரும்பிச் சொன்ன வண்ணமே தொண்டராய்ப் பணி செய்வோம். இந்தப் பிரகாரம் எங்கள் இறைவா, எங்களுக்குக் கிருபை புரிவாயாயின், எங்களுக்குக் குறைபாடு ஒன்றுமிராது. வாழ்க்கைக்குரிய இப்பாங்கைப் பெண்ணே, நீ ஏற்றுக் கொள். இதை எண்ணிப் பார்.

பக்திமதிகளாகிய பெண்பாலர்க்குப் பக்திமான்களாகிய கொழுநர்கள் கிடைப்பாராகில் அது பெறுதற்கரிய பேரும்.

இறைவன் அனைத்துக்கும் தொல்லோனுயும், அனைத்துக்கும் புதியவனுயும் இருப்பது அவனது இயல்பே.

10. பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலு
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்
[பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

பாதாளம் ஏழினும் கீழ் சொல் கழிவு பாதமலர்
போதுஆர் புனை முடியும் எல்லாம் பொருள் முடிவே
பேதை ஒரு பால் திருமேனி ஒன்று அல்லன்
வேதம் முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டர் உளன்
கோது இல் குலத்து அரன் தன் கோயில் பிணாப்
[பிள்ளைகாள்
ஏது அவன் ஊர் ஏது அவன் பேர் ஆர் உற்றார்
[ஆர் அயலார்
ஏது அவனைப் பாடும் பரிசு ஏல் ஓர் எம்பாவாய்.

சொல்கழிவு - சொல்லைக் கடந்தது. போது ஆர்புனை - மலர்களால் நிரம்ப அலங்கரிக்கப்பட்ட. ஓதஉலவா-சொல்லில் முற்றுப்பெறாத. கோது-குற்றம். பிணா-பெண்.

சொற்கொண்டு விளக்கமுடியாதபடி அவனுடைய திருவடிகள் பாதாளங்கள் அனைத்துமாயிருக்கின்றன. பூவால் நிரம்ப அலங் கரிக்கப்பட்டிருக்கிற திருமுடியோ எல்லாப் பொருள்களுக்கும் முடி வானதே. உமாதேவியாரின் சமேதனுதலால் அவனுக்கு மேனி ஒன்று அன்று. அவனை முற்றும் விளக்க வேதங்களுக்கும், தேவர் களுக்கும், மக்களுக்கும் இயலாது. சொல்லில் அடங்காத உயிர்த் தோழன் அவன். தொண்டர் உள்ளத்தில் அவன் தெளிவுற இலங்கு கின்றான். குற்றமில்லாத ஏற்றத்தையுடைய ஹரன் அவன். அவ னது ஆலயத்திலுள்ள பெண்பிள்ளைகளே, அவனுக்கு ஊர் இல்லை, பேர் இல்லை, உறவினர் இல்லை, வேற்றார் இல்லை. அவனை முழுதும் விளக்கிப் பாடும் விதம் கிடையாது. மாதே, அவனது மகிமையை ஏற்றுக்கொள். பின்பு ஓர்ந்து பார்.

சேதனம் அசேதனம் ஆகிய அனைத்துமாயிருப் பவன் பரமன். அவனுக்குப் புறம்பாக ஒன்றுமில்லை. அவனை முழுதும் விளக்கமுடியாது.

உபநி—6. பக்கம் 109ல் காண்க.

11. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
யையாவழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்
[போற்
செய்யாவெண் ணீருடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
வையாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்
[தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய்.

மொய் ஆர் தடம் பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல் பாடி
ஐயா வழி அடியோம் வாழ்ந்தோம் காண் ஆர் அழல்
[போல்
செய்யா வெள் நீறுஆடி செல்வா சிறுமருங்குல்
மைஆர் தடம் கண் மடந்தை மணவாளா

ஐயா நீ ஆள்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்து ஒழிந்தோம்.
எய்யாமல் காப்பாய் எமை ஏல் ஓர் எம்பாவாய்.

மொய் ஆர்-கூட்டம் நிறைந்த. தடம்பொய்கை-அகன்ற தடாகம். முகேர்-நீர் இறைப்பதால் உண்டாகும் ஒலி. குடைந்து குடைந்து-மூழ்கி மூழ்கி. வழி அடியோம்-பரம்பரை பக்தர்கள். ஆர் அழல்போல்-நிறைந்த நெருப்புப்போல. செய்யா-சிவப்பு நிறமானவனே. மருங்குல்-இடை. ஐயா-அழகனே. உய்ந்து ஒழிந்தோம்-உய்ந்தேவிட்டோம். எய்யாமல்-அருள் நாட்டத்தில் சோர்வடையாமல்.

நீராடுதற்குக் கூடியுள்ள நாங்கள் நிறைந்ததும் அகன்றதுமான தடாகத்தில் இறங்கி, முகேர் என்னும் ஒலியுண்டுபண்ணிக் கொண்டு மூழ்கி மூழ்கி நீராடிவிட்டு உன் திருவடியைப் புகழ்ந்து பாடுகிறோம். அப்பனே! பரம்பரை பரம்பரையாக உன் அன்பர்களாகிய நாங்கள் உறுதியாக உன் அருளில் ஊறி வாழ்ந்து வருகிறோம். சுடர்விடுகிற தீப்போன்ற செம்மேனியனே, வெண்ணீறு பூசியவனே, மகிமை அனைத்துக்கும் இருப்பிடமே, ஒடுங்கிய இடையும் மை பூசிய அகன்ற கண்களும் உடைய உமாதேவியாரின் தலைவா, அழகனே, உயிர்களை ஆட்கொண்டருளுதல் உன் விளையாட்டாகும். அதன்படி நாங்கள் எல்லாரும் உறுதியாகவே உய்வு அடைந்திருக்கிறோம். உனது வழிபாட்டில் நாங்கள் தளர்வடையாமல் இருக்கும்படி காத்தருள்வாயாக. பெண்ணே இக்கருத்துக்களை ஏற்று ஓர்ந்து பார்.

12. ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல்
[வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான்
[பொற்பாத
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்து ஆடும்
தீர்த்தன் நல் தில்லைச்சிற்றம்பலத்தே தீ ஆடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பு அரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டு ஆர்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்து உடையான்
[பொன்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீர் ஆடு ஏல் ஓர் எம்பாவாய்.

ஆர்த்த-கட்டிய. ஆர்த்து-மகிழ்ந்து. தீர்த்தன்-பரிசுத்தன். கங்காதரன். तीर्थकर: தீர்த்தகரன் - சிவனுருடைய பெயர்களில் ஒன்று. குவலயமும்-மண்ணுலகும். கரந்தும்-சம்மாரம் செய்தும். வளைசிலம்ப-வளையல் ஒலிக்க. வார்கலைகள்-பெரிய ஒட்டியாணங்கள். ஆர்ப்பு அரவம்-பெருமித ஓசை. குடைந்து-மூழ்கி. ஏத்தி-துதித்து இருஞ்சுனை நீர் ஆடு-பெரிய சுனை நீரின்கண் மூழ்குவோம்.

நம்மைப் பிணித்துள்ள பிறவித்துன்பம் ஒழியட்டும். நாம் மகிழ்ந்து ஆடுவது பரிசுத்தனுகிய நல்ல தில்லைச் சிற்றம்பலத்தில் ஞானக்கனியெடுத்து ஆடுகிற கூத்தனைக் குறித்தாகும். விண்ணுலகு, மண்ணுலகு ஆகிய அனைத்தையும் படைத்துக் காத்து அழித்தலை அவன் விளையாட்டாகச் செய்கிறுன். அவன் புகழையே சொல்லி வளையல் ஒலிக்கவும் பெரிய ஒட்டியாணங்கள் பெருமிதமாக ஒலிக்கவும், அழகிய கூந்தலின் மேல் வண்டுகள் முழங்கவும் மலர்கள் நிறைந்துள்ள பொய்கையில் நீராடி, இறைவனது பொன்னடியைத் துதித்துப் பெரியசுனை நீரின்கண் மூழ்குவோம். மாதே, இக்கருத்துக்களை ஏற்கவும் ஓர்ந்து உரைரவும் செய்வாயாக.

13. பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப்
[பைம்போதா
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலிஞ
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்
[றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்

கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்
[பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

பைங் குவளைக் கார்மலரால் செங்கமலப்பைம் போதால்
அங்கம் குருகு இனத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினுல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த
பொங்கு மடுவில் புகப் பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்து ஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயம்பூம் புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம்பாவாய்.

பைங்குவளைக் கார் மலரால்-செழுமை வாய்ந்த நீலோத்பலப் பூவால். அங்கம்-அழகு. குருகு-நீர்ப்பறவை. அரவத்தால்-பாம்பால் பொங்கு மடுவில்-நீர் பொங்குகின்ற தடாகத்தில். சங்கம்-சங்கினுலாகிய வளையல். சிலம்பு-காலணி. பொங்க-பூரிக்க. குடையும்-மூழ்குகின்ற. பங்கயம்-பங்கஜம், தாமரை.

மடுவில் புதிய நீலோத்பலமும் புதிய செந்தாமரையும் நிறைந்திருக்கின்றன. அழகிய நீர்ப்பறவைகள் ஆங்கு ஓலமிடுகின்றன. பாம்பு பின்னல் போடுகிறது. உடலின் அழுக்கைப் போக்குபவர்கள் அங்கு வந்து கூடுகின்றனர். ஆதலால் சிவசக்தி சொரூபமாக அத்தடாகம் தென்படுகிறது. அதில் நாம் குதித்துக் குதித்து நீராடுவோம். நமது சங்கு வளையல்களும் கால் சிலம்புகளும் சேர்ந்து ஒலிக்கட்டும். நமது ஸ்தனங்கள் பூரிப்பு அடையட்டும். நாம் மூழ்குவதால் நீர் பொங்கட்டும். இத்தகைய புஷ்கரிணியில் நீராடுவோமாக. பாவையே இக்கருத்துக்களை ஏற்றுக்கொள்; பின்பு ஓர்ந்து பார்.

இந்த மடுவானது அர்த்தநாரிசுவர சொரூபமாகக் காட்சி கொடுக்கிறது. கருங்குவளைப் பூ அம்பிகையின் மேனி போன்றது. செந்தாமரையோ சிவனுரது மேனி போன்றது. பாம்பு ஆங்கு நெளிந்து கொண்டிருக்கிறது. நீராட வருபவர்கள் தங்கள் அக்ஞான மலத்தைப் போக்க வருபவர் ஆகின்றனர்.

14. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்.

காதுஆர் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதம்புனல் ஆடிச் சிற்றம்பலம் பாடி
வேதம் பொருள் பாடி அப்பொருள் ஆமா பாடிச்
சோதி திறம் பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி அந்தம் ஆமா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்து எடுத்தபெய்வளை தன்
பாதம் திறம்பாடி ஆடு ஏல் ஓர் எம்பாவாய்.

குழை-தோடு. கலன்-கலம், ஆபரணம். கோதை குழல்-பூமாலையை அணிந்த கூந்தல். வேதப் பொருள்-ஈசுவரன். தார்-பூமாலை. பேதித்து-வேறுபடுத்தி. பெய்வளைதன்-பராசக்தியின்

உபநிஷத் மந்த்ரம்—81.

उद्गीतमेतत्परमं तु ब्रह्म तस्मिंस्त्रयं सुप्रतिष्ठाऽक्षरं च ।
अत्रान्तरं ब्रह्मविदो विदित्वा लीना ब्रह्मणि तत्पराः योनिमुक्ताः ॥

உத்கீதமே தத்பரமம் து ப்ரஹ்ம தஸ்மின்ஸ்த்ரயம்
ஸுப்ரதிஷ்டாऽக்ஷரம் ச ।
அத்ராந்தரம் ப்ரஹ்மவிதோ விதித்வா லீனு
ப்ரஹ்மணி தத்பரா: யோனிமுக்தா: ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 1—7)

एतत् परमं ब्रह्म ஏதத் பரமம் ப்ரஹ்ம அது பரப்பிரம்மம் என்று उद्गीतं உத்கீதம் தெளிவுறச் சொல்லப்பட்டிருக்கிறது! तस्मिन् தஸ்மின் அதன்கண் त्रयं த்ரயம் மும்மை உண்டு सुप्रतिष्ठा சுப்ரதிஷ்டா அது உறுதியான ஆதாரம் अक्षरं च

காதில் அணிந்துள்ள தோடுகள் ஆடவும், பசும்பொன்னு லாகிய மற்ற ஆபரணங்கள் ஆடவும், பூமாலை பூண்டுள்ள கூந்தல் ஆடவும், அதை நாடி வந்துள்ள வண்டின் கூட்டம் ஆடவும் நாம் குளிர்ந்த நீரில் முழுகி நீராடுவோம். பின்பு சிற்றம்பலத்தானைப் போற்றுவோம். வேதம் அவனை விளக்குகிறது. நாம் அவனை அடையவேண்டும். அவன் ஞான ஜோதிமயன். ஜடாபாரத்தில் அவன் கொன்றை மாலையை அணிந்திருக்கிறான். பிரபஞ்சத்துக்கு முன்பு இருந்தவனும் பின்பு இருப்பவனும் அவனே. நம்மைப் பிரபஞ்சத்தினிடத்திருந்து வேறுபடுத்திக் காப்பாற்றியருள்கிற அன்னை பராசக்தியின் மகிமையைப் பாடவும் ஆடவும் செய்வோமாக.

நாம் சிவத்தோடு சேர்தலைத் துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய மூன்று சம்பிரதாயங்களும் மூன்று முறைகளில் விளக்குகின்றன. ஜீவாத்மாவைப்

அக்ஷரம் ச அது அழிவற்றது' अत्र अन्तरं அத்ர அந்தரம் அதன் ஸாரத்தை ब्रह्मविद: ப்ரஹ்மவித: பிரம்மஞானம் நாடுகிறவர்கள் विदित्वा விதித்வா அறிந்து तत्पराः தத்பரா: அதையே நாடி நிற்கின்றனர் ब्रह्मणि लीनाः ப்ரஹ்மணி லீனா: பிரம்மத்தில் ஒடுங்குகின்றனர் योनिमुक्ताः யோனிமுக்தா: பிறப்பினின்று முக்தியடைகின்றனர்.

அது பரபிரம்மம் என்று தெளிவுறச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் கண் மும்மை உண்டு. அதுவே உறுதியான ஆதாரம். அது அழிவற்றது. அதன் ஸாரத்தை அறிகிற ஞானிகள் அதையே நாடி நிற்கின்றனர். பிரம்மத்தில் அவர்கள் ஒடுங்குகின்றனர். பிறப்பினின்று அவர்கள் முக்தியடைகின்றனர்.

ஜகத், ஜீவன், பரம் ஆகிய மூன்றுபொருள்களாக அது மிளிரும்பொழுது அப்பரபிரம்மம் ஈசுவரன் என்று இயம்பப்பெறுகிறது. முக்காலம், மூன்று அவஸ்தைகள், மூன்று குணங்கள், கால-தேச-நிமித்தம் ஆகிய ஏனைய மும்மைகளும் ஆங்கு இடம்பெறுகின்றன. ஜகத்தும் ஜீவனும் அவனிடத்துத் தோன்றிப் பின்பு அவனிடத்தே ஒடுங்குவதால் அவன் பிரபஞ்சத்துக்கு முன்பு இருந்த

பிரகிருதியினிடத்திருந்து பிரித்தெடுத்துப் பரம்பொருளோடு சேர்ப்பது பராசக்தியின் சீரிய செயலாம்.

15. ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே
[நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
[தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறு
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும்
[வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ
[ரெம்பாவாய்.

ஓர் ஒருகால் எம்பெருமான் என்று என்றே நம்
[பெருமான்
சீர் ஒருகால் வாய் ஓவாள் சித்தம் களிகூர
நீர் ஒருகால் ஓவா நெடும் தாரை கண் பனிப்பப்
பார் ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்
[பணியாள்
பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆம் ஆறும்
ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்
[தாள்
வார் உருவம் பூண் முலையீர் வாய் ஆர நாம் பாடி
ஏர் உருவம் பூம் புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர்
[எம்பாவாய்.

சீர்-பெருமை. வாய் ஓவாள்-வாயால் உச்சரித்தலை நிறுத்த மாட்டாள். ஓவா-இடையறாமல். தாரை-நீர்ப்பெருக்கு. கண் பனிப்ப-கண்ணினின்று துளி அரும்ப. பார்-பூமி. விண்ணோரைத்

வனும் பின்பு இருப்பவனும் ஆகிறான். மும்மைகளினின்று விடுபடுவது முக்தி. இதற்கு ஈசனும் அவனுடைய அருள் ஆகிய அம்பிகையும் துணைபுரிகின்றனர்.

தான் பணியாள்-வேறு மேலோர் யாருக்கும் வணங்காள். பேர் அரையற்கு-பெரிய இறைவன் பொருட்டு. ஆர் ஒருவர்-யார் ஒருவர். வித்தகர்-ஞான வடிவினர். வார்-கச்சு. உருவ-அணியப் பெற்று பூண்-பூண் அணிந்த. ஏர் உருவம்-அழகிய வடிவம். பூம் புனல்-மலர்கள் செறிந்த நீர்.

எம்பெருமான் என்றே ஒருவேளையில் சொல்லிக்கொண்டிருப்பாள். மற்றொருவேளையில் நம்பெருமானது பெருமையை ஓயாது வாயால் உச்சரித்துக்கொண்டே இருப்பாள். மனதில் களிப்பு ஓங்குவதை முன்னிட்டு மற்றொரு வேளையில் கண்ணீர் பெருக்கிய வண்ணமாயிருப்பாள். இன்னொருவேளையில் பூமியில் விழ்ந்து கிடப்பாள். எவ்வளவு பெரியவராயிருந்தாலும் வேறு யாரையும் மதிக்கமாட்டாள். இறைவனிடத்தே பித்துக்கொண்டிருப்பாள். ஓர் உயிரை இப்படி முற்றிலும் தன்மயமாக்கிக்கொள்ளும் ஞான வடிவினர் யாராயிருக்கக் கூடும்? கச்சும் பூணும் அணிந்த ஸ்தன பாரத்தையுடைய பெண்களே, நம் இறைவனுரை வாயார ஸ்தோத்திரம் பண்ணி அழகிய பூ நிறைந்த பொய்கையில் குதித்து நீராடுவோம். பெண்ணே, இவையெல்லாம் ஏற்கவும் எண்ணிப்பார்க்கவும் செய்வாயாக.

பக்கம் 39ல் மஹாபாவம், 7 (1) (7), 10 (7) ஆகியவைகளைப் பார்க்க.

16. முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா
[ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்
[பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள்
[இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன் அம் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்

என்னச் சிலை குலவி நம் தம்மை ஆள்உடையாள்
தன்னில் பிரிவு இலா எம் கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன் அருளே
என்னப் பொழியாய் மழை ஏல் ஓர் எம்பாவாய்.

முன்னி-முற்பட்டு. இட்டிடையின்-சிறிய இடைபோன்று. சிலை-வானவில். குலவி-விளங்கப்பெற்று. முன்னி-முந்தி. மழை-மேகம்.

மேகமே! இக்கடலைக் குடித்து அதன் நீரைக் குறைத்து மேலே கிளம்பி உமாதேவியாரின் கார்நிறத்தைப் பெற்றாய். நீ மின்னலாக மின்னியது அம்பிகையின் சிறிய இடையை ஒத்திருந்தது, நீ இடியாக இடித்தது தேவியின் திருவடியில் பொன் சிலம்பு ஒலித்தது போன்றிருந்தது. நீ வானவில் வீசியது அம்பிகையின் புருவத்தை ஒத்திருந்தது. எம்மை ஆளுடையாளாகிய அம்பிகையின் பாகன் சிவனுடைய அன்பர்க்கு முதலில் அருள் சுரந்துவிட்டுப் பிறகு எங்களுக்கும் அருள் மழையாகப் பொழிவாயாக. பெண்ணே, இக்கோட்பாட்டை ஏற்கவும் எண்ணிப் பார்க்கவும் செய்வாயாக.

அருளைப் பெறுதலில் மற்றவர்களை முன்னணியி[ல்] வைத்துத் தங்களைப் பின்னணியில் வைப்பது பக்[தி] படைத்தவர்களது பேரியல்பாகும்.

பக்கம் 45ல் பக்தி சூத்ரம் 54ல் காண்க.

17. செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற்
[றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி

உபநிஷத் மந்த்ரம் — 82.

संयुक्तमेतत् क्षरमक्षरं च व्यक्ताव्यक्तं भरते विश्वमीशः ।
अनीशश्चात्मा बध्यते भोक्तृभावाज् ज्ञात्वा देवं मुच्यते सर्वपाशैः ॥

ஸம்யுக்தமேதத் க்ஷரமக்ஷரம் ச வ்யக்தாவ்யக்தம்
ப்ரதே விச்வமீச: ।
அநீசஸ்சாத்மா பத்யதே போக்த்ருபாவாஜ் ஞாத்வா
தேவம் முச்யதே ஸர்வபாசை: ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 1—8)

யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்
[பாவாய்.

செங்கண்அவன் பால் திசைமுகன் பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதது ஓர் இன்பம் நம்பாலதாக்
கொங்கு உண் கரும்குழலி நம் தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செம் கமலம் பொன்பாதம் தந்து அருளும் சேவகனை
அம் கண் அரசை அடியோங்கட்கு ஆர் அமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலம் திகழப்
பங்கயம் பூம் புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம்பாவாய்.

செங்கணவன் (செங்கண்ணவன்)-திருமால். திசைமுகன்-பிரம்மா. கொங்கு உண்-மணம் தங்கிய. கோதாட்டி-குற்றம் நீக்கி. சேவகனை-செயற்கரிய செயலைச் செய்பவனை. அம்கண்-கருணையினால் அழகியகண். பங்கயப்பூம்புனல்-தாமரைகள் நிறைந்த நீர்.

संयुक्तं ஸம்யுக்தம் நன்கு இணைக்கப்பெற்ற क्षरंअक्षरं க்ஷரம் அக்ஷரம் அழிவதும் அழியாததும் व्यक्त अव्यक्तं च வ்யக்த அவ்யக்தம் ச தோன்றியிருப்பதும் ஒடுங்கியிருப்பதும் एतत् विश्वं ஏதத் விச்வம் இந்த உலகத்தை ईशः भरते ஈச: பரதே ஈசன் தாங்குகிறான் अनीशः அநீச: ஈசனைப் புறக்கணித்துவிட்டு आत्मा ஆத்மா ஜீவாத்மாவானது भोक्तृ भावात् போக்த்ரு பாவாத் அனுபவிக்கும் எண்ணமுடையவனாய் बध्यते பத்யதே பந்தப்படுகிறான் देवं ज्ञात्वा தேவம் ஞாத்வா தெய்வத்தை அனுபூதியில் அறிந்து सर्वपाशैः ஸர்வபாசை: எல்லாப் பாசங்களிலிருந்து मुच्यते च முச்யதே ச முக்தியடைகிறான்.

அழிவதும் அழியாததும், தோன்றியிருப்பதும் ஒடுங்கியிருப்பதும் ஆகிய நிலைகள் இந்த ஞாலத்தின்கண் நன்கு இணைக்கப் பெற்றிருக்கின்றன. இந்த ஞாலத்தைத் தாங்கியிருப்பவன் ஈசன். ஈசனை அறிந்துகொள்ளாத ஜீவாத்மன் உலக இன்பங்களில் ஆசை

இயல்பாகவே மணம் தங்கிய கரிய கூந்தலையுடையவளே, விஷ்ணு, பிரம்மா முதலிய தேவர்களிடத்து இல்லாத பேரின்பம் நமக்கு யாண்டும் சொந்தம். நம் குற்றங்கள் களையப்பெறும் பொழுது அது அனுபூதியாகிறது. அதற்காக இறைவன் நம் வீடுகள் தோறும் எழுந்தருளுகிறான். செந்தாமரை போன்ற தனது பொன் பாதத்தை நமக்குக் கொடுத்தருளும் சேவகன் அவன். கருணை நிறைந்த கண்களையுடைய அரசன் அவன். அடியவர்களாகிய நமக்கு அவன் நிறையமிர்தம். சிவஞானம் என்னும் நலம் அவனிடத்திருந்து நமக்கு வருகிறது. தாமரைத் தடாகத்தில் மூழ்கி நீராடி அவன் பெருமையைப் பாடுவோம். இக்கோட்பாடுகளையெல்லாம் தோழி, ஏற்று ஓர்ந்து பார்.

பக்தியும் ஞானமும் ஈண்டு ஒன்றித்து ஒளிர்கின்றன. அஞ்ஞானம் என்னும் குற்றம் அகலுமிடத்து ஜீவன் சிவசொரூபம் என்பது தெளிவாகிறது. மேலும் தானே ஸத்-சித்-ஆனந்தம் என்பது முடிந்த அனுபூதி.

18. அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றி
[றைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ
[றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்

வைத்து அவைகளோடு தளைக்கப்படுகிறான். ஆனால் ஈசனை அனுபூதியில் அறியுங்கால் அவன் பாசங்கள் அனைத்தினின்றும் விடுதலை பெறுகிறான்.

ஸ்தூலமாயிருப்பவைகள் அழியுந்தன்மையுடையவைகள்; சூக்ஷ்மமாயிருப்பவைகள் அழிவதில்லை. இப்பிரபஞ்சம் தோற்றத்துக்கு வந்துள்ளது. ஒடுங்கிய நிலையில் இருப்பது மூலப்பிரகிருதி. இவையனைத்துக்கும் ஈசன் ஆதாரமாகிறான். இயற்கை தருகிற இன்பத்துக்கு முடிவுண்டு. ஆதலால் அது துன்பமாக மாறுகிறது. இயற்கைக்கு அடிமைப்படுவது பந்தம். ஈசனைச் சார்வது விடுதலை.

விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ
[ரெம்பாவாய்.

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறு அற்றால் போல்
கண்ஆர் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ஆர் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ஆகி ஆண்ஆய் அலியாய்ப் பிறங்கு ஒளிசேர்
விண்ஆகி மண்ஆகி இத்தனையும் வேறுஆகிக்
கண்ஆர் அமுதமும்ஆய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம் புனல்பாய்ந்து ஆடு ஏல் ஓர்
[எம்பாவாய்.

வீறு-ஒளி. கண் ஆர் இரவி-இடம் நிறைந்த சூரியன். கார்கரப்ப-இருள் அகல. தாரகைகள்-நக்ஷத்திரங்கள். பிறங்கு-விளங்குகின்ற. கண் ஆர் அமுதம்-பெருமை பொருந்திய அமிர்தம்.

திருவண்ணாமலையானுடைய தாமரைத் திருவடிகளில் சென்று வணங்குகின்ற தேவர்கள் முடியிலே அணிந்துள்ள இரத்தினங்கள் தமது ஒளியை இழந்துவிடுகின்றன. இருள் நீக்கும் வண்ணத்தில் பெரிய சூரியனும் இறைவனது முன்னிலையில் தன் பிரகாசத்தை இழந்துவிடுகிறான், குளிர்ந்த நக்ஷத்திரங்களும் ஒளியிழந்து விடுகின்றன. இறைவனே பெண், ஆண், அலி ஆகிய அனைத்துமாய் அவைகளுக்கு வேறாகவும் இருக்கிறான். ஒளியோடு கூடிய ஆகாசம், மண் முதலிய பூதங்கள் ஆகி அவைகளுக்கு வேறாகவும் இருக்கிறான். அவன் அழிவில்லாத அரிய பொருள். பெண்ணே, அவன் பெருமை பாடிப் பூம்புனல் ஆடுவோம். பரமனுடைய இந்த மகிமைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ளவும், ஓர்ந்து பார்க்கவும் செய்வோமாக.

உபநி—14 பக்கம் 135ல்; உபநி—28 பக்கம் 198ல்; உபநி—31பக்கம் 218ல்; உபநி—33 பக்கம் 247ல் காண்க.

19. உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்
[போங்கே

ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள்
[சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ
[ரெம்பாவாய்.

உங்கையில்பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க
எம்கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம் கண் மற்று ஒன்றும் காணற்க
இங்கு இப்பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்
எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு ஏல் ஓர் எம்பாவாய்.

புதுக்கும்-*புதிதாக்கும்.* கங்குல்-*இரவு.* நல்குதியேல்-*தருவாயாகில்.* எங்கு எழில் என்-*எந்தத் திசையில் உதித்தால் தான் எங்களுக்கு என்ன?*

உனது கையில் உள்ள பிள்ளை உனக்கே அடைக்கலம் என்ற அந்தப் பழமொழியைப் புதுப்பிக்க நாங்கள் அஞ்சுகிறோம். ஏனென்றால் அது தேவையில்லை. எங்கள் பெருமானே, உனக்கு ஒன்று சொல்லுகின்றோம், கேட்பாயாக. நாங்கள் உன்னுடைய மெய்யன்பர்களையே மணந்து கொள்வோம். உனக்கே நாங்கள் பணிவிடை செய்வோம், இரவும் பகலும் நாங்கள் உன்னையே யாண்டும் காண வேண்டும். இந்த வாய்ப்பை இறைவா, நீ எங்களுக்குக் கொடுத்தருள்வாயாகில் பிறகு சூரியனே திசைமாறிப் போய்விடினும் அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. பாவாய், இப்பெருநிலையை ஏற்றுக்கொள், பின்பு ஓர்ந்துபார்.

20. போற்றியருளுகநின் ளாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்

உபநிஷத் மந்த்ரம்—83

क्षरं प्रधानममृताक्षरं हरः क्षरात्मानावीशते देव एकः ।
तस्याभिध्यानाद्योजनात्तत्त्वभावात् भूयश्चान्ते विश्वमायानिवृत्तिः ॥

போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம்
[பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம்
[பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறு மிணையடிகள்
போற்றிமா லான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும்
[பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுக நின் ஆதி ஆம் பாதம்மலர்
போற்றி அருளுக நின் அந்தம் ஆம் செம் தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆம் பொன்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகம் ஆம்பூம்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறுஆம் இணை அடிகள்
போற்றி மால் நால்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆள்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீர் ஆடு ஏல் ஓர் எம்பாவாய்.

க்ஷரம் ப்ரதானமம்ருதாக்ஷரம் ஹர:
க்ஷராத்மானாவீசதே தேவ ஏக: ।
தஸ்யாபித்யானாத்யோஜனாத்தத்வபாவாத்
பூயஸ்சாந்தே விச்வமாயாநிவ்ருத்தி: ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 1-10)

प्रधानं ப்ரதானம் மூலப்பிரகிருதி क्षरं க்ஷரம் அழியும் தன்மையது हरः ஹர: சிவன் अमृताक्षरं அம்ருதாக்ஷரம் மரண மில்லாதவர், அழியாதவர் एकः देवः ஏக: தேவ: தனிப் பொருள், மஹாதேவன் क्षरात्मानौ க்ஷராத்மானௌ ஜகத் தையும் ஜீவனையும் ईशते ஈசதே ஆளுகிறார் तस्य अभिध्यानात् தஸ்ய அபித்யானாத் அந்த சிவனைத் தியானிப்பதால் योजनात् யோஜனாத் யோகம் பண்ணுவதால் तत्वभावात् தத்வபாவாத் அவன்பால் ஐக்கியமாவதால் भूयः பூய: மீண்டும் अन्ते அந்தே உடலை உகுக்கும்பொழுது विश्वमायानिवृत्तिः च விச்வ

செம்தளிர்கள்-செவ்விய இளம் தளிர்போன்ற திருவடிகள். போகம் ஆம் - இன்புற்றிருப்பதற்கு ஏது ஆகிய. ஈறு - முடிவு. புண்டரிகம்-தாமரைத்திருவடி.

அனைத்துக்கும் முந்தியிருக்கும் உன்னைப் போற்றுகிறோம், அருள்புரிவாயாக. அனைத்துக்கும் பிந்தியிருக்கும் உன்னைப் போற்றுகிறோம், அருள்புரிவாயாக. உயிர்கள் அனைத்துக்கும் பிறப்பிடமாயிருக்கும் உன்னைப் போற்றுகிறோம். உயிர்களுக்கு இருப்பிடமாயிருந்து இன்பம் ஊட்டும் உன்னைப் போற்றுகிறோம். உயிர்கள் அனைத்துக்கும் ஒடுங்குமிடமாயிருக்கும் உன்னைப் போற்றுகிறோம். அரிக்கும் அயனுக்குமே விளங்காது மறைந்திருக்கும் உன்னைப் போற்றுகிறோம். எங்களை ஆட்கொண்டு அருள்புரிகிற உன்னைப் போற்றுகிறோம். நாங்கள் மார்கழி நீர் ஆட அனுக்கிரகம் செய்த உன்னைப் போற்றுகிறோம். எமது பாவாய், இக்கோட்பாடுகளை ஏற்றுக்கொள், அவைகளை ஓர்ந்து பார்.

நிர்விகாரியாய், கிரியை அனைத்துக்கும் அப்பால் நிர்க்குண பிரம்மமாய் இருக்கும் பரமன் குணத்தோடு கூடியவனாய் வந்து பஞ்சகிருத்தியங்களைச் செய்கிறான். ஜீவர்கள் சிறு நிலையிலிருந்து பெருநிலைக்குப் பரிணமித்து உய்வு அடைதற்கு இப்பஞ்ச கிருத்தியங்கள் பயன்படுகின்றன.

மாயா நிவ்ருத்தி: ச மாயப் பிரபஞ்சத்தின் மயக்கத்தினின்று விடுபடவும் செய்கிறான்.

மூலப்பிரகிருதி அழியும் தன்மையது. சிவன் மரணமில்லாதவன், அழியாதவன், தனிப்பொருள். ஜகத்தையும் ஜீவனையும் அவன் ஆளுகிறான். அந்த சிவனை தியானிப்பதால், அவனோடு யோகம் பண்ணுவதால், அவனோடு ஐக்கியமாவதால் உடலை உகுக்கும்பொழுது ஜீவாத்மன் மாயப்பிரபஞ்சத்தினின்று விடுதலை யடைகிறான்.

ஜகத்துக்கும் ஜீவனுக்கும் தோற்றமும் ஒடுக்கமும் உண்டு. அவைகளுக்கு ஆதாரமாயிருக்கும் பரமன் தோன்றி மறையும் அவைகளுக்கு முன்பும் பின்பும், இருப்பது முறை. அழிவில் ஆனந்தமில்லை. நிலைபேற்றில் ஆனந்தமுண்டு. இறைவனை அடையும் ஜீவாத்மன் முக்தியாம் நிலைபேறு எய்துகிறான். ஆதலால் ஆங்கு ஆனந்தம் உண்டு. மேலும் பரமனே ஆனந்த சொரூபி. பரமனை அடைவதும் ஆனந்தத்தைப் பெறுவதும் ஒன்றே.

8. திருவம்மானை

ஆனந்தக்களிப்பு

திருவண்ணுமலையில் அருளிச் செய்யப்பட்டது

(ஒப்புமை பற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா)

1. செங்க ணெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
யெங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட் [கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந் [துறையா
னங்கண னந்தணனு யறைகூவி வீடருளு
மங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானுய்.

செம்கண் நெடுமாலும் சென்று இடந்தும் காண்பு [அரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பு அறுத்திட்டு எம்தரமும் ஆட்கொண்டு
தெங்குதிரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அம்கணன் அந்தணன்ஆய் அறைகூவி வீடு அருளும்
அம்கருணை வார்கழலே பாடுதும்காண் அம்மானுய்.

இடந்தும்-நிலத்தைப் பிளந்தும். பொங்கு-விளங்குகின்ற. எம்தரமும்-எமது தகுதியும். அறைகூவி-வலிய அழைத்து. தென்னன்-தென் நன்-அழகும் நன்மையும் வாய்ந்த.

மூவுலகை ஈரடியால் அளந்த செந்தாமரைக் கண்ணனுகிய திருமாலே பன்றியாய்ப் பூமியைப் பிளந்துகொண்டுபோய் இறைவனது திருவடியை எட்டவில்லை. அத்தகைய இறைவன் தனது திருவடியைப் பூமியில் நாட்டித் தரத்தில் குறைந்துள்ள என்னை ஆட்கொண்டான். என் பிறவிப் பிணியை ஒழித்தான். தென்னைமரங்கள் திரண்ட சோலை சூழ்ந்த, அழகும் நன்மையும் வாய்ந்த திருப்பெருந்துறைக்கு இறைவன் அவன். ஞானக் கண்ணுடைய அந்தணன் அவன். அரிய கருணையுடைய அவன் என்னை வலியக் கூவியழைத்து விடுபேறு அளித்தருளினன். அவனைக் குறித்து நாம் பாடி அம்மானை விளையாடுவோமாக.

2. பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தா
ராராலுங் காண்டற் கரியா னெமக்கெளிய
பேராளன் றென்னன் பெருந்துறையான்
[பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
வாரா வமுதா யலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்கா ணம்மானாய்.

பாரார் விசும்புஉள்ளார் பாதாளத்தார் புறத்தார்
ஆராலும் காண்டற்கு அரியான் எமக்கு எளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சு ஏற்றி
வாராவழி அருளி வந்து என் உளம் புகுந்த
ஆராஅமுதுஆய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேர் ஆசை வாரியனைப் பாடுதும்காண் அம்மானாய்.

பேராளன்-பெருமையாளன். பிச்சு-பித்து. வாராவழி-முக்தி மார்க்கம். விசிறும்-வலை வீசுகின்ற. பேர் ஆசை வாரியனை-பெருங் கருணைக்கடலாயிருப்பவனை.

மண்ணுலகத்தவர், விண்ணுலகத்தவர், பாதாளத்தில் வசிப்பவர், மற்ற அண்டங்களில் இருப்பவர் ஆகிய ஜீவர்களது காட்சிக்கு எட்டாதவன் சிவன். தன் பெருமையினால் நான் அவனைத் தரிசிக்கும்படி அவன் செய்தான். என் உள்ளத்தில் புகுந்து அருள் பித்தத்தை வளர்த்து, முக்தி நெறியில் போகும்படி அருள் புரிந்த தெவிட்டாத அமிர்த சொரூபன் அவன். பரதவர் தலைவன் பொருட்டுக் கொந்தளிக்கும் கடலில் வலைவீசி மீன் பிடித்தவன் அவன். அன்பர்க்காகப் பெருங் கருணைக்கடலாயிருப்பவன் அவன்.

மனோ நாசம் அடைந்தவர்க்கே பரமன் காட்சி கிட்டுகிறது. மீன் பிடித்த வரலாறு திருவிளையாடல் புராணத்தில் இருக்கிறது.

3. இந்திரனும் மாலயனு மேனோரும் வானோரு
மந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
யெந்தரமு மாட்கொண்டு தோட்கொண்ட
[நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறை
[யான்

பந்தம் பறியப் பரிமேற் கொண்டான்றந்த
வந்தமிலா வானந்தம் பாடுதுங்கா ணம்மானாய்.

இந்திரனும் மால் அயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவன் அவனி வந்தருளி
எம்தரமும் ஆட்கொண்டு தோள்கொண்ட நீற்றன் [ஆய்ச்
சிந்தனையை வந்து உருக்கும் சீர்ஆர் பெருந்துறை [யான்
பந்தம் பறிய பரிமேல் கொண்டான் தந்த
அந்தம்இலா ஆனந்தம் பாடுதும்காண் அம்மானாய்.

அவனி-மண்ணுலகு. எந்தரமும்-எம்போன்ற தரத்தில் குறைந்தவரையும். தோள்கொண்ட நீற்றன்-திருத்தோளிலே வெண்ணீறு பூசியவன். சீர் ஆர்-சிறப்புப் பொருந்திய. பந்தம்-பிணிப்பு. பறிய-விலக. பரிமேல்-குதிரையின் மேல்.

தோளில் திருநீறுபூசிய தேவதேவன், தரத்தில் மேலோராகிய தேவர்களையெல்லாம் விண்ணுலகில் காத்திருக்க வைத்து விட்டு மண்ணுலகுக்கு எழுந்தருளித் தரத்தில் மட்டமான எம்மை ஆட்கொண்டான். சிந்தனையை அவன் உருக்குகின்றான். பிறவித்தளையைப் போக்க அவன் குதிரைமேல் வந்து பேரானந்தம் நல்கினான்.

தகுதியுடைய வாதவூரர் தம்மைத் தகுதியற்றவர் என்பது பணிவின் விளைவாம்.

4. வான்வந்த தேவர்களு மாலயனோ டிந்திரனுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போற் றலையளித்திட்
டூன்வந் துரோமங்க ளுள்ளே யுயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் றெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய்.

வான்வந்த தேவர்களும் மால் அயனோடு இந்திரனும்
கான் நின்று வற்றியும் புற்று எழுந்தும் காண்பு அரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு
ஊன்வந்து உரோமங்கள் உள்ளே உயிர்ப்பு எய்து

தேன்வந்து அமுதின்தெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதும்காண் அம்மானாய்.

வான்-விண்ணுலகம். கான் நின்று உற்றியும்-காட்டில் நின்று உலர்ந்தும். புற்று எழுந்தும்-தவம் புரியும் தம்மீது புற்று வளர்ந்தும். தலையளித்திட்டு-பேரருள் செய்து. வான் வந்த-பெருமை தங்கிய.

விண்ணவர்கள் காட்டில் தவம் புரிந்து உலர்ந்து போயினர். அவர்கள் மீது புற்று மூலைத்தது. ஆயினும் அவர்கள் உன்னைத் தரிசிக்கவில்லை. ஆனால் நீயோ நாய்போல் எளிய வந்து எனக்குப் பேர் அருள் புரிந்தனை. உடலில் உரோமம் சிலிர்த்து, உள்ளே நெட்டுயிர்ப்பு அடைந்தேன். ஆனந்தம், அமிர்தம், அருட்ஜோதியாய் மிளிரும் உன் பெருமையைப் பாடுவோம்.

மஹாபாவம் 7. பக்கம் 39ல் காண்க.

5. கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான் [பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னு
மொல்லை விடையானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சு ஏற்றிக்
கல்லைப் பிசைந்து கனி ஆக்கித் தன் கருணை
வெள்ளத்து அழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லைநகர் புக்குச் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதும்காண் அம்மானாய்.

பிச்சு ஏற்றி-பித்து ஏறப்பண்ணி. மன்னும்-நிலைபெற்று இருக்கிற. ஒல்லை-விரைந்து செல்லும்.

பரதத்துவத்தைக் கல்லாத மனதையுடைய நான் மிக அற்பனானேன். எல்லாம் வல்ல பரமன் என்னிடத்து அருள் பித்தைக் கிளப்பிவிட்டுக் கல் போன்ற என் மனதைக் கனியாகப்

பக்குவப்படுத்தினன். அவனது கருணைக் கடலில் என்னை மூழ்கச் செய்து வினையை அகற்றிய பரமஞானி அவன். அவன் தில்லை நகரில் சித் ஆகாச சொரூபியாயிருக்கிறன். விரைந்து செல்லும் காளை அவனுடைய வாகனமாகும். அத்தகையவனைப் பாடுவோம்.

காந்தத்தைச் சார்ந்த இரும்பு தானே காந்தமாகிறது. அங்ஙனம் பரத்தைச் சார்ந்த மனது ஜடநிலையை விட்டொழித்துச் சேதனமாகிறது.

உபநி—3. பக்கம் 105ல் காண்க.

6. கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்
[துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
வாட்டான்கொண் டாட்கொண்டவா பாடுதுங்கா
[ணம்மானாய்.

உபநிஷத் மந்த்ரம் —84.

न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते ।
तत्स्वयं योगसंसिद्धः कालेनात्मनि विन्दति ॥

ந ஹி ஞானேன ஸத்ருசம் பவித்ரமிஹ வித்யதே ।
தத்ஸ்வயம் யோகஸம்ஸித்த: காலேனாத்மனி விந்ததி ॥

(பகவத்கீதோபநிஷதம் 4-38)

इह இஹ இவ்வுலகில் ज्ञानेन सदृशं ஞானேன ஸத்ருசம் ஞானத்துக்குச் சமானமாய் पवित्रं பவித்ரம் பரிசுத்தம் செய்யக்கூடியது न हि विद्यते ந ஹி வித்யதே இல்லவே இல்லை कालेन காலேன காலக்கிரமத்தில் योगसंसिद्धः யோகஸம்ஸித்த: யோக சித்தியடைந்தவன் आत्मनि ஆத்மனி தன் உள்ளத்தில் स्वयं ஸ்வயம் தானே तत् विन्दति தத் விந்ததி அந்த ஞானத்தை அறிகிறன்.

ஞானத்துக்கு ஒப்பானது, தூய்மை தரும் பாங்குடையது இவ்வுலகில் எதுவுமில்லை. யோகசித்தன் நாளடைவில் தன்னகத்தே இந்த ஞானத்தைப் பெறுகிறன்.

கேட்டாயோதோழி கிறி செய்த ஆறு ஒருவன்
தீட்டு ஆர் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித்
தாள் தாமரை காட்டித் தன்கருணைத்தேன் காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம் மேலை வீடு எய்த
ஆள் தான்கொண்டு ஆண்டவா பாடுதும்காண் அம்மானாய்.

கிறி-மாயம். ஆறு-விதம். தீட்டு ஆர் மதில்-சித்திரம் வரைந்த சுவர். மேலை வீடு-மோக்ஷ சாம்ராஜ்யம்.

அழகியதும் நல்லதும் ஆகிய பெருந்துறையின் கோயில் சுவரில் சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. ஆங்கு எழுந்தருளியுள்ள சிவனார் செய்த மாயவித்தை எத்தகையது என்று தோழியே, நீ கேட்டாயா? ஊனக்கண்ணுக்கு எட்டாத அவன் சொரூபத்தை ஞானக்கண்கொடுத்து அவன் காட்டியருளினான். அது பரமானந்தம் என்னும் தேன். மாயப் பிரபஞ்ச வாழ்க்கையில் இருப்பவர்க்கு முக்தி நிலை விளங்காது. அவனது பாரமார்த்திக மகிமையை நாம் பாடுவோம்.

கனவில் ஒருவன் அடியுண்கிறான்; குத்துப்படுகிறான்; பெருந்துன்பத்துக்கு ஆளாகிறான். அப்படி அவன் வருந்துகையில் தூக்கத்தினின்று அவனைத் தட்டியெழுப்பினால் ஜாக்கிரதாவஸ்தைக்கு வருகிறான். தன்னைப் பற்றிய உண்மை ஞானம் ஓரளவு ஜாக்கிரதாவஸ்தையில் வருகிறது. தன்னை யாரும் துன்புறுத்தவில்லை யென்றும் தான் உண்மையில் வருந்தவில்லையென்றும், ஜாக்கிரதாவஸ்தையில் அவன் உறுதிப்படுத்துகிறான். அந்த அளவில் விழிப்பானது அக்ஞான மலத்தினின்று அவனைத் தூயவனாக்கியது. இங்ஙனம் மனிதனுக்குத் தன் சொரூப ஞானம் உதயமாகுங்கால் ஜனன மரணம் என்ற அக்ஞான அழுக்கினின்று நித்திய சுத்தனாக மாற்றப் பெறுகிறான். ஆகையால்தான் பரிசுத்தப்படுத்துபவைகளுள் ஞானத்துக்கு நிகரானது ஒன்றுமில்லை. முறையாக சாதனம் செய்பவன் வாழ்க்கையையே ஞான யக்ஞமாகச் செய்து கொள்கிறான். அதனால் நாளடைவில் மனபரிபாகம் அடைந்து ஞானத்தை நிச்சயமாகப் பெறுகிறான்.

7. ஓயாதே யுள்குவா ருள்ளிருக்கு முள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன்
[பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை யாட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே யுலகேழு
மாயானை யாள்வானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

உபநிஷத் மந்த்ரம்—85.

ॐ भूः भुवः स्वः
ॐ तत् सवितुर्वरेण्यं
भर्गो देवस्य धीमहि ।
धियो यो नः प्रचोदयात् ॥

ஓம் பூ: புவ: ஸ்வ:
ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி ।
தியோ யோ ந: ப்ரசோதயாத் ॥

(ரிக்வேதஸம்ஹிதை 3-62-10)

ॐ ஓம் भूः பூ: பூலோகம் भुवः புவ: புவர்லோகம் स्वः ஸ்வ: ஸ்வர்லோகம் तत् தத் அந்த सवितुः ஸவிது: கடவுளின் वरेण्यं வரேண்யம் போற்றுதற்குரிய भर्गः பர்க: ஒளியை देवस्य தேவஸ்ய சுடருடைய धीमहि தீமஹி தியானிப்போமாக धियः திய: அறிவை यः ய: யார் नः ந: நம்முடைய प्रचोदयात् ப்ரசோதயாத் தூண்டுகிறரோ.

யார் நம் அறிவைத் தூண்டுகிறரோ அந்தச் சுடர்க் கடவுளின் போற்றுதற்குரிய ஒளியைத் தியானிப்போமாக.

இது ஸௌரிய காயத்ரீ யென்றும் பிரம்ம காயத்ரீ யென்றும் பகரப்பெறுகிறது. ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒரு தனி காயத்ரியிருக்கிறது எனினும் இது எல்லா மூர்த்திகளுக்கும் பொதுவாயுள்ள காயத்ரியாகும். பல் லாயிரம் ஆண்டுகளாகப் பெரும்பான்மையோர் ஜபித்து வந்துள்ள மந்த்ரம் இதுவாகும்; பண்ணியுள்ள பிரார்த் தனையும் இதுவேயாகும். ஆதலால் இதை நம் தேசியப்

ஓயாதே உள்குவார் உள்இருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதுஇருக்கும் பாதியனை
நாய்ஆன நம்தம்மை ஆள்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகுஏழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதும்காண் அம்மானாய்.

உள்குவார் - சிந்திப்பவர்கள். உள்ளானை-ஸத் பொருளை. சேயானை-தூரத்தில் இருப்பவனை. சேவகனை-ஜீவர்களைப் பக்குவப்படுத்துபவனை. வேதியனை - பிரபஞ்சம் முழுதிலும் அறிவு சொரூபமாய் இருப்பவனை. தாயான தத்துவனை - அன்னையாயிருந்து ஆதரிக்கும் மெய்ப்பொருளை. ஆள்வானை-ஆட்சிபுரிகின்றவனை.

பிரார்த்தனை யெனலாம். பொருள் உணர்ந்து இதைப் பகர்வோரிடத்துப் பேரறிவு வளர்கிறது.

ஆத்மபோதம் அல்லது அருள் உணர்வை ஊட்டுதலில் இந்த காயத்ரியும் இதன் தலைப்பில் இருக்கிற திருப்பாடலும் ஒன்றை யொன்று ஒத்திருக்கின்றன. அவைகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து பிறகு தியானத்துக்கும் பிரார்த்தனைக்கும் இரண்டையுமே பயன்படுத்துவது நல்ல ஆத்ம சாதனமாகும்.

பூலோகம், புவர்லோகம், ஸ்வர்லோகம் என்பன மனிதனுடைய அமைப்பில் ஜாக்ரதம் (விழிப்பு நிலை) சொப்பனம் (கனவுநிலை) சுஷுப்தி (கனவற்ற உறக்கநிலை) ஆகிய மூன்று அவஸ்தைகளைக் குறிக்கின்றன. இப்பாடலில் உள்ள "ஓயாதே" என்னும் சொல்லில் இதே கருத்து அடங்கியிருக்கிறது.

सवित् ஸவித்ரு என்னும் சொல் சூரிய தேவதையையும் பரமாத்மாவின் சிருஷ்டி சக்தியையும் குறிக்கிறது. ஸவித்ரு என்னும் சொல்லுக்கு ஆறும் வேற்றுமை **सवितुः** ஸவிதுः என்பதாம். மாயா சக்தியின் துணைகொண்டே பரமாத்மன் உலகைத் தோற்றுவிக்கிறான், அதை ஒழுங்காக நடாத்தவும் செய்கிறான். இத்திருப்பாடலில் "மாது

உள்ளத்தினுள் யாண்டும் மெய்ப்பொருளாயிருக்கும் அவனை ஆழ்ந்து சிந்திக்குமளவு அவன் சொரூபம் விளங்கும். அப்படி உபாசிக்காதவர்களுக்கு அவன் தூரத்தில் இருப்பவன் போன்று தென்படுகிறான். உள்ளும் புறமும் இனிது இருந்து அவன் உயிர்களைப் பக்குவப்படுத்திக்கொண்டே இருக்கிறான். எங்கும் வியாபகமாயுள்ள அறிவுப் பொருள் அவன். யாண்டும் சிவசக்தியாயிருந்து அவன் ஐம்பொறிகளுக்குப் புலனாகிறான். நமது பக்குவத்துக்கு ஏற்ப அவன் நமக்குத் தலைவனாயிருப்பது விளங்குகிறது. அவைகளுக்கெல்லாம் மேலாக அவன் எப்பொழுதும் தாயாயிருந்து பரிவுடன் நம்மைப் பேணிவருகிறான். மேலும் ஏழு ஞானப் படித்தரங்களில்

இருக்கும் பாதியனை' என்ற பகுதியும் "தாயான தத்துவனை, தானே உலகேழும் ஆயானை, ஆள்வானை" என்ற பகுதிகளும் இதே கருத்தை விளக்குகின்றன.

वरेण्यं வரேண்யம் என்ற பதம் மிக நல்லது என்றும் போற்றுதற்கு உரியது என்றும் பொருள்படுகிறது. மனிதன் எதைப் போற்றுகிறானோ அதன்மயம் அவன் தானே ஆகிறான். பரம்பொருளைப் போற்றுமளவு அவன் பரம்பொருள் மயமாகிறான். "பாடுதுங்காண்" என்ற பதம் வரேண்யத்துக்கு நிகராகிறது.

भर्गः பர்க: என்ற சொல் அழுக்கை நீக்கி ஒளியை வளர்ப்பது எனப்பொருள்படுகிறது. ஜீவனுடைய அக்ஞான அழுக்கு நீங்குமளவு அவன் சிவப்பிரகாசம் பெறுகிறான். சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிப்பதற்கு ஞான ஒளியே முகாமையாகிறது. "நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனை" என்னும் பகுதியில் சாமானியமான ஜீவன் பரத்துக்கு உரிய ஜீவனாகப் பிரகாசம் பெற்றுப் பெருநிலை யெய்துவதை விளக்குகிறது.

देवस्य தேவஸ்ய சுடருடைய என்பது **देवः தேவ:** தேவன், சுடர் என்ற சொல்லின் ஆறாம் வேற்றுமையாகும். எது திவ்யமானதோ அது தேவன் என அழைக்கப்படுகிறது. அந்தக்கரணங்களையும் புறக்கரணங்களையும் தேவர்கள் என்று கூறுவது மரபு. விளக்குதற்குஉரிய சுடர் விளக்குகளாக அவைகள் மிளிர்கின்றன. கரணங்

இருக்கும் உலகனைத்தும் ஆனவன் அவனே. பின்பு அவ்வுலகனைத்தையும் அவன் முறையாக ஆண்டும் வருகிறான். அத்தகையவனை நாம் பாடுவோம்.

சகுணப் பிரம்மம், அவனது செயல், ஜீவாத்மாவை அவன் பக்குவப்படுத்துதல் ஆகிய இவை யாவும் இந்த ஒரு பாடலில் அடங்கியிருக்கின்றன. இது காயத்ரீ மந்த்ரத்துக்கு ஒப்பானது.

கள் பண்படுதற்கு ஏற்ப ஞானச் சுடர் ஓங்குகிறது. இத் திருப்பாடலில் இடம்பெற்றிருக்கிற 'வேதியன்' என்ற சொல்லுக்கும் இதே பொருள் அமைந்திருக்கிறது. உண்மையை அறியவும் விளக்கவும் செய்கிறவன் வேதியன். சிவனார் முற்றும் வேதியன் ஆகிறார். தன் அறிவை வளர்ப்பதற்கு ஏற்ப ஜீவாத்மன் ஏகதேசம் வேதியன் ஆகிறான்.

धीमहि தீமஹி தியானிப்போமாக என்பதற்கு ஒப்ப "உள்குவார்" களுடைய உள்குதல் என்னும் தெய்விகச் செயல் அமைந்துள்ளது. கடவுளைத் தியானிக்குமளவு கடவுள் தன்மை மனிதனிடத்து வளர்கிறது.

नः धियः प्रचोदयात् நः தியः ப்ரசோதயாத் நமது அறிவை அவர் தூண்டுகிறார். "சேவகனை" என்ற சொல் லும் "நாயகனை" என்ற சொல்லும் இறைவனுடைய இந்த அரிய செயலைக் குறிக்கின்றன. உயிர்களைப் பண் படுத்துகிற முறையில் அவன் சேவகன் ஆகிறான்; தனது ஞானநிலைக்கு மக்களை நடாத்துகின்ற விதத்தில் அவன் நாயகன் ஆகிறான்.

இங்ஙனம் காயத்ரீ மந்த்ரமும் இந்தத் திருப்பாட லும் ஒன்றையொன்று ஒத்திருந்து சாதனத்துக்குப் பெருங் கருவிகளாகின்றன. இந்த இரண்டு மந்த்ரங்களை யும் முறையே பயன்படுத்துவது சாலச் சிறந்தது.

8. பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான்
[பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவான்
[மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா
[ணம்மானாய்.

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதும்காண் அம்மானாய்.

உபநிஷத் மந்த்ரம்—86.

सर्वतः पाणिपादं तत्सर्वतोऽक्षिशिरोमुखम् ।
सर्वतः श्रुतिमल्लोके सर्वमावृत्य तिष्ठति ॥

ஸர்வத: பாணிபாதம் தத்ஸர்வதோऽக்ஷிசிரோமுகம் ।
ஸர்வத: ச்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி ॥

(பகவத்கீதோபநிஷதம் 13-13)

तत् தத் அந்த பிரம்மம் सर्वतः ஸர்வத: எங்கும் पाणि पादं பாணிபாதம் கை கால்களையுடையது सर्वतः ஸர்வத: எங்கும் अक्षि शिरः मुखं அக்ஷி சிர: முகம் கண், தலை, வாய் உடையது सर्वतः ஸர்வத: எங்கும் श्रुतिमत् ச்ருதிமத் காது உடையது लोके லோகே உலகில் सर्वं ஸர்வம் எல்லாவற்றையும் आवृत्य ஆவ்ருத்ய வியாபித்து तिष्ठति திஷ்டதி நிற்கின்றது.

அது எங்கும் கை கால்களையுடையது; எங்கும் கண், தலை, வாய்களையுடையது; எங்கும் காதுகளையுடையது. உலகில் அனைத்தையும் அது வியாபித்துள்ளது.

வியன் மண்டலத்து-பரந்த பிரபஞ்சத்துக்கு. கலிமதுரை-கீர்த்தி பெற்ற மதுரை. மொத்துண்டு-அடியுண்டு.

ஆப்த வாக்கியங்களாக அமைந்த அருள் கவிதைகள் வாயிலாகப் பரமனது மகிமை நமக்கு முதலில் கொஞ்சம் கிட்டுகிறது. அனைத்தும் சிவசக்தி சொரூபம் என்னும் நல்லறிவு அதைத் தொடர்ந்து வருகிறது. திருப்பெருந்துறைபோன்ற புண்ணிய க்ஷேத்திரங்களில் அவனது சான்னித்தியத்தைச் சிறப்பாகக் காணும் பக்குவம் அடுத்தபடியாக வருகிறது. அகிலாண்டத்துக்கும் அவனே ஈசன் என்ற கீர்த்தி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் ஒப்ப முடிந்தது என்பது அதன் பிறகு விளங்குகிறது. அகிலாண்டங்களுக்கும் அப்பால் உள்ள சித் ஆகாசமே அவன் என்பதை அவனுடைய நெற்றிக்கண் அல்லது ஞானக்கண் நிரூபிக்கிறது. அத்தகைய அதீதப்பொருள் தன் பக்தன் பொருட்டுப் பிரசித்தி பெற்ற மதுரையில் கூலிக்கு மண் சுமந்தான். மேலும் பாண்டி மன்னன் கையில் பிரம்பால் அடியுண்டு முதுகில் புண்பட்டான். அத்தகையவனது மகிமையைப் பாடுவோம்.

9. துண்டப் பிறையான் மறையான்
[பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா வூர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்று
னண்டமுத லாயினு னந்தமிலா வானந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளு
மண்டம் வியப்புறுமா பாடுதுங்கா ணம்மானுய்.

துண்டம் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலம்ஆ ஊர்தியான்
கண்டம் கரியான் செம்மேனியான் வெள் நீற்றுன்
அண்டம் முதல் ஆயினுன் அந்தம் இலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழ அடியார்க்கு ஈந்தருளும்
அண்டம் வியப்பு உறுமா பாடுதும்காண் அம்மானுய்.

கடலையணுகும் நதி கடலின் தன்மையைப் பெறுகிறது. நிர்க்குண பிரம்மத்தில் லயமாதற்கு முன்பு ஞானி ஜகத்திலுள்ள வடிவங்களையெல்லாம் ஈசுவர சொரூபமாகப் பார்க்கிருன். அவனன்றி ஓரணுவும் அசைவதில்லை. அடிப்பவனும் அடிபடுபவனும் அவனேயாம்.

கோலம் ஆ ஊர்தியான்-அழகான காளையை வாகனமாக உடையவன்.

சந்திரசேகரன், வேதியன், திருப்பெருந்துறைக்கு இறைவன், முப்புரி நூலைத் தரித்தவன், அழகிய காளை வாஹனன், நீலகண்டன், சிவப்பு மேனியன், வெள்நீறு பூசியவன், அண்டத்துக்கு மூல காரணன் முடிவற்ற ஆனந்தத்தைப் பழைய முறைமைப்படியே பழமையாகிய தொண்டருக்குக் கொடுத்தருள்வான். அவனது பெருஞ் சிறப்பை உலகம் அதிசயிக்கும்படி பாடுவோம்.

பரமனை அடைவதும் பேரானந்தத்தைப் பெறுவதும் ஒன்றே.

10. விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
வண்ணா மலையானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

விண் ஆளும் தேவர்க்கும் மேல்ஆய வேதியனை
மண் ஆளும் மன்னவர்க்கும் மாண்புஆகி நின்றானைத்
தண் ஆர் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண் ஆளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண் ஆர் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதும்காண் அம்மானாய்.

தண் ஆர் தமிழ்-இனிமை நிறைந்த தமிழ். பேணு-எல்லாரும் விரும்புகிற.

தேவர்களுக்கெல்லாம் மேலோங்கியிருக்கும் பேரறிவுப் பொருள் சிவன். உலகை எம்முறையில் ஆளவேண்டும் என்பதை மன்னவர்கள் மகாதேவனிடத்திருந்தே கற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றனர். தகைசான்ற தமிழ்நாட்டில் தீந்தமிழ் வளர்ச்சிக்கு மூல அறிவாயிருப்பவன் சிவன். ஆண் பெண்ணின் பேரிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாகயிருப்பவன் அர்த்த நாரீசுவரன். நான் விரும்பும்

திருப்பெருந்துறையில் அவன் கண்கூடாக எழுந்தருளி என்னை ஆட்கொண்டான். அந்த அண்ணுமலேயானைப் பாடுவோம்.

தாய்ப்பால் அந்தந்தச் சேய்க்கு முற்றிலும் ஒத்திருப்பது போன்று பரமனை அறிந்துகொள்ளுதற்கு அவரவர் தாய்மொழி துவக்கத்தில் நன்கு உதவுகிறது.

11. செப்பார் முலேபங்கன் றென்னன் பெருந்
[துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந்
[தன்மையிஞு
னப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
வப்பார் சடையப்ப ஞனந்த வார்கழலே
யொப்பாக வொப்புவித்த வுள்ளத்தா
[ருள்ளிருக்கு
மப்பாலேக் கப்பாலேப் பாடுதுங்கா ணம்மாஞய்.

செப்புஆர் முலேபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாள் அடைந்தார் நெஞ்சு உருக்கும்
[தன்மையிஞன்
அப் பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பு ஆர் சடைஅப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்புஆக ஒப்புவித்த உள்ளத்தார் உள்இருக்கும்
அப்பாலேக்கு அப்பாலேப் பாடுதும்காண் அம்மாஞய்.

உபநிஷத் மந்த்ரம்—87.

तेषां ज्ञानी नित्ययुक्त एकभक्तिर्विशिष्यते ।
प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहं स च मम प्रियः ॥

தேஷாம் ஞானீ நித்யயுக்த ஏகபக்திர் விசிஷ்யதே ।
ப்ரியோ ஹி ஞானிஞேऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய: ॥

(பகவத்கீதோபநிஷதம் 7-17)

तेषां தேஷாம் அவர்களுள் नित्ययुक्तः நித்யயுக்த: இடையருது யோகம் பூண்டு एकभक्तिः ஏகபக்தி: மாருத பக்தி பண்ணும் ज्ञानी विशिष्यते ஞானீ விசிஷ்யதே ஞானி மேலானவன் हि ஹி ஏனென்ருல் अहं அஹம் நான் ज्ञानिनः ஞானின:

செப்பு ஆர்-கிண்ணம் போன்ற. அப்பு ஆர் சடை அப்பன்-நீர் பெருகும் ஜடையையுடையவன், கங்காதரன்.

கிண்ணம்போன்ற ஸ்தனபாரத்தையுடைய உமாதேவியார் சமேதன்; அழகும் நலனும் உடைய திருப்பெருந்துறையான், தவறு மல் தன் திருவடியை அடைந்தவர்களுடைய மனதை உருக்கும் இயல்புடையவன்; தனது சாந்நித்தியத்தால் பாண்டி நாட்டைச் சிவலோகமாக்கியவன், கங்காதரன், பேரானந்த சொரூபி—அவனிடத்துத் தங்களை ஒப்படைக்கின்றவர்கள் உள்ளத்தில் அவன் மிளிர்கிறான். இவையாவையும் கடந்தவனாகவும் அவன் இருக்கிறான்.

12. மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோடிந்திரனு
மெப்பிறவி யுந்தேட வென்னையுந்தன் னின்னருளா
லிப்பிறவி யாட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபேரு
யெப்பொருட்குந் தானேயா யாவைக்கும் வீடாகு
மப்பொருளா நஞ்சிவனைப் பாடுதுங்காணம்மானாய்.

ஞானிக்கு अत्यर्थं प्रियः அத்யர்த்தம் ப்ரிய: மிகப் பிரியமானவன் सः च ஸ: ச அவனும் मम प्रियः மம ப்ரிய: எனக்குப் பிரியமானவன்.

அவர்களுள் இடையறு யோகம் பூண்டு மாறுத பக்திபண்ணும் ஞானி மேலானவன்; ஏனென்றால் நான் ஞானிக்கு மிகப் பிரியமானவன்; அவனும் எனக்குப் பிரியமானவன்.

மஹாவிஷ்ணுவுக்கு சிஷ்டேஷ்ட: அறிஞர்களால் விரும்பப்படுபவன் என்று ஒரு பெயர் உண்டு. பக்தியின் மிகுதியால் பக்தனுக்கு இந்த ஞானம் வருகிறது.

போற்றுதற்கு உரியபொருள் பரமாத்மா ஒருவரே என்று ஞானி அறிகிறபடியால் அவரிடத்து மாறுத பக்தி உண்டாகிறது. தன்னைத்தான் விரும்புவது உயிர்களின் இயல்பு. பின்பு, தன் உயிர்க்கு உயிர் இறைவன் என்பதை சுவானுபவத்தில் அறிபவன் ஞானி. ஆகையால் அவன் இறைவனிடத்து அத்தகைய உறவு பூணுகிறான்.

மைப்பொலியும் கண்ணிகேள் மால் அயனோடு இந்திரனும்
எப்பிறவியும் தேட என்னையும் தன் இன் அருளால்
இப்பிறவி ஆட்கொண்டு இனிப் பிறவாமே காத்து
மெய்ப்பொருள்கண் தோற்றம்ஆய் மெய்யே நிலை
[பேறுஆய்
எப்பொருட்கும் தானே ஆய் யாவைக்கும் வீடுஆகும்
அப்பொருள்ஆம் நம்சிவனைப் பாடுதும்காண் அம்மானாய்.

அஞ்சனம் தீட்டிய கண்களையுடைய மாதே, கேள். தேவர்கள் எடுக்கிற ஒவ்வொரு பிறவியிலும் பரமனையே தேடுகின்றனர். அப் பரமனே, தனது இனிய அருளால் தகுதியற்ற என்னை இதே பிறவி யில் ஆட்கொண்டு இனிப் பிறவாமல் காப்பாற்றுகிறான். நித்திய வஸ்து தானே என்பதை உறுதிப்படுத்தித் தான் சாசுவதமாய் இருப்பதையும் தெளிவுபடுத்தினான். தோன்றியுள்ள யாவும் தன்னிடத்திருந்து வந்தவைகளென்பதையும், மேலும் அவை யாவுக்கும் மோக்ஷவீடு தானே என்பதையும் காட்டியுள்ளான். அத்தகைய பரமசிவனை நாம் பாடுவோம்.

13. கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்
[தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
யையா றமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

உபநிஷத் மந்த்ரம்—88.

त्वमादिदेवः पुरुषः पुराणस्त्वमस्य विश्वस्य परं निधानम् ।
वेत्तासि वेद्यं च परं च धाम त्वया ततं विश्वमनन्तरूप ॥

த்வமாதிதேவ: புருஷ: புராணஸ்த்வமஸ்ய
விச்வஸ்ய பரம் நிதானம் ।
வேத்தாஸி வேத்யம் ச பரம் ச தாம
த்வயா ததம் விச்வமனந்த ரூப ॥

(பகவத்கீதோபநிஷதம்—11-38.)

கைஆர் வளை சிலம்பக் காதுஆர் குழைஆட
மைஆர் குழல்புரளத் தேன்பாய வண்டுஒலிப்பச்
செய்யானைவெண் நீறு அணிந்தானைச் சேர்ந்துஅறியாக்
கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

கையானை - ஒழுக்கத்தையுடையவனை. செறிந்தானை - நிறைந்திருப்பவனை.

கையில் அணிந்திருக்கும் வளையல்கள் ஒலிக்கவும், காதில் அணிந்திருக்கும் தோடுகள் அசையவும், கருமையாகிய கூந்தல் புரளவும், ஆங்கு அணிந்துள்ள மலர்களினின்று தேன் பெருகவும், அதை நாடிய வண்டுகள் ரிங்காரமிடவும் செய்கின்றன. சிவப்பு நிறமுடையவனை, வெண்ணீறு அணிந்திருப்பவனை, நெருங்கிப் பழகுகிறவர்களாலும் முற்றும் அறிந்துகொள்ள முடியாதவாறு ஆழ்ந்த இயற்கை நடைமுறைத் திட்டத்தையுடையவனை, எங்கும் நிறைந்திருப்பவனை, அன்பர்க்கு மெய்ப்பொருளாயிருப்பவனை, அன்பர் அல்லாதார்க்கு இருந்தும் இல்லாதவன் போன்றவனை, அறிவுப் பொருளை, திருவையாற்றில் எழுந்தருளியிருப்பவனைப் பாடுவோமாக.

अनन्तरूप அனந்தரூப எண்ணிறந்த வடிவங்களை யுடையோனே त्वं த்வம் தாம் आदिदेवः ஆதிதேவ: முதற்கடவுள் पुराणः पुरुषः புராண: புருஷ: பழைய புருஷன் त्वं த்வம் தாம் अस्य विश्वस्य அஸ்ய விச்வஸ்ய இந்தப் பிரபஞ்சத்திற்கு परं निधानं பரம் நிதானம் மேலான இருப்பிடம் वेत्ता च வேத்தா ச அறிபவனும் वेद्यं च வேத்யம் ச அறியப்படு பொருளும் परं धाम பரம் தாம பெருநிலம் असि அஸி இருக்கிறீர் त्वया த்வயா உம்மால் विश्वं விச்வம் உலகம் முழுதும் ततं ததம் வியாபித்திருக்கிறது.

எண்ணில்லா வடிவங்களையுடையோனே, முதற்பொருளே! தொல்லோனும் இவ்வுலகுக்கு மேலான இருப்பிடமும் தாமே யாவீர். அறிபவரும், அறியப்படுபொருளும், அருட்பெரு நிலமும் ஆவீர். உம்மால் உலகம் முழுதும் நிறைந்துள்ளது.

யாவும் அவரிடத்திருந்து உதயமாவதால் அவர் ஆதி தேவன். பிரபஞ்சம் என்னும் புரியிலே அவர் வாசம் செய்

இறைவனையோ அவனுடைய கிருத்தியங்களையோ முற்றும் அறிந்துகொள்ள எந்த ஜீவனுக்கும் இயலாது. இனி பக்தி பண்ணுது, "பொய்வளர் நெஞ்சினர் காணுத காட்சி"யாக அவன் இருக்கிருன்.

14. ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவரா
யேனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
யூனையு நின்றுருக்கி யென்வினையை
[யோட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்றொழும்
[பிற் கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்கா ணம்மாஞய்.

ஆனைஆய்க் கீடம்ஆய் மானுடர் ஆய்த் தேவர் ஆய்
ஏனைப்பிறஆய்ப் பிறந்து இறந்து எய்த்தேனை
ஊனையும் நின்று உருக்கி என்வினையை ஓட்டுஉகந்து
தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து இனிய
கோன்அவன் போல்வந்து என்னைத் தன்தொழும்பில்
[கொண்டருளும்
வானவன் பூம்கழலே பாடுதும்காண் அம்மாஞய்.

வதால் அவர் புருஷன். அவருக்கு மூத்தவர் ஒருவருமில்லை. ஆகையால் அவர் புராணன் அல்லது தொல்லோன். மஹாபிரளயத்தில் அனைத்துக்கும் அவர் ஒடுங்குமிடமாதலால் அவர் நிதானமாகிருர்.

அறியும் தன்மை அவரிடத்திருந்து வருகிறது; ஆதலால் அவர் வேத்தா. அறியப்படு பொருள்களெல்லாம் அவரிடத்திருந்து வந்தனவாதலால் அவர் வேத்யம். கடலில் அலைதோன்றி, கடலில் நிலைபெற்றிருந்து, கடலில் அது ஒடுங்குவது போன்று உலகம் அவரிடத்துத் தோன்றி, இருந்து, மறைகிறது. ஆதலால் அவர் யாண்டும் அதற்குப் பெருநிலம் அல்லது பரம்தாமம் ஆகிருர். அதுவே மஹாவிஷ்ணுவினுடைய பரமபதம் எனப்படுவது.

கீடம்-புழு. எய்த்தேனை-அலுத்துப் போன என்னை. ஓட்டு உகந்து-ஓட்டுதலை விரும்பி. கன்னலையும்-கரும்பின் சாற்றையும். தொழும்பில்-தொண்டில். வானவன்-தேவன்.

எத்தனையோ வகை உயிர்களாகப் பிறந்து இறந்து அலுத்துப் போன என்னை இம்மானுடப் பிறவியில் அருள்தாகத்துக்கு உட்படுத்தினாய், என் வினையைக் களைந்தாய், அமிர்த சொரூப ஆனந்தத்தை வழங்கி என்னை உனக்குத் தொண்டனாக்கினாய். அத்தகைய மேலோனாகிய உனது திருவடியைப் போற்றுவோம்.

15. சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்
[வியினி
லிந்திரனைத் தோணெரித்திட் டெச்சன்றலையரிந்
தந்தரமே செல்லு மலர்கதிரோன் பற்றகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை யோட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன்
[பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்கா ணம்மானாய்.

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன் தன் வேள்வியினில்
இந்திரனைத்தோள் நெரித்திட்டு எச்சன் தலைஅரிந்து
அந்தரமே செல்லும் அலர் கதிரோன் பல் தகர்த்துச்
சிந்தித் திசை திசையே தேவர்களை ஓட்டு உகந்த
செம் தார்ப்பொழில் புடைசூழ் தென்னன்
[பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதும் காண் அம்மானாய்.

எச்சன்-எஜமானன், யாக கர்த்தா. அலர்-பரந்த. சிந்தி-சிதறடித்து. ஓட்டு உகந்த-ஓடுவதைப் பார்த்து மகிழ்ந்த. செந்தார்ப் பொழில்-செழுமையாகிய பூஞ்சோலைகள். மந்தாரம்-வானுலகப் பூ வகை.

தக்ஷபிரஜாபதியின் யாகத்தில் சந்திரனை நிலத்தில் தேய்த்தும், இந்திரன் தோளை நெரித்தும், யாக கர்த்தாவின் சிரசை அறுத்தும், ஆகாயத்தில் செல்லுகிற பரந்த கிரணங்களையுடைய சூரியனது பல்லை உடைத்தும், மற்ற தேவர்களை வெவ்வேறு திக்குகளில் சிதறடித்தும், அவர்கள் ஓடுவதைப் பார்த்து மகிழ்ந்தாய். செழுமை

யான பூஞ்சோலைகள் சூழப்பெற்ற தென்னன் பெருந்துறையான் அணிந்துள்ள மந்தார மாலையைப் புகழ்ந்து பாடுவோம்.

தக்ஷபிரஜாபதியின் யாகத்தில் சிவனுர்க்கு அழைப்பு இல்லை இறைவனைப் புறக்கணித்துச் செய்யும் செயல் எவ்வளவு பெரியதாயிருந்தாலும் அது அமங்களமாய் முடியும்.

புராணக்கதை 4. பக்கம் 97ல் காண்க.

16. ஊனு யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனு யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனுர் மலர்க்கொன்றைச் சேவகனுர்
[சீரோளிசே
ரானு வறிவா யளவிறந்த பல்லுயிர்க்குங்
கோனுகி நின்றவா கூறுதுங்கா ணம்மானுய்.

ஊன்ஆய் உயிர்ஆய் உணர்வுஆய் என் உள் கலந்து
தேன் ஆய் அமுதமும் ஆய்த் தீம் கரும்பின் கட்டியும் ஆய்
வானோர் அறியா வழி எமக்குத் தந்தருளும்
தேன்ஆர் மலர்க் கொன்றைச் சேவகனுர் சீர்ஒளிசேர்
ஆனு அறிவு ஆய் அளவு இறந்த பல் உயிர்க்கும்
கோன்ஆகி நின்றவா கூறுதும்காண் அம்மானுய்.

வானோர் அறியாவழி-முக்தி மார்க்கம். ஆனு-கெடாத.

எனது அமைப்பு முழுதும் சிவபெருமானிடத்திருந்து வந்தது. என்னுள் ஆனந்தமாய் அவன் விற்றிருந்து முக்தி மார்க்கத்தையும் காட்டியருளினன். பேரறிவு சொரூபமாய் இருப்பவனும் அவனே. எல்லா உயிர்க்கும் அவன் இறைவன். அவனை நாம் பாடுவோம்.

17. சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்
[றிரடோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவே னுள்ளுருகித்
தேடுவேன் றேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்

வாடுவேன் பேர்த்து மலர்வே னனலேந்தி
யாடுவான் சேவடியே பாடுதுங்கா ணம்மானாய்.

சூடுவேன் பூம்கொன்றை சூடிச் சிவன் திரள் தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ் வாய்க்கு உருகுவேன் உள் உருகித்
தேடுவேன் தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனல் ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதும்காண் அம்மானாய்.

திரள்தோள்-திரண்டதோள். முயங்கி-புணர்ந்து. ஊடுவேன்-பிணங்குவேன். பேர்த்தும்-மீண்டும்.

பொலிவாகிய கொன்றை மாலையை சூடுவேன்; சிவபெருமானின் திரண்ட தோள்களைத் தழுவுவேன்; புணர்ந்து மயங்கி நின்று பிணங்குவேன்; சிவந்த வாய்க்கு மனம் உருகுவேன்; மன உருக்கத்தோடு தேடுவேன்; சிவபெருமானது திருவடியையே சிந்தனை செய்வேன்; வாட்டமடைவேன்; மீண்டும் மகிழ்வேன். தீயைக் கையில் ஏந்தி ஆடுகிற சிவபெருமானது திருவடியையே பாடுவோர்.

மஹாபாவம் 15. பக்கம் 42ல் காண்க.

18. கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் [பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையி
லெளிவந் திருந்திரங்கி யெண்ணரிய வின் [னருளா
லொளிவந்தெ னுள்ளத்தி னுள்ளே யொளிதிகழ
வளிவந்த வந்தணனைப்பாடுதுங்கா ணம்மானாய்.

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மால் அயனும் காண்பு அரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீர் ஆர் பெருந்துறையில்
எளிவந்து இருந்து இரங்கி எண் அரியஇன் அருளால்
ஒளிவந்து என் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளி வந்த அந்தணனைப் பாடுதும்காண் அம்மானாய்.

கிளிவந்த-கிளிபோன்ற. கேள்கிளரும்-ஒளிவிளங்கும். தெளிவந்த தேறலை-தெளிந்த தேனை. எளிவந்து இருந்து-எளிதாக வந்திருந்து. அளிவந்த-கிருபையோடு எழுந்தருளின.

கிளிபோன்ற மெல்லிய மொழியையுடைய அம்பிகையின் செம்பாதியாக இருக்கிற தேஜோமயன் சிவன். அவனைக் காணவேண்டுமென்று வடிவெடுத்து வெளியே கிளம்பிய திருமாலும் பிரம்மாவும் கண்டிராத ஞான வடிவினன் அவன். தெளிந்த தேன் போன்ற அமிர்த சொருபமாய்ச் சிறப்பு வாய்ந்த திருப்பெருந்துறையில் எளிதாக வந்து இருந்து இரங்கிப் பேர் அருள் சுரந்தவன் அவன். தேஜோமயனாய் அவன் என் உள்ளத்தினுள்ளே திகழ்ந்தவன். கருணைக் கடலாக எழுந்தருளிய அந்த ஞானசாரியனைப் புகழ்ந்து பாடுவோம்.

19. முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
யென்னானை யென்னப்ப னென்பார்கட் கின்ன
[முதை
யன்னானை யம்மானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

முன்னானை மூவர்க்கும் முற்றும் ஆய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாது இயலும் பாதியனைத்
தென் ஆனைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என் அப்பன் என்பார்கட்கு இன் அமுதை
அன்னானை அம்மானைப் பாடுதும்காண் அம்மானாய்.

பிஞ்ஞகனை-பொன்னிறமுடையவனை, சிவனை. மன்னானை-நிலைபேறுடையவனை. வானவனை-சித் ஆகாச சொருபனை. ஆனைக்காவானை - திருவானைக்காவில் உறைபவனை. என்னானை - எனக்கு இனிமையானவனை. அன்னானை-நிகர்த்திருப்பவனை. அம்மானை-என் தந்தையை.

மும்மூர்த்திகளுக்கும் முன்னவன், எல்லாப் பொருள்களும் தயனேயானவன், அவை யாவுக்கும் பின்னவன், பிஞ்ஞகன்

என்னும் திருநாமத்தையுடையவன், யாவரும் விரும்புகிற திருப்பெருந்துறையில் நிலைத்திருப்பவன், சித் ஆகாசன், அர்த்தநாரீசுவரன், தென் திருவானைக்காவில் இருப்பவன், பாண்டி நாட்டான், எனக்கு இனியவன், தன்னை அப்பன் என்று அழைப்பவர்க்கு அமிர்தம் போன்றவன், என் தந்தை—இத்தகைய சிவனுரை நாம் பாடுவோம்.

20. பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்
[னடியார்
குற்றங்க ணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் றொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்கா ணம்மானாய்.

பெற்றி பிறர்க்கு அரியபெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன் அடியார்
குற்றங்கள் நீக்கிக் குணம்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வு அறுப்பான் தொல்புகழே
பற்றி இப்பாசத்தைப் பற்று அற நாம் பற்றுவான்
பற்றியபேர் ஆனந்தம் பாடுதும்காண் அம்மானாய்.

பெற்றி - தன்மை. கொற்றக்குதிரை - *வெற்றி தரும் குதிரை* கோதாட்டி-*சீராட்டி.*

நம்பெம்மானது பெற்றி இத்தகையதென்று அன்பர் அல்லாது பிறர் அறிந்துகொள்ளமாட்டார். அவன் திருப்பெருந்துறையில் வதிபவன், வெற்றிக்குதிரை ஏறிவந்து அவன் தன் அடியார்களின் குறைபாடுகளைக் களைந்து குணங்களைப் பாராட்டிச் சீராட்டி அவர்களை ஏற்றுக்கொண்டான். சூழ்ந்திருக்கிற உறவினர்களது தொடர்வு என்னும் பந்தபாசத்தை அறுத்தான். அப்பரமனது பழைய புகழையே பற்றிப்பிடித்து இப்பிரபஞ்சத்தில் பாசம் என்னும் பற்றை நாம் அறவே அகற்றுவோம் அதற்கு அப்பரமானந் தனது பற்று ஒன்றே உற்ற உபாயம். அப்பெம்மானை நாம் பாடுவோம்.

தில்லையில் அருளிய

9. திருப்பொற்சுண்ணம்

ஆனந்த மனோலயம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பலவகை மணப்பொருள்களை உரலில் இட்டு இடிக் கப்படுவது பொற்சுண்ணம். இது பொன் போன்ற நிற முடையது. பொன்னும் சிறிது இதில் சேர்க்கப்படுகிறது. திருமஞ்சனத்துக்காக இது உபயோகிக்கப்படுகிறது.

1. முத்துநற் றாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளு
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும்வந்து கவரிகொண்மி
னத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

முத்து நல்தாமம் பூமாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நல்தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நா மகளோடு பல்லாண்டு இசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொள்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொன் சுண்ணம் இடித்தும் நாமே.

தாமம்-மாலை. முளைக்குடம்-மங்கள காரியங்கள் நிகழும் பொழுது தானியங்களை முளைக்கச் செய்யும் மட்பாண்டம். கவரி-சாமரம். அம்மானை-தந்தையாகிய இறைவனை. அத்தன்-கடவுள். இடித்தும்-இடிப்போமாக.

அழகிய முத்துமாலைகளையும் பூமாலைகளையும் தொங்கவிடுங் கள். முளைக்குடத்தையும் தூபகலசத்தையும் தீபத்தையும் வையுங் கள். சத்தியும், சோமியும், நிலமகளும், சரஸ்வதியோடு கூடிப் பல்லாண்டு பாடுங்கள். சித்தியும், கௌரியும், பார்வதியும், கங்கை யும் வந்து சாமரம் வீசுங்கள். திருவையாற்றுக் கடவுளாகிய

நம் தந்தையைக் குறித்துப் பாடியாடி நாம் பொற்சுண்ணம் இடிப்போம்.

2. பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டு
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
றேவியுந் தானுவந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே.

பூ இயல் வார் சடை எம்பிராற்குப்
பொன் திருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்து உடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமின் எம்கோன் எம் கூத்தன்
தேவியும் தானும் வந்து எம்மை ஆளச்
செம்பொன் செய் சுண்ணம் இடித்தும் நாமே.

பூ இயல்-அழகு வாய்ந்த. வார் சடை-நீண்ட சடை. மாவின் வடு-மாம் பிஞ்சு. வகிர் அன்ன-பிளவையொத்த. கண்ணீர்-கண் களையுடையீர். குனிமின்-கூத்தாடுங்கள்.

அழகு வாய்ந்த, நீண்ட ஜடையையுடைய எம்பிரானுக்கு நயமான கதம்பப்பொடி இடிக்கவேண்டும். மாம்பிஞ்சின் பிளவை யொத்த கண்களை யுடையீர், வாருங்கள். வந்து எம்மோடு சேர்ந்து பாடுங்கள். இனிய தொண்டர்கள் வெளியே காத்திராதபடி அவர் களை அழையுங்கள்; கூத்தாடுங்கள்; போற்றுங்கள்; எம் இறைவ னும் எம் கூத்தனுமாகிய சிவபெருமான், தேவியும் தானுமாக, எழுந்தருளி எம்மை ஆளும் பொருட்டுச் செம்பொன் நிறமுள்ள கதம்பப் பொடியை நாம் இடிப்போம்.

3. சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
யிந்திரன் கற்பக நாட்டியெங்கு
மெழிற்சுடர் வைத்துக் கொடியெடுமி

னந்தரர் கோனயன் றன்பெருமா
ஞழியா ஞதனல் வேலன்ருதை
யெந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே.

சுந்தரம் நீறு அணிந்தும் மெழுகித்
தூய பொன் சிந்தி நிதி பரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழில் சுடர் வைத்துக் கொடி எடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன் நல்வேலன் தாதை
எம்தரம் ஆள் உமையாள் கொழுநற்கு
ஏய்ந்த பொன் சுண்ணம் இடித்தும் நாமே.

சுந்தர நீறு-திருநீறு. அந்தரர் கோன்-விண்ணவர் அரசனுகிய இந்திரன். அயன்-பிரம்மா. ஆழியான்-சக்கரத்தையுடையவன், மஹாவிஷ்ணு. நல்வேலன்-திருமுருகன். எந்தரம்-எம்மைப்போன்றவர்கள். ஏய்ந்த-பொருந்திய.

அழகிய திருவெண்ணீற்றை அணிந்து, தரையை மெழுகி, புனிதமான பொற்பொடிகளைச் சிதறி, நவதானியங்களைப் பரப்பி, இந்திரனது கற்பகவிருக்ஷத்தை நாட்டி, எல்லாவிடங்களிலும் அழகிய தீபங்களை ஏற்றிவைத்து, ரிஷபக் கொடியை உயர்த்துங்கள். இந்திரனுக்கும் பிரம்மாவுக்கும் தலைவன், விஷ்ணுவுக்கு நாயகன், முருகனுக்குத் தந்தை, எம்போன்றவர்களை ஆண்டருள்கின்ற உமா தேவிக்குக் கணவன்—இத்தகைய பரமனுக்குப் பொருந்திய பொற் சுண்ணம் இடிப்போம் நாம்.

4. காசணி மின்களு லக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய வடியவர்க
ணின்று நிலாவுக வென்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

காசு அணிமின்கள் உலக்கை எல்லாம்
காம்பு அணிமின்கள் கறை உரலை
நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
திரு ஏகம்பன் செம்பொன் கோயில்பாடிப்
பாசம் வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

காசு-மணிவடம். காம்பு-பட்டாடை. கறை-நிறம். நிலாவுக-விளங்குக.

உலக்கைகளுக்கு மணிவடம் கட்டுங்கள். உரலுக்குப் பட்டாடை சுற்றுங்கள். அன்புள்ள அடியார்கள் நிலைத்திருந்து வாழ்கவென்று வாழ்த்துங்கள். உலகம் எல்லாம் புகழுகின்ற திருவேகம்பமுடையானது திருக்கோயிலைப் புகழ்ந்து பாடுங்கள். நம் பாசவினைகளைக் களைந்து நின்று, பாடிக்கொண்டே பொற்சுண்ணம் இடிப்போம்.

5. அறுகெடுப் பாரய னும்மரியு
மன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லா
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

அறுகு எடுப்பார் அயனும் அரியும்
அன்றி மற்று இந்திரனோடு அமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்
நம்மில்பின்பு அல்லது எடுக்கஒட்டோம்
செறிவு உடை மும்மதில் எய்த வில்லி
திருஏகம்பன் செம்பொன் கோயில்பாடி
முறுவல் செவ்வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப் பொன் சுண்ணம் இடித்தும் நாமே.

அறுகு எடுப்பார்-குடவிளக்கு ஏந்துவார்கள். நறுமுறு-முணுமுணுக்கும். செறிவு-நெருக்கம். வில்லி-வில்லையுடையவன். முறுவல்-புன்சிரிப்பு.

பிரம்மாவும் விஷ்ணுவும் குடவிளக்கு ஏந்துவார்களே அல்லாமல் அவர்களுக்கு வேறு ஆகிய இந்திரனும் முறைமுறைக்கின்ற இதர தேவர்களும் நமக்குப் பின்பே அன்றி முன்பு விளக்கு ஏந்த நாம் இடம்தரோம். ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட முப்புரங்களை எய்த வில்லையுடையவனும் திருவேகம்ப முடையானுமாகிய சிவ பெருமானது செம்பொன்னாலாகிய கோயிலைப் பாடுவோம். புன் சிரிப்புத் திகழும் சிவந்த வாயையுடைய வனிதைகாள், மூன்று கண் களையுடைய நம் அப்பன் ஆடுதற்குப் பொற்சுண்ணம் இடிப்போம்.

6. உலக்கை பலவோச்சு வார்பெரிய
ருலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்துநின்றார்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க வடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்துநாமே.

உலக்கை பல ஓச்சுவார் பெரியர்
உலகம் எலாம் உரல்போதாது என்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாது என்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாள் மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

ஓச்சுவார்-இடிப்பதற்கு உயர்த்துபவர்கள். கலக்க-கலந்து கொள்ள. நலக்க-நன்மையுண்டாக. நாள்மலர்-அன்று அலர்ந்த மலர்.

இறைவனுக்குப் பொற்சுண்ணம் இடித்தல் என்னும் சிவ சேவை யில் கலந்துகொள்ள எண்ணிறந்த பெரியவர்கள் வந்து கூடினர் கள். அவர்கள் எல்லாரும் உயர்த்திய உலக்கைகளுக்கு இவ்வுலகம் என்னும் உரல் போதவில்லை. இந்நிகழ்ச்சியில் கலந்து கண்டு களிக்க வந்த அடியார்களுக்கு நிற்க இவ்வுலகம் போதவில்லை. நமக்கு நலன் உண்டாதல் பொருட்டுச் சிவன் புத்தம் புதிய மலர்

போன்ற தன் பாதத்தை நாம் அணிந்துகொள்ள நமக்குக் கொடுத்தருளினன். அவனே ஹிமவானுக்கு மருகன். அவன் பெருமையைப் பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம்.

பிரேமை பக்தியை விளக்குதற்கு இப்பிரபஞ்சம் என்னும் அரங்கம் போதாது.

7. சூடகந் தோள்வளை யார்ப்பவார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமு மவர்தம்மை யார்ப்பவார்ப்பப்
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்னகோவுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாம் எழுந்து ஆர்ப்ப ஆர்ப்ப
நாடவர் நம் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்அடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பரா பரனுக்கு
ஆடகம் மாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

சூடகம்-கைவளை. ஆர்ப்ப-ஒலி செய்ய. பாடகம் - மகளிர் காலணி. பராபரனுக்கு - பரம்பொருளுக்கு. ஆடகம் - பொன். மாமலை-பெரியமலை. ஆர்க்கும்-அணிந்திருக்கும்.

கைவளை, தோள்வளை முதலியன ஒலிக்கின்றன. அன்பர்கள் பெருங்கூட்டமாய் எழுந்து ஆனந்தமாக ஆரவாரிக்கின்றனர். உலகத்தவர் இவையெல்லாம் பயன்படாச் செயல் என்று ஏளனம் பண்ணுகின்றனர். அவர்கள் ஏளனம் பண்ணுவது அறிவீனம் என்று நாம் ஒலமிடுகிறோம். தன் மெல்லிய திருவடிகளில் பாடகம் அணிந்திருக்கும் பார்வதி தேவியின் பாகனும் பெரிய பொன்மலை போன்ற பரம்பொருளுமாகிய சிவனாரைப் போற்றிப் பாடியாடி நாம் பொற்சுண்ணம் இடிப்போம்.

8. வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்
[சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
யாட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

வாள் தடம்கண் மடம் மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்ப வண்கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டம் துதைந்து இலங்கச்
சோத்துஎம் பிரான் என்று சொல்லிச்சொல்லி
நாள்கொண்ட நாண் மலர்ப் பாதம் காட்டி
நாயின் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

வாள் தடம் கண்-ஒளிவிசும் பெரிய கண்கள். மடமங்கை நல்லீர்-அழகிய பெண்களே. வரிவளை-கோடுகளையுடைய வளையல்கள். வண்கொங்கை பொங்க-கனத்த ஸ்தனங்கள் பூரிக்க. தோள் திருமுண்டம்-தோள்களும் தலைகளும். துதைந்து இலங்க-நெருங்கி விளங்க. சோத்து-சோத்தம்-அஞ்சலி. நாள்கொண்ட-புதுமையையுடைய. நாண் மலர்-நாணுகின்ற தாமரைப் பூ. வண்ணங்கள்-விதங்கள்.

பிரகாசமான பெரிய கண்களையுடைய சுந்தரிகாள், கோடுகளையுடைய வளையல்கள் ஒலிக்கவும், பருத்த ஸ்தனங்கள் பூரிக்கவும், தூக்கிய தோள்கள் தலைகளோடு ஒட்டித் திகழவும் திரும்பத் திரும்ப அஞ்சலி சொல்லுவோம். புதிதாக அலர்ந்த தாமரைப் பூவைத் தோற்கடிக்கக் கூடிய எழில் வாய்ந்தவை இறைவனுடைய திருவடிகள். அத்திருவடிகளைக் காட்டி நாயினும் கடைப்பட்ட நம்மை இப்பிறவியிலேயே ஆட்கொண்டான். அப்படி ஆட்கொண்ட விதங்களைப்பாடி அவன் நீர் ஆடுதற்குப் பொற்சுண்ணம் இடிப்போம்.

9. வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்ச ணிறையவட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொ னுலக்கைவ லக்கைபற்றி
யைய னணிதில்லை வாணனுக்கே
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

வையகம் எல்லாம் உரல் அது ஆக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்எனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணி தில்லைவாணனுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

வையகம்-உலகம். மாமேரு-மகாமேரு. மெய்-மெய்ப்பொருள். அட்டி-இட்டு. மேதகு-மேன்மை பொருந்திய. செய்ய-சிவந்த. அணி-அழகிய.

உலகம் முழுதும் உரல். மகாமேரு மலை உலக்கை. மங்களமா யுள்ள சிவ சாந்நித்தியத்தைத் தோற்றுவிப்பது அங்கு நடை பெறும் நிகழ்ச்சியாகும். நாம் பொற்சுண்ணம் இடிப்பது அதற்கு ஒப்பானது. திருப்பெருந்துறையிலும் தில்லையிலும் எழுந்தருளி யுள்ள பரமனது செவ்விய திருவடியைப் பாடிப்பாடிப் பொற்சுண் ணம் இடிப்போம்.

உலகின் நடைமுறையே தில்லைத் திருநடனம் எனப் படுகிறது. அதில் யாண்டும் ஒழுங்குப்பாடு உண்டு. உரல் மயமாயிருப்பது சக்தி. மெய்ப்பொருளாகிய மஞ்சள் மயமாயிருப்பதும் மகாமேரு மயமாயிருப்பதும் சிவம். அண்டமெங்குமுள்ள இப்பேர் அமைப்பு, பிண்டமாகிய மானுட சரீரத்திலும் இருக்கிறது. அதில் மூலாதாரம் உரல், சுஷும்னைநாடி மகாமேரு, பிரக்ஞை அல்லது மெய்ப் பொருள் மஞ்சள். இடகலையும் பிங்களகலையும் செயல்

புரிவது உலக்கைகொண்டு குத்துதற்கு ஒப்பு ஆகிறது. பிராணுயாமம் என்னும் யோக சாதனம் மறைமுகமாக இதில் அமைந்திருக்கிறது. அண்டமெங்குமுள்ள சீர் அமைப்பானது பிராணுயாமத்தின் வாயிலாக மானுட சரீரத்திலும் அமைவதாகிறது.

10. முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
வத்தன் கருணையொ டாடவாட
வாடப்பொற் சுண்ண மிடித்து நாமே.

முத்து அணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டு இனம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆடச்
செம் கயல் கண் பனி ஆடஆடப்
பித்து எம்பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

செம் கயல்-சிவந்த கெண்டை மீன்.

முத்து மாலைகளை அணிந்திருக்கும் முலைகள் குலுங்க, அடர்ந்த கூந்தல்களில் வண்டுகள் திரண்டிருக்க, மனமானது சிவனிடம் லயமாயிருக்க, சிவந்த கெண்டைமீன் போன்ற கண்களில் நீர் அரும்ப, நான் என் இறைவனிடம் பித்துக்கொள்ள, பக்தர் அல்லாதார் பிறவிப் பிணியில் அழுந்திக்கிடக்க, என் தந்தை சிவபெருமான் யாண்டும் கருணையோடு கூடியிருக்க, அவன் நீராடுதற்கு நாம் பொற்சுண்ணம் இடிப்போம்.

11. மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்

தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
யாடுமி னம்பலத் தாடினானுக்
காடப் பொற்சுண்ண மிடித்து நாமே.

மாடு நகைவாள் நிலா எறிப்ப
வாய் திறந்து அம் பவளம் துடிப்பப்
பாடுமின் நம் தம்மை ஆண்ட ஆறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம் பெருமானைத் தேடிச்
சித்தம் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத்து ஆடினானுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

மாடு-பக்கத்தில். நகை-சிரிப்பு. வாள் நிலா எறிப்ப-ஒளி பொருந்திய நிலா வீச. அம்பவளம்-அழகிய பவளம். வண்ணமும்-விதத்தையும். தேறி-தெளிந்து.

சிரிப்பதனால் பக்கத்தில் ஒளிபொருந்திய நிலா வீசுவதுபோன்று பற்கள் தென்படுகின்றன. பாடும்பொழுது அழகிய சிவந்த உதடுகள் துடிக்கின்றன. இத்தகைய காட்சி கொடுக்கும் காரிகைகாள், இறைவன் நம்மை ஆண்டருளிய விதத்தையும், நமது பணியை ஏற்றுக்கொண்ட விதத்தையும் திரும்பத் திரும்பப் பாடி அவனைத் தேடுங்கள். தேடுதலில் மனம் களித்திருங்கள். அவன் சாந்நித்தியத்தை உணராதபொழுது திகைத்திருங்கள்; உணரும்பொழுது தெளிவடையுங்கள். அம்பலத்தில் ஆடினவனைக் குறித்து ஆடுங்கள்; அவனுக்காகப் பொற்சுண்ணம் இடியுங்கள்.

12. மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
யையனை யையர் பிரானைநம்மை
யகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்

உபநிஷத மந்தரம்—89.

यदाऽतमस्तन्न दिवा न रात्रिः न सन्नचासच्छिव एव केवलः ।
तदक्षरं तत् सवितुर्वरेण्यं प्रज्ञा च तस्मात् प्रसृता पुराणी ॥

பையர வல்குன்ம டந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

மை அமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத்து ஆட்கொண்டு அருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போது அரிக் கண் இணைப் பொன்தொடித்தோள்
பை அரவு அல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

மை-கருமை. அகப்படுத்து-உட்படுத்து. போது-மலர். அரிக் கண்-சிவந்த கோடு பரந்த கண். தொடி-வளையல். பை அரவு-படம் விரித்தாடும் பாம்பு.

யதா அதம: தத் ந திவா ந ராத்ரி:
ந ஸத் ந ச அஸத் சிவ ஏவ கேவல: ।
தத் அக்ஷரம் தத் ஸவிது: வரேண்யம்
ப்ரக்ஞா ச தஸ்மாத் ப்ரஸ்ருதா புராணீ ॥

(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 4—18)

यदा अतम: யதா அதம: இருள் அகலுங்கால் तत् தத் அந்நிலை न दिवा ந திவா பகல் அன்று न रात्रिः ந ராத்ரி: இரவன்று न सत् ந ஸத் மெய் அன்று न च असत् ந ச அஸத் பொய்யன்று केवल: शिव: एव கேவல: சிவ: ஏவ தனிப் பொருள் சிவன்தான் உளது तत् अक्षरं தத் அக்ஷரம் அது அழிவற்றது तत् தத் அது सवितु: ஸவிது: படைப்புக் கடவுளால் वरेण्यं வரேண்யம் போற்றப்படுவது तस्मात् தஸ்மாத் அப்பரம்பொருளிடத்திருந்து पुराणी प्रज्ञा புராணீ ப்ரக்ஞா பண்டைப் பேரறிவு प्रसृता ப்ரஸ்ருதா தோன்றுவதாயிற்று.

அக்ஞான இருள் அகலுங்கால் பகல் இல்லை, இரவு இல்லை. ஸத் இல்லை, அஸத்தும் இல்லை. தன்னந்தனிப்பொருளாகிய சிவனே உளர். அவர் அழிவற்றவர். சிருஷ்டிக்கடவுள் ஆகிய பிரம்ம தேவனுல் அவர் போற்றப்படுபவர். பண்டைப் பேரறிவு அவரிடமிருந்து வந்துள்ளது.

நீலகண்டன்; தேவர்க்கு அமிர்தம்; மாணிக்கக் கூத்தன்; தேவன்; தேவர் தலைவன்—இத்தகைய சிவன் நம்மை வலிய ஆட்கொண்டுள்ளான். அவன் பொய்யர்க்குப் பொய்யன். மெய்யர்க்கு மெய்யன். தாமரை போன்ற அரிக்கண்களையுடையவர்களும், பொன் தோள்வளையல் அணிந்திருப்பவர்களுமாகிய மகளிர்களே, நம் இறைவனைப் பாடி அவனுக்குப் பொற்சுண்ணம் இடிப்போம்.

13. மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீ
ரென்னுடை யாரமு தெங்களப்ப
னெம்பெரு மானிம வான்மகட்குத்

அக்ஞான இருள் என்று சொல்லப்படுவதும் பிறவிப் பெருங்கடல் என்று சொல்லப்படுவதும் ஒன்றே. ஏனென்றால் பிறப்பும் இறப்பும் அக்ஞானத்தின் விளைவாம். அபரவித்தை அல்லது இவ்வுலக சம்பந்தமான கலைஞானங்கள் அனைத்தும் அக்ஞான இருளோடு சேர்ந்தவைகளாம். பிறவிப் பிணியை அவைகள் போக்க மாட்டா. பரஞானம் அல்லது சிவஞானம் உதிக்குமிடத்து அக்ஞான இருள் தானாக அகலுகிறது.

காலசொரூபமாயிருப்பது பிரபஞ்ச வாழ்வு. அது அக்ஞானத்தில் உளது. காலத்தைக் கடந்தது சிவசொரூபம். ஆதலால் சிவஞானம் இரவுபகலற்றது. மாயப்பிரபஞ்சம் தோற்றத்தில் இருக்கிறது. ஆதலால் அது ஸத் எனப்படுகிறது. மூலப்பிரகிருதியோ தோன்றாநிலையில் இருக்கிறது. அந்நிலையில் அது அஸத் எனப்படுகிறது. சுத்தசிவத்தில் தோன்றியுள்ள பிரகிருதியுமில்லை; தோற்றத்துக்கு வராத பிரகிருதியுமில்லை. ஸத் அஸத் ஆகிய இரண்டும் ஆங்கு இடம்பெறுவதில்லை. சிவம் தன்னில் தானாயிருக்கும் தனிப்பொருள். சிவஞானி சிவத்தில் ஒன்றுபடுகிறான்.

சிவத்துக்கு அக்ஷரம் என்றும் பிரகிருதிக்கு க்ஷரம் என்றும் பெயர். எது மாறியமையும் தன்மையுடையதோ அது க்ஷரம். தோன்றாநிலைக்கு அது மாறும்பொழுது அது அழிந்துபோயிற்று என்கிறோம்.

தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன்
றமையனெம் மையன் ருள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

மின் இடைச் செம்துவர் வாய் கரும்கண்
வெள் நகை பண் அமர்மென் மொழியீர்
என்னுடை ஆர் அமுது எங்கள் அப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம்ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொன் திருச் சுண்ணம் இடித்தும் நாமே.

மின்னல் போன்ற இடையையும், செம்பவளம் போன்ற உதடுகளையும், கரிய கண்களையும், வெண் பற்களையும், இன் இசைக்கு ஒப்பான மெல்லிய மொழியையும் உடைய மகளிர்காள், கேளுங்கள். எனக்கு அமிர்தம், எங்கள் அப்பன், எம் பெருமான் சிவன். இவன் பார்வதி தேவிக்கு முறையே மணாளனாகவும், புதல்வனாகவும், தந்தையாகவும், மூத்த சகோதரனாகவும் இருக்கிறான், எமக்கு இவன் இறைவன். பொன் ஆபரணம் அணிந்துள்ள காரிகைகாள், இவன் திருவடிகளைப் புகழ்ந்து பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம்.

உண்மையில் சக்தியும் சிவமும் அத்வைத வஸ்து. இரண்டு அல்லாத தனிப்பொருள். இருவராகப் பாகுபடுத்தும்பொழுது அவர்களுக்கிடையில் முரண்படுவன போன்ற வெவ்வேறு முறைமைகளைச் சூட்டலாம். ஹிமவான் புதல்வியை மணந்துகொண்டதனால் சிவன் சக்திக்குக் கணவன் ஆகிறான். பராசக்தியினின்று சிவசைதன்யம் தோன்றுவதால் சிவம் சக்திக்கு மகன் ஆகிறான். சக்திக்குப் பிறப்பிடம் சிவமாயிருப்பதால் அவன் அவளுக்குத் தகப்பன் ஆகிறான். தோற்றத்துக்கு வருகிற சக்திக்கு முன்னதாகவே சிவம் இருப்பதால் அவன் அவளுக்கு மூத்த சகோதரனாகிறான்.

14. சங்கம ரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப வராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

சங்கம் அரற்றச் சிலம்பு ஒலிப்பத்
தாழ்குழல் சூழ்தரும் மாலை ஆடச்
செம் கனிவாய் இதழும் துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம்பாடிக்
கங்கை இரைப்ப அரா இரைக்கும்
கற்றைச் சடைமுடியான் கழற்கே
பொங்கிய காதலில் கொங்கை பொங்கப்
பொன்திருச்சுண்ணம் இடித்தும் நாமே.

சங்கம் - சங்கு வளையல். அரா இரைக்கும்-பாம்பு சீறும். கற்றை-திரட்சி.

சங்கு வளையல்கள் முழங்குகின்றன. சிலம்புகள் ஒலிக்கின்றன. நீண்ட கூந்தலில் கட்டிய பூமாலை அசைகிறது. சிவந்த உதடு துடிக்கிறது. இப்பாங்குகளையுடைய பெண்களே, நாம் சிவலோகத்தை மெச்சிப் பாடுவோம்; கங்கை ஒலிக்கட்டும். ஜடாமுடியிலுள்ள பாம்பு சீறட்டும்; மிக்க அன்போடு சிவனுருக்குப் பொற்சுண்ணம் இடிப்போம்.

15. ஞானக் கரும்பின் றெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம்பு குந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண்ம டந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற்கு அரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச் சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பு அறுத்து ஆண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும்பு ஏற வாழ்த்திப்
பானல் தடம் கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

நந்தாத்தேனை-சுவைகுன்றாத தேனை. பானல்-கருங்குவளை மலர். தடம்கண்-விசாலமான கண்.

ஞானம் என்னும் கருப்பஞ்சாற்றின் தெளிவு, அதினின்று உண்டான பாகு, நாடுதற்கு அரிய நன்மை, சுவைகெடாத தேன், முக்கனியின் சுவை ஆகிய இத்தனையுமாயிருப்பவனை, மனதில் புகுந்து இனிக்க வல்ல இறைவனை, பிறவிப் பிணியைப் போக்கி ஆண்டு கொண்டருளிய கூத்தப் பிரானை, நாவில் தழும்பு உண்டாகும்படி தோத்திரம் பாடி வணங்குவோம், கருங்குவளை மலர்போன்ற அகன்ற கண்களையுடைய யுவதிகளே, நாம் பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம்.

உபநி—13. பக்கம் 133ல் காண்க.

16. ஆவகை நாமும்வந்தன் பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேற்
றேவர்க ளுவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக ளுமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய் சுண்ண மிடித்துநாமே.

ஆவகை நாமும் வந்து அன்பர் தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனவிலும் கண்டு அறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சே அகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே.

ஆவகை-உய்யும் வகை. ஆட்செயும்-ஆள் செய்யும், அடிமை செய்யும். செல்வச் சே அகம் ஏந்திய-வளமாகிய காளை யுருவைத் தன்பால் கொண்ட. புரம்செற்ற கொற்றச் சேவகன்-திரிபுரங்களை யழித்த வெற்றிச் செயலையுடையவன்.

உய்தல் பொருட்டு நாமும் வந்து அன்பர்களோடு கூடி அடிமை செய்யும் விதத்தைப் பாடுவோம். தேவர்கள் சிவனைக் கனவிலும் கண்டறியார்கள். அவன் தனது தாமரைத் திருவடியை நனவில் நமக்குக் காட்டினன். ஆக்கத்துக்கு அறிகுறியாக ரிஷபம் பொறித்த வெற்றிக்கொடியை அவன் ஏந்தியுள்ளான். திரிபுரங் களை யழித்த வெற்றி வீரன் அவன். அவனுடைய நாமங்களைப் பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம்.

திரிபுரசம்மாரம் புராணக் கதை 3. பக்கம் 95ல் காண்க.

17. தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடை மேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடிவ லக்கையேந்து
மூனக மாமழுச் சூலம்பாடி
யும்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

தேன் அகம் மா மலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வான் அகம் மா மதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை ஏந்தும்
ஊன் அகம் மா மழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனகம் ஆக நஞ்சு உண்டல் பாடிப்
பொன்திருச் சுண்ணம் இடித்தும் நாமே.

மதிப்பிள்ளை - பிறைச்சந்திரன். மால்விடை - பெரிய காளை வாகனம். உம்பரும் இம்பரும் - விண்ணவரும் மண்ணவரும். போனகம்-உணவு.

தன்பால் தேனைக்கொண்டுள்ள கொன்றை மலரைப் பாடி, சிவபுரத்தைப் பாடி, ஜடாபாரத்தில் உள்ள வானில் சஞ்சரிக்கும் பிறைச் சந்திரனைப் பாடி, பெரிய ரிஷப வாகனத்தைப் பாடி, வலக்

கையில் பிடித்துள்ள மாமிசம் ஒட்டிக்கொண்டிருக்கும் மழுவையும் திரிசூலத்தையும் பாடி, விண்ணவரும் மண்ணவரும் உய்வு அடைதல் பொருட்டுக் கடல் நஞ்சை உணவாக உண்ட அரிய செயலைப் பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம்.

கெட்டவர்களைக் கொல்லுதற்கு அமைந்தவை மழுவும் திரிசூலமும். கொல்லப்பட்டவருடைய தசை இந்த ஆயுதங்களில் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. இவை இரண்டும் சம்மாரத் தொழிலின் சின்னம். அழிவின் வாயிலாக உலகின் புதுமை காப்பாற்றப்படுகிறது. நஞ்சு உண்ட வரலாற்றைப் புராணக் கதை எண் 2. பக்கம் 93ல் காண்க.

18. அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
யருக்க னெயிறுப றித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல் பாடி
யியைந்தன முப்புர மெய்தல் பாடி
யேழை யடியோமை யாண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றுடியாடி
நாதற்குச் சுண்ண பிடித்துநாமே.

அயன் தலைகொண்டு செண்டு ஆடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயம் தனைக்கொன்று உரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயம் தனைப் பாடி நின்று ஆடிஆடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே.

அருக்கன்-சூரியன். எயிறு-பல். கயம்-கஜம், யானை. உரி-தோல் காலனை-எமனை. இயைந்தன-கூடி வந்தனவாகிய.

பிரம்மதேவன் தலையைக் கிள்ளி அதைப் பந்தாக வைத்துச் சிவன் விளையாடினான். சூரியனது பல்லை உடைத்தான். யானையைக் கொன்று அதன் தோலை அணிந்தான். யமனை உதைத்தான் முப்புரங்களை எரித்தான். எங்களை ஆட்கொண்டான். இந்த நன்மைகளை யெல்லாம் பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம்.

சிவம் என்னும் சொல் மங்களம் எனப்பொருள்படுகிறது. அவன் செயல்களெல்லாம் மங்களமானவைகள்.

19. வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மே
லிட்டுநின் றாடு மரவம்பாடி
யீசற்குச் சுண்ண மிடித்துநாமே.

வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழும் தென் தில்லைபாடிச்
சிற்றம்பலத்து எங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டு நின்று ஆடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே.

மத்தம்-ஊமத்தம் பூ. சிட்டர்கள்-நல்லொழுக்கமுடையவர்கள். செல்வம்-ஞானச் செல்வம். மாசுணக்கச்சை-சர்ப்பக் கச்சை. கங்கணம்-சர்ப்பக் கங்கணம். கவித்த-மூடின. இட்டு-வைக்கப் பட்டு. அரவம்-பாம்பு.

சிவனர் அணிந்திருக்கிற வட்டமான கொன்றை மலர் மாலை, ஊமத்தம் பூ, பிறைச்சந்திரன், நல்லார் வாழ்கின்ற அழகிய தில்லை, சித் ஆகாசத்தைப்பற்றிய ஞானச் செல்வம், இறைவனுடைய இடுப்பு, கை, உடல் ஆகிய பகுதிகளில் உள்ள சர்ப்பங்கள்—இவை யாவும் பாடிப் பொற் சுண்ணம் இடிப்போம்.

20. வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்

பாதியு மாய்முற்று மாயினுர்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினுருக்
காதியு மந்தமு மாயினுருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

வேதமும் வேள்வியும் ஆயினுர்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினுர்க்குச்
சோதியும் ஆய் இருள் ஆயினுர்க்குத்
துன்பமும் ஆய் இன்பம் ஆயினுர்க்குப்
பாதியும் ஆய் முற்றும் ஆயினுர்க்குப்
பந்தமும் ஆய் வீடும் ஆயினுருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினுருக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

மெய்ம்மை-பரமாத்மா. பொய்ம்மை-பிரபஞ்சம். பாதியும் ஆய்-சக்தியாகி. முற்றும்-சக்தியும் சிவமும் சேர்த்து இலங்குவது.

வேதம், வேள்வி, பரமாத்மா, பிரபஞ்சம், வெளிச்சம், இருள், துன்பம், இன்பம், சக்தி, சிவசக்தி, பந்தம், மோக்ஷம், துவக்கம், முடிவு ஆகிய இத்தனையுமாய் இருப்பவன் சிவன். அப்பெரிய பொருளைப் பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம்.

வேதம் பக்கம் 60ல் காண்க.

வேள்வி பக்கம் 51ல் காண்க.

உபநி—14, 15ல் பார்க்க.

முரண்பாடுகள் அனைத்தும் ஈசனிடம் இடம் பெறுகின்றன. வேதம் இவ்வுலகத்தை விளக்குகிறது. ஞான வேள்வி இவ்வுலகத்தைத் துறக்கச் செய்கிறது. மாயா சக்தி ஈசனது விபூதி. அது வித்யா மாயை, அவித்யா மாயை எனப்பிரிக்கிறது. பிரிந்திருப்பினும் அவையிரண்டும் ஈசனுடைய கூறுகளாம்.

தில்லையில் அருளிய

10. திருக்கோத்தும்பி

சிவனோடைக்கியம்

நாலடித் தரவுகொச்சகக் கலிப்பா

வண்டு வகைகளுள் மிகப் பெரியதாய் இருப்பது கோத்தும்பி அல்லது அரச வண்டு என அழைக்கப்படுகிறது. ஜீவாத்மாக்களுள் மானுட வடிவெடுத்து வந்துள்ளவன் கோத்தும்பி என்று உருவகப்படுத்தி இயம்பப்படுகிறான். பூவிலுள்ள நறுமணத்தையும் தேனையுமே தும்பி விரும்புவது போன்று மனிதனாய்ப் பிறந்திருப்பவன் பரமனையே நாடியிருக்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

1. **பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த**
நாவேறு செல்வியு நாரணனு நான்மறையு
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

பூ ஏறு கோனும் புரந்தரனும் பொற்பு அமைந்த
நா ஏறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மா ஏறு சோதியும் வானவரும் தாம் அறியாச்
சே ஏறு சேவடிக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.

பூ ஏறு கோனும்-பிரம்மதேவனும். புரந்தரனும்-இந்திரனும். பொற்பு-அழகு. நா ஏறு செல்வியும்-சரஸ்வதியும். மா ஏறு-பெருமை மிகுந்த. சே ஏறு-எருதின் மீது ஏறுகிற.

படைப்புத் தெய்வமாகிய பிரம்மதேவனும், இந்திரனும், அழகிய சரஸ்வதியும், மகாவிஷ்ணுவும், நான்கு வேதங்களும், சந்திரன், சூரியன், அக்கினியாகிய பெருமை பொருந்திய ஜோதிகளும், தேவர்களும் சிவபெருமானை முற்றும் அறிந்துகொள்ள மாட்டார்கள். அத்தகைய ரிஷபவாகனனைப் போற்றி அரசவண்டே நீ ரீங்காரம் செய்வாயாக.

உபநி—14. பக்கம் 135ல் காண்க,

2. நானாரென் னுள்ளமார்
ஞானங்களா ரென்னையாரறிவார்
வானோர் பிரானென்னை
யாண்டிலனேன் மதிமயங்கி
யூனா ருடைதலையி
லுண்பலிதே ரம்பலவன்
றேனார் கமலமே
சென்றூதாய் கோத்தும்பீ.

நான் ஆர் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர் என்னை [யார் அறிவார்
வானோர்பிரான் என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊன் ஆர் உடைதலையில் உண்பலி தேர் அம்பலவன்
தேன் ஆர் கமலமே சென்று ஊதாய் கோத்தும்பீ.

உடைதலையில்-உடைந்த தலையோட்டில். உண்பலி-உண்பதற் கான பிக்ஷை.

தேவர் பெருமான் என்னை ஆட்கொள்ளாது விட்டிருப்பானாகில் எனக்கு ஒரு மதிப்பும் இல்லை; என்னை மதிக்கும்படி புத்திகெட்டவர் யாருமில்லை. மாமிசம் பொருந்திய பிரம்ம கபாலத்தில் பிக்ஷையேற்று உண்கிற அம்பலவாணனது அமிர்த சொருபத்தைக் கோத்தும்பி நீ ஊதிப் போற்றுவாயாக.

ஸ்தாவர ஜங்கம உலகில் ஓர் உயிர் மற்றோர்உயிரின் உடலைத் தனக்கு உணவாக்குவதன் மூலமாகவே வாழ்வு நிறைவேறுகிறது என்னும் இயற்கைத் திட்டத்தை "ஊன் ஆர் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்" என்னும் கோட்பாடு தெளிவுறுத்துகிறது.

3. தினைத்தனை யுள்ளதோர்
பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும்
பேசுந்தொறு மெப்போது

மனைத்தெலும் புண்ணெக
வானந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ.

திணைத்தனை உள்ளது ஓர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசும்தொறும் [எப்போதும்
அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தம்தேன் சொரியும்
குனிப்பு உடையானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.

குனிப்பு-கூத்து.

பிருங்கராஜனே, பூவிலிருக்கிற ஒரு சிறு துளி தேனில் நீ விருப்பங்கொள்ளாது, ஆனந்தக்கூத்தனிடத்திருக்கும் பரமானந்தத்தேனில் நீ லயமாகிப் பின்பு அதை விளம்பரம் செய்க.

மகாபாவம் மெய்ப்பாடு 10-4, பக்கம் 40ல் காண்க.

4. கண்ணப்ப னொப்பதோ
ரன்பின்மை கண்டபி
னென்னப்ப னென்னொப்பி
லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை
வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே
சென்றூதாய் கோத்தும்பீ.

கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு இன்மை கண்டபின்
என் அப்பன் என் ஒப்பு இல் என்னையும் ஆட்கொண் [டருளி
வண்ணப் பணித்து என்னை வா என்ற வான் கருணைச்
சுண்ணம் பொன் நீற்றற்கே சென்று ஊதாய் [கோத்தும்பீ.

வண்ணப் பணித்து-உணவான் ஆகும்படி என்னைச் செய்து. சுண்ணம்-பொடி, சூரணம். பொன் நீற்றற்கே-அழகிய வெண் ணீற்றை யுடையானிடத்தே.

அன்பின் உச்சநிலையில் கண்ணப்பன் இருந்தான். அன்பின் ஆரம்ப நிலையில் நான் இருக்கிறேன். ஆயினும் என் தகப்பன் நீற்

நிலையில் உள்ள என்னைக் கருணையினால் ஆட்கொண்டு, என்னைக் குணவான் ஆகும்படி செய்து அருளினன். நுண்ணியதாகப் பொடி பண்ணிய திருநீற்றையுடைய அவனிடத்துச் சென்று, வண்டுகளுள் வேந்தே, நீ ஒலிப்பாயாக.

அன்பன் தனக்கென்று எதையும் கேட்பதில்லை. தன்னிடத்து உள்ள அனைத்தையும் அவன் எடுத்துப் பரமனுக்கு வழங்குகிறான். கண்ணப்பன் இக்கோட்பாட்டுக்கு எடுத்துக்காட்டு ஆகிறான்.

5. அத்தேவர் தேவ ரவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய்
[கோத்தும்பீ.

அத்தேவர் தேவர் அவர் தேவர் என்று இங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்து ஏதும் இல்லாது என் பற்று அற நான் பற்றி
[நின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.

பூதலத்தே - பூலோகத்தில். பத்து ஏதும் இல்லாது - பற்றுச் சிறிதுமின்றி.

வண்ணத்தில் பெரிய வண்டே, அந்தத் தேவர் பெரியவர், இந்தத் தேவர் பெரியவர் என்று பொய்த்தேவரைப் புகழ்ந்துபேசிப் புலம்புகின்ற இவ்வுலகில், எனக்குப் பிறவித் தொடர்பு ஒன்றும் இல்லாமல் ஒழியும்படி நான் பற்றி நிற்கின்ற மெய்த் தேவனாகிய சிவபிரானுக்கே நீ சென்று நாதம் ஊதுவாயாக.

பரம்பொருளை உள்ளபடி அறிந்துகொள்ளுதல் உலகப் பற்று உடையார்க்குச் சாத்தியமன்று. பரமனைச் சரியாக அறிதற்கு ஏற்ப அவனிடத்துப் பற்றுதலும் தானாகி வருகிறது.

6. வைத்த நிதிபெண்டீர் மக்கள்குலங் கல்வி
[யென்னும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்

சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

வைத்தநிதி பெண்டீர் மக்கள் குலம் கல்வி என்னும்
பித்த உலகில் பிறப்போடு இறப்பு என்னும்
சித்த விகாரம் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.

நிதி-செல்வம். சித்தவிகாரம்-மனதில் உண்டாகும் வேறுபாடு. கலக்கம்-குழப்பம். வித்தகத்தேவற்கே-ஞான சொரூபனுக்கே.

ஈட்டிய செல்வம், கொண்ட மனைவி, பெற்ற புதல்வர், கருதிய குலம், பயின்ற கல்வி ஆகிய இவையாவும் மயக்கம் கொண்டுள்ள இவ்வுலகில் பிறப்பு இறப்பு என்கின்ற மனோபாவனைகளை உண்டு பண்ணக் கூடியவைகளாகும். இத்தகைய மனத்தோற்றங்களைத் துடைத்தருளிய ஞான வடிவினனாகிய பரமனிடத்துப்போய் தும்பிக் கோவே நீ ஓசையை உண்டு பண்ணுவாயாக.

மனதில் தோன்றும் உபாதிகளே பிறவிக்கு வித்து ஆகின்றன. அவைகளை ஒதுக்குங்கால் சுத்த சைதன்யம் எஞ்சி நிற்கின்றது. யோகம் என்பது சித்த விருத்திகளைத் துடைத்துத் தள்ளுதலாம்.

7. **சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்**
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
யொட்டாத பாவித் தொழும்பரைநா முருவறி
[யோஞ்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

சட்டோ நினைக்க மனத்து அமுது ஆம் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரை நாம் உரு அறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.

சட்டோ-அறிவோ. ஒட்டாத-நினைக்க இணங்காத. பாவித் தொழும்பரை-பாவிகளை. சிட்டாய-மேன்மையாகிய. சிட்டற்கே-சிஷ்டர்க்கே, பெரியோருக்கே.

உள்ளத்திற்கு அமிர்தம் போன்ற சிவபெருமானை நினைக்கில் நஷ்டம் ஏதேனும் உண்டா? இல்லை. அழியாத இறைவனது திரு வடியை நான் மறந்து விடுவேனே! அதனை நினைக்க இணங்காத பாவிகளின் வடிவங்களைக் காணவும் நாம் சம்மதியோம். சீர்மை யில் எல்லார்க்கும் மேலோனாகிய சிவனை, வண்டு வேந்தே, நீ சென்று ஊதுக.

8. ஒன்றாய் முளைத்தெழுந்
 தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை
 நாய்சிவிகை யேற்றுவித்த
வென்றாதை தாதைக்கு
 மெம்மனைக்குந் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே
 சென்றூதாய் கோத்தும்பீ.

உபநிஷத் மந்த்ரம் — *90.*

ऊर्ध्वमूलमधःशाखं अश्वत्थं प्राहुरव्ययम् ।
छन्दांसि यस्य पर्णानि यस्तं वेद स वेदवित् ॥

ஊர்த்வமூலமத: சாகம் அச்வத்தம் ப்ராஹுரவ்யயம் ।
சந்தாம்ஸி யஸ்ய பர்ணானி யஸ்தம் வேத ஸ வேதவித் ॥

(பகவத்கீதோபநிஷதம் 15-1)

ऊर्ध्वमूलं ஊர்த்வ மூலம் மேலே வேருள்ளது अधःशाखं அத: சாகம் கீழே கிளைகளுள்ளது अश्वत्थं அச்வத்தம் ஆல மரத்தை अव्ययं அவ்யயம் அழிவற்றது என்று प्राहुः ப்ராஹு: பகர்கின்றனர் छन्दांसि சந்தாம்ஸி வேதங்கள் यस्य யஸ்ய அதனுடைய पर्णानि பர்ணானி இலைகள் तं தம் அதை यः ய: யார் वेद வேத அறிகிறானோ सः ஸ: அவன் वेदवित् வேதவித் வேதத்தை அறிபவன்.

மேலே வேருள்ளதும் கீழே கிளைகளுள்ளதும் ஆகிய ஆலமரம் போன்ற சம்சாரத்தை அழிவற்றது என்கின்றனர். வேதங்கள் அதன் இலைகள். அதை அறிபவனே வேதத்தை அறிபவன் ஆகிறான்.

அஸ்வத்தம் என்பது அரசமரம். ஈண்டு அது ஆல மரம் என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அரசமரம்

ஒன்று ஆய் முளைத்து
எழுந்து எத்தனையோ கவடுவிட்டு
நன்று ஆக வைத்து என்னை
நாய் சிவிகை ஏற்றுவித்த
என் தாதை தாதைக்கும்
எம் அனைக்கும் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே
சென்று ஊதாய் கோத்தும்பீ.

ஆலமரம் இவையிரண்டும் ஒரே இனத்தைச் சேர்ந்தவைகள்; ஆலமரம் உபமானத்துக்கு முற்றிலும் பொருத்தமுடையதாகிறது. ஆலம் விழுது மற்ற வேர்களுக்கு நேர் மாருக வேலை செய்கிறது. வேர் கீழே பூமியில் சத்தை வாங்கி மேலே எடுத்துச் செல்கிறது. ஆலம் விழுதோ மேலே கிளையில் சத்தை வாங்கிக்கொண்டு கீழ்நோக்கி வருகிறது. அஸ்வத்தம் என்னும் சொல்லுக்குப் பொருள் ஒரு நாள் இருப்பதுபோன்று அடுத்தநாள் அது இருப்பதில்லை என்பதாகிறது. ஸம்சாரமாகிய ஜகத் அத்தகையது. ஆலம் விழுது மேலே சத்தை வாங்கிக்கொண்டு கீழே இறங்கிவருவது போன்று மாயப்பிரபஞ்சம் மேலே பரம்பொருளிடத்திருந்து சத்தை வாங்கிக்கொண்டு கீழே பிரகிருதியாகப் பரிணமித்து வருகிறது. தோன்ரு நிலையில் சக்தி பிரம்மத்துக்கு அபின்னமாயிருக்கிறது. பிரம்மம் இருக்கும் வரை சக்தியும் இருக்கச் செய்யும். ஆகையால் ஸம்ஸாரத்துக்கு அது முடிவற்ற முதற்காரணமாகிறது. அச்சக்தி பிரகிருதியாக, மஹத் தத்துவமாக, அகங்கார தத்துவமாக இப்படியெல்லாம் கிளைகளாகக் கீழே பிரிந்து வருகிறது. கீழே வரவர அது ஸ்தூலமாகப் பரிணமிக்கிறது.

பிரபஞ்சம் முழுதும் அந்த அரசமரத்தோடு ஒப்பிடப்படுகிறது. இலைகள் இல்லாவிட்டால் மரம் உருப்படாது. அங்ஙனம் இயற்கையை உருப்படுத்தி வைத்திருப்பது வேதம். இவ்வுலக சம்பந்தமான அறிவைப் புகட்டுகின்ற நூல்கள் அனைத்தும் சேர்ந்து வேதம் எனப்பொருள்படு

கவடு-கிளை. சிவிகை-பல்லக்கு. தாதை-தந்தை. அனைக்கும்-அன்னைக்கும். குன்றாத செல்வன்-அழியான், தேயாதவன்.

தான் ஒரு முதல் பொருளாய் நின்று, தன்னிடத்திருந்து எத்தனையோ கிளைகளைத் தோற்றுவித்தான் பரமன். என்னை நலமுடையவனாக வைத்து, பல்லக்கில் நாயை ஏற்றுவித்தது போன்று அடியார் நடுவில் இருக்க வைத்தான். அவன் எனக்குத் தந்தை; என் தந்தைக்கும் தாய்க்கும் தந்தை. அப்பெருமான் அழியாத பொருள் என்று தும்பியரசே, நீ அவன்பால் சென்று கீதம் வாசிப்பாயாக.

9. கரணங்க ளெல்லாங்
கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று
சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென்
றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ.

கரணங்கள் எல்லாம் கடந்து நின்ற கறை மிடற்றன் சரணங்களே சென்று சார்தலுமே தான் எனக்கு

கிறது. பண்டை நான்மறை மட்டும் வேதமல்ல. நவீன ரசாயன சாஸ்திரம், இயற்கை நூல் ஆகிய அனைத்தும், எல்லா மொழிகளும், எல்லா மொழிகளிலுள்ள நூல்களும் சேர்ந்து வேதம் எனப்படுகின்றன. நலம், கேடு ஆகிய இரண்டையும் பெறுதற்கான வழிகளை வேதம் விளக்கு கிறது. பிரம்மஞானம் அடையும் வரையில் இப்பிரபஞ்ச வாழ்க்கைக்கு முடிவில்லை. அது நீடுழி நிலைத்திருக்கிறது. அக்காரணத்தை முன்னிட்டே அது அவ்யயம் அல்லது அழிவற்றது எனப்படுகிறது. எழுதிவைத்த நூலைப்படிப்பவன் வேதவித்து ஆகான்; பிரபஞ்ச நடைமுறையை உள்ளபடி அறிந்துகொள்பவன் வேதத்தை அறிபவன் ஆகின்றான். நல்லறிவு பெற முயலுபவனுக்கு மொழியினுடைய துணையைவிட இயற்கையின் நடைமுறையின் துணை மிகவும் முக்கியமானது.

மரணம் பிறப்பு என்று இவை இரண்டின் மயக்கு
[அறுத்த
கருணைக் கடலுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.

நறைமிடற்றன்-நீலகண்டன். சரணங்களே-திருவடிகளே.

திருநீலகண்டன் கருவி கரணங்களுக்கு அப்பாற்பட்டவன். அவனுடைய திருவடியைச் சாருமிடத்து எனக்கு ஜனன மரண மயக்கமில்லை. தும்பிக்கோவே, நீ அந்தக் கருணாகரனிடம் சென்று இசை பாடுக.

கருவி கரணங்களைக் கடப்பவர்க்குப் பிறப்பு இறப்பு இல்லை; பரமனது சொரூபம் வாய்க்கிறது.

10. நோயுற்று மூத்துநா னுந்துகன்று யிங்கிருந்து
நாயுற்ற செல்வ நயந்தறியா வண்ணமெல்லாந்
தாயுற்று வந்தென்னை யாண்டுகொண்ட தன்
[கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

நோய்உற்று மூத்து நான்
நுந்து கன்றாய் இங்கு இருந்து
நாய்உற்ற செல்வம்
நயந்து அறியாவண்ணம் எல்லாம்
தாய்உற்று வந்து என்னை
ஆண்டுகொண்ட தன் கருணைத்
தேய்உற்ற செல்வற்கே
சென்று ஊதாய் கோத்தும்பீ.

நுந்துகன்று-மெலிந்து நடக்கமுடியாமல் தள்ளிக்கொண்டு போகக்கூடிய கன்று. நயந்து-விரும்பி. தேய்-தேசு, தேஜஸ், ஒளி.

நோய்வாய்ப்பட்டு, விரைவில் முதுமையடைந்து, தானாக நடக்கமுடியாமல் தள்ளப்படுகின்ற கன்றுபோல் நான் இருக்கிறேன். பொருள் செல்வத்தை நாய் அறிந்து விரும்புவதில்லை. அது போன்று அருள் செல்வத்தை அறிந்து விரும்பாதவனாக நான் இருக்கிறேன். ஆயினும் தாயின் கருணைகொண்டு தேஜோமயன் என்னை வந்து ஆட்கொண்டான். தும்பிராஜனே, நீ அவன்பால் சென்று சப்தத்தை உண்டு பண்ணுவாயாக.

தகுதியற்றவனைத் தகுதியுற்றவனாக்குவது கருணை.
உபநி—9. பக்கம் 115ல் காண்க.

11. வன்னெஞ்சக் கள்வன் மனவலிய னென்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினா லாண்டு
[கொண்ட
வன்னந் திளைக்கு மணிதில்லை யம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

வன்நெஞ்சம் கள்வன் மனவலியன் என்னாதே
கல்நெஞ்சு உருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட
அன்னம் திளைக்கும் அணி தில்லைஅம்பலவன்
பொன்அம் கழலுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

வலிய நெஞ்சத்தையுடைய கள்ளன், மன அமைப்பிலோ இளகாதவன் என்று என்னைப் புறக்கணிக்காமல், எனது கல் மனத்தை உருகும்படி செய்து ஆட்கொண்டவன் அம்பலவாணன். அவனது தில்லையில் அன்னங்கள் கூடியிருந்து அலங்கரிக்கின்றன. அவனது பொன்போன்ற திருவடிக்கு வேந்தாகிய வண்டே, நீ இனிய சங்கீதம் பாடு.

12. நாயேனைத் தன்னடிகள்
பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப்
பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேது மில்லாதென்
செய்பணிகள் கொண்டருளுந்
தாயான வீசற்கே
சென்றூதாய் கோத்தும்பீ.

நாயேனைத் தன் அடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனது உள்ளம் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீ ஏதும் இல்லாது என் செய்பணிகள் கொண்டருளும்
தாய்ஆன ஈசற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

நாய் போன்ற என்னைக் கருவியாகக்கொண்டு இறைவன் தன்னைப் புகழ்வித்துக்கொண்டான். பேய்போன்ற என் மனக் குறைபாடுகளைப் பொறுக்கும் பெருமை அவனுடையது. என் பணிவிடைகளை இகழாது அவன் ஏற்றுக்கொண்டான். அவன்

தாய் போன்றவன். பெரியதும்பி, நீ அவனிடம் போய் இசை முழக்குக!

13. நான்றனக் கன்பின்மை
நானுந்தா னும்மறிவோந்
தானென்னை யாட்கொண்ட
தெல்லாருந் தாமறிவா
ரான கருணையு
மங்குற்றே தானவனே
கோனென்னைக் கூடக்
குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

நான் தனக்கு அன்பு இன்மை
நானும் தானும் அறிவோம்
தான் என்னை ஆட்கொண்டது
எல்லாரும் தாம் அறிவார்
ஆனகருணையும் ஆங்கு
உற்றே தான் அவனே
கோன் என்னைக்கூடக்
குளிர்ந்து ஊதாய் கோத்தும்பீ.

நான் அன்பு இல்லாதவன் என்பதை நானும் அவனுமே அறிவோம். ஆனால் அவன் என்னை ஆட்கொண்டதை உலகம் அறியும். இதுதான் அவனுடைய கருணை. அவனுக்கும் எனக்கும் பிரியாத யோகம் உண்டாகும்படி, பெரிய தும்பி, நீ இனிய இசையைக் கிளப்புவாயாக.

14. கருவா யுலகினுக் கப்புறமா யிப்புறத்தே
மருவார் மலர்க்குழன் மாதினொடும் வந்தருளி
யருவாய் மறைபயி லந்தணனா யாண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கரு ஆய் உலகினுக்கு அப்புறம் ஆய் இப் புறத்தே
மரு ஆர் மலர்க் குழல் மாதினொடும் வந்தருளி
அரு ஆய் மறை பயில் அந்தணன் ஆய் ஆண்டு [கொண்ட
திரு ஆன தேவற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.

கரு ஆய் பிறப்பிடமாய். மரு-மணம். குழல்-கூந்தல். அரு ஆய்-அருவமாகி.

உலகுக்கு அவன் பிறப்பிடமானன். அந்தத்தில் இருப்பவன் அவனே. இவ்வுலகில் மணம் நிறைந்த பூவை யணிந்துள்ள கூந்தலையுடைய உமாதேவியாரோடு எழுந்தருளியவன் அவன். அருவமாயிருப்பவன் அவன். வேதம் பயிலும் அந்தணனும் அவனே. அந்த சுந்தரேசனிடம் வண்டு மன்ன, நீ சென்று கானம் பண்ணுவாயாக.

உபநி—51. பக்கம் 346ல் காண்க.

15. நானுமென் சிந்தையு
        நாயகனுக் கெவ்விடத்தோந்
தானுந்தன் றையலுந்
        தாழ்சடையோ னண்டிலனேல்
வானுந் திசைகளு
        மாகடலு மாயபிரான்
றேனுந்து சேவடிக்கே
        சென்றூதாய் கோத்தும்பீ.

நானும் என் சிந்தையும் நாயகனுக்கு எவ் இடத்தோம்
தானும் தன் தையலும் தாழ் சடையோன் ஆண்டில
[னேல்
வானும் திசைகளும் மா கடலும் ஆய பிரான்
தேன் உந்து சேவடிக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.

தையல்-உமாதேவியார்.

அம்பிகா சமேதனய் வந்து அவன் ஆட்கொள்ளாதிருந்தால் நான் கெட்டிருப்பேன்; என் மனமும் கெட்டிருக்கும். ஆகாசம், திக்கு, கடல் ஆகிய அனைத்தும் ஆயிருக்கும் ஈசனது திருவடியாகிய தேனிடத்துச் சென்று தும்பிக் கோமானே, நீ ஊதுக.

16. உள்ளப் படாத திருவுருவை யுள்ளுதலுங்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரானெம் பிரானென்னை வேறேயாட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்
[தும்பீ.

உள்ளப்படாத திருஉருவை உள்ளுதலும்
கள்ளம்படாத களிவந்த வான் கருணை
வெள்ளம் பிரான் எம்பிரான் என்னை வேறே ஆட்
கொள் அப்பிரானுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

உள்ளப்படாத-நினைக்க முடியாத.

அவன் மனுநீதன். சிந்திக்குமளவு பொய்போகாத பேரின்பத்தை நல்கும் கருணைக் கடல் அவன். உபகாரம் செய்கிற எம்பெருமான் அவன். என்னைத் தனித்து அடிமைகொள்ளுகிற அந்த இறைவனிடம் அன்புடன் சென்று, பெரிய வண்டே நீ கானம் செய்வாய்.

17. பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறு
மெய்யாக் கருதிக் கிடந்தேனை யாட்கொண்ட
வையாவென் னாருயிரே யம்பலவா வென்ற [வன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

பொய்ஆய செல்வத்தே புக்கு அழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயா என் ஆர் உயிரே அம்பலவா என்று அவன் தன்
செய்ஆர் மலர் அடிக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ.

அம்பலவா-அம்பலத்தில் ஆடுகின்றவனே. செய்ஆர்-செம்மை நிறைந்த.

அநித்தியப் பொருள்களை நித்தியப் பொருள்கள் என்று பற்று வைத்துக் கிடந்த என்னை அவன் உய்வித்தான். ராஜ வண்டே, நீ செம்மை நிறைந்த அவன் திருவடியின்கண் சென்று அப்பனே, ஆருயிரே, அம்பலவாணா என்று போற்றி நாதம் கிளப்புவாயாக.

18. தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசும் சாந்தும் பைங்கிளியும்

சூலமும் தொக்கவளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கி குளிர்ந்து ஊதாய்கோத்தும்பீ.

துகில்-ஆடை. குழை-குண்டலம். பசுஞ்சாந்தும்-பசுமையான சந்தனமும். தொக்கவளையும்-தொகுதியான வளையலும்.

அவன் அர்த்த நாரீசுவரன். சிவசொருபத்தில் அவன் தோல், குழை, நீறு, சூலம் ஆகியவைகளைத் தாங்கியிருக்கிறான். அம்பிகை தன் சொருபத்தில் துகில், தோடு, சாந்து, கிளி, வளை ஆகிய வற்றை உடைத்திருக்கிறாள். இவ்விரு பால் வடிவத்திடத்துப்போய்த் தும்பி வேந்தே, நீ இனிய ஓசையை உருவாக்குவாயாக.

19. கள்ளன் கடியன் கலதியிவ னென்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தா னென்மனத்தே
யுள்ளத் துறுதுய ரொன்றொழியா வண்ண
[மெல்லாந்
தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கள்ளன் கடியன் கலதி இவன் என்னாதே
வள்ளல் வரவர வந்து ஒழிந்தான் என் மனத்தே
உள்ளத்து உறுதுயர் ஒன்று ஒழியா வண்ணம் எல்லாம்
தெள்ளும் கழலுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.

கடியன்-கொடுரமானவன். கலதி-கேடு விளைவிப்பவன். ஒழிந்தான்-நிறைந்தான். தெள்ளும்-தெளிவாகும். கழலுக்கே-கழலை அணிந்துள்ள திருவடிக்கே.

என்னைக் கள்ளன் என்றோ, கொடூரமானவன் என்றோ, கேடு உடையவன் என்றோ புறக்கணிக்காமல் வள்ளல் ஆகிய சிவன் படிப்படியாக வந்து என் உள்ளத்தில் முழுதும் குடிகொண்டுள்ளான். என் மனதில் புகுந்து என்னை உறுத்திக்கொண்டிருக்கின்ற துயரங்களையெல்லாம் ஒன்றுவிடாது அவனது தெளிந்த சந்நிதியில் தெரிவிக்கும் முறையில் ராஜதும்பி, நீ ரீங்காரம் பண்ணுவாயாக.

உள்ளத்தில் உறையும் இறைவனிடம் உள்ளத்திலுள்ள குறைபாடுகளைச் சமர்ப்பிப்பது அக்குறைபாடுகளை அகற்றுதற்கு உற்ற உபாயமாகும்.

20. பூமே லயனோடு மாலும் புகலரிதென்
றேமாறி நிற்க வடியே னிறுமாக்க
நாய்மேற் றவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்தத்
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

பூ மேல் அயனோடு மாலும் புகல் அரிது என்று
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய் மேல் தவிசு இட்டு நன்றாய்ப் பொருட்படுத்தத்
தீ மேனியானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.

புகல் அரிது-விளக்கிச் சொல்லுவது கடினம். ஏமாறி-மனம் கலங்கி. இறுமாக்க-களிப்படைய. மேல்தவிசு-மேலான ஆசனம்.

சிவனுரை விளக்குவது கடினம் என்று பிரம்மதேவனும் திருமாலும் மனம் கலங்கி நிற்கின்றனர். ஆனால் அவனைப் புகழ்ந்து பேசுதலில் நான் களிப்பு அடைகிறேன். ஏனென்றால் நாய்க்கு ஓர் உயர்ந்த ஆசனம் தருவது போன்று அவன் என்னை உயர்நிலைக்கு உயர்த்தியுள்ளான். அக்னி போன்ற திருமேனியுடைய அவனிடம் போய்த் தும்பிமன்னே, நீ அவனது மகிமையை உங்கரிப்பாயாக.

பரமனைப் போற்றுமளவு ஜீவாத்மன் உயர்நிலையெய்துகிறான்.

தில்லையில் அருளிய

11. திருத்தெள்ளேணம்

சிவனோடு அடைவு

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

1. திருமாலும் பன்றியாய்ச்
சென்றுணராத் திருவடியை
யுருநா மறியவோ ரந்தணனா
யாண்டுகொண்டா
னொருநாம மோருருவ
மொன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாந்
தெள்ளேணங் கொட்டாமோ.

திருமாலும் பன்றியாய்ச் சென்று உணராத் திருவடியை
உரு நாம் அறிய ஓர் அந்தணன் ஆய் ஆண்டு
[கொண்டான்
ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ.

திருமால் வராக வடிவம் எடுத்துப் பூமியைப் பிளந்து சென்றும் சிவனுர் திருவடியைப் போய்ச் சேர்ந்து அறிந்துகொள்ளவில்லை. ஆனல் அவன் திருவடியை நாம் அறிந்து உய்யும் வண்ணம் அவன் ஓர் அந்தணன் உரு எடுத்து வந்தான். நாமம், ரூபம் ஒன்றுமில்லாத அப்பரமனுக்கு ஆயிரம் திருநாமங்களைச் சொல்லி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

உபாசனமூர்த்தி ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் திருநாமங்கள் அமைந்துள்ளன. அவைகளை சிவ சஹஸ்ர நாமம், லலிதா சஹஸ்ர நாமம், விஷ்ணு சஹஸ்ர நாமம் இப்படியெல்லாம் அழைப்பதுண்டு. ஒவ்வொரு நாமமும் அந்தந்த மூர்த்தியின் மஹிமையை விளக்குதற்கென்றே அமைந்ததாகும். ஒவ்வொரு நாமத்தின் பொருள் உணர்ந்து ஆயிரம் திருநாமங்களை நிதானமாக ஓதுவது நல்ல அர்ச்சனையும், ஆராதனையும், உபாசனையும் ஆகும்.

தெள்ளேணம் என்பது மகளிரது ஒருவகை விளையாட்டாம்.

2. திருவார் பெருந்துறை மேயபிரா னென்பிறவிக்
கருவே ரறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை
யருவா யுருவமு மாயபிரா னவன்மருவுந்
திருவாரூர் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

திரு ஆர் பெருந்துறை மேய பிரான் என் பிறவிக்
கரு வேர் அறுத்தபின் யாவரையும் கண்டது இல்லை
அருஆய் உருவமும் ஆய பிரான் அவன் மருவும்
திருஆர் ஊர் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ.

மேய-எழுந்தருளிய. கரு-மூலம். மருவும்-விரும்பி உறையும்.

திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமான் என் பிறவியை வேர் அறுத்துள்ளான். அதன் விளைவாக நான் அவனை

யன்றி வேறு யாரையும் காண்பதில்லை. அவன் அருவாயும் உருவாயும் இருக்கிறன். திருவாரூர் அவனுக்கு உகந்த ஸ்தலம். அதைப் புகழ்ந்து பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

பிறவிப் பிணியைத் தாண்டியவர்க்குப் பிரபஞ்சம் முழுதும் பரமனகக் காட்சி கொடுக்கிறது.

உபநி—2. பக்கம் 102ல் காண்க.

3. அரிக்கும் பிரமற்கு
மல்லாத தேவர்கட்குந்
தெரிக்கும் படித்தன்றி
நின்றசிவம் வந்துநம்மை
யுருக்கும் பணிகொள்ளு
மென்பதுகேட்டு லகமெல்லாஞ்
சிரிக்குந் திறம்பாடித்
தெள்ளேணங் கொட்டாமோ.

அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்து அன்றி நின்ற சிவம் வந்து நம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பது கேட்டு உலகம் [எல்லாம்
சிரிக்கும் திறம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

திருமால் பிரமன் முதலிய தேவர்களே சிவசொருபத்தை உள்ளபடி தெரிந்து கொள்ளவில்லை. அத்தகையவன் நம்மை வந்து ஆட்கொண்டு மனம் உருகப் பண்ணினன். சிவன் செயல் இப்படியும் இருக்கிறதாவென்று உலகத்தவர் வியப்பதைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

மனம் உருகுதல் – உளப்பாடு. மகாபாவம் — 18. பக்கம் 42ல் காண்க.

4. அவமாய தேவ
ரவகதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை
யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர்
நல்குதலு நாமொழிந்து

சிவமான வாபாடித்
தெள்ளேணங் கொட்டாமோ.

அவம் ஆய தேவர் அவ கதியில் அழுந்தாமே
பவம் மாயம் காத்து என்னை ஆண்டுகொண்ட
[பரஞ்சோதி
நவம் ஆய செம்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து
சிவம் ஆனவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

அவம்-பயனற்றது. அவகதி-கேடு, கீழானநிலை. பவம் மாயம்-பிறவியாகிய மாயை. நவம்-புதுமை. நல்குதலும்-வழங்கியருளிய வுடனே.

தேவர் பதவியும் ஞானநிலைக்குக் கீழானதே. அது பிறவியை வளர்ப்பது. பின்பு பிறவி என்னும் மாயையினின்று என்னைக் காத்து, நூதனமான தனது ஆத்ம ஜோதியை எனக்கு சிவன் வழங்கியருளினன். அதன் விளைவாக எனது ஜீவபோதம் ஒழிந்து சிவபோதம் தலையெடுத்தது. இதைப் பாடித் தெள்ளேணம் கொட்டு வோம்.

ஜீவபோதத்துக்குப் போக்குவரவு உண்டு. சிவ போதமோ புதிதாகப் பெறப்படுவது போன்று தென் படினும் அது சாசுவதமானது.

5. அருமந்த தேவ
ரயன்றிருமாற் கரியசிவ
முருவந்து பூதலத்தோ
ருகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக்
கடைக்கணித்தென் னுளம்புகுந்த
திருவந்த வாபாடித்
தெள்ளேணங் கொட்டாமோ.

அருமந்த தேவர் அயன் திருமாற்கு அரிய சிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பு எய்தக் கொண்டருளிக்

உபநிஷத் மந்த்ரம் —91.

यथोदकं शुद्धे शुद्धमासिक्तं तादृगेव भवति ।
एवं मुनेर्विजानत आत्मा भवति गौतम ॥

கரு வெந்து வீழக் கடைக்கணித்து என் உளம் புகுந்த
திரு வந்தவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

அருமந்த - அருமருந்தையொத்த. உகப்பு - பெருமகிழ்ச்சி. கரு-பிறவிக்கு வித்து. கடைக்கணித்து-கடைக்கண்ணால் பார்த்து. திரு-சிவஞானச் செல்வம்.

பெருநிலையில் உள்ள பிரம்மாவுக்கும் திருமாலுக்கும் தரிசனத்துக்கு எட்டாதவன் சிவன். அத்தகையவன் மக்களை மகிழ்விக்க மானுட வடிவெடுத்து மண்ணுலகுக்கு வந்தான். அவனுடைய கிருபாநோக்கத்தால் எனது பிறவி வித்து வெந்து போயிற்று.

யதோதகம் சுத்தே சுத்தமாஸிக்தம் தாத்ருகேவ பவதி ।
ஏவம் முனேர்விஜானத ஆத்மா பவதி கௌதம ॥

(கடோபநிஷதம் 4-15)

गौतम கௌதம ஓ கௌதமா यथा யதா எங்ஙனம் शुद्धम् उदकं சுத்தம் உதகம் தூய நீரானது (शुद्धे उदके) சுத்தே (உதகே) தூயநீரின்கண் आसिक्तं ஆஸிக்தம் வார்க்கப்படுங்கால் तादृक् एव தாத்ருக் ஏவ அதேபோன்று भवति பவதி ஆகிறது विजानतः मुनेः விஜானதः முனேः பரஞானம் அடையப்பெற்ற முனியினுடைய आत्मा ஆத்மா ஆத்மாவானது एवं भवति ஏவம் பவதி அங்ஙனம் ஆகிறது.

கௌதமரே, தூய நீரைத் தூய நீரில் வார்த்தால் இரண்டும் எங்ஙனம் ஒன்றுகின்றனவோ அங்ஙனம் பரஞானம் பெற்ற முனியின் ஆத்மா பரமாத்மாவில் ஒன்றுபடுகிறது.

கிணற்றுநீர், ஆற்றுநீர், சேற்றுநீர், சாக்கடைநீர், கடல்நீர் ஆகியவைகளுக்கிடையில் சேர்க்கையால் வேற்றுமையுண்டு. அவையாவும் ஆவியாக மாறி வானத்தில் போய்ப் பிறகு மழையாக வரும்போது வேற்றுமையில்லை. அங்ஙனம் உபாதிகளை முன்னிட்டு ஜீவர்களுக்கிடையில் வேற்றுமையுண்டு. அவர்களின் உபாதிகளை ஒதுக்கிவிடுமிடத்து சுத்த சைதன்யம் எஞ்சியிருக்கிறது. பரமாத்மன் எப்பொழுதுமே சுத்த சைதன்யம். ஜீவாத்

எனது உள்ளம் என்பது அவனது ஆலயமாயிற்று. இச்சிறப்பைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

சிவஞானம் ஜீவனை சிவமாக்குகிறது.

6. அரையாடு நாக
   மசைத்தபிரா னவனியின்மேல்
   வரையாடு மங்கைதன்
   பங்கொடும்வந் தாண்டதிற
   முரையாட வுள்ளொளியாட
   வொண்மாமலர்க் கண்களினீர்த்
   திரையாடு மாபாடித்
   தெள்ளேணங் கொட்டாமோ.

அரை ஆடு நாகம் அசைத்தபிரான் அவனியின்மேல்
வரை ஆடுமங்கை தன் பங்கொடும் வந்துஆண்டதிறம்
உரை ஆட உள் ஒளி ஆட ஒள் மா மலர்க்கண் [களில்நீர்த்
திரை ஆடுமா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

அரை-இடுப்பு. அவனி-நிலவுலகு. வரை-மலை. உரை ஆட-சொற்கள் தடுமாற்றமடைய. உள் ஒளி ஆட-திவ்விய தேஜஸ் என் மனதில் நிரம்ப. ஒள்-ஒளி. திரை-அலை. ஆடுமா-ஆடுமாறு, ஆடும் வண்ணம்.

இடுப்பிலே படமெடுத்து ஆடும் பாம்பைக் கச்சையாகக் கட்டிய பிரான், உமாமகேசுவரன் பூமியில் வந்து என்னை ஆண்டு அருளினான்; அதை விளக்க முடியாமல் சொற்கள் தடுமாறுகின்றன. உள்ளொளி பெருகுகிறது. ஒளி வீசுகிற பெரிய கண்களில் நீர் அலை வீசுகிறது. இந்த மகிமையைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

உரை ஆட, உள் ஒளி ஆட, கண்ணீர்த் திரை ஆட— இவையாவும் மஹாபாவங்கள் 7. (4), 3, 7. (7)ல் விளக்கப் பெறுகின்றன. பக்கம் 38, 40ல் காண்க.

7. ஆவா வரியயனிந்
   திரன் வானோர்க் கரியசிவன்

மன் உபாதிகளைக் களைந்துவிட்டுச் சுத்த சைதன்யன் ஆகும்பொழுது பரமாத்மாவில் ஒன்றுபடுகிறான்.

வாவாவென் றென்னையும்
பூதலத்தேவலித் தாண்டுகொண்டான்
பூவா ரடிச்சுவ
டென்றலைமேற் பொறித்தலுமே
தேவான வாபாடித்
தெள்ளேணங் கொட்டாமோ.

ஆ ஆ அரி அயன் இந்திரன்
வானோர்க்கு அரிய சிவன்
வா வா என்று என்னையும்
பூதலத்தே வலித்து ஆண்டுகொண்டான்
பூ ஆர் அடிச் சுவடு
என் தலைமேல் பொறித்தலுமே
தே ஆனவா பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ.

அரி-திருமால். பொறித்தலுமே-பதித்தலுமே. தே ஆன வா பாடி-எனக்குத் தெய்வத்தன்மையுண்டான விதத்தைப் பாடி.

விண்ணவர்களுக்கெல்லாம் பெறுதற்கு அரிய பெம்மான் பூவுலகில் வந்து என்னை வலிய ஆட்கொண்டான். மலர் போன்ற அவனது திருவடியை என் தலைமீது வைத்ததும் நான் தெய்வத் தன்மையை அடையப்பெற்றேன் என்று பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

8. கறங்கோலை போல்வதோர்
காயப்பிறப்போ டிறப்பென்னு
மறம்பாவ மென்றிரண்டச்
சந்தவிர்த்தென்னை யாண்டுகொண்டான்
மறந்தேயுந் தன்கழலுன்
மறவாவண்ண நல்கியவத்
திறம்பாடல் பாடிநாந்
தெள்ளேணங் கொட்டாமோ.

கறங்கு ஓலை போல்வது ஓர்
காயம் பிறப்போடு இறப்பு என்னும்
அறம் பாவம் என்று இரண்டு
அச்சம் தவிர்த்து என்னை ஆண்டு கொண்டான்

மறந்தேயும் தன் கழல் நான்
மறவாவண்ணம் நல்கிய அத்
திறம் பாடல் பாடி நாம்
தெள்ளேணம் கொட்டாமோ.

கறங்கு ஓலை-சுழல்கின்ற ஓலைக் காற்றாடி.

ஓலைக் காற்றாடி சுழல்வது போன்று இந்த உடல் பிறக்கவும் இறக்கவும் செய்கிறது. புண்ணியம் பாவம் என்னும் இருவினைகளை உடல் செய்கின்றது. இந்தப் பயத்தினின்று சிவன் என்னைக் காப் பாற்றியருளினன். அவனை நான் யாண்டும் மறவாதிருக்கும்படி செய்தருளினன். அந்தப் பெருமையைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

பரபோதத்தைப் பெற்றவர் பிறகு ஒருபொழுதும் அதை மறப்பதில்லை.

9. கன்னா ரூரித்தென்ன
வென்னையுந்தன் கருணையினாற்
பொன்னார் கழல்பணித்
தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச்
செந்துவர்வாய் வெண்ணகையீர்
தென்னாதென் னாவென்று
தெள்ளேணங் கொட்டாமோ.

கல் நார் உரித்து என்ன என்னையும் தன் கருணையினால்
பொன் ஆர் கழல் பணித்து ஆண்ட பிரான் புகழ்பாடி
மின் நேர் நுடங்கு இடைச் செம் துவர் வாய் வெள்
[நகையீர்
தென்னா தென்னா என்று தெள்ளேணம் கொட்டாமோ.

பணித்து-பணியச் செய்து. மின்நேர்-மின்னலை ஒத்த. நுடங்கு-துவளுகின்ற. துவர்-பவளம்.

கல்லினின்று நார் உரிப்பதை ஒப்ப என்னைத் தன் பொன் போன்ற திருவடியைப் பணியும்படி செய்து சிவன் ஆட்கொண் டான். மின்னல் போன்று துவளும் இடையையும் சிவந்த வாயை யும் வெண்பற்களையும் உடையவர்களே, அவனைத் தென்னா, தென்னா என்று பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

ஜடம் போன்று இருக்கின்றவர்களைச் சிவமயமாக மாற்றுவது சிவனது கருணைகரச் செயலாம்.

10. கனவேயுந் தேவர்கள்
காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத்
தோளியொடும் புகுந்தருளி
நனவே யெனைப்பிடித்தாட்
கொண்டவா நயந்துநெஞ்சஞ்
சினவேற்க ணீர்மல்கத்
தெள்ளேணங் கொட்டாமோ.

கனவேயும் தேவர்கள் காண்பு அரிய கனைகழலோன்
புனம் வேய் அன வளைத்தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப் பிடித்து ஆட்கொண்டவா நயந்து [நெஞ்சம்
சினம் வேல் கண் நீர் மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ.

கனை கழலோன்-ஒலிக்கின்ற கழலை அணிந்திருப்போன். புனம் வேய் அன-காட்டு மூங்கிலை யொத்த. வளைத்தோளி-வளையலை அணிந்துள்ள தோள்களையுடைய உமாதேவி. புகுந்தருளி-எழுந்தருளி. எனைப் பிடித்து-என்னைத் தடுத்து. நயந்து-விரும்பி. சின வேல் கண்-பகைவர் மீது சினந்து எறிகிற வேலையொத்த கண்.

தேவர்கள் கனவிலும் காணமுடியாத மேலோன் சிவன். அவன் அம்பாள் சகிதனாய் எழுந்தருளி நனவில் என்னைத் தடுத்து ஆட்கொண்டான். தீமையைக் காண வெறுக்கிற கண்களினின்று அவனை விரும்பிக் கண்ணீர் சிந்தித் தெள்ளேணம் கொட்டுவோம்.

சொப்பனாவஸ்தையிலும் சிறந்தது ஜாக்கிரதாவஸ்தை. நனவில் வரும் அனுபூதி கனவில் வருவதை விட மேலானது.

11. கயன்மாண்ட கண்ணிதன்
பங்கனெனைக்கலந் தாண்டலுமே

உபநிஷத் மந்த்ரம் — 92

ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन्सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥

யயன்மாண் டருவினைச்
சுற்றமுமாண் டவனியின்மேன்
மயன்மாண்டு மற்றுள்ள
வாசகமாண் டென்னுடைய
செயன்மாண்ட வாபாடித்
தெள்ளேணங் கொட்டாமோ.

கயல் மாண்ட கண்ணி தன் பங்கன்
எனைக் கலந்து ஆண்டலுமே
அயல் மாண்டு அருவினைச்
சுற்றமும் மாண்டு அவனியின் மேல்

ஈச்வர: ஸர்வபூதாஞம் ஹ்ருத்தேசேऽர்ஜுன திஷ்டதி ।
ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா ॥

(பகவத்கீதோபநிஷதம் 18-61)

अर्जुन அர்ஜுன அர்ஜுனா ईश्वरः ஈச்வர: ஈச்வரன் मायया மாயயா மாயையினால் यन्त्र आरूढानि யந்த்ர ஆரூடானி யந்திரத்திலேற்றிய सर्वभूतानि ஸர்வபூதானி எல்லா உயிர்களையும் भ्रामयन् ப்ராமயன் ஆட்டிக்கொண்டு सर्वभूतानां ஸர்வபூதாஞம் எல்லா உயிர்களினுடைய हृद्देशे ஹ்ருத்தேசே ஹிருதயத்தில் तिष्ठति திஷ்டதி நிற்கிறான்.

அர்ஜுனா, ஈசுவரன் உயிர்களையெல்லாம் உடல் என்னும் யந்திரத்திலேற்றி மாயையினால் ஆட்டிக்கொண்டு அவைகளின் உள்ளத்திலிருக்கிறான்.

கிருஷ்ணனும் அர்ஜுனனும் போர்க்களத்துக்கு வந்த கோலமே இக்கோட்பாட்டை விளக்குகிறது. ரதத்தின் மீது அர்ஜுனன் ஏறியிருந்தான். அந்த ரதம் உடலுக்குச் சமானம்; அவன் ஜீவாத்மாவாகிறான். ரதமும் இயங்கியது. பார்த்தனும் போர் புரிந்தான். இயங்கியதைப் பற்றிய உணர்ச்சி ரதத்துக்கு இல்லை. சண்டை செய்ததைப் பற்றிய உணர்ச்சி அர்ஜுனனுக்கு இருந்தது. நிகழ்ந்தது தன் செயல் என்று எண்ணியிருந்த அப்போர் வீரன் அது உண்மையில் ஈசன் செயல் என்று அறிந்துகொள்ளக் கடமைப்பட்டிருந்தான். கிருஷ்ணன்

மயல் மாண்டு மற்று உள்ள
வாசகம் மாண்டு என்னுடைய
செயல் மாண்டவா பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ.

கயல் மாண்ட-சேல்மீன் போன்று மாட்சிமையுடைய. அயல் மாண்டு-அயலார் ஒழிந்து. அவனி-உலகம். மயல் மாண்டு-ஆசையும் மாளப் பெற்று. செயல் மாண்டவா-செய்கையும் அழிந்த விதத்தை.

கௌரிசங்கரன் என்னைத் தன்மயம் ஆக்கியதும் வேற்றார் உற்றார் என்னும் வேற்றுமைகள் ஒழிந்து போயின. உலகப் பற்று ஒழிந்தது. அவன் புகழ் அன்றி வேறு பேச்சு ஒழிந்தது. என் செயல் என்பதெல்லாம் அவன் செயலாய் மாறிவிட்டது. இந்த மகிமையைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

மனிதன் அறிந்திருந்தாலும் அறியாதிருந்தாலும், உயிர்கள் அனைத்தின் வாயிலாக நிகழ்வது ஈசன் செயலே.

தேர் ஓட்டினான்; ஆனால் ஆயுதம் எடுத்துப் போர்புரிய வில்லை. அங்ஙனம் எல்லாருடைய ஹிருதய கமலத்திலும் அவன் சாக்ஷியாக வீற்றிருக்கிறான்.

அர்ஜுனன் என்பது வெள்ளையானவன் அல்லது தூயவன் என்று பொருள்படுகிறது. தூய மனமுள்ளவன் உண்மையைத் தெரிந்துகொள்ள வல்லவனாகிறான். ஹிருதயத்தில் வீற்றிருக்கின்ற சர்வேசுவரனின் சன்னிதான விசேஷத்தால் மாயை இயங்குகிறது. இயங்குகின்ற மாயை அதன் வசப்பட்டிருக்கிறவர்களையெல்லாம் இயக்குகிறது. சக்கரங்களில் கட்டுண்ட பொம்மைகள் போன்று அவர்கள் அசைகிறார்கள். அசைவைத் தங்கள் சொந்தக் கர்மமென்று அவிவேகிகள் எண்ணிக்கொண்டு அதைச் செய்வேன் என்றும், இதைச் செய்யமாட்டேனென்றும் இச்சா சுதந்திரம் பாராட்டுகிறார்கள். அதனால் மாயையில் அவர்கள் அதிகம் கட்டுண்கின்றனர். ஈசா, நீ ஆட்டுவிக்கும் விதத்தில் நான் ஆடுகிறேன் என்ற உணர்வு வேண்டும். விதவிதமான கருவிகளைக்கொண்டு ஈசன் தன் செயலைச் செய்துகொள்கிறான் என்ற எண்ணத்துடன் கர்மம் செய்தலே அதை முறையாகக் கையாளுவதாகும்.

12. முத்திக் குழன்று முனிவர்குழா நனிவாட
வத்திக் கருளி யடியேனை யாண்டுகொண்டு
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்
[டாமோ.

முத்திக்கு உழன்று முனிவர் குழாம் நனி வாட
அத்திக்கு அருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி
தித்திக்குமா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

நனிவாட - மிகவும் வாடியிருக்க. அத்திக்கு - (ஹஸ்தின்) யானைக்கு.

முனிவர் கூடி முக்திக்காகப் பெரும்பாடுபட்டனர். மற்று முதல்வனோ யானைக்கு அருள்புரிந்து அடியேனையும் ஆட்கொண்டான். பக்திக் கடலுள் மூழ்கி ஜோதி சொருபியைத் தித்திக்கும்படி பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

அருளாளன் போக்கை அவனியில் உள்ளார் யாரும் அறியார்.

13. பார்பாடும் பாதாளர் பாடும்விண்ணோர் தம்பாடு
மார்பாடுஞ் சாரா வகையருளி யாண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாந் தெள்ளேணங்கொட்டாமோ.

பார் பாடும் பாதாளர் பாடும் விண்ணோர் தம் பாடும்
ஆர் பாடும் சாரா வகை அருளி ஆண்டு கொண்ட
நேர்பு ஆடல் பாடி நினைப்பு அரிய தனிப் பெரியோன்
சீர் பாடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ.

பார்-மண்ணுலகம். நேர்பு ஆடல் பாடி-நேர்மையாகிய திருவிளையாடலைப் பாடி.

நிலவுலகின்கண், பாதாளத்தின்கண், சுவர்க்கத்தின்கண் அல்லது வேறு எவ்வுலகின்கண்ணுவது நான் சென்று பிறவாமல் என்னை ஆட்கொண்டருளின சிவனாரின் நேர்மையான திருவிளையாடலையும் பெருமையையும் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

14. மாலே பிரமனே
மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியா
னுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து
பரிந்துருக்கும் பாவகத்தாற்
சேலேர்கண் ணீர்மல்கத்
தெள்ளேணங் கொட்டாமோ.

மாலே பிரமனே மற்று ஒழிந்த தேவர்களே
நூலே நுழைவு அரியான் நுண்ணியன் ஆய் வந்து [அடியேன்
பாலே புகுந்து பரிந்து உருக்கும் பாவகத்தால்
சேல்ஏர் கண் நீர் மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ.

நூலே-சாஸ்திரங்களே. பரிந்து-கருணைகொண்டு. பாவகத்தால்-இயல்பினால். சேல்-கெண்டைமீன். ஏர்-அழகு.

தேவர்களாலும் சாஸ்திரங்களாலும் விளக்க முடியாத அதி சூக்ஷ்ம வஸ்து ஆவான் சிவன். சித்சொரூபியாகிய அவன் கருணை கொண்டு என்னிடத்துப் பிரவேசித்து என் மனதை உருக்கும் பேரியல்பு படைத்தவன். கண்ணீர் மல்க நாம் அவனைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

15. உருகிப் பெருகி
யுளங்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய
பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன்
வார்கழலே நினைந்தடியோந்
திருவைப் பரவிநாந்
தெள்ளேணங் கொட்டாமோ.

உருகிப் பெருகி உளம் குளிர முகந்துகொண்டு
பருகற்கு இனிய பரம் கருணைத் தடம் கடலை
மருவித் திகழ் தென்னன் வார் கழலே நினைந்து [அடியோம்
திருவைப் பரவி நாம் தெள்ளேணம் கொட்டாமோ.

கருணைத் தடம் கடலை-பெரிய கருணைக் கடலை. மருவி-அடைந்து. வார்கழலே-நீண்ட திருவடிகளையே. திருவைப்பரவி-ஞானச் செல்வத்தைப் புகழ்ந்து.

சிவயோகத்தில் மனம் உருகவும், விரிவடையவும், சாந்தியடையவும் செய்கிறது. அவனுடைய அகண்ட கருணையை அனுபவித்துப் பரமானந்தமடைகிறோம். இந்த ஞானச் செல்வத்தைப் புகழ்ந்து நாம் தெள்ளேணம் கொட்டுவோம்.

16. புத்தன் புரந்தராதி யயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
வத்த னணிதில்லை யம்பலவ னருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ.

புத்தன் புரந்தராதி அயன் மால் போற்றி செயும்
பித்தன் பெருந்துறை மேய பிரான் பிறப்பு அறுத்த
அத்தன் அணி தில்லை அம்பலவன் அருள் கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணம் கொட்டாமோ.

புத்தன்-யாண்டும் புதியவன். பிரான்-உபகார சீலன். அத்தன்-அப்பன். அணி-அலங்காரம்.

சிவன் யாண்டும் புதியவன். தேவர்கள் போற்றும் பித்தன் அவன். திருப்பெருந்துறையில் அழகிய அம்பலத்திலும் அவன் சிறப்பாக விற்றிருக்கிறன். என் பிறவி நோயைக் களைந்த அப்பன் அவன். அவனுடைய அருள் உருவமான திருவடிகள் என் உள்ளத்தில் குடி புகுந்ததைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

17. உவலைச் சமயங்க ளொவ்வாத சாத்திரமாஞ்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங்
கவலைக் கெடுத்துக் கழலிணைக டந்தருளுஞ்
செயலைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரம் ஆம்
சவலைக் கடல் உளனாய்க் கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழல் இணைகள் தந்தருளும்
செயலைப் பரவி நாம் தெள்ளேணம் கொட்டாமோ.

உவலைச் சமயங்கள்-பொய்ச் சமயங்கள். ஒவ்வாத சாத்திரம்-ஒன்றுக்கொன்று ஒவ்வாத நூல்கள். சவலை-சபலம், மனக்குழப்பம் பரவி-புகழ்ந்து.

பொய்ச் சமயங்களும் முரண்படுகிற நூல்களும் மனக் குழப்பத்தை உண்டுபண்ணுகின்றன. அதனால் தடுமாறிக் கிடந்த என் கவலையை ஒழித்து இறைவன் என்னை ஆட்கொண்டான். அவனது சீரிய செயலைப் புகழ்ந்து தெள்ளேணம் கொட்டுவோம்.

18. வான்கெட்டு மாருதமாய்ந்
தழனீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச்
சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட்
டுணர்வுகெட்டெ னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித்
தெள்ளேணங் கொட்டாமோ.

வான் கெட்டு மாருதம் மாய்ந்து
அழல் நீர் மண் கெடினும்
தான் கெட்டல் இன்றிச்
சலிப்பு அறியாத் தன்மையனுக்கு
ஊன் கெட்டு உயிர்கெட்டு
உணர்வு கெட்டு என் உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ.

மாருதம்-காற்று. நான்-ஜீவதத்துவம்.

பஞ்ச பூதங்களும் அவைகளால் ஆகிய பிரபஞ்சமும் பிரளயத்தில் ஒடுங்கும்பொழுது சிவனார் யாண்டும் இருந்தபடி இருக்கிறார். அவரிடத்துச் சலனம் இல்லை. பிரளயத்தில் ஜீவாத்மன் தோன்றா நிலைக்குப் போகிறான்; முக்தியில் சிவத்தில் லயமாகிறான்.

உபநிஷத் மந்த்ரம் — 93.

वेदान्त विज्ञान सुनिश्चितार्थाः संन्यासयोगाद् यतयः शुद्धसत्त्वाः ।
ते ब्रह्मलोकेषु परान्तकाले परामृताः परिमुच्यन्ति सर्वे ॥

வேதாந்த விக்ஞான ஸுநிஸ்சிதார்த்தா:
ஸங்யாஸயோகாத் யதய: சுத்தஸத்த்வா:
தே ப்ரஹ்மலோகேஷு: பராந்தகாலே
பராம்ருதா: பரிமுச்யந்தி ஸர்வே ॥

(முண்டகோபநிஷதம் 3-2-6)

பரமனுக்குத் தோற்றமும் இல்லை, மறைவுமில்லை; துவக்கமும் இல்லை, முடிவுமில்லை. ஜீவனுக்குத் தோற்ற முண்டு, மறைவு உண்டு; துவக்கம் உண்டு, முடிவுஉண்டு.

वेदान्त विज्ञान सुनिश्चितार्थाः வேதாந்த விக்ஞான ஸுநிஸ்சி தார்த்தா: வேதாந்த விசாரத்தின் முடிந்த குறிக்கோளா யிருக்கிற பரமாத்ம சொரூபத்தில் நன்கு நிலைபெற்றிருப் பவர்கள் संन्यासयोगात् ஸந்யாஸயோகாத் துறவும் திருத் தொண்டும் கூடிய வாழ்வின் வாயிலாக शुद्धसत्त्वाः சுத்த ஸத்வா: தாதுக்களெல்லாம் தூயவைகளாக்கப்பெற்ற வர்கள் ते सर्वे यतयः தே ஸர்வே யதய: அந்தத் துறவியர்கள் எல்லாரும் परान्तकाले பராந்தகாலே சாகும்பொழுது (ஞானத்தைப் பெறும்பொழுது) ब्रह्मलोकेषु ப்ரஹ்மலோ கேஷு பிரம்ம சொரூபத்தில் परामृताः பராம்ருதா: மரண மிலாப்பெருநிலையடைந்தவர்களாக परिमुच्यन्ति பரிமுச்யந்தி தங்கள் ஜீவவியக்தியை முற்றிலும் இழக்கிறார்கள்.

வேதாந்த விசாரத்தின் முடிந்த குறிக்கோளாயிருக்கிற பர மாத்ம சொரூபத்தில் நன்கு நிலைபெற்றிருக்கிறவர்களே சந்நியா சிகள். துறவும் திருத்தொண்டும் கூடிய வாழ்வின் வாயிலாக அவர்களின் கருவி கரணங்கள் யாவும் புனிதமடைகின்றன. ஞானுக் கினியில் அவர்களுடைய உடலங்கள் யாவும் அழியப்பெற்றவர் களாகவும் ஜீவபோதத்தை இழந்தவர்களாகவும் பிரம்ம சொரூபத் தில் அவர்கள் மரணமிலாப் பெருநிலை யெய்துகின்றனர்.

ஜீவ வியக்தியைக் களைத்துத் தள்ளுவதே வாழ்வின் முடிந்த குறிக்கோள் ஆகிறது. முறையான சாஸ்திர ஆராய்ச்சியின் வாயிலாக இவ்வுண்மையை அறிந்து இதில் தீவிரமாக ஈடுபடுகிறவர்களே துறவிகளாகின் றனர். 'யான் எனது,' என்பனவற்றை வெறும் கற்பனை யென ஒதுக்கிவிட்டு அவர்கள் உலக ஊழியர்களாக வாழ்ந்திருக்கின்றனர். அதனால் அவர்களுடைய ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் ஆகியவை முற்றி லும் தூய்மையடைகின்றன. ஞானக்கினியில் அவைகள் நிரந்தரமாக நாசமடைகின்றன. ஆத்மாவானது பரமாத் மாவில் ஒன்றுபடுவது பெறுதற்கு அரிய பேறு ஆகும்.

19. விண்ணோர் முழுமுதல்
பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்தயன்
மாலுடைய வைப்படியோங்
கண்ணார வந்துநின்றான்
கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாவென்று
தெள்ளேணங் கொட்டாமோ.

விண்ணோர் முழு முதல் பாதாளத்தார் வித்து
மண்ணோர் மருந்து அயன் மால் உடைய
[வைப்பு அடியோம்
கண் ஆர வந்து நின்றான் கருணைக் கழல் பாடித்
தென்னா தென்னா என்று தெள்ளேணம்
[கொட்டாமோ.

எல்லா லோகத்தவர்க்கும் ஆதிமூலம் ஹரன், அவன் எனக்குப் பிரத்யக்ஷமாகத் தோன்றி அருள்புரிந்தான். அவன் பெருமையைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

20. குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல்வளையா
ணலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாடோறு
மலம்பார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
சிலம்பாடல் பாடிநாந் தெள்ளேணங்
[கொட்டாமோ.

குலம் பாடிக் கொக்கு இறகும் பாடிக் கோல் வளையாள்
நலம் பாடி நஞ்சு உண்டவா பாடி நாள்தோறும்
அலம்பு ஆர் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பு ஆடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ.

குலம்-மேன்மை. அலம்பு ஆர்-ஓசை நிறைந்த.

இறைவனது மேன்மையைப் பாடி, அவன் தலையில் அணிந்திருக்கிற கொக்கு இறகைப் பாடி, உமாதேவியின் ஆட்சிமுறையைப் பாடி, சிவன் நஞ்சு அருந்தித் தியாகத்தை நிலைநாட்டியதைப் பாடி, தில்லைத் திருநடனத்தைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்.

ஈண்டு அம்பிகை கோல் வளையாள் என்றும் அண்ணல் நஞ்சு உண்டவன் என்றும் இயம்பப் பெறுகின்றனர்,

இதில் சிறந்த தத்துவங்கள் பொலிந்திருக்கின்றன. கோல் வளையாள் என்பது செங்கோல் பிசகாதவள் எனப்பொருள்படுகிறது. இயற்கையில் ஒழுங்கான நடை முறையே அவளது ஆட்சி. அதில் தர்மம் திகழ்வது அவளது தெய்விகத் திட்டம். தர்மத்தினின்று வழுவி யாரும் முன்னேற்றமடைய முடியாது. தர்ம அனுஷ்டானமே தெய்வ வழிபாடு. தர்மத்தில் நிலைபெற்றவனுக்குப் பிரபஞ்சம் முழுதும் அம்பிகை சொரூபமாகக் காட்சி கொடுக்கிறது. இந்தக் காட்சியைக் கடந்து மேலே போவது தியாகமாகிறது. நஞ்சு உண்பது என்னும் செயல் தியாகமாகிறது. தியாகம் பண்ணியவர் சுத்த சிவத்தை அடைகின்றனர். சக்தி உபாசனையானது சிவ உபாசனையாகப் பரிணமித்து, ஜீவனை முக்தியில் கொண்டு சேர்க்கிறது.

உபநி. 23. பக்கம் 179ல் காண்க.

உபநி. 38. பக்கம் 304ல் காண்க.

தில்லையில் அருளிய

12. திருச்சாழல்

சிவனுடைய காருணியம்

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

சாழல் என்பது ஒருவகை மகளிர் விளையாட்டு. தடையும் தடைக்கு ஏற்ற விடையும் பாடுவது இதில் இடம் பெறுகிறது. பௌத்தர்கள் சைவத்துக்குத் தடை செய்தார்கள் என்றும், ஊமையாயிருந்த ஒரு பௌத்த அரசகுமாரி அத்தடைகளுக்கு விடை சொன்னாள் என்றும் ஓர் இடைச்செருகல் (interpolation) ஈண்டு இடம் பெற்றிருக்கிறது. ஆனால் இந்த ஐதிகம் யுக்திக்கோ சமய சம்வாதத்துக்கோ பொருந்தாது. கடவுள் உண்டு என்றோ இல்லை என்றோ வாதிப்பது புத்தமதக்

கொள்கை யன்று. அக்ஞேய வாதம் புத்தமதமாகிறது. அதாவது கடவுளைப்பற்றி மனிதனுக்கு ஒன்றும் தெரியாது. அதனால் அவனுக்குக் குறையொன்றுமில்லை. தன்னைத்தானே திருத்தியமைத்துக்கொள்ள மனிதனுக்கு இயலும். அதற்கு சீலம் முற்றிலும் அவசியமானது. அறிவுக்கு எட்டாத ஒரு பொருள் இருக்கிறது என்றோ இல்லையென்றோ வாதாடி வீண்பொழுது போக்காதே. இது புத்தமதம்.

1. பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்
[டென்னை
யீசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ.

பூசுவதும் வெள் நீறு பூண்பதுவும் பொங்கு அரவம்
பேசுவதும் திருவாயால் மறை போலும் காண் ஏடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டு என்னை
ஈசன் அவன் எவ் உயிர்க்கும் இயல்பு ஆனான் சாழலோ.

பொங்கு அரவம்-சீறுகின்ற பாம்பு.

பூசுவது வெண்ணீறு. அணிவது சீறுகிற பாம்பு. பேசுவது வேதம். தெய்வம் என்னும் ஒரு பொருளுக்கு இவையெல்லாம் பொருந்துமா? ஆம், பொருந்தும். ஏனென்றால் ஈசன் தானே இயற்கையாகவும் அதில் உள்ள உயிர்கள் அனைத்துமாகவும் இலங்குகிறான். அவனது இயல்பே இப்படி மூன்று விதங்களில் உருவகப்படுத்தி விளக்கப் பெற்றிருக்கிறது.

ஒரு தேசம் இயற்கையாய் அமைந்தது. அதை விளக்கும் தேசப்படம் மனிதனால் அமைக்கப்பட்டது. இயற்கையானது இறைவனரது நிஜசொரூபம். இனி அவரை ஒரு மனிதனைச் சமைத்து, நீறு பூசுவித்து, பாம்பு அணிவித்து, வேதம் ஓதப் பண்ணியது மனிதனது கற்பனை, ஆயினும் இந்தக் கற்பனையின் மூலம் தத்துவம் மிளிர்கிறது. இந்தத் தத்துவத்தை எந்தச் சமயவாதியும் மறுக்க முடியாது. க்ஷரம் அல்லது அழியும் தன்மையுடையதாய்

இருப்பது உலகம். அக்ஷரம் அல்லது அழியாததாயிருப்பது பரமன். உலகப்பொருள் ஒன்றில் அழியும் பகுதி தகனமாகிறது. அழியாப் பகுதி சாம்பலாய் எஞ்சி நிற்கிறது. பிறகு அதை எவ்வளவு சுட்டாலும் பழைய சாம்பலாகவே இருக்கும். எனவே சாம்பல் பரம்பொருளின் சின்னம். அழியும் தன்மையுடைய பிரபஞ்சத்துக்கு ஆதாரமாக அழியாப்பொருள் ஒன்று உண்டு என்னும் உண்மையை விளக்குகிற சின்னம் திருநீறு.

ஈசனுடைய சிருஷ்டியில் இனியவை இடம் பெற்றிருப்பதுபோன்று இன்னாதவைகளும் இடம் பெற்றிருக்கின்றன. உயிர்களின் முன்னேற்றத்துக்கு இன்னாதவை எதிர்மறையில் தூண்டுதல் போடுகின்றன. எனவே அவைகள் முற்றிலும் தேவை. சிவன் சர்ப்பத்தை அணிந்திருப்பதன் உட்கருத்து இதுவேயாம்.

சரம் அசரம், சேதனம் ஜடம் ஆகிய அனைத்திலும் அறிவு மிளிர்கிறது. ஏனென்றால் அனைத்தும் அறிவினின்று வடிவெடுத்தவைகள். எது வித்யா சொரூபமோ அது வேதம். பிரபஞ்சம் முழுதும் வேத சொரூபம். சிவனார் வேதம் ஓதிக்கொண்டிருக்கிறார் என்பதன் பொருள் இதுவே. அவரவருக்கு உகந்த வேதத்தை இறைவன் ஓதுகிறார் என்று சமயவாதிகள் இயம்புவது தத்துவத்துக்கு ஒத்துள்ள கற்பனை.

உபநி—2. பக்கம் 102ல் காண்க.

2. என்னப்ப னெம்பிரா
 னெல்லார்க்குந் தானீசன்
றுன்னம்பெய் கோவணமாக்
 கொள்ளுமது வென்னேடி
மன்னுகலை துன்னுபொருண்
 மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச்
 சாத்தினன்காண் சாழலோ.

என் அப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான் ஈசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளும் அது என் ஏடீ
மன்னு கலை துன்னு பொருள் மறை நான்கே வான் [சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன் காண் சாழலோ.

துன்னம் பெய்-லதைத்தல் அமைந்த. மன்னுகலை-நிலைபெற்ற கலைகள். துன்னுபொருள்-செறிந்த பொருள், அர்த்த புஷ்டி. வான் சரடு ஆ-முறுக்கிய பெரிய நூலாக. தன்னையே-அந்த வேத சாஸ்திரத்தையே.

அனைத்துக்கும் ஈசன் என்று சிவனாரைச் சொல்லுகின்றாய். அத்தகைய ஸ்தானத்தில் இருக்கிறவனுக்குத் தைத்த கந்தைத் துணியைத்தவிர நல்ல கோவணம் கட்டுதற்குக் கிடைக்கவில்லையா? அவனுக்குப் பொருள் செறிந்ததும் அழியாததும் ஆகிய வேதமே அரைஞாண் ஆகவும் கோவணமாகவும் அமைந்திருக்கிறது.

உடலை அலங்கரிப்பதில் கருத்தைச் செலுத்தாதே; நல்லறிவைக்கொண்டு உள்ளத்தை அலங்கரி என்னும் மேலாம் கோட்பாட்டைத் தமது கந்தைக் கோவணத்தின் வாயிலாகச் சிவனார் புகட்டுகிறார்.

3. கோயில் சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னாயிடினுங்
காயி லுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ.

கோயில் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை
தாயும் இலி தந்தை இலி தான் தனியன் காண் ஏடீ
தாயும் இலி தந்தை இலி தான் தனியன் ஆயிடினும்
காயில் உலகு அனைத்தும் கல்பொடி காண் சாழலோ.

காயில்-சினந்து கொண்டால்.

குடியிருப்பது சுடுகாட்டில், அணிவது புலித்தோல், தாய் தந்தையில்லாதவன், ஒற்றையாள், இவனும் ஒரு தெய்வமா?

பிரபஞ்சம் அழியும் தன்மையுடையது என்பதைச் சுடுகாடு நினைவுக்குக் கொண்டு வருகிறது. ஆணவத்தை அழித்ததற்கு அறிகுறி கொல்புலித்தோல். அவன் பிறவாதவன், இறவாதவன்,

முழுமுதற்பொருள். ஆதலால் அவன் தனியன். உலகம் இருப்பதும் போவதும் அவன் சங்கல்பத்தைப் பொறுத்திருக்கிறது.

நிலையற்ற உலகில் எதையும் சொந்தம் பாராட்டாதே என்னும் கோட்பாட்டைத் தன் வடிவத்தில் வைத்துள்ளான் சிவன்.

4. அயனை யனங்கனை
யந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா
வடுச்செய்தான் காணேடீ
நயனங்கண் மூன்றுடைய
நாயகனே தண்டித்தால்
சயமன்றே வானவர்க்குத்
தாழ்குழலாய் சாழலோ.

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச் செய்தான் காண் ஏடீ
நயனங்கள் மூன்று உடைய நாயகனே தண்டித்தால்
சயம் அன்றே வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ.

வயனங்கள்-பழிச்சொற்கள். வடு-தழும்பு. நயனங்கள்-கண்கள். சயம்-ஜயம், வெற்றி.

பிரம்ம தேவனையும், காமனையும், யமனையும், சந்திரனையும் சிவன் தாக்கிச் சிதைத்தான். அப்படி ஏற்பட்ட தழும்புகள் என்றைக்கும் மறைந்துபட்டுப் போகாத பழிச்சொற்களை அவர்கள்பால் கொண்டு வருவனவாயின. பரமன் இப்படிச் செய்தது நியாயமா?

பரமன் முக்கண்ணன், அவனுடைய மூன்றுவது கண் அதீத நிலையைக் குறிக்கும் ஞானக்கண் ஆகிறது. பிரபஞ்சத்தில் உழலும் தேவர்கள் குறைபாடு உடையவர்கள் என்பதை அவர்களுக்கு எடுத்துக் காட்டுதற் பொருட்டுப் பரமன் அன்னவர்களைத் தண்டித்தார். தாங்கள் திருந்தியமையத் தீர்மானம் செய்து கொண்டதே தேவர்களுக்கு வெற்றியாகும்.

பிரபஞ்ச வாழ்க்கையே குறைபாடு உடையது. அதில் ஈடுபடுகிறவர்கள் தேவர்களானாலும் அவர்கள் துன்பப் பட்டே ஆகவேண்டும். ஜீவர்கள் எல்லார்க்குமே துன்பம்

என்னும் தண்டனை வந்தமைகிறது. துன்பத்தினின்று விடுபடுதற்பொருட்டு அவர்கள் மேல்நிலை எய்துகின்றனர். இறைவனுடைய அருள் இங்ஙனம் மறக்கருணையாக வந்தமைகிறது. பரநிலையெய்தும்வரை துக்கமுண்டு என்பதை முக்கண்ணன் உயிர்களுக்குச் சிக்கலைக் கொடுத்து அறிவுறுத்துகிறான்.

உபநி. 75. பக்கம் 442ல் காண்க.

5. தக்கனையு மெச்சனையுந்
தலையறுத்துத் தேவர்கணந்
தொக்கனவந் தவர்தம்மைத்
தொலைத்ததுதா னென்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத்
தொலைத்தருளி யருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற்
றருளினன்காண் சாழலோ.

தக்கனையும் எச்சனையும்
தலை அறுத்துத் தேவர் கணம்
தொக்கன வந்தவர் தம்மைத்
தொலைத்தது தான் என் ஏடீ
தொக்கன வந்தவர் தம்மைத்
தொலைத்தருளி அருள் கொடுத்து அங்கு
எச்சனுக்கு மிகைத் தலை மற்று
அருளினன் காண் சாழலோ.

தக்கனையும்-தக்ஷப்பிரஜாபதியையும். எச்சனையும் - யாகத்துக்குப் புரோகிதனயிருந்த எச்சன் என்பவனையும். தொக்கன-கூட்டமாக. எச்சனுக்கு-யஜமானனாகிய தக்ஷபிரஜாபதிக்கு. மிகைத் தலை-மாறுபட்ட ஆட்டுத்தலை.

எஜமானனாகிய தக்ஷனைத் தலையறுத்து, தேவர்கள் எல்லாரையும் கூட்டமாக அழித்தது நியாயமா? தேவர்களைக் கூட்டமாக அழிக்கவேண்டியது அவசியமாயிற்று. தக்ஷபிரஜாபதிக்கு ஆட்டுத்தலையை ஒட்டவைத்ததும் நியதியே.

நான்காவது, ஐந்தாவது ஆகிய இந்த இரண்டு திருப்பாடல்களிலும் தக்ஷபிரஜாபதியின் வேள்வியில்

நிகழ்ந்த விபத்துக்கள் விளக்கப்படுகின்றன. தேவர்கள் பலர் மடிந்தனர். முக்கியமானவர்கள் பலர் அங்கஹீனர் கள் ஆயினர். தலைவனாகிய தக்ஷபிரஜாபதிக்குத் தலை போய்விட்டது. பிறகு ஆட்டுத்தலையைப் பெற்றுக் குறை வாழ்வு வாழ்ந்தான்.

இயற்கையில் திரும்பத் திரும்ப நிகழ்கிற நிகழ்ச்சி யின் அடிப்படைக் கோட்பாடு இந்த யாகத்தில் அடங்கி யிருக்கிறது. அறநெறியையும் இறைவன் அருளையும் புறக்கணித்துவிட்டுப் பல ஆடம்பரமான காரியங்கள் செய்யப்படுகின்றன. அச் செயல்கள் பலர்க்குத் தீங்கு விளைவிப்பவனாய் முடிவுறுகின்றன. அக்கேட்டுக்கு முற்றி லும் விமோசனம் கிடைப்பதில்லை. ஆட்டுத் தலையை யுடையவனாகத் தக்கன் உயிர்பெற்றது அதற்குச் சான்று. கடவுளின் பெருந்திட்டத்துக்கு மாறாகச் செய்வதெல்லாம் அமங்களமாக முடிவுறும்.

புராணக்கதை 4. பக்கம் 97ல் காண்க.

6. அலரவனு மாலவனு மறியாமே யழலுருவாய்
நிலமுதற்கீ ழண்டமுற நின்றதுதா னென்னேடீ
நிலமுதற்கீ ழண்டமுற நின்றிலனே லிருவருந்தஞ்
சலமுகத்தா லாங்காரந் தவிரார்காண் சாழலோ.

அலரவனும் மாலவனும் அறியாமே அழல்உரு ஆய்
நிலம் முதல் கீழ் அண்டம் உற நின்றதுதான் என் ஏடீ
நிலம் முதல் கீழ் அண்டம் உற நின்றிலனேல் இரு [வரும் தம்
சலம் முகத்தால் ஆங்காரம் தவிரார் காண் சாழலோ.

அலரவனும் - பிரமாவும். சலம்முகத்தால்-சீற்றத்தை முன் னிட்டு.

ஜோதிப் பிழம்பாய்த் தென்பட்ட சிவனாரின் அடிமுடி காணத் திருமாலும் நான்முகனும் முயன்று தோல்வியடைந் தனர் என்பது புராணக்கதை. இதற்கு வாச்சியார்த்தம் பண்ண லாகாது. ஏனென்றால் ஒரு தத்துவத்தை விளக்குதற்கென்று

அமைந்த கதையாகிறது இது. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று கிருத்தியங்களைச் செய்கிற மும்மூர்த்திகள் தங்கள் கிருத்தியங்களுக்கு ஏற்றவாறு அகங்கரித்து ஜீவபோதம் பெற்றாக வேண்டும். பின்பு ஜீவபோதம் படைத்தவர்கள் எவ்வளவு பெரிய மூர்த்திகளாயிருந்தாலும் அவர்கள் அகண்ட வஸ்துவை அளக்க முடியாது. அலை ஒன்று கடல் முழுவதையும் அறிந்துகொள்ள வல்லதன்று. அங்ஙனம் ஜீவபோதம் அல்லது அகங்காரம் படைத்தவர்கள் பரம்பொருளை முழுதும் அறியமாட்டார்கள்.

புராணக்கதை 1. பக்கம் 91ல் காண்க.

7. மலைமகளை யொருபாகம்
வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற்
பாயுமது வென்னேடீ
சலமுகத்தா லவன்சடையிற்
பாய்ந்திலளேற் றரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து
பெருங்கேடாஞ் சாழலோ.

மலை மகளை ஒரு பாகம் வைத்தலுமே மற்று ஒருத்தி
சலம் முகத்தால் அவன் சடையில்பாயும் அது என் ஏடீ
சலம் முகத்தால் அவன் சடை யில் பாய்ந்திலளேல் [தரணி எல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெரும்கேடுஆம் சாழலோ.

சலம்முகத்தால்-நீர் உருவமாக. தரணி-உலகம். பிலமுகத்தே-பாதளத்திலே.

சிவமும் சக்தியும் ஒன்று. அந்த ஒரே பராசக்தியானது பிரபஞ்ச நடைமுறையில் பல சக்திகளாகப் பரிணமிக்கிறது. கங்காநதி அத்தகைய சக்திகளுள் ஒன்று. ஹிமாசலமே சிவனது ஜடாபாரமாகக் கருதப்படுகிறது. அங்கே விழுகிற பனிக் கட்டியையெல்லாம் அது தாங்கியிருந்து சிறிது சிறிதாக உருகிக் கீழே வர விடுவதால், கங்கையின் பாய்ச்சல் நிலவுலகத்துக்கு நன்கு பயன் படுகிறது. அப்படியல்லாது நீர் முழுதுமே ஒன்று சேர்ந்து வந்தால் நாட்டுக்குப் பெருநஷ்டமாகும்.

8. கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
வாலால முண்டா னவன்சதுர்தா னென்னேடீ
யாலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.

கோலாலம் ஆகிக் குரை கடல்வாய் அன்று எழுந்த
ஆலாலம் உண்டான் அவன் சதுர் தான் என் ஏடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன் மால்
[உள்ளிட்ட
மேல் ஆய தேவர் எல்லாம் வீடுவர் காண்சாழலோ.

கோலாலம்-பெரிய ஆரவாரம். குரைகடல்-ஒலிக்கின்ற கடல். ஆலாலம்-கொடிய விஷம். சதுர்-சாமர்த்தியம். வீடுவர்-அழிந்து போவார்கள்.

புராணத்தில் சொல்லி வைத்துள்ள இந்த நிகழ்ச்சி யாண்டும் நிலவுலகில் நடைபெற்று வருகிறது. வாழ்ந்துவரும் மனிதன் நவ துவாரங்கள் வாயிலாக நஞ்சை வெளிப்படுத்தி வருகிறான். இயற்கை மயமாயுள்ள இறைவன் அந்த விஷத்தை வாங்கி அமிர்தமாக மாற்றித் தருகிறான். அவன் அப்படிச் செய்யாவிட்டால் உயிர்கள் அனைத்தும் அழிந்துபோம்.

புராணக்கதை 2. பக்கம் 93ல் காண்க.

9. தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவார்காண் சாழலோ.

தென்பால் உகந்து ஆடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும் பித்தன் காண் ஏடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இரு நிலத்தோர்
விண்பால் யோகு எய்தி வீடுவார் காண் சாழலோ.

தென்பால் உகந்து-தக்ஷிணாமூர்த்தியாயிருந்து. பேதாய்-அறிவு இல்லாதவளே. இருநிலத்தோர்-பரந்த நிலவுலகத்தவர். யோகு-தோன்றாநிலை. வீடுவர்-மறைந்து போவார்கள்.

யாண்டும் சுத்த சிவமாய் இருக்கிறவன் ஏன் மாது ஒருபாகம் ஆயிருக்கிறான்?

சிவம், சக்தியாகப் பரிணமிக்காவிட்டால் ஜகத்தும் ஜீவர்களும் தோற்றத்துக்கு வரமாட்டார்கள்.

10. தானந்த மில்லான் றனையடைந்த நாயேனை
யானந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
யானந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண்
[சாழலோ.

தான் அந்தம் இல்லான் தனை அடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான் காண் ஏடீ
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்த திருவடிகள்
வான் உந்து தேவர்கட்கு ஓர் வான் பொருள் காண்
[சாழலோ.

உபநிஷத் மந்த்ரம்—94.

न चक्षुषा गृह्यते नापि वाचा नान्यैर्देवैस्तपसा कर्मणा वा ।
ज्ञान प्रसादेन विशुद्धसत्त्वस्ततस्तु तं पश्यते निष्कलं ध्यायमानः ॥

ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா
நான்யைர்தேவைஸ் தபஸா கர்மணா வா ।
ஞான ப்ரஸாதேன விசுத்த ஸத்த்வஸ்ததஸ்து
தம் பச்யதே நிஷ்கலம் த்யாயமான: ॥

(முண்டகோபநிஷதம் 3·1·8)

(ஆத்ம தத்துவமானது) चक्षुषा சக்ஷுஷா கண்களால் न गृह्यते ந க்ருஹ்யதே கிரகிக்கப்படுவதன்று वाचा अपि न வாசா அபி ந வாக்காலும் அன்று अन्यैः देवैः न அன்யை: தேவை: ந மற்ற இந்திரியங்களாலும் அன்று तपसा कर्मणा वा न தபஸா கர்மணா வா ந தவத்தால் அல்லது கர்மத்தால் அன்று ज्ञानप्रसादेन ஞானப்ரஸாதேன ஞானத்தெளிவினால் विशुद्धसत्त्वः விசுத்தஸத்த்வ: ஒருவனது மனது தூயதாகிறது ततः तु தத: து அப்பொழுது ध्यायमानः த்யாயமான: தியானத்தின் வாயிலாக निष्कलं तम् நிஷ்கலம் தம் அவயவங்களற்ற அப்பரமனை पश्यते பச்யதே அனுபூதியில் அறிகிறான்.

வான் உந்து தேவர்-உடலினும் உயர்நிலைக்கு வந்துள்ள இந்திரியங்கள். வான்பொருள்-எட்டாத பொருள்.

சிவன் அகண்ட வஸ்து. ஆயினும் அவன் ஜீவர்கள் உள்ளத்தில் ஆனந்த சொரூபமாகத் திகழ்கிறான். எனினும் அவன் பண்பட்ட இந்திரியங்களுக்கும் எட்டாதவன்.

11. நங்காயி தென்னதவ நரம்போ டெலும்பணிந்து
கங்காளந்தோண்மேலே காதலித்தான் காணேடீ
கங்காள மாமாகேள் காலாந் தரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ.

நங்காய் இது என்ன தவம் நரம்போடு எலும்பு [அணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காண் ஏடீ
கங்காளம் ஆமா கேள் கால அந்தரத்து இருவர்
தம் காலம் செய்யத் தரித்தனன் காண் சாழலோ.

கங்காளம்-முழு எலும்புக்கூடு. இருவர்-பிரம்மாவும் விஷ்ணுவும். காலம் செய்ய-முடிவு காலம் செய்து.

சித்தத்தை சிவன் பால் வைத்து, சரீரத்தை சவம்போன்று கருதி அதை போகத்துக்குப் புறம்பாக்கவேண்டும். அப்பொழுது தவம் இனிது நிறைவேறுகிறது. கோரதபஸ்வியாகிய சிவனர் எலும்பை நரம்பில் கோத்து அணிந்திருப்பதன் மூலம் இக்கோட்பாட்டை விளக்குகிறார். பிரம்மா விஷ்ணுவாகிய மேலான தேவர்

பரமாத்ம தத்துவமானது கண்களாலோ, வாக்காலோ, மற்ற இந்திரியங்களாலோ கிரகிக்கப்படுவதன்று. கர்மத்தாலும் தவத்தாலும் அப்பரவஸ்துவை அறிந்துகொள்ள முடியாது. ஞானபிரசாதத்தால் ஒருவனது உள்ளம் தூயதாகிறது. அப்பொழுது தியானத்தின் வாயிலாக அவயவங்களற்ற அப்பரமனை அனுபூதியில் அவன் அறிகிறான்.

இந்திரியங்களைத் தேவர்கள் என உபநிஷதங்கள் கூறுகின்றன. ஞானப்பிரசாதம் என்பது தெளிந்து தேங்கிய தடாகம்போன்று விகாரப்படாத தூய அறிவுநிலையாம். அத்தகைய சலனமற்ற பேரறிவே தியானத்துக்குத் தகுதியுடையதாகிறது. ஆகாசத்துக்கு அவயவங்கள் இல்லை. அங்ஙனம் பரவஸ்துவானது பேரறிவுப் பரவெளியாய் ஒளிர்கிறது.

களே ஜீவபோதம் எய்துங்கால் அவர்கள் காலத்துக்கு இரையாகி மூலப் பிரகிருதியில் ஒடுங்குகின்றனர் என்னும் கோட்பாட்டை அவர் தோளில் சுமக்கும் கங்காளம் காட்டித் தருகிறது. ஜீவ போதம் யாருக்குமே உதவாது என்பதைச் சிவனரது இக்கோலம் வலியுறுத்துகிறது.

12. கானார் புலித்தோ லுடைதலையூண் காடுபதி
யான லவனுக்கிங் காட்படுவா ராரேடீ
யானாலுங் கேளா யயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ.

கான் ஆர் புலித் தோல் உடைதலை ஊண் காடு பதி
ஆனல் அவனுக்கு இங்கு ஆட்படுவார் ஆர் ஏடீ
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வான் நாடர் கோவும் வழி அடியார் சாழலோ

கான் ஆர்-காட்டில் வாழ்கின்ற. தலை-கபாலம். ஊண்-உண் கலம். காடு-மயானம். பதி-வசிக்குமிடம். வான் நாடர் கோவும்-இந்திரனும்.

அநித்தியமாகிய பிரபஞ்சத்தில் எதையும் சொந்தம் பாராட்டாதே என்பதற்கு அறிகுறியாகப் புலித்தோல் உடை, கபாலம் உண்கலம், சுடுகாடு குடியிருப்பு ஆகின்றன. ஆயினும் சிவனர் பரவஸ்து; ஆகையால் மற்றெல்லாரும் அவருக்குப் பரம்பரையாக அடிமைகளாகின்றனர்.

13. மலையரையன் பொற்பாவை
வாணுதலாள் பெண்டிருவை
யுலகறியத் தீவேட்டா
னென்னுமது வென்னேடீ
யுலகறியத் தீவேளா
தொழிந்தனனே லுலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங்
கலங்கிடுங்காண் சாழலோ.

மலை அரையன் பொன் பாவை
வாள் நுதலாள் பெண் திருவை
உலகு அறியத் தீ வேட்டான்
என்னும் அது என் ஏடீ

உலகு அறியத் தீ வேளாது
ஒழிந்தனனேல் உலகு அனைத்தும்
கலை நவின்ற பொருள்கள் எல்லாம்
கலங்கிடும்காண் சாழலோ.

பெண் திருவை-பார்வதி தேவியை. தீவேட்டான்-மணம் புரிந்தான். கலைநவின்ற-நூல்களால் சொல்லப்படுகிற.

பார்வதி தேவி தென்முனையில் தவம் கிடந்து சிவனை மணந்து கொண்டாள். இது ஜடசக்தி சித் சக்தியாகப் பரிணமிப்பதன் உருவகமாம். ஜடமாயும் சேதனமாயும் இருப்பது சிவசக்தி. உலகு அனைத்தும் சிவ சக்தியின் விளக்கமாம். சக்திக்குச் சிவம் ஆதாரம் ஆகாவிடில் இயற்கையின் ஒழுங்குப்பாடு அழிந்து பட்டுப்போம்.

14 தேன்புக்க தண்பணைசூழ்
தில்லைச்சிற் றம்பலவன்
றான்புக்கு நட்டம்
பயிலுமது வென்னேடீ
தான்புக்கு நட்டம்
பயின்றிலனேற் றரணியெல்லா
மூன்புக்க வேற்காளிக்
கூட்டாங்காண் சாழலோ.

தேன் புக்க தண் பணை சூழ் தில்லைச் சிற்றம்பலவன்
தான் புக்கு நட்டம் பயிலும் அது என் ஏடீ
தான் புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணி எல்லாம்
ஊன் புக்க வேல் காளிக்கு ஊட்டு ஆம் காண் சாழலோ.

தேன்புக்க-தேன் பாய்கிற. தண்பணைசூழ்-குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த. புக்கு-புகுந்து. தரணி-உலகு. ஊன் புக்க வேல்-மாமிசம் பொருந்திய வேல். ஊட்டு ஆம்-உணவாகும்.

சிவ சைதன்யம் அனைத்திலும் ஊடுருவிப் பாய்ந்திருப்பதே சிவத்தாண்டவம். அது இல்லையெனில் பிரபஞ்சமே சூன்யமாய் விடும்.

15. கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேருதே
யிடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ

தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த வந்நாளி
லிடபமதாய்த் தாங்கினுன் றிருமால்காண்
[சாழலோ.

கடம் கரியும் பரிமாவும் தேரும் உகந்து ஏருதே
இடபம் உகந்து ஏறிய ஆறு எனக்கு அறிய இயம்பு ஏடீ
தடமதில்கள் அவைமூன்றும் தழல் எரித்த அந்நாளில்
இடபம் அது ஆய்த் தாங்கினுன் திருமால் காண்
[சாழலோ.

கடகரியும் - மதயானையும். பரிமாவும் - குதிரையும். இடபம்- ரிஷபம்.

சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய திரிபுரங்கள் நிலைபெற்றிருக்குங் கால் உயிர்கள் அனைத்தும் ஈசனுக்கு வாகனங்களே. திரிகுணதீதத் தில் மெய்ப்பொருள் ஒன்றே மிச்சம். அதை சங்கரன் என்றும் சொல்லலாம். நாராயணன் என்றும் சொல்லலாம். அதீதத்தில் சங் கரனும் நாராயணனும் ஒன்று என்னும் கோட்பாடு ஈண்டு உருவ கப்படுத்தப் பட்டுள்ளது.

உபநி. 24. பக்கம் 184ல் காண்க.

16. நன்ருக நால்வர்க்கு
நான்மறையி னுட்பொருளை
யன்ருலின் கீழிருந்தங்
கறமுறைத்தான் காணேடீ
யன்ருலின் கீழிருந்தங்
கறமுரைத்தா னுயிடினுங்
கொன்ருன்காண் புரமூன்றுங்
கூட்டோடே சாழலோ.

நன்ருக நால்வர்க்கும்
நான்மறையின் உட்பொருளை
அன்று ஆலின்கீழ் இருந்து அங்கு
அறம் உரைத்தான் காண் ஏடீ
அன்று ஆலின்கீழ் இருந்து அங்கு
அறம் உரைத்தான் ஆயிடினும்
கொன்ருன் காண் புரம் மூன்றும்
கூட்டோ ஏடே சாழலோ.

ஆலமரம் பிரபஞ்சத்தின் சின்னம், சகுணபிரம்மம் அல்லது நடராஜா பிரபஞ்சத்தில் வியாபித்திருந்து உலக நடைமுறையை விளக்குகிறார். அது அறம் எனப்படுகிறது. ஆனால் முப்புரம் எரித்தல் பிரபஞ்சத்தின் ஒடுக்கம். பிறகு அதீதத்தில் உள்ள சிதம்பர ரகசியம் என்பது நிர்க்குண பிரம்மம். அது அறத்துக்கு அப்பாற்பட்டது.

17. அம்பலத்தே கூத்தாடி
யமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று
நண்ணுமது வென்னேடீ
நம்பனையு மாமாகே
ளுன்மறைக டாமறியா
வெம்பெருமா னீசாவென்
றேத்தினகாண் சாழலோ.

அம்பலத்தே கூத்து ஆடி அமுது செயப் பலி திரியும்
நம்பனையும் தேவன் என்று நண்ணும் அது என் ஏடீ
நம்பனையும் ஆமாகேள் நான் மறைகள் தாம் அறியா
எம்பெருமான் ஈசா என்று ஏத்தின காண் சாழலோ.

பலி-பிக்ஷை. நம்பனையும் - சிவபெருமானையும். நண்ணும்-அடையும்.

கூத்தாடுகின்றான், ஆனால் ஒன்றும் சம்பாதிக்க இயலாதவனாய் பிக்ஷை தேடித்திரிகிறான், அத்தகைய சிவனைத் தலைவன் என்று அணுகுதல் பொருந்துமா? அண்டங்கள் அனைத்துக்கும் அவன் ஈசன். அவைகளை ஒழுங்காக நடாத்தி வைப்பது அவனது கூத்து. அதற்கிடையில் 'தனது' என்று உரிமை பாராட்டாது இருப்பது அவனது மகிமை. மக்கள் அவன் போன்று இருக்க வேண்டும் என்பது கோட்பாடு.

18. சலமுடைய சலந்தரன்ற னுடறடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீ
ழலராக விடவாழி யருளினன்காண் சாழலோ.

சலம் உடைய சலந்தரன் தன்
உடல் தடிந்த நல் ஆழி
நலம் உடைய நாரணற்கு அன்று
அருளிய ஆறு என் ஏடீ

நலம் உடைய நாரணன் தன்
நயனம் இடந்து அரன் அடிக்கீழ்
அலர் ஆக இட ஆழி
அருளினன் காண் சாழலோ.

சலம்-தணியாத கோபம். சலந்தரன்-ஜலந்தரன் என்னும் அசுரன். தடிந்த-அழித்த. ஆழி-சக்கரம். நயனம்-கண். இடந்து-தோண்டியெடுத்து. அலர்-மலர்.

ஜலந்தரன் என்னும் பெருங்கோபியான அசுரனைச் சிவனர் சக்ராயுதத்தால் அழித்தார். அந்தச் சக்கரம் தமக்கு வேண்டுமென்று திருமால் தம் கண்ணைப் பிடுங்கிப் புஷ்பமாகச் சிவன் பாதத்தில் வைத்துப் பெற்றர்.

சூலாயுதம், சக்கராயுதம் ஆகிய இரண்டும் பரம் பொருளின் தடஸ்த லக்ஷணத்தின் புறச்சின்னங்கள். ஆதலால் ஹரனும் ஹரியும் ஒன்று என்னும் தத்துவம் வெளியாகிறது. பெறுதற்கு அரிய பொருள் ஒன்றைப் பெறுதற்குக் கண்ணை ஈடுகொடுப்பது போன்று சிரமம் எடுத்துக்கொள்வது அவசியம்.

19. அம்பரமாம் புள்ளித்தோ
லாலால மாரமுத
மெம்பெருமா னுண்டசது
ரெனக்கறிய வியம்பேடீ
யெம்பெருமா னேதுடுத்தங்
கேதமுது செய்திடினுந்
தம்பெருமை தானறியாத்
தன்மையன்காண் சாழலோ.

அம்பரம் ஆம் புள்ளித்தோல்
ஆலாலம் ஆர் அமுதம்
எம்பெருமான் உண்ட சதுர்
எனக்கு அறிய இயம்பு ஏடீ
எம்பெருமான் ஏது உடுத்து
அங்கு ஏது அமுது செய்திடினும்
தம் பெருமை தான் அறியாத்
தன்மையன் காண் சாழலோ.

அம்பரமாம்-ஆடையாகும். ஆலாலம்-கொடிய விஷம். சதுர்-சாமர்த்தியம்.

பரமனே பிரபஞ்சத்தில் அனைத்தும் ஆயிருக்கிறான். ஆதலால் எதை வேண்டுமானாலும் அவனுடைய ஆடையெனலாம். பாம்பின் பல்லில் நஞ்சு இருப்பதுபோன்று பிரபஞ்சத்திலுள்ள நலம் கேடு அனைத்தும் அவன் மயம். அந்நிலையில் விஷம் அவனுக்கு அமிர்தம் ஆவதில் வியப்பு ஒன்றுமே இல்லை. அவன் மகிமை முழுதும் அவனுக்கே தெரியாது என்றால் இவி அதை முற்றிலும் அறிவார் யார்!

20. அருந்தவருக் காலின்கீ
 ழறமுதலா நான்கனையு
மிருந்தவருக் கருளுமது
 வெனக்கறிய வியம்பேடீ
யருந்தவருக் கறமுதனான்
 கன்றருளிச் செய்திலனே
றிருந்தவருக் குலகியற்கை
 தெரியாகாண் சாழலோ.

அரும் தவருக்கு ஆலின் கீழ்
 அறம் முதலா நான்கனையும்
இருந்து அவருக்கு அருளும் அது
 எனக்கு அறிய இயம்பு ஏடீ
அரும் தவருக்கு அறம் முதல் நான்கு
 அன்று அருளிச் செய்திலனேல்
திருந்த அவருக்கு உலகு இயற்கை
 தெரியா காண் சாழலோ.

தவருக்கு-தவம்செய்வோருக்கு.

பிரபஞ்ச மயமாயிருந்து இறைவன் இடையறாது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப்பொருள்களை விளக்கிக்கொண்டே இருக்கிறார். மக்களது பரிபாகத்துக்கு ஏற்ப அக்கோட்பாடுகள் அவர்களுக்கு விளங்குகின்றன.

ஆலமரம் இயற்கைக்குச் சின்னமாகிறது. இறைவன் அதன்கீழ் இருப்பதன் வாயிலாக இயற்கையும் இறைவனும் ஒன்று என்பது அறிவுறுத்தப்படுகிறது. இந்த வடிவம் அர்த்தநாரீசுவரன் எனவும் இயம்பப்படுகிறது.

தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் நிலைநாட்டும் முறையில் இக்கோலம் அமைந்திருக்கிறது.

உபநி—13. பக்கம் 133ல் காண்க.

தில்லையில் அருளிய

13. திருப்பூவல்லி

மாயாவிஷயம் நீக்குதல்

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

1. இணையார் திருவடி
யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்க
ளத்தனையுந் துறந்தொழிந்தே
னணையார் புனற்றில்லை
யம்பலத்தே யாடுகின்ற
புணையாளன் சீர்பாடிப்
பூவல்லி கொய்யாமோ.

இணை ஆர் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துணை ஆன சுற்றங்கள் அத்தனையும் துறந்து
[ஒழிந்தேன்
அணை ஆர் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர் பாடிப் பூவல்லி கொய்யாமோ.

அணை ஆர் புனல்-கரை கட்டித் தேக்கப்பட்ட நீர். புணையாளன்-பிறவிக்கடலுக்கு ஓர் மரக்கலம் போன்ற சிவனார்.

விழித்துக்கொண்டவுடன் கனவில் சொந்தம் பாராட்டியவைகளிடத்தில் வைத்திருந்த பற்றுதல் அறவே அகலுகிறது. அங்ஙனம் சிவஞானம் வந்ததும் மாயா காரியங்களாகிய உலகப் பற்றுக்களெல்லாம் தாமே மறைந்து போகின்றன.

உபநி—38, பக்கம் 304ல் காண்க.

2. எந்தையெந் தாய்சுற்ற
மற்றுமெல்லா மென்னுடைய
பந்த மறுத்தென்னை
யாண்டுகொண்ட பாண்டிப்பிரா
னந்த விடைமருதி
லானந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம்
பூவல்லி கொய்யாமோ.

எந்தை எம் தாய் சுற்றம்
மற்றும் எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்து என்னை
ஆண்டுகொண்ட பாண்டிப் பிரான்
அந்த இடைமருதில்
ஆனந்தம் தேன் இருந்த
பொந்தைப் பரவி நாம்
பூவல்லி கொய்யாமோ.

பந்தம்-பிணிப்பு. இடைமருதில்-திருவிடைமருதூரில். பொந்தைப் பரவி-மனக்கோயிலைத் துதித்து.

இருதய கமலத்தில் உள்ள பரமானந்தப் பரமனை சுவாநுபூதியில் உணருங்கால் உலகப் பற்றுக்களெல்லாம் தாமே பறந்தோடி விடுகின்றன.

உபநி—3. பக்கம் 105ல் காண்க.

3. நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்
[படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ.

நாயின் கடைப்பட்ட நம்மையும் ஓர் பொருள்படுத்துத்
தாயின் பெரிதும் தயா உடைய தம் பெருமான்
மாயம் பிறப்பு அறுத்து ஆண்டான் என் வல் வினையின்
வாயில் பொடி அட்டிப் பூவல்லி கொய்யாமோ.

தயா-தயை, அருள். பொடி அட்டி-மண்ணைப் போட்டு.

இறைவனுடைய பேரருள் தாயின் அன்பினும் மிகப் பெரியது. அவன் அருளால் ஞானம் வாய்க்கிறது. ஞானோதயத்தில் கர்மங்க ளெல்லாம் சென்றொழிகின்றன.

பிராரப்த கர்மம் எஞ்சியிருக்கிறது எனினும் அது உடலுக்கு உரியதே யொழிய உள்ளத்தைத் தொடுவ தில்லை.

உபநி—74. பக்கம் 439ல் காண்க.

4. பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
யெண்பட்ட தக்க னருக்கனெச்ச னிந்துவனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரராற்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

பண்பட்ட தில்லைப் பதிக்கு அரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கன் எச்சன் இந்து அனல்
விண்பட்ட பூதம் படை வீரபத்திரரால்
புண் பட்டவா பாடிப் பூவல்லி கொய்யாமோ.

பண்பட்ட - அலங்கரிக்கப் பெற்ற. பரவாதே - போற்றாமல். எண்பட்ட-மதிப்புப் பெற்ற. அருக்கன்-சூரியன். இந்து-சந்திரன். அனல்-அக்னிதேவன். விண்பட்ட-மேன்மை பொருந்திய.

தேவர்களது வாழ்க்கையும் மாயாசக்தியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கின்றது. அந்நிலையில் உள்ள அன்னவர்கள் இறை வனது அருளைப் புறக்கணித்து, போக வாழ்வு வாழ முயன்றால் அவர்கள் துன்பத்துக்கு ஆளாவார்கள்.

புராணக்கதை 4. பக்கம் 97ல் காண்க.

5. தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமா
னூனாடி நாடிவந் துள்புகுந்தா னுலகர்முன்னே
நானாடி யாடிநின் றோலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ.

தேன் ஆடு கொன்றை
சடைக்கு அணிந்த சிவபெருமான்
ஊன் நாடி நாடி வந்து
உள்புகுந்தான் உலகர் முன்னே

நான் நாடி ஆடி நின்று
ஓலம் இட நடம் பயிலும்
வான் நாடர் கோவுக்கே
பூவல்லி கொய்யாமோ.

ஊன் நாடி நாடி வந்து-பலகால் மானுட உடம்பெடுத்து வந்து. ஓலம் இட-முறையிட. வான் நாடர் கோவுக்கே-மகாதேவனுக்கே.

உலகு அறிய சிவன் என்னை ஆட்கொண்டான். அதன் விளைவாக சிவபோதம் என்னுள் தலையெடுத்தாட, நான் அவனையே நாடியும் விண்ணப்பித்தும் நிற்கிறேன்.

6. எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறத்தன் றிருப்புருவ நெரித்தருளி
யுருமூன்று மாகி யுணர்வரிதா மொருவனுமே
புரமூன் றெரித்தவா பூவல்லி கொய்யாமோ.

எரிமூன்று தேவர்க்கு இரங்கி அருள் செய்தருளிச்
சிரம் மூன்று அறத் தன் திருப் புருவம் நெரித்தருளி
உரு மூன்றும் ஆகி உணர்வு அரிது ஆம் ஒருவனுமே
புரம் மூன்று எரித்தவா பூவல்லி கொய்யாமோ.

எரிமூன்று-வேள்வித்தீ, சுடலைத்தீ, ஞானத்தீ, ஆகிய மூன்று அக்னிகள். சிரம் மூன்று-ஜ க்ரதம், சொப்பனம், சுஷுப்தி. புரம் மூன்று-சத்வம், ரஜஸ், தமஸ்.

ஜீவாத்மாக்களைப் பக்குவப்படுத்துதற்பொருட்டு சிவனுர் வேள்வித் தீ, சுடலைத் தீ, ஞானத் தீ ஆகிய மூன்று நெருப்புக்களை நிலைபெற்றிருக்கச் செய்துள்ளார். அவர் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளாகி அவர்களுக்கு அப்பாலும் இருக்கிறுர். அப்பரமன் முப்பாழ் ஆகிய மூன்று குணங்களை அழிக்கின்றபோது நனவு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தைகளும் அடிபட்டுப் போகின்றன.

புராணக்கதை 3. பக்கம் 95ல் காண்க.

7. வணங்கத் தலைவைத்து
வார்கழல்வாய் வாழ்த்தவைத்
திணங்கத்தன் சீரடியார்
கூட்டமும்வைத் தெம்பெருமா

ணங்கொ டணிதில்லை
யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம்
பூவல்லி கொய்யாமோ.

வணங்கத் தலை வைத்து
வார் கழல் வாய் வாழ்த்த வைத்து
இணங்கத் தன் சீர் அடியார்
கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை
அம்பலத்தே ஆடுகின்ற
குணம் கூரப் பாடி நாம்
பூவல்லி கொய்யாமோ.

இணங்க-கூடிப்பழக. அணங்கொடு - உமாதேவியாரொடு, குணம் கூரப்பாடி-மகிமையை மிகுதியாகப்பாடி.

ஜீவாத்மாவுக்கு இந்திரியங்கள் அமைந்திருப்பதும் நல்லார் இணக்கம் வாய்ப்பதும், அம்மையப்பன் மயமாய் உலகம் திகழ்வதும் ஆகிய எல்லாம் இறைவனுடைய மகிமைகளை ஏராளமாகப் போற்றுதல் பொருட்டேயாம்.

உபநி. 78, பக்கம் 461. உபநி. 80, பக்கம் 467ல் காண்க.

8. நெறிசெய் தருளித்தன்
சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை
யாண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை
முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப்
பூவல்லி கொய்யாமோ.

நெறிசெய்தருளித் தன் சீர் அடியார் பொன் அடிக்கே
குறிசெய்துகொண்டு என்னை ஆண்ட பிரான் குணம் [பரவி
முறி செய்து நம்மை முழுதுஉடற்றும் பழ வினையைக்
கிறி செய்தவா பாடிப் பூவல்லி கொய்யாமோ.

முறிசெய்து-அடிமையாக்கி. உடற்றும்-துன்புறுத்தும். கிறி செய்தவா-பொய்யாக்கிய விதத்தை.

இறைவன் எனக்கு நல்வழியை வகுத்துள்ளான். பக்தருக்குப் பணிவிடை செய்வதை லட்சியமாக்கினுன். தன் குண விசேஷங்களைப் புகழுதற்கு என்னை அடிமையாக்கினுன். துன்புறுத்தும் பழவினையை அவன் பொய்யாக்கினுன்.

பக்தனுக்கு முற்றிலும் அனுகூலமாகவே மாயை இயங்குகிறது.

உபநி. 13. பக்கம் 133ல் காண்க.

9. பன்னாட் பரவிப்
 பணிசெய்யப் பாதமல
ரென்னாகந் துன்னவைத்த
 பெரியோ னெழிற்சுடராய்க்
கன்னா ருரித்தென்னை
 யாண்டுகொண்டான் கழலிணைகள்
பொன்னான வாபாடிப்
 பூவல்லி கொய்யாமோ.

பல் நாள் பரவிப்
 பணி செய்யப் பாதமலர்
என் ஆகம் துன்னவைத்த
 பெரியோன் எழில் சுடர் ஆய்க்
கல்நார் உரித்து என்னை
 ஆண்டுகொண்டான் கழல் இணைகள்
பொன் ஆனவா பாடிப்
 பூவல்லி கொய்யாமோ.

என் ஆகம் துன்னவைத்த-என் மனதில் பொருந்த அமைத்த.

எந்நாளும் போற்றிப் பணிவிடை செய்ய அவன் தனது திருவடியை என் மனதில் பொருந்த வைத்தான். அவனது சேர்க்கையால் கல்போன்ற என் மனது பக்குவம் அடைந்தது. பூரணனுன அவன் என்னைப் பூரணன் ஆக்க வல்லவன்.

உபநி. 51. பக்கம் 346ல் காண்க.

10. பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்
[துறையான்
சீரார் திருவடி யென்றலைமேல் வைத்தபிரான்
காரார் கடனஞ்சை யுண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

பேர் ஆசை ஆம்இந்தப் பிண்டம் அறப் பெருந்துறை
[யான்
சீர்ஆர் திருவடி என் தலைமேல் வைத்த பிரான்
கார்ஆர் கடல் நஞ்சை உண்டு உகந்த காபாலி
போர் ஆர் புரம் பாடிப் பூவல்லி கொய்யாமோ.

பிண்டம் அற-உடல் உணர்வு அல்லது தேகாத்ம புத்தி ஒழிய. காபாலி-கபாலத்தைப் பிக்ஷா பாத்திரமாகக் கையில் ஏந்தியுள்ள சிவன். போர் ஆர்புரம் பாடி-முப்புரங்களை அழித்த வரலாற்றைப் பாடி.

ஆசையின் விளைவு உடல் வாழ்க்கை. உடல் உணர்வை வெல்லுவது குறிக்கோள். சிவன் நஞ்சு உண்ட கோட்பாட்டையும், முப்புரம் எரித்த கோட்பாட்டையும் அனுஷ்டிப்பது உடல் உணர்வை வெல்லுதற்கு உற்ற உபாயமாம்.

புராணக் கதைகள் 2, 3. பக்கங்கள் 93, 95ல் காண்க.

11. பாலு மமுதமுந் தேனுடனும் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங் கொண்டபிரான்
[குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியா மந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

பாலும் அமுதமும் தேன் உடன் ஆம் பரா பரம் ஆய்க்
கோலம் குளிர்ந்து உள்ளம் கொண்ட பிரான் குரை
[கழல்கள்
ஞாலம் பரவுவார் நல் நெறி ஆம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

பராபரம் - பிரபஞ்சத்துக்கு முற்றிலும் அப்பாற்பட்டது. கோலம் - திருவுருவம். குரைகழல்கள் - ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்துள்ள திருவடிகள். ஞாலம்-உலகம். பரவுவார்-வழிபடுகிறவர்கள்.

வடிவங்களையெல்லாம் கடந்தவன் இனிய வடிவெடுக்கவும் செய்கிறுன். நல்லார் அவனைப் போற்றும் விதத்தில் நாமும் போற்றுவோம்.

உபநி. 57. பக்கம் 372ல் காண்க.

12. வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்குங்
கோனவனுய் நின்று கூடலிலாக் குணக்குறியோ
ஞன நெடுங்கட லாலால மமுதுசெய்யப்
போனக மானவா பூவல்லி கொய்யாமோ.

வானவன் மால் அயன் மற்றும் உள்ள தேவர்கட்கும்
கோன் அவன் ஆய்நின்று கூடல் இலாக் குணக் [குறியோன்
ஆன நெடும் கடல் ஆலாலம் அமுது செய்யப்
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ.

வானவன்-இந்திரன். கூடல்-சேர்தல். ஆலாலம்-கொடிய விஷம். போனகம்-உணவு.

மாயையோடு சம்பந்தப்பட்டவர் யாருக்குமே எட்டாதவன் சிவன். மாயையில் உள்ள கேடுகளையெல்லாம் அவன் நலமாக்க வல்லவன்.

13. அன்றுல நீழற்கீ ழருமறைக டானருளி
நன்றுக வானவர் மாமுனிவர் நாடோறு
நின்றுர வேத்து நிறைகழலோன் புனை கொன்றைப்
பொன்றுது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

அன்று ஆல நீழல் கீழ் அரு மறைகள் தான் அருளி
நன்று ஆக வானவர் மாமுனிவர் நாள் தோறும்
நின்று ஆர ஏத்தும் நிறை கழலோன் புனைகொன்றைப்
பொன் தாது பாடி நாம் பூவல்லி கொய்யாமோ.

ஆர ஏத்தும்-நிரம்பத் துதிக்கின்ற. புனை-தரிக்கின்ற. பொன் தாது-பொன்போன்ற மகரந்தம்.

அவன் மாயா சகிதனுய், சகுண பிரம்மமாய் இருப்பதைச் சான்றோர் அனைவரும் சர்வகாலமும் நிரம்பப் போற்றிய வண்ணமாயிருக்கின்றனர்.

14. படமாக வென்னுள்ளே தன்னிணைப்போ
[தவையளித்திங்
கிடமாகக்கொண்டிருந் தேகம்ப மேயபிரான்
தடமார் மதிற்றில்லை யம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

படம் ஆக என் உள்ளே தன் இணைப் போது அவை
[அளித்து இங்கு
இடம் ஆகக் கொண்டிருந்த ஏகம்பம் மேய பிரான்
தடம் ஆர் மதில் தில்லை அம்பலமே தான் இடமா
நடம் ஆடுமா பாடிப் பூவல்லி கொய்யாமோ.

இணைப்போது-பாதமலர் இரண்டும். ஏகம்பம்-திருவேகம்பம். தடம் ஆர்-விசாலம் பொருந்திய. நடம் ஆடுமா-நடனம் ஆடுகின்ற விதம்.

வரைந்த சித்திரம் போன்று வடிவு வாய்ந்த இறைவன் என் உள்ளத்தில் வீற்றிருக்கிறான்.

15. அங்கி யருக்க னிராவணனந் தகன்கூற்றன்
செங்க ணரியய னிந்திரனுஞ் சந்திரனும்
பங்கமி றக்கனு மெச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

அங்கி அருக்கன் இராவணன் அந்தகன் கூற்றன்
செம் கண் அரி அயன் இந்திரனும் சந்திரனும்
பங்கம் இல் தக்கனும் எச்சனும் தம் பரிசு அழியப்
பொங்கிய சீர் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ.

அங்கி-அக்னிதேவன். அருக்கன்-சூரியன். அந்தகன்-ஓர் அசுரன். கூற்றன்-யமன். பங்கம் இல்-அழிவற்ற. தம்பரிசு-தமது தன்மை. பொங்கிய-கோபித்த.

பரம்பொருளுக்குப் புறம்பாகத் தங்கள் சொந்த ஜீவபோதத்தை வளர்த்து வருபவர்கள் எத்தகைய பெருநிலையை அடைந்தாலும், அவர்கள் அல்லல்பட்டே ஆவார்கள்.

16. திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பான் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன்றன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

திண் போர் விடையான் சிவபுரத்தார் போர் ஏறு
மண்பால் மதுரையில் பிட்டு அமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண் பாடல் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ.

திண்போர்-திண்ணிய போர்த்தொழில். விடையான்-ரிஷப வாகனத்தை யுடையவன். போர் ஏறு-சிங்கம் போலத் தலைமை பெற்றிருப்பவன். மண்பால்-பூமியில். தண்டாலே-பிரம்பாலே.

அண்டம் அனைத்தையும் ஆளவும் அழிக்கவும் வல்ல சிவன் தன் அன்பன் பொருட்டு அடிபடவும் செய்கிறான்.

17\. முன்னாய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்னார் திருவடி தாமறியார் போற்றுவதே
யென்னாக முள்புகுந் தாண்டுகொண்டா
[னிலங்கணியாம்
பன்னாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

முன் ஆய மால் அயனும் வானவரும் தானவரும்
பொன் ஆர் திருவடி தாம் அறியார் போற்றுவதே
என் ஆகம் உள் புகுந்து ஆண்டுகொண்டான்
[இலங்கு அணியாம்
பல் நாகம் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ.

முன் ஆய-மற்றஜீவர்களுக்கெல்லாம் முன்பே தோன்றிய. தானவரும்-அசுரரும். ஆகம்-உள்ளம். பல் நாகம்-பல நாகப் பாம்புகள்.

பரமனைப் புறத்தில் வைத்து வழிபடுகிறவர்கள் எவ்வளவு பெரியவராயிருப்பினும், அவர்கள் அப்பரமனை அறிந்துகொள்ள மாட்டாது சிரமப்படுகின்றனர். பின்பு அவனை வழுத்துவது எப்படி? அகத்தில் வைத்து வழுத்தினால் அவனை அடைவது எளிது.

अन्तर्मुख समाराध्या ஆந்தர்முக ஸமாராத்யா மானஸ பூஜையாக அம்பிகையை மனதினுள்ளே வைத்து வணங்குபவர்கள் அவளை நன்கு வணங்குகிறார்கள்.

बहिर्मुख सुदुर्लभा பஹிர்முக ஸுதுர்லபா பாகிய பூஜை யாக அம்பிகையைப் புறத்தில் வைத்து வணங்குபவர் கள் அவளை எளிதில் அடைவதில்லை.

இங்ஙனம் லலிதாம்பிகையின் நாமங்கள் அமைந்துள்ளன.

பரமனை உள்ளத்தினுள் வணங்குவது சிறந்தது.

உபநி—61. பக்கம் 383ல் காண்க.

18. சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
யாராத வாசையதா யடியே னகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் றிருநடஞ் [செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

சீர் ஆர் திருவடித் திண் சிலம்பு சிலம்பு ஒலிக்கே
ஆராத ஆசை அது ஆய் அடியேன் அகம் மகிழத்
தேர் ஆர்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடம் செய்
பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ.

திண்-வலிய. ஆராத ஆசை-அருள் தாகம்.

சாதனத்தில் சிறிது முன்னேற்றம் அடைபவர் உள்ளத்தினுள் இனிய ஓசை கேட்பதுண்டு. அந்த அனுபவம் ஈண்டுச் சிலம்பு ஒலியென இயம்பப் பெறுகிறது. அத்தகைய அனுபவங்கள் அருள் தாகத்தை வளர்க்கின்றன.

19 அத்தி யுரித்தது போர்த்தருளும் பெருந்துறை [யான்
பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாய்
முக்தி முழுமுதலுத் தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ.

அத்தி உரித்து அது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவு கொண்டு இவ்வுலகில் பிள்ளையும் ஆய்
முத்தி முழு முதல் உத்தரகோசமங்கை வள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ.

அத்தி-ஹஸ்தி, யானை.

அகங்காரம் என்னும் யானையை ஒழித்தவர்க்குப் பரமனிடம் பித்து அதிகரிக்கிறது. அதன் விளைவாக விவேகம் ஓங்குகிறது.

20. மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்
[டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ.

மா ஆர ஏறி மதுரை நகர் புகுந்து அருளித்
தேவு ஆர்ந்த கோலம் திகழப் பெருந்துறையான்
கோ ஆகி வந்து எம்மைக் குற்றேவல் கொண்டு
[அருளும்
பூ ஆர் கழல் பரவிப் பூவல்லி கொய்யாமோ.

மா-குதிரை. ஆர ஏறி-நேர்த்தியாக ஊர்ந்து. தேவு-தெய்வத் தன்மை. கோலம்-வடிவம். கோ-தலைவன்.

தெய்வப்பெற்றி வாய்ந்த குதிரைத் தலைவனாகச் சிவன் மதுரையில் எழுந்தருளி நம்மை ஆட்கொண்டான். அவனுடைய திருவடி மலரைப் போற்றுவோம்.

தில்லையில் அருளிய

14. திருவுந்தியார்

ஞானவெற்றி

கலித்தாழிசை

1. வளைந்தது வில்லு விளைந்தது பூச
லுளைந்தன முப்புர முந்தீபற
வொருங்குடன் வெந்தவா றுந்தீபற.

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீ பற
ஒருங்கு உடன் வெந்த ஆறு உந்தீ பற.

பூசல்-போர். உளைந்தன-வருந்தின.

மகாமேரு வில்லாக வளைந்தது. போர் மூண்டது. முப்புரங்கள் வருந்தின. அவை அப்பொழுதே வெந்து நீறாயின.

உந்தி பறத்தல் என்பது ஒருவித விளையாட்டு.

2. ஈரம்பு கண்டில மேகம்பர் தங்கையி
லோரம்பே முப்புர முந்தீபற
வொன்றும் பெருமிகை யுந்தீபற.

ஈர் அம்பு கண்டிலம் ஏகம்பர் தம் கையில்
ஓர் அம்பே முப்புரம் உந்தீ பற
ஒன்றும் பெரு மிகை உந்தீ பற.

திருவேகம்பம் உடையார் கரத்தில் இரண்டு அம்புகள் தென் படவில்லை. திரிபுரதகனத்துக்கு ஓர் அம்பே போதுமானது. அந்த ஓர் அம்பும் அதிகமாயிற்று.

சிவன் அருள் என்னும் ஞான வெளிச்சம் வர, அஞ்ஞானம் என்னும் இருள் அக்கணமே ஒழிந்துபோகிறது.

3. தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலு
மச்சு முறிந்ததென் றுந்தீபற
வழிந்தன முப்புர முந்தீபற.

தச்சு விடுத்தலும் தாம் அடி இட்டலும்
அச்சு முறிந்தது என்று உந்தீ பற
அழிந்தன முப்புரம் உந்தீ பற.

தேர் அமைத்தல் என்னும் தச்சுவேலை முடிந்தது. இறைவன் தேரின் மீது ஏற அடிவைத்தார். உடனே தேரின் அச்சு ஒடிந்தது. தேர் இல்லாமலே திரிபுர சம்மாரம் முடிந்துவிட்டது.

4. உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே யுந்தீபற
விளமுலை பங்கனென் றுந்தீபற.

உபநிஷத் மந்த்ரம்—95

आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव तु ।
बुद्धिं तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च ॥

ஆத்மானம் ரதினம் வித்தி சரீரம் ரதமேவ து ।
புத்திம் து ஸாரதிம் வித்தி மன: ப்ரக்ரஹமேவ ச ॥

(கடோபநிஷதம் 3-3)

आत्मानं ஆத்மானம் ஜீவாத்மனை रथिनं ரதினம் ரதத்தில் ஊர்ந்துபோகிறவன் என்று विद्धि வித்தி அறிந்துகொள்க.

உய்ய வல்லார் ஒரு மூவரைக் காவல்கொண்டு
எய்ய வல்லானுக்கே உந்தீ பற
இளமுலை பங்கன் என்று உந்தீ பற.

பிழைக்க வல்லவராயிருந்த மூன்று அரக்கர்களையும் கயிலைக்குத் துவாரபாலகராகச் செய்தான் சிவன். உமாதேவி சமேதன் முப்புரங்களை அம்பால் எரிக்க வல்லவன்.

மானுட சரீரமே ரதம். சிவஞானத்துக்குப் பிறகு அது பயனற்றதாகிறது. ஜாக்கிரதம், சொப்பனம், சுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளே முப்புரம். பர போதம் அடையப்பெற்றதும் இம்மூன்றும் மாயமாய்

शरीरं சரீரம் சரீரத்தை तु து இனி रथं एव ரதம் ஏவ தேர் என்றே बुद्धिं तु புத்திம் து மேலும் புத்தியை सारथिं विद्धि ஸாரதிம் வித்தி தேர் ஓட்டுபவன் என அறிக मनः प्रग्रहम् एव च மன: ப்ரக்ரஹம் ஏவ ச மனதையும் பிடி கயிறு என்றே

சரீரத்தை ரதம் எனவும் ஜீவாத்மனை அதில் ஊர்ந்து செல்லுபவன் எனவும் அறிக. இனி புத்தியைத் தேர் ஓட்டுபவன் என்றும் மனதைப் பிடி கயிறு என்றும் அறிந்துகொள்க.

इन्द्रियाणि हयानाहुर्विषयांस्तेषु गोचरान् ।
आत्मेन्द्रियमनोयुक्तं भोक्तेत्याहुर्मनीषिणः ॥

இந்த்ரியாணி ஹயானுஹுர்விஷயான்ஸ்தேஷு கோசரான் ।
ஆத்மேந்த்ரியமனோயுக்தம் போக்தேத்யாஹுர்மனீஷிண: ॥

(கடோபநிஷதம் 3—4)

इन्द्रियाणि இந்த்ரியாணி பொறிகளை हयान् आहुः ஹயான் ஆஹு: குதிரைகள் என்று சொல்லுகிறார்கள் विषयान् விஷயான் புலன்களை तेषु தேஷு அவைகளின் गोचरान् கோசரான் பாதை आत्मेन्द्रियमनोयुक्तं (आत्मा, इन्द्रियाणि, मनः युक्तं) ஆத்மேந்திரிய மனோயுக்தம் (ஆத்மா, இந்த்ரியாணி, மன: யுக்தம்) தேகம், இந்திரியங்கள், மனது ஆகியவைகளோடு கூடியவனை भोक्ता इति போக்தா இதி அனுபவிப்பவன் என்று (ஜீவாத்மன் என்று) मनीषिणः आहुः மனீஷிண: ஆஹு: சான்றோர்கள் சொல்லுகின்றனர்.

மறைந்து போகின்றன. இவைகளுக்கு மூலகாரணங்களாகிய சத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள் அழிவதில்லை. பிரகிருதிமயமாய் அவைகள் பரவஸ்துவுக்கு வாயில்காப்பாளராகக் கீழ்நிலையில் இருக்கின்றன.

இந்திரியங்களைக் குதிரைகளென்றும் இந்திரியார்த்தங்களை அவைகளின் பாதைகள் என்றும் சொல்லுகின்றனர். சரீரம், இந்திரியங்கள், மனது ஆகியவைகளோடு பொருந்தியுள்ள ஆத்மனை போக்தா (அனுபவிக்கிற ஜீவாத்மன்) என்று சான்றோர்கள் சொல்லுகின்றனர்.

ஆத்ம சைதன்யம் அல்லது பிரக்ஞானம் ஒருபொழுதும் கர்மத்துக்குக் கர்த்தா ஆவதில்லை. ஆதலால் அது வினைப்பயனை அனுபவிப்பதுமில்லை. அவித்தையின் விளைவாக மனதோடும் இந்திரியங்களோடும் தேகத்தோடும் ஆத்மாவானது இணைக்கப் பெற்றிருப்பது போன்று தோன்றுகிறது. அத்தோற்றத்தின் விளைவாக அது கர்த்தா போன்றும் போக்தா (அனுபவிப்பவன்) போன்றும் விளங்குகிறது. இந்திரியங்களின் வாயிலாகவும் தேகத்தின் வாயிலாகவும் இன்ப துன்பங்களை அனுபவிப்பது மனது. அப்படி அனுபவிக்கும் தன்மை அதற்கு ஆத்ம சைதன்யத்திலிருந்து வந்துள்ளது. ஏனென்றால் அது தன்னளவில் ஜடவஸ்து. அதற்கு உணர்ச்சியில்லை. மண்ணும் மழை நீரும் ஒன்றோடொன்று கலக்கிற பொழுது சேற்று நீர் உண்டாகிறது. அங்ஙனம் மனதும் ஆத்மனும் **इतरेतर अध्यासः** இதரேதர அத்யாஸம் அல்லது ஒன்றோடொன்று ஏற்றுவிக்கப் பெறுகின்றன. தூய மழைநீர் சேற்றுநீர் ஆவது போன்று சுத்த சைதன்யம் அல்லது சுத்த சிவம் மனதோடு சேர்ந்து ஜீவாத்மா ஆகிறது. பிறவிகள் பலவற்றில் உண்டாகிற மாறுபாடுகளெல்லாம் மனதுக்கும் தேகத்துக்கும் உரியவைகளேயொழிய ஆத்மாவுக்கு அல்ல. ஆத்மா யாண்டும் ஆனந்த சொரூபம். அனுகூலமான மனதில் ஆத்மாவின் ஆனந்தம் இன்பமாகப் பிரதிபலிக்கிறது. பிரதிகூலமான மனதில் அது துன்பமாகப் பிரதிபலிக்கிறது. ஆதலால் துன்பத்தை எதிர்மறை ஆனந்தம் என்று சொல்லுவது முறை. மனதை நல்ல மனதாகச் செப்பனிடுவது ஆத்ம சாதனமாகும்.

5. சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி யுந்தீபற
வுருத்திர நாதனுக் குந்தீபற.

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடியவா பாடி உந்தீ பற
உருத்திர நாதனுக்கு உந்தீ பற.

சாடிய-தாக்கிய. சரிந்திட-அழிந்துபோக. உருத்திர நாதன்-சிவன்.

வீரபத்திரனால் தாக்குண்டு தக்ஷன் வேள்வி குலைந்தது. தேவர்கள் ஓட்டம் பிடித்தனர்.

6. ஆவா திருமா லவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் றாதையென் றுந்தீபற.

ஆ ஆ திருமால் அவிப் பாகம் கொண்டு அன்று
சாவாது இருந்தான் என்று உந்தீ பற.
சதுர் முகன் தாதை என்று உந்தீ பற.

அவிப்பாகம்-ஹவிஸ், வேள்வியில் அளித்த உணவு.

நான்முகக் கடவுளும், அவருடைய தந்தை ஆகிய மகா விஷ்ணுவும் வேள்வியில் கலந்திருந்தும் சாகவில்லை.

புராணங்களுக்கிடையில் இந்த நிகழ்ச்சி விளக்கத்தைப்பற்றி வேறுபாடு உண்டு. மகாவிஷ்ணு இந்த யாகத்தில் கலந்துகொண்டது உண்மையன்று. ஏனென்றால் பரவஸ்துவே சங்கரன் என்றும் நாராயணன் என்றும் அழைக்கப்படுகிறது.

உபநி. 24. பக்கம் 184ல் காண்க.

7. வெய்யவ னங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற.

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தான் என்று உந்தீ பற
கலங்கிற்று வேள்வி என்று உந்தீ பற.

வெப்பமுடைய அக்னி தேவன் அவியுண்ண வளைத்த கையை சிவன் வெட்டினன். வேள்வியும் கலங்கிற்று.

8. பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேயேடி யுந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற.

பார்ப்பதியைப் பகைசாற்றிய தக்கனைப்
பார்ப்பது என்னே ஏடீ உந்தீ பற
பணை முலை பாகனுக்கு உந்தீ பற.

பார்வதி தேவியைப் பகைத்துப் பேசினன் தக்ஷன். அவனை உயிரோடு வைத்துப் பார்ப்பதில் சிவனுக்கு என்ன பயன்?

9. புரந்தர ஞரொரு பூங்குயி லாகி
மரந்தனி லேறிஞ ருந்தீபற
வானவர் கோனென்றே யுந்தீபற.

புரந்தரனர் ஒரு பூங் குயில் ஆகி
மரம் தனில் ஏறினர் உந்தீ பற
வானவர் கோன் என்றே உந்தீ பற.

தேவர்களுக்கு அரசனகிய இந்திரன் ஒரு குயிலின் வடிவம் எடுத்து ஒரு மரத்தின் மேல் ஏறினன்.

10. வெஞ்சின வேள்வி வியாத்திர ஞர்தலை
துஞ்சின வாபாடி யுந்தீபற
தொடர்ந்த பிறப்பற வுந்தீபற.

வெம் சின வேள்வி வியாத்திரனர் தலை
துஞ்சினவா பாடி உந்தீ பற
தொடர்ந்த பிறப்பு அற உந்தீ பற.

வியாத்திரனர்-வேள்விக்குப் புரோகிதனர். துஞ்சினவா-அழிந்த விதத்தை.

கடுஞ்சினத்தையுடையவன் வேள்வியை நடாத்தினன். அவனது தலைபோயிற்று. இதை அறிதல் பிறப்பை ஒழிப்பதற்கு உற்ற உபாயம்.

11. ஆட்டின் றலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி யுந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற.

ஆட்டின் தலையை விதிக்குத் தலை ஆகக்
கூட்டியவா பாடி உந்தீ பற
கொங்கை குலுங்க நின்று உந்தீ பற.

விதிக்கு-தக்ஷனுக்கு.

தலையை இழந்த தக்ஷனுக்கு ஆட்டின் தலையைப் பொருத்தி வைக்கவேண்டியதாயிற்று.

12. உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே
கண்ணைப்பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெலா முந்தீபற.

உண்ணப் புகுந்த பகன் ஒளித்து ஓடாமே
கண்ணைப் பறித்தவாறு உந்தீபற
கருக் கெட நாம் எலாம் உந்தீ பற.

பகன்-கதிரவன். கருக்கெட-பிறவியின் மூலம் அழிய.

உண்ண வந்த சூரியன் கண்ணை இழந்தான். ஆகையால் அவன் ஓட முடியவில்லை. இதன் உட்பொருளை அறிதல் பிறப்பை ஒழிக்க உபாயமாகும்.

விவேகம் என்னும் கண் இல்லாதவர்கள் பிறவிப் பெருங்கடலைத் தாண்டுவதில்லை. அக்கண் உடையவர்கள் தகாததைத் தவிர்த்துத் தக்கதைக் கையாண்டு உய்வு அடைகின்றனர்.

13. நாமக ணாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகனெரித் துந்தீபற
தொல்லை வினைகெட வுந்தீ பற.

நா மகள் நாசி சிரம் பிரமன் படச்
சோமன் முகம் நெரித்து உந்தீ பற
தொல்லை வினைகெட உந்தீ பற.

சரஸ்வதி மூக்கை இழந்தாள். பிரமதேவனுக்குத் தலை போயிற்று. சந்திரனது முகம் தேய்த்து அழிக்கப்பட்டது. நமது பழவினை கெட இந்நிகழ்ச்சிகளை அறிதல் வேண்டும்.

கலைகளையும், வாழ்வையும், ஆற்றலையும் சுகபோகத் துக்குப் பயன்படுத்துபவர் அழிகின்றனர். அவைகளை வழிபாட்டுக்குப் பயன்படுத்துபவர் பழவினை ஒழிகிறது.

14. நான்மறை யோனு மகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியி லுந்தீபற.

நான்மறையோனு மகத்து இயமான் படப்
போம் வழி தேடும் ஆறு உந்தீ பற
புரந்தரன் வேள்வியில் உந்தீ பற.

மகத்து இயமான்-வேள்விக்கு எஜமானன். புரந்தரன்-இந்திரன்.

பிரம்மதேவனும் யாகாதிபதியாகிய தக்ஷனும் இறந்து விழ்ந்தார்கள். இந்திரனே ஓடிப்போம் வழியைத் தேடினன்.

15. சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற.

சூரியனார் தொண்டை வாயினில் பற்களை
வாரி நெறித்த ஆறு உந்தீ பற
மயங்கிற்று வேள்வி என்று உந்தீ பற

தொண்டை வாய்-கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாய்.

சூரியனுடைய பற்கள் தகர்த்து உதிர்க்கப்பட்டன. யாகமானது கலக்கத்தை யடைந்தது.

16. தக்கனா ரன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீ பற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற.

தக்கனார் அன்றே தலை இழந்தார் தக்கன்
மக்களைச் சூழ நின்று உந்தீ பற
மடிந்தது வேள்வி என்று உந்தீ பற.

தக்ஷன் தன் மக்களால் சூழப்பட்டிருந்தும் தலையிழந்தான். அவனது வேள்வியும் அழிந்தது.

அறத்துக்கும், இறைவன் அருளுக்கும், யோக நெறிக்கும் முற்றிலும் புறம்பாயிருக்கும் பெருமித போக வாழ்வுக்கு தக்ஷனுடைய யாகம் என்று பெயர். அது மக்களை அலங்கோலமான அழிவில் கொண்டு சேர்க்கும். அதை

முற்றிலும் சரிப்படுத்த முடியாது என்பதற்குத் தக்ஷன் ஆட்டுத் தலையைப் பெற்றது சான்ருகும். ஆனல் ஞான நெறியில் செல்வார்க்கு இக்கேடுகள் விளைவதில்லை.

புராணக்கதை 4. பக்கம் 97ல் காண்க.

17. பாலக ஞர்க்கன்று பாற்கட லீந்திட்ட
கோலச் சடையற்கே யுந்தீபற
குமரன்றன் ருதைக்கே யுந்தீபற.

பாலகனுர்க்கு அன்று பால் கடல் ஈந்திட்ட
கோலம் சடையற்கே உந்தீ பற
குமரன் தன் தாதைக்கே உந்தீ பற.

முருகனுடைய தந்தையாகிய சிவனுர் முனிபாலகன் உபமன்யுவுக்கு வேண்டியவாறு பால் கொடுத்தருளினுர்.

தம்முடைய தேவைகளெல்லாம் பரமனிடத்திருந்தே வருகின்றன வென்பதை ஞானியர் அறிகின்றனர்.

18. நல்ல மலரின்மே ஞன்முக ஞர்தலை
யொல்லை யரிந்ததென் றுந்தீபற
வுகிரா லரிந்ததென் றுந்தீபற.

நல்ல மலரின் மேல் நான்முகனுர் தலை
ஒல்லை அரிந்தது என்று உந்தீ பற
உகிரால் அரிந்தது என்று உந்தீபற.

ஒல்லை-விரைவில். உகிரால்-நகத்தால்.

பிரம்மாவின் ஐந்து தலைகளுள் ஒன்று சிவனது நகத்தால் விரைந்து கிள்ளியெடுக்கப்பட்டது.

சிவனுர்க்கு ஐந்து தலை உண்டு என்பது புராணக் கோட்பாடு. பிரம்மாவுக்கு முன்பு இருந்த ஐந்து தலைகளுள் ஒன்று நீக்கப்பட்டது. ஏனென்ருல் படைப்புக் கடவுளின் ஞானம் வரம்புக்கு உட்பட்டது என்பது கோட்பாடு.

19. தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிர
மீரைந்து மிற்றவா றுந்தீபற
விருபது மிற்றதென் றுந்தீபற.

தேரை நிறுத்தி மலை எடுத்தான் சிரம்
ஈர் ஐந்தும் இற்ற ஆறு உந்தீ பற
இருபதும் இற்றது என்று உந்தீ பற.

மலையெடுத்தான்-இராவணன்.

பத்துத் தலைகளையும் இருபது கைகளையும் உடைய ராவணன் கயிலை மலையை எடுக்க முயன்ற போது அவன நசுக்கப்பட்டான்.

ராவணன் மனோதத்துவத்துக்குப் புறச்சின்னமாகிறான். பரம்பொருளை அறிய மனதுக்கு இயலாது என்பது இதன் பொருள்.

20. ஏகாச மிட்ட விருடிகள் போகாம
லாகாசங் காவலென் றுந்தீபற
வதற்கப்பாலுங் காவலென் றுந்தீபற.

ஏகாசம் இட்ட இருடிகள் போகாமல்
ஆகாசம் காவல் என்று உந்தீ பற
அதற்கு அப்பாலும் காவல் என்று உந்தீ பற.

ஏகாசம்-உத்தரீயம், மேல் ஆடை.

ஞானவான்களாகிய ரிஷிகளை இறைவன் அருள் யாண்டும் காப்பாற்றுகிறது.

அக்ஞானத்தில் ஊறிய போகவாழ்வை ஒழிப்பதும் ஞானத்தில் ஊறிய யோக வாழ்வை உயர்த்துவதும் ஈசன் அருள்.

தில்லையில் அருளிய

15. திருத்தோணோக்கம்

பிரபஞ்ச சுத்தி

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

1. பூத்தாரும் பொய்கைப்
புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும்
பேதைகுண மாகாமே

தீர்த்தாய் திகழ்தில்லை
யம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தாவுன் சேவடி
கூடும்வண்ணந் தோணோக்கம்.

பூத்துஆரும் பொய்கைப் புனல் இதுவே எனக் கருதிப்
பேய்த்தேர் முகக்க உறும் பேதை குணம் ஆகாமே
தீர்த்தாய் திகழ் தில்லை அம்பலத்தே திரு நடம் செய்
கூத்தா உன் சேவடி கூடும் வண்ணம் தோள் நோக்கம்.

ஆரும்-நிறைந்த. பேய்த்தேர்-கானல் நீர்.

கானல் நீரைப் பூ நிறைந்த பொய்கை நீர் எனக் கருதி அதில் நீர் மொள்ள மயக்கத்தில் உள்ளவர் முயலுகின்றனர். அந்த மயக்கம் எனக்கு இல்லாது நீக்கினுய். கூத்தப்பிரானே, நான் உன் திருவடியைச் சேர முயலுகிறேன்.

பிரபஞ்சம் கானல் நீர் போன்று பொய்யானது. பரமனே பொய்கை நீர் போன்றவன். தோள் நோக்கம் என்பது ஒருவித விளையாட்டு.

2. என்றும் பிறந்திறந் தாழாமே யாண்டுகொண் [டான்
கன்றால் விளவெறிந் தான்பிரமன் காண்பரிய
குன்றாத சீர்த்தில்லை யம்பலவன் குணம்பரவித்
துன்றார் குழலினீர் தோணோக்க மாடாமோ

என்றும் பிறந்து இறந்து ஆழாமே ஆண்டுகொண் [டான்
கன்றால் விளவு எறிந்தான் பிரமன் காண்பு அரிய
குன்றாத சீர் தில்லை அம்பலவன் குணம் பரவித்
துன்று ஆர் குழலினீர் தோள் நோக்கம் ஆடாமோ.

கன்றால் விளவு எறிந்தான்-கிருஷ்ணனைக் கொல்ல ஓர் அசுரன் மாயக் கன்றுக்குட்டியாக வந்தான். மற்றோர் அசுரன் மாயக் கனியுடைய விளாமரமாக நின்றான். இந்தச் சூழ்ச்சியை அறிந்த கிருஷ்ணன் கன்றால் விளாம்பழத்தை அடித்து இரண்டு அசுரர்

களையும் கொன்றான். அவன் திருமாலின் அவதாரம். துன்று ஆர் குழலினீர்-நெருக்கமுள்ள கூந்தலையுடையீர்.

எந்நாளும் பிறவிக் கடலில் அழுந்தாமல் இறைவன் எம்மை ஆட்கொண்டான். அரியும் அயனும் அவனைக் காணமாட்டார் கள். அத்தகைய தில்லையம்பலவனுடைய திவ்விய குணங்களைப் புகழ்ந்து தோணேக்கம் ஆடுவோம்.

3. பொருட்பற்றிச் செய்கின்ற
பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி
வாய்க்கலச மூனமுதம்
விருப்புற்று வேடனூர்
சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா
தோணேக்க மாடாமோ.

பொருள் பற்றிச் செய்கின்ற
பூசனைகள் போல் விளங்கச்
செருப்பு உற்ற சீர் அடி
வாய்க் கலசம் ஊன் அமுதம்
விருப்பு உற்று வேடனூர் சேடு
அறிய மெய் குளிர்ந்து அங்கு
அருள் பெற்று நின்றவா
தோள் நோக்கம் ஆடாமோ.

பொருள் பற்றிச் செய்கின்ற-அங்கீகரிக்கப்பட்ட பூஜா திரவி யங்களைக்கொண்டு செய்கின்ற. பூசனைகள் போல் விளங்க-ஆசா ரம் நிறைந்த பூஜைகள் போல் தென்பட. செருப்பு உற்ற சீர் அடி-செருப்பு அணிந்த சிறந்த பாதம். வாய்க்கலசம்-வாயாகிய ஜல பாத்திரம். வேடனூர்-வேடனூராகிய கண்ணப்பர். சேடு அறிய-பெருமையை உலகம் எல்லாம் அறிய.

கண்ணப்ப நாயனூர் தம் வாயில் நீர் முதலியவற்றைக் கொண்டு வந்து பூஜை செய்து திருவருள்பெற்ற வரலாற்றைப் புகழ்ந்து தோணேக்கம் ஆடுவோம்.

பிரபஞ்ச சுத்தி ஆனது புறப்பொருள்களில் இருப் பதைவிட மேலாக மனநிலையில் இருப்பது என்பது ஈண்டு வெளிப்படை.

4. கற்போலு நெஞ்சங் கசிந்துருகக் கருணையினு
னிற்பானைப் போலவென் னெஞ்சினுள்ளே
[புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙன்
சொற்பால தானவா தோணோக்க மாடாமோ.

கல் போலும் நெஞ்சம் கசிந்து உருகக் கருணையினால்
நிற்பானைப் போல என் நெஞ்சின் உள்ளே புகுந்தருளி
நல்பால்படுத்து என்னை நாடு அறியத் தான் இங்ஙன்
சொல் பாலது ஆனவா தோள் நோக்கம் ஆடாமோ.

நல்பால் படுத்து-நல்ல நெறியில் ஒழுகுமாறு செய்து. சொல் பாலது ஆனவா-என் சொல்லால் வெளியிடக்கூடிய விதத்தை.

எனது கல் நெஞ்சை அவன் கசிந்து உருகப்பண்ணினான். கருணை கூர்ந்து என் எதிரில் பிரசன்னமானவன் போன்று தென் பட்டவன் நிலைத்து என் நெஞ்சில் குடிபுகுந்துள்ளான். நான் நல் லொழுக்கத்திலேயே நிலைபெற்றிருக்க என்னைச் செய்துள்ளான். அவனை உலகத்தவர் அறிந்துகொள்ளும்படி சொல் ஓவியம் வரைய என்னை நியமித்துள்ளான்.

பிரபஞ்ச மயமாயுள்ள ஜீவாத்மன் சுத்தியடைவ தற்கு ஏற்ப அவன் பரமன் மயமாகப் பரிணமிக்கிறான். ஈண்டு நான்கு பாடல்களில் பகர்ந்துள்ள நான்குவித உபாயங்களும் சாதகனது பிரகிருதி சுத்தியடைவ தற்கு உகந்தவைகளாம்.

5. நிலநீர் நெருப்புயிர்
நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ
டெண்வகையாய்ப் புணர்ந்து நின்று
னுலகே ழெனத்திசை
பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா
தோணோக்க மாடாமோ.

நிலம் நீர் நெருப்பு உயிர் நீள் விசும்பு நிலாப் பகலோன்
புலன் ஆய மைந்தனோடு எண் வகையாய்ப்
[புணர்ந்துநின்றான்

உலகுஏழ் எனத் திசை பத்து எனத் தான்ஒருவனுமே
பலஆகி நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ

உயிர்-காற்று, பிராணவாயு. புலன் ஆய மைந்தனேடு-அறிவு மயமான ஜீவாத்மாவோடு.

ஈசன் ஒருவனே நிலம் முதலாகிய அஷ்ட மூர்த்திகளாகவும், ஏழு உலகங்களாகவும், பத்துத் திக்குகளாகவும் தென்படுகிறன்.

பரமனே பிரபஞ்சமாகத் தோன்றிக்கொண்டிருப்பதால் தன்னளவில் பிரபஞ்சம் சுத்தமானதே. மற்று அக்ஞானத்தால் அதில் அசுத்தத்தை ஜீவன் காண்கிறன். அக்ஞானம் என்னும் மலத்தை அகற்றுவது குறிக்கோள்.

6. புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயந்
தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கு
மத்தன் கருணையினுற் றேணேக்க மாடாமோ.

புத்தன் முதல் ஆய புல் அறிவின் பல் சமயம்
தம் தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டு நிற்கச்
சித்தம் சிவம் ஆக்கிச் செய்தனவே தவம் ஆக்கும்
அத்தன் கருணையினுல் தோள் நோக்கம் ஆடாமோ.

புத்தன்-புத்த சமயத்தான். தட்டுளுப்பு-தடுமாற்றம்.

புத்தன் முதலாகிய சமயவாதிகள் பலர் அறிவு குழம்பியவர்களாய், அவரவர் சமயங்களையே சிலாகிக்கும் தடுமாற்றமுடையவர்களாய் இருக்கின்றனர். என் சித்தம் சிவமயமாய்த் தெளிந்துள்ளது. நான் செய்வதெல்லாம் சிவனுக்கு உரிய தவச் செயல். அவன் கருணையினுல் இங்ஙனம் நான் தெளிந்துள்ளேன்.

உபநிஷத் மந்த்ரம்—96.

यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् ।
यत्तपस्यसि कौन्तेय तत्कुरुष्व मदर्पणम् ॥

யத்கரோஷி யதச்ஞஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் ।
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்பணம் ॥

(பகவத்கீதோபநிஷதம் 9-27)

'புத்தன்' என்னும் பதப்பிரயோகம் ஈண்டு வந்துள்ளதைப் பிரமாணமாக எடுத்துக்கொண்டு அந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாருமே தடுமாற்றமும் மதவெறியும் பிடித்தவர்கள் என்று முடிவு கட்டுவது புதியதொரு தடுமாற்றமாகும். மதவெறி என்னும் மலத்தில் உழல்பவரை யாண்டும் எல்லாச் சமயங்களிலும் காணலாம் என்பதற்கு இப்பாட்டே ஆதாரமாகிறது.

कौन्तेय கௌந்தேய குந்தியின் புதல்வா यत् करोषि யத் கரோஷி எதைச் செய்யினும் यत् अश्नासि யத் அச்ஞஸி எதைப் புசிக்கினும் यत् जुहोषि யத் ஜுஹோஷி எதை ஹோமம் பண்ணினும் यत् ददासि யத் ததாஸி எதை ஈந்திடினும் यत् तपस्यसि யத் தபஸ்யஸி எத்தவத்தைச் செய்தாலும் तत् தத் அதை मदर्पणं மதர்பணம் எனக்கு அர்ப்பணமாக कुरुष्व குருஷ்வ செய்.

குந்தியின் புதல்வா, நீ எதைச் செய்தாலும், யாது புசித்தாலும், ஏது ஹோமம் பண்ணினுலும், எதை ஐயமிட்டாலும், எத்தவத்தைப் புரிந்தாலும் அதை எனக்கு அர்ப்பணமாகச் செய்.

உணவில் வைத்துள்ள பற்ருனது போகப் பிரியத்துக்கு அறிகுறியாகும். தீனியில் வைத்துள்ள நாவாசையை அடக்காதவன் மற்ற ஆசைகளை அடக்க முடியாது. உண்பதையே கடவுள் ஆராதனையாகச் செய்து பழகப் பழக போகமானது யோகமாக மாறியமைகிறது.

எதைத் தானமாக கொடுக்கிருயோ அதையும் ஈசுவரார்ப்பணமாகச் செய். ஈயாத லோபியை விட மேலானவன் ஐயமிடுபவன். ஈதல் அறம் எனப்படுகிறது. அப்படிக் கொடுக்கிறவன் தன்னைப் பெரியவனுகக் கருதுவானுனல் அஹங்காரத் தடிப்பால் அவன் சிறியவனுகிருன். தானம் செய்வதை, சிவ சேவையாகக் கருதுமிடத்து அஹங்காரம் தேய்கிறது. கடவுளுக்குப் பூஜை செய்யும் பாவனையே தானம் செய்வதிலும் வந்தமைய வேண்டும்.

உயிர்களுக்கு உணவு வகைகள் பல இருப்பது போன்று சமயங்களும் இயல்புக்கு ஏற்றவாறு பல இருக்கின்றன. அவையாவும் இறைவனுடைய அருள் திட்டம். முறையாக அனுஷ்டிக்குமிடத்து ஒவ்வொரு சமயமும் மனிதனை உயர்நிலைக்கு உயர்த்துகிறது. சித்தமலம் உடையார் இதை அறியார். அன்னவர் சமயவெறி என்னும் நோய்வாய்ப்பட்டவர்கள். மனதைச் சுத்தப்படுத்துவது பிரபஞ்ச சுத்தியாகும். சுத்த மனம் படைத்தவர்கள் செய்யும் செயல்களெல்லாம் பரமனின் ஆராதனையாகின்றன. அவையே தவச் செயல்களாகின்றன.

7. தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் ருதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப வீசன் றிருவருளாற் றேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணேக்கம்.

தீது இல்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதை தனைத் தாள் இரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோள் நோக்கம்.

மாணி - பிரம்மச்சாரி. தாதை-தந்தை. சேதிப்ப - வெட்ட. சோறு-புண்ணியம்.

தவம் புரிதலைத் தன் சித்தியின் பொருட்டு ஒருவன் செய்யக்கூடும். அது காமிய தபசு ஆகிறது. அதனால் ஜீவ போதம் வளர்கிறது. தபசு என்னும் தெய்வ சம்பத்து தெய்வத்திடத்திருந்து வந்தது. அதனால் இறைவன் பெருமையே நிலைபெறுக, என்றெண்ணித் தவம் புரிதல் சாலச் சிறந்தது.

இங்ஙனம் வாழ்க்கையில் வந்து அமைந்துள்ளசெயல்களெல்லாம் ஈசுவர ஆராதனையாகின்றன. அதனால் ஜீவ போதம் குறைகிறது; பரபோதம் மேலிடுகிறது. எல்லாம் அவன் உடைமையே; எல்லாம் அவன் செயலே என்ற திருக்காட்சி அமையப்பெறுகிறது.

தண்டீசன் அல்லது சண்டேசுவரநாயனர் பிரம்மச்சாரியாயிருந்தார். அவர் செய்த சிவ கருமத்தைக் கெடுக்க ஒருவர் வந்தார். அவர் ஜாதியில் அந்தணர், முறைமையில் சொந்தத் தந்தை. அவைகளையெல்லாம் பொருள் படுத்தாது அவருடைய கால்கள் இரண்டையும் பிரம்மச்சாரி துண்டித்தார். அப்பாபச் செயலானது புண்ணிய கர்மமாக அங்கிகரிக்கப்பட்டது. தண்டீசனுக்குச் சிவ கதி வாய்த்தது.

சிவ பூஜையானது மகாபாபச் செயலையும் புண்ணியமாக மாற்றவல்லது.

8. மான மழிந்தோ மதிமறந்தோ மங்கைநல்லீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே
[நினைந்தடியோ
மானந்தக் கூத்த னருள்பெறினு மவ்வணமே
யானந்த மாகிநின் ருடாமோ தோணேக்கம்.

மானம் அழிந்தோம் மதி மறந்தோம் மங்கை நல்லீர்
வானம் தொழும் தென்னன் வார் கழலே நினைந்து
[அடியோம்
ஆனந்தம் கூத்தன் அருள் பெறின் நாம் அவ்வணமே
ஆனந்தம் ஆகி நின்று ஆடாமோ தோள் நோக்கம்.

பக்தியின் மேலீட்டால் ஜாதி, குலம், கோத்திரம் என்னும் அபிமானத்தை நாம் கடந்து விட்டோம். உலகத்தவர்களது நடைமுறையைப் பற்றிய பேத புத்தியை நாம் மீறியிருக்கிறோம். ஆனந்தக் கூத்தனோடு நாம் ஒன்றுபட்டிருக்கிறோம்.

நாரத பக்தி சூத்திரம் 72. பக்கம் 47ல் காண்க.

9. எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுத லெந்தை கடைத்தலைமு னின்றதற்பி
னெண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களு
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண்
[டோணேக்கம்.

எண் உடை மூவர் இராக்கதர்கள் எரி பிழைத்துக்
கண் நுதல் எந்தை கடைத்தலை முன் நின்றதன் பின்
எண் இலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால் பலர் மாண்டனர் காண் தோள் நோக்கம்.

எண் உடைமூவர்-மதிப்பையுடைய மூன்று ராக்ஷஸர்கள். எரி பிழைத்து-நெருப்பினின்று தப்பித்து. கடைத்தலைமுன்-வாயிற்படியில். நின்றதன் பின்-துவாரபாலகராக நின்ற பிறகு.

திரிபுர தகனமான பிறகு அவைகளை ஆண்ட அரக்கர் மூவரும் கயிலைக்கு துவாரபாலகர் ஆயினர். அதன் பிறகு இந்திரர்களும் பிரமாக்களும் எத்தனையோ பேர் தோன்றி மறைந்தனர்.

பரமன் சாசுவதமாய் இருப்பதுபோன்று பிரபஞ்சத்துக்கு மூலகாரணமாகிய முக்குணங்களும் அவனுடைய விபூதிகளாய் இருக்கின்றன. பின்பு இந்திரர்களும் பிரம்மாக்களும் கணக்கற்றபேர் தோன்றவும் மறையவும் செய்கின்றனர். பரபிரம்மத்துக்கு மற்றொரு பெயர் மஹாவிஷ்ணு. சங்கரனும் நாராயணனும் ஒன்றே. அத்தகையவனுக்குத் தோற்றமும் மறைவும் இல்லை. இது வஸ்துவைப் பற்றிய தத்துவம்.

உபநி—24. பக்கம் 184ல் காண்க.

10. பங்கய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்க ணிடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கர னெம்பிரான் சக்கரமாற் கருளியவா
றெங்கும் பரவிநாந் தோணோக்க மாடாமோ.

பங்கயம் ஆயிரம் பூவினில் ஓர் பூக் குறையத்
தம் கண் இடந்து அரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம் மாற்கு அருளிய ஆறு
எங்கும் பரவி நாம் தோள் நோக்கம் ஆடாமோ.

பங்கயம்-பங்கஜம், தாமரை. இடந்து-தோண்டி. மாற்கு-திருமாலுக்கு.

ஆயிரம் தாமரைமலரைக்கொண்டு திருமால் மகாதேவனை அர்ச்சித்தார். ஒரு மலர் குறையக் கண்டு அதற்கு ஈடாகத் தம் கண்ணையே அவர் தோண்டிக் கொடுத்தார். மகிழ்வுற்ற சிவன் சக்கராயுதத்தை அவருக்கு வழங்கினர்.

பரமனைப் போற்றுதற்குப் பிரகிருதியைப் பயன் படுத்துதல் அதன் புனிதமான பிரயோஜனமாம்.

11. காம னுடலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமக ளூசி சிரம்பிரமன் கரமெரியைச்
சோமன் கலைதலை தக்கனையு மெச்சனையுந்
தூய்மைகள் செய்தவா தோணோக்க மாடாமோ.

காமன் உடல் உயிர் காலன் பல் காய் கதிரோன்
நா மகள் நாசி சிரம் பிரமன் கரம் எரியைச்
சோமன் கலை தலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோள் நோக்கம் ஆடாமோ.

பிரபஞ்சத்தில் இருப்பவர்கள் எல்லாரும் பரமனோடு எவ்விதத்தில் தொடர்வுகொண்டாலும் அதன் விளைவாக அவர்கள் தூய்மை படைகின்றனர்.

12. பிரம னரியென் றிருவருந்தம் பேதைமையாற்
பரம மியாம்பரம மென்றவர்கள் பதைப்பொடுங்க
வரனா ரழலுருவா யங்கே யளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ.

பிரமன் அரி என்ற இருவரும் தம் பேதைமையால்
பரமம் யாம் பரமம் என்றவர்கள் பதைப்பு ஒடுங்க
அரனார் அழல் உரு ஆய் அங்கே அளவு இறந்து
பரம்ஆகி நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ.

பிரகிருதியைத் தான் என்று உணர்வது அகங்காரம். அகங்காரத்தை அகற்றியவரே அகண்ட வஸ்துவில் ஒன்றுபடுகின்றனர்.

புராணக்கதை 1. பக்கம் 91ல் காண்க.

13. ஏழைத் தொழும்பனே னெத்தனையோ [காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
யூழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்க மாடாமோ.

ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலம்எல்லாம்
பாழுக்கு இறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதல் சிந்தாத நல்மணி வந்து என் பிறவித்
தாழைப் பறித்தவா தோள் நோக்கம் ஆடாமோ.

தொழும்பனேன்-தொண்டனேன். பாழுக்கு-பிரபஞ்சத்துக்கு. சிந்தாத-கெடாத. பிறவித்தாழை-பிறவியின் வேரை.

பிரபஞ்சமே கால சொரூபம். க்ஷரம் அல்லது அழியும் தன்மையுடைய அதைச் சார்ந்திருப்பவையெல்லாம் வீண். பரமனே அக்ஷரம், அவன் கேடு இலி, அவனைச் சாரும்பொழுது பிறவிவேர் களைந் தெடுக்கப்படுகிறது.

14. உரைமாண்ட வுள்ளொளி யுத்தமன்வந்
[துளம்புகலுங்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
யிரைமாண்ட விந்திரியப் பறவை யிரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்க மாடாமோ.

உரைமாண்ட உள்ஒளி உத்தமன் வந்து உளம்புகலும்
கரைமாண்ட காமம் பெரும் கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்து ஓடத்
துரைமாண்டவா பாடித் தோள் நோக்கம் ஆடாமோ.

உரைமாண்ட-வாசாம் அகோசரம், சொல்லுக்கு அப்பாற்பட்ட. கரைமாண்ட-கரைகாணாத. இரைமாண்ட-விஷயங்களை இழந்த. இரிந்து-கெட்டு. துரைமாண்ட வாபாடி-ஜீவபோதம் இழந்த விதத்தைப் பாடி.

ஜோதிமயமான பரமன் சொல்லுக்கு அப்பாற்பட்டவன். அவன் என்னுள் பிரசன்னமானதும் கரைகாணாத ஆசைக்கடலைக் கடந்தேன். இந்திரியப் பறவைகளோ விஷயங்களின்றிக் கெட்டொழிந்தன. நான் என்னும் ஜீவபோதமும் போயிற்று.

மனதை அகண்டாகார விருத்தியில் செலுத்துவது பிரபஞ்சத்துக்கு அப்பாற் போவதற்கு உற்ற உபாயமாம். அகண்டத்தில் புலனாதற்கு ஒன்றுமில்லை. ஆதலால் பொறிகள் தாமாகவே அழிந்துபட்டுப்போகின்றன.

உபநி—59. பக்கம் 378ல் காண்க.

தில்லையில் அருளிய

16. திருப்பொன்னூசல்

அருட்சுத்தி

ஒப்புமை பற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா

1. சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
வேராரும் பொற்பலகை யேறி யினிதமர்ந்து
நாரா யணனறியா நாண்மலர்த்தா ளடியேற்
கூராகத் தந்தருளு முத்தர கோசமங்கை
யாரா வமுதி னருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச
[லாடாமோ.

சீர் ஆர் பவளம் கால் முத்தம் கயிறு ஆக
ஏர் ஆரும் பொன் பலகை ஏறி இனிது அமர்ந்து
நாராயணன் அறியா நாள் மலர்த்தாள் நாய் அடியேற்கு
ஊர் ஆகத் தந்தருளும் உத்தரகோசமங்கை
ஆரா அமுதின் அருள் தாள் இணை பாடிப்
போர் ஆர் வேல் கண்மடவீர் பொன் ஊசல் ஆடாமோ.

ஏர்-அழகு. ஊர்-வாழும் இடம். போர் ஆர் வேல்-போர்த் தொழில் அமைந்த வேல்.

வேல் போன்ற கண்களையுடைய பெண்களே, பவளம் முத்து பொன் ஆகியவைகளால் அலங்கரித்த ஊஞ்சல் ஆடுகையில் நமக்கு யாண்டும் இருப்பிடமாயிருக்கும் இறைவன் திருவடியைப் பாடுவோமாக. அது அகண்ட அமிர்த சொரூபம்.

2. மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்றங்கு தேவர்களுங் காணா மலரடிக
டேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்றெளிந்தங்
கூன்றங்கி நின்றுருக்கு முத்தர கோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ.

மூன்று அங்கு இலங்கு நயனத்தன் மூவாத
வான் தங்கு தேவர்களும் காணாமலர் அடிகள்

தேன் தங்கித் தித்தித்து அமுது ஊறித் தான்
[தெளிந்து அங்கு
ஊன் தங்கி நின்று உருக்கும் உத்தரகோசமங்கைக்
கோன் தங்கு இடைமருது பாடிக் குலம் மஞ்ஞை
போன்று அங்கு அனம் நடையீர் பொன் ஊசல்
[ஆடாமோ.

நயனத்தன்-கண்ணையுடையவன். குலம் மஞ்ஞை-மேலான மயில். அனம் நடையீர்-அன்ன நடை நடப்பவர்களே.

மயிலின் அழகையும் அன்னத்தின் நடையையும் படைத்துள்ள பெண்டிர்காள், முக்கண்ணனாய், பரமானந்த சொரூபியாய், நம் உடலை உருக்கி அருள்மயம் ஆக்குபவனாய் இருக்கும் இறைவனைப் போற்றுவோம்.

3. முன்னீறு மாதியு மில்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி யிமையோர்க டாநிற்பத்
தன்னீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி யுத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூச
[லாடாமோ.

முன் ஈறும் ஆதியும் இல்லான் முனிவர் குழாம்
பல் நூறு கோடி இமையோர்கள் தாம் நிற்பத்
தன் நீறு எனக்கு அருளித் தன் கருணை வெள்ளத்து
மன் ஊற மன்னும் மணி உத்தரகோசமங்கை
மின் ஏறும் மாடம் வியல் மாளிகை பாடிப்
பொன் ஏறு பூண் முலையீர் பொன் ஊசல் ஆடாமோ.

மன்-நினைக்கின்ற. குழாம்-கூட்டம். இமையோர்கள்-தேவர்கள். மன் ஊற-பெருமை சுரக்க. மன்னும்-நிலைபெற்ற. மின் ஏறும்-ஒளி மிகுந்த. வியல் மாளிகை பாடி-பெருமை யமைந்த மாளிகைகளைப் பாடி.

பக்தன் பக்குவமாவது ஆதியந்த மில்லாத பரமனோடு ஏகாந்தத்தில் நிகழ்கிறது. அவனுக்குச் சிவபோதம் என்னும் பரிசு வழங்குதல் பக்தர் கூட்டத்தில் பகிரங்கமாக நடைபெறுகிறது. மாணிக்கவாசகருக்கு இங்ஙனம் நிகழ்ந்தது.

4. நஞ்சமர் கண்டத்த னண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி யுத்தர கோசமங்கை
யஞ்சொலா டன்னேடுங் கூடி யடியவர்க
ணெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் றூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ.

நஞ்சு அமர் கண்டத்தன் அண்டத்தவர் நாதன்
மஞ்சு தோய் மாடம் மணி உத்தரகோசமங்கை
அம்சொலாள் தன்னேடும் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்று அமுதம் ஊறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பு அறுப்பான் தூய புகழ் பாடிப்
புஞ்சம் ஆர் வெள் வளையீர் பொன் ஊசல் ஆடாமோ.

மஞ்சு-மேகம். துஞ்சல்-சாதல். புஞ்சம்-தொகுதி.

சிவசக்தியை உள்ளத்தினுள் உணர்பவர்க்குப் பிறப்பு இறப்பு இல்லை.

5. ஆனே வலியோ வரிவையோ வென்றிருவர்
காணுக் கடவுள் கருணையினுற் றேவர்குழா
நாணுமே யுய்யவாட் கொண்டருளி நஞ்சுதனை
யூனுக வுண்டருளு முத்தர கோசமங்கைக்
கோனூர் பிறைச்சென்னிக் கூத்தன் குணம் [பரவிப்
பூணுர் வனமுலையீர் பொன்னூச லாடாமோ.

ஆனே அலியோ அரிவையோ என்று இருவர்
காணுக் கடவுள் கருணையினுல் தேவர் குழாம்
நாணுமே உய்ய ஆட்கொண்டருளி நஞ்சு தனை
ஊன் ஆக உண்டருளும் உத்தரகோசமங்கைக்
கோன் ஆர் பிறைச் சென்னிக் கூத்தன் குணம் பரவிப்
பூண் ஆர் வனம் முலையீர் பொன் ஊசல் ஆடாமோ.

அரிவையோ-பெண்ணே. நாணுமே - பயந்து அழியாமல். கோன் ஆர்-வளைவு உடைய. வனம்-அழகு.

சிவனை அணுகினவர்க்குக் கேடு நல்லுக மாறுகிறது.

6. மாதாடு பாகத்த னுத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையா னடியாருட்
கோதாட்டி நாயேனை யாட்கொண்டென் றொல்
[பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பாற்
போதாடு பூண்முலையீர் பொன்னூ சலாடாமோ.

மாது ஆடு பாகத்தன் உத்தரகோசமங்கைத்
தாது ஆடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோது ஆட்டி நாயேனை ஆட்கொண்டு என் தொல்
[பிறவித்
தீது ஓடாவண்ணம் திகழப் பிறப்பு அறுப்பான்
காதுஆடு குண்டலங்கள் பாடிக் கசிந்து அன்பால்
போது ஆடு பூண் முலையீர் பொன் ஊசல் ஆடாமோ.

தாது-பூவில் உள்ள பொடி, மகரந்தம். கோது ஆட்டி-குற்றம் களைந்து. தீது ஓடாவண்ணம்-கர்மம் வளராத விதத்தில். போது-மலர்.

இறைவன் அருளால் அடியவர்கள் கர்மபந்தனம் நீங்கப்பெற்று அருள்துறையில் முன்னேறுகின்றனர்.

7. உன்னற் கரியதிரு
வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த
மாமறையோன் றன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப்
பாவங்கள் பற்றறுப்பா
னன்னத்தின் மேலேறி
யாடுமணி மயில்போ
லென்னத்த னென்னையுமாட்
கொண்டா னெழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர்
பொன்னூச லாடாமோ.

உன்னற்கு அரிய திரு
உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்து இருந்த
மா மறையோன் தன் புகழே
பன்னிப் பணிந்து இறைஞ்சப்
பாவங்கள் பற்று அறுப்பான்
அன்னத்தின் மேல் ஏறி
ஆடும் அணி மயில் போல்
என் அத்தன் என்னையும்
ஆட்கொண்டான் எழில் பாடிப்
பொன் ஒத்த பூண் முலையீர்
பொன் ஊசல் ஆடாமோ.

உன்னற்கு-எண்ணுதற்கு. மன்னி-நிலைபெற்று. பன்னி-பல தடவை பேசி.

திருவுத்தரகோசமங்கையில் எழுந்தருளிய வேதியன், வணங்குபவர் பாபத்தைப் போக்குபவன், அழகே வடிவெடுத்த சிவன் உறவு கொண்டாடுபவர்க்கெல்லாம் நெருங்கிய சொந்தமாகிறான்.

8. கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால வமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூச லாடாமோ.

கோலம் வரைக் குடுமி வந்து குவலயத்துச்
சால அமுது உண்டு தாழ் கடலின் மீது எழுந்து
ஞாலம் மிகப் பரி மேற்கொண்டு நமை ஆண்டான்
சீலம் திகழும் திரு உத்தரகோசமங்கை
மாலுக்கு அரியானை வாய்ஆர நாம் பாடிப்
பூலித்து அகம் குழைந்து பொன் ஊசல் ஆடாமோ.

கோலம் வரைக்குடுமி-அழகிய கயிலை மலையின் உச்சி. ஞாலம்-மிகப் பரிமேற்கொண்டு-உலகம் உய்தற்பொருட்டுக் குதிரைப் பாகனாக வந்து. பூலித்து-மகிழ்ச்சியடைந்து.

கயிலையினின்று உலகுக்கு எழுந்தருளி உயிர்கள் உய்யும்படி கடல் நஞ்சை அமுது பண்ணியவன் குதிரையின்மேல் வந்து நம்மை ஆண்டருளினன்.

9. தெங்குலவு சோலைத்
திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித்
தனியுருவம் வந்தருளி
யெங்கள் பிறப்பறுத்திட்
டெந்தரமு மாட்கொள்வான்
பங்குலவு கோதையுந்
தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச்
சடையான் குணம் பரவிப்
பொங்குலவு பூண்முலையீர்
பொன்னூச லாடாமோ.

தெங்கு உலவு சோலைத்
திரு உத்தரகோசமங்கை
தங்கு உலவு சோதித்
தனி உருவம் வந்தருளி
எங்கள் பிறப்பு அறுத்திட்டு
எம் தரமும் ஆட்கொள்வான்
பங்கு உலவு கோதையும்
தானும் பணி கொண்ட
கொங்கு உலவு கொன்றைச்
சடையான் குணம் பரவிப்
பொங்கு உலவு பூண் முலையீர்
பொன் ஊசல் ஆடாமோ.

தெங்கு உலவு-தென்னை மரங்கள் நிறைந்த. உலவு தாவி சோதி-விளங்குகின்ற ஒப்பற்ற ஜோதி. எம் தரமும்-எம்போன்ற சாமானியமானவரையும். கொங்கு உலவு-மணம் வீசுகின்ற. பொங்கு உலவு-விளக்கம் பொருந்திய.

அருளுக்குப் பாத்திரமாதற்கு அதிகாரி பேதமில்லை. இறைவன் யாரைவேண்டுமானாலும் ஆட்கொள்வான். அவனுடைய மகிமைகளைப் புகழ்ந்து பொன்னூசலாடுவோம்.

தில்லையில் அருளிய

17. அன்னைப்பத்து

ஆத்தும பூரணம்

கலிவிருத்தம்

1. வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையின ரன்னே யென்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கு
நாதரிந் நாதனு ரன்னே யென்னும்.

வேதம் மொழியர் வெள் நீற்றர் செம் மேனியர்
நாதம் பறையினர் அன்னே என்னும்
நாதம் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதர் இந் நாதனர் அன்னே என்னும்.

அன்னே-*அம்மே.* நாதப்பறையினர்-*நாதப்பிரம்மம், ஓங்கார மூர்த்தி.*

சிவன் வேதமொழியன், வெண்ணீறு பூசியவன், ஓசை வடிவினன் என்று ஒரு சிறு குழந்தை தன் தாயிடம் சொல்லுகிறது.

2. கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலின
ருண்ணின் றுருக்குவ ரன்னே யென்னு
முண்ணின் றுருக்கி யுலப்பிலா வானந்தக்
கண்ணீர் தருவரா லன்னே யென்னும்.

கண் அஞ்சனத்தர் கருணைக் கடலினர்
உள் நின்று உருக்குவர் அன்னே என்னும்
உள் நின்று உருக்கி உலப்பு இலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும்.

அஞ்சனத்தர்-*மை பூசியவர்.* உலப்பு இலா-*வற்றாத.*

உள்ளம் அருள் நாட்டம் கொண்டு உருகுவது பேரானந்தத்தைப் பெறுதற்கு உற்ற உபாயமாம்.

3. நித்த மணாளர் நிரம்ப வழகியர்
சித்தத் திருப்பரா லன்னே யென்னுஞ்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
யத்தரா னந்தரா லன்னே யென்னும்.

நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத்து இருப்பரால் அன்னே என்னும்
சித்தத்து இருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும்

நித்தமணாளர்-யாண்டும் மணக்கோலத்தில் இருப்பவர்.

பரத்தைச் சார்ந்துள்ள மனதுக்கு யாண்டும் இளமையும் அழகும் ஆனந்தமும் உண்டு.

4. ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேட மிருந்தவா றன்னே யென்னும்
வேட மிருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடு மிதுவென்னே யன்னே யென்னும்.

ஆடு அரப் பூண் உடைத் தோல் பொடிப் பூசிற்று ஓர்
வேடம் இருந்த ஆறு அன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டு கண்டு என் உள்ளம்
வாடும் இது என்னே அன்னே என்னும்.

ஆடு அரப்பூண்-படமெடுத்து ஆடும் பாம்பாகிய ஆபரணம். வாடும்-அதில் நாட்டம் கொள்ளவில்லையே என்று வருந்தும்.

பாம்பும் புலித்தோலும் உடைய நீறு பூச்சு ஆண்டியைக் கண்டு சிறுர் அஞ்சுவர். ஆனால் சிவ பக்தி உடையவர் அச்சத்தை வெல்லுவர்.

5. நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரா லன்னே யென்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
யாண்டன்பு செய்வரா லன்னே யென்னும்.

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டி நல் நாடரால் அன்னே என்னும்
பாண்டி நல் நாடர் பரந்து எழு சிந்தையை
ஆண்டு அன்பு செய்வரால் அன்னே என்னும்.

கரத்தர்-கையையுடையவர். நெறிதரு-நெருங்கிய. குஞ்சியர்-தலைமயிரை உடையவர்.

விஷயங்களில் அலைந்து திரியும் மனது சிவசொரூப தியானத்தில் அடங்கி ஒருமுகப்படுகிறது.

6. உன்னற் கரியசீ ருத்தர மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சி லன்னே யென்னும்
மன்னுவ தென்னெஞ்சின் மாலயன் காண்கிலா
ரென்ன வதிசய மன்னே யென்னும்.

உன்னற்கு அரிய சீர் உத்தர மங்கையர்
மன்னுவது என் நெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவது என் நெஞ்சில் மால் அயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும்.

உன்னற்கு-எண்ணுதற்கு. மன்னுவது-நிலைத்திருப்பது.

நெஞ்சில் நிலைந்துள்ள சிவனைப் புறத்தில் தேடித் தட்டழிதல் வேண்டாம்.

7. வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்த ரன்னே யென்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேற்கொண்டென்
னுள்ளங் கவர்வரா லன்னே யென்னும்.

வெள்ளைக் கலிங்கத்தர் வெண் திருமுண்டத்தர்
பள்ளிக் குப்பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரி மேல்கொண்டு என்
உள்ளம் கவர்வரால் அன்னே என்னும்.

கலிங்கத்தர்-ஆடையை உடையவர். வெண்திரு முண்டத்தர்-மூன்று வரிகளாக அணிந்த திருநீற்றையுடையவர். பள்ளிக்குப் பாயத்தர்-துறவியர் அணியும் நீண்ட சட்டையணிந்தவர்; அரசர் குதிரையேற்றத்தில் அணியும் சட்டையணிந்தவர். பாய்பரி-பாய்ந்து போகும் குதிரை.

சிவனுர் எந்த வேடத்தில் வந்தாலும் அவர் மாந்தர் உள்ளத்தைக் கவர வல்லவராம்.

8. தாளி யறுகினர் சந்தனச் சாந்தின
ராளெம்மை யாள்வரா லன்னே யென்னு
மாளெம்மை யாளு மடிகளார் தங்கையி
ருள மிருந்தவா றன்னே யென்னும்.

தாளி அறுகினர் சந்தனம் சாந்தினர்
ஆள் எம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆள் எம்மை ஆளும் அடிகளார் தம் கையில்
தாளம் இருந்த ஆறு அன்னே என்னும்.

தாளி அறுகினர்-தாளிக் கொடியையும் அறுகம் புல்லையும் மாலையாக அணிந்தவர். தாளம்-காலத்தை அறுதியிடும் ஒலிக் கருவி. ஜாலரா.

கால தத்துவமானது காலத்துக்கும் அப்பால் உள்ள சிவனுர் கையில் அடங்கியுள்ளது.

9. தையலோர் பங்கினர் தாபத வேடத்த
ரையம் புகுவரா லன்னே யென்னு
மையம் புகுந்தவர் போதலு மென்னுள்ளம்
நையுமிது வென்னே யன்னே யென்னும்

தையல் ஓர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்து அவர் போதலும் என் உள்ளம்
நையும் இது என்னே அன்னே என்னும்.

தையல்-பெண், உமை. தாபத வேடத்தர்-தவவேடம் பூண்டவர்.

சிவனுர் பிக்ஷாடனராய் வருவது உலக வாழ்க்கை அநித்தியம் என்பதை உணர்த்தி, உயிர்களை உய்வித்தல் பொருட்டேயாம்.

10. கொன்றை மதியமுங் கூவிள மத்தமுந்
துன்றிய சென்னிய ரன்னே யென்னுந்
துன்றிய சென்னியின் மத்தமுன் மத்தமே
யின்றெனக் கானவா றன்னே யென்னும்.

கொன்றை மதியமும் கூவிளம் மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம் உன்மத்தமே.
இன்று எனக்கு ஆன ஆறு அன்னே என்னும்.

மதியமும்-திங்களும். கூவிளம்-வில்வம். மத்தம்-ஊமத்தம் பூவும். துன்றிய-நெருங்கிய. உன்மத்தம்-முதிர்ந்த பித்து.

இறைவன் முடியில் கொன்றைப்பூவும், பிறைச் சந்திரனும், வில்வமும், ஊமத்தம் பூவும் நெருங்கியமைந்துள்ளன. அக்கோலத்தைப் பார்க்கும் பக்தர்களுக்குப் பக்தி என்னும் பித்தம் முதிர்கிறது.

தில்லையில் அருளிய

18. குயிற்பத்து

ஆத்தும இரக்கம்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

கோத்தும்பி, குயில், கிளி ஆகியவைகளோடு உறவாடுகிற முறையில் பரமனது பெருமையைப் போற்றுதலில் கவிதை ரஸம் மிளிர்கிறது. வெறும் சொல் அழகுக்கேனும் இவைகளை ஓதுவது ஒவ்வும். பின்பு பக்தி வளர்ச்சிக்கோ இவைகள் ஒப்பற்ற அருள் விருந்தாம்.

1. கீத மினிய குயிலே
        கேட்டியே லெங்கள் பெருமான்
    பாத மிரண்டும் வினவிற்
        பாதாள மேழினுக் கப்பாற்
    சோதி மணிமுடி சொல்லிற்
        சொல்லிறந்து நின்ற தொன்மை
    யாதி குணமொன்று மில்லா
        னந்த மிலான்வரக் கூவாய்.

கீதம் இனிய குயிலே
    கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவின்
    பாதாளம் ஏழினுக்கு அப்பால்

உபநிஷத் மந்த்ரம் —97.

यस्मात्परं नापरमस्ति किञ्चित् यस्मान्नाणीयो न ज्यायोऽस्ति कश्चित् ।
वृक्ष इव स्तब्धो दिवि तिष्ठत्येकस्तेनेदं पूर्णं पुरुषेण सर्वम् ॥

யஸ்மாத்பரம் ந பரமஸ்தி கிஞ்சித்
    யஸ்மான்ஞணீயோ ந ஜ்யாயோऽஸ்தி கஸ்சித் ।
வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேகஸ்தேனேதம்
    பூர்ணம் புருஷேண ஸர்வம் ॥

(மஹாநாராயணோபநிஷதம் 12-13)

यस्मात् யஸ்மாத் யாரைக்காட்டிலும் परम् பரம் மேலானது अपरं किंचित् அபரம் கிஞ்சித் வேறானது ஏதும் न अस्ति ந அஸ்தி இல்லை यस्मात् யஸ்மாத் யாரைக்காட்டிலும் अणीयः

சோதி மணிமுடி சொல்லின்
சொல் இறந்து நின்ற தொன்மை
ஆதி குணம் ஒன்றும் இல்லான்
அந்தம் இலான் வரக் கூவாய்.

புலப்படுகிற பிரபஞ்சமாகவும் புலன்களுக்கு அப்பாற்பட்டவனு கவும் இருப்பவன் பரமன் ஒருவனே. அவனுக்கு அன்னியமாக ஒன்றுமில்லை.

மேல் தோல், சதைப்பற்று, விதை ஆகிய அனைத் தும் கூடியது பழம். அங்ஙனம் ஜகத், ஜீவன், பரம் ஆகிய எல்லாம் சேர்ந்தது சிவன். எந்த நிலையில் எத னோடு நாம் தொடர்வு கொண்டிருந்தாலும் அது உண்மை யில் இறைவனோடு கொண்டுள்ள தொடர்வாம்.

2. ஏர்தரு மேழுல கேத்த
வெவ்வுரு வுந்தன் னுருவா
யார்கலி சூழ்தென் னிலங்கை
யழகமர் வண்டோ தரிக்குப்

அணீய: மிக நுண்ணியது न ந இல்லை कश्चित् கஸ்சித் யாருமே ज्यायः ஜ்யாய: பெரியவர் न अस्ति ந அஸ்தி இல்லை एकः ஏக: அவர் தனிப்பொருள் वृक्षः इव வ்ருக்ஷ: இவ விருக்ஷம் போன்று स्तब्धः ஸ்தப்த: உறுதி பெற்றவர் दिवि திவி- வான்மகிமையில் तिष्ठति திஷ்டதி நிலைத்துநிற்கிறார் तेन पुरुषेण தேன புருஷேண அந்தப் பரம புருஷனால் इदम् सर्वं இதம் ஸர்வம் இவையாவும் पूर्णं பூர்ணம் நிறைந்திருக்கின்றன.

யாரைக் காட்டிலும் மேலானதும் வேறானதும் ஏதும் இல்லையோ, யாரைக்காட்டிலும் நுண்ணியதோ பெரியதோ ஏதுமில்லையோ அவர் தனிப்பொருள். விருக்ஷம் போன்று அவர் உறுதி பெற்றவர். வான் மகிமையில் அவர் நிலைத்து நிற்கிறார்; அந்தப் பரம புருஷனால் இவையாவும் நிறைந்திருக்கின்றன.

சேதனம் அசேதனம், சரம் அசரம், ஞானபூமி அக்ஞான பூமி, அடி முடி ஆகிய இத்தனையுமாயிருப்பவர் அப்பரமாத்மன் ஒருவரேயாம்.

பேரரு ளின்ப மளித்த
பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே
தென்பாண்டி நாடனைக் கூவாய்.

ஏர் தரும் ஏழ் உலகு ஏத்த
எவ்உருவும் தன் உருஆய்
ஆர்கலி சூழ் தென் இலங்கை
அழகு அமர் வண்டோதரிக்குப்
பேர் அருள் இன்பம் அளித்த
பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயால் குயிலே
தென் பாண்டி நாடனைக் கூவாய்.

ஏர்-அழகு. ஆர்கலி-முழங்கும் கடல். வண்டோதரி-ராவணன் மனைவி.

உயிர்கள் அனைத்தும் இறைவனையே ஏதேதோ விதங்களில் ஏத்துகின்றன. முறையாக ஏத்துபவர் வண்டோதரி போன்று யாராயினும் அவர் அருள் இன்பம் எய்துகின்றனர்.

3. நீல வுருவிற் குயிலே நீண்மணி மாட நிலாவுங்
கோல வழகிற் றிகழுங் கொடிமங்கை
[யுள்ளுறை கோயிற்
சீலம் பெரிது மினிய திருவுத் தரகோச மங்கை
ஞாலம் விளங்க விருந்த நாயக னைவரக் கூவாய்.

நீல உருவின் குயிலே நீள் மணி மாடம் நிலாவும்
கோலம் அழகின் திகழும் கொடி மங்கை உள்உறை
[கோயில்
சீலம் பெரிதும் இனிய திரு உத்தரகோசமங்கை
ஞாலம் விளங்க இருந்த நாயகனை வரக் கூவாய்.

மங்கை-உமாதேவி.

சிவசக்தியின் சான்னித்தியம் இருக்குமிடங்களெல்லாம் அழகு நிறைந்த இடங்களாம்.

4. தேன்பழச் சோலை பயிலுஞ்
சிறுகுயி லேயிது கேணீ
வான்பழித் திம்மண் புகுந்து
மனிதரை யாட்கொண்ட வள்ள

லூன்பழித் துள்ளம் புகுந்தென்
னுணர்வது வாய வொருத்தன்
மான்பழித் தாண்டமென் னேக்கி
மணுளனை நீவரக் கூவாய்.

தேன் பழம் சோலை பயிலும்
சிறு குயிலே இதுகேள் நீ
வான் பழித்து இம் மண் புகுந்து
மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன் பழித்து உள்ளம் புகுந்து என்
உணர்வு அது ஆய ஒருத்தன்
மான் பழித்து ஆண்ட மென் நோக்கி
மணுளனை நீ வரக் கூவாய்.

பயிலும்-தங்கும்.

அதீதத்தில் இருக்கும் பரமன் அந்தர்யாமியாவது பக்தர்களது உடல் உணர்வை ஒழித்து உள் ஒளி பெருக்குதல் பொருட்டேயாம்.

5. சுந்தரத் தின்பக் குயிலே
சூழ்சுடர் ஞாயிறு போல
வந்தரத் தேநின் றிழிந்திங்
கடியவ ராசை யறுப்பான்
முந்து நடுவு முடிவு
மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச்
சேவக னைவரக் கூவாய்.

சுந்தரத்து இன்பம் குயிலே சூழ் சுடர் ஞாயிறு போல
அந்தரத்தே நின்று இழிந்து இங்கு அடியவர் ஆசை
[அறுப்பான்
முந்தும் நடுவும் முடிவும் ஆகிய மூவர் அறியாச்
சிந்துரம் சேவடியானைச் சேவகனை வரக் கூவாய்.

அந்தரத்தே-வானத்திலே. சிந்துரம்-சிவப்பு நிறம். சேவகனை-காப்பாற்றுபவனை.

பரமனது ஞானப்பிரகாசமானது அக்ஞான இருளில் உருவெடுத்த ஆசைகளை அழிக்கிறது.

6. இன்பந் தருவன் குயிலே
யேழுல கும்முழு தாளி
யன்ப னமுதளித் தூறு
மானந்தன் வான்வந்த தேவ
னன்பொன் மணிச்சுவ டொத்த
நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே
கோகழி நாதனைக் கூவாய்.

இன்பம் தருவன் குயிலே
ஏழ் உலகும் முழுது ஆளி
அன்பன் அமுது அளித்து ஊறும்
ஆனந்தன் வான் வந்த தேவன்
நல் பொன் மணிச் சுவடு ஒத்த
நல்பரிமேல் வருவானைக்
கொம்பின் மிழற்றும் குயிலே
கோகழி நாதனைக் கூவாய்.

ஆளி-ஆளுகின்றவன். சுவடு-அடையாளம். கொம்பின்-மரக்கிளைகளில். மிழற்றும்-கூவும்.

அகண்ட சிதாகாசமாய் இருப்பவன் அடியார்களை ஆட்கொள்ளுதல் பொருட்டு மானுட உருவெடுத்து வருகிறான்.

7. உன்னை யுகப்பன் குயிலே
யுன்றுணைத் தோழியு மாவன்
பொன்னை யழித்தநன் மேனிப்
புகழிற் றிகழு மழகன்
மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப்புயங் கன்வரக் கூவாய்.

உன்னை உகப்பன் குயிலே
உன் துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்த நல் மேனிப்
புகழின் திகழும் அழகன்

மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப் புயங்கன் வரக் கூவாய்.

உகப்பன்-விரும்புவேன். பரிமிசை-குதிரையின்மேல். மன்னன்-நிலைபேறு உடையவன். தென்னவன்-பாண்டியன். சேரலன்-சேரன். சீர்ப்புயங்கன்-பாம்புபோன்று ஒய்யாரமாக அசைந்தும் நெளிந்தும் நடனம் புரிபவன்.

குயிலே பக்தி பூணுதலில் நாம் பரஸ்பர நட்புக்கொள்வோம். நித்தியமாயுள்ள பரமனது புகழ்பெற்ற அழகோ பொன்னைத் தோற்கடிக்க வல்லது. பக்தனுக்குப் பரிந்து அவன் குதிரைப் பாகனாக வந்தான். மூவேந்தர்க்கும் அவன் வேந்தன்; புயங்கக்கூத்தன்.

8. வாவிங்கே நீகுயிற் பிள்ளாய்
மாலொடு நான்முகன் றேடி
யோவியவ ருன்னி நிற்ப
வொண்டழல் விண்பிளந் தோங்கி
மேவியன் றண்டங் கடந்து
விரிசுட ராய்நின்ற மெய்யன்
தாவி வரும்பரிப் பாகன்
றாழ்சடை யோன்வரக் கூவாய்.

வா இங்கே நீ குயில் பிள்ளாய்
மாலொடு நான்முகன் தேடி
ஓவி அவர் உன்னி நிற்ப
ஒண் தழல் விண் பிளந்து ஓங்கி
மேவி அன்று அண்டம் கடந்து
விரி சுடர் ஆய் நின்ற மெய்யன்
தாவி வரும் பரிப் பாகன்
தாழ் சடையோன் வரக் கூவாய்.

ஓவி-சோர்வடைந்து நீங்கி. உன்னி-எண்ணிப்பார்த்து. மேவி-மேலும் உயர்ந்து.

அரியும் பிரமனும் அறிந்துகொள்ள முடியாத அகண்ட வஸ்து வானவன் பக்தன் பொருட்டு விரைந்து செல்லும் குதிரைப்பாகனாக வந்தான்.

9. காருடைப் பொன்றிகழ் மேனிக்
கடிபொழில் வாழுங் குயிலே
சீருடைச் செங்கம லத்திற்
றிகழுரு வாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப்
பாச மறுத்தெனை யாண்ட
வாருடை யம்பொனின் மேனி
யமுதினை நீவரக் கூவாய்.

கார் உடைப் பொன் திகழ் மேனிக்
கடி பொழில் வாழும் குயிலே
சீர் உடைச் செம் கமலத்தில்
திகழ் உரு ஆகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப்
பாசம் அறுத்து எனை ஆண்ட
ஆர் உடை அம்பொனின் மேனி
அமுதினை நீ வரக் கூவாய்.

கார்-கருமை. கடி-மணம். ஆர்-ஆத்திமலர்.

அடிமுடி காணமுடியாத அகண்ட வஸ்துவின் சான்னித்தியம் சிறப்பாகத் தூய ஹிருதயகமலத்தில் திகழ்கிறது. அதை அனுபூதியில் அறிபவர்க்கு உலகப்பற்று ஒழிகிறது. அன்னவர் மரணமிலாப் பெருநிலை யெய்துகின்றனர்.

10. கொந்தண வும்பொழிற் சோலைக்
கூங்குயி லேயிது கேணீ
யந்தண னாகிவந் திங்கே
யழகிய சேவடி காட்டி
யெந்தம ராமிவ னென்றிங்
கென்னையு மாட்கொண் டருளுஞ்
செந்தழல் போற்றிரு மேனித்
தேவர் பிரான்வரக் கூவாய்.

கொந்து அணவும் பொழில் சோலைக்
கூம் குயிலே இது கேள் நீ
அந்தணன் ஆகி வந்து இங்கே
அழகிய சேவடி காட்டி

எம் தமர் ஆம் இவன் என்று இங்கு
என்னையும் ஆட்கொண்டருளும்
செம் தழல் போல் திருமேனித்
தேவர் பிரான் வரக் கூவாய்,

கொந்து-பூங்கொத்து. அளாவும்-மேல் நோக்கிச் செல்லும். கூம்-கூவும். தமர்-உறவினர்.

அந்தப் பொருளாகிய சிவன் பிரபஞ்சத்துக்குரிய அழகிய வடிவெடுத்து வந்து என்னை ஆட்கொண்டு என்னைத் தனக்கே உரியவன் ஆக்கினன்.

தில்லையில் அருளிய

19. திருத்தசாங்கம்

அடிமை கொண்ட முறைமை

நேரிசை வெண்பா

தசாங்கம் என்னும் சொல் பத்து அங்கங்கள் அல்லது கூறுகள் எனப்பொருள்படுகிறது. அரசன் ஒருவனை அறிமுகப்படுத்தும் முறையில் அவனுக்குரிய பத்து இயல்புகளை இயம்புவது வழக்கம். அவையாவன: பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, புரவி, படை, முரசு, தார், கொடி என்பனவாம். இந்த ஐதிகத்தை அண்ணல் தமது இறைவன்பால் கையாளுகிறார். இப்பதிகத்தில் உள்ள பத்துப் பாடல்களில் இறைவனுடைய பத்துப் பெருமைகளை அவர் எடுத்துப் போற்றுகிறார்.

1. ஏரா ரிளங்கிளியே யெங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமந் தேர்ந்துரையாய்—ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் [செப்புவபோ
லெம்பெருமான் றேவர்பிரா னென்று.

ஏர் ஆர் இளம் கிளியே எங்கள் பெருந்துறைக் கோன்
சீர் ஆர் திரு நாமம் தேர்ந்து உரையாய்—ஆரூரன்

செம்பெருமான் வெள்மலரான் பால்கடலான் செப்புவ
[போல்
எம்பெருமான் தேவர் பிரான் என்று.

ஏர்-அழகு. வெள்மலரான்-பிரம்மதேவன். பாற்கடலான்-மகாவிஷ்ணு.

எம் பெருமான் பெயர் மகாதேவன்.

2. ஏதமிலா வின்சொன் மரகதமே யேழ்பொழிற்கு
நாதனமை யாளுடையா னுடுரையாய்- காதலவர்க்
கன்பாண்டு மீளா வருள்புரிவா னுடென்றுந்
தென்பாண்டி நாடே தெளி.

ஏதம் இலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதன் நமை ஆளுடையான் நாடு உரையாய்—
[காதலவர்க்கு
அன்பு ஆண்டு மீளா அருள்புரிவான் நாடு என்றும்
தென் பாண்டி நாடே தெளி.

ஏதம் - குற்றம். மரகதமே - பச்சைமணி போன்ற கிளியே. ஏழ்பொழிற்கும்-ஏழு உலகங்களுக்கும்.

அவனுடைய நாடு தென்பாண்டி நாடே.

அகிலாண்டமும் அவனுடைய நாடு. ஆனல் பக்தியின் பான்மையானது அவனுக்குச் சிறப்பாக ஓர் இடம் தருகிறது.

3. தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளு
மாதாடும் பாகத்தன் வாழ்பதியென்—கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற்கொண்
[டாடு
முத்தர கோசமங்கை யூர்.

தாது ஆடு பூஞ்சோலைத் தத்தாய் நமை ஆளும்
மாது ஆடும் பாகத்தன் வாழ் பதி என்—கோதாட்டிப்
பத்தர் எல்லாம் பார்மேல் சிவபுரம் போல் கொண்டாடும்
உத்தரகோசமங்கை ஊர்.

தாது-மகரந்தம். தத்தாய்-கிளியே. கோதாட்டி-சீராட்டி.

சிவனுர் ஊர் திரு உத்தரகோசமங்கை.

தத்துவப்படி பக்தர் உள்ளம் அவனுடைய ஊர் ஆகிறது.

4. செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் [சிந்தைசே
ரையன் பெருந்துறையா ஞறுரையாய்— [தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியு
மானந்தங் காணுடையா ஞறு.

செய்ய வாய்ப் பைஞ் சிறகின் செல்வீ நம் சிந்தை சேர்
ஐயன் பெருந்துறையான் ஆறு உரையாய்—தையலாய்
வான் வந்த சிந்தை மலம் கழுவ வந்து இழியும்
ஆனந்தம் காண் உடையான் ஆறு.

செய்யவாய்-சிவந்த மூக்கு. செல்வீ-கிளியே. வான் வந்த-பெருமை பொருந்திய.

இறைவனது ஆறு ஆனந்தம்.

ஸ்தூலமாகப் பார்க்குமிடத்து சிவனது ஆறு கங்கை. ஆதலால் அவனுக்கு கங்காதரன் என்னும் பெயர் வந்தது. தத்துவபூர்வமாக ஆனந்தமே அவனுக்கு நதி ஆகிறது. சிவானந்தத்தில் திளைத்திருக்குமளவு சாதகனது சித்தம் சுத்தியடைகிறது. விசனமோ அக்ஞான மலத்தின் விளைவு. அநித்தியமான பிரபஞ்சத்தை நித்தியமானதென்று எண்ணுவது அக்ஞானம்.

5. கிஞ்சுகவா யஞ்சுகமே கேடில் பெருந்துறைக் [கோன்
மஞ்சன் மருவு மலைபகராய்—நெஞ்சத்
திருளகல வாள்வீசி யின்பமரு முக்தி
யருளுமலை யென்பதுகா ணுய்ந்து.

கிஞ்சுகவாய் அம் சுகமே கேடு இல் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவு மலை பகராய்—நெஞ்சத்து
இருள் அகல வாள் வீசி இன்பு அமரும் முத்தி
அருளும் மலை என்பதுகாண் ஆய்ந்து.

கிஞ்சுக வாய்-முருக்கம் பூபபோன்ற வாய். அஞ்சுகமே-அழகிய கிளியே. மஞ்சன்-அழகன். மருவும்-உறைகின்ற. வாள்வீசி-ஒளி வீசி.

இமயமலையும் அதன் சிறந்த பகுதியாகிய கயிலையங்கிரியும் அவனது இருப்பிடம். மாறுட அமைப்பில் சுழுமுனைநாடி யென்னும் மகாமேரு அவனுடைய மலையாகிறது.

6. இப்பாடே வந்தியம்பு கூடுபுக லென்கிளியே
யொப்பாடாச் சீருடையா னூர்வதென்னே—
[யெப்போதுந்
தேன்புரையுஞ் சிந்தையராய்த் தெய்வப்பண்
[ணேத்திசைப்ப
வான்புரவி யூரு மகிழ்ந்து.

இப்பாடே வந்து இயம்பு கூடுபுகல் என் கிளியே
ஒப்பு ஆடாச் சீர் உடையான் ஊர்வது என்னே—
[எப்போதும்
தேன் புரையும் சிந்தையர் ஆய்த் தெய்வம் பண் ஏத்து
[இசைப்ப
வான் புரவி ஊரும் மகிழ்ந்து.

இப்பாடே-இவ்விடத்தே. கூடுபுகல்-கூட்டுக்குள்ளே போகாதே. ஒப்பு ஆடா-ஒப்பற்ற. ஊர்வது என்னே-ஊர்ந்து செல்லும் வாகனம் யாதோ. தேன்புரையும்-தேனை ஒத்த. வான் புரவி-சித் ஆகாசம் என்னும் குதிரை.

பரமசிவம் நிர்க்குண பிரம்மமாயிருக்கும் போது அவனுக்கு வாகனம் சித் ஆகாசமே. அவன் சகுண பிரம்மமாயிருக்கும்போது அவன் ரிஷப வாகனன். ஜீவர்கள் அனைவரும் அவனுக்கு வாகனமாகின்றனர்.

7. கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில்
[பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகராய்—யேற்ரு

ரழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங்
கழுக்கடைகாண் கைக்கொள் படை.

கோல் தேன் மொழிக் கிள்ளாய் கோதுஇல்
[பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படை பகராய்— ஏற்றார்
அழுக்கு அடையா நெஞ்சு உருக மும் மலங்கள் பாயும்
கழுக்கடை காண் கைக்கொள் படை.

கோல்தேன்-கொம்புத்தேன். கோது-குற்றம். படை-ஆயுதம். கழுக்கடை-சூலம்.

திரிசூலமே சிவனுருடைய ஆயுதம். அது ஞானத்தின் சின்னம். ஞானத்துக்கு நிகரான ஆயுதம் இல்லை. அஞ்ஞானத்தில் உதிக்கின்ற மும்மலங்களை அது அகற்றுகிறது.

8. இன்பால் மொழிக்கிள்ளா யெங்கள்
[பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கு முரசியம்பா—யன்பாற்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை

இன்பால் மொழிக் கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்
[கோன்
முன்பால் முழங்கும் முரசு இயம்பாய்—அன்பால்
பிறவிப் பகை கலங்கப் பேரின்பத்து ஓங்கும்
பரு மிக்க நாதம் பறை

முரசு-பறை, தம்பட்டம்.

நாத பிரம்மம் அல்லது ஒங்கார தத்துவமே சிவனாரது முரசு உடுக்கை அல்லது 'டமரு' அதற்குப் புறச் சின்னமாகிறது.

9. ஆய மொழிக்கிள்ளா யள்ளூறு மன்பர்பான்
மேய பெருந்துறையான் மெய்த்தாரென்—
[றீயவினை
நாளுமணு காவண்ண நாயேனை யாளுடையான்
றாளியறு காமுவந்த தார்.

ஆயமொழிக் கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான மெய்த் தார் என்—தீயவினை

நாளும் அணுகாவண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளி அறுகு ஆம் உவந்த தார்.

ஆயமொழி-ஆராய்ந்த மொழி. அள்ளூறும்-உள்ளம் உருகும். மெய்த்தார்-உண்மைக்கு ஒத்த மாலை. தாளி அறுகு-தாளியும் அறுகும் சேர்ந்த மாலை.

ஸ்தூல அமைப்பில் தாளிக்கொடியும் அறுகும் சேர்ந்தது அவன் அணியும் மாலை. உண்மையில் பிரபஞ்சத்துக்குரிய தத்துவங்கள் எல்லாம் சேர்ந்து அமைந்தது அவனுடைய மாலை.

10. சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக் [கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய்—சாலவு
மேதிலார் துண்ணென்ன மேல்விளங்கி யேர்காட்டுங்
கோதிலா வேறாங் கொடி.

சோலைப் பசும்கிளியே தூ நீர்ப்பெருந்துறைக் கோன்
கோலம் பொலியும் கொடி கூறாய்—சாலவும்
ஏதிலார் துண் என்ன மேல் விளங்கி ஏர் காட்டும்
கோது இலா ஏறு ஆம் கொடி.

ஏதிலார்-பகைவர். துண் என்ன-திடுக்கிடும்படி. ஏர் காட்டும்-அழகைக் காட்டுகின்ற. ஏறு-ரிஷபம், காளை.

சிவனுக்குரியது ரிஷப துவஜம் அல்லது காளைக்கொடி. அந்தந்தத் தெய்வத்துக்குரிய வாகனம் கொடியில் அமைவது முறை. ஜீவனைப் பரமன் தனக்குச் சொந்தமாக்குகிறான் என்பது அதன் கருத்து. அப்படிச் செய்வது அழகிய செயலாம். உபாசனை பண்ணுதவர்க்கு அக்கோட்பாடு ஏமாற்றத்தை உண்டுபண்ணுகிறது.

திருப்பெருந்துறையில் அருளிய

20. திருப்பள்ளி யெழுச்சி

திரோதானசுத்தி

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

இறைவனுடைய பஞ்ச கிருத்தியங்களுள் திரோதானம் என்பது ஒன்று. மறைத்தல் என அது பொருள் படுகிறது. சொரூப ஞானத்தைத் தமோகுணம் மறைத்திருக்கிறது. அதிகாலையில் எழுந்து திருப்பள்ளியெழுச்சி வாயிலாக இறைவணக்கம் செய்து வருகிறவர்களுக்குத் தமோகுணம் தெளிவடைகிறது. அச்செயல் திரோதான சுத்தி என்னும் தலைப்புப் பெறுகிறது.

1. போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை [மலர்கொண்
டேற்றிநின் றிருமுகத் தெமக்கருண் மலரு
மொழினகை கொண்டுநின் றிருவடி [தொழுகோஞ்
சேற்றிதழ்க் கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யேற்றுயர் கொடியுடை யாயெனை யுடையா
யெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

உபநிஷத் மந்த்ரம்—98.

स्वप्नान्तं जागरितान्तं चोभौ येनानुपश्यति ।
महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति ॥

ஸ்வப்நாந்தம் ஜாகரிதாந்தம் சோபௌ யேநாநுபச்யதி ।
மஹாந்தம் விபும் ஆத்மாநம் மத்வா தீரோ ந சோசதி ॥

(கடோபநிஷதம் 4-4)

स्वप्नान्तं ஸ்வப்நாந்தம் கனவுப்பொருள்களையும் जागरितान्तं च उभौ ஜாகரிதாந்தம் ச உபௌ விழிப்புநிலையில் காண்கிற பொருள்களும் ஆகிய இரண்டையும் येन अनुपश्यति யேன அநுபச்யதி எதைக்கொண்டு பார்க்கிறானே (तं தம் அந்த)

போற்றி என் வாழ் முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூம் கழற்கு இணை துணை மலர்
[கொண்டு
ஏற்றி நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகைகொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
ஏறு உயர் கொடி உடையாய் எனை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

இணை பூம் கழற்கு-இரண்டாகப் பொலிகின்ற திருவடிகளுக்கு. துணை-ஒத்த. ஏற்றி-ஏத்தி. ஏறு உயர் கொடி-எருது பொறிக்கப் பெற்ற கொடி.

என் உயிர்க்கு உயிரே, உனக்கு வணக்கம். பொழுது விடிந்தது. உன் பாத கமலங்களுக்கு ஒத்த மலர் தூவுகிறேன். அருளுக்கு அறிகுறியாக உன் முகவிலாசம் புன்னகை பூக்கிறது.

महान्तं विभुं आत्मानं மஹாந்தம் விபும் ஆத்மானம் எங்கும் நிறைந்துள்ள பெரிய பொருளாகிய ஆத்மனை मत्वा மத்வா அனுபூதியில் அறிந்து धीरः தீர: பேரறிஞன் न शोचति ந சோசதி துன்புறுவதில்லை.

கனவிலும் நனவிலும் பார்க்கப்படுபவைகளுக்கு ஆதாரமாயிருப்பது பெரிய பொருளாகிய பரமாத்மா. அந்தப் பரமாத்மனை அனுபூதியில் அறிகிற பேரறிவாளி துன்புறுவதில்லை.

ஜாக்கிரதம் சொப்பனம் சுஷுப்தி ஆகிய மூன்று அவஸ்தைகளுக்கும் ஆதாரமாயிருப்பது பரமாத்மன். அப்பெரிய பொருளுக்கு உறக்கம் கிடையாது. அதற்குத் திருப்பள்ளி எழுச்சி பண்ணுவது உபசாரத்துக்காக. அதன் மூலம் ஜீவாத்மன் மேலும் மேலும் சத்வகுணத்தில் ஓங்கி வளர்கிறான். சத்வகுணம் ஓங்குதற்கு ஏற்ப ஆத்ம போதம் அவனிடம் மேலோங்குகிறது. பரமாத்ம தத்துவத்தை அறிகிற பரிபாகம் வருகிறது.

சினிமாத்திரை சினிமாப்படங்களுக்கு ஆதாரமாயிருப்பதுபோன்று சித் அம்பரம் அல்லது பேரறிவுத் திரை

அதற்கு வசப்பட்டு உன்னை வழுத்துகிறோம். காளைக் கொடியை நீ தூக்கிப் பிடித்துள்ளாய். நீ என்னை உடையவன். துயில் எழுந்திருப்பாயாக.

2. அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போ
யகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரணிரை யறுபத முரல்வன விவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யருணிதி தரவரு மானந்த மலையே
யலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே.

அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த் திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ நயனம்
கடி மலர் மலர மற்று அண்ணல் அம் கண் ஆம்
திரள் நிரை அறுபதம் முரல்வன இவை ஓர்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே
அலை கடலே பள்ளி எழுந்தருளாயே.

அருணன்-சூரியன், சூரியனுடைய சாரதி. இந்திரன் திசை-கிழக்கு. நயனம்-கண். கடி-மணம். திரள்-கூட்டம். நிரை-வரிசை. அறுபதம்-ஆறு கால்களையுடைய வண்டு. முரல்வன-ரீங்காரம் செய்கின்றன. இவை ஓர்-இவையாவையும் எண்ணிப்பார்.

சூரியன் கிழக்கே வர இருள் நீங்கிற்று. சூரியோதயத்துக்கு ஒப்ப உன் முகத்தில் கருணை பொழிக. மலர் விரிவதற்கு ஒப்ப உன் கண்கள் துயில் எழுக வண்டுகள் ரீங்காரம் இடுதற்கு ஒப்ப நாங்கள் உன்னைப் போற்றுகிறோம். இதில் இறையே நீ திருவுள்ளம் செலுத்துக. நீ கருணாநிதிப் பர்வதமும் ஆனந்த சாகரமும் ஆவாய்.

கனவு நனவு உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தைகளுக்கும் ஆதாரமாயிருக்கிறது. மூன்று அவஸ்தைகளிலும் அப் பரமாத்மா கட்டுப்படுவதில்லை. இதை அறிகிற ஞானிக்குத் துன்பம் இல்லை. திருப்பள்ளி யெழுச்சி இதற்குச் சாதனமாகிறது.

3. கூவின பூங்குயில் கூவின் கோழி
குருகுக ளியம்பின வியம்பின சங்க
மோவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழற் ருளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரி யாயெமக் கெளியா
யெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

கூவின பூங் குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நல் செறி கழல் தாள் இணை காட்டாய்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
யாவரும் அறிவு அரியாய் எமக்கு எளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

குருகுகள்-பறவைகள். ஓவின-மங்கின. தாரகை-நக்ஷத்திரங்கள். தேவ-ஆத்மப் பிரகாசனே. நல்செறி கழல்தாள்-வீரக்கழல் பூண்டதும் சிரேயஸைத் தருவதுமாகிய திருவடி. யாவரும் அறிவு அரியாய் - உபாசிக்காதவர்களுக்கு விளங்காதவனே. எமக்கு எளியாய்-பக்தர்களாகிய எங்களுக்கு நன்கு விளங்குபவனே.

பறவைகள் கூவுகின்றன. நக்ஷத்திர ஒளி ஒடுங்குகிறது. உதயத்து ஒளி ஓங்குகிறது. தேஜோமயமானவனே, நலம் தரும் உன் திருவடியை எங்களுக்கு இனிது காட்டியருள்க. வழுத்தாதவர்களுக்கு நீ விளங்காதவன். பக்தர்களுக்கோ நீ இனிது விளங்குபவன். உனது சான்னித்தியம் ஓங்குக.

4. இன்னிசை வீணைய ரியாழின ரொருபா
லிருக்கொடு தோத்திர மியம்பின ரொருபாற்
றுன்னிய பிணைமலர்க் கையின ரொருபாற்
றொழுகைய ரழுகையர் துவள்கைய
[ரொருபாற்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபாற்
றிருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யென்னையு மாண்டுகொண் டின்னருள் புரியு
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

இன் இசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணை மலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டு இன் அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

இருக்கொடு-ரிக்வேதத்தோடு. துன்னிய பிணை மலர்-நெருக்கமாகக் கட்டப்பெற்ற பூமாலை. அழுகையர்-அழுபவர்கள். துவள் கையர்-உணர்ச்சியின் வேகத்தால் அசைபவர்கள்.

வீணை, யாழ் முதலிய இன்னிசைக் கருவிகளோடு கூடி ரிக் வேதம் முழங்குகிறது. பலர் பலப்பலவிதங்களில் உன்னைப் போற்றுகின்றனர், என்னையும் ஆட்கொள்ள எழுந்தருள்க.

5. பூதங்க டோறுநின் றாயெனி னல்லாற்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லாற்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கண் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியு
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

பூதங்கள் தோறும் நின்றாய் எனின் அல்லால்
போக்கு இலன் வரவுஇலன் என நினைப்புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டு அறியோம் உனைக் கண்டு அறிவாரைச்
சீதம் கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டு அருள்புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

பூதங்கள் தோறும்-உயிர்கள் அனைத்திடத்தும். புலவோர்-அறிஞர். ஏதங்கள்-மனதில் உள்ள குறைபாடுகள்.

நீ அனைத்துமாய் அவைகளுக்கு அப்பாலும் இருக்கிறாய் என்பதை வாசாஞானத்தால் அறிந்துள்ளோம். உன்னை சுவானுபூதியில் அறிவதற்கான மனத்தெளிவை உண்டு பண்ணுவாயாக.

6. பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரு
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யிப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியு
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

பப்புஅற வீடு இருந்து உணரும் நின் அடியார்
பந்தனை வந்து அறுத்தார் அவர் பலரும்
மைப்புஉறு கண்ணியர் மானுடத்து இயல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா
செப்புஉறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டு அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

பப்பு-பதைபதைப்பு. வீடு இருந்து-விடுதல் அல்லது துறவில் இருந்து. பந்தனை-பிறவிப்பிணி. மைப்புஉறு-மைத்தன்மை பொருந்திய. அணங்கின்-தெய்வப்பெண் ஆகிய உமாதேவியின். செப்பு-சிவப்பு.

உமாபதே, மனம் ஒடுங்கி, உலகப்பற்று ஒழிந்து வீடுபேறு அடையப்பெற்றவர்க்கு வழிபாடு வேண்டியதில்லை. ஆனால் அன்னவரும் உன்னை வழுத்துதலில் இன்பம் காண்பதற்குப் பெண் இயல்பாகிய பதிநாட்டத்தை விடாது பிடித்து வைத்திருக்கின்றனர். பிறவிக் கடலினின்று என்னை ஆட்கொள்பவனே பள்ளி எழுந்தருளாய்.

பக்திரஸத்தில் ஈடுபடுதற்காகவே ரிஷிபுங்கவர்கள் பிருந்தாவனத்தில் கோபிமார்களாக வந்து அவதரித்தார்கள் என்பது ஐதிகம்.

7. அதுபழச் சுவையென வமுதென வறிதற்
கரிதென வெளிதென வமரரு மறியா
ரிதுவவன் றிருவுரு விவனவ னெனவே
யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந் [தருளு
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னு
வெதுவெமைப் பணிகொளு மாறது கேட்போ
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே

அது பழம் சுவை என அமுது என அறிதற்கு
அரிது என எளிது என அமரரும் அறியார்
இது அவன் திரு உரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கு எழுந்தருளும்
மது வளர் பொழில் திரு உத்தரகோச
மங்கை உள்ளாய் திருப்பெருந்துறை மன்னு
எது எமைப் பணி கொளும் ஆறு அது கேட்போம்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

மது-தேன். பொழில்-சோலை.

கனிவகைகளின் சுவையும் தேவாமிர்தத்தின் இனிமையும் ஒன்றுகூடிச் சிவானந்தத்தை ஒருவாறு விளக்கியும் விளக்காமலும் இருக்கின்றன. தேவர்களாலும் அறியமுடியாத சிவனை யாரும் அறியமாட்டார் என்கின்றனர். மனபரிபாகம் ஆகாதவர்கள். ஆனால் மனம் தெளிந்த பக்தர்கள் அவனை அறிவது மிக எளிது என்கின்றனர். இனி உலகில் உள்ள இத்தனை வடிவங்களாகவும் இவைகளுக்கு அப்பாற்பட்டவனாகவும் அவன் இருக்கிறான். ஆன்றோர்களால் இங்ஙனம் இயம்பப்பெறுகிற ஈசா, நாங்கள் உனக்கு எப்படிப் பணிவிடை செய்வோம் என்னும் வழியைக் காட்டியருள்வாயாக.

8. முந்திய முதனடு விறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடி றொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி

யந்தண ஞுவதுங் காட்டிவந் தாண்டா
யாரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

முந்திய முதல் நடு இறுதியும் ஆனுய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்
பந்து அணே விரலியும் நீயும் நின் அடியார்
பழம் குடில் தொறும் எழுந்தருளிய பரனே
செம் தழல் புரை திருமேனியும் காட்டித்
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே.

பந்து அணே விரலியும்-விளேயாடும் பந்து பொருந்திய விரல் களேயுடைய அம்பிகையும். குடில்-சிறு வீடு. செம்தழல் புரை-சிவந்த தீயை ஒத்த.

ஆதிமூலமே! அனைத்தும் உன்னிடத்தே தோன்றி, இருந்து ஒடுங்குகின்றன. உனது அகண்டாகாரத்தை பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளே அறியார். பின்பு வேறு யார் அறிவார்; அம்பிகை சமேதனுய் நீ எல்லார் உள்ளத்திலும் எழுந் தருளியுள்ளாய். நீ தீப்போன்ற திருமேனியன். திருப்பெருந்துறை யில் என்னை ஆட்கொள்ள வந்த அந்தணன். அழிவு இல்லாத அரிய பொருளே, பள்ளி யெழுந்தருள்க.

9. விண்ணகத் தேவரு நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படியோங்கண்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்டிருப் பெருந்துறை யாய்வழி யடியோங்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியா
ரெண்ணகத் தாயுல குக்குயி ராஞு
யெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே உன தொழும்பு அடியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே
வண் திருப்பெருந்துறையாய் வழி அடியோம்.

கண் அகத்தே நின்று களிதரு தேனே
கடல் அமுதே கரும்பே விரும்பு அடியார்
எண் அகத்தாய் உலகுக்கு உயிர் ஆனாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

நண்ணவும் மாட்டா-அடைய முடியாத. வண்-வள், வளம் நிறைந்த. கண் அகம், எண் அகம்-ஆகிய இரண்டும் நெஞ்சைக் குறிக்கின்றன.

தேவர்களுக்கு எட்டாத அதீதனே, நீ நிலவுலகுக்கு இறங்கி வந்து உன் தொண்டர்களை உய்வித்துள்ளாய். யாண்டும் போற்றுபவர் உள்ளத்தில் நீ பேரின்பமாய்த் திகழ்கின்றாய். உலகெங்கும் தென்படுகிற சேதனம் நீயே.

திருக் அல்லது காண்போனாயிருக்கும் சிவன் என்றைக்குமே திருசியம் அல்லது காணப்படுபொருள் ஆவதில்லை. ஆதலால் தேவர்களுக்கு அல்லது இந்திரியங்களுக்கு அவன் புலப்படான். உயிர்க்கு உயிராய், உணர்வுக்கு உணர்வாய் அவன் இலங்குகிறான்.

10. புவனியிற் போய்ப்பிற வாமையி னாளும்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலா
மவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையு நீயு
மவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லா
யாரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

புவனியில் போய்ப் பிறவாமையின் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு என்று நோக்கித்
திருப்பெருந்துறை உறைவாய் திருமால் ஆம்
அவன் விருப்பு எய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்
அவனியில் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே.

புவனியில், அவனியில-நிலவுலகில், அவமே-வீணிலே. மலரவன்-பிரம்மதேவன்.

சுகபோகம் வேண்டி சுவர்க்கத்தை நாடிய் தேவர்களுக்குப் பிறகு அதில் சலிப்பு உண்டாகிறது. சிவனுடைய அருளுக்குப் பாத்திரமாகிச் சிவஞானம் பெற அவர்கள் மண்ணுலகில் வந்து பிறக்க விரும்புகின்றனர். அடியார்களை ஆட்கொள்ள அருள் சக்தியுடன் மண்ணுலகுக்கு எழுந்தருள்பவனே பள்ளி எழுந்தருள் வாயாக.

தில்லையில் அருளிய

21. கோயில் மூத்த திருப்பதிகம்

அநாதியாகிய சற்காரியம்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. உடையா ளுன்ற னடுவிருக்கு
   முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு
   மிருப்ப தாறு லடியேனுன்
னடியார் நடுவு ளிருக்குமரு
   ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து
   முடியும் வண்ண முன்னின்றே.

உடையாள் உன் தன் நடுவு இருக்கும்
   உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
   இருப்பதானல் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும்
   அருளைப் புரியாய் பொன் அம்பலத்து எம்
முடியா முதலே என் கருத்து
   முடியும் வண்ணம் முன் நின்றே.

உடையாள்-அனைத்தையும் உடையவள், உமாதேவி. முடியா-முடிவில்லாத.

இறைவா, நீயும் இறைவியும் ஒன்று. நான் சிவசக்தியால் ஆக்கப்பெற்றவன். ஆதலால் நானும் சிவசக்தியும் ஒன்று. இனி நானும் உன் அன்பர்களும் ஒன்றுகும்படி ஈறு இல்லாத இறைவா அருள்புரிவாயாக.

2. முன்னின் ருண்டா யெனைமுன்ன
மியானு மதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன்
பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
யென்னின் றருளி வரநின்று
போந்தி டென்ன விடிலடியா
ருன்னின் றிவன ரென்னரோ
பொன்னம் பலக்கூத் துகந்தானே.

முன் நின்று ஆண்டாய் எனை முன்னம்
யானும் அதுவே முயல்வு உற்றுப்
பின் நின்று ஏவல் செய்கின்றேன்
பிற்பட்டு ஒழிந்தேன் பெம்மானே
என் நின்று அருள் இவர நின்று
போந்திடு என்னவிடில் அடியார்
உன் நின்று இவன் ஆர் என்னரோ
பொன் அம்பலம் கூத்து உகந்தானே.

முயல்வு-முயற்சி, சிரத்தை. இவர-ஓங்க.

முன்பு என்னை ஆட்கொண்ட நீ இப்பொழுது என்னிடத்துள்ள சிரத்தைக் குறைவை முன்னிட்டு என்னைப் புறக்கணிக்க வேண்டாம். நீ புறக்கணித்தால் உன் பக்தர்களுக்கு நான் வேற்றான் ஆவேன்.

3. உகந்தா னேயன் புடையடிமைக்
குருகா வுள்ளத் துணர்விலியேன்
சகந்தா னறிய முறையிட்டாற்
றக்க வாறன் றென்னரோ

உபநிஷத் மந்த்ரம்—99.

नाहं वेदैर्न तपसा न दानेन न चेज्यया ।
शक्य एवंविधो द्रष्टुं दृष्टवानसि मां यथा ॥

நாஹம் வேதைர்ந தபஸா ந தானேன ந சேஜ்யயா ।
சக்ய ஏவம் விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவானஸி மாம் யதா ॥

मां மாம் என்னை यथा யதா எவ்வாறு दृष्टवान् असि த்ருஷ்டவான் அஸி பார்த்திருக்கிறயோ एवं विधः ஏவம் வித: அவ்

மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தா யடியேற்குன்
முகந்தான் றரா விடின்முடிவேன்
பொன்னம் பலத்தெம் முழுமுதலே.

உகந்தானே அன்புஉடை அடிமைக்கு
உருகா உள்ளத்து உணர்வு இலியேன்
சகம் தான் அறிய முறையிட்டால்
தக்க ஆறு அன்று என்னுரோ
மகம் தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தாய் அடியேற்கு உன்
முகம் தான் தாராவிடின் முடிவேன்
பொன் அம்பலத்து எம் முழு முதலே.

வாறு अहं அஹம் நான் वेदैः வேதை: வேதங்களால் द्रष्टु த்ருஷ்டும் காண்பதற்கு न शक्यः ந சக்ய: இயலாது तपसा न தபஸா ந தபசால் அல்ல दानेन न தானேன ந தானங்களால் அல்ல इज्यया च न இஜ்யயா ச ந யாகத்தாலும் அல்ல.

நீ என்னை எவ்வாறு தரிசித்தாயோ அவ்வாறு நான் வேதங்களாலும் தவத்தாலும் தானத்தாலும் யாகத்தாலும் தரிசிக்கப்பட இயலாதவன்.

பொற்காசு ஒன்றை இழந்தவன் அதன்மீது நின்று கொண்டே அதை எவ்வளவு தேடினாலும் அதை அடைய மாட்டான். வேதம், வேள்வி, தானம், தபசு முதலியன மனிதனைப் பண்படுத்துதற்குப் பயன்படலாம். ஆனால் உள்ளத்தின் உள்ளிருக்கும் கடவுளைக் காண இவை யாவும் உதவ மாட்டா.

भक्त्या त्वनन्यया शक्यः अहमेवं विधोऽर्जुन ।
ज्ञातुं द्रष्टुं च तत्वेन प्रवेष्टुं च परंतप ॥

பக்த்யா த்வனன்யயா சக்ய: அஹமேவம் விதோऽர்ஜுன ।
ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேன ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥

(பகவத்கீதோபநிஷதம் 11-53, 54-)

परन्तप பரந்தப எதிரிகளை வாட்டுபவனே अर्जुन அர்ஜுன அர்ஜுனா तु து ஆனால் अनन्यया भक्त्या அனன்யயா

சகம்-உலகம். மகம்-வேள்வி. முடிவேன்-சாவேன்.

வேள்வி புரிந்தவர்களுக்கு நீ அருள் புரிந்தனை. உலகம் அறிய பக்தியில் கதறியழுகிற என்னை நீ ஆட்கொள்ளாவிட்டால் பக்தி மார்க்கம் சரியல்லவென்று உலகம் குறை கூறும். நானும் சாவேன். இறைவா, அத்தகைய் குறைபாடுகளுக்கு நீ இடம் தரலாகாது.

4. முழுமுத லேயைம் புலனுக்கு
மூவர்க் குமென்ற னக்கும்
வழிமுத லேநின் பழவடி
யார்தி ரள்வான் குழுமிக்

பக்த்யா அனன்ய பக்தியால் एवंविधः ஏவம் வித: இவ்விதம் अहं அஹம் நான் तत्त्वेन தத்த்வேன உள்ளபடி ज्ञातुं ஞாதும் அறிந்துகொள்ளுதற்கும் द्रष्टुं च த்ரஷ்டும் ச காண்பதற்கும் प्रवेष्टुं च ப்ரவேஷ்டும் ச அடைதற்கும் शक्यः சக்ய: கூடியவன்.

எதிரிகளை வாட்டவல்ல அர்ஜுனா, மாறுத பக்தியாலேயே இவ்விதம் என்னை உள்ளபடி உணரவும் காணவும் அடையவும் கூடும்.

அனன்ய பக்தி—கடவுளைத் தவிர வேறு ஒன்றையும் நாடாத பக்தி. அது கடவுளுக்குப் புறம்பாக எதையும் பொருள்படுத்துவதில்லை. எல்லாம் அவன் மயம், எல்லாம் அவன் செயல் என்ற மனநிலை அனன்ய பக்தியினின்று வருகிறது.

ஒரு ராஜ மாளிகையில் சிப்பந்திகள் நடந்துகொள்ளும் முறையினின்று அரசன் அதில் வீற்றிருக்கின்ருன் என்று யூகித்து உணரலாம். அந்த உணர்ச்சி மட்டும் போதாது. அரசனைக் கண்கூடாகக் காண்பது அதிலும் மேல். இனி, அவனைக் காண்பதிலும் பெரியநிலையொன்று உண்டு. அரசனேடு ஒட்டி உறவாடுதலே சாலச்சிறந்தது. அங்ஙனம் அனன்ய பக்தியால் ஒருவன் கடவுளின் சாந்நித்தியத்தை முதலில் உணர்கிருன். அதன்மேல் தர்சனம் உண்டாகிறது. பிறகு தானே அதில் ஒடுங்குகிருன். இத்தனையும் செய்ய வல்லது பக்தி.

கெழுமுத லேயரு டந்திருக்
கவிரங் குங்கொல் லோவென்
றழுமது வேயன்றி மற்றென்
செய்கேன் பொன்னம் பலத்தரைசே.

முழு முதலே ஐம் புலனுக்கும்
மூவர்க்கும் என் தனக்கும்
வழி முதலே நின் பழ அடியார்
திரள் வான் குழுமிக்
கெழு முதலே அருள் தந்து இருக்க
இரங்கும் கொல்லோ என்று
அழும் அதுவே அன்றி மற்று என்
செய்கேன் பொன் அம்பலத்து அரைசே.

வழிமுதலே-நிமித்த காரணமே. வான்குழுமி-சிறப்பாகக் கூடி. கெழுமுதலே-அன்புக்கு இலக்கே, பக்தவத்சலனே, காந்தனே.

அனைவர்க்கும் ஆதிமூலமே, அனைத்தையும் இயக்குபவனே, காந்தா உன்னை நாடி அழுவதைத் தவிர வேறு நான் என்ன செய்ய முடியும்?

5\. அரைசே பொன்னம் பலத்தாடு
மமுதே யென்றுன் னருணோக்கி
யிரைதேர் கொக்கொத் திரவுபக
லேசற் றிருந்தே வேசற்றேன்
கரைசே ரடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் னடியேன்பாற்
பிரைசேர் பாலி னெய்போலப்
பேசா திருந்தா லேசாரோ.

அரைசே பொன் அம்பலத்து ஆடும்
அமுதே என்று உன் அருள் நோக்கி
இரை தேர் கொக்கு ஒத்து இரவு பகல்
ஏசற்று இருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களி சிறப்பக்
காட்சி கொடுத்து உன் அடியேன் பால்
பிரை சேர் பாலின் நெய் போலப்
பேசாது இருந்தால் ஏசாரோ.

ஏசற்று இருந்து-வருந்தியிருந்து. வேசற்றேன்-வாடினேன். கரைசேர்-வீட்டின்பத்தையடைகின்ற. பேசாது - உரையாடாமல் மறைந்து.

இரை தேடும் கொக்கை ஒத்து நான் அல்லும் பகலும் அருள் தாகம் பிடித்து வருந்தியும் வாடியும் இருக்கிறேன். வீடுபேறு அடையப்பெற்று நின் அன்பர் பேர் இன்பம் துய்க்கின்றனர். பாலில் நெய்போன்று என்பால் நீ பராமுகமாயிருந்தால் நான் ஏளனத்துக்கு உரியவன் ஆவேன் அல்லவா!

6. ஏசா நிற்ப ரென்னையுனக்
கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்றானும்
பேணா நிற்பே னின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந்
திருவோ லக்கஞ் சேவிக்க
வீசா பொன்னம் பலத்தாடு
மெந்தா யினித்தா னிரங்காயே.

ஏசா நிற்பர் என்னை உனக்கு
அடியான் என்று பிறர் எல்லாம்
பேசா நிற்பர் யான் தானும்
பேணா நிற்பேன் நின் அருளே
தேசா நேசர் சூழ்ந்து இருக்கும்
திரு ஓலக்கம் சேவிக்க
ஈசா பொன் அம்பலத்து ஆடும்
எந்தாய் இனித்தான் இரங்காயே.

ஏசா நிற்பர்-தூற்றுவார்கள். பேசா நிற்பர்-பாராட்டிப் பேசுவார்கள். பேணாநிற்பேன்-விரும்பியிருப்பேன். தேசா-தேஜோமய மானவனே. திருஓலக்கம்-திருச்சபை, திருக்காட்சி.

சிலர் என்னைத் தூற்றுவர்; வேறு சிலர் உன் பக்தன் என்று என்னைப் போற்றுவர். நானோ இரண்டையும் பொருள்படுத்தாது உன் அருளையே நாடியிருப்பேன். தேசா, ஈசா, உன் அன்பர் சூழ்ந்த உனது திருச்சபையைக் காட்டியருள்க.

7. இரங்கு நமக்கம் பலக்கூத்த
னென்றென் றேமாந் திருப்பேனை
யருங்கற் பனைகற் பித்தாண்டா
யாள்வா ரிலிமா டாவேனோ

நெருங்கு மடியார் களுநீயு
நின்று நிலாவி விளையாடு
மருங்கே சார்ந்து வரவெங்கள்
வாழ்வே வாவென் றருளாயே.

இரங்கும் நமக்கு அம்பலம் கூத்தன்
என்று என்று ஏமாந்து இருப்பேனை
அரும் கற்பனை கற்பித்து ஆண்டாய்
ஆள்வார் இலி மாடு ஆவேனோ
நெருங்கும் அடியார்களும் நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வர எங்கள்
வாழ்வே வா என்று அருளாயே.

ஏமாந்திருப்பேனை - ஆசைப்பட்டிருப்பேனை. அரும் கற்பனை- முன்பு இல்லாத ஏற்பாடு. ஆள்வார் இலி மாடு-காப்பாற்றுவார் இல்லாத பசு. நிலாவி-விளங்கி. மருங்கே-அருகே.

அம்பலக்கூத்தா, எமக்கு இரங்கி ஆட்கொள்ள வேண்டு மென்று ஆசைப்பட்டிருந்த என்னை ஒரு புதிய முறையில் ஏற்றாய். அது ஒரு கற்பிதமாய்ப் போயிற்று. ஏனென்றால் ஆதரிப்பார் இல்லாத மாடுபோல் நான் தவிக்கிறேன். வாழ்வுக்கு வித்தே, அடியாரும் நீயும் நெருங்கி நின்று வெளிப்படையாக விளையாடுமிடத்துக்கு என்னையும் வாவென்று கூட்டிக்கொள்ள மாட்டாயா?

பக்தி சூத்திரம் 67. பக்கம் 47ல் பார்க்க.

8. அருளா தொழிந்தா லடியேனை
யஞ்சே லென்பா ராரிங்குப்
பொருளா வென்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன்
றெருளார் கூட்டங் காட்டாயேற்
செத்தே போனாற் சிரியாரோ.

அருளாது ஒழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர் இங்குப்

பொருளா என்னைப் புகுந்து ஆண்ட
பொன்னே பொன் அம்பலம் கூத்தா
மருள் ஆர் மனத்தோடு உனைப் பிரிந்து
வருந்துவேனை வா என்று உன்
தெருள் ஆர் கூட்டம் காட்டாயேல்
செத்தே போனால் சிரியாரோ.

தெருள்-ஞானத்தெளிவு.

என்னை ஒரு பொருளாக்கி ஆட்கொண்ட இறைவா, எனக்கு நீ அருள் புரியாவிட்டால் வேறு யாரிடமிருந்து நான் அபயம் பெறுவது? மயக்கம் நிறைந்த மனம் படைத்திருப்பதால் உன்னைப் பிரிந்து வருந்துகிறேன். என்னை வா என்று அழைத்து உன் அன்பர் கூட்டத்தில் சேர்த்து வை. இல்லையேல் நான் சாவேன். அதைக் குறித்து உலகத்தவர் ஏளனம் செய்ய மாட்டார்களா?

9. சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் றிருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் றிருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா வென்பா ரவர்முன்னே
நரிப்பாய் நாயே னிருப்பேனோ
நம்பி யினித்தா னல்காயே.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டு உன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வேறு இருந்து உன் திருநாமம்
தரிப்பார் பொன் அம்பலத்து ஆடும்
தலைவா என்பார் அவர் முன்னே
நரிப்பு ஆய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே.

தேனிப்பார்-தியானம் பண்ணுவார்கள். திருநாமம் தரிப்பார்-பஞ்சாக்ஷர ஜபம் பண்ணுவார்கள். நரிப்பு ஆய்-இகழ்ச்சிக்கு உரியவனாய். நம்பி-கல்யாண குணமுடைய அண்ணலே. நல்காயே-அருள்புரிவாயாக.

பக்தியின் மேலீட்டால் உன் அன்பர்கள் சிரிக்கவும், களிக்கவும், தியானிக்கவும், உன் மகிமைகளை விளக்கவும், அவைகளுக்குச் செவிசாய்க்கவும், பாராட்டவும், உன் நாமத்தை மந்த்ரமாக ஜபிக்கவும், உன்னைப் போற்றவும் செய்கின்றனர். அவர்களுக்கிடையில் நான் வழிபடத் தெரியாதவன் என இகழப்படுவது முறையோ? மன்னே என்னையும் ஆட்கொள்வாயாக.

10. நல்கா தொழியா னமக்கென்றுன்
நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழரு
வணங்கா மனத்தா னினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம் பலமென்றே
யொல்கா நிற்கு முயிர்க்கிரங்கி
யருளா யென்னை யுடையானே.

நல்காது ஒழியான் நமக்கு என்று உன்
நாமம் பிதற்றி நயனம் நீர்
மல்கா வாழ்த்தா வாய்குழரு
வணங்கா மனத்தால் நினைந்து உருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன் அம்பலம் என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கு இரங்கி
அருளாய் என்னை உடையானே.

நல்காது ஒழியான்-கிருபை செய்யாது போகான். பிதற்றி-பல தடவை சொல்லி. நயனம் நீர்-கண்ணீர். மல்கா-மல்கி,பெருகி. குழரு-குழறி. வணங்கா-வணங்கி. பாவித்து-உள்ளத்தில் உரு வெடுக்கச் செய்து. பரவி-துதிசெய்து. ஒல்கா நிற்கும்-தளர்ந்து நிற்கும்.

உடையவனுகிய நீ என்னைப் புறக்கணித்துவிடமாட்டாயென்று உன் பெயரைச் சொல்லியும், கண்ணீர் சிந்தியும், உன்னை வாழ்த்தியும், நாக்குழறியும், வணங்கியும், மனனம் பண்ணியும், உருகியும், திரும்பத்திரும்ப தியானித்தும், துதி செய்தும் தளர்ந்து நிற்கும் என்னை இரங்கி ஆண்டருள்வாயாக.

தில்லையில் அருளிய

22. கோயில் திருப்பதிகம்

அனுபோக இலக்கணம்

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
யூறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
யுள்ளவா காணவந் தருளாய்
தேறலின் றெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
யீறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
வின்பமே யென்னுடை யன்பே.

மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சம்
புலன் ஐந்தின் வழி அடைத்து அமுதே
ஊறி நின்று என் உள் எழு பரஞ்சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஈறு இலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

மாறி நின்று-மெய்ம்மையினின்று பிசகியிருந்து. வஞ்சம் புலன்-மெய்ப்பொருளைப் பொய்ப்பொருளாகக் காட்டும் கருவி. தேறலின் தெளிவே-தெளிந்த தேனே. ஈறுஇலா-முடிவு இல்லாத.

இம்மை மறுமை ஆகிய உலகங்கள் இந்திரியங்களால் நுகரப் படுகின்றன. ஆகையால் அவைகள் நிலையற்றவை, பரம்பொருளோ இந்திரிய நுகர்ச்சிக்கு அப்பாற்பட்டது. அதன் நித்தியமாகிய ஆனந்தம் சுவர்க்க போகத்திலும் மேலானது.

உபநி—40. பக்கம் 313ல் காண்க.

2. அன்பினு லடியே னாவியோ டாக்கை
யானந்த மாய்க்கசிந் துருக
வென்பர மல்லா வின்னரு டந்தா
யானிதற் கிலனொர்கைம் மாறு

முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே.

அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்தம் ஆய்க் கசிந்து உருக
என்பரம் அல்லா இன் அருள் தந்தாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறு
முன்பும் ஆய்ப் பின்பும் முழுதும் ஆய்ப் பரந்த
முத்தனே முடிவு இலா முதலே
தென்பெருந்துறையாய் சிவபெருமானே
சீர் உடைச் சிவபுரத்து அரைசே.

என்பரம் அல்லா-என் தகுதிக்கு மேலான முத்தனே-எதிலும் கட்டுப்படாதவனே.

சிவானந்தத்தின் மேலீட்டால் ஜீவபோதமானது அகண்ட சிவ போதமாக விரிவடைகிறது.

3. அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
வப்பனே யாவியோ டாக்கை
புரை புரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே
திரைபொரா மன்னு மமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
யுரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே.

அரைசனே அன்பர்க்கு அடியேன் உடைய
அப்பனே ஆவியொடு ஆக்கை
புரை புரை கனியப் புகுந்து நின்று உருக்கிப்
பொய் இருள் கடிந்த மெய்ச்சுடரே
திரை பொரா மன்னும் அமுதம் தெண்கடலே
திருப்பெருந்துறை உறை சிவனே
உரை உணர்வு இறந்து நின்று உணர்வது ஓர்
[உணர்வே
யான் உன்னை உரைக்கும் ஆறு உணர்த்தே.

புரை புரை-எலும்பின் உள்துளை எல்லாம். பொய் இருள் கடிந்த மெய்ச் சுடரே-பிரபஞ்சத்துக்குரிய இருள் வெளிச்சம் ஆகியவைகளுக்கு அப்பால் இருக்கும் ஆத்ம ஜோதியே. திரை பொரா-அலைமோதாது. மன்னும்-நிலைபெற்ற.

பரமாத்ம ஜோதியானது பிரபஞ்சத்துக்குரிய இருளுக்கும் வெளிச்சத்துக்கும் அப்பாற்பட்டது. பரமன் அசைவற்ற பேரானந்தம். அந்தக்கரணத்தோடு சம்பந்தப்படாத பேருணர்வே பிரக்ஞானம் எனப்படுவது.

உபநி—14. பக்கம் *135*ல் காண்க.

4. உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தா
ருணர்வுக்குந் தெரிவரும் பொருளே
யிணங்கிலி யெல்லா வுயிர்கட்கு முயிரே
யெனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோ ரிருளிற் றெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கடா மில்லா வின்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே.

உணர்ந்த மாமுனிவர் உம்பரோடு ஒழிந்தார்
உணர்வுக்கும் தெரிவு அரும் பொருளே
இணங்கு இலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப் பிறப்பு அறுக்கும் எம்மருந்தே
திணிந்தது ஓர் இருளில் தெளிந்த தூவெளியே
திருப்பெருந்துறை உறை சிவனே
குணங்கள் தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற்கு இனி என்ன குறையே.

உம்பரோடு- தேவர்களோடு. ஒழிந்தார் - மற்றவர்களும். இணங்கு இலி-ஒப்பற்றவனே. திணிந்தது-செறிந்தது.

நிறைஞானிகளும் தேவர்களும் மற்றவர்களும் பரமனை முற்றும் அறியார். சீர்தூக்குதற்கு அவன் போன்ற மற்றொரு பொருள் இல்லை. உயிர்களுக்கெல்லாம் அவன் உயிர். எனக்கும் அவனுக்கு முள்ள தொடர்வை அறியும் போது நான் முக்தி பெறுகிறேன். பிரளய இருளிலும் அவன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சிதாகாசம். அவன் குணாதீதன். அந்தப் பரம்பொருளை அறிகிறவன் பூரணன் ஆகிறான்.

உபநி—6. பக்கம் *109*ல் காண்க.

5. குறைவிலா நிறைவே கோதிலா வமுதே
யீறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெரு நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
யிறைவனே நீ யென் னுடலிடங் கொண்டா
யினியுன்னை யென்னிரக் கேனே.

குறைவு இலா நிறைவே கோதுஇலா அமுதே
ஈறுஇலாக் கொழும் சுடர்க் குன்றே
மறையும் ஆய் மறையின் பொருளும் ஆய்வந்து என்
மனத்திடை மன்னிய மன்னே
சிறை பெரு நீர்போல் சிந்தை வாய்ப் பாயும்
திருப்பெருந்துறை உறை சிவனே
இறைவனே நீ என் உடல் இடம் கொண்டாய்
இனி உன்னை என் இரக்கேனே.

கொழும்சுடர்-செழுமையான ஜோதி. மறை-வேதம். மன்னிய-நிலைபெற்ற. சிறைபெரு-கரையற்ற. சிந்தைவாய்-மனத்தின்கண்.

பூரணன் ஆகிய நீ என்னுள் நிறைந்துள்ளாய். மேலும் நான் உன்னிடம் வேண்டுதற்கு யாது உளது?

6. இரந்திரந் துருக வென்மனத் துள்ளே
யெழுகின்ற சோதியே யிமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தவா காய நீர்நிலந் தீகா
லாயவை யல்லையா யாங்கே
கரந்ததோ ருருவே களித்தன னுன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

இரந்து இரந்து உருக என் மனத்து உள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரம் தனில் பொலியும் கமலம் சேவடியாய்
திருப்பெருந்துறை உறை சிவனே

நிரந்த ஆகாயம் நீர் நிலம் தீ கால்
ஆய் அவை அல்லை ஆய் ஆங்கே
கரந்தது ஓர் உருவே களித்தனன் உன்னைக்
கண் உறக் கண்டுகொண்டு இன்றே.

இரந்து இரந்து-வேண்டி வேண்டி. இமையோர்-ஐம்பொறிகள். நிரந்த-எங்கும் நிறைந்த. கரந்தது-மறைந்து நின்ற.

போற்றுதற்கு ஏற்ப உள்ளத்தில் ஒளிர்பவன் அவன். பொறிகளில் பொலிபவன் அவன். ஐம்பூத உலகு ஆனவன் அவன். அதற்கு அப்பால் இருப்பவன் அவன்.

7. இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே
னீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்
[தொன்றாந்
திருப்பெருந் துறையுறைசிவனே
யொன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

இன்று எனக்கு அருளி இருள் கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைந்தேன்
நீ அலால் பிறிது மற்று இன்மை
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து
[ஒன்று ஆம்
திருப்பெருந்துறை உறை சிவனே
ஒன்றும் நீ அல்லை அன்றி ஒன்று இல்லை
யார் உன்னை அறியகிற்பாரே.

கடிந்து-போக்கி.

பரபோதம் ஓங்குதற்கு ஏற்ப ஜீவபோதம் ஒழிகிறது. மாயா காரியங்களாகிய கால தேச வர்த்தமானங்களாக நீ பரிணமிக்கவில்லை. நீ ஆதாரமாயிருப்பதால்தான் பரிணமித்துள்ள அவைகள் புலப்படுகின்றன. ஞானியைத் தவிர மற்றவர்களுக்கு இவ்வுண்மை விளங்குவதில்லை.

8. பார்பத மண்ட மனைத்துமாய் முளைத்துப்
டரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதே லரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளா
ரானந்த மாக்குமென் சோதி.

பார் பதம் அண்டம் அனைத்தும் ஆய் முளைத்துப்
பரந்தது ஓர் படர் ஒளிப் பரப்பே
நீர்உறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின் அருள் வெள்ளச்
சீர்உறு சிந்தை எழுந்தது ஓர் தேனே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஆர் உறவு எனக்கு இங்கு ஆர் அயல் உள்ளார்
ஆனந்தம் ஆக்கும் என் சோதி.

பார்-நிலவுலகம். பதம்-சுவர்க்கம். நின்மலா-நிர்மலா, அழுக்கில்லாதவனே. சீர்உறு-தெளிவடைந்த.

அனைத்தும் சிவ சொரூபம். தெளிந்த உள்ளத்தில் அவன் தேன் ஆகத் திகழ்கிறன். சிவானந்தம் பெற்றவர்க்கு உற்றாரும் வேற்றாரும் இல்லை.

9. சோதியாய்த் தோன்று முருவமே யருவா
மொருவனே சொல்லுதற் கரிய
வாதியே நடுவே யந்தமே பந்த
மறுக்குமா னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் னிணையடி தந்தே.

சோதியாய்த் தோன்றும் உருவமே அரு ஆம்
ஒருவனே சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தம் மா கடலே

தீது இலா நன்மைத் திருவருள் குன்றே
திருப்பெருந்துறை உறை சிவனே
யாதுநீ போவது ஓர் வகை எனக்கு அருளாய்
வந்து நின் இணை அடி தந்தே.

யாது நீ போவது ஓர் வகை-நீ என்னை விட்டு நீங்கும் வகை ஏது? (ஒன்றுமில்லை)

ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் பிரிவு இல்லை.

10. தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுர
ரந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே
னியாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
றிருப்பெருந் துறையுறை சிவனே
யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா
யாணிதற் கிலனோர்கைம் மாறே.

தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா ஆர் கொலோ சதுரர்
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்
திருப்பெருந்துறை உறை சிவனே
எந்தையே ஈசா உடல் இடம் கொண்டாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே.

சதுரர்-திறமை வாய்ந்தவர்.

ஜீவ வியக்தி வெறும் கற்பனையே என்பது அனுபூதிமான்களுக்கு விளங்குகிறது. யான், எனது என்பனவற்றை ஒழிப்பதற்கு ஏற்பப் பொய்யான ஜீவ சொரூபம் தேய, அது இருந்த இடத்தில் மெய்யான சிவ சொரூபம் மிளிர்கிறது.

உபநி—48, 49. பக்கம் 337ல் காண்க.

திருப்பெருந்துறையில் அருளிய

23. செத்திலாப் பத்து

சிவானந்தம் அளவறுக் கொணுமை

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

வாழ்வுக்கு உறுதுணையாக உடல் இருக்கும்போதே அதைச் செத்ததற்கு நிகராகப் புறக்கணிக்க வல்லவனுக்கு ஞான பரிபாகம் விரைவில் வருகிறது. ஜீவ போதத்தை ஒழிப்பதை உருவகப்படுத்தி அசுர சம்மாரமென்று புராணங்கள் கூறுகின்றன. திரிசூலமும் வேலும் ஞானத்தின் சின்னங்களாகின்றன. ஞானோதயத்தில் ஜீவன் சாகிறான்; சிவன் மிளிர்கிறான். ஜீவ வியக்தியைக் களைப்பது குறிக்கோள்.

1. பொய்யனே னகநெகப் புகுந்தமு தூறும்
புதும லர்க்கழ லிணையடி பிரிந்துங்
கையனே னின்னுஞ் செத்திலே னந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை யிழந்தே
னையனே யரசே யருட்பெருங் கடலே
யத்த னேயயன் மாற்கறி யொண்ணாச்
செய்யமே னியனே செய்வகை யறியேன்
றிருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

பொய்யனேன் அகம் நெகப் புகுந்து அமுது ஊறும்
புது மலர்க் கழல் இணை அடி பிரிந்தும்
கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ
விழித்துஇருந்து உள்ளம் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருள் பெரும் கடலே
அத்தனே அயன் மாற்கு அறி ஒண்ணாச்
செய்ய மேனியனே செய்வகை அறியேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே.

உபநிஷத் மந்த்ரம்—100.

स्ववपुः कुणपमिव दृश्यते ।

ஸ்வவபு: குணபமிவ த்ருச்யதே ।

(பரமஹம்ஸோபநிஷத் 2)

பொய்யனேன்-மாயாகாரியமாகிய நான். நையனேன்-அற்பனாகிய நான். செய்ய-சிவந்த.

ஜீவவியக்தியோடு கூடியிருப்பவர்களாகிய அயன் மால் போன்றவர்களே பரமனை முற்றும் அறியமாட்டார்கள். பர நாட்டத்தில் மனோநாசம் அடையப்பெறாத அல்பனாகிய நான் எங்ஙனம் அண்ணலை அறிவேன்? என் உள்ளம் உலக நாட்டத்தில் பாழ்படுகிறது.

2. புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
யுண்டியா யண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணா
மன்ன வென்னையோர் வார்த்தையுட் [படுத்துப்

स्व वपुः ஸ்வ வபு: சொந்த உடலை कुणपम् इव குணபம் இவ பிணம் போன்று दृश्यते த்ருச்யதே கருதுகிறான்.

தனது தேகத்தைப் பிரேதமாக ஞானி கருதுகிறான்.
உபநிஷத் மந்த்ரம்—101.

अनिष्टमिष्टं मिश्रं च त्रिविधं कर्मणः फलम् ।
भवत्यत्यागिनां प्रेत्य न तु संन्यासिनां क्वचित् ॥

அனிஷ்டமிஷ்டம் மிச்ரம் ச த்ரிவிதம் கர்மண: பலம் ।
பவத்யத்யாகினும் ப்ரேத்ய ந து ஸங்யாஸினும் க்வசித் ॥
(பகவத்கீதோபநிஷதம் 18-12).

अत्यागिनां அத்யாகினும் தியாகம் பண்ணாதவர்களுக்கு प्रेत्य ப்ரேத்ய மரணத்திற்குப் பிறகு अनिष्टं அனிஷ்டம் இஷ்டமல்லாதது, இன்னாதது इष्टं இஷ்டம் இனியது मिश्रं च மிச்ரம் ச இரண்டும் கலந்தது என त्रिविधं த்ரிவிதம் மூன்று விதமாக कर्मणः फलं கர்மண: பலம் கருமத்தின் பயன் भवति பவதி உண்டாகிறது तु து ஆனால் संन्यासिनां ஸம்ந்யாஸினும் தியாகிகளுக்கு क्वचित् न க்வசித் ந ஒரு பொழுதும் இல்லை.

தியாகிகளல்லாதார்க்கு மரணத்துக்குப் பிறகு இன்னாதது, இனியது, இவ்விரண்டும் கலந்தது என மூன்று விதமான வினைப் பயன்கள் விளைகின்றன. தியாகிகளுக்கோ ஒரு பொழுதுமில்லை.

பற்றிஞய் பதையேன் மனமிக வுருகேன்
பரிகி லேன்பரி யாவுட றன்னைச்
செற்றிலே னின்னுந் திரிதரு கின்றேன்
றிருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

புற்றும் ஆய் மரம் ஆய்ப் புனல் காலே
உண்டி ஆய் அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாரும் நின் மலர் அடி காண
மன்ன என்னை ஓர் வார்த்தையுள் படுத்துப்
பற்றிஞய் பதையேன் மனம் மிக உருகேன்
பரிகிலேன் பரியா உடல் தன்னைச்
செற்றிலேன் இன்னும் திரிதருகின்றேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே.

நரகப் பிராப்தியும் விலங்கு இனமாகப் பிறப்பதும் இன்னுதது அல்லது அனிஷ்ட கர்ம பலனுகிறது. சுவர்க்கப் பிராப்தியும் தேவகணப் பிறப்பும் இஷ்ட கர்மத்தின் பலன். பூவுலகப் பிராப்தியும், மக்களாகப் பிறத்தலும் கலப்புக் கர்மத்தின் பயனுகும். இனியது இன்னுதது ஆகிய இரண்டும் சேர்ந்தது கலப்புக் கர்மம். கர்மபலத்தில் பற்று வைக்கிறவர்களுக்குப் பிறவிகள் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. அவைகள் வாயிலாக சுக துக்கங்களுக்கு அவர்கள் ஆளாகவேண்டும். கரும பலனில் பற்று வைக்காதவர்களுக்குப் பிரபஞ்ச சம்பந்தமான இன்பமுமில்லை, துன்பமுமில்லை; பிறப்பும் இறப்பும் உண்டாவதில்லை. அவர்கள் முக்தியடைகிருர்கள்.

எடுத்த பிறவிகளுள் இது கடைசி ஜன்மம்; இத்துடன் பிறவியை ஒழித்துவிட்டு முக்தியடையும் நிலையில் இருப்பவர்களைச் சில அறிகுறிகளால் கண்டு கொள்ளலாம். அத்தகைய ஜீவன் முக்தர்கள் எப்பொழுதும் ஆத்ம திருப்தர்களாக இருக்கிருர்கள். நிழல் போன்று உடல் அவர்களைச் சார்ந்திருக்கிறது. அவ்வுடலின் மூலம் ஒழுங்காகக் கருமம் நடைபெறுகிறது. ஆனல் அதை ஜீவன் முக்தர்கள் கருத்தில் வாங்கிக்கொள்ளார்கள். அவர்கள் செத்தாரைப் போன்று இருக்கிருர்கள்.

புனல் காலே-நீரும் காற்றும். அண்ட வாணரும்-தேவர்களும். வற்றி-தவம் புரிந்து இளைத்துப் போய். ஓர் வார்த்தையுள்படுத்து-மஹாவாக்கிய உபதேசம் செய்து. பரிகிலேன்-வருந்துகிலேன். பரியா-உருகாத. செற்றிலேன்-வெறுத்திலேன். திரிதருகின்றேன்-உடலை அபிமானித்து நடமாடிக்கொண்டிருக்கிறேன்.

உபநிஷத் மந்த்ரம்—102.

एषा ब्राह्मी स्थितिः पार्थ नैनां प्राप्य विमुह्यति ।
स्थित्वाऽस्यामन्तकालेऽपि ब्रह्मनिर्वाणमृच्छति ॥

ஏஷா ப்ராஹ்மீ ஸ்திதி: பார்த்த நைநாம் ப்ராப்யவிமுஹ்யதி ।
ஸ்தித்வாऽஸ்யாமந்தகாலேऽபி ப்ரஹ்மநிர்வாணம்ருச்சதி ॥

(பகவத்கீதோபநிஷதம் 2-72)

पार्थ பார்த்த பார்த்தா एषा ஏஷா இது ब्राह्मी स्थितिः ப்ராஹ்மீ ஸ்திதி: பிரமத்தில் நிலைபெறுவதாகிறது एनां प्राप्य ஏநாம் ப்ராப்ய இதை அடையப்பெற்று न विमुह्यति ந விமுஹ்யதி மோஹமடைகிறதில்லை अन्तकाले अपि அந்தகாலே அபி மரணகாலத்திலாயினும் अस्यां அஸ்யாம் இதில் स्थित्वा ஸ்தித்வா நிலைத்திருந்து ब्रह्मनिर्वाणं ப்ரஹ்மநிர்வாணம் பிரம்ம நிர்வாணத்தை ऋच्छति ருச்சதி அடைகிறான்.

பார்த்தா, இதுவே பிரம்ம நிலைபேறு ஆகும். இதை அடைபவனுக்கு மோகமில்லை. இறுதிக் காலத்திலாவது இதில் நிலைத்திருப்பவன் பிரம்ம நிர்வாணத்தை அடைகிறான்.

கனவில் இருக்கும் போது கனவில் காண்கிற பொருள்களுக்கு மதிப்புண்டு; ஆங்கு உண்டாகிற இன்ப துன்பங்களுக்கும் மதிப்புண்டு. அத்தகைய கனவை விடப் பெருநிலையாகின்றது நனவு. நனவுக்கு வந்தவுடனே கனவைப் பற்றிய மயக்கம் போய்விடுகிறது. அங்ஙனம் கனவுக்கும் நனவுக்கும் மேம்பட்ட நிலை ஒன்று உண்டு. அது பிரம்ம நிர்வாணம் என்று பகரப்படுகிறது. அதை அடையப்பெற்றவனுக்குக் கனவு, நனவு ஆகிய அவஸ்தைகளைப் பற்றிய மயக்கம் கிடையாது.

பிரம்ம நிர்வாணம் என்பது அபரோக்ஷ அனுபூதி. மனம் மொழிக்கு எட்டாத பேரானந்தப் பெருநிலை அது.

தீவிரமாகத் தவம் புரிந்த தேவர்களும் மற்றவர்களும் தவத்தில் மூழ்கிப் புற்று ஆனார்கள், மரம் ஆனார்கள், நீரையும் காற்றையுமே புசித்தார்கள். ஆயினும் அவர்கள் உன்னை அறியவில்லை. நீயோ என்னை வலிய ஆட்கொண்டு முடிந்த நிலையை உபதேசித்தாய். நானோ ஜீவபோதத்தை ஒழிக்காது அதைப் பற்றிக் கொண்டிருக்கிறேன்.

3. புலைய னேனையும் பொருளென நினைத்துன்
னருள்புரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னானடந் தேன்விடைப் பாகா
சங்கரா வெண்ணில் வானவர்க் கெல்லா
நிலைய னேயலை நீர்விட முண்ட
நித்த னேயடை யார்புர மெரித்த
சிலைய னேயெனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

புலையனேனையும் பொருள் என நினைந்துஉன்
அருள் புரிந்தனை புரிதலும் களித்துத்
தலையினால் நடந்தேன் விடைப் பாகா
சங்கரா எண் இல் வானவர்க்கு எல்லாம்
நிலையனே அலை நீர் விடம் உண்ட
நித்தனே அடையார் புரம் எரித்த
சிலையனே எனைச் செத்திடப் பணியாய்
திருப்பெருந்துறை மேவிய சிவனே.

அப்பெருநிலையினின்று கீழே இறங்கி வந்தவன் ஜீவன். திரும்பவும் அப்பெருநிலையை அடையப்பெற்றவன் முக்தன். நதிகளெல்லாம் கடலைப் போய்ச் சேர்ந்து கடலில் இரண்டறக் கலத்தல் போன்று பிரம்ம நிர்வாணம் அடைதல் ஜீவர்களின் குறிக்கோளாம். சாகும் தருவாயில் அது வந்து அமைவதாயினும் அது முக்தியேயாம். விடுதலையென்றும் வீடுபேறு என்றும் அதைப் பகர்வதுண்டு. வாழ்ந்திருக்கும் போதே செத்தவன் போன்று இருப்பவன் ஜீவன் முக்தன் எனப்படுகிறான்.

புலையனேனையும்-புலால் உடம்பில் பற்றுவைத்துள்ள என்னை யும். நிலையனே-ஆதாரமாய் இருப்பவனே. அடையார்-பகைவர். சிலையனே-வில்லையுடையவனே.

உடலில் பற்று வைத்துள்ள என்னை நீ ஆட்கொண்டாய். ஆனால் நானோ செருக்குற்று நிலை தடுமாறுகிறேன். விஷம் உண்பதும் முப்புரம் எரிப்பதும் உனக்கு வெறும் விளையாட்டு. அத்தகைய இறைவா, என் ஜீவபோதத்தை அழித்திடமாட்டாயா?

4. அன்ப ராகிமற் றருந்தவ முயல்வா
ரயனு மாலுமற் றழலுறு மெழுகா
மென்ப ராய்நினை வாரெ னைப்பலர்
நிற்க விங்கெனை யெற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை
மரக்க ணென்செவி யிரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

அன்பர் ஆகி மற்று அரும் தவம் முயல்வார்
அயனும் மாலும் மற்று அழல் உறு மெழுகு ஆம்
என்பர் ஆய் நினைவார் எனைப் பலர்
நிற்க இங்கு எனை எற்றினுக்கு ஆண்டாய்
வன் பராய் முருடு ஒக்கும் என் சிந்தை
மரம் கண் என் செவி இரும்பினும் வலிது
தென் பராய்த்துறையாய் சிவலோகா
திருப்பெருந்துறை மேவிய சிவனே.

மெழுகு ஆம் என்பர் ஆய்-மெழுகு போன்று உருகிய எலும்பை உடையவராகி. எனைப்பலர்-வேறு பலரும். எற்றினுக்கு-எதற்காக. வன் பராய் முருடு-கடினமான பராய்மரத்தின் கணு. மரம்கண்-மரத்தில் செய்ததும் பார்க்க உதவாததுமான கண்.

பெம்மானே, உன்னிடத்து பக்தி படைத்துள்ள பிரம்மதேவன், விஷ்ணு, வேறு பலர் அருளை நாடி உருகியிருக்க வைத்துவிட்டு என்னை எதற்காக ஆட்கொண்டாய்? என் மனது பராய்க்கட்டை போன்று வலியது. மரத்தில் செய்தது போன்ற என் கண் உன்னைப் பார்க்கத் தகுதியற்றது. காதோ இரும்பினும் கடினமானது.

5. ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பா
லையனே யென்றுன் னருள்வழி யிருப்பே
னாட்டுத் தேவரு நாடரும் பொருளே
நாத னேயுனைப் பிரிவுரு வருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர்பி ரானே
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

ஆட்டுத் தேவர் தம் விதி ஒழித்து அன்பால்
ஐயனே என்று உன் அருள்வழி இருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடு அரும்பொருளே
நாதனே உனைப் பிரிவு உரு அருளைக்
காட்டித் தேவ நின் கழல் இணை காட்டிக்
காயம் மாயத்தைக் கழித்து அருள் செய்யாய்
சேட்டைத் தேவர் தம் தேவர் பிரானே
திருப்பெருந்துறை மேவிய சிவனே.

உபநிஷத் மந்த்ரம்—103.

सर्वद्वाराणि संयम्य मनो हृदि निरुध्य च ।
मूर्ध्न्याधायात्मनः प्राणमास्थितो योगधारणाम् ॥
ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन्मामनुस्मरन् ।
यः प्रयाति त्यजन्देहं स याति परमां गतिम् ॥

ஸர்வத்வாராணி ஸம்யம்ய மனோ ஹ்ருதி நிருத்ய ச ।
மூர்த்ன்யாதாயாத்மன: ப்ராணமாஸ்திதோ யோகதாரணும் ॥
ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரன் மாமனுஸ்மரன் ।
ய: ப்ரயாதி த்யஜன் தேஹம் ஸ யாதி பரமாம் கதிம் ॥

(பகவத்கீதோபநிஷதம் 8-12, 13)

सर्वद्वाराणि ஸர்வத்வாராணி இந்திரியத் துவாரங்கள் எல்லாவற்றையும் संयम्य ஸம்யம்ய அடக்கி मनः हृदि निरुध्य மன: ஹ்ருதி நிருத்ய மனதை ஹிருதயத்தில் நிறுத்தி आत्मनः प्राणं ஆத்மன: ப்ராணம் தன் பிராணனை मूर्ध्नि आधाय மூர்த்னி ஆதாய உச்சந்தலையில் வைத்து योगधारणां யோக தாரணும் யோகதாரணையில் आस्थितः ஆஸ்தித: நிலைபெற்று

ஆட்டுத்தேவர் - கருவி கரணங்களுக்குத் தலைமை வகித்து அவைகளை ஆட்டுவிக்கின்ற தேவதைகள். நாட்டுத்தேவரும்-பூசுரர் எனப்படும் நாட்டின் நன்மக்களும். நாடு அரும்பொருளே- நாடுதற்கு அரிதாகிய பொருளே. சேட்டைத்தேவர் - கிருத்திய கர்த்தர்கள், மும்மூர்த்திகள்.

ओं इति एकाक्षरं ஓம் இதி ஏகாக்ஷரம் ஓம் என்கிற ஏகாக்ஷரமாகிய ब्रह्म ப்ரஹ்ம பிரம்மத்தை व्याहरन् வ்யாஹரன் உச்சரித்துக்கொண்டு मां அனுस्मरन् மாம் அனுஸ்மரன் என்னை ஸ்மரித்துக்கொண்டு देहं त्यजन् தேஹம் த்யஜன் உடலை நீத்து यः प्रयाति யः ப்ரயாதி யார் போகிறானோ सः परमां गतिं याति ஸः பரமாம் கதிம் யாதி அவன் பரம கதியைப் பெறுகிறான்.

பொறிவாயில் யாவையும் அடக்கி, மனதை ஹிருதயத்தில் நிறுத்தி, தன் பிராணனை உச்சந்தலையில் வைத்து, யோகதாரணையில் நிலைத்திருந்து, 'ஓம்' என்கிற ஏகாக்ஷரமாகிய பிரம்ம மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு, என்னை ஸ்மரித்துக்கொண்டு, யார் உடலை நீத்துப் போகிறானோ அவன் பரமகதியைப் பெறுகிறான்.

யோகி ஒருவனுக்கு உடல் வாழ்க்கை முற்றுப்பெறுகிற நிலை இதுவாம். நதியானது கடலினுள் நுழைவது போன்று யோகியினுடைய ஜீவபோதம் பரபோதமாக மாறியமைகிறது. அதாவது உடல் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட உணர்ச்சியானது எல்லை கடந்த பேருணர்ச்சியாக் விரிவடைகிறது. அப்பொழுது பொறிகளாகிய கண், செவி, மூக்கு முதலியவைகளில் புலனாகும் உணர்ச்சி யோகிக்கு இல்லை. உடல் வாழ்க்கை நிகழ்ந்து கொண்டிருப்பினும் அவைகள் முரட்டுத்தனமாய் வெளியுலகில் சஞ்சரிப்பதில்லை. தூங்கப்போவது போன்று இப்பொழுது அவைகள் தாமாக ஒடுங்குகின்றன. அந்திவேளை வரும்போது, தான் வாசம் செய்யும் மரத்துக்குப் பறவையானது பறந்து வருவதுபோன்று யோகியின் மனது மரணகாலத்தில் ஹிருதயத்தில் அடங்குகிறது. (யோகியர் அல்லாதவர்களுடைய உள்ளம் உலகப் பொருள்களில் பற்றுவைத்துப் பறந்து திரிகிறது.) உட

இந்திரியங்களின் வழியில் நான் செல்லேன். உலகத்தவர் புரிகிற கர்ம காண்டத்தில் நான் கலந்துகொள்ளேன். மும்மூர்த்திகள் செயலிலும் நான் கட்டுப்படேன். ஈசா, உனது அருளை நாடி, மாய உடலை ஒதுக்குவேன்.

6. அறுக்கி லேனுட றுணிபடத் தீப்புக்
கார்கி லேன்றிரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
விறக்கி லேனுனைப் பிரிந்தினி திருக்க
வென்செய் கேனிது செய்கவென் றருளாய்
சிறைக்க ணேபுன னிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

அறுக்கிலேன் உடல் துணிபடத் தீப் புக்கு
ஆர்கிலேன் திருவருள் வகை அறியேன்
பொறுக்கிலேன் உடல் போக்கு இடம் காணேன்
போற்றி போற்றி என்போர் விடைப் பாகா

லெங்கும் சீதம் பரவுகிறது. அதாவது பிராணன் ஒவ்வொரு அவயவத்தையும் விட்டு விலகுகிறது. பிரயாணி ஒருவன் வண்டி நிலையத்துக்கு வந்து சேருவதுபோன்று பிராணன் யோகியின் உச்சந்தலைக்கு வருகிறது. ஆதலால் உச்சந்தலையில் மட்டும் நெடுநேரம் கதகதப்பு மிஞ்சியிருக்கும். (யோகியரல்லாதவர்க்குப் பிராணன் வாயில் அல்லது மூக்கில் போவது வழக்கம்.) ஈசுவர சிந்தனை வலுத்து ஈசுவர சொரூபத்தில் மனது ஒன்றித்திருப்பது யோகதாரணையாகும். அப்பொழுது ஓம் என்ற ஓசையொன்றே ஒலித்துக்கொண்டிருக்கிறது. ஓம் என்னும் ஓசையின் வடிவினனாகிய பரமாத்மாவின் திவ்விய சொரூபம், அலகிலா ஜோதி, பேரின்பம், சித் அம்பரம்— இந்நிலையை யோகி அடையப்பெறுகிறான். மற்றவர்களது உடல்போன்று யோகியின் உடலும் பிணமாய் ஒதுக்கப்படுகிறது. வீடுபேறு அடைந்தது யோகியின் சிறப்பு.

இறக்கிலேன் உனைப் பிரிந்து இனிது இருக்க
என் செய்கேன் இது செய்க என்று அருளாய்
சிறைக்கணே புனல் நிலவிய வயல் சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே.

துணிபட - துண்டங்களாக. ஆர்கிலேன் - தங்கியிருக்கமாட்டேன். சிறைக்கணே-வரப்புகளுக்கிடையில்.

அக்ஞானத்தில் பிறந்துள்ள இந்த ஜீவநிலை எனக்கு வேண்டாமென்று நான் என் உடலைத் துண்டங்களாக வெட்டவில்லை; தீயில் குதித்து அதில் தங்கியிருக்கவில்லை; திருவருளைப் பெறும் விதத்தை அறிகிலேன்; உடலை வைத்திருக்கச் சகியேன்; சென்றடையும் இடத்தையும் அறிந்திலேன். வணங்குகின்றேன், வணங்குகின்றேன் என்று யாண்டும் சொல்வோர்க்குரிய சிவபவாகனே, உன்னைப் பிரிந்திருந்தும் நான் இன்னும் சாகவில்லையே; சாந்தியுற்றிருக்க நான் செய்வது யாது? "இன்னதைச் செய்" என்று அருள் புரிவாயாக.

7. மாய னேமறி கடல்விட முண்ட
வான வாமணி கண்டத்தெம் மமுதே
நாயி னேனுனை நினையவு மாட்டே
னமச்சி வாயவென் றுன்னடி பணியாப்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகிநின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

மாயனே மறி கடல் விடம் உண்ட
வானவா மணி கண்டத்து எம் அமுதே
நாயினேன் உனை நினையவும் மாட்டேன்
நமச்சிவாய என்று உன் அடி பணியாப்
பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய்
பிறை குலாம் சடைப் பிஞ்ஞகனே ஓ
சேயன் ஆகி நின்று அலறுவது அழகோ
திருப்பெருந்துறை மேவிய சிவனே.

மாயனே-மாயைக்கு ஈசா. மறிகடல்-அலைகள் மடங்கி விழுகின்ற கடல். விடம்-விஷம். வானவா-தேவா. மணிகண்டம்-நீலகண்டம். பெருநெறி-முக்தி மார்க்கம். பிறைகுலாம் சடை-

பாலசந்திரன் பொலிகின்ற ஜடை. பிஞ்ஞகனே-ருத்திரனே. சேயன்-தூரத்தில் உள்ளவன்.

மாயைக்குத் தலைவா, நீலகண்டா, சந்திரசேகரா, ருத்ரா, நான் உன்னைத் தியானிப்பதில்லை, உனது நாம ஜபம் செய்வதில்லை. அத்தகைய நான் உனக்கு வேற்றாக அழுதுகொண்டிருப்பது முறையன்று. முக்தி மார்க்கத்தை எனக்குக் கொடுத்தருள்க.

8. போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிக ணிற்கமற் றென்னைக்
கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள் கென்றுநின் றொண்டரிற் [கூட்டாய்
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
யடிய னேனிடர்ப் படுவது மினிதோ
சீத வார்புன னிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

போது சேர் அயன் பொரு கடல் கிடந்தோன்
புரந்தர ஆதிகள் நிற்க மற்று என்னைக்
கோது மாட்டி நின் குரை கழல் காட்டிக்
குறிக்கொள்க என்று நின்தொண்டரில் கூட்டாய்
யாது செய்வது என்று இருந்தனன் மருந்தே
அடியனேன் இடர்ப்படுவதும் இனிதோ
சீதம் வார் புனல் நிலவிய வயல் சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே.

போது-மலர். பொருகடல்-அலைகள் மோதுகின்ற கடல். புரந்தர ஆதிகள்-இந்திரன் முதலாயினோர். கோதுமாட்டி-குற்றங்களைந்து. குரைகழல்-ஒலிக்கின்ற கழல் அணிந்துள்ள திருவடி. சீதம் வார் புனல்-குளிர்ந்து எங்கும் பரவிய நீர்.

என் குற்றத்தைக் களைந்து உன் திருவடியைக் காட்டியருள்க. அதை நான் உறுதியாகப் பிடித்துக்கொள்ளுதல் பொருட்டு உன் அடியார் கூட்டத்தில் என்னைச் சேர்த்துவை. செய்வது யாது என்று தெரியாது நான் துன்பப்பட்டுக்கொண்டிருப்பது உனக்குச் சம்மதமாகுமா?

9. ஞால மிந்திர னான்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
கால னாருயிர் கொண்டபூங் கழலாய்
கங்கையா யங்கி தங்கிய கையாய்
மாலு மோலமிட் டலறுமம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலு நீலமு நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

ஞாலம் இந்திரன் நான்முகன் வானவர்
நிற்க மற்று எனை நயந்து இனிது ஆண்டாய்
காலன் ஆர் உயிர்கொண்டபூங் கழலாய்
கங்கையாய் அங்கி தங்கிய கையாய்
மாலும் ஓலம் இட்டு அலறும் அம் மலர்க்கே
மரக்கணேனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே.

ஞாலம்-உலகத்தவர். காலன் ஆர் உயிர் கொண்ட-யமனை வதைத்த. அங்கி-நெருப்பு. மரக்கணேனையும் - விவேகமில்லாத என்னையும். சேலும்-கெண்டை மீனும். நீலமும்-நீலோத்பலம் என்னும் பூவும்.

மண்ணவரும் விண்ணவரும் காணுமாறு என்னை நீ ஆண்டருளினாய். காலகாலனே, கங்காதரா, அனலேந்தியவனே. திருமால் அடைய விரும்பும் உன் திருவடியை அறிவிலியாகிய அடியேன் வந்தடையுமாறு பணித்தருள்க.

10. அளித்து வந்தெனக் காவென் றருளி
யச்சந் தீர்த்தநின் னருட்பெருங் கடலிற்
றிளைத்துந் தேக்கியும் பருகியு முருகேன்
றிருப்பெ ருந்துறை மேவிய சிவனே

உபநிஷத் மந்த்ரம்—104.

अशरीरं शरीरेष्वनवस्थेष्ववस्थितं ।
महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति ॥

வளைக்கை யானொடு மலரவ னறியா
வான வாமலை மாதொரு பாகா
களிப்பெ லாமிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே.

அளித்து வந்து எனக்கு ஆவ என்று அருளி
அச்சம் தீர்த்த நின் அருள் பெருங் கடலில்
திளைத்தும் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே
வளைக் கையானொடு மலரவன் அறியா
வானவர மலை மாது ஒரு பாகா
களிப்பு எலாம் மிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மா மலை மேவிய கடலே.

அளித்து-அருளி. ஆவ-ஆ ஆ. இரக்கக் குறிப்பு. திளைத்தும்-மகிழ்ந்து மூழ்கியும். தேக்கியும்-நிரம்ப இன்புற்றும். வளைக்கையானொடு-சங்கைக் கையில் கொண்டுள்ள திருமாலோடு. களிப்பு எலாம் மிக-ஜாதி, குலம், தனம், வித்தை ஆகியவைகளைப் பற்றிய கர்வம் அதிகரிக்க.

அசரீரம் சரீரேஷு அனவஸ்தேஷு
அவஸ்திதம் ।
மஹாந்தம் விபும் ஆத்மானம் மத்வா
தீரோ ந சோசதி ॥

(கடோபநிஷதம் 2—22)

अनवस्थेषु शरीरेषु அனவஸ்தேஷு சரீரேஷு நிலையற்ற சரீரங்களுள் अवस्थितं அவஸ்திதம் நிலைத்திருக்கிற अशरीरं அசரீரம் சரீரமற்றதை महान्तं மஹாந்தம் மேலானதை विभुं விபும் எங்கும் வியாபித்ததை आत्मानं ஆத்மானம் ஆத்மாவை मत्वा மத்வா அறிந்து धीरः தீர: தீரன் न शोचति ந சோசதி விசனப்படுவதில்லை.

நிலையற்ற உடல்களிலே நிலைத்திருக்கிற ஆத்மன் உடலுக்கு அப்பாற்பட்டது, மேலானது, எங்கும் வியாபித்துள்ளது. அதை அறிகிற பேரறிஞன் துன்புறுவதில்லை.

எது ஜீரணமாகிறதோ அது சரீரம். ஆத்மாவோ சரீரமன்று. அது யாண்டும் இருந்தபடி இருக்கிறது.

லயோவென்று எனக்காக இரங்கிக் கிருபை கூர்ந்து என் அச்சம் தவிர்த்த உனது அருள்கடலில் மூழ்கியும், நிரம்ப இன்புற்றும், புசித்தும் நான் பரவசமடைந்திருக்க வேண்டும். ஆனல் அதற்கு மாருக உலக சம்பத்தைக் குறித்து நான் செருக்குற்றிருக்கிறேன், அந்தோ!

திருப்பெருந்துறையில் அருளிய

24. அடைக்கலப் பத்து

பக்குவ நிண்ணயம்

கலவைப் பாட்டு

1. செழுக்கமலத் திரளனநின்
சேவடி சேர்ந்தமைந்த
பழுத்தமனத் தடியருடன்
போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப்
பொல்லாக்கல் விஞானமிலா
வழுக்குமனத் தடியே
னுடையாயுன் னடைக்கலமே.

செழும் கமலம் திரள் அன நின்
சேவடி சேர்ந்து அமைந்த
பழுத்த மனத்து அடியர் உடன்
போயினர் யான் பாவியேன்

அது ஒப்பு உயர்வு அற்றது. எங்கும் வியாபித்திருப்பதால் அது ஏக வஸ்து. கடலில் உள்ள பல்லாயிரம் அலைகளில் பல்லாயிரம் சூரியர்களாக ஒரு சூரியன் பிரதிபிம்பிப்பது போன்று அந்தராத்மாவாயுள்ள ஒரே பரமாத்மன் எண்ணிறந்த ஜீவாத்மாக்களாகப் பிரதிபிம்பிக்கிருன். அப்பரமாத்மனே தனது யதார்த்த சொருபம் என்று அறிகிற நிறைஞானிக்குத் துன்பமில்லை, அச்சமில்லை, மரணமில்லை.

புழுக்கண் உடைப் புன் குரம்பைப்
பொல்லாக் கல்வி ஞானம் இலா
அழுக்கு மனத்து அடியேன்
உடையாய் உன் அடைக்கலமே.

செழும் கமலம் திரள்-வளமான தாமரை மலரின் இதழ்த் தொகை. புழுக்கண் உடை-புழுக்களுக்குச் சொந்தமாகிய. புன் குரம்பை-புல்லிய உடல். பொல்லா-கெட்ட.

மனபரிபாகம் அடைந்துள்ள அடியார்கள் உன்னோடு அந்தர்த் தானமாயினர். நானோ உடல் உணர்வில் ஊறியும், பொருளற்ற கவலையில் உழன்றும், மனம் கேடு அடைந்தும் கிடக்கிறேன். ஆயினும் உன்னிடம் அடைக்கலம் நாடுகிறேன்.

தேகாத்ம புத்தி அல்லது உடலைத் தான் என்று கருதும் மயக்கத்தைத் தவிர்க்குமளவு ஆத்ம சாதகன் பரத்தில் ஒன்றுபடத் தகுதியுடையவன் ஆகிறான்.

2. வெறுப்பன வேசெய்யு மென்சிறு
மையைநின் பெருமையினாற்
பொறுப்பவ னேயராப் பூண்பவ
னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் றிருவரு
ளாலென் பிறவியைவே
ரறுப்பவ னேயுடை யாயடி
யேனுன் னடைக்கலமே.

வெறுப்பனவே செய்யும் என்
சிறுமையை நின்பெருமையினால்
பொறுப்பவனே அராப் பூண்பவனே
பொங்கு கங்கை சடைச்
செறுப்பவனே நின் திருவருளால்
என் பிறவியை வேர்
அறுப்பவனே உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே.

அரா-பாம்பு. செறுப்பவனே-ஒடுக்கிவைப்பவனே.

உன்னைச் சார்ந்த பாம்புக்குப் பெருமை வந்துள்ளது; கங்கைக்கு அடக்கம் வந்துள்ளது. குணக்கேடனாகிய என்னைக் குண

வான் ஆக்கு. உன்னிடம் அடைக்கலம் புகுகிற என் பிறவியைப் போக்கு.

3. பெரும்பெரு மானென் பிறவியை
வேரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெரு மான்சதுரப் பெரு
மானென் மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மலரோ னெடு
மாலறி யாமனின்ற
வரும்பெரு மானுடை யாயடி
யேனுன் னடைக்கலமே.

பெரும் பெருமான் என் பிறவியை
வேர் அறுத்துப் பெரும் பிச்சுத்
தரும் பெருமான் சதுரப் பெருமான்
என் மனத்தின் உள்ளே
வரும் பெருமான் மலரோன்
நெடுமால் அறியாமல் நின்ற
அரும் பெருமான் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே.

பெரும் பெருமான்-மகாதேவன். பிச்சு-பித்து. சதுரப் பெருமான்-சர்வ சக்திமான்.

நீ பிறவியைப் போக்குபவன், பக்திப் பித்தைப் பெருக்குபவன், எதையும் சாதிப்பவன், சித்தமிசை குடிகொள்பவன், ஜீவபோதம் படைத்த அயனுக்கும் அரிக்கும் எட்டாதவன், ஜீவர்களை உடையவன், ஆதலால் நீ மகாதேவன். உன்னிடம் அடைக்கலம் புகுகிறேன்.

4. பொழிகின்ற துன்பப் புயல்வெள்
ளத்தினின் கழற்புணைகொண்
டிழிகின்ற வன்பர்க ளேறினர்
வான்யா னிடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக்
காமச் சுறவெறிய
வழிகின்ற னனுடை யாயடி
யேனுன் னடைக்கலமே.

பொழிகின்ற துன்பம் புயல் வெள்ளத்தில்
நின் கழல் புணைகொண்டு
இழிகின்ற அன்பர்கள் ஏறினர்
வான் யான் இடர்க் கடல் வாய்ச்
சுழி சென்று மாதர்த்திரை பொரக்
காமம் சுறவு எறிய
அழிகின்றனன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே.

புயல்-மழை. புணை-தெப்பம். இழிகின்ற-பூவுலகுக்கு இறங்கி வருகிற. ஏறினர் வான்-முக்தியடைந்தனர். இடர்க்கடல்வாய்-துன்பக்கடலினிடத்து. சுழிசென்று-பல சுழிகளில் சிக்கி. மாதர்த் திரை பொர-பெண்பாலர் என்னும் அலைகள் மோத. காமம் சுறவு எறிய-காமமாகிய சுறுமீன் தாக்க.

துன்பக் கடல் என்னும் மண்ணுலகுக்கு வந்த பக்தர்கள் இறைவன் திருவடி என்னும் தெப்பத்தைக்கொண்டு முக்தி என்னும் கரையேறினர். நானோ இங்குள்ள காம ஆபத்துக்களுக்கு ஆளாகி அழிகிறேன். ஆயினும் உன்னிடம் என்னை நான் ஒப்படைக்கிறேன்.

5. சுருள்புரி கூழையர் சூழலிற்
பட்டுன் றிறமறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந்
தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மானன்ன நோக்கிதன்
பங்கவிண் ணோர்பெருமா
னருள்புரி யாயுடை யாயடி
யேனுன் னடைக்கலமே

சுருள் புரி கூழையர் சூழலில் பட்டு
உன் திறம் மறந்து இங்கு
இருள் புரி யாக்கையிலே கிடந்து
எய்த்தனன் மைத்தடம்கண்
வெருள்புரி மான் அன்ன நோக்கிதன்
பங்க விண்ணோர் பெருமான்
அருள் புரியாய் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே.

சுருள்புரி கூழையர்-சுருண்ட கூந்தலையுடைய மாதர். சூழலில்-கூட்டத்தில். எய்த்தனன்-தளர்ந்தேன். வெருள்புரி-அஞ்சுகின்ற.

நான் காமநோயில் வருந்துபவன். உன் அருள் திறனை மறந்து அக்ஞானத்தில் உதித்த உடலில் உழன்று இளைத்தவன். அம்பிகை சமேதா, அத்தகைய என்னை ஆட்கொள், உன்னைத் தஞ்சமடைகிறேன்.

உபநி—13. பக்கம் 133ல் காண்க.

6. மாழைமைப் பாவிய கண்ணியர்
வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போற்
றளர்ந்தேன் றடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள்
வணங்குவன் வல்வினையே
னாழியப் பாவுடை யாயடி
யேனுன் னடைக்கலமே.

மாழை மைப் பாவிய கண்ணியர்
வன் மத்து இட உடைந்து
தாழியைப் பாவு தயிர்போல்
தளர்ந்தேன் தட மலர்த்தாள்
வாழி எப்போது வந்து எந்நாள்
வணங்குவன் வல் வினையேன்
ஆழி அப்பா உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே.

மாழை-மாம்பிஞ்சின் பிளவையொத்த. மைப்பாவிய-அஞ்சனம் பரவிய. தாழியை-தயிர்ப்பாண்டத்தை. பாவு-தாண்டிப் பரவுகின்ற. வாழி-நீ வாழ்வாயாக. ஆழி-கருணைக்கடல்.

மாதர் மத்தைக்கொண்டு கடைகிற தயிரானது சிதறுண்டு மிடாவில் மோதி சுழல்வது போன்று நான் தளர்ச்சியடைந்தேன். வலிவுபடைத்த வினையின் வசப்பட்டிருக்கும் நான் பெருமைபொருந்திய உன் தாமரைத் திருவடியை எப்பொழுது வந்து வாழ்கவென்று வழுத்துவேன்? கருணைக் கடலாகிய அப்பனே அடைக்கலம் தந்தருள்க.

7. மின்கணினுர் நுடங்கு மிடையார்
வெகுளிவலேயி லகப்பட்டுப்
புன்கண ஞய்ப்புரள் வேனேப்
புரளாமற் புகுந்தருளி
யென்கணி லேயமு தூறித்
தித்தித்தென் பிழைக்கிரங்கு
மங்கண னேயுடை யாயடி
யேனுன் னடைக்கலமே.

மின்கணினுர் நுடங்கும் இடையார்
வெகுளி வலேயில் அகப்பட்டுப்
புன் கணன் ஆய்ப் புரள்வேனேப்
புரளாமல் புகுந்து அருளி
என் கணிலே அமுது ஊறித்
தித்தித்து என் பிழைக்கு இரங்கும்
அம் கணனே உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே.

மின் கணினர்-மின்னுகின்ற கண்களேயுடையவர். நுடங்கும் இடையார்-அசைகின்ற இடையை யுடையவர். புன் கணன் ஆய்-துன்பத்தையுடையோனுய். என்கணிலே - என்னிடத்தே. அம் கணனே-அருள் உடையவனே.

மாதர் இணக்கத்தில் இன்பமிருக்கிறதென்று மயங்கித் துன்பத்தை வரவழைத்துக்கொண்ட என்னேக் காத்தருள்க. என் குற்றத்தை மன்னித்து நான் நாடும் இன்பத்தை என்னிடத்தே தோற்றுவித்து என்னே ஆள்பவனே, உன்னிடம் என்னே நான் ஒப்படைக்கிறேன்.

8. மாவடு வகிரன்ன கண்ணிபங்
காநின் மலரடிக்கே
கூவிடு வாய்க்கும்பிக் கேயிடு
வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற்
கரந்து பரந்ததுள்ள
மாகெடு வேனுடை யாயடி
யேனுன் னடைக்கலமே.

மா வடு வகிர் அன்ன கண்ணி
பங்கா நின் மலர் அடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே இடுவாய்
நின் குறிப்பு அறியேன்
பா இடை ஆடு குழல் போல்
கரந்து பரந்தது உள்ளம்
ஆ கெடுவேன் உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே.

மாவடுவகிர்-மாவடுவின் பிளவு. கண்ணி-கண்களையுடைய உமாதேவி. கூவிடுவாய் - அழைத்துக்கொள்வாய். கும்பிக்கே இடுவாய்-நரகத்தில் தள்ளுவாய். பா இடை-நெசவுக்காக அமைக்கப்பட்டிருக்கும் பாவினிடையே. ஆடுகுழல்-இப்பக்கமும் அப்பக்கமும் உந்தித் தள்ளப்படுகிற குழாய் அல்லது நாடா. கரந்து-மறைந்து.

அம்பிகை பங்கா, என்னை நீ ஆட்கொண்டால் சிவானந்தப் பேறு பெறுவேன்; புறக்கணித்தால் அது எனக்கு நரக வேதனையாகும். என் மனதோ நெசவு நாடா போன்று சலனப்படுகிறது. என்னை உன் உடைமையாக்குக.

9. பிறிவறி யாவன்பர் நின்னருட்
பெய்கழற் றாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற்
றாருன்னை வந்திப்பதோர்
நெறியறி யேனின்னை யேயறி
யேனின்னை யேயறியு
மறிவறி யேனுடை யாயடி
யேனுன் னடைக்கலமே.

உபநிஷத் மந்த்ரம்—105.

तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् ।
ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते ॥

தேஷாம் ஸததயுக்தானாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் ।
ததாமி புத்தியோகம் தம் யேன மாமுபயாந்தி தே ॥

(பகவத்கீதோபநிஷதம் 10-10)

सततयुक्तानां ஸததயுக்தானாம் எப்பொழுதும் யோகம் பயிலுபவர்களுக்கு प्रीतिपूर्वकम् भजताम् ப்ரீதிபூர்வகம் பஜதாம்

பிறிவு அறியா அன்பர் நின் அருள்
பெய் கழல் தாள் இணைக் கீழ்
மறிவு அறியாச் செல்வம் வந்து
பெற்றார் உன்னை வந்திப்பது ஓர்
நெறி அறியேன் நின்னையே
அறியேன் நின்னையே அறியும்
அறிவு அறியேன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே.

பெய்கழல்-கழலையணிந்த. மறிவு அறியா-நசித்தல் இல்லாத, அக்ஷயம். அறிவு அறியேன்-புத்தியோகமில்லாத நான்.

அழியாத செல்வமாகிய உன்னை உன் அன்பர் வந்தடைந்தனர். ஆனால் எனக்கோ உன்னை வழுத்தத் தெரியாது, உன்னை அறியேன், உன்னை அறிவதற்கான புத்தியோகம் எனக்கு இல்லை.

அன்பு நிறைவோடு பஜிக்கிறவர்களுக்கு तेषाम् தேஷாம் அவர்களுக்கு त் தம் அந்த बुद्धियोगं புத்தியோகம் புத்தி யோகத்தை ददामि ததாமி தருகிறேன் येन யேன அதனால் ते தே அவர்கள் माम् மாம் என்னை उपयान्ति உபயாந்தி வந்தடைகிறார்கள்.

என்றும் யோக முயற்சியோடு அன்புடன் என்னை வழுத்துபவர்களுக்குப் புத்தியோகம் வழங்குகிறேன். அதனால் அவர்கள் என்னை அடைகிறார்கள்.

சர்க்கரையை நாவில் வைத்தால் அது தித்திக்கிறது என்பது தெரிகிறது. பிறகு அந்தச் சர்க்கரையை என்னென்ன வகைப் பட்சணங்களாகச் செய்தால் அதன் சுவையை நன்கு ரசிக்கலாம் என்று அறிவது சர்க்கரையைப் பற்றிய புத்தியோகமாகிறது. உள்ளன்போடும், உறுதியாகவும் யோகத்தில் நுழைபவர்க்கு இறைவனது மகிமை கொஞ்சம் விளங்குகிறது. அது யோகத்துக்கு மேலும் தூண்டுகோலாகிறது. பகவான் தந்துகொண்டே வருகிற புத்தியோகத்தால் அவருடைய சொரூபம் மேலும் மேலும் அறியப்படுகிறது. அவருடைய சொரூபத்தைத் தொடர்ந்து அறியுமளவு பக்தன் இன்னும் அதிகமாகப் பகவானைச் சார்ந்து நிற்கிறான். இங்ஙனம் புத்தியோகத்தின் மூலம் பக்தி வளர்கிறது.

10. வழங்குகின் ருய்க்குன் னருளா
ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை
யேனென் விதியின்மையாற்
றழங்கருந் தேனன்ன தண்ணீர்
பருகத்தந் துய்யக்கொள்ளா
யழுங்குகின் றேனுடை யாயடி
யேனுன் னடைக்கலமே.

வழங்குகின்ருய்க்கு உன் அருள் ஆர்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன்
வினையேன் என் விதி இன்மையால்
தழங்கு அரும் தேன் அன்ன தண்ணீர்
பருகத் தந்து உய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே

தழங்கு-ஒலிக்கின்ற. அழுங்குகின்றேன்-வருந்துகின்றேன்.

உன் அருள் அமிர்தத்தை நீ வேண்டியவாறு வழங்குகின்ருய். அதை அள்ளியுண்கின்ற எனக்கு நல்வினைப் பயன் இன்மையால் நான் விக்கி வருந்துகிறேன். எனக்குத் தண்ணீரைப் பருகக் கொடுத்து என்னை உய்விப்பாயாக.

இறைவன் திருவருளால் திடீரென்று நிர்விகல்ப சமாதி கூடிவிட்டால் அதுவே தனது வீடுபேறு என்று ஜீவாத்மா உடனே அறிந்துகொள்வதில்லை. அதில் திளைத்திருக்க அவன் முதலில் மறுதலிக்கிருன். தேன் போன்ற இறைவனது நாமத்தை இனிது உச்சரித்து ஒலித்துக்கொண்டிருந்தால் போதும் என உணர்கிருன். ஆனல் விரைவில் அந்தத் தடுமாற்றத்தினின்று அவன் மேல் நிலைக்குப் போகிருன்.

திருப்பெருந்துறையில் அருளிய

25. ஆசைப் பத்து

ஆத்தும இலக்கணம்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. கருடக் கொடியோன் காண மாட்டாக்
கழற்சே வடியென்னும்
பொருளைத் தந்திங் கென்னை யாண்ட
பொல்லா மணியேயோ
விருளைத் துரந்திட் டிங்கே வாவென்
றங்கே கூவு
மருளைப் பெறுவா னாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

கருடக் கொடியோன் காணமாட்டாக்
கழல் சேவடி என்னும்
பொருளைத் தந்து இங்கு என்னை ஆண்ட
பொல்லா மணியே ஓ
இருளைத் துரந்திட்டு இங்கே வா என்று
அங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே.

பொருளை-வஸ்துவை. பொல்லாமணியே-பொள்ளாமணியே, துளைக்கப்படாத ஒளிவீசும் பொருளே, அகண்ட ஜோதியே. இருளை-அக்ஞானத்தை. துரந்திட்டு-ஓட்டிவிட்டு.

உனது திருவடியென்னும் துளைக்கமுடியாத நிறைபொருளை எனக்குக் கொடுத்தருளினாய். இப்பிரபஞ்ச வாழ்வு என்னும் மருளை நீக்கிவிட்டு அப்பால் உள்ள பரநிலை என்னும் அருளைப் பெற ஆசைப்படுகிறேன்.

உபநி—61. பக்கம் 383ல் காண்க.

2. மொய்ப்பா னரம்பு கயிறாக மூளை
யென்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்க கில்லேன்
கூவிக்கொள்ளாய் கோவேயோ

வெப்பா லவர்க்கு மப்பா லாமென்
 ளுரமு தேயோ
வப்பா காண வாசைப் பட்டேன்
 கண்டா யம்மானே.

மொய்ப்பால் நரம்பு கயிறு ஆக
 மூளை என்பு தோல் போர்த்த
குப்பாயம் புக்கு இருக்க கில்லேன்
 கூவிக்கொள்ளாய் கோவே ஓ
எப்பாலவர்க்கும் அப்பால் ஆம்
 என் ஆர் அமுதே ஓ
அப்பா காண ஆசைப் பட்டேன்
 கண்டாய் அம்மானே.

மொய்-நெருங்கிய. பால் நரம்பு-வெள்ளை நரம்பு. குப்பாயம்-உடம்பாகிய சட்டை.

அழியும் தன்மையுடைய உடல் வாழ்க்கை எனக்கு வேண்டாம். பிரபஞ்சத்துக்கு அப்பால் இருக்கிற அமிர்த சொரூபமதுவே நான் வேண்டுவது.

உபநி—13. பக்கம் 133ல் காண்க.

3. சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ்
 சிறுகுடி லிதுசிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்தாட்
 கொள்ளுங் குருமணியே
தேவா தேவர்க் கரியானே சிவனே
 சிறிதென் முக்நோக்கி
யாவா வென்ன வாசைப் பட்டேன்
 கண்டா யம்மானே.

சீ வார்ந்து ஈ மொய்த்து அழுக்கொடு திரியும்
 சிறு குடில் இது சிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்து
 ஆட்கொள்ளும் குருமணியே
தேவா தேவர்க்கு அரியானே சிவனே
 சிறிது என் முகம் நோக்கி
ஆ ஆ என்ன ஆசைப் பட்டேன்
 கண்டாய் அம்மானே.

சீ வார்ந்து-சீ யொழுகி. குடில்-உடல்.

உடல் வாழ்க்கையில் அருவருப்பும் ஆத்ம சொரூபத்தில் பேர் ஆர்வமும் படைத்திருப்பது ஆத்ம சாதனத்துக்கு இன்றியமையாத மன நிலையாம். அழுக்கு ஆகிய உடல் வாழ்க்கை ஒழிக. ஞானப் பிரகாசனே இரங்கி என்னை நீ உன்மயம் ஆக்கிக்கொள்.

4. மிடைந்தெலும் பூத்தை மிக்கழுக் கூறல்
வீறிலி நடைக்கூடந்
தொடர்ந்தெனை நலியத் துயருறு கின்றேன்
சோத்தமெம் பெருமானே
யுடைந்துநைந் துருகி யுள்ளொளி நோக்கி
யுன்றிரு மலர்ப்பாத
மடைந்துநின் றிடுவா னாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

மிடைந்து எலும்பு ஊத்தை மிக்கு அழுக்கு ஊறல்
வீறுஇலி நடைக் கூடம்
தொடர்ந்து எனை நலியத் துயர் உறுகின்றேன்
சோத்தம் எம் பெருமானே
உடைந்து நைந்து உருகி உள் ஒளி நோக்கி
உன் திரு மலர்ப்பாதம்
அடைந்து நின்றிடுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே.

மிடைந்து எலும்பு-எலும்புகள் நெருங்கி. வீறு இலி-மேன்மையில்லாததாகிய. கூடம்-உடல். சோத்தம்-வணக்கம்.

கீழ்மைக்கும் துன்பத்துக்கும் இருப்பிடமாகிய உடல் வாழ்க்கை எனக்கு வேண்டாம். உள்ளத்தினுள்ளே உனது ஜோதியையே நான் நாடியிருப்பேன்.

உபநி—36. பக்கம் 296ல் காண்க.

5. அளிபுண் ணகத்துப் புறந்தோன் மூடி
யடியே னுடையாக்கை
புளியம் பழமொத் திருந்தே னிருந்தும்
விடையாய் பொடியாட
யெளிவந் தென்னை யாண்டு கொண்ட
வென்னா ரமுதேயோ
வளியே னென்ன வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே

அளி புண் அகத்துப் புறம் தோல் மூடி
அடியேன் உடை யாக்கை
புளியம்பழம் ஒத்து இருந்தேன் இருந்தும்
விடையாய் பொடி ஆட
எளி வந்து என்னை ஆண்டு கொண்ட
என் ஆர் அமுதே ஓ
அளியேன் என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே.

அளி-கனிந்த. விடையாய்-ரிஷபவாஹனனே. பொடி-திருநீறு. எளிவந்து-எளிதாக வந்து. அளியேன் என்ன-உனது கிருபைக்கு நான் பாத்திரம் என்று நீ சொல்லும்படி.

புளியம்பழம் அதன் ஓட்டில் ஒட்டாது இருப்பது போன்று நான் இப்புல்லிய உடலில் பற்றற்று இருக்கவேண்டும். உன் அருளுக்கு நான் உகந்தவன் என்று நீ இயம்ப வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன்.

6. எய்த்தே னாயே னினியிங் கிருக்க
கில்லே னிவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோ ரறியா
மலர்ச்சே வடியானே
முத்தா வுன்றன் முகவொளி நோக்கி
முறுவன் னகைகாண
வத்தா சால வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

எய்த்தேன் நாயேன் இனி இங்கு இருக்க
கில்லேன் இவ் வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர் அறியா
மலர்ச் சேவடியானே
முத்தா உன் தன் முகம் ஒளி நோக்கி
முறுவல் நகை காண
அத்தா சால ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே.

எய்த்தேன்-இளைத்தேன். இருக்ககில்லேன்-இருக்கமாட்டேன். வாங்காய்-இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வருக. முத்தா-நித்திய முக்தனே. முறுவல் நகை காண-ஆனந்தத்தில் திளைத்திருக்க.

இப்பிரபஞ்ச வாழ்க்கை போதும். இனி உன் பேரானந்தத்தி லேயே திளைத்திருக்க விரும்புகிறேன்.

7. பாரோர் விண்ணோர் பரவி யேத்தும்
பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா வுலகந் தந்து
வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித் திரிந்தெம்
பெருமானென வேத்த
வாரா வமுதே யாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

பாரோர் விண்ணோர் பரவி ஏத்தும்
பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா உலகம் தந்து
வந்து ஆட்கொள்வானே
பேர் ஆயிரமும் பரவித் திரிந்து
எம்பெருமான் என ஏத்த
ஆரா அமுதே ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

வாரா உலகம்-மீண்டும் பிறப்பெடுக்காத நிலை, முக்தி. பேர் ஆயிரம்-சிவ ஸஹஸ்ர நாமம்.

மண்ணவரும் விண்ணவரும் போற்றும் பெம்மானே, முக்தி கொடுத்து ஆட்கொள்பவனே. உன் நாமங்கள் ஆயிரத்தையும் ஓதி உன்னை வழுத்த விரும்புகிறேன்.

8. கையாற் றொழுதுன் கழற்சே வடிகள்
கழுமத் தழுவிக்கொண்
டெய்யா தென்றன் றலைமேல் வைத்தெம்
பெருமான் பெருமானென்
றையா வென்றன் வாயா லரற்றி
யழல்சேர் மெழுகொப்ப
வையாற் றரசே யாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

கையால் தொழுது உன் கழல் சேவடிகள்
கழுமத் தழுவிக் கொண்டு
எய்யாது என் தன் தலை மேல் வைத்து
எம் பெருமான் பெருமான் என்று
ஐயா என் தன் வாயால் அரற்றி
அழல் சேர் மெழுகு ஒப்ப
ஐயாற்று அரசே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே.

கழும-பொருந்த. எய்யாது-தளராது.

உன் திருவடியைத் தழுவிக்கொண்டும் அதை என் தலைமேல் வைத்துக்கொண்டும், எம்பெருமானே என்று போற்றவும் தீயிலிட்ட மெழுகுபோன்று உள்ளம் உருகவும் ஆசைப்படுகிறேன்.

9. செடியா ராக்கைத் திறமற வீசிச்
சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டென்
கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர னேயுன்
பழவடி யார்கூட்ட
மடியேன் காண வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

செடி ஆர் ஆக்கைத் திறம் அற வீசிச்
சிவபுரம் நகர் புக்குக்
கடி ஆர் சோதி கண்டு கொண்டு என்
கண் இணை களி கூரப்
படிதான் இல்லாப் பரம்பரனே உன்
பழ அடியார் கூட்டம்
அடியேன் காண ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

செடி ஆர்-குற்றம் நிறைந்த. ஆக்கைத்திறம்-உடம்பின் கூறு அனைத்தும். அற வீசி-முற்றிலும் தொலைத்து. கடிஆர் சோதி-தன்னைத்தானே விளக்குகின்ற சுயஞ் ஜோதி. படிதான் இல்லா-ஒப்பில்லாத.

குற்றம் நிறைந்த இந்த உடம்பின் தொடர்வை அறவே ஒழித்து விட்டு ஒப்பில்லாத சுயஞ்ஜோதியாகிய பரனே உன் சன்னிதியினும் உன்னுடைய பழைய பக்தர்கள் கூட்டத்திலும் திளைத்திருக்க விரும்புகிறேன்.

10. வெஞ்சே லனைய கண்ணார்தம்
வெகுளி வலையி லகப்பட்டு
நைஞ்சே னாயேன் ஞானச் சுடரே
நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா
பவளத் திருவாயா
லஞ்சே லென்ன வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

வெம் சேல் அனைய கண்ணார் தம்
வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானம் சுடரே
நான் ஓர் துணை காணேன்
பஞ்சு ஏர் அடியாள் பாகத்து ஒருவா
பவளம் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே.

வெம் சேல் அனைய-விருப்பத்தைத்தருகிற சேல்மீனையொத்த. கண்ணார்-கண்களையுடைய மாதர். நைஞ்சேன்-சிதைவுற்றேன். பஞ்சு ஏர் அடியாள்-செம்பஞ்சு ஊட்டிய திருவடியை யுடைய உமாதேவி.

காம வலையில் சிக்கி மெலிந்தவன் நான். ஞானச்சுடரே, அம்பிகை சமேதா, உன்னையன்றி எனக்கு வேறு துணையில்லை. அஞ்சவேண்டாம் என்று உன் பவளத் திருவாயால் பகர்வதைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

திருப்பெருந்துறையில் அருளிய

26. அதிசயப் பத்து

முத்தி இலக்கணம்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. வைப்புமா டென்று மாணிக்கத் தொளியென்று
மனத்திடை யுருகாதே
செப்பு நேர்முலே மடவர லியர்தங்க
டிறத்திடை நைவேனே
யொப்பி லாதன வுவமனி லிறந்தன
வொண்மலர்த் திருப்பாதத்
தப்ப னுண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

வைப்பு மாடு என்று மாணிக்கத்து ஒளி என்று
மனத்திடை உருகாதே
செப்பு நேர் முலே மடவரலியர் தங்கள்
திறத்திடை நைவேனே
ஒப்பு இலாதன உவமனில் இறந்தன
ஒள் மலர்த் திருப்பாதத்து
அப்பன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே.

வைப்பு மாடு-சேகரித்த செல்வம். செப்பு-சிமிழ். மடவரலியர்-இளம் பெண்கள். நைவேனே-மனம் உருகுவேனே.

யாண்டும் நிலேத்துள்ள செல்வமென்றும், சுயஞ்ஜோதிப் பொருள் என்றும் நான் சிவனே நாடவில்லே; சிற்றின்பத்தை நாடினேன். ஆயினும் ஒப்பற்ற பரமன் என்னே ஆட்கொண்டு தன் அடியவர் கூட்டத்தில் சேர்த்தான். இது ஓர் அதிசயம் அல்லவா!

2. நீதி யாவன யாவையு நினேக்கிலே
னினேப்பவ ரொடுங்கூடே
னேத மேபிறந் திறந்துழல் வேன்றனே
யென்னடி யானென்று

பாதி மாதொடுங் கூடிய பரம்பர
னிரந்தர மாய்நின்ற
வாதி யாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

நீதி ஆவன யாவையும் நினைக்கிலேன்
நினைப்பவரொடும் கூடேன்
ஏதமே பிறந்து இறந்து உழல்வேன் தனை
என் அடியான் என்று
பாதி மாதொடும் கூடிய பரம்பரன்
நிரந்தரமாய் நின்ற
ஆதி ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே.

நீதி-நல்வழி. ஏதமே-துன்பமே. நிரந்தரமாய் நின்ற ஆதி-முடிவற்ற மூலப்பொருள்.

நல்வழியைப் பற்றி நான் நினைக்கவுமில்லை, நினைப்பவரோடு சேரவுமில்லை. பிறவித் துன்பக்கடலில் மூழ்கியவன் நான். அத்தகைய என்னை நித்திய வஸ்துவாகிய அர்த்தநாரீசன் தன் அடியவருள் சேர்த்துக்கொண்டான். இது அதிசயம்.

3. முன்னை யென்னுடை வல்வினை போயிட
முக்கண துடையெந்தை
தன்னை யாவரு மறிவதற் கரியவ
னெளியவ னடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனி
லிளமதி யதுவைத்த
வன்னை யாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

முன்னை என்னுடை வல்வினை போயிட
முக்கண் அது உடை எந்தை
தன்னை யாவரும் அறிவதற்கு அரியவன்
எளியவன் அடியார்க்குப்
பொன்னை வென்றது ஓர் புரிசடை முடிதனில்
இளமதி அது வைத்த
அன்னை ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே.

புரிசடை-கட்டிய சடை. அன்னை-தாய்போன்றவன்.

பண்படாதவர் பரமனைக் காணமாட்டார். பண்பட்டவர்க்கு அவன் நன்கு விளங்குகிறான். அத்தகையவன் என் வினையைப் போக்கி என்னைத் தன் திருக்கூட்டத்தில் சேர்த்துக்கொண்டான். இது ஓர் அதிசயம்.

4. பித்த னென்றெனை யுலகவர் பகர்வதோர்
காரண மிதுகேளீ
ரொத்துச் சென்றுதன் றிருவருட் கூடிடு
முபாயம தறியாமே
செத்துப் போயரு நரகிடை வீழ்வதற்
கொருப்படு கின்றேனை
யத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

பித்தன் என்று எனை உலகவர் பகர்வது ஓர்
காரணம் இது கேளீர்
ஒத்துச் சென்று தன் திருவருள் கூடிடும்
உபாயம் அது அறியாமே
செத்துப்போய் அரு நரகிடை வீழ்வதற்கு
ஒருப்படுகின்றேனை
அத்தன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே.

நரகில் இடர்ப்படக் கிடந்த என்னை இறைவன் தன் திருக்கூட்டத்தில் சேர்த்துவைத்தான். அதைக் குறித்துத் திகைத்து நின்ற என்னை உலகத்தவர் பித்தன் என்றனர்.

5. பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன்
பன்மலர் பறித்தேத்தேன்
குரவு வார்குழ லார்திறத் தேநின்று
குடிகெடு கின்றேனை
யிரவு நின்றெரி யாடிய வெம்மிறை
யெரிசடை மிளிர்கின்ற
வரவ னாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

பரவுவார் அவர் பாடு சென்று அணைகிலேன்
பல் மலர் பறித்து ஏத்தேன்
குரவு வார் குழலார் திறத்தே நின்று
குடிகெடுகின்றேனை
இரவு நின்று எரி ஆடிய எம் இறை
எரி சடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே.

பரவுவார்-போற்றி வணங்குபவர். பாடு-பக்கம். குரவு-குரா மலர். வார் குழலார்-நீண்ட கூந்தலையுடைய மாதர். திறத்தே-வழியிலே. இரவு-பிரளய காலம். எரி ஆடிய-நெருப்பைக் கையாண்ட. எரிசடை-விளங்குகின்ற சடை. அரவன்-பாம்மை அணிந்தவன்.

பக்தர்களோடு கூடிடவோ பூக்கொண்டு போற்றவோ நான் செய்யவில்லை. காமநோயில் தேய்ந்தவன் நான். மகா பிரளயத்திலும் ஞான ஒளி வீசிக்கொண்டிருக்கிறவனும் பாம்பையணிந்தவனும் ஆகிய பரமன் அத்தகைய என்னைத் தன் அடியவரோடு சேர்த்தது அதிசயம்.

6. எண்ணி லேன்றிரு நாமவஞ் செழுத்துமென்
னேழைமை யதனாலே
நண்ணி லேன்கலை ஞானிக டம்மொடு
நல்வினை நயவாதே
மண்ணி லேபிறந் திறந்துமண் ணாவதற்
கொருப்படு கின்றேனை
யண்ண லாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

எண்ணிலேன் திருநாமம் அஞ்சு எழுத்தும் என்
ஏழைமை அதனாலே
நண்ணிலேன் கலை ஞானிகள் தம்மொடு
நல் வினை நயவாதே
மண்ணிலே பிறந்து இறந்து மண் ஆவதற்கு
ஒருப்படுகின்றேனை
அண்ணல் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே.

ஏழைமை - அறியாமை. நண்ணிலேன்-நான் அணுகவில்லை. நயவாதே-விரும்பாமலேயே.

நான் பஞ்சாக்ஷரநாம ஜபம் செய்யாதவன்; நூல் அறிஞரோடு சேராதவன்; இறைபணி இயற்றாது மண்ணுங்கட்டி போன்று இருப்பவன். அத்தகைய என்னை இறைவன் தன் இனம் சேர்த்தது அதிசயம்.

7. பொத்தை யூன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும்
பொழுகிய பொய்க்கூரை
யித்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற்
சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச்சோதி
யத்த ளுண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந்து உளுத்துஅசும்பு
ஒழுகிய பொய்க்கூரை
இத்தை மெய் எனக் கருதி நின்று இடர்க் கடல்
சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணி மாணிக்கம் வயிரத்த
பவளத்தின் முழுச் சோதி
அத்தன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே.

பொத்தை - தொளைகளையுடைய. உளுத்து - சிதைந்து, வலி குறைந்து. அசும்பு-நிணநீர்க்கசிவு. இத்தை-இதை. இடர்க்கடல்-துன்பக்கடல்.

புல்லிய பொய்யுடலை மெய்யென்று கருதி இத்துன்பக்கடலில் உழல்கின்ற என்னை ஆத்மப் பிரகாசன் தனக்குச் சொந்தமாக்கியது விந்தையாம்.

8. நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியென சொற்செய்து
நுகமின்றி விளாக்கைத்துத்

தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத்
தெழுதரு சுடர்ச்சோதி
யாக்கி யாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

நீக்கி முன் எனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையில் புகப் பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொல் செய்து
நுகம் இன்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய் அறத் துகள் அறுத்து
எழுதரு சுடர்ச் சோதி
ஆக்கி ஆண்டு தன் அடியாரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே.

தன்னொடு நிலாவகை-தன்னுடன் சேர்ந்திரா வண்ணம். குரம்பையில் புகப்பெய்து - உடல் என்னும் சிறுகுடலில் புகுத்தி. நோக்கி-பக்குவமாயிருப்பதைப் பார்த்து. நுண்ணிய-நுட்பமாகிய. நொடியன சொல்செய்து-நொடிப்பொழுதில் மகாவாக்கியத்தை உபதேசித்து. நுகம் இன்றி-நுகத்தடியில்லாமலேயே. விளாக்கைத்து-பூமியை உழுவது போன்று தனது சொருபத்தின் கண் என்னை யோகாருடனாக்கி. தூக்கி-மாயையினின்று என்னைப் பிரித்தெடுத்து. பொய் அற-பொருளற்ற கருமங்கள் ஒழிய. துகள் அறுத்து-குற்றங்களைச் சேதித்து. எழுதரு-எழுகின்ற.

என்னைத் தாற்காலிகமாக மாயப் பிரபஞ்ச வாழ்க்கையில் வைத்துப் பக்குவப்படுத்தி மீண்டும் தன் சொருபத்தில் அமைத்துக் கொண்டான் இறைவன்.

கடலினின்று ஆவியாகக் கிளம்பிய நீர் விண்ணிலும் மண்ணிலும் வெவ்வேறு நிலைகளில் இருந்தான பிறகு மீண்டும் கடலை வந்தடைகிறது. அங்ஙனம் பரத்தினின்று பரிணமித்த ஜீவன், அணு உயிர் நிலையிலிருந்து ஆத்ம ஞானியின் நிலைவரையில் மேன்மையுற்று மீண்டும் பரத்தில் ஒன்றுபடுகிறது.

9\. உற்ற வாக்கையி னுறுபொரு ணறுமல
ரெழுதரு நாற்றம்போற்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொரு
ளப்பொருள் பாராதே

பெற்ற வாபெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொற் றெளியாமே
யத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

உற்ற ஆக்கையின் உறு பொருள் நறுமலர்
எழுதரு நாற்றம் போல்
பற்றல் ஆவது ஓர் நிலை இலாப் பரம் பொருள்
அப் பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயன் அது நுகர்ந்திடும்
பித்தர் சொல் தெளியாமே
அத்தன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே.

உறுபொருள்-பொருந்திய பொருள். எழுதரு-உண்டாகின்ற. பற்றல் ஆவது ஓர் நிலைஇலாப் பரம்பொருள்-தனக்குப் பற்றுக் கோடு ஒன்றும் தேவையில்லாத பரம்பொருள் நமக்குப் பற்றுக் கோடு ஆகிறுள். அப்பொருள் பாராதே-அந்தப்பொருள் ஆகிய இறைவனை அனுபூதியில் தரிசிக்காமல். பெற்றவா பெற்ற பயன்-வெவ்வேறு முறைகளில் பெற்ற வினைப்பயனாகிய சுக துக்கம். அது நுகர்ந்திடும்-அதை அனுபவிக்கின்ற. பித்தர் சொல் தெளியாமே-உலகத்தவர் பேச்சில் நம்பிக்கை வைக்காதிருத்தல் பொருட்டு.

மணத்தை உண்டுபண்ணுதற்கு மலர் இருப்பதுபோன்று மனிதன் உடல் எடுத்திருப்பது பரமனை தரிசித்தல் பொருட்டேயாம். போகத்தில் பித்துப்பிடித்தவர்களோ இன்ப துன்பத்தில் உழன்று உடல் வாழ்க்கையை வீணுக்குகின்றனர். இறைவன் என்னை அவர்களது போக்கினின்று விடுவித்தது வியப்பாம்.

10. இருடி ணிந்தெழுந் திட்டதோர் வல்வினைச்
சிறுகுடி லிதுவித்தைப்
பொருளெ னக்களித் தருநர கத்திடை
விழப்புகு கின்றேனைத்
தெருளு மும்மதி ளொடிவரை யிடிதரச்
சினப்பதத் தொடுசெந்தீ
யருளு மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய
வதிசயங் கண்டாமே.

இருள் திணிந்து எழுந்திட்டது ஓர் வல்வினைச்
சிறுகுடில் இது இத்தைப்
பொருள் எனக் களித்து அரு நரகத்திடை
விழப் புகுகின்றேனைத்
தெருளும் மும்மதில் நொடிவரை இடிதரச்
சினம் பதத்தொடு செம்தீ
அருளும் மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய
அதிசயம் கண்டாமே.

இருள் திணிந்து-அக்ஞான இருள் மிகுந்து. குடில்-உடல். இத்தை-இதை. தெருளும்-யாவராலும் தெளியப்பட்ட. மும்மதில்-முப்புரங்கள். நொடிவரை-நொடிப்பொழுதில். இடிதர-தகர்ந்து போகும்படி. சினம்பதத்தொடு-கோபக்குறியோடு வெளிப்பட்டு. செம்தீ அருளும்-சிவந்த தீயை அருள் செய்யும்.

அக்ஞானத்தில் உதித்த வலிய வினையின் விளைவு இவ்வுடல். இதைப் பொருளென நான் மதித்தது பொய்ந்நெறி. ஏனென்றால் நரகத்துக்கு வாயில் இதுவே. உலகு அறிந்த திரிபுரத்தை நொடிப் பொழுதில் காய்ந்து சம்மாரம் செய்த சிவனார் தம்மை அடைவதற்கு உற்ற மெய்ந்நெறியை எனக்குக் காட்டியது அதிசயமாம்.

பிரபஞ்சத்தின் கூறுகளினின்று ஜீவாத்மன் விடுபடுவது முக்தி. ஒவ்வொரு பாடலிலும் முக்தி ஒவ்வொரு விதத்திலும் விளக்கப்படுகிறது.

திருப்பெருந்துறையில் அருளிய

27. புணர்ச்சிப் பத்து

அத்துவித இலக்கணம்

ஆசிரிய விருத்தம்

1. சுடர்பொற் குன்றைத் தோளா
முத்தை வாளா தொழும்புகந்து
கடைப்பட் டேனை யாண்டுகொண்ட
கருணா லயனைக் கருமால்பிரமன்

றடைபட் டின்னுஞ் சாரமாட்டாத்
தன்னைத் தந்த வென்னாரமுதைப்
புடைபட் டிருப்ப தென்றுகொல்லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

சுடர் பொன் குன்றைத் தோளா
முத்தை வாளா தொழும்பு உகந்து
கடை பட்டேனை ஆண்டு கொண்ட
கருணாலயனைக் கருமால் பிரமன்
தடைபட்டு இன்னும் சார மாட்டாத்
தன்னைத் தந்த என் ஆர் அமுதைப்
புடைபட்டு இருப்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

தோளா - துளைக்கப்படாத. வாளா - பயனற்ற. தொழும்பு-தொண்டு. கருணாலயனை-அருளாளனை. புடைபட்டு-அடைந்து. பொல்லாமணி-பொள்ளாமணி, துளைக்கப்படாத ஜோதி, அகண்ட வஸ்து. புணர்ந்து-ஒன்றுபட்டு, யோகம் நிறைவேறி.

சுயஞ்ஜோதியனை, அகண்டவஸ்துவை, அற்பன் எனினும் தொண்டனுக்கு அருள்புரிபவனை, பிரம்மதேவன் எனினும் செருக்குற்றதனால் அவனால் அணுக முடியாதவனை, அமிர்த சொருபனைச் சேர்ந்திருப்பது எந்நாளோ?

2. ஆற்ற கில்லே னடியே னரசே
யவனி தலத்தைம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தை செய்து
சிவனெம் பெருமா னென்றேத்தி
யூற்று மணற்போ னெக்குநெக் குள்ளே
யுருகி யோலமிட்டுப்
போற்றி நிற்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப்பு ணர்ந்தே.

ஆற்றகில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்து ஐம் புலன் ஆய
சேற்றில் அழுந்தாச் சிந்தை செய்து
சிவன் எம்பெருமான் என்று ஏத்தி

ஊற்று மணல் போல் நெக்கு நெக்கு
உள்ளே உருகி ஓலம் இட்டுப்
போற்றி நிற்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

ஆற்றகில்லேன் - பொறுக்கமாட்டேன். அவனிதலத்து-நில வுலகில்.

நிலவுலகை நுகர்தற்குரிய ஐம்பொறிகளை நான் சேரலாகாது. அவைகள் துன்பம் துய்க்கும் சேறு போன்றவை. சிந்தையைச் சிவன்பால் செலுத்துதல் வேண்டும். ஊற்று நீர் மணலைப் பெயர்த் தெடுப்பது போன்று சிவபோதம் ஜீவபோதத்தைக் கலைக்கிறது. அத்தகைய சிவயோகம் எப்பொழுது வாய்க்கும்?

3. நீண்ட மாலு மயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை
யாண்டு கொண்ட வென்ன ரமுதை
யள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை
ஆண்டு கொண்ட என் ஆர் அமுதை
அள் ஊறு உள்ளத்து அடியார் முன்
வேண்டும் தனையும் வாய்விட்டு அலறி
விரை ஆர் மலர் தூவிப்
பூண்டு கிடப்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

நீண்ட மாலும்-உலகளந்த பெருமாளும். வெருவ-அஞ்சும்படி. அள் ஊறு-தொடர்ந்து தித்திக்கும். விரை-மணம். பூண்டு-ஒன்று பட்டு.

செருக்குற்ற ஜீவபோதத்துக்கு எட்டாதவன், செருக்கற்ற ஜீவனை வலிய ஆட்கொள்பவன், அடியார் உள்ளத்தில்

பேரானந்தமாய்த் திகழ்பவன் — அத்தகைய சிவனை உரக்கப் போற்றி, மணமலர் தூவி அவனோடு இணைந்திருப்பது எப்போதோ?

4. அல்லிக் கமலத் தயனு மாலு
மல்லா தவரு மமரர்கோனுஞ்
சொல்லிப் பரவு நாமத் தானைச்
சொல்லும் பொருளு மிறந்தசுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் னமுதை யமுதின்சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

அல்லிக் கமலத்து அயனும் மாலும்
அல்லாதவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத்தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறை இன்அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே

புல்லி-தழுவி.

சிவநாமத்தைத் தேவர்கள் எல்லாரும் சொல்லிப் போற்றுகின்றனர். அவன் சொல்லுக்கும் அப்பால் உள்ள ஜோதி. அவன் பேரானந்த வடிவம். ஜீவபோதத்தை இழந்து அவனிடத்து லயமாவது எப்பொழுது?

5. திகழத் திகழு மடியு முடியுங்
காண்பான் கீழ்மே லயனுமாலு
மகழப் பறந்துங் காண மாட்டா
வம்மா னிம்மா னிலமுழுது
நிகழப் பணிகொண் டென்னை யாட்கொண்
டாவா வென்ற நீர்மையெல்லாம்
புகழப் பெறுவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

திகழத் திகழும் அடியும் முடியும்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்தும் காணமாட்டா
அம்மான் இம் மா நிலம் முழுதும்
நிகழப் பணிகொண்டு என்னை ஆட்கொண்டு
ஆ ஆ என்ற நீர்மை எல்லாம்
புகழப் பெறுவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

திகழத்திகழும்-மிகவும் விளங்குகின்ற. அகழப்பறந்தும்-அகழ்ந்தும் பறந்தும், பூமிக்குள் தோண்டியும் வானத்தில் பறந்தும். நிகழ-செய்தி விளங்க. நீர்மை-மேலாம் தன்மை.

கீழ் என்றும் மேல் என்றும் பாகுபடுத்த முடியாத அகண்ட ஜோதியானவன் சிவன். அத்தகையவன் ஒரு மூர்த்தியாக வந்து உலகறிய இரங்கி என்னை ஆட்கொண்டான். அன்னவனது மகிமையைப் போற்றி அவனோடு ஒன்றுபடுவது எப்பொழுதோ?

6\. பரிந்து வந்து பரமா னந்தம்
பண்டே யடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தி
லருமா லுற்றே னென்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய வுண்ணீ
ருரோமஞ் சிலிர்ப்ப வுகந்தன்பாய்ப்
புரிந்து நிற்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

பரிந்து வந்து பரமானந்தம்
பண்டே அடியேற்கு அருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமால் உற்றேன் என்று என்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள் நீர்
உரோமம் சிலிர்ப்ப உகந்து அன்பு ஆய்ப்
புரிந்து நிற்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

பரிந்து-இரங்கி. பண்டே-முன்பே. அருமால்-நீக்கமுடியாத மயக்கம். உள்நீர்-மனக்கசிவு. புரிந்து நிற்பது-நேசித்து நிற்பது.

சிவோஹம் என்னும் அனுபூதியை அன்றே அவன் எனக்கு ஊட்டியருளினன். ஆழ்ந்த மயக்கத்தால் அப்பெருநிலையினின்று பிரிந்தவன் ஆனேன். இனி அழுதும், மனம் வருந்தியும், பக்தி பண்ணியும் அப்பெருநிலையை நான் மீண்டும் எப்பொழுது பெறுவேன்?

ஈண்டுப் பகர்ந்துள்ள கோட்பாடு முக்தியை நாடும் ஜீவர்கள் அனைவர்க்கும் பொதுவானதே.

7. நினையப் பிறருக் கரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப் பாரை யில்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டங்
கனையக் கண்ணீ ரருவி பாயக்
கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

நினையப் பிறருக்கு அரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனை ஒப்பாரை இல்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டம்
கனையக் கண்ணீர் அருவி பாயக்
கையும் கூப்பிக் கடி மலரால்
புனையப் பெறுவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

காலை-காற்றை. விசும்பை-ஆகாசத்தை. தழைத்து-பூரித்து. தழுத்த கண்டம்-தழுதழுத்த குரல். கனைய-ஒலி செய்ய. கடி-மணம். புனைய-அலங்கரிக்க.

ஐம்பூதங்களால் ஆகிய பிரபஞ்சமும் பரமனும் அத்வைத வஸ்து (இரண்டு அல்லாதது) என்பதை எல்லாரும் அறிவதில்லை. ஒப்பற்ற அந்த ஏகவஸ்துவைப் பார்த்துப் பூரிக்கவும், பாடிக் குரல் தழுதழுக்கவும், கண்ணீர் பெருகவும், கையால் நறுமலர்கொண்டு அலங்கரிக்கவும் செய்வது எப்பொழுது?

8. நெக்கு நெக்குள் ளுருகி யுருகி
நின்று மிருந்துங் கிடந்து மெழுந்து
நக்கு மழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானு விதத்தாற் கூத்து நவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சி லிர்த்துப்
புக்கு நிற்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

நெக்கு நெக்கு உள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானு விதத்தால் கூத்து நவிற்றிச்
செக்கர் போலும் திருமேனி திகழ
நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

நக்கும்-*சிரித்தும்:* நவிற்றி - *செய்து.* செக்கர்-*செவ்வானம்.* திகழ-*உள்ளத்தில் ஒளிர.* புக்கு நிற்பது-*ஒன்றுபட்டிருப்பது.*

பக்தியின் மேலீட்டால் மனம் உருகி நின்றும், இருந்தும், கிடந்தும், எழுந்தும், சிரித்தும், அழுதும், தொழுதும், வாழ்த்தியும், கூத்தாடியும், மயிர் சிலிர்த்தும், சிவனது செம்மேனியழகை நோக்கி உடல் புளகித்து இருப்பது எக்காலமோ?

மஹா பாவம்—பக்கம் 36ல் காண்க.

9. தாதாய் மூவே ழுலகுக்குந்
தாயே நாயேன் றனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க வெப்போது
மேதா மணியே யென்றென் றேத்தி
யிரவும் பகலு மெழிலார் பாதப்
போதாய்ந் தணைவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

தாதாய் மூ ஏழ் உலகுக்கும்
தாயே நாயேன் தனை ஆண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கு ஓர் மருந்தே
பெரும் தேன் பில்க எப்போதும்
மேதா மணியே என்று என்று ஏத்தி
இரவும் பகலும் எழில் ஆர் பாதப்
போது ஆய்ந்து அணைவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

தாதாய்-தந்தையே. மூ-பழைய. பேதாய்-பித்தனே. பில்க-சிந்த. மேதா மணியே - ஞானப்பிரகாசனே. போது - மலர். ஆய்ந்து-ஆராய்ந்து.

பழைய ஞானபூமி ஏழுக்கும் தந்தையும் தாயும் ஆனவனே, என்னை ஆட்கொண்ட பித்தா, பிறவிநோய்க்கு மருந்தே, அமிர்த தாரையே, ஞான ஜோதியே என்று யாண்டும் துதித்து இறைவனது திருவடித் தாமரையை ஆராய்ந்து அணுகுவது எப்போதோ?

முடிந்த நிலையில் பக்தியும் ஞானமும் யோகமும் மூன்று நதிகளின் சங்கமம் போன்று ஒன்றுபடுகின்றன. யோகத்தையும் ஞானத்தையும் பக்தியையும் முறையே சத் சித் ஆனந்தம் என்றும், கிரியா சக்தி, ஞான சக்தி, இச்சா சக்தி என்றும் இயம்பலாம். அத்வைதம் இவைகளின் குறியாகிறது.

10. காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதுங்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க் கெல்லா
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே யெனையாண்ட
பார்ப்பா னேயெம் பரமா வென்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போ தணைவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதும்
கண் ஆர் விசும்பின் விண்ணோர்க்கு எல்லாம்

மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனை ஆண்ட
பார்ப்பானே எம் பரமா என்று
பாடிப் பாடிப் பணிந்து பாதம்
பூப்போது அணைவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

கண் ஆர் விசும்பின் - இடம் நிறைந்த ஆகாயத்திலுள்ள. மூப்பாய்-மூத்தவனே. மூவாமுதலாய்-வயது ஆகாத முழுமுதல் பொருளே. பார்ப்பானே-வேதியனே.

அனைத்தையும் படைத்துக் காத்துத் துடைப்பவனே, தேவர்க்கெல்லாம் முன்னவன் எனினும் யாண்டும் இளமையோடு இருக்கும் மூலப்பொருளே, பக்குவம் ஆவதற்கு முன்பே என்னை ஆட்கொண்ட வேதியனே, எம் பரமனே என்றெல்லாம் பாடி உன் தாமரைத் திருவடியைச் சேரும் காலம் எது?

திருப்பெருந்துறையில் அருளிய

28. வாழாப் பத்து

முத்தி உபாயம்

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகே னார்க்கெடுத் துரைக்கே
னாண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே

ஆரொடு நோகேன் ஆர்க்கு எடுத்து உரைக்கேன்
ஆண்ட நீ அருள் இலையானால்
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே.

வார்கடல்-விரிந்த கடல்.

எங்கும் நிறைந்துள்ள மேலோனே. உன்னையே நான் கதியாகக் கொண்டவன். உனது ஆட்சியோ ஒருங்குப்பாடு உடையது. அத்தகைய நீ என்னை ஆட்கொண்ட பின் அருள்புரியாவிடின் இந்தச் சங்கடத்தை முன்னிட்டு யாரை நொந்து கொள்வது, யாரிடம் குறைகூறுவது ? இவ்வுலக வாழ்க்கை எனக்கு வேண்டாம். நீயே என்னை ஏற்றுக்கொள்.

2. வம்பனேன் றன்னை யாண்டமா மணியே
மற்றுநான் பற்றிலே கண்டாய்
யும்பரு மறியா வொருவனே யிருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவுஞ்
செம்பெரு மானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யெம்பெரு மானே யென்னையாள் வானே
யென்னைநீ கூவிக்கொண் டருளே.

வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே
மற்று நான் பற்று இலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்கு
உணர்வு இறந்து உலகம் ஊடுருவும்
செம் பெருமானே சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எம் பெருமானே என்னை ஆள்வானே
என்னை நீ கூவிக்கொண்டருளே.

வம்பனேன் தன்னை-சாதனத்தில் ஈடுபடாத என்னை. உம்பரும்-வானோரும். இருவர்க்கு-மாலுக்கும் அயனுக்கும்.

தேவர்கள் உன்னை அறியமாட்டார்கள். நீ அகண்ட வஸ்து என்பது அயனுக்கும் மாலுக்கும் விளங்குவதில்லை. அத்தகைய நீ அருளுக்கு வேற்றாகிய என்னை ஆட்கொண்டுள்ளாய். இனி நான் வேறு எதையும் நாடேன். ஆளுடையானே, என்னை முற்றும் உனக்கே சொந்தமாக்குக.

3. பாடிமால் புகழும் பாதமே யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யூடுவ துன்னோ டுவப்பது முன்னை
யுணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பாடி மால் புகழும் பாதமே அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
தேடி நீ ஆண்டாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை
உணர்த்துவது உனக்கு எனக்கு உறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரி யாயே.

பாடி மால்-திருமால் ஆனவர் பாடி. ஊடுவது-பிணங்குவது. உவப்பதும்-கூடி மகிழ்வதும். உணர்த்துவது-விண்ணப்பிப்பது. உறுதி வாடினேன்-சிரத்தை வேண்டுமென்று வாடினேன்.

அருள்புரிய வேண்டுமென்று சண்டைபுரிவதும் உன்னோடு; மகிழ்ந்து குலாவியிருப்பதும் உன்னோடு; என் குறையைத் தெரிவிப்பதும் உன்னிடம். இந்நிலைகளை யெல்லாம் எய்தல் பொருட்டு எனக்குச் சிரத்தை வேண்டுமென்று வாடுகிறேன்.

4. வல்லைவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யெல்லைமூ வுலகு முருவியன் றிருவர்
காணுநா ளாதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

வல்லை வாள் அரக்கர் புரம் எரித்தானே
மற்று நான் பற்று இலேன் கண்டாய்

தில்லை வாழ் கூத்தா சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எல்லை மூ உலகும் உருவி அன்று இருவர்
காணும் நாள் ஆதி ஈறு இன்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே.

வல்லை-விரைவில். வாள் அரக்கர்-வாள் ஏந்திய அரக்கர். எல்லை மூ உலகும் உருவி-மூன்று உலகத்தையும் எல்லை கடந்து. ஆதி ஈறு இன்மை-முதலும் முடிவும் இன்மை. வல்லையாய் வளர்ந்தாய்-சமர்த்தனாக விரிவடைந்தாய்.

முக்குணங்களுக்கு அப்பால் இருப்பது பரமன்; அவன் அளப்பரிய அகண்ட வஸ்து; முக்தி என்னும் பெருவாழ்வு அகண்டத்தில் இருக்கிறது; இம்மையிலோ மறுமையிலோ அது இல்லை.

5. பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யெண்ணமே யுடல்வாய் மூக்கொடு செவிகண்
ணென்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மே லடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பண்ணின் நேர் மொழியாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எண்ணமே உடல் வாய் மூக்கொடு செவி கண்
என்று இவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே.

மனதையும் ஐம்பொறிகளையும் இறைவன் வழிபாட்டுக்கென்றே பயன்படுத்துவது முக்திக்கு உற்ற உபாயமாம்,

6. பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யஞ்சினே ஞயே ஞண்டுநீ யளித்த
வருளினை மருளிஞன் மறந்த
வஞ்சனே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பஞ்சின் மெல் அடியாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டு நீ அளித்த
அருளினை மருளினல் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே.

செஞ்செவே-செம்மையாகவே, நலனுறவே.

மயக்கமும் முயற்சியின்மையும் முக்தி மார்க்கத்துக்கு விக்கினங்களாம்.

7. பருதிவா ழொளியாய் பாதமே யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துள முருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனே னுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பருதி வாழ் ஒளியாய் பாதமே அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
திருஉயர் கோலம் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே

கருணையே நோக்கிக் கசிந்து உளம் உருகிக்
கலந்து நான் வாழும் ஆறு அறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே.

பருதிவாழ் ஒளியாய்-சூரியப் பிரகாசனே. உயர்கோலம்-அழகு மிக்க.

விவேகம் இல்லாவிடினும் அருள்தாகம் இருந்தால் சாதனம் தடைப்படாது.

8. பந்தணை விரலாள் பங்கநீ யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யந்தமி லமுதே யரும்பெரும் பொருளே
யாரமு தேயடி யேனை
வந்துய வாண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பந்து அணை விரலாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
செம் தழல்போல் வாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
அந்தம் இல் அமுதே அரும் பெரும் பொருளே
ஆர் அமுதே அடியேனை
வந்து உய்ய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே.

இறைவன் அமிர்த சொரூபம் என்று உணருதற்கு ஏற்ப மிருத்யு அல்லது மரணத்தைப்பற்றிய உணர்வு ஒழிகிறது; முக்திநிலை தானே வந்தமைகிறது.

9. பாவநா சாவுன் பாதமே யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே

மூவுல குருவ விருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பாவ நாசா உன் பாதமே அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
தேவர் தம் தேவே சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
மூ வுலகு உருவ இருவர் கீழ்மேலாய்
முழங்க அழலாய் நிமிர்ந்தானே
மா உரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே.

உருவ - ஊடுருவிச்செல்ல. இருவர் - அரியும் அயனும். முழங்க- ஆரவாரம்செய்ய. மா உரியானே-யானைத்தோலைப்போர்த்தவனே.

சிவனது தீ வண்ணத்தின் அடிமுடி காணமாட்டாது அகங்காரம் பூண்ட இருவரும் ஆரவாரம் செய்தது மூவுலகிலும் ஊடுருவிப் பாய்ந்தது. சிவன் யானைத்தோல் போர்த்தது அகங்காரத்தை வென்றதற்கு அறிகுறியாம். அகங்காரம் அழிதற்கு ஏற்பப் பாபம் தானே நாசமாகிறது. பாபமற்ற நிலை முக்தி நிலையாகிறது.

10. பழுதிறெல் புகழாள் பங்கநீ யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி யணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ வெனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பழுது இல் தொல் புகழாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே.

தொழுவனே பிறரைத் துதிப்பனே எனக்கு ஓர்
துணை என நினைவனே சொல்லாய்
மழ விடையானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே.

மழவிடையானே-இளங்காளையை ஊர்தியாக உடையவனே.

வழுத்துதற்கும் சார்ந்திருப்பதற்கும் சக்தி சமேதனைத் தவிர வேறு பொருள் ஒன்றுமில்லை. பந்தத்திலும், முக்தியிலும் அவனே கதி.

திருப்பெருந்துறையில் அருளிய

29. அருள் பத்து

மகாமாயா சுத்தி

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

மகாமாயா அல்லது பிரபஞ்சமயமாயிருக்கும் உமா தேவி யாண்டும் பரிசுத்தமாகவே இருக்கிறாள். சித்த சுத்தி அடைகிறவனுக்கு அவ்வுண்மை விளங்குகிறது. அதை அறிதற்கு ஏற்ப ஆத்ம சாதகன் அவள் அருளுக்குப் பாத்திரமாகிறான்.

1. சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையி
னிறைமலர்க் குருந்தமே வியசீ
ராதியே யடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே
சுரி குழல் பணை முலை மடந்தை
பாதியே பரனே பால் கொள் வெள் நீற்றாய்
பங்கயத்து அயனும் மால் அறியா

நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறை மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

சுரிகுழல்-சுருண்ட கூந்தல். பணைமுலை-பருத்த ஸ்தனபாரம். பங்கயம்-பங்கஜம், தாமரை. நீதியே-பிரபஞ்சத்தில் ஒழுங்குப் பாடாகத் திகழ்பவனே. மேவிய-விரும்பி அமர்ந்த. சீர்ஆதியே-சிறப்பு நிறைந்த முதல்வனே. ஆதரித்து-விரும்பி. அதெந்து-அது என்ன.

ஆத்ம ஜோதியே, அம்பிகை மணாளா, இயற்கையின் ஒழுங்குப் பாடாகத் திகழ்பவனே, ஆதிமூலமே, ஆர்வத்தோடு உன்னை அழைக்கிறேன். எதற்காக அழைக்கிறாய் என்று மறுமொழி கூறுக.

2. நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
யொருத்தனே யுன்னை யோலமிட் டலறி
யுலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரருத்தனே யடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண் உளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலம் இட்டு அலறி
உலகு எலாம் தேடியும் காணேன்
திருத்தம் ஆம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழும் மலர்க் குருந்தம் மேவிய சீர்
அருத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

நிருத்தனே - கூத்தனே. நிமலா-நிர்மலனே, மாசு இல்லாதவனே. திருத்தம்-தூய்மை. அருத்தனே-மெய்ப்பொருளாக இருப்பவனே.

தோன்றியுள்ள யாவையும் இயக்கும் தனிப்பொருளே, அனைத்துக்கும் விளக்கமே, ஊனக்கண்ணுக்கு உலகெங்குமே

தென்படாதவனே, ஞானக்கண்ணுக்கு இலக்கே, பரிந்து அழைக்கும் எனக்குப் பிரசன்னமாவாயாக.

3. எங்கணு யகனே யென்னுயிர்த் தலைவா
வேலவார் குழலிமா ரிருவர்
தங்கணு யகனே தக்கநற் காமன்
றனதுட றழலெழ விழித்த
செங்கணு யகனே திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரங்கணு வடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

எங்கள் நாயகனே என் உயிர்த் தலைவா
ஏலம் வார் குழலிமார் இருவர்
தங்கள் நாயகனே தக்க நல் காமன்
தனது உடல் தழல் எழ விழித்த
செம் கண் நாயகனே திருப்பெருந்துறையில்
செழும் மலர்க் குருந்தம் மேவிய சீர்
அம் கணு அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

ஏலம்-மயிர்ச்சாந்தணிந்த. வார் குழலிமார்-நீண்ட கூந்தலை யுடையவர்கள். இருவர்-உமாதேவியும் கங்காதேவியும். தக்க-சிறந்த. நல்-அழகுள்ள. அம் கணு-கிருபைக் கண்ணனே.

காமத்தைச் சாம்பலாக்கிய பிறகு மகாமாயையின் சுத்தம் சாதகனுக்கு நன்கு புலப்படும். உமாதேவியும் கங்காதேவியும் சிவ சொரூபமே என்பதும் அப்பொழுது தெளிவாகும்.

மாயையின் மலத்தில் உழல்பவர்களுக்குத் தத்துவம் விளங்காது. அவர்கள் சிவனுக்கு மனைவிமார் இருவர் எனப் புல்லிய பாங்கில் பொருள்படுத்துவார்கள். மற்றுத் தூய மனக்கண்ணைப் பெறுதற்குச் சாதகன் அவனுடைய அருளை நாடியிருத்தல் வேண்டும்.

4. கமலநான் முகனுங் கார்முகி னிறத்துக்
கண்ணனு நண்ணுதற் கரிய
விமலனே யெமக்கு வெளிப்படா யென்ன
வியன்றழல் வெளிப்பட்ட வெந்தாய்

திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையிற்
செழு மலர்க் குருந்த மேவியசீ
ரமலனே யடியே ஞுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

கமலம் நான் முகனும் கார் முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற்கு அரிய
விமலனே எமக்கு வெளிப்படாய் என்ன
வியன் தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமிலம் நான்மறைசேர் திருப்பெருந்துறையில்
செழும் மலர்க் குருந்தம் மேவிய சீர்
அமலனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

நண்ணுதற்கு-நெருங்குவதற்கு. விமலனே-மாசு இல்லாதவனே. வியன்-பெரிய. திமிலம்-துமிலம், துமுலம்; பேரொலி. அமலனே-மாசு இல்லாதவனே.

அரியும், அயனும் வேண்டிக்கொண்டதற்கு இரங்கி உனது அகண்டாகாரத்தை நீ விளக்கினுய். நானும் உன்னைக் காண ஆசைப்பட்டு வேண்டுகிறேன்.

இறைவன் நிர்மலன், அமலன், விமலன் என அழைக்கப்படுகிருன். இம்மூன்று பதங்களுக்கும் பொருள் ஒன்றே. அவன் மாசு இல்லாத சுத்த வஸ்து. அவனை அணுகுபவர் மாசு நீங்கப்பெறுகின்றனர். மாயா சக்தியும் மாசு அற்றவள் என்பது அப்பொழுது விளங்குகிறது.

5. துடிகொணே ரிடையாள் சுரிகுழன் மடந்தை
துணைமுலைக் கண்கடோய் சுவடு
பொடிகொள்வான் றழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந்
[துறையிற்
செழுமலர்க் குருந்த மேவியசீ
ரடிகளே யடியே ஞுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

துடி கொள் நேர் இடையாள் சுரிகுழல் மடந்தை
துணை முலைக் கண்கள் தோய் சுவடு
பொடி கொள் வான் தழலில் புள்ளிபோல் இரண்டு
பொங்குஒளி தங்கு மார்பினனே
செடிகொள் வான் பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழும் மலர்க் குருந்தம் மேவிய சீர்
அடிகளே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

துடி-உடுக்கை. சுரிகுழல்-சுருண்ட கூந்தல். சுவடு-தழும்பு. பொடி-சாம்பல். பொங்கு-விளங்குகின்ற. செடி-புதர், தூறு. அடிகளே-சிவபெருமானே.

சக்தி சமேதா, நீ படைத்துள்ள பொலிவும் பெருமைகளுமெல்லாம் உனது சக்தியினின்றே உனக்கு வந்தவைகளாம். என் அழைப்புக்குச் செவிசாய்க்கும் தாய்மையையும் விளக்குவாயாக.

6. துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்
தொப்பனே யுன்னை யுள்குவார் மனத்தி
னுறுசுவை யளிக்குமா ரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரப்பனே யடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

துப்பனே தூயாய் தூய வெள் நீறு
துதைந்து எழு துளங்கு ஒளி வயிரத்து
ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தில்
உறுசுவை அளிக்கும் ஆர் அமுதே
செப்பம் ஆம் மறை சேர் திருப்பெருந்துறையில்
செழும் மலர்க் குருந்தம் மேவிய சீர்
அப்பனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

துப்பனே-அறிவு சொரூபியே. துதைந்து-படிந்து. துளங்கு-விளங்குகின்ற. உள்குவார்-தியானிப்பார். உறுசுவை-நிலைத்த சுவை. செப்பம்-திருத்தம்.

அறிவு சொரூபி என்றும், பிரகாசமயமானவன் என்றும் உன்னைத் தியானிப்பவர்க்கு நீ அருள்புரிகின்றாய். உன்னை வேண்டியழைக்கும் என்மீதும் இரக்கம் கொள்.

உபநி—85. பக்கம் 495ல் காண்க.

7. மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கண்மூன் றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரையனே யடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள் மூன்று எரித்த
கையனே காலால் காலனைக் காய்ந்த
கடும் தழல் பிழம்பு அன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழும் மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஐயனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

விகிர்தா-வெவ்வேறு வடிவெடுப்பவனே. மேவலர்-பகைவர். காலனை-யமனை. காய்ந்த-சினந்த. கடும்தழல் பிழம்பு அன்ன-கொடிய நெருப்புத் திரள் போன்ற.

நீ வெவ்வேறு வடிவெடுக்கும் ஸத் பொருள். முக்குணங்களுக்கு அப்பாற்பட்டவன்; காலத்துக்கு அதீதன்; சுயஞ்ஜோதிமயன் என்று தியானிப்பவர்க்கு அருள் புரிகிறாய். நான் கூப்பிடுவதற்குச் செவிசாய்த்திடுக.

8. முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறு மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரத்தனே யடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

முத்தனே முதல்வா முக்கண முனிவா
மொட்டு அரு மலர் பறித்து இறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்து அருள்செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழும் மலர்க் குருந்தம் மேவிய சீர்
அத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

மொட்டு அரு மலர்-அரும்புத் தன்மை நீங்காத புஷ்பம். பரவுவார்-வணங்குபவர். பரகதி-மோக்ஷ சாம்ராஜ்யம். சித்தனே-சித்தி அல்லது பரிபக்குவம் வடிவெடுத்திருப்பவனே.

நித்திய முக்தன் என்றும், முக்கண்ணன் என்றும், நித்திய சித்தன் என்றும் சிவனுடைய இந்த மகிமைகளையெல்லாம் தியானித்துக்கொண்டிருக்கும் ஜீவன் பரிசுத்தமடைகிறான்.

மொட்டு அரு மலர் நைஷ்டிக பிரமச்சரியத்தையும் குறிக்கும். அதற்கு நிகரான நித்திய வழிபாடு ஆத்ம சாதகனுக்கு வேறு ஒன்றுமில்லை.

9. மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவங்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரருளனே யடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

மருளனேன் மனத்தை மயக்கு அற நோக்கி
மறுமையோடு இம்மையும் கெடுத்த
பொருளனே புனிதா பொங்கும் வாள் அரவம்
கங்கை நீர் தங்கும் செம் சடையாய்
தெருளும் நான்மறை சேர் திருப்பெருந்துறையில்
செழும் மலர்க் குருந்தம் மேவிய சீர்
அருளனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

மருளனேன்-மயங்கிய என். **மயக்கு அற**-தெளிவு உண்டாகும் படி. **பொருளனே**-மெய்ப்பொருளே. **புனிதா**-தூய்மையானவனே. **பொங்கு வாள் அரவம்**-சீறுகிற ஒளிவீசும் பாம்பு. **தெருளும்**- உணர்ச்சி தெளிவடைவதற்கு ஏதுவான.

இம்மை, மறுமை ஆகிய இரண்டிலும் பற்று வைக்காத தெளிந்த விவேகத்தை இறைவன் கொடுத்தருளினுன். அவன் ஒருவனே மெய்ப்பொருள். அவனை மலினப் படுத்துதற்கு வேறு ஒரு பொருள் இன்மையால் அவன் புனிதன். அருளுக்கு அவன் உறைவிடம். ஆதலால் என் அழைப்புக்கு அவன் செவி சாய்ப் பானுக.

பரஞானத்தில் மறுமையோடு இன்மையும் கெடுவன வாகின்றன. ஏனென்ருல் சுவர்க்க வாழ்க்கையும், பூவுலக வாழ்க்கையும் காலத்தில் கட்டுப்பட்டிருக்கின்றன. பரம் என்பதோ காலாதீதம்.

உபநி—*11*. பக்கம் *123*ல் காண்க.

10. திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந்துறையிற்
செழுமலர்க் குருந்த மேவியசீ
ரிருந்தவா றெண்ணி யேசரு நினைந்திட்
டென்னுடை யெம்பிரா னென்றென்
றருந்தவா நினைந்தே யாதரித் தழைத்தா
லலைகட லதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி யிதுகாண்
போதராய் யென்றரு ளாயே.

திருந்து வார் பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழும் மலர்க் குருந்தம் மேவிய சீர்
இருந்தவாறு எண்ணி ஏசரு நினைந்திட்டு
என்னுடை எம்பிரான் என்று என்று
அருந்தவா நினைந்தே ஆதரித்து அழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்த வா கயிலை புகு நெறி இது காண்
போதராய் என்று அருளாயே.

திருந்து வார் பொழில்-செப்பமுற்று அமைந்த நீண்ட சோலை. சீர் இருந்தவாறு-தேவரீர் மேன்மையுற்று வீற்றிருந்த விதம். ஏசறு-ஏசற்று, மனம் உடைந்து. அருந்தவா-கடும் தவம் புரிபவனே. அலைகடல் அதனுளே நின்று-இன்ப துன்பமயமான பிறவிக்கடலை விட்டு விலகி. பொருந்தவா-என்னை அடைய வருக. கயிலை புகு நெறி இது காண்-சிதாகாசத்தில் கலந்துகொள்ளும் உபாயம் இது என்று அறிந்து கொள். போதராய்-வருக.

அன்று நீ அரிய சூழ்நிலையில் வீற்றிருந்து என்னை ஆட்கொண்ட நல்ல வாய்ப்பை எண்ணி இன்று அந்நிலை மீண்டும் கிட்டுமா என்று வருந்துகிறேன். இன்று நீ என்னை உன் மயம் ஆக்குதற் பொருட்டு அருள்புரிவாயாக.

திருக்கழுக்குன்றத்தில் அருளிய

30. திருக்கழுக்குன்றப் பதிகம்

சற்குரு தரிசனம்

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மானுன் னாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோ ரின்ப மேவருந்
துன்பமே துடைத் தெம்பிரா
னுணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாம லென்வினை யொத்தபின்
கணக்கி லாத்திருக் கோல நீ வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

பிணக்கு இலாத பெருந்துறைப் பெருமான்
உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கு இலாதது ஓர் இன்பமே வரும்
துன்பமே துடைத்து எம்பிரான்
உணக்கு இலாதது ஓர் வித்து
மேல் விளையாமல் என் வினை ஒத்த பின்
கணக்கு இலாத் திருக்கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே.

பிணக்கு-சண்டை சச்சரவு. இணக்கு-ஒப்பு. உணக்கு-வற்றுதல், விளைய இயலாது போதல். கணக்கு-எண்ணிக்கை.

ஈசுவர விபூதியில் திளைத்திருப்பவர்க்கு ஒப்பில்லாத இன்பமே வரும். துன்பத்துக்கு ஆங்கு இடமில்லை. தொடர்ந்து பிறவியை உண்டுபண்ணும் அக்ஞானம் என்னும் வித்து பரஞானத்தில் அவிந்து போகிறது. மனம் நடுநிலை யெய்துகிறது; கர்மம் ஓய்கிறது. ஈசனது அகண்ட மகிமை வெளியாகிறது.

எம்பிரான் உணக்கு இலாதது ஓர் வித்து: ஈசன் ஸநாதனம் பீஜம்; அதாவது பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் அவனது திறமை யாண்டும் அழிந்துபோகாதிருக்கிறது.

வினை ஒத்தபின் என்பதற்குப் பொருள் ஸமத்வம் யோக உச்யதே என்பதாம். அதாவது மனம் நடுவுநிலையெய்துங்கால் வினையானது தானே ஓய்வு அடைகிறது.

2. பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்க னேனுனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையு மாட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

பிட்டு நேர்பட மண் சுமந்த
பெருந்துறைப் பெரும் பித்தனே
சட்டம் நேர்பட வந்திலாத
சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறு
நாயினும் கடை ஆய வெம்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே.

சட்டம்-நெறி. நேர்பட-பொருந்த. சழக்கனேன்-குற்றமுடைய நான். சிட்டனே-சீலம் மிக்கவனே. வெம்-கொடிய. கட்டனேனையும்-கஷ்டத்தில் இருக்கிற என்னையும்.

பக்தர்களிடத்து நீ பித்தம் கொண்டவன் என்பதைப் பிட்டுக்கு மண்சுமந்து நிருபித்தாய். நானோ நெறிமுறையில் வந்தில்லாத குற்றவாளி. உன்னைச் சார்ந்தவன் அல்லன்; பல கஷ்டங்களில் உழல்பவன். சிலமே வடிவெடுத்துள்ள நீ என்னையும் ஆட்கொண் டுள்ளாய்.

3. மலங்கி னேன்கண்ணி னீரை மாற்றி
மலங்கெ டுத்தபெ ருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேனினி
மேல்வி ளைவத றிந்திலே
னிலங்கு கின்றநின் சேவ டிகளி
ரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி
மலம் கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேடனேன் இனி
மேல் விளைவது அறிந்திலேன்
இலங்குகின்ற நின் சேவடிகள்
இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே.

மலங்கினேன்-*சலித்த எனது*. விலங்கினேன்-*விட்டு விலகி னேன்*. இலங்குகின்ற-*விளங்குகின்ற*. வைப்பிடம்-*அமர்த்தி வழி படும் இடம்*. கலங்கினேன்-*வருந்தினேன்*.

திருப்பெருந்துறையில் என் கேட்டைக் களைந்து துயரத்தைத் துடைத்தாய். அப்புனிதமான பதியைப் புறக்கணித்த பாவி நான். இனி என்ன செய்வதென்று விளங்கவில்லை. உன் திருவடிகளை நிலைநாட்டுதற்கு என் உள்ளம் தகுதியற்றது. ஆயினும் எனக்கு உன் திருக்கோலத்தைக் கழுக்குன்றிலே காட்டினாய்.

4. பூணொ ணாததொ ரன்பு பூண்டு
பொருந்தி நாடொறும் போற்றவும்
நாணொ ணாததொர் நாண மெய்தி
நடுக்க டலுள ழுந்திநான்

பேணொ ணாதபெ ருந்து றைப்பெருந்
தோணி பற்றி யுகைத்தலுங்
காணொ ணாத்திருக் கோல நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

பூண் ஒணாதது ஓர் அன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாண் ஒணாதது ஓர் நாணம் எய்தி
நடுக்கடலுள் அழுந்தி நான்
பேண் ஒணாத பெருந்துறைப் பெரும்
தோணி பற்றி உகைத்தலும்
காண் ஒணாத் திருக்கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே.

ஒணாதது-முடியாத.

உன் அன்பர் உன்னிடம் பேரன்பு பூண்டு இடையறாது வணங்கினர். நானோ வணங்குதலில் நாணமுற்றுப் பிறவிக் கடலில் அழுந்திக் கிடந்தேன். ஏறத் தகுதியற்ற என்னை நீ திருப்பெருந்துறைத் தெப்பத்தில் ஏற்றினாய். உன் காட்சி காணாத் தகுதியற்ற எனக்கு நீ கழுக்குன்றிலே காட்சியளித்தாய்.

5. கோல மேனிவ ராக மேகுண
மாம்பெ ருந்துறைக் கொண்டலே
சீல மேதும றிந்தி லாதவென்
சிந்தை வைத்த சிகாமணி
ஞால மேகரி யாக நானுனை
நச்சி நச்சிட வந்திடுங்
கால மேயுனை யோத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

கோலம் மேனி வராகமே குணம்
ஆம் பெருந்துறைக் கொண்டலே
சீலம் ஏதும் அறிந்திலாத என்
சிந்தை வைத்த சிகாமணி
ஞாலமே கரி ஆக நான் உனை
நச்சி நச்சிட வந்திடும்
காலமே உனை ஓத நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே.

கோலம்-அழகு. வராகமே-பொன்னே. கொண்டலே-அருள் மேகமே. சீலம்-நல்லநெறி. சிகாமணி-சிரோமணியே. ஞாலமே-உலகமே. கரி-சான்று. நச்சி நச்சிட-மிகவும் விரும்ப. காலமே-காலசொருபியே, மகாகாலனே. ஓத-புகழ்ந்து பாட.

நீ பொன் ஆர் மேனியன்; அருள் மேகம்; என் உள்ளத்தில் ஒளிர்கிற மணி; உலகம் அறிய நான் உன்னை விரும்பினேன்; ஏற்ற கால தத்துவமாக நீ வந்து ஆட்கொண்டாய்; உன்னைப் புகழ்ந்து பாட நீ கழுக்குன்றில் காட்சியளித்தாய்.

6. பேத மில்லதொர் கற்ப ளித்த
பெருந்து றைப்பெரு வெள்ளமே
யேத மேபல பேச நீயெனை
யேதி லார்முன மென்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமை யற்ற
தனிச்ச ரண்சர ணாமெனக்
காத லாலுனை யோத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

பேதம் இல்லது ஓர் கற்பு அளித்த
பெருந்துறைப் பெரு வெள்ளமே
ஏதமே பல பேச நீ எனை
ஏதிலார் முனம் என் செய்தாய்
சாதல் சாதல் பொல்லாமை அற்ற
தனிச் சரண் சரண் ஆம் எனக்
காதலால் உனை ஓத நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே.

பேதம் இல்லது ஓர் கற்பு-அபேத ஞானம் அல்லது அத்துவித ஞானம். ஏதமே-குற்றமே. ஏதிலார்-அயலார். சாதல் சாதல் பொல்லாமை அற்ற-இறத்தல் என்கின்ற பொல்லாங்கு இல்லாத. தனிச்சரண்-ஒப்பற்ற உன் திருவடி. சரண் ஆம் என-அடைக்கலம் ஆகும் என்று. காதலால்-அளவற்ற அன்பால்.

இறைவனுடைய படைப்பில் குறைகாணும் கீழ்நிலையும், அவன் அடி சார்ந்து மரணத்தை மீளுதல் என்னும் மேல் நிலையும் அத்துவித ஞானத்தில் அடிபடுகின்றன. இந்த அபேத ஞானத்தை நீ எனக்குத் திருக்கழுக்குன்றிலே கொடுத்து அருளினாய்.

ஜீவாத்மனுக்கு உண்மையான கற்புநிலை அத்வைதத்தில்தான் உளது. துவைத நிலையில் அயலார் என்னும் பேதம் உண்டு. ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுதற்கும் ஆங்கு இடம் உண்டு. மயக்கத்தால் வந்துள்ள பிறவி நோயை அகற்றுதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளுதலும் துவைத நிலையில் நிகழ்கிறது. இதில் மற்றொரு மகிமையுண்டு. இறைவனுடைய திருவடி (சரணம்) चरणम् நாடி அதில் (சரணம்) शरणम् அடைக்கலம் புகுதல் ஜீவாத்மாவுடைய ஒப்பற்ற செயலாம். சரணம், சரணம் என்னும் இரட்டுற மொழிதல் சுவைப்பதற்கு உரிய சிலேடையாம்.

7. இயக்கி மாரறு பத்து நால்வரை
யெண்குணஞ் செய்த வீசனே
மயக்க மாயதோர் மும்ம லப்பழ
வல்வி னைக்கு ளழுந்தவுந்
துயக்க றுத்தெனை யாண்டு கொண்டுநின்
றூம லர்க்கழ றந்தெனைக்
கயக்க வைத்தடி யார்மு னேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

இயக்கிமார் அறுபத்து நால்வரை
எண் குணம் செய்த ஈசனே
மயக்கம் ஆயது ஓர் மும்மலம் பழ
வல் வினைக்குள் அழுந்தவும்
துயக்கு அறுத்து எனை ஆண்டுகொண்டு நின்
தூ மலர்க் கழல் தந்து எனைக்
கயக்க வைத்து அடியார் முனே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே.

துயக்கு-தளர்வு. கயக்க வைத்து-வாடியிருக்கும்படி செய்து.

கலைஞானங்கள் அறுபத்து நான்கையும் பெண்பாலர்களாகக் கருதுவது மரபு; அக்கலைகளை உலக இன்பத்துக்குப் பயன்படுத்துவது கீழ்மை. புனிதமான பாங்கில் அவைகளைப் பயன்படுத்துங்கால் பரமன் எண்குணத்தான் அல்லது அஷ்டமூர்த்தி என்னும் அனுபவம் வாய்க்கும். ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்கள் அஞ்ஞானத்தின் விளைவு. அவைகளோடு சேர்க்கையால்

ஜீவாத்மாவுக்குத் துன்பம் வருகிறது. இறைவனுடைய அனுக்கிர கத்தால் அத்துன்பம் அகற்றப்படுகிறது. பின்பு பரநாட்டம் அதி கரிக்கிறது. அதனுல் விளையும் உடல்மெலிவு ஜீவாத்மாவுக்குத் தெய் விக சோபை தருகிறது. அந்த மேலாம் நிலையில் ஜீவாத்மா பரமாத் மாவோடு ஒன்றுபடுகிறது. அத்தகைய அருள்நாட்டத்தை நீ எனக்குக் கழுக்குன்றிலே ஊட்டினுய்.

ஸ்ரீ ராமன் பரமாத்ம தத்துவம்; சீதை ஜீவாத்ம தத்துவம், ராமனைச் சேர்ந்த சீதை சிறை கிடந்து அவனை நாடி வாடியதன் விளைவாகப் பன்மடங்கு மேலான தெய்விகப் பண்பை அவள் எய்தினுள். அருள்தாகம் கொண்டுள்ள ஜீவர்கள் அனைவர்க்கும் இக்கோட்பாடு பொருந்தும்.

தில்லையில் அருளிய

31. கண்ட பத்து

நிருத்த தரிசனம்

கொச்சகக் கலிப்பா

1. இந்திரிய வயமயங்கி
 யிறப்பதற்கே காரணமா
 யந்தரமே திரிந்துபோ
 யருநரகில் வீழ்வேனைச்
 சிந்தைதனைத் தெளிவித்துச்
 சிவமாக்கி யெனையாண்ட
 வந்தமிலா வானந்த
 ம்ணிகொடில்லை கண்டேனே.

இந்திரியம் வயம் மயங்கி
இறப்பதற்கே காரணம் ஆய்
அந்தரமே திரிந்துபோய்
அரு நரகில் வீழ்வேனைச்

சிந்தைதனைச் தெளிவித்துச்
சிவம் ஆக்கி எனை ஆண்ட
அந்தம் இலா ஆனந்தம்
அணிகொள் தில்லை கண்டேனே.

இந்திரியம்-ஐம்பொறிகள். அந்தரமே-திமையிலே. அணி கொள்-அழகுடைய.

ஐம்பொறிகளில் பொருந்திய வாழ்வு மரணத்துக்கும் நரகத் துக்கும் ஏதுவானது. அவைகளினின்று மீளுதல் பரத்தை அடை தற்கு உற்ற உபாயமாம். அப்பெரு நிலை எனக்குத் தில்லையில் வாய்த்தது.

2. வினைப்பிறவி யென்கின்ற
வேதனையி லகப்பட்டுத்
தனைச்சிறிது நினையாதே
தளர்வெய்திக் கிடப்பேனை
யெனைப்பெரிது மாட்கொண்டென்
பிறப்பறுத்த விணையிலியை
யனைத்துலகுந் தொழுந்தில்லை
யம்பலத்தே கண்டேனே.

வினைப் பிறவி என்கின்ற
வேதனையில் அகப்பட்டுத்
தனைச் சிறிதும் நினையாதே
தளர்வு எய்திக் கிடப்பேனை
எனைப் பெரிதும் ஆட்கொண்டு
என் பிறப்பு அறுத்த இணை இலியை
அனைத்து உலகும் தொழும் தில்லை
அம்பலத்தே கண்டேனே.

சிவ சிந்தனையில் ஊறியிருப்பவரை வினையின் விளைவாகிய இன்ப துன்பங்கள் அசைக்கமாட்டா. நானே வினையின் வசப்பட்ட வன். அத்தகையவனை அவன் ஆண்டருளியதைத் தில்லையில் கண்டேன்.

3. உருத்தெரியாக் காலத்தே
யுள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக்
கருணையினு லாண்டுகொண்ட

திருத்துருத்தி மேயானைத்
  தித்திக்குஞ் சிவபதத்தை
யருத்தியினு னாயடியே
  னணிகொடில்லை கண்டேனே.

உருத் தெரியாக் காலத்தே
  உள் புகுந்து என் உளம் மன்னிக்
கருத் திருத்தி ஊன் புக்குக்
  கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத்
  தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாய் அடியேன்
  அணிகொள் தில்லை கண்டேனே.

மன்னி - நிலைபெற்று. கருத் திருத்தி - பிறவியைத் திருத்தி யமைத்து. அருத்தியினால்-ஆசையினால்.

எனக்குப் பகுத்தறிவு வருவதற்கு முன்பே என் உள்ளம் உடல் ஆகியவைகளைத் தன்மயம் ஆக்கிக்கொண்ட சிவனிடத்து எனக்கு ஆசை அதிகரிக்கிறது.

4. கல்லாத புல்லறிவிற்
  கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து
  வனப்பெய்தி யிருக்கும் வண்ணம்
பல்லோருங் காணவென்றன்
  பசுபாச மறுத்தானை
யெல்லோரு மிறைஞ்சுதில்லை
  யம்பலத்தே கண்டேனே.

கல்லாத புல் அறிவின்
  கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் ஆய் வந்து
  வனப்பு எய்தி இருக்கும் வண்ணம்
பல்லோரும் காண என் தன்
  பசு பாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சு தில்லை
  அம்பலத்தே கண்டேனே.

வல்லாளன் ஆய்-சர்வ சக்திமான் ஆய். வனப்பு-ஆத்மிக அழகு. பசுபாசம்-ஜீவபோதம், ஜீவ உபாதி. இறைஞ்சு-வணங்கும்.

அக்ஞானப் புன்மையில் உழன்று கிடந்த எனக்கு அப் பேராளன் சிவஞானப் பொலிவை வழங்கியுள்ளான்.

5. சாதிகுலம் பிறப்பென்னுஞ்
சுழிப்பட்டுத் தடுமாறு
மாதமிலி நாயேனை
யல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம்
யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக்
குலாவுதில்லை கண்டேனே.

சாதி குலம் பிறப்பு என்னும்
சுழிப் பட்டுத் தடுமாறும்
ஆதம் இலி நாயேனை அல்லல்
அறுத்து ஆட்கொண்டு
பேதை குணம் பிறர் உருவம்
யான் எனது என் உரை மாய்த்துக்
கோது இல் அமுது ஆனானைக்
குலாவு தில்லை கண்டேனே.

சுழி-சுழல். ஆதம்-ஆதரவு. பேதை-அறியாமை. கோது-குற்றம். குலாவு-விளங்குகின்ற

சிறுமைகள் அனைத்துக்கும் உறைவிடமாகிய ஜீவ போதத்தை என்னிடமிருந்து அகற்றிய அமிர்தசாகரமானவன் சிவன்.

மனதில் எண்ணும் கற்பிதமான எண்ணங்களே உபாதிகள் எனப்படுகின்றன.

6. பிறவிதனை யறமாற்றிப்
பிணிமூப்பென் றிவையிரண்டு
முறவினொடு மொழியச்சென்
றுலகுடைய வொருமுதலைச்

செறிபொழில்சூழ் தில்லைநகர்த்
திருச்சிற்றம் பலமன்னி
மறையவரும் வானவரும்
வணங்கிடநான் கண்டேனே.

பிறவிதனை அற மாற்றிப்
பிணி மூப்பு என்று இவை இரண்டும்
உறவினொடும் ஒழியச் சென்று
உலகு உடைய ஒரு முதலைச்
செறி பொழில் சூழ் தில்லை நகர்த்
திருச்சிற்றம்பலம் மன்னி
மறையவரும் வானவரும்
வணங்கிட நான் கண்டேனே.

முதலை-முதல்வனை, சிவபெருமானை. செறி-அடர்ந்த.

உலகுக்கு முதல்வன் பிறவி, பிணி முதலிய உலக விகாரங்களினின்று என்னை விடுவித்துள்ளான்.

7. பத்திமையும் பரிசுமிலாப்
பசுபாச மறுத்தருளிப்
பித்தனிவ னெனவென்னை
யாக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றாற்
றிருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல்
விளங்குதில்லை கண்டேனே.

பத்திமையும் பரிசும் இலாப்
பசு பாசம் அறுத்தருளிப்
பித்தன் இவன் என என்னை
ஆக்குவித்துப் பேராமே
சித்தம் எனும் திண் கயிற்றால்
திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல்
விளங்கு தில்லை கண்டேனே.

பத்திமையும் - ஆழ்ந்த அன்பும். பரிசும் - நல்லொழுக்கமும். பேராமே-விலகாமல். வித்தகனார்-ஞான சொரூபி.

ஜீவ உபாதி ஒழியுங்கால் மனது சிவபோதத்தில் லயமாகிறது. பின்பு பக்தி பண்ணுவதும் சதாசாரத்தில் ஊன்றியிருப்பதும் தேவையில்லை. ஆதலால் அந்த நிறைஞானியைப் பித்தன் என்று உலகத்தவர் அறியாமையினால் பொருள்படுத்துவர்.

8. அளவிலாப் பாவகத்தா
லமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்று மறியாதே
வெறுவியனாய்க் கிடப்பேனுக்
களவிலா வானந்த
மளித்தென்னை யாண்டானைக்
களவிலா வானவருந்
தொழுந்தில்லை கண்டேனே.

அளவு இலாப் பாவகத்தால்
அமுக்கு உண்டு இங்கு அறிவு இன்றி
விளைவு ஒன்றும் அறியாதே
வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு
அளவு இலா ஆனந்தம்
அளித்து என்னை ஆண்டானைக்
களவு இலா வானவரும்
தொழும் தில்லை கண்டேனே.

அளவு இலாப் பாவகத்தால்-மனதின் அகண்டாகார விருத்தியிலே. அறிவு இன்றி-ஜடம் போன்று. விளைவு ஒன்றும் அறியாதே-உலக வியவகாரங்களைக் கருத்தில் வாங்காமலே. வெறுவியனாய்-சவம் போன்றவனாய். களவு-கபடம், தீக்குணம்.

இது ஜடசமாதி எனப்படுகிறது. புறத்தோற்றத்தில் பிணம் போன்று கிடக்கிறது; அகத்தில் அகண்டானந்தம் மிளிர்கிறது.

9. பாங்கினொடு பரிசொன்று
மறியாத நாயேனை
யோங்கியுளத் தொளிவளர
வுலப்பிலா வன்பருளி

வாங்கிவினை மலமறுத்து
வான்கருணை தந்தானை
நான்குமறை பயிறில்லை
யம்பலத்தே கண்டேனே.

பாங்கினொடு பரிசு ஒன்றும்
அறியாத நாயேனை
ஓங்கி உளத்து ஒளிவளர
உலப்பு இலா அன்பு அருளி
வாங்கி வினை மலம் அறுத்து
வான் கருணை தந்தானை
நான்கு மறை பயில் தில்லை
அம்பலத்தே கண்டேனே.

பாங்கினொடு பரிசு ஒன்றும் அறியாத-பண்பும் பயனும் அறியாத, சமயோசித புத்தியில்லாத, பரஞானமும் அதன் பிரயோசனமும் அறியாத. ஓங்கி உளத்து ஒளிவளர-ஆத்மப் பிரகாசம் மனதில் ஓங்கி வளருமாறு. உலப்பு இலா அன்பு அருளி-கெடாத பிரேமை பக்தியைக் கொடுத்து. வாங்கி வினை-வினையை நீக்கி. வான் கருணை-மேலான கருணை.

பரிபாகம் அடையாத என்னை அவன் தன் மயமாக்கிக்கொண்டது அவனது கருணை.

10. பூதங்க ளைந்தாகிப்
புலனாகிப் பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப்
பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட
கிளரொளியை மரகதத்தை
வேதங்க டொழுதேத்தும்
விளங்குதில்லை கண்டேனே.

பூதங்கள் ஐந்து ஆகிப்
புலன் ஆகிப் பொருள் ஆகிப்
பேதங்கள் அனைத்தும் ஆய்ப்
பேதம் இலாப் பெருமையனைக்

கேதங்கள் கெடுத்து ஆண்ட
கிளர் ஒளியை மரகதத்தை
வேதங்கள் தொழுது ஏத்தும்
விளங்கு தில்லை கண்டேனே.

கேதங்கள்-துன்பங்கள். கிளர் ஒளியை-சுயஞ்ஜோதியை. மரகதத்தை-பச்சை மணியை, உமாதேவியை.

சக்தியின் துணைகொண்டு எண்ணிறந்த பேதங்களைப் பிரபஞ்சத்தில் காட்டுகிற பரமன் யாண்டும் அபேதமாய், தனிப் பொருளாய்த் திகழ்கிறான்.

திருப்பெருந்துறையில் அருளிய

32. பிரார்த்தனைப் பத்து

சதா முத்தி

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

காமியப் பிரார்த்தனை, நிஷ்காமியப் பிரார்த்தனை என இரண்டு விதப் பிரார்த்தனைகள் உண்டு. ஆயுள், ஆரோக்கியம், உலக சம்பத்,சுவர்க்கப் பிராப்தி ஆகியவைகள் காமியப் பிரார்த்தனையில் அடங்குகின்றன. மற்று ஈசனுடைய அருள், பக்தி, ஞானம், வைராக்கியம், விவேகம், முக்தி ஆகியவைகள் நிஷ்காமியப் பிரார்த்தனையில் இடம் பெறுகின்றன. ஆத்ம சாதகர்கள் ஒருநாளும் காமியப் பிரார்த்தனை செய்யலாகாது. நிஷ்காமியப் பிரார்த்தனையே அவர்களுக்குரிய பெரும்பேறு ஆகும்.

1. கலந்து நின்னடி யாரோ டன்று
வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
புகுந்து நின்ற திடர்பின்னு

உபநிஷத் மந்த்ரம்—106.

संगच्छध्वं संवदध्वं संवोमनांसि जानताम्
समानो मन्त्रस्समितिस्समानी
समानं मनस्सहचित्तमेषाम् ।

ளுலர்ந்து போனே னுடையானே
யுலவா வின்பச் சுடர்காண்பா
னலந்து போனே னருள்செய்யா
யார்வங் கூர வடியேற்கே.

கலந்து நின் அடியாரோடு அன்று
வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
புகுந்து நின்றது இடர் பின் நாள்
உலர்ந்து போனேன் உடையானே
உலவா இன்பம் சுடர் காண்பான்
அலந்து போனேன் அருள் செய்யாய்
ஆர்வம் கூர அடியேற்கே.

வாளா - வீணாக. புலர்ந்து - கழிந்து. உலர்ந்து - வாட்டம் அடைந்து. உலவா-கெடாத. உலவா இன்பம்சுடர்-நித்திய தேஜோ மயானந்தம். அலந்து போனேன் - துன்பப்பட்டொழிந்தேன். ஆர்வம் கூர-சிரத்தை மிகுதல் பொருட்டு.

समानी व आकूतिसमाना हृदयानि वः ॥
समानमस्तु वो मनो यथा वस्सुसहासति ॥

ஸங்கச்சத்வம் ஸம்வதத்வம் ஸம்வோ மனும்ஸி ஜானதாம்
ஸமானோ மந்த்ர: ஸமிதி: ஸமானீ
ஸமானம் மன: ஸஹசித்தம் ஏஷாம் ।
ஸமானீ வ ஆகூதி: ஸமானா ஹ்ருதயானி வ: ॥
ஸமானம் அஸ்து வோ மனோ யதா வஸ்ஸு ஸஹாஸதி ॥

(ரிக்வேதம்)

संगच्छध्वं ஸங்கச்சத்வம் கூடியிருங்கள் संवदध्वं ஸம்வதத்வம் ஒத்துப் பேசுங்கள் वः मनांसि வ: மனும்ஸி உங்கள் உள்ளங்கள் संजानतां ஸம்ஜானதாம் ஒரே பாங்கில் ஓர்க मन्त्रः समानो மந்த்ர: ஸமானோ பிரார்த்தனை பொதுவானது ஆகுக समितिः समानी ஸமிதி: ஸமானீ கூட்டத்தின் குறிக்கோள் ஒன்றேயாகுக समानं मनः ஸமானம் மன: ஒரே தீர்மானம் கொள்ளுங்கள் एषाम् ஏஷாம் உங்களுடைய सहचित्तं ஸஹசித்தம் நோக்கம் ஒன்றேயாகுக वः आकूतिः வ: ஆகூதி:

அன்று உன் அன்பர் சத்சங்கத்தில் என்னை மறந்து இன்புற்றிருந்தேன். இனிய அக்காலம் கடந்து போயிற்று; உனது ஜோதியில் ஒன்றுபட இன்று வாடிக்கிடக்கிறேன். அருள் நாட்டத்தில் நான் மேலும் ஊக்கம் கொள்வேனாக.

2. அடியார் சிலருன் னருள்பெற்றா
        ரார்வங் கூர யானவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி
        முனிவா லடியேன் மூக்கின்றேன்
கடியே னுடைய கடுவினையைக்
        களைந்துன் கருணைக் கடல்பொங்க
வுடையா யடியே னுள்ளத்தே
        யோவா துருக வருளாயே.

அடியார் சிலர் உன் அருள் பெற்றார்
        ஆர்வம் கூர யான் அவமே
முடை ஆர் பிணத்தின் முடிவு இன்றி
        முனிவால் அடியேன் மூக்கின்றேன்
கடியேனுடைய கடுவினையைக்
        களைந்து உன் கருணைக் கடல் பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே
        ஓவாது உருக அருளாயே.

உங்களுடைய உணர்ச்சி समानो ஸமானோ ஒன்று படுக. वः हृदयानि வ: ஹ்ருதயானி உங்களுடைய அன்பு समाना ஸமானா சேர்ந்திருக்கட்டும் वः मनः வ: மன: உங்களுடைய எண்ணம் समानं ஸமானம் ஒன்றேயாகுக यथा யதா அங்ஙனமே वः வ: உங்களுடைய सु सहासति ஸ॰ ஸஹாஸதி ஒற்றுமையானது நிறைவு எய்துக.

கூடியிருங்கள். ஒத்துப் பேசுங்கள். உங்கள் உள்ளங்கள் ஒரே பாங்கில் ஓர்க. பிரார்த்தனை பொதுவானது ஆகுக. உங்கள் கூட்டத்தின் குறிக்கோள் ஒன்றேயாகுக. ஒரே தீர்மானம் கொள்ளுங்கள். உங்களுடைய நோக்கம் ஏகோபித்து இருக்கட்டும். உங்களுடைய உணர்ச்சியில் ஒற்றுமை நிலவுக. உங்களுடைய அன்பில் ஐக்கியம் ஓங்குக. உங்களுடைய எண்ணம் இணைந்திருக்கட்டும். அங்ஙனமே உங்களுடைய இணக்கம் நிறைவு எய்துக.

அவமே-பயனில்லாமல். மூடை-தீய நாற்றம். முடிவு-எல்லை. முனிவால்-கோபத்தால். மூக்கின்றேன்-மூப்பு அடைகின்றேன். கடியேனுடைய-இளகாத உள்ளமுடைய எனது. ஓவாது-இடை விடாது.

உன்னை நாடியதால் அடியார் உன்னை அடைந்தனர். உடலைப் பேணியதால் நான் வினையைப் பெருக்கினேன். அத்தகைய எனக்கு அருள் நாட்டம் தருக.

ஒரு மனிதனுக்குக் கோபம் மேலோங்குமளவு அவன் விரைவில் விருத்தாப்பியம் அடைகிறான்.

3. அருளா ரமுதப் பெருங்கடல்வா
யடியா ரெல்லாம் புக்கழுந்த
விருளா ராக்கை யிதுபொறுத்தே
யெய்த்தேன் கண்டா யெம்மானே
மருளார் மனத்தோ ருன்மத்தன்
வருமா லென்றிங் கெனைக்கண்டார்
வெருளா வண்ண மெய்யன்பை
யுடையாய் பெறநான் வேண்டுமே.

அருள் ஆர் அமுதம் பெரும் கடல் வாய்
அடியார் எல்லாம் புக்கு அழுந்த
இருள் ஆர் ஆக்கை இது பொறுத்தே
எய்த்தேன் கண்டாய் எம்பானே
மருள் ஆர் மனத்து ஓர் உன்மத்தன்
வருமால் என்று இங்கு எனைக் கண்டார்
வெருளா வண்ணம் மெய் அன்பை
உடையாய் பெற நான் வேண்டுமே.

பொறுத்தே-சுமந்தே. எய்த்தேன்-இளைத்தேன். மருள்-தெளி வின்மை. உன்மத்தன்-பெரும்பித்தன். வரும்-இதோ வருகிறான் என்று. வெருளா வண்ணம்-அஞ்சாதபடி.

அடியார் எல்லாரும் உன் அருள் கடலில் ஆனந்தம் துய்க் கின்றனர். நானே உடம்பைச் சுமந்து இளைத்தேன். நான் மெய் யன்பன் ஆகாவிட்டால் மருள் பித்தன் ஆவேன்; அதுவேண்டாம்.

4. வேண்டும் வேண்டு மெய்யடியா
ருள்ளே விரும்பி யெனையருளா
லாண்டா யடியே னிடர்களைந்த
வமுதே யருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்ட னேற்கு முண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க வன்பே மேவுதலே.

வேண்டும் வேண்டும் மெய் அடியார்
உள்ளே விரும்பி எனை அருளால்
ஆண்டாய் அடியேன் இடர் களைந்த
அமுதே அருமா மணி முத்தே
தூண்டா விளக்கின் சுடர் அனையாய்
தொண்டனேற்கும் உண்டாம் கொல்
வேண்டாது ஒன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே.

இடர்-துன்பம். வேண்டாது ஒன்றும் வேண்டாது-பயன்படாத எதையும் நாடாது.

உபநிஷத் மந்த்ரம்—107.

ओं तच्छंयोरावृणीमहे । गातुं यज्ञाय गातुं यज्ञपतये ।
दैवीस्वस्तिरस्तु नः स्वस्तिर्मानुषेभ्यः । ऊर्ध्वं जिगातु भेषजम् ।
शन्नो अस्तु द्विपदे शं चतुष्पदे ॥

ஓம் தச்சம் யோராவ்ருணீமஹே காதும் யக்ஞாய காதும் யக்ஞபதயே। தைவீஸ்வஸ்திரஸ்து ந: ஸ்வஸ்திர்மானுஷேப்ய:। ஊர்த்வம் ஜிகாது பேஷஜம்। சன்னோ அஸ்து த்விபதே சம் சதுஷ்பதே ॥

(புருஷ ஸூக்தம்)

ओं ஓம் तत् शंयोः தத் சம்யோ: நமது நலத்துக்காக வென்று आ वृणीमहे ஆ வ்ருணீமஹே நாம் பிரார்த்திப்போமாக यज्ञाय யக்ஞாய வேள்வியைப் போற்றி गातुं காதும் பாடுவோமாக यज्ञपतये யக்ஞபதயே வேள்வி வேட்பவனைப் போற்றி गातुं காதும் பாடுவோமாக दैवी स्वस्ति अस्तु தைவீ

நாடவேண்டியதாகிய உனது அருளையே வேண்டும் அன்பர் கூட்டத்தில் நீ என்னைச் சேர்த்து வைத்தாய். நீ அருள்ஜோதி தெய்வம். உன்னை அடைவதற்கு உதவாத உலக நாட்டம் ஏதும் வேண்டாமென்று விலக்கி வைத்துவிட்டு நான் உன்னையே வேண்டு வேனாக.

5. மேவு முன்ற னடியருள்
விரும்பி யானு மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள்
பங்கா வுன்றன் கருணையினாற்
பாவி யேற்கு முண்டாமோ
பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்
தாவி யாக்கை யானெனதென்
றியாது மின்றி யறுதலே.

स्वस्ति ஸ்வஸ்தி अस्तु அஸ்து கடவுள் கிருபை(?) இருக்கட்டும் नः நः நமக்கு स्वस्ति मानुषेभ्यः ஸ்வஸ்தி மானுஷேப்ய: மனிதர்க்கு நலன் உண்டாகட்டும் भेषजम् பேஷஜம் பயிர் பச்சைகள் ऊर्ध्वं ஊர்த்வம் ஓங்கி जिगातु ஜிகாது வளர்க नः द्विपदे ந: த்வி பதே இரண்டு கால் பிராணிகளாகிய நமக்கு शं अस्तु சம் அஸ்து ஆக்கம் உண்டாகுக. चतुष्पदे சதுஷ்பதே கால்நடை களுக்கு शं சம் ஆக்கம் உண்டாகுக.

ஓம் நமது நலத்துக்காகவென்று நாம் பிரார்த்திப்போமாக. வேள்வியைப் புகழ்ந்து பாடுவோமாக. கேள்வி கேட்பவனைப் புகழ்ந்து பாடுவோமாக. கடவுள்நமக்கு அருள்புரிவாராக. மக்க ளுக்கு நலன் உண்டாகுக. பயிர் பச்சை செழித்துவளர்க. நமக்கு ஆக்கம் உண்டாகுக. ஆடு மாடுகளுக்கு ஆக்கம் உண்டாகுக.

இயற்கையில் உள்ள உயிர்வகைகள் அனைத்துட னும் இனிய இணக்கம் வைத்து வாழ்வது வைதிக வாழ்வு. உயிர்கள் அனைத்தின் நலனைக் கோருவது பிரார்த்தனை. பொது நலனுக்கு அமைந்துள்ள பணி விடை வேள்வி எனப்படுகிறது. வேள்வி வேட்பவன் யஜமானன் எனப்படுகிறான்.

மேவும் உன் தன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேரும் கயல் கண்ணாள்
பங்கா உன் தன் கருணையினால்
பாவியேற்கும் உண்டாமோ
பரமானந்தம் பழங்கடல் சேர்ந்து
ஆவி யாக்கை யான் எனது என்று
யாதும் இன்றி அறுதலே.

மேவும்-விரும்பியடையும். காவி-நீலோத்பலம். கயல்கண்ணாள்-மீனாக்ஷி.

மீனின் வடிவத்தையும் கருங்குவளைப் பூவின் நிறத்தையும் உடைய கண்படைத்த பராசக்தியின் பங்கா, உன் அடியார் அனைவரும் உன்னையே நாடி உனது அகண்டாகாரத்தில் ஒன்றாயினர். யானும் எனது ஜீவ வியக்தியை அங்ஙனம் கரைத்தொழிப்பேனாக.

6. அறவே பெற்றார் நின்னன்ப
ரந்த மின்றி யகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்பு கின்றே னுடையானே
பெறவே வேண்டு மெய்யன்பு
பேரா வொழியாப் பிரிவில்லா
மறவா நினையா வளவிலா
மாளா வின்ப மாகடலே.

அறவே பெற்றார் நின் அன்பர்
அந்தம் இன்றி அகம் நெகவும்
புறமே கிடந்து புலை நாயேன்
புலம்புகின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய் அன்பு
பேரா ஒழியாப் பிரிவு இல்லா
மறவா நினையா அளவு இலா
மாளா இன்பம் மா கடலே.

அறவே-முற்றும். பேரா-அவன் அகண்ட சிதாகாசமாதலால் இடம் மாறிப்போவதில்லை. ஒழியா - பிரபஞ்சம் பிரளயத்தில்

ஒடுங்குவது போன்று அவன் ஒடுங்குவதில்லை. பிரிவு இல்லா-ஒரு ஜீவாத்மா இன்னொரு ஜீவாத்மாவிடமிருந்து பிரிவது போன்று பரமன் யாரையும் விட்டுப் பிரிவதில்லை. மறவா-மறத்தல் மனதின் செயல். மனதீதனாகிய அவனுக்குத் தன் சொரூபத்தை மறத்தல் கிடையாது. நினையா-புதிதாக அவன் நினைப்பதற்கு ஒன்றுமில்லை. அளவு இலா-அவன் அளப்பரிய அகண்ட வஸ்து. மாளா-உயிருக்கு உயிராகிய அவனுக்குச் சாவு இல்லை.

சிவானந்தம் கருவிகரணங்களுக்கு அப்பாற்பட்ட பாரமார்த்திகப் பெருநிலையாம். சிவ பக்தர்கள் அதை அடையப்பெற்றனர். பரமனை நாடுகிற எனக்கும் அது வாய்ப்பதாகுக.

7. கடலே யனைய வானந்தங்
கண்டா ரெல்லாங் கவர்ந்துண்ண
விடரே பெருக்கி யேசற்றிங்
கிருத்த லழகோ வடிநாயே
னுடையாய் நீயே யருளுதியென்
றுணர்த்தா தொழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடரா ரருளா லிருணீங்கச்
சோதி யினித்தான் றுணியாயே.

கடலே அனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்து உண்ண
இடரே பெருக்கி ஏசற்று இங்கு
இருத்தல் அழகோ அடி நாயேன்
உடையாய் நீயே அருளுதி என்று
உணர்த்தாது ஒழிந்தே கழிந்து ஒழிந்தேன்
சுடர் ஆர் அருளால் இருள் நீங்கச்
சோதி இனித்தான் துணியாயே.

உபநிஷத் மந்த்ரம்—108.

उदुत्तमं वरुण पाशमस्मदवाधमं विमध्यमं श्रथाय ।
अथादित्य व्रतेवयन्तवानागसो अदितये स्याम ॥

உத் உத்தமம் வருண பாசம் அஸ்மத்
அவ அதமம் விமத்யம் ச்ரதாய ।
அத ஆதித்ய வ்ருதே வயன் தவ அநாகஸோ
அதிதயே ஸ்யாம ॥

(ரிக்வேத ஸம்ஹிதை)

இட்ரே-துன்பமே. ஏசற்று-தளர்ந்து.

உன் அடியார் எல்லாரும் உனது பேரானந்தக் கடலில் திளைத்திருக்கின்றனர். நானே இந்நிலவுலகில் துன்பத்தைப் பெருக்கி இளைத்துக் கிடப்பது அழகாகுமோ? உடையவனாகிய நீ வலிய

वरुण வருண போற்றுதற்குரிய பெரிய பொருளே अस्मत् அஸ்மத் எங்களுடைய उत्तमं पाशं உத்தமம் பாசம் மேலாய தளையை उत् श्रथाय உத் ச்ரதாய வெட்டிக் களைக मध्यमं पाश மத்யமம் பாசம் இடைத்தரமான தளையை वि श्रथाय வி ச்ரத்தாய பாழாக்குக अधमं पाशं அதமம் பாசம் கடைத்தரமான தளையை अवश्रथाय அவச்ரதாய அகற்றுக आदित्य ஆதித்ய நிலைபேறுடைய பொருளே तव व्रते தவ ப்ருதே உனது ஆணையால் अनागसः वयम् அனுகஸ: வயம் பாபங்கள் அனைத்தினின்று விடுவிக்கப்பட்டுள்ள நாங்கள் अदितये அதிதயே உலப்பில்லா ஆனந்தத்தை स्याम ஸ்யாம அனுபவிப்போம்.

போற்றுதற்குரிய பெரிய பொருளே, எங்களது மேலாய தளையை வெட்டிக் களைக. இடைத்தரமான தளையைப் பாழாக்குக. கடைத்தரமான தளையை அகற்றுக. நிலைபேறுடைய பொருளே! உனது ஆணையால் பாபங்கள் அனைத்தினின்று விடுபட்டுள்ள நாங்கள் உலப்பில்லா ஆனந்தத்தை அனுபவிப்போம்.

மேலாய தளையானது அத்யாத்மிக பாசம் எனப்படுகிறது. மனிதன் தனக்குத்தானே உண்டுபண்ணிக்கொள்ளும் பந்தம் மிகக்கொடியது. விவேகம் என்னும் வாளைக் கொண்டு அதை வெட்டித்தள்ளவேண்டும். ஆதிதெய்விக பாசம் இடைத்தரமான தளையாகிறது. இயற்கையின் நடைமுறைக்கு அல்லது தெய்வ சங்கல்பத்துக்கு மாறுபடுவதால் அது உண்டாகிறது. பொருத்தமான கால-தேச-நிமித்தத்தைக் கொண்டு அதைத் தவிர்க்கலாம். ஆதி பௌதிக பாசம் கடைத்தரமான தளையாகிறது. பிரதிகூலமான சூழ்நிலை அதற்குக் காரணமாகிறது. சூழ்நிலையைத் திருத்தியமைப்பதால் அத்தகைய தளையைக் களைக்கலாம். அருளைச் சார்ந்துள்ள முயற்சியால் மூன்று

ஆட்கொள்வாய் என்று எண்ணி நான் இதுவரைக்கும் உன்னிடம் பிரார்த்தனை பண்ணவில்லை. இப்பொழுது பிந்திப் பிரார்த்திக்கிறேன். ஆட்கொள்வாயாக.

8. துணியா வுருகா வருள்பெருகத்
தோன்றுந் தொண்ட ரிடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன்
சிவனே நின்று தேய்கின்றே
னணியா ரடியா ருனக்குள்ள
வன்புந் தாரா யருளளியத்
தணியா தொல்லை வந்தருளித்
தளிர்ப்பொற் பாதந் தாராயே.

துணியா உருகா அருள் பெருகத்
தோன்றும் தொண்டர் இடைப் புகுந்து
திணி ஆர் மூங்கில் சிந்தையேன்
சிவனே நின்று தேய்கின்றேன்
அணி ஆர் அடியார் உனக்கு உள்ள
அன்பும் தாராய் அருள் அளியத்
தணியாது ஒல்லை வந்தருளித்
தளிர்ப் பொன் பாதம் தாராயே.

துணியா - துணிந்து. உருகா - உருகி. திணி ஆர் மூங்கில்-கெட்டியான மூங்கில். அருள் அளிய-அருள் கனிய. தணியாது-தாமதியாது. ஒல்லை-விரைவில்.

உன் அடியார் முற்றிலும் பக்குவமானவர்கள். நானே இன்னும் பக்குவம் ஆகாதிருக்கிறேன். ஆயினும் என்னை விரைவில் நீ பக்குவப்படுத்துவாயாக.

9. தாரா வருளொன் றின்றியே
தந்தா யென்றுன் றமரெல்லா
மாரா நின்றா ரடியேனு
மயலார் போல வயர்வேனோ

விதப் பாசங்களையும் போக்கலாம். பிரார்த்தனையே அதற்கு உற்ற உபாயமாகிறது.

சீரா ரருளாற் சிந்தனையைத்
திருத்தி யாண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை
வைக்க வேண்டும் பெருமானே.

தாரா அருள் ஒன்று இன்றியே
தந்தாய் என்று உன் தமர் எல்லாம்
ஆரா நின்றார் அடியேனும்
அயலார் போல அயர்வேனோ
சீர்ஆர் அருளால் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா
பேர் ஆனந்தம் பேராமை
வைக்கவேண்டும் பெருமானே.

ஆராநின்றார்-அனுபவித்திருந்தனர். பேராமை - நீங்காமை

அருளைப் பரிபூரணமாக வழங்கியுள்ளாய் என்று உன் அன்பர்கள் அதில் திளைத்திருக்கின்றனர். மற்று நான் புறங்கணிக்கப்படுவது முறையோ? என் மனதை ஒழுங்குப்படுத்தி என்னையும் உனது நிலைத்த அருளுக்கு ஆளாக்குக.

10. மானோர் பங்கா வந்திப்பார்
மதுரக் கனியே மனநெகா
நானோர் தோளாச் சுரையொத்தா
னம்பி யித்தால் வாழ்ந்தாயே
யூனே புகுந்த வுனையுணர்ந்தே
யுருகிப் பெருகு முள்ளத்தைக்
கோனே யருளுங் காலந்தான்
கொடியேற் கென்றோ கூடுவதே.

மான் ஓர் பங்கா வந்திப்பார்
மதுரம் கனியே மனம் நெகா
நான் ஓர் தோளாச் சுரை ஒத்தால்
நம்பி இத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனை உணர்ந்தே
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளும் காலம் தான்
கொடியேற்கு என்றோ கூடுவதே

தோளாச் சுரை ஒத்தால்-தொளைக்கப்படாமையினால்பயனற்ற ஒரு சுரைக்குடுக்கை போன்று இருந்தால். இத்தால் வாழ்ந்தாயே-இதனால் வாழ்ந்து விட்டாயோ?

நான் ஒன்றுக்கும் உதவாதவன் என்று நீ என்னைப்புறக்கணிப்பது உன் பேரருளுக்குப் பொருந்துமா?

11. கூடிக் கூடி யுன்னடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடி வாடி வழியற்றேன்
வற்றன் மரம்போ னிற்பேனோ
யூடியூடி யுடையாயொடு
கலந்துள் ளுருகிப் பெருகிநெக்
காடி யாடி யானந்த
மதுவே யாக வருள்கலந்தே.

கூடிக் கூடி உன் அடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடி வாடி வழி அற்றேன்
வற்றல் மரம் போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு
கலந்து உள் உருகிப் பெருகி நெக்கு
ஆடி ஆடி ஆனந்தம்
அதுவே ஆக அருள் கலந்தே.

உபநிஷத் மந்த்ரம்—*109.*

ओं वाङ्मे मनसि प्रतिष्ठिता मनो मे वाचि प्रतिष्ठितमाविरावीर्मं एधि वेदस्य म आणीस्थः श्रुतं मे मा प्रहासी अनेन अधीतेन अहोरात्रान् संदधाम्यृतंवदिष्यामि । सत्यं वदिष्यामि । तन्मामवतु । तद्वक्तारमवतु । अवतुमाम् । अवतु वक्तारमवतु वक्तारम् ॥

ஓம் வாங்மே மனஸி ப்ரதிஷ்டிதா மனோ மே வாசி ப்ரதிஷ்டிதம் ஆவி: ஆவீ: ம ஏதி வேதஸ்ய ம ஆணீஸ்த: ச்ருதம் மே மா ப்ரஹாஸீ: அனேன அதீதேன அஹோ ராத்ரான் ஸந்ததாமிர்தம் வதிஷ்யாமி । ஸத்யம் வதிஷ்யாமி । தன்மாம் அவது । தத் வக்தாரம் அவது । அவது மாம் । அவதுவக்தாரம் அவது வக்தாரம் ॥

(ரிக்வேதம் சாந்திபாடம்)

குனிப்பார்-கூத்தாடுவார். வற்றல் மரம்-உலர்ந்த மரம். ஊடி ஊடி-பிணங்கிப் பிணங்கி.

ओं ஓம் मे वाङ् மே வாக் எனது வாக்கு मनसि प्रतिष्ठिता மனஸி ப்ரதிஷ்டிதா மனதில் உறுதி பெற்றிருக்கட்டும் मनः மன: மனதானது मे वाचि மே வாசி எனது வாசகத்தில் प्रतिष्ठितम् ப்ரதிஷ்டிதம் உறுதிபெற்றிருக்கட்டும் आविः ஆவி: சுயஞ்ஜோதி பிரம்மமே मे மே எனக்கு आवीः एधि ஆவீ: ஏதி பிரத்தியக்ஷமாவாயாக मे वेदस्य आणी மே வேதஸ்ய ஆணீ என்னை வேதத்தோடு சேர்த்து வைப்பதற்கு स्थः ஸ்த: (இரண்டும்) தகுதியுடையவைகளாயிருக்கட்டும் श्रुतं ச்ருதம் கேட்டு அறிந்தது मे மே என்னிடத்திருந்து मा प्रहासीः மா ப்ரஹாஸீ: மறந்துபோகாதிருக்கட்டும் अनेन अधीतेन அநேன அதீதேன இந்த வேத வித்தையைக்கொண்டு अहोरात्रान् அஹோராத்ரான் பகலையும் இரவையும் सन्दधामि ஸந்ததாமி இணைப்பேன் ऋतं वदिष्यामि ருதம் வதிஷ்யாமி பொருத்தமானதைப் பேசுகிறேன் सत्यं वदिष्यामि ஸத்யம் வதிஷ்யாமி சத்தியத்தைப் பேசுகிறேன் तत् मां अवतु தத் மாம் அவது அது (பிரம்மம்) என்னைக் காப்பாற்றுக तत् वक्तारम् अवतु தத் வக்தாரம் அவது அது ஆசிரியரைக் காப்பாற்றுக अवतु मां அவது மாம் என்னைக் காப்பாற்றுக अवतु वक्तारम् அவது வக்தாரம் ஆசிரியரைக் காப்பாற்றுக. अवतु वक्तारम् அவது வக்தாரம் ஆசிரியரைக் காப்பாற்றுக.

எனது வாக்கு மனதில் உறுதி பெற்றிருக்கட்டும். மனது என் வாக்கின்கண் உறுதிபெற்றிருக்கட்டும். சுயஞ்ஜோதி பிரம்மமே எனக்குப் பிரத்தியக்ஷமாவாயாக. என்னை வேதத்தோடு இணைத்து வைப்பதற்கு (வாக்கும் மனதும் ஆகிய) இரண்டும் தகுதியுடையவைகளாயிருக்கட்டும். ஆசிரியரிடமிருந்து கேட்டு அறிந்தது என்னிடமிருந்து மறந்துபோகாதிருக்கட்டும். இப்படி வேதம் கற்பதன் மூலம் பகலையும் இரவையும் இணைப்பேன். பொருத்தமானதையே பேசுவேன். சத்தியத்தையே பேசுவேன். அந்த பிரம்மம் என்னைக் காப்பாற்றுக, அது ஆசிரியரைக் காப்பாற்றுக. அது என்னைக் காப்பாற்றுக. அது ஆசிரியரைக் காப்பாற்றுக.

இறைவா, உன் அன்பர் உன்னோடு பேரின்பம் துய்க்கின்றனர். நான் மட்டும் உலர்ந்த மரம் போன்று கிடப்பேனோ? நானும் உன்னில் கலந்திருப்பேனாக.

வாக்கையும் மனதையும் ஒன்றுபடுத்துவது யோகம். பேசியதையே மனதில் கொள்ளவேண்டும். மனதில் கொண்டிருப்பதையே பேசவேண்டும். உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுபவன் அருளுக்குப் புறம்பு ஆகிறான். அன்னவன் தன் சொரூபத்தைச் சிதைக்கிறான்.

உலகும் அதைப் பற்றிய அறிவும் வேத சொரூபம். வேதம் யாண்டும் அழியாத பொக்கிஷம். வாக்காலும் மனதாலும் உலகோடு நல்லிணக்கம் வைக்கவேண்டும். வாக்காலும் மனதாலும் உலக ஞானத்தோடு நல்லிணக்கம் வைக்கவேண்டும். அத்தகைய நல்லிணக்கம் சிறந்த பிரார்த்தனையாகிறது.

கேட்டு அறிந்ததை ஞாபகத்தில் வைப்பது சிறந்த பண்பு ஆகும். அது ஆத்ம போதத்தை வளர்க்கிறது.

பகலையும் இரவையும் இணைப்பது என்பது வீண் காலம் போக்காதிருத்தலாம். காலத்தை நன்கு பயன்படுத்துவதும் கடவுள் வழிபாடாகிறது. ஏனென்றால் கடவுளே கால சொரூபமாயிருக்கிறார்.

பொருந்தியதாயுள்ள சத்தியத்தையே பேசுவது நல்ல பிரார்த்தனையாகிறது.

குரு பக்தி கொள்ளுமளவு அறிவு வளர்கிறது சீரிய குரு பக்தி ஒப்பற்ற பிரார்த்தனையாகிறது.

திருப்பெருந்துறையில் அருளிய

33. குழைத்த பத்து

ஆத்தும நிவேதனம்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய்
காவா யுடையாய் கொடுவினையே
னுழைத்தா லுறுதி யுண்டோதா
னுமையாள் கணவா வெனையாள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோவென்
றழைத்தா லருளா தொழிவதே
யம்மா னேயுன் னடியேற்கே.

குழைத்தால் பண்டைக் கொடுவினை நோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி உண்டோ தான்
உமையாள் கணவா எனை ஆள்வாய்
பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ
பிறை சேர் சடையாய் முறையோ என்று
அழைத்தால் அருளாது ஒழிவதே
அம்மானே உன் அடியேற்கே.

குழைத்தால்-வாடச் செய்தால், துன்புறுத்தினல். உழைத்தால்-வருந்தினல். உறுதி உண்டோதான்-உனக்கு ஒரு நன்மை உண்டோ. பிழைத்தால்-பிழை செய்தால்.

வினையின் விளைவாகிய வியாதியில் நான் மெலிவுறுங்கால் நீ காத்தருள வேண்டும். நான் வருந்துவதில் நீ அடையும் நன்மை யாது? என் பிழையைப் பொறுத்தல் உன் கடமை. நான் முறையிடுவதைக் கேளாதிருப்பது உனக்குத் தகுதியன்று.

2. அடியே னல்ல லெல்லாமுன்
னகல வாண்டா யென்றிருந்தேன்
கொடியே ரிடையாள் கூறுவெங்
கோவே யாவா வென்றருளிச்

செடிசே ருடலைச் சிதையாத
தெத்துக் கெங்கள் சிவலோகா
வுடையாய் கூவிப் பணிகொள்ளா
தொறுத்தா லொன்றும் போதுமே.

அடியேன் அல்லல் எல்லாம் முன்
அகல ஆண்டாய் என்று இருந்தேன்
கொடி ஏர் இடையாள் கூறு எம்
கோவே ஆ ஆ என்று அருளிச்
செடி சேர் உடலைச் சிதையாதது
எத்துக்கு எங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணிகொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே.

கொடி ஏர் இடையாள்-பூங்கொடிபோல் அழகிய இடையை யுடைய உமாதேவி. செடி சேர் உடலை-தீமை நிறைந்த உடலை. சிதையாதது-அழிக்காதது. ஒறுத்தால்-தண்டித்தால்.

நீ ஆட்கொண்டபோதே பிராரப்த கர்மம் ஒழிந்தது என்று எண்ணினேன். அது பிசகு. துன்பத்துக்கு உறைவிடமாகிய உடலில் என்னை மேலும் வைத்திருக்கவேண்டாம். என்னை வருத்தப் படுத்தியது போதும்.

3. ஒன்றும் போதா நாயேனை
யுய்யக் கொண்ட நின்கருணை
யின்றே யின்றிப் போய்த்தோதா
னேழை பங்கா வெங்கோவே
குன்றே யனைய குற்றங்கள்
குணமா மென்றே நீகொண்டா
லென்றான் கெட்ட திரங்கிடா
யெண்டோண் முக்க ணெம்மானே.

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின் கருணை
இன்றே இன்றிப் போய்த்தோ தான்
ஏழை பங்கா எம் கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணம் ஆம் என்றே நீ கொண்டால்
என் தான் கெட்டது இரங்கிடாய்
எண் தோள் முக்கண் எம்மானே.

உய்ய-கடைத்தேற. இன்றே-இப்பொழுதே. எண்தோள்-எட்டுத் தோள்கள்.

இந்த அற்பனை நீ ஆட்கொண்டது இன்று பொய்யாகப் போயிற்றே? மலைபோன்ற என் குற்றங்களை மாண்புகளாக நீ ஏற்றுக்கொண்டால் உனக்கு ஏதேனும் குறை உண்டாமோ?

4. மானேர் நோக்கி மணவாளா
மன்னே நின்சீர் மறப்பித்திவ்
வூனே புகவென் றனைநூக்கி
யுழலப் பண்ணு வித்திட்டா
யானு லடியே னறியாமை
யறிந்து நீயே யருள் செய்து
கோனே கூவிக் கொள்ளுநா
ளென்றென் றுன்னைக் கூறுவதே.

மான் நேர் நோக்கி மணவாளா
மன்னே நின் சீர் மறப்பித்து இவ்
ஊனே புக என் தனை நூக்கி
உழலப் பண்ணுவித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள் செய்து
கோனே கூவிக் கொள்ளும் நாள்
என்று என்று உன்னைக் கூறுவதே.

மறப்பித்து-மறக்கச்பண்ணி. நூக்கி-தள்ளி. உழல-துன்புற.

உன் சொரூபத்தை மறந்து இவ்வுடலில் நான் புகுந்திருக்கப் பண்ணினாய். என் மயக்கத்தையகற்றி மீண்டும் எப்பொழுது என்னை உன்மயம் ஆக்குவாய்?

5. கூறு நாவே முதலாகக்
கூறுங் கரண மெல்லாநீ
தேறும் வகைநீ திகைப்புநீ
தீமை நன்மை முழுதுநீ

உபநிஷத் மந்த்ரம் — 110.

मत्तः परतरं नान्यत्किञ्चिदस्ति धनञ्जय ।
मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव ॥

வேறோர் பரிசிங் கொன்றில்லை
மெய்ம்மை யுன்னை விரித்துரைக்கிற்
றேறும் வகையென் சிவலோகா
திகைத்தாற் றேற்ற வேண்டாவோ.

கூறும் நாவே முதல் ஆகக்
கூறும் கரணம் எல்லாம் நீ
தேறும் வகை நீ திகைப்பும் நீ
தீமை நன்மை முழுதும் நீ
வேறு ஓர் பரிசு இங்கு ஒன்று இல்லை
மெய்ம்மை உன்னை விரித்து உரைக்கில்
தேறும் வகை என் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ.

தேறும்- தெளிவடையும். **திகைப்பு**-தெளியாமல் திகைத்தல்.

மத்த: பரதரம் நான்யத்கிஞ்சிதஸ்தி தனஞ்ஜய ।
மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ ॥

(பகவத்கீதோபநிஷதம் 7·7)

धनञ्जय தனஞ்ஜய தனஞ்ஜயனே मत्तः மத்த: என்னைக் காட்டிலும் परतरं பரதரம் மேலானது अन्यत् किञ्चित् न अस्ति அன்யத் கிஞ்சித் ந அஸ்தி வேறு ஒன்றும் இல்லை सूत्रे ஸூத்ரே நூலிலே मणिगणाः इव மணிகணா: இவ மணிக்கோவைபோல் इदं सर्वं இதம் ஸர்வம் இவை யாவும் मयि மயி என்னிடத்து प्रोतं ப்ரோதம் கோக்கப்பட்டிருக்கின்றன.

தனஞ்ஜயா, எனக்கு மேலானது வேறு எதுவும் இல்லை. நூலிலே மணிகள் போன்று இவையாவும் என்மீது கோக்கப்பட்டிருக்கின்றன.

உலகு அனைத்தினுடைய உற்பத்தி, ஒடுக்கத்துக்கு ஈசனே முதற்காரணம். அவனுக்கு அன்னியமானது, அவன் நடைமுறையில் தலையிடவல்லது ஒன்றுமில்லை. ஜகத்தைத் தோற்றுவிப்பதும் துடைப்பதும் அவன் செயல். அது நிலைபெற்றிருப்பதும் அவனாலேயாம். ஸூத்ரம் என்பது நூல். நூலிலே விதவிதமான முத்து, மணி, ரத்னம் முதலியவைகளைக் கோத்து வைப்பது

நன்மை தீமையாகிய அனைத்தும் நீயே என்னும் தெளிவை எனக்குத் தந்தருள்வாயாக.

6. வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னி
லதுவு முன்றன் விருப்பன்றே.

போன்று அண்டங்களனைத்தும் சர்வேசுவரன் என்னும் ஸூத்ரத்தில் கோத்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவனுக்கு ஸூத்ராத்மன் என்ற பெயர் வந்துள்ளது. இணைக்கப்பெற்றுள்ள மணிகளும், முத்துக்களும், ரத்னங்களும் வெவ்வேறு பாங்குடையவைகளாயிருக்கலாம். பின்பு, அவைகளை இணைக்கும் நூலோ ஒரே பாங்குடையது. அது போன்று எண்ணிறந்த குண பேதங்களையுடைய உயிர்களையும் ஜடப்பொருள்களையும் தாங்கி நிற்கும் பரமாத்ம சைதன்யம் ஒன்றேயாம்.

உபநிஷத் மந்த்ரம்—*111.*

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

அனன்யாஸ்சிந்தயந்தோ மாம் யே ஜனா: பர்யுபாஸதே ।
தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம் ॥

(பகவத்கீதோபநிஷதம் 9.22)

अनन्या: அனன்யா: அன்னியரல்லாராய் माम् மாம் என்னை चिन्तयन्त: சிந்தயந்த: சிந்தித்துக்கொண்டு ये जना: யே ஜனா: எந்த ஜனங்கள் पर्युपासते (परि उपासते) பர்யுபாஸதே (பரி உபாஸதே) எங்கும் உபாசிக்கிறார்களோ नित्याभियुक्तानां (नित्य अभियुक्तानां) நித்யாபியுக்தானாம் (நித்ய அபியுக்தானாம்) நித்திய யோகிகளுடைய तेषां தேஷாம் அவர்களுடைய

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாலுக்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்தன் விருப்பு அன்றே.

योगक्षेमं யோகக்ஷேமம் யோகக்ஷேமத்தை अहं அஹம் நான் वहामि வஹாமி வழங்குகிறேன்.

அன்னியரல்லாராய் என்னையே நினைந்து யாண்டும் என்னையே உபாசிக்கும் நித்திய யோகிகளுடைய யோக க்ஷேமத்தை நான் வழங்குகிறேன்.

அனன்யம் என்றால் பரமாத்மா தங்களுக்கு அன்னியமானவர் அல்லர் என்று எண்ணுதல், அல்லது அவரைத் தவிர வேறு எதையும் எண்ணாதிருத்தல். யோகம் என்பது வேண்டியதைப் பெறுதல். பின்பு பெற்றதை வைத்துக் காப்பாற்றுதல் க்ஷேமமாகும்.

கர்ப்பத்திலிருக்கும் சிசு தாய்க்கு அன்னியமானதன்று; ஆதலால் அதன் போஷணை முழுதும் தாயினிடத்திருந்தே இயல்பாக வருகிறது. பிறந்த பின்பும் தாயைத் தஞ்சமடைந்திருக்குமளவு அவள் உணவைத் தேடிவந்து ஊட்டுகிறாள். அனன்னிய பக்தியில் ஈடுபடுவோர் அடையும் பேறு யாண்டும் அதைவிடப் பெரியது.

பொருளைத் தேடுபவர்க்குப் பொருள் அமையவும், பிறகு அழியவும் செய்கிறது. இறைவனது அருள் ஒன்றையே நாடுபவர்க்கு அழியாத அவனது அருள் சுரக்கிறது. மேலும் உடல் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளின் யோக க்ஷேமமும் இறைவனாலேயே அளிக்கப்படுகிறது. பக்தர்மீது பித்தம் கொண்டுள்ள பகவான் தாயினும் சாலப்பரிந்து அவர்களைப் பராமரித்து வருவதாக வாக்குக் கொடுக்கிறார். அனன்னிய பக்தி பண்ணு

ஆத்ம சாதனத்தில் இது ஓர் அடிப்படைத் தத்துவம். சிவன் பொறுப்பில் அனைத்தையும் ஒப்படைக்கும் ஆத்ம சாதகனுக்குக் கவலையொன்றுமில்லை.

7. அன்றே யென்ற னாவியு
    முடலு முடைமை யெல்லாமுங்
குன்றே யனையா யென்னையாட்
    கொண்ட போதே கொண்டிலையோ
வின்றோ ரிடையூ றெனக்குண்டோ
    வெண்டோண் முக்க ணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
    நானோ விதற்கு நாயகமே.

பவர்களுடைய பெருவாழ்க்கையே பகவானது பிரமாணிக்கத்துக்குப் ப்ரமசான்றாகிறது. பக்தியின் பெருக்கால் தங்கள் உயிரையே அவர்கள் பொருள்படுத்துவதில்லை. ஆகையால் அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு பகவானுடையதாகிறது. தற்போதம் படைத்திருக்கிறவர்கள் தங்களைத் தாங்களே பேணுதலில் கருத்தையும் முயற்சியையும் செலுத்தியாகவேண்டும். பரபோதத்தில் திளைத்திருப்பவர்களைப் பரம்பொருளே பேணிவருகிறது. இது உடல் வாழ்வைப்பற்றிய மேலாம் கோட்பாடாகிறது.

உபநிஷத் மந்த்ரம் — 112.

सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச: ॥

(பகவத்கீதோபநிஷதம் 18-66).

सर्वधर्मान् ஸர்வதர்மான் எல்லா தர்மங்களையும் परित्यज्य பரித்யஜ்ய பரித்தியாகம் செய்துவிட்டு मां एकं மாம் ஏகம் என்னை ஒருவனையே शरणं व्रज சரணம் வ்ரஜ சரணடைவாயாக अहं அஹம் நான் त्वा த்வா உன்னை सर्वपापेभ्यः ஸர்வபாபேப்ய: எல்லாப் பாபங்களிலிருந்தும் मोक्षयिष्यामि மோக்ஷயிஷ்யாமி விடுவிப்பேன் मा शुचः மா சுச: விசனப்படாதே.

அன்றே என் தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ
எண் தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

இது அடைக்கலம் புகுதல் அல்லது சரணாகதி தத்துவம். ஆத்ம சாதனம் இதில் பூர்த்தியாகிறது.

தர்மங்களையெல்லாம் அறவே தியஜித்து விட்டு என்னையே சரணடைக. பாபங்களனைத்தினின்றும் உன்னை நான் விடுவிப்பேன்; வருந்தாதே.

ஜீவன் செய்கிற செயல்களிலெல்லாம் கடைசியான செயல் ஈசனிடத்து அடைக்கலம் புகுதலாம். அடைக்கலம் புகுதல் என்பதன் பொருள், தன் முயற்சி போதவில்லை அல்லது பலிதமாகவில்லை; ஆகையால் தெய்வத்தினிடம் தஞ்சமடைந்து அவர் துணையையும் கொஞ்சம் தேடிக் கொள்ளலாம் என்பதன்று. சிற்றோடை பெரிய நதியில் கலந்து பிறகு சமுத்திரத்தில் சங்கமமாவது போன்றது சரணாகதி. ஜீவனுடைய இச்சா சுதந்திரமெல்லாம் ஈசுவர சங்கற்பத்தில் சேர்ந்து விடுகின்றது. தனக்கெனத் தனிச் செயல் ஒன்றுமில்லை. ஈசன் செயல் கடலின் செயல் போன்றது. ஜீவன் செயல் அலையின் செயல் போன்றது. அலையானது கடலுக்கு அன்னியமானதன்று. ஜீவன் செயலெல்லாம் உண்மையில் ஈசுவரன் செயல்.

பக்தர்கள் எல்லாரும் அடைக்கலம் என்னும் பெருநிலையை அடைந்திருக்கிறார்கள். இறைவனது பேரன்பில் அவர்கள் தங்களை மறந்திருந்தனர். ஞாபகக் குறைவில் ஒருவன் நடு வீதியில் நடப்பானாகில் அவன் ஓடும் வண்டிகளால் ஆபத்துக்கு உள்ளாவான். பக்தனோ அன்பில் தன்னை மறந்தவன் என்றாலும் ஒரு சிறு செயலிலும் சொப்

கடலுக்கும் அதன் அலைக்கும் உள்ள தொடர்வு போன்றது ஈசுவரனுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள இணக்கம். இதை அனுபூதியில் அறிகிற ஜீவாத்மன் இனிது அடைக்கலம் புகுகிறுன். பின்பு அவன் மூலம் நிகழ்வதெல்லாம் ஈசன் செயல். பார்வைக்குப் பிழை யாகத் தென்படுவதும் நலனே.

8. நாயிற் கடையா நாயேனை
நயந்து நீயே யாட்கொண்டாய்
மாயப் பிறவி யுன்வசமே
வைத்திட் டிருக்கு மதுவன்றி
யாயக் கடவே னுனோதா
னென்ன தோவிங் கதிகாரங்
காயத் திடுவா யுன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

நாயின் கடை ஆம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயம் பிறவி உன்வசமே
வைத்திட்டு இருக்கும் அது அன்றி
ஆயக் கடவேன் நானோ தான்
என்னதோ இங்கு அதிகாரம்
காயத்து இடுவாய் உன்னுடைய
கழல்கீழ் வைப்பாய் கண் நுதலே.

நீ ஆட்கொண்டதனுல் எனக்கு உயர்வு வந்துள்ளது. இனி நீ என்னை எந்நிலையில் வைத்தாலும் அது எனக்குப் பெரு வாய்ப்பாகும். உன் அருளைப் பெற்றுள்ள எனக்கு உடல் வாழ்க்கையும் உன் திருவடியும் ஒன்றே.

பனத்திலும் அவன் பிழைபோவதில்லை. ஒழுங்குப்பாடே வடிவெடுத்ததாக அவனது வாழ்க்கை நடைபெறுகிறது. தாயின் மார்பில் அணைக்கப்பெற்ற சேய் போன்று அவன் சரணுகதியில் இன்பம் துய்க்கிறுன். ஜீவபோதம் இல்லை யாதலால் பிழை செய்தலுக்கு இடமில்லை. பக்தனைக் கொண்டு நிகழ்வதெல்லாம் ஈசனுடைய செயல். ஆதலால் அவனைக் கருவியாகக் கொண்டு நலனே நிகழ்ந்து வருகிறது, பிழை ஏதும் ஆங்கு நிகழ்வதில்லை.

9. கண்ணார் நுதலோய் கழலிணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
வெண்ணா திரவும் பகலுநா
னவையே யெண்ணு மிதுவல்லான்
மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்துன் கழற்கே புகுமாறு
மண்ணா வெண்ணக் கடவேனே
வடிமை சால வழகுடைத்தே.

கண் ஆர் நுதலோய் கழல் இணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணாது இரவும் பகலும் நான்
அவையே எண்ணும் இது அல்லால்
மண்மேல் யாக்கை விடும் ஆறும்
வந்து உன் கழற்கே புகும் ஆறும்
அண்ணா எண்ணக் கடவேனே
அடிமை சால அழகு உடைத்தே.

எண்ணாது-வேறு ஒன்றும் நினையாது. அவையே-உன் திருவடிகளையே.

யாண்டும் உனது பெருமையில் திளைத்திருப்பதே யான் பெறும் பொலிவு ஆகும். பின்பு பிரபஞ்ச வாழ்வையும் பாரமார்த்திக வாழ்வையும் சீர்தூக்கும் பிரச்னை கிடையாது.

10. அழகே புரிந்திட் டடிநாயே
னரற்று கின்றே னுடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி யென்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதமெனக்குப்
புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே
கோனே யென்னைக் குழைத்தாயே.

அழகே புரிந்திட்டு அடி நாயேன்
அரற்றுகின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி என்னைப் பணிகொண்டாய்

புகழே பெரிய பதம் எனக்குப்
புராண நீ தந்தருளாதே
குழகா கோலம் மறையோனே
கோனே என்னைக் குழைத்தாயே.

புராண-பழையோனே. குழகா-இளமை வடிவினனே.

நீ பேரழகன், பழைய பொருள், நித்திய யௌவனம் படைத்தவன். உனக்குப் புறம்பாக என்னை ஒரு தனி வியக்தியாக வைத்ததின் விளைவாக நான் துன்புற்றிருந்தது உனது திருவிளையாடலாகும். அதனால் பண்பாடு அடைந்தது நான் பெற்ற பேறு ஆகும்.

திருப்பெருந்துறையில் அருளிய

34. உயிருண்ணிப் பத்து

சிவானந்தம் மேலிடுதல்

கலி விருத்தம்

1. பைந்நாப்பட வரவேரல்கு
லுமைபாகம தாயென்
மெய்ந்நாடொறும் பிரியாவினைக்
கேடாவிடைப் பாகா
செந்நாவலர் பரசும்புகழ்த்
திருப்பெருந்துறை யுறைவா
யெந்நாட்களித் தெந்நாளிறு
மாக்கேனினி யானே.

பைந்நாப் பட அரவு ஏர் அல்குல்
உமை பாகம் அது ஆய் என்
மெய் நாள்தொறும் பிரியா
வினைக்கேடா விடைப் பாகா
செம் நாவலர் பரசும் புகழ்த்
திருப்பெருந்துறை உறைவாய்
எந்நாள் களித்து எந்நாள்
இறுமாக்கேன் இனி யானே.

மெய்-உடல். பிரியா வினைக்கேடா-நீங்காத சஞ்சித ஆகாமிய கர்மத்தைப் போக்குபவனே. விடைப் பாகா-ரிஷபவாஹனு செம்நாவலர்-செவ்விய நாவன்மையுடையவர். பரசும்-போற்றும். இறுமாக்கேன்-அருளைப் பெற்றதை முன்னிட்டுச் செருக்கு அடைவேன்.

உன்னிடமிருந்து நான் பெற்றுள்ள பேர் அருளை எண்ணி யெண்ணி நான் பரவசமடைகிறேன்.

2. நாஞரடி யணைவானொரு
நாய்க்குத்தவி சிட்டிங்
கூஞருடல் புகுந்தானுயிர்
கலந்தானுளம் பிரியான்
றேஞர்சடை முடியான்மன்னு
திருப்பெருந்துறை யுறைவான்
வானோர்களு மறியாததோர்
வளமீந்தன னெனக்கே.

நான் ஆர் அடி அணைவான் ஒரு நாய்க்குத்
தவிசு இட்டு இங்கு
ஊன் ஆர் உடல் புகுந்தான் உயிர் கலந்தான்
உளம் பிரியான்
தேன் ஆர் சடைமுடியான் மன்னு
திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாதது ஓர்
வளம் ஈந்தனன் எனக்கே.

நான் ஆர்அடி அணைவான்-அவனது திருவடியையடைதற்கு என்னிடத்து என்ன தகுதியிருக்கிறது. தவிசு இட்டு-அமர ஆசனம் கொடுத்து. தேன் ஆர் சடைமுடியான்-அமிர்ததாரை சொட்டும் சஹஸ்ராரத்தில் இருப்போன். வளம்-ஞானச் செல்வம்.

அவன் என்னைத் தன்மயம் ஆக்கி ஞானச்செல்வத்தை நல்கினன். அதன் விளைவாக ஒன்றுக்கும் உதவாத நான் பெறுதற்கு அரிய பெரிய பேறுபெற்றவன் ஆகிறேன்.

3. எனைநானென்ப தறியேன்பக
லிரவாவது மறியேன்
மனவாசகங் கடந்தானெனை
மத்தோன்மத்த னுக்கிச்

சினமால்விடை யுடையான்மன்னு
திருப்பெருந்துறை யுறையும்
பனவனெனைச் செய்தபடி
றறியேன்பரஞ் சுடரே.

எனை நான் என்பது அறியேன் பகல்
இரவு ஆவதும் அறியேன்
மனம் வாசகம் கடந்தான் எனை
மத்த உன்மத்தன் ஆக்கிச்
சினம் மால் விடை உடையான் மன்னு
திருப்பெருந்துறை உறையும்
பனவன் எனைச் செய்த படிறு
அறியேன் பரம் சுடரே.

பனவன்-ஸர்வக்ஞன், பேரறிஞன். படிறு-ஜீவபோதத்தை அழித்த வஞ்சகம். பரம் சுடரே-பரமாத்ம ஜோதியே.

நிர்விகற்ப சமாதியில் ஜகத் இல்லை, ஜீவன் இல்லை, கால-தேச வர்த்தமானமில்லை. பரம் ஒன்றுதான் உளது. அத்தகைய பெரு நிலையில் பரமன் என்னை ஆட்கொண்டு அமர வைத்தான்.

4. வினைக்கேடரு முளரோபிறர்
சொல்லீர்விய னுலகி
லெனைத்தான்புகுந் தாண்டானென
தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லேபெருந்
துறையிலுறை பெம்மான்
மனத்தான்கண்ணி னகத்தான்மறு
மாற்றத்திடை யானே.

வினைக் கேடரும் உளரோ பிறர்
சொல்லீர் வியன் உலகில்
எனைத் தான் புகுந்து ஆண்டான் எனது
என்பின் புரை உருக்கிப்
பினைத் தான்புகுந்து எல்லே
பெருந்துறையில் உறை பெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான்
மறு மாற்றத்திடையானே.

வினைக்கேடரும் உளரோ பிறர் - வினையை நீக்குபவர் பரம்பொருள் ஒருவரே (பிறர் இல்லை). வியன்-பரந்த. புரை-உள்துளை. எல்லே-வியப்புக் குறிப்பு. மறு-மற்றும், பின்னும். மாற்றத்திடையான்-சொல்லியுள்ளவன்.

கர்மத்துக்கு அப்பால் ஜீவனை எடுத்துச் செல்லவல்ல அதே பரமாத்மன் அந்தர்யாமியாய் இருந்து ஜீவாத்மன் உயிர் வாழவும், அன்பு கொள்ளவும், இந்திரியங்களின் வாயிலாகச் செயல்கள் புரியவும் செய்கிறான். அவனுடைய சான்னித்தியத்தை நெஞ்சிலும் கண்மணிகளிலும் காணலாம்.

5. பற்றாங்கவை யற்றீர்பற்றும்
பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி யறிவோமெனிற்
கெடுவீரோடி வம்மின்
றெற்றார்சடை முடியான்மன்னு
திருப்பெருந்துறை யிறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின
ரொடுங்கூடுமின் கலந்தே.

பற்று ஆங்கு அவை அற்றீர்
பற்றும் பற்று ஆங்கு அது பற்றி
நற்று ஆம் கதி அறிவோம் எனின்
கெடுவீர் ஓடி வம்மின்
தெற்று ஆர் சடைமுடியான்
மன்னு திருப்பெருந்துறை இறை சீர்
கற்று ஆங்கு அவன் கழல்
பேணினரொடும் கூடுமின் கலந்தே.

நற்று ஆம் கதி-நல்ல நிலை, சிரேயஸ். கெடுவீர் ஓடிவம்மின்-சிறுநெறி சென்று கெட்டுப்போகின்றவர்களே நல்வழிக்கு விரைந்து வாருங்கள். தெற்று-பின்னல். கற்று-பரவித்தை பயின்று. ஆங்கு-அசைநிலை.

உலகப்பற்று உடையவர்களே, நிலையற்ற அப்பற்றை நீக்கித் தெய்வப்பற்றை வளருங்கள்; ஞானத்தை வளருங்கள்; நல்லார் இணக்கம் கொள்ளுங்கள்.

உபநி—13. பக்கம் 133ல் காண்க.

6. கடலின்றிரை யதுபோல்வரு
கலக்கமல மறுத்தென்
னுடலுமென துயிரும்புகுந்
தொழியாவண்ண நிறைந்தான்
சுடருஞ்சுடர் மதிசூடிய
திருப்பெருந்துறை யுறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள்
பரன்றான் செய்த படிறே.

கடலின் திரை அதுபோல் வரு
கலக்கம் மலம் அறுத்து என்
உடலும் எனது உயிரும் புகுந்து
ஒழியாவண்ணம் நிறைந்தான்
சுடரும் சுடர் மதி சூடிய
திருப்பெருந்துறை உறையும்
படரும் சடை மகுடத்து எங்கள்
பரன் தான் செய்த படிறே.

படிறு-சூழ்ச்சி. படரும் சடைமகுடத்து-சடைக் கற்றையைக் கிரீடமாகக் கொண்டுள்ள.

கடலின் அலைகள் போன்று ஓயாது உருவெடுக்கும் மனோவிருத்திகளை அழித்துச் சந்திரசேகரன், ஜடாதாரி என்னைத் தன் மயமாக்கியது செயற்கரிய செயலாம்.

7. வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன்மண்ணும் விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச் சிவம்
வேண்டார்தமை நாளுந்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு
திருப்பெருந்துறை யிறைதாள்
பூண்டேன்புறம் போகேனினிப்
புறம்போகலொட் டேனே.

வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்புச் சிவம்
வேண்டார்தமை நாளும்

தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன் புறம் போகேன் இனிப்
புறம் போகல் ஒட்டேனே.

உலக சம்பத்தும் தெய்வ சம்பத்தும் ஒன்றோடொன்று முரண்படுபவைகளாம். நான் சிவனையே நாடுவேன். உலகப்பற்று வைத்திருப்பவர்களோடு ஒருபொழுதும் உறவுகொள்ளேன்.

உபநி—38. பக்கம் 304ல் காண்க.

8. கோற்றேனெனக் கென்கோகுரை
கடன்வாயமு தென்கோ
வாற்றேனெங்க ளரனேயரு
மருந்தேயென தரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு
திருப்பெருந்துறை யுறையு
நீற்றார்தரு திருமேனிநின்
மலனேயுனை யானே.

கோல்தேன் எனக்கு என்கோ
குரை கடல்வாய் அமுது என்கோ
ஆற்றேன் எங்கள் அரனே
அருமருந்தே எனது அரசே
சேற்று ஆர் வயல் புடை சூழ்தரு
திருப்பெருந்துறை உறையும்
நீற்று ஆர் தரு திருமேனி
நின்மலனே உனை யானே.

கோல்தேன்-கொம்புத்தேன். குரை-ஒலிக்கின்ற. நீற்று ஆர் தரு-திருநீறு நிறைந்த. நின்மலனே-நிர்மலனே.

பிறவிப் பிணிக்கு மருந்து ஆகிய இறைவா நீ கொம்புத்தேனுக்கும் பாற்கடலில் வந்த அமிர்தத்துக்கும் ஒப்பானவன்.

9. எச்சமறி வேனானெனக்
கிருக்கின்றதை யறியே
னச்சோவெங்க ளரனேயரு
மருந்தேயென தமுதே

செச்சைமலர் புரைமேனியன்
திருப்பெருந்துறை யுறைவா
னிச்சமென நெஞ்சின்மன்னி
யானாகின்நின் ருனே.

எச்சம் அறிவேன் நான்
எனக்கு இருக்கின்றதை அறியேன்
அச்சோ எங்கள் அரனே
அரு மருந்தே எனது அமுதே
செச்சை மலர் புரை மேனியன்
திருப்பெருந்துறை உறைவான்
நிச்சம் என நெஞ்சில் மன்னி
யான் ஆகி நின்ருனே.

எச்சம்-சேஷம், எஞ்சியிருப்பது, பிரகிருதி. அச்சோ-இரக்கக் குறிப்பு. செச்சை மலர் புரை-வெட்சி மலரை ஒத்த. நிச்சம்-நித்தம், சாசுவதம்.

நீயே நாஞக இருக்கின்ருய். இந்த உண்மையை நான் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. உனக்கும் எனக்கும் புறம்பாயுள்ள பிரகிருதியை அறிகிறேன், அந்தோ.

ஆசையால் தூண்டப்பெற்றுக் கருவி கரணங்கள் வாயிலாகப் பிரகிருதி அறியப்படுகிறது. நிராசையில் நிலைத்திருக்குமிடத்து ஜீவனும் சிவனும் ஒன்றே என்னும் அனுபூதி வாய்க்கிறது. அந்த அனுபூதியில் ஜகத்தும் பரத்தில் ஒன்றுபடுகிறது. அதுவே பரஞானம் அல்லது சிவஞானம். அக்ஞானத்தில் இருப்பவர்க்கு முப்பொருள் உண்மை என விளங்கும். பரஞானம் அடையப் பெற்றவர்க்குப் பரம் ஒன்றே மெய்ப்பொருள்.

10. வான்பாவிய வுலகத்தவர்
தவமேசெய வவமே
யூன்பாவிய வுடலைச்சுமந்
தடவிமர மானேன்
றேன்பாய்மலர்க் கொன்றைமன்னு
திருப்பெருந்துறை யுறைவாய்
நான்பாவிய னானலுனை
நல்காயென லாமே.

வான் பாவிய உலகத்தவர்
தவமே செய அவமே
ஊன் பாவிய உடலைச் சுமந்து
அடவி மரம் ஆனேன்
தேன் பாய் மலர்க் கொன்றை
மன்னு திருப்பெருந்துறை உறைவாய்
நான் பாவியன் ஆனால் உனை
நல்காய் எனல் ஆமே.

வான்பாவிய உலகத்தவர்-மேன்மைபொருந்திய உலகத்தவர். அவமே-வீணே. ஊன்பாவிய-ஊன்நிறைந்த. அடவி-காடு. நல்காய்-தந்தருளாய்.

மேலோர் உன்னை நாடித் தவம்புரிந்துகொண்டிருக்கின்றனர். நான் உடலைச் சார்ந்துள்ள பாவியேன் எனினும் நீ என்னை ஆட்கொள்ளல் வேண்டும்.

தில்லையில் அருளிய

35. அச்சப் பத்து

ஆனந்தம் உறுதல்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. புற்றில்வா ளரவு மஞ்சேன்
பொய்யர்தம் மெய்யு மஞ்சேன்
கற்றைவார் சடையெம் மண்ணல்
கண்ணுதல் பாத நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை
யுண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

புற்றில் வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்
கற்றை வார் சடை எம் அண்ணல்
கண் நுதல் பாதம் நண்ணி

மற்றும் ஓர் தெய்வம் தன்னை
உண்டு என நினைந்து எம்பெம்மான்
கற்றிலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

வாள்-ஒளியுள்ள. கற்றை வார் சடை-திரண்ட நீண்ட சடை. கண் நுதல்-நெற்றிக் கண்ணன், திரயம்பகன், திரிலோசனன்.

சிவனைப்பற்றிக் கல்லாமையினால் அவனிடத்து பக்தியில்லாதவர்களோடு பழகுதல் ஒவ்வாது.

2. வெருவரேன் வேட்கை வந்தால்
வினைக்கடல் கொளினு மஞ்சே
னிருவரான் மாறு காணா
வெம்பிரான் றம்பிரானாந்
திருவுரு வன்றி மற்றோர்
தேவரெத் தேவ ரென்ன
வருவரா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

வெருவரேன் வேட்கை வந்தால்
வினைக் கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா
எம்பிரான் தம்பிரான் ஆம்
திரு உரு அன்றி மற்றுஓர்
தேவர் எத்தேவர் என்ன .
அருவராதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

வேட்கை வந்தால் வெருவரேன்-உலக ஆசைவந்தால் அஞ்சேன். மாறு-போட்டியிட்டு. அருவராதவரை - அருவருக்காதவர்களை.

காமமும் கர்மமும் பெருங்கேடு விளைவிக்கின்றன. கடவுளைப் புறக்கணிப்பதால் வரும் கேடு அதைவிடப் பெரியதாம். சேய்க்குத் தன் தாயே பெரியவள் எனத் தோன்றுவது போன்று இஷ்ட தெய்வத்திடத்து நிஷ்டை வேண்டும்.

3. வன்புலால் வேலு மஞ்சேன்
வளைக்கையார் கடைக்க ணஞ்சே
னென்பெலா முருக நோக்கி
யம்பலத் தாடு கின்ற
வென்பொலா மணியை யேத்தி
யினிதருள் பருக மாட்டா
வன்பிலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

வன் புலால் வேலும் அஞ்சேன்
வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்
என்பு எலாம் உருக நோக்கி
அம்பலத்து ஆடுகின்ற
என் பொலா மணியை ஏத்தி
இனிது அருள் பருக மாட்டா
அன்பு இலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

பொலாமணி-துளைக்கப்படாத மணி, நிறைபொருள்.

பக்தியின்மையினின்று வருகிற கேடானது கொலைக் கருவியினின்று வருகிற கேட்டைவிடக் கொடியது. உலகப்பற்றுடையார் கூட்டுறவு பக்தியின் வளர்ச்சிக்கு உதவாது.

4. கிளியனுர் கிளவி யஞ்சே
னவர்கிறி முறுவ லஞ்சேன்
வெளியநீ ருடு மேனி
வேதியன் பாத நண்ணித்
துளியுலாங் கண்ண ராகித்
தொழுதழு துள்ள நெக்கிங்
களியிலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

கிளி அனுர் கிளவி அஞ்சேன்
அவர் கிறி முறுவல் அஞ்சேன்
வெளிய நீறு ஆடும் மேனி
வேதியன் பாதம் நண்ணித்

துளி உலாம் கண்ணர் ஆகித்
தொழுது அழுது உள்ளம் நெக்கு இங்கு
அளி இலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

கிளி அனூர்-கிளி போன்ற மகளிர். கிளவி-கொஞ்சும் சொல். கிறி முறுவல்-வஞ்சகப் புன்சிரிப்பு. நீறு-திருநீறு. துளிஉலாம்-கண்ணீர் சிந்துகின்ற. அளி இலாதவரை-கனிந்த அன்பு இல்லாதவரை.

பக்தியில் மேல் நிலைக்குப் போய்ப் பின்பு கீழ்மையில் இறங்கியவர் பதிதர் எனப்படுகின்றனர். அத்தகையவர் மற்றவர்களுடைய பக்தியையும் கெடுக்க முயலுவர். ஆதலால் அவர்களுடைய நேசம் பொருந்தாது.

5. பிணியெலாம் வரினு மஞ்சேன்
பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்
துணிநிலா வணியி னான்றன்
றொழும்பரோ டழுந்தி யம்மா
றிணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

பிணி எலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்
துணி நிலா அணியினான் தன்
தொழும்பரோடு அழுந்தி அம்மால்
திணி நிலம் பிளந்தும் காணாச்
சேவடி பரவி வெண் நீறு
அணிகிலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

துணி நிலா-பிறைச் சந்திரன். அம்மால்-அந்த மகாவிஷ்ணு. திணி-கெட்டியான.

திருநீறு போன்ற சிவ சின்னங்கள் அணிவது சாதனத்துக்கு உறுதுணையாகின்றது. ஆதலால் அச்சின்னங்களைப் புறக்கணிக்கலாகாது. சிவனிடம் வைக்கிற பக்தியை சிவ சின்னங்களிடத்தும் வைக்கவேண்டும்.

6. வாளுலா மெரியு மஞ்சேன்
வரைபுரண் டிடினு மஞ்சேன்
றோளுலா நீற்ற னேற்றன்
சொற்பதங் கடந்த வப்பன்
றாளதா மரைக ளேத்தித்
தடமலர் புனைந்து நையு
மாளலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

வாள் உலாம் எரியும் அஞ்சேன்
வரை புரண்டிடினும் அஞ்சேன்
தோள் உலாம் நீற்றன் ஏற்றன்
சொல் பதம் கடந்த அப்பன்
தாள தாமரைகள் ஏத்தித்
தடமலர் புனைந்து நையும்
ஆள் அலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

உபநிஷத் மந்த்ரம்—*113.*

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति ।
तदहं भक्त्युपहृतमश्नामि प्रयतात्मनः ॥

பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி ।
ததஹம் பக்த்யுபஹ்ருதமச்ஞமி ப்ரயதாத்மன: ॥

(பகவத்கீதோபநிஷதம் 9-26)

यः ய: யார் मे மே எனக்கு भक्त्या பக்த்யா பக்தியோடு पत्रं பத்ரம் இலை पुष्पं புஷ்பம் மலர் फलं பலம் கனி तोयं தோயம் நீர் प्रयच्छति ப்ரயச்சதி அளிக்கிறான் अहं அஹம் நான் प्रयतात्मनः (प्रयत+आत्मनः) ப்ரயதாத்மன: (ப்ரயத+ஆத்மன:) தூய மனத்தானுடைய भक्त्युपहृतम् (भक्ति+उपहृतम्) तत् பக்த்யுபஹ்ருதம் (பக்தி+உபஹ்ருதம்) தத் அன்பளிப்பாகிய அதை अश्नामि அச்ஞமி அருந்துகிறேன்.

யார் எனக்கு இலை, மலர், கனி, நீர் முதலியன பக்தியோடு படைக்கிறானோ, அத்தூய மனத்தானது அன்பளிப்பை நான் (இன்புடன்) அருந்துகிறேன்.

வாள் உலாம் எரியும்-ஒளி வீசுகிற நெருப்பையும். வரை-மலை. நீற்றன் - திருநீற்றையுடையவன். ஏற்றன் - எருதையுடையவன். தாள-திருவடிகளாகிய. நையும்-உள்ளம் உருகும். ஆள்-அடிமை.

புஷ்பங்கள் போன்ற பூஜா திரவியங்களைப் பயன்படுத்துவது பக்தியை வளர்ப்பதற்கு உற்ற உபாயமாம். இறைவனுக்காக மலர் கொய்யப் போகின்றவர்களுக்கு இடைஞ்சல் எது வந்தாலும் அதை அவர்கள் பொருட்படுத்தமாட்டார்கள்.

7. தகைவிலாப் பழியு மஞ்சேன்
சாதலை முன்ன மஞ்சேன்
புகைமுகந் தெரிகை வீசிப்
பொலிந்தவம் பலத்து ளாடு
முகைநகைக் கொன்றை மாலை
முன்னவன் பாத மேத்தி
யகநெகா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

தகைவு இலாப் பழியும் அஞ்சேன்
சாதலை முன்னம் அஞ்சேன்
புகை முகந்து எரிகை வீசிப்
பொலிந்த அம்பலத்துள் ஆடும்

ஒரு பொருளின் விலை மதிப்புக்கு ஏற்றபடி அதைப் பெரிய சம்மானமாகக் கருதுதல் உலகத்தவர் இயல்பு. இந்திராதி தேவர்களது போக்கும் அத்தகையதே. ஆனால் பராசக்தியையே தனது பாகத்தில் வைத்துள்ள பகவானுடைய பாங்கு வேறானது. விசுவத்துக்கெல்லாம் நாதன் எனினும் தன்னில் தானே திருப்தியடைந்திருப்பவன் அவன். எப்பொருளைக்கொண்டும் அவனைப் பெற முடியாது. நல்ல மனமுடையாரது பக்தி வலையொன்றில் மட்டும் அவன் அகப்படுகிறான். பக்திக்கு அறிகுறியாக இயற்கையில் எளிதில் அகப்படுகின்ற இலை, மலர், கனி, நீர் ஆகியவற்றுள் எதைப் படைத்தாலும் அவன் மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறான். கண்ணப்பரது உமிழ் நீரும் அவர் மென்ற மாமிசமும் சிவனுக்கு ஒப்பற்ற நைவேத்தியமாயின. பக்தியானது பகவானுக்கு அவ்வளவு பெரியது.

முகை நகைக் கொன்றை மாலை
முன்னவன் பாதம் ஏத்தி
அகம் நெகாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

தகைவு-பொருத்தம். புகை முகந்து எரி-புகையையுடைய நெருப்பு. பொலிந்த-விளங்காநின்ற. முகை நகை-அரும்பு மலர்கின்ற. அகம்நெகாதவரை-உள்ளம் இளகாதவரை.

பக்தர்கள் கூட்டுறவு பக்திக்குப் பேருதவியாகிறது. ஆனால் பக்தி பண்ணுகிறவர்களைப் பயித்தியக்காரர் எனக் கருதும் பாங்குடையவர்கள் உலகில் உண்டு. அன்னவர்களுக்கு அஞ்சித் தம்முடைய சாதனங்களை மறைத்து வைப்பது முறையன்று.

நிந்தையும் ஸ்துதியும் பக்தனுக்குப் பொருளற்றவைகள். இறப்புக்கு அவன் அஞ்சுவதில்லை.

8. தறிசெறி களிறு மஞ்சேன்
றழல்விழி யுழுவை யஞ்சேன்
வெறிகமழ் சடைய னப்பன்
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்க ளேத்திச்
சிறந்தினி திருக்க மாட்டா
வறிவிலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சுமாறே.

தறி செறி களிறும் அஞ்சேன்
தழல் விழி உழுவை அஞ்சேன்
வெறி கமழ் சடையன் அப்பன்
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்கள் ஏத்திச்
சிறந்து இனிது இருக்கமாட்டா
அறிவு இலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

தறி செறி களிறும்-கட்டுத்தறியைச் சினந்து அசைக்கிற யானையும். தழல் விழி உழுவை-நெருப்புப்போன்ற கண்ணுடைய புலி. வெறி-மணம். செறிதரு-நெருங்கிய.

விவேகம் உடையவர் உறவு வேண்டும்; விவேகம் இல்லாதவர் உறவு உதவாது. விவேகம் படைத்தவர் யானைக்கும் புலிக்கும் அஞ்சமாட்டார்கள். ஆனால் விவேகம் அற்றவர்களிடமிருந்து அவர் கள் விலகியிருப்பார்கள்.

9. மஞ்சுலா முருமு மஞ்சேன்
மன்னரோ டுறவு மஞ்சேன்
நஞ்சமே யமுத மாக்கு
நம்பிரா னெம்பி ரானைச்
செஞ்செவே யாண்டு கொண்டான்
றிருமுண்டந் தீட்ட மாட்டா
தஞ்சுவா ரவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

மஞ்சு உலாம் உருமும் அஞ்சேன்
மன்னரோடு உறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுதம் ஆக்கும்
நம் பிரான் எம் பிரானைச்
செஞ்செவே ஆண்டு கொண்டான்
திருமுண்டம் தீட்ட மாட்டாது
அஞ்சுவார் அவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

மஞ்சு-மேகம். உருமும்-இடியும். செஞ்செவே-மிகச் செம்மை யாக. திருமுண்டம்-திரிபுண்டரம். திருநீற்றை மூன்று வரியாகப் பூசுதல்.

அஞ்சும் தன்மையுடையவர் எதற்கும் உதவார். சிறப்பாக ஆத்ம சாதனத்துக்கு அன்னவர் உதவமாட்டார்கள்.

தீயோடு பழகுவதுபோன்று மன்னரோடு பழகும் விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவர்களோடு நெருங்கிப் பழகுவதோ மற்று அறவே புறக்கணிப்பதோ ஒவ்வாது. உலகில் பிரதிகூலமாயிருப் பவைகளை அனுகூலமானவைகளாக மாற்றத் தெரிந்து கொள்ளவேண்டும் என்னும் கோட்பாட்டை நஞ்சு உண்ணும் சிவனார் விளக்குகிறார்.

10. கோணிலா வாளி யஞ்சேன்
கூற்றுவன் சீற்ற மஞ்சே
னீணிலா வணியி னானை
நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர
வாழ்த்திநின் றேத்த மாட்டா
வாணலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

கோள் நிலா வாளி அஞ்சேன்
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்:
நீள் நிலா அணியினானை
நினைந்து நைந்து உருகி நெக்கு
வாள் நிலாம் கண்கள் சோர
வாழ்த்தி நின்று ஏத்த மாட்டா
ஆண் அலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே.

கோள் நிலா வாளி-கொலைத்தன்மை தங்கிய அம்பு. வாள் நிலாம்-ஒளி பொருந்திய. ஆண்-ஆண் தன்மை.

கொடிய ஆயுதத்துக்கு அஞ்சேன். சாவுக்கு அஞ்சேன். சந்திரசேகரனாகிய சிவனைத் தீவிரமாக வழுத்தும் ஆண்மை படையாதவனுக்கு அஞ்சுவேன்.

உபநி. 44 பக்கம் 326ல் காண்க.

திருப்பெருந்துறையில் அருளிய

36. திருப்பாண்டிப் பதிகம்

சிவானந்த விளைவு

கட்டளைக் கலித்துறை

1. பருவரை மங்கைதன் பங்கரைப்
பாண்டியற் காரமுதா
மொருவரை யொன்று மிலாதவ
ரைக்கழற் போதிறைஞ்சித்

தெரிவர நின்றுருக் கிப்பரி
மேற்கொண்ட சேவகனு
ரொருவரை யன்றி யுருவறி
யாதென்ற னுள்ளமதே.

பரு வரை மங்கை தன் பங்கரைப்
பாண்டியற்கு ஆர் அமுது ஆம்
ஒருவரை ஒன்றும் இலாதவரைக்
கழல் போது இறைஞ்சித்
தெரிவர நின்று உருக்கிப்
பரிமேல்கொண்ட சேவகனர்
ஒருவரை அன்றி உருவு அறியாது
என் தன் உள்ளமதே.

பரு வரை-பெரிய மலை. மங்கை-உமை. ஒன்றும் இலாதவரை-குணம் குறியற்றவரை. தெரிவர நின்று-கண்ணுக்குத் தெரியும்படி நின்று. பரி-குதிரை. உள்ளமது-உள்ளமானது.

பார்வதி சமேதரும், பாண்டி மன்னனுக்கு அமிர்தமானவரும், நாமரூபமற்றவரும், குதிரைமேல் வந்து கண்டவர் மனம் உருகப் பண்ணியவரும் ஆகிய சிவனையே வணங்குவேன். அவர் ஒருவரே என் காட்சிக்கு இலக்கு ஆகின்றார்.

உபநி. 2. பக்கம் 102ல் காண்க.

2\. சதுரை மறந்தறி மால்கொள்வர்
சார்ந்தவர் சாற்றிச் சொன்னோங்
கதிரை மறைத்தன்ன சோதி
கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடு
மேற்குடி கேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப்
போட மறித்திடுமே.

சதுரை மறந்து அறிமால் கொள்வர்
சார்ந்தவர் சாற்றிச் சொன்னோம்
கதிரை மறைத்தன்ன சோதி
கழுக்கடை கைப் பிடித்துக்

குதிரையின்மேல் வந்து கூடிடுமேல்
குடி கேடு கண்டீர்
மதுரையர் மன்னன் மறு பிறப்பு
ஓட மறித்திடுமே.

சதுரை-ஆற்றலே. அறிமால்-ஞானமையல். குடிகேடு-பிறவிப் பிணி ஒழியும். கழுக்கடை-ஈட்டி, திரிசூலம். ஓட மறித்திடும்-ஓட்டி மீண்டும் வாராது தடுக்கும்.

சிவனைச் சார்ந்தவர் தற்போதம் இழந்து ஞான வேட்கைகொள்வர்; இது உறுதி; சூரியப் பிரகாசத்துக்கு மேலான ஜோதியாய் சூலம் பிடித்துக் குதிரையின்மேல் வந்ததைப் பார்த்தவர்க்குப் பிறவிப்பிணி போயிற்று. மதுரை மன்னனுக்கு மறு பிறப்பு இல்லை.

3. நீரின்ப வெள்ளத்து ணீந்திக்
குளிக்கின்ற நெஞ்சங்கொண்டீர்
பாரின்ப வெள்ளங் கொளப்பரி
மேற்கொண்ட பாண்டியனு
ரோரின்ப வெள்ளத் துருக்கொண்டு
தொண்டரை யுள்ளங்கொண்டார்
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழ
லேசென்று பேணுமினே.

நீர் இன்பம் வெள்ளத்துள் நீந்திக்
குளிக்கின்ற நெஞ்சம் கொண்டீர்
பார் இன்பம் வெள்ளம் கொளப்
பரிமேல் கொண்ட பாண்டியனுர்
ஓர் இன்பம் வெள்ளத்து உருக் கொண்டு
தொண்டரை உள்ளம் கொண்டார்
பேர் இன்பம் வெள்ளத்துள் பெய்கழலே
சென்று பேணுமினே.

நீர்-நீங்கள். பாண்டியனுர்-சிவபிரான்.

உலக இன்பம் நிலையற்றது. உலகத்தவர் எல்லாரையும் பேரின்பத்தில் திளைத்திருக்கச் செய்யுமாறு சிவனுர் குதிரைச் சேவகனுக வந்தார். அப்படி வந்தவர் தொண்டரைத் தன் மயம் ஆக்கினுர் பேரின்பத்தையே யாண்டும் நாடுங்கள்,

4. செறியும் பிறவிக்கு நல்லவர்
செல்லன்மின் றென்னனன்னாட்
டிறைவன் கிளர்கின்ற காலமிக்
காலமெக் காலத்துள்ளு
மறிவொண் கதிர்வா ளுறைகழித்
தானந்த மாக்கடவி
யெறியும் பிறப்பை யெதிர்ந்தார்
புரள விருநிலத்தே.

செறியும் பிறவிக்கு நல்லவர்
செல்லல்மின் தென்னன் நல் நாட்டு
இறைவன் கிளர்கின்ற காலம்
இக்காலம் எக் காலத்துள்ளும்
அறிவு ஒண் கதிர் வாள் உறை கழித்து
ஆனந்தம் மாக் கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார்
புரள இரு நிலத்தே.

செறியும் - தொடர்ந்து வரும். கிளர்கின்ற - விளங்குகின்ற. அறிவு ஒண் கதிர் வாள்-பிரகாசமுடைய ஞான வாள். உறை கழித்து-உறையிலிருந்து எடுத்து. ஆனந்தம் மாக்கடவி-பேரானந்தம் என்னும் குதிரையின்மீது ஏறி நடத்தி. பிறப்பை எறியும்-பிறப்பை வெட்டுவான். எதிர்ந்தார் புரள-பகைவர் மடிந்துவிழும் படி. இருநிலத்தே-பெரிய நிலவுலகிலே.

நல்லவர்கள் பிறவியைப் பெருக்கலாகாது. இறைவனுடைய அருளைப் பெறுதற்கு ஒவ்வொரு கணமும் நல்ல காலமே. அவன் ஞானவாள் ஏந்தி, ஆனந்தம் என்னும் குதிரையின்மீது ஏறிவந்து உலகில் உள்ளவர் பிறப்பை எதிர்த்து ஒழிக்கிறான்.

வாழ்வில் ஒவ்வொரு கணப்பொழுதையும் கிடைப்பதற்கு அரிய வாய்ப்பு என அறிஞன் அறிகிறான். அக் ஞானி பிறப்பை நேசிக்கிறான். ஞானியோ அதைப் பகை யென ஒதுக்குகிறான்.

5. காலமுண் டாகவே காதல்செய்
துய்ம்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய

வாலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் னடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.

காலம் உண்டாகவே காதல் செய்து
உய்ம்மின் கருது அரிய
ஞாலம் உண்டானெடு நான்முகன்
வானவர் நண் அரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்
பிரான் தன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான்
வந்து முந்துமினே.

காலம் உண்டாகவே-ஆயுள் கைவசம் இருக்கும்பொழுதே. ஞாலம் உண்டானெடு-உலகை உண்ட திருமாலோடு. நண் அரிய-அணுக முடியாத. ஆலம்-விஷம். மூலபண்டாரம்-பேரின்பச் செல்வம், வீடுபேறு.

காலம் வாய்த்திருக்கிறது. பக்தி பண்ணிக் கடைத்தேறுங்கள். சிவானந்த போகத்தைப் பரமன் தன் அன்பர்க்கு வழங்குகின்றான். விரைந்து வந்து பயன் பெறுங்கள்.

6. ஈண்டிய மாயா விருள்கெட
வெப்பொரு ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ
னுஞ்சொல்ல வல்லனல்லன்
வேண்டிய போதே விலக்கிலை
வாய்தல் விரும்புமின்றாள்
பாண்டிய னாரருள் செய்கின்ற
முத்திப் பரிசிதுவே.

ஈண்டிய மாயா இருள் கெட
எப்பொருளும் விளங்கத்
தூண்டிய சோதியை மீனவனும்
சொல்ல வல்லன் அல்லன்
வேண்டிய போதே விலக்கு இலை
வாய்தல் விரும்புமின் தாள்
பாண்டியனார் அருள் செய்கின்ற
முத்திப் பரிசு இதுவே.

ஈண்டிய-நெருங்கிய. தூண்டிய-குதிரையில் ஏறிச் செலுத்தி வந்த. மீனவனும்-மீன் கொடியையுடைய பாண்டிய மன்னனும். வாய்தல்-பெறுதல். பாண்டியனர்-சிவபெருமான்.

ஞானஜோதியானது குதிரையின் மீது ஏறிவந்து தோன்றியுள்ளது. அதனல் மாயை என்னும் இருள் அகன்றது. பொருள் உள்ளபடி விளங்குகிறது. இந்த ஜோதியைச் சொல்லால் யாரும் விளக்க முடியாது. வேண்டியபொழுதே இதைப் பெறலாம். இதற்குத் தடையொன்றுமில்லை. இப்பரம்பொருளேயே நாடுங்கள். முக்தி என்னும் பேறு இதனிடத்திருந்தே வருகிறது.

இந்தப் பாரமார்த்திகச் செய்தி எக்காலத்தும் யாவர்க்கும் உரியதாகும்.

உபநி—41. பக்கம் 316ல் காண்க.

7. மாய வனப்பரி மேல்கொண்டு
மற்றவர் கைக்கொளலும்
போயறு மிப்பிறப் பென்னும்
பகைகள் புகுந்தவருக்
காயவ ரும்பெருஞ் சீருடைத்
தன்னரு ளேயருளுஞ்
சேய நெடுங்கொடைத் தென்னவன்
சேவடி சேர்மின்களே.

மாயம் வனம் பரிமேல்கொண்டு
மற்று அவர் கைக்கொளலும்
போய் அறும் இப்பிறப்பு என்னும்
பகைகள் புகுந்தவருக்கு
ஆய அரும்பெரும் சீர் உடைத்
தன் அருளே அருளும்
சேய நெடும் கொடைத் தென்னவன்
சேவடி சேர்மின்களே.

மாயம் வனம் பரி-*மாயமாகிய அழகிய குதிரை*. சேய-செம்மை*யாகிய, சிரேயஸாகிய*. நெடும் கொடை-*நித்தியமாயுள்ள* சிவப்பேறு. தென்னவன்-சிவபெருமான்.

மாயமாகிய அழகிய குதிரை போன்றது இப்பிரபஞ்ச வாழ்க்கை என்பதை அவன் காட்ட வந்தான். அவனைச் சார்ந்த

வுடனே மாயையும் அதன் விளைவாகிய பிறப்பு இறப்பும் அடிபட்டுப் போகின்றன. அவன் அருள் என்னும் சிறப்பு வாய்க்கிறது. அப்பெரியபேறு சாசுவதமானது. ஆதலால் சிவனையே நாடுங்கள்.

8. அழிவின்றி நின்றதொ ரானந்த
வெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக்
கடிய வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன்
பாண்டிப் பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடை
யேசென்று முந்துமினே.

அழிவு இன்றி நின்றது ஓர் ஆனந்த
வெள்ளத்திடை அழுத்திக்
கழிவு இல் கருணையைக் காட்டிக்
கடிய வினை அகற்றிப்
பழ மலம் பற்று அறுத்து ஆண்டவன்
பாண்டிப் பெரும் பதமே
முழுது உலகும் தருவான் கொடையே
சென்று முந்துமினே.

கழிவு-நீக்கம். கடிய-வலிய.

அகண்ட சச்சிதானந்தம் அவன் அருளால் வருகிறது. வினை அகலுகிறது; பற்று ஒழிகிறது; சிவசாயுஜ்யம் வாய்க்கிறது; விரைந்து போய் அதைப் பெறுங்கள்.

9. விரவிய தீவினை மேலைப்
பிறப்புமுந் நீர்கடக்கப்
பரவிய வன்பரை யென்புருக்
கும்பரம் பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்திகொ
ளப்பட்ட பூங்கொடியார்
மரவியன் மேற்கொண்டு தம்மையுந்
தாமறி யார்மறந்தே.

விரவிய தீவினை மேலைப்
பிறப்பு முந்நீர் கடக்கப்
பரவிய அன்பரை என்பு உருக்கும்
பரம் பாண்டியனார்
புரவியின் மேல் வரப் புந்தி
கொளப்பட்ட பூங்கொடியார்
மர இயல் மேல்கொண்டு தம்மையும்
தாம் அறியார் மறந்தே.

விரவிய-கலந்த. முந்நீர்-கடல். பரவிய-வழிபட்ட. பரம் பாண்டியனார்-சிவன். புரவி-குதிரை. புந்தி-அறிவு. பூங்கொடியார்-பண்பட்ட ஜீவாத்மாக்கள். மர இயல்-ஜடநிலை.

வினையின் விளைவாகிய பிறவிக்கடலை ஒழிக்க அன்பர் இறைவனை வழிபட்டனர். அவர்களைப் பரவசமாக்குதற்குப் பரமன் குதிரையின் மேல் வந்தான். பண்பட்ட ஜீவர்கள் தங்கள் அறிவை அவனிடம் கொள்ளை கொடுத்துவிட்டு மரம் போன்று ஸ்தம்பித்து இருந்தனர்.

சிவபோதம் தலையெடுக்க, ஜீவபோதம் ஒடுங்குகிறது.

10. கூற்றைவென் றாங்கைவர் கோக்களை
யும்வென் றிருந்தழகால்
வீற்றிருந் தான்பெருந் தேவியுந்
தானுமோர் மீனவன்பா
லேற்றுவந் தாருயி ருண்ட
திறலொற்றைச் சேவகனே
தேற்றமி லாதவர் சேவடி
சிக்கெனச் சேர்மின்களே.

கூற்றை வென்று ஆங்கு ஐவர் கோக்களையும்
வென்று இருந்து அழகால்
வீற்றிருந்தான் பெரும் தேவியும்
தானும் ஓர் மீனவன்பால்
ஏற்று வந்து ஆர் உயிர் உண்ட
திறல் ஒற்றைச் சேவகனே
தேற்றம் இலாதவர் சேவடி
சிக்கெனச் சேர்மின்களே.

கூற்றை-யமனை. ஐவர் கோக்களேயும்-புலன்களாகிய ஐந்து அரசர்களையும். மீனவன்-பாண்டி மன்னன். ஏற்று-இரந்து. திறல்-ஆற்றல். ஒற்றைச் சேவகன்-தனிப்பட்ட வீரன், சிவபெருமான். தேற்றம்-தெளிவு. சிக்கென-உறுதியாக.

சிவன் யமனையும் ஐம்புலன்களையும் வென்றான். அழகாகத் தானும் தேவியுமாகப் பாண்டியன் முன் காட்சி கொடுத்து அவனது ஜீவபோதத்தையுமொழித்தான். இன்னும் தெளிவுபெறாத நீங்கள் அவனை உறுதியாகப் பிடியுங்கள்.

திருத்தோணிபுரத்தில் அருளிய

37. பிடித்த பத்து

முத்திக் கலப்பு உரைத்தல்

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. உம்பர்கட் கரசே யொழிவற நிறைந்த
யோகமே யூத்தையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
யெம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

உம்பர்கட்கு அரசே ஒழிவு அற நிறைந்த
யோகமே ஊத்தையேன் தனக்கு
வம்பு எனப் பழுத்து என் குடி முழுது ஆண்டு
வாழ்வு அற வாழ்வித்த மருந்தே
செம்பொருள் துணிவே சீர் உடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

யோகமே-ஜீவ சிவ ஐக்கியமே. வம்பு-புதுமை.

மஹாதேவா, எங்கும் நிறைபொருளே, எனது ஜீவபோதத்தை அழித்துச் சிவசொரூபம் ஆக்கிய அமிர்தமே, உன்னை உறுதியாகப் பிடிக்கிறேன். என்னிடம் உனது சான்னித்தியம் ஓங்குக.

2. விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணங் காத்தெனை யாண்ட
கடவுளே கருணை மாகடலே
யிடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

விடை விடாது உகந்த விண்ணவர் கோவே
வினையனேனுடைய மெய்ப்பொருளே
முடை விடாது அடியேன் மூத்து அற மண் ஆய்
முழுப் புழுக் குரம்பையில் கிடந்து
கடைபடா வண்ணம் காத்து எனை ஆண்ட
கடவுளே கருணை மா கடலே
இடைவிடாது உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

விடை-எருது. முடை-நாற்றம். அற-மிகவும்.

ரிஷப வாஹனனே, எனது உறுதிப் பொருளே, காயம் என்னும் துர்நாற்றக் கட்டையில் கட்டுறுது என்னைக் காத்த கருணாகரனே, உன்னை இறுகப் பிடித்துள்ளேன். நீ பிரசன்னமாவாயாக.

3. அம்மையே யப்பா வொப்பிலா மணியே
யன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
யிம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

அம்மையே அப்பா ஒப்பு இலா மணியே
அன்பினில் விளைந்த ஆர் அமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்து அலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவ பதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

புழுத்து அலை-தலைகொழுத்துத் திரிகிற.

தாயும் தந்தையும் ஆனவனே, உவமையற்ற ஞானச் சுடரே, பக்தி சாகரத்தில் மிளிரும் சாகா மருந்தே, உடல் உணர்வை வளர்த்து வீண் காலம் போக்கும் இச்சளுக்கனுக்குச் சாசுவத சிவ போகத்தைக் கொடுத்தருள்க. உன்னை உறுதியாகப் பற்றுகிறேன். நீ தோன்றியருளுக.

4. அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே
பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
யிருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

அருள் உடைச் சுடரே அளிந்தது ஓர் கனியே
பெரும் திறல் அரும் தவர்க்கு அரசே
பொருள் உடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருள் இடத்து அடியார் சிந்தையுள் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருள் இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

அளிந்தது-கனிந்தது. திறல்-பேராற்றல். தவர்க்கு-தவம் உடையவர்க்கு. பொருள்-பரம்பொருள். போகமே-பேரின்பமே. தெருள்-தெளிவு. இருள்-அக்ஞானம்.

அருட்பெருஞ் ஜோதியே, ஞானத்தில் பழுத்த கனியே, தவ ராஜர்களுக்கு ராஜனே, பராவித்தை வடிவினனே, சொல்லில் அடங்காத தீஞ்சுவையே, யோகாருடனே, தெளிந்த தொண்டர் உள்ளத்தில் திகழும் தேட்டமே, இந்த அக்ஞான உலகில் உழலும் நான் உன்னை உறுதியாகப் பிடிக்கிறேன். நீ காட்சி கொடுத் தருளுக.

5. ஒப்புனக் கில்லா வொருவனே யடியே
னுள்ளத்து ளொளிர்கின்ற வொளியே
மெய்ப்பத மறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
யெய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

ஒப்பு உனக்கு இல்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப் பதம் அறியா வீறு இலியேற்கு
விழுமியது அளித்தது ஓர் அன்பே
செப்புதற்கு அரிய செழும் சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெருமானே
எய்ப்பு இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

மெய்ப்பதம்-*பரபோதம்.* வீறு-*மேன்மை.* விழுமியது-*சிறந்த திருவருள்.* எய்ப்பு இடத்து-*இளைத்த இடத்தில்.*

அத்வைத வஸ்துவே, என் சித்தமிசை மிளிர்கின்ற மெய்ஞ் ஞான விளக்கே, பரத்தினை அறியாத புன்மையனுக்குப் பரத்தி னைப் போதித்த பிரேமையாளா, வாக்கில் அடங்காத வான்வடிவே, இளைப்புறும் நான் உன்னை இறுகப் பிடிக்கிறேன். என்னை நீ ஆட்கொள்வாயாக.

6. அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா வானந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியவெம் பொருளே

திறவிலே கண்ட காட்சியே யடியேன்
செல்வமே சிவபெரு மானே
யிறவிலே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டு ஆண்டு
அளவு இலா ஆனந்தம் அருளிப்
பிறவி வேர் அறுத்து என் குடி முழுது ஆண்ட
பிஞ்ஞகா பெரிய எம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெருமானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

அறவையேன்-ஆதரவு அற்ற எனது. திறவிலே-வெளிப்படையாக. இறவிலே-முடிவிலே.

நீ ஆட்கொள்ளுதற்கு முன்பு நான் அநாதையாகக் கிடந்தேன். என்னை நீ ஆட்கொண்டதால் என் உள்ளம் உனது கோயில் ஆயிற்று. அதனால் நான் பேரானந்தம் பெற்றேன். நான் உனக்குரியவன் ஆதலால் என் பிறவிப்பிணி ஒழிந்தது. வெளிப்படையாக நான் உன்னைக் கண்டுள்ளேன். இறுதியாக உன்னை நான் இறுகப் பிடிக்கிறேன். நீ சந்ததமும் என் காட்சியில் இருப்பாயாக.

7. பாசவே ரறுக்கும் பழம்பொரு டன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
யீசனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

பாசம் வேர் அறுக்கும் பழம் பொருள் தன்னைப்
பற்றும் ஆறு அடியனேற்கு அருளிப்
பூசனை உகந்து என் சிந்தையுள் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே

தேசு உடை விளக்கே செழும் சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெருமானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

பாசம் வேர்-உலகப்பற்று ஆகிய வேர்.

உன்னைப் பற்றும்படிச் செய்தாய். அதனால் உலகப்பற்று நீங்கிற்று. எனது ஆராதனையை ஏற்றுள்ளாய். உனது தாமரைத் திருவடியைக் காட்டியுள்ளாய். தேஜோமயனே, ஞானப் பிரகாசனே, உன்னை உறுதியாகப் பிடித்துள்ளேன். என்னை உன்மயமாக்குக.

8. அத்தனே யண்ட ரண்ட மாய்நின்ற
வாதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே யெல்லா வுயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை யல்லையாய் நிற்கு
மெத்தனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

அத்தனே அண்டர் அண்டம் ஆய் நின்ற
ஆதியே யாதும் ஈறு இல்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெருமானே
பித்தனே எல்லா உயிரும் ஆய்த் தழைத்துப்
பிழைத்து அவை அல்லை ஆய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

சித்தனே-அறிவு சொரூபியே. எத்தனே-மாயம் உடையவனே.

கடவுளே, உலகுக்கு முதல்வனே, பேரறிவே, பக்தவத்சலா, அன்பரை உய்விப்பதில் பித்தம் பூண்டவனே, எல்லா உயிர்களுமாகி, அவையல்லையுமாய் இருக்கும் ஜாலவித்தை படைத்தவனே, உன்னையே உறுதுணையாகக் கொண்டுள்ளேன். என்னை ஏற்றருள்க.

9. பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
வூனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி
உலப்பு இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

உலப்பு-கெடுதல், அழிவு.

தாயினும் மிக்க தயாளுவே, என் உடல் உணர்வை ஒடுக்கி, ஞான ஒளியை வளர்த்து, சிவானந்தத் தேனை ஊட்டியுள்ளாய். நீ அகண்ட வஸ்துவாதலால் என் வடிவத்தில் கட்டுப்படாதவன். உன்னைத் தழுவுகிறேன். என்னை வழுவவிடாதே.

10. புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தெ
னென்பெலா முருக்கி யெளியையா யாண்ட
வீசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்தநற் சோதீ
யின்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

புன் புலால் யாக்கை புரை புரை கனியப்
பொன் நெடும் கோயிலாப் புகுந்து என்
என்பு எலாம் உருக்கி எளியை ஆய் ஆண்ட
ஈசனே மாசு இலா மணியே

துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்கு ஆம்
தொடக்கு எலாம் அறுத்த நல் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

புன்-இழிந்த. புரை புரை கனிய-மயிர்க்கால்தோறும் நெகிழ்ச்சி யடைய. எளியை ஆய்-எளிதில் அகப்படுபவன் ஆகி. தொடக்கு-பிணிப்பு, பற்றுதல்.

என் புலால் உடம்பைப் பொன்கோயிலாக்கி அதில் புகுந்தருளினாய். அது முற்றிலும் உனக்கேற்றதாயிற்று. நீயும் அதில் வசிக்கும் எளியவன் ஆகியுள்ளாய். நீ நிர்மல மாணிக்கம். என் பிறப்பு இறப்பு துன்பத்தை அகற்றிய அருள் ஜோதி நீ. உன்னையே நான் பற்றிப் பிடிக்கிறேன். நீ யாண்டும் எனக்குச் சொந்தம் ஆவாயாக.

---

38. திரு ஏசறவு

சுட்டறிவு ஒழித்தல்

கொச்சகக் கலிப்பா

ஏசறவு என்பது ஸ்துதி; அதன் வாயிலாகப் பொறி புலன்களை ஒழித்தல்.

1. இரும்புதரு மனத்தேனை
யீர்த்தீர்த்தெ னென்புருக்கிக்
கரும்புதரு சுவையெனக்குக்
காட்டினையுன் கழலிணைக
ளொருங்குதிரை யுலவுசடை
யுடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா
றன்றேயுன் பேரருளே.

இரும்பு தரு மனத்தேனை
ஈர்த்து ஈர்த்து என் என்பு உருக்கிக்
கரும்பு தரு சுவை எனக்குக்
காட்டினை உன்கழல் இணைகள்

ஒருங்கு திரை உலவு சடை உடையானே
நரிகள் எல்லாம்
பெரும் குதிரை ஆக்கிய ஆறு
அன்றே உன் பேர் அருளே.

தரு-ஒத்த. ஈர்த்து ஈர்த்து-இழுத்து இழுத்து. ஒருங்கு-ஒருங்கே. திரை உலவு-அலையோடு கூடிய கங்கை உலாவுகின்ற.

இரும்பு போன்ற என் கடின நெஞ்சை உருக்கினாய். கரும்பின் சுவையையொத்த உன் திருவடியைக் காட்டியருளினாய். கங்கா தரா, நீ நரியைப் பரியாக்கியது வியப்புக்குரிய செயலாம்.

2. பண்ணார்ந்த மொழிமங்கை
பங்காநின் னாளானார்க்
குண்ணார்ந்த வாரமுதே
யுடையானே யடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட்
டாள்வாய்நீ வாவென்னக்
கண்ணார வுய்ந்தவா
றன்றேயுன் கழல்கண்டே.

பண் ஆர்ந்த மொழி மங்கை பங்கா
நின் ஆள் ஆனார்க்கு
உண் ஆர்ந்த ஆர் அமுதே
உடையானே அடியேனை
மண் ஆர்ந்த பிறப்பு அறுத்திட்டு
ஆள்வாய் நீ வா என்னக்
கண் ஆர உய்ந்த ஆறு அன்றே
உன் கழல் கண்டே.

உண் ஆர்ந்த-உண்ண நிறைந்த. ஆர் அமுதே-அருமையான அமிர்தமே. மண் ஆர்ந்த-மண் உலகில் பொருந்திய. கண் ஆர-கண்குளிர. உன் கழல் கண்டு அன்றே-உன் திருவடியைப் பார்த்து அல்லவா.

உமா மகேசுவரா, நீ அன்பர்க்கு ஆர் அமிர்தம். என் பிறப்பை அறுத்தல் பொருட்டு என்னை ஆட்கொண்டாய். உன் திருவடியைக் கண்ணாரக் கண்டு உய்வு அடைந்தேன்.

3. ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னு மருநரகி
லார்தமரு மின்றியே யழுந்துவேற் காவாவென்
ஞேதமலி நஞ்சுண்ட வுடையானே யடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேயெம் பரம்பரனே.

ஆதம்இலி யான் பிறப்பு இறப்பு என்னும் அருநரகில்
ஆர் தமரும் இன்றியே அழுந்துவேற்கு ஆ ஆ என்று
ஓதம் மலி நஞ்சுஉண்ட உடையானே அடியேற்குஉன்
பாதம்மலர் காட்டிய ஆறு அன்றே எம் பரம்பரனே.

ஆதம்இலி-ஆதரவு அற்றவன். ஆர் தமரும் இன்றியே-உறவினர் ஒருவரும் இல்லாமலே. ஓதம் மலி-கடலில் எழுந்த.

உலகை உய்வித்தல் பொருட்டுக் கடலில் விளைந்த நஞ்சை உண்டாய். பிறவிப்பிணியில் தவிக்கின்ற தமியனை நீ தாங்கிக் கொண்டது உனது வியப்புக்குரிய செயலாம்.

4. பச்சைத்தா லரவாட்டி
படர்சடையாய் பாதமல
ருச்சத்தார் பெருமானே
யடியேனை யுய்யக்கொண்
டெச்சத்தார் சிறுதெய்வ
மேத்தாதே யச்சோவென்
சித்தத்தா றுய்ந்தவா
றன்றேயுன் றிறனினைந்தே.

பச்சைத் தால் அரவு ஆட்டி
படர் சடையாய் பாதம் மலர்
உச்சத்தார் பெருமானே
அடியேனை உய்யக் கொண்டு
எச்சத்து ஆர் சிறு தெய்வம்
ஏத்தாதே அச்சோ என்
சித்தத்து ஆறு உய்ந்த ஆறு
அன்றே உன் திறம் நினைந்தே.

பச்சைத்தால்-பச்சைத்தாலு, பச்சை நிறமான நாவினையுடைய. படர்-படர்ந்த, விரிந்த. உச்சத்தார்-மேல்நிலையடைந்தவர்கள். எச்சத்து ஆர்-குறைபாடுகள் நிறைந்த. அச்சோ-அந்தோ. சித்தத்து ஆறு-மனதின்படியே. திறம்-அருள்வன்மை.

பன்னக பூஷணு, ஜடாதரா, தன் திருவடியைச் சான்றோர்க்குச் ாந்தமாக்கியவனே, நான் சிறு தெய்வங்களைச் சாராது உன் யே போற்றும்படி நீ செய்தது வியக்கத்தக்கது.

5. கற்றறியேன் கலைஞானங்
கசிந்துருகே ளுயிடினு
மற்றறியேன் பிறதெய்வம்
வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேனெம்
பெருமானே யடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா
றன்றேநின் பொன்னருளே.

கற்று அறியேன் கலை ஞானம்
கசிந்து உருகேன் ஆயிடினும்
மற்று அறியேன் பிற தெய்வம்
வாக்கு இயலால் வார் கழல் வந்து
உற்று இறுமாந்து இருந்தேன்
எம்பெருமானே அடியேற்குப்
பொன் தவிசு நாய்க்கு இடும் ஆறு
அன்றே நின் பொன் அருளே.

வாக்கு இயலால்-உன்னுடைய அருள் நிறைந்த சொல்லின் ன்மையால். இறுமாந்து-தற்பெருமைகொண்டு. பொன்தவிசு-ருமையான ஆசனம்.

எனக்குக் கலைஞானம் இல்லை; அருள்தாகம் இல்லை. எனது சால்திறனைச் சிறு தெய்வங்களைப் போற்றப் பயன்படுத்தவில்லை. ன்னையே சார்ந்திருந்து அதைக் குறித்துத் தற்பெருமை படைத் ருந்தேன். அத்தகைய என்னை நீ ஆட்கொண்டது நாய்க்குப் பான் பீடம் கொடுத்ததற்கு நிகர். உன் செயல் வியப்புக்குரியது.

6. பஞ்சாய வடிமடவார்
கடைக்கண்ணா லிடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர
நடுங்குவே னின்னருளா

லுய்ஞ்சேனெம் பெருமானே
யுடையானே யடியேனை
யஞ்சேலென் றாண்டவா
றன்றேயம் பலத்தமுதே.

பஞ்சு ஆய அடி மடவார்
கடைக் கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சு ஆய துயர் கூர
நடுங்குவேன் நின் அருளால்
உய்ஞ்சேன் எம் பெருமானே
உடையானே அடியேனை
அஞ்சேல் என்று ஆண்ட ஆறு
அன்றே அம்பலத்து அமுதே.

பஞ்சு ஆய அடி-பஞ்சுபோன்ற பாதம். கூர-மிகுதியாக. உய்ஞ்சேன்-உய்ந்தேன்.

காம நோய்க்கு உட்பட்டுக் கலங்கிக்கிடந்த எனக்கு நீ அபயம் அளித்து யோகத்துக்கு உரியவன் ஆக்கியது வியப்பன்றோ!

7. என்பாலைப் பிறப்பறுத்திங்
கிமையவர்க்கு மறியவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந்
துறையுறையுஞ் சிவபெருமா
னன்பானீ யகநெகவே
புகுந்தருளி யாட்கொண்ட
தென்பாலே நோக்கியவா
றன்றேயெம் பெருமானே.

என் பாலைப் பிறப்பு அறுத்து
இங்கு இமையவர்க்கும் அறிய ஒண்ணாத்
தென் பாலைத் திருப்பெருந்துறை
உறையும் சிவபெருமான்
அன்பால் நீ அகம் நெகவே
புகுந்தருளி ஆட்கொண்டது
என்பாலே நோக்கிய ஆறு
அன்றே எம் பெருமானே.

என்பால்-என்னிடத்து. தென்பால்-தென் திசை. இரண்டு இடத்தும் ஐ சாரியை.

தேவர்களாலும் அறியவொண்ணாத தென் திருப்பெருந்துறைத் தேவே, என் பிறப்பை அறுத்து ஆட்கொண்டது என்மீது நீ வைத்துள்ள கருணையினால் அன்றோ!

8. மூத்தானே மூவாத
முதலானே முடிவில்லா
வோத்தானே பொருளானே
யுண்மையுமா யின்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப்
புரள்வேனைக் கருணையினாற்
பேர்த்தேநீ யாண்டவா
றன்றேயெம் பெருமானே.

மூத்தானே மூவாத முதலானே
முடிவு இல்லா
ஓத்தானே பொருளானே
உண்மையும் ஆய் இன்மையும் ஆய்ப்
பூத்தானே புகுந்து இங்குப்
புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தே நீ ஆண்ட ஆறு
அன்றே எம் பெருமானே.

மூத்தானே-அனைவர்க்கும் முன்னவனே. மூவாதமுதலானே-யாண்டும் இளமையோடு இருக்கும் மூலப்பொருளே. ஓத்தானே-ஓதப்படும் வேத சொரூபியே. உண்மையும் ஆய் இன்மையும் ஆய்-தோன்றியுள்ள பிரபஞ்சமும், தோன்றாத மூலப் பிரகிருதியும் ஆகிய இந்த இரண்டு நிலைகளிலும் இருப்பவனே, ஸத் அஸத் சொரூபியே. பூத்தானே-தோன்றியவனே. புரள்வேனை-உழன்று கிடப்பேனை. பேர்த்தே-நீக்கியே.

மஹிமை அனைத்தும் வாய்க்கப்பெற்றவனே, உலகச் சிறுமையில் உழலும் என்னை நீ சிவநெறியில் பெயர்த்துவைத்தது விந்தையல்லவா!

9. மருவினிய மலர்ப்பாத
மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறு மிகவலறிச்
சிவபெருமா னென்றேத்திப்

பருகியநின் பரங்கருணைத்
தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே
யிடங்கொண்ட வம்மானே.

மருவு இனிய மலர்ப் பாதம்
மனத்தில் வளர்ந்து உள்உருகத்
தெருவு தொறும் மிக அலறிச்
சிவபெருமான் என்று ஏத்திப்
பருகிய நின்பரம் கருணைத்
தடம் கடலில் படிவு ஆம் ஆறு
அருள் எனக்கு இங்கு
இடைமருதே இடம் கொண்ட அம்மானே.

மருவு இனிய-கூடுதற்கு இனிய. மரு இனிய-இனிய மண முள்ள, பருகிய-பருக.

திருவிடைமருதூரில் எழுந்தருளிய இறைவா, மணம் கமழும் உன் திருவடி என் மனதில் நிலைத்திருந்து அதை உருக்குவதாகுக. தெருக்களில் உன் பெருமையை நான் உரக்கப் புகழ்வேனாக. உன் கருணைக்கடலில் நான் திளைத்திருப்பேனாக.

10. நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம வெனப்பெற்றேன்
றேனாயின் னமுதமுமாய்த்
தித்திக்குஞ் சிவபெருமான்
றானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தா
னூனாரு முயிர்வாழ்க்கை
யொறுத்தன்றே வெறுத்திடவே.

நானேயோ தவம் செய்தேன்
சிவாய நம எனப் பெற்றேன்
தேன் ஆய் இன் அமுதமும் ஆய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம்
புகுந்து அடியேற்கு அருள் செய்தான்
ஊன் ஆரும் உயிர் வாழ்க்கை
ஒறுத்து அன்றே வெறுத்திடவே.

ஒறுத்து-இகழ்ந்து, அருவருத்து.

ஜபம் தவம் ஒன்றும் செய்யாத என் மனத்தகத்து சிவன் தானே புகுந்து பேரானந்தத்தைப் பெருக்கினான். அதன் விளைவாக உடல் வாழ்க்கையில் எனக்கு வெறுப்பு வந்துள்ளது.

திருவாரூரில் அருளிய

39. திருப்புலம்பல்

சிவானந்த முதிர்வு

கொச்சகக் கலிப்பா

1. பூங்கமலத் தயனொடுமா
லறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள்
கூறுவெண் ணீறாடீ
யோங்கெயில் சூழ் திருவாரு
ருடையானே யடியேனின்
பூங்கழல்க ளவையல்லா
தெவையாதும் புகழேனே.

பூங்கமலத்து அயனொடு மால்
அறியாத நெறியானே
கோங்கு அலர் சேர் குவி முலையாள்
கூறு வெண் நீறு ஆடீ
ஓங்கு எயில் சூழ் திருவாரூர்
உடையானே அடியேன் நின்
பூங் கழல்கள் அவை அல்லாது
எவை யாதும் புகழேனே.

கோங்கு அலர் சேர்-கோங்கம் பூவையொத்த. ஓங்கு எயில்-உயர்ந்த மதில்.

உமையாள் பங்கா, திருநீறு பூசியவனே, திருவாரூர் தேவா, உன்னை அடைவதற்கு உற்ற உபாயம் ஜீவபோதத்தை ஒழித்தல் என்பதை அயனும் அரியும் அறியார். அத்தகைய அதீதப் பொருளாகிய உன்னையே போற்றுவேன்.

2. சடையானே தழலாடீ
தயங்குமூ விலைச் சூலப்
படையானே பரஞ்சோதீ
பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ்
பெருந்துறையா யடியேனு
னுடையானே யுனையல்லா
துறுதுணைமற் றறியேனே.

சடையானே தழல் ஆடீ
தயங்கு மூவிலைச் சூலப்
படையானே பரஞ்சோதீ
பசுபதீ மழ வெள்ளை
விடையானே விரி பொழில் சூழ்
பெருந்துறையாய் அடியேன் நான்
உடையானே உனை அல்லாது
உறு துணை மற்று அறியேனே.

தயங்கு-விளங்குகின்ற. மழ-இளமை.

ஜடாதரா, அக்னி ஹஸ்தா, சூலபாணி, ரிஷபவாஹனு, நீயே எனக்குக் கதி.

3. உற்ருரை யான்வேண்டே
னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்ருரை யான்வேண்டேன்
கற்பனவு மினியமையுங்

உபநிஷத் மந்த்ரம்—114.

न वा अरे पत्युः कामाय पतिः प्रियो भवति,
आत्मनस्तु कामाय पतिः प्रियो भवति ।
न वा अरे जायायै कामाय जाया प्रिया भवति,
आत्मनस्तु कामाय जाया प्रिया भवति ।
न वा अरे पुत्राणां कामाय पुत्राः प्रिया भवन्ति,
आत्मनस्तु कामाय पुत्राः प्रिया भवन्ति ।

குற்ருலத் தமர்ந்துறையுங்
கூத்தாவுன் குரைகழற்கே
கற்ருவின் மனம் போலக்
கசிந்துருக வேண்டுவனே.

நா வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி,
ஆத்மனஸ்து காமாய பதி: ப்ரியோ பவதி ।
ந வா அரே ஜாயாயை காமாய ஜாயா ப்ரியா பவதி,
ஆத்மனஸ்து காமாய ஜாயா ப்ரியா பவதி ।
ந வா அரே புத்ராணும் காமாய புத்ரா: ப்ரியா பவந்தி,
ஆத்மனஸ்து காமாய புத்ரா: ப்ரியா பவந்தி ।

(ப்ரஹதாரண்யகோபநிஷதம் 1-4-5)

अरे அரே ஓய் पत्युः कामाय பத்யு: காமாய கணவனுடைய விருப்பத்துக்காக पतिः प्रियो भवति பதி: ப்ரியோ பவதி கணவன் பிரியன் ஆவது न वा ந வா இல்லவே இல்லை आत्मनस्तु कामाय ஆத்மனஸ்து காமாய ஆத்மாவின் விருப்பத்துக்காகவே पतिः प्रियो भवति பதி: ப்ரியோ பவதி கணவன் பிரியன் ஆகின்ருன் जाया ஜாயா ஜனிக்கும்படி செய்கிறவள், மனைவி पुत्रा புத்ரா புத்திரர்கள்.

ஓய், கணவனுடைய விருப்பத்துக்காகக் கணவன் நேசிக்கப் படுபவன் அல்லன். ஆத்மாவின் விருப்பத்துக்காகவே கணவன் நேசிக்கப்படுகிருன். ஓய், மனைவியின் விருப்பத்துக்காக மனைவி நேசிக்கப்படுபவள் அல்லள். ஆத்மாவின் விருப்பத்துக்காகவே மனைவி நேசிக்கப்படுகிருள். ஓய், புதல்வர்களின் விருப்பத்துக்காகப் புதல்வர்கள் நேசிக்கப்படுகிருர்கள் அல்லர். ஆத்மாவின் விருப்பத்துக்காகவே புதல்வர்கள் நேசிக்கப்படுகிருர்கள்.

ஜீவாத்மன் சுயநலமே வடிவெடுத்தவன். நிகழ்ச்சி ஒன்று இக்கோட்பாட்டை ஐயம் திரிபு அற விளக்கும். அதாவது :

கல்வியிலும் கேள்வியிலும் முதிர்ந்த இளைஞன் ஒருவனுக்கு, 'உலகத்தவர் அனைவரும் சுயநலம் படைத்தவர்கள்,' என்று ஒரு முனிவர் கூறினுர். ஆனல் அக்கூற்றை

உற்ருரை யான் வேண்டேன்
ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்ருரை யான் வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்
குற்ருலத்து அமர்ந்து உறையும் கூத்தா
உன் குரை கழற்கே
கற்ருவின் மனம் போலக்
கசிந்து உருக வேண்டுவனே.

ஏற்க அந்த இளைஞன் மறுத்தான். தன் தாய், தந்தை, இளம் மனைவி ஆகிய மூவரும் உயிருக்கு உயிராகத் தன்னை நேசிப்பதாக அவன் அறுதியிட்டு இயம்பினன். தமது சொற்படி நடந்துகொண்டால் அந்த இளைஞனது மனக்கோட்டையைத் தகர்க்க முடியும் என்ருர் முனிவர். இளைஞனும் அதற்கு இசைந்தான். தன் வீட்டுக்குச் சென்றவுடன் யாருக்கும் தெரியாது ஒரு குளிகையை அருந்தும்படி அப்பெரியவர் கொடுத்தனுப்பினர். இளைஞனும் அங்ஙனமே செய்ய, கை கால்களை உதறிக்கொண்டு செத்தவன் போன்று வீழ்ந்து கிடந்தான். பெற்ருேரும் மனையாளும் தலையில் அடித்துக்கொண்டு கதறிப் பதறினர். மூர்ச்சை போயினர். அவ்வேளையில் அதே முனிவர் வந்தார். பரீக்ஷ பண்ணினர். இளைஞனைப் பிழைக்க வைக்கமுடியும் என்ருர்.ஆனல் நிபந்தனை தான்மிகக்கடினமானது என்ருர். நிபந்தனை எதுவாயினும் அதை நிறைவேற்றத் தாங்கள் ஆயத்தம் என்றனர் பெற்ருேர். செத்தவன் போன்று கிடந்த இளைஞன் அவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான். தர்ப்பைக் கயிறு ஒன்றைச் செத்தவன்கையிலும், உயிருடன் இருக்கும் ஒருவன் கையிலும் கட்டித் தாம் ஜபம் செய்தால் இளைஞனுக்கு உயிர் வரும், கட்டுப்பட்டுள்ள மற்றவர்க்கு உயிர் போகும் என்ருர் முனிவர். ஏதோ சாக்குப் போக்குச் சொல்லித் தந்தை தன் உயிர் கொடுக்க முன்வரவில்லை. தாயும்முன் வரவில்லை, இளம் மனைவியும் உயிர்கொடுக்க ஒத்துக்

குற்றுல நாதனே, உறவினர், ஊர், பேர், கல்வி முதலியவற்றில் பற்றுக்கள் எனக்கு வேண்டாம். கன்றினிடத்துப் பசுவானது வைத்துள்ள பற்றுதலைப் போன்று நான் உன்னிடத்துப் பற்று வைக்க வேண்டும்.

கொள்ளவில்லை. பின்பு சும்மா ஜபம் செய்து, இளைஞனை எழுப்பி, உண்மையை அறிந்துகொள்ளும்படி முனிவர் அவனை ஏவினர்.

தன்னுடைய சுகத்துக்காகவே காதலன் காதலியை நேசிக்கிருன்; தலைவன் தலைவியை நேசிக்கிருன்; பெற்ரேர் பிள்ளைகளை நேசிக்கின்றனர். தன் இன்பத்துக்கோ புகழுக்கோ கேடு செய்பவர் உற்ருராயிருந்தாலும் அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். சாதாரண நிலையில் உள்ள ஜீவாத்மன் நடந்துகொள்ளும் விதம் இதுவாம்.

ஜீவாத்மன் இன்னெருபடி மேலேறும்பொழுது அவனது உடலின்பம் ஒரு லட்சிய இன்பமாக மேலோங்குகிறது. அப்பொழுது அதே லட்சியத்தைக் கடைப்பிடிப்பவர்களை அவன் ஆர்வத்தோடு நேசிக்கிருன். ஆங்கு உறவு, இனம், ஊர் முதலியன பின்னணிக்குப்போய் விடுகின்றன.

ஜீவாத்மன் அருள் துறையில் பிரவேசிக்கும்பொழுது இறைவனுடைய அன்பர்களையே அவன் சிறப்பாக நேசிக்கிருன். அவர்களுக்காக அவன் எதையும் தியாகம் பண்ணுகிருன்.

ஜீவாத்மன் நிறைஞானியாகும்பொழுது அவன் முற்றும் அன்பு சொரூபம் ஆகிருன். பரமனையே அவன் உள்ளும் புறத்திலும் காண்கிருன். சிருஷ்டியில் உள்ள அனைத்தையும் பரம்பொருள் சொரூபமாகக் கண்டு நேசிக்கிருன். இது அன்பில் பூர்த்தியான பரநிலை. இதை எட்டுவதே குறிக்கோள் ஆகும். இந்நிலையில் அன்பே சிவமாவதை இந்த உபநிஷத் மந்த்ரம் பறையறைகிறது.

தில்லையில் அருளிய

40. குலாப் பத்து

அனுபவம் இடையீடு படாமை

கொச்சகக் கலிப்பா

1. ஓடுங் கவந்தியுமே யுறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே யெனத்
[தெளிந்து
கூடு முயிருங் குமண்டையிடக் குனித்தடியே
னாடுங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்
[டன்றே.

ஓடும் கவந்தியுமே உறவு என்றிட்டு உள் கசிந்து
தேடும் பொருளும் சிவன் கழலே எனத் தெளிந்து
கூடும் உயிரும் குமண்டையிடக் குனித்து அடியேன்
ஆடும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டுஅன்றே.

ஓடும்-பிக்ஷையேற்கும் திருவோடும். கவந்தியுமே-கோவணமுமே. கூடும் உயிரும்-உடலும் உயிரும். குமண்டையிடக்குனித்து-மகிழ்ச்சி பொங்க வளைந்து. குலா-விளங்கும்.

திருவோடும் கோவணமும் ஈண்டு உடைமை, சிவனை அகூட்வது குறிக்கோள். உடலிலும் உயிரிலும் ஆனந்தம் ஊட்டுகிற தில்லை நடராஜனைப் போற்றுகிறேன்.

2. துடியே ரிடுகிடைத்
தூமொழியார் தோணசையாற்
செடியேறு தீமைக
ளெத்தனையுஞ் செய்திடினு
முடியேன் பிறவே
னெனைத்தனதாண் முயங்குவித்த
வடியேன் குலாத்தில்லை
யாண்டானைக் கொண்டன்றே.

துடிஏர் இடுகு இடைத்
தூமொழியார் தோள் நசையால்
செடிஏறு தீமைகள்
எத்தனையும் செய்திடினும்

முடியேன் பிறவேன்
எனைத் தன தாள் முயங்குவித்த
அடியேன் குலாத் தில்லை,
ஆண்டானைக் கொண்டு அன்றே.

துடி-உடுக்கை. ஏர்-அழகு. இடுகு-சுருங்கிய. நசையால்-விருப்பத்தால். செடி-பாபம். ஏறு-மிகுவதற்குக் காரணமான. முடியேன்-இறங்கமாட்டேன். தன தாள் முயங்குவித்த-தன்னுடைய திருவடிகளில் பொருந்தப் பண்ணின.

காமநோயின் விளைவாக நான் எத்தனை தீமைகள் செய்திருந்தாலும் எனக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை; ஏனென்றால் நான் தில்லை யாண்டானைப் பற்றியுள்ளேன்.

3. என்புள் ளுருக்கி யிருவினையை யீடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்க டூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய வுள்புகுந்த
வன்பின் குலாத்தில்லை யாண்டானைக் கொண்
[டன்றே.

என்பு உள் உருக்கி இருவினையை ஈடு அழித்துத்
துன்பம் களைந்து துவந்துவங்கள் தூய்மை செய்து
முன்பு உள்ளவற்றை முழுது அழிய உள் புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டு
[அன்றே.

ஈடு அழித்து-வலிமையைப் போக்கி. துவந்துவங்கள்-நன்மை தீமை மயமான இருமைகள். முன்பு உள்ளவற்றை-இனிப் பிறப்பு எடுப்பதற்கு ஏதுவாயுள்ள ஆகாமிய சஞ்சித கர்மங்களை.

பரஞானத்தின் விளைவாக உடல் தூயதாகிறது, பிராரப்த கர்மத்தின் வேகம் தணிகிறது, துன்பம் ஒழிகிறது. இருமைகள் இறைவனுடைய செயல்களாகப் புனிதம் பெறுகின்றன. ஆகாமிய சஞ்சித கர்மங்கள் நசித்துப் போகின்றன.

தெய்விக நடுநிலையில் மனதை வைக்கின்றவர்களுக்கு சீதம்-உஷ்ணம், வெற்றி-தோல்வி, நிந்தை-ஸ்துதி, லாபம்-நஷ்டம் ஆகிய இருமைகள் சித்த சுத்தியை உண்டுபண்ணுகின்றன.

4. குறியு நெறியுங் குணமுமிலார் குழாங்கடமைப்
பிறியு மனத்தார் பிரிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தி லுருத்தமுதாஞ் சிவபதத்தை
யறியுங் குலாத்தில்லை யாண்டானைக்
[கொண்டன்றே.

குறியும் நெறியும் குணமும் இலார் குழாங்கள் தமைப்
பிறியும் மனத்தார் பிரிவு அரிய பெற்றியனைச்
செறியும் கருத்தில் உருத்து அமுது ஆம் சிவ பதத்தை
அறியும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டு
[அன்றே.

குறியும் நெறியும்-பேறும் ஆறும், துறையும் முறையும், லட்சியமும் மார்க்கமும், சாத்தியமும் சாதனமும், வீடும் வழியும். குணமும்-பண்பாடும். குழாங்கள்-பந்தபாசக் கூட்டங்கள். பிறியும் மனத்தார்-விலகியிருக்கும் சீரிய மனமுடைய அன்பர்கள். பிரிவு அரிய பெற்றியனை-யாரிடத்திருந்தும் பிரியாத பேரியல்பு படைத்துள்ள சிவனை. செறியும் கருத்தில்-திரண்டு குவிந்த மனத்தில், சிவபோதம் முதிர்ந்த மனத்தில். உருத்து-தெளிவுறத் திருவுருக் கொண்டு.

உலகப்பற்று உடையவர்களோடு பக்தர்கள் இணங்குவதில்லை. நல்லார் பொல்லார் ஆகிய எல்லார் உள்ளத்திலும் நீக்கமறச் சிவனார் வீற்றிருக்கிறார் எனினும் சிவபோதத்தை வளர்க்கும் சாதகர் உள்ளத்திலேயே அவருடைய சொரூபம் அமிர்தவடிவெடுத்துப் பேரானந்தமாகப் பொலிகிறது.

5. பேருங் குணமும் பிணிப்புறுமிப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டரெல்லாஞ்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
யாருங் குலாத்தில்லை யாண்டானைக்
[கொண்டன்றே.

பேரும் குணமும் பிணிப்பு உறும் இப் பிறவி தனைத்
தூரும் பரிசு துரிசு அறுத்துத் தொண்டர் எல்லாம்
சேரும் வகையால் சிவன் கருணைத் தேன் பருகி
ஆரும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டு அன்றே.

தூரும்-பரிசு-தூர்ந்து மறையும்வரை. தூரிசு-குற்றம். ஆரும்-நிறைகின்ற.

நாம ரூபம், முக்குணம், மனப்பற்று ஆகிய விகாரங்களைத் திருத்தியமைத்து, ஜீவபோதம் என்னும் குற்றத்தைக் களைந்த தொண்டர்கள் எல்லாரும் சிவானந்த போதத்தில் திளைத்திருந்தனர்.

6. கொம்பி லரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடல மாண்டிங்ஙன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும் வண்ண நானணுகு
மம்பொன் குலாத்தில்லை யாண்டானைக் கொண்
[டன்றே.

கொம்பில் அரும்பு ஆய்க் குவி மலர் ஆய்க்காய் ஆகி
வம்பு பழுத்து உடலம் மாண்டு இங்ஙன் போகாமே
நம்பும் என் சிந்தை நணுகும் வண்ணம் நான் அணுகும்
அம்பொன் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டு
[அன்றே.

கொம்பில்-மரக்கிளையில். வம்பு-வீணே. நம்பும்-உறுதிகொண்டிருக்கும். நான் நணுகும் வண்ணம்-நான் இறைவனோடு சேரும்படி. அணுகும்-நெருங்குகின்ற.

மரக்கிளையில் பூத்துக்காய்த்து வெம்பிப்பழுத்ததொன்று வீண் போவது போன்று நான் உலகில் வீணே பிறந்து, இருந்து, இறத்தல் ஒவ்வாது. சிவனைச் சார்ந்து நான் சிவானுபவம் பெற வேண்டும்.

7. மதிக்குந் திறலுடைய வல்லரக்கன் றோணெரிய
மிதிக்குந் திருவடி யென்றலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாச மொன்றுமிலோ மெனக்களித்
[திங்
கதிர்க்குங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்
[டன்றே.

மதிக்கும் திறல் உடைய வல் அரக்கன் தோள் நெரிய
மிதிக்கும் திருவடி என் தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசு பாசம் ஒன்றும் இலோம் எனக் களித்து
[இங்கு
அதிர்க்கும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டு
[அன்றே.

வல் அரக்கன்-இராவணன். கறிக்கும்-மேலும் மேலும் எழுகின்ற. அதிர்க்கும்-பெருமுழக்கம் செய்யும்.

இராவணனுடைய வல்லமையை உயிர்கள் அங்கீகரித்தன. அத்தகையவனுடைய தோளை நெரித்த சிவபாதம் என் சிரசில் ஏறியது. அதன் விளைவாக இராவணுகாரமாக என்னிடம் எழுந்த பசுபாசம் ஒழிந்தது. பேரானந்தமுற்று நான் பரமனில் ஒன்று பட்டேன்.

8. இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி யென்றலைமே னட்டமையாற்
கடக்குந் திறலைவர் கண்டகர்தம் வல்லாட்டை
யடக்குங் குலாத்தில்லை யாண்டானைக்
[கொண்டன்றே.

இடக்கும் கரு முருட்டு ஏனம் பின் கானகத்தே
நடக்கும் திருவடி என் தலைமேல் நட்டமையால்
கடக்கும் திறல் ஐவர் கண்டகர் தம் வல் ஆட்டை
அடக்கும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டு
[அன்றே.

இடக்கும்-பூமியைத் தோண்டுகிற. கரு முருட்டு-கரியதும் முரட்டுத்தனமுள்ளதுமாகிய. ஏனம் பின்-பன்றியின் பின்னே. கடக்கும் திறல்-யாவரையும் வெல்லுகிற வலிமையுடைய. ஐவர் கண்டகர்-முள்போன்று துன்பம் செய்யும் ஐம்பொறிகள். வல் ஆட்டை-வலிய ஆடலை.

தவம் புரிந்த அர்ஜுனனைத் தாக்க அரக்கன் ஒருவன் பன்றி வடிவெடுத்துப் போனன். அப்பன்றியைத் தொடர்ந்து சிவனர் வேடன் உரு எடுத்துப் போனர். அப்படிக் காட்டில் நடந்த திருவடி என் தலையில் படிந்தபொழுது ஐம்பொறிகளின் குறும்பு அடங்கியது.

9. பாழ்ச்செய் விளாவிப்
பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற்
கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச்
சைவனுக்கென் புன்றலையா
லாட்செய் குலாத்தில்லை
யாண்டானைக் கொண்டன்றே.

பாழ்ச் செய் விளாவிப் பயன்
இலி ஆய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தால்
கிழியீடு நேர்பட்டுத்
தாள் செய்ய தாமரைச்
சைவனுக்கு என் புன் தலையால்
ஆள்செய் குலாத் தில்லை
ஆண்டானைக் கொண்டு அன்றே.

பாழ்ச் செய் விளாவி-பாழ் நிலத்தைச் சேர்ந்து. கீழ்ச் செய் தவத்தால்-முற்பிறப்பில் செய்த தவத்தால். கிழியீடு நேர்பட்டு-நிதியானது பொதிபோல் கிடைக்கப்பெற்று. தாள் செய்ய தாமரை-செந்தாமரை போன்ற திருவடியுடைய. சைவனுக்கு-யாண்டும் சிவமாயிருப்பவனுக்கு.

பொட்டல் நிலத்தில் நட்ட செடிபோன்று நான் நிலவுலகில் வீணில் பிறந்து கிடந்தேன். பரமனோடு எனக்குக் கிடைத்த தொடர்வு முற்பிறப்பில் செய்த தவத்தின் விளைவாகக் கிட்டிய புதையல் போன்றது. அவனுடைய தாமரைத் திருவடிக்கு நான் தலையால் தொண்டு செய்வேன்.

10. கொம்மை வரிமுலைக்
கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தாற்
றிருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பய
னித்தனையு மீங்கொழிக்கு
மம்மை குலாத்தில்லை
யாண்டானைக் கொண்டன்றே.

கொம்மை வரி முலைக்
கொம்பு அனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால்
திருப்பணிகள் செய்வேனுக்கு
இம்மை தரும் பயன்
இத்தனையும் ஈங்கு ஒழிக்கும்
அம்மை குலாத் தில்லை
ஆண்டானைக் கொண்டு அன்றே.

கொம்மை-திரட்சி. வரி-தேமல். கொம்பு அனையாள்-பூங் கொடி போன்ற உமாதேவி. இம்மை தரும் பயன் இத்தனையும் ஈங்கே ஒழிக்கும்-இப்பிறவியில் செய்த வினை முழுதும் ஒழிக்கும். அம்மை-வீடுபேறு.

அம்பிகை சமேதனுக்கு முழுமனதோடு நான் செய்த சேவையின் விளைவாக இவ்வுலகிலேயே இருவினைப் பயன்கள் ஒழிந்து போயின. நான் முக்தி அடைந்துள்ளேன்.

திருப்பெருந்துறையில் அருளிய

41. அற்புதப் பத்து

அனுபவம் ஆற்றாமை

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. மைய லாயிந்த மண்ணிடை வாழ்வெனு
மாழியு ளகப்பட்டுத்
தைய லாரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான்
றலைதடு மாறாமே
பொய்யெ லாம்விடத் திருவரு டந்துதன்
பொன்னடி யிணைகாட்டி
மெய்ய னாய்வெளி காட்டிமுன் னின்றதோ
ரற்புதம் விளம்பேனே.

மையல் ஆய் இந்த மண்ணிடை வாழ்வு எனும்
ஆழியுள் அகப்பட்டுத்
தையலார் எனும் சுழித்தலைப் பட்டு நான்
தலை தடுமாறாமே
பொய் எலாம் விடத் திருவருள் தந்து தன்
பொன் அடி இணை காட்டி
மெய்யன் ஆய் வெளி காட்டி முன் நின்றது ஓர்
அற்புதம் விளம்பேனே.

மையல்-அநித்தியத்தை நித்தியம் என உணரும் பிராந்தி அல்லது மயக்கம். பொய் எலாம் விட-அநித்தியமாகிய பிரபஞ்சத்தில் பற்று ஒழிய. மெய்யன்-நித்திய வஸ்து. வெளி-சிதாகாசம்.

பொய் உடலில் பற்றுவைத்து உலக வாழ்வில் உழன்று காமநோயைத் துய்த்துக்கிடந்த என்னை இறைவன் தனக்குச் சொந்தமாக்கியது அற்புதமாம்.

2. ஏய்ந்த மாமல ரிட்டுமுட் டாததோ
ரியல்பொடும் வணங்காதே
சாந்த மார்முலைத் தையனல் லாரொடுந்
தலைதடு மாறாகிப்
போந்தி யான்றுயர் புகாவண மருள்செய்து
பொற்கழ லிணைகாட்டி
வேந்த னாய்வெளி யேயென்மு னின்றதோ
ரற்புதம் விளம்பேனே.

ஏய்ந்த மா மலர் இட்டு முட்டாதது ஓர்
இயல்பொடும் வணங்காதே
சாந்தம் ஆர் முலைத் தையல் நல்லாரொடும்
தலை தடுமாறு ஆகிப்
போந்து யான் துயர் புகா வணம் அருள் செய்து
பொன் கழல் இணை காட்டி
வேந்தன் ஆய் வெளியே என் முன் நின்றது ஓர்
அற்புதம் விளம்பேனே.

ஏய்ந்த-பொருத்தமான. முட்டாதது-தடைப்படாதது சாந்தம் ஆர்-சந்தனம் பூசிய. வேந்தன்-அருளோடு ஆள்பவன்.

நல்ல மலரிட்டு இறைவனை அர்ச்சித்து வணங்குவது முறை. நானோ துன்பத்துக்கு ஏதுவான போகத்தில் புக எண்ணினேன். அருளாளன் என்னைக் காப்பாற்றியது அதிசயமாம்.

3. நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நானென தெனுமாயங்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய
வரும்பொரு ளடியேனை
யடித்த டித்துவக் காரமுன் றீற்றிய
வற்புத மறியேனே.

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பல செய்து
நான் எனது எனும் மாயம்
கடித்த வாயிலே நின்று முன் வினை மிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன் நின்று அப் பெரு மறை தேடிய
அரும் பொருள் அடியேனை
அடித்து அடித்து அக்காரம் முன் தீற்றிய
அற்புதம் அறியேனே.

மாயம்-மாயப் பாம்பு. முன்வினை-பிராரப்த கர்மம் என்னும் விஷம். கழறியே திரிவேனை-புலம்பித்திரிகிற என்னை. அக்காரம்-கற்கண்டு. முன் தீற்றிய-முன்னே நின்று ஊட்டின.

நிலையற்ற நிலவுலக வாழ்வைப் பெருக்குதற்கு ஏதுவான கருமங்கள் பல செய்தேன். ''நான் எனது'' என்னும் மாயை அதினின்று உருவாயிற்று. பாம்பு போன்ற அந்த மாயை பிராரப்த கர்மம் என்னும் விஷத்தைக் கக்குவதாயிற்று. அதனுல் நான் வருந்தி அழுதேன். எவனைக் காண வேதம் தேடியலைகிறதோ அவன் வலிய என்னைத் தேடிவந்து அடித்துப் பிடித்து ஆட்கொண்டு எனக்குப் பரமானந்தத்தை ஊட்டினுன். அது ஓர் அதிசயம் அன்ருே!

பிறவிப் பிணியின் போக்கும், பரமன் அருளால் அதினின்று ஜீவாத்மன் விடுதலை யடைகின்ற பாங்கும் இப் பாட்டில் அடங்கியிருக்கின்றன.

4. பொருந்து மிப்பிறப் பிறப்பிவை நினையாது
பொய்களே புகன்றுபோய்க்
கருங்கு ழலினுர் கண்களா லேறுண்டு
கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத்
திருவொடு மகலாதே
யருந்து ணைவனு யாண்டுகொண் டருளிய
வற்புத மறியேனே.

பொருந்தும் இப் பிறப்பு இறப்பு இவை நினையாது
பொய்களே புகன்று போய்க்
கரும் குழலினுர் கண்களால் ஏறுண்டு
கலங்கியே கிடப்பேனைத்

திருந்து சேவடிச் சிலம்பு அவை சிலம்பிடத்
திருவொடும் அகலாதே
அரும் துணைவன் ஆய் ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே.

ஏறுண்டு-தாக்கப்பட்டு. திருந்து சேவடி-ஒழுங்குப்பாட்டுக்கு இருப்பிடமாகிய சிவந்த பாதம். அரும் துணைவன்-அந்தராத்மன்.

பிறவிப் பிணியை நான் எண்ணிப்பார்க்கவில்லை. பொய்யுலகை மெய்யென்று பேசிவந்தேன். போகத்தில் உழன்று கிடந்தேன். அத்தகைய என்னை உமாசங்கரன் உய்வித்தது விந்தையாம்.

5. மாடுஞ் சுற்றமு மற்றுள போகமு
மங்கையர் தம்மோடுங்
கூடி யங்குள குணங்களா லேறுண்டு
குலாவியே திரிவேனை
வீடு தந்தென்றன் வெந்தொழில் வீட்டிட
மென்மலர்க் கழல்காட்டி
யாடு வித்தென தகம்புகுந் தாண்டதோ
ரற்புத மறியேனே.

மாடும் சுற்றமும் மற்று உள போகமும்
மங்கையர் தம்மோடும்
கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு
குலாவியே திரிவேனை
வீடு தந்து என் தன் வெம் தொழில் வீட்டிட
மென் மலர்க் கழல் காட்டி
ஆடுவித்து எனது அகம் புகுந்து ஆண்டது ஓர்
அற்புதம் அறியேனே.

மாடும்-செல்வமும். அங்குள-அங்கு உள்ள. ஏறுண்டு-பற்றப்பட்டு. வெம் தொழில் வீட்டிய-பயனற்ற கர்மங்களை நீக்கிய. ஆடுவித்து-ஆனந்தக்கூத்து ஆடும்படி செய்து.

செல்வத்திலும் சுகபோகத்திலும் சொக்கிக்கிடந்த என் வினைத்தளையைத் தகர்த்து வீடு தந்தருளினான். ஆனந்தத்தின் மேலீட்டால் என்னை ஆடும்படி அவன் செய்தது வியப்பாம்.

6. வணங்கு மிப்பிறப் பிறப்பிவை நினையாது
மங்கையர் தம்மோடும்
பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்திநான்
பித்தனுய்த் திரிவேனைக்
குணங்க ளுங்குறி களுமிலாக் குணக்கடல்
கோமளத் தொடுங்கூடி
யணைந்து வந்தெனை யாண்டுகொண் டருளிய
வற்புத மறியேனே.

வணங்கும் இப் பிறப்பு இறப்பு இவை நினையாது
மங்கையர் தம்மோடும்
பிணைந்து வாய் இதழ்ப் பெரு வெள்ளத்து அழுந்தி
[நான்
பித்தனுய்த் திரிவேனைக்
குணங்களும் குறிகளும் இலாக் குணம் கடல்
கோமளத்தொடும் கூடி
அணைந்து வந்து எனை ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே.

வணங்கும்-மாறிமாறி வருகிற. பிணைந்து-கூடி. கோமளத்தொடும்-இளமையழகு நிறைந்த அம்பிகையோடும்.

மாறி மாறி வருகிற ஜனன மரண துன்பத்தை எண்ணிப் பாராது சிற்றின்பக் கடலில் உழன்று கிடந்த என்னை கௌரி சங்கரன் காத்தருளியது அதிசயமாம்.

7. இப்பி றப்பினி லிணைமலர் கொய்துநா
னியல்பொடஞ் செழுத்தோதித்
தப்பி லாதுபொற் கழல்களுக் கிடாதுநான்
றடமுலை யார்தங்கண்
மைப்பு லாங்கண்ணு லேறுண்டு கிடப்பேனை
மலரடி யிணைகாட்டி
யப்ப னென்னைவந் தாண்டுகொண் டருளிய
வற்புத மறியேனே.

இப் பிறப்பினில் இணை மலர் கொய்து நான்
இயல்பொடு அஞ்சு எழுத்து ஓதித்
தப்பு இலாது பொன் கழல்களுக்கு இடாது நான்
தட முலையார் தங்கள்
மைப்பு உலாம் கண்ணால் ஏறுண்டு கிடப்பேனை
மலர் ஆடி இணை காட்டி
அப்பன் என்னை வந்து ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே.

இணை-பொருத்தமான. மைப்பு உலாம் கண்ணால்-கருமை நிறம் பொருந்திய கண்களால். ஏறுண்டு-தாக்கப்பட்டு.

தகுந்த மலர் தூவி முறைப்படி பஞ்சாக்ஷரம் ஓதி இறை வணக்கம் செய்வது மானுடப் பிறப்பின் குறிக்கோள். நானோ மாதர் போகத்தில் அழுந்தியவன். ஆயினும் அப்பன் என்னை ஆண்டு அருளியது விந்தையே.

8. ஊச லாட்டுமிவ் வுடலுயி ராயின
விருவினை யறுத்தென்னை
யோசை யாலுணர் வார்க்குணர் வரியவ
னுணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன்
பரம்பெருங் கருணையா
லாசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய
வற்புத மறியேனே.

ஊசல் ஆட்டும் இவ் உடல் உயிர் ஆயின
இரு வினை அறுத்து என்னை
ஓசையால் உணர்வார்க்கு உணர்வு அரியவன்
உணர்வு தந்து ஒளி ஆக்கிப்
பாசம் ஆனவை பற்று அறுத்து உயர்ந்த தன்
பரம் பெருங் கருணையால்
ஆசை தீர்த்து அடியார் அடிக் கூட்டிய
அற்புதம் அறியேனே.

ஊசல் ஆட்டும் இவ் உடல் உயிர் ஆயின-இந்த உடலையும் உயிரையும் ஊஞ்சல் போன்று இங்குமங்கும் பிறக்கச் செய்கிற. ஓசையால் உணர்வார்க்கு-மொழியின்மூலம் அறிய முயல்ப

வர்க்கு. ஒளி ஆக்கி-ஞான வெளிச்சத்தைத் தந்து. ஆசை தீர்த்து-அக்ஞானத்தில் தோன்றிய அவாவை அறுத்து.

ஊஞ்சலில் வைத்து இப்படியும் அப்படியும் ஆட்டுவது போன்று என் உடலையும் உயிரையும் இங்குமங்கும் அலைக்கழிக்கச் செய்கின்ற நல்வினை தீவினைகளை இறைவன் அகற்றினான். மொழி வல்லமையாலோ கலைஞானத்திறமையினாலோ அறிய முயலுபவர்க்கு அவன் அகப்படமாட்டான். அவன் எனக்குத் தற்போதத்தை ஊட்டினான், ஞான ஒளியைப் பெருக்கினான், பந்தங்களை அகற்றினான், ஆசையை ஓட்டினான், தன் அடியார்களோடு என்னைச் சேர்த்துக்கொண்டான். இதற்கு மேலான அற்புதத்தை நான் கண்டதில்லை.

உபநி. 29. பக்கம் 211ல் காண்க.

9. பொச்சை யானவிப் பிறவியிற் கிடந்துநான்
புழுத்தலை நாய்போல
விச்சை யாயின வேழையர்க் கேசெய்தங்
கிணங்கியே திரிவேனை
யிச்ச கத்தரி யயனுமெட் டாததன்
விரைமலர்க் கழல்காட்டி
யச்ச னென்னையு மாண்டுகொண் டருளிய
வற்புத மறியேனே.

பொச்சை ஆன இப் பிறவியில் கிடந்து நான்
புழுத்து அலை நாய் போல
இச்சை ஆயின ஏழையர்க்கே செய்து அங்கு
இணங்கியே திரிவேனை
இச்சகத்து அரி அயனும் எட்டாத தன்
விரை மலர்க் கழல் காட்டி
அச்சன் என்னையும் ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே.

பொச்சை-காடு. புழுத்து அலை-பயனில்லாது திரிகிற. இணங்கியே-கூடியே. இச்சகத்து-இந்த ஜகத்தில், இந்த உலகில். விரை மலர்-மணமுள்ள தாமரை மலர் போன்ற. அச்சன்-அப்பன்.

இந்தப் பிறவிக்காட்டில் நாய்போன்று நான் பயனில்லாது அலைந்து திரிந்தேன். மாதர்க்கு விருப்பமான செயல்களைச்

செய்து அவர்களோடு இணங்கித் திரிந்தேன். அத்தகைய எனக்கு என் அப்பன் அரியும் அயனும் காணமாட்டாத தன் திருவடியைக் காட்டியருளினுன். இது வியப்பே!

10. செறியு மிப்பிறப் பிறப்பிவை நினையாது
செறிகுழ லார்செய்யுங்
கிறியுங் கீழ்மையுங் கெண்டையங் கண்களு
முன்னியே கிடப்பேனை
யிறைவ னெம்பிரா னெல்லையில் லாததன்
னிணைமலர்க் கழல்காட்டி
யறிவு தந்தெனை யாண்டுகொண் டருளிய
வற்புத மறியேனே.

செறியும் இப் பிறப்பு இறப்பு இவை நினையாது
செறி குழலார் செய்யும்
கிறியும் கீழ்மையும் கெண்டை அம் கண்களும்
உன்னியே கிடப்பேனை
இறைவன் எம்பிரான் எல்லை இல்லாத தன்
இணை மலர்க் கழல் காட்டி
அறிவு தந்து எனை ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே.

செறியும்-மேலும் மேலும் நெருக்கும். செறி குழலார்-அடர்ந்த கூந்தலையுடைய மாதர். கிறியும்-பொய் நடையும். உன்னியே-சிந்தித்தே.

நெருங்கியுள்ள பிறப்பையும் இறப்பையும் நீக்கும் உபாயத்தை நினைத்துப் பார்க்காமல் மகளிர் பொய்நடை முதலிய வைகளையே நினைந்து கிடந்த எனக்கு இறைவன் தனது அகண்ட சொருபத்தைக் காட்டிச் சிவபோதத்தை ஊட்டினுன். இதினும் மேலான அதிசயம் யாது உளது!

திருப்பெருந்துறையில் அருளிய

42. சென்னிப் பத்து

சிவ விளைவு

ஆசிரிய விருத்தம்

1. தேவ தேவன்மெய்ச் சேவகன்
றென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலு மறியொணு
முதலாய வானந்த மூர்த்தியான்
யாவ ராயினு மன்பரன்றி
யறியொ ணுமலர்ச் சோதியான்
றூய மாமலர்ச் சேவடிக்கணஞ்
சென்னி மன்னிச் சுடருமே.

தேவ தேவன் மெய்ச் சேவகன்
தென்பெருந்துறை நாயகன்
மூவராலும் அறி ஒணு
முதல்ஆய ஆனந்தம் மூர்த்தியான்
யாவர் ஆயினும் அன்பர் அன்றி
அறி ஒணு மலர்ச் சோதியான்
தூய மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னிச் சுடருமே.

சேவகன்-பாதுகாப்பவன், கோப்தா. மூவராலும்-மும்மூர்த்திகளாலும். சென்னி-தலை. மன்னி-நிலைபெற்று.

ஜீவபோதம் படைத்துள்ள மும்மூர்த்திகளுக்கும் விளங்காத மகாதேவனை பக்தி பண்ணுபவர்களே அறிய வல்லவர் ஆவர்.

2. அட்ட மூர்த்தி யழக னின்னமு
தாய வானந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச்சிவ லோக நாயகன்
றென்பெ ருந்துறைச் சேவகன்
மட்டு வார்குழன் மங்கை யாளையோர்
பாகம் வைத்த வழகன்றன்
வட்ட மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னி மலருமே.

அட்ட மூர்த்தி அழகன் இன் அமுது
ஆய ஆனந்தம் வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச் சிவலோகம் நாயகன்
தென் பெருந்துறைச் சேவகன்
மட்டு வார் குழல் மங்கையாளை ஓர்
பாகம் வைத்த அழகன் தன்
வட்டம் மா மலர்ச் சேவடிக் கண் நம்
சென்னி மன்னி மலருமே.

சிட்டன்-சிஷ்டன், கற்றவன், மேலோன். மட்டு-தேன்.

அவன் அஷ்ட மூர்த்தி, மீனாக்ஷி சுந்தரேசுவரன், அன்னவன் திருவடியில் தலைவணங்குங்கால் பேரானந்தம் ஊற்றெடுக்கும்.

பஞ்ச பூதங்களும் மனம் புத்தி அகங்காரமும் சேர்ந்து அஷ்ட மூர்த்தியாக சிவன் இலங்குகின்றான்.

3. நங்கைமீ ரெனை நோக்கு மின்னங்க
ளாத னம்பணி கொண்டவன்
றெங்கு சோலைகள் சூழ்பெ ருந்துறை
மேய சேவக னாயகன்
மங்கை மார்கையில் வளையுங் கொண்டெம்
முயிருங் கொண்டெம் பணிகொள்வான்
பொங்கு மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னிப் பொலியுமே.

நங்கைமீர் எனை நோக்குமின் நங்கள்
நாதன் நம் பணி கொண்டவன்
தெங்கு சோலைகள் சூழ் பெருந்துறை
மேய சேவகன் நாயகன்
மங்கைமார் கையில் வளையும் கொண்டு எம்
உயிரும் கொண்டு எம் பணி கொள்வான்
பொங்கு மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னிப் பொலியுமே.

நங்கைமீர்-பெரியல்பு படைத்துள்ள பெண்களே. பொங்கு-விளங்குகின்ற.

மாதர்களே, எம் இறைவன் எம்மைப் பணிகொண்டுள்ளான். மாதர்களின் கை வளைகளையும் நமது உயிரையும் அவன் கவர்ந்துள்ளான். அவ்விறைவனுடைய திருவடிகள் நம் சிரசில் நிலைபெற்றிருப்பன வாகுக.

ஜீவாத்மாக்களைப் பெண்பாலர்களாகவும் இறைவன் ஒருவனையே ஆண்பாலாகவும் கருதுவது எல்லா மதங்களின் கோட்பாடாகும். வளையல் நீங்குவது உடல் உணர்வைக் கடந்ததற்கு அறிகுறியாகும். உயிர் நீங்குவது ஜீவபோதம் சிவபோதமாக உயர்வதற்கு அறிகுறியாகும்.

4. பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்து பார்ப்பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான்
றில்லை மூதூர் நடஞ்செய்வா
னெத்த னாகிவந் தில்புகுந்தெமை
யாளுங் கொண்டெம் பணிகொள்வான்
வைத்த மாமலர்ச் சேவடிக்கணஞ்
சென்னி மன்னி மலருமே.

பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்து பார்ப்பான் எனச்
சித்தர் சூழச் சிவபிரான்
தில்லை மூதூர் நடம் செய்வான்
எத்தன் ஆகி வந்து இல் புகுந்து எமை
ஆளும்கொண்டு எம் பணி கொள்வான்
வைத்த மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே.

பராபரன்-பராத்பரன், முழுமுதற் பொருள். பார்ப்பான் என - வேதியன்போல. எத்தன் - உள்ளத்தில் மறைந்திருந்து ஏமாற்றுபவன். இல் புகுந்து - உடலில் ஆரோபித்து.

பக்தர்களும் சித்தர்களும் சூழும் சிவபெருமான், தில்லையில் நடிப்பவன் தானே வந்து எம் மேனி மேவி, எம்மை ஆட்கொண்டான். அவனுடைய திருவடிகளிலே நம் சிரசுகள் பொருந்திநிற்கும்.

5. மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
மதித்தி டாவகை நல்கினுன்
வேய தோளுமை பங்க னெங்க
டிருப்பெ ருந்துறை மேவினுன்
காயத் துள்ளமு தூற வூறநீ
கண்டு கொள்ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே.

மாயம் வாழ்க்கையை மெய் என்று எண்ணி
மதித்திடா வகை நல்கினுன்
வேய தோள் உமை பங்கன் எங்கள்
திருப்பெருந்துறை மேவினுன்
காயத்துள் அமுது ஊற ஊற நீ
கண்டுகொள் என்று காட்டிய
சேய மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே.

வேய தோள்-மூங்கிலின் வடிவுடைய தோள். காயத்துள்-உடலினுள். சேய மா மலர்-சிவந்த பெரிய தாமரை மலர். சேவடி-சிவந்த திருவடி.

மாயப்பிரபஞ்ச வாழ்வை மெய்யென்று மதிக்காதபடி எனக்குக் கிருபை செய்தவன், உமாதேவியின் பங்கன் உடம்பினுள் அமுது சுரக்கக் காட்டியருளினுன். அவனுடைய திருவடிகளில் நம் தலை படிக.

6. சித்த மேபுகுந் தெம்மை யாட்கொண்டு
தீவி னைகெடுத் துய்யலாம்
பத்தி தந்துதன் பொற்க ழற்கணே
பன்மலர் கொய்து சேர்த்தலு
முத்தி தந்திந்த மூவு லகுக்கு
மப்பு றத்தெமை வைத்திடு
மத்தன் மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னி மலருமே.

சித்தமே புகுந்து எம்மை ஆட்கொண்டு
தீவினை கெடுத்து உய்யல் ஆம்
பத்தி தந்து தன் பொன் கழல்கணே
பன் மலர் கொய்து சேர்த்தலும்
முத்தி தந்து இந்த மூவுலகுக்கும்
அப்புறத்து எமை வைத்திடும்
அத்தன் மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே.

உய்யல் - கடைத்தேறும் வழி. பன்மலர் - பலவகையான பூக்கள். மூவுலகுக்கும் அப்புறத்து-ஜாக்கிரதம், சொப்பனம், சுஷுப்தி; கால, தேச, நிமித்தம்; ரஜஸ், தமஸ், சத்துவம்; பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம்—இவைகளுக்கெல்லாம் அப்பால்.

எமது மனதைத் தன் கோயில் ஆக்கி, வினையைக் களைந்து, பக்தியை வளர்த்து முக்தியை நல்கிய பித்தன் ஆகிய அவன் திருவடியில் நம் சென்னி சாய்க.

7. பிறவி யென்னுமிக் கடலை நீந்தத்தன்
பேரரு டந்தருளினு
னறவை யென்றடி யார்கடங்க
ளருட்கு ழாம்புக விட்டுநல்
லுறவு செய்தெனை யுய்யக்கொண்ட
பிரான்ற னுண்மைப் பெருக்கமாந்
திறமை காட்டிய சேவடிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே.

பிறவி என்னும் இக் கடலை நீந்தத் தன்
பேர் அருள் தந்தருளினன்
அறவை என்று அடியார்கள் தங்கள்
அருள் குழாம் புகவிட்டு நல்
உறவு செய்து எனை உய்யக் கொண்ட
பிரான் தன் உண்மைப் பெருக்கம் ஆம்
திறமை காட்டிய சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே.

அறவை-அநாதை. பிரான்-தலைவன். திறமை-அருள்திறம்.

பிறவிக் கடலைக் கடப்பதற்குத் தன் அருள் என்ற கப்பலை அப்பன் கொடுத்தான். அநாதையாகிய என்னைத் தன் அடியவர் கூட்டத்தில் உறவுகொள்ளச் செய்தான். அவனது திருவடியில் நம் தலை படிந்து திகழ்க.

8. புழுவி னாற்பொதிந் திடுகு ரம்பையிற்
பொய்த னையொழி வித்திடு
மெழில்கொள் சோதியெம் மீச னெம்பிரா
னென்னுடை யப்ப னென்றென்று
தொழுத கையின ராகித் தூய்மலர்க்
கண்க ணீர்மல்குந் தொண்டர்க்கு
வழுவி லாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னி மலருமே.

புழுவினால் பொதிந்திடு குரம்பையில்
பொய்தனை ஒழிவித்திடும்
எழில்கொள் சோதி எம் ஈசன் எம்பிரான்
என்னுடை அப்பன் என்று என்று
தொழுத கையினர் ஆகித் தூய் மலர்க்
கண்கள் நீர் மல்கும் தொண்டர்க்கு
வழு இலா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே.

குரம்பையில்-உடலில். பொய்தனை-ஜீவபோதத்தை. வழு-தவறு.

புழுக் கூடாகிய இப்பொய் உடல் உணர்வை அகற்றிய ஆத்ம ஜோதி என் அப்பன். தொழுத கையினராய் நின்று இடையறாது கண்ணீர் சிந்துகின்ற மெய்யன்பருக்கு மாறாத முக்தியருளுகிறவன் எம்பிரான். அவனுடைய தாமரைத் திருவடியில் நம் தலை பொருந்தி நிற்கும்.

9. வம்ப னாய்த்திரி வேனைவா வென்று
வல்வி னைப்பகை மாய்த்திடு
மும்ப ரானுல கூட றுத்தப்
புறத்த னாய்நின்ற வெம்பிரா

னன்ப ரானவர்க் கருளி மெய்யடி
யார்கட் கின்பந் தழைத்திடுஞ்
செம்பொன் மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே.

வம்பனாய்த் திரிவேனை வா என்று
வல்வினைப் பகை மாய்த்திடும்
உம்பரான் உலகு ஊடு அறுத்து
அப்புறத்தன் ஆய்நின்ற எம்பிரான்
அன்பர் ஆனவர்க்கு அருளி மெய்
அடியார்கட்கு இன்பம் தழைத்திடும்
செம் பொன் மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே.

வம்பனாய்-வீணனாய். உம்பரான் உலகு ஊடு அறுத்து-மேல் உலகங்கள் அனைத்திலும் அந்தர்யாமியாய் வியாபித்திருந்து. அப்புறத்தன்-அனைத்துக்கும் அதீதத்தில் இருப்பவன்.

வம்பனாய்த் திரிகின்ற என்னை வா வென்று அழைத்து என் வலிய வினைப் பகையைப் போக்கிய பெரியவன் அவன். உலகு அனைத்திலும் வியாபித்து அவைகளுக்கு அதீதத்தில் இருப்பவன் அவன். அன்பர் ஆன மெய்யடியார்க்கு அவன் இன் அமுது. அன்னவன் திருவடியில் நம் சிரசு சாய்ந்திடுக.

10\. முத்த னைமுதற் சோதியை முக்க
ணப்ப னைமுதல் வித்தினைச்
சித்த னைச்சிவ லோக னைத்திரு
நாமம் பாடித் திரிதரும்
பத்தர் காளிங்கே வம்மி னீருங்கள்
பாசந் தீரப் பணிமினோ
சித்த மார்தருஞ் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே.

முத்தனை முதல் சோதியை முக்கண்
அப்பனை முதல் வித்தினைச்
சித்தனைச் சிவலோகனைத் திரு
நாமம் பாடித் திரிதரும்

பத்தர்காள் இங்கே வம்மின் நீர் உங்கள்
பாசம் தீரப் பணிமினோ
சித்தம் ஆர்தரும் சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே.

முத்தனை-நித்திய முக்தியில் இருப்பவனை, எதிலும் கட்டுப் படாதவனை. முதல் வித்தினை-அனைத்துக்கும் ஆதிமூலமாயிருப் பவனை. திரிதரும்-திரிகின்ற.-சித்தம் ஆர் தரும்-உள்ளம் முழு வதிலும் நிறைந்துள்ள.

நித்திய முக்தன், பரஞ்சோதி, முக்கண்ணன், முதல் வித்து, வாலறிவன், சிவலோகன்—அவனுடைய திருநாமம் பாடித்திரிகிற அன்பர்களே, இங்கு வாருங்கள். உங்கள் பந்த பாசம் அறும்படி அவனைப் பணியுங்கள். அவனது திரு வடியில் நம் சென்னி மன்னித்திகழுக.

திருப்பெருந்துறையில் அருளிய

43. திருவார்த்தை

அறிவித்து அன்புறுதல்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. மாதிவர் பாகன் மறைபயின்ற
வாசகன் மாமலர் மேயசோதி
கோதில் பரங்கரு ணையடியார்
குலாவு நீதிகுண மாகநல்கும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்
தாதிப் பிரமம் வெளிப்படுத்த
வருளறிவா ரெம்பிரா னுவாரே.

மாது இவர் பாகன் மறை பயின்ற
வாசகன் மா மலர் மேய சோதி
கோது இல் பரம் கருணை அடியார்
குலாவும் நீதி குணம் ஆக நல்கும்

போது அலர் சோலைப் பெருந்துறை எம்
புண்ணியன் மண்ணிலடை வந்து இழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே.

மாது இவர்-உமாதேவி அமர்ந்த. மறை பயின்ற வாசகன்-சொல்லாக அவனிடத்திருந்து தோன்றுவது வேத வாக்கு ஆகிறது. மா மலர் மேய சோதி-ஹிருதயத்திலோ அல்லது ஸஹஸ்ராரத்திலோ ஒளிரும் பரஞ்சோதி. கோது-குற்றம். குலாவும்-மகிழ்ந்து போற்றுகின்ற. போது-அரும்பு ஆதிப்பிரமம்-மெய்ப்பொருள்.

கௌரி சங்கரன், வேதியன், ஹிருதய ஜோதி, கருணாகரன், பக்தவத்ஸலன், பரபிரம்மம்—இத்தகைய புண்ணியன் மானுடனாக வந்து என்னை ஆண்டருளினான்.

சிவனார் திருவாய் மலர்ந்தருள்வது வேதவாக்கு. அந்த வேதவாக்குப்படி பிரம்மம், விஷ்ணு, நாராயணன், சிவம் என்னும் சொற்களெல்லாம் ஒரே பரவஸ்துவைக் குறிக்கின்றன. இது திருவார்த்தை; அதாவது மெய்ப்பொருள் விளக்கம்.

2. மாலயன் வானவர் கோனும்வந்து
வணங்க வவர்க்கருள் செய்தவீசன்
ஞால மதனிடை வந்திழிந்து
நன்னெறி காட்டி நலந்திகழுங்
கோல மணியணி மாடநீடு
குலாவு மிடவை மடநல்லாட்குச்
சீல மிகக்கரு ணையளிக்குந்
திறமறி வாரெம்பி ரானாவாரே.

மால் அயன் வானவர் கோனும் வந்து
வணங்க அவர்க்கு அருள் செய்த ஈசன்
ஞாலம் அதனிடை வந்து இழிந்து
நல்நெறி காட்டி நலம் திகழும்
கோலம் மணி அணி மாடம் நீடு
குலாவும் இடவை மடம் நல்லாட்குச்
சீலம் மிகக் கருணை அளிக்கும்
திறம் அறிவார் எம்பிரான் ஆவாரே.

ஞாலம்-நிலவுலகம். கோலம்-அழகு. குலாவும்-விளங்கு கின்ற. இடவை-திருவிடைமருதூர். மடம் நல்லாட்குச் சீலம் மிகக் கருணை அளிக்கும்-கற்புடைய மாது ஒருத்தி வரகுண பாண்டியனால் மணக்கப்பெற்றாள். நல்லதை யெல்லாம் சிவனுக்கு அளிக்கும் அவ் அரசன் இப்பெண்மணியையும் பரமனுக்கு அளித் தான். சிவனார் அவளைத் தன் சொரூபத்தில் லயமாகும்படிச் செய் தார். திறம்-தன்மை.

மகாதேவன், ஞானகுரு, அடியார்க்கு எளியவன்—இத் தகைய சிவனது மகிமையை அறிபவர் போற்றுதற்கு உரிய வர் ஆகிறார்.

3. அணிமுடி யாதி யமரர்கோமா
னானந்தக் கூத்த னறுசமயம்
பணிவகை செய்து படவதேறிப்
பாரொடு விண்ணும் பரவியேத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறையெம்
பேரரு ளாளன்பெண் பாலுகந்து
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும்
வகையறி வாரெம்பி ரானாவாரே.

அணி முடி ஆதி அமரர் கோமான்
ஆனந்தம் கூத்தன் அறு சமயம்
பணி வகை செய்து படவு அது ஏறிப்
பாரொடு விண்ணும் பரவி ஏத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறை எம்
பேர் அருளாளன் பெண்பால் உகந்து
மணி வலை கொண்டு வான் மீன் விசிறும்
வகை அறிவார் எம் பிரான் ஆவாரே.

கோமான்-சிவபெருமான். பணிவகை-வணங்கும் உபாயங் கள். படவு-படகு, தோணி. பெண்பால் உகந்து-வலைஞர் மக ளாகத் திருவவதாரம் செய்த உமாதேவியாரை நேசித்து. வான் மீன் விசிறும்-பெரிய சுறுமீனைப் பிடிக்க வலை வீசும்.

ஜடாதரன், தேவ தேவன், ஆனந்தக் கூத்தன், ஆறு சம யங்களிலும் இலங்குபவன், பிறவிப் பிணியைப் போக்குப வன்—இத்தகைய பேராளன் படகு ஊர்ந்து வலைவீசி மீன் பிடித்த வரலாற்றை அறியும் அன்பர்கள் போற்றுதற்கு உரிய வர் ஆகின்றனர்.

வலை வீசிய திருவிளையாடல் ஈண்டு இயம்பப் பெறுகிறது.

4. வேடுரு வாகி மகேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்துதன்னைத்
தேட விருந்த சிவபெருமான்
சிந்தனை செய்தடி யோங்களுய்ய
வாட லமர்ந்த பரிமாவேறி
யையன் பெருந்துறை யாதியந்நா
ளேடர் களையெங்கு மாண்டுகொண்ட
வியல்பறி வாரெம்பி ராஞவாரே.

வேடு உரு ஆகி மகேந்திரத்து
மிகு குறை வானவர் வந்து தன்னைத்
தேட இருந்த சிவபெருமான்
சிந்தனை செய்து அடியோங்கள் உய்ய
ஆடல் அமர்ந்த பரிமா ஏறி
ஐயன் பெருந்துறை ஆதி அந்நாள்
ஏடர்களை எங்கும் ஆண்டுகொண்ட
இயல்பு அறிவார் எம்பிரான் ஆவாரே.

வேடு உரு-வேட்டுவ வடிவம். குறை-குற்றம். ஆடல் அமர்ந்த பரிமா-நாட்டியம் வல்ல குதிரை. ஏடர்களை-அடியவர்களை.

தங்கள் குறைகளை முறையிட வந்த வானவர்க்கு எளிதில் விளங்காத வேடவுருக்கொண்டு சிவனார் மகேந்திர மலையில் இருந்தார். அடியார்களை உய்விக்கத் திருவுளங்கொண்டு ஆடவல்ல குதிரை யேறிவந்து அன்பர்களை அவர் ஆட்கொண்டருளினார். அவர் பெருமையை அறிய வல்லவர் நமது போற்றுதலுக்கு உரியவர் ஆவார்.

5. வந்திமை யோர்கள் வணங்கியேத்த
மாக்கரு ணைக்கட லாயடியார்
பந்தனை விண்டற நல்குமெங்கள்
பரமன் பெருந்துறை யாதியந்நா
ளுந்து திரைக்கட லைக்கடந்தன்
றோங்கு மதிலிலங் கையதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும்
பரிசறி வாரெம்பி ராஞவாரே.

வந்து இமையோர்கள் வணங்கி ஏத்த
மாக் கருணைக் கடல் ஆய் அடியார்
பந்தனை விண்டு அற நல்கும் எங்கள்
பரமன் பெருந்துறை ஆதி அந்நாள்
உந்து திரைக் கடலைக் கடந்து அன்று
ஓங்கு மதில் இலங்கை அதனில்
பந்து அணை மெல் விரலாட்கு அருளும்
பரிசு அறிவார் எம்பிரான் ஆவாரே.

பந்தனை—பந்தபாசங்கள். விண்டு—நீங்கி. அற—ஒழிய. நல்கும்—அருள் புரியும். உந்து திரை—மேல் எழுந்து பரவுகின்ற அலை. ஓங்கு—உயர்ந்த. பந்து அணை மெல் விரலாட்கு—பந்தின் வடிவு அமைந்த மெல்லிய விரல்களையுடைய இராவணன் மனைவி மண்டோதரிக்கு.

தேவர்கள் வந்து வணங்கித் துதிக்கச் சிவனார் அவர்கள் மீது கருணை காட்டினார். அடியார்களுடைய பிறவித் தளையை அவர் அகற்றியருளினார். அலை கடல் கடந்து இலங்கை சென்று பக்திமதி மண்டோதரிக்கு அருள் புரிந்தார். இத்தகைய சிவ மஹிமைகளை அறிபவர் எமது வணக்கத்துக்கு உரியவர்களாம்.

6. வேவத் திரிபுரஞ் செற்றவில்லி
வேடுவ னாய்க்கடி நாய்கள்சூழ
வேவற் செயல்செய்யுந் தேவர்முன்னே
யெம்பெரு மான்ற னியங்குகாட்டி
லேவுண்ட பன்றிக் கிரங்கியீச
னெந்தை பெருந்துறை யாதியன்று
கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த
கிடப்பறி வாரெம்பி ரானாவாரே.

வேவத் திரிபுரம் செற்ற வில்லி
வேடுவன் ஆய்க் கடி நாய்கள் சூழ
ஏவல் செயல் செய்யும் தேவர் முன்னே
எம்பெருமான் தான் இயங்கு காட்டில்
ஏ உண்ட பன்றிக்கு இரங்கி ஈசன்
எந்தை பெருந்துறை ஆதி அன்று
கேவலம் கேழல் ஆய்ப் பால் கொடுத்த
கிடப்பு அறிவார் எம்பிரான் ஆவாரே.

வேவத் திரிபுரம்-திரிபுரம் வெந்துபோம்படி. செற்ற வில்லி-அழித்த வில்லையுடையவன். கடி நாய்கள்-காவல் நாய்கள். ஏ உண்ட பன்றிக்கு-அம்பு தைத்து மாண்ட பன்றிக்கு. கேவலம்-தனிப்பட்ட. கேழல்-பன்றி. கிடப்பு-தன்மை.

திரிபுராந்தகனாகிய சிவபெருமான் வேடனது வடிவத்தை எடுத்துக்கொண்டு வேட்டை நாய்கள் புடைசூழக் காட்டிலே சஞ்சரித்தான். ஆங்கு அம்பு தைத்து இறந்துகிடந்த தாய்ப் பன்றி ஒன்றுக்கு இரங்கினான். தனக்குக் குற்றேவல் புரிந்த தேவர்கள் முன்னிலையிலேயே சிவன் தனித்த தாய்ப் பன்றியாக வடிவெடுத்துக் குட்டிகளுக்குப் பால் ஊட்டினான். இறைவனது இந்த மேலாம் தன்மையை அறிபவர்கள் எமது வணக்கத்துக்கு உரியவர் ஆகின்றனர்.

பன்றிக் குட்டிக்குப் பால் கொடுத்த திருவிளையாடல் ஈண்டு இயம்பப்பெறுகிறது.

7. நாத முடையதோர் நற்கமலப்
போதினி னண்ணிய நன்னுதலா
ரோதிப் பணிந்தலர் தூவியேத்த
வொளிவளர் சோதியெம் மீசன்மன்னும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப்
பேதங் கெடுத்தருள் செய்பெருமை
யறியவல் லாரெம்பி ரானாவாரே.

நாதம் உடையது ஓர் நல் கமலப்
போதினில் நண்ணிய நல் நுதலார்
ஓதிப் பணிந்து அலர் தூவி ஏத்த
ஒளி வளர் சோதி எம் ஈசன் மன்னும்
போது அலர் சோலைப் பெருந்துறை எம்
புண்ணியன் மண்ணிடை வந்து தோன்றிப்
பேதம் கெடுத்து அருள்செய் பெருமை
அறிய வல்லார் எம்பிரான் ஆவாரே.

நாதம்-வண்டுகளின் ரீங்கார ஒலி. ஓர் நல் கமலம் போதினில் நண்ணிய-ஒரு நல்ல தாமரைப் பூவில் பொருந்திய. நல் நுதலார்-கலைமகளும் திருமகளும். பேதம் கெடுத்து-வேற்றுமையை ஒழித்து.

தங்கள் கணவன்மார்களை இழந்த கலைமகளும் திருமகளும் சிவனுரை வழுத்தியதனுல் அன்னவரை அவர்கள் மீண்டும் உயிருடன் பெற்றுச் சுமங்கலிகளாயினர். சிவனுர் பக்குவியின் ஜீவபோதத்தை அகற்றி அத்துவித நிலையை நல்குகின்ருர்.

8. பூவலர் கொன்றைய மாலைமார்பன்
போருகிர் வன்புலி கொன்றவீரன்
மாதுநல் லாளுமை மங்கைபங்கன்
வண்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோ
னேதில் பெரும்புக ழெங்களீச
னிருங்கடல் வாணற்குத் தீயிற்ருேன்று
மோவிய மங்கையர் தோள்புணரு
முருவறி வாரெம்பி ராளுவாரே.

பூ அலர் கொன்றை அம் மாலை மார்பன்
போர் உகிர் வன் புலி கொன்ற வீரன்
மாது நல்லாள் உமை மங்கை பங்கன்
வண் பொழில் சூழ் தென் பெருந்துறைக்கோன்
ஏது இல் பெரும் புகழ் எங்கள் ஈசன்
இரும் கடல் வாணற்குத் தீயில் தோன்றும்
ஓவிய மங்கையர் தோள் புணரும்
உரு அறிவார் எம்பிரான் ஆவாரே.

உகிர்—நகம். வண் பொழில்—வளம் பொருந்திய சோலை. ஏது—குற்றம். இரும்—பெரிய. கடல்வாணற்கு—வருணனுக்கு. ஓவிய மங்கையர்—சித்திரப் பதுமைபோன்ற பெண்கள். தோள் புணரும்—தோள் தோயும்.

கொன்றை மலர் மாலையை அணிந்திருப்பவனும், புலியைக் கொன்ற வீரனும், அம்பிகை பங்கனும் ஆகிய சிவபெருமான் வருணனது வேள்வித்தீயில் தோன்றிய மங்கையரைத் தன்மயம் ஆக்கிக்கொண்டான்.

9. தூவெள்ளை நீறணி யெம்பெருமான்
சோதி மகேந்திர நாதன்வந்து
தேவர் தொழும்பதம் வைத்தவீசன்
றென்னன் பெருந்துறை யாளியன்று

காதல் பெருகக் கருணைகாட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்துருகக்
கேதங் கெடுத்தென்னை யாண்டருளுங்
கிடப்பறி வாரெம்பி ராளுவாரே.

தூ வெள்ளை நீறு அணி எம்பெருமான்
சோதி மகேந்திரம் நாதன் வந்து
தேவர் தொழும் பதம் வைத்த ஈசன்
தென்னன் பெருந்துறை ஆளி அன்று
காதல் பெருகக் கருணை காட்டித்
தன் கழல் காட்டிக் கசிந்து உருகக்
கேதம் கெடுத்து என்னை ஆண்டருளும்
கிடப்பு அறிவார் எம்பிரான் ஆவாரே.

பதம்-பாதம். வைத்த-என் தலைமேல் வைத்த. ஆளி-ஆள்பவன். காதல்-இறைவனிடத்து அன்பு. கேதம்-துன்பம். கிடப்பு-மனப்பான்மை.

திருவெண்ணீறு அணிந்தவனும் மகேந்திரமலைத் தலைவனும், தேவர்களால் போற்றப் பெறுபவனும் ஆகிய சிவன் கருணைபூண்டு காட்சிகொடுத்தான். என் துன்பங்களை அவன் அகற்றிவிடவே அன்பினால் என் மனம் கசிந்துருகியது. இவ்வரலாற்றை அறிபவர் எமது போற்றுதலுக்கு உரியவர் ஆவார்.

10. அங்கண னெங்க ளமரர்பெம்மா
னடியார்க் கமுத னவனிவந்த
வெங்கள் பிரானிரும் பாசந்தீர
விகபர மாயதோ ரின்பமெய்தச்
சங்கங் கவர்ந்துவண் சாத்தினோடுஞ்
சதுரன் பெருந்துறை யாளியன்று
மங்கையர் மல்கு மதுரைசேர்ந்த
வகையறி வாரெம்பி ராளுவாரே.

அம் கணன் எங்கள் அமரர் பெம்மான்
அடியார்க்கு அமுதன் அவனி வந்த
எங்கள் பிரான் இரும் பாசம் தீர
இக பரம் ஆயது ஓர் இன்பம் எய்தச்

சங்கம் கவர்ந்து வண் சாத்திேேடும்
சதுரன் பெருந்துறை ஆளி அன்று
மங்கையர் மல்கு மதுரை சேர்ந்த
வகை அறிவார் எம்பிரான் ஆவாரே.

அவனி-நிலவுலகம். இரும் பாசம் தீர-நிலையாத பொருள் களிடத்துள்ள பெரிய பற்றுதல் ஒழிய. சங்கம்-சங்குகளால் ஆன வளையல். வண் சாத்திேேடும்-வளவிய சரக்கிேேடும், அழகிய விற்பனைப் பொருள்களோடும். சதுரன்-சமர்த்தன். மல்கு-பெருக்கமாகவுள்ள.

கிருபா நோக்கமுடையவன், மகாதேவன், அடியார்க்கு அமுதம் ஆனவன், எமது பெரிய பாசத்தை நீக்கி இம்மை மறுமை இன்பம் கொடுத்தருளினான். அவன் சங்க வளையலை யும் அழகிய விற்பனைப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு மாதர் நிறைந்த மதுரையை யடைந்த மகிமையை அறிபவர் எமது போற்றுதலுக்கு உரியவராம்.

தில்லையில் அருளிய

44. எண்ணப் பதிகம்

ஒழியா இன்பத்து உவகை

ஆசிரிய விருத்தம்

1. பாருரு வாய பிறப்பற வேண்டும்
பத்திமை யும்பெற வேண்டுஞ்
சீருரு வாய சிவபெரு மானே
செங்க மலம லர்போ
லாருரு வாயவென் ஞரமு தேயுன்
னடிய வர்தொகை நடுவே
யோருரு வாயநின் றிருவருள் காட்டி
யென்னையு முய்யக்கொண் டருளே.

பார் உரு ஆய பிறப்பு அற வேண்டும்
பத்திமையும் பெற வேண்டும்
சீர் உரு ஆய சிவபெருமானே
செம் கமலம் மலர் போல்

ஆர் உரு ஆய என் ஆர் அமுதே உன்
அடியவர் தொகை நடுவே
ஓர் உரு ஆய நின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக் கொண்டருளே.

ஓர் உரு ஆய நின் திருவருள்-நின் திருவருளை ஓர் உருவமாக.

உலகில் பிறப்பு எடுப்பது இனி வேண்டாம். பக்தி பெருக வேண்டும். அரிய அமிர்தமே, உன் அடியார் கூட்டத்தில் என்னை இணைத்துத் திருவருள் பூண்டு நான் உய்வு அடையும் உபாயம் காட்டுவாயாக.

2. உரியே னல்லே னுனக்கடிமை
யுன்னைப் பிரிந்திங் கொருபொழுதுந்
தரியே னாயே னின்னதென்
றறியேன் சங்கரா கருணையினாற்
பெரியோ னொருவன் கண்டுகொ
ளென்றுன் பெய்கழ லடிகாட்டிப்
பிரியே னென்றென் றருளியவருளும்
பொய்யோ வெங்கள் பெருமானே.

உரியேன் அல்லேன் உனக்கு அடிமை
உன்னைப் பிரிந்து இங்கு ஒரு பொழுதும்
தரியேன் நாயேன் இன்னது என்று
அறியேன் சங்கரா கருணையினால்
பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்று உன்
பெய் கழல் அடி காட்டிப்
பிரியேன் என்று என்று அருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே.

பெய்கழல்-கழலை யணிந்த.

இறைவா, நான் இன்னும் உனக்கு உரியவன் ஆகவில்லை. ஆயினும் உன்னைப் பிரிந்திருக்க எனக்கு இயலாது. இதற்குக் காரணம் தெரியவில்லை. கருணையோடு எழுந்தருளிய பெரிய பொருள் நீ. என்னை விட்டுப் பிரிவதில்லை என்று நீ பகர்ந்தது பொய்யோ?

3. என்பே யுருக நின்னரு ளளித்துன்
ணிணைமல ரடிகாட்டி
முன்பே யென்னை யாண்டுகொண்ட
முனிவா முனிவர் முழுமுதலே
யின்பே யருளி யெனையுருக்கி
யுயிருண் கின்ற வெம்மானே
நண்பே யருளா யென்னுயிர்
நாதா நின்னரு ணாணுமே.

என்பே உருக நின் அருள் அளித்து உன்
இணை மலர் அடி காட்டி
முன்பே என்னை ஆண்டு கொண்ட
முனிவா முனிவர் முழுமுதலே
இன்பே அருளி எனை உருக்கி
உயிர் உண்கின்ற எம்மானே
நண்பே அருளாய் என் உயிர்
நாதா நின் அருள் நாணுமே.

முனிவன்-மனனசீலன், தைலதாரை போன்று யாருடைய மனது பரத்தின்கண் செல்லுகிறதோ அவன் முனிவன். உயிர் உண்கின்ற எம்மான்-ஜீவாத்மாவை சிவமயமாக்குகின்ற எமது அண்ணல். நாணுமே-தயங்காது.

முனிவர்க்கு முழுமுதற் பொருளே, எனது எலும்பு உருகும் வண்ணம் நீ அருளைச் சொரிந்து முன்னமே திருப்பெருந்துறையில் என்னை ஆட்கொண்டுள்ளாய். இப்பொழுது என் ஜீவபோதம் ஒழிந்து சிவபோதம் இனிது ஓங்குமாறு எனது உயிர்க்கு உயிரே உனது நட்புநிறைந்த அருளைச் சோராது பொழிக.

4. பத்தில னேனும் பணிந்தில னேனுமுன்
னுயர்ந்தபைங் கழல்காணப்
பித்தில னேனும் பிதற்றில னேனும்
பிறப்பறுப்பா யெம்பெருமானே
முத்தனை யானே மணியனை யானே
முதல்வனே முறையோவென்
றெத்தனை யானும் யான்றொடர்ந் துன்னை
யினிப்பிரிந் தாற்றேனே.

பத்து இலன் ஏனும் பணிந்திலன் ஏனும் உன்
உயர்ந்த பைங்கழல் காணப்
பித்து இலன் ஏனும் பிதற்றிலன் ஏனும்
பிறப்பு அறுப்பாய் எம்பெருமானே
முத்து அனையானே மணி அனையானே
முதல்வனே முறையோ என்று
எத்தனையானும் யான் தொடர்ந்து உன்னை
இனிப் பிரிந்து ஆற்றேனே.

பத்து-பக்தி. எத்தனையானும்-எவ்வளவாயினும்.

என்னிடத்துப் பக்தி இல்லை, பணிவு இல்லை, அருட்பித்து இல்லை, உன்னைப் போற்றுகிற பாங்கு இல்லை; ஆயினும் பிறவியையொழிப்பவனே, மேலாம் பொருளே, அனைத்துக்கும் ஆதியே, உன்னைப் பிரிந்திருக்க இனி எனக்கு எள்ளளவும் இயலாது.

5\. காணும தொழிந்தே னின்றிருப் பாதங்
கண்டுகண் களிகூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றும தொழிந்தேன்
பின்னையெம் பெருமானே
தாணுவே யழிந்தே னின்னினைந் துருகுந்
தன்மையென் புன்மைகளாற்
காணும தொழிந்தே னீயினி வரினுங்
காணவு நாணுவனே.

காணும் அது ஒழிந்தேன் நின் திருப் பாதம்
கண்டு கண் களி கூரப்
பேணும் அது ஒழிந்தேன் பிதற்றும் அது ஒழிந்தேன்
பின்னை எம்பெருமானே
தாணுவே அழிந்தேன் நின் நினைந்து உருகும்
தன்மை என் புன்மைகளால்
காணும் அது ஒழிந்தேன் நீ இனி வரினும்
காணவும் நாணுவனே.

களிகூர-களிப்பு மிகும்படி. பேணும்-வணங்குவதையும், பணிவிடை செய்வதையும். தாணுவே-ஸ்தாணுவே, நிலைத்தவனே.

தரிசிப்பது, திருவடியில் அன்போடு பணிவிடை பண்ணுவது, போற்றுவது, நினைந்து உருகுவது ஆகிய சிறப்புகளைக் கைநழுவ விட்டுவிட்டேன். நிலைபேறு உடையானே, இனி நீ வலிய வந்தாலும் நிலைபேறு அற்ற நான் உன்னைக் காண நாணம் கொள்வேன்.

6. பாற்றிரு நீற்றெம் பரமனைப்
பரங்கரு ணையோடு மெதிர்ந்து
தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்குஞ்
சோதியை நீதியிலேன்
போற்றியென் னமுதே யெனநினைந் தேத்திப்
புகழ்ந்தழைத் தலறியென்னுள்ளே
யாற்றுவ னாக வுடையவ னேயெனை
யாவவென் றருளாயே.

பால் திரு நீற்று எம் பரமனைப்
பரம் கருணை யோடும் எதிர்ந்து
தோற்றி மெய் அடியார்க்கு அருள் துறை அளிக்கும்
சோதியை நீதி இலேன்
போற்றி என் அமுதே என நினைந்து ஏத்திப்
புகழ்ந்து அழைத்து அலறி என் உள்ளே
ஆற்றுவன் ஆக உடையவனே எனை
ஆவ என்று அருளாயே.

எதிர்ந்து-எதிர்பட்டு. அருள்துறை-திருவருள் நெறி. நீதி இலேன்-நெறியில்லாதவனாகிய நான். ஆற்றுவன் ஆக-ஆறுதலுடையவனாகும்படி. ஆவ-இரக்கக் குறிப்பு.

பால் வெண்ணீறு பூசிய பரமன், பெருங் கருணைபடைத்தவன் தானே பக்தர்கள் முன்வந்து தோன்றி அருள் வழியைக் காட்டும் ஜோதியன் ஆவான். நெறிநில்லாத நான் அத்தகைய அண்ணலை அமுதே என்று போற்றி, நினைந்து, துதித்து, புகழ்ந்து, அழைத்து, அலறி உள்ளத்தினுள்ளே நிறைவு பெற வேண்டும். அதற்கு அவன் அந்தோவென்று இரக்கம் காட்டுவானாக.

தில்லையில் அருளிய

45. யாத்திரைப் பத்து

அனுபவ அதீதம் உரைத்தல்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. பூவார் சென்னி மன்னனெம்
புயங்கப் பெருமான் சிறியோமை
யோவா துள்ளங் கலந்துணர்வா
யுருக்கும் வெள்ளக் கருணையினு
லாவா வென்னப் பட்டன்பா
யாட்பட் டீர்வந் தொருப்படுமின்
போவோங் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே.

பூ ஆர் சென்னி மன்னன் எம்
புயங்கம் பெருமான் சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்து உணர்வு ஆய்
உருக்கும் வெள்ளம் கருணையினுல்
ஆவா என்னப் பட்டு அன்பு ஆய்
ஆட்பட்டீர் வந்து ஒருப்படுமின்
போவோம் காலம் வந்தது காண்
பொய் விட்டு உடையான் கழல் புகவே.

புயங்கம் பெருமான்-புஜங்கம் அல்லது பாம்பை யணிந்தவன். ஒருப்படுமின்-ஒன்று சேருங்கள். பொய் விட்டு-அநித்திய உடலைப் பிரிந்து, உபாதியைக் களைந்து.

கொன்றை மலரைச் சிரசிலும், பாம்பைக் கழுத்திலும் அணிந்திருப்பவன் சிவன்.. அவன் யாண்டும் எங்கள் உள்ளத்தில் குடிகொண்டுள்ளான். அவன் பரிந்து நம்மைத் தன்மயம் ஆக்கும் கருணுகரன். பொய்யுடலை ஒதுக்கி அவனோடு ஒன்றுபடும் காலம் வந்துள்ளது. சிவநேயர்களே, சிவசொருபத்தில் கலந்துகொள்ள வாருங்கள்.

2. புகவே வேண்டா புலன்களினீர்
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம்
வேண்டா போக விடுமின்கள்

நகவே ஞாலத் துள்புகுந்து
நாயே யனைய நமையாண்ட
தகவே யுடையான் றனைச்சாரத்
தளரா திருப்பார் தாந்தாமே.

புகவே வேண்டா புலன்களில் நீர்
புயங்கம் பெருமான் பூங் கழல்கள்
மிகவே நினைமின் மிக்க எல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத்து உள் புகுந்து
நாயே அனைய நமை ஆண்ட
தகவே உடையான் தனைச் சாரத்
தளராது இருப்பார் தாம் தாமே.

மிக்க எல்லாம் வேண்டா-மற்றவைகளை நாடவேண்டாம். போகவிடுமின்கள்-துறந்துவிடுங்கள். நகவே-விளக்கம் உண்டாகவே. தகவே உடையான்-தகுதி உடையவன். தளராது-சிரத்தை குறையாது.

அடியார்களை இறைவன் இப்படியும் அப்படியும் ஆட்கொள்ளுதல் உண்டோ என்று மெய்யன்பர்கள் நகைக்கும் படியான பாங்கில் அவன் நம்மை ஏற்றுள்ளான். அன்னவனை அடைய முயல்பவர்களே, நீங்கள் ஐம்பொறிவழி போகவேண்டாம். உலகப் பொருள்களை ஒதுக்கித் தள்ளுங்கள். இறைவனையே நாடுங்கள்.

3. தாமே தமக்குச் சுற்றமுந்
தாமே தமக்கு விதிவகையும்
யாமா ரெமதார் பாசமா
ரென்ன மாய மிவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடு
மவன்றன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்க னாள்வான் பொன்னடிக்கே.

உபநிஷத் மந்த்ரம் — 115.

उद्धरेदात्मनात्मानं नात्मानमवसादयेत् ।
आत्मैव ह्यात्मनो बन्धुरात्मैव रिपुरात्मनः ॥

தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாம் ஆர் எமது ஆர் பாசம் ஆர்
என்ன மாயம் இவை போகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன் தன் குறிப்பே குறிக்கொண்டு
போம் ஆறு அமைமின் பொய் நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே.

கோமான்-இறைவன். ஆறு-வழி. பொய் நீக்கி-பிரபஞ்ச வாழ்வைத் துறந்து.

உத்தரேதாத்மனாத்மானம் நாத்மானமவஸாதயேத் ।
ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்துராத்மைவ ரிபுராத்மன: ॥
(பகவத்கீதோபநிஷதம் 6-5)

आत्मना ஆத்மனு ஆத்மாவைக்கொண்டு आत्मानं ஆத்மானம் ஆத்மாவை उद्धरेत् உத்தரேத் உத்தாரணம் செய்க आत्मानं ஆத்மானம் ஆத்மாவை न अवसादयेत् ந அவஸாதயேத் கீழ்மைப்படுத்தலாகாது हि ஹி ஏனென்ருல் आत्मा एव ஆத்மா ஏவ ஆத்மாவே आत्मनः ஆத்மன: ஆத்மாவுக்கு बन्धुः பந்து: நண்பன் आत्मा एव ஆத்மா ஏவ ஆத்மாவே आत्मनः ஆத்மன: ஆத்மாவுக்கு रिपुः ரிபு: பகை.

தன்னைத் தன்னாலே உயர்த்திக்கொள்க. தன்னை இழிவுறுத்தலாகாது. ஏனென்ருல் தானே தனக்கு நண்பன்; தானே தனக்குப் பகை.

பிறப்பு இறப்பு என்னும் பெருங்கடலில் மூழ்கிப் போகாது தன்னைத்தானே மேல் நிலைக்குக் கொண்டுவர வேண்டும். மனிதன் அடைந்துள்ள சிறுமைக்கும் பெருமைக்கும் தானே பொறுப்பாளன். வேறு யாரும் அதற்குப் பொறுப்பாளர் அல்லர். பகைவன் தன்னைக் கெடுத்து விட்டான் என்று ஒருவன் குறை கூறுவது உண்டு. அப்படிக் கெடுப்பது ஒருநாளும் பகைவன் அல்லன். பகைவனுகத் தோன்றுபவனையே தனது சாதனத்துக்குற்ற துணையாக யோகி ஒருவன் எடுத்துக்கொள்ள முடியும்.

இறைவனுடைய திருவருளாலேயே ஜீவர்களுக்கு ஜீவ வியக்தி வந்துள்ளது. ஆதலால் திருவருளைத் துணையாகக் கொண்டு அன்பர்கள் தங்களைத் தாங்களே உய்வித்தல்வேண்டும். அது ஒப்பற்ற வாழ்க்கை முறையாகும். இறைவனை மறந்து அகங்காரத்தையும் மமகாரத்தையும் வளர்ப்பது பெரு மயக்கமாகும். மற்றுத் தொண்டர்களோடு தொடர்வு கொள்ளுதலில் கேடு இல்லை. அத் தொடர்வோ வாழ்வின் பெருங்குறியாகிய இறைவனிடம் கொண்டு சேர்க்கும். பிரபஞ்ச வாழ்வு நமக்கு வேண்டாம்.

4. அடியா ரானீ ரெல்லீரு
மகல விடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து
கடைக்கொண் டிருமின் றிருக்குறிப்பைச்
செடிசே ருடலைச் செலநீக்கிச்
சிவலோ கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்றன்
பூவார் கழற்கே புகவிடுமே.

அடியார் ஆனீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டைக்
கடி சேர் அடியே வந்து அடைந்து
கடைக்கொண்டு இருமின் திருக்குறிப்பைச்
செடி சேர் உடலைச் செல நீக்கிச்
சிவலோகத்தே நமை வைப்பான்
பொடி சேர் மேனிப் புயங்கன் தன்
பூ ஆர் கழற்கே புகவிடுமே.

விளையாட்டை - நிலையற்ற உலகவாழ்வு என்னும் விளையாட்டை. கடி சேர்-மணம் தங்கிய. கடைக்கொண்டு-உறுதியாகப் பற்றி. திருக்குறிப்பை-உலக வாழ்வைத் துறத்தல் என்

அறியாமையினால் அல்லது சரியான வாழ்க்கை வாழாமையினால் மனிதன் தன்னையே கெடுத்துக்கொள்கிறான். அப்படித் தன்னையே கெடுப்பதால் தனக்குத்தானே பகைவன் ஆகிறான். நல்வாழ்க்கை வாழ்ந்து தன்னை எடுப்பவன் தனக்கே சுற்றமாகிறான். தனக்குத் தன்னிலும் மிக்கதொரு நண்பனோ பகைவனோ எவ்வுலகிலும் இல்லை என்பதை அறிபவன் வாழ்க்கையைப் பற்றிய ஒரு பேருண்மையை அறிபவன் ஆகிறான்.

னும் சீரிய லட்சியத்தை. செடி சேர்-குற்றம் கூடிய. செல நீக்கி-தூரமாக ஒதுக்கி. பொடி-திருநீறு.

சிவபக்தர்களாகிய நீங்கள் எல்லாரும் விளையாட்டுப் போன்ற நிலையற்ற இவ்வுலகவாழ்வை ஒதுக்கித் தள்ளுங்கள். உலக வாழ்வைத் துறத்தல் என்னும் சீரிய லட்சியத்தை உறுதியாகப் பற்றிப் பிடியுங்கள். பேரானந்தத்துக்கு இருப்பிடமாகிய இறைவனுடைய திருவடியில் அத்துறவு உங்களைக் கொண்டு சேர்க்கும். துன்பத்துக்கு இருப்பிடமாகிய நமது பூதவுடலை நீக்கி அவன் நம்மைச் சிவசொரூபம் ஆக்குவான். அவ்வரிய செயலின் சின்னமாக அவன் திருநீறு பூசியுள்ளான்.

உபநி. 73. பக்கம் 437ல் காண்க.

5. விடுமின் வெகுளி வேட்கைநோய்
மிகவோர் கால மினியில்லை
யுடையா னடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ
டுடன்போ வதற்கே யொருப்படுமி
னடைவோ நாம்போய்ச் சிவபுரத்து
ளணியார் கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம்
புயங்க ளுள்வான் புகழ்களையே.

விடுமின் வெகுளி வேட்கை நோய்
மிக ஓர் காலம் இனி இல்லை
உடையான் அடிக்கீழ்ப் பெரும் சாத்தோடு
உடன் போவதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம் போய்ச் சிவபுரத்துள்
அணி ஆர் கதவு அது அடையாமே
புடைபட்டு உருகிப் போற்றுவோம்
புயங்கன் ஆள்வான் புகழ்களையே.

உபநிஷத் மந்த்ரம் — 116.

यच्छेद् वाङ्मनसी प्राज्ञस्तद् यच्छेज्ज्ञान आत्मनि ।
ज्ञानमात्मनि महति नियच्छेत् तद् यच्छेच्छान्त आत्मनि ॥

யச்சேத் வாங்மனஸீ ப்ராஜ்ஞஸ்தத்
யச்சேஜ்ஞான ஆத்மனி ।
ஞானம் ஆத்மனி மஹதி நியச்சேத்
தத் யசேச்சாந்த ஆத்மனி ॥

(கடோபநிஷதம் 3-13)

வெகுளி-கோபம். வேட்கை நோய்-காமநோய். சாத்தோடு-கூட்டத்தோடு. புடைபட்டு-அருகில் நெருங்கி நின்று.

நிலையற்ற இவ்வுலக வாழ்வு விரைவில் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. ஆதலால் இதை வளர்க்கும் சினம், ஆசை

प्राज्ञः ப்ராக்ஞ: பேரறிவாளன் वाक् வாக் வாக்கை मनसी மனஸீ மனதில் यच्छेत् யச்சேத் ஒடுக்கவேண்டும் तत् தத் அந்த (மனதை) ज्ञाने आत्मनि ஞானே ஆத்மனி ஞான ஆத்மாவிலே यच्छेत् யச்சேத் ஒடுக்கவேண்டும் ज्ञानम् ஞானம் ஞான ஆத்மாவை महति आत्मनि மஹதி ஆத்மனி பெரிய ஆத்மாவில் (ஹிரண்யகர்ப்பனில்) नियच्छेत् நியச்சேத் அறவே ஒடுக்க வேண்டும் तत् தத் அந்த (பெரிய ஆத்மனை) शान्ते आत्मनि சாந்தே ஆத்மனி சாந்தி ஆத்மாவின்கண் यच्छेत् யச்சேத் ஒடுக்கவேண்டும்.

பேரறிஞன் தனது பேச்சை மனதில் ஒடுக்கவேண்டும். மனதை புத்தியில் ஒடுக்கவேண்டும். புத்தியை அஹங்காரத்தில் ஒடுக்கவேண்டும். அஹங்காரத்தை சுத்த சைதன்யத்தில் ஒடுக்கவேண்டும்.

பரம்பொருளை அல்லது தனது நிஜநிலையை நாடி உள்நோக்கிச் செல்வது இங்ஙனம் நிகழ்கிறது. இந்திரியங்களை இந்திரியார்த்தங்களினின்று மீட்டெடுக்க வேண்டும். இந்திரியங்களை மனதில் ஒடுக்கவேண்டும். மனதை புத்தியில் ஒடுக்கவேண்டும். புத்தியை அஹங்காரத்தில் ஒடுக்க வேண்டும். அயர்ந்த உறக்கத்துக்குப் போகும் பொழுது இந்நிகழ்ச்சிகள் தாமாகவே நேர்கின்றன. அதனால் ஜீவாத்மாக்கள் ஓய்வையும் தெளிவையும் பெறுகின்றன. ஜாக்கிரதாவஸ்தையில் ஆத்ம சாதனத்தில் இந்நிலையை வரவழைக்க முடியுமானால் இது நல்ல முன்னேற்றமாகும். இதைத் தூங்காத தூக்கம் என்றும் நனவில் சுழுத்தி என்றும் பகர்வதுண்டு.

ஜீவாத்மன் தனது அஹங்காரத்தை ஹிரண்யகர்ப்பன் அல்லது மஹா அஹங்காரத்தில் கரைக்க வேண்டும். ஹிரண்யகர்ப்பனே சிருஷ்டி கர்த்தாவாகிய நான்முக

ஆகியவைகளை நீக்குங்கள். சிவபக்தர்களோடு சிவலோகம் போய்ச்சேரத் தீர்மானம் செய்யுங்கள். பாங்குடன் பரமனை அனுகுபவர்க்குப் பரமபத வாயில் அடைபடாது. வரவேற்கும் விதத்தில் அது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. பரமனது அருகில் நெருங்கி நின்று அவனையே போற்றுவோம்.

6. புகழ்மின் றொழுமின் பூப்புனைமின்
புயங்கன் றாளே புந்திவைத்திட்
டிகழ்மி னெல்லா வல்லலையு
மினியோ ரிடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்றாள் வணங்கிநாம்
நிகழு மடியார் முன்சென்று
நெஞ்ச முருகி நிற்போமே.

புகழ்மின் தொழுமின் பூப் புனைமின்
புயங்கன் தாளே புந்தி வைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும்
இனி ஓர் இடையூறு அடையாமே
திகழும் சீர் ஆர் சிவபுரத்துச்
சென்று சிவன் தாள் வணங்கி நாம்
நிகழும் அடியார் முன் சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே.

புந்தி வைத்திட்டு-புத்தியோகம் பண்ணி. இகழ்மின்-பொருள் படுத்தாதீர். அல்லலையும்-நிலையற்ற உலகத் துன்பங்களையும். திகழும்-விளங்குகின்ற. நிகழும்-தங்கி நிற்கும், வாழ்ந்திருக்கும்.

சிவபெருமான் திருவடியையே புகழுங்கள், தொழுங்கள், மலர்கொண்டு அலங்கரியுங்கள். மனதை முழுதும் அவன்

பிரம்மா என்றும் அழைக்கப்படுகிருன். ஹிரண்யகர்ப்பனை சாந்தி ஆத்மாவில் ஒடுக்குங்கால் பரமபதத்துக்கு வாயில் திறக்கப்பட்டது என்று இயம்பப்படுகிறது. சாந்தி ஆத்மா, நிர்க்குண பிரம்மம், சிதாகாசம், சிதம்பரம் ஆகிய சொற்கள் ஒரே பரவஸ்துவைக் குறிக்கின்றன.

பால் நாட்டுபவர்க்குத் துன்பமுமில்லை, இடையூறுமில்லை. சிவ புரத்தில் சென்று சிவபக்தர்களோடு நாம் ஆனந்த பரவச மடைந்திருப்போம்.

உபநி—105. பக்கம் 677ல் காண்க.

7. நிற்பார் நிற்கநில் லாவுலகி
னில்லோ மினிநாஞ் செல்வோமே
பொற்பா லொப்பாந் திருமேனிப்
புயங்க ளுள்வான் பொன்னடிக்கே
நிற்பீ ரெல்லாந் தாழாதே
நிற்கும் பரிசே யொருப்படுமின்
பிற்பா லின்று பேழ்கணித்தாற்
பெறுதற் கரியன் பெருமானே.

நிற்பார் நிற்க நில்லா உலகில்
நில்லோம் இனி நாம் செல்வோமே
பொற்பால் ஒப்பு ஆம் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால்
பெறுதற்கு அரியன் பெருமானே.

நிற்பார்-நிலையற்ற உலக வாழ்வில் பற்றுவைத்து நிற்பவர். பொற்பால் ஒப்பு ஆம்-அழகால் தனக்குத்தானே நிகர் ஆகும். தாழாது-காலதாமதம் செய்யாமல். பிற்பால் நின்று-பின்னே நின்று. பேழ்கணித்தால்-தற்பெருமை பேசினல்.

உலக வாழ்வு நிலைபேறு உடையது என்று மயங்கியிருப்ப வர்கள் அதில் ஈடுபட்டு இருக்கட்டும். நமக்கு வீடு ஆகிய இறைவனது திருவடிக்கு நாம் விரைந்து செல்லுவோம். தாங் கள் தீவிரமாக முயற்சி செய்யாதிருந்ததைக் குறித்து இரண் டாங்கெட்டார் பின்பு ஒருநாள் வருந்துவார்கள்.

உலகப்பற்றை விட்டவர்களுள் மந்த அதிகாரிகள் சிலர் உளர். அவர்கள் உலக வாழ்க்கையில் நாட்டங் கொள்வதில்லை என்றாலும் தெய்வப்பற்றைத் தீவிரமாக அவர்கள் பிடிப்பதில்லை. அது பாராட்டத்தக்க நிலை

யன்று. தர்மராஜன் யுதிஷ்டிரன் திரும்பிப் பாராது சுவர்க்க ஆரோகணம் பண்ணியது போன்று பரநாட்டத்தில் கண்ணுங் கருத்துமாயிருப்பவரே மேலான பக்தர் ஆவர்.

8. பெருமான் பேரா னந்தத்துப்
பிரியா திருக்கப் பெற்றீர்கா
ளருமா லுற்றுப் பின்னைநீ
ரம்மா வழுங்கி யரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவந்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன்
றிருத்தாள் சென்று சேர்வோமே.

பெருமான் பேர் ஆனந்தத்துப்
பிரியாது இருக்கப் பெற்றீர்காள்
அரு மால் உற்றுப் பின்னை நீர்
அம்மா அழுங்கி அரற்றாதே
திரு மா மணி சேர் திருக்கதவம்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமால் அறியாத் திருப் புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே.

அரு மால் உற்று-அரிய மயக்கத்தை யடைந்து. அழுங்கி-மனம் புழுங்கி. அரற்றாது-கதறாமல்.

இறைவனுடைய பேரானந்தத்தில் யாண்டும் இனிது திளைத்திருக்கும் பரம பக்தர்காள், எக்காரணத்தை முன்னிட்டும் நீங்கள் உலக வாழ்க்கையில் மயக்கம்கொள்ள வேண்டாம். அது பின்பு சகிக்க வொண்ணாத சங்கடமாக வந்து முடியும். சிவபுரத்தில் செல்ல இது நல்ல சந்தர்ப்பம். நமது வீடுபேறு ஆகிய சிவன் திருப்பாதம் சென்று சேருவோம்.

பாரமார்த்திக வாழ்வு ஆனாலும் சரி, உலக வாழ்வு ஆனாலும் சரி, நல்ல சந்தர்ப்பம் என்பது ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வேளையில்தான் வாய்க்கிறது. அத்தகைய தருணத்தைக் கை நழுவவிடாது பயன்படுத்துபவர்கள் புத்திமான்கள் ஆகின்றனர்.

9. சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள்
பங்கன் புயங்க னருளமுத
மாரப் பருகி யாராத
வார்வங் கூர வழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே
பொய்யிற் கிடந்து புரளாதே.

சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரில் பொலியும் வேல் கண்ணாள்
பங்கன் புயங்கன் அருள் அமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வம் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன் கழற்கே
பொய்யில் கிடந்து புரளாதே.

சேரக் கருதி-சிவனை அடையக் கருதி. வேல் கண்ணாள்-உமாதேவி. ஆராத ஆர்வம் கூர-தணியாத ஆசை மிக. போரப் புரிமின் - போய்ச்சேர விரும்புங்கள். பொய்யில் - பிரபஞ்ச வாழ்வில்.

மனதை நல்ல பாங்குடையதாகத் திருத்தியமைத்தல் வேண்டும். சிவனையே சென்று அடையவேண்டும் என்று சதா சிந்தித்துக்கொண்டிருக்கவேண்டும். அம்பிகை சமேதனும் ஆனந்தக் கூத்தனுமாகிய அவனுடைய அருள் என்னும் அமிர்தத்தை வேண்டியவாறு பருகுதற்குத் தணியாத ஆசையில் மூழ்கியிருக்கவேண்டும். நிலையற்ற உலக வாழ்வில் உழலாது சிவபெருமானது திருவடியின்கண் போய்ச்சேரப் பெரு விருப்பங் கொள்ளவேண்டும்.

உபநிஷத் மந்த்ரம் — 117.

यदेवेह तदमुत्र यदमुत्र तदन्विह ।
मृत्योः स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति ॥

யதேவேஹ ததமுத்ர யதமுத்ர ததன்விஹ ।
ம்ருத்யோ: ஸ ம்ருத்யுமாப்னோதி ய இஹ நாநேவ பச்யதி ॥

(கடோபநிஷதம் 4-10)

சகோர பக்ஷி என்பது ஒன்று வானத்தில் வசிக்கிறது என்ற ஐதிகம் உண்டு. மழை நீரை அல்லாது மண்ணில் படிந்த எந்த நீரையும் அது பருகாது. அங்ஙனம் அருள்தாகம் கொண்ட மேலோர் பரமனையே

यत् एव யத் ஏவ என்னதான் इह இஹ இம்மையிலோ तत् தத் அது अमुत्र அமுத்ர மறுமையிலும் यत् अमुत्र யத் அமுத்ர மறுமையில் யாது உளதோ तत् इह தத் இஹ அது இம்மையில் अनु அனு உள்ளபடி இருக்கிறது यः इह யः இஹ யார் இம்மையிலே नाना इव நாநா இவ வெவ்வேறு ஆனவைகளாக पश्यति பச்யதி பார்க்கிறானோ सः ஸः அவன் मृत्योः मृत्युं ம்ருத்யோ: ம்ருத்யும் மரணத்துக்குப் பிறகு மரணத்தை आप्नोति ஆப்னோதி அடைகிறான்.

இஹத்தில் இருப்பதே பரத்தில் இருக்கிறது. பரத்தில் இருப்பதே இஹத்தில் இருக்கிறது. இஹத்தைப் பரத்தினின்று வேறுபட்டதாகக் காண்பவன் மரணத்துக்குப் பிறகு மரணத்தை அடைகிறான்.

நாம ரூபத்தோடு கூடிய ஜகத்தாகவும் ஜீவனாகவும் எது தோன்றிக்கொண்டிருக்கிறதோ அது இஹம். (இகம்) எது நித்தியமாய், நிர்விகாரமாய், அகண்ட ஸத் சித் ஆனந்தமாய் இருக்கிறதோ அது பரம். இனி இஹம் பரம் என்று இரண்டு நிலைகளோ பொருள்களோ இல்லை. ஜகத் ஜீவன் பரம் எனப் பல பொருள்களைக் காண்பவன் பிறப்பு இறப்பு என்னும் ஸம்ஸார ஸாகரத்தினின்று மீளமாட்டான்.

யாண்டும் இருக்கிற ஒரு பொருளைப் பிரபஞ்சமாகவும் உயிர் வகைகளாகவும் பேதப்படுத்துவது அஞ்ஞானம். நகைகளாகத் தோன்றிக்கொண்டிருக்கிற பொழுதும் தங்கம் தங்கமே. அது பலப்பல பொருள்கள் ஆகவில்லை. அலைகளாகக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறபொழுதும் கடல் தன்மயமாகவே இருக்கிறது. அங்ஙனம் சிவம் என்றும் பரம் என்றும் பதி என்றும் கூறப்பெறுகிற ஒரு பொருள் தான் யாண்டும் உளது.

நாடியிருப்பர். எக்காரணத்தைக்கொண்டும் அவர்கள் உலக நாட்டம் கொள்ளமாட்டார்கள்.

10. புரள்வார் தொழுவார் புகழ்வாரா
யின்றே வந்தா ளாகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார்
மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீ ராகி லிதுசெய்ம்மின்
சிவலோ கக்கோன் றிருப்புயங்க
னருளார் பெறுவா ரகலிடத்தே
யந்தோ வந்தோ வந்தோவே.

புரள்வார் தொழுவார் புகழ்வார் ஆய்
இன்றே வந்து ஆள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பார் ஆர்
மதியுள் கலங்கி மயங்குவீர்
தெருள்வீர் ஆகில் இது செய்ம்மின்
சிவலோகம் கோன் திருப்புயங்கன்
அருள் ஆர் பெறுவார் அகல் இடத்தே
அந்தோ அந்தோ அந்தோவே.

ஆள் ஆகாதீர்-ஆட்படாதவர்களே. மருள்வீர்-மயங்குவீர். தெருள்வீர் ஆகில்-தெளிவு அடைய விரும்புவீராகில். அந்தோ, அந்தோ, அந்தோவே-ஐயோ, ஐயோ, ஐயய்யோ.

சிவபக்தியில் ஊறிப் புரள்வதையும், தொழுவதையும், புகழ்வதையும் செய்யத் தயங்குபவர்களே! இவ் அரிய வழி

நகை என்பது எப்படித் தங்கத்தின் தோற்றமோ, அலை என்பது எப்படிக் கடலின் வெறும் தோற்றமோ அங்ஙனம் ஜகத், ஜீவன் என்பன, பசு, பாசம் என்பன வெறும் மன விகாரங்களாம். மனது உற்ற நிலையிலும் மனது அற்ற நிலையிலும் பரசிவம் ஒன்றே உளது. சிவத்தைக் கண்டு சிவத்தில் ஒடுங்குபவன் முக்தியடைகிறான். முப்பொருள் உண்மையென்ற மயக்கமுற்றுப் பசுபோதத்திலும் பிரபஞ்ச போதத்திலும் உழல்பவன் பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்கிறான்..

பாட்டு முறைகளை இப்பொழுதே கையாளுங்கள். பின்பு பார்ப்போம் என்று ஒத்திவைத்தால் மயக்கத்தில் மூழ்கிப் போவீர்கள். அப்பொழுது உங்களை யாரும் மதிக்கமாட்டார்கள். நீங்களோ நல்லறிவை யிழந்து கலங்கி நிற்பீர்கள். சிவ ஞானத்தில் தெளிவடைய விரும்புவீராகில் சாதனங்களில் ஆழ்ந்து ஈடுபடுங்கள். இப்படிச் செய்யாவிடின் சிவபெருமானது பேர் அருளை இப்பரந்த உலகில் யார்தான் பெற்றுப் பரகதி யடைவர். இது சிந்தனைக்கு உரிய விஷயம். இது சிந்தனைக்கு உரிய விஷயம். இது சிந்தனைக்கு உரிய விஷயம்.

அவரவர்க்கு ஒத்துக்கொள்ளும் உணவு வகைகள் உலகில் உள, வேண்டியதை உண்டு வாழத் தெரியாதவர்கள் துன்பத்துக்கு ஆளாகிறார்கள். இறைவனை அடைய சாதன வகைகள் ஏராளமாயிருக்கின்றன. அருள் திறன் அத்தகையது. அவன் அருளால் அவன் தாள் வணங்கி உய்வு அடையத் தெரியாதவர்கள் வீணில் பிறந்தவர் ஆகின்றனர்.

தில்லையில் அருளிய

46. திருப்படை எழுச்சி

பிரபஞ்சப் போர்

கலி விருத்தம்

1. ஞானவா ளேந்துமையர்
        நாதப் பறையறைமின்
    மானமா வேறுமையர்
        மதிவெண் குடைகவிமி
    ஞானநீற் றுக்கவச
        மடையப் புகுமின்கள்
    வானவூர் கொள்வோநா
        மாயப்படை வாராமே.

உபநிஷத் மந்த்ரம் —118.

प्रणवो धनुः शरो ह्यात्मा ब्रह्म तल्लक्ष्यमुच्यते ।
अप्रमत्तेन वेद्धव्यं शरवत् तन्मयो भवेत् ॥

ஞானம் வாள் ஏந்தும் ஐயர்
 நாதம் பறை அறைமின்
மானம் மா ஏறும் ஐயர்
 மதி வெண் குடை கவிமின்
ஆன நீற்றுக் கவசம்
 அடையப் புகுமின்கள்
வானம் ஊர் கொள்வோம் நாம்
 மாயம் படை வாராமே.

நாதம் பறை அறைமின்-திருநாமத்தை ஓதுதலாகிய பறை சாற்றுங்கள். மானம் மா ஏறும் ஐயர்-பெருமை பொருந்திய காளையை ஊர்ந்து செல்லும் தலைவர். மதி வெண் குடை கவிமின்-விவேகம் என்னும் வெண் குடையைப் பிடிப்பீராக. ஆன நீற்றுக் கவசம்-நன்மை தருகிற திருநீறு என்னும் கவசம் அல்லது போர்வை. வானம் ஊர்-சிதாகாசமாகிய சுவாராஜ்யம். மாயம் படை-காமக் குரோதாதிகளாகிய சேனைகள்.

அவித்யா மாயையில் உதிப்பது அஞ்ஞானம். அது மனிதனுக்குப் பெரும் பகையாகிறது. அவன் படும் துன்பத்துக்கெல்லாம் காரணம் அஞ்ஞானம். ஞானவாள் ஒன்றே அஞ்ஞானத்தை அகற்றுதற்கு உற்ற உபாயம். இறைவனுடைய நாமஜபம் அந்த மெய்ஞ்ஞானத்தை வளர்க்கிறது. ஜீவாத்மனை வாஹனமாகக்கொண்டு சிவன் வீற்றிருக்கிருர் என்னும் மெய்யுணர்வினின்று வீரம் பிறக்கிறது. விவேகமானது எதிரியைக் கொல்லுவதற்கான நல்வழியைக் காட்டித் தருகிறது. அது குடை நிழலுக்கு நிகர். திருநீறு வைராக்கியத்தின் சின்னம். வைராக்கியம் பூணுதல் அல்லது பற்றை அழிப்பதே அஞ்ஞானப் பகையை ஒடுக்குதற்கு உற்ற உபாயம். அஞ்ஞானத்தைச் சம்மாரம் செய்தவர் சிதம்பரம் புகுகின்றனர்.

ப்ரணவோ தனு: சரோ ஹ்யாத்மா ப்ரஹ்ம தத்லக்ஷ்யம்
 உச்யதே ।
அப்ரமத்தேன வேத்தவ்யம் சரவத் தன்மயோ பவேத் ॥
(முண்டகோபநிஷதம் 2-2-4)

प्रणवः ப்ரணவ: பிரணவம் அல்லது ஓம் धनुः தனு: வில் शरः हि आत्मा சர: ஹி ஆத்மா ஜீவாத்மனே அம்பு ब्रह्म तत् लक्ष्यम् ப்ரஹ்ம தத் லக்ஷ்யம் பிரம்மம் அதற்கு லக்ஷியம் उच्यते உச்யதே என்று சொல்லப்படுகிறது अप्रमत्तेन அப்ரமத்தேன பிசகுபடாத மனதால் वेद्धव्यं வேத்தவ்யம் எய்தல்பட

இப்படை யெழுச்சிக்கு பாரதப்போர் புறச்சின்ன மாகிறது. கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு ஸாரதியா யிருந்ததுபோன்று ஜீவர்கள் அனைவர்க்கும் அவர் ஸாரதியாகிறார். பண்பட்டவர்களுக்கு அவருடைய சகாயம் நிச்சயமாகக் கிடைக்கிறது. குருட்டு அரசனாகிய திருதராஷ்டிரன் அக்ஞான இருளின் உருவகம் ஆகிறான். அவனுடைய மைந்தர் துர்யோதனன் முதலிய நூறுபேர் அல்லல் ஆம் மாயப்படை யாகின்றனர். அவர்களை வென்று நல்வாழ்வை நிலைநாட்டுவது நல்லாருடைய குறிக்கோள்.

2. தொண்டர்கா டூசிசெல்லீர்
பத்தர்காள் சூழப்போகீ
ரொண்டிறல் யோகிகளே
பேரணி யுந்தீர்க

வேண்டும் शरवत् சரவத் அம்பு போன்று तन्मयः தன்மய: தன்மயம் भवेत् பவேத் ஆகவேண்டும்.

ஓம் என்னும் பிரணவம் வில்; ஜீவாத்மன் அம்பு; பிரம்மன் லக்ஷ்யம் என்று சொல்லப்படுகிறது. சிதறடையாத மனதால் அதை எய்தல் வேண்டும். அம்பு போன்று அதில் ஒன்றுபடவேண்டும்.

அம்புக்கு வேகம் கொடுப்பது வில். அங்ஙனம் ஜீவாத்மனுக்குப் பரமாத்மனை அடைய உபாயமாயிருப்பது ஓம் என்னும் மூல மந்த்ரம். இந்த மந்த்ரத்தைச் சிக்கெனப் பிடிக்குமளவு ஜீவாத்மன் பரமாத்மன் மயம் ஆகிறான். சொரூபத்தில் ஜீவாத்மனும் பரமாத்மனும் வெவ்வேறு ஆனவர்கள் அல்லர். அனுபூதியில் அவர்களுடைய ஒற்றுமை உணரப்படுகிறது. ஓங்கார தியானத்தில் மனம் குவியுமளவு ஒற்றுமை உறுதி பெறுகிறது. அமைப்பில் ஜீவாத்மனும் பரமாத்மனும் ஒன்று. உபாதியை முன்னிட்டு இரண்டு பொருள்களாகக் கற்பிக்கப்படுகின்றன. அந்தக் கற்பனையை ஒழிப்பதற்கு இது சாதனமாகிறது.

டிண்டிறற் சித்தர்களே
கடைக்கூழை சென்மின்க
ளண்டர்நா டாள்வோநா
மல்லற்படை வாராமே.

தொண்டர்காள் தூசி செல்லீர்
பத்தர்காள் சூழப் போகீர்
ஒண் திறல் யோகிகளே
பேர் அணி உந்தீர்கள்
திண் திறல் சித்தர்களே
கடைக் கூழை செல்மின்கள்
அண்டர் நாடு ஆள்வோம் நாம்
அல்லல் படை வாராமே.

தூசி செல்லீர்-முன் அணியில் செல்லுங்கள். ஒண் திறல்-நுண் அறிவோடு கூடிய ஆற்றல். பேர் அணி-பெரும்படை. உந்தீர்கள்-செலுத்துங்கள். திண் திறல்-வஜ்ர ஆயுதம் போன்ற ஆற்றல். கடைக் கூழை-பின் அணி. அண்டர் நாடு-சிதாகாசம். அல்லல் படை-துன்பமாகிய படை.

தொண்டர்காள், நீங்கள் முன் அணியில் மேல் நோக்கிச் செல்லுங்கள். பக்தர்காள், நீங்கள் சரியாக அணிவகுத்து முன் ஏறுங்கள். யோகிகளே, நீங்கள் மதிநுட்பம் வாய்க்கப் பெற்றவர்களாக மேல் நோக்கிப் போவீர்களாக. எதற்கும் தளராத வஜ்ராயுதத்துக்கு ஒப்பான சித்தர்களே, நீங்கள் பின் அணிவகுத்து ஏகுங்கள். துன்பத்துக்கு இடம் கொடாத சிதாகாசம் நமது நாடு. அதை நாம் சென்றடைவோம்.

பரம் பொருளை நாடுபவர்களுள் பெருநெறி பிடிப்பவர் எவர் என்னும் பாகுபாடு பொருந்தாது. ஞானிகள், தொண்டர்கள், பக்தர்கள், யோகிகள், சித்தர்கள் ஆகிய யாவரும் ஒரே லட்சியத்தை நாடிச் செல்கின்றனர். அவர்களுக்கிடையில் உயர்வு தாழ்வு காண்பது அக்ஞானத்தின் விளைவு ஆகும்.

யுத்த சாஸ்திரத்தில் வியூகம் அல்லது படை வகுத்தல் ஓர் அலாதியான கலைஞானமாகும். படையின் எண்ணிக்கை ஏராளமாயிருப்பதால் வெற்றி வாய்த்து விடாது. சூழ்நிலைக்கு ஏற்றவாறு அணிவகுத்தல் சேனை

பதியின் போர்த் திறனின் விளைவு ஆகும். அம்பிகைக்கு சதுரங்க பலேசுவரி என்பது ஒரு பெயர். ரதம், கஜம், துரகம், பதாதி (தேர், யானை, குதிரை, காலாள்) ஆகிய நான்கு அங்கங்களையுடைய சேனையைச் சரியாகப் பயன் படுத்தினால் வெற்றி நிச்சயமாக வாய்க்கும். வாழ்க்கை என்னும் போராட்டத்துக்கு இது இன்றியமையாத கோட்பாடு ஆகும்.

உலக வாழ்க்கை வேறு, ஞான வாழ்க்கை வேறு எனப் பொருள்படுத்தலாகாது என்பது பாரதப் போரில் விளைந்த பகவத்கீதையின் கோட்பாடு ஆகும். யோகேசு வரனாகிய கிருஷ்ண பரமாத்மா கர்மயோகம், ராஜயோ கம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய சதுரங்க பலத்தை (நான்கு கூறுகளையுடைய அருள் படையை) அர்ஜுனனுக்கு வழங்குகிறார். இந்த நான்கு படைகளை யும் முறையாகக் கையாளுகிற ஜீவாத்மன் அக்ஞானப் பகையை வென்று பரமனுக்கு உரியவன் ஆவான்.

திருப்பெருந்துறையில் அருளிய

47. திருவெண்பா

அணைந்தோர் தன்மை

நேரிசை வெண்பா

1. வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன்—செய்ய
திருவார் பெருந்துறையான் றேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து.

வெய்ய வினை இரண்டும் வெந்து அகல மெய் உருகிப்
பொய்யும் பொடி ஆகாது என் செய்கேன்—செய்ய
திரு ஆர் பெருந்துறையான் தேன் உந்து செம் தீ
மருவாது இருந்தேன் மனத்து.

வெய்ய-கொடிய. வெந்து அகல-அவிந்து ஒழிய. மெய்-உடல். பொய்யும் பொடி ஆகாது-உலக வாழ்க்கையும் நீறு ஆகி ஒழியாது. செய்ய திரு ஆர்-சிவந்த அழகு பொருந்திய. தேன் உந்து செம்தீ-பேரின்பம் விளைவிக்கிற செஞ்சுடர். மருவாது-அணைத்துக்கொள்ளாது.

மகிமையோடு கூடிய ஞானாக்கினியாக மிளிர்பவன் சிவன். அவன் சொரூபத்தில் என்னைச் சேர்த்துவிட்டால் நல்வினையும் தீவினையும் பொசுங்கிப்போம். பஞ்ச பூதங்களால் ஆகிய பொய்யுடலும் வெந்துபோம். திருநீறுபோன்ற சிவ சொரூபம் எஞ்சி நிற்கும். அது சிவானந்தம் என்னும் தேன் ஆகும்.

பரவித்தைக்கு மது வித்யா என்பது மற்றொரு பெயர். தேன் உந்து செம்தீ என்று அது ஈண்டு இயம்பப் பெறுகிறது.

2. ஆர்க்கோ வரற்றுகோ வாடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே யென்செய்கேன்—
[றீர்ப்பரிய
வானந்த மாலேற்று மத்தன் பெருந்துறையான்
றானென்பா ராரொருவர் தாழ்ந்து.

ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என் செய்கேன்—தீர்ப்பு அரிய
ஆனந்தம் மால் ஏற்றும் அத்தன் பெருந்துறையான்
தான் என்பார் ஆர் ஒருவர் தாழ்ந்து.

ஆர்க்கோ-ஆரவாரம் செய்வேனோ. அரற்றுகோ-அலறுவேனோ. தீர்ப்பு அரிய-நீக்குதற்கு அரிதாகிய. ஆனந்தம் மால் ஏற்றும்-இன்ப மயக்கத்தை ஏற்றுகின்ற. தாழ்ந்து-வணங்கி.

சிவானந்தத்தைப் புசிக்கப் புசிக்க அது தெவிட்டாததாயிருக்கிறது. அப்பேருண்டியில் கலந்துகொள்ள வேறு யாரும் வராவிட்டால் நான் தனியனாக அதில் திளைத்திருந்து ஆரவாரம் செய்வதா, அலறுவதா; ஆடுவதா, பாடுவதா, கண்டு களிப்பதா? இதைக் குறித்துத் திகைத்து நிற்கிறேன்.

பேரின்பத்தில் கலந்துகொள்ள உலகு அனைத்தையும் கூவியழைப்பது சான்றோர் இயல்பு.

3. செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
யுய்யும் வகையி னுயிர்ப்பறியேன் — வையத்

திருந்துறையுள் வேன்மடுத்தென் சிந்தனைக்கே
[கோத்தான்
பெருந்துறையின் மேய பிரான்.

செய்த பிழை அறியேன் சேவடியே கை தொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பு அறியேன்—வையத்து
இருந்து உறையுள் வேல் மடுத்து என் சிந்தனைக்கே
[கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான்.

உய்யும்-கடைத்தேறும். உயிர்ப்பு-பாரமார்த்திகப் பெரு வாழ்வு. மடுத்து-அமுத்தி.

உறையிலே செயலற்றுக் கிடக்கும் வேலினை எடுத்து நெஞ்சில் குத்தினால் மனிதன் மாய்கிறான். பிழை பண்ணிய வனை அப்படிக் குத்திக் கொல்வது உலகத்தவர் சிலர் செயல். நானோ பிழை செய்து அறியேன். உலக வழக்கத்துக்கு ஒப்ப, வெறுமனே கடவுள் வழிபாடு செய்கிறேன். ஆயினும் கடைத் தேறும் வகையறியேன். மந்த அதிகாரி யாதலால் பாரமார்த் திகப் பெருவாழ்வு எது என்று அறியேன். அத்தகைய பாமர னாகிய என் நெஞ்சில் ஞானவேல் எடுத்துச் சிவன் அழுத்த மாகக் கோத்தான். எனது மயக்கம் மாய்ந்தது; தெளிவு ஓங்கியது. நான் உய்வு அடையலானேன்.

ஏட்டுக் கல்வி எவ்வளவுதான் கற்றாலும் அதனால் ஐயம் அகலாது. வழிபாட்டில் எவ்வளவு தீவிரமாக ஈடுபட்டாலும் ஐயம் அகலாது. சீலத்தில் எவ்வளவு ஒழுங்காக நிலைபெற்றிருந்தாலும் ஐயம் அகலாது. பர ஞானம் வாய்க்கப் பெற்ற பின்பே ஐயங்கள் அனைத்தும் அறவே அகலுகின்றன. இது ஞானியர் சித்தாந்தம்.

4. முன்னை வினையிரண்டும் வேரறுத்து
[முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்—றென்னன்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கு மருந்து.

முன்னை வினை இரண்டும் வேர் அறுத்து முன் நின்றான்
பின்னைப் பிறப்பு அறுக்கும் பேராளன்—தென்னன்
பெருந்துறையில் மேய பெரும் கருணையாளன்
வரும் துயரம் தீர்க்கும் மருந்து.

வினைப்பயன் இருக்கும் வரையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்துகொண்டேயிருக்கின்றன. சுவர்க்கத்திலும் சாசுவதமான சாந்தி கிடையாது. சிவஞானம் அடையப் பெற்ற பின்பே உலப்பில்லா ஆனந்தம் வாய்க்கிறது.

இறைவன் ஒருவனையே அரு மருந்து என இயம்ப வேண்டும். ஏனென்றால் வைத்தீசுவரனாகிய அவன் ஸர்வரோக நிவாரணனாய் இருக்கிறான்.

5. அறையோ வறிவார்க் கனைத்துலகு மீன்ற
மறையோனு மாலுமால் கொள்ளு-மிறையோன்
பெருந்துறையுண் மேய பெருமான் பிரியா
திருந்துறையு மென்னெஞ்சத் தின்று.

அறையோ அறிவார்க்கு அனைத்து உலகும் ஈன்ற
மறையோனும் மாலும் மால்கொள்ளும்—இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியாது
இருந்து உறையும் என் நெஞ்சத்து இன்று.

அறையோ-சொல்லவும் வேண்டுமோ?

சிவன் சித்தமிசை குடிகொண்டிருப்பது செருக்கு உற்றவர்க்கு விளங்குவதில்லை. தெளிந்த அறிவுடையார்க்கு அவ்வுண்மையைச் சொல்லவும் வேண்டுமோ? சொல்லாமலே அது அன்னவர்க்கு விளங்குகிறது.

பரமனைப் புறத்தில் தேடுகின்றவர்கள் பிரம்மா, திருமால் போன்றவர்களாயிருப்பினும் அவர்களுக்கு மயக்கம் தெளியாது. அவனை அகத்தில் தேடுகின்றவன் சாமானிய ஜீவனாயிருந்தாலும் ஞான சித்தி விரைவில் வாய்க்கும்.

6. பித்தென்னை யேற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதா
மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை—யத்தன்
பெருந்துறையா னாட்கொண்டு பேரருளா [ளேக்கு
மருந்திறவாப் பேரின்பம் வந்து.

பித்து என்னை ஏற்றும் பிறப்பு அறுக்கும் பேச்சு
[அரிது ஆம்
மத்தமே ஆக்கும் வந்து என் மனத்தை—அத்தன்
பெருந்துறையான் ஆட் கொண்டு பேர் அருளால்
[நோக்கும்
மருந்து இறவாப் பேரின்பம் வந்து.

பித்து-ஞானப்பித்து. மத்தம்-உன்மத்தம், பேசா நிலை.

பரபோதத்தில் பேச்சு அற்று சாதகன் ஸ்தம்பித்து இருக்கிறான். ஏனென்றால் நிறைகுடம் ததும்பாது இருப்பது போன்று அவனுடைய நிறை மனதில் சிவபோதம் நிறைந்திருக்கிறது. சிவனது நிறைநிலையே உன்மத்தம் அல்லது பெரும்பித்து எனப்படுகிறது. அதில் ஊறிய ஜீவனும் மௌனானந்தம் உறுகிறான்.

காந்தத்தோடு சேர்ந்த இரும்பும் காந்தமாகிறது. சிவயோகம் பண்ணுகிற ஜீவன் சிவமயமாகிறான்.

7. வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
யாரா வமுதா யமைந்தன்றே—சீரார்
திருத்தென் பெருந்துறையா னென்சிந்தை மேய
வொருத்தன் பெருக்கு மொளி.

வாரா வழி அருளி வந்து எனக்கு மாறு இன்றி
ஆரா அமுது ஆய் அமைந்து அன்றே—சீர் ஆர்
திருத் தென் பெருந்துறையான் என் சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி.

வாரா வழி-மீண்டும் பிறவாத வழி. மாறு இன்றி-அசலமாய். சீர் ஆர் திருத்தென் பெருந்துறையான்-மேன்மையமைந்த அழகிய பெருந்துறையான். ஒருத்தன்-கேவலன், தனிப்பட்ட பொருள். ஒளி-சுத்த சைதன்யம்.

என் உள்ளத்தில் ஒளிர்கின்ற சிவ சைதன்யம் யாண்டும் உள்ளபடி அசலமானது. அது இரண்டற்ற தனிப்பொருள். அது பேரானந்த சொரூபம். அனுபூதியில் அதை அறிந்துகொண்டதனால் இனி எனக்குப் பிறப்புமில்லை இறப்புமில்லை. நான் பெற்றுள்ள பேறு முக்தியாம்.

அக்ஞானத்தில் உழலும் ஜீவன் தன்னை உடல் சொரூபம் என்று உணர்கிறான். ஆதலால் பிறப்பு

இறப்பு என்னும் போக்கு வரவு அவனுக்கு உள. பின்பு சிவஞானம் அவனுக்கு முக்தி நல்குகிறது.

8. யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழா மடியேனை—யாவரும்
பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென் [னெம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை.

யாவர்க்கும் மேல் ஆம் அளவு இலாச் சீர் உடையான்
யாவர்க்கும் கீழ் ஆம் அடியேனை—யாவரும்
பெற்று அறியா இன்பத்துள் வைத்தாய்க்கு என் [எம்பெருமான்
மற்று அறியேன் செய்யும் வகை.

சிவன் அகண்ட வஸ்து, பரிபூரணன்; அல்பனுகிய என்னை அவன் உலகு அறியத் தன் மயமாக்கினான். இதற்கு எப்படி நன்றி செலுத்துவது என்று எனக்கு விளங்கவில்லை.

கருணாகரனுடைய கருணைக்குக் கைம்மாறு கொடுக்க எந்த ஜீவனுக்கும் இயலாது.

9. மூவரு முப்பத்து மூவரு மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான்—மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே யின்ப மிகும்.

மூவரும் முப்பத்து மூவரும் மற்று ஒழிந்த
தேவரும் காணாச் சிவபெருமான்—மா ஏறி
வையகத்தே வந்து இழிந்த வார் கழல்கள் வந்திக்க
மெய் அகத்தே இன்பம் மிகும்.

மூவரும்-மும்மூர்த்திகளும். முப்பத்து மூவரும்-பதினொரு உருத்திரர்கள், பன்னிரண்டு ஆதித்தியர்கள், எட்டு வசுக்கள், இரண்டு அச்வினி தேவர் ஆக முப்பத்து மூவரும். மா ஏறி-குதிரை ஏறி. வந்திக்க-வணங்க.

கட்புலனாகாத பொருள் தன்னைக் கட்புலனாக்கும்படி கீழ் நிலைக்கு இறங்கி வந்தது அடியவர்கள்மீது அவன் வைத்துள்ள இரக்கத்தாலேயாம்.

கட்புலனாகாத நீராவி கட்புலனாகும் மேகமாக மாறுகிறது. பிறகு அது மழையாக இறங்கி உயிர்களுக்கு உணவாகிறது. அங்ஙனம் நிர்க்குண நிராகாரப் பரவஸ்து சகுண சாகார மூர்த்தியாகிறது. அந்த மூர்த்தி பக்குவமான ஆத்மாக்களை உய்விக்கிறது. சிவனார் குருந்த மரத்தடியில் குருவாய் எழுந்தருளியது, குதிரைச் சேவகனாய் வந்தது, பிட்டுக்கு மண் சுமந்தது இக்கோட்பாட்டுக்குச் சான்றுகளாகின்றன. வைஷ்ணவ சித்தாந்தப்படி அவன் ராமன், கிருஷ்ணன் போன்ற அவதார மூர்த்திகளாய் உலகில் வந்து தர்மத்தையும் பரதத்துவத்தையும் மக்களுக்கு விளக்கியருள்கிறான். அவன் கருணாகரன்.

10. இருந்தென்னை யாண்டா னிணையடியே சிந்தித்
திருந்திரந்து கொண்ணெஞ்சே யெல்லாந்—
[தருங்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவா யென்மனத்தே வந்து.

இருந்து என்னை ஆண்டான் இணையடியே சிந்தித்து
இருந்து இரந்துகொள் நெஞ்சே எல்லாம்—தரும்காண்
பெருந்துறையில் மேய பெரும் கருணையாளன்
மருந்து உருவாய் என் மனத்தே வந்து.

இறைவன் கல்பதரு. அவனிடமிருந்து எதையும் பெறலாம். நிலையற்ற உலகப் பொருள்களைப் பெற்று அனுபவித்துச் சலித்துப்போன பிறகு இறுதியில் அவனையே பெறலாம்.

களைத்துப் போன வழிப்போக்கன் ஒருவன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். அது கல்பக விருக்ஷம் என்பது அவனுக்குத் தெரியாது. பருகுதற்குக் கொஞ்சம் நீர் கிடைத்தால் நலம் என்று எண்ணினான். உடனே நீர் வந்தது. அருந்துதற்கு உணவு கிடைக்குமா என்று ஏங்கினான். அக்கணமே உண்டி வந்து வாய்த்தது. படுத்துறங்கப் பாய் கிடைக்குமா என்று கருதினான். அதுவும் கிட்டுவதாயிற்று; தூங்கி யெழுந்தான். வனாந்தரத்தில் இருக்கிறேனே, புலி வந்து பிடித்தாலோவென்று

அஞ்சினன். அந்தோ! புலிவந்து பிடித்துக்கொண்டது. ஈசனே கல்பக விருக்ஷம். மரணமே புலி. உடல் எடுத் திருப்பவன் மரணத்தைத் தவிர்க்க முடியாது. மனிதன் விரும்புவது ஈசனிடமிருந்து வருகிறது. எதை விரும்பு வது எதைத் தவிர்ப்பது என்பதைப்பற்றி மனிதன் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஈசனையே விரும்பி நாடு கிறவனை மரணம் என்னும் புலி பிடிக்காது.

11. இன்பம் பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியா—
[யன்பமைத்துச்
சீரார் பெருந்துறையா னென்னுடைய சிந்தையே
யூராகக் கொண்டா னுவந்து.

இன்பம் பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வு அறுத்துச் சோதி ஆய்—அன்பு
[அமைத்துச்
சீர் ஆர் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊர் ஆகக் கொண்டான் உவந்து.

ஊர்-இருப்பிடம்.

தொண்டர் உள்ளம் சிவனது பெருங்கோயில் ஆகிறது. ஆங்குப் பேரின்பமும் பேரொளியும் மிளிர்கின்றன.

நல்லார் பொல்லார் ஆகிய எல்லார் உள்ளமும் உண் மையில் பரமனுக்குக் கோயில். ஆதலால்தான் அவர்கள் பலப்பல முறைகளில் இன்பம் எய்துகின்றனர். அவர் களது அறிவை வளர்ப்பவனும் அவனேயாம். பின்பு தான் தானே நித்தியானந்த சொரூபி என்பதையும் சித்தமிசை குடிகொண்ட அறிவானதெய்வம் என்பதை யும் பரிபக்குவம் அடைந்துள்ள ஜீவாத்மாக்களுக்கு அவன் இறுதியில் காட்டியருள்கிறுன்.

திருப்பெருந்துறையில் அருளிய

48. பண்டு ஆய நான்மறை

அனுபவத்துக்கு ஐயமின்மை உரைத்தல்

நேரிசை வெண்பா

1. பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனுங்
கண்டாரு மில்லைக் கடையேனைத்-தொண்டாகக்
கொண்டருளுங் கோகழியெங் கோமாற்கு [நெஞ்சமே
யுண்டாமோ கைம்மா றுரை.

பண்டு ஆய நான் மறையும் பால் அணுகா மால் [அயனும்
கண்டாரும் இல்லைக் கடையேனைத்—தொண்டு ஆகக்
கொண்டருளும் கோகழி எம் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மாறு உரை.

பண்டு ஆய-பழமையாகிய. நான் மறையும்-நான்கு வேதங்களும். பால் அணுகா-அவன் பக்கத்தில் போகமாட்டாத. கோமாற்கு-இறைவனுக்கு.

வேதங்களுக்கு எட்டாதவன் சிவன். ஜீவபோதத்தில் உழலும் திருமாலுக்கும் பிரம்மாவுக்கும் விளங்காதவன். அத்தகையவனை அடியேன் காணுமாறு கிருபை செய்தான். அதற்குக் கைம்மாறு யாது உளது!

உபநி—9. பக்கம் 115ல் காண்க.

2. உள்ள மலமூன்று மாய வுகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த-வள்ளன்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் [வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு.

உள்ள மலம் மூன்றும் மாய உகு பெரும் தேன்
வெள்ளம் தரும் பரியின் மேல் வந்த—வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவும் கெடும் பிறவிக் காடு.

மலம் மூன்றும்-ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும். உகு-சிந்துகின்ற. பரி-குதிரை. வள்ளல்-தயங்காது தருபவன். மருவும்-அமர்ந்து உறையும். கருவும் கெடும்-வேரும் அற்று ஒழியும்.

சிவஞானம் என்னும் தேனை சிவன் நல்கியருள்கின்ருன். அதன் விளைவாக மும்மலங்கள் அழிகின்றன. பிறவிக்காடு வேரோடு ஒழிந்து போகிறது.

3. காட்டகத்து வேடன் கடலில் வலைவாண
ஞட்டிற் பரிப்பாக னம்வினையை—வீட்டி
யருளும் பெருந்துறையா னங்கமல பாத
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து.

காட்டகத்து வேடன் கடலில் வலை வாணன்
நாட்டில் பரிப் பாகன் நம் வினையை—வீட்டி
அருளும் பெருந்துறையான் அம் கமலம் பாதம்
மருளும் கெட நெஞ்சே வாழ்த்து.

வீட்டி-கெடுத்து. மருளும்-அக்ஞானமும்.

சிவபெருமான் அடியார்க்கு எளியவன். அர்ஜுனனுக்காக அவன் காட்டில் வேடனாக வந்தான். கடலில் வலைஞனாய் வந்தான். நாட்டில் நமக்காகக் குதிரைப்பாகனாக வந்தான். அவனை வழுத்தினால் வினையும் அக்ஞான இருளும் ஒழியும்.

4. வாழ்ந்தார்க ளாவாரும் வல்வினையை
[மாய்ப்பாருந்
தாழ்ந்துலக மேத்தத் தகுவாருஞ்—சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி யேத்துந் திருவார்
[பெருந்துறையை
நன்றிறைஞ்சி யேத்து நமர்.

வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்து உலகம் ஏத்தத் தகுவாரும்-சூழ்ந்து அமரர்
சென்று இறைஞ்சி ஏத்தும் திரு ஆர் பெருந்துறையை
நன்று இறைஞ்சி ஏத்தும் நமர்.

நமர்-நம்மவர்கள்.

சிவ வழிபாட்டின் வாயிலாக பக்தன் ஸ்ரேயஸைப் பெறலாம். அது முக்திக்கு வித்து ஆகிறது.

5. நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள்
[போயகல
வெண்ணி யெழுகோ கழிக்கரசைப்—பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்.

நண்ணிப் பெருந்துறையை நம் இடர்கள் போய் அகல
எண்ணி எழு கோகழிக்கு அரசைப்—பண்ணின்
மொழியாளோடு உத்தரகோசமங்கை மன்னிக்
கழியாது இருந்தவனைக் காண்.

நண்ணி-அடைந்து. மன்னி-நிலைபெற்று. கழியாது இருந்தவன்-நீங்காதிருந்தவன், அசேஷன்.

சித்தமிசை நீங்காது குடிகொண்டிருக்கும் சிவசக்தியைச் சார்ந்திருக்குமளவு துன்பங்கள் மறைந்தொழிகின்றன.

6. காணுங் கரணங்க ளெல்லாம்பே ரின்பமெனப்
பேணு மடியார் பிறப்பகலக்—காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையி லென்றும்
பிரியானை வாயாரப் பேசு.

காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பம் எனப்
பேணும் அடியார் பிறப்பு அகலக்—காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாய் ஆரப் பேசு.

காணும் பெரியானை-அனைத்துக்கும் சாக்ஷியா யிருப்பவனை. என்றும் பிரியானை-அந்தர்யாமின் ஆக இருப்பவனை.

உள்ளத்தினுள் அந்தர்யாமியாய் அமர்ந்திருந்து, ஆங்கு எழுகின்ற எண்ணங்களுக் கெல்லாம் சாக்ஷியாயிருப்பவனைச் சாருமளவு நம் வாழ்வு நல்வாழ்வாகிறது.

7. பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையே யென்று பிறப்பறுத்தே னல்ல
மருந்தினடி யென்மனத்தே வைத்து.

பேசும் பொருளுக்கு இலக்கு இதம் ஆம் பேச்சு இறந்த
மாசு இல் மணியின் மணி வார்த்தை—பேசிப்

பெருந்துறையே என்று பிறப்பு அறுத்தேன் நல்ல
மருந்தின் அடி என் மனத்தே வைத்து.

இலக்கு-இலட்சியம், குறி. இதம்-நன்மை. மாசு இல் மணி-மாசிலாமணி, நிர்தோஷ வஸ்து. மருந்து—அமிர்தம்.

பரமசிவனை மாசிலாமணி அல்லது தோஷரகிதன் எனலாம். அவன் நாதாதீதன். அத்தகைய பெரிய பொருள் என் நெஞ்சில் நீக்கமற நிறைந்துள்ளான். எனக்கு நன்மையே செய்யும் அவனைப் பற்றிப் பேசவேண்டும். பிறவிப் பிணியைப் போக்கும் அமிர்தமாய் இருக்கிறான் அவன்.

தில்லையில் அருளிய

49. திருப்படை ஆட்சி

1. படை. 2. உபாதி. 3. மஹா வாக்கியங்கள். 4. பொருளின் இரண்டு நிலைகள். 5. முக்தி.

படை என்னும் சொல் ஆயுதத்தைக் குறிக்கிறது. ஆயுதம் இல்லாதவன் அரைமனிதன். சேனை என்னும் ஆயுதம் இல்லாத நாடு யாண்டும் அல்லல் படும். ரதம், கஜம், துரகம், பதாதி ஆகிய படை படைத்திருக்கும் நாடு நன்கு காக்கப்பெறவும் முன்னேற்றம் அடையவும் செய்யும்.

1. படை

இறைவனை அடைய விரும்புபவர்க்கு ஆத்ம சாதனங்கள் மிக நல்ல படையாகின்றன. ஆதலால் அவைகள் திருப்படை எனப்படுகின்றன. அவைகளின் ஆட்சி அல்லது அனுபவம் ஓங்குமளவு ஆத்மசாதகன் முன்னேற்றமடைகிறான். புரிதற்குச் சாதனங்கள் பல அமைந்திருப்பது பரமனது அருளின் விளைவாம்.

நமச்சிவாய (1-1) என்னும் அவனுடைய நாமம் முதல்படை. தாயைக் கூவியழைக்கச் சேய்க்கு உரிமையிருப்பதுபோன்று சிவநாமத்தை ஜபிக்க எல்லார்க்கும் உரிமை யுண்டு; ஜபிக்குமளவு சிவகதி வாய்க்கிறது.

உன் அருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே (5-2. 2) என்பது இரண்டாவது படை. அருள் தாகம் ஓங்குதற்கு ஏற்ப ஆத்மசாதகன் விரைந்து மேன்மையுறுகின்ருன்.

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை (8-7) இது மூன்ருவது படை. ராஜயோகமும் பக்தி யோகமும் ஒன்று கூடி உண்டுபண்ணியுள்ள சமாதிநிலை இதுவாம். இதில் ஊன்றியிருப்பவன் புறத்தில் ஜீவனுகத் தென்படுகிருன். அகத்தில் அவன் முற்றிலும் சிவமயம்.

கோயில் சுடுகாடு, கொல்புலித்தோல் நல் ஆடை,
தாயும் இலி, தந்தை இலி, தான் தனியன் காண், ஏடீ!
தாயும் இலி, தந்தை இலி, தான் தனியன்; ஆயிடினும்,
காயில், உலகு அனைத்தும் கல்பொடி, காண் சாழலோ.
(12-3.) இது நான்காவது படை. சிவன் தியாகராஜன். தியாகத்தாலன்றி ஜீவன் சிவசொருபம் ஆக முடியாது. உடலைச் சுடுகாடாகக் கருதவேண்டும். அதன் வாயிலாகப் பெறுகிற சுகம் வெந்து சாம்பலாக வேண்டும். மனிதன் உலகில் வந்தது தனியாக; பின்பு அவன் உலகை விட்டுப் போவதும் தனியாக. ஆதலால் இங்கு இருக்கும் பொழுதே தாயும் இலி, தந்தையும் இலியாய்த் தான் தியாகத்தின் மூலம் தனியன் ஆகவேண்டும். அண்டங்கள் அனைத்தையும் துடைக்கவல்லவன் சிவன். அங்ஙனம் தன் உடல் என்னும் பிண்டத்தைச் சவம்போன்று செய்ய வல்லவன் சிவனுக்கு உரிய நல்ல சாதகன் ஆகிருன்.

யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய், ஆனுல் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே. (5-9. 10.) என்பது ஐந்தாவது படை. பரமனை நாடி அழுகின்றவளவு பொய்யான ஜீவாத்மனுக்கு மெய்யான பரபோதம் வளர்கிறது. மற்று, அழுகையில் இரண்டு விதம் உண்டு. உலக இன்பத்தை நாடி அழுவது

பொருந்தாது. அது பிறவிப் பிணியைப் பெருக்குகிறது. பரமனை நாடி அழுபவர்கள் பாக்கியவான்கள். அத்தகைய அழுகையின் வாயிலாகத் தூய்மையடையவும் பரமனை யணுகவும் அவர்களுக்குச் சாத்தியமாகிறது.

அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ, இன்று ஓர் இடையூறு எனக் குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே, நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாய கமே. (33-7.) இது ஆருவது படை. உறுப்புக்கள் உட லில் ஒன்றுபட்டிருப்பதுபோன்று ஜீவாத்மன் பரமாத் மனில் ஒன்றுபடுகிருன். அப்பொழுது அவன் வாயிலாக நிகழ்வதெல்லாம் சிவன் செயல். பிழையாகத் தென்படு வதிலும் நலனே நிறைந்திருக்கும்.

உள்ளம் தாள் நின்று உச்சியளவு நெஞ்சாய் உரு காதால், உடம்பு எல்லாம் கண்ணாய் அண்ணா வெள் ளம் தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம் கண் இணையும் மரமாம் தீவினையினேற்கே. (5-3. 1.) என்பது ஏழாவது படை. இது மஹாபாவத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந் நிலை வாய்க்கப்பெற்றவர் சிவமயம் ஆவது திண்ணம்.

வான் கெட்டு மாருதம் மாய்ந்து அழல் நீர் மண் கெடினும் தான் கெட்டல் இன்றிச் சலிப்பு அறியாத் தன்மையனுக்கு ஊன் கெட்டு உயிர் கெட்டு உணர்வு கெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ. (11-18.) இது எட்டா வது படை. சதாசிவம் அல்லது சிதாகாசம் யாண்டும் தன் மயமாயிருக்கிறது. அதன் மீது ஜகத்தும் ஜீவனும் தோன்றவும் ஒடுங்கவும் செய்கின்றன. முற்றிலும் பரி பக்குவம் அடைந்துள்ள ஜீவாத்மன் அறியாமையினுல் தன்மீது வருவித்துக்கொண்ட ஜீவ உபாதிகளையெல் லாம் களைந்துவிட்டுத் தனது நிஜ சொருபமாகிய சிதா

காசத்தில் சேருகிறன். இதுவே மீண்டும் வாராவழி யாகும். கட ஆகாசம் மஹா ஆகாசத்தில் ஒன்றுபடுவ தற்கு ஒப்பானது இது. அஷ்ட அஸ்தரங்களுள் இது பிரம்மாஸ்தரம். இதன் பிரயோகத்தால் நதி கடலில் ஒடுங்குவதுபோன்று ஜீவாத்மன் பரமாத்மாவில் ஒன்று படுகிறன். அத்வைத ஸித்தி என்பது இதுவே.

இந்த அஷ்ட அஸ்தரங்கள் அடங்கிய திருப்படை யாட்சி ஓங்குதற்கு ஏற்ப சிவபோதம் ஓங்குகிறது.

2. உபாதி

ஜீவ உபாதி ஒழிதல்

ஏதேனும் ஒரு பொருள் தாற்காலிகமாக எடுத்துக் கொள்ளும் வியக்தி, அல்லது வடிவம், அல்லது நிலைக்கு உபாதி என்று பெயர். சான்று ஒன்றின் மூலம் இக்கோட் பாட்டை விளக்குவோம். நீர் என்பது ஒரு வஸ்து; பஞ்ச பூதங்களில் ஒன்று. அது கடல் நீர், நிலத்து நீர், குளத்து நீர், அகழி நீர், கிணற்று நீர், ஆற்று நீர், சேற்று நீர், மழை நீர், ஓடை நீர், அருவி நீர்—இப்படியெல்லாம் பெயர் எடுக்கிறது. இந்நிலைகளிலெல்லாம் அது இளகி திரவ பதார்த்தமாக இருக்கிறது. பின்பு அது காற்றுப் போன்று இருப்பதும் உண்டு. நீர் ஆவி, நிறமில்லாத ஆவி, வெண்மேகம், செம்மேகம், கார்மேகம், மஞ்சு, மூடு பனி, நீர்ப்பனி ஆகிய பல வடிவங்களில் அப்பொழுது அது இருக்கிறது. மேலும் அது குளிரால் கடின பதார்த்த மாவதும் உண்டு. உறைபனி, கெண்டைப்பனி, ஆலங் கட்டி, ஐஸ் கட்டி என்ற நிலைகளில் அப்பொழுது அது இருக்கிறது. இத்தனைவித வடிவங்களும் நிலைகளும் நீரி னுடைய உபாதிகளாம். இந்த வேறுபாடுகளுக்கிடையில் நீர் ஆனது தனது நீர்மையை இழப்பதில்லை. கங்கை ஜலம் என்பது நீரினுடைய ஒரு மேலான உபாதியாகும். சாக்கடை ஜலம் அல்லது சிறுநீர் என்பது அதனுடைய கீழான உபாதியாகும். கீழ்நிலையை முன்னிட்டு அந்த

வடிவெடுத்திருக்கும் நீரை இழிவானது எனலாகாது. ஏனென்றால் அதன் கீழ் நிலையும் தேவையானதே.

நீரின் உபாதிக்கு நிகரானது ஜீவாத்மாவின் உபாதி. ஜீவன் ஆனவன் கல் ஆய், புல் ஆய், புழு ஆய், பூச்சி ஆய், பாம்பு ஆய், பறவை ஆய், விலங்கு ஆய், மனிதன் ஆய், முனிவன் ஆய், பக்தன் ஆய், ஞானி ஆய்க் கடைசியில் பரம்பொருளில் தனது ஜீவ உபாதியை ஒழித்துத் தள்ளுகிறான். அவனுக்கு ஓர் உபாதி உருவெடுக்கும் போது அதற்கு முந்திய உபாதி ஒழிகிறது. நீர் ஆனது ஏககாலத்தில் உறைபனியாகவும் ஆவியாகவும் இருப்பதில்லை. ஜீவாத்மா ஒரே வேளையில் கல் ஆகவும் புல் ஆகவும் இருப்பதில்லை. உபாதியானது மாறியமையும் தன்மையுடையது என்பதை நாள்தோறும் கனவு நிலை நிரூபிக்கிறது. உபாதி நிலையற்றது என்பதை சுழுத்தி அல்லது கனவற்ற உறக்கம் உறுதிப்படுத்துகிறது. அயர்ந்த உறக்கத்தில் மனிதன், விலங்கு, பறவை ஆகிய ஜீவாத்மாக்கள் அனைத்தும் ஒரே அபேத நிலையில் இருக்கின்றன. பின்பு உறக்கமோ தமோ குணத்தின் விளைவு. அது அக்ஞானத்தில் இடம்பெற்றிருக்கிறது. நனவுக்கு வந்தவுடனே ஜீவபேதம் என்னும் உபாதியும் தோற்றத்துக்கு வருகிறது.

நிர்விகல்ப சமாதி என்னும் அதீத நிலை முக்குணங்களுக்கு அப்பாற்பட்டது. கால தேச வர்த்தமானம் ஆங்கு அடிபட்டுப்போகின்றன. மனது என்னும் மாயை மாண்டு ஒழிகிறது. கடலை ஆழம் பார்க்கப்போன உப்புப் பொம்மை தனது வடிவம் என்னும் உபாதியை இழக்கிறது; ஆனால் அதன் நிஜசொரூபம் ஆகிய அகண்டாகாரம் அதற்குச் சொந்தமாகிறது. கடலுக்குள் விழுகிற மழை நீர்த்துளி தனது வடிவம் என்னும் உபாதியை இழக்கிறது; ஆனால் நீர் என்னும் அதன் நிஜநிலை அகண்டாகாரமாகிறது. அங்ஙனம் சமாதி நிலையில் பரம்

பொருளில் கலக்கின்ற ஜீவன் பரம்பொருள் ஆகின்ருன். இதுவே சிதம்பர ரகசியம். ஆங்குச் சென்ற ஜீவன் திரும்பி வருவதில்லை. அதாவது அவனுடைய உபாதி அழிந்து பட்டுப்போகிறது. சுத்த சைதன்யம் அல்லது அகண்ட சச்சிதானந்த சிவமே யாண்டுமுள்ள மெய்ப் பொருள். உபாதியை ஒழிக்கிற ஜீவன் சிவம் ஆகிருன். இதுவே அத்துவைத சித்தி என்றும் வீடுபேறு என்றும் இயம்பப்பெறுகிறது.

3. மஹா வாக்கியங்கள்

முடிவான உண்மையை ஒரு வாக்கியத்தில் விளக்குங்கால் அந்த வாக்கியத்துக்கு மஹா வாக்கியம் என்று பெயர். நான்கு வேதங்களில் நான்கு மஹா வாக்கியங்கள் இருக்கின்றன. அவைகளை ஒவ்வொன்ருக ஆராய்வோம்.

பிரக்ஞானம் பிரம்மம் प्रज्ञानं ब्रह्म என்பது ஒரு மஹா வாக்கியம். பிரக்ஞானம் என்னும் பதம் பேரறிவு, வாலறிவு, தூய அறிவு, சைதன்யம், சேதனம், சித், பேருணர்வு இப்படியெல்லாம் பொருள்படுகிறது. நான் இருக்கிறேன் என்னும் உணர்வு ஒரு கல்லினிடத்து இல்லை. அந்த உணர்வு ஒரு மனிதனிடத்து இருக்கிறது. இருக்கிறேன் என்னும் உணர்வு அயர்ந்த உறக்கத்தில் மறைந்திருக்கிறது. சொப்பனத்தில் சிறிது விழிப்படைந்திருக்கிறது. நனவில் அது இன்னும் தெளிவடைந்திருக்கிறது. ஒழுக்கமான வாழ்க்கை வாழுதற்கு ஏற்பப் பிரக்ஞானம் மேலும் தெளிவடைகிறது. தியானப்பயிற்சியில் பிரக்ஞை அல்லது பிரக்ஞானம் மேலோங்குகிறது. ஸமாதி நிலையில் திரண்ட பிரக்ஞையாக அது திகழ்கிறது. இந்த பிரக்ஞானமே மெய்ப்பொருள். இதற்குப் பிறப்பு இறப்பு வளர்ச்சி தேய்வு கிடையா. மனிதனிடத்து அது மாறுபாடு அடைவது போன்று தென்படுவது வெறும் அந்தக்கரணத்தின் செயலாம். ஆகாசத்துக்

குப் போக்கோ வரவோ புணர்வோ இல்லை. கட ஆகாசம் போவது, வருவது, பெரியது ஆவது, சிறியது ஆவது போன்று தென்பட்டாலும் உண்மையில் ஆகாசத்தில் ஒரு விகாரமும் ஆவதில்லை. அங்ஙனம் அகிலாண்டங்களையும் தன்னகத்துத் தாங்கியுள்ள பிரக்ஞானம்யாண்டும் தன்மயமாயிருக்கிறது. இந்த பிரக்ஞானமே சித் ஆகாசம், சிதம்பரம், பிரம்மம் எனப்படுகிறது. ஆகப் பேரறிவுப் பெருவெளியே மெய்ப்பொருளாம். இவ்வுண்மையை இந்த மஹா வாக்கியம் தெளிவுறுத்துகிறது.

அயம் ஆத்மா பிரம்மம் अयं आत्मा ब्रह्म என்பது இன்னொரு மஹா வாக்கியம். மனிதனுடைய சொரூபத்தை ஆராய்ந்து பார்க்குமிடத்து அவன் அமைப்பில் அழிந்துபட்டுப்போம் பிரகிருதியின் கூறுகளும் அழியாத ஆத்ம தத்துவமும் சேர்ந்தே இருக்கின்றன. இவ் இரண்டையும் பாகுபடுத்த மனிதனுக்குத் தெரிவதில்லை. தன் அமைப்பில் பிரக்ஞை அல்லது பிரக்ஞானமாயிருக்கிற ஆத்மா நித்திய வஸ்து. ஜடமயமாயிருக்கிற உடல் உள்ளம் ஆகியவைகள் அநித்தியமானவைகள். அனந்தங்கோடி அலைகளாக இருப்பவைகள் கடலேயொழியக் கடலுக்கு அன்னியமானவைகளல்ல. அங்ஙனம் அனந்தங்கோடி ஜீவாத்மாக்களாக இருப்பவைகள் பரமாத்மாவின் தோற்றங்களேயாம். இது தண்ணீர் என்று கடலைச் சொல்லலாம். இது தண்ணீர் என்று ஒரு துளி ஜலத்தைச் சொல்லலாம். அங்ஙனம் அயம் ஆத்மா பிரம்மம் என்று ஜீவாத்மனைப் பற்றிய உண்மையை உரைப்பது மஹா வாக்கியம்.

தத் த்வம் அஸி तत् त्वं असि என்பது ஒரு மஹா வாக்கியம். அதுவாக நீ இருக்கிறாய் என்பது இதன் பொருள். எதை நீ நாடுகிறாயோ அதுவாக நீ இருக்கிறாய் என்று இதை மேலும் விரிக்கலாம். உயிர்கள்

அனைத்தும் நாடுவது எது என்பதை ஆராய்ந்து பார்ப்போம். மரணத்தைத் தவிர்க்கவும் வாழ்வை நிலைநாட்டவும் அவை யாவும் முயன்று வருகின்றன. உயிரோடு இருப்பது ஸத்; அழிந்துபட்டுப்போவது அஸத். சிற்றுயிர் பேருயிர் ஆகிய அனைத்தும் நாடுவது ஸத். அடுத்தபடியாக வாழ்வுக்குப் பயன்படுகிற அறிவை வளர்க்க அவை யாவும் முயன்று வருகின்றன. உறுதியான அறிவு சித் எனப்படுகிறது. மூன்றாவதாக எல்லா உயிர்களும் பெற விரும்புவது இன்பம். அதற்கு ஆனந்தம் என்பது மற்றொருபெயர். ஆக ஜீவகோடிகள் ஸத்-சித்-ஆனந்தத்தைத் தேடித் திரிகின்றன. ஸத் சித் ஆனந்தமாயிருப்பது சிவன் அல்லது ஈசுவரன். நீ நாடுகிற ஈசுவரன் உன்னிடத்து இருக்கிறான். முடிவில் நீ அவனிடத்து ஒன்றுபடுகிறாய். இதுவே இந்த மஹா வாக்கியத்தின் கருத்து.

அஹம் பிரம்ம அஸ்மி अहं ब्रह्म अस्मि என்பது ஒரு மஹா வாக்கியம். நான் பிரம்மமாய் இருக்கிறேன் என்பது இதன் பொருள். நகையைத் தங்கம் என்று சொல்லுவதுண்டு. அழுக்குப் படிந்த நீரையும் நீர் என்று சொல்லலாம். சிறு நீராயிருக்கும்போதும் நீரின் நீர்மை போவதில்லை. அங்ஙனம் ஜீவாத்மாவாக விகாரப்பட்டிருக்கிறபொழுதும் சொரூபத்தில் அது பிரம்மமே. பரிணமித்துக் கொண்டிருக்கிற ஜீவனை இது மரம், இது புழு, இது பறவை, இது விலங்கு, இவன் மனிதன் என்று இயம்புவது பொருந்தும். உடல் உணர்வைக் களைந்துவிட்டு உயர்நிலைக்குப் போனவனை ஆத்மா என்றோ, சிவம் என்றோ, பிரம்மம் என்றோ உரைப்பது முறை. சாதனத்தின் கடைசிப்படிக்கு வந்தவன் அஹம் பிரம்மாஸ்மி நான் பிரம்மம் என்னும் போதத்தில் ஊறியிருப்பது அவசியமாகிறது. கடலை எட்டிய நதி தானே கடல் ஆவது போன்று பிரம்மத்தை அனுபூதியில் அறிகிற ஆத்மாவானவன் கற்பிதமாய் வந்துள்ள ஜீவன் அல்லன்.

அவன் பிரம்மமே. மஹாவாக்கியம் இந்த உண்மையை நிரூபிக்கிறது.

4. பொருளின் இரண்டு நிலைகள்

பூமியில் வசித்திருக்கிற மனிதன் பூமியைவிட்டு வேறு எங்கும் போகமுடியாது. நீர் இல்லாத பாலை வனம், நீர் நிறைந்த ஆற்றங்கரை, மலையுச்சியில் உறை பனிப் பிரதேசம், வெப்பம் நிறைந்த மத்தியரேகைப் பிரதேசம், கடல் சூழ்ந்த தீவு, பகல் ஆறு மாதம் இரவு ஆறு மாதம் படைத்துள்ள வடதுருவம் ஆகிய எங்கு வசித்திருந்தாலும் மனிதன் பூமிக்கு உரியவன் ஆகிறான். அங்ஙனம் ஜீவாத்மாக்கள் அனைத்தும் யாண்டும் இறைவன் சான்னித்தியத்திலேயே இருந்துவருகின்றன. நரக வாசம், சொர்க்கவாசம், பந்தபாசம், முக்தி ஆகிய அனைத்தும் இறைவனுடைய சான்னித்தியத்திலேயே இருக்கின்றன.

இனி, இறைவனுடைய சான்னித்தியத்தில் இரண்டு நிலைகள் இருக்கின்றன. ஜகத், ஜீவன், பரம் ஆகிய முப் பொருள் உண்மையோடு கூடிய நிலை வ்யாவஹாரிகஸத் எனப்படுகிறது. ஆங்குக் கால தேச வர்த்தமானத்துக்கு இடமுண்டு. முக்குணங்களின் கூறுகள் இருக்கின்றன. ஈசனுடைய பஞ்ச கிருத்தியங்கள் அதில் நிகழ்கின்றன. தில்லை நடராஜாவின் சான்னித்தியம் இதற்கு எடுத்துக் காட்டு ஆகும். இங்கு ஜீவாத்மன் அடைகிற உயர்ந்த ஞான அனுபூதிக்கு சவிகல்ப சமாதி என்றும், பாவ சமாதி என்றும், ஸோபாதிக சமாதி என்றும், சம்பிரக்ஞாத சமாதி என்றும் பெயர்கள் வந்துள்ளன.

பாரமார்த்திக ஸத் என்னும் நிலையில் உள்ள பர வஸ்துவுக்கு நிர்க்குண பிரம்மம், சிதாகாசம், சிதம்பர ரகசியம், நிருபாதிக ஸத், சுத்த சிவம் இப்படியெல்லாம் பெயர்கள் வந்துள்ளன,

பரவஸ்து ஏககாலத்தில் சகுணபிரம்மமாகவும், நிர்குண பிரம்மமாகவும் இருக்கிறது. மாயாசஹிதன், மாயாரஹிதன்; ஈசுவரன், பிரம்மம்—இந்த இரண்டு நிலைகளை இப்படி இயம்புவதும் உண்டு. ஈசுவரன் மாயையை ஆளுகிருன். ஜீவாத்மன் மாயைக்கு அடிமையாயிருக்கிருன். காலதேசவர்த்தமானம் என்பன ஈசுவரன் தோற்றுவித்துள்ள அவனுடைய மகிமைகளாம். ஜீவாத்மனே காலதேச வர்த்தமானத்துக்கு அடிமை. வர்த்தமானம் என்பது காரணகாரியமாயிருக்கிற கர்மம். அது படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என ஐந்து வகைப்படும். இந்தப் பஞ்ச கிருத்தியங்களும் ஈசனுக்கு வெறும் விளையாட்டுக்களாம்; வெறும் கூத்து. ஆனல் ஜீவாத்மனே இச்செயல்களில் கட்டுண்டு கிடக்கிருன்.

இனி, பிரம்மம் வேறு, ஈசுவரன் வேறு அன்று. இரண்டும் அத்துவைதம். வ்யவஹாரிக ஸத் என்னும் நிலையில் இருப்பவன் ஈசுவரன். ஜகத்தும் ஜீவனும் அவன் சொரூபத்தில் இடம் பெறுகின்றன. துடைத்தல் அல்லது ஸம்ஹாரம் அவனிடத்து நிகழும்பொழுது ஜகத்தும் ஜீவனும் அவ்யக்தம் அல்லது தோன்ருநிலையெய்துகின்றன. அது பிரளயம் எனப்படுகிறது. ஜீவாத்மனுடைய சுஷுப்தி அவஸ்தை போன்றது பிரளயம். இரண்டுக்கு மிடையில் ஒரே ஒரு வித்தியாசம் உளது. சுஷுப்தி அவஸ்தையில் ஜீவாத்மாவின் ஸ்வபோதம் சுருங்கியிருக்கிறது. ஈசுவரனுடைய ஸ்வபோதமோ யாண்டும் இருந்தபடி இருக்கிறது. பஞ்ச கிருத்தியம் ஈசுவரனைப் பாதிப்பதில்லை. ஜீவாத்மனே பஞ்ச கிருத்தியங்களில் பந்தப்பட்டிருக்கிருன். ஆக, வ்யாவஹாரிக ஸத்தில் ஸ்வதந்தரத்தோடு இருப்பவன் ஈசுவரன்; கட்டுண்டு இருப்பவன் ஜீவாத்மன்.

யாண்டும் பாரமார்த்திக ஸத் நிலையில் இருப்பது நிர்குண பிரம்மம் அல்லது சிதம்பரம். நிர்குண பிரம்மத்

தில் இரண்டறச் சேர்வதே ஜீவாத்மாவின் முடிவான குறிக்கோள் ஆகிறது.

5. முக்தி

முக்தி, மோக்ஷம், பிரம்ம நிர்வாணம், கைவல்யம், வீடுபேறு ஆகிய பதங்கள் யாவும் ஒரே கருத்தைக் குறிக்கின்றன. ஜீவாத்மன் ஜீவ வியக்தி அல்லது ஜீவ உபாதியினின்று விடுதலையடைவது முக்தி யெனப்படுகிறது. ஜனன மரண சொரூபமாயிருக்கிற ஸம்ஸார ஸாகரத்தினின்று ஜீவாத்மன் முக்தியடைகிறான். வினைத்தளை அல்லது கர்ம பந்தத்தினின்று அவன் விடுபடுகிறான். உலக இன்ப துன்பங்களினின்று அவன் உய்வு அடைகிறான். 'யான் எனது' என்னும் செருக்கை அவன் ஒழிக்கிறான். தனது நிஜசொரூபத்தை மூடியிருக்கிற அக்ஞான இருளை அவன் அகற்றுகிறான். இந்நிகழ்ச்சிகள் யாவும் முக்தியில் அடங்கியிருக்கின்றன.

பதவி முக்தி, கிரமமுக்தி, விதேக முக்தி, ஜீவன் முக்தி, கைவல்ய முக்தி—இங்ஙனம் முக்தியானது பாகுபடுத்தப்படுவதுண்டு. மந்த அதிகாரி அடைவது பதவி முக்தியாகத் துவங்கிக் கிரம முக்தியாகப் பூர்த்தியாகிறது. அல்லல் நிறைந்த சூழ்நிலையினின்று விடுதலையடைந்து இன்பம் நிறைந்த சூழ்நிலையடைவது சாலோக்கியம் எனப்படுகிறது. கடவுளின் உலகுக்கு உரியவன் என இது பொருள்படுகிறது. ஸத்தியலோகம், சிவலோகம், கைலாசம், வைகுண்டம், பரமபதம் இப்படியெல்லாம் இது இயம்பப்பெறுகிறது. அந்த உலகில் ஈசுவரனுக்கு அருகில் வரப்பெறுகிறவன் சாமீப்பியம் என்னும் பதவியைப் பெறுகிறான். ஈசுவரனையே சதா எண்ணியிருப்பதன் விளைவாக அவன் சாரூப்பியம் என்ற மேன்மையுறுகிறான். சிவனை எண்ணுகிறவன் சிவரூபம் பெறுகிறான். விஷ்ணுவை எண்ணுபவன் விஷ்ணுரூபம் பெறுகிறான். பின்பு கல்ப முடிவில் பிரம்மதேவன் கிரம

முக்தியடையும்பொழுது கைலாச வாசிகளும் வைகுண்ட வாசிகளும் தங்களுடைய உபாதிகளைக் களைந்துவிட்டு அகண்ட சச்சிதானந்தத்தில் சாயுஜ்யமடைகின்றனர். துவைத மதவாதிகள் எண்ணுவதுபோன்று ஜீவஉபாதி சாசுவதமாக இருப்பதில்லை. சுஷுப்தி அவஸ்தையில் நாள்தோறும் அழிகிற ஜீவ உபாதி ஆத்மஞானம் பெற்ற வனுக்குக் கல்ப முடிவில் எங்கே எஞ்சியிருக்கப் போகிறது!

தீவிர அதிகாரிக்குப் பதவி முக்தியும் கிரம முக்தி யும் தேவையில்லை. அவன் நேரே ஜீவன் முக்திக்குப் பக்குவம் அடைகிறான். அவன் உடலை உகுக்கும் பாங்கை முன்னிட்டு அது விதேகமுக்தியென்றோ, கைவல்ய முக்தி யென்றோ, பிரம்ம நிர்வாணம் என்றோ இயம்பப் பெறு கிறது. வ்யாவஹாரிக ஸத்தைத் தாண்டிய அதீத நிலை அதுவாம்.

யாண்டும் வ்யாவஹாரிக ஸத்துக்கு அதிபதியா யிருக்கிற ஈசுவரன் அதற்கு அடிமையாயிருக்கும் ஜீவாத் மனுக்கு அதீத நிலைக்குப் போக அனுமதி தருகின்றானா என்னும் ஆக்ஷேபம் துவைத மதவாதிகளிடமிருந்து வரு கிறது. ஆம். தீவிர அதிகாரி ஒருவனுக்கு ஈசுவரன் அருள் சுரந்து அதீத நிலையை நல்குகிறான். நல்லாசிரியன் ஒருவன் தனது கல்வி ஸ்தாபனத்தில் பயிற்சி பெறுகிற தலைமாணாக்கன் அதைவிட மேலான நிலைக்குப் போக மனமுவந்து துணைபுரிகிறான். ஈசுவரனுடைய அருள் அதி லும் மிக்கது. ஜீவாத்மாக்களைப் பக்குவப்படுத்துதற்கு அவன் வ்யாவகாரிக ஸத் சொரூபமாயிருக்கிறான். சாமா னியமான ஜீவர்களைப் படிப்படியாகக் கிரம முக்தியில் அவன் கொண்டு சேர்க்கிறான். தீவிர அதிகாரிகளுக்கு முதலில் சவிகல்ப சமாதியையும் பிறகு நிர்விகல்ப சமாதி யையும் அனுக்கிரகித்து அதீதத்தில் அத்வைத சித்தி யில் கொண்டு சேர்க்கிறான். இப்படி முக்தி கொடுப்பது சிவன் செயல்.

பன்னிருசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. கண்க ளிரண்டு மவன்கழல்
கண்டு களிப்பன வாகாதே
காரிகை யார்கடம் வாழ்விலென்
வாழ்வு கடைப்படு மாகாதே
மண்களில் வந்து பிறந்திடு
மாறு மறந்திடு மாகாதே
மாலறி யாமலர்ப் பாத
மிரண்டும் வணங்குது மாகாதே
பண்களி கூர்தரு பாடலொ
டாடல் பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை
யாட்சிகள் பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம்
வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன்
வந்து வெளிப்படு மாயிடிலே.

கண்கள் இரண்டும் அவன் கழல்
கண்டு களிப்பன ஆகாதே
காரிகையார்கள் தம் வாழ்வில்
என் வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடும் ஆறு
மறந்திடும் ஆகாதே
மால் அறியா மலர்ப் பாதம்
இரண்டும் வணங்குதும் ஆகாதே.

உபநிஷத் மந்த்ரம்—119.

नान्तःप्रज्ञं न बहिः प्रज्ञं नोभयतःप्रज्ञं न प्रज्ञानघनं न प्रज्ञं नाप्रज्ञम् ।
अदृष्टमव्यवहार्यमग्राह्यमलक्षणमचिन्त्य मव्यपदेश्यमेकात्मप्रत्ययसारं
प्रपञ्चोपशमं शान्तं शिवमद्वैतं चतुर्थं मन्यन्ते स आत्मा स विज्ञेयः ॥

ந அந்த: ப்ரஜ்ஞம் ந பஹி: ப்ரஜ்ஞம் ந உபயத: ப்ரஜ்ஞம் ந ப்ரஜ்ஞானகனம் ந ப்ரஜ்ஞம் ந அப்ரஜ்ஞம் । அத்ருஷ்டம் அவ்யவ ஹார்யம் அக்ராஹ்யம் அலக்ஷணம் அசிந்த்யம் அவ்யப

பண் களி கூர் தரு பாடலொடு
ஆட்டல் பயின்றிடும் ஆகாதே
பாண்டி நல்நாடு உடையான்
படை ஆட்சிகள் பாடுதும் ஆகாதே
விண் களி கூர்வது ஓர் வேதகம்
வந்து வெளிப்படும் ஆகாதே
மீன் வலை வீசிய கானவன்
வந்து வெளிப்படும் ஆயிடிலே.

மீன் வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயி [டிலே:

வேடனாக வந்து வலைவீசி மீன் பிடித்தல் என்னும் திருவிளையாடலை நடாத்திய சிவன் என்னைத் தன்மயம் ஆக்கிக்கொள்வானாகில் அதன் விளைவு வருமாறு:

கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன [ஆகாதே:

கண்கள் மட்டுமல்லாது, பிரபஞ்சத்தை நுகர்தற்கென்றே அமைந்துள்ள பஞ்சேந்திரியங்கள் பரபோதத்தில் செயலற்றுப் போகின்றன.

தூய மனம் படைத்திருக்கிறபொழுது தெய்வ தர்சனம் ஊனக் கண்கள வாயிலாக பக்தனுக்கு நிகழ்வது சாத்தியம். மாணிக்கவாசகருக்கு அங்ஙனம் நிகழ்ந்தது. மற்று நிர்விகல்ப ஸமாதியிலோ மனது மாய்கிறது. மாயப்பிரபஞ்சம் மறைகிறது. ஜீவபோதம் ஒழிகிறது. ஆதலால் உடல் உணர்ச்சிக்கு ஆங்கு இடமில்லை. உலகப் பொருள்களை நுகர்தற்கென்றே வாய்த்துள்ள பொறிகள் ஐந்தும் செயலற்றுப் போய்விடுகின்றன. அவைகளுள் கண்கள் சிறப்பாக இங்குக் குறிக்கப்பட்டுள்ளன.

தேச்யம் ஏகாத்மப்ரத்யயஸாரம் ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்தம் மன்யந்தே ஸ ஆத்மா ஸ விக்ஞேய: ॥ (முண்டகோபநிஷதம்—7)

न अन्तः प्रज्ञम् ந அந்த: ப்ரஞம் உள்ளத்தினுள் உணர்வதன்று न बहिः प्रज्ञम् ந பஹி: ப்ரஞம் புறத்தில் உணர்வதன்று

காரிகையார்கள் தம் வாழ்வில் என் வாழ்வு கடைப்படும் [ஆகாதே:

காரிகையார்கள் - ஜீவாத்மாக்களைப் பெண்பாலர்களாகக் கருதுவது மரபு. கடைப்படும் ஆகாதே-இழிவடைவது இல்லை.

அக்ஞானத்தில் உழலும் ஜீவர்கள் பிரபஞ்ச வாழ்வு என்னும் கீழ்மையில் திருப்தியடைகின்றனர். பரபோதம் அடைந்தவர்க்குத் தாங்கள் இடையில் கீழ்மையடைந்திருந்ததின் ஞாபகம் வருவதில்லை.

அம்பிகையின் திருவருளால் தோன்றியுள்ள ஜீவர்கள் எல்லாரும் அம்பிகையின் சொரூபமாகவே கருதப்படுகின்றனர். ஆதலால்தான் அவர்கள் ஈண்டுக் காரிகையாளர்கள் என அழைக்கப்படுகின்றனர். எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் என்கின்றார் அண்ணல். ஜீவபோதமும் பிறவியும் இணைபிரியாதவைகள். பல ஜன்மாந்தரங்களில் படைத்திருந்த ஜீவ போதமானது பரபோதத்தில் மாயமாய் மறைந்து போகின்றது. அவ்வுண்மையை மாணிக்கவாசகர் ஈண்டு எடுத்து மொழிகின்றார்.

பிருந்தாவன வைஷ்ணவ சம்பிரதாயப்படி ஜீவர்கள் அனைவரையும் ராதே என்று அழைப்பது வழக்கம். கிருஷ்ணன் ஒருவனே புருஷன். ஜீவர்கள் எல்லாரும் பிரகிருதி சொரூபமாகின்றனர். பரமாத்மாவோடு பேரிணக்கம் வைப்பதற்கு ரிஷிபுங்கவர்களே கோபிமார்களாக அவதரித்து வந்தார்கள் என்னும் கொள்கையொன்று உண்டு. கிருஷ்ணனோடு தொடர்பு வைத்ததற்கு ஏற்ப அவர்கள் அருள் துறையில் முன்னேறினர்கள். ராஸ லீலை என்னும் விளையாட்டில் அவர்களுடைய

न उभयतः प्रज्ञम् ந உபயத: ப்ரக்ஞம் அகம் புறம் ஆகிய இரண்டுக்கும் இடையில் உணரப்படுவதன்று न प्रज्ञानघनम् ந ப்ரஞானகனம் உணர்வுத் தொகையன்று न प्रज्ञम् ந ப்ரஞம் சேகரித்த உணர்வன்று न अप्रज्ञम् ந அப்ரக்ஞம் மறைந்த உணர்வன்று अदृष्टम् அத்ருஷ்டம் பார்க்கப்படாதது अव्यवहार्यम्

முன்னேற்றம் பூரண நிலையை எட்டியது. ஒவ்வொரு கோபியும் ஒரு கிருஷ்ணன் ஆனார்கள். தான் ஒரு ஜீவன் என்ற உபாதி அவர்களிடமிருந்து போய்விட்டது. ஜீவாத்மாக்கள் எல்லார்க்கும் இதுதான் குறிக்கோள் சாதனம் எதுவாயினும் அதன் வாயிலாகப் பூரணத்தை எட்டுதல் வேண்டும்.

மண்களில் வந்து பிறந்திடும் ஆறு மறந்திடும் ஆகாதே:

பிறந்திடும் ஆறு-பிறப்பெடுக்கும் வண்ணம்.

மீண்டும் மண்ணுலகில் வந்து பிறப்பெடுக்குமாறு அஞ்ஞான இருள் சூழ்வதில்லை.

வினைப்பயனுக்கு ஏற்ற வெவ்வேறு உலகங்களில் ஜீவன் வந்து பிறக்கிறான். அதன்மூலம் அவனது ஆசை நிறைவேறுகிறது. பின்பு புதிய ஆசைகளும் அவன் உள்ளத்தில் உருவெடுக்கின்றன. அவைகளை நிறை வேற்றுதற்கு ஏற்ற பிறவிகள் மேலும் வந்து வாய்க்கின் றன. தான் சச்சிதானந்த சொரூபம் என்பதை மறந் ததே அதற்குக் காரணமாயிற்று.

இக்கோட்பாட்டைப் புராணக்கதையொன்று தெளி வுறுத்துகிறது. வராக அவதாரம் எடுத்து வந்த மஹா விஷ்ணு அந்த வடிவத்திலேயே உலகில் கொஞ்ச காலம் வாழ்ந்திருக்க விரும்பினார். நாளடைவில் அவ்வாழ்வில் அவருக்குப் பற்றுதல் வந்துவிட்டது. வைகுண்ட வாசி பன்றியாக உலகில் உழன்று கிடந்தது தேவர்களுக்கு வெட்ககரமாயிருந்தது. அவர்களுடைய வேண்டுதலுக்கு விஷ்ணு செவி சாய்க்கவில்லை. பன்றியாக தான் குட்டி களுடன் இன்புற்றிருந்ததற்கு நிகர் எங்கு யாது உளது என்றார் பன்றியான பரமானந்தம். தேவர்கள் சிவபெரு

அவ்யவஹார்யம் எதனோடும் இணைக்கப்படாதது अग्राह्यम् அக்ராஹ்யம் மனதில் கிரகிக்கப்படாதது अलक्षणम् அலக்ஷ ணம் கூறு இன்னதென்று இயம்பப்படாதது अचिन्त्यम् அசிந்த்யம் நினைவுக்கெட்டாதது अव्यपदेश्यम् அவ்யபதேச்

மாலிடம் போய் முறையிட்டனர். கைலாசபதி நேரில் வந்து வைகுண்ட வாசிக்கு அறிவுரை கூறினர். ஆனல் வராகன் ஆனவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. சிவனர் திரிசூலத்தால் திருமாலை ஒரு குத்துக் குத்தினர். அவருக்கு அக்கணமே ஞானேதயம் உண்டாயிற்று. தாம் பூண்டிருந்த மயக்கத்தைத் துறந்துவிட்டுத் திருமால் யதாஸ்தானம் ஏகினர். ஜீவர்கள் அனைவரும் இங்ஙனம் மயங்கி இருக்கின்றனர். சிவஞானம் வந்ததும் அவர்கள் சிவசொருபம் அடைகின்றனர்.

கலை ஞானங்களை ஜீவர்கள் கற்கவும் மறக்கவும் செய்கின்றனர். ஆனல் இறுதியில் தங்களுக்கு வாய்க்கின்ற பரஞானத்தை அவர்கள் ஒருபொழுதும் மறப்பதில்லை. ஆதலால் மண்ணுலகில் அவர்கள் மறுபடியும் வந்து பிறப்பதில்லை.

மால் அறியா மலர்ப்பாதம் இரண்டும் வணங்குதும்
[ஆகாதே:

ஜீவ உபாதியொழிந்தவிடத்து வழிபடுவோன், வழிபடுபொருள் என்னும் வேற்றுமையில்லை.

கண்ணப்ப நாயனருக்கு வாய்த்தது பராபக்தி அல்லது பிரேமை பக்தி. அந்நிலையில் தெய்வமும் தொண்டனும் அபேதநிலை எய்துகின்றனர். சிவனர் மலர்ப் பாதத்தைக் கண்ணப்பனர் வணங்குதற்கு மாருகத் தமது செருப்புக்காலை உயர்த்தி சிவனர் கண்ணுக்கு அருகில் வைத்தார். பரமனுக்கும் அச்செயல் பரம திருப்தியை உண்டுபண்ணிற்று. சமாதி நிலையில் பசு பதி என்ற பேதமின்மையால் இத்தகைய நிகழ்ச்சியும் நேர்வதில்லை.

யம் விளக்க முடியாதது एकात्म प्रत्यय सारम् ஏகாத்ம ப்ரத்யய ஸாரம் நனவு கனவு உறக்கத்துக்குப் பொதுவாயுள்ள உணர்வின் தெளிவு प्रपञ्चोपशमम् ப்ரபஞ்ச உபசமம் பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டது शान्तम् சாந்தம் சலனமற்றது शिवम् சிவம் மங்களமானது अद्वैतम् அத்வைதம் இரண்டற்

பண் களிகூர் தரு பாடலொடு ஆடல் பயின்றிடும்
[ஆகாதே:

களிகூர் தரு-மகிழ்வை மிகுதியாய்த் தருகிற.

இனிது ஸ்தோத்திரம் பாடுதற்கு இசை பயிலுவதில்லை. பாடல்களை ராக தாளத்துடன் பாடி பஜனை பண்ணுவதில்லை; அதனோடு பக்தி பூர்வமாக நடனம் புரிவதுமில்லை. பரபோதம் வருமிடத்து இவை யாவும் நின்றுவிடுகின்றன.

யமுனை நதிக்கரையிலே, கார்த்திகை மாதத்திலே, நிறை நிலா வெளிச்சத்திலே கோபிமார் கூடிக் கிருஷ்ணனோடு ராஸக்கிரீடை ஆனந்தமாக விளையாடிக்கொண்டிருந்தனர். கண்ணனுடைய குழலோசை கர்ணாமிர்தமாயிருந்தது. அதன் வசப்பட்ட ஆயர்பாடி மடந்தையர் ஆடவும் பாடவும் செய்தனர். இத்திருக்கூட்டம் கையாண்ட லலித கலைகள் இவர்களைப் படிப்படியாக உச்ச நிலைக்கு உயர்த்துவனவாயின. ஒவ்வொரு கோபியும் ஒரு கிருஷ்ணன் ஆயினர். பிறகு அதீதத்தில் சச்சிதானந்தம் எஞ்சி நின்றது. லலித கலைகளுக்கு ஆங்கு இடம் இல்லாது போயிற்று. கலைகள் வாயிலாகக் கலாதீதத்துக்குப் போவது சாத்தியம் என்பது நிரூபிக்கப்பட்டது.

பாண்டி நல்நாடு உடையான் படை ஆட்சிகள் பாடுதும்
[ஆகாதே:

படையாட்சிகள்-வீரச்செயல்கள்.

பரம்பொருள் சிறப்பாக இன்ன இடத்துக்கு உரியவன் என்னும் இட்வேற்றுமையும் என்னென்ன வீரச்செயல்களை அவன் செய்துள்ளான் என்னும் பாகுபாடும் பரபோதத்தில் இல்லை.

றது चतुर्थम् சதுர்தம் நான்காவது ஞானபூமி (துரியம்) मन्यन्ते மன்யந்தே கருதுகிறார்கள் स: ஸ: அவன் आत्मा ஆத்மா ஆத்மன் स. ஸ: அவன் विज्ञेय: விக்ஞேய: அனுபூதியில் அடையப்படுகிறான்.

துரியம் என்று சொல்லப்படும் சிதாகாசத்தைப்பற்றிச் சான்றோர் பகர்வதாவது: அந்த அறிவுப் பெருவெளி உள்ளத்தினுள் அடங்கியிருப்பதன்று; புறத்தில் கயிலாயம் போன்ற பூமியில் இருப்ப

சிவனுர் நடராஜாவாகவும் சிதம்பர ரகசியமாகவும் ஏககாலத்தில் இருக்கிருர். இவ்விரண்டு சொருபங்களே சகுண பிரம்மம், நிர்குண பிரம்மம் எனலாம். சிவனுருடைய திருவிளேயாடல்கள் எல்லாம் நடராஜாவிடத்தில் இருக்கின்றன. சிதம்பர ரகசியத்தில் அவை யாவும் ஒடுங்கிவிடுகின்றன. கடல் தனது மேற்பரப்பில் அலே வீசி ஆனந்தத் தாண்டவமாடுகிறது. அதன் அடி மட்டமோ அசைவற்று ஓசையற்று இருக்கிறது. அங்ஙனம் ஆனந்தக் கூத்தன் தனது அகண்டாகார நிலேயில் கர்மாதீதனுய்த் திகழ்கிருன். அந்நிலேயை அடைகிற ஜீவன் பிறகு அவனேப் பற்றிப் பாடுவது சாத்தியமன்று.

விண்களி கூர்வது ஓர் வேதகம் வந்து வெளிப்படும்

[ஆகாதே:

வேதகம்-கீழானதை மேலானதாக மாற்றும் உபாயம்.

தாங்கள் உயர்நிலேயில் இருப்பதாக தேவர்கள் மகிழ்வதும், கீழான பொருளே மேலான பொருளாக மாற்றுதல் என்னும் செயற்கரிய செய்லும் பரபோதத்தில் இல்லே.

விண்ணுலகில் அசுரர்களேவிட சுரர்கள் உயர்ந்தவர்கள் என்னும் உவகை மிகப் பூண்டிருக்கின்றனர். மண்ணுலகில் முன்னேற்றம் அடைந்துள்ளவர்கள் இன்னும் பிற்போக்கில் இருப்பவரிடத்து இரக்கமோ, ஏளனமோ,

---

தன்று. அகம்புறம் என்பனவற்றிற்த இடைநிலேயில் இருப்பதன்று. அது ஜீவாத்மாக்களின் தொகையன்று. அது தோன்றி வளர்ந்த உணர்வு அன்று. அது மறைந்துள்ள உணர்வன்று. அதைக் கண்கொண்டு பார்க்க இயலாது. எதனேடும் அதைச் சீர்தூக்க முடியாது. அது மனதுக்கு எட்டாதது. இயம்பும்படியான கூறுகள் அதனிடத்தில்லே. அது நினேவுக்கு எட்டாதது. அதை விளக்க முடியாது. நனவு, கனவு, உறக்கம் ஆகியவைகளுக்குப் பொதுவாயுள்ள தனியுணர்வின் தெளிவு அதுவாம். அது பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டது. அது சாந்தம், சிவம், அத்வைதம். அதுவே மெய்ப்பொருள். அது அனுபூதியில் அடையப்பெறுவது.

ஜாக்கிரதம், சொப்பனம், சுழுத்தி ஆகிய அவஸ்தைகளுக்கு ஆதாரமாயிருக்கிற தனிப்பொருள் துரியம்

பராமுகமோ பூணுகின்றனர். ஐந்து லோகத்தையும் வேதித்தல் என்னும் செயல் பழைய ரசவாத வித்தையில் நிகழ்வதாயிற்று. பிரபஞ்சத்தில் உள்ள பொருள்கள் யாவையும் பேதிக்க நவீன ரசாயனத்துக்கு இயலுகிறது.

காட்டுமிராண்டிகளாய் இருப்பவர்களை நாகரிகம் மிக வாய்ந்தவர்களாய்த் திருத்தியமைக்கவும் அதைக் குறித்து மகிழ்ச்சியடையவும் பெருமை பாராட்டவும் உலகத்தவர்க்கு இயலுகிறது. பாலைவனத்தைத் திருத்தி யமைத்து வளம் வாய்ந்ததாய் மேல் நிலைக்குக்கொண்டு வர மாந்தருக்கு யாண்டும் இயலுகிறது.

கல்வியும் சமய உணர்ச்சியும் இல்லாதவர்களுக் கிடையில் அவைகளை வழங்கித் தகை சான்றவர்களாய்ச் செய்வது தரணியில் உள்ளார்க்கு இயலுகிறது. கீழ்நிலை யில் இருக்கும் பயிர் பச்சைகளை மேலானவைகளாக மாற்றியமைக்க மாந்தருக்கு இயலுகிறது. கல்லில் நார் உரித்தல் என்னும் கோட்பாட்டின்படி கல்லினின்று இன் றைக்குக் கம்பளம் செய்யும் திறமை பௌதிக விக்ஞா னிக்கு உண்டு. முயற்சியால் எதையும் சாதிக்கலாம்.

அல்லது சிதாகாசம். சிதம்பரம் எனவும் அது அழைக்கப் பெறுகிறது. அண்டகோடிகளும் ஜீவகோடிகளும் அதை ஆதாரமாகக்கொண்டு அதன் அருளால் தோன்றவும், இருக்கவும், ஒடுங்கவும் செய்கின்றன. இவை யாவும் சிவ சக்தியின் விளையாட்டாம். இந்த விகாரங்களுக்கு அப்பால் உள்ள நிலை துரியாதீதம் எனவும் சிதம்பர ரகசியம் எனவும் இயம்பப்பெறுகிறது. அதுவே சாந்தம், சிவம், அத்வைதம்.

நிர்விகல்ப சமாதியில் ஜீவ உபாதிகளை ஒழிக்கின் றவன் அத்வைத சித்தியடைகின்றான். கடலில் சேர்க்கப் பட்ட உப்புப் பொம்மை தனது நாமரூபத்தை இழக் கிறது. கடலில் சங்கமமாகிற நதியின் செயலும் அத் தகையதேயாம். சிதம்பரத்தை அடைகிற ஜீவன் சிவம்

இந்த அரிய பெரிய நிகழ்ச்சிகள் யாவும் இயற்கையோடு சம்பந்தப்பட்டவைகள்; ஆதலால் மாயா காரியங்களாகின்றன. பின்பு அதீதத்தில் உள்ள பரபோதத்தில் இவையாவும் பொருளற்றவைகளாகின்றன.

2. ஒன்றியொ டொன்றுமோ ரைந்திெனா
டைந்துமு யிர்ப்பது மாகாதே
யுன்னடி யாரடி யாரடி
யோமென வுய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென
வந்த கணக்கது வாகாதே
காரண மாகு மனாதி
குணங்கள் கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த
நடுக்க நடந்தன வாகாதே
நாமுமே லாமடி யாருட
னேசெல நண்ணுது மாகாதே
யென்றுமெ னன்பு நிறைந்த
பராவமு தெய்துவ தாகாதே
யேறுடை யானெனை யாளுடை
நாயக னென்னுள் புகுந்திடிலே.

ஆகிறான். ஆதலால் அவனுடைய ஜீவ வியக்திக்கு நிரந்தரமான நிலைபேறு இல்லை. சிதம்பர ரகசியம் என்பது இதுவே.

பரபிரம்மத்தைத் துரியம் என்கிறது உபநிஷதம். அதுவே மெய்ப்பொருள். அதற்குப் புறம்பாகவோ மேலானதாகவோ வேறு ஒரு பொருள் இல்லை. அதற்குச் சிதாகாசம் என்று பெயர். அதைவிட உயர்ந்த நிலை இல்லை. பின்பு துரியாதீதம் என்னும் பதத்துக்குப் பொருள் யாது? இப்பதம் சமய நூல்களில் இடம் பெற்றிருப்பது உண்மை. இதைச் சரியாக ஆராயுமிடத்து மனாதீதம் என்னும் சொல்லுக்கு ஒப்புப் பெயராகத் துரியாதீதம் வந்துள்ளது.

ஒன்றினெடு ஒன்றும் ஓர் ஐந்தினெடு ஐந்தும்
உயிர்ப்பதும் ஆகாதே
உன் அடியார் அடியார் அடியோம்
என உய்ந்தன ஆகாதே
கன்றை நினைந்து எழு தாய் என
வந்த கணக்கு அது ஆகாதே
காரணம் ஆகும் அனுதி குணங்கள்
கருத்து உறும் ஆகாதே
நன்று இது தீது என வந்த
நடுக்கம் நடந்தன ஆகாதே
நாமும் மேல் ஆம் அடியாருடனே செல
நண்ணுதும் ஆகாதே
என்றும் என் அன்பு நிறைந்த
பரா அமுது எய்துவது ஆகாதே
ஏறு உடையான் எனை ஆள் உடை
நாயகன் என் உள் புகுந்திடிலே.

ஏறு உடையான் எனை ஆள் உடை
நாயகன் என் உள் புகுந்திடிலே:

ரிஷப வாகனத்தையுடைய சிவன், என்னை அடிமையாக ஏற்றுள்ள ஈசன் என்னைத் தன்மயம் ஆக்கிவிட்டால் அதன் விளைவு வருமாறு:

ஒன்றினெடு ஒன்றும் ஓர் ஐந்தினெடு ஐந்தும்
உயிர்ப்பதும் ஆகாதே:

உடலும் உயிரும் என்ற கோட்பாடும், ஐம்பொறிகள் ஐம்புலன் கள் என்ற கோட்பாடும், வாழ்ந்திருத்தல் என்ற கோட்பாடும் அதீதத்தில் இல்லை.

நமது அமைப்பில் உடலும் உயிரும் ஒன்றுடன் ஒன்று இணைபிரியாதிருக்கின்றன. இதற்கு எடுத்துக் காட்டாக முதலில் மொழியொன்றை ஆராய்வோம். உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் கூடி மொழி வடிவெடுக் கிறது. உயிர் எழுத்தின் எண்ணிக்கை அதிகரிக்குமளவு அதன் உயிர் விரிவு அடைகிறது. மெய் எழுத்தின் எண் ணிக்கை அதிகரிக்குமளவு சொல்லின் எண்ணிக்கை

அதிகரிக்கிறது. ஜீவர்களுக்கும் இவ்வுண்மை பொருந்து கிறது. எத்தனை யெத்தனை உடல் வகைகளோ அத்தனை யத்தனை ஜீவ பேதங்களை உலகில் காண்கிறோம். அவை களுள் மானுட உயிரும் உடலும் உன்னத நிலையில் இருக் கின்றன.

மேனியில் ஐம்பொறிகளும் அவைகளுக்கு ஏற்ற ஐம் புலன்களாகப் புறவுலகமும் அமைந்திருப்பது ஓர் அற் புதமாம். ஐந்தினோடு ஐந்து கொள்ளுகிற கூட்டுறவால் உலகம் நுகரப்படுகிறது. இந்த நுகர்ச்சியே சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப்படுகிறது. இந்த ஐந்து கூறு களாக அன்றிப் புறவுலகம் நமக்குத் தெரிவதுமில்லை, தெரியப்படுவதுமன்று.

இனி, ஜீவர்கள் உயிர்ப்பதில் ஓர் அதிசயம் காண் கிறோம். கல்லும் புல்லும் அதனதன் போக்கில் உயிர்க் கின்றன. நீந்துவன, நடப்பன, பறப்பன ஆகிய உயிர்க ளெல்லாம் விதவிதமாய் வாழ்ந்து வருகின்றன. இனி, மனிதனோ இத்தனை விதங்களிலும் வாழவல்லவன். இவை யாவுக்கும் மேலாகப் பாரமார்த்திகம் என்னும் பெரு வாழ்வு மனிதனுக்கே சொந்தமாகிறது. அவன் அகண்ட சச்சிதானந்தத்தில் ஒன்றுபடும்போது இவை யாவும் மாயமாய் மறைந்து போகின்றன.

உன் அடியார் அடியார் அடியோம்
என உய்ந்தன ஆகாதே:

பக்தர் கூட்டத்தில் சேர்ந்து அருள்துறையில் காப்பாற்றப் பெறுவது என்பது இல்லை.

பாரமார்த்திகப் பெருவாழ்விலும் பக்தர்களோடு கூடிவாழ்வதில் அலாதியான இனிமை உளது. அதனோடு ஒப்பிடுவதற்கு வேறு ஒன்றும் எங்கும் இல்லை. அத் தகைய பேரானந்தப் பெருவாழ்வும் அதீத நிலையில் பொருளற்றதாகிறது.

கன்றை நினைந்து எழு தாய் என
வந்த கணக்கு அது ஆகாதே:

பசுவானது கன்றுக்கு இரங்குவதுபோன்று இறைவன் பக்த னுக்கு அருள் சுரப்பது என்பது இல்லை.

தாய்க்கும் சேய்க்கும் உள்ள இணக்கம் தெய்விக மானது. தாயினும் சாலப்பரிந்து பரமன் பக்தனை ஆட் கொள்கிறுன். அத்தகைய அருளானந்தமும் அதீதத்தில் அடிபட்டுப்போகிறது.

காரணம் ஆகும் அனுதி குணங்கள்
கருத்து உறும் ஆகாதே:

இறைவனது நித்திய விபூதிகளைப்பற்றிச் சிந்தனை பண்ணு வதும் இல்லை.

ஓர் ஊரும் ஒரு நாமமும் இல்லானுக்கு ஆயிரம் திரு நாமங்கள் அமைந்துள்ளன. அவைகள் சிவ ஸஹஸ்ர நாமம் எனப்படுகின்றன. இனி, சிவ மஹிம்னஸ்தோத்ரம், ருத்ரம் என்பன இருக்கின்றன. சிவனுருடைய எண் ணிறந்த குணவிசேஷங்களை விளக்குதற்கென்றே இவை யாவும் அமைந்துள்ளன. இவைகளைக் கருத்தில் ஏற்று ஓர்ந்து பார்க்க எத்தனையோ பிறவிகள் வேண்டும். இவை களை ஓர ஓர ஆனந்தம் அதிகரிக்கும். அத்தகைய மனன ஆனந்தம் நிர்விகல்ப சமாதியில் மறைந்து போகிறது.

நன்று இது தீது என வந்த நடுக்கம் நடந்தன ஆகாதே:

புண்ணியம் பாபம் என்று பாகுபடுத்திப் பாபத்துக்கு அஞ்சு தல் என்பதும் கிடையாது.

ஜீவபோதம் இருக்கும் வரையில் அதை ஒட்டிக் கர்மமும் நடைபெறுகிறது. கர்மி என்பதே ஜீவாத்ம னுக்கு உள்ள விளக்கங்களில் ஒன்று. அவன் செய்கிற ஒவ்வொரு கர்மத்திலும் பாபமும் புண்ணியமும் இணை பிரியாது அமைந்துள்ளன. சில கர்மங்களில் புண்ணியம் முன்னணியில் நிற்கிறது. வேறு சில கர்மங்களில் பாபம் முன் வந்து நிற்கிறது. கர்மாதீதமாவது நிர்விகல்ப

சமாதி. ஆதலால் அங்குப் புண்ணியமும் இல்லை, பாபமும் இல்லை.

நாமும் மேல் ஆம் அடியாருடனே செல
நண்ணுதும் ஆகாதே:

ஸத்சங்கம் பண்ணி மேன்மையுற வேண்டும் என்ற ஆசை ஏற்படாது.

சேர்க்கைக்கு ஏற்ப மனிதனுடைய மனப்பான்மை மாறுகிறது. தீயசகவாசம் அவனைக் கீழ்மையில் ஆழ்த்து கிறது. நல்லார் இணக்கம் அவனை உயர்நிலைக்கு உயர்த்துகிறது. நல்லார் இணக்கத்தை நாடுவது சிறந்த ஆத்ம சாதனம் ஆகிறது.

பர்வதராஜன் தன்னுடைய புதல்வி பார்வதிதேவி யிடமிருந்து பர தத்துவங்களைக் கருத்துடன் கற்றுவந் தான். நிர்க்குண பிரம்மத்தை விளக்கியருளும்படி தந்தை தன் தெய்விகப் புதல்வியிடம் கேட்டான். ஸத்சங்கம் பண்ணினால் அன்றி நிர்குண பிரம்ம தத்துவம் யாருக்கும் விளங்காது என்றாள் பராசக்தி. ஸத்சங்கம் அவ்வளவு சிறந்தது.

நிர்விகல்ப சமாதியில் ஸத்சங்கத்தைப் பற்றிய எண்ணம் எழ அவகாசமில்லை.

என்றும் என் அன்பு நிறைந்த
பரா அமுது எய்துவது ஆகாதே:

பரமானந்தத்தில் திளைத்திருப்பது என்பதும் அதீத நிலையில் இல்லை. ஏனென்றால் அதீதம் என்பது ஆனந்தத்துக்கும் அப்பாற் பட்டது. அதில் சுத்த சிவம் தன்னில் தானாய் எஞ்சியிருக்கிறது.

காற்று அடிக்கும்போது ஒரு மரத்தின் கிளைகளும் இலைகளும் அசைகின்றன. ஆனால் அடிமரம் அசைவ தில்லை. சகுண பிரம்மமாகிய நடராஜா ஆனந்தத் தாண் டவம் ஆடுகிறார். நிர்குண பிரம்மமாகிய சிதாகாசம் அந்த ஆனந்தத்தையும் தன்னுள் ஒடுக்கிக்கொண்டு தன் மயமாயிருக்கிறது. அதனுள் ஒடுங்குகிற பக்தர்களும் ஆனந்தாதீதத்துக்குப் போகின்றனர்.

3. பந்தவி கார குணங்கள் பறிந்து
மறிந்திடு மாகாதே
பாவனை யாய கருத்தினில் வந்த
பராவமு தாகாதே
யந்தமி லாத வகண்டமு நம்மு
ளகப்படு மாகாதே
யாதி முதற்பர மாய பரஞ்சுட
ரண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை
சிந்திடு மாகாதே
சேலன கண்க ளவன்றிரு மேனி
திளைப்பன வாகாதே
யிந்திர ஞால விடர்ப்பிற வித்துய
ரேகுவ தாகாதே
யென்னுடை நாயக னாகிய வீச
னெதிர்ப்படு மாயிடிலே.

பந்தம் விகாரம் குணங்கள் பறிந்து
மறிந்திடும் ஆகாதே
பாவனை ஆய கருத்தினில் வந்த
பரா அமுது ஆகாதே
அந்தம் இலாத அகண்டமும் நம் உள்
அகப்படும் ஆகாதே
ஆதி முதல் பரம் ஆய பரம் சுடர்
அண்ணுவது ஆகாதே
செம் துவர் வாய் மடவார் இடர் ஆனவை
சிந்திடும் ஆகாதே
சேல் அன கண்கள் அவன் திரு
மேனி திளைப்பன ஆகாதே

உபநிஷத் மந்த்ரம்—120.

प्रजहाति यदा कामान् सर्वान् पार्थ मनोगतान् ।
आत्मन्येवात्मना तुष्टः स्थितप्रज्ञस्तदोच्यते ॥

இந்திர ஞாலம் இடர்ப் பிறவித் துயர்
ஏகுவது ஆகாதே
என்னுடை நாயகன் ஆகிய ஈசன்
எதிர்ப்படும் ஆயிடிலே.

என்னுடை நாயகன் ஆகிய ஈசன் எதிர்ப்படும் ஆயிடிலே: நான் பரவஸ்துவில் ஒன்றுபடும் பொழுது நிகழ்வன வருமாறு:

பந்தம் விகாரம் குணங்கள் பறிந்து மறிந்திடும் ஆகாதே: பறிந்து மறிந்திடும் ஆகாதே-வேரோடு களைந்தெறியப்பட்டு அழிந்து போதல் என்னும் செயல் நிகழும்.

பந்தத்தை உண்டுபண்ணுவதற்காக விகாரப்பட்டிருக்கும் மூன்று குணங்களும் களைந்தெடுக்கப்படுகின்றன.

(ஆகாதே என்னும் சொல் இங்கு ஆகும் எனப் பொருள்படுகிறது.)

பந்தம் என்பது தளை அல்லது கட்டு. ஜீவர்களை வினையோடு கூடிய வாழ்க்கையில் கட்டி வைத்திருப்பது குணம். இதைக் கடந்து அதீதத்துக்குப் போகும்வரையில் ஜீவாத்மனுக்கு விடுதலையில்லை. குணாதீதத்துக்குப் போக விரும்புபவன் முதலில் குணத்தின் பாங்கை அறியவேண்டும்.

நிர்க்குண பிரம்மத்துக்கு நிர்விகாரம் என்பது ஓர் அடைமொழி. அங்ஙனம் சவிகாரம் என்னும் சொல் சகுண பிரம்மத்துக்கு உரியதாகிறது. ஒரு பொருள் வேறு வடிவில் விளங்கும்பொழுது அது விகாரப்பட்டுள்ளதாகிறது. இதற்குச் சில சான்றுகள் தேவை. பால் தயிராக விகாரப்படுகிறது. சூரிய வெளிச்சம்

ப்ரஜஹாதி யதா காமான் ஸர்வான் பார்த்த மனோகதான் ।
ஆத்மன்யேவாத்மனா துஷ்ட: ஸ்திதப்ரக்ஞஸ்ததோச்யதே ॥

(பகவத் கீதோபநிஷதம் 2.55)

पार्थ பார்த்த பார்த்தா यदा யதா எப்பொழுது मनोगतान् மனோகதான் மனதிலெழுகின்ற सर्वान् காமான் ஸர்வான்

முப்பட்டைக் கண்ணுடியில் புகுந்து ஏழு நிறங்களாக விகாரப்படுகிறது. அங்ஙனம் நிர்க்குண பிரம்மம் சகுண பிரம்மமாக விகாரப்படுகிறது. சகுண பிரம்மத்தினின்று ஜகத்தும் ஜீவனும் தோற்றத்துக்கு வருகின்றன.

நிறம் ஏற்றிய படங்கள் இருக்கின்றன. அவைகளைப் பொதுவாக மூவர்ணப் படங்கள் (tri-colour pictures) எனப் பகர்வதுண்டு. மூன்று அச்சில் அவைகள் உருவாகின்றன. அங்ஙனம் இப்பிரபஞ்சமும் மூவர்ணப் படமாகிறது. சத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களால் ஆனது இது. சரம் அசரம், சேதனம் அசேதனம் ஆகிய அனைத்தும் இந்த மூன்று குணங்களின் விளைவாம். இவைகளை முப்புரம் என மொழிவதும் உண்டு. அதனால் அம்பிகைக்குத் திரிபுர சுந்தரி என்னும் பெயர் வந்துள்ளது. முப்புரங்களுக்கும் சோபை கொடுப்பவள் அவளே.

முக்குணங்களைச் சகுண பிரம்மம் அல்லது அம்பிகை ஆளுகின்றாள். ஆதலால் அவளுக்கு **திரிகுணாத்மிகா** என்னும் பெயர் வந்துள்ளது. ஜீவாத்மா முக்குணங்களில் கட்டுண்டு கிடக்கிறான். அவைகளை அழித்து ஒழித்து விட்டுத் தனது யதார்த்த நிலையாகிய நிர்க்குண பிரம்மத்தில் சமாதியின் வாயிலாக ஒன்றுபடுகிறான். அதுவே அவன் அடைகிற முக்தியாகிறது.

பாவனை ஆய கருத்தினில் வந்த பரா அமுது ஆகாதே:

பண்பட்ட மனதில் உதிக்கிற தெய்விக விருத்திக்குப் பாவனை என்று பெயர். அதன் வாயிலாக வருகிற தெய்விகக் காட்சிக்குப் பாவசமாதி என்று பெயர்.

காமான் எல்லா ஆசைகளையும் प्रजहाति ப்ரஜஹாதி விட்டொழிக்கிறான் आत्मनि एव ஆத்மனி ஏவ ஆத்மாவில் மட்டும் आत्मना ஆத்மனா ஆத்மாவைக்கொண்டு तुष्टः துஷ்ட: திருப்தியடைந்தவனாகிறான் तदा ததா அப்பொழுது स्थितप्रज्ञः ஸ்தித ப்ரக்ஞ: ஸ்திதப்ரக்ஞன் என்று उच्यते உச்யதே சொல்லப் படுகிறான்.

பரா அமுதை யோக சாஸ்திரம் அமிர்ததாரை என்கிறது. குண்டலினி சக்தி மூலாதாரத்தினின்று விழித்தெழுந்து மேல் நோக்கிப் போவது யோகியின் அனுபவம் ஆகிறது. அது மற்ற ஆதாரங்களைத் தாண்டி ஸஹஸ்ராரம் என்னும் ஏழாவது ஆதாரத்தின்கண் உச்சந்தலையில் எட்டுகிறது. அப்பொழுது சக்தி சிவத்தோடு சேருகிறது. அதன் விளைவாக உச்சந்தலையினின்று அமிர்ததாரை சொட்டுகிறது. அது பரமானந்தத்தை ஊட்டுகிறது. இது பாவசமாதி எனப்படுகிறது. நிர்விகல்ப சமாதியில் இந்த பாவ சமாதியும் அடிபட்டுப் போகிறது.

அந்தம் இலாத அகண்டமும் நம் உள்
அகப்படும் ஆகாதே:

எது அகண்டமோ அது ஒருபொழுதும் துண்டிக்கப்படுவதன்று என்பது கோட்பாடு. அகண்டமாயுள்ள ஆகாசம் இதற்கு நல்லதொரு சான்று ஆகிறது. ஒரு பாண்டத்தின் உள்ளிருக்கும் ஆகாசம் புறத்திலுள்ள ஆகாசத்தினின்று பிரிக்கப்பட்டது போன்று தென்படுகிறது. உண்மையில் ஆகாசம் புறத்திலும், உள்ளும், பாண்டத்தினூடும் பிளவுபடாது வியாபகமாயிருக்கிறது. ஜட ஆகாசத்தைப்பற்றிய இக்கோட்பாட்டை முதலில் அறிந்துகொள்வது அவசியமாகிறது.

ஜட ஆகாசம் போன்று சித் ஆகாசம் அகண்டமானது. அங்கு இங்கு எனுதபடி அது எங்கும் பிரகாசமாயிருக்கிறது. அதற்குப் போக்கும் வரவும் புணர்வும் இல்லை. அகண்டமாயுள்ள ஒரே ஜட ஆகாசத்தில் எண்ணிறந்த கோளங்கள் மிதந்துகொண்டிருக்கின்றன; எண்ணிறந்த சூரிய மண்டலங்கள் அதில் தோன்றவும் ஒடுங்க

பார்த்தா, மனதிலெழுகின்ற ஆசைகளையெல்லாம் அகற்றி ஆத்மாவில் ஆத்ம திருப்தி யடைந்திருப்பவன் ஸ்திதப் பிரக்ஞன் என்று சொல்லப்படுகிறான்.

வும் செய்கின்றன. அந்த நிகழ்ச்சிகளுக்கிடையில் ஆகாசம் பிளவுபடாமலும் மாறுபடாமலும் யாண்டும் இருந்தபடி இருக்கிறது. சித் ஆகாசம் அல்லது சிதம்பரத்தைப் பற்றிய உண்மையும் இதுவே. எண்ணிறந்த ஜீவாத்மாக்கள் இதில் தோன்றி, இருந்து, ஒடுங்குகின்றன. ஜட ஆகாசம் எங்ஙனம் பாண்டங்களிலோ, சூரியமண்டலங்களிலோ அகப்படுவதில்லையோ அங்ஙனம் சித் ஆகாசம் ஜீவ உபாதிகளுள் அகப்படுவதில்லை. உபாதியை முன்னிட்டு ஜீவாத்மனுக்குப் பெயரளவில் அணுத்வம் அல்லது ஆணவம் இருக்கிறது. தன்னை ஒரு ஜீவன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறபொழுதும் அவன் உண்மையில் சிவம். நிர்விகல்ப சமாதியில் இவ்வுண்மை விளங்குகிறது.

ஆதிமுதல் பரம் ஆய பரம் சுடர் அண்ணுவது ஆகாதே:

அண்ணுவது-நெருங்குவது, சென்று அடைவது, அணுகுவது.

அனைத்துக்கும் முதலாயும் ஆதாரமாயும் இருப்பது சிதாகாசம். அண்டங்கள் அனைத்தும் அதில் தோன்றி, இருந்து, ஒடுங்குகின்றன. ஜீவராசி அதில் தோன்றி இருந்து ஒடுங்குகிறது. அந்த ஒரே ஆத்ம பிரகாசம் உலகில் சந்திர, சூரிய, நக்ஷத்திர வெளிச்சமாக ஒளிர்கிறது. அந்த ஒரே ஆத்ம பிரகாசம் அனந்தகோடி ஜீவ சைதன்யமாக இலங்குகிறது. கடலை அலை அணுகுவதில்லை; அது கடலில் கடல் மயமாயிருக்கிறது. ஜீவாத்மன் பரமாத்மனைச் சென்றடைவதில்லை. அவன் யாண்டும் பரமாத்ம சொரூபமாயிருக்கிறான். அக்ஞானத்தால் உபாதியைத் தன்மீது ஆரோபித்துக்கொண்டு தன்னை

அக்கினி தானே உஷ்ண சொரூபம். வெப்பத்தை நாடி அது வேறுபொருளிடத்துப் போகவேண்டியதில்லை. அங்ஙனம் ஆத்மா ஆனந்த சொரூபம். தன்னிடத்துள்ள ஆனந்தத்தை அது பிற பொருள்கள்மீது சுமத்தி, மனதைக்கொண்டு அவைகளை நாடிச் செல்லுகிறது.

ஒரு ஜீவனாக எண்ணுகிறபொழுதும் அவன் உண்மையில் பரமாத்மனே. ஆதலால்தான் ஜீவ பிரம்ம ஐக்கியத்தை அஸ்பர்சயோகம் என்கிறது வேதாந்தம். அதாவது ஜீவாத்மனும் பரமாத்மனும் பிரிந்திருந்து பிறகு கூடுவதன்று. அலையும் கடலும் போன்று இரண்டும் யாண்டும் ஒன்றே; அத்வைதம் என்பதன் பொருள் இரண்டு அல்ல என்பதாம். சச்சிதானந்தத்தை ஜீவாத்மா சென்றடைவதில்லை; சச்சிதானந்தமாயிருப்பது சமாதியின் விளைவு.

சமாதியில் நிலைபெற்றவனைக் குறித்து உபநிஷதம் தெளிவுற இங்ஙனம் பகர்கிறது:

अद्वैते परम स्थितिः

அத்வைதே பரம ஸ்திதி:

அத்வைதத்தில் முற்றும் நிலைத்தவன்.

செம் துவர் வாய் மடவார் இடர் ஆனவை
சிந்திடும் ஆகாதே:

மடவார்-மகளிர். சிந்திடும்-ஒழிந்துபோதல்.

ஆண்பால் பெண்பால் என்னும் வேற்றுமையில் உருவெடுக்கிற காமவிகாரத்துக்கும் சுத்த சிவத்துக்கும் வெகுதூரம். சிவசொரூபத்தில் ஒன்றித்தவரைக் காமநோய் இடர்ப்படுத்துவதில்லை.

(ஆகாதே என்னும் சொல் இவ்விடத்திலும் ஆகும் என்று பொருள்படுகிறது.)

தேகாத்ம புத்தி அல்லது உடலைத் தான் என்று கருதுவதிலிருந்து காமம் வடிவெடுக்கிறது. பிறவிப் பெருங்கடலைப் பேணுவது காமம். அதை வெல்லுமளவு மனிதன் மேன்மையுறுகிறான். சிவ பக்தி ஓங்குதற்கு ஏற்ப காமம் ஒடுங்குகிறது. ஜீவர்களுடைய பிரதிநிதியாகிய கன்னியாகுமரி சிவனை நாடித் தவம் புரிகிறாள்.

அத்தகைய நாட்டத்துக்குக் காமம் என்று பெயர். நீரில் அலை உண்டாவது போன்று காமம் மனதில் வடிவெடுக்கிறது. அலைகள் வீசும்பொழுது நீரின் அடிப்பாகம்

சிவனுரோ முதலில் காமனைக் காய்ந்து சாம்பலாக்கு கிருர். அதன் பிறகு குமரிக்கும் கடவுளுக்கும் திருமணம் நிகழ்கிறது. ஜீவன் காமத்தை வென்ற பிறகே சிவ னுக்கு உரியவன் ஆகிருன் என்பது இதன் தத்துவம்.

காமநோயைக் களைகிறவன் ஆண் பெண் என்னும் பால் வேற்றுமைக்கு அப்பாற்பட்டவனுகிருன். இளம் மங்கையர்கள் நீராடிக்கொண்டிருந்த தடாகத்துக்கு அருகில் பதினெட்டு வயதுக் காளையாகிய சுக பிரம்மம் நிர்வாணமாகப் போனுர். அவர் வந்ததையும் போனதை யும் ஆடையில்லாத மங்கையர் கருத்தில் வாங்கவில்லை. ஆனுல் தொண்டு கிழவராகிய வியாசர் தம்மகன் சுகரைத் தேடிவந்தபோது அதே மங்கையர் நாணமுற்று ஆடையை யெடுத்து அணிந்துகொண்டனர். பிரம்மஞானியாதலால் இளம் சுகதேவர் உள்ளத்தில் ஆண் பெண் என்ற வேற் றுமையில்லை. காமநோய்க்கும் அவர் உள்ளத்தில் இடம் இல்லை. ஆதலால் அவருடைய வருகை பெண்பாலர் உள்ளத்தில் சங்கோசத்தை உண்டுபண்ணவில்லை. வியா சர் உள்ளத்திலோ அந்த வேற்றுமையிருந்தது. அதன் எதிர்ச் செயலாக மங்கையரும் நாணமுற்றனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரோடு பழகிய பெண் பாலர் அவரையும் ஒரு பெண்பாலாகவே கருதினர். அவர் ஓர் ஆண் என்ற எண்ணம் அவர்கள் மனதில் வரவேயில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் உள்ளத்தில் காம தகனம் ஆயிருந்ததே அதற்குக் காரணமாகும்.

நிர்விகல்ப சமாதியிலிருந்து மீண்டும் உலகஞாபகத் துக்கு வருகிறவர்களுடைய உள்ளத்தில் காமவாசனை யிராது. சமாதிநிலையின் சிறப்புக்கு இதுவும் ஒரு சான்று ஆகிறது.

தென்படுவதில்லை. மனதில் காம அலைகள் வீசும்பொழுது அதற்கு அடிப்படையாயுள்ள ஆத்மாவின் ஆனந்த சொரூபம் சிதறடைந்ததுபோன்று ஆய்விடுகிறது. காம

சேல் அன கண்கள் அவன் திரு
மேனி திளேப்பன ஆகாதே:

சேல் அன கண்கள்-சேல் மீனின் கண்களை ஒத்திருக்கும் ஞானியர் கண்கள்.

மீனின் கண்கள் இமைப்பதில்லை. சமாதியில் இருக்கும் ஞானி யர் கண்கள் விழித்திருக்கின்றன; ஆனல் இமைப்பதில்லை. இந்த ஊனக் கண்கள் பரம்பொருளைத் தரிசிப்பதற்கு உதவுவதுமில்லை.

ஈண்டு இயம்பியுள்ள கண்ணில் அரும்பெரும் தத்து வங்கள் சில அடங்கியிருக்கின்றன. அம்பிகைக்கு மீனுக்ஷி, காமாக்ஷி, விசாலாக்ஷி என்னும் மூன்று பெயர்கள் இருக் கின்றன. மீனுக்ஷி என்பது மீனின் கண்ணையுடையவள் என்று பொருள்படுகிறது. மீன் தன் கண்ணை எப் பொழுதுமே மூடுவதில்லை. அது யாண்டும் விழிப்புமய மாயிருக்கிறது. அதற்கு ஒப்ப அம்பிகையும் சிவனும் நித்திய ஜாக்கிரதாவஸ்தையில் இருக்கிறர்கள் என்பது தத்துவம். பிரளயத்துக்கும் அவர்கள் சாக்ஷியாயிருக் கிறர்கள். பரமாத்ம தத்துவம் இடையீடு இல்லாத பெருவிழிப்பு, பேருணர்வு, வாலறிவு வடிவெடுத்திருப் பதற்கு மீனின் கண் பொருத்தமான சின்னமாகிறது.

அம்பிகை காமாக்ஷி என்று அழைக்கப்படுகிறள். அவளுடைய அக்ஷம் அல்லது கடைக்கண் பார்வையால் ஜீவகோடிகள் அனைத்தின் காமம் அல்லது ஆசை நிறை வேறப்பெறுகிறது என்பது இதன் கோட்பாடு ஆகிறது.

அம்பாளுக்கு விசாலாக்ஷி என்பது இன்னெருபெயர். விசாலம் என்பது எங்கும் பரவியிருப்பதாகப் பொருள் படுகிறது. பரம்பொருளின் பார்வை நீக்கமற எங்கும் நிறைந்திருக்கிறது என்று இதனுல் அறிவுறுத்தப்படு கிறது.

அலைகளற்று மனது தேங்கியிருக்கும்போது ஆத்மாவின் ஆனந்த சொரூபம் தனக்குத் தானே விளங்குகிறது. தான் உலகெல்லாம் தேடின இன்பம் தன்னிடத்தே இருக்

சமாதிநிலையெய்தியிருப்பவருக்குக் கண் திறந்திருக் கிறது. அது மூடுவதுமில்லை இமைப்பதுமில்லை. பார்வை புறத்தில் போவதுமில்லை, உள் முகமாகப் போவதுமில்லை. (ந பஹி: ப்ரக்ஞும் ந அந்த: ப்ரக்ஞும்) கோள் இல் பொறி என்று அதைக் கூறலாம். பிணம் கண் திறந்திருப்பது போன்று சமாதிஸ்தன் கண் திறந்திருக்கிறன். ஆனல் அடைந்துள்ள நிலையில் இவ்விரண்டுக்குமிடையில் உள்ள வேற்றுமை வடதுருவம் தென்துருவம் போன்று வெகு தூரத்தில் இருக்கிறது. முந்தியது சவம்; பிந்தியது சிவம். சேல் அன்ன கண் இக்கோட்பாட்டை விளக்கு கிறது.

இவையாவிலும் மேலான மற்றுமொரு கோட்பாடு இதில் உளது. வேதாந்த தர்சனத்தில் திருக் திருசிய விவேகம் என்னும் கோட்பாடு ஒன்று உண்டு. திருக் திருஷ்டி, திருசியம் என்னும் மும்மைக்குத் திரிபுடி என்று பெயர். காண்போன், காணுதல், காணப்படுகின்ற பொருள் என மூன்றும் கூடியது திரிபுடி. திருக் அல்லது காண்போனே நித்தியவஸ்து. திருஷ்டியும் திருசியமும் வெறும் மனதின் விகாரங்களாம். காண்போனுக்குப் பழுது இல்லை. அவன் கேடிலி, அக்ஷரன். அவன்பால் நிகழ்கிற காணுதல் என்னும் கர்மமும் காணப்படு பொருள் என்னும் மாயையும் க்ஷரம் அல்லது அழியும் தன்மையுடையவைகள். திருக் ஆகிய சிவம் யாண்டும் இருக்கிறது. திருசியம் ஆகிய ஜகத்தும் ஜீவனும் தோன் றவும் மறையவும் செய்கின்றன.

நிர்விகல்ப சமாதியை எய்தியுள்ள சித்த புருஷன் சிவத்தில் அத்வைத சித்தியடைகிறன். சேல் அன்ன கண்களை அவன் படைத்திருந்தும் அக்கண்கள் அகத் திலோ புறத்திலோ எதையும் காண்பதில்லை.

கிறது என்று மனம் தெளிபவன் நிறைஞானி ஆகிறன். ஆத்ம திருப்தனே நிறை ஞானி.

, சிவனுக்கு ஸ்வாத்மாராம: என்பது ஒரு பெயர். தன்னில்தான் திருப்தியடைந்திருப்பவன் என்பது அதன் பொருள். அவன் தன்னையே கண்டு களித்துக்கொண்டிருக்கிறான். சிவசொரூபத்தில் காண்போன், காணுதல், காணப்படுபொருள் ஆகிய மூன்றும் ஒன்றுபடுவனவாகின்றன. ஆதலால் சிவன் திரிபுடி ரஹிதன். சமாதி நிலையில் ஞானிக்கும் திரிபுடியில்லை. ஞானியும் சிவமும் சமாதியில் ஒன்றுபடுகின்றனர். சேல் அன்ன கண்கள் இவ்வுண்மையை விளக்குகின்றன.

இந்திர ஞாலம் இடர்ப் பிறவித் துயர் ஏகுவது ஆகாதே:

இந்திர ஞாலம்-இந்திர ஜாலம். இடர்-துன்பம். துயர் ஏகுவது-துக்கம் ஒழிந்து போவது.

(ஆகாதே என்னும் சொல் ஈண்டும் ஆகும் என ப் பொருள்படுகிறது.)

இந்திர ஜாலவித்தை போன்று பிறவி உண்டாகிறது. அது துன்பத்தை விளைவிக்கிறது. எங்கு எங்கு எத்தனை எத்தனை பிறவிகள் எடுத்தாலும் அவைகளால் வருகிற துக்கம் ஒழிந்துபோவதில்லை. சமாதி எய்துமிடத்து துக்க நிவர்த்தி நிரந்தரமாய் நிகழ்கிறது.

உயிருடனிருக்கும்போதே எவனொருவன் இறந்தவன் போலாகிறானோ, அதாவது எவனுடைய ஆசாபாசங்கள் பிணத்தின்கண் இல்லாமைபோன்று நசித்திருக்கின்றனவோ, அவன்தான் உண்மையான ஆத்ம ஞானி யாவான்.

உபநிஷத் மந்த்ரம் — 121.

इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः ।
सर्गेऽपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च ॥

இதம் ஞானமுபாச்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா: ।
ஸர்கேऽபி நோபஜாயந்தே ப்ரலயே ந வ்யதந்தி ச ॥

(பகவத்கீதோபநிஷதம் 14-2)

इदं ज्ञानं இதம் ஞானம் இந்த ஞானத்தை उपाश्रित्य உபாச்ரித்ய அனுஷ்டித்து मम साधर्म्यं மம ஸாதர்ம்யம் என் சொரூ

'எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்' என்கின்றார் அண்ணல். உயிர்கள் அனைத்துமே எண்ணிறந்த பிறவிகளை எடுத்து வருகின்றன. துக்க நிவர்த்திக்காகவே அவைகள் அங்ஙனம் செய்து வருகின்றன. ஆனால் எத்தனைதான் பிறவிகள் எடுத்துப்பார்த்தாலும் அவைகள் வாயிலாக நிரந்தர துக்க நிவர்த்தியில்லை. விண்ணுலகில் விண்ணவர்களாகப் பிறந்தவர்களுக்கும் துக்கமுண்டு. பிறவியும் துக்கமும் இணைபிரியாதவைகள் என்னும் அனுபவம் இறுதியில் வருகிறது. பிறவிப்பற்று நீங்கப் பெற்றவர்களுக்கே நிர்விகல்ப சமாதி வாய்க்கிறது.

ராஜா சந்திரவர்மனுடைய வரலாறு ஆராய்தற்கு உரியது. முன்பு ஒரு காலத்தில் அவன் ஒரு சிற்றரசனாய் இருந்தான். அவனுடைய நாடு சிறியது; ஆனால் ஆட்சி முறை பெரியது. நாடு ஆளுபவர்களுக்கு அவன் நல்லதொரு எடுத்துக்காட்டு ஆவான். மந்திரி, பிரதானி, குடிமக்கள் ஆகிய அனைவரும் அவரவர் கடமைகளை இனிது நிறைவேற்றி வந்தனர்; அவர்கள் இன்புற்று வாழ்ந்திருந்தனர்.

ராஜரிஷி போன்ற சந்திரவர்மனுக்கு நெடுநாளைக்குப் பிறகு ஒரு மகப்பேறு வாய்த்தது. மகனை மன்னன் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தான். ஆண்டுகள் ஒன்பது பூர்த்தியாவதற்குள் ராஜகுமாரனிடம் கல்வி, அறிவு, ஒழுக்கம், ஆண்மை, உடல்கட்டு, அழகு ஆகியவை ஒருங்கே திகழ்வனவாயின.

நள்ளிரவில் சயனித்துக்கொண்டிருந்த சந்திரவர்மனை அவனுடைய பட்டமகிஷி தட்டி யெழுப்பினாள். தங்கள் தனயன் திடீரென்று மாரடைப்பால் மாண்டு

பத்தை आगताः ஆகதா: அடைந்தவர்கள் सर्गे அபி ஸர்கே அபி சிருஷ்டிக் காலத்திலும் न उपजायन्ते ந உபஜாயந்தே பிறப்பதில்லை प्रलये च ப்ரலயே ச பிரளய காலத்திலும் न व्यथन्ति ந வ்யதந்தி துன்புறுவதில்லை.

போனுன் என்று தெரிவித்துக் கோவென்று கதறியழு தாள். இடி விழுந்தாற் போன்ற இச்செய்தி கேட்ட அரசன் அழவில்லை. ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அதாவது :

உறங்கும்பொழுது கனவில் அவனுக்கு வேறு ஒரு விசாலமான ராஜ்யம் வாய்த்திருந்தது. அதற்குமேல் ஏழு ராஜகுமாரர்கள் அவனுக்கு உரியவர்கள் ஆனுர்கள். ஏழுபேரிடத்தில் ஏழுவிதமான கலை ஞானங்கள், ராஜ ரீதிகள், போர்ப் பயிற்சிகள், தோற்றம், ஆண்மை, வீரி யம், பேச்சு வன்மை ஆகிய நலன்கள் பொலிந்திருந்தன. அம்மக்களின் திறமைகளைக் கண்டுகளித்துக் கொண்டி ருந்தபொழுது தட்டியெழுப்பப்பட்டான். மக்கள் ஏழு பேரும் இந்திரஜாலம் போன்று மறைந்து போயினர். நனவுக்கு வந்ததும் இதில் இருந்த மைந்தனும் இந்திர ஜாலம் போன்று மறைந்துபோன செய்தி கோமான் காதுக்கு எட்டியது. அந்த ஏழுபேரைக் குறித்து வருந்து வதா, இந்த ஒருவனைக் குறித்து வருந்துவதா—இது அரசனுக்கு விளங்கவில்லை. சந்திரவர்மன் இங்ஙனம் சிந்தனையில் மூழ்கியிருந்தான். உலக வாழ்வு அநித்திய மானது என்னும் விவேகம் அவனுக்கு உதயமாயிற்று.

கனவு உலகம், நனவு உலகம், வானவர் உலகம் ஆகிய அனைத்தும் ஞானிக்கு இந்திர ஜாலம்; அவை

இந்த ஞானத்தை அனுஷ்டித்து என் சொரூபத்தை அடைந்த வர்கள் சிருஷ்டியில் தோன்றுவதில்லை; பிரளயத்தில் துன்புறுவ தில்லை.

கடலைச் சார்ந்த உப்புப் பொம்மை கடலில் தன் வியக்தியை இழக்கிறது; அதே வேளையில் கடலின் சொரூபத்தைப் பெறுகிறது. ஞானியின் நிலை அத்தகை யது. பிரம்ம சொரூபத்தில் அவன் ஒன்ருகிருன். பிரம்ம சொரூபம் தோற்றம் ஒடுக்கம் எல்லாம் கடந்திருப்பதால், அதை அடைகின்றவனுக்குப் பிறப்பு, இறப்பு, பிணி முதலியன கிடையா.

வெறும் மனதின் கற்பனையாம். நிர்விகல்ப சமாதிக்குப் போனவனுக்குச் சிதம்பரம் ஒன்றே மெய்ப்பொருள்.

4. என்னணி யார்முலை யாக
மளைந்துட னின்புறு மாகாதே
யெல்லையின் மாக்கரு ணைக்கட
லின்றினி தாடுது மாகாதே
நன்மணி நாத முழங்கியெ
னுள்ளுற நண்ணுவ தாகாதே
நாத னணித்திரு நீற்றினை
நித்தலு நண்ணுவ தாகாதே
மன்னிய வன்பரி லென்பணி
முந்துற வைகுவ தாகாதே
மாமறை யும்மறி யாமலர்ப்
பாதம் வணங்குது மாகாதே
யின்னியற் செங்கழு நீர்மல
ரென்றலை யெய்துவ தாகாதே
யென்னை யுடைப்பெரு மானரு
ளீச னெழுந்தரு ளப்பெறிலே.

வேகவைத்த நெல்லைப் பூமியில் விதைத்தால் அது மறுபடியும் முளைக்காது. வேகவைக்காத நெல்தான் முளைவிடும். அதுபோல சித்தனான பிறகு ஒருவன் இறப்பானால் அவன் மறு ஜன்மம் அடைவதில்லை. அஸித்தனே தான் சித்தனாகும்வரையில் திரும்பத் திரும்பப் பிறவியெடுக்கவேண்டும்.

ஜீவாத்மன் அக்ஞானத்தால் ஏற்றுக் கொண்ட உபாதிகளை ஒதுக்கிவிட்டுச் சிவனோடு ஒன்றுபடுவதை ஜகத்குரு ஆதிசங்கரர் निर्वाणषट्कम् நிர்வாணஷட்கம் அல்லது நிர்விகல்ப சமாதியைப் பற்றிய ஆறு சுலோகங்களில் விளக்கியுள்ளார். அவையாவன:

मनोबुद्ध्यहङ्कारचित्तानि नाहम् न च श्रोत्रजिह्वे न च घ्राणनेत्रे ।
न च व्योम भूमिर्न तेजो न वायुः चिदानन्दरूपः शिवोऽहं शिवोऽहम् ॥

என் அணி ஆர் முலே ஆகம் அளேந்து
உடன் இன்புறும் ஆகாதே
எல்லே இல் மாக் கருணேக் கடல்
இன்று இனிது ஆடுதும் ஆகாதே
நல் மணி நாதம் முழங்கி என்
உள் உற நண்ணுவது ஆகாதே
நாதன் அணித் திரு நீற்றினே
நித்தலும் நண்ணுவது ஆகாதே.

மனே புத்த்யஹங்கார சித்தானி நாஹம்
ந ச ச்ரோத்ரஜிஹ்வே ந ச க்ராணநேத்ரே ।
ந ச வ்யோம பூமிர்ந தேஜோ ந வாயு:
சிதானந்தரூப: சிவோऽஹம் சிவோऽஹம் ॥

மனம் புத்தி அஹங்காரம் சித்தம் நான் அல்லன். கேட்பதும், சுவைப்பதும், மோப்பதும், பார்ப்பதும் எனக்கு இல்லே.

ஆகாசம் பூமி அக்னி வாயு நான் அல்லன். சிதானந்த ரூபமாகிய சிவம் நான், சிவம் நான்.

அந்தக்கரணம் ஒன்று. செயலுக்கு ஏற்ப அதற்கு நான்கு பெயர்கள் வாய்த்துள்ளன. நினைப்புக்கும் உணர்ச்சிகள் அனேத்துக்கும் அது உறைவிடமாயிருக்கும் போது அதற்குச் சித்தம் என்று பெயர். சங்கல்ப விகல்ப மயமாயிருக்கும்போது அதற்கு மனம் என்று பெயர். நல்லது கெட்டது என்று பாகுபடுத்தும்போது அதற்கு புத்தி என்று பெயர். செயலுக்குத் தன்னேக் கர்த்தாவாக உணரும்போது அதற்கு அஹங்காரம் என்று பெயர்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என ஐந்து விதங்களில் புறவுலகைப்பற்றிய செய்திகளே ஐம்பொறிகள் அந்தக்கரணத்துக்குக் கொண்டுவந்து சேர்க்கின்றன.

ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவி என ஐம் பூதங்கள் இருக்கின்றன. அவைகளின் தன்மாத்திரைகளாக அமைந்தவைகள் சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்னும் கூறுகள்.

மன்னிய அன்பரில் என் பணி
முந்து உற வைகுவது ஆகாதே
மா மறையும் அறியா மலர்ப் பாதம்
வணங்குதும் ஆகாதே
இன் இயல் செங்கழுநீர் மலர்
என் தலை எய்துவது ஆகாதே
என்னை உடைப் பெருமான் அருள்
ஈசன் எழுந்தருளப் பெறிலே.

என்னை உடைப் பெருமான் அருள்
ஈசன் எழுந்தருளப் பெறிலே:

ஜீவ வியக்தியைத் துடைத்துவிட்டு நான் பரமாத்மாவில் ஒன்றித்திருக்கும்போது:

சவிகல்ப சமாதியில் இறைவனோடு அரிய அனுபவங்கள் பல உண்டாகின்றன. பிரேமை பக்திபூண்டு வழிபாடு செய்கின்றபொழுது இன்னும் சில இனிய அனுபவங்கள் வாய்க்கின்றன. அவைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவர ஈசனுடைய பக்தன் ஒருநாளும் ஒருப்படுவதில்லை. அவனுடைய மனநிலை ஓர் உபமானத்தின் மூலம் விளக்கப்படுகிறது. அதாவது பக்தன் இறைவன் என்னும் கற்கண்டை அருந்த விரும்புகிறான். தானே கற்கண்டு ஆக அவனுக்கு விருப்பமில்லை. ஆயினும் நிர்விகல்ப சமாதியில் அவன் கற்கண்டு ஆவது திண்ணம். அதன் விளைவு வருமாறு:

அந்தக்கரணம் நான்கு, புறக்கரணம் ஐந்து, தன் மாத்திரைகள் ஐந்து, பூதங்கள் ஐந்து ஆகிய இவை யாவும் பிரகிருதியின் பாகுபாடுகளாகின்றன. இவை யாவுக்கும் ஆதாரமாயிருப்பது ஆத்மா, அது சிதானந்த ரூபமாகிய சிவம். பிரகிருதியோடு தன்னை இணைத்துக் கொள்பவன் ஜீவாத்மாவாகிறான். பிரகிருதியினின்று தன்னைப் பிரித்தெடுப்பவன் சிதானந்த ரூபமாகிய சிவமாகிறான்.

**என் அணி ஆர் முலை ஆகம் அளைந்து
உடன் இன்புறும் ஆகாதே:**

என் அணி ஆர் முலை-எனது நெஞ்சு. **ஆகம் அளைந்து**-இறைவனுடைய திருமேனியில் படிந்து.

மூர்த்தியாகப் பரமனைத் தரிசித்து அவனைக் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்வது சாத்தியப்படாது.

மார்க்கண்டேயன் சிவபூஜை செய்துகொண்டிருந்த போது மறலி வந்து மரணவலை வீசினான். இளைஞன் சிவனைச் சரணடைந்து சிவலிங்கத்தைத் தழுவியபோது லிங்கம் மூர்த்தியாக மாறியது. பக்தனுடைய நெஞ்சம் பரமனுடைய நெஞ்சைத் தழுவியபோது உண்டான சிவானந்தத்தை யார்தான் சொல்லால் விளக்கமுடியும்! அதை விட்டுப்பிரிய எந்த பக்தன்தான் இணங்குவான்! பெறுதற்கு அரிய அந்தப் பேறும் நிர்விகல்ப சமாதியில் அடிபட்டுப் போகிறது.

ஸ்ரீ கிருஷ்ணனோடு குருகுல வாசம் பண்ணியவர்களுள் ஒருவர் குசேலர். அவருக்குச் சுதாமா என்பது மற்றொரு பெயர். தமது விருத்தாப்பிய தசையில் குசேலர் வறுமை நோய்வாய்ப்பட்டிருந்தார். ஸ்ரீ கிருஷ்ணனைப் போய்த்தரிசித்து வரலாமென்று எண்ணிப் புறப்பட்டார். ஸ்ரீ கிருஷ்ணன் பெரியவர் என்பது சுதாமாவுக்குத் தெரியும். ஆனால் எவ்வளவு பெரியவர் என்பது தெரியாது. இருவரும் சந்தித்தார்கள். அன்பினால் தூண்டப்பெற்று இருவரும் ஆலிங்கனம் செய்து கொண்டனர். அதன் விளைவாக சுதாமாவானவர் புதிய மனிதனாக மாறிவிட்டார். ஸ்பர்ஸவேதியைத் தொடுகிற உலோகங்களெல்லாம் பொன்னாகின்றன என்பது ஐதிகம். பரமாத்மா தான் பிரசித்திபெற்ற ஸ்பர்ஸவேதி. அவரை அணுகுகின்ற ஜீவர்கள் அவர் மயமாகின்றனர். அதன்படி குசேலர் பரமானந்தத்தில் திளைத்திருந்தார். உலக இன்னல்களை மறந்திருந்தார். அவர் ஆலிங்கனத்தின் வாயிலாகப் பெற்றது சவிகல்ப சமாதி.

எல்லை இல் மாக் கருணைக் கடல்

இன்று இனிது ஆடுதும் ஆகாதே:

இறைவனது கருணைக் கடலில் மூழ்கிப் பேரானந்தம் துய்த்தல் என்பதும் பின் அணியில் வைக்கப்படுகிறது.

தேனீ மலரைச் சுற்றி மகிழ்வுடன் வட்டமிடுகிறது. மலரின் மீது அமர்ந்து ஆனந்தமாகத் தேனைப் பருகு கிறது. பிறகு அது தன்னை மறந்து அடையில் அமர்ந் திருக்கிறது. தேனுக்கு நிகர் இறைவனுடைய அருள். அதை அருந்தி ஆனந்தமடைந்திருக்கிற அன்பர்கள் ஆனந்தாதீதத்துக்குப் போவதுண்டு. சவிகல்ப சமாதி யில் கருணை இடம்பெறுகிறது. நிர்விகல்ப சமாதியோ சாதகனை வடிவங்களுக்கு அப்பால் எடுத்துச் செல்லு கிறது.

சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தியாக எழுந்தருளி யிருந்தார். சனன், சனகன், சனந்தனன், சனத்குமாரன் என்னும் நால்வர் அவரிடம் உபதேசம் கேட்கப் போயி னர். பரமனே சின்முத்திரைத் தாங்கி மௌனமுற்றிருந் தார். அவர் இருந்தது நிர்விகல்ப சமாதியில். அது மௌனோபதேசம் எனப்படுகிறது. சிஷ்யர்களோ முற் றிலும் பக்குவமடைந்திருந்தனர். ஆதலால் அந்த உப தேசம் அவர்களை அதீத நிலைக்கு எடுத்துச் சென்றது. ஜீவபோதம் அழிந்துபட்டுப்போகாதிருக்கிறபொழுது கருணைக்குப் பாத்திரமாதல் என்னும் அனுபவம் வாய்க் கிறது. நிர்விகல்ப சமாதியில் ஜீவபோதம் அழியும் போது கருணைக்கும் ஆங்கு இடமில்லாது போகிறது.

நல் மணி நாதம் முழங்கி என்

உள் உற நண்ணுவது ஆகாதே:

நல் மணி நாதம்-அனாஹத தொனி, ஓங்காரம்.

யோகசாதனம் புரிகிறவர்கள் தங்கள் உடலினுள்ளே கேட்கிற அனாஹததொனி என்னும் இனிய ஓசையானது நிர்விகல்ப சமாதி யினரால் கேட்கப் படமாட்டாது.

எது இயங்குகிறதோ அதில் ஓசை உண்டாகிறது. பிரபஞ்சம் முழுதும் ஓசை மயமாயிருக்கிறது. ஆதலால் "ஓசை, ஒலி எல்லாம் ஆனாய் நீயே" என்று இறைவன் போற்றப்படுகிறார். ஓசையின் தொகை ஓங்காரமாகிறது. அது ஓயாது உச்சரித்துக் கொண்டிருப்பதால் அனாஹத தொனி எனப்படுகிறது. ஊனக் காதுக்கு அது கேளாது. தூய அந்தக்கரணம் அதைக் கேட்கவல்லது. சகுண பிரம்மத்தில் அல்லது நடராஜ தத்துவத்தில் ஓசை இடம் பெற்றிருப்பதால் நாதப்பிரம்மம் என்னும் பெயரும் அவருக்கு வந்திருக்கிறது.

நாதாதீதத்தில் இருப்பது நிர்க்குண பிரம்மம். ஓங்காரம் ஆங்கு ஒலிப்பதில்லை. எனவே அது அமாத்ர பிரணவம் எனப்படுகிறது. அது சிதம்பர ரகசியம். நிர்விகல்ப சமாதியில் அந்நிலை அடையப்படுவதாகிறது.

நாதன் அணித் திரு நீற்றினை
நித்தலும் நண்ணுவது ஆகாதே:

சிவ சின்னமாகிய திருநீறு பூசுதல் போன்ற சதாசாரக்கிருத்தியங்கள் அதீதத்தில் நிகழமாட்டா.

திருநீறு மிகப் பொருத்தமான சிவ சின்னமாகிறது. அதை முறையாக அணிவது ஆத்ம சாதனத்துக்குப் பெருந்துணைபுரிகிறது. அதன் மஹிமையைப் புராணமும் வேண்டியவாறு வர்ணித்திருக்கிறது. ஆயினும் புராண வர்ணனை முற்றிலும் உண்மையா? திருநீறு பூசாது ஒருவன் சைவனாக இருக்க முடியாதா? இக்கேள்விகள் ஆராய்ச்சிக்கு உரியவைகளாம். எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.

திருநீறு பூசியவன் யாராயிருப்பினும் அவனைச் சிவ பக்தனாகக் கருதி வணங்கு. திருநீறு பூசாதவனைக் கீழோனாக ஒதுக்கிவை. இதற்கு நிகராக வைஷ்ணவன் சொல்லுவது, திருமண் அணிந்தவன் யாராயிருந்தாலும் அவனை

விஷ்ணு பக்தன் என்று கருதி வணங்கு; திருமண் அணி யாதவன் யாராயிருந்தாலும் அவனைக் கீழோனாகே விலக்கி வை. இக்கொள்கைகளில் நலன் ஒரு புறமிருக்கக் கேடு மற்றொரு பக்கம் இருக்கிறது. புறமத வெறுப்பு இதி னின்று வளர்கிறது. சமயத்தின் பெயரால் இக்கேட்டை வளர்ப்பது சரியன்று. 'ஆறு இல்லா ஊர் பாழ், நீறு இல்லா நெற்றி பாழ்' என்பது முற்றிலும் மெய்யன்று. ஆறு உடைத்திருப்பதற்கு இடையில் பாழாயுள்ள ஊர் களைக் காணலாம். ஆறு இல்லாத ஊர் ஆக்கம் மிகப் படைத்திருப்பதையும் காணலாம். நீறு பூசியுள்ள நெற்றி களெல்லாம் நேர்மையான வாழ்வுக்கு அறிகுறிகள் என முடிவுகட்டலாகாது. பாழ்நெற்றி படைத்திருப்பவர்கள் எல்லாரும் பதர் என்று பொருள்படுத்துவது பேதமையா கும். அன்று ஒரு காலத்தில் அந்தந்தச் சமய வளர்ச்சிக் குத் தூண்டுதல் போடுதற்கு நெற்றியில் நீறு போன்ற சின்னங்கள் அணிவதை அவரவர் சிலாகித்துச் சொல்லி யிருக்கின்றனர்.

சாதனத்தின் ஆரம்பதசையில் இருக்கிறவர்கள் திரு நீறுபோன்ற சின்னங்களைச் சிரத்தையுடன் கையாண்டு வழிபாடு செய்யவேண்டும். அதீதத்துக்குப் போனவர் களுக்குச் சின்னங்கள் தாமாகக் கை நழுவிப்போகின்றன.

காசியில் த்ரைலிங்க சுவாமிகள் என்று அழைக்கப் பட்ட அவதூதர் ஒருவர் இருந்தார். ஹடயோகம் பண்ணி அவர் சுமார் நானூறு வருஷம் வாழ்ந்திருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் காசிக்கு யாத்திரை போயிருந்தபோதும் அவர் திருமேனி தாங்கியிருந்தார். அவர் படைத்திருந்த அதீத நிலையை முன்னிட்டுக் காசிக்கே புதிய மகத்துவம் வாய்ப்பதாயிற்று என்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவரைப் போற்றினர். அத்தகைய த்ரைலிங்க சுவாமிகளின் செயல்கள் சில ஈண்டுக் குறிப்பிடத்தக்கவை. பார்க்குமிடமெல்லாம்

சிவலிங்க மயமாயிருப்பது காசியின் மஹிமையாகும். த்ரைலிங்க சுவாமிகள் ஆங்கு வெவ்வேறு இடங்களில் தென்படுவார். ஓர் இடத்தில் ஒரு சிவலிங்கத்தின் மீது உட்கார்ந்துகொண்டிருப்பார். மற்றோரிடத்தில் சிவலிங்கம் ஒன்று அவருக்குத் தலையணையாகப் பயன்படும். வேறு ஓர் இடத்தில் இருக்கும் சிவலிங்கம் அவருக்குக் கால் அணையாக உதவும். அப்படிச் சிவ அபராதம் செய்வதை பக்தர் உலகம் ஆமோதியாது. ஆஷாடபூதி ஒருவன் அப்படிச் செய்தால் மக்கள் அவனைத் தயங்காது புடைப்பார்கள். ஆனால் த்ரைலிங்க சுவாமிகளை நடமாடும் விசுவநாதனாகக் காசி வாசிகள் கருதினார்கள். திருநீறு பூசுதல் சிவலிங்கத்தை வணங்குதல் போன்ற சமய அனுஷ்டானங்களை யெல்லாம் கடந்து அதீதத்துக்குப் போனவர் ஆவார் அவர்.

மன்னிய அன்பரில் என் பணி
முந்து உற வைகுவது ஆகாதே:

மன்னிய-நிலைபெற்ற. முந்து உற வைகுவது-முற்பட்டிருத்தல்.

அன்பர் பணிவிடை செய்தல் என்னும் ஆனந்தக் கைங்கரியம் அதீதத்தில் நிகழ்வதில்லை.

அப்பொழுதுதான் வெட்டியெடுத்த பச்சை மரத்திலும் தீப்பற்றி எரியும்படி செய்ய விரும்பினால் அதற்கு ஓர் உபாயம் உண்டு. கனல்விட்டு எரிகிற காட்டுத் தீயில் அப்பச்சைமரத்தைப் போட்டுவிட்டால் சிறிது நேரத்தில் அதுவும் தீப்பற்றிக்கொள்ளும். சான்றோர்க்குப் பணிவிடை செய்யும் வாய்ப்பு ஒருவனுக்கு நேருமாகில் அந்தச் சான்றோரது சால்பு பணிவிடை பண்ணுபவனுக்கும் சொந்தமாகிறது.

பாண்டவரின் தாய் குந்திதேவி கன்னிகையாயிருந்த போது துர்வாச முனிவருக்குப் பணிவிடை செய்யும் வாய்ப்பு கிட்டியது. முனிவரோ முன்கோபம் படைத்தவர். தெரியாமல் செய்த சிறு குற்றத்தை முன்னிட்டும் சீறிவிழுபவர் அவர். அத்தகையவருக்கு

அக மகிழ்வு உண்டாகும்படி அரும்பணி புரிந்தாள் குந்தி தேவி. அதன் விளைவாக எந்தத் தேவதையையும் தன் வசம் ஆக்கும் ஆற்றல் அவளுக்கு வந்தமைந்தது.

வாதவூரர் தாமே ஆனந்தக் கைங்கரியத்துக்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகிறார். குதிரை வாங்குவதற்காக அரசாங்கத்தின் செல்வத்தை அவர் எடுத்துக்கொண்டு போனார். வழியில் சிவகுருவையும், சிவனடியார்களையும் சந்தித்தார். தம் கடமையை மறந்துவிட்டு அன்பர் பணி விடையில் அரசன் செல்வத்தையெல்லாம் செலவிட்டார். அப்பணிவிடை அவருக்குப் பரமானந்தத்தை ஊட்டியது. அதற்காக அரசன் அவருக்குக் கொடுத்த தண்டனையை அமைதியாக ஏற்றுக்கொண்டார். அன்பர் பணிவிடையில் உதித்த ஆனந்தம் அந்த அல்லல்களை யெல்லாம் விழுங்கிவிட்டது. உலக இன்னல் அவருக்கு இன்னலாகத் தோன்றவில்லை. அன்பர் பணியில் வந்த ஆனந்தம் அவ்வளவு பெரியது. அத்தகைய பேரானந்தமும் சமாதி நிலையில் நிர்மூலமாகி மறைந்து போகிறது.

மா மறையும் அறியா மலர்ப் பாதம்
வணங்குதும் ஆகாதே:

வேதங்களால் விளக்க முடியாத திருவடியை வணங்க ஜீவ வியக்தி எஞ்சியிருப்பதில்லை.

இவ்வுலகைப் பற்றிய ஞானங்களை யெல்லாம் சேர்த்து வேதங்கள் என்று சொல்லுவது ஐதிகம். இதை இன்னும் நன்கு தெளிவு படுத்துமிடத்து இயற்கை முழுதுக்கும் அமைந்துள்ள விளக்கங்கள் சேர்ந்து வேதங்கள் ஆகின்றன. அவைகளை ஓதி ஆராய்கின்றவளவு மனிதன் உலக ஞானத்தைப் பெருக்கலாம். உலகில் அவன் பெறக்கூடிய இன்பத்தை வளர்க்கலாம். பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் என்னும் உலகங்கள் எல்லாம் இயற்கையிலேயே இருக்கின்றன. இம்மை, மறுமை என்று இயம்பப் பெறுபவைகளும் இயற்கையிலேயே இருக்கின்றன. ஆதலால் வேதங்கள் எதற்கு உதவுகின்

றன என்பது வெளியாகிறது. ஆயுள், ஆரோக்கியம், இந்திரிய சுகங்கள் ஆகியவைகளைப் பெறுதற்கு அவை கள் பயன்படுகின்றன. வேதங்களுக்கும் மேலாய நிலை யில் இருப்பது வேதாந்தம். பக்தியையும் பரஞானத்தை யும் வளர்ப்பதற்கு வேதாந்தம் உதவுகிறது. போகத்தை வளர்ப்பவைகள் வேதங்கள். யோகத்தை ஊட்டுவது வேதாந்தம். சிவ பக்திக்கும் சிவ ஞானத்துக்கும் ஏது வாயிருப்பது வேதாந்தம். அங்ஙனம் பக்தியையும் ஞானத்தையும் வளர்ப்பதற்கு ஏற்பப் பரமனுடைய திரு வடியை சகுண, சவிகல்ப, சோபாதிக சமாதியில் சாத கன் அணுகுகிறான். சிவானந்தத்தில் அவன் திளைத் திருக்கிறான். அவனுடைய சவிகல்ப சமாதியானது நிர்வி கல்ப சமாதியாக உயருங்கால் சகுண சமாதி நிர்க்குண சமாதியாகிறது; சோபாதிக சமாதி நிருபாதிக சமாதி யாகிறது. அதாவது உபாதி ஒன்றும் ஆங்கு எஞ்சி யிருப்பதில்லை. எரிகின்ற சுத்த கற்பூரத்தில் சாம்பலோ, கரியோ எஞ்சியிருப்பதில்லை. சுத்த கற்பூரம் பரஞானத் துக்குச் சின்னமாகிறது. ஜீவ உபாதி ஆங்கு அறவே நசித்துப் போகிறது. ஆதலால் இறைவனுடைய மலர்ப் பாதங்களை வணங்குதற்கு ஆள் மிச்சமில்லை.

இன் இயல் செங்கழுநீர் மலர் என்
தலை எய்துவது ஆகாதே:

செங்கழுநீர் மலர்-சிவப்பு நிறமான நீராம்பல்; ஈண்டு இது செந்தாமரையைக் குறிக்கிறது.

அருளே வடிவெடுத்துள்ள இறைவனது தாமரைத் திருவடி என் தலைமீது நாட்டப் பெறுவது ஆகாது.

தாமரைப் பூவானது பாரமார்த்திகத் தத்துவங்கள் பலவற்றிற்குச் சின்னமாகிறது. வடமொழியில் அதற்குப் பெயர்கள் பல அமைந்துள்ளன. அவைகளுள் அரவிந் தம் என்பது ஒன்று. இறைவனுடைய வடிவத்தை வர்ணிப்பதற்கு இப் பதப்பிரயோகம் எப்படியெல்லாம் அமைந்திருக்கிறது என்று பார்ப்போம்.

சீர்ஷாரவிந்தம்—திருமுடித் தாமரை
முகாரவிந்தம் — திருமுகத் தாமரை
ஹ்ருதாரவிந்தம் — திருவுளத் தாமரை
கராரவிந்தம்—திருக்கரத் தாமரை
பதாரவிந்தம்—திருவடித் தாமரை

பக்தியின் மேலிட்டால் இங்ஙனம் சொற் சித்திரம் வடிவெடுக்கிறது.

தத்துவத்துக்குச் சிறந்ததொரு சின்னமாகிறது மலர். சமயங்கள் யாவுக்கும் இந்தச் சின்னம் பொதுவானது. "மலர் மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார் நில மிசை நீடுவாழ்வார்" என்கின்றது பொதுமறை. இங்கு மலரானது மனத்தைக் குறிக்கிறது. அறிவுப்பொருள் அதில் வீற்றிருக்கிறது. அறிவான தெய்வம் சித்தமிசை குடிகொண்டிருப்பது அனைவருடைய அனுபவம். மலரில் உள்ள எழிலும் இனிமையும் புதுமையும் மனதுக்கு வருமாகில் அது அப்பொழுதே பரமனுக்கு உரிய பெருங் கோயில் ஆகிறது. மலரை மாதிரியாக வைத்துக் கொண்டு மனதைப் புதுப்பிப்பவர்கள் நல்ல ஆத்மசாதகர் ஆகின்றனர்.

ஞானத்தை அடையப்பெற்ற பிறகு புத்தர் பெம்மான் பாதம் வைத்த இடங்களிலெல்லாம் தாமரை மலர் தோன்றிற்று என்னும் ஐதிகம் உண்டு. ஞானியர் மாநிலத்துக்கு மலரின் புதுமையை வழங்குகின்றனர் என்பது அதன் கருத்தாகும்.

செந்தாமரை மலர்போன்ற சிவனாரது சீர் அடி தம் தலையில் படிந்ததை மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார். அருளுக்குப் பாத்திரமானவர்கள் பலருக்கு இதே அனுபவம் வாய்த்திருக்கிறது. 'தன் பாதம் சென்னியில் வைத்தான்; என்னைத்தான் அறிந்தேன், மனம்தான் இறந்தேனே' என்கிறார் தாயுமானவர். பரவச நிலையில் இருந்துகொண்டு பரமஹம்சதேவர் தமது பாதத்தை

நரேந்திரர் சிரசில் வைக்கிருர். உடனே அவருக்குச்சமாதி நிலை கூடுகிறது. அவர் ஒரு ஞானியாக மாறியமைகிருர். வழிமுறை வழிமுறையாக நிகழ்ந்த நிகழ்ச்சி இவ்விருவருக்கிடையிலும் நிகழ்வதாயிற்று.

திருவடி தீக்ஷை சாமானியமானதன்று. அது ஸ்பர்ஸ தீக்ஷை எனவும் பெயர் பெறுகிறது. பக்குவமாயுள்ள சிஷ்யனை அது அக்கணமே ஞானியாக மாற்றுகிறது. இது சவிகல்ப சமாதி. நிர்விகல்பசமாதியில் குரு சிஷ்யன் என்ற பேதம் போய்விடுகிறது. அதைத்தான் அண்ணல் ஈண்டுப் பகர்ந்தருள்கின்ருர்.

5. மண்ணினின் மாயை மதித்து
வகுத்த மயக்கறு மாகாதே
வானவ ரும்மறி யாமலர்ப்
பாதம் வணங்குது மாகாதே
கண்ணிலி கால மனைத்தினும்
வந்த கலக்கறு மாகாதே
காதல் செய்யும்மடி யார்மன
மின்றுக ளித்திடு மாகாதே

न च प्राणसंज्ञो न वै पञ्चवायुः न वा सप्तधातुः न वा पञ्चकोशः ।
न वाक्पाणिपादं न चोपस्थपायुः चिदानन्दरूपः शिवोऽहं शिवोऽहम् ॥

ந ச ப்ராணஸம்ஞோ ந வை பஞ்சவாயு:
ந வா ஸப்ததாது: ந வா பஞ்சகோச: ।
ந வாக்பாணிபாதம் ந சோபஸ்தபாயு:
சிதானந்தரூப: சிவோऽஹம் சிவோऽஹம் ॥

பிராணன் எனப்படுவது நான் அல்லன், பஞ்ச வாயுக்களும் நான் அல்லன். ஏழு தாதுக்கள் நான் அல்லன், பஞ்சகோசங்கள் நான் அல்லன். வாக்கு, கை, கால், குதம், குய்யம் நான் அல்லன். சிதானந்த ரூபமாகிய சிவம் நான், சிவம் நான்.

உயிர்த் தத்துவமாய் இலங்குவது பிராணன். அது ஐந்து கூறுகளுடைய வாயுக்களாக உடலெங்கும் வியா

பெண்ணலி யாணென நாமென
வந்த பிணக்கறு மாகாதே
பேரறி யாத வனேக
பவங்கள் பிழைத்தன வாகாதே
யெண்ணிலி யாகிய சித்திகள்
வந்தெனை யெய்துவ தாகாதே
யென்னை யுடைப்பெரு மானரு
ளீச னெழுந்தருளப் பெறிலே.

மண்ணினில் மாயை மதித்து வகுத்த
மயக்கு அறும் ஆகாதே
வானவரும் அறியா மலர்ப்
பாதம் வணங்குதும் ஆகாதே
கண் இலி காலம் அனைத்திலும் வந்த
கலக்கு அறும் ஆகாதே
காதல் செய்யும் அடியார் மனம்
இன்று களித்திடும் ஆகாதே.

பித்திருக்கிறது. எலும்பினுள்ளே இருக்கிற மஜ்ஜையில் துவங்கிப் புறத்தில் சர்மம் அல்லது தோல் வரையில் உள்ள ஏழு தாதுக்களால் ஆகியது தேகம். அன்னமய கோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விக்ஞான மய கோசம், ஆனந்தமய கோசம் ஆகிய ஐந்து கோச வடிவத்தில் சரீரம் இருக்கிறது. வாக்கு, கை, கால், குதம், குய்யம் என்பன கர்மேந்திரியங்கள் ஆகின்றன. உடலின் கூறுகளாகிய இவை யாவும் பிரகிருதியின் அம்சங்களாம். இவைகள் மயமாகத் தன்னை உணர்பவன் ஜீவாத்மாவாகிறான். இவைகளுக்கு அப்பாற்பட்டவனாகத் தன்னை உணர்பவன் சிவசொரூபமாகிறான்.

न मे द्वेषरागौ न मे लोभमोहौ न मे वै मदो नैव मात्सर्यभावः ।
न धर्मो न चार्थो न कामो न मोक्षः चिदानन्दरूपः शिवोऽहम् शिवोऽहम् ॥

ந மே த்வேஷராகௌ ந மே லோப மோஹௌ
ந மே வை மதோ நைவ மாத்ஸர்ய பாவ: ।
ந தர்மோ ந சார்த்தோ ந காமோ ந மோக்ஷ:
சிதானந்தரூப: சிவோऽஹம் சிவோऽஹம் ॥

பெண் அலி ஆண் என நாம் என
வந்த பிணக்கு அறும் ஆகாதே
பேர் அறியாத அனேக பவங்கள்
பிழைத்தன ஆகாதே
எண் இலி ஆகிய சித்திகள் வந்து
எனை எய்துவது ஆகாதே
என்னை உடைப் பெருமான் அருள்
ஈசன் எழுந்தருளப் பெறிலே.

என்னை உடைப் பெருமான் அருள்
ஈசன் எழுந்தருளப் பெறிலே:

நிரந்தரமாயுள்ள சிவ போதத்தில் ஜீவபோதம் கரையுங்கால் நிகழ்வன வருமாறு:

மண்ணினில் மாயை மதித்து வகுத்த
மயக்கு அறும் ஆகாதே:

மண்ணுலக வாழ்க்கையில் பெரும் பற்று வைக்கும்படி மாயா சக்தி அதற்கு மதிப்புக்கொடுக்கிறது. நிர்விகல்ப சமாதியில் அந்த மயக்கம் அறுபட்டுப் போகிறது.

வெறுப்பும் விருப்பும் எனக்கில்லை, உலோபமும் மோகமும் ஒழிந்தன. மதமும் மாத்சரியமும் என்னை அணுகா. அறம் பொருள் இன்பம் விடு என்பன எனக்குப் பொருளற்றவை. சிதானந்த ரூப மாகிய சிவம் நான், சிவம் நான்.

வெறுப்பும் விருப்பும் மனதின் செயல்களாகின்றன. உலோபம் என்பது யாருக்கும் எதையும் வழங்க மாட்டேன் என்னும் பான்மையாம். திரிவுபட்ட காட்சி மோகமாகிறது. கெட்ட மனமுடையவனுக்கு நல்லவர்களும் கெட்டவர்களாகத் தென்படுவார்கள். அக்குறைபாடு மோகமெனப்படுகிறது. தற்பெருமை மதமெனப்படுகிறது. பிறரை அலட்சியப் படுத்துவது மாத்சரியம். உலக வாழ்க்கையில் பற்று வைத்திருப்பவனுக்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவைகளை நாடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. தன்னைச் சிவ சொரூபமாக அனுபூதியில் அறிகிற ஞானிக்கு இவை யாவும் பொருளற்றவைகளாம்.

(ஆகாதே என்னும் சொல் ஆகும் என இங்குப் பொருள்படுகிறது)

பொதுவாக வானவெளி தெளிவுற்றிருக்கிறது. திடீரென்று அதில் மேகம் வந்து கூடுகிறது. அது மின்னிப் படர்ந்து மழையாகப் பொழிகிறது. உயிர் வகைகளுக்கு உணவு ஆவதற்கு அது ஏதுவாயிருந்துவிட்டு மீண்டும் மறைந்து போகிறது. பழையபடி வெட்டவெளி எஞ்சி நிற்கிறது. அந்த மேகம் போன்றது மாயை. வானம் போன்றது சிதாகாசம். சிதாகாசத்தில் மாயை தோன்றி, இருந்து, மறைகிறது.

எது இடையறுது நிலை மாறுகிறதோ அது மாயை. ஒரு கணத்துக்கு முன்பு இருந்ததுபோன்று ஒரு கணத்துக்குப் பின்பு அது இருப்பதில்லை. உலகங்களும் அவைகளில் உள்ள உயிர் வகைகளும் மாயா காரியங்களாகின்றன. அவைகளுக்கு நிலைபேறு இல்லை. ஆயினும் நிலைபேறு இருப்பதாக எண்ணுவது மயக்கம். இந்த மயக்கம் இருக்கும் வரையில் பிறவி பெருகிக்கொண்டே போகும். வினைக்கு ஏற்பப் பிறவிகள் மேலானவைகளாகவும் கீழானவைகளாகவும் மாறி மாறி அமைகின்றன.

கிருஷ்ண பரமாத்மாவும் நாரத மஹரிஷியும் ஒரு தடவை உலாவச் சென்றனர். பக்தியும் ஞானமும்ஒன்றே என்னும் விஷயத்தை அவர்கள் பேசிக்கொண்டுபோனார்கள். தமக்கு உற்ற ஐயம் ஒன்றை அகற்றி வைக்க வேண்டுமென்று நாரதர் விண்ணப்பித்தார். மாயையின் மயக்கும் தன்மை எத்தகையது என்பது அவர் கிளப்பிய கேள்வியாகும். அதைப்பற்றிப் பிறகு பேசுவோம் என்றும், முதலில் தமக்குப் பருகுதற்குக் கொஞ்சம் தண்ணீர் தேடிக்கொண்டு வரவேண்டும் என்றும் கண்ணபிரான் நாரதரிடம் ஆக்ஞாபித்தார்.

எதிரில் குக்கிராமம் ஒன்று தென்பட்டது. நாரதர் அங்கு விரைந்து சென்றார். கோலமிட்டு அலங்கரிக்கப் பட்டிருந்த குடிசை ஒன்று அவரை வரவேற்கும் பாங்கு

உடையதாகக் காட்சி கொடுத்தது. அதை அணுகிக் கதவைத் தட்டினர். உள்ளிருந்து அது திறக்கப்பெற்றது. கட்டழகே வடிவெடுத்திருந்த காரிகையொருத்தி அச்சமும் நாணமும் உடையவளாகக் காட்சி கொடுத்தாள். "மாதே, தூய பாண்டம் ஒன்றில் கொஞ்சம் நன்னீர் தருவாயா?" என்றார் வந்தவர். விடையொன்றும் விடுக்காது நீர் எடுத்துவந்தாள் வனிதை. அதற்குள் அவளது வடிவம் நீர் கேட்டவர் நெஞ்சில் ஆழப் பதிந்து விட்டது. அவர் பேச்சைப் பெருக்கினர். விடையும் பொருத்தமாக வந்துகொண்டிருந்தது. இருவர் கருத்தும் ஒருமித்தன. சிறிது நேரத்துக்குள் தையலின் தாய் தந்தையர் தோட்டத்திலிருந்து திரும்பி வந்து சேர்ந்தனர். தமது எண்ணத்தைத் தயங்காது நாரதர் பெண்ணின் பெற்றோரிடம் தெரிவித்தார். மகளுக்கு நல்ல மணமகன் வேண்டுமென்று தேடிக்கொண்டிருந்த பெற்றோரும் கன்னிகாதானம் செய்துவைக்கச் சம்மதித்தனர். சுபதினம் ஒன்றில் பெரியோர் பலர் முன்னிலையில் விவாகம் இனிது நிறைவேறியது. விரைவில் மணமக்களைத் தனிக் குடும்பமாகப் பிரித்து வைத்தனர்.

இல்வாழ்வு இனிது நிகழ்வதாயிற்று. இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது மண்ணுலக வாழ்வின் கூறு ஆகும். ஆனல் தெய்வாதீனமாக இந்தக் குடும்பத்துக்கு இன்னல்கள் அதிகம் வரவில்லை. நல்லறமாகிய இல்லறம் நிம்மதியாக நிகழ்வதாயிற்று. காலச் சக்கரத்தின் ஓயாத ஓட்டம் இக்குடும்பத்தார் உள்ளத்தில் கசப்பு எதையும் விட்டுவைக்கவில்லை. பன்னிரண்டு ஆண்டுகள் பறந்தோடிவிட்டன. அதற்கிடையில் அவர்கள் மக்கள் மூவரைப் பெற்றனர். மூத்தவனுக்கு வயது ஒன்பது. மூன்றாம் பேற்றினுக்கு ஆண்டு இரண்டு. இப்பொழுது எதிர்பாராத விபத்து ஒன்று வருவதாயிற்று. யமுனை நதியில் பிரவாகம் விரைந்து பெருக்கெடுத்தது. ஊருக்குள் படிப்படியாக நீர்மட்டம் உயர்ந்தது. கிராமத்தைக்

காலிபண்ணுவதைத்தவிர வேறு வழியில்லை. ஏற்கனவே இடுப்பு அளவு நீர்; அது இன்னும் விரைந்து ஏறிக் கொண்டிருந்தது. என்ன செய்வதென்று ஊராருடன் கலந்து பேசுதற்கோ, பரஸ்பர உதவி செய்துகொள்ளு தற்கோ அவகாசமில்லை. அவரவர்க்குத் தோன்றியவாறு கும்பல் கும்பலாக மக்கள் விரைந்து வெளியே கிளம்பிப் போகின்றனர்.

நாரதர் குடும்பமும் தப்பித்து உயிர்பிழைக்க முந்து கிறது. கணவன் தலையில் ஒரு மூட்டை, தோளில் கடை சிக் குழந்தை. மனைவியின் தலையில் ஒரு மூட்டை, இடுப் பில் இரண்டாவது குழந்தை மூத்தவனை இருமருங்கிலும் தாயும் தந்தையும் பிடித்துக்கொண்டு வெளியேகுகின் றனர். நெஞ்சு அளவு நீரில் நிதானமாக நடக்கின்றனர். எங்கு மேடு, எங்கு மடு என்பது ஒன்றும் தெரியவில்லை. பாதத்தைக்கொண்டு பாதையை உணர்ந்து பையப் பையப் போகின்றனர். தரையோ சற்றுத் தூரத்தில் தென்படுகிறது. அதை எட்ட முடியுமா என்னும் ஏக்கம் உள்ளத்தை வாட்டுகிறது. "இறைவா, எங்களைக் காப் பாற்று" என்ற உணர்ச்சி ஒருபுறம் அதனுள் துடிதுடிக் கிறது.

சுழிமடு ஒன்றில் நாரதர் குடும்பம் திடீரென்று மூழ்கி மறைகிறது. சில அடிகளுக்கு அப்பால் கழுத்து அளவு நீரில் நாரதர் மேலே கிளம்புகிறார். மனைவி, மக்கள், மூட்டை முடிச்சு ஆகிய உடைமை அனைத்தையும் ஆற்றுப் பெருக்கு அடித்துக்கொண்டு போகிறது. "ஈசா, என்கதி இப்படியாயிற்றே" என்று தலையில் அடித்துக்கொண்டு தவிக்கிறார், கதறுகிறார், பதறுகிறார்.

தமது முதுகை யாரோ தொடுவதுபோன்று உணர்ந் தார். நாரதர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். முறு வல் ததும்பும் முகத்துடன் முரளீதரன் முகுந்தன் நின்று கொண்டிருந்தார். "அரைமணி நேரமாக நான் நீருக்குக்

காத்திருக்கிறேன்'' என்றார் கிருஷ்ணபரமாத்மா. அந்த அரைமணி நேரத்துக்குள் ஒருதடவை ஜன்மம் எடுத்து அனுபவிக்கிற குடும்ப வாழ்வின் இயல்புகள் யாவும் தோன்றி, இருந்து, மாயமாய் மறைந்தும் போயின! “பிரபோ, உமக்கு ஒரு நமஸ்காரம், உமது மாயைக்கு ஒரு நமஸ்காரம். இந்த மாயையின் மோஹன சக்திக்கு ஒரு நமஸ்காரம். மீண்டும் இந்த மாயைக்கு நான் வசப் படாதிருக்கும்படி அருள்புரிவீராக,'' என்று பணிந்து விண்ணப்பித்தார் நாரதர். மாயோன் ஆகிய கிருஷ்ண பரமாத்மா புன்னகை பூண்டார்.

பலப்பல மாறுதல்களுடன் இந்த நிகழ்ச்சி மக்கள் எல்லாருக்கும் பிறவிதோறும் வந்துகொண்டே இருக்கி றது. ஆனல் ‘மயக்கு அறுபடுதல்’ மட்டும் அவர்களுக்கு வாய்ப்பதில்லை. வாய்ப்பதற்கு அரிதாகிய ‘மயக்கு அறு படுதல்’ மாணிக்கவாசகருக்கு நிர்விகல்ப சமாதியிலே நேர்வதாயிற்று.

வானவரும் அறியா மலர்ப்பாதம்
வணங்குதும் ஆகாதே:

வானவரும்-தேவர்களும், இந்திரியங்களும்.

இந்திரியங்களைக்கொண்டு அறிந்துகொள்ள முடியாத பர மாத்ம சொரூபம் மனதின் அதீதத்தில் வணங்குதற்கு உரிய புறப் பொருள் ஆவதில்லை.

அறியும் தன்மையுடையது ஆத்மா. ஆனல் ஜீவாத் மன் சிற்றறிவு படைத்தவன். பரமாத்மாவோ வாலறி வன். அறிவு தன் சொரூபத்தைத் தானே அறிகிறது. அதை அறிந்துகொள்வதற்குப் பொறிகள் பயன்பட மாட்டா. நம்மை நாம் சரியாக ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை விளங்கும்.

கார் இருளில் கொள்ளைக்காரர் சிலரிடமிருந்து தப் பித்துக்கொள்ளுதற்கு ஒரு மனிதன் சந்து பொந்துகளில் புகுந்து ஓடுகிறான். ஒரு குட்டிச் சுவரினுள் புகுந்து

அவன் உட்கார்ந்துகொள்கிருன். துரத்திக்கொண்டு வந்தவர்கள், அண்மையில் நின்றுகொண்டு 'ஓடியவன் ஆங்கு இல்லை' யென்று உரக்கப்பேசுகிருர்கள். அன்னவர் பேச்சைக் கேட்டதினுல் தான் இருப்பதைப்பற்றி அவன் ஐயங்கொள்கின்ருனு? இல்லவே இல்லை. தான் இருப்ப தற்குத் தானே அத்தாட்சி. இருக்கின்ருன் என்ருே, இல்லை என்ருே மொழிகிறமொழி அவனுடைய ஆத்ம சைதன்யத்தை விளக்குகின்றதா? அதுவுமில்லை. ஆத்மா வின் இருப்பு சொல்லுக்கு எட்டாதது. உலகப் பொருள் கள் இருப்பதையும் இல்லாததையும் சொல்லால் சுட்டிக் காட்டுவதுபோன்று ஆத்மாவின் சான்னித்தியத்தைச் சுட்டிக்காட்ட நாவுக்கு இயலாது. அதோ இருக்கிருன் என்று உடலைச் சுட்டிக் காட்டலாம். உடலுக்குள் குடி கொண்டுள்ள ஆத்மாவை அந்தச் சொல் விளக்கவல்ல தன்று.

கண் என்னும் பொறி எதற்குப் பயன்படுகிறது என்று பார்ப்போம். குட்டிச்சுவரில் ஒளிந்து உட்கார்ந் திருப்பவன் கார் இருளில் தன் உடலைக் காண்பதில்லை. தன் உடலில் ஏதோ ஒட்டியிருப்பது கீலா, எண்ணெய்ச் சாயமா என்பதும் அவனுக்குத் தெரியாது. வெளிச்சத் துக்கு வந்தவுடன் உடலைப் பார்க்கிருன்; அதில் படிந் துள்ள பொருளையும் பார்க்கிருன். ஆனுல் ஆத்மாவைக் காண்பதற்குக் கண் உதவுவதில்லை. கண் தெரியாமையி ஞல் உடல் நிலையைப்பற்றி வருகிற சந்தேகம், தான் உணர்வு சொரூபியாய் இருப்பதைப்பற்றி வருவதில்லை. அவன் ஆங்கு இல்லையென்று மற்றவர்கள் சொன்னுலும், தன் உடல் தன் கண்ணுக்கே தென்படாதிருந்தாலும் தான் முழு ஆளாக ஆங்கு மறைந்திருப்பதைப்பற்றி அவ னுக்கு ஐயமில்லை. ஏனென்ருல் தன் சொந்த அனுபவமே தான் இருப்பதற்கு அத்தாட்சியாகிறது. ஆத்மா தன்னைத் தானே காண்கிறது; ஊனக்கண் அதைக் காணுது.

ஊறு அல்லது ஸ்பர்ச உணர்ச்சி ஐம்பொறிகளுள் ஒன்றுகிறது. இது மேனிமுழுதிலும் பரவியுள்ளது. குளிர் வெப்பம், கடினம் மிருதுபோன்ற உணர்ச்சிகள் இதன் மூலம் நுகரப்படுகின்றன. இதன் செயல் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகியவைகளை அறிந்துகொள்ளுதற்கு உதவுகிறது. ஐம்பூதங்களுள் ஒன்றுகிய ஆகாசத்தை அறிதற்கோ இது உதவாது. அதற்கு அப்பால் உள்ள ஆத்மசொரூபத்தை இது எங்ஙனம் எட்டப்போகிறது? வாயு தேவதை ஸ்பர்ச உணர்ச்சிக்கு அதிஷ்டானமூர்த்தி யாயிருக்கிறது. அறிவு மயமாய், ஆனந்த சொரூபமாய் இருக்கிற ஆத்ம தத்துவத்தைத் தொட்டு உணர்வது இயலாது.

சுவைப்பதற்கு என்று ஓர் இந்திரியம் அமைந்துள் ளது. அதற்கு ஆதிக்கம் நல்குவது வருணன் அல்லது ஜல தேவதை. நாவுக்கு ஒத்தது எது, ஒவ்வாதது எது என் பதை இப்பொறி புலப்படுத்துகிறது. உடலுக்குள்ளே உணவாகச் செலுத்துதற்குத் தகுந்தது அல்லது தகாதது எது என்பதை இது காட்டித் தருகிறது. ஆக, உடலைப் பேணுதற்கு இது உற்றதொரு தோழன். அறிவாய் ஆனந் தமாய் இருக்கிற ஆத்மாவைச் சுவைபார்த்து யாருமே கண்டுகொள்ளமுடியாது. ஆத்ம ஞானத்துக்குச் சுவைப் பது ஓர் உபாயம் என்றால் உணவு உண்பவர்களெல் லாரும் ஆத்ம ஞானிகளாவார்கள். ஆனால் அது ஆகாத காரியம்.

கிராணேந்திரியம் அல்லது மூக்கு ஐம்பொறிகளுள் ஒன்று ஆகிறது. மோத்தல் அதன் புலனாக அமைந் துள்ளது. சுவாசிக்காது இரண்டொரு நிமிஷமாவது மனிதன் உயிர் வாழ்ந்திருக்க முடியாது. எண்ணெய் இல்லாது விளக்கு எரியாது. அங்ஙனம் பிராண வாயு இல்லாது பிராணிகள் உயிர்வாழமாட்டா. வாழ்வுக்கு இன்றியமையாத வாயுவில் உள்ள நலன் கேடுகளை மோத்தல் மூலம் மூக்கு விளக்கிக் காட்டுகிறது. துர்

நாற்றம் தீங்குடையது. நற்மணம் சிறிது நேரத்துக்கு அங்கீகரிக்கப்படுகிறது. அதை நெடிது மோப்பது உயிர் வாழ்வுக்கு நன்று அன்று. மணமில்லாத காற்று நிர்க்குண பிரம்மத்துக்கு நிகர். வாழ்வை அது நன்கு ஓம்புகிறது. பொருத்தமான காற்று, பொருந்தாத காற்று என்பதை மூக்கு என்னும் பொறி அறிவுறுத்து கிறது. மற்று ஆத்ம தத்துவத்தை மோந்து பார்க்க முடியாது. அது பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டது.

தேவன் என்னும் சொல் திவ்வியமானது அல்லது பிரகாசமுடையது எனப்பொருள்படுகிறது. ஐம்பொறி களும் தேவர்கள் ஆகின்றன. பிரபஞ்சத்தைப்பற்றிய ஞானம் அவைகளைக்கொண்டு அடையப்படுகிறது. ஆத்ம தத்துவத்தை அவைகள் விளக்க வல்லவைகளாகா. நிர்விகல்ப சமாதியில் அவைகள் செயலற்றுப்போகின் றன. ஜீவனும் ஒடுங்குகிறான். ஆதலால் வானவரும் அறியா மலர்ப்பாதம் வணங்குதும் ஆகாதே என்கின்றார் அண்ணல்.

கண் இலி காலம அனைத்தினும் வந்த
கலக்கு அறும் ஆகாதே:

கண் இலி காலம்-அளக்க முடியாத காலம். கலக்கு அறும்-குழப்பம் அறுபட்டுப்போதல்.

அகண்டாகாரத்தில் விரிந்து ஓடும் காலத்தினுள் என்னென்ன நிகழ்ச்சிகள் புதைந்து கிடக்கின்றனவென்பது யாருக்கும் விளங்கு வதில்லை. அத்தகைய காலமும் அதீதத்தில் அழிந்துபட்டுப் போகிறது.

(ஆகாதே என்னும் சொல் இவ்விடத்திலும் ஆகும் எனப் பொருள்படுகிறது.)

காலம் ஒரு தேவனாகக் கருதப்படுகிறது. சிவனா ருடைய பூதகணங்களுக்குப் பைரவர்கள் என்று பெயர். அவர்களுள் கால பைரவன் என்பான் ஒருவன். அவன் கால வடிவினன் ஆதலால் அந்தப் பெயர் பெற்றான். கன்னங்கறேலென இருக்கிறது அவனுடைய காயம்.

அன்னை பராசக்தியின் பல சொரூபங்களுள் ஒன்று காளி தேவி. காலீ என்னும் சம்ஸ்கிருதச் சொல் காளி என்று தமிழில் திரிவு பட்டது. கால சொரூபமாக இருப்பவள் காலீ. அமாவாசை இருள்போன்று கறுத்த திருமேனி யுடையவள் காலீ. முன் சென்றதும் இனி வருவதும் காட்சிக்கு எட்டாததால் அது கண் இலி காலம் என விளக்கப்படுகிறது. இறந்த காலம் அகண்டாகாரத்தில் விரிந்து ஓடுகிறது. எதிர் காலம் அகண்டாகாரத்தில் விரிந்து ஓடுகிறது. இவ்விரண்டும் யார் கண்ணுக்கும் எட்டாதவை. அக்கோட்பாட்டை முன்னிட்டுக் காளிகா தேவி கரிய நிறம் எய்தியுள்ளாள்.

இரண்டு நிகழ்ச்சிகளுக்கு இடையில் உள்ள இடை யீடு காலம் எனப் பெயர் பெறுகிறது. சூரியோதயம் என் பது ஒரு நிகழ்ச்சி. சூரிய அஸ்தமனம் மற்றொரு நிகழ்ச்சி. இவ்விரண்டுக்கும் இடையில் இருப்பது காலம் என விளக்கப்படுகிறது. காலத்தில் நுண்ணியது கணப் பொழுது எனப்படுகிறது. ஒரு பிரம்மா அல்லது நான் முகப் படைப்புக் கடவுளின் ஆயுள் கல்பம் எனப்படு கிறது. அது மானுட அளவையில் $52,00,000 \times 1000 \times 365 \times 100$ வருஷங்கள் ஆகின்றன. இத்தகைய அனந்த கோடி கல்பங்கள் காளிதேவியின் சொரூபத்தில் ஒடுங்கு கின்றன. ஆதலால் அது கண் இலி காலம் எனப்படுகிறது.

காலத்தைக் குறித்துக் கலக்கு உறுவது ஜீவர்களின் இயல்பு. குடும்பி ஒருவனுக்கு மகப்பேறு எக்காலத்தில் வாய்க்கும் என்ற கலக்கம்; கர்ப்பத்தில் இருப்பது ஆணோ, பெண்ணோ, அலியோ என்று அது பிறக்கும் காலம் வரையில் கலக்கம்; மகப்பேற்றினுக்கு ஆயுள் எத் தகையதோ என்று காலத்தைப்பற்றிய கலக்கம்; மகன்எப் பொழுது படித்து மேல்நிலைக்கு வருவான் என்று காலத் தைப் பற்றிய கலக்கம்; தனக்குச் சுகபோகம் நிறைந்த பெருவாழ்வு எப்பொழுது கிட்டுமா என்று காலத்தைப்

பற்றிய கலக்கம்; மரணம் தன்னை எப்பொழுது எடுத்து விழுங்குமோ என்று காலத்தைப்பற்றிய கலக்கம். இங்ஙனம் வாழ்வு முழுதும் காலத்தைப்பற்றிக் கலக்கம் உறுவதாய் அமைந்திருக்கிறது.

குறுகிய காலம் நீண்ட காலமாகத் தோன்றுவதும், நீண்ட காலம் குறுகிய காலமாக ஒடுங்குவதும் மனநிலையைப் பொறுத்திருக்கின்றன. தன் தாயை விட்டுப் பிரிந்திருக்கும் சிறுவனுக்கு ஒரு நாள் நீண்ட பல நாட்கள் போன்று தோன்றும். தன் தாயோடு இனிது வாழ்ந்து வரும் சிறுவனுக்கு நீண்ட விடுமுறை குறுகிய காலம் போன்று மனதுக்குத் தோன்றும். பாடம் படிக்க இயலாதவனுக்கு ஒருமணி நேரம் வகுப்பில் இருப்பது நீண்ட காலமாகத் தென்படுகிறது. தலைமாணாக்கனுக்கோ ஒரு நாள் ஒரு மணிக்கு நிகராக விரைவில் ஓடுகிறது. நல்வாழ்வு வாழ்கின்றவர்களுக்குக் காலச் சக்கரம் ஓடுவது தெரிகிறதில்லை. காலத்தைப் பற்றி அவர்களுக்குக் கலக்கம் ஏதுமில்லை.

சிவனாருக்கு காலகாலன் என்பது ஒரு பெயர். அதாவது அவர் காலாதீதத்தில் இருக்கிறார். காலத்தை அளப்பது மனம். நிர்விகல்ப சமாதியில் மனாதீதத்துக்குப் போகிறவன் காலாதீதத்துக்குப் போகிறான். சிவசொரூபத்தில் ஒன்றுபடுகிறான். ஆதலால் அவனுக்குக் காலத்தின் கலக்கம் அறுபடுதல் ஆகிறது.

காதல் செயும் அடியார் மனம்
இன்று களித்திடும் ஆகாதே:

காதல் செயும்-பக்தர்களிடத்துப் பக்தியை வளர்க்கிற.

பக்தர்களிடத்துப் பக்தர்கள் வைக்கிற அன்பு ஒப்பற்றது. அதில் வருகிற ஆனந்தம் பரமானந்தமாகிறது. நிர்விகல்ப சமாதியில் அந்த ஆனந்தம் மறைந்து போகிறது.

சிறுவர் பலர் கூடி விளையாடுவதுண்டு. விளையாட்டில் மகிழ்ச்சி உச்ச நிலைக்கு வந்திருக்கும்பொழுது

பெற்ற தாய் வந்து கூப்பிட்டாலும் விளையாட்டைப் புறக் கணித்துவிட்டுத் தாயின் பின் போகச் சிறுவன் ஒருவன் இசைவதில்லை. பக்தர்களுக்கோ பக்தர் கூட்டுறவு அவ்வளவு இனிமை வாய்ந்தது.

மாணிக்கவாசகருக்கு குரு கிருபையும் அடியார் இணக்கமும் சேர்ந்து அமைந்தன. அவரை ஆட்கொண்ட பிறகு குரு முதலில் அந்தர்த்தானமாகிறார். ஆட்கொண்ட வரிடமிருந்து பிரிவது அவருக்குக் கஷ்டமாகத் தென்பட வில்லை. பிறகு அடியவர் குழாம் அந்தர்த்தானமாகிறது. அவர்களை விட்டுப் பிரிந்தது மாணிக்கவாசகருக்குப் பெரும் வேதனையாயிருந்தது.

இறைவனே தொண்டர்க்குத் தொண்டன் ஆகின் றார். ஆபு பென் ஆடம் என்பவர் ஓர் இஸ்லாமிய பக்தர். அவருக்கு ஒருநாள் நள்ளிரவில் தேவதர்சனம் வாய்த் தது. தென்பட்ட தேவன் ஏதோ ஜாபிதா ஒன்றை ஆயத்தப் படுத்திக்கொண்டிருந்தான். அந்த ஜாபிதா எதைப்பற்றியது என்றார் ஆபு பென் ஆடம். அது ஆண்ட வனின் அடியார் ஜாபிதா என்ற விடை வந்தது. அதில் தன் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறதா என்று ஆபு பென் ஆடம் கேட்டார். இல்லை என்ற பதில் வந்தது. அப்படி யானால் அடியார்க்கு அடியவனாகத் தன் பெயரைப் பதிவு செய்யும்படி பக்தர் கேட்டார். அதன் விளைவாக அவர் அடியவர் தொகையில் முதல் இடம் பெற்றார்.

பக்தர்களது தொடர்பில் வருகிற பரமானந்தமும் நிர்விகல்ப சமாதியில் பின் அணிக்குப் போய்விடுகிறது.

பெண் அலி ஆண் என நாம் என
வந்த பிணக்கு அறும் ஆகாதே:

பிணக்கு அறும்-கருத்து வேறுபாடு அற்றுப் போதல்.

ஜீவ வியக்தியில் பெண், அலி, ஆண் என்னும் பால் வேற் றுமை இடம் பெற்றிருக்கிறது. ஜீவன் ஒருவனை தன்னைப் பெண் என்றோ அலி என்றோ ஆண் என்றோ எண்ணுவது உபாதியாகிறது.

அதற்கு ஏற்றவாறு நடந்துகொள்ளுதலும் இயல்பே. இத்தகைய உபாதி வேறுபாடு சமாதியில் இடம் பெறுவதில்லை.

(ஆகாதே என்னும் சொல் இங்கும் ஆகும் என்று பொருள் படுகிறது.)

சிறு குழந்தை ஒன்று உடல் அமைப்பில் ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கிறது. அதன் மனப்பான்மையில் பால் உணர்வு ஏதும் இல்லை. அது வளர்ந்து வரும் பொழுது உடலைத் தான் என்று அபிமானிக்கிறது. அதற்கு ஏற்பப் பால் உணர்வு வருகிறது. பின்பு அந்த உணர்வு வாழ்நாள் முழுதிலும் இருக்கிறது.

இதற்கு இடையில் ஓர் அதிசயம் நிகழ்கிறது. கனவு காண்கின்றபொழுது ஆண் உபாதி படைத்துள்ள ஜீவன் தன்னை ஆணாகவே கருதுகிறது. பெண் உபாதி படைத்துள்ள ஜீவனும் அங்ஙனமே செய்கிறது. சிறுவன் சிறுமி, கிழவன் கிழவி என்ற உபாதிகளும் கனவில் தொடர்ந்து வருகின்றன. ஆனால் கனவற்ற உறக்கமாகிய சுஷுப்தி அவஸ்தைக்குப் போகும்பொழுது ஆண், ஆண் அல்லன்; பெண், பெண் அல்லள்; விலங்கு, விலங்கு அல்ல; பறவை, பறவை அல்ல. ஜீவர்கள் அனைவரும் தங்கள் உபாதிகளை ஒடுக்கிவைத்துவிட்டுக் கேவலம் பிரம்மாவஸ்தையில் இருக்கின்றனர். பின்பு விழிப்புக்கு வரும்போது அப் பெரு நிலையை அவர்கள் இழக்கின்றனர்.

ஆத்ம சாதனத்தில் முன்னேறுதற்கு ஏற்ப உபாதி நீங்கப் பெறுகிறது. முற்றிலும் உபாதியை ஒழிப்பவன் ஜீவன்முக்தன் ஆகிறான். தன்னை ஆண் என்றோ பெண் என்றோ கருதுவது பிராந்தி அல்லது மயக்கம். தேகாத்ம புத்தி அல்லது உடலைத் தான் என்று கருதும் கீழ்மையி னின்று அது உருவாகிறது. உபாதிகள் அனைத்தும் பிர கிருதியின் கூறுகளாகின்றன. உடல் உள்ளம் ஆகியவை பிரகிருதியினின்று உண்டானவை. அவைகளை ஆத்ம சொரூபத்தில் ஆரோபித்து வைத்துக்கொண்டு ஜீவாத் மன் தன்னை ஆண்பாலாகவோ பெண்பாலாகவோ கற்பனை பண்ணிப் பேதத்தை வளர்க்கிறான்.

அபேத நிலையை எட்டுதற்கு முதலில் மாற்றுக் கற்பனையைப் பண்ணிப் பழகவேண்டும். உடலில் ஆண்பாலாக இருக்கிற ஜீவன் எண்ணத்தில் பெண்பால் ஆகவேண்டும். அங்ஙனம் பெண் ஒருத்தி தன்னை ஆணாகக் கருதுமளவு உபாதியை உபாதியைக்கொண்டு ஒழிக்கின்றாள். பின்பு ஆத்மசாதகர் அனைவரும் உபாதி ரஹிதர் ஆகவேண்டும். உடல் உணர்ச்சியை ஒதுக்குமளவு அது சாத்தியமாகிறது. மனநிலையில் மீண்டும் சிறுர் ஆகவல்லவர்க்குச் சாதனம் எளிதாகின்றது. பாலர் பான்மையை எய்துபவர் பாக்கியவான்கள்.

மனிதன் யாது ஒன்றைப் பாவிக்கின்றானோ, அவன் அதுவாவது வாழ்க்கையைப்பற்றிய பேருண்மையாகிறது. வாசனைகளைத் தவிர்த்துவிட்டு, உபாதிகளை ஒழித்துவிட்டுத் தன்னை யாண்டும் சச்சிதானந்த சிவ சொருபமாக உணர்பவன் அப்பெருநிலையை எட்டுகிறான்.

நிர்விகல்ப சமாதியில் இந்த நாட்டம் பூர்த்தியாகிறது. தன்னை ஆண் என்றோ பெண் என்றோ கருதுகிற உபாதி அழிந்துபட்டுப் போகிறது. தன் நிஜசொருபத்தில் திளைத்திருப்பது விடுபேறு ஆகிறது.

பேர் அறியாத அனேக பவங்கள்
பிழைத்தன ஆகாதே:

அனேக பவங்கள்-பல பிறவிகள். பிழைத்தன-வாழ்ந்திருந்ததாகச் செய்த கற்பிதங்கள்.

கல் நிலையிலும் புல்நிலையிலும் துவங்கிய ஜீவபிராந்திகள் கணக்கில் அடங்கா. பின்பு சிவபோதத்தில் அவை யாவும் வெறும் மனோ கற்பிதம் என்று ஒதுக்கப்படுகின்றன.

ஒரு பிரம்மாவுடைய ஆயுளுக்கு ஒரு கல்பம் என்று பெயர். அத்தகைய கல்பாந்தரத்தில் அவர் கிரம முக்திக்குப் போகிறார். பிரகிருதி லயம் என்பது ஒரு ஜீவாத்மா அடைகிற சித்திகளுள் உயர்ந்தது. அங்ஙனம் ஒரு பிரம்

மாவுடைய காலத்தில் பிரகிருதி லயம் அடைந்துள்ள ஜீவாத்மா அடுத்து வருகிற சிருஷ்டிக்குக் கர்த்தாவாகிருர். இப்படி இந்தப் பதவிக்கு ஒருவர்பின் ஒருவராக வந்து கிரமமுக்திக்குப் போய்க்கொண்டிருக்கின்றனர்.

உலகப்பற்றுடைய பல ஜீவாத்மாக்கள் பல பிரம்மாக்களுக்குரிய பல கல்பங்களில் பிறவி யெடுத்துக் கொண்டே இருக்கிருர்கள். அவர்களுடைய பிறவிகளை யாராலும் எண்ண முடியாது. அத்தனைப் பிறவிகளும் நிர்விகல்ப சமாதியில் வெறும் மனேகல்பிதமாய் ஒதுக்கப்படுகின்றன. நிர்விகல்ப சமாதியில் கல்பமும் கணப்பொழுதும் ஒன்றே. மனுதீதத்தில் காலம் இல்லை; பிறவிப் பிணியில்லை.

எண் இலி ஆகிய சித்திகள் வந்து
எனை எய்துவது ஆகாதே:

கணக்கற்ற சித்திகளை நான் அடையப்பெறுவது பிரபஞ்ச வாழ்க்கையில் நிகழ்வதுண்டு. பாரமார்த்திகப் பெருநிலையில் சித்திகள் யாவும் பொருளற்றவைகளாம்.

சித்திகள் என்ருல் என்ன என்பதை அறிந்து கொள்ளுதல் அவசியம். பிரகிருதியில் உள்ள பஞ்சபூதங்களைக் கட்டி அசாதாரணமான காரியங்களுக்குப் பயன் படுத்துவது சித்தியாம். இக்காலத்திய பௌதிக விக்ஞானம் பல சித்திகளைப் பெற்றுள்ளது. ஐம்பூதங்களையும் அரியமுறைகளில் அடக்கியாள்வதன் விளைவாக அந்தச் சித்திகள் வாய்த்திருக்கின்றன. வண்டி வாகனங்களில் விரைந்து செல்லுதல், வானத்தில் விமானத்தில் பறந்து செல்லுதல், சந்திர மண்டலத்தை எட்ட முயலுதல் ஆகியவை சித்திகளில் இடம் பெறுகின்றன. வானெலி, இரண வைத்தியம் போன்றவைகளும் சித்தியில் சேர்கின்றன.

மனிதன் தன்பால் உள்ள பூதங்களையும் கருவி கரணங்களையும் அடக்கியாளுவதால் பெறுகிற திறமைகளே

சிறப்பாகச் சித்திகள் எனப்படுகின்றன. நீர்மேல் நடப்பது, நெருப்பில் இனிது அமர்ந்திருப்பது, பூமியுள் புதையுண்டு சாகாதிருப்பது, வானத்தில் சஞ்சரிப்பது, காயம் கட்புலனுகாது மறைந்திருப்பது, பரகாயப் பிரவேசம் பண்ணுவது—இவை போன்றவைகள் சித்திகள் என்று சொல்லப்படுகின்றன.

ஒரு தவசி காட்டில் பன்னிரண்டு வருஷம் தவம் புரிந்து சித்தன் ஆனுன். அவன் பெருக்கெடுத்திருந்த ஓர் ஆற்றின் மீது நடந்து வந்தான். இக்கரையில் இருந்த யானையொன்று செத்து விழும்படி செய்தான். அவ் வேழம் மீண்டும் உயிர் பெறும்படியும் செய்தான். உலகத்தவர் இவைகளைப் பார்த்துத் திகைத்து நின்றனர். ஆனல் ஞானி ஒருவர் அந்தச் சித்தன் செயலைச் சரியாக மதிப்புப் போட்டார். அவன் தவம்புரிந்து சம்பாதித்தது வெறும் காலணு என்ருர் அவர். எப்படி என்று கேட்ட பொழுது, காலணு கொடுத்தால் ஓடக்காரன் மனிதனை இக்கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கிருன்; அது இவனுக்கு மிச்சம் என்ருர். யானையின் விஷயமோ என்று கேட்டபொழுது இயற்கையின் நடைமுறையில் தலையிட்டு இந்தச் சித்தன் தனது அகங்காரத்தைப் பெருக்கிக்கொண்டான்; அது அவனுக்கு நஷ்டம். யானை இருப்பதாலோ இறப்பதாலோ இவனுக்குஆவதென்ன என்ருர்.

ஆத்ம சாதகர்களுக்குச் சித்திகள் வாய்ப்பதுண்டு. அவைகளில் மயங்கி ஈடுபடுகிறவர்கள் முன்னேற்றமடைவதில்லை. பலர் அவைகளால் கீழ்மையுறுகின்றனர்.

நல்ல விவேகிகள் சித்தியைக் கருத்தில் வாங்குவதில்லை. நிர்விகல்ப சமாதி அடையப்பெற்றவன் சித்தியால் வரும் ஆபத்துக்கு அப்பாற்பட்டவனுகின்ருன். சினமிறக்கக் கற்ருலும் சித்தியெல்லாம் பெற்ருலும், மனமிறக்கக் கல்லார்க்குச் சிவ சொருபம் வாய்க்காது.

6. பொன்னிய லுந்திரு மேனிவெண்
ணீறு பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள்
குவிந்து பொழிந்திடு மாகாதே
மின்னிய நுண்ணிடை யார்கள்
கருத்து வெளிப்படு மாகாதே
வீணை முரன்றெழு மோசையி
லின்ப மிகுந்திடு மாகாதே

உபநிஷந் மந்த்ரம்—122.

स यथेमा नद्यः स्यन्दमानाः समुद्रायणाः
समुद्रं प्राप्यास्तं गच्छन्ति भिद्येते
तासां नामरूपे समुद्र इत्येवं प्रोच्यते
एवमेवास्य परिद्रष्टुरिमाः षोडशकलाः
पुरुषायणाः पुरुषं प्राप्यास्तं गच्छन्ति;
भिद्येते तासां नामरूपे पुरुष इत्येवं
प्रोच्यते स एषोऽकलोऽमृतो भवति ॥

ஸ யதா இமா நத்ய: ஸ்யந்தமாநா: ஸமுத்ராயணா:
ஸமுத்ரம் ப்ராப்ய அஸ்தம் கச்சந்தி பித்யேதே
தாஸாம் நாமரூபே ஸமுத்ர இதி ஏவம் ப்ரோச்யதே
ஏவம் ஏவ அஸ்ய பரித்ரஷ்டு: இமா: ஷோடசகலா:
புருஷாயணா: புருஷம் ப்ராப்ய அஸ்தம் கச்சந்தி;
பித்யேதே தாஸாம் நாமரூபே புருஷ: இதி ஏவம்
ப்ரோச்யதே ஸ ஏஷ: அகல: அம்ருத: பவதி ॥

(ப்ரச்னோபநிஷதம் 6-5)

यथा யதா *எங்ஙனம்* समुद्रायणाः ஸமுத்ராயணா: *சமுத்திரத்தின்கண் போகின்ற* स्यन्दमानाः ஸ்யந்தமாநா: *பாய்ந்து கொண்டிருக்கின்ற* सः इमाः नद्यः ஸ: இமா: நத்ய: *இந்த நதிகள்* समुद्रं प्राप्य ஸமுத்ரம் ப்ராப்ய *சமுத்திரத்தை அடைந்து* अस्तम् गच्छन्ति அஸ்தம் கச்சந்தி *மறைகின்றன* तासाम् தாஸாம் *அவைகளின்* नामरूपे நாமரூபே *நாமரூபங்கள்* भिद्येते பித்யேதே *துடைக்கப்படுகின்றன* समुद्रः इति एवम् प्रोच्यते ஸமுத்ர: இதி ஏவம் ப்ரோச்யதே *சமுத்திரம்*

தன்னடி யாரடி யென்றலை
மீது தழைப்பன வாகாதே
தானடி யோமுட னேயுய
வந்து தலைப்படு மாகாதே
யின்னிய மெங்கு நிறைந்தினி
தாக வியம்பிடு மாகாதே
யென்னைமு ழுளுடை யீச
னெனத்த னெழுந்தரு ளப்பெறிலே.

என்றே சொல்லப்படுகிறது एवम् एव ஏவம் ஏவ அங்ஙனமே अस्य परिद्रष्टुः पुरुषस्य அஸ்ய பரித்ரஷ்டு: புருஷஸ்ய இந்தப் பார்க்கும் பாங்குடைய புருஷனுடைய इमाः पुरुषायणाः षोडश कलाः இமா: புருஷாயணு: ஷோடசகலா: புருஷனைச் சார்ந்துள்ள இந்த பதினறு கலைகள் पुरुषम् प्राप्य புருஷம் ப்ராப்ய புருஷனைச் சென்றடைந்து अस्तं गच्छन्ति அஸ்தம் கச்சந்தி மறைகின்றன तासां नामरूपे भिद्येते தாஸாம் நாமரூபே பித்யேதே அவைகளின் நாமரூபங்கள் அழிக்கப்படுகின்றன पुरुषः इति एवम् புருஷ: இதி ஏவம் புருஷன் என்றே प्रोच्यते ப்ரோச்யதே பேசப்படுகிறது सः एषः ஸ: ஏஷ: அப்புருஷன் अकलः அகல: கலைகளுக்கு அதீதமானவன் अमृतः भवति அம்ருத: பவதி மரணமற்றவன் ஆகிறான்.

சமுத்திரத்தை நோக்கிப் பாய்கின்ற நதிகள் அதை எட்டியதும் தங்கள் நாமரூபத்தை இழந்து சமுத்திரம் ஆகின்றன. பின்பு பேச்சு முழுதும் சமுத்திரத்தைப் பற்றியதாம். அங்ஙனம் பார்க்கின்ற புருஷனுடைய பதினறு கலைகள் அவனையே சார்ந்திருந்து அவனிடம் ஒடுங்குகின்றன. அவைகளின் நாமரூபங்கள் துடைக்கப்படுகின்றன. பின்பு பேச்சு புருஷனைப் பற்றியதேயாம். அவன் கலாரஹிதனும் அமிர்த சொரூபமும் ஆகின்றான்.

சமுத்திரம் மூலஸ்தானமாகிறது. அங்கிருந்து ஆவியாகக் கிளம்பிய நீரானது பல கலைகளாக வடிவெடுக்கிறது. மேகம், உறைபனி, மழை ஆகியவைகளை அவைகளுள் முக்கியமானவைகள் எனலாம். நதிகளாக வடிவெடுத்து அவைகள் மீண்டும் கடலைச் சென்றடைந்து மறைகின்றன. கடலோ யாண்டும் தன்மயமாயிருக்கிறது.

பொன் இயலும் திருமேனி
வெண்நீறு பொலிந்திடும் ஆகாதே
பூ மழை மாதவர் கைகள் குவிந்து
பொழிந்திடும் ஆகாதே
மின் இயல் நுண் இடையார்கள் கருத்து
வெளிப்படும் ஆகாதே
வீணை முரன்று எழும் ஓசையில்
இன்பம் மிகுந்திடும் ஆகாதே

புருஷோத்தமனிடமிருந்து ஜீவாத்மா என்னும் புருஷன் வந்துள்ளான். கலை, பண்பு, பாங்கு ஆகியவைகளை முன்னிட்டு ஜீவாத்மாக்களுக்கிடையில் வேற்றுமை இருக்கிறது. ஜீவ வேற்றுமைகளை உபாதி வேற்றுமை என்றும் இயம்பலாம். அயர்ந்த உறக்கத்தில் இந்த வேற்றுமைகள் மறைகின்றன. புருஷன் மட்டும் எஞ்சியிருக்கிறன். நிர்விகல்ப சமாதியிலும் புருஷனே மிச்சமாகிறன். ஆதலால் ஜீவ உபாதியை ஒழிப்பதை இலட்சியமாகக் கொண்டிருப்பவன் கலைகளில் கட்டுண்டிருக்கலாகாது. கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும் என்று வாதவூரர் எச்சரிக்கை செய்திருக்கிறர்.

ஈண்டு இயம்பியுள்ள பதினறு கலைகள் நாளடைவில் அறுபத்து நான்கு கலைகளாக விரிவடைந்துள்ளன. இன்றைய பௌதிக விக்ஞானத்தையும் சேர்த்துக் கொண்டால் கலைஞானங்கள் இன்னும் அதிகரிக்கின்றன. சிவன் என்றும் அம்பிகை என்றும் இயம்பப்பெற்றுள்ள சகுண பிரம்மத்துக்கு இக்கலைகள் யாவும் விபூதிகள் அல்லது மஹிமைகள் ஆகின்றன. ஆனல் பரத்தை நாடுகின்ற ஜீவாத்மன் இவைகளில் கட்டுண்டு கிடக்கலாகாது. இவைகளையும் உபாதிகள் என்று ஒதுக்கித் தள்ளவேண்டும். சுத்த சைதன்யத்தை நாடுகிறவன் தானே சுத்த சைதன்யமாய் இருந்து பழகுவது நல்ல ஆத்ம சாதனமாகிறது.

தன் அடியார் அடி என் தலை
மீது தழைப்பன ஆகாதே
தான் அடியோம் உடனே உய வந்து
தலைப்படும் ஆகாதே
இன் இயம் எங்கும் நிறைந்து
இனிது ஆக இயம்பிடும் ஆகாதே
என்னை முன் ஆள் உடை ஈசன் என்
அத்தன் எழுந்தருளப் பெறிலே.

என்னை முன் ஆளுடை ஈசன் என்
அத்தன் எழுந்தருளப் பெறிலே:

நிர்விகல்ப சமாதியில் எனது சுயசொருபமாகிய பரமசிவத்தில் நான் ஒன்றுபட்டிருக்கும்போது:

பொன் இயலும் திருமேனி
வெண் நீறு பொலிந்திடும் ஆகாதே:

பொன் இயலும் - பொன்போல் விளங்குகிற. பொலிந்திடும் ஆகாது-பிரகாசித்தலும் நிகழாது.

சகுண பிரம்ம தர்சனம் பக்தனுக்குப் பரமானந்தத்தை ஊட்டுகிறது. இஷ்டமூர்த்தியின் தர்சனத்துக்கும் மேலானது நிர்விகல்ப சமாதி.

உபாசகன் உபாசன மூர்த்தியோடு கொள்கிற இணக்கம் ஒப்பு உயர்வு அற்றது. அதில் ஊறுகிற இனிமையை எதனோடும் சீர்தூக்க முடியாது. அப்பேரன்புக்கு ஈடு அதுவேயல்லாது வேறு ஒன்றும் இல்லை. பக்தர்களுள் பெரும்பாலர் பரமனுடைய சான்னித்தியத்தைத் தங்கள்

மரணம் ஜீவாத்மனுக்கு உண்டு. மாறியமைகிற தேகத்தை அவன் தன்மயமாயுணர்வதால் அதன் ஒடுக்கத்தைத் தனது சாவு என்று அவன் பொருள்படுத்துகிறான். ஆனால் சுத்த சைதன்னியமாய் இருந்து பழகும் சாதன தசையிலேயே தனக்கு மரணமில்லை என்பதை அவன் உணர்கின்றான். நிர்விகல்ப சமாதியில் அவன் பரத்தில் ஒன்றுபடுகிறான். பரவஸ்துவோ அமிர்த சொருபம். மரணமடையாதது என்பது அதன் பொருள்.

உள்ளத்தின் உள்ளேயே உணர்கின்றனர். ஒட்டி உற வாடுதலும் உள்ளத்தின் உள்ளேயே நிகழ்கிறது. ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை என்று அண்ணல் இயம்புவது அனுபூதியின் விளைவாம்.

உள்ளத்தினுள் ஞானக்கண்ணுக்கு இலக்கு ஆகிற இஷ்ட மூர்த்தி யாரோ சில அன்பர்க்குப் புறத்திலும் திருமேனி தாங்கித் திகழ்வதுண்டு. அகத்தில் இறைவ னோடு உரையாடிப் பூரிப்பது போன்று புறத்தில் புலனு கிற அவனோடு பேச்சு வார்த்தை வைப்பதும் உண்டு. அங்ஙனம் புறத்தில் புலனுகிற மேனியின் பொலிவோ பகரவொண்ணுதது. இங்கு அமைந்துள்ள சொற்சித் திரம் அப்பேரழகுக்கு ஒருவாறு உகந்ததாயிருக்கிறது. பொன் ஆர் மேனியழகுக்கும் அதைப் புகழுதற்கென்று பொங்கியெழுகின்ற மொழியழகுக்கும் நிர்விகல்ப சமாதி யில் இடம் இல்லை. அப்பெருநிலையை எட்டிய பெருமக் கள் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த முடிவு அது.

மாணிக்கவாசகருக்குத் தமது வழிபடு தெய்வமே திருமேனி தாங்கிக் குரு மூர்த்தியாக எழுந்தருளிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு அவருடைய வழிபடு தெய்வமாகிய அகிலாண்ட நாயகியே திருமேனி தாங்கி யிருந்து தன் ஞானச்செல்வனைப் பரிபாலித்து வந் தாள். தாய்க்கும் சேய்க்கும் உள்ள இணக்கங்கள் யாவும் அவர்களுக்கிடையில் நிகழ்வனவாயின. அத்தகைய ஞானச் செல்வனுக்கு நிர்விகல்ப சமாதி நல்குதற்குத் தோதாபுரி என்று அழைக்கப்பெற்ற பரமாசாரியர் வந்து சேர்ந்தார். அன்னவரிடம் அத்தகைய தீக்ஷை பெறுவது முறையோவென்று பரமஹம்ஸர் தம் தாய் பராசக்தி யிடம் பரிந்து விண்ணப்பித்தார். ஆம் பிள்ளாய், அதற் காகவென்றே அவரை இங்கு வரச் செய்துள்ளேன்; அவரிடமிருந்தே ஞான தீக்ஷை பெற்றுக்கொள். என்ற ஆதேசம் அம்பிகையிடமிருந்து வருவதாயிற்று.

பரமஹம்ஸருக்குக் குருவாக எழுந்தருளியவர் மகா வாக்கிய தீக்ஷை செய்து நிராகார நிர்குண பிரம்ம நிஷ்டையில் மனதை ஒடுக்கும்படி சிஷ்யனை ஏவினார். அம்பிகையின் சொரூபம்தான் தம்முள் திகழ்வதாகச் சிஷ்யன் சொன்னார். அப்படிச் சொன்னவரது நெற்றியில் தோதாபுரி ஊன்றியழுத்தினார். 'மனதை இந்த இடத்தில் ஒடுக்கு. உனக்குக் காட்சி கொடுக்கிற மூர்த்தியை ஞான வாளால் வெட்டித்தள்ளு' என்று ஆக்ஞாபித்தார். சிஷ்யனும் அங்ஙனமே செய்தார். சவிகல்ப சமாதி நிர்விகல்ப சமாதியாக மாறுவதாயிற்று. அம்பிகையின் திருவுருவம் அகண்ட சச்சிதானந்தத்தில் கரைந்தது. உபாசனா மூர்த்தியும் உபாசகனும் ஒன்றாயினர்.

நிர்விகல்ப சமாதியில் வாதவூரருக்கு வணங்குதற்குப் பொன் ஆர்மேனியன் இல்லை; நிர்விகல்ப சமாதியில் தக்ஷிணேசுவர வாசியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அருள் வடிவினள், ஆனந்தமயியாகிய அன்னை பராசக்தி இல்லை. இறுதி நிலையில் இருவர் அனுபவமும் ஒன்றேயாயிற்று.

பூ மழை மாதவர் கைகள்
குவிந்து பொழிந்திடும் ஆகாதே:

பூ மழை-புஷ்பவிருஷ்டி, மழைபெய்வது போன்று மலர் தூவுவது. **மாதவர்**-பெருந்தவத்தினர்.

அரும் பெருந்தவசிகள் ஓயாது மலர் தூவி மூர்த்தியுபாசனை செய்கின்றனர். அவர்கள் செயல் மலர்மழை பொழிவது போன்று காட்சி கொடுக்கிறது. நிர்விகல்ப சமாதியில் அத்தகைய நிகழ்ச்சிக்கு இடமில்லை.

உலக நடைமுறையில் அமைந்துள்ள வழிபாடுகளில் பயன் மிக உண்டு. காசி விசுவநாதருக்கு அதிகாலையிலிருந்து நள்ளிரவு வரையில் பத்ரம் புஷ்பம் வகைகளை பக்தர் போட்ட வண்ணமாயிருக்கின்றனர். அதனால் உண்டாகிற நிர்மாலியங்கள் கூடைகூடையாக அப்புறப் படுத்தப்பட்டவைகளாயிருக்கின்றன. கங்கா ஜலத்தை அன்பர்கள் விசுவநாதசுவாமி லிங்கத்தின்மீது அபிஷேகம்

செய்த வண்ணமாயிருக்கின்றனர். விடாது மழை பொழிவதற்கு நிகராக அது காட்சிகொடுக்கிறது. சிலர் அன்னபிஷேகம் பண்ணி அதை அன்பர்களுக்கு எடுத்து வழங்குகின்றார்கள். வேறு சிலர் பால் அபிஷேகம் பண்ணி அதை பக்தர்களுக்கு உரியதாக்குகின்றார்கள். தேன் அபிஷேகம் பண்ணி அதைப் பலருக்குப் பகுத்துக் கொடுக்கிறார்கள். இச்செயலில் சிறப்பு ஒன்று உளது. பொருளைப் பொதுமக்களுக்கு உரியதாக்குகின்றவர்கள் நேராக மக்களுக்கு எடுத்துக் கொடுத்தால் தாங்கள் கொடையாளிகள் என்ற செருக்கு வரும். தெய்வத்துக்குப் படைக்குமிடத்து அவன் பொருள் அவனிடம் ஒப்படைக்கப்படுகிறது என்ற சீரிய உணர்வு உதயமாகிறது. ஏற்பவர் நேரே மனிதனிடத்திருந்து ஏற்றால் இகழ்ச்சிக்கு இலக்கு ஆகின்றனர். மற்று ஈசுவரப் பிரசாதத்தை ஏற்பதில் இகழ்ச்சியில்லை. இப்படியெல்லாம் இன்பம் தருகிற வழிபாடு நிர்விகல்ப சமாதியில் இடம் பெறாது மறைந்து போகிறது.

மின் இயல் நுண் இடையார்கள் கருத்து
வெளிப்படும் ஆகாதே:

மின்னல் போன்ற ஒடுங்கிய இடையையுடைய மாதர் இருக்கின்றனர். தங்கள் மேனியழகை முன்னிட்டு அன்னவர் வெளிப்படையாக மகிழ்வுற்றிருக்கின்றனர். பரம் பொருளின் பேரமைப்பை உள்ளபடி அறியுங்கால் அத்தகைய மகிழ்ச்சியானது பொருளற்றதாக மறைந்துபோம்.

இடையறாது இயங்கி வருவது இயற்கை. இதில் இடம்பெற்றுள்ள வடிவங்கள் தோன்றவும், சிறிது காலம்

न पुण्यं न पापं न सौख्यं न दुःखं न मन्त्रो न तीर्थं न वेदा न यज्ञाः ।
अहं भोजनं नैव भोज्यं न भोक्ता चिदानन्दरूपः शिवोऽहं शिवोऽहम् ॥

ந புண்யம் ந பாபம் ந ஸௌக்யம் ந து:க்ம்
ந மந்த்ரோ ந தீர்த்தம் ந வேதா ந யக்ஞா: ।
அஹம் போஜனம் நைவ போஜ்யம் ந போக்தா
சிதானந்தரூப: சிவோऽஹம் சிவோऽஹம் ॥

நிலைத்திருக்கவும், தேயவும், ஒடுங்கவும் செய்கின்றன. மின்னலுக்கு ஒப்ப மேனி தோன்றவும் மறையவும் செய்கிறது. மின்னலைப் பார்த்து ரசிப்பதற்கு முன்பு அது இருக்கும் இடம் தெரியாது ஒடுங்குகிறது. மேனி எந்த விதத்திலாவது மின்னலைவிட அதிகம் நிலைபேறு உடையது என்று சான்றோர் சொல்லமாட்டார்கள். அது கட்டழகு வாய்ந்தது என்று கருதுவதே கற்பனை. மேனிக்கு மூலப்பொருள்களாகிய ஐம்பூதங்களும் பிரளயத்தில் ஒடுங்குகின்றன. சிருஷ்டியில் அவைகள் இடம் பெற்றிருக்கிறபொழுதும் சுழுத்தியில் அவைகள் போன இடம்

புண்யம், பாபம், சுகம், துக்கம் எனக்கில்லை. மந்த்ரம், தீர்த்தம், வேதம், வேள்வி எனக்கில்லை. உணவோ, உண்ணலோ, உண்பவனோ நான் அல்லன். சிதானந்த ரூபமாகிய சிவம் நான், சிவம் நான்.

கர்மம் செய்கிறவனுக்குத் தன்னைக் கர்த்தாவாக உணரும் தன்மை வருகிறது. ஒவ்வொரு கர்மத்திலும் பாபம், புண்யம் ஆகிய இரண்டும் கலந்தே இருக்கின்றன. தன்னைக் கர்த்தாவாக உணராதவன் கர்மம் செய்கின்றபொழுதும் செய்யாதவன் ஆகிறான். ஒரு சான்றின் மூலம் இதை விளக்குவோம். ஒருவன் தூங்குகிறபொழுது மூட்டைப் பூச்சி கடிக்கிறது. தன் கையால் துடைத்து அம்மூட்டைப் பூச்சியை அவன் கொல்லுகிறான். அவனுடைய உணர்வுக்கு வராமல் அந்நிகழ்ச்சி நேர்கிறது. தன் செயலுக்குக் கர்த்தா என்ற எண்ணம் அவனுக்கில்லை. ஆதலால் பூச்சியைக் கொன்றும் அவன் கொன்றவன் அல்லன். அத்தகைய மனநிலையை ஜாக்கிரதாவஸ்தையில் ஞானி கொண்டுவருகிறான். ஆதலால் அவன் பாபமும் புண்ணியமும் செய்கிறவன் அல்லன். சுகமும் துக்கமும் மனோவிகாரங்களாம். விழித்திருக்கும் போது உணவு உண்டு சுகமாயிருக்கிறேன், பசியால் துக்கப்படுகிறேன் என்ற எண்ணங்கள் வருகின்றன. அயர்ந்து உறங்கும்போது உண்ட சுகமும் பட்டினி கிடந்த

தெரிகிறதில்லை. நிர்விகல்ப சமாதியில் பிரபஞ்சமில்லை. அதற்கு முதலாயிருக்கும் மாயையில்லை. மெய்ப்பொருளாகிய பரவஸ்துவே எஞ்சியிருக்கிறது.

வீணை முரன்று எழும் ஓசையில்
இன்பம் மிகுந்திடும் ஆகாதே:

முரன்று-முழங்கி. **மிகுந்திடும் ஆகாது**-மிகுதியாதல் இல்லை.

இனிய இசையை உண்டுபண்ணும் கருவிகளுள் சிறந்தது வீணை. அதினின்று முழங்கியெழுகின்ற ஓசை மனிதனைப் பரமானந்தத்தில் திளைத்திருக்கச் செய்கிறது. அத்தகைய் ஆனந்தம் சமாதி நிலையில் இல்லை.

கீதம், காவியம், ஓவியம், சில்பம், நடனம் ஆகியவை லலித கலைகள் (fine arts) என்று இயம்பப்பெறுகின்றன. இயற்கையை முறையாகப் படம் பிடிப்பதற்கும், இயற்கைக்கு அப்பால் மனதை எடுத்துச் செல்லுதற்கும் இக்கலைகள் கருவிகளாகின்றன. இவைகளுள் இசை முதன்மை பெறுகின்றது. புள் இனங்கள் இசைக்குப் பெயர் பெற்றவைகள். அவைகளுக்குச் செவிசாய்க்கத் தெரிந்தவர்கள் பாக்கியவான்கள்.

இயற்கையில் உள்ள ஓசைகளைச் சரியாகக் கற்று இசையை முறையாக வளர்த்தவன் மனிதன். இசையின் பண்புகளையெல்லாம் இனிது விளக்க வல்லது வீணை.

துக்கமும் இல்லை. சர்வகாலமும் இந்த நிலையில் இருப்பவன் ஞானி. சாதனத்தில் தன்னைப் பக்குவப்படுத்துபவனுக்கு மந்த்ரம், தீர்த்தம், வேதம், வேள்வி என்பன உண்டு. பரிபூரணத்தை எட்டியவனுக்கு அவையாவும் பொருளற்றவை. வீட்டில் குடியிருப்பவன் தானே வீடு ஆகான். வீட்டைப் பழுதுபார்ப்பது வீட்டுவாசியைப் பழுதுபார்ப்பதாகாது. தேகத்தில் குடியிருக்கும் தேகி தானே தேகம் ஆகான். தேகத்துக்குக் கொடுக்கிற ஆகாரத்தை நான் ஏற்கிறேன் என்று ஞானி நினைப்பதில்லை. ஆதலால் உணவோ, உண்ணலோ, உண்பவனோ அவன் ஆவதில்லை.

கலைமகளே அதைத் தனக்குற்ற கருவியாகக் கைப்பற்றி யுள்ளாள். நவரசங்களை உள்ளவாறு வெளிப்படுத்து தற்கு உற்ற கருவி இதுவாம். பிரபஞ்சத்தில் சொக்கி யிருப்பதற்கும், பிரபஞ்சத்தை மறந்திருப்பதற்கும் ஏற்ற இசைகளை உண்டுபண்ண வல்லது வீணை.

இறைவழிபாட்டுக்கு உற்ற உபகரணமாயிருப்பது இசை. வெறும் இயல் அல்லது உரைநடையைக்கொண்டு கடவுளை வழுத்துகிறோம். அது அவனுக்கு ஏற்புடையது. ஏனென்றால் உள்ளத்தில் இருப்பதை இருக்கிறபடி அவ னிடம் தெரிவிக்குமிடத்துஅவன் அதை ஆமோதிக்கிறான். அதே கருத்தை ராகம், தாளத்தோடு கூடிய இசை யைக்கொண்டு தெரிவிக்குமிடத்து, தெரிவிப்பவன் தனது பொலிவை இன்னும் அதிகமாகத் தன் பிரார்த் தனையில் செலுத்துகிறான். ஆதலால் அதற்குச் செவி சாய்க்கும் சிவனும் சம்மதம் கொடுப்பவனாகிறான். ராவ ணன் இசைத்த வேதகானம் சிவனுக்குப் பிரீதியையூட் டியது. பொருந்திய இசையோடு பாடுபவனுடைய பாவ மும் அந்த இசையோடு பொதிந்துவிடுமாகில் அது சிவனைப் பித்தன் ஆக்குகிறது. சம்பந்தர், அப்பர்,சுந்தரர், மாணிக்கவாசகர் அதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆவார் கள். பக்தியின் பித்தம் தலைக்கு ஏறுமிடத்து அதினின்று கூத்து அல்லது நடனம் உருவெடுக்கிறது. பக்திவலையில் படுகிற பித்தன் அம்பலக்கூத்தன் ஆகின்றான். அவன் ஆட, அவன் ஆட்டுவிக்க, கலைகள் ஆகிய இயல், இசை, கூத்து ஆகிய மூன்றும்சேர்ந்து பக்தனுக்கும் பரமனுக்கும் இடையில் பேரிணக்கத்தை விளைவிப்பனவாகின்றன.

இசையின் இனிமையை இன்னுமோர் இடத்தில் காண்போம். கண்ணன் குழல் ஓசையை இனிது கிளப் பினான். அது காற்றில் மிதந்து நாலாபக்கமும் பரவி யது. உயிர்களின் உள்ளத்தை அது தொடுவதாயிற்று. இசைக்கு வசப்பட்ட ஜீவராசிகள் அது கிளம்பிய

இடத்தை நோக்கிப் புறப்பட்டன. அருகில் வரவர அவைகள் தத்தம் இயல்புகளை மறந்துவிட்டுக் கண்ணனது பேரியல்பில் ஒன்றுபடுவனவாயின. புலியும் பசுவும், பாம்பும் மயிலும், சிங்கமும் மானும், யானையும் காட்டெருமையும், மனிதனும் கரடியும் கூடிக் கண்ணன் சன்னிதியில் களித்திருப்பனவாயின. இசையின் இனிமை உயிர்களை இறைவன் முன் பகை நீக்கி அழைத்துச் செல்ல வல்லதாம். கண்ணனது குழலோசை இச்செய்தியை உலகுக்கு வழங்குகிறது.

அரியகருத்துக்கள் அடங்கிய, பக்தி ததும்பும்பாடல் ஒன்றை ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தமது இனிய குரலில் இசையுடன் பாடுவார். உச்சநிலையொன்றில் அவரது ஓசையடங்கிவிடும், ராகம் இடைவழியில் அடைபடும், பாவ சமாதி கூடும்; அந்த நிலையில் பக்தனும் பகவானும் உறவாடுவார்கள்; பின்பு பாவசமாதி கலையும் வேளையில் ஓசை மீண்டும் உருவெடுக்கும்; பாடிய ராகம் நின்றவிடத்தினின்று மீண்டும் தொடர்வெடுக்கும். நன்குபயன்படுத்துகிற இசை பக்தனைப் பரமனது சன்னிதிகொண்டு சேர்க்கும் என்பதைப் பரமஹம்ஸ தேவரது அனுபூதி நன்கு விளக்குவதாயிற்று.

ஆனால் நிர்விகல்ப சமாதியில் ஓசையில்லை, இசை இல்லை, பக்தன் பகவான் என்னும் பாகுபாடு இல்லை. ஆங்கு எல்லாம் அதீதமயமாம்.

தன் அடியார் அடி என் தலை
மீது தழைப்பன ஆகாதே:

தழைப்பன ஆகாது-அருளை வளர்க்கமாட்டா.

சிவஞானம் பெற்றவரே சிவகுரு ஆகிறார். அன்னவர் திருவடி சிஷ்யன் சிரசில் படிந்து ஸ்பர்ச தீக்ஷையாகும்போது ஞானோதயம் உண்டாகிறது. அது நிர்விகல்ப சமாதியாகுங்கால் குரு சிஷ்ய பேதம் போகிறது.

அருள் குருவுக்கும் பக்குவமான சிஷ்யனுக்கும் உள்ள இணக்கம் ஒப்பு உயர்வு அற்றது. அதனோடு சீர்

தூக்குதற்கு உலகில் வேறு ஒன்றுமில்லை. வேண்டுமானல் ஓர் உபமானத்தை எடுத்து உரைக்கலாம். வெந்தழல் போன்றவர் குரு; விறகுக்கட்டை போன்றவன் சிஷ்யன். இருவரும் இனிது ஒன்றுபடுவது முடிவு. அப்படி ஒன்று படுவதில் துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகியவைகளுக்கு ஏற்பப் பாகுபாடுகள் உள. நீ என்னை எவ்வாறு கருதுகின்ருய், என்று இராமபிரான் பக்தன் ஆஞ்சனேயனிடம் கேட்டார். அதற்கு அவன் விடை விடுத்ததாவது: "என்னிடத்து உடல் உணர்வு இருக்கும் போது நீ ஆண்டான், நான் உன்னைவிட்டு அகலாத அடிமை; என்னிடத்து ஜீவாத்மபோதம் வரும்போது நீ பூரணன், நான் உன்னில் ஓர் அம்சம்; என்னிடத்து சுத்த சைதன்யபோதம் வரும்போது நீயே நான், நானே நீ. இது எனது முடிந்த அனுபவம்."

சாஸ்திரத்தின் சொரூபம் வியாச மகரிஷி; பண்பட்ட சிஷ்யனது சொரூபம் அவருடைய பிள்ளையாகிய சுகபிரம்மம்; நிறைஞானியின் சொரூபம் ராஜரிஷியாகிய ஜனக மகாராஜன். ஞான தீக்ஷை பெறுதற்கு அந்த நிறைஞானி யிடம் தந்தை வியாசரால் சுகபிரம்மம் அனுப்பட்டார். தீக்ஷை பண்ணி வைப்பதற்கு முன்பே வழக்கத்தில் இருந்துவந்த குருதக்ஷிணையைச் செலுத்தும்படி ஜனகர் சுகபிரம்மத்திடம் ஆக்ஞாபித்தார். அதற்குக் காரணம் யாதோ என்று அருகில் இருந்த ரிஷி புங்கவர்சிலர் வினவினர். ஜனகர் விளக்கம் கூறுவாராயினர்: சுக பிரம்மத் துக்குப் பிரம்மோபதேசம் செய்தவுடனே அவருக்கு நிர் விகல்ப சமாதி கூடிவிடும். அதன் விளைவாக குரு சிஷ்யன் என்ற பேதம் அழிந்துபட்டுப்போம். தக்ஷிணை செலுத்துவதைப்பற்றிய எண்ணம் பிறகு வாராது.

இது நிர்விகல்ப சமாதியைப்பற்றிய உண்மையாகும். மாணிக்கவாசகரும் இதையே ஈண்டு இயம்புகின்ருர்.

தான் அடியோம் உடனே உய வந்து
தலைப்படும் ஆகாதே:

ஜீவர்களாகிய நாங்கள் உய்வு அடைதல் என்னும் அரிய செயலும் அதற்கு இறைவன் அருள்புரிந்துகொண்டிருக்கிறான் என்பதும் சகுண பிரம்மம் என்னும் நடராஜாவினிடம் உண்டு. நிர்குண பிரம்மம் என்னும் சிதம்பர ரகசியத்தில் உய்தலும் உய்வித்தலும் நிகழ்வதில்லை.

ஈசுவரன் பஞ்ச கிருத்தியங்களையுடையவனாய் இருக்கிறான். அவைகளுக்குப் படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்று பெயர்கள் முறையே அமைந்துள்ளன. இயற்கைத் தாயின் இயக்கமே இச்செயல்களுக்குச் சான்று ஆகிறது. பரிணாமத்தின் வாயிலாக உயிர்களைப் படிப்படியாக உயர்நிலைக்குக் கொண்டு வருவது இதன் நோக்கமாகும். ஜீவப் பிரயத்தனமும் ஈசனுடைய அருளும் கூடியமைந்திருப்பது இயற்கையின் திட்டம்.

நெல்லை விதைத்தால் அது முளைத்துப் பயிர் ஆகிறது. ஆனால் அரிசி அங்ஙனம் முளைக்காது. அரிசியும் உமியும் ஒன்றித்திருப்பது நெல். முளைக்க வல்லதாய் நெல் இருப்பதில் ஜீவப்பிரயத்தனமும் ஈசனுடைய அருளும் சேர்ந்திருக்கின்றன. இவ்வுண்மை எல்லாப் படித்தரங்களிலும் இருக்கும் எல்லா உயிர்களுக்கும் பொருந்தியதாய் மிளிர்கிறது. அந்தந்த உடலில் அந்தந்த உயிர் தன்போக்கில் மேலோங்கி வருகிறது. இறுதியில் அது மானுட நிலையை எட்டுகிறது. அது இயற்கையின் சீரிய வெற்றியாம். மனிதன் பின்பு நிறைமனிதன் ஆவது இன்னும் சிறந்தது. நிறை மனிதன் பரத்தினை அடையப் பாடுபடுவது செயற்கரிய செயலாகிறது. அருளின் துணையோ இவையாவிலும் அற்புதமாய் அமைந்திருக்கிறது.

பஞ்ச கிருத்தியம் என்னும் ஈசனுடைய திருவிளையாடலில் இந்த அதிசயத்தை யாண்டும் காணலாம். பரபிரம்மம் அல்லது சிதம்பர ரகசியத்தில் இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு இடமில்லை. அது எப்பொழுதும் இருந்தபடி தன்மயமாயிருக்கிறது.

இன் இயம் எங்கும் நிறைந்து
இனிது ஆக இயம்பிடும் ஆகாதே:

இன் இயம்-இனிய வாத்தியங்கள். இயம்பிடும் ஆகாதே-முழங்குதலும் நிகழாது.

ஆலய வழிபாட்டில் இனிய வாத்தியங்கள் வாசிப்பதால் எழுகின்ற நாதங்கள் முழங்கிக் கொண்டிருப்பதை அதீத நிலையில் கேட்க முடியாது.

கோயிலில் வாத்தியங்கள் பல வாசிப்பதில் இனிய ஓசை முழக்கம் நிகழ்வதற்கு மேல் வேறு பல நிகழ்ச்சிகளும் அதனோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன. முதலாவதாக வாத்தியக்கருவிகள் பல ஆங்கு இடம் பெற்றிருக்கின்றன. அவைகளுள் சங்கு, மணி, பெரிய மேளம், சிறிய மேளம், டமரு, பறை, துத்தரி, கொம்பு ஆகியவைகள் முக்கியமானவைகள்.

அதிகாலையிலிருந்து நள்ளிரவு வரையில் கோயிலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்கு ஷோடச உபசாரங்களோடு வந்தனை வழிபாடுகள் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணமாய் இருக்கின்றன. இத்தனைவித ஆராதனை வகைகள் முற்றிலும் வேண்டப்படுகின்றன. மக்கள் உள்ளத்தில் பக்தியை வளர்ப்பதற்கு இவை யாவும் தேவை. ஆராதனைக்கேற்ற வாத்தியம் முழங்குவதும் வழக்கத்தில் வந்துள்ளது. இன்னவேளையில் இன்ன வழிபாடு நிகழ்ந்து வருகிறது என்பதையும் அம்முழக்கம் விளக்குகிறது. நிர்விகல்ப சமாதியில் வாத்திய முழக்கத்துக்கு இடமில்லை. ஆங்கு முற்றிலும் மௌனம்.

7. சொல்லிய லாதெழு தூமணி
யோசை சுவைதரு மாகாதே
துண்ணென வென்னுள மன்னிய
சோதி தொடர்ந்தெழு மாகாதே
பல்லியல் பாய பரப்பற
வந்த பராபர மாகாதே
பண்டறி யாத பரானு
பவங்கள் பரந்தெழு மாகாதே

வில்லிய னன்னுத லார்மய
லின்று விளைந்திடு மாகாதே
விண்ணவ ரும்மறி யாத
விழுப்பொரு ளிப்பொரு ளாகாதே
யெல்லையி லாதன வெண்குண
மானவை யெய்திடு மாகாதே
யிந்து சிகாமணி யெங்களை
யாள வெழுந்தரு ளப்பெறிலே.

சொல் இயலாது எழு தூ மணி ஓசை
சுவை தரும் ஆகாதே
துண் என என் உளம் மன்னிய
சோதி தொடர்ந்து எழும் ஆகாதே
பல் இயல்பு ஆய பரப்பு அற வந்த
பரா பரம் ஆகாதே
பண்டு அறியாத பர அனுபவங்கள்
பரந்து எழும் ஆகாதே
வில் இயல் நல் நுதலார் மயல்
இன்று விளைந்திடும் ஆகாதே
விண்ணவரும் அறியாத விழுப் பொருள்
இப்பொருள் ஆகாதே
எல்லை இலாதன எண் குணம்
ஆனவை எய்திடும் ஆகாதே
இந்து சிகாமணி எங்களை
ஆள எழுந்தருளப் பெறிலே.

இந்து சிகாமணி எங்களை
ஆள எழுந்தருளப் பெறிலே:

இந்து சிகாமணி-சந்திரசேகரன்.

சுத்த பிரம்ம நிர்வாணம் வாய்க்குமிடத்து ஈண்டு இயம்பியுள்ள ஞானானுபவங்கள் நிகழ்வதில்லை.

சொல் இயலாது எழு தூ மல ஓசை
சுவை தரும் ஆகாதே:

சொல் இயலாது-சொல்லைப் பயன் படுத்தாமல்.

நாவால் உச்சரிக்காது உண்டாகிற ஓசை அல்லது அனுஹத தொனி கேட்டு இன்புறுதல் இல்லை. ஏனென்றால் நாதாதீதத்தில் உச்சரிக்கிற ஓசையோ, இயற்கையின் ஓசையோ எழுதல் இல்லை.

இசைஉலகில் அனுசார சலனம் அல்லது பரிவு அதிர்வு என்பது உண்டு. இன்னிசைக் கருவிகள் சில வற்றைச் சரியாகச் சுதி மீட்டி ஓர் இடத்தில் வைப்பது முதல் செயல். ஆங்கு ஏதேனும் ஓர் இசைக் கருவியை முறையாக வாசித்தல் இரண்டாவது செயல். அப்படி வாசிப்பதை இடையில் திடீரென்று நிறுத்துவது மூன்று வது செயல். அச்செயலைச் செய்துவிட்டுக் காதுகொடுத் துக் கேட்டால் அருகில் வைக்கப்பட்டுள்ள இன்னிசைக் கருவிகளில் ஓசை தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருப் பதைக் கேட்கலாம். இது இப்பொழுது நிறுத்திய ஓசை யின் தொடர்வு என்பது விளங்கும். இதற்கு (sympathetic vibration) அனுசார சலனம் அல்லது பரிவு அதிர்வு என்று பெயர். இயற்கை முழுதும் இறைவனுடைய இன் னிசைக் கருவி. அதில் ஓயாது ஓசை எழுந்துகொண்டே இருக்கிறது. பண்பட்ட உடலையும் உள்ளத்தையும் படைத்துள்ள ஆத்ம சாதகன் அந்த இனிய ஓசையைத் தன் உள்ளத்தினுள் கேட்டுக்கொண்டிருக்கலாம்.

ரிஷிகளுக்கு மந்த்ர திருஷ்டாக்கள் என்று பெயர். மேலாம் கருத்துக்களுக்கு ஏற்ற ஓசைகளைத் தங்கள் உள்

न मृत्युर्न शङ्का न मे जातिभेदः पितानैव मे नैव माता न जन्म ।
न बन्धुर्न मित्रं गुरुर्नैव शिष्यः चिदानन्दरूपः शिवोऽहं शिवोऽहम् ॥

ந ம்ருத்யுர் ந சங்கா ந மே ஜாதிபேத:
பிதா நைவ மே நைவ மாதா ந ஜன்ம ।
ந பந்துர் ந மித்ரம் குருர்நைவ சிஷ்ய:
சிதானந்தரூப: சிவோ஽ஹம் சிவோ஽ஹம் ॥

எனக்கு மரணமில்லை, பயமில்லை, ஜாதிபேதமில்லை, தந்தை, தாய், ஜனனம் எனக்கில்லை. உற்றார், உறவினர், குரு, சிஷ்யன் எனக்கில்லை. சிதானந்த ரூபமாகிய சிவம் நான், சிவம் நான்.

ளத்தின் உள்ளமே தரிசித்தவர்கள் என்பது அதன் பொருள். அத்தகைய ஓசை அன்று ஒருகால் ஒலித்தது; அது இன்று நின்றுவிட்டது என்பது உண்மையன்று. இடையீடு இன்றி அது யாண்டும் ஒலித்த வண்ணமா யிருக்கிறது. ஓவாத சத்தத்து ஒலியென்று அது போற் றப்படுகிறது. சுருதி என்னும் சொல் கேட்டறிந்தது எனப் பொருள்படுகிறது. வேதங்களுக்குச் சுருதி என்ற பெயர் அங்ஙனம் வந்தது.

விவேகானந்த சுவாமிகள் அமெரிக்காவில் இருந்த பொழுது தாம் அடுத்தநாள் எதைப்பற்றிப் பேசுவது என்று எண்ணிக்கொண்டு உறங்கப்போவார். தூங்கும் பொழுது ஒரு ரிஷி வந்து அவரிடம் உபந்நியாசம் செய்வது போன்று கேட்பார். அப்படிக் கேட்டறிந்த விஷயத்தை அடுத்த நாள் அவர் எடுத்து விரித்து விளக்குவார். இயற்கைத் தாயினூடு பொலியும் ஞான சக்திக்கு இது நல்லதொரு எடுத்துக்காட்டு ஆகும்.

தன்னை உடலாகக் கருதுகிறவனுக்கு ஜனன மரணம் உண்டு. மனிதனுக்கு வருகிற பயம் எப்பொழுதும் உடலைப்பற்றியதாம். உடல் எடுப்பவனுக்குத் தாய் தந்தையர் உளர். உலக வழக்கத்தை முன்னிட்டோ, குணபேதத்தை முன்னிட்டோ உடல் எடுத்திருக்கிறவ னுக்கு ஜாதிபேதம் உண்டு. உற்றார், உறவினர், நண்பர் முதலாயினோர் உண்டு. மனபரிபாகத்தையும் ஆத்ம சாதனப் பயிற்சியையும் முன்னிட்டு குரு சிஷ்ய இணக்கம் இருக்கிறது. ஆத்ம ஞானம் அடைந்திருக்கிறவன் இந்தப் பாகுபாடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன். அவன் சிதானந்த ரூபமாகிய சிவம்.

ஜாதிபேதம் என்னும் இயற்கைக் கோட்பாட்டை இடைக்கால இந்தியா சரியாக அறிந்துகொள்ளவுமில்லை, நடைமுறையில் கொண்டு வரவுமில்லை. நாடு கீழ்மையுற்ற தற்கும் வெளிநாட்டார் படையெடுத்து வந்து மக்களைத்

இப்படி இயற்கை ஒலிக்கிற ஓசையைக் கேட்டு அறிவைப் பெருக்குவதில் பெருமகிழ்ச்சி ஆத்ம சாதகனுக்கு உண்டாகிறது. ஞானவளர்ச்சிக்கு அது முடிவற்ற உபாயமாகிறது. ஆனால் நிர்விகல்ப சமாதி வாய்க்குமிடத்து

தோற்கடித்ததற்கும் அடிப்படைக் காரணம் ஜாதிபேதக் கோட்பாட்டைச் சரியாக அனுஷ்டிக்கத் தெரிந்துகொள்ளாதிருந்ததேயாம். பிறவியில் கீழ்மக்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட வடநாட்டவர்களைக் கைத்தூக்கி வைத்தது இஸ்லாமியப் படையெடுப்பு. தென்னாட்டில் பிறவியில் கீழ்மக்களாக ஒதுக்கி வைக்கப்பட்டவர்களைக் கைந்தூக்கி வைத்தது கிறிஸ்தவப் படையெடுப்பு.

பிறவியில் கீழோரெனக் கருதப்படுபவர்கள் எல்லாரும் உண்மையில் கீழோரல்லர். பிறவியில் மேலோரெனக் கருதப்படுபவர் எல்லாரும் உண்மையில் மேலோரல்லர். இனி, பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான் என்னும் கோட்பாடு முற்றிலும் உண்மையாகாது. கோயில் பூஜாரி வேலை எவ்வளவு புனிதமானதோ அவ்வளவு புனிதமானது மலம் எடுக்கும் தோட்டி வேலையும். சமுதாய நலன் கோலுபவர் இக்கோட்பாடுகளை அறிந்திருப்பது அவசியம்.

பிராம்மண்யம் என்பது ஒரு பண்பு. அது ஓர் இனம் அன்று. படிப்பு, பண்பு, பணிவு ஆகிய இந்த மூன்றும் சேர்ந்து அமையப்பெற்றவன் பிராம்மணன். பணிவுக்குப் பதிலாகச் செருக்கு அவனுள் புகுந்துவிடுமாகில் அவன் அழிந்துபட்டுப் போவான். இது வாழ்க்கைத் தத்துவம்.

சந்நியாச ஆச்ரமம் பூண்டான பிறகும் சங்கரர் உள்ளத்தினின்று ஜாதிபேதமும் அதன் கூட்டாளியாகிய ஜாதி துவேஷமும் அறவே அகலவில்லை. அப்ப ன்மையை ஒரு பண்பு என்றே அவர் தவறுதலாகக் கருதி வந்தார். காசியில் ஓர் ஒடுங்கிய சந்தில் அவர் விஸ்வநாதர் ஆலயத்

இத்தகைய ஓசை ஒலி எல்லாம் பொருளற்றவைகளாய்ப் போய்விடுகின்றன. அவைகள் வாயிலாகப் பெறுகிற ஞானமும் அபரஞானமாகக் கீழ்நிலையில் நின்றுவிடுகிறது.

துன் என என் உளம் மன்னிய
சோதி தொடர்ந்து எழும் ஆகாதே:

துன் என-திடீரென்று.

சத்துவ குணத்தில் திளைத்துள்ள தூய உள்ளத்தில் பளிரென்று மின்னல்போன்ற ஒளி தென்படுவதுண்டு. குறுநிதத்தில் அத்தகைய ஒளிக்கு இடமில்லை.

காதின் துணையில்லாமலேயே பொருள் புதைந்துள்ள ஓசைகள் பல இயற்கையிலிருந்து கேட்கப்படு

துக்குப் போய்க்கொண்டிருந்தார். கீழோன் எனத் தென்பட்டவன் ஒருவன் எதிரில் வந்தான். அவன் தலையில் கள் குடம், தோளில் மாமிச மாலை, அவனைச் சூழ்ந்திருந்தவை நான்கு நாய்கள்—இது அவன் கொடுத்த காட்சி. "புலையா, அப்புறம் எட்டிப்போ" என்றார் சங்கரர்.

"புலால் உடம்பைத் தான் என்று கருதுபவன் புலையன். துறவிக்கோலம் பூண்டிருக்கும் நீயே புலையன்; எட்டிப்போ, என்று சொன்னாயே! பஞ்ச பூதங்களில் எது எதனிடத்திருந்து எட்டிப்போவது? ஆத்மா எங்கிருந்து எங்கே எட்டிப்போவது?" என்று எதிரில் வந்தவன் ஆக்ஷேபித்தான்.

"எனக்குத் தத்துவ விவேகம் புகட்டிய நீ யாராயிருப்பினும் உனக்கு ஒரு நமஸ்காரம்" என்றார் சங்கரர்.

த்ருக் அல்லது காண்போன் திருந்தி அமைவதற்கு ஏற்ப த்ருசியம் அல்லது காணப்படுவது திருந்திய காட்சி தருகிறது என்னும் கோட்பாட்டின்படி புலையனாக வந்தவன் இப்பொழுது பரமசிவனாகச் சங்கரருக்குத் தென்பட்டான். ஜாதிபேதம் அதுமுதல் அவர் உள்ளத்தை விட்டு அகன்று போயிற்று.

கின்றன என்பது மேலே இயம்பப்பட்டது. ஊனக் கண்ணின் துணையில்லாமலேயே காட்சிக்கு இனிய ஒளி காண்பது சாத்தியம். அந்தகரணம் சுத்தியடைந்து வருவதற்கு அது அறிகுறியாகும். இயற்கை முழுதுமே இவ் உண்மையை நிரூபிக்கிறது. எந்தப் பொருளையெடுத்து நிர்மூலமாக்கினலும் அது ஒளி வீசுவது இயற்கையின் கூறு ஆகும். பச்சையிலை ஏதேனும் ஒன்றை யெடுத்து, அதை மெல்லியதாகும்படி சீவி, ஒரு நுண் நோக்கிக் கருவியில் (microscope) வைத்துப் பார்த்தால் அவ் இலையினூடு அரிய, இனிய மணிவரிசைகளைக் காணலாம். ஒரு முப்பட்டைக் கண்ணுடியில் பாய்கிற சூரிய கிரணம் ஏழு நிறங்களாகச் சிதறுண்டு ஏழுவித மணிகளாக ஒளிர்கிறது.

ஏழு ஞான பூமிகளில் ஏழுவித ஆத்ம ஜோதிகள் ஒளிர்கின்றன. பரமனுடைய விஸ்வரூபத்தைத் தரிசித்த அர்ஜுனன் ஆயிரம் சூரியர்கள் ஒன்ருகச் சேர்ந்து ஆகாசத்தில் ஒளிர்ந்தாற்போன்று இருந்தது என்று இயம்பினன். இத்தனைவிதமான ஜோதிகளெல்லாம் முக்குணங்களில் அடங்கியவைகளாம்.

பரமாத்ம சைதன்யம் என்னும் ஜோதியோ முக்குணங்களுக்கு அப்பாற்பட்டது. அதனேடு ஒப்பிடுதற்கு அதைத் தவிர வேறு பொருள் இல்லை. நிர்விகல்ப சமாதியில் அதை எட்டுகிறவன் அதில் ஒன்றுபடுகிருன்.

பல் இயல்பு ஆய பரப்பு அற வந்த
பரா பரம் ஆகாதே:

பல் இயல்பு ஆய்-பல இயல்புகள் வாய்ந்த. பரப்பு அற வந்த-மனதின் சலனம் ஒடுங்குமிடத்துத் தென்படுகிற.

அசையாத தூய மனதில் ஈசனது பலப்பல விபூதிகள் மிளிர்கின்றன. மனுதிதத்தில் அத்தகைய தெய்வீக அனுபவங்களுக்கு அவகாசமில்லை.

காற்று அடிப்பதனல் தரையில் உள்ள தடாகம் ஒன்று அலை வீசிக்கொண்டு இருக்கிறது. அதனல் நீரி

னுள் பிரதி பிம்பிக்கிற சந்திரன் தாண்டவமாடுவது போன்று தென்படுகிறது. தடாக நீரிலே தேக்கமேற் படுவதற்கு ஏற்ப அதனுள் தென்படுகிற திங்களின் அசைவு குறைகிறது. நீர் முற்றிலும் அமைதியுறுமிடத்து நிலாவின் தோற்றமும் அதனுள் நிலைபேறு எய்துகிறது. மனதோ அலை நிறைந்ததடாகம் போன்றது. அடங்கிய மனது அலையற்ற தடாகம் போன்றது. தூய்மையும் அமைதியும் அடையப்பெற்ற மனது மாண்புமிகப் படைத்ததாகும். ஈசுவர சிருஷ்டியில் அதற்கு அலாதி யான சிறப்பு உண்டு.

புறத்திலே உள்ள அகிலாண்டங்களையும் தூய மனம் படைத்திருப்பவன் அகத்தில் காணலாம். புறத் தில் வெட்டவெளி எவ்வளவு விசாலமானதோ அவ் வளவு விசாலமான வெட்டவெளியை அகத்தில் காண லாம். புறவுலகில் ஆழ் கடல் எவ்வளவு ஆழமானதோ அவ்வளவு ஆழமான அமைப்பை அகத்தில் காணலாம். அண்டத்தில் இருப்பதெல்லாம் பிண்டத்தில் இருக்கின் றன என்பதை அனுபவத்தில் காணலாம். அகிலாண் டங்களில் உள்ள மஹிமைகளெல்லாம் மானுட பிண்டத்தி லும் இருக்கின்றன. தன்னிடத்து அமைந்திருக்கிற தெய்விக விபூதிகளை முற்றும் அறிகிறவனுக்கு மேலும் அறிந்துகொள்ள ஒன்றுமில்லை. அப்படி மிளிர்வன யாவும் மாயா சகிதனான ஈசுவரனது விபூதிகளாம். பிரளய காலத்தில் அவையாவும் ஒடுங்குகின்றன. மனி தன் படைத்துள்ள தூய மனதை ஒடுக்கிவிட்டு நிர்வி கல்ப சமாதி எய்துவானாகில் அவன் சிதம்பரத்தை அடைந் தவன் ஆகிறான். ஈசுவரனது பஞ்சகிருத்தியங்களைக் கடந்து மேலே போனவன் ஆகிறான். அவனது மனோ நாசம் அதற்கு உபாயமாகிறது.

பண்டு அறியாத பர அனுபவங்கள்
பரந்து எழும் ஆகாதே:

பரந்து எழும்-நிறைந்து எழும்.

பழமை வாய்ந்த வேதங்களில் சொல்லி வைத்துள்ள ஈசுவர மஹிமைகளுக்கு அதிகமாக எத்தனை யெத்தனையோ நூதன அனுப வங்கள் சுத்தமனதுக்கு எட்டுகின்றன. ஆனால் மனதற்ற பரிசுத்த நிலையில் அத்தகைய அனுபவங்கள் வாய்ப்பதில்லை.

உலகில் உள்ள நூல்களில் மிகப் பழமை வாய்ந்த வைகள் வேதங்கள். யாண்டும் முடிந்த பிரமாணமாக அவைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. இயற்கையைப் பற்றிய உண்மைகளை யெல்லாம் அவைகள் இயம்பியிருக் கின்றன. பசு ஒன்று காணமல் போய்விட்டால் அதை வேதத்தில் தேடு என்பது பழமொழி. அதன் உட் கருத்தை நாம் உள்ளபடி அறியவேண்டும். வேதங்கள் பொய்யாகா. தத்துவ தர்சிகளாகிய ரிஷிகள் தாங்கள் அனுபூதியில் கண்டறிந்தவைகளை உள்ளபடி இயம்பி யிருக்கின்றனர். அவையாவும் இயற்கையைப் பற்றிய உண்மைகள். பின்பு வேதங்களில் பல பகுதிகள் மறைந்து போய்விட்டன. அதற்கு ஏற்றவாறு ஞானப் பொக்கிஷம் குறைபட்டு விட்டது என்பதுதான் அதன் பொருள். மறைந்துபோன ஞானத்தை மீண்டும் தேடி யெடுப்பது எங்ஙனம்?

ஓதி வைத்த ஞானப் பொக்கிஷத்தை வேதம் என்று சொல்லுவது உலக நடைமுறையாகும். உண்மையில் இயற்கைக்குதான் வேதம் என்று பெயர். இயற்கையோ தானகத் தோன்றியது. அது அழியாதது. தன்னளவில் அது பொய்யாய்ப் போகாதது. இயற்கையில் தேடுவ தற்கு ஏற்றவாறு எதையும் பெறலாம். காணமல் போன பசு இயற்கையில்தான் இருக்கிறது.

மறைந்து போன வேதங்களை மறந்துபோன வேதங் கள் என்று சொல்லுவது முறை. அதற்கு ஈடாக இக் காலத்திய பௌதிக விக்ஞானிகள் இயற்கையைப் பற் றிய புதிய உண்மைகள் சிலவற்றைக் கண்டு பிடித்திருக் கின்றனர். ஐம்பூதங்களை வென்று பொது நன்மைக்குப்

பயன்படுத்தும் முறைகளைக் கையாண்டு வருகின்றனர். இன்றைக்கு உலகம் பெற்றுள்ள பௌதிக விஞ்ஞான வசதிகளை வேதகாலத்து ரிஷிகள் பெற்றிலர். ஆகவே நாம் முற்றிலும் நஷ்டமடைந்தவர் அல்லர். இயற்கையைப் பற்றிய ஞானத் தொகைக்கு வேதங்கள் என்று பெயர். அந்த ஞானத்தை வளர்க்கவும் கைவிடவும் மனிதனுக்கு இயலும்.

மனிதனுடைய மனது ஒரு ஞானக் களஞ்சியம். அந்த மனதைப் பக்குவப்படுத்துமளவு அதில் ஞானப் பிரகாசம் ஒளிர்கிறது. அதற்குச்சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். பிராணுயாம அனுஷ்டானத்தின் விளைவுகளைப்பற்றி ஒருதடவை சுவாமி விவேகானந்தர் தேர்ந்த ராஜயோக சாதகர் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தார். அப்பேச்சு சுமார் எட்டுமணி நேரம் நீடித்தது. யோக சாஸ்திரங்களில் சொல்லி வைக்காத நுண்ணிய அனுபவங்கள் பலவற்றைச் சுவாமிகள்தெளிவுறுத்தியது அந்த யோகிக்கு வியப்பூட்டியது. அவைகள் ஏன் சாஸ்திரங்களில் வரவில்லையென்று அவர் சுவாமிகளைக் கேட்டார். அனுபூதிமான்களுடைய அனுபூதிகள் யாவும் நூலில் வருவது இயலாத காரியமென்று அவர் விடைவிடுத்தார்.

स एव वेदपुरुषः

ஸ ஏவ வேதபுருஷ:

வேதம் விளக்குகிற பரம புருஷன் அவன்.

மனிதனுடைய மனது வேதங்களுக்கு உறைவிடம். இந்த மனதைக்கொண்டு மனிதன் எதைவேண்டுமானுலும் கற்கலாம். இந்த மனதை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரஞானத்தில் புகுவதும் மனிதனுக்குச் சாத்தியம். பரஞானமே வாழ்வின்முடிந்த குறிக்கோள் ஆகிறது.

இயற்கையை நன்குவிளக்கியானபிறகு இயற்கைக்கு ஆதிமூலமாயிருக்கும் மெய்ப்பொருளையும் வேதம் விளக்குகிறது. மெய்ப்பொருளை அறிகிற பிரம்மஞானி தானே மெய்ப்பொருள் ஆகிருன்.

வில் இயல் நல் நுதலார் மயல்
இன்று விளைந்திடும் ஆகாதே:

வில் இயல்-வில்லின் தன்மையமைந்த. **நல் நுதலார்**-அழகிய நெற்றியை உடையவர்கள். **மயல்**-மயக்கம்.

புறத்தில் அழகான வடிவங்களைக் கண்டு அவைகளுக்கு வசப் படுதல் நிர்விகல்ப சமாதிக்குப் பிறகு நிகழாது.

ஜீவாத்மனுக்கு ஜீவ வியக்தியானது பல பிறவி களில் தொடர்ந்து வருவதற்குக் காரணம் ஒன்று உண்டு. அகத்தில் இருப்பதை அவன் புறத்தில் தேடித்திரிகிறான். ஆதலால் அகத்தில் இருப்பதைப் புறத்தில் தேடியலை பவனே ஜீவாத்மன் என்று அவனுக்கு விளக்கம் கொடுக்கலாம்.

நிலையற்ற வாழ்வை நிரந்தர வாழ்வாகத் திருத்தி யமைக்க ஜீவன் பெருமுயற்சி எடுத்துக் கொள்கிறான். அதற்காகவே அவன் உணவைத் தேடியலைகிறான். குடி யிருக்க வசதியான வீடு கட்டுகிறான். சீதம், உஷ்ணம் ஆகிய இயற்கையின் இயல்பை மீளுதற்கு ஏற்ற உடை களை அணிகிறான். இப்படி வாழ்வை நீடித்து வைத்தி ருக்க அவன் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் பெரிதும் வெற்றியடைகிறான். ஆயினும் மரணம் வந்து அவனைத் தோற்கடிக்கிறது. மேலும் பிறவி யெடுத்து வந்து அதே முயற்சியை மீண்டும் செய்கிறான். எண்ணிறந்த பிறவி கள் எடுத்து இளைத்துப்போன பிறகு, தான் தேடும் நித்திய வாழ்வு தன்னிடத்தே இருக்கிறது என்பதை அனுபூதியில் அறிகிறான். ஆத்மா ஸத் பொருள்; அது அழிவற்றது.

ஜீவாத்மன் ஆனந்தத்தைப் புறவுலகில் தேடியலை கிறான். அகப்படுகிற ஒவ்வொரு பொருளையும் பரீக்ஷை பண்ணிப் பார்க்கிறான். எது ஆனந்தத்தைக் கொடுக் கிறதோ அதே பொருள் பின்பு துக்கத்தையும் தருகிறது. இப்படி உலகமெல்லாம் தேடிப் பார்த்துவிட்டுத் தான் தேடுகிற ஆனந்தம் தன்னிடத்தே இருக்கிறது என்பதை

அறிய வருகிறான். கஸ்தூரிமானிடத்துக் கஸ்தூரி அதன் பருவத்தில் விளைகிறது. அந்த மணம் மானுக்கு மிக விருப்பமானது. ஆதலால் அதை நாடியலைகிறது. அப்படியலையும் காலமெல்லாம் அந்த மணத்தை அது தன்னிடத்தே வைத்திருக்கிறது. ஜீவாத்மன் ஆனந்தத்தை நாடியலைவதும் அத்தகையதாம்.

அழகைப் போற்றுவது ஜீவாத்மனது இயல்பு. எது அழகு வாய்ந்ததாயிருக்கிறதோ அது அவன் கவனத்தைக் கவர்கிறது. அழகை அவன் இனிது ரசிக்கிறான். அதைத் தனக்குச் சொந்தமாக்க அவன் முயலுகிறான். சொந்தமாவதற்கு முன்பு அழகாகத் தென்பட்டது, சொந்தமானவுடனே சிறிது அழகை இழக்கிறது. நாளடைவில் அது அவனுக்கு அழகற்றதாகிறது. இங்ஙனம் அழகை நாடி அலைவது ஓய்வில்லாத முயற்சியாகிறது. எத்தனையெத்தனையோ வடிவங்கள் அழகுடையவைகளாகத் தென்பட்டு அவனை மயக்குவனவாயின. அவைகளுள் எத்தனையெத்தனையோ வடிவங்கள் தாமே அழகை இழந்து அவன்பால் அருவருப்பையூட்டின. எத்தனையெத்தனையோ வடிவங்கள், மனிதனது மனமாறுதலை முன்னிட்டு, அழகை இழந்தவை போன்று காட்சி கொடுக்கலாயின.

ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிற ஜீவாத்மன் அழகு அனைத்தையும் தனது வழிபடு தெய்வத்திடத்துக் காண்கிறான். பிறகு தனது வழிபடு தெய்வமே அழகுப் பொருள்கள் அனைத்துமாயிருக்கிறது எனக் காண்கிறான். அழகுத் தெய்வமே அகத்திலும் புறத்திலும் மிளிர்வது அவனுக்குப் பரமானந்தத்தை ஊட்டுகிறது. சாந்தம், சிவம், சுந்தரம், பிரம்மம் என்னும் ஆப்தவாக்கியம் அவனுக்கு அனுபூதியாக அமைகிறது. சவிகல்ப சமாதியில் இஷ்ட மூர்த்தியை சுந்தர சொரூபியாகக் கண்டு களித்திருப்பது ஒருவித அனுபூதியாகிறது.

சிவனைச் சுந்தரேசன் என்றும், விஷ்ணுவை சுந்தரராஜன் என்றும், அம்பிகையை சௌந்தர்யநாயகி என்றும், குமரனை முருகன் என்றும் கூறுவதன் உட்பொருள் அப்பொழுது விளங்குகிறது. அழகும் இறைவனும் ஒன்று. அழகை போகத்துக்குரிய உலகப் பொருளாகப் புலப்படுத்தி ஜீவன் தன்பால் துன்பத்தை வரவழைத்துக்கொள்கிறான். சவிகல்ப சமாதியில் அழகுத் தெய்வத்தோடு நேரான இணக்கம் வைத்து இன்புறுகிறான்.

நிர்விகல்ப சமாதியில் அழகு என்னும் விபூதியும் மறைகிறது. சுத்த சைதன்யமாகிய பரவஸ்துவே எஞ்சி நிற்கிறது.

விண்ணவரும் அறியாத விழுப்பொருள்
இப்பொருள் ஆகாதே:

விண்ணவரும் அறியாத - தேவர்களும் அறியாத. **விழுப்பொருள்**-பரவஸ்து.

தேவர்களாலும் அறிந்துகொள்ள முடியாத பரவஸ்து ஒன்றே இந்த உள்ள அனைத்துமாய் இலங்குகிறது.

(ஆகாது என்னும் சொல் இவ்விடத்திலும் ஆகும் எனப் பொருள்படுகிறது.)

பரவஸ்துவானது பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டது. பிரபஞ்சத்தை நுகர்தற்கென்றே அமைந்துள்ள ஐம்பொறிகள் பரத்தினைப் புலப்படுத்தமாட்டா. விண்ணவர் என்பார் இந்த ஐம்பொறிகளோடு ஒப்பிடப்படுகின்றனர். அதற்குத் தக்க காரணமும் உண்டு. ஜீவர்களுள் மக்களும் தேவர்களும் உயர்திணையாகக் கருதப்படுகின்றனர். பரிணமத்தில் அவர்கள் மேல் நிலைக்கு வந்திருப்பதே அதற்குக் காரணமாகும். மக்களுக்கு ஆயுள் குறைவு; தேவர்களுக்கு ஆயுள் அதிகம். ஆதலால் அவர்கள் அமரர் எனப்படுகின்றனர். மக்கள் படைத்திருப்பது ஸ்தூல சரீரம்; தேவர் படைத்திருப்பது சூக்ஷ்ம சரீரம். ஆதலால் அவர்கள் விண்ணவர் எனவும்

வானவர் எனவும் கூறப்பெறுகின்றனர். இந்திரியங்களைக் கொண்டு இவ்வுலகத்தவர் புறவுலகை எவ்வளவு புலப்படுத்திக் கொள்கின்றனரோ அவ்வளவே விண்ணவரும் புலப்படுத்திக் கொள்கின்றனர். மற்று, இந்திரிய நுகர்ச்சியின் வாயிலாக இவ்வுலகத்தவர் பெறும் இன்பத்தைவிடப் பன்மடங்கு அதிகமாக அவ்வுலகத்தவர் பெறுகின்றனர். இன்ப நுகர்ச்சி ஒன்றே தேவர்களின் குறிக்கோள் ஆகும்.

மண்ணுலகில் மக்களுள் அத்தகைய தேவர்களுக்கு நிகரானவர்கள் இருக்கிறார்கள். மக்களின் பண்பாட்டைக் கொண்டு தேவர்களின் பண்பாட்டையும் நாம் அறிந்துகொள்ளலாம். சுக ஜீவனத்தைத் தவிர வேறு ஒன்றும் இவர்களுக்கு விளங்காது. ஐம்பொறிகள் வாயிலாக வாய்க்கும் இன்பங்களே இவர்கள் அறிகிற இன்பமாகும். விண்ணவர் நிலையும் அத்தகையதே. பரதத்துவத்தைப் பற்றிய பேச்சு எடுத்தாலே தேவர்களுக்கும் சுகபோகிகளுக்கும் அது கசப்பாயிருக்கும். பக்தியும் ஞானமும் அவர்களுக்கு விஷம்போன்று தோன்றும்; பக்தர்களைக் கண்டால் அவர்களுக்கு அருவருப்பாயிருக்கும்.

பரவஸ்துவானது விண்ணவர்க்கு எட்டாதது. பண்பட்ட மானுடன் அதை நிர்விகல்ப சமாதியில் இனிது அடைய முடியும்.

எல்லை 'இலாதன எண் குணம்
ஆனவை எய்திடும் ஆகாதே:

எய்திடும் ஆகாது-உண்டாதலும் ஆகாது.

சகுண பிரம்மத்திடத்து எட்டு குணவிசேஷங்கள் இருக்கின்றன. ஆனால் சுத்த சைதன்யமாகிய நிர்க்குண பிரம்மம் இந்த விகாரங்களை எடுப்பதில்லை.

எண்குணங்களாவன:

(1) தன்வயம் அல்லது சுவதந்திரம். (2) தூயவுடல் அல்லது விசுத்த தேகம். (3) தூயவுணர்வினன் அல்லது நிராமயாத்மன்.

(4) முற்றுமுணர்ந்தவன் அல்லது சர்வக்ஞன். (5) பாசங்களில்லாதவன் அல்லது நிர்மலன். (6) பேரருளாளன் அல்லது அலுப்த சக்திமான். (7) எல்லாம் வல்லவன் அல்லது அனந்த சக்திமான். (8) பேரின்பமுடையான் அல்லது திருப்திமான்.

(1) தன்வயம் என்பது சுவதந்திரம். ஆடும் பொம்மை அல்லது பாவை ஒன்றுக்குத் தன்வயம் இல்லை. ஆட்டுவித்த பிரகாரம் அது ஆடவும் அசையவும் கைகொட்டவும் செய்கிறது. ஜீவாத்மன் அக்ஞானத்தில் இருக்கும்போது தன்வயம் படைத்தவனாகத் தென்படுகின்றான். அவன் முன்னேற்றமடைந்ததெல்லாம் தன் முயற்சியை முன்னிட்டேயாம். தானே தனக்குச் சுற்றமும், தானே தனக்கு விதிவகையும் என்று சொல்லுவதெல்லாம் அக்ஞானத்தில் இருக்கும் ஜீவனுக்குப் பொருந்துகிறது. பின்பு ஈசனைப்பற்றிய ஞானம் வரும்பொழுது நிலைமை மாறுகிறது. ஈசன் ஆட்டுவித்த பாங்கில் தான் ஆடுவதாகவும், பேசுவித்த பாங்கில் பேசுவதாகவும் பக்தன் உணர்கிறான். ஈசுவரனே உலகு அனைத்துக்கும் மேலானவன். அவனுக்கு ஆணையிடும் நிலைமையில் வேறு யாரும் இல்லை. அவன் நினைப்பது நினைக்கும் விதத்தில் நிகழ்கிறது. ஆதலால் ஈசன் சுவதந்திரம் படைத்தவன்.

(2) தூயவுடல் அல்லது விசுத்த தேகம் படைத்தவன் ஈசுவரன். ஒரு பொருளை மலினப்படுத்துதற்கு வேறு ஒரு பொருள் இருக்கவேண்டும். ஆவின்பால் சுத்தமானது. கங்கா ஜலம் சுத்தமானது. இவ்விரண்டையும் கலந்துவிட்டால் பாலும் சுத்தமானதன்று, கங்கையும் சுத்தமானதன்று. பிரகிருதி முழுதும் ஈசனது தேகம். அவனது பிரகிருதியை அழுக்குப்படுத்த வேறு ஒரு பிரகிருதியுமில்லை. ஆதலால் ஈசன் தூயவுடல் படைத்தவனாக இருக்கிறான்.

(3) தூயவுணர்வினன் அல்லது நிராமயாத்மன் என்று ஈசுவரன் போற்றப்படுகிறான். ஆமயம் என்பது நோயுற்ற நிலை. நிராமயம் நோயற்ற நிலையாகிறது.

உணர்வு கீழ்மையுறுங்கால் அது நோயின் அறிகுறியாகிறது. காமம், குரோதம், சோகம், மோகம் ஆகிய உணர்வுகள் நோய் ஆகின்றன. ஆனந்தம் என்னும் உணர்விலேயே யாண்டும் நிலைத்திருக்கும்போது அது தூய உணர்வாகிறது. ஆனந்தம் பிரம்மம் என்பது வேத வாக்கு. ஈசன் சச்சிதானந்த சொரூபமாக இருக்கிறான். ஆதலால் அவன் நிராமயாத்மன் ஆகிறான்.

(4) முற்று முணர்ந்தவன் அல்லது சர்வக்ஞன் என்று ஈசுவரன் போற்றப்படுகிறான். சந்திரனிடத்து வெளிச்சமும் இருளும் மாறிமாறி அமைவது போன்று ஜீவாத்மனிடம் ஞானமும் அக்ஞானமும் கலந்திருக்கின்றன. சூரியனிடம் யாண்டும் வெப்பமும் வெளிச்சமும் நிறைந்திருப்பதுபோன்று ஈசுவரன் பேரறிவு சொரூபி. அவன் வாலறிவன். ஜகத்தின் தோற்றம், இருப்பு, ஒடுக்கம் ஆகியவைகள் அவனுக்குத் தெரியும். ஜீவாத்மாக்களின் முக்கால நிலை அவனுக்குத் தெரியும். சரம், அசரம் ஆகிய அனைத்தின் அமைப்பும் அவனுக்குத் தெரியும். ஜீவர்கள் அனைவருடைய உள்ளத்திலும் உதிக்கிற உணர்வுகள் அவனுக்குத் தெரியும். அவனிடமிருந்து மறைத்துவைத்து யாரும் எதையும் செய்யமுடியாது. ஈசுவரனை உபாசிக்கின்றவளவு உபாசகனுக்கு அறிவு வளர்கிறது. அந்த அறிவுக் களஞ்சியத்தினின்று எவ்வளவு அறிவை வேண்டுமானாலும் மானுடன் பெறலாம்.

(5) பாசங்களில்லாதவன் அல்லது நிர்மலன் ஆகிறான் ஈசுவரன். தனக்குப் புறம்பானது ஒன்றில் பற்று வைக்குமிடத்து அது பாசம் ஆகிறது. ஈசுவரனே அண்டகோடிகள் அனைத்தும் ஆயிருக்கிறான். மேலும் அவனே எண்ணிறந்த ஜீவாத்மாக்கள் ஆயிருக்கிறான். அத்தனை ஜீவர்களையும் அவன் படிப்படியாக உயர்நிலைக்குக் கொண்டுவருகிறான். மலம் நிறைந்தது ஒன்று மற்றவைகளை நிர்மலமாக்கமாட்டாது. ஈசனைச் சாருகிற ஜீவர்கள்

எல்லாரும் நிர்மலநிலை எய்துகின்றனர். ஈசுவரனைச் சாருமளவு ஜீவர்கள் பாசங்களினின்று விடுபடுகின்றனர். அவன் பாசங்களற்றவன், நிர்மலன் என்பதை ஜீவர்கள் அவனிடமிருந்து பெறும் பேறு நிரூபிக்கிறது.

(6) பேரருளாளன் அல்லது அலுப்த சக்திமான் என இலங்குபவன் ஈசன். புராணங்கள் பகர்கிற கல்பக விருக்ஷமாக இருப்பவன் ஈசுவரன். கல்பக விருக்ஷத்துக் கடியில் இருந்து யார் எதை விரும்புகிறானோ அவன் அதை எளிதில் பெறுகிறான். ஜீவர்கள் பெற விரும்புகிற பேறுகள் அனைத்தும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களில் பூர்த்தியாகின்றன. இந்நான்கினுள் வீடு முடிந்த நிலையாகிறது. தனது பக்குவத்துக்கு ஏற்றதை ஜீவன் நாடுகிறான். அவன் நாடியதை அருளாளன் ஆகிய இறைவன் நல்குகின்றான். தான் பெற்றதைக்குறித்து மனிதன் மகிழ்வுறுகிறான். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் பிரகிருதியோடு சம்பந்தப்பட்டவைகள் என்பதை விவேகி அறிகிறான். ஆதலால் அவைகள் வேண்டாம், வீடு அல்லது முக்தியே வேண்டும் என்று இறைவனிடம் விண்ணப்பிக்கின்றான். கேட்கின்றவன் முக்திக்குப் பக்குவப்பட்டிருப்பானாகில் ஈசன் அதைக் கிருபை கூர்ந்து கொடுத்தருள்கின்றான். ஏனென்றால் அவன் அருளாளன். உயிர்களை உயர் நிலைக்கு உயர்த்துவதே அவனது அருள் செயல்; அதை அவன் இனிது நிறைவேற்றுகிறான்.

(7) எல்லாம் வல்லவன் அல்லது அனந்த சக்திமான் சிவன் என்பதற்கு இந்த ஜகத்தின் நடைமுறையே சான்று ஆகிறது. இதன் அமைப்பை எண்ணிப் பார்க்கப் பார்க்க வியப்பே அதிகரிக்கிறது. ஓர் அணுவில் அடைபட்டிருப்பதே அளப்பரிய சக்தி என்பதை இக்காலத்திய பௌதிக விக்ஞானம் விளக்கியுள்ளது. இனி, அண்டமெங்கும் நிறைந்துள்ள சக்தியை யார்தான் அளவிட

முடியும்! அண்டகோடிகளை உண்டுபண்ணுவதும், நிலை பெற்றிருக்கச் செய்வதும், துடைத்து ஒதுக்குவதும் அவனுடைய அலகிலா விளையாட்டாகும்.

(8) பேரின்பமுடையான் அல்லது திருப்திமானாகிய தேவதேவன் திகழ்கின்றான். எங்குத் திரும்பி எதைப் பார்த்தாலும் அதனோடு இன்பம் நாண்டவமாடுகிறது. இன்பம் இல்லாவிட்டால் யார்தான் உயிர் வாழ்ந்திருக்க விரும்புவார்கள்! தங்கத்தால் ஆன நகைகளெல்லாம் தங்கமயமாய் இருப்பதற்கு ஒப்ப இன்பக் கடவுளிடத் திருந்து தோன்றி வந்தவைகளெல்லாம் இன்பத்தில் யாண்டும் திளைத்திருக்கின்றன.

ஈண்டு இயம்பியுள்ள எண்குணங்களும் ஈசன் அல்லது சகுண பிரம்மத்தின் விபூதிகளாகின்றன. நிர்விகல்ப சமாதியில் நிர்க்குண பிரம்மத்தை அடைகின்றவன் இவை யாவுக்கும் அப்பால் உள்ள அதீதத்தில் உறைகிறான்.

8. சங்கு திரண்டு முரன்றெழு
மோசை தழைப்பன வாகாதே
சாதி விடாத குணங்கணம்
மோடு சலித்திடு மாகாதே
யங்கிது நன்றிது நன்றெனு
மாயை யடங்கிடு மாகாதே
யாசையெ லாமடி யாரடி
யோமெனு மத்தனை யாகாதே
செங்கய லொண்கண் மடந்தையர்
சிந்தை திளைப்பன வாகாதே
சீரடி யார்கள் சிவானு
பவங்க டெரிந்திடு மாகாதே
யெங்கு நிறைந்தமு தூறு
பரஞ்சுட ரெய்துவ தாகாதே
யீறறி யாமறை யோனெனை
யாள வெழுந்தரு ளப்பெறிலே.

சங்கு திரண்டு முரன்று எழும்
ஓசை தழைப்பன ஆகாதே
சாதி விடாத குணங்கள் நம்மோடு
சலித்திடும் ஆகாதே
அங்கு இது நன்று இது நன்று எனும்
மாயை அடங்கிடும் ஆகாதே
ஆசை எலாம் அடியார் அடியோம்
எனும் அத்தனை ஆகாதே
செம் கயல் ஒண் கண் மடந்தையர்
சிந்தை திளைப்பன ஆகாதே
சீர் அடியார்கள் சிவ
அனுபவங்கள் தெரிந்திடும் ஆகாதே
எங்கும் நிறைந்து அமுது ஊறு
பரம் சுடர் எய்துவது ஆகாதே
ஈறு அறியா மறையோன் எனை
ஆள எழுந்தருளப் பெறிலே.

अहं निर्विकल्पो निराकाररूपो विभुत्वाच्च सर्वत्र सर्वेन्द्रियाणां ।
न वा सङ्गतं नैव मुक्तिर्न ज्ञेयः चिदानन्दरूपः शिवोऽहं शिवोऽहम् ॥

அஹம் நிர்விகல்போ நிராகாரரூபோ
விபுத்வாச்ச ஸர்வத்ர ஸர்வேந்த்ரியாணாம். ।
ந வா ஸங்கதம் நைவ முக்திர்நஜ்ஞேய:
சிதானந்தரூப: சிவோ஽ஹம் சிவோ஽ஹம் ॥

நிர்விகல்ப நிராகார வடிவம் நான். அகண்டாகாரமாதலால் நான் எங்குமிருப்பவன். இந்திரியங்களில் எனக்குப் பற்று இல்லை. இந்திரியங்களால் அறியப்படாதவனாகிய எனக்கு முக்தி நாட்டம் தேவையில்லை. சிதானந்த ரூபமாகிய சிவம் நான், சிவம் நான்.

பிரபஞ்சத்தைக் கருவி கரணங்களால் அறிவது போன்று ஆத்மாவை அறிய முடியாது. பிரபஞ்சத்தில் கட்டுண்டு கிடப்பதாக மயங்கியிருப்பவன் முக்தியை நாடுகிறான். தனது நிஜ சொரூபத்தில் திளைத்திருக்கும் சுத்த சைதன்யத்துக்கு முக்தியைப்பற்றிய பிரச்னை பொருளற்றது. நிர்விகல்ப சமாதி அடைந்துள்ளவன்

ஈறு அறியா மறையோன் எனை
ஆள எழுந்தருளப் பெறிலே :

ஈறு அறியா-அகண்டமாயுள்ள.

அகண்டாகாரமாயுள்ள சிதாகாசத்தில் நான் ஒடுங்கிவிடு மிடத்து அதன் விளைவு வருமாறு :

சங்கு திரண்டு முரன்று எழும்
ஓசை தழைப்பன ஆகாதே :

முரன்று எழும் ஓசை-முழங்கி உண்டாகின்ற நாதம்.

சங்க நாதத்துக்கு நிகரான ஓங்கார ஓசை சகுண பிரம்மத்தின் கண் உளது. நிர்க்குண பிரம்மத்தில் அது ஒலிப்பதில்லை.

அண்டங்களின் தொகை சகுண பிரம்மத்தின் ஸ்தூல விளக்கமாகும். அண்டங்கள் சலித்துக்கொண்டிருப்பதால் அவைகளிடத்திருந்து ஓசை கிளம்பிக் கொண்டிருக்கிறது. ஓசையின் தொகை ஓங்காரமாக ஒலித்துக்கொண்டிருக் கிறது. ஓங்காரத்துக்குப் பிரணவம் என்பது மற்றொரு பெயர். ஒலித்துக்கொண்டிருக்கிற பிரணவத்தை மாத்ரப் பிரணவம் என்றும், ஒலிக்காத பிரணவத்தை அமாத்ரப் பிரணவம் என்றும் கூறுவது மரபு.

சாதி விடாத குணங்கள் நம்மோடு
சலித்திடும் ஆகாதே :

சாதி விடாத குணங்கள்-ஜாதியை விட்டுப் பிரியாத முக்குணங் கள்.

சிவோஹம் என்கிருன். அதை அடைதற்குப் பக்குவம் ஆய்க்கொண்டிருக்கிறவனும் சிவோஹம் என்கிருன்.

எண்ணுகிறவன் திண்ணியனுய் இருப்பானுகில் அவன் எண்ணியதை எண்ணியாங்கு எய்துவான். தன்னை உடல் மயமாக எண்ணுபவன் உடல் மயம் ஆகிருன். தன்னை ஆத்மாவாக எண்ணுகிறவன் ஆத்மா ஆகிருன்.

स एव नित्यपूतस्थः
ஸ ஏவ நித்ய பூதஸ்த:

புனிதமான பரத்தில் அவன் ஊன்றியுள்ளான்.

முக்குணங்களும் அவைகளினின்று உருவெடுத்து வருகிற ஜாதிபேதங்களும் அதீதத்தில் இடம் பெறுவதில்லை.

சத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களால் ஆனது அண்டம். அதில் உள்ள உயிர்வகைகளும் முக்குணங்களால் ஆனவைகளாம். ஒவ்வோர் உயிர்வகையிலும் பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்னும் நான்கு ஜாதிகள் இருக்கின்றன. இனி, இவைகளுள் உட்பிரிவுகள் எண்ணிக்கையில் அடங்கா. பண்பாடு அடைந்து மேல்நிலைக்கு வந்தவன் பிராம்மணன். அவன் ஆசாரத்தில் சிறந்தவன்; ஒழுக்கத்தில் உறுதிபெற்றவன்; அறிவில் தெளிந்தவன்; தூய அன்பில் ஊறியவன்; அருளில் நிலைத்திருப்பவன்; செயலில் சிவசேவையே வடிவெடுத்தவன்.

உயிர் வகைகளுள் நான்கு ஜாதிகள் இருப்பது போன்று காலச்சக்கரத்தில் நான்கு யுகங்கள் இருக்கின்றன. கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என அவைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவைகளுள் கிருதயுகம் எல்லாவற்றிலும் உயர்ந்தது. அதில் வாய்த்துள்ள எல்லாவிதமான நிறை நிலைகளுக்கிடையில் ஒரே ஒரு குறைபாடு உளது. கிருதயுகத்தில் ஆத்ம சாதகனுக்கு முக்தி கிடைப்பது அரிதிலும் அரிதாம்.

கிருதயுகத்துக்கு ஒப்ப பிராம்மணனுக்கு ஓர் இடையூறு உண்டு. ஜாதியில் மேலே வருவதற்கு ஒப்ப ஜாதி அபிமானம் என்னும் உபாதி மனிதனிடம் வலுக்கிறது. அந்த உபாதியானது பிராம்மணனிடத்தில் உச்சநிலையடைகிறது. பெருங்காயம் வைத்துள்ள பாண்டத்தை எவ்வளவுதான் துலக்கினாலும் பெருங்காய நாற்றம் அப்பாண்டத்தை விட்டுப்போகாது. அங்ஙனம் நான் பிராம்மணன் என்னும் உபாதி எளிதில் அகலாது. வாழ்வின் ஆரம்பதசையில் அந்த உபாதி முற்றிலும் வேண்டப்படுகிறது. ஆனால் சமாதியில் ஜீவ உபாதியை ஒழிக்க முயலுங்கால் அது குறுக்கிட்டு இடையூறு செய்யும். அந்த

உபாதியை ஒழிக்க ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஆறு மாதகாலம் அலாதியான சாதனம் புரிந்தார். நள்ளிரவில் அவர் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு அருகில் இருந்த சேரிக்குச்செல்லுவார். தம் தலைமுடியால் அவ்விடத்தைத் துடைத்து சுத்தம் செய்வார். "தாயே, மக்களால் ஒதுக்கப்பட்டவர்களும் உன் குழந்தைகளே. நான் அவர்களை விட உயர்ந்தவன் என்னும் உபாதி என் உள்ளத்தை விட்டு அறவே அகலவேண்டும்." இங்ஙனம் பிரார்த்தனையும் பணிவிடையும் பண்ணி அவர் தமது மனப்பான்மையைத் திருத்தியமைத்தார். அந்த உபாதியை ஒழித்தற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் அத்தகைய அரும்பாடுபட்டார் என்பதிலிருந்து அது எவ்வளவு விபரீத வலிவு படைத்தது என்பது விளங்குகிறது.

ஜாதியுபாதியை ஒழித்தாலொழிய நிர்விகல்ப சமாதி வாய்க்காது என்பதை மாணிக்கவாசகர் வெளிப்படையாக வற்புறுத்துகிறார்.

> அங்கு இது நன்று இது நன்று எனும்
> மாயை அடங்கிடும் ஆகாதே:

கர்மம் மாயையின் கூறு ஆகிறது. நல்ல கர்மத்தையே செய்தல் என்னும் நியதி இவ்வுலகுக்குரியது. நல்ல கர்மத்தையும் கடந்து அதீதத்துக்குப் போகும்பொழுது மாயையின் ஆதிக்கம் அடங்கிவிடுகிறது.

(ஆகாது என்னும் சொல் சிலவிடங்களில் ஆகும் எனப் பொருள்பட்டது. இங்கும் அது ஆகும் எனப் பொருள்படுகிறது.)

இயற்கைக்கு மாயை என்பது மற்றொரு பெயர். மாயையின் அமைப்பு நல்லதா கெட்டதா என்னும் கேள்வி ஓர் அறிஞர்முன்பு எழுந்தது. அதற்குவிடையாக அவர் பூனையின் பல் நல்லதா கெட்டதா என்று கேட்டார். இக்கேள்வியை ஓர் எலியிடம் கேட்டால், பூனையின் பல்லை விடக் கொடியது உலகில் ஒன்றுமே இல்லை என்று இயம்பும். மற்று, இதே கேள்வியைப் பூனைக் குட்டியிடம் கேட்டால் தன் தாய்ப்பூனையின் பல்லை விட

நல்லது உலகில் வேறு ஒன்றும் இல்லையென்று சொல்லும். பூனையின் பல் தன்னளவில் நல்லதுமன்று, கெட்டதுமன்று. அதனோடு தொடர்வு கொள்பவர் பாங்குக்கு ஏற்ப அது நல்லதாகவோ கொடியதாகவோ காட்சி கொடுக்கிறது.

மாயை அல்லது இயற்கை முழுதின் தன்மை அத்தகையதே. நல்லார்க்கு மாயை அருள் நிறைந்தது; பொல்லார்க்கு அது பாதகம் நிறைந்தது. மாயை முற்றிலும் கர்ம சொரூபம். கர்மத்தில் நலம், கேடு ஆகிய இரண்டும் கலந்தே இருக்கின்றன. எக்கர்மத்தை ஆராய்ந்தாலும் இக்கோட்பாடு புலனாகும். சிசுவை உருவாக்குதற்குத் தாயின் கர்ப்பம் நல்லது. உருவான பிறகு சிசு மேலும் அங்குத் தங்குவதற்கு அது கெட்டது. ஜீவர்களைப் பண்படுத்துதற்கு உலகம் நல்லது. பண்பாட்டுக்கு ஏற்ப நல்ல கர்மத்தை ஒன்றன்பின் ஒன்றாகச் செய்துவரவேண்டும். நல்லார்க்குப் பணிவிடை பண்ணுவது கர்மம்; கடவுள் வழிபாடு செய்வது கர்மம்; பக்தி பூணுவது கர்மம்; ஞான விசாரம் செய்வது கர்மம். இயற்கையாகிய மாயை இதற்கெல்லாம் உதவுகிறது.

கடைசியில் நிர்விகல்ப சமாதியின் வாயிலாக கர்மாதீதத்துக்குப் போவது குறிக்கோள். அந்நிலையில் மாயையின் ஆதிக்கத்துக்கு இடமில்லை.

तत् नित्यबोधः तत् स्वयं एव अवस्थितिः

தத் நித்ய போத: தத் ஸ்வயம் ஏவ அவஸ்திதி:

நிலைபேறுடைய அறிவு தெய்வமும் நானும் ஒன்று.

ஆசை எலாம் அடியார் அடியோம்

எனும் அத்தனை ஆகாதே:

சவிகல்ப சமாதியை அடைந்தவன் அதினின்று வியவகார நிலைக்குக் கீழே இறங்கிவந்து அடியவர்களுக்கு அடிமை பூணுதல் என்னும் திருத்தொண்டினில் விருப்புடன் ஈடுபடுவது இயல்பு. ஆனால் நிர்விகல்ப சமாதியடைந்தான பிறகு அத்தகைய

ஆசைக்கோ, அதன் தூண்டுதலால் திருத்தொண்டு புரிதலுக்கோ ஆங்கு இடமில்லை.

ஒருவன் ஒரு சங்கத்தில் அங்கத்தினனாய்ச் சேருகிறான். அதற்காகவென்று உழைத்து அதை உயர் நிலைக்குக் கொண்டுவருகிறான். பின்பு அப்படி உழைத்தவன் சமுதாயத்தில் உயர்நிலை எய்துகிறான். அவனுக்குச் செல்வம் அதிகம்; செல்வாக்கு அதிகம்; ஆதிக்கம் அதிகம். அவை யாவற்றையும் தன் சங்கத்தின் வளர்ச்சிக்கு மேலும் பயன்படுத்துகிறான். உலக நடைமுறையில் இச்செயல் போற்றத் தக்கது.

சங்கங்களுள் தொண்டர் குழாம் மிக மேலானது. அதில் தெய்விக சான்னித்தியம் சிறப்புற்று மிளிர்கிறது. அதற்குச் செய்யும் சேவை சிவ சேவைக்கு நிகர். அதில் வைத்திருக்கும் பற்றுதல் தெய்வப்பற்றுக்கு ஒப்பானது. தொண்டர்குழாம் ஒன்றுக்கு ஆத்மசாதகன் ஒருவன் அன்போடு உழைக்கின்றான். அவன் நிர்விகல்ப சமாதி அடையப்பெறுகிறான். அது கலைந்த பிறகு அவன் பழைய அன்போடும் ஆதரவோடும் அடியார் சேவைக்கு வருகிறானா என்பது கேள்வி. நிர்விகல்ப சமாதியடைந்தவனது பாங்கு அறவே மாறிவிடுகிறது. ஒரு பாலன் போன்று அவன் ஆகிறான். ஆசை ஒன்றும் அவனிடத்து இல்லை. கர்மத்துக்குத் தான் கர்த்தா என்ற எண்ணம் அவனைவிட்டு அறவே அகன்று போகிறது. அபேதத்தில் அவன் நிலைத்திருக்கிறான். யாருக்கு உழைத்தல், யாரிடமிருந்து விலகியிருத்தல் என்னும் பாகுபாடு அவனுக்கில்லை. அவனைக்கொண்டு ஏதாவது கிருத்தியம் நிகழ்ந்தால் அது முற்றிலும் சிவன் செயல்.

செம் கயல் ஒண் கண் மடந்தையர்
சிந்தை திளைப்பன ஆகாதே:

செம் கயல் ஒண் கண் மடந்தையர்-ஜீவாத்மன்.

ஞானக்கண் படைத்துள்ள ஜீவாத்மன் நிர்விகல்ப சமாதியடைந்த பிறகு மனோநாசம் அடையப்பெற்றவனாகிறான்.

சுஷுப்தி அவஸ்தை அல்லது கனவற்ற உறக்கம் பல விதங்களில் நிர்விகல்ப சமாதி போன்றது. இவ்விரண்டிலும் மனது செயலற்றுப் போகிறது. இரண்டிலும் புறவுலகமோ அகவுலகமோ காட்சியில் இல்லை. தேகாத்ம புத்தி அல்லது உடலைத் தான் என்று கருதுகிற உணர்வு இரண்டிலும் இடம் பெறுவதில்லை. காலத்துக்கும் அப்பாற்பட்ட நிலை இரண்டுக்கும் பொதுவானது. பின்பு இவ்விரண்டுக்குமுள்ள வேற்றுமை யாது? உறங்கப் போன மனிதன் உறக்கத்தினின்று திரும்பி வரும்போது பழைய மனதோடு திரும்பி வருகிறான். நிர்விகல்ப சமாதிக்குப் போனவன் தனது மனதைத் துறந்துவிட்டுச் சிவ சொரூபமாக வருகிறான். அவனுடைய பழைய ஜீவ போதத்துக்குச் சம்மாரம் நிகழ்ந்துவிட்டது. அதற்கு ஆதாரமாயிருந்த சிவ சைதன்யம் எஞ்சி நிற்கிறது.

சீர் அடியார்கள் சிவ அனுபவங்கள்
தெரிந்திடும் ஆகாதே:

சவிகல்ப சமாதியில் உண்டாகிற எண்ணிறந்த மூர்த்தி தர்சனங்களும் இணக்கங்களும் நிர்விகல்ப சமாதியில் ஒரே அகண்ட சச்சிதானந்த சிவ சொருபமாய் நிலை மாறிவிடுகின்றன.

சீர் அடியார்களுள் சீர்காழிச் செல்வன் ஞானசம்பந்தன் சிவனைத் தந்தையாகவும் தன்னை ஒரு ஞானச் செல்வனாகவும் கருதிவந்தான். அத்தகைய இணக்கத்துக்கு நிர்விகல்ப சமாதியில் இடம் இல்லை. அப்பர் தம்மை அடிமையாகவும் கடவுளை ஆண்டானாகவும் கருதி வந்தார். நிர்விகல்ப சமாதியில் அப்படிப்பட்ட உறவு பொருளற்றது. சுந்தரர் வன்தொண்டராயிருந்து, தேவ தேவனைத் தோழனாகக் கருதி அவரிடமிருந்து வேலை வாங்கினார். பாரமார்த்திகப் பெருநிலையில் அச்செயல் பொருளற்றதாம். வாதவூரரை ஆட்கொள்ளுதல் பொருட்டு அடியார்கள் புடைசூழ ஞானாசாரியனாக சிவன் எழுந்தருளியதும், குதிரைச் சேவகனாக வந்ததும், பிட்

டுக்கு மண் சுமந்ததும் நிர்விகல்ப சமாதியில் பொருளற்றவைகளாம். சிவனடியார்கள் வெவ்வேறு பாங்குகளில் கயிலையைச் சென்றடைவதும் ஆங்குச் சிவ சான்னித்தியத்தில் இன்புற்றிருப்பதும் நிர்விகல்ப சமாதியில் இடம் பெறமாட்டா. முடிந்த நிலையாகிய சுத்த சிவ சைதன்யத்தில் நாம ரூபங்களோடு கூடிய வியக்திகளுக்கு இடமில்லை.

நிர்விகல்ப சமாதிக்கும் கிரம முக்திக்கும் வேற்றுமை ஒன்று உண்டு. சுத்த கற்பூரம் எரிந்தால் சாம்பலோ கரியோ எஞ்சியிருப்பதில்லை. அது போன்று நிர்விகல்ப சமாதியில் ஜீவபோதம் எஞ்சியிருப்பதில்லை. அது பர போதத்தில் ஒடுங்கிவிடுகிறது. மற்றவர்கள் கயிலாயத்துக்கும், வைகுண்டத்துக்கும், ஸத்தியலோகத்துக்கும் போய்ப் பதவி முக்தி துய்க்கின்றனர். பக்தர்களுக்கு அது மிகப்பிரியமானது. பூவுலகில் செய்த ஆத்ம சாதனங்கள் ஆங்கும் நிகழ்ந்து வருகின்றன. பிரளயம் வரும்போது அன்னவர் எல்லாரும் கிரம முக்தியடைகின்றனர். அப்பொழுது அது நிர்விகல்ப சமாதிக்கு நிகர் ஆகிறது.

எங்கும் நிறைந்து அமுது ஊறு
பரம் சுடர் எய்துவது ஆகாதே:

நிர்விகல்ப சமாதி அடையப் பெற்றவன் அதிலிருந்து ஒருபடி கீழே இறங்கி வந்து சவிகல்ப சமாதியில் பரமானந்தத்தில் திளைத்திருப்பதில்லை. ஆனந்தாதீதத்துக்குப் போனவன் ஆனந்தத்துக்கு இறங்கி வருவதில்லை.

பரமன் ஏககாலத்தில் சிதம்பர ரகசியமாகவும், நடராஜாவாகவும், அர்த்தநாரீசுவரனாகவும், அஷ்டமூர்த்தியாகவும் இருக்கிறான். இந்த நிலைகளை முறையே நிர்க்குணபிரம்மம், சகுணபிரம்மம், பிரகிருதி-புருஷ தத்துவம், பிரகிருதி தத்துவம் என வேதாந்தம் கூறுகிறது. ஜீவாத்மன் பிரகிருதி தத்துவத்தில் உருவெடுக்கிறான். ஜடமாக நெடிது இருந்து பிறகு சேதனமாகப் பரிணமிக்கிறான். பார்வதி தேவி பர்வத ராஜனுக்குச் செல்வி

யாகப் பிறப்பதில் இக்கோட்பாடு அடங்கியிருக்கிறது. ஆறுமுகம் என்று சொல்லப்படும் ஆறு ஞானபூமிகளில் இருப்பவர்கள் எல்லாரும் ஜீவாத்மாக்களேயாம். முதல் ஞானபூமி ஜடசக்தி அல்லது மூலாதாரம். ஆறுவது ஞான பூமியாயிருப்பது நடராஜ தத்துவம் அல்லது சகுண பிரம்மம். சகுண பிரம்மத்தை அடையும் பொழுதும் ஜீவாத்மாவுக்கு ஜீவ வியக்தி இருக்கிறது. அத்தகையவனுக்கு ஞானத்தில் மேல்நோக்கிப் போவது போன்று அக்ஞானத்தில் கீழ்நோக்கிப் போவதும் சாத்தியம். பிறவிப் பெருங்கடலில் உழல்பவனுக்கு மேலான பிறவியும்கீழான பிறவியும் வினைக்கு ஏற்றவாறு வந்து வாய்க்கின்றன.

சவிகல்ப சமாதியை எட்டுகிறவன் விரைவில் நிர்விகல்ப சமாதிக்கும் போதல் வேண்டும். ஜீவப்பிரயத்னமும் ஈசனுடைய அருளும் அதற்கு ஒன்று சேரவேண்டும். நிர்விகல்ப சமாதியில் முக்தி அல்லது வீடு எய்துதல் பூர்த்தியாகிறது. சிதம்பரம் போனவர் திரும்பி வருவதில்லை என்பதன் பொருள் இதுவாம். அதீதத்தில் இருக்கும் இப்பெருநிலையை அடையப்பெற்றவன் பகர்வதாவது:

तं शान्तं अचलं अद्वयानन्द विज्ञान घन एव अस्मि

தம் சாந்தம் அசலம் அத்வயானந்த விக்ஞான கன ஏவ அஸ்மி

அந்த சாந்த மூர்த்தி, அசையாத பிரம்மம், இரண்டற்ற பேரின்பம், திரண்ட பேரறிவு—அப்பொருளே நான்.

தில்லையில் அருளிய

50. ஆனந்த மாலை

சிவ அனுபவ விருப்பம்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

1. மின்னே ரனைய பூங்கழல்க
ளடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர்கொண்டு
போற்று நின்று ரமரரெல்லாங்

கன்னே ரனைய மனக்கடையாய்க்
கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்த
வென்னே ரனையே னினியுன்னைக்
கூடும் வண்ண மியம்பாயே.

மின் நேர் அனைய பூங்கழல்கள்
அடைந்தார் கடந்தார் வியன் உலகம்
பொன் நேர் அனைய மலர் கொண்டு
போற்றுநின்றார் அமரர் எல்லாம்
கல் நேர் அனைய மனம் கடையாய்க்
கழிப்பு உண்டு அவலம் கடல் வீழ்ந்த
என் நேர் அனையேன் இனி உன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே.

கடந்தார் வியன் உலகம்-வியவகாரங்களைத் தாண்டினர். கடையாய்க் கழிப்பு உண்டு-கடையவனாய்த் தள்ளப்பட்டு.

மின்னலை ஒத்தவைகளும், அழகிய தாமரை மலர் போன்றவைகளுமாகிய திருவடிகளை அடைந்த அடியார்கள் வியவகாரங்களைத் தாண்டி அதீதத்தைச் சென்றடைந்தார்கள். தேவர் எல்லாரும் பொன்னை ஒத்த அரிய மலர்களால் அர்ச்சித்து உன்னை ஆராதனை செய்தனர். கல்லை யொத்த ஜடபுத்தியுடையவன் நான். மிக மட்டமானவன் என்று அறிஞர்களால் தள்ளி வைக்கப்பட்டவன் நான். துன்பக் கடலில் விழுந்து சிறுமையில் எனக்கு நானே ஒப்பானேன்; இனி, உன்னை அடையும் வகையைச் சொல்லியருள்வாயாக.

2. என்னா லறியாப் பதந்தந்தாய்
யான தறியா தேகெட்டே
னுன்னா லொன்றுங் குறைவில்லை
யுடையா யடிமைக் காரென்பேன்
பன்னா ளுன்னைப் பணிந்தேத்தும்
பழைய வடிய ரொடுங்கூடா
தென்னா யகமே பிற்பட்டிங்
கிருந்தே னேய்க்கு விருந்தாயே.

என்னால் அறியாப் பதம் தந்தாய்
யான் அது அறியாதே கெட்டேன்
உன்னால் ஒன்றும் குறைவு இல்லை
உடையாய் அடிமைக்கு யார் என்பேன்

பல் நாள் உன்னைப் பணிந்து ஏத்தும்
பழைய அடியர் ஒடும் கூடாது
என் நாயகமே பிற்பட்டு இங்கு
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே.

யார்-யார் உளர். என் நாயகமே-என் தலைவனே. நோய்க்கு-பிறவி நோய்க்கு. விருந்தாய்-இலக்காக.

என்னால் அறிந்து கொள்ளப்படாத அரிய ஞான நிலையைக் கொடுத்தாய். அடியேன் அதை அறியாமலே கெட்டுப்போனேன். உன்னால் ஈண்டு ஒரு குறைபாடுமில்லை. இறைவா, அடியேனுக்கு யார் உளர் என்பேன். நெடுநாளாக உன்னை வணங்கித் துதிக்கின்ற பழைய அடியவர்களோடு சேராமல், என் தலைவா, பிற்போக்கு உடையவனாய்க் கிடந்து, பிறவிப் பிணிக்கு இருப்பிடமாய் உழல்கிறேன்.

3. சீல மின்றி நோன்பின்றிச்
செறிவே யின்றி யறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழிகாட்டி
வாரா வுலக நெறியேறக்
கோலங் காட்டி யாண்டானைக்
கொடியே னென்றே கூடுவதே.

சீலம் இன்றி நோன்பு இன்றிச்
செறிவே இன்றி அறிவு இன்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டு ஆய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலும் காட்டி வழி காட்டி
வாரா உலகம் நெறி ஏறக்
கோலம் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றே கூடுவதே.

செறிவே இன்றி-அடக்கமில்லாமல். மாலும் காட்டி-மயக்கத்தை ஞாபகமூட்டி. வாரா உலகம் நெறி ஏற-வீடுபெற.

என்னிடத்து நல்லொழுக்கமில்லை; விரதம் இல்லை; அடக்கம் சிறிதளவுமில்லை; விவேகம் இல்லை. நான் வீணில் அலைந்து திரிவது தோல் பாவைக்கூத்து ஆகும். நான் கொண்டுள்ள மயக்கத்தை

நீக்குதற்கான உபாயத்தை ஞாபகமூட்டி நன்னெறியைப் புகட்டி யுள்ளாய். உன் திருக்கோலத்தைக் காட்டி முக்தி மார்க்கத்தையும் புகட்டியுள்ளாய். துன்மார்க்கத்தில் உழலும் நான் உன்னை எப் பொழுது கூடுவனே தெரியவில்லை.

4. கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
 கேடி லாதாய்ப் பழிகொண்டாய்
படுவேன் படுவ தெல்லாநான்
 பட்டாற் பின்னைப் பயனென்னே
கொடுமா நரகத் தழுந்தாமே
 காத்தாட் கொள்ளுங் குருமணியே
நடுவாய் நில்லா தொழிந்தக்கா
 னன்றே வெங்க ணாயகமே.

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
 கேடு இலாதாய்ப் பழிகொண்டாய்
படுவேன் படுவது எல்லாம் நான்
 பட்டால் பின்னைப் பயன் என்னே
கொடு மா நரகத்து அழுந்தாமே
 காத்து ஆட்கொள்ளும் குருமணியே
நடு ஆய் நில்லாது ஒழிந்தக்கால்
 நன்றே எங்கள் நாயகமே.

நடு ஆய் நில்லாது-என் மனம் நடுநிலையடையாது.

கெட்டுப்போம் தன்மையுடைய் நான் எனக்குக் கேடு சூழ்ந்து கொள்கிறேன். கேடு இல்லாதவனாகிய நீ என்னை யாட்கொண்டு பிறகு நான் கெட்டுப்போம்படி விட்டதினால் உனக்குப் பழியைத் தேடிக்கொண்டாய். துன்பப்படுவதற்கு ஏதுவான கீழ்மையில் உள்ள என்னைத் துன்பம் துய்க்க விட்டுவிடுவதால் உனக்கு வரும் பயன் யாது? கொடிய நரகத்தில் அழுந்தாமல் என்னைக் காத்து ஆட்கொள்ளும் குருநாதன் நீ. யோகத்தில் என் மனது நடுநிலை யடையாது போனால், ஆட்கொண்ட உனக்கு நலனாகுமா? இறைவா, இந்தச் சங்கடத்தின் மீது சிறிது சிந்தை செலுத்துவாயாக.

5. தாயாய் முலையைத் தருவானே
 தாரா தொழிந்தாற் சவலையாய்

நாயேன் கழிந்து போவேனோ
நம்பி யினித்தா னல்குதியே
தாயே யென்றுன் றாளடைந்தேன்
றயாநீ யென்பா லில்லையே
நாயே னடிமை யுடனாக
வாண்டாய் நான்றான் வேண்டாவோ.

தாய் ஆய் முலையைத் தருவானே
தாராது ஒழிந்தால் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி இனித்தான் நல்குதியே
தாயே என்று உன் தாள் அடைந்தேன்
தயா நீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடன் ஆக
ஆண்டாய் நான் தான் வேண்டாவோ.

முலையை-ஞானத்தை. சவலை ஆய்-தாய்ப்பால் இல்லாது மெலிந்த குழந்தையாகி. நம்பி-மங்கள குணங்களால் நிறைந்தவன். நல்குதி-அருள் செய்வாய். தயா-தயவு.

தாய் ஆகி நீ ஞானப்பாலைத் தாராது ஒழிந்தால் நான் தாய்ப் பால் அருந்தாது மெலிந்த குழந்தையாவேன். கருணாகரனே, இனியாயினும் அருள் செய்வாயாக. அம்மையே என்று நான் உன்னிடம் அடைக்கலம் புகுகின்றேன். தாயின் அன்பு உன்னிடத்து இல்லையா? ஆட்கொண்ட பிறகு என்னை நீ புறக்கணிப்பது முறையோ?

6. கோவே யருள வேண்டாவோ
கொடியேன் கெடவே யமையுமே
யாவா வென்று விடிலென்னை
யஞ்சே லென்பா ராரோதான்
சாவா ரெல்லா மென்னளவோ
தக்க வாறன் றென்னாரோ
தேவே தில்லை நடமாடீ
திகைத்தே னினித்தான் றேற்றாயே.

கோவே அருள வேண்டாவோ
கொடியேன் கெடவே அமையுமே

ஆவா என்னுவிடில் என்னை
அஞ்சேல் என்பார் ஆரோதான்
சாவார் எல்லாம் என் அளவோ
தக்க ஆறு அன்று என்னுரோ
தேவே தில்லை நடம் ஆடி
திகைத்தேன் இனித்தான் தேற்ருயே.

அஞ்சேல்-அபயம். தக்க ஆறு அன்று-சன்மார்க்கம் அன்று.

இறைவா, நீ அருள்புரிய வேண்டாவோ? கெட்டவனுகிய நான் கெட்டொழிதல்தான் நியதியோ? என்னிடத்து நீ இரக்கம் காட்டா விட்டால் எனக்கு ஆறுதல் கூறுதற்கு வேறு யார் இருக்கிருர்? பிறவிப் பயன் அடையாது சாகின்றவர்கள் எல்லாரும் என் போன்ற வர்களோ? என்னைக் கைவிட்டுவிடுவது முறையன்று என்று சான் ருேர் சொல்லாதிருப்பார்களா? அரசே, அம்பலக் கூத்தா, நான் முற்றும் குழம்பியிருக்கிறேன். எனக்கு நீ ஆறுதல் சொல்லியருள் வாயாக.

7. நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லா நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையா
யரிய பொருளே யவிநாசி
யப்பா பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதீ
செய்வ தொன்று மறியேனே.

நரியைக் குதிரைப் பரி ஆக்கி
ஞாலம் எல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரை எல்லாம்
பிச்சு அது ஏற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வது ஒன்றும் அறியேனே.

குதிரைப்பரி-குதிரை வாகனம். பாண்டி வெள்ளமே-பாண்டியன் ஆன கருணைக் கடலே.

நரியைக் குதிரை வாகனமாக்கி உலகமெல்லாம் பரவச் செய் தாய். பெரிய பாண்டி மன்னன் ஆண்ட மதுரை நகர் முழுவதிலும்

பித்து ஏறும்படி செய்தாய். திருப்பெருந்துறையையுடையவனே, அருமையாகிய மெய்ப்பொருளே, நாசமடையாத தந்தையே, பாண்டிக் கருணைக் கடலே, கட்புலனுகாத ஆத்ம ஜோதியே, உய்வு அடைதற்கு நான் செய்யக் கிடப்பது யாது என்று சிறிதும் அறியாதிருக்கிறேன்.

தில்லையில் அருளிய

51. அச்சோப்பதிகம்

அனுபவ வழி அறியாமை

கலி விருத்தம்

1. முத்திநெறி யறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச்
சிவமாக்கி யெனையாண்ட
வத்தனெனக் கருளியவா
ருர்பெறுவா ரச்சோவே.

முத்தி நெறி அறியாத
மூர்க்கரொடும் முயல்வேனைப்
பத்தி நெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தம் மலம் அறுவித்துச்
சிவம் ஆக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளிய ஆறு
ஆர் பெறுவார் அச்சோவே.

பாறும் வண்ணம்-நீங்கும் படி. அச்சோ-அதிசயக் குறிப்புச் சொல்.

உபநிஷத் மந்த்ரம் — 123.

यदा सर्वे प्रभिद्यन्ते हृदयस्येह ग्रन्थयः ।
अथ मर्त्योऽमृतो भवत्येतावदनुशासनम् ॥

சிறுமையில் உழலும் நான் என்னை மீண்டும் பெருமையில் அமர்த்திக்கொள்ள வேண்டும். பக்தி பூணுதலும் அருளைச் சார்ந்திருத்தலும் அதற்குற்ற உபாயங்களாம்.

சித்தமலத்தைச் சரியாக ஆராய்ந்து அறிவது முறை. நூலில் படித்துள்ள மும்மலங்களைக் கிளிப்பிள்ளை போன்று கூறிக்கொண்டிருப்பது போதாது. தத்துவத்தை சாதகன் தானே ஓர்ந்து அறிதல் வேண்டும்.

இருப்பது ஒரு பொருள் என்னும் முடிவுக்கு ஆன்றோர்கள் வந்தது போன்று, அதே முடிவுக்கு இக்காலத்திய பௌதிக விக்ஞானிகளும் வந்திருக்கின்றனர். தனிப்பொருள் மலினமடையாது. அதை மலினப்படுத்த இரண்டாவது பொருள் இல்லை. ஆனால் அந்த ஒரு பொருள் பல பொருள்களாகத் தன்னை விளக்கிக்கொள்ளும் சக்தி வாய்ந்தது. பல பொருள்களாகத் தென்படுபவைகள் ஒன்றையொன்று மலினப்படுத்த முடியும். மலமாகத் தென்படுகிற நிலையிலும் ஒன்றை நிர்மலமாக ஓர்வது அறிவு. எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு. அதற்குச் சான்றுகள் எடுத்துக்கொள்வோம்.

உணவை அமுது அல்லது அமிர்தம் என்று சங்கல்பித்து அருந்துகிறோம். அதில் உடலுக்குப் பயன்படாப் பகுதி மலமென ஒதுக்கப்படுகிறது. மனிதனுக்கு எது மலமோ அது விளை நிலத்துக்கு அமிர்தம். இதை அறிந்து கொள்ளாமையினால் மனிதன் நிலத்துக்கு அதை உரமாக்குவதில்லை. மலத்தை முறைதவறிக் கையாண்டு காற்றையும் மனிதன் மலினப்படுத்துகிறான்.

யதா ஸர்வே ப்ரபித்யந்தே ஹ்ருதயஸ்யேஹ க்ரந்தய: ।
அத மர்த்யோऽம்ருதோ பவத்யேதாவதனு சாஸனம் ॥

(கடோபநிஷதம் 6-15)

इह இஹ இவ்வுடலில் हृदयस्य ஹ்ருதயஸ்ய ஹிருதயத்தின் सर्वे ग्रन्थयः ஸர்வே க்ரந்தய: எல்லா முடிச்சுகளும் यदा

பசு கழிக்கிற மலமும் மூத்திரமும் மனிதனுக்குக் கோமயம். கடவுள் வழிபாட்டுக்கு அவன் அவைகளைப் பயன்படுத்துகிறான். மலம் என்பது மனப்பான்மையில் இருக்கிறது. பொருள் தன்னளவில் மலமன்று.

கண்ணாடி ஒப்பமாக அமைந்திருந்தால் அதனூடு புறப்பொருளை உள்ளவாறு காண்கிறோம். அது அலைகளோடு அமைந்திருந்தால் புறப்பொருள்களைச் சரியாகக் காண அது உதவாது. அலைக்கு விகாரம் என்று பெயர். நிலை குலைவு என அது பொருள்படுகிறது. விகாரப்படும் பாங்குடையது மனது. அதன் விகாரமே மலமெனக் கருதப்படுகிறது. மனது நிர்விகாரம் அடையுங்கால் அது சித்த சுத்தி என்று சொல்லப்படுகிறது.

உபாதியின் விளக்கம் 49-1. திருப்படையாட்சியில் சொல்லப்பட்டிருக்கிறது. உபாதிகளையெல்லாம் ஒழிக்குமிடத்துச் சித்தமலம் அறுபடுகிறது.

ஜீவாத்மாவைச் சார்ந்துள்ள மும்மலங்களில் ஒன்று ஆணவம் என்று சொல்லப்படுகிறது. பருவடிவம் அற்றது அணு. ஜீவனுக்கு அணுத்வம் அல்லது ஆணவம் அல்லது வடிவம் புகுத்துவது மலம். நீர்த்துளிக்கு வடிவம் கல்பிதமாயிருக்கிறது. ஜீவாத்மனுக்கு ஜீவத்வம் என்னும் வடிவம் கல்பிதமாம். கடஆகாசம் வடிவம் படைத்ததன்று. அங்ஙனம் ஜீவாத்மாவுக்குத் தனி வியக்தியில்லை. அதைத் தனி வியக்தியாகக் கருதுவது மலம்.

प्रभिद्यन्ते யதா ப்ரபித்யந்தே அகற்றப்படுங்கால் अथ அத அப்பொழுது मर्त्यः மர்த்ய: மரணமடைகிற மனிதன் अमृतः भवति அம்ருத: பவதி மரணம் இல்லாதவன் ஆகின்றான் एतावत् ஏதாவத் இதுவே अनुशासनम् அனுசாஸனம் முடிந்த உபதேசம்.

இவ்வுடலின்கண் உள்ளத்தினுள்ளே உள்ள முடிச்சுகள் யாவும் அகற்றப்படுங்கால் ஜீவன் சிவமாகிறான். இதுவே முடிந்த போதனை.

இயக்கத்துக்கு வினை அல்லது கர்மம் என்று பெயர். இயங்குவது இயற்கை. மனது இயங்குகிறது. ஆதலால் அது கர்மசொரூபம். சமாதியில் மனம் இயங்குவதில்லை. ஆதலால் அங்குக் கர்மமில்லை. சமாதியில் சித்தமலம் அறுபடுகிறது. பழவினைகள் பாறுகின்றன அல்லது அழிந்துபோகின்றன. கர்மாதீதத்தை அடைவதும் சித்த மலம் அறுபடுவதும் ஒன்றாகும்.

வாஸனா அல்லது வாஸனை என்பது மனதைப் பிடித்துள்ள ஒரு மலம். வாஸனையானது வாழ்வை வகைப் படுத்துகிறது. உயிர்கள் அனைத்தும் மரணத்துக்கு அஞ்சுகின்றன. இது வாஸனையின் விளைவு. பிறவிக் குணம் என்றும் இயல்பு என்றும் இதைப் பகர்வது உண்டு. வாஸனைக்கு ஏற்ப மனிதன் நலம்கேடுகளைச் செய்கிறான். வாஸனை என்பது ஒருவிதச் சித்தமலம். வாஸனாக்ஷயம் சித்த சுத்தியின் விளைவாம்.

சம்ஸ்காரங்கள் அல்லது மனிதனால் போடப்பட்ட பதிவுகள் சித்தத்தினுள் புதைந்து கிடக்கின்றன. சின்னஞ் சிறு வயதிலிருந்து ஒருவன் கடவுள் வழிபாட்டில் கருத்தைச் செலுத்துகிறான். அது நல்ல சம்ஸ்காரத்தின் விளைவு. சிறு வயதிலிருந்து துஷ்டத்தனத்தில் ஒருவன் தோய்ந்திருக்கிறான். அது பொருந்தாத சம்ஸ்காரத்தின் விளைவு. மனதினின்று நல்லவை, கெட்டவை ஆகிய எல்லா சம்ஸ்காரங்களையும் விலக்கியோட்டவேண்டும். அப்பொழுது சித்தமலம் அறுபடுகிறது.

கடலில் அலைகள் கிளம்பிக்கொண்டிருப்பதுபோன்று சித்தத்தில் எண்ணங்கள் உதித்துக்கொண்டிருக்கின்றன. அவைகளுக்குச் சித்தவிருத்தி என்று பெயர். சித்த

புறப்பொருள் ஒன்றைக் கயிற்றால் கட்டி முடி போடுவதுபோன்று ஹிருதயத்தைப் புறப்பொருள் ஒன்றும் பந்தப்படுத்தவில்லை. சித்தத்தில் உள்ள விகாரமே சித்த மலம் எனப்படுகிறது. கண்ணாடியில் உள்ள மேடு பள்

விருத்தி நிரோதம் பண்ணுவது யோகம். விருத்திகளைத் துடைக்கத் துடைக்கப் புதுவிருத்திகள் வந்துகொண்டே இருக்கும். முற்றிலும் விருத்தி நாசம் வாய்க்குங்கால் சித்தமலம் அறுபடுகிறது. யோகம் பூர்த்தியாகிறது.

சங்கல்ப விகல்ப மயம் மனது, என்று மனதுக்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ஆசையோடு கூடிய தீர்மானம் சங்கல்பம் எனப்படுகிறது. ஆசையானது மனதுக்கு வேகம் கொடுத்துக்கொண்டேயிருக்கிறது. ஆசை இருக்கும் வரையில் மனதை அடக்கமுடியாது. ஆசையை ஆராய்ந்து பார்த்தால் அதற்குப் பிறப்பிடம் அக்ஞானம் என்பது வெளியாகும். அக்ஞானத்துக்கு அவித்யா மாயை என்று பெயர். நல்லறிவைக்கொண்டு ஆசையை அறவே அகற்றவேண்டும். ஆசை அறுபடுமிடத்து சங்கல்பம் ஒழிகிறது. முன்பு எத்தனையோ ஜன்மங்களில் செய்த சங்கல்பங்கள் சித்தமிசை புதைந்து கிடக்கின்றன. ஆசையின் வேகமில்லாதவிடத்தும் அவைகள் தாமாகத் தோன்றிக்கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு விகல்பம் என்று பெயர். விகல்பம் ஓயுமிடத்து அது நிர்விகல்பமாகிறது. சித்தமலம் ஆங்கு முற்றிலும் அறுபட்டதாகிறது. மனோநாசம் அதன் விளைவாகும். நிர்விகல்ப சமாதி கூடுகிறது. ஜீவாத்மன் ஒழிகிறான். இத்தனைவித விகாரங்களுக்கு ஆதாரமாயிருந்த சிதாகாசம் அல்லது சிதம்பரம் எஞ்சியிருக்கிறது. ஜீவ ஒடுக்கத்துக்குக் கைவல்ய முக்தி என்று பெயர்.

'அத்தன் எனக்கு அருளிய ஆறு' என்பதை அருள் என்று சொல்லுகிறது சைவ சமயம். அதே தத்துவத்தை வித்யா மாயை என்கிறது வேதாந்தம். சொல் இரண்டு

ளம் புறப்பொருளை விகாரப்படுத்திக் காட்டுகிறது. மனதில் உள்ள முடிச்சு அல்லது கோணல் ஆத்ம சொரூபத்தைப் பிரபஞ்சமாக விகாரப்படுத்துகிறது. கண்ணாடியில் உள்ள மேடு பள்ளம் எங்ஙனம் நித்திய வஸ்து அல்

எவினும் பொருள் ஒன்றே என்று அறிகிறவர்கள் உண்மையை அறிகின்றனர். உண்மையை அறிகின்றவர் களே அறிஞர்கள்.

மனதைச் செப்பனிடுவது சாதனம். முற்றிலும் மன பரிபாகம் ஆயிருக்கின்றவனுக்கு ஞானகுரு ஞானோப தேசம் செய்கிறார். **தத் த்வம் அஸி** என்பது ஒரு மஹா வாக்யம். அதுவாக நீ இருக்கிறாய் என்பது அதன் பொருள். எதைத் தேடி எண்ணிறந்த ஜன்மங்களில் நீ அலைந்தாயோ அது உனது நிஜசொரூபம் என்பது ஞானோபதேசம். சித்தமலம் முற்றிலும் அறுபட்டவன் **அஹம் பிரம்மா அஸ்மி** என்கிறான். இது இன்னொரு மஹாவாக்யம். நான் பிரம்மம் என்பது அதன் பொருள். பெயர் கொடாமல் பொருள் ஆராய்ச்சி செய்கிறவன் **ஸோஹம்**-அது நான் என்கிறான். பொருளுக்குச் சிவம் என்னும் பெயர் கொடுத்து ஆராய்ச்சி செய்கிறவன் **சிவோஹம்**-சிவம் நான் என்கிறான். இப்படி முடிந்த முடிவைச் சித்தமலம் அறிவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட அத்தன் எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே, என்கின்றார் அண்ணல்.

2. நெறியல்லா நெறிதன்னை
நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே
திருவருளே சேரும்வண்ணங்
குறியொன்று மில்லாத
கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும் வண்ண மருளியவா
ரூர்பெறுவா ரச்சோவே.

லவோ அங்ஙனம் உள்ளத்தில் உள்ள முடிச்சும் நித்திய வஸ்து ஆகாது. முப்பொருள் உண்மை என்று கூறுகிற வர்கள் பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் அநாதி என்பர். ஆனால் பாசம் என்னும் விகாரம் அகலுங்கால் பசுவும் பதியும் ஒன்று என்ற ஞானம் உதயமாகிறது.

நெறி அல்லா நெறி தன்னை
நெறியாக நினைவேனைச்
சிறு நெறிகள் சேராமே
திரு அருளே சேரும் வண்ணம்
குறி ஒன்றும் இல்லாத கூத்தன் தன்
கூத்தை எனக்கு
அறியும்வண்ணம் அருளிய ஆறு
ஆர் பெறுவார் அச்சோவே.

குறி-பொறியால் அறியப்படும் அடையாளம்.

உலக வாழ்வை நாடியிருப்பது நன்னெறி என்று நான் நினைந்திருந்தேன். அது சிறு நெறியென்று அவன் காட்டியருளினன். பரமனையும் அவனது அருளையும் சார்வதுதான் பெருநெறி. அவன் நடராஜாவாகவும் அதாவது சகுண பிரம்மமாகவும், சிதம்பர ரகசியமாகவும் அதாவது நிர்க்குண பிரம்மமாகவும் இருப்பதைக் காட்டியருளினன்.

3. பொய்யெல்லா மெய்யென்று
புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை
மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான்
றன்கழலே சேரும்வண்ண
மையனெனக் கருளியவா
ருர்பெறுவா ரச்சோவே.

பொய் எல்லாம் மெய் என்று
புணர் முலையார் போகத்தே
மையல் உறக் கடவேனை
மாளாமே காத்தருளித்
தையல் இடம் கொண்ட பிரான்
தன் கழலே சேரும் வண்ணம்
ஐயன் எனக்கு அருளிய ஆறு
ஆர் பெறுவார் அச்சோவே.

பொய் எல்லாம்-பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றையும். மாளாமே-சாகாமல். தையல்-உமாதேவி.

போகம் மனிதனைக் கெடுக்கிறது. யோகம் மனிதனை உயர் நிலைக்கு எடுக்கிறது. சிவபக்தியில் முன்னேறுபவர்க்கு இவ்வுண்மை விளங்குகிறது. அவர்கள் போகத்தைப் புறக்கணிக்கின்றனர்.

4. மண்ணதனிற் பிறந்தெய்த்து
மாண்டுவிழக் கடவேனை
யெண்ணமிலா வன்பருளி
யெனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத்
தூய்நெறியே சேரும்வண்ண
மண்ணலெனக் கருளியவா
ருர்பெறுவா ரச்சோவே.

மண் அதனில் பிறந்து எய்த்து
மாண்டு விழக் கடவேனை
எண்ணம் இலா அன்பு அருளி
எனை ஆண்டிட்டு என்னையும் தன்
சுண்ணம் வெண் நீறு அணிவித்துத்
தூய் நெறியே சேரும் வண்ணம்
அண்ணல் எனக்கு அருளிய ஆறு
ஆர் பெறுவார் அச்சோவே.

எய்த்து-இளைத்து. எண்ணம் இலா-நினைத்தற்கும் முடியாத. தூய் நெறியே-சிவ நெறியே.

பூமியில் பிறப்பெடுத்து அதன் பயன் எதையும் அடையப் பெறாது இளைத்துப்போய் சாவதற்கிருந்தேன். நினைக்கமுடியாத அன்பை இறைவன் என்பால் செலுத்தி என்னை ஆண்டருளினன். திருநீறு பூசித் தெய்வ நெறியில் சேரும்படி அவன் எனக்கு அருளியது பெறுதற்கு அரிய பேறன்றோ!

5. பஞ்சாய வடிமடவார்
கடைக்கண்ணா லிடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர
நிற்பேனுன் னருள்பெற்றே
னுய்ஞ்சேனு னுடையானே
யடியேனை வருகவென்
றஞ்சேலென் றருளியவா
ருர்பெறுவா ரச்சோவே.

பஞ்சு ஆய அடி மடவார்
கடைக்கண்ணுல் இடர்ப்பட்டு
நெஞ்சு ஆய துயர்கூர
நிற்பேன் உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன் நான் உடையானே
அடியேனை வருக என்று
அஞ்சேல் என்று அருளிய ஆறு
ஆர் பெறுவார் அச்சோவே.

துயர் கூர-துயரம் மிகும்படி. உய்ஞ்சேன் நான்-நான் உய்ந்தேன், கடைத்தேறினேன்.

காமத்தீயில் வெந்தொழிதற்கு இருந்த என்னை இறைவன் காப்பாற்றி, அபயம் கொடுத்து உயர்நிலைக்கு உயர்த்தினன். இது ஓர் அதிசயம் அல்லவா!

6. வெந்துவிழு முடற்பிறவி
மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார்
குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு
பரிசறவென் றுரிசுமறுத்
தந்தமெனக் கருளியவா
ருர்பெறுவா ரச்சோவே.

வெந்து விழும் உடல் பிறவி
மெய் என்று வினைபெருக்கிக்
கொந்து குழல் கோல் வளையார்
குவி முலை மேல் வீழ்வேனைப்
பந்தம் அறுத்து எனை ஆண்டு
பரிசு அற என் துரிசும் அறுத்து
அந்தம் எனக்கு அருளிய ஆறு
ஆர் பெறுவார் அச்சோவே.

வெந்து விழும் - தகனமாகின்ற. கொந்து குழல் - பூங்கொத்தணிந்த கூந்தலையுடைய. கோல் வளையார்-திரண்ட வளையலையுடையவர். பரிசு அற-பசுத்தன்மை கெட. துரிசும்-குற்றமும். அந்தம்-முடிந்த பொருள்.

ஓயாது தகனமாய்க் கொண்டிருப்பது தேகம். அதை நான் மெய்யென்று கருதி வினையைப் பெருக்கினேன். யோகத்துக்கு உரிய உடலை போகத்தில் ஆழ்த்தினேன். மற்று, உலக பந்தத்திலிருந்து இறைவன் என்னை விடுவித்தான். ஜீவபோதத்திலிருந்து அவன் என்னை உய்வித்தான். என்னுடைய் குற்றங்களையெல்லாம் நீக்கி என்னை குணவான் ஆக்கினன். முடிந்த நிலையாகிய சிவ பதத்தை அவன் கொடுத்தருளினன். இது விந்தையல்லவா!

7. தையலார் மையலிலே
தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து
பாசமெனுந் தாழுருவி
யுய்யுநெறி காட்டுவித்திட்
டோங்காரத் துட்பொருளை
யையனெனக் கருளியவா
ருர்பெறுவா ரச்சோவே.

தையலார் மையலிலே
தாழ்ந்து விழக் கடவேனைப்
பையவே கொடு போந்து
பாசம் எனும் தாழ் உருவி
உய்யும் நெறி காட்டுவித்திட்டு
ஓங்காரத்து உட்பொருளை
ஐயன் எனக்கு அருளிய ஆறு
ஆர் பெறுவார் அச்சோவே.

பையவே-சிறுகச் சிறுக. கொடு போந்து-கொண்டு வந்து. பாசம் எனும் தாழ் உருவி-பாசமாகிய தாழ்ப்பாளை நீக்கி.

உபநிஷத் மந்த்ரம் — 124.

सर्वे वेदा यत् पदमामनन्ति तपांसि सर्वाणि च यत् वदन्ति ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत् ते पदं संग्रहेण ब्रवीम्योमित्येतत् ॥

ஸர்வே வேதா யத் பதமாமனந்தி
தபாம்ஸி ஸர்வாணி ச யத் வதந்தி ।
யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி
தத் தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவீம்யோமித்யேதத் ॥

(கடோபநிஷதம் 2-15)

மரணத்துக்கு வாயிலாகிய போகத்தினின்று இறைவன் என்னைக் காப்பாற்றினான். என்னை அவன் சிறுகச் சிறுகத் தன்மயமாக்கினான். பந்தபாசத்தின் தாழ்ப்பாளை உருவினான். உய்யும் வழியை அவன் எனக்குக் காட்டியருளினான். ஓங்கார தத்துவத்தை எனக்குரியதாக்கினான். இது பெறுதற்கு அரிய பேறு அன்றோ!

ஓங்காரம் என்று சொல்லுவதும் பிரணவம் என்று சொல்லுவதும் ஒன்றே. அகர, உகர, மகரமாகிய மூன்று எழுத்துக்களின் ஒன்றித்த ஒலி இது. அகரம் உலகின் தோற்றத்துக்கும், உகரம் உலகின் இருப்புக்கும், மகரம் உலகின் ஒடுக்கத்துக்கும் உரிய ஓசைகளாம். ஆகவே ஓம் என்று ஒரு தடவை பரமன் பகருகிறபொழுது அண்டத்தின் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் ஆகியவை நிகழ்கின்றன. இயற்கையில் இடையருது ஓம் என்னும் ஓசை ஒலித்துக் கொண்டிருக்கிறது. சாதனங்களுள்

सर्वे वेदाः ஸர்வே வேதா: எல்லா வேதங்களும் यत् पदं யத் பதம் எந்த நிலையை आमनन्ति ஆமனந்தி சிலாகித்துப் பேசுகின்றனவோ सर्वाणि तपांसि च ஸர்வாணி தபாம்ஸி ச தவங்கள் யாவும் यत् वदन्ति யத் வதந்தி எதைப் போற்றுகின்றனவோ यत् इच्छन्तः யத் இச்சந்த: எதை விரும்புகிறவர்கள் ब्रह्मचर्यं चरन्ति ப்ரஹ்மச்சர்யம் சரந்தி பிரம்மச்சரியம் அனுஷ்டிக்கிறார்களோ तत् पदं தத் பதம் அந்த நிலையை ते தே உனக்கு संग्रहेण ஸங்க்ரஹேண சுருக்கமாக ब्रवीमि ப்ரவீமி சொல்லுகிறேன் ओं इति एतत् ஓம் இதி ஏதத் அது ஓம் என்பதாம்.

எதை வேதங்கள் உயர்த்தி வைத்துப் பேசுகின்றனவோ, எதைத் தவங்கள் பாராட்டுகின்றனவோ, எதை நாடி பிரம்மச்சரிய வாழ்வு வாழ்கிறார்களோ, அப்பெருநிலையை நான் சுருக்கமாகச் சொல்லுகிறேன். அதுவே ஓம் என்பது.

பதம் என்பது ஓர் உயர்நிலை எனவும், சொல் எனவும் பொருள்படுகிறது. சொல் என்று வைத்துக்கொண்டால் அது ஓம் என்னும் சொல்லைக் குறிக்கிறது. அதைப்

மந்த்ர ஜபம் மிகச் சுலபமானது. மந்த்ரங்களுள் ஓங்காரம் உயர்ந்தது.

8. சாதல்பிறப் பென்னுந்
தடஞ்சுழியிற் றடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார்
கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான்
றன்கழலே சேரும்வண்ண
மாதியெனக் கருளியவா
ருர்பெறுவா ரச்சோவே.

சாதல் பிறப்பு என்னும்
தடம் சுழியில் தடுமாறிக்
காதலின் மிக்கு அணி இழையார்
கலவியிலே விழுவேனை
மாது ஒரு கூறு உடைய பிரான்
தன்கழலே சேரும் வண்ணம்
ஆதி எனக்கு அருளிய ஆறு
ஆர் பெறுவார் அச்சோவே.

தடம் சுழியில்-பெருஞ் சுழலில். ஆதி-முதல்வன்.

இறப்பு பிறப்பு என்கிற பெரிய சுழியில் சிக்கித் தடுமாறிக் கொண்டிருப்பதற்கிடையில் காம நோய்க்கு நான் ஆளாயிருப்பது ஆச்சரியம். அத்தகைய என்னை அண்ணல் உய்வித்தது அதினும் பெரிய ஆச்சரியமாம்.

மரணத்தை ஒரு வரப்பிரசாதம் என்று மனிதன் கருதவேண்டும். இவ்வுலக வாழ்வு நிலையற்றது என்பதை அது ஞாபகமூட்டுகிறது. எந்த வேளையில் வேண்டுமானலும் அது முன் எச்சரிக்கையின்றி வருகிறது. அப்படியிருந்தும் மனிதன் இவ்வுலக ஆசைக்கு அடிமைப் பட்டுக் கிடக்கிருன்.

பரநிலை என்று வைத்துக்கொண்டால் அது சிவ சொரூப மாகிறது.

9. செம்மைநல மறியாத
சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து
முதலாய முதல்வன்று
னம்மையுமோர் பொருளாக்கி
நாய்சிவிகை யேற்றுவித்த
வம்மையெனக் கருளியவா
றார்பெறுவா ரச்சோவே.

செம்மை நலம் அறியாத
சிதடரொடும் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து
முதல் ஆய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருள்ஆக்கி
நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக்கு அருளிய ஆறு
ஆர் பெறுவார் அச்சோவே.

செம்மை-பண்பு, சிரேயஸ். சிதடரோடும்-அறிவிலிகளோடும். இம்மை-இகம். உம்மை-மறுமை. அம்மை-வீடுபேறு, மோக்ஷம், பரம்.

நான் உலக வாழ்வு என்னும் சிறுமையில் உழல்பவன். இதில் செல்லவேண்டாம் என்று இறைவன் என்னைத் தடுத்து நல்வழியில் நடாத்தினன். என்னிடத்தில் உள்ள குறையை நீக்கி என்னைத் தன்மயம் ஆக்கினன். பரத்தில் நான் ஒன்றுபடும்படி செய்தான். அதிசயங்களுள் இது பேர் அதிசயம் அல்லவா?

சிவார்ப்பணம்

பதிகத் தலைப்பு
(அகர வரிசையில்)

திருவாசகம்

பாட்டு முதற்குறிப்பு அகராதி

ய

விஷய சூசகம்

(அகர வரிசையில்)

திருவாசகப் பெருமை

வளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த(து) என்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சு நெக்(கு) உருகி நிற்பவர் காண்கிலேம்
திருவா சகம் இங்(கு) ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்(து) உகக் கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர்ப் பொடிப்ப விதிர்விதிர்ப்(பு) எய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.

— *சிவப்பிரகாச சுவாமிகள்*

வான்கலந்த மாணிக்க
    வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
    நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
    செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து
    உவட்டாமல் இனிப்பதுவே.

— *இராமலிங்க சுவாமிகள்*

தர்ம சக்கரம்

ஸ்ரீராமகிருஷ்ண தபோவன
திங்கள் வெளியீடு

அறிவு வளர்ச்சிக்கு – ஆன்மீக முன்னேற்றத் திற்கு – இல்லற வாழ்விற்கு இணையற்ற பொக்கி ஷம். பல அநுபவ ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஆன்றோர் அறிவுரைகள் அனைத்தும் தாங்கி 1952 ஜனவரி முதல் வெளி வந்து கொண்டிருக்கிறது, ஆன்மீக கருத்துக்களில் தெளிவுபெற தர்ம சக்கரம் சந்தாதாரராகச் சேர்ந்து பயன் பெறுங்கள்.

